முன்னுரை

நாளாகமத்தின் இரண்டாம் புஸ்தகம் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தோடு ஆரம்பமாகிறது. சாலொமோன் கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டுகிறார். யூதாவினுடைய ராஜாக்களின் சரித்திரம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகும் சம்பவம் வரையிலும் இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகத்தின் முடிவிலே யூதாதேசத்தாராருடைய ராஜ்யபாரம் முடிவு பெறுவது பற்றியும், கர்த்தருடைய ஆலயம் அழிக்கப்படுவதுபற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

யூதாதேசத்தை தாவீதின் வீட்டார் ராஜ்யபாரம்பண்ணுகிறார்கள். தாவீதுக்கு பின்பு, அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யூதாதேசத்தை சுமார் 400 அல்லது 500 வருஷங்களுக்கு ராஜ்யபாரம்பண்ணுகிறார்கள். அதன்பின்பு இஸ்ரவேல் தேசத்தின் ராஜ்யபாரம் நீண்டகாலத்திற்கு மங்கிப்போயிற்று. இயேசுகிறிஸ்துவின் காலத்திலே மேசியாவின் ராஜ்யம் மறுபடியும் பிரகாசமாக எழும்புகிறது.

“அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது” (லூக் 1:33).

ராஜாக்களின் முதலாம், இரண்டாம் புஸ்தகங்களில் தாவீது ராஜாவுடைய வீட்டாரைப்பற்றிய சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதின் வீட்டார் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய சரித்திரங்களைப்பற்றிச் சொல்லும்போது, இவ்விரண்டு புஸ்தகங்களிலும், அங்கங்கே, அவர்களோடு தொடர்புடைய இஸ்ரவேலின் ராஜாக்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாக்களின் புஸ்தகங்களில், யூதாதேசத்து ராஜாக்களைப்பற்றி சொல்லப்பட்டதைவிட, இஸ்ரவேல் தேசத்து ராஜாக்களைப்பற்றிச் சொல்லப்பட்டதே அதிகம்.

நாளாகமத்தின் இரண்டு புஸ்தகங்களிலுமே, யூதாதேசத்தின் ராஜாக்களைப்பற்றி மாத்திரமே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாக்களின் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்களில் சில, நாளாகமம் புஸ்தகத்திலும் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சில சரித்திர சம்பவங்கள் நாளாகமம் புஸ்தகத்திலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இந்தப் புஸ்தகத்திலே புதிய சரித்திர சம்பவங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நாளாகமம் புஸ்தகத்தில், யூதாதேசத்தின் ராஜாசன சரித்திரத்தைவிட, கர்த்தருடைய ஆலயத்தின் சரித்திரமும், யூதாமார்க்கத்தின் சரித்திரமும் அதிகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

யூதாதேசத்தின் சரித்திரத்திலே கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த ராஜாக்கள் எல்லோருமே செழித்திருக்கிறார்கள். துன்மார்க்கமான ராஜாக்கள் எல்லோரும் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள்.

சாலொமோனுடைய ராஜ்யபாரம் மிகவும் அமைதியாகவும், ஆசீர்வாதமாகவும் நடைபெறுகிறது (2நாளா 1-9 ஆகிய அதிகாரங்கள்). சாலொமோனுடைய ஆட்சியைத் தொடர்ந்து ரெகொபெயாமின் துன்மார்க்கமான ஆட்சி நடைபெறுகிறது (2நாளா 10-12 ஆகிய அதிகாரங்கள்). அபியா யூதாதேசத்தை கொஞ்சகாலத்திற்கு ஆட்சி செய்கிறான் (2நாளா 13-ஆவது அதிகாரம்).

ஆசாவின் சந்தோஷமான ராஜ்யபாரம். இவன் பல வருஷங்களுக்கு யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான் (2நாளா 14-16 ஆகிய அதிகாரங்கள்). யோசபாத்தின் பக்தியுள்ள ராஜ்யபாரம். இவனுடைய காலத்தில் இஸ்ரவேல் தேசம் செழித்திருக்கிறது (2நாளா 17-20 ஆகிய அதிகாரங்கள்).

1 அதிகாரம்

கர்த்தர் தாவீதின் குமாரனாகிய சாலொமோனை உயர்த்துகிறார். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் சாலொமோனுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். சாலொமோன் கர்த்தருக்கு பலிகளை செலுத்தி, கர்த்தரைக் கனம்பண்ணுகிறார் (2நாளா 1:1-6). சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (2நாளா 1:7-12).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் தேசத்திற்கு அதிகமான பெலத்தையும், ஐசுவரியத்தையும், வியாபாரத்தையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார் (2நாளா 1:13-17).

கிபியோனில் பலிபீடம் 2நாளா 1:1-12

2நாளா 1:1. தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலப்பட்டான்; அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனுடனே இருந்து அவனை மிகவும் பெரியவனாக்கினார்.

2நாளா 1:2. சாலொமோன் ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், நியாயாதிபதிகளும், இஸ்ரவேல் எங்குமிருக்கிற வம்சங்களின் தலைவராகிய சகல பிரபுக்களுமான இஸ்ரவேல் அனைவரோடும் பேசி,

2நாளா 1:3. அவனும் அவனோடேகூடச் சபையார் அனைவரும், கிபியோனிலிருக்கிற மேடைக்குப் போனார்கள்.

2நாளா 1:4. தாவீது தேவனுடைய பெட்டிக்கு எருசலேமிலே கூடாரம்போட்டு ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்குக் கீரியாத்யாரீமிலிருந்து அதைக் கொண்டுவந்தான்; கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்திலே பண்ணின தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் அங்கே இருந்தது.

2நாளா 1:5. ஊரின் புத்திரனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் உண்டுபண்ணின வெண்கலப் பலிபீடமும் அங்கே கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக இருந்தது; சாலொமோனும் சபையாரும் அதை நாடிப்போனார்கள்.

2நாளா 1:6. அங்கே சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கர்த்தரின் சந்நிதியிலிருக்கிற வெண்கலப் பலிபீடத்தின் மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திப் பலியிட்டான்.

2நாளா 1:7. அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார்.

2நாளா 1:8. சாலொமோன் தேவனை நோக்கி: தேவரீர் என் தகப்பனாகிய தாவீதுக்குப் பெரிய கிருபை செய்து, என்னை அவன் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீர்.

2நாளா 1:9. இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது வாக்குத்தத்தம் உறுதிப்படுவதாக; தேவரீர் பூமியின் தூளத்தனை ஏராளமான ஜனத்தின்மேல் என்னை ராஜாவாக்கினீர்.

2நாளா 1:10. இப்போதும் நான் இந்த ஜனத்திற்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கத்தக்க ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உம்முடைய ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்கவன் யார் என்றான்.

2நாளா 1:11. அப்பொழுது தேவன் சாலொமோனை நோக்கி: இந்த விருப்பம் உன் இருதயத்தில் இருந்தபடியாலும், நீ ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும், உன் பகைஞரின் பிராணனையும், நீடித்த ஆயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீ கேட்டபடியினாலும்,

2நாளா 1:12. ஞானமும் விவேகமும் தந்திருக்கிறதுமல்லாமல், உனக்குமுன் இருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப்பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன் என்றார்.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் தன் ராஜ்யத்திலே பலப்படுகிறார். சாலொமோனுடைய தேவனாகிய கர்த்தர் அவருடனே இருந்து அவரை மிகவும் பெரியவராக்குகிறார் (2நாளா 1:1).

தாவீதைப்போலவே சாலொமோனும் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின் பிரபுக்களும், மூப்பர்களும், பராக்கிரமசாலிகளும், சாலொமோனோடு கூடயிருந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

சாலொமோன் ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், நியாயாதிபதிகளும், இஸ்ரவேல் எங்குமிருக்கிற வம்சங்களின் தலைவராகிய சகல பிரபுக்களுமான இஸ்ரவேல் அனைவரோடும் பேசி, அவரும் அவரோடேகூடச் சபையார் அனைவரும், கிபியோனிலிருக்கிற மேடைக்குப் போகிறார்கள் (2நாளா 1:2,3).

கர்த்தருடைய கூடாரம் எருசலேமிலே போடப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பலிபீடமோ கிபியோனிலே இருக்கிறது. தாவீது தேவனுடைய பெட்டிக்கு எருசலேமிலே கூடாரம்போட்டார். தான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்கு, தாவீது கீரியாத்யாரீமிலிருந்து தேவனுடைய பெட்டியை கொண்டுவந்தார்;

கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்திலே பண்ணின தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் கிபியோனிலிருக்கிறது. ஊரின் புத்திரனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் உண்டுபண்ணின வெண்கலப் பலிபீடமும் கிபியோனிலே கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக இருக்கிறது; சாலொமோனும் சபையாரும் கிபியோனிலிருக்கிற பலிபீடத்தை நாடி போகிறார்கள்.

சாலொமோன் தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்திலேயே கர்த்தருடைய பலிபீடத்தைத் தேடிப்போகிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் எந்த வேலையை செய்தாலும், முதலாவதாக கர்த்தருடைய சமுகத்திலே ஜெபம்பண்ணிவிட்டு செய்வார்கள். சாலொமோனும், இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம் பண்ணுவதற்கு முன்பாக, கிபியோனிலிருக்கிற பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிசெலுத்தப்போகிறார். இஸ்ரவேலர் அனைவரும் சாலொமோனோடுகூட கிபியோனுக்குப் போகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் மார்க்க ஆராதனைகளில் சாலொமோனோடுகூட ஒத்துழைப்பு கொடுத்து அவரை உற்சாகப்படுத்துகிறார்கள். அதிபதிகளும் நியாயாதிபதிகளும் சாலொமோனோடுகூட கிபியோனுக்குப் போகிறார்கள். நியாயாதிபதிகள் கர்த்தருக்கு பயந்து ஜனங்களை நியாயம் விசாரிக்கவேண்டும். அதிபதிகள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். சாலொமோனும் இஸ்ரவேல் சபையாரும் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

கர்த்தருடைய பலிபீடம் கிபியோனிலே இருக்கிறது. அங்கே மோசே வனாந்தரத்திலே பண்ணின தேவனுடைய ஆசரிப்புக்கூடாரமும் இருக்கிறது. அங்கே சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கர்த்தரின் சந்நிதியிலிருக்கிற வெண்கலப் பலிபீடத்தின் மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திப் பலியிடுகிறார் (1நாளா 1:6).

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு ஏராளமான ஆடுமாடுகளை கொடுத்திருக்கிறார்.

"சாரோனில் மேய்கிற மாடுகளின் மேல் சாரோனியனான சித்ராயும், பள்ளத்தாக்குகளிலுள்ள மாடுகளின்மேல் அத்லாயின் குமாரன் சாப்பாத்தும் .... ஆடுகளின்மேல் ஆகாரியனான யாசிசும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்; இவர்களெல்லாரும் தாவீது ராஜாவின் பொருள்களுக்கு விசாரிப்புக்காரராயிருந்தார்கள்" (1நாளா 27:29,31).

கர்த்தர் தாவீது மூலமாக தனக்கு கொடுத்த ஆடுமாடுகளில், கர்த்தரிக்குரியதை சாலொமோன் கர்த்தருக்கு பலியாகச் செலுத்துகிறார். எருசலேமிலே தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி இருக்கிறது. வெண்கல பலிபீடமோ கிபியோனிலே இருக்கிறது.

சாலொமோன் வெண்கல பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தி பலியிட்டு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசனமாகி: "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" (2நாளா 1:7) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் ராஜா பலியிட கிபியோனுக்குப் போகிறார்; அது பெரிய மேடையாயிருக்கிறது; அந்தப் பலிபீடத்தின்மேல் சாலொமோன் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். அவர் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறார். கர்த்தரும் சாலொமோனிடத்தில் அன்புகூர்ந்து, அவருக்கு ராத்திரியில், சொப்பனத்தில் தரிசனமாகிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனம் கொடுத்த ஸ்தலம் கிபியோன். இது ஒரு பெரிய மேடையாயிருக்கிறது. இங்கே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரமும், வெண்கல பலிபீடமும் இருக்கிறது.

"அவனும் அவனோடேகூடச் சபையார் அனைவரும், கிபியோனிலிருக்கிற மேடைக்குப் போனார்கள். தாவீது தேவனுடைய பெட்டிக்கு எருசலேமிலே கூடாரம்போட்டு ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்குக் கீரியாத்யாரீமிலிருந்து அதைக் கொண்டுவந்தான்; கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்திலே பண்ணின தேவனுடைய ஆசரிப்புக்கூடாரம் அங்கே இருந்தது. ஊரின் புத்திரனாகிய ஊரியின் குமாரன் பெசலெயேல் உண்டுபண்ணின வெண்கலப் பலிபீடமும் அங்கே கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக இருந்தது; சாலொமோனும் சபையாரும் அதை நாடிப்போனார்கள்" (2நாளா 1:3-5).

சாலொமோன் கிபியோனிலுள்ள வெண்கல பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார். கர்த்தர் அங்கே சாலொமோனை சந்திக்கிறார். நாம் எந்த ஸ்தலத்தில் கர்த்தரை ஆராதிக்கிறோமோ, அந்த ஸ்தலத்தில் கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். நாம் ஆராதிக்கும் ஸ்தலம் தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் சாலொமோனுக்கு ராத்திரியிலே தரிசனமாகிறார். சாலொமோன் பகல் முழுவதும் வெண்கல பலிபீடத்தின்மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். பலிசெலுத்தி முடிந்தபின்பு, இரவுவேளையில் சாலொமோன் நித்திரை செய்கிறார். சாலொமோன் அமைதலாகவும் ஆறுதலாகவும் படுத்து உறங்குகிறார். நாம் கர்த்தருடைய ஊழியத்தில் பூரணமாய் ஈடுபட்டிருக்கும்போது, கர்த்தருடைய ஆறுதல் நமக்கு கிடைக்கும்.

சாலொமோன் பகல் முழுவதும் கர்த்தருக்கு ஆயிரம் சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். அவர் இரவுவேளையிலே ஓய்வாக நித்திரைபண்ணுகிறார். அமைதியான சூழ்நிலையும், ஓய்வாகயிருக்கும் சூழ்நிலையும் கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கு அநுகூலமாயிருக்கும்.

கர்த்தர் சாலொமோனுக்கு சொப்பனத்திலே தரிசனமாகிறார். சாலொமோன் ராத்திரியிலே அயர்ந்த நித்திரையிலிருக்கிறார். அவருடைய சரீரத்தின் அவயவங்களெல்லாம் ஓய்விலிருக்கிறது. அப்போது கர்த்தருடைய பிரசன்னம் சாலொமோனுடைய மனதிற்குள் பிரவேசிக்கிறது. சாலொமோன் நித்திரையிலிருப்பதினால், அவருடைய அவயவங்களும் இயங்காமல் நித்திரை யிலிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு தடையோ தொந்தரவோ இல்லை.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளிடத்திலும், தம்முடைய பரிசுத்தவான்களிடத்திலும் சொப்பனத்தின் மூலமாக பேசுகிறார்.

"அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்" *(எண் 12:6)*.

"கனநித்திரை மனுஷர்மேல் இறங்கி, அவர்கள் படுக்கையின்மேல் அயர்ந்திருக்கையில், அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரை போட்டு, மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்கவும், மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார்" *(யோபு 33:15-17)*.

ஒரு சில சொப்பனங்கள் மாயையாயிருக்கும். கர்த்தர் நம்மோடு சொப்பனத்தில் பேசுவதற்கும், நம்முடைய மாம்சப்பிரகாரமான சொந்த சொப்பனங்களுக்கும் வித்தியாசமுண்டு. கர்த்தர் நம்மோடு பேசுவது தெய்வீக சொப்பனங்கள். நம்முடைய சொந்த சொப்பனங்களெல்லாம் மாயையான சொப்பனங்கள். தெய்வீக சொப்பனங்களுக்கும் மாயையான சொப்பனங்களுக்கும் வித்தியாசமுண்டு.

"அநேக சொப்பனங்கள் மாயையா யிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும்; ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு" *(பிர 5:7)*.

கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" *(1இராஜா 3:5)* என்று தேவன் சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னைச் சுற்றிலும் பிரகாசிக்கிற தேவனுடைய மகிமையைக் காண்கிறார். அப்போது "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்னும் சத்தத்தையும் சாலொமோன் கேட்கிறார்.

சாலொமோன் ராத்திரியிலே நித்திரைபண்ணிக்கொண்டிருக்கும்போதே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய கிருபை சாலொமோனுக்கு உதவி செய்கிறது. சாலொமோன் நித்திரையாயிருந்தாலும், அவருடைய ஜெபம் நித்திரை பண்ணவில்லை. அது விழிப்போடிருக்கிறது. தேவனுடைய கிருபை சாலொமோனுக்குள் கிரியை செய்கிறது. சாலொமோனுடைய மனதிலே கிருபை நிரம்பிய வாஞ்சைகள் உண்டாகிறது. சாலொமோன் தன்னுடைய இருதயத்தின் வாஞ்சைகளை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு செய்த நன்மைகளை சாலொமோன் அங்கீகரிக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர்" *(1இராஜா 3:6)* என்று தன்னுடைய ஜெபத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களுக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்ப்பது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். கர்த்தர் நம்முடைய முன்னோருக்கு கொடுத்த ஆசீர்வாதங்கள், நமக்கும் கடந்து வரும்போது, அது நமக்கு இரட்டிப்பான சந்தோஷத்தைக் கொடுக்கும். கர்த்தர் தாவீதுக்கு பெரிய கிருபைகளை கொடுத்தார். அந்தக் கிருபைகள் சாலொமோனுக்கும் கிடைத்திருக்கிறது. சாலொமோன் இதை நினைத்து கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு மிகப்பெரிய நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் சாலொமோனை தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கியிருக்கிறார். சாலொமோன் இப்போது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற மகாபெரிய ராஜரீகப் பொறுப்பை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கு, தன்னிடத்தில் தகுதியுமில்லை, பெலனுமில்லை, ஞானமுமில்லை என்று சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்" (1இராஜா 3:7,8) என்று தன்னைப்பற்றி மிகவும் தாழ்மையாகச் சொல்லுகிறார்.

சாலொமோன் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். சாலொமோனுக்கு ஞானம் தேவைப்படுகிறது. ஞானமுள்ளவர்களால் மாத்திரமே சமஸ்த இஸ்ரவேலையும் நீதியாய் ராஜ்யபாரம் பண்ண முடியும். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்ய, தன்னிடத்தில் ஞானமில்லை என்றும், தனக்கு ஞானம் தேவைப்படுகிறது என்றும் சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். சாலொமோன் தன்னைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேலின் ராஜாசனத்தில் அன்றாட ராஜ்யபார ஆளுகையைக்கூட தன்னால் செய்ய முடியவில்லை என்று, சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

"இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே" (1இராஜா 3:7) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிவிட்டு, "ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும்" (1இராஜா 3:9) என்று கேட்கிறார்.

அப்சலோம் ஒரு மதியீனன். அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு நியாயாதிபதியாயிருக்க விரும்பினான். அவன் தன்னுடைய சுயபுத்தியினாலும், சுயஆலோசனையினாலும், சாதுரியமான வார்த்தைகளினாலும், தந்திரமான யோசனைகளினாலும் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கலாம் என்று நினைத்தான். ஆனால் அவனுடைய முயற்சிகள் சித்திக்கவில்லை.

சாலொமோனோ புத்தியும் ஞானமுமுள்ளவர். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் ராஜாசன பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு சாலொமோன் தயங்குகிறார், நடுங்குகிறார். இந்தப் பெரிய ஊழியத்திற்கு தான் தகுதியானவரல்ல என்று சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார்.

சாலெமோன் கர்த்தரிடத்தில் ஞானத்தைக் கேட்கிறார். கர்த்தர் சாலொமோனிடத்தில், "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று சொன்னார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "உமது ஜனங்களை நியாயம்விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" (1இராஜா 3:9) என்று கேட்கிறார்.

சாலொமோனுடைய தகப்பனாகிய தாவீதும் கர்த்தரிடத்தில் இதுபோலவே விண்ணப்பம்பண்ணினார். "நான் உமது அடியேன்; உம்முடைய சாட்சிகளை நான் அறியும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும்" (சங் 119:125). தாவீது தன்னை கர்த்தருடைய அடியான் என்று சொல்லுகிறார். உணர்வுள்ள இருதயம் கர்த்தர் கொடுக்கும் ஈவு. "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி 2:6).

நாம் கர்த்தரிடத்தில் ஞானத்தைக் கேட்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை செய்வதற்கு தெய்வீக ஞானம் தேவை. நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயஞானத்தினாலோ நம்மால் ஒன்றையும் செய்யமுடியாது. நமக்கு கர்த்தருடைய கிருபையும், அநுக்கிரகமும், ஞானமும் தேவைப்படுகிறது. நமக்கு தேவையான ஞானத்தை நாம் கர்த்தரிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" *(யாக் 1:5).*

கர்த்தர் சாலொமோனுடைய விண்ணப்பத்திற்கு சாதகமான பிரதியுத்தரம் கொடுக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். சாலொமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருக்கிறது *(1இராஜா 3:10).*

கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள விரும்புவார்கள். சாலொமோனுடைய விண்ணப்பம் கர்த்தருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருப்பதோடு, அது ஜெயவிண்ணப்பமாகவும் இருக்கிறது. சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டதைவிட அதிகமாக பெற்றுக்கொள்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருளும்" என்று விண்ணப்பம்பண்ணினார். கர்த்தர் சாலொமோனுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து, அவருக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தருகிறார்.

தேவன் சாலொமோனை நோக்கி: "நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்" *(1இராஜா 3:11,12)* என்றும் சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்ட பிரகாரம், கர்த்தர் அவருக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தருகிறார். "இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை" *(1இராஜா 3:12)* என்றும் கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிறார். இதுபோன்ற ஞானத்தை கர்த்தர் இதற்கு முன்பு வேறு யாருக்கும் கொடுத்ததில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதம் சாலொமோனுக்கு விசேஷித்த விதமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் தனக்கு ஐசுவரியத்தையோ, மகிமையையோ கேட்கவில்லை. கர்த்தரோ சாலொமோன் தம்மிடத்தில் கேட்காததையும் அவருக்கு கொடுக்கிறார். கர்த்தர் சாலொமோனை நோக்கி "இதுவுமின்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன்; உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை" *(1இராஜா 3:13)* என்று சொல்லுகிறார்.

இவையெல்லாம் கர்த்தருடைய ஈவு. முதலாவதாக நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை தாராளமாகக் கொடுப்பார். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" *(மத் 6:33).*

சாலொமோனுடைய ஜெபம் நமக்கு எடுத்துக்காட்டாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது. நாமும் கர்த்தரிடத்தில் பிரயோஜனமுள்ள காரியங்களை கேட்க கற்றுக்கொள்ளவேண்டும். தெய்வபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்ளாமல், அதன் மெய்யான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நமக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், ஞானமும் வேண்டும். இவையே நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் மெய்யான ஆசீர்வாதம்.

நம்மிடத்தில் கர்த்தருடைய ஞானமும் கிருபையும் இருக்கும்போது, நாம் உலகப்பிரகாரமான சம்பத்துக்களையும் பெற்றுக்கொள்வோம். நம்முடைய ஐசுவரியங்களை கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக பயன்படுத்துவோம். நாம் கர்த்தரிடத்திலே ஐசுவரியத்தைக் கேட்கும்போது, நம்முடைய சுயநலத்திற்காக கேட்காமல், கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக கேட்போம். கர்த்தர் கொடுக்கும் ஐசுவரியம் நமக்கு மெய்யான சந்தோஷத்தை தரும்.

கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தையும், ஐசுவரியத்தையும், மகிமையையும், நீடித்த ஆயுசையும் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். சாலொமோனுடைய நாட்கள் நீடித்திருக்கவேண்டுமென்றால், கர்த்தர் அவருக்கு ஒரு நிபந்தனையையும் சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீயும் என் கட்டளைகளையும் என் நியமங்களையும் கைக்கொண்டு, என் வழிகளில் நடப்பாயாகில், உன் நாட்களையும் நீடித்திருக்கப்பண்ணுவேன்" (1இராஜா 3:14) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சொல்லும் நிபந்தனைக்கு சாலொமோன் கீழ்ப்படியாவிட்டால் அவருடைய ஆயுசுகாலம் நீடித்திருக்காது. சாலொமோனிடத்தில் ஐசுவரியமும், மகிமையும், ஞானமும் இருக்கும். ஆனால் அதை அனுபவிப்பதற்கு, அவருடைய ஆயுசுகாலம் நீடித்த நாட்களாயிராது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதம் இருக்கும். ஆனால் அதை அனுபவிக்க முடியாமல், அவருக்கு சீக்கிரத்தில் மரணம் வந்துவிடும்.

நம்முடைய ஜீவியத்தில் நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், அவற்றை கருத்தாய் நேசிக்கவேண்டும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக கர்த்தரிடத்தில் தொடர்ந்து விண்ணப்பம்பண்ணவேண்டும். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்திற்காக ஜெபம்பண்ணியதுபோல, நமக்கும் கர்த்தர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம்பண்ண வேண்டும். "தேவையானது ஒன்றே". நம்முடைய ஜீவியத்தில் நாம் நல்ல பங்கைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்காமல், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்போது, அதோடு சேர்ந்து உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையும் கொடுப்பார்.

சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைப் பெற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் ஞானமுள்ள இருதயத்திற்காக ஜெபம்பண்ணினார். சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து ஐசுவரியத்தையும், மகிமையையும் பெற்றுக்கொண்டார். அவர் கர்த்தரிடத்தில் ஐசுவரியத்திற்காகவோ, மகிமைக்காகவோ ஜெபம்பண்ணவில்லை. நம்முடைய தேவைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தர் நம்மைப் போஷித்து பராமரிக்கிறவர்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்ட சம்பவங்கள் 1இராஜா 3:5 முதல் உள்ள வசனப்பகுதியிலும் எழுதப்பட்டிருக்கிறது. அந்த வசனப்பகுதியில் சொல்லப்படாத மேலும் இரண்டு சம்பவங்கள், நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. சாலொமோன் தேவனை நோக்கி: தேவரீர் என் தகப்பனாகிய தாவீதுக்குப் பெரிய கிருபை செய்து, என்னை அவன் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீர் (2நாளா 1:8) என்றும்,

2. இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது வாக்குத்தத்தம் உறுதிப்படுவதாக (2நாளா 1:9) என்றும் கேட்கிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் உறுதிப்படவேண்டுமானால், சாலொமோனுக்கு ஞானமும் விவேகமும் வேண்டும். இவை இல்லாமல் சாலொமோனால் கர்த்தருடைய ஆலயத்தையும் கட்ட முடியாது. அவரால் இஸ்ரவேல் ஜனத்தையும் நியாயம் விசாரிக்க முடியாது.

சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அது சொப்பனம் என்று அறிந்து கொள்கிறார்; சாலொமோன் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலி களைச் செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துசெய்கிறார் (1இராஜா 3:15).

கர்த்தர் தனக்கு கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக சாலொமோன் கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார். அவர் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், சமாதானபலிகளையும் செலுத்துகிறார். சாலொமோனுக்கு நித்திரை தெளிந்தபோது, அவருடைய இருதயம் முழுவதும் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் சாலொமோனுக்கு தாராளமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனக்கு இவ்வளவு தாராளமான ஆசீர்வாதங்களைக் கொடுத்த கர்த்தருக்கு, "நான் என்னத்தை செலுத்துவேன்" என்னும் எண்ணம் சாலொமோனுடைய மனதில் நிரம்பியிருக்கிறது.

சாலொமோன் கிபியோனிலே உள்ள, உயர்ந்த மேடையிலே கர்த்தருக்கு பலிகளை செலுத்தி அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணினார். கர்த்தரும் தமது கிருபையினால் அங்கே சாலொமோனை சந்திக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எருசலேமிலிருக்கிறது. சாலொமோன் கிபியோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வருகிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று சர்வாங்க தகனபலியிட்டு, சமாதான பலிகளை செலுத்துகிறார்.

சாலொமோன் எருசலேமிலே உள்ள கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய பெட்டி அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. ஆனால் சாலொமோனோ கர்த்தருக்கு பலிசெலுத்த கிபியோனுக்குப் போனார். கர்த்தர் சாலொமோனை கிபியோனிலே சந்தித்தார். கர்த்தரால் சாலொமோனை எருசலேமிலும் சந்தித்திருக்க முடியும். கர்த்தர் சர்வ வியாபகர் என்பதை சாலொமோன் அறிந்துகொள்கிறார். தான் கிபியோனுக்கு போகாமல், எருசலேமிலே, கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக பலிகளை செலுத்தியிருக்கவேண்டும் என்பதையும் சாலொமோன் இப்போது உணர்ந்துகொள்கிறார். கர்த்தர் சாலொமோனுக்கு ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைத் தந்திருக்கிறார்.

சாலொமோனைப்போலவே நாமும் சில சமயங்களில், ஆவிக்குரிய காரியங்களில் தவறு செய்து விடுகிறோம். நம்முடைய தப்பிதங்களை நாம் திருத்திக்கொள்ளவேண்டும். கர்த்தர் கொடுக்கும் நல்ல வாய்ப்புக்களை பயன்படுத்தி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர்ந்து முன்னேறவேண்டும்.

சாலொமோனுடைய இருதயம் உணர்வடைகிறது. அவர் இப்போது எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நின்று, ஏராளமான பலிகளை செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியிட்டு, சமாதானபலிகளை செலுத்தி, தன் ஊழியக்காரர் எல்லோருக்கும் விருந்து செய்கிறார். சாலொமோனுடைய ஊழியக்காரரும், கர்த்தர் அவருக்கு கொடுத்த சகல கிருபைகளுக்காக, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள்.

எருசலேமில் சிங்காசனம்
2நாளா 1:13-17

2நாளா 1:13. இப்படிச் சாலொமோன் கிபியோனிலிருக்கிற மேட்டிற்குப் போய், ஆசரிப்புக்கூடாரத்தின் சந்நிதியிலிருந்து எருசலேமுக்கு வந்து, இஸ்ரவேலை அரசாண்டான்.

2நாளா 1:14. சாலொமோன் இரதங்களையும் குதிரைவீரரையும் சேர்த்தான்; அவனுக்கு ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது; பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்; அவைகளை இரதங்களின் பட்டணங்களிலும், அவர்களை ராஜாவாகிய தன்னிடத்தில் எருசலேமிலும் வைத்திருந்தான்.

2நாளா 1:15. ராஜா எருசலேமிலே வெள்ளியையும் பொன்னையும் கற்கள்போலவும், கேதுருமரங்களைப் பள்ளத்தாக்கில் இருக்கிற காட்டத்திமரங்கள்போலவும் அதிகமாக்கினான்.

2நாளா 1:16. சாலொமோனுக்கு இருந்த குதிரைகளும் புடவைகளும் எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டது; ராஜாவின் வர்த்தகர் புடவைகளை ஒப்பந்த விலைக்கிரயத்துக்கு வாங்கினார்கள்.

2நாளா 1:17. அவர்கள் எகிப்திலிருந்து ஒரு இரதத்தை அறுநூறு வெள்ளிக்காசுக்கும், ஒரு குதிரையை நூற்றைம்பது வெள்ளிக்காசுக்கும் கொண்டுவருவார்கள்; அந்தப்படியே ஏத்தியரின் சகல ராஜாக்களுக்கும், சீரியாவின் ராஜாக்களுக்கும் அவர்கள் மூலமாய்க் கொண்டுவரப்பட்டது.

சாலொமோன் கிபியோனிலுள்ள வெண்கல பலிபீடத்திலே கர்த்தருக்கு பலியிட்டு தீர்ந்த பின்பு, எருசலேமுக்கு திரும்பி வந்து, இஸ்ரவேலை அரசாட்சி பண்ணுகிறார் *(2நாளா 1:13)*. சாலொமோன் கர்த்தருக்கு பலிசெலுத்துவதற்கு முன்பாக, அவர் ராஜாங்க காரியம் எதையும் மேற்கொள்ளவில்லை.

இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணுவது சாலொமோனுக்கு மகிமையான காரியம். பலிபீடத்திலே சர்வாங்க தகனபலி செலுத்துவது கர்த்தருக்கு மகிமையான காரியம். சாலொமோன் கர்த்தருக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்துவதற்கு முன்பாக, தன்னுடைய சொந்த மேன்மையை தேடவில்லை. சாலொமோன் தன்னுடைய ஜீவியத்தில் ஆசரிப்புக்கூடாரத்திற்கு முதலாவது இடமும், இஸ்ரவேலின் சிங்காசனத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்திருக்கிறார்.

சாலொமோன் இரதங்களையும் குதிரைவீரரையும் சேர்க்கிறார்; அவருக்கு ஆயிரத்து நானூறு இரதங்கள் இருக்கிறது; பன்னீராயிரம் குதிரைவீரரும் இருக்கிறார்கள்; அவைகளை இரதங்களின் பட்டணங்களிலும், அவர்களை ராஜாவாகிய தன்னிடத்தில் எருசலேமிலும் வைத்திருக்கிறார் *(2நாளா 1:14)*.

சாலொமோன் தன்னுடைய பொக்கிஷத்திலே வெள்ளியையும் பொன்னையும் கற்களைப்போல அதிகமாக்குகிறார். வெள்ளியும் பொன்னும் அதிகமாயிருக்கும்போது அதன் மதிப்பு குறைந்துபோகிறது. கர்த்தருடைய கிருபை அதிகமாகும்போது, அதன் மதிப்பு அதிகரிக்கிறது. கர்த்தருடைய கிருபை அநேகரிடத்தில் இருக்கும்போது, அதன் மதிப்பு இன்னும் அதிகமாயிருக்கும். ஆகையினால் பொன்னைவிட புத்தியையும் ஞானத்தையும் சம்பாதிப்பதே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

சாலொமோன் எகிப்து தேசத்தோடு வியாபாரம்பண்ணுகிறார். அவர் அந்த தேசத்திலிருந்து குதிரைகளையும் புடவைகளையும் கிரயத்திற்கு வாங்குகிறார். அதன் பின்பு சாலொமோன் அவற்றை சீரியாவின் ராஜாவுக்கு விற்பனை செய்கிறார்.

2 அதிகாரம்

சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறார். மேலும் தன் ராஜரிகத்திற்கு ஒரு அரமனையையும் கட்ட நிர்ணயம் பண்ணுகிறார். இவற்றைக் கட்டுவதற்கு வேலையாட்களை ஏற்படுத்துகிறார் (2நாளா 2:1,2,17,18).

சாலொமோன் தீருவின் ராஜாவாகிய ஈராமிடத்தில் ஆள் அனுப்பி, தனக்கு தயவு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறார் (2நாளா 2:3-10). ஈராம் சாலொமோனுக்கு தயவு காண்பிக்கிறார் (2நாளா 2:11-16).

தீருவின் ராஜாவாகிய ஈராம் 2நாளா 2:1-10

2நாளா 2:1. சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தையும், தன் ராஜரிகத்திற்கு ஒரு அரமனையையும் கட்ட நிர்ணயம் பண்ணி,

2நாளா 2:2. சுமைசுமக்கிறதற்கு எழுபதினாயிரம் பேரையும், மலையில் மரம் வெட்டுகிறதற்கு எண்பதினாயிரம் பேரையும், இவர்கள்மேல் தலைவராக மூவாயிரத்து அறுநூறுபேரையும் எண்ணி ஏற்படுத்தினான்.

2நாளா 2:3. தீருவின் ராஜாவாகிய ஈராமிடத்தில் ஆள் அனுப்பி: என் தகப்பனாகிய தாவீது தாம் வாசமாயிருக்கும் அரமனையைத் தமக்குக் கட்டும்படிக்கு, நீர் அவருக்குத் தயவுசெய்து, அவருக்குக் கேதுருமரங்களை அனுப்பினதுபோல எனக்கும் தயவு செய்யும்.

2நாளா 2:4. இதோ, என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் சுகந்தவர்க்கங்களின் தூபம் காட்டுகிறதற்கும், சமுகத்தப்பங்களை எப்போதும் வைக்கிறதற்கும், காலையிலும் மாலையிலும், ஓய்வுநாட்களிலும், மாதப்பிறப்புகளிலும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் பண்டிகைகளிலும், இஸ்ரவேல் நித்தியகாலமாகச் செலுத்தவேண்டியபடி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறதற்கும், அவருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அதை அவருக்குப் பிரதிஷ்டைபண்ணும்படி நான் எத்தனித்திருக்கிறேன்.

2நாளா 2:5. எங்கள் தேவன் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர்; ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதாயிருக்கும்.

2நாளா 2:6. வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க, அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? அவர் சந்நிதியில் தூபங்காட்டுகிறதற்கே ஒழிய, வேறே முகாந்தரமாய் அவருக்கு ஆலயம்கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?

2நாளா 2:7. இப்போதும் என் தகப்பனாகிய தாவீது குறித்தவர்களும், என்னிடத்தில் யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிறவர்களுமாகிய நிபுணரோடு, பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் இரும்பிலும் ரத்தாம்பரநூலிலும் சிவப்புநூலிலும் இளநீல்நூலிலும் வேலைசெய்ய நிபுணனும், கொத்துவேலைசெய்ய அறிந்தவனுமாகிய ஒரு மனுஷனை என்னிடத்தில் அனுப்பும்.

2நாளா 2:8. லீபனோனிலிருந்து கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், வாசனை மரங்களையும் எனக்கு அனுப்பும்; லீபனோனின் மரங்களை வெட்ட உம்முடைய வேலைக்காரர் பழகினவர்களென்று அறிவேன்; எனக்கு மரங்களைத் திரளாக ஆயத்தப்படுத்த என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூட இருப்பார்கள்.

2நாளா 2:9. நான் கட்டப்போகிற ஆலயம்பெரியதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கும்.

2நாளா 2:10. அந்த மரங்களை வெட்டுகிற உம்முடைய வேலைக்காரருக்கு இருபதினாயிரம் மரக்கால் கோதுமை அரிசியையும், இருபதினாயிரம் மரக்கால் வாற்கோதுமையையும், இருபதினாயிரம் குடம் திராட்சரசத்தையும், இருபதினாயிரம் குடம் எண்ணெயையும் கொடுப்பேன் என்று சொல்லி அனுப்பினான்.

கர்த்தர் சாலொமோனுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். சாலொமோன் தன்னிடத்திலுள்ள ஞானத்தை, மற்றவர்களோடு விவாதம்பண்ணுவதற்கோ அல்லது சிநேகிதர்களை சந்தோஷப்படுத்துவதற்கோ அல்லது நூதனமான காரியங்களை பேசுவதற்கோ பயன்படுத்தவில்லை. சாலொமோன் தன்னிடத்திலுள்ள ஞானத்தை ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு பயன்படுத்துகிறார்.

கர்த்தர் சாலொமோனுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். சாலொமோன் அந்த ஞானத்தை கர்த்தருடைய நாமமகிமைக்காக பயன்படுத்துகிறார். சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தையும், தன் ராஜரிகத்திற்கு ஒரு அரமனையையும் கட்ட நிர்ணயம் பண்ணுகிறார் *(2நாளா 2:1)*.

சாலொமோன் முதலாவதாக கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அதன் பின்புதான் அவர் தனக்கு அரமனையைக் கட்ட விரும்புகிறார். ஆலயம் கர்த்தருடைய வாசஸ்தலம். அரமனை ராஜாவின் வாசஸ்தலம்.

சாலொமோன் தனக்கு ஒரு அரமனையைக் கட்ட விரும்பினாலும், அதை தன்னுடைய வசதிக்காக அவர் கட்டவில்லை. தன்னுடைய ராஜரிகத்திற்காக அந்த அரமனையைக் கட்ட நிர்ணயம்பண்ணுகிறார். சாலொமோன் ராஜாவை அண்டை தேசத்து ராஜாக்கள் பார்க்க வருவார்கள். சாலொமோன் அவர்களை வரவேற்று உபசரிக்கவேண்டும். சாலொமோனுடைய கொலுமண்டபம் நேர்த்தியாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் தேசத்தின் மேன்மை சாலொமோனுடைய அரமனையினால் அதிக மகிமைப்படும். இதற்காகவே சாலொமோன் ஒரு அரமனையைக் கட்ட நிர்ணயம்பண்ணுகிறார்.

சாலொமோன் தனக்காக எதையும் செய்ய விரும்பவில்லை. சாலொமோன் செய்கிற ஒவ்வொரு காரியமும் இஸ்ரவேல் தேசத்தின் நன்மைக்கேதுவாகயிருக்கும். அவர் எப்போதும் தனக்குரியதை மாத்திரம் நாடாமல், பிறருக்குரியதையும் நாடுகிறவர். விசுவாசிகளாகிய நாம், நமக்காக பிறந்தவர்களல்ல. நாம் கர்த்தருக்காகவும், அவருடைய ராஜ்யத்திற்காகவும் பிறந்திருக்கிறவர்கள்.

சாலொமோன் கட்ட நிர்ணயம்பண்ணியிருக்கிற ஆலயத்தையும் அரமனையையும் கட்டுவதற்கு, ஏராளமான வேலையாட்கள் தேவைப்படுவார்கள். சாலொமோன் அதற்காக, சுமைசுமக்கிறதற்கு எழுபதினாயிரம் பேரையும், மலையில் மரம் வெட்டுகிறதற்கு எண்பதினாயிரம்பேரையும், இவர்கள்மேல் தலைவராக மூவாயிரத்து அறுநூறுபேரையும் எண்ணி ஏற்படுத்துகிறார் *(2நாளா 2:2)*.

சாலொமோன் தீருவின் ராஜாவாகிற ஈராமினிடத்தில் ஆள் அனுப்பி, அவருடைய தயவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்.

தீரு சாலொமோனுடைய காலத்தில் மிகவும் பிரசித்திப்பெற்ற வியாபார பட்டணம். இது கடற்கரைக்கு அருகாமையில் அமைந்திருக்கிற துறைமுகப்பட்டணம். தீரு இஸ்ரவேலின் எல்லையில் உள்ளது. ஈராம் என்பவர் தீருவின் ராஜாவாயிருக்கிறார். இவர் தாவீதுக்கு நெருங்கிய சிநேகிதர். தாவீதுக்கு பின்பு, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானார் என்பதை ஈராம் கேள்விப்படுகிறார்.

தீருவிலே விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. தீருவின் ராஜாவாகிய ஈராமோ, விக்கிரகங்களை ஆராதியாமல், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கிறார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஈராம் கர்த்தரை ஆராதித்தாலும், அவர் தீருவிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு முயற்சியும் செய்யவில்லை. ஈராம் விக்கிரகாராதனைக்கு விரோதமாக ஒன்றும் பண்ணவில்லை.

சாலொமோனை அவருடைய பிதாவின் ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் என்று தீருவின் ராஜாவாகிய ஈராம் கேள்விப்படுகிறார். ஈராம் தன் ஊழியக்காரரை சாலொமோனிடத்தில் அனுப்புகிறார்; ஈராம் தாவீதுக்குச் சகலநாளும் சிநேகிதனாயிருந்தார் (1இராஜா 5:1). ஈராம் தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக சாலொமோனுக்கு வாழ்த்து செய்திகளையும், வெகுமதிகளையும் கொடுத்தனுப்புகிறார்.

சாலொமோன் ஈராமின் வாழ்த்துதல்களைப் பெற்றுக்கொண்டு, அவருடைய வெகுமதிகளையும் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோனும் ஈராமுக்கு தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக வாழ்த்து செய்திகளை அனுப்புகிறார். ஈராம் தாவீதுக்கு சிநேகிதர். சாலொமோன் ஈராமோடு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார்.

சாலொமோன் தேவனுடைய நாமமகிமைக்காக எருசலேமிலே கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணியிருக்கிறார். சாலொமோன் தன்னுடைய விருப்பத்தை தன் ஊழியக்காரர் மூலமாக ஈராமுக்கு சொல்லியனுப்புகிறார். தேவாலயம் கட்டப்படவேண்டும் என்னும் செய்தியை ஈராமும் ஏற்கெனவே அறிந்திருக்கிறார்.

அப்பொழுது சாலொமோன் ஈராமினிடத்தில் ஆட்களை அனுப்பி: "என் தகப்பனாகிய தாவீதின் சத்துருக்களைக் கர்த்தர் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திவிடுமளவும், அவர்கள் தம்மைச் சுற்றிலும் செய்கிற யுத்தத்தினால், அவர் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட, அவருக்குக் கூடாதிருந்தது என்று நீர் அறிந்திருக்கிறீர்" (1இராஜா 5:2,3) என்று சொல்லியனுப்புகிறார்.

தாவீது பல யுத்தங்களை நடத்தினார். இதனால் அவரால் தேவாலயம் கட்ட முடியவில்லை. கர்த்தருக்கு ஆலயம் கட்டவேண்டும் என்னும் ஆர்வமும், திட்டமும் தாவீதின் மனதிலே இருந்தது. ஆனாலும் அவர் செய்த யுத்தங்கள் ஆலயம் கட்டுவதற்கு தடையாயிற்று.

இப்போது சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் யுத்தம் நடைபெறவில்லை. இஸ்ரவேல் தேசம் அமைதியாயிருக்கிறது. சாலொமோன் தன்னுடைய தேசத்தில் நிலவுகிற அமைதியைப்பற்றி ஈராமுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார். "ஆனாலும் இப்பொழுதோ என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார்; விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை" (1இராஜா 5:4) என்று சாலொமோன் சொல்லுகிறார்.

"விரோதி" என்னும் வார்த்தைக்கு சாத்தான் என்று பொருள். நாம் கர்த்தருக்காக ஒரு வேலையை செய்யும்போது சாத்தான் அதைத் தடைபண்ணுவான். அந்த வேலைக்கு எதிர்த்து நிற்பான். நாம் அந்த வேலையை செய்யக்கூடாதபடிக்கு நம்மை திசை திருப்ப முயற்சி பண்ணுவான். இதுவே சாத்தானுடைய வேலை. சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில், சாத்தான் அவருக்கு விரோதமாக கிரியை செய்யவில்லை.

சூழ்நிலைகளும், காலங்களும் தனக்கு சாதகமாயிருப்பதினால் சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்ட விரும்புகிறார். தாவீது தேவனுடைய ஆலயத்தைக் கட்டமாட்டார் என்றும், அவருடைய குமாரனே ஆலயத்தைக் கட்டுவார் என்றும், கர்த்தர் ஏற்கெனவே தாவீதுக்கு சொல்லியிருக்கிறார். இது சாலொமோனுக்கும் தெரியும்.

சாலொமோன் கர்த்தருடைய விருப்பத்தை ஈராமுக்கு சொல்லியனுப்புகிறார். "நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னார்" (1இராஜா 5:5) என்று சாலொமோன் ஈராமுக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் தன் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, "என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன்" (1இராஜா 5:5) என்று சாலொமோன், தன்னுடைய மனதின் விருப்பத்தை, தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, தன்னுடைய ஆட்கள் மூலமாக சொல்லியனுப்புகிறார்.

தேவனுக்கு ஆலயம் கட்ட ஈராம் தனக்கு உதவி செய்வார் என்று சாலொமோன் எதிர்பார்க்கிறார். அவர் ஈராமின் உதவியை விரும்புகிறார். லீபனோன் அடர்த்தியான வனதேசம். இது கானான் தேசத்தின் வடக்கு பகுதியிலுள்ளது. லீபனோன் வனத்திலே ஏராளமான விருட்சங்களும் மரங்களும் அடர்த்தியாய் வளர்ந்திருக்கிறது.

லீபனோன் வனம் இஸ்ரவேல் தேசத்தின் சுதந்தரவீதத்திற்குள்ளே இருக்கிறது. "கிப்லியரின் நாடும், சூரியோதயப்புறத்தில் எர்மோன் மலையடிவாரத்தில் இருக்கிற பாகால்காத் முதற்கொண்டு ஆமாத்துக்குள் பிரவேசிக்குமட்டுமுள்ள லீபனோன் முழுவதும், லீபனோன் துவக்கி மிஸ்ரபோத்மாயீம்மட்டும் மலைகளில் குடியிருக்கிற யாவருடைய நாடும், சீதோனியருடைய எல்லா நாடும்தானே. நான் அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்துவேன்; நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, நீ இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகச் சீட்டுகளைமாத்திரம் போட்டு தேசத்தைப் பங்கிடவேண்டும்" (யோசு 3:5,6).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். லீபனோன் வனத்திற்கும் சாலொமோனே சொந்தக்காரர். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் மரவெட்டு வேலை அறியாதவர்கள். சீதோனியரோ மரவெட்டு வேலை அறிந்தவர்கள். சீதோனியர் ஈராமின் ஆளுகைக்குட்பட்டவர்கள். தனக்கு மரவெட்டுவேலை அறிந்தவர்களை அனுப்பி உதவி செய்யவேண்டுமென்று, சாலொமோன் ஈராமிடத்தில் கேட்டுக்கொள்கிறார்.

சாலொமோன் தன்னுடைய வேலைக்காரர் மூலமாக ஈராமுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார். சாலொமோன் அவர்களிடத்தில், "லீபனோனில் எனக்காக கேதுருமரங்களை வெட்டக் கட்டளையிடும்; சீதோனியரைப்போல மரவெட்டு வேலை அறிந்தவர்கள் எங்களுக்குள்ளே ஒருவருமில்லை என்பது உமக்குத் தெரியும்; அதற்காக என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடே இருப்பார்கள்; நீர் சொல்வதின்படியெல்லாம் உம்முடைய வேலைக்காரரின் சம்பளத்தை உமக்குக் கொடுப்பேன்" (1இராஜா 5:6) என்று ஈராமுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

ஈராமின் வேலைக்காரர் மரங்களை வெட்டினாலும், சாலொமோனின் வேலைக்காரரும் அவருடைய வேலைக்காரரோடு கூடயிருப்பார்கள். சாலொமோன் ஈராமின் வேலைக்காரருக்கு உரிய சம்பளத்தை கொடுப்பதாகவும் சம்மதிக்கிறார். அந்த சம்பளம் ஈராம் சொல்லுவதின் படியெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

ஊழியம் கர்த்தருடையது. ஊழியக்காரர்கள் கர்த்தருக்காகவே ஊழியம் செய்கிறார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களை, கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்று, வாயின் வார்த்தைகளினால் ஆசீர்வதித்து, அவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல், அவர்களை வெறுங்கையோடு அனுப்பிவிடக்கூடாது. வேலைக்காரன் தன் ஊதியத்திற்கு பாத்திரவானாயிருக்கிறான். திருச்சபைகளில் வேலை செய்கிறவர்களுக்கும், ஊழிய ஸ்தாபனங்களில் வேலை செய்கிறவர்களுக்கும், அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற சம்பளங்களைக் கொடுத்து அவர்களை ஆதரிக்கவேண்டும்.

தேவனுடைய ஆலயம் எருசலேமிலே கட்டப்படுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். கர்த்தருடைய ஜனம் ஆலயத்தைக் கட்டும்போது, சீதோனியரைப்போல புறஜாதியாரும், கர்த்தருடைய ஆலய கட்டுமான வேலைகளில் உதவியாயிருக்கிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி இந்த சம்பவத்தை ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய் சொல்லியிருக்கிறார்.

"அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்; என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன்; ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்துவரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்" (ஏசா 60:10,11).

"உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய்ப் பாழாகும். என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாரு விருட்சங்களும், பாய்மர விருட்சங்களும், புன்னைமரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டு வரப்படும்; என் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவேன்" (ஏசா 60:12,13).

ஈராம் சாலொமோனின் வார்த்தைகளைக் கேட்டபோது, மிகவும் சந்தோஷப்படுகிறார். "அந்த ஏராளமான ஜனங்களை ஆளும்படி, தாவீதுக்கு ஒரு ஞானமுள்ள குமாரனைக் கொடுத்த கர்த்தர் இன்று ஸ்தோத்திரிக்கப்படுவாராக" (1இராஜா 5:7) என்று சொல்லி ஈராம் கர்த்தரைத் துதிக்கிறார்.

சாலொமோனுடைய வேண்டுகோளை ஈராம் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோன் தாவீதின் அடிச்சுவடுகளில் நடக்கிறார். ஈராமின் இருதயம் உதாரத்துவமாய் உதவி செய்யக்கூடியது. சாலொமோன் தேவனுக்கு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானித்திருப்பது ஈராமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. சாலொமோனுடையஞானத்தையும், அவருடைய ராஜரீகத்தையும் கேள்விப்பட்டு ஈராம் கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறார். அவர் சாலொமோனுக்காக கர்த்தரைத் துதிக்கிறார்.

ஈராமின் நல்ல சுபாவம் நமக்கு இங்கே எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் நம்மைவிட பொருளாதாரத்திலும், அந்தஸ்திலும் உயரும்போது, நாம் அவர்களைப் பார்த்து பொறாமைப்படக்கூடாது. அவர்களுக்கு விரோதமாக தூஷணவார்த்தைகளைப் பேசக்கூடாது. நாம் அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கவேண்டும். பிறருடைய புத்தியும் ஞானமும் நம்முடைய ஞானத்தைவிட அதிகமாயிருக்கும்போது, நாம் அவர்கள்மீது பொறாமைப்படாமல், அவர்களுக்காக நாம் கர்த்தருக்குள் சந்தோஷப்படவேண்டும்.

சாலொமோன் சொல்லியனுப்பின செய்தியை கேள்விப்பட்டு ஈராம் சந்தோஷப்படுகிறார். அவர் காலதாமதம்பண்ணாமல் உடனே தன்னுடைய மனுஷரை சாலொமோனிடத்தில் அனுப்புகிறார். ஈராம் சாலொமோனுக்கு "நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன். என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவர்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும்" (1இராஜா 5:8,9) என்று தன்னுடைய மனுஷர் மூலமாய் செய்தி சொல்லியனுப்புகிறார்.

சாலொமோன் தேவனுக்கு ஆலயம் கட்டவேண்டுமென்று தீர்மானித்திருப்பது ஈராமுக்கு சந்தோஷமாயிருக்கிறது. சாலொமோன் தன்னிடத்தில் கேட்கிற எல்லா உதவிகளையும் அவருக்கு செய்து கொடுக்க ஈராம் ஆயத்தமாயிருக்கிறார். சாலொமோன் தன்னிடத்தில் கேட்ட உதவிகளைவிட, அவருக்கு அதிகமான உதவிகளை செய்ய ஈராம் விரும்புகிறார். சாலொமோனும் ஈராமும் இது சம்பந்தமாக உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள்.

ஈராம் சாலொமோனுக்கு உதவி செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். சாலொமோனிடத்திலிருந்து தனக்கு பிரதியுத்தரம் வருவதற்கு முன்பாகவே, தான் அவருக்கு செய்யப்போகிற உதவிகளை ஈராம் தன் மனுஷர் மூலமாக சாலொமோனுக்கு சொல்லியனுப்புகிறார். "கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன்" (1இராஜா 5:8) என்று ஈராம் சாலொமோனுக்கு சொல்லுகிறார். ஈராம் தேவாலய கட்டுமான வேலைக்கு உதவிசெய்ய காலதாமதம்பண்ணவில்லை.

சாலொமோன் ஈராமிடம், "லீபனோனில் எனக்காக கேதுரு மரங்களை வெட்ட கட்டளையிடும்" (1இராஜா 5:6) என்று மாத்திரமே கேட்டுக்கொண்டார். ஈராமோ அந்த வேலையின் முழுவிவரத்தையும் சாலொமோனுக்கு தெளிவாகச் சொல்லுகிறார். தன்னுடைய ஊழியக்காரர் இந்த வேலையை எப்படி செய்வார்கள் என்பதையும் ஈராம் சாலொமோனுக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஈராம் சாலொமோனிடம், "என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவர்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்" (1இராஜா 5:9) என்று இந்த வேலையைப்பற்றி தெளிவாகச் சொல்லுகிறார்.

லீபனோனிலே கேதுரு மரங்களை வெட்டி, அந்த மரங்களை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டும் என்று சாலொமோன் ஈராமிடம் கேட்கவில்லை. சாலொமோன் கேட்காததையும் ஈராம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். வெட்டப்பட்ட மரங்களை எங்கே கொண்டு வரவேண்டுமென்று சாலொமோன் தீர்மானம்பண்ணவேண்டும். சாலொமோன் நியமிக்கும் இடத்திற்கு, ஈராம் அந்த மரங்களை கடல் வழியாய் அனுப்பி வைப்பார். மரங்களை பாதுகாப்பாக அனுப்பும் பொறுப்பையும் ஈராம் ஏற்றுக்கொள்கிறார்.

சீதோனியர் இஸ்ரவேலரைவிட மரவெட்டு வேலையை நன்றாய் அறிந்தவர்கள். மரங்களை தெப்பங்களாகக் கட்டி கடலிலே அனுப்பும் வேலையையும் சீதோனியர் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். தீருவும் சீதோனும் கடல்துறை பட்டணங்கள்.

"சமுத்திரக் கரைதுறையிலே குடியிருந்து, அநேகம் தீவுகளின் ஜனங்களோடே வியாபாரம்பண்ணுகிற தீருவை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், தீருவை, நீ உன்னைப் பூரண சௌந்தரியவதி என்கிறாய்" (எசே 27:3).

ஈராமின் ஆட்கள் சாலொமோனுக்காக இந்த வேலைகளை செய்யும்போது, சாலொமோன் அவர்களுக்கு நியாயமான சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் ஈராம் எதிர்பார்க்கிறார். ஈராம் சாலொமோனிடம், "அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும்" (1இராஜா 5:9) என்று சொல்லச்சொல்லுகிறார்.

சாலொமோன் ஈராமின் வேலையாட்களுக்கும் சம்பளம் கொடுக்கவேண்டும், ஈராமின் வீட்டாருக்கும் ஆகாரம் கொடுக்கவேண்டும். தீரு இஸ்ரவேலுக்கு வேலையாட்களைக் கொடுக்கும்போது, இஸ்ரவேல் தீருவுக்கு தானியங்களைக் கொடுப்பார்கள்.

"யூதரும் இஸ்ரவேல் தேசத்தாரும் உன்னோடே வியாபாரம்பண்ணி, மின்னீத், பன்னாக் என்கிற ஊர்களின் கோதுமையையும், தேனையும், எண்ணெயையும், பிசின்தைலத்தையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள்" (எசே 27:17).

கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பினால் தேசங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாயிருக்கிறது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தின் ஆசீர்வாதங்களை சார்ந்து ஜீவிக்கிறார்கள்.

சாலொமோன் ஈராமிடத்தில் தனக்கு தயவு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறார். அவர் மற்றவர்களிடம் கேட்காமல் ஈராமிடத்தில் கேட்பதற்கு சில விசேஷித்த காரணங்கள் உண்டு. தாவீதும் ஈராமும் சிநேகிதர்கள். தாவீது தனக்கு அரமனையைக் கட்டியபோது, ஈராம் அவருக்கு தயவு செய்து, அவருக்கு கேதுரு மரங்களை அனுப்பினார். ஈராம் தாவீதுக்கு தயவு செய்ததுபோல, தனக்கும் தயவு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறார் *(2நாளா 2:3)*.

கர்த்தருக்கு ஆலயம் கட்டவேண்டும் என்னும் திட்டம் சாலொமோனிடத்தில் இருக்கிறது. தாவீது ஈராமுக்கு கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவது சம்பந்தமான திட்டத்தை சொல்லுகிறார். தேவனாகிய கர்த்தருக்கு ஆலயம் கட்டுவதற்கான காரணத்தையும் சாலொமோன் ஈராமுக்கு விரிவாக சொல்லுகிறார்.

"இதோ, என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் சுகந்தவர்க்கங்களின் தூபம் காட்டுகிறதற்கும், சமுகத்தப்பங்களை எப்போதும் வைக்கிறதற்கும், காலையிலும் மாலையிலும், ஓய்வுநாட்களிலும், மாதப்பிறப்புகளிலும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் பண்டிகைகளிலும், இஸ்ரவேல் நித்தியகாலமாகச் செலுத்தவேண்டியபடி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறதற்கும், அவருடைய நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அதை அவருக்குப் பிரதிஷ்டைபண்ணும்படி நான் எத்தனித்திருக்கிறேன்" *(2நாளா 2:4)* என்று சாலொமோன் ஈராமுக்கு சொல்லியனுப்புகிறார்.

கர்த்தருடைய நாமத்திற்காக கட்டப்படும் ஆலயம், அவருக்கு பிரதிஷ்டைபண்ணப்படும். அந்த ஆலயம் கர்த்தரை ஆராதிப்பதற்காக பயன்படுத்தப்படும். கர்த்தருடைய ஆலயத்திலே என்னென்ன ஆராதனைகள் நடைபெறும் என்பதை சாலொமோன் ஈராமுக்குத் தெளிவாகச் சொல்லுகிறார்.

சாலொமோன் ஈராமிடம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது மிகவும் உயர்வாகச் சொல்லுகிறார். "எங்கள் தேவன் எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர்; ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரியதாயிருக்கும்" *(2நாளா 2:5)* என்று சொல்லி சாலொமோன் கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். இந்த உலகத்தில் ஏராளமான தேவர்களும், எண்ணிடலங்காத விக்கிரகங்களும் இருந்தாலும், கர்த்தரே எல்லா தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர் என்று சாலொமோன் தீர்மானமாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் பெரியவர். ஆகையினால் சாலொமோன் கர்த்தருக்கு கட்டப்போகிற ஆலயமும் பெரிதாயிருக்கும். சாலொமோன் கர்த்தருக்கு எவ்வளவு பெரிய ஆலயத்தைக் கட்டினாலும், அந்த ஆலயத்தை கர்த்தருடைய மகிமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாலொமோன் கட்டப்போகிற ஆலயம் சிறியதாகவே இருக்கும்.

சாலொமோன் கர்த்தருடைய பெரிதான மகிமையைப்பற்றி ஈராமுக்குச் சொல்லும்போது, "வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க, அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன் யார்? அவர் சந்நிதியில் தூபங்காட்டுகிறதற்கே ஒழிய, வேறே முகாந்தரமாய் அவருக்கு ஆலயம்கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?" *(2நாளா 2:6)* என்று சொல்லுகிறார்.

"வானங்களும் வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க" என்னும் இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது, கர்த்தருடைய உருவம் மிகவும் பெரியது என்றும், தேவாலயத்திற்குள் அவரால் வாசம்பண்ண முடியாது என்றும் தோன்றுகிறது. ஆனால் இது உருவகமாகக் கூறப்பட்டிருக்கும் வாக்கியம். இதுபோன்ற வாக்கியங்கள் கர்த்தரின் மெய்யான ரூபத்தை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக ஒரு மாயையான தோற்றத்தை மறைமுகமாக ஏற்படுத்தி விடுகிறது. கர்த்தர் தம்மை ஒருபோதும் மாயையாக வெளிப்படுத்துவதில்லை. அவர் தம்மைப் பிரத்தியட்சமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

சாலொமோன் "வானங்களும் வானாதி வானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க" என்று கூறும்போது, அவர் கர்த்தருடைய உருவத்தைப் பற்றிக் கூறவில்லை. அவருடைய மேன்மையையும், மகத்துவத்தை பற்றியும் கூறுகிறார். கர்த்தர் வானங்களுக்கு மட்டும் உரியவர் அல்ல என்பதே இந்த வாக்கியத்தின் பொருளாகும். பிரத்தியட்சமான இந்த ஆலயம் கர்த்தரைக் கொள்ளக்கூடாத அளவிற்கு சிறியதாக உள்ளது என்னும் பொருளில் சாலொமோன் கூறவில்லை. *(எசே 43:7; எசே 48:35; சக 6:12-13; சக 14:4-5,9,16-21; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 20:1-10; வெளி 21:1-7 ; வெளி 22:1-5).*

"காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" என்று ரோமர் 1:20 ஆவது வசனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

தீருவின் ராஜாவாகிய ஈராம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி தப்பிதமாக நினைத்துக்கொள்ளக்கூடாது. இந்தப் பூமியிலுள்ள மற்ற தேவர்களைப்போல இஸ்ரவேலின் தேவனும் ஒரு சாதாரண தேவன் என்று ஈராம் நினைக்கக்கூடாது.

"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை" *(அப் 17:24).*

வானங்களும் வானதி வானங்களும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை கொள்ளக்கூடாது. எவ்வளவு பெரிய ஆலயம் கட்டினாலும் அது கர்த்தருக்கு போதுமானதாயிராது. ஆனாலும் கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்கள், அவருடைய ஆலயத்திலே வந்து அவரை ஆராதிக்கலாம். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அங்கே தங்கியிருக்கும். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே அவருக்கு முன்பாக தூபங்காட்டலாம். அங்கே சமுகத்தப்பங்களை வைக்கலாம். சர்வாங்க தகனபலிகளை செலுத்தலாம். கர்த்தருடைய ஆலயம், அவருடைய பரிசுத்த பிரசன்னம் தங்கியிருக்கும் வாசஸ்தலம்.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாயிருந்தாலும், அவர் கர்த்தருக்கு முன்பாக தன்னை வெகுவாய்த் தாழ்த்துகிறார். "கர்த்தருக்கு ஆலயம் கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்" என்று சாலொமோன் கேட்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார். அவரிடத்தில் ஆலயத்தைக் கட்டுவதற்கு ஒரு சில நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு சேர்ந்து இன்னும் ஏராளமான நிபுணர்கள் பணிசெய்யவேண்டும். அப்படிப்பட்ட நிபுணர்கள் தீரு தேசத்திலே இருக்கிறார்கள். அவர்களில் ஒரு மனுஷனை தன்னிடத்தில் அனுப்புமாறு சாலொமோன் ஈராமிடம் கேட்டுக்கொள்கிறார்.

"இப்போதும் என் தகப்பனாகிய தாவீது குறித்தவர்களும், என்னிடத்தில் யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிறவர்களுமாகிய நிபுணரோடு, பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் இரும்பிலும் ரத்தாம்பர நூலிலும் சிவப்புநூலிலும் இளநீலநூலிலும் வேலைசெய்ய நிபுணனும், கொத்துவேலைசெய்ய அறிந்தவனுமாகிய ஒரு மனுஷனை என்னிடத்தில் அனுப்பும்" *(2நாளா 2:7)* என்று சாலொமோன் ஈராமுக்குச் சொல்லுகிறார்.

சாலொமோனுக்கு கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு வேலையறிந்த நிபுணர்களோடு, கட்டுமான பொருட்களும் தேவைப்படுகிறது. சாலொமோன் அந்தப் பொருட்களையும் ஈராமினிடத்தில் கேட்கிறார். "லீபனோனிலிருந்து கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், வாசனை மரங்களையும் எனக்கு அனுப்பும்; லீபனோனின் மரங்களை வெட்ட உம்முடைய வேலைக்காரர் பழகினவர்களென்று அறிவேன்; எனக்கு மரங்களைத் திரளாக ஆயத்தப்படுத்த என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூட இருப்பார்கள்" *(2நாளா 2:8)* என்று சாலொமோன் சொல்லுகிறார்.

சாலொமோன் கட்டப்போகிற ஆலயம் பெரிதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கும். ஈராம் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலைக்கு ஆட்களையும் பொருட்களையும் கொடுத்து தயவு காண்பிக்கும்போது, சாலொமோன் ஈராமுக்கு, அதற்குரிய பிரதிஉபகாரம்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். " அந்த மரங்களை வெட்டுகிற உம்முடைய வேலைக்காரருக்கு இருபதினாயிரம் மரக்கால் கோதுமை அரிசியையும், இருபதினாயிரம் மரக்கால் வாற்கோதுமையையும், இருபதினாயிரம் குடம் திராட்சரசத்தையும், இருபதினாயிரம் குடம் எண்ணெயையும் கொடுப்பேன்" (2நாளா 2:10) என்று சாலொமோன் ஈராமுக்கு சொல்லி அனுப்புகிறார்.

ஈராமின் உதவி
2நாளா 2:11-18

2நாளா 2:11. அப்பொழுது தீருவின் ராஜாவாகிய ஈராம் சாலொமோனுக்குப் பிரதியுத்தரமாக: கர்த்தர் தம்முடைய ஜனத்தைச் சிநேகித்ததினால், உம்மை அவர்கள்மேல் ராஜாவாக வைத்தார்.

2நாளா 2:12. கர்த்தருக்கு ஒரு ஆலயத்தையும், தமது ராஜரிகத்திற்கு ஒரு அரமனையையும் கட்டத்தக்க யுக்தியும் புத்தியுமுடைய ஞானமுள்ள குமாரனை, தாவீதுராஜாவுக்குக் கட்டளையிட்டவராகிய வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

2நாளா 2:13. இப்போதும் ஈராம் அபியென்னும் புத்திமானாகிய நிபுணனை அனுப்புகிறேன்.

2நாளா 2:14. அவன் தாணின் குமாரத்திகளில் ஒரு ஸ்திரீயின் குமாரன்; அவன் தகப்பன் தீருதேசத்தான்; அவன் பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும், இரும்பிலும், கற்களிலும், மரங்களிலும், இரத்தாம்பரநூலிலும் இளநீல்நூலிலும் மெல்லிய நூலிலும், சிவப்பு நூலிலும் வேலைசெய்யவும், சகலவிதக் கொத்துவேலை செய்யவும், என்னென்ன செய்யவேண்டுமென்று அவனுக்குச் சொல்லப்படுமோ, அவைகளையெல்லாம் உம்மிடத்திலுள்ள நிபுணரோடும், உம்முடைய தகப்பனாகிய தாவீது என்னும் என் ஆண்டவனின் நிபுணரோடுங்கூட யூகித்துச் செய்யவும் அறிந்தவன்.

2நாளா 2:15. என் ஆண்டவன் தாம் சொன்னபடி கோதுமையையும், வாற்கோதுமையையும், எண்ணெயையும், திராட்சரசத்தையும் தம்முடைய ஊழியக்காரருக்கு அனுப்புவாராக.

2நாளா 2:16. நாங்கள் உமக்குத் தேவையான மரங்களையெல்லாம் லீபனோனிலே வெட்டி, அவைகளைத் தெப்பங்களாய்க் கட்டி கடல் வழியாய் யோப்பாமட்டும் கொண்டுவருவோம்; பிற்பாடு நீர் அவைகளை எருசலேமுக்குக் கொண்டுபோகலாம் என்று எழுதி அனுப்பினான்.

2நாளா 2:17. தன் தகப்பனாகிய தாவீது இஸ்ரவேல் தேசத்திலுண்டான மறுஜாதியாரையெல்லாம் எண்ணித் தொகையிட்டது போல, சாலொமோனும் அவர்களை எண்ணினான்; அவர்கள் லட்சத்துஐம்பத்துமூவாயிரத்து அறுநூறுபேராயிருந்தார்கள்.

2நாளா 2:18. இவர்களில் அவன் எழுபதினாயிரம் பேரைச் சுமைசுமக்கவும், எண்பதினாயிரம்பேரை மலையில் மரம்வெட்டவும், மூவாயிரத்து அறுநூறுபேரை ஜனத்தின் வேலையை விசாரிக்கும் தலைவராயிருக்கவும் வைத்தான்.

சாலொமோனின் விண்ணப்பத்தை ஈராம் ஏற்றுக்கொள்கிறார். சாலொமோனும் ஈராமின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக ஒப்புக்கொள்கிறார்கள். தங்களுடைய ஒப்பந்தத்தை உடன்படிக்கை செய்து உறுதிபண்ணிக்கொள்கிறார்கள்.

அப்படியே ஈராம் சாலொமோனுக்கு வேண்டியமட்டும் கேதுருமரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் கொடுத்துக் கொண்டுவருகிறார். சாலொமோன் ஈராமின் அரமனைக்குப் போஜனத்திற்காக இருபதினாயிரக்கலம் கோதுமையையும், இடித்துப்பிழிந்த ஒலிவமரங்களின் இருபதுகல எண்ணெயையும் கொடுக்கிறார்; இப்படிச் சாலொமோன் ஈராமுக்கு வருஷாந்தரம் கொடுத்துவருகிறார் (1இராஜா 5:10,11).

சாலொமோனும் ஈராமும் சிநேகிதர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஞானத்தினால், மனுஷரோடு சிநேகத்தை பலப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களிடத்தில் கண்ணியமாயும், நேர்மையாயும் பழகவேண்டும். பழைய சிநேகிதர்களைப்போலவே, புதிய சிநேகிதர்களும் தங்களுடைய சிநேகிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். சிநேகிதர் மத்தியிலே உண்மையும் கண்ணியமும் காணப்படவேண்டும்.

கர்த்தர் சாலொமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவருக்கு ஞானத்தைத் தந்தருளுகிறார்; ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருக்கிறது, இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (1இராஜா 5:12).

சாலொமோன் கேட்டுக்கொண்ட பிரகாரம், லீபனோன் வனத்திலே மரவெட்டு வேலை நடைபெறுகிறது. ஈராமுடைய மனுஷரும் அங்கே வேலை செய்கிறார்கள். சாலொமோனுடைய மனுஷரும் அவர்களோடுகூட வேலை செய்கிறார்கள்.

ராஜாவாகிய சாலொமோன் இஸ்ரவேலரெல்லாரிலும் ஊழியத்துக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடிக்கிறார். அவர்களில் ஒவ்வொரு மாதத்திற்குப் பதினாயிரம்பேரை மாற்றி மாற்றி, லீபனோனுக்கு அனுப்புகிறார்; அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும், இரண்டு மாதம் தங்கள் வீடுகளிலும் இருப்பார்கள்; அதோனீராம் அந்த அமஞ்சி ஆட்களின்மேல் விசாரிப்புக்காரனாயிருக்கிறான் (1இராஜா 5:13,14).

சாலொமோன் மரம் வெட்டும் வேலைக்கு முப்பதினாயிரம் அமஞ்சி ஆட்களைப் பிடித்தாலும், அவர்களில் பத்தாயிரம் பேரை மாத்திரம் மரம் வெட்டு வேலைக்கு அனுப்புகிறார். மற்ற இருபதினாயிரம் பேரும் தங்கள் வீடுகளிலிருக்கிறார்கள். மரம் வெட்டுகிற பத்தாயிரம் பேரும் ஒரு மாதம் முழுவதும் வேலை செய்யவேண்டும். அதன் பின்பு அவர்கள் தங்கள் வீடுகளுக்கு ஒய்வெடுக்கப்போவார்கள். இரண்டு மாதங்கள் அவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்படும்.

அப்போது தங்கள் வீடுகளில் ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிற இருபதினாயிரம் பேரில், பத்தாயிரம் பேர் லீபனோன் வனத்திலே மரம் வெட்டு வேலைக்குப்போவார்கள். இவ்வாறாக சாலொமோனின் அமஞ்சி ஆட்களுக்கு ஓய்வும் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய வேலைகளை விசாரிப்பதற்காக சாலொமோன் அதோனிராம் என்பவனை விசாரிப்புக்காரனாக வைக்கிறான்.

சாலொமோனிடத்தில் சுமை சுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும், மலைகளில் மரம் வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம்பேரும் இருக்கிறார்கள். இவர்களைத்தவிர வேலையை விசாரித்து வேலையாட்களைக் கண்காணிக்கிறதற்கு தலைமையான விசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேரும் இருக்கிறார்கள் (1இராஜா 5:15,16).

இவர்களெல்லோரும் தேவாலயக்கட்டுமான வேலைகளுக்கு தேவையான பொருட்களை கொண்டு வருகிறார்கள். இவர்கள் மரங்களை வெட்டுகிறார்கள். சுமைகளை சுமக்கிறார்கள். சாலொமோன் இவர்களை தேவாலயக்கட்டுமான வேலைக்கும், மற்றும் தான் கட்டுகிற எல்லா கட்டிட வேலைகளுக்கும் பயன்படுத்துகிறார். இவர்கள் எருசலேமிலும் லீபனோன் வனத்திலும், மேலும் சாலொமோனின் காணியாட்சிக்குட்பட்ட மற்ற ஸ்தலங்களிலும் வேலை செய்கிறார்கள்.

சாலொமோன் அந்தக் கேசேர் பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும், பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும், தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார் (1இராஜா 19:17-19).

தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுவதற்கான ஆயத்த வேலைகளை சாலொமோன் மேற்கொள்கிறார். கட்டிடத்திற்கு அஸ்திபாரம் மிகவும் முக்கியமானது. அஸ்திபாரத்திற்குத் தேவையான கற்கள் எருசலேமுக்கு கொண்டு வரப்படுகிறது. ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட, பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைக் கொண்டுவர சாலொமோன் ராஜா கட்டளையிடுகிறார் (1இராஜா 5:17).

தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிற வேலையில், சாலொமோன் நேரடியாக ஈடுபடுகிறார். அஸ்திபாரம் ஆலயத்திற்கு மிகவும் பிரதானமாயிருக்கிறது. அஸ்திபாரத்தில் போடப்படும் முதலாவது கல், ஜெபத்தோடும் துதியோடும் போடப்படும். சாலொமோன் தேவாலயத்தின் அஸ்திபாரம் போடுவதற்கு பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைப் பயன்படுத்துகிறார்.

அஸ்திபாரம் பூமிக்கடியிலே இருக்கும். அதை நம்முடைய கண்களால் பார்க்க முடியாது. அஸ்திபாரத்தில் போடப்பட்டிருக்கிற கல் சாதாரண கல்லா அல்லது பெரிதும் விலையேறப்பெற்றதுமான கல்லா என்பதை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் சாலொமோனோ ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட பெரிதும் விலையேறப்பெற்றதுமான கற்களைப் பயன்படுத்துகிறார். அஸ்திபாரத்தைப் பார்க்க முடியாது என்பதற்காக சாலொமோன் மாய்மாலம் பண்ணவில்லை. கர்த்தருடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் அஸ்திபாரம் உறுதியாயிருக்கவேண்டும். அது வலுவானதாகயிருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய அஸ்திபாரத்தை மற்றவர்கள் பார்க்கமாட்டார்கள். ஆனால் இந்த அஸ்திபாரத்தின்மீதுதான் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் கட்டியெழுப்பப்படும். அஸ்திபாரம் உறுதியாயிருந்தால்தான் அதின்மீது கட்டப்படும் கட்டிடமும் உறுதியாகயிருக்கும்.

சாலொமோன் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆலயத்தைக் கட்ட, சாலொமோனின் சிற்பாசாரிகளும், ஈராமின் சிற்பாசாரிகளும், கிபலி ஊராரும், அந்த மரங்களையும் கற்களையும் வெட்டி ஆயத்தப்படுத்துகிறார்கள் (1இராஜா 5:18). ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை சாலொமோன் எருசலேமுக்கு கொண்டு வர கட்டளையிடுகிறார்.

ஈராம் தாவீதுக்கு தயவு காண்பித்ததுபோல சாலொமோனுக்கும் தயவு காண்பிக்கிறார். சாலொமோன் கேட்டுக்கொண்ட உதவிகளையெல்லாம் செய்து கொடுப்பதற்கு ஈராம் உடனே சம்மதம் தெரிவிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தின்மேல் கர்த்தர் சாலொமோனைப்போல ஒரு நல்லவரை ராஜாவாக வைத்திருப்பதற்காக ஈராம் அவருக்கு வாழ்த்துதலைச் சொல்லுகிறார். "கர்த்தர் தம்முடைய ஜனத்தைச் சிநேகித்ததினால், உம்மை அவர்கள்மேல் ராஜாவாக வைத்தார்" (2நாளா 2:11) என்று ஈராம் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு பின்பு சாலொமோனை இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக தெரிந்தெடுத்திருக்கிறார். இதற்காக ஈராம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். "கர்த்தருக்கு ஒரு ஆலயத்தையும், தமது ராஜரிகத்திற்கு ஒரு அரமனையையும் கட்டத்தக்க யுக்தியும் புத்தியுமுடைய ஞானமுள்ள குமாரனை, தாவீதுராஜாவுக்குக் கட்டளையிட்டவராகிய வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" (2நாளா 2:12) என்று ஈராம் சொல்லுகிறார்.

தீருவின் ராஜாவாகிய ஈராம் யூதர்களுடைய தேசத்தின்மீது அன்பும் பாசமுமுள்ளவர். இஸ்ரவேல் தேசம் வளர்ச்சி பெறுவதைப் பார்த்து ஈராம் சந்தோஷப்படுகிறார். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகவும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஜனமாகவும் இருக்கிறார்கள். தீருவின் ராஜாவாகிய ஈராம், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் மாத்திரமல்லாது, அந்த தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசங்களிலும், தேவனாகிய கர்த்தர், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று அறியப்பட்டிருக்கிறார்.

சாலொமோனுடைய ராஜ்யபார காலத்திலே, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு பிரியமானவர்களாய் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர்மீது பயபக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தாரும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வமாயிருக்கிறார்கள்.

சாலொமோனுடைய காலத்திற்கு பின்பு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார். இதனால் இஸ்ரவேலின் மகிமை மங்கிப்போகிறது. அந்நிய தேசங்களிலிருந்து விக்கிரகாராதனை இஸ்ரவேல் தேசத்திற்குள் பிரவேசிக்கிறது.

சாலொமோன் கேட்டுக்கொண்ட பிரகாரம், ஈராம் அபி என்னும் புத்திமானாகிய நிபுணனை, சாலொமோனிடத்திற்கு அனுப்புகிறார்.

அபி யூதஸ்திரீயின் குமாரன். தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவன். இவனுடைய தகப்பன் தீருவின் மனுஷன் *(2நாளா 2:13-14)*. இவனுடைய தாய், நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்தவள் என்று 1இராஜா 7:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதில் முரண்பாடு எதுவுமில்லை. இவள் பிறப்பினால் நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்தவள். சுவிகாரத்தினால் இவள் தாண் கோத்திரத்தைச் சேர்ந்திருக்கிறாள்.

ஈராம் தான் அனுப்பும் அபி என்னும் நிபுணனைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் தாணின் குமாரத்திகளில் ஒரு ஸ்திரீயின் குமாரன்; அவன் தகப்பன் தீருதேசத்தான்; அவன் பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும், இரும்பிலும், கற்களிலும், மரங்களிலும், இரத்தாம்பரநூலிலும் இளநீலநூலிலும் மெல்லிய நூலிலும், சிவப்பு நூலிலும் வேலைசெய்யவும், சகலவிதக் கொத்துவேலை செய்யவும், என்னென்ன செய்யவேண்டுமென்று அவனுக்குச் சொல்லப்படுமோ, அவைகளையெல்லாம் உம்மிடத்திலுள்ள நிபுணரோடும், உம்முடைய தகப்பனாகிய தாவீது என்னும் என் ஆண்டவனின் நிபுணரோடுங்கூட யூகித்துச் செய்யவும் அறிந்தவன்" *(2நாளா 2:14)* என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கேட்டுக்கொண்ட பிரகாரம் ஈராம் கேதுரு மரங்களையும் கொடுப்பதற்கு சம்மதிக்கிறார். ஈராம் சாலொமோனைப்பற்றிச் சொல்லும்போது, அவரை, "என் ஆண்டவன்" என்று சொல்லுகிறார். ஈராம் தாவீதுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்ததுபோலவே, தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்.

ஈராம் சாலொமோனுக்கு நிருபம் எழுதி அனுப்பும்போது, "என் ஆண்டவன் தாம் சொன்னபடி கோதுமையையும், வாற்கோதுமையையும், எண்ணெயையும், திராட்சரசத்தையும் தம்முடைய ஊழியக்காரருக்கு அனுப்புவாராக. நாங்கள் உமக்குத் தேவையான மரங்களையெல்லாம் லீபனோனிலே வெட்டி, அவைகளைத் தெப்பங்களாய்க் கட்டி கடல் வழியாய் யோப்பாமட்டும் கொண்டுவருவோம்; பிற்பாடு நீர் அவைகளை எருசலேமுக்குக் கொண்டுபோகலாம்" *(2நாளா 2:15,16)* என்று எழுதி அனுப்புகிறார்.

லீபனோனின் வனாந்தரத்தில் மரங்கள் வெட்டப்படுகிறது. அவை கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்குத் தெப்பங்களாகக் கட்டப்படுகிறது. இதன் பின்பு, அந்த மரங்களை யோப்பா மட்டும் கொண்டு வருகிறார்கள். யோப்பாவிலிருந்து எருசலேமிற்கு 40 மைல் தூரம். அதைத் தரைவழியாகக் கொண்டு வர வேண்டும். இரண்டாம் ஆலயம் கட்டப்பட்ட போதும், இதே முறையே பின்பற்றப்பட்டிருக்கிறது. *(எஸ்றா 3:7)*.

சாலொமோனிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும், ராஜாவின் அரமனையைக் கட்டுவதற்கும் ஏராளமான வேலையாட்கள் இருக்கிறார்கள். தன் தகப்பனாகிய தாவீது இஸ்ரவேல் தேசத்திலுண்டான மறுஜாதியாரையெல்லாம் எண்ணித் தொகையிட்டது போல, சாலொமோனும் அவர்களை எண்ணுகிறார்; அவர்கள் லட்சத்துஐம்பத்துமூவாயிரத்து அறுநூறுபேராயிருக்கிறார்கள் (2நாளா 2:17).

சாலொமோன் இவர்களில் எழுபதினாயிரம் பேரைச் சுமைசுமக்கவும், எண்பதினாயிரம்பேரை மலையில் மரம்வெட்டவும், மூவாயிரத்து அறுநூறுபேரை ஜனத்தின் வேலையை விசாரிக்கும் தலைவராயிருக்கவும் வைக்கிறார் (2நாளா 2:18).

தேவாலயம் கட்டுவதற்குச் சாலொமோன் 1,53,600 பேர்களை வேலைக்கு அமர்த்தினார். இவர்களெல்லாம் அந்நிய ஜாதியார். இவர்களைத் தவிர, இஸ்ரவேல் புத்திரரில் 30,000பேரையும் வேலைக்கு அமர்த்தினான். இவர்களில் 10,000பேராக ஒவ்வொரு மாதமும் தேவாலயத்து வேலைகளைச் செய்தார்கள் (1இராஜா 5:13-18). இவர்கள்மேல் தலைவராக மூவாயிரத்து அறுநூறுபேரையும் எண்ணி ஏற்படுத்தினார். இவர்களைக் கண்காணிப்பதற்கு 250 தலைவர்களையும் நியமித்தார். ஆக மொத்த தலைவர்களின் எண்ணிக்கை 3,850 பேராகும் (2நாளா 8:10).

3 அதிகாரம்

கர்த்தருடைய ஆலயம் கட்டப்படும் ஸ்தலம், அது கட்டப்பட்ட காலம் ஆகியவற்றைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது *(2நாளா 3:1,2)*. கர்த்தருடைய ஆலயத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கிற விலையுயர்ந்த பொருட்களும் ஆபரணங்களும் *(2நாளா 3:3-9)*.

சாலொமோன் மகாபரிசுத்தமான ஆலயத்திலே இரண்டு கேருபீன்களை சித்திரவேலையாய் உண்டுபண்ணி, அவற்றை மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கிறார் *(2நாளா 3:10-13)*. திரைச்சீலை *(2நாளா 3:14)*. ஆலயத்திற்கு முன்னாக இரண்டு தூண்கள் *(2நாளா 3:15-17)*.

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்களெல்லாம், 1இராஜா 6,7 ஆகிய அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயம் 2நாளா 3:1-9

2நாளா 3:1. பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினான்.

2நாளா 3:2. அவன் தான் ராஜ்யபாரம்பண்ணின நாலாம் வருஷம் இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியிலே கட்டத்தொடங்கினான்.

2நாளா 3:3. தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, சாலொமோன் போட்ட அஸ்திபாரமானது, முற்காலத்து அளவின்படியே, அறுபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமுமாயிருந்தது.

2நாளா 3:4. முகப்பு மண்டபம் ஆலயத்தினுடைய அகலத்தின்படியே இருபதுமுழ நீளமும், நூற்றிருபதுமுழ உயரமுமாயிருந்தது; அதின் உட்புறத்தைப் பசும்பொன்தகட்டால் மூடினான்.

2நாளா 3:5. ஆலயத்தின் பெரிய மாளிகையை தேவதாரு பலகைகளினால் செய்து பசும்பொன்னினால் இழைத்து, அதின்மேல் பேரீச்சவேலையையும் சங்கிலிவேலையையும் சித்திரித்து,

2நாளா 3:6. அந்த மாளிகையை ரத்தினங்களால் அலங்கரித்தான்; பொன்னானது பர்வாயீமின் பொன்னாயிருந்தது.

2நாளா 3:7. அந்த மாளிகையின் உத்திரங்களையும், நிலைகளையும், அதின் சுவர்களையும், அதின் கதவுகளையும் பொன்தகட்டால் மூடி, கொத்துவேலையால் சுவர்களிலே கேருபீன்களைச் செய்வித்தான்.

2நாளா 3:8. மகா பரிசுத்தமான ஆலயத்தையும் கட்டினான்; அதின் நீளம் ஆலயத்தினுடைய அகலத்தின்படி இருபதுமுழமும், அதின் அகலம் இருபதுமுழமுமாயிருந்தது; அதை அறுநூறு தாலந்து பசும்பொன்னினால் இழைத்தான்.

2நாளா 3:9. ஆணிகளின் நிறை ஐம்பது பொன் சேக்கலானது; மேல் அறைகளையும் பொன்னினால் இழைத்தான்.

கர்த்தருடைய ஆலயம் ஏற்கெனவே தீர்மானம்பண்ணப்பட்டிருக்கிற ஸ்தலத்திலே கட்டப்படுகிறது.

தேவாலயம் "கர்த்தரின் ஆலயம்" என்று அழைக்கப்படுகிறது (1இராஜா 6:1). கர்த்தரே தம்முடைய ஆலயத்தின் வடிவத்தை வெளிப்படுத்தினார். கர்த்தரின் ஆலயத்தைக் கட்டுவதற்கு அனந்த ஞானம் வேண்டும். கர்த்தரே தம்முடைய சர்வஞானத்தினால், தமக்கு ஆலயத்தைக் கட்டுகிறார். பரிசுத்த ஆவியானவர் ஆலயத்தின் மாதிரி வடிவத்தை தாவீதுக்கு வெளிப்படுத்தினார்.

தேவாலயம் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிறது. அது கர்த்தருடைய நாமமகிமைக்காக கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஆலயம் அவருடைய ஊழியத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறது. கர்த்தருடைய மகிமை அவருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருக்கிறது. பரிசுத்தமே கர்த்தருடைய ஆலயத்திற்கு அழகும் அலங்காரமுமாயிருக்கிறது. இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான கட்டிடங்கள் இருந்தாலும், கர்த்தரின் ஆலயமே எல்லா கட்டிடங்களை விட, அழகாயும், அலங்காரமாயும் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்று எண்பதாம் வருஷத்திலும், சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும், அவர் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத்தொடங்குகிறார் (1இராஜா 6:1).

மோசேயின் காலம் நாற்பது வருஷம். யோசுவாவின் காலம் பதினேழு வருஷம். நியாயாதிபதிகளின் காலம் 299 வருஷங்கள். ஏலியின் காலம் 40 வருஷம். சாமுவேல், சவுல் ஆகியோரின் காலம் 40 வருஷம். தாவீதின் காலம் 40 வருஷம். சாலொமோன் நாலு வருஷம் ராஜ்யபாரம் பண்ணின பின்பு, கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்குகிறார். இந்தக் காலங்களையெல்லாம் மொத்தமாய்க் கூட்டும்போது 480 வருஷங்களாகும்.

தாவீதின் நாட்களில், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி ஆசரிப்புக் கூடாரத்திலிருந்தது. ஆசாரிப்புக்கூடாரம் பரிசுத்தமான ஸ்தலம். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அது அடையாளம். ஆசரிப்புக்கூடாரத்தில் அலங்காரமோ ஐசுவரியமோ இல்லை. ஆனாலும் ஆசரிப்புக்கூடாரமும் கர்த்தருடைய ஆலயம் என்றே அழைக்கப்படுகிறது.

"அப்பொழுது தாவீது தரையை விட்டு எழுந்து, ஸ்நானம்பண்ணி, எண்ணெய் பூசிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றி, கர்த்தருயை ஆலயத்தில் பிரவேசித்து, பணிந்துகொண்டு, தன் வீட்டுக்கு வந்து, போஜனம் கேட்டான்; அவன் முன்னே அதை வைத்தபோது புசித்தான்" (2சாமு 12:20).

சாலொமோன் கட்டின தேவாலயத்தில் கர்த்தருடைய மகிமை வந்து தங்கினதுபோல, ஆசரிப்புக்கூடாரத்திலும் கர்த்தருடைய மகிமை வந்து தங்கியிருந்தது. கர்த்தர் சாலொமோனுக்கு திரளான ஐசுவரியத்தையும், புத்தியையும் ஞானத்தையும், செல்வத்தையும் கொடுத்திருக்கிறார். கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் ஆர்வத்தையும் கர்த்தரே சாலொமோனுடைய இருதயத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாலொமோனை ஆலயம் கட்டுவதற்கு அனுமதிக்கிறார். கர்த்தரின் ஆலயம் நேர்த்தியாயும், அழகாயும், அலங்காரமாயும் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இந்த ஆலயம் வரப்போகிற நன்மையான காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது.

"அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது; அதற்கேற்றபடியே செலுத்தப்பட்டுவருகிற காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம்" (எபி 9:9).

சாலொமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவான நாலாம் வருஷம் ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார். முதல் மூன்று வருஷங்களாக சாலொமோன் தன்னுடைய ராஜ்யபாரத்தை உறுதிபண்ணுகிறார். சாலொமோன் தன் ராஜா கனத்தை வலுவாக ஸ்திரப்படுத்துகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, இஸ்ரவேல் தேசத்தில் குழப்பங்கள் இருக்கக்கூடாது. ராஜாங்க காரியங்களில் கலவரங்கள் ஏற்படக்கூடாது. இவையெல்லாம் ஆலயக்கட்டுமான வேலைகளை பாதிக்கும். தேவாலயம் கட்டுவதற்கு முன்பாகவே, சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திலுள்ள பிரச்சனைகளையெல்லாம் நீக்கிப்போட்டு, அங்கே சமாதானத்தையும், நீதியையும் ஏற்படுத்துகிறார்.

சாலொமோன் ராஜாவான நாலாம் வருஷத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தொடங்குகிறார். அவர் அதற்காக மூன்று வருஷங்கள் ஆயத்த வேலைகளை செய்கிறார். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். ஆயத்தம்பண்ணுகிற காலம் ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. ஆயத்தக்காலம் நஷ்டகாலமல்ல. அது ஆதாயத்தின் காலம்.

நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்கு முன்பாக, ஊழியத்திற்கு தடையாகயிருக்கும் எல்லா காரியங்களையும் நம்மைவிட்டு விலக்கிவிடவேண்டும். முழுமனதோடும், முழுஇருதயத்தோடும், முழுபலத்தோடும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முன்வரவேண்டும்.

எருசலேமிலே கர்த்தரின் ஆலயம் கட்டப்படுகிறது. ஆலயம் கட்டுவதற்கான பொருட்கள் தீரு தேசத்திலிருந்தும், மற்ற தேசங்களிலிருந்தும் எருசலேமுக்கு கொண்டு வரப்படுகிறது. ஆலயம் கட்டப்படுகையில், அது பணிதீர்ந்து கொண்டுவரப்பட்ட கற்களாலே கட்டப்படுகிறது; ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை (1இராஜா 6:7).

ஆலயம் கட்டப்படுகிற ஸ்தலத்திலே கூச்சலோ, கூக்குரலோ, உரத்த சத்தமோ கேட்கப்படவில்லை. சகலமும் அமைதியாயும் சமாதானமாயும் நடைபெறுகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சமாதானத்தின் தேவன். அவருடைய ஆலயம் சமாதான ஆலயம். ஆகையினால் ஆலயம் கட்டப்படுகிறபோது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.

மார்க்க ஆராதனையில் அமைதி இருக்கவேண்டும். அமைதியான சூழ்நிலையே ஆராதனைக்கு ஏற்ற சூழ்நிலை. அமைதியும் சாந்தமும் கர்த்தரைத் துதிப்பதற்கு துணை செய்யும். கர்த்தருடைய ஊழியத்தை மிகவும் கவனமாய்ச் செய்யவேண்டும். ஊழியத்திற்கு தேவையில்லாத சத்தங்களும், ஆரவாரங்களும் இடையூறாயிருக்கக்கூடாது. ஊழியம் செய்யும்போது சிறு சத்தம் ஏற்பட்டால்கூட, அது நம்முடைய செவிகளில் கேட்கும் அளவுக்கு அமைதி இருக்கவேண்டும்.

ஆலயத்திலே சுத்திகளுக்கும், வாச்சிகளுக்கும், வேறு எந்த இருப்பு ஆயுதங்களுக்கும் இடமில்லை. இந்த ஆயுதங்களை ஆலயத்திற்கு வெளியே பயன்படுத்தவேண்டும். ஆலயத்திற்குள்ளே சத்தமில்லாமல் ஆலயத்தைக் கட்டியெழுப்பவேண்டும். தேவையில்லாத ஆடம்பரங்கள், போட்டிகள், பொறாமைகள், கோபங்கள் ஆகியவை தேவனுடைய ஊழியத்தை தடைபண்ணும். ஊழியக்காரர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய ஊழியத்தை கட்டியெழுப்புவது என்பது இயலாத காரியம்.

கர்த்தருக்கு கட்டப்படுகிற ஆலயத்தின் அளவுகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜா கர்த்தருக்குக் கட்டின ஆலயம் அறுபது முழ நீளமும், இருபது முழ அகலமும், முப்பது முழ உயரமுமாயிருக்கிறது. ஆலயமாகிய அந்த மாளிகையின் முகப்பிலே சாலொமோன் கட்டின மண்டபம் ஆலயத்தின் அகலத்திற்குச் சரியாய் இருபதுமுழ நீளமும், ஆலயத்துக்கு முன்னே பத்துமுழ அகலமுமாயிருக்கிறது (1இராஜா 6:2,3).

ஆசரிப்புக்கூடாரத்தின் நீள அகலத்தைப்போல, தேவாலயத்தின் நீள அளவு இரண்டு மடங்கு அதிகமாயிருப்பதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆலயத்திற்கு செய்யப்பட்டிருக்கிற ஜன்னல்களைப்பற்றி இங்கே விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் பார்வைக்குக் குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்களை ஆலயத்திற்குச் செய்விக்கிறார் (1இராஜா 6:4).

தேவாலயத்தின் ஜன்னல்கள் உள்ளே அகலமாகவும் வெளியே குறுகலாகவும் இருக்கிறது. அவை பார்வைக்கு குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னல்கள். நம்முடைய மனதின் கண்களும் ஆலயத்தின் ஜன்னல்களைப்போல இருக்கவேண்டும். நம்முடைய மனது நம்மை அதிகமாய்ப் பார்க்கவேண்டும். மற்றவர்களைக் கொஞ்சமாகப் பார்க்கவேண்டும். மற்றவர்களிடத்திலுள்ள தப்பிதங்களை ஆராய்ந்து பார்க்காமல், நம்மிடத்திலுள்ள தப்பிதங்களையும், குற்றம் குறைகளையும் கவனித்துப் பார்க்கும் வண்ணமாக, நம்முடைய மனதின் கண்கள் உள்ளே பெரியதாகவும், வெளியே சிறியதாகவும் இருக்கவேண்டும். அது வெளிப்பார்வைக்கு குறுகிப்போகிற ஒடுக்கமான ஜன்னலைப்போல செயல்படவேண்டும்.

தேவாலயத்தின் சுற்றுக்கட்டுக்களைப் பற்றியும் இங்கே விவரிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் தேவாலயத்தின் சுவரும் சந்நிதிஸ்தானச்சுவருமாகிய ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய்ச் சுற்றுக்கட்டுகளைக் கட்டி, அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்குகிறார். கீழே இருக்கிற சுற்றுக்கட்டு ஐந்து முழ அகலமும், நடுவே இருக்கிறது ஆறு முழ அகலமும், மூன்றாவதாயிருக்கிறது ஏழுமுழ அகலமுமாயிருக்கிறது; அவைகள் ஆலயத்தினுடைய சுவர்களிலே தாங்காதபடிக்கு, சாலொமோன் ஆலயத்தைச் சுற்றிலும் புறம்பே ஒட்டுச்சுவர்களைக் கட்டுவிக்கிறார் (1இராஜா 6:5,6).

சாலொமோன் ஆலயத்தின் சுவர்களுக்கு அடுத்ததாய் சுற்றுக்கட்டுக்களைக் கட்டி, அவைகளில் அறைகளை சுற்றிலும் உண்டாக்குகிறார். இந்த அறைகளில் ஆசாரியர்கள் பரிசுத்த பணிமுட்டுக்களை பத்திரமாக வைத்திருப்பார்கள்.

ஆலயத்தின் சுற்றுச்சுவர்கள், ஆலயத்தின் சுவர்களில் ஒட்ட வைக்கப்படவில்லை. சாலொமோன் இதற்காக ஒட்டுச்சுவர்களை தனியாக கட்டுகிறார். இந்தப் பாரத்தை ஆலயத்தின் சுவர்களில் சுமத்தினால், சுவர்கள் பலவீனமாகும். சீக்கிரத்தில் சேதமடையும். ஆலயத்திற்கு அழகை சேர்க்கும்போது, அது ஆலயத்தைப் பலவீனப்படுத்திவிடக்கூடாது.

அதுபோலவே திருச்சபைகளிலும் அழகையும், ஆடம்பரத்தையும், நூதன காரியங்களையும் சேர்த்து, சபையின் பரிசுத்தத்தைக் கெடுத்துவிடக்கூடாது.

கர்த்தருடைய ஆலயத்தில் லேவியர்கள் தங்கி ஊழியம் செய்வதற்காகவும், அங்கே பரிசுத்த பணிமுட்டுக்களை பத்திரமாக வைத்திருப்பதற்காகவும், சாலொமோன் ஒரு சில அறைகளைக் கட்டுகிறார். இதுபற்றிய விவரமும் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

நடு அறைகளுக்குப் போகிற வாசற்படி ஆலயத்தின் வலதுபுறத்தில் இருக்கிறது; சுழற்படிகளால் நடு அறைகளுக்கும், நடு அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள். இவ்விதமாய் சாலொமோன் ஆலயத்தைக் கட்டி, கேதுருமர உத்திரங்களாலும் பலகைகளாலும் ஆலயத்தை மச்சுப்பாவி முடிக்கிறார். சாலொமோன் ஐந்துமுழ உயரமான சுற்றுக் கட்டுகளை ஆலயத்தின்மேலெங்கும் கட்டுவிக்கிறார்; அவைகள் கேதுருமரங்களால் ஆலயத்தோடே இணைக்கப்பட்டிருக்கிறது (1இராஜா 6:8-10).

"உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களுக்குள்ளே கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை அடையாளங்களாக நாட்டுகிறார்கள். கோடாரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான். இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப்போடுகிறார்கள்" (சங் 74:4-6).

"அப்பொழுது தாவீது: தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே; இஸ்ரவேல் பலியிடும் சர்வாங்க தகனபலிபீடம் இருக்கும் ஸ்தலமும் இதுவே என்றார்" (1நாளா 22:1).

கர்த்தருடைய ஆலயம் எருசலேமிலே கட்டப்படுகிறது. கர்த்தர் எருசலேமிலே, இந்த ஸ்தலத்தை, தமக்கு ஆலயம் கட்டும் ஸ்தலமாக தெரிந்தெடுத்திருக்கிறார். எருசலேம் இஸ்ரவேலின் ராஜரீக பட்டணம். அது பரிசுத்த பட்டணமாகவும் இருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆலயம் மோரியா என்னும் மலையிலே கட்டப்படுகிறது. இந்த மலையிலே ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை எந்த ஸ்தலத்தில் பலியிடுவதற்கு ஆயத்தம் பண்ணினாரோ, அந்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுகிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்" (ஆதி 22:2).

ஆதி 22:2 ஆவது வசனத்திற்குப் பின்பு இந்த மலையைப் பற்றி இந்த வசனத்தில்தான் கூறப்பட்டிருக்கிறது. இதன் பின்பு, இந்த மலையைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. ஆபிரகாம் இந்த மலையில் ஈசாக்கைப் பலியிடப் போனார்.

தாவீது இந்த மலையில் எருசலேமைச் சங்காரிக்கும் தூதனைக் கண்டார். இஸ்ரவேலை எண்ணித் தொகையேற்றிய பாவத்திற்கு நிர்வாரணம் செய்வதற்காக இங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதில் பாவநிவாரண பலிசெலுத்துமாறு அந்தத் தூதன் தாவீதுக்குக் கட்டளையிட்டார். (2சாமு 24:17-25; 1நாளா 21:16-26).

கர்த்தர் தாவீதுக்கு தம்மை எந்த ஸ்தலத்தில் வெளிப்படுத்தினாரோ அந்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு ஆலயம் கட்டப்படுகிறது. இந்த பரிசுத்தமான ஸ்தலத்திலே கர்த்தர் தாவீதுக்கு அக்கினியினால் உத்தரவு அருளினார்.

"அப்பொழுது எபூசியனாகிய ஒர்னானின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்படி, தாவீது அங்கே போகவேண்டுமென்று தாவீதுக்குச் சொல் என்று கர்த்தருடைய தூதன் காத்துக்குக் கட்டளையிட்டான்" (1நாளா 21:18).

"அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அப்பொழுது அவர் வானத்திலிருந்து சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவனுக்கு மறுஉத்தரவு கொடுத்ததுமல்லாமல்" (1நாளா 21:26).

தாவீது இந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே ஏற்கெனவே பாவநிவாரண பலிகளை செலுத்தினார். இஸ்ரவேலின் பாவங்களுக்கு இங்கே நிவாரணமுண்டாயிற்று. பாவநிவாரணத்தை நினைவுகூரும் வண்ணமாக, இந்த ஸ்தலத்திலே ஆலயம் கட்டப்படுகிறது. இங்கே இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களுக்கு, இனிமேல் வரப்போகிற காலத்திலும் நிவாரணம் உண்டாகும்.

தாவீது ஆலயம் கட்டுவதற்கு இந்த ஸ்தலத்தை தெரிந்தெடுத்து, தன்னுடைய பொக்கிஷத்திலிருந்து எடுத்த பணத்தைக் கொடுத்து, அதை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், தாவீது இந்தப் பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவதற்காக தீர்மானம்பண்ணப்பட்டிருக்கிற ஸ்தலம் மோரியா என்னும் மலையில், எபூசியனாகிய ஒர்னானின் களமாயிருக்கிறது. "பின்பு சாலொமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியா என்னும் மலையில் எபூசியனாகிய ஒர்னானின் களம் என்னும் தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்துவக்கினார்" (2நாளா 3:1).

சாலொமோன் எந்த வருஷத்தில், எந்த மாதத்தில், எந்த தேதியிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் தொடங்கினார் என்னும் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "அவன் தான் ராஜ்யபாரம்பண்ணின நாலாம் வருஷம் இரண்டாம் மாதம் இரண்டாம் தேதியிலே கட்டத்தொடங்கினான்" (2நாளா 3:2).

சாலொமோன், தான் ராஜ்யபாரம் பண்ணின, முதல் மூன்று வருஷத்திலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான ஆயத்த வேலைகளை செய்கிறார். மூன்று வருஷங்கள் சீக்கிரத்தில் முடிந்து போகிறது. கர்த்தருடைய ஆலயத்தை மகாபெரியதாயும், கீர்த்தியும் மகிமையும் உள்ளதாயும் கட்டுவதற்கு, எத்தனை வேலையாட்கள் தேவைப்படுவார்கள் என்பதை கணக்கு பார்த்து, அத்தனை வேலையாட்களையும் சம்பாதிக்கிறார். ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான பொருட்களையும் சாலொமோன் சம்பாதிக்கிறார்.

சாலொமோன் கட்டுகிற கர்த்தருடைய ஆலயத்தின் அளவுகள் எவ்வளவு இருக்கவேண்டும் என்பதும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. "தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, சாலொமோன் போட்ட அஸ்திபாரமானது, முற்காலத்து அளவின்படியே, அறுபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமுமாயிருந்தது" *(2நாளா 3:3).*

ஆலயத்தினுடைய முகப்பு மண்டபத்தின் உயரம் 120 முழம் அல்லது 180 அடி என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 1இராஜா 6:2 ஆவது வசனத்தில் 30 முழம் அதாவது 45 அடி உயரம் என்று கூறப்பட்டிருக்கிறது. 45 அடி உயரம் என்பதே பொருத்தமாக இருக்கிறது. *(1இராஜா 6:8).*

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு தேவாலயத்தின் அளவையும், அதன் மாதிரியையும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். தாவீது தன்னிடத்தில் சொன்ன அளவுகளின் பிரகாரமாகவே, சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார்.

சாலொமோன் போட்ட அஸ்திபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் தாமே தம்முடைய தெய்வீக ஞானத்தினால், தம்முடைய ஆலயத்தின் அஸ்திபாரம், எந்த அளவுகளில் இருக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார். சாலொமோன் அந்த அளவுகளின் பிரகாரமாகவே, கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தை அழகுபடுத்துவதற்காக பொன்னும் வெள்ளியும் ஏராளமாய்ப் பயன்படுத்தப்படுகிறது. தேவதாரு பலகைகளும், கேதுரு மரங்களும் பயன்படுத்தப்படுகிறது. கர்த்தருடைய ஆலயம் பொன் ஆபரணங்களாலும், வெள்ளி ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படுகிறது.

முகப்பு மண்டபம் ஆலயத்தினுடைய அகலத்தின்படியே இருபதுமுழ நீளமும், நூற்றிருபதுமுழ உயரமுமாயிருக்கிறது; சாலொமோன் அதின் உட்புறத்தைப் பசும்பொன்தகட்டால் மூடுகிறார் *(2நாளா 3:4).*

சாலொமோன் ஆலயத்தின் பெரிய மாளிகையை தேவதாரு பலகைகளினால் செய்து பசும்பொன்னினால் இழைத்து, அதின்மேல் பேரீச்சவேலையையும் சங்கிலி வேலையையும் சித்திரிக்கிறார். அவர் அந்த மாளிகையை ரத்தினங்களால் அலங்கரிக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்திலே பயன்படுத்தப்படும் பொன்னானது பர்வாயீமின் பொன்னாயிருக்கிறது. இது மிகவும் சுத்தமான பொன்.

சாலொமோன் அந்த மாளிகையின் உத்திரங்களையும், நிலைகளையும், அதின் சுவர்களையும், அதின் கதவுகளையும் பொன்தகட்டால் மூடி, கொத்துவேலையால் சுவர்களிலே கேருபீன்களைச் செய்கிறார் *(2நாளா 3:7).*

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திலே மகாபரிசுத்தமான ஸ்தலத்தையும் கட்டுகிறார். அதின்நீளம் ஆலயத்தினுடைய அகலத்தின்படி இருபதுமுழமும், அதின் அகலம் இருபதுமுழமுமாயிருக்கிறது; சாலொமோன் அதை அறுநூறு தாலந்து பசும்பொன்னினால் இழைக்கிறார் *(2நாளா 3:8).*

"மகா பரிசுத்தமான ஆலயம்" என்பது தேவாலயத்திற்குள்ள மகா பரிசுத்த ஸ்தலம். இங்கு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இது சதுரமான அமைப்புடையது. பக்கத்திற்கு 30 அடி. மொத்தம் 900 சதுரஅடி. இது பொன்தகட்டால் மூடப்பட்டிருக்கிறது. *(1இராஜா 6:20).*

கர்த்தருடைய ஆலயத்திலே ஏராளமான ஆணிகள் பயன்படுத்தப்படுகிறது. அந்த ஆணிகளும் பொன்னாகவே இருக்கிறது. ஆணிகளின் நிறை ஐம்பது பொன் சேக்கலாயிருக்கிறது. பொன்தகடுகளை சுவற்றிலே பதிப்பதற்கு ஏராளமான ஆணிகள் தேவைப்படும். அவற்றை பதிப்பதற்கு ஏராளமான வேலையாட்களும் தேவைப்படுவார்கள். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை நேர்த்தியாய்க் கட்டுவதற்கு தேவையான பொன்னையும் கொடுக்கிறார். வேலைகளை நேர்த்தியாய்ச் செய்து முடிப்பதற்குத் தேவையான வேலையாட்களையும் கொடுக்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திலே விலையுயர்ந்த கற்களை ஏராளமாய் பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார்.

"நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்" (1நாளா 29:2)

"யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள்" (1நாளா 29:8). சாலொமோன் மேல் அறைகளையும் பொன்னினால் இழைக்கிறார் (2நாளா 3:9).

ஆலயத்தின் சுவர்களைப்பற்றியும், அதன் தளத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ஆலயத்துச் சுவர்களின் உட்புறத்தை, தளம்தொடங்கிச் சுவர்களின் மேல்மச்சுமட்டும், கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கி, ஆலயத்தின் தளத்தை தேவதாரி விருட்சங்களின் பலகைகளால் தளவரிசைப்படுத்துகிறார் (1இராஜா 6:15).

சாலொமோன் தளவரிசை தொடங்கிச் சுவர்களின் உயரமட்டும் ஆலயத்தின் பக்கங்களைத் தொடர்ந்திருக்கிற இருபதுமுழ நீளமான மறைப்பையும் கேதுருப்பலகைகளால் உண்டாக்கி, உட்புறத்தை மகா பரிசுத்தமான சந்நிதி ஸ்தானமாகக் கட்டுகிறார். அதின் முன்னிருக்கிற தேவாலயமாகிய மாளிகை நாற்பதுமுழ நீளமாயிருக்கிறது (1இராஜா 6:16,17).

ஆலயத்திற்குள் இருக்கிற கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்திருக்கிறது; பார்வைக்கு ஒரு கல்லாகிலும் காணப்படாமல் எல்லாம் கேதுருமரமாயிருக்கிறது (1இராஜா 6:18). கேதுரு மரம் வலுவானது. நீடித்து உழைக்கக்கூடியது. கேதுரு மரம் நறுமணத்தைக் கொடுக்கக்கூடியது.

ஆலயத்தின் உட்புறத்தைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் ஆலயத்தின் உட்புறத்தை பசும்பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்தின் மறைப்புக்கும் பொன் சங்கிலிகளைக் குறுக்கே போட்டு, அதைப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:21).

சாலொமோன் இப்படி ஆலயம் முழுவதும் கட்டித் தீருமட்டும், அவர் ஆலயம் முழுவதையும் பொன்தகட்டால் மூடி, சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக இருக்கிற பலிபீடத்தை முழுவதும் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:22). சாலொமோன் உள்ளும் புறம்புமாயிருக்கிற ஆலயத்துத் தளவரிசையையும் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:30).

சாலொமோன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைக்கிறதற்கு ஆலயத்துக்குள்ளே சந்நிதி ஸ்தானத்தை ஆயத்தப்படுத்துகிறார். சந்நிதி ஸ்தானம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும், இருபதுமுழ அகலமும், இருபதுமுழ உயரமுமாயிருக்கிறது; சாலொமோன் அதைப் பசும்பொன்தகட்டால் மூடுகிறார்; கேதுருமரப் பலிபீடத்தையும் அப்படியே மூடுகிறார் (1இராஜா 6:19,20).

கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டிருக்கிற இடம் சந்நிதி ஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது. இது மகாபரிசுத்த ஸ்தலம். கர்த்தர் இந்த ஸ்தலத்திலே மோசேயோடு பேசினார். பிரதான ஆசாரியரோடு பேசினார். ஆகையினால் இந்த சந்நிதி ஸ்தானம், "கர்த்தர் பேசுகிற ஸ்தானம்" என்று அழைக்கப்படுகிறது.

சாலொமோன் எல்லாவற்றையும் புதிதாய்ச் செய்கிறார். ஆனாலும் அவர் உடன்படிக்கைப்பெட்டியை புதிதாய்ச் செய்யவுமில்லை. ஏற்கெனவே இருந்த உடன்படிக்கைப்பெட்டியை சாலொமோன் மாற்றி அமைக்கவுமில்லை. மோசே செய்த அதே உடன்படிக்கைப்பெட்டியை சாலொமோன் ஆலயத்திலுள்ள சந்நிதி ஸ்தானத்திலே வைக்கிறார்.

உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆசரிப்புக்கூடாரத்திலே சந்திக்க வந்தாலும், ஆலயத்திலே சந்திக்க வந்தாலும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் இடத்தில் அவருடைய பிரசன்னம் இருக்கிறது. கர்த்தர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவர் ஒருபோதும் சூழ்நிலைகளுக்குத்தக்க பிரகாரம் தம்மை மாற்றிக்கொள்கிறவரல்ல.

இந்த வசனப்பகுதியில் கேருபீன்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைக்கிறார்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருக்கிறது. கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசிமுனைமட்டும் பத்து முழமாயிருக்கிறது (1இராஜா 6:23,24).

மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருக்கிறது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருக்கிறது. ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருக்கிறது; மற்றக் கேருபீனும் அப்படியே இருக்கிறது (1இராஜா 6:25,26).

சாலொமோன் அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைக்கிறார்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருக்கிறது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருக்கிறது. சாலொமோன் அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:27,28).

புறஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். புறஜாதியார் தங்கள் தெய்வங்களுக்கு உருவங்களைக் கொடுத்து, அவற்றை விக்கிரகங்களாக செய்து, அவற்றை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற கேருபீன்கள் புறஜாதியாரின் விக்கிரகங்களைப் போன்றதல்ல. கேருபீன்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு பணிவிடை செய்கிற பரிசுத்த தூதர்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கேருபீன்களை ஆராதிக்கமாட்டார்கள்.

சந்நிதி ஸ்தானத்தின் வாசலைப்பற்றியும், அதன் கதவுகளைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் சந்நிதி ஸ்தானத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக் கதவுகளைச் செய்கிறார்; மேல்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்தில் ஒரு பங்காயிருக்கிறது (1இராஜா 6:31).

சாலொமோன் ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்கிறார். அந்தக் கேருபீன்களிலும் பேரீந்துகளிலும் பொன்பதியத்தக்கதாய்ப் பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:32).

சாலொமோன் இப்படி தேவாலயத்தின் வாசலுக்கும் ஒலிவமர நிலைகளைச் செய்கிறார்; அது சுவர் அளவில் நாலத்தொரு பங்காயிருக்கிறது. அதின் இரண்டு கதவுகளும் தேவதாரிப் பலகைகளால் செய்யப்பட்டிருக்கிறது; ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும், மற்றக் கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும் இருக்கிறது (1இராஜா 6:33,34).

சாலொமோன் அவைகளில் கேருபீன்களும் பேரீந்துகளும் மலர்ந்த பூக்களுமான சித்திர வேலையைச் செய்கிறார். அவைகளை சித்திரங்களுக்குச் சரியாக செய்யப்பட்ட பொன்தகட்டால் மூடுகிறார் (1இராஜா 6:35).

சாலொமோன் தேவாலயத்தின் உட்பிரகாரத்தை மூன்று வரிசை வெட்டின கற்களாலும், ஒரு வரிசை கேதுருப் பலகைகளாலும் கட்டுகிறார் (1இராஜா 6:36). உட்பிரகாரத்தில் வெண்கல பலிபீடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் இந்தப் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை செலுத்தி ஊழியம் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவாலயத்திற்குள்ளே பிரவேசிக்கும்போது, அவர்கள் வெளிப்பிரகாரத்திலிருப்பார்கள். வெண்கல பலிபீடம் உட்பிரகாரத்திலிருக்கும். இரண்டு பிரகாரங்களுக்கும் நடுவே மூன்று வரிசை வெட்டின கற்களால் கட்டப்பட்ட சிறிய சுவர் இருக்கிறது. மேலும் ஒரு வரிசை அங்கே கேதுரு பலகைகளால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த சுவர் உயரமாகயிராமல் தாழ்வாகயிருக்கும். வெளிப்பிரகாரத்திலிருக்கிற ஜனங்கள், உட்பிரகாரத்திலிருக்கிற ஆசாரியரை பார்க்க முடியும். அவர்களோடு பேசமுடியும். ஆசாரியர்கள் சொல்லுவதை கேட்க முடியும். அதற்கேற்றாற்போல் இந்த சுவர்கள் தணிவாகயிருக்கிறது.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை கட்டி முடிக்க ஏழுவருஷமாயிற்று. அவர் நாலாம் வருஷம் சீப்மாதத்திலே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டார். பதினோராம் வருஷம் பூல் என்னும் எட்டாம் மாதத்திலே, அந்த ஆலயமுழுதும் சகல சட்டதிட்டத்தின்படியே ஒரு பங்கும் குறையாமல் கட்டித் தீர்ந்தது (1இராஜா 6:37,38).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினார். இந்த ஆலயம் ஆவிக்குரிய காரியங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. வேதபண்டிதர்கள் சாலொமோன் கட்டின ஆலயத்திற்கு ஞானஅர்த்தங்களையும், வியாக்கியானங்களையும், தாற்பரியங்களையும் சொல்லுகிறார்கள்.

சாலொமோன் கட்டின தேவாலயத்திற்கு வேதபண்டிதர்கள் நான்கு வியாக்கியானங்களை சொல்லுகிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

1. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆலயமாயிருக்கிறார்.

2. ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறோம்.

3. சுவிசேஷ சபையானது இரகசிய ஆலயமாயிருக்கிறது.

4. பரலோகமே நித்திய ஆலயம். கர்த்தருடைய ஆலயம் பரலோகத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆலயமாயிருக்கிறார். கிறிஸ்து தாமே தம்முடைய சரீரத்தை ஆலயம் என்று சொல்லியிருக்கிறார். "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (யோவா 2:21).

பிதாவானவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணினார். "ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்" (எபி 10:5).

தேவத்துவத்தின் பரிபூரணம் இயேசுகிறிஸ்துவில் வாசம்பண்ணுகிறது. தேவனுடைய ஆலயத்தில் அவருடைய ஷேக்கைனா மகிமை தங்கியிருப்பதற்கு ஒப்பாக, கிறிஸ்து இயேசுவுக்குள்ளே தேவத்துவத்தின் பரிபூரணம் வாசம்பண்ணுகிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தம்முடைய சந்நிதி ஸ்தானத்தில் சந்திக்கிறார். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள், தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலர் எல்லோரையும் சந்திக்கிறார். விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவினிடத்தில் கிட்டிச்சேருகிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிறோம். தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1கொரி 3:16).

நம்முடைய சரீரம் ஆத்துமாவோடு இணைக்கப்பட்டிருக்கிறது. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1கொரி 6:19).

தேவன் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நம்மை அற்புதமாய் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக கிருபையினால், நம்மை புதுப்பிக்கவும் செய்கிறார். ஜீவனுள்ள ஆலயமாயிருக்கிற நாம் கிறிஸ்துவின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு கிறிஸ்துவே அஸ்திபாரம். ஏற்ற வேளையிலே விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமடைவோம்.

சுவிசேஷ சபையானது இரகசிய ஆலயமாயிருக்கிறது. சபை கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக கட்டியெழுப்பப்படுகிறது. "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே 2:21).

பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளினாலும் வரங்களினாலும் ஆலயம் அழகுபடுத்தப்படுகிறது. சாலொமோன் கட்டின தேவாலயம் பொன்னாலும், விலையேறப்பெற்ற கற்களாலும் அழகுபடுத்தப்பட்டதுபோல, சுவிசேஷ சபை பரிசுத்த ஆவியானவரின் கிருபைகளாலும் வரங்களாலும் அழகுபடுத்தப்பட்டு, அலங்காரமாயிருக்கிறது.

சுவிசேஷ சபையிலே, கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள், பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தை யூதர்கள் மாத்திரமே கட்டினார்கள். கர்த்தருடைய ஆலயத்தையோ, யூதரோடு புறஜாதியாரும் சேர்ந்து கட்டினார்கள். அந்நியரும் புறஜாதியாரும், பரிசுத்தவான்களோடே, தேவனுடைய வாசஸ்தலமாக கட்டப்பட்டு வருகிறார்கள்.

"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து.............. அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே 2:19,22).

தேவாலயத்தில் பரிசுத்த ஸ்தலம், மகாபரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பகுதிகள் உள்ளன. தேவாலயத்தின் பிரகாரங்களும், வெளிப்பிரகாரம், உட்பிரகாரம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே சபையும் தரிசன சபை என்றும், அதரிசன சபை என்றும், இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தின் சந்நிதி ஸ்தானத்திற்குள் பிரவேசிக்கிற கதவைவிட தேவாலயத்தின் வெளிப்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கிற கதவு அகலமாகயிருக்கும். சந்நிதி ஸ்தானத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. தேவாலயத்தில் அநேகர் பிரவேசித்தாலும், ஒரு சிலர் மாத்திரமே சந்நிதி ஸ்தானத்திற்குள் பிரவேசிப்பார்கள். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அநேகர் கேள்விப்பட்டாலும், ஒரு சிலருடைய ஆத்துமாக்கள் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறது.

பரலோகமே நித்திய ஆலயம். கர்த்தருடைய ஆலயம் பரலோகத்தில் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். ஆசரிப்புக்கூடாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பேர்த்தெடுத்து சென்றதுபோல, பரலோகத்திலுள்ள தேவாலயத்தை பேர்த்தெடுக்க முடியாது. அந்த ஆலயம் எந்த ஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ, அங்கே உறுதியாக நிலைத்திருக்கும்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தின் தளவரிசை கேதுரு மரத்தால் மூடப்பட்டிருக்கிறது. புதிய எருசலேமின் வீதிகளெல்லாம் பொன்னாயிருக்கும்.

"பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது" (வெளி 21:21).

பரலோகத்திலே கேருபீன்கள் கர்த்தருடைய மகிமையான சிங்காசனத்திற்கு முன்பாக, கர்த்தரை எப்போதும் துதித்துக்கொண்டிருக்கும். சாலொமோன் கட்டின தேவாலயம் ஒழுங்கும் கிரமமுமாக கட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும் இதில் சில குறைகள் இருக்கலாம். பரலோகத்தின் தேவாலயமோ அழகிலும், பரிசுத்தத்திலும், ஒற்றுமையிலும் பரிபூரணமானது.

சாலொமோன் கட்டின தேவாலயத்தில் கத்திகள், வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை. பரலோகத்தில் எல்லாமே அமைதியாகயிருக்கும். கர்த்தரைத் துதிக்கும் துதியின் சத்தம் மாத்திரம் அங்கு கேட்கும்.

சாலொமோன் ஆலயத்தைக் கட்டும்போது, அது பணிதீர்ந்து கொண்டு வரப்பட்ட கற்களாலே கட்டப்பட்டது.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய ஆலயத்தின் கற்களாகயிருக்கிறோம். நாம் பூமியிலே ஜீவிக்கிற நாட்களிலே, பரிசுத்த ஆவியானவர் நம்மை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்குகிறார். நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கும்போது பணிதீர்ந்த கற்களாக பிரவேசிப்போம்.

கேருபீன்கள்
2நாளா 3:10-17

2நாளா 3:10. அவன் மகா பரிசுத்தமான ஆலயத்திலே இரண்டு கேருபீன்களையும் சித்திர வேலையாய் உண்டுபண்ணினான்; அவைகளைப் பொன்தகட்டால் மூடினான்.

2நாளா 3:11. அந்தக் கேருபீன்களுடைய செட்டைகளின் நீளம் இருபது முழமானது; ஒன்றினுடைய ஒரு செட்டை ஐந்துமுழமாயிருந்து, ஆலயத்துச் சுவரைத் தொட்டது; மறுசெட்டை ஐந்துமுழமாயிருந்து, மற்றக் கேருபீனின் செட்டையைத் தொட்டது.

2நாளா 3:12. மற்றக் கேருபீனின் ஒரு செட்டையும் ஐந்துமுழமாயிருந்து, ஆலயத்துச் சுவரைத் தொட்டது; அதின் மறுசெட்டையும் ஐந்துமுழமாயிருந்து, மற்றக் கேருபீனின் செட்டையைத் தொட்டது.

2நாளா 3:13. இப்படியே அந்தக் கேருபீன்களின் செட்டைகள் இருபதுமுழ விரிவாயிருந்தது; அவைகள் தங்கள் கால்களால் ஊன்றி நின்றது; அவைகளின் முகங்கள் ஆலயத்து உட்புறமாய் நோக்கியிருந்தது.

2நாளா 3:14. இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய நூலாலும் திரையையும், அதிலே கேருபீன்களின் உருவங்களையும் உண்டுபண்ணினான்.

2நாளா 3:15. ஆலயத்திற்கு முன்னாக முப்பத்தைந்துமுழ உயரமான இரண்டு தூண்களையும், அவைகளுடைய முனைகளின் மேலிருக்கும் ஐந்துமுழ உயரமான கும்பங்களையும் உண்டாக்கி,

2நாளா 3:16. சந்நிதிக்கு முன்னிருக்கச் சங்கிலிகளையும் பண்ணி, தூண்களின் முனைகளின் மேல் பற்றவைத்து, நூறு மாதளம்பழங்களையும் பண்ணி அந்தச் சங்கிலிகளில் கோத்தான்.

2நாளா 3:17. அந்தத் தூண்களை அவன் தேவாலயத்திற்கு முன்பாக ஒன்றை வலதுபுறத்திலும் ஒன்றை இடதுபுறத்திலும் நாட்டி, வலதுபுறமானதற்கு யாகீன் என்றும், இடதுபுறமானதற்குப் போவாஸ் என்றும் பேரிட்டான்.

சாலொமோன் உண்டுபண்ணின இரண்டு கேருபீன்களும் சித்தர வேலையாயிருக்கிறது. சாலொமோன் அவற்றை, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள, மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைத்து, அவைகளை பொன்தகட்டால் மூடுகிறார் (2நாளா 3:10).

தேவனுடைய உடன்படிக்கை பெட்டியின்மீது ஏற்கெனவே இரண்டு கேருபீன்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த கேருபீன்கள் தங்கள் செட்டைகளினால், கிருபாசனத்தை மூடிக்கொண்டிருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டியின்மீது இருக்கும் கேருபீன்கள் இரண்டுமே அளவில் சிறியவை.

மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கப்படும் இரண்டு கேருபீன்களும் அளவில் பெரியவை. மகாபரிசுத்த ஸ்தலம் அளவிலே பெரியதாயிருந்தாலும், சாலொமோன் அதற்காக பெரிய உடன்படிக்கை பெட்டியை புதிதாய் செய்யவில்லை. பழைய உடன்படிக்கை பெட்டியையே மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கிறார். அந்தப் பெட்டியின்மீது இருக்கும் இரண்டு கேருபீன்களும் மாற்றப்படவில்லை. அவையும் அப்படியே இருக்கிறது.

சாலொமோன் இப்போது புதிதாய் இரண்டு கேருபீன்களை உண்டுபண்ணுகிறார். இவற்றை சித்திர வேலையாய் உண்டுபண்ணுகிறார். இந்த இரண்டு புதிய கேருபீன்களும், கர்த்தருடைய ஆலயத்திலே, மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கப்படுகிறது. இந்த கேருபீன்கள் தேவனுடைய தெய்வீக மகிமைக்கும், மகத்துவத்திற்கும் முன்பாக கர்த்தரை எப்போதும் துதிக்கிறது.

சாலொமோன் புதிதாய் செய்த இரண்டு கேருபீன்களின் அளவைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தக் கேருபீன்களுடைய செட்டைகளின் நீளம் இருபது முழமாயிருக்கிறது; ஒன்றினுடைய ஒரு செட்டை ஐந்துமுழமாயிருக்கிறது. அது ஆலயத்துச் சுவரைத் தொடுகிறது; மறுசெட்டை ஐந்துமுழமாயிருக்கிறது. அது மற்றக் கேருபீனின் செட்டையைத் தொடுகிறது (2நாளா 3:11).

மற்றக் கேருபீனின் ஒரு செட்டையும் ஐந்துமுழமாயிருந்து, ஆலயத்துச் சுவரைத் தொடுகிறது; அதின் மறுசெட்டையும் ஐந்துமுழமாயிருந்து, மற்றக் கேருபீனின் செட்டையைத் தொடுகிறது (2நாளா 3:12).

இப்படியே அந்தக் கேருபீன்களின் செட்டைகள் இருபதுமுழ விரிவாயிருக்கிறது. ஒவ்வொரு செட்டையும் ஐந்து முழமாயிருப்பதினால், நான்கு செட்டைகளின் மொத்த நீளம் இருபது முழங்களாகும். மகாபரிசுத்த ஸ்தலத்தின் மொத்த அகலமே இருபது முழம் (2நாளா 3:8). அவைகள் தங்கள் கால்களால் ஊன்றி நிற்கிறது; அவைகளின் முகங்கள் ஆலயத்து உட்புறமாய் நோக்கியிருக்கிறது (2நாளா 3:13).

ஒவ்வொரு கேரூபினுக்கும் இரண்டு செட்டைகள் உள்ளன. நான்கு செட்டைகளும் அந்த உள்ளறை முழுவதும் பரவியிருக்கிறது. (1இராஜா 6:23). கேரூபின்கள் பொன்தகட்டால் மூடப்பட்டிருக்கிறது. கேருபீன்களின் கால்கள் நிமிர்ந்த கால்களாய் இருந்தன. அவைகளுடைய உள்ளங்கால்கள் கன்றுக்குட்டியின் உள்ளங்கால்களுக்கு ஒப்பாயிருந்தன. (எசே 1:7). கேரூபின்களின் முகங்கள் ஆலயத்து உட்புறமாய் நோக்கியிருக்கிறது. (2நாளா 3:10-13).

கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்கள் கேருபீன்களை ஆராதிக்கக்கூடாது. ஆகையினால் கேருபீன்கள் உட்கார்ந்திருக்கும் நிலையில் செய்யப்படவில்லை. அவை சிங்காசனத்தில் வீற்றிருப்பதுபோல அமர்ந்திருக்கவில்லை. இரண்டு கேருபீன்களும் தங்கள் கால்களால் ஊன்றி நிற்கிறது. அவற்றின் முகங்கள், கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்களைப் பார்க்கவில்லை. அதற்கு பதிலாக அவைகளின் முகங்கள் ஆலயத்து உட்புறமாய் நோக்கியிருக்கிறது. கேருபீன்களும் கர்த்தரை ஆராதிக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் தேவதூதர்களை ஆராதிப்பதில்லை. தேவதூதர்கள் கர்த்தரோடுகூட எப்போதும் இருப்பார்கள். ஆனாலும் நாம் தூதர்களை ஆராதியாமல், கர்த்தரையே ஆராதிக்கிறோம்.

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகி பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்........ வந்து சேர்ந்தீர்கள்" *(எபி 12:22)*.

"ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்" *(1கொரி 11:10)*.

"சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து" *(ஏசா 6:2)*.

சாலொமோன் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும், கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திற்கும் நடுவே மெல்லிய திரைச்சீலையை உண்டுபண்ணி வைக்கிறார். சாலொமோன் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் மெல்லிய நூலாலும் திரையையும், அதிலே கேருபீன்களின் உருவங்களையும் உண்டுபண்ணுகிறார் *(2நாளா 3:14)*. திரைச்சீலையானது மகாபரிசுத்த ஸ்தலத்தையும், இஸ்ரவேல் ஜனத்தையும் இரண்டாய்ப் பிரிக்கிறது.

மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தில் திரைச்சீலைகள் செய்யப்பட்டதுபோலவே, ஆலயத்தின் திரைச்சீலைகளும் இளநீல நூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்பு நூலாலும் மெல்லிய நூலாலும் செய்யப்பட்டிருக்கிறது. இராஜாக்களின் முதலாம் புஸ்தகத்தில் திரைச்சீலைகள் செய்யப்பட்டவை பற்றிய குறிப்பு எதுவுமில்லை.

கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்களுக்கும், கர்த்தருடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே, திரைச்சீலையின் மூலமாய் இடைவெளி உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்திலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்கள், அவருடைய சமுகத்திலே கிட்டிச்சேருவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, இயேசுகிறிஸ்துவின் மரணத்தினாலே பிரிவினையாகிய திரைச்சீலை, இரண்டாய்க் கிழிக்கப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய், நாம் கர்த்தருடைய சமுகத்திலே கிட்டிச்சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் கர்த்தருடைய கிருபாசனத்தைப் பார்ப்பது மாத்திரமல்ல, அந்தக் கிருபாசனத்தண்டையிலே தைரியமாய் கிட்டிச் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்கு முன்பாக இரண்டு தூண்களை உண்டாக்குகிறார். சாலொமோன் ஆலயத்திற்கு முன்னாக முப்பத்தைந்துமுழ உயரமான இரண்டு தூண்களையும், அவைகளுடைய முனைகளின் மேலிருக்கும் ஐந்துமுழ உயரமான கும்பங்களையும் உண்டாக்குகிறார் *(2நாளா 3:15)*.

சாலொமோன் சந்நிதிக்கு முன்னிருக்கச் சங்கிலிகளையும் பண்ணி, தூண்களின் முனைகளின் மேல் பற்றவைத்து, நூறு மாதளம்பழங்களையும் பண்ணி அந்தச் சங்கிலிகளில் கோர்க்கிறார்.

சாலொமோன் அந்தத் தூண்களை தேவாலயத்திற்கு முன்பாக ஒன்றை வலதுபுறத்திலும் ஒன்றை இடதுபுறத்திலும் நாட்டுகிறார். அவர் வலதுபுறமானதற்கு யாகீன் என்றும், இடதுபுறமானதற்குப் போவாஸ் என்றும் பேரிடுகிறார் *(2நாளா 3:16,17)*.

தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்துவதற்கு ஈராம் இரண்டு வெண்கல தூண்களை செய்கிறான் (1இராஜா 7:21). இந்தத் தூண்கள் தேவாலயத்திற்கும், ஆசாரியரின் மண்டபத்திற்கும் நடுவிலே நிறுத்தப்படுகிறது. இது தேவாலயத்தின் அழகுக்காகவும், அலங்காரத்திற்காகவும் செய்யப்பட்டிருக்கிறது.

ஈராம் இரண்டு வெண்கல தூண்களையும் மிகவும் நேர்த்தியாகச் செய்கிறான். இதில் கும்பங்கள், வலைப்பின்னல்கள், சங்கிலி போன்ற தொங்கல்கள் ஆகியவை இடம் பெற்றிருக்கிறது.

ஒவ்வொரு தூணும் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருக்கிறது. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருக்கிறது. தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலிபோன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் எவ்வேழாக இருக்கிறது (1இராஜா 7:15-17).

தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம்பழங்கள் செய்யப்பட்டிருக்கிறது. மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருக்கிறது. இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்பிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருக்கிறது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருக்கிறது. தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது (1இராஜா 7:18-20,22).

ஈராம் அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்துகிறான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிடுகிறான் (1இராஜா 7:21). இந்தத் தூண்களுக்கு சாலொமோன் பேரிட்டிருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்விரண்டு தூண்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் மிகவும் விசேஷமானது. அது ஞானஅர்த்தமுள்ளது.

வலதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூணுக்கு யாகீன் என்று பெயர். யாகீன் என்னும் பெயருக்கு "அவர் ஸ்தாபிப்பார்" என்று பொருள். இடதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூணுக்கு "போவாஸ்" என்று பெயர். போவாஸ் என்னும் பெயருக்கு "அவரில் வல்லமையுள்ளது" என்று பொருள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணினார்கள். அப்போது கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை அக்கினி ஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற இரண்டு தூண்களும், அக்கினி ஸ்தம்பத்திற்கும், மேகஸ்தம்பத்திற்கும் அடையாளமென்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

தேவாலயத்திலே கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரும், கர்த்தரை ஆராதிக்க வருகிறவர்களும் தேவாலய வாசல் மண்டப வழியாக பிரவேசிக்க வேண்டும். அவர்கள் இவ்விரண்டு வெண்கல தூண்கள் வழியாக ஆலயத்திற்குள் பிரவேசிப்பார்கள். அப்போது இவ்விரண்டு தூண்களும், ஆசாரியருக்கும் ஆராதிக்கிற வருகிற ஜனங்களுக்கும் ஆவிக்குரிய உபதேசம் பண்ணும் என்று வேதபண்டிதர்களில் வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தங்களுடைய ஆவிக்குரிய பெலத்திற்கும், தாங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருப்பதற்கும், கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும். நாம் கர்த்தரை ஆராதிக்க வரும்போது நம்முடைய இருதயம் கர்த்தருக்குள் நிலைத்திருக்காமல், அங்கும் இங்குமாக அலைபாய்ந்து கொண்டிருக்கக்கூடாது. அலைபாய்கிற இருதயம் ஒருமனப்படவேண்டும். அது ஸ்திரத்தன்மையோடு நிலைத்திருக்கவேண்டும். நாம் பரலோகத்திலிருந்து கர்த்தருடைய பெலனைப் பெற்றுக்கொள்ளும்போது, நம்முடைய இருதயம் அலைபாயாமல், கர்த்தருக்குள் நிலைத்திருக்கும். "யாகீன்" என்னும் பெயருக்கு "கர்த்தர் அலைபாய்கிற இருதயத்தை நிலைப்படுத்துகிறவர்" என்று பொருள்.

"போவாஸ்" என்னும் பெயருக்கு "கர்த்தருக்குள் நம்முடைய பெலன் இருக்கிறது" என்று பொருள். கர்த்தர் நமக்குள் கிரியை செய்கிறார். நம்முடைய சித்தத்தையும், நம்முடைய செயல்களையும் ஆளுகை செய்கிறார். தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறவர்கள் "கர்த்தர் கொடுக்கும் பெலத்தினால் ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறேன்" என்று விசுவாசித்து நம்பிக்கையோடு பிரவேசிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளின் விசுவாசம் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். விசுவாசிகளின் இருதயத்தில் ஆவிக்குரிய பெலமும், ஆவிக்குரிய ஸ்திரத்தன்மையும் காணப்படவேண்டும். கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும்போது, தேவாலய வாசல்மண்டபத்திலே, கர்த்தருடைய பெலத்தைப் பெற்றுக் கொள்கிறோம். மேலும் நம்முடைய இருதயம் அலைபாயாமல் ஸ்திரத்தன்மையோடிருப்பதற்கு தேவைப்படும் தேவகிருபைகளையும் பெற்றுக்கொள்கிறோம். தேவாலய வாசல் பிரகாரத்திலே கிருபையின் வரங்களுக்காக காத்திருக்கவேண்டும். கர்த்தர் கொடுக்கும் கிருபைகளினால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் பெலப்பட்டு ஸ்திரப்படவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் தேவனுடைய ஆலயம் பெலத்தோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிற தூண்கள் அடையாளமாயிருக்கிறது.

"கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலத் தூண்களையும், அதிலிருந்த ஆதாரங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலக் கடல்தொட்டியையும், கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தைப் பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டுபோனார்கள்" (2இராஜா 25:13)

"ஒரு தூணின் உயரம் பதினெட்டு முழமாயிருந்தது; அதின்மேல் அதற்கு மூன்றுமுழ உயரமான வெண்கலத் தலைப்பும் உண்டாயிருந்தது; குமிழிலே சுற்றிலும் செய்யப்பட்டிருந்த பின்னலும் மாதளம்பழங்களும் எல்லாம் வெண்கலமாயிருந்தது; மற்றத் தூணும் அதின் பின்னலும் அதைப்போல் இருந்தது" (2இராஜா 25:17).

நேபுகாத்நேச்சார் தேவாலயத்தை இடித்துப்போட்ட சம்பவத்தைப்பற்றி சொல்லும்போது, அவன் தேவாலயத்தின் தூண்களை இடித்துப்போட்டான் என்று அடையாளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போய்விட்டால், அந்நிய தேசத்தார், தேவாலயத்தின் தூண்களை இடித்து கொண்டு போய்விடுவார்கள்.

4 அதிகாரம்

கர்த்தருடைய ஆலயத்திற்கு பண்ணப்பட்ட பணிமுட்டுக்களைப்பற்றிய விவரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை வெண்கலத்தினாலும், பொன்னினாலும் செய்யப்பட்டிருக்கிறது.

வெண்கல பலிபீடம் *(2நாளா 4:1)*. வெண்கல கடல்தொட்டி *(2நாளா 4:2-6)*. வெண்கலத்தால் மூடப்பட்ட கதவுகள் *(2நாளா 4:9)*. பலிபீடத்தில் பயன்படுத்தப்படும் பணிமுட்டுக்களும் பாத்திரங்களும் *(2நாளா 4:10-18)*. இவையெல்லாம் வெண்கலத்தால் செய்யப்பட்டவை.

பொன்விளக்குத்தண்டுகள் *(2நாளா 4:7)*. பத்து மேஜைகள் *(2நாளா 4:8)*. பொற்பீடம் *(2நாளா 4:19)*. பொன்னால் செய்யப்பட்ட மற்ற பொருட்கள் *(2நாளா 4:20-22)*. இவையெல்லாம் பொன்னால் செய்யப்பட்டவை.

வெண்கல பணிமுட்டுகள் 2நாளா 4:1-10

2நாளா 4:1. அன்றியும் இருபதுமுழநீளமும் இருபதுமுழ அகலமும் பத்துமுழ உயரமுமான வெண்கலப் பலிபீடத்தையும் பண்ணினான்.

2நாளா 4:2. வெண்கலக் கடல்தொட்டியையும் வார்ப்பித்தான்; சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்புதொடங்கி மறுவிளிம்புமட்டும் பத்துமுழ அகலமும், ஐந்துமுழ உயரமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருந்தது.

2நாளா 4:3. அதின் கீழ்ப்புறமாய் ரிஷபங்களின் உருவங்கள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து உருவமாக அந்தக் கடல்தொட்டியின் சக்கரத்தில் இருந்தது; தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்ட அந்த ரிஷபங்களின் இரண்டு வரிசைகள் இருந்தது.

2நாளா 4:4. அது பன்னிரண்டு ரிஷபங்களின்மேல் நின்றது; இவைகளில் மூன்று வடக்கேயும், மூன்று மேற்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தது; கடல்தொட்டி அவைகளின்மேல் உயர இருந்தது; அவைகளின் பின்பக்கமெல்லாம் உட்புறமாய் இருந்தது.

2நாளா 4:5. அதின் கனம் நாலு விரற்கடையும், அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்புபோலும், லீலிபுஷ்பம்போலும் இருந்தது; அது மூவாயிரங்குடம் தண்ணீர் பிடிக்கத்தக்கதாயிருந்தது.

2நாளா 4:6. கழுவுகிறதற்குப் பத்துக் கொப்பரைகளையும் உண்டாக்கி, ஐந்தை வலதுபுறத்திலும், ஐந்தை இடதுபுறத்திலும் வைத்தான்; சர்வாங்க தகனமாகிறவைகளை அவைகளில் அலசுவார்கள்; கடல்தொட்டியோ ஆசாரியர்கள் தங்களைச் சுத்தம் பண்ணிக்கொள்ளுகிறதற்கு இருந்தது.

2நாளா 4:7. பத்துப் பொன் விளக்குத்தண்டுகளையும், அவைகளுடைய பிரமாணத்தின்படி செய்வித்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்தான்.

2நாளா 4:8. பத்து மேஜைகளையும் செய்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்து, நூறு பொன் கலங்களையும் பண்ணினான்.

2நாளா 4:9. மேலும் ஆசாரியரின் பிராகாரத்தையும், பெரிய பிரகாரத்தையும் பிரகாரத்தின் வாசல்களையும் உண்டாக்கி, அவைகளின் கதவுகளை வெண்கலத்தால் மூடினான்.

2நாளா 4:10. கடல்தொட்டியை கிழக்கேயுள்ள வலதுபுறத்திலே தெற்குமுகமாக வைத்தான்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியும், கர்த்தருடைய பிரகாரங்களைப்பற்றியும் பல சங்கீதங்களில் மிகவும் அன்போடு சொல்லியிருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றி நினைக்கும்போதே தாவீதின் இருதயம் மகிழ்ச்சியடைகிறது. தாவீது கர்த்தரைத் துதித்து ஆராதிக்கும் ஆராதனையின்மீது பிரியமாயிருக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்திலே உள்பிரகாரமும் வெளிப்பிரகாரமும் இருக்கிறது. வெளிப்பிரகாரத்தில் எல்லா ஜனங்களும் பிரவேசிக்கலாம். கர்த்தருடைய ஆலயத்தில் உள்பிரகாரம் முக்கியமானதாயிருப்பதுபோல, வெளிப்பிரகாரமும் முக்கியமானதாயிருக்கிறது.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் ஒரு வெண்கல பலிபீடத்தை பண்ணி வைக்கிறார். அது இருபது முழ நீளமும், பத்துமுழ அகலமும், பத்துமுழ உயரமுமாயிருக்கிறது. இந்தப் பலிபீடத்தின்மீது ஆசாரியர்கள் எல்லா பலிகளையும் சர்வாங்கமாக தகனிப்பார்கள். வெண்கல பலிபீடத்தின்மீது சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படும்.

மோசே ஆசரிப்புக்கூடாரத்திலே ஒரு பலிபீடத்தைக் கட்டினார். அது ஐந்துமுழ நீளமும், ஐந்துமுழ அகலமும், ஐந்துமுழ உயரமுமாயிருந்தது. சாலொமோன் பண்ணுகிற வெண்கல பலிபீடமோ, மோசே கட்டின பலிபீடத்தைவிட பெரியதாயிருக்கிறது. இதன் நீளம் இருபது முழமாகவும், அகலம் இருபது முழமாகவும், உயரம் பத்து முழமாகவும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணியிருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்தும் வெண்கல பலிபீடத்தின் அளவுகளை விஸ்தாரம் பண்ணியிருக்கிறார்கள். நாம் கர்த்தரிடத்திலிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அவருக்கு கொடுக்கவேண்டும்.

சாலொமோன் உண்டுபண்ணின வெண்கல பலிபீடத்தின் உயரம் பத்து முழமாகயிருக்கிறது. வெளிப்பிரகாரத்திலே நின்று கர்த்தரை ஆராதிக்கிறவர்களுக்கு, வெண்கல பலிபீடம் பிரத்தியட்சமாய்த் தெரியும். வெண்கல பலிபீடத்தின்மீது, தகனபலிகள் தகனிக்கப்படுவதையும் அவர்களால் பார்க்க முடியும். கர்த்தரை ஆராதிக்கிறவர்களின் கண்கள், சர்வாங்க தகனபலிகளைப் பார்க்கும்போது, அவர்களுடைய இருதயங்கள் பாவத்தின் வருத்தத்தினால் வேதனைப்பட்டு உருகும்.

வெண்கல பலிபீடத்தின்மீது சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படும்போது, பலிசெலுத்தப்படும் மிருகத்திலிருந்து புகைகள் மேலே எழும்பும். அதுபோலவே கர்த்தரை ஆராதிக்கிறவர்களின் இருதயம் பரலோகத்தை நோக்கி மேலே எழும்பவேண்டும். நம்முடைய இருதயத்தின் நினைவுகளும், வாஞ்சைகளும் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கவேண்டும். அவை கர்த்தரை நோக்கி புறப்பட்டுப்போகவேண்டும். அப்போதுதான் நம்மால் கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போதும், கர்த்தருடைய வார்த்தைகளைத் தியானிக்கும்போதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீதே நம்முடைய கவனத்தை செலுத்தவேண்டும். நம்முடைய விசுவாசக்கண்களினால் நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக, கல்வாரி சிலுவையிலே நமக்காக பதிலீடாக மரித்தார். இயேசுகிறிஸ்துவின் பலிமரணம் நம்முடைய பாவங்களை நீக்கும் கிருபாதாரபலி மரணமாயிருக்கிறது.

சாலொமோன் ஒரு வெண்கல கடல்தொட்டியை செய்து, அதையும் கர்த்தருடைய ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் வைக்கிறார். இந்தத் தொட்டி மிகவும் பெரிதாயிருக்கிறது. ஆசாரியர்கள் தங்களை சுத்திகரிப்பதற்காக, இந்தக் கடல்தொட்டியில் தண்ணீர் ஊற்றி நிரப்பப்பட்டிருக்கும்.

சாலொமோன் வெண்கலக் கடல்தொட்டியையும் வார்ப்பிக்கிறார்; சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்புதொடங்கி மறுவிளிம்புமட்டும் பத்துமுழ அகலமும், ஐந்துமுழ உயரமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருக்கிறது (2நாளா 4:2).

வெண்கலக்கடல் என்னும் தொட்டி மிகப்பெரிய பாத்திரம். இதன் விட்டம் சுமார் ஐந்து மீட்டர் அளவுள்ளது. இந்தத் தொட்டியில் சுமார் 500 பீப்பாய்கள் தண்ணீர் ஊற்றலாம். ஆசாரியர்கள் தங்களைச் சுத்தம்பண்ணுவதற்கும், பலிபீடத்தில் பலிசெலுத்தப்படும் மிருகங்களை சுத்தம்பண்ணுவதற்கும் இந்தத் தண்ணீரை பயன்படுத்துவார்கள். மேலும் தேவாலயத்தின் பிரகாரங்களை சுத்திகரிப்பதற்கும் இந்த தண்ணீரை பயன்படுத்துவார்கள்.

வெண்கலக் கடல் என்னும் தொட்டியை சுற்றிலும் சக்கராகாரமான அதினுடைய ஒரு விளிம்பு தொடங்கி மறுவிளிம்புமட்டும், அகலம் பத்துமுழமும், உயரம் ஐந்துமுழமும், சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருக்கிறது. அந்தக் கடல்தொட்டியைச் சுற்றி விளிம்புக்குக் கீழே அதைச் சுற்றிலும் மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து பத்தாகச் செய்யப்பட்டிருக்கிறது; வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டும் தொட்டியோடு ஒன்றாய் வார்க்கப்பட்டிருக்கிறது (1இராஜா 7:23,24).

வெண்கலக்கடல் என்னும் தொட்டி பன்னிரண்டு ரிஷபங்களின் மேல் நிற்கிறது; அவைகளில் மூன்று வடக்கேயும், மூன்று மேற்கேயும், மூன்று தெற்கேயும், மூன்று கிழக்கேயும் நோக்கியிருக்கிறது; கடல்தொட்டி ரிஷபங்களின் மேலாகவும், அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவும் இருக்கிறது (1இராஜா 7:25).

"ரிஷபம்" என்னும் வார்த்தை காளைமாட்டைக் குறிக்கிறது. வெண்கல கடல் என்னும் தொட்டியில் கிபியோனியர் என்னும் நிதனீமியர் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார்கள். தேவனுடைய ஆலயத்திற்கு தண்ணீர் சுமக்கிற வேலை நிதனீமியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வெண்கல கடல் என்னும் தொட்டியில் தண்ணீர் குறையாமல், எப்போதும் நிறைவாயிருக்குமாறு பார்த்துக்கொள்வது நிதனீமியரின் பணிவிடை.

இஸ்ரவேல் ஜனத்தாரில் அநேகர் வனாந்தரத்தில் பொன்கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதை தங்கள் தெய்வமாக ஆராதித்தார்கள். கன்றுக்குட்டி எகிப்தியரின் தெய்வம். வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு ஜீவனுமில்லை, வல்லமையுமில்லை. ஆனால் எகிப்தியரும், புறஜாதியாரும் அதைத் தங்கள் தெய்வமாகப் பாவித்து ஆராதிக்கிறார்கள்.

எகிப்தியரின் தெய்வமான ரிஷபங்களாகிய காளைமாடுகளுக்கு வல்லமையில்லை என்பதை சாலொமோன் ராஜா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவுபடுத்த விரும்புகிறார். இதற்காக அவர் பன்னிரண்டு ரிஷபங்களை செய்து, அவற்றின்மேல் வெண்கலக்கடல் என்னும் தொட்டியை வைக்கிறார். ரிஷபங்கள் தொட்டியை சுமப்பதற்கு தான் தகுதியானவை. மனுஷரை ஆசீர்வதிப்பதற்கு ரிஷபங்கள் தகுதியற்றவை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ரிஷபங்களை ஆராதிக்கக்கூடாது.

வெண்கலக்கடல் என்னும் தொட்டியில் இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கும். அவ்வளவு தண்ணீரையும் சேமிக்குமாறு, கடல் தொட்டி கனமான வெண்கலத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. அதின் கனம் நாலு விரற்கடையும், அதின் விளிம்பு பானபாத்திரத்தின் விளிம்புபோலும், லீலிபுஷ்பம்போலும் இருக்கிறது (1இராஜா 7:26).

இந்த வெண்கல கடல் தொட்டியின் அகலம் 15 அடி, உயரம் ஏழரை அடி, அதன் சுற்றளவு 45 அடி ஆகும். 1இராஜா 7:24 ஆவது வசனத்தில் மொக்குகளைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனப் பகுதியில் அதன் கூடுதல் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்கள் கழுவுகிறதற்குப் பத்துக் கொப்பரைகளையும் உண்டாக்கி, ஐந்தை வலதுபுறத்திலும், ஐந்தை இடதுபுறத்திலும் சாலொமோன் வைக்கிறார்; சர்வாங்க தகனமாகிறவைகளை அவைகளில் அலைசுவார்கள்; கடல்தொட்டியோ ஆசாரியர்கள் தங்களைச் சுத்தம் பண்ணிக்கொள்ளுகிறதற்கு இருக்கிறது (2நாளா 4:6).

தேவாலயத்தின் பணிவிடைக்காக பத்து வெண்கல ஆதாரங்கள் செய்யப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு ஆதாரமும் நாலுமுழ நீளமும், நாலுமுழ அகலமும், மூன்று முழ உயரமுமாயிருக்கிறது (1இராஜா 7:27). வெண்கல கடல் என்னும் தொட்டி அளவில் மிகவும் பெரியது. அது இரண்டாயிரம் குடம் தண்ணீர் பிடிக்கக்கூடியது. தேவாலயத்தின் ஆராதனைக்கு கடல் தொட்டியிலுள்ள தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால் தேவாலயத்திற்குள்ளே இவ்வளவு பெரிய கடல் தொட்டியை வைப்பதற்கு இடமில்லை.

கடல் தொட்டி ஒரே இடத்தில் நிலையாக வைக்கப்பட்டிருக்கும். தொட்டியிலுள்ள தண்ணீரை ஓரிடத்திலிருந்து, மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல, வெண்கல கொப்பரைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் பத்து வெண்கலக் கொப்பரைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு கொப்பரையும் நாற்பது குடம் பிடிக்கும்; நாலு முழ அகலமான ஒவ்வொரு கொப்பரையும் அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேலும் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வெண்லக ஆதாரத்தின்மேலும், ஒவ்வொரு கொப்பரை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரங்கள் சக்கரம்போல சுற்றக்கூடியவை. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, இந்த ஆதாரத்தையும், இந்த ஆதாரத்தின்மீது வைக்கப்பட்டிருக்கிற கொப்பரையையும் இழுத்துச் செல்ல முடியும். ஒவ்வொரு கொப்பரையிலும் நாற்பது குடம் தண்ணீர் பிடிக்கக்கூடியது. ஆசாரியர்களுக்கு தேவைப்படும் தண்ணீரை, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல, இந்த ஆதாரங்கள் உபயோகமாயிருக்கும்.

சாலொமோன் ராஜாவுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம், பத்து வெண்கல ஆதாரங்களை செய்து, அவற்றில் ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் வலதுபுறத்திலும், ஐந்து ஆதாரங்களை ஆலயத்தின் இடதுபுறத்திலும் வைக்கிறான்; கடல்தொட்டியைக் கிழக்கில் ஆலயத்தின் வலதுபுறத்திலே தெற்குக்கு நேராக வைக்கிறான் (1இராஜா 7:39).

ஈராம் சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஆதாரங்களில் ஏராளமான வேலைப்பாடுகளை செய்து அதை அழகுபடுத்துகிறான். இந்த வசனப்பகுதியில் ஆதாரங்களின் வேலைப்பாட்டு விவரம் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

அந்த ஆதாரங்களின் வேலைப்பாடு என்னவெனில், அவைகளுக்குச் சவுக்கைகள் உண்டாயிருக்கிறது; சவுக்கைகளோ சட்டங்களின் நடுவில் இருக்கிறது. சட்டங்களுக்கு நடுவே இருக்கிற அந்தச் சவுக்கைகளில் சிங்கங்களும், காளைகளும், கேருபீன்களும், சட்டங்களுக்கு மேலாக ஒரு திரணையும், சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழாக சாய்வான வேலைப்பாடுள்ள ஜலதாரைகளும் அதனோடே இருக்கிறது (1இராஜா 7:28,29).

ஒவ்வொரு ஆதாரத்திற்கு நாலு வெண்கல உருளைகளும், வெண்கலத் தட்டுகளும், அதின் நாலு கோடிகளுக்கு அச்சுகளும் இருக்கிறது; கொப்பரையின் கீழிருக்க, அந்தக் கொம்மைகள் ஒவ்வொன்றும் வார்ப்பு வேலையாக ஜலதாரைகளுக்கு நேராயிருக்கிறது. திரணைகளுக்குள்ளான அதின் வாய் மேலாக ஒருமுழம் உயர்ந்திருக்கிறது; அதின் வாய் ஒன்றரைமுழ சக்கராகாரமும் தட்டையுமாய், அதின் வாய்மேல் சித்திரங்களும் செய்யப்பட்டிருக்கிறது; அவைகளின் சவுக்கைகள் விருத்தமாயிராமல் சதுரமாயிருக்கிறது (1இராஜா 7:30,31).

அந்த நாலு உருளைகள் சவுக்கைகளின் கீழும், உருளைகளின் அச்சுகள் ஆதாரத்திலும் இருக்கிறது; ஒவ்வொரு உருளை ஒன்றரைமுழ உயரமாயிருக்கிறது. உருளைகளின் வேலை இரதத்து உருளைகளின் வேலைக்கு ஒத்திருக்கிறது; அவைகளின் அச்சுகளும், சக்கரங்களும், வட்டங்களும், கம்பிகளும் எல்லாம் வார்ப்புவேலையாயிருக்கிறது (1இராஜா 7:32,33).

ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலு கோடிகளிலும், ஆதாரத்திலிருந்து புறப்படுகிற நாலு கொம்மைகள் இருக்கிறது. ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான சக்கராகாரமும், ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின்மேலும் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளும் சவுக்கைகளும் இருக்கிறது (1இராஜா 7:34,35).

அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்கும் சவுக்கைகளுக்கும் இருக்கிற சந்துகளிலே, கேருபீன்கள் சிங்கங்கள் பேரீந்துகளுடைய சித்திரங்கள் தீர்க்கப்பட்டிருக்கிறது. சுற்றிலும் ஒவ்வொன்றிலும், ஜலதாரைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாய்ச் செய்யப்பட்டிருக்கிறது (1இராஜா 7:36).

சமாதானபலியாக செலுத்தப்படும் மிருகங்களின் மாம்சங்களை வேகவைப்பதற்கு வெண்கல கொப்பரைகள் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றின் எண்ணிக்கை ஏராளம். வெண்கல கொப்பரைகளில் வேகவைக்கப்பட்ட மாம்சத்தை ஆசாரியர்களும் பலிசெலுத்தியவர்களும் புசிப்பார்கள்.

"அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்" (1சாமு 2:14).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் கொப்பரைகளையும் சாம்பல் எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்கிறான். இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலையையும் செய்து முடிக்கிறான் (1இராஜா 7:40).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் செய்த எல்லா வெண்கல வேலைகளின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. இரண்டு தூண்கள்
2. இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்கள்
3. தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்கள்.
4. தூண்களின் மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும்படி ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் பண்ணின இரண்டு வரிசை மாதளம்பழங்கள். ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்கள்.
5. பத்து ஆதாரங்கள்.
6. ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகள்.
7. ஒரு கடல்தொட்டி
8. கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்கள்.
9. செப்புச்சட்டிகள்
10. சாம்பல் கரண்டிகள்
11. கலங்கள்

கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருக்கிறது. யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே சாலொமோன் ராஜா இவைகளை வார்ப்பிக்கிறார். இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை (1இராஜா 7:45-47).

ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலு கோடிகளிலும், ஆதாரத்திலிருந்து புறப்படுகிற நாலு கொம்மைகள் இருக்கிறது. ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலும் அரைமுழ உயரமான சக்கராகாரமும், ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின்மேலும் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளும் சவுக்கைகளும் இருக்கிறது (1இராஜா 7:34,35).

அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்கும் சவுக்கைகளுக்கும் இருக்கிற சந்துகளிலே, கேருபீன்கள் சிங்கங்கள் பேரீந்துகளுடைய சித்திரங்கள் தீர்க்கப்பட்டிருக்கிறது. சுற்றிலும் ஒவ்வொன்றிலும், ஜலதாரைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாய்ச் செய்யப்பட்டிருக்கிறது (1இராஜா 7:36).

சமாதானபலியாக செலுத்தப்படும் மிருகங்களின் மாம்சங்களை வேகவைப்பதற்கு வெண்கல கொப்பரைகள் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றின் எண்ணிக்கை ஏராளம். வெண்கல கொப்பரைகளில் வேகவைக்கப்பட்ட மாம்சத்தை ஆசாரியர்களும் பலிசெலுத்தியவர்களும் புசிப்பார்கள்.

"அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது சருவத்திலாவது சட்டியிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள்" (1சாமு 2:14).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் கொப்பரைகளையும் சாம்பல் எடுக்கிற கரண்டிகளையும் கலங்களையும் செய்கிறான். இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலையையும் செய்து முடிக்கிறான் (1இராஜா 7:40).

சாலொமோனுடைய கட்டளைப் பிரகாரம் ஈராம் செய்த எல்லா வெண்கல வேலைகளின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. இரண்டு தூண்கள்
2. இரண்டு தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்கள்
3. தூண்களுடைய முனையின்மேல் இருக்கிற இரண்டு உருண்டைக் கும்பங்களை மூடும் இரண்டு வலைப் பின்னல்கள்.
4. தூண்களின் மேலுள்ள இரண்டு உருண்டைக் கும்பங்களைமூடும்படி ஒவ்வொரு வலைப்பின்னலுக்கும் பண்ணின இரண்டு வரிசை மாதளம்பழங்கள். ஆக இரண்டு வலைப்பின்னலுக்கும் நானூறு மாதளம்பழங்கள்.
5. பத்து ஆதாரங்கள்.
6. ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பரைகள்.
7. ஒரு கடல்தொட்டி
8. கடல் தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு ரிஷபங்கள்.
9. செப்புச்சட்டிகள்
10. சாம்பல் கரண்டிகள்
11. கலங்கள்

கர்த்தரின் ஆலயத்துக்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு ஈராம் செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளும் சுத்தமான வெண்கலமாயிருக்கிறது. யோர்தானுக்கு அடுத்த சமனான பூமியிலே, சுக்கோத்துக்கும் சர்தானுக்கும் நடுவே களிமண்தரையிலே சாலொமோன் ராஜா இவைகளை வார்ப்பிக்கிறார். இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை (1இராஜா 7:45-47).

கர்த்தருடைய ஆலயத்திற்காக ராஜாவாகிய சாலொமோனுக்கு, ஈராம் முதலில் வெண்கல வேலைகளை செய்து கொடுக்கிறான். அதன் பின்பு பொன்வேலைகளை செய்கிறான். பொன்வேலைகளை செய்து முடிக்கும்போது, ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது. தேவாலயத்தின் கதவுகளுக்குள்ளே இருப்பது எல்லாம் பொன்னால் செய்யப்பட்டிருக்கிறது.

தேவாலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, அதிலுள்ள கிருபாசனம், கேரூபின்கள் ஆகியவற்றை தவிர மற்றவையெல்லாமே புதிதாய் செய்யப்பட்டிருக்கிறது. பொன்னால் செய்யப்பட்ட பழைய பணிமுட்டுக்களெல்லாம் மறுபடியும் உருக்கப்பட்டு புதிதாய் செய்யப்பட்டிருக்கிறது.

சாலொமோன் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே உண்டாக்குகிறார். மோசேயின் ஆசாரிப்புக்கூடாரத்திலும் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே இருந்தது. சாலொமோன் கட்டின தேவாலயத்திலும் ஒரு பொன்பலிபீடம் மாத்திரமே இருக்கிறது. கிறிஸ்துவானவர் ஒருவரே என்பதற்கும், அவருடைய பரிந்துபேசுதலும் ஒன்றே என்பதற்கு இது அடையாளம்.

சாலொமோன் பத்து பொன்மேஜைகளை உண்டாக்குகிறார். "பத்து மேஜைகளையும் செய்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்து, நூறு பொன் கலங்களையும் பண்ணுகிறார்" (2நாளா 4:8).

கர்த்தருடைய ஆலயத்தில் ஆவிக்குரிய போஜனம் தாராளமாய்க் கிடைக்கும் என்பதற்கு அடையாளமாக சமுகத்தப்பங்களை வைக்கும் பத்து பொன்மேஜைகளை சாலொமோன் உண்டாக்கியிருக்கிறார்.

சாலொமோன் பத்து பசும்பொன் விளக்குத் தண்டுகளை உண்டாக்குகிறார் (1இராஜா 7:49). சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு பரலோகத்தின் வெளிச்சம் தாராளமாய்க் கிடைக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களைவிட, சுவிசேஷத்தின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் அதிகம். இதற்கு அடையாளமாக, சாலொமோன் பத்து பசும்பொன் விளக்குத் தண்டுகளை உண்டாக்குகிறார் (1இராஜா 7:49).

இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது;

அப்பொழுது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் கொண்டுவந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக தாவீது ராஜா பொன்னையும் வெள்ளியையும் ஏராளமாக சேகரித்து வைத்திருந்தார். தாவீது சேகரித்து வைத்திருந்த பொன் வெள்ளியினால், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார். செலவு பண்ணப்பட்ட பொன் வெள்ளியைத் தவிர, இன்னும் மீதமாயிருக்கிற பொன்னும் வெள்ளியும் தாராளமாயிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்தாலும், அதை ஒவ்வொரு வருஷமும் பழுதுபார்த்து பராமரிக்கவேண்டும். தேவாலயத்தில் எப்போதும் ஆராதனை நடைபெறவேண்டும். தேவாலயத்தின் நிர்வாக செலவுகளுக்கு பணம் வேண்டும். இதற்காக கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பொக்கிஷம் நியமிக்கப்பட்டிருக்கிறது. தாவீது ராஜா பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட பொன்னையும் வெள்ளியையும், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷத்தில் வைக்கிறார். இந்தப் பொக்கிஷம் கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்தப்படும்.

கர்த்தருடைய ஊழியத்திற்காக பெற்றோர் பரிசுத்தம்பண்ணி நேர்ந்துகொண்டதை, அவர்களுடைய பிள்ளைகள் அதற்காக செலவு பண்ணவேண்டும். கர்த்தருடைய ஊழியத்திற்காக பெற்றோர் ஒதுக்கி வைத்திருந்த பணத்தை, அவர்களுடைய பிள்ளைகள் வேறு வழிகளில் செலவு பண்ணக்கூடாது. பெற்றோர் கர்த்தருடைய ஊழியத்திற்கு நேர்ந்துகொண்டதை, அவர்களுடைய பிள்ளைகள் பயபக்தியோடு பயன்படுத்தவேண்டும். பெற்றோர் ஆரம்பித்த ஊழியத்தை, அவர்களுடைய பிள்ளைகள் தொடர்ந்து செய்யவேண்டும். ஊழியம் கர்த்தருடையது. பிள்ளைகள் கர்த்தருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும், தங்கள் பெற்றோருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கடல்தொட்டியிலே தண்ணீர் எப்போதும் நிறைவாகயிருக்கும். நாம் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தோடு வரும்போது, அவருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு நிறைவாய்க் கிடைக்கும். நம்முடைய பாவங்களை நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தம் போதுமானதாயிருக்கிறது. கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவக்கறைகளையும், மனச்சாட்சியையும் சுத்தம்பண்ணுகிறது.

"நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (எபி 9:14).

கிறிஸ்துவானவர் பரிசுத்தராயிருப்பதுபோல நாமும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பி, நம்மை சுத்தம்பண்ணுவது நம்முடைய கடமை. நம்முடைய இருதயம் பரிசுத்தமாக்கப்படவேண்டும். நம்முடைய இருதயத்தை சுத்தம்பண்ணாமல், நம்மால் கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தம்பண்ண முடியாது.

கர்த்தருடைய சமுகத்திற்கு அருகாமையில் வருகிறவர்கள் தங்களுடைய கைகளை சுத்திகரிக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய இருதயங்களையும் பரிசுத்தமாக்கவேண்டும்.

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (யாக் 4:8).

சாலொமோன் பத்து கொப்பரைகளை உண்டுபண்ணுகிறார். சர்வாங்க தகனமாகிறவைகளை லேவியர்கள் அவைகளில் அலசுவார்கள். ஆசாரியர்கள் கடல் தொட்டியிலே தங்களை சுத்தம்பண்ணிக்கொள்வார்கள். ஆசாரியர்கள் தங்களை சுத்தம்பண்ணிக்கொள்வதுபோல, சர்வாங்க தகனமாக செலுத்தப்படுகிற பலிகளையும் அலசி சுத்தம்பண்ணவேண்டும்.

நம்மை சுத்தம்பண்ணும்போது, நம்முடைய இருதயத்திலிருக்கிற பாவமான சிந்தனைகள் நம்மை விட்டு நீங்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்மைக் கழுவவேண்டும். நாம் கழுவப்படவில்லையென்றால், பாவமான சிந்தனைகளும், பாவக்கறைகளும் நமக்குள்ளே தங்கியிருக்கும். அவை நம்மை தீட்டுப்படுத்தும்.

சாலொமோன் ஆசாரியரின் பிராகாரத்தையும், பெரிய பிரகாரத்தையும் பிரகாரத்தின் வாசல்களையும் உண்டாக்கி, அவைகளின் கதவுகளை வெண்கலத்தால் மூடுகிறார் (2நாளா 4:9). வாசல்களும் கதவுகளும் வெண்கலத்தால் மூடப்படும்போது அவை உறுதியாயும் அழகாயும் இருக்கும். மோசமான சீதோஷ்ண நிலைகளினால் அவை பாதிக்கப்படாது.

தேவாலயத்தில் ஆசாரியரின் பிராகாரம், இஸ்ரவேலில் ஜனத்தாரின் பிராகாரம், புறஜாதியாரின் பிராகாரம் என பல பிராகாரங்கள் உள்ளன. இவற்றிற்கெல்லாம் வாசல்கள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாசலுக்கும் வெண்கலத்தால் மூடப்பட்ட கதவுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்திற்குள்ளே ஆசாரியர்கள் மாத்திரம் பிரவேசிக்கக்கூடிய ஸ்தலங்கள் உள்ளது. அந்த ஸ்தலங்களில் உள்ள எல்லா பணிமுட்டுகளும் பொன்னால் செய்யப்பட்டிருக்கிறது. அவையெல்லாமே பரிசுத்தமான பணிமுட்டுகள். நாம் கர்த்தருக்கு அருகாமையில் எவ்வளவு அதிகமாக கிட்டிச்சேருகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

சாலொமோன் பத்துப் பொன் விளக்குத்தண்டுகளையும், அவைகளுடைய பிரமாணத்தின்படி செய்வித்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைக்கிறார் (2நாளா 4:7). இந்தப் பொன் விளக்குத்தண்டுகளெல்லாம், ஆசரிப்புக்கூடாரத்திலே என்ன வடிவத்தில் இருந்ததோ, அதுபோலவே இப்போதும் செய்யப்பட்டிருக்கிறது.

பத்துப் பொன் விளக்குத்தண்டுகளும் தேவாலயத்துக்குச் செய்யப்பட்டிருக்கிறது. மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்திலும் விளக்குத்தண்டுகள் இருந்தன. இந்த பத்துப் பொன் விளக்குத்தண்டுகளும் தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விளக்குத்தண்டும் ஒவ்வொரு பொன் மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கிறது. (1இராஜா 7:48-51, 2நாளா 4:7-8).

கர்த்தருடைய வார்த்தையே நமக்கு விளக்காகவும், வெளிச்சமாகவும் இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை நமக்கு இருளிலே வெளிச்சத்தைக் கொடுக்கும். மோசேயின் காலத்தில், ஆசாரிப்புக்கூடாரத்திலே ஒரே ஒரு பொன்விளக்குத்தண்டு மாத்திரமே இருந்தது.

மோசேயின் காலத்தில் பஞ்சாகமம் புஸ்தகம் மாத்திரமே அவர்களுக்கு இருந்தது. காலம் செல்ல செல்ல கர்த்தருடைய ஜனத்திற்கு, மேலும் பல ஆகமங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொன்விளக்குத்தண்டுகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, ஆகமங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு அடையாளம். கர்த்தருடைய வெளிப்பாடு அதிகரிக்கும்போது, விளக்குகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. நமக்கு ஆவிக்குரிய வெளிச்சமும் அதிகமாய்க் கிடைக்கிறது.

பொன்விளக்குத்தண்டுகள் சபைகளைக் குறிக்கிறது. "நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்" (வெளி 1:20). மோசே ஆசரிப்புக்கூடாரத்திலே ஒரே ஒரு பொன்விளக்குத்தண்டை மாத்திரமே வைத்தார். மோசே யூதருடைய சபை என்று ஒரே ஒரு சபையை மாத்திரமே ஸ்தாபித்தார்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில், இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சபைகளின் எண்ணிக்கையும், விசுவாசிகளின் எண்ணிக்கையும் விருத்தியடைந்திருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளின் எண்ணிக்கையும், சபைகளின் எண்ணிக்கையும் பலுகிப்பெருகியிருக்கிறது.

சாலொமோன் பத்து மேஜைகளை செய்கிறார் (2நாளா 4:8). இந்த மேஜையின்மீது சமுகத்தப்பங்களை வைப்பார்கள் (2நாளா 4:19). சாலொமோன் பத்து மேஜகளோடு நூறு கலங்களையும் பண்ணுகிறார். சாலொமோன் இவற்றை தவிர ஒரு பொற்பீடத்தையும் பண்ணுகிறார். இந்தப் பீடத்தின்மீது தூபபலிகளை செலுத்துவார்கள்.

சாலொமோன் செய்த வெண்கல உருக்கு வேலைகளின் விவரம் வருமாறு:

1. செப்புச்சட்டிகள்
2. சாம்பலெடுக்கிற கரண்டிகள் (2நாளா 4:11,16)
3. கலங்கள்
4. இரண்டு தூண்கள் (2நாளா 3:15-17)
5. இரண்டு கும்பங்கள் (2நாளா 4:12)
6. குமிழ்கள்
7. இரண்டு வலைப்பின்னல்கள்
8. குமிழ்களான இரண்டு கும்பங்கள். (2நாளா 4:13)
9. நானூறு மாதளம்பழங்கள்.
10. பத்துக் கொப்பரைகளும், ஆதாரங்களும் (2நாளா 4:14)

11. ஒரு கடல்தொட்டி (2நாளா 4:15)

12. பன்னிரண்டு ரிஷபங்கள்.

13. பல செப்புச்சட்டிகள் (2நாளா 4:16)

14. முள்துறடுகள்

15. பலிசெலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் பல பணிமுட்டுகள்

16. வெண்கலப்பலிபீடம் (2நாளா 4:1)

பொன் பணிமுட்டுகள் 2நாளா 4:11-22

2நாளா 4:11. ஈராம் செப்புச்சட்டிகளையும், சாம்பலெடுக்கிற கரண்டிகளையும், கலங்களையும் செய்தான்; இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்திற்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய வேலையைச் செய்துமுடித்தான்.

2நாளா 4:12. அவைகள் என்னவெனில், இரண்டு தூண்களும், இரண்டு தூண்களுடைய முனையின்மேலிருக்கிற கும்பங்களும், குமிழ்களும், தூண்களுடைய முனையின் மேலிருக்கிற குமிழ்களான இரண்டு கும்பங்களை மூடுகிறதற்கு இரண்டு வலைப்பின்னல்களும்,

2நாளா 4:13. தூண்களின்மேலுள்ள குமிழ்களான இரண்டு கும்பங்களை மூடுகிறதற்கு, ஒவ்வொரு வலைப்பின்னலின் இரண்டு வரிசை மாதளம்பழங்களாக, இரண்டு வலைப்பின்னலிலுமிருக்கிற நானூறு மாதளம்பழங்களுமே.

2நாளா 4:14. ஆதாரங்களையும், ஆதாரங்களின் மேலிருக்கும் கொப்பரைகளையும்,

2நாளா 4:15. ஒரு கடல்தொட்டியையும், அதின் கீழிருக்கும் பன்னிரண்டு ரிஷபங்களையும்,

2நாளா 4:16. செப்புச்சட்டிகளையும், சாம்பல் கரண்டிகளையும், முள்துறடுகள் முதலான பணிமுட்டுகளையும், ஈராம்அபி ராஜாவாகிய சாலொமோனுக்குக் கர்த்தரின் ஆலயத்திற்காக சுத்தமான வெண்கலத்தால் பண்ணினான்.

2நாளா 4:17. யோர்தானுக்கடுத்த சமனான பூமியில் சுக்கோத்திற்கும் சரேத்தாவுக்கும் நடுவே களிமண் தரையிலே ராஜா அவைகளை வார்ப்பித்தான்.

2நாளா 4:18. இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் வெகு ஏராளமாய் உண்டு பண்ணினான்; வெண்கலத்தின் நிறை தொகைக்கு அடங்காததாயிருந்தது.

2நாளா 4:19. தேவனுடைய ஆலயத்துக்கு வேண்டிய சகல பணிமுட்டுகளையும்; பொற்பீடத்தையும், சமுகத்தப்பங்களை வைக்கும் மேஜைகளையும்,

2நாளா 4:20. முறையின்படியே சந்நிதிக்கு முன்பாக விளக்குக் கொளுத்துகிறதற்குப் பசும்பொன் விளக்குத்தண்டுகளையும், அவைகளின் விளக்குகளையும்,

2நாளா 4:21. சுத்த தங்கத்தினால் செய்த பூக்களையும், விளக்குகளையும், கத்தரிகளையும்,

2நாளா 4:22. பசும்பொன் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், தூபகலசங்களையும் சாலொமோன் பண்ணினான்; மகா பரிசுத்த ஸ்தலத்தின் உட்கதவுகளும், ஆலயமாகிய வீட்டின் கதவுகளும், ஆலயத்தின் வாசல் கதவுகளும் எல்லாம் பொன்னாயிருந்தது.

கர்த்தருடைய ஆலயத்திலே வெண்கல பணிமுட்டுகளும், பொன்பணிமுட்டுகளும் செய்யப்படுகிறது. ஈராம் செப்புச்சட்டிகளையும், சாம்பலெடுக்கிற கரண்டிகளையும், கலங்களையும் செய்கிறான்; இவ்விதமாய் ஈராம் கர்த்தருடைய ஆலயத்திற்காக ராஜாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய வேலையைச் செய்துமுடிக்கிறான் (2நாளா 4:11).

தீருவின் ராஜாவாகிய ஈராம் "ஈராம் அபி" (2நாளா 4:16) என்று அழைக்கப்படுகிறான். இந்தப் பெயர் ஈராமின் பட்டப்பெயராகயிருக்கலாம். "ஈராம் அபி" என்னும் பெயருக்கு, "என்னுடைய தகப்பனாகிய ஈராம் அபி" என்று பொருள். ஈராம் வெண்கல வேலைகளுக்கும், இரும்பு வேலைகளுக்கும், பொன் வேலைகளுக்கும் தகப்பனாயிருக்கிறான்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான பணிமுட்டுகளை வெகு ஏராளமாய் உண்டுபண்ணுகிறார். வெண்கலத்தின் நிறை தொகைக்கு அடங்காததாயிருக்கிறது (2நாளா 4:18). சில பணிமுட்டுகள் பழசாய்ப்போனால் அல்லது தேய்ந்துபோனால் அல்லது உடைந்துபோனால், வேறே புதிய பணிமுட்டுகளை பயன்படுத்திக்கொள்ளும் வண்ணமாக, சாலொமோன் அவற்றை வெகு ஏராளமாய் உண்டுபண்ணியிருக்கிறார்.

சாலொமோன் செய்த பொன் வேலைகளின் விவரம் வருமாறு :

1. சகல பணிமுட்டுகள்
2. பொற்பீடம்.
3. சமுகத்தப்பங்களை வைக்கும் மேஜைகள் (2நாளா 4:19; 1இராஜா 7:48)
4. பத்து பசும்பொன் விளக்குத்தண்டுகள். (2நாளா 4:20)
5. அவைகளின் விளக்குகள். (2நாளா 4:20-21)
6. விளக்குகளின் பூக்கள். (2நாளா 4:21)
7. கத்தரிகள் (2நாளா 4:22)
8. கத்தி
9. கலங்கள் (2நாளா 4:22; 2நாளா 4:8)
10. கலயங்கள் (2நாளா 4:22; 1இராஜா 7:30)
11. தூபகலசங்கள் (2நாளா 4:22)
12. ஆலயத்தின் கதவுகள்.
13. மகா பரிசுத்த ஸ்தலத்தின் உட்கதவுகள்.
14. சுவர்களும், கூரைகளும் (2நாளா 3:5)
15. உள் அலங்காரங்கள்(2நாளா 3:5- 7)
16. மகா பரிசுத்தஸ்தலத்தின் ஆணிகள் (2நாளா 3:9)
17. மேலறைகள் (2நாளா 3:9)
18. கேருபின்கள் (2நாளா 3:10-13)
19. விளக்குத்தண்டுகளுக்கு பொன் மேஜைகள் (2நாளா 4:7-8)
20. தூபபீடம் (1இராஜா 7:48)
21. முளைகள் (1இராஜா 7:50)

"இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் வெகு ஏராளமாய் உண்டு பண்ணினான்" (2நாளா 4:18) என்று சொல்லப்பட்டிருந்தாலும், 2நாளா 4:11-17 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் பணிமுட்டுகள் ஈராம் செய்தவையாகும். ஆனால் இங்கு அவற்றைச் சாலொமோன் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. சாலொமோன் ஈராமையும், அவனுடைய மனுஷரையும் வேலைக்கு அமர்த்தியிருக்கிறான். ஆகையினால் இவற்றைச் சாலொமோன் உண்டுபண்ணினார் என்று கூறுவதில் தவறில்லை.

5 அதிகாரம்

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் செய்து முடித்திருக்கிறார். கர்த்தருக்காக பரிசுத்தம்பண்ணப்பட்ட எல்லா பொருட்களையும் சாலொமோன் தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார் *(2நாளா 5:1)*.

கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான பெட்டி மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைக்கப்படுகிறது *(2நாளா 5:2-10)*. கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்புகிறது. அவருடைய மகிமைக்கு அடையாளமாக, தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது *(2நாளா 5:11-14)*.

தேவனுடைய பெட்டி
2நாளா 5:1-10

2நாளா 5:1. கர்த்தருடைய ஆலயத்துக்காகச் சாலொமோன் செய்த வேலையெல்லாம் முடிந்தபோது, சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்தவைகளைக் கொண்டுவந்து, வெள்ளியையும், பொன்னையும், சகல பணிமுட்டுகளையும், தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைத்தான்.

2நாளா 5:2. பின்பு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டுவரும்படி சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரின் வம்சத் தலைவர் எல்லாரையும் எருசலேமிலே கூடிவரச் செய்தான்.

2நாளா 5:3. அப்படியே இஸ்ரவேலர் எல்லாரும் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே ராஜாவினிடத்தில் கூடிவந்தார்கள்.

2நாளா 5:4. இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் வந்தபின்பு லேவியர் பெட்டியை எடுத்து,

2நாளா 5:5. பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருக்கிற பரிசுத்த பணிமுட்டுகளையும் கொண்டுவந்தார்கள்; அவைகளைக் கொண்டுவந்தவர்கள் லேவியரான ஆசாரியரே.

2நாளா 5:6. ராஜாவாகிய சாலொமோனும், அவனோடே கூடின இஸ்ரவேல் சபையார் அனைவரும், பெட்டிக்கு முன்பாக எண்ணிக்கைக்கும் தொகைக்கும் அடங்காத ஏராளமான ஆடுமாடுகளைப் பலி யிட்டார்கள்.

2நாளா 5:7. அப்படியே ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதியாகிய மகா பரிசுத்தமான ஸ்தலத்திலே, கேருபீன்களுடைய செட்டைகளுக்குக் கீழாகக் கொண்டுவந்து வைத்தார்கள்.

2நாளா 5:8. கேருபீன்கள், பெட்டியிருக்கும் ஸ்தானத்தின்மேல், தங்கள் இரண்டிரண்டு செட்டைகளை விரித்து உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருந்தது.

2நாளா 5:9. பெட்டியிலிருக்கிற தண்டுகளின் முனைகள் சந்நிதிஸ்தலத்திற்கு முன்னே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை இழுத்தார்கள்; புறம்பே அவைகள் காணப்படவில்லை; அது இந்நாள்வரைக்கும் அங்கே இருக்கிறது.

2நாளா 5:10. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஓரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணினபோது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை கட்டி முடித்திருக்கிறார். அந்த ஆலயத்திற்குள்ளே பரிசுத்தமான பணிமுட்டுக்களையெல்லாம் கொண்டு வந்து வைக்கிறார். தேவனுடைய ஆலயத்திலே பொக்கிஷங்கள் இருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்துக்காகச் சாலொமோன் செய்த வேலையெல்லாம் முடிந்தபோது, சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்தவைகளைக் கொண்டுவந்து, வெள்ளியையும், பொன்னையும், சகல பணிமுட்டுகளையும், தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார் (2நாளா 5:1).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி, அதற்கான பணிமுட்டுகளையும் செய்து முடிக்கிறார். இவையெல்லாமே மகிமையாயிருக்கிறது. இந்த அதிகாரத்தில், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணும் சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. கற்களை பணிதீர்ப்பதின் சத்தம், கேதுரு மரங்களை அறுக்கிற சத்தம் ஆகிய சத்தங்களைவிட, துதியின் சத்தமும், ஸ்தோத்திரத்தின் சத்தமும் அதிக மகிமையாயிருக்கிறது.

கர்த்தரும் அவருடைய ஜனங்களும் ஒருவரையொருவர் சந்தித்து, ஒருவருக்கொருவர் சம்பாஷணை பண்ணிக்கொள்ளும் பரிசுத்த ஸ்தலமே கர்த்தருடைய ஆலயம். தேவாலய பிரதிஷ்டையின்போது, கர்த்தரும் அவருடைய பிள்ளைகளும் சந்திக்கும் முதலாவது பரிசுத்தமான சந்திப்பு ஏற்படுகிறது.

சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிவு பெறுகிறது. ஆலயத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்தில், இன்னும் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்படவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இல்லாத ஆலயம், ஆத்துமா இல்லாத சரீரம் போலவும், விளக்கு இல்லாத விளக்குத்தண்டுபோலவும், குடியிருப்போர் இல்லாத வீடுபோலவும் வெறுமையாயிருக்கும்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தையும், அவர் செய்த பரிசுத்த பணிமுட்டுகளையும் கர்த்தர் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தர் அவற்றை அங்கீகரிக்கவில்லையென்றால் சாலொமோனுடைய முயற்சிகளெல்லாமே பிரயோஜனமற்றுப்போகும். அவை வீணாய்ப்போகும்.

"இவ்விதமாய் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்த வேலைகளெல்லாம் முடிந்தது" (1இராஜா 8:51) என்று எழுதப்பட்டிருந்தாலும், இன்னும் ஒரு வேலை முடியாமலிருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, கர்த்தருடைய ஆலயத்திற்குள் கொண்டு வரப்படவேண்டும். இதுவே கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்யப்படும் வேலைகளில் பிரதான வேலையாகும்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்காக செய்கிற எல்லா வேலைகளையும் நேர்த்தியாய்ச் செய்து முடிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு வர ஒழுங்கு செய்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்த பின்பு, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டு வரும்படி, சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரையும், தன்னிடத்திலே கூடிவரச்செய்கிறார் (1இராஜா 8:1).

இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம்மாதத்துப் பண்டிகையிலே, ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள் (1இராஜா 8:2). ஏத்தானீம் மாதத்துப் பண்டிகை என்பது கூடாரங்களின் பண்டிகையைக் குறிக்கிறது. இந்தப் பண்டிகை ஏழாம் மாதம் பதினைந்தாம் தேதியிலே ஆசரிக்கப்படும்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: அந்த ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதிமுதல் ஏழுநாளளவும் கர்த்தருக்கு ஆசரிக்கும் கூடாரப்பண்டிகையாயிருப்பதாக" (லேவி 23:33,34).

தாவீது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, தனக்கு அருகாமையில் தாவீதின் நகரத்திற்கு கொண்டு வந்தார். சாலொமோனோ அந்தப் பெட்டியை கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வருகிறார். தாவீது செய்த ஊழியத்தை சாலொமோன் தொடர்ந்து செய்கிறார். பிள்ளைகள் தங்கள் பெற்றோர் விட்டுச் சென்ற ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும். பெற்றோர் செய்த ஊழியம் அவர்களோடு நின்றுவிடக்கூடாது.

சாலொமோனுடைய அழைப்பை ஏற்று, இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிரபுக்களாகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள பிதாக்களின் தலைவர் அனைவரும், எருசலேமில் ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள். இராணுவத்தலைவர்களும், நியாயாதிபதிகளும் சாலொமோனிடத்தில் கூடிவருகிறார்கள். இவர்களெல்லோருமே ஒரே நோக்கத்திற்காக கூடிவந்திருக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து, எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரவேண்டும். இதுவே அவர்கள் கூடிவந்திருப்பதன் நோக்கம்.

இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிதாக்களின் தலைவரும் சாலொமோனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவரைக் கனம்பண்ணுகிறார்கள். சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அவருடைய ராஜ்யபாரத்தில் இஸ்ரவேல் தேசம் சமாதானமாயும், சந்தோஷமாயும், செழிப்பாயும் இருக்கிறது. சாலொமோன் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, அவருக்கு நன்றி சொல்லுவதற்காக, இஸ்ரவேலின் மூப்பரும், கோத்திரப்பிதாக்களின் தலைவர் அனைவரும் சாலொமோனிடத்தில் கூடிவந்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கனம்பண்ணுவதற்காக வந்திருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு செய்த பொதுவான நன்மைகளை நினைவுகூர்ந்து, அவரைத் துதிப்பதற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கூடிவந்திருக்கிறார்கள்.

சாலொமோனிடத்தில் கூடிவந்திருக்கிற இஸ்ரவேலர் ஒருவரும் வெறுங்கையோடு வரவில்லை. அவர்கள் எல்லோரும் கர்த்தருக்கு பலியிடுவதற்காக எண்ணிக்கையும் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் தங்களோடு கொண்டு வந்திருக்கிறார்கள் (1இராஜா 8:5).

கர்த்தருடைய ஊழியத்தில் ஆசாரியருக்கென்று விசேஷித்த ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது, லேவியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்தார்கள். இங்கே ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டியை சுமக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி சுமக்கப்படும் கடைசி சம்பவம் இதுதான்.

யோசுவாவின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தார் எரிகோ கோட்டையை சுற்றி நடந்தபோது, ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்தார்கள். இது கர்த்தரிடத்திலிருந்து வந்த விசேஷித்த கட்டளை. அதன் பின்பு இப்போது, சாலொமோனுடைய காலத்தில், ஆசாரியர்கள் கர்த்தருடைய பெட்டியை சுமக்கிறார்கள். இது உடன்படிக்கைப் பெட்டி சுமக்கப்படும் கடைசி நிகழ்ச்சி.

இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் வந்திருக்கையில், ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்து, பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்து கொண்டுவருகிறார்கள்; ஆசாரியரும், லேவியரும், அவைகளைச் சுமக்கிறார்கள் (1இராஜா 8:3,4).

கர்த்தருடைய பெட்டியில் என்ன இருக்கிறது என்பதும் இந்த வசனப்பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடன்படிக்கை பண்ணுகிறபோது, மோசே ஓரேபிலே அந்தப் பெட்டியில் வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இருந்ததில்லை (1இராஜா 8:9). அந்தப் பெட்டியிலே இரண்டு கற்பலகைகள் மாத்திரமே இருக்கிறது. மன்னா வைக்கப்பட்டிருக்கிற பாத்திரமும், ஆரோனுடைய கோலும் உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே இல்லை. அவை உடன்படிக்கைப் பெட்டிக்கு பக்கத்திலிருக்கிறது.

தாவீதும் சாலொமோனும் கர்த்தருடைய ஆலயத்திற்காக ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்டார்கள். அவர்கள் நேர்ந்துகொண்ட வெள்ளியையும், பொன்னையும், சகல பணிமுட்டுகளையும்விட, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும், அந்தப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கிற இரண்டு கற்பலகைகளும் அவர்களுக்கு விலையேறப்பெற்றதாயிருக்கிறது.

ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை எடுத்துக்கொண்டு வரும்போது, பெட்டியோடுகூட ஆசரிப்புக்கூடாரத்தையும், கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்துகொண்டு வருகிறார்கள் (1இராஜா 8:4). மோசே வனாந்தரத்திலே கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடாரத்தைப் போட்டார். அந்தக் கூடாரம் கிபியோனிலிருந்தது. தாவீது கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை தாவீதின் நகரமாகிய சீயோனிலே போட்டார்.

இப்போது ஆசாரியர் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை, கர்த்தருடைய ஆலயத்திற்கு சுமந்துகொண்டு வருகிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தின் எல்லா பரிசுத்தங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலே சமர்ப்பிக்கிறார்கள். இனிமேல் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவருடைய ஆலயத்தில் பரிபூரணமாய் தங்கியிருக்கும் என்பதற்கு இது அடையாளம். கர்த்தரைத் தேடுகிறவர்கள் வேறு எங்கும் போய் தேடாமல், கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தேடவேண்டும் என்பதற்கு இது அடையாளம்.

கர்த்தருடைய சபையில், சபையின் பரிசுத்தமான காரியங்களெல்லாம் சமர்ப்பிக்கப்படவேண்டும். கர்த்தருடைய சபையில் சந்தோஷமும், மகிமையும் நிரம்பியிருக்கவேண்டும். பரலோகத்திலிருந்து வரும் பரிசுத்தம் சபையின்மீது நிறைவாக தங்கியிருக்கவேண்டும்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின்கீழே கொண்டுவந்துவைக்கிறார்கள் (1இராஜா 8:6).

இதுவரையிலும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பல இடங்களுக்கும் சுமந்து கொண்டு போகப்பட்டது. இப்போதோ கர்த்தருடைய பெட்டி, அதற்குரிய ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. இதன் பின்பு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எங்கும் எடுத்துச் செல்லப்படவில்லை. "அவைகள் இந்நாள் வரைக்கும் அங்கே தான் இருக்கிறது" (1இராஜா 8:8).

கேருபீன்கள் பெட்டியிருக்கும் ஸ்தானத்திலே தங்கள் இரண்டு செட்டைகளையும் விரித்து, உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருக்கிறது. ஆசாரியர்கள் தண்டுகளின் முனைகள் சந்நிதி ஸ்தானத்திற்கு முன்னான பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை முன்னுக்கு இழுக்கிறார்கள்; ஆகிலும் வெளியே அவைகள் காணப்படவில்லை; அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேதான் இருக்கிறது (1இராஜா 8:7,8).

கர்த்தர் ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலிருந்து தம்முடைய ஜனங்களோடு பேசுகிறார். கர்த்தர் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து தங்களோடு பேசுவார் என்று ஜனங்களும் எதிர்பார்க்கிறார்கள். மகாபரிசுத்த ஸ்தலம், கர்த்தருடைய பிரசன்னம் வாசம்பண்ணுகிற ஸ்தலம். இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை கேருபீன்களுடைய செட்டைகளின்கீழ் கொண்டு வந்து வைக்கிறார்கள். சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினபோது, மகாபரிசுத்த ஸ்தலத்திலே கேருபீன்களையும் உள்ஆலயத்திலே வைத்திருக்கிறார்.

"ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது. அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருந்தது. அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடினான்" (1இராஜா 6:26-28)

கேருபீன்கள் விசேஷித்த பாதுகாப்புக்கு அடையாளம். தேவதூதர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பாதுகாக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற தேவனுடைய பிரமாணங்களும், கர்த்தருடைய ஆலயத்திலே தேவனை ஆராதிக்க வருகிற ஜனங்களும், தேவதூதர்களின் விசேஷித்த பாதுகாப்பிலிருக்கிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்கள் நிரம்பி வருகிறது. நிறைவான பொக்கிஷம் தேவாலயத்திற்கு அழகாயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்திலே எவ்வளவு பொக்கிஷங்களை சேர்த்தாலும், அந்தப் பொக்கிஷங்கள் ஆலயத்தைப் பரிசுத்தம் பண்ணாது. தேவனுடைய ஆலயமே பொன்னை பரிசுத்தமாக்குகிறது.

"மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?" (மத் 23:17).

தாவீது கர்த்தருக்கும், தன்னுடைய தகப்பனாராகிய தாவீதுக்கும் உண்மையுள்ளவராயிருக்கிறார். தன்னுடைய தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்தவைகள் எல்லாவற்றையும், தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார். தாவீது கர்த்தருக்கு நேர்ந்துகொண்டதை, சாலொமோன் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தவில்லை. அவர் கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு கொடுக்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திலே பரிசுத்தமான பணிமுட்டுகளை வெகுதிரளாய் செய்கிறார். "இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் வெகு ஏராளமாய் உண்டு பண்ணினான்; வெண்கலத்தின் நிறை தொகைக்கு அடங்காததாயிருந்தது" (2நாளா 4:18).

சாலொமோன் செய்த எல்லா பணிமுட்டுகளையும், கர்த்தருடைய ஆராதனையில், ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியாது. ஆராதனையில் பயன்படுத்துவதுபோக, மீதமுள்ள பணிமுட்டுகளும் இருக்கும். இவையெல்லாம் கர்த்தருக்காக நேர்ந்துகொண்ட பரிசுத்தமான பணிமுட்டுகள். இந்தப் பணிமுட்டுகளை வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்த கூடாது. ஆகையினால் சாலொமோன் மீதமுள்ள எல்லா பணிமுட்டுகளையும் தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைக்கிறார். அவற்றை தேவைப்படும்போது பொக்கிஷங்களிலிருந்து எடுத்து, கர்த்தருடைய ஆராதனையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடித்திருக்கிறார். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி, தாவீது அதற்கென்று போட்ட கூடாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அது சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருக்கிறது. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அதன் கூடாரத்திலிருந்து, கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரவேண்டும். அதை மிகுந்த மதிப்போடும், மரியாதையோடும், பயபக்தியோடும் கொண்டு வரவேண்டும்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டுவரும்படி சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரப்புக்களாகிய இஸ்ரவேல் புத்திரரின் வம்சத் தலைவர் எல்லாரையும் எருசலேமிலே கூடிவரச் செய்கிறார் (2நாளா 5:2).

தேவாலயம் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது. அதிலுள்ள பணிமுட்டுகளெல்லாம் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. அதன்பின்பு சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும், கோத்திரப் பிரப்புக்களாகிய இஸ்ரவேல் புத்திரரின் வம்சத் தலைவர் எல்லாரையும் எருசலேமிலே கூடிவரச் செய்கிறார். அவர்கள் கர்த்தருடைய பெட்டியை எடுத்து, ஆலயத்திற்குக் கொண்டு வந்து வைக்கிறார்கள். ஏழாவது மாதத்தில் ஒரு பெரிய பண்டிகை ஆசரிக்கப் படுகிறது. இது கூடாரங்களின் பண்டிகையாகும் (2நாளா 5:2-3; லேவி 23:33).

இஸ்ரவேலர் எல்லாரும் ஏழாம் மாதத்தின் பண்டிகையிலே ராஜாவினிடத்தில் கூடிவருகிறார்கள். இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் வந்தபின்பு லேவியரான ஆசாரியர் பெட்டியை எடுத்து, பெட்டியையும், ஆசரிப்புக் கூடாரத்தையும், கூடாரத்திலிருக்கிற பரிசுத்த பணிமுட்டுகளையும் கொண்டுவருகிறார்கள்; அவைகளைக் கொண்டுவருகிறார்கள் லேவியரான ஆசாரியரே (2நாளா 5:3-5).

ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதியாகிய மகா பரிசுத்தமான ஸ்தலத்திலே, கேருபீன்களுடைய செட்டைகளுக்குக் கீழாகக் கொண்டுவந்து வைக்கிறார்கள் (2நாளா 5:7).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை புதிதாய்க் கட்டியிருக்கிறார். ஆராதனையில் பயன்படுத்துவதற்காக சாலொமோன் செய்த பணிமுட்டுகளும், பாத்திரங்களும் எல்லாமே புதிதாயிருக்கிறது. அவற்றின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயம் பெரிதாயிருப்பதுபோல, கர்த்தருடைய ஆராதனையில் பயன்படுத்தப்படும் பணிமுட்டுகளும் அதிகமாயிருக்கிறது. கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட பணிமுட்டுகளைவிட, கர்த்தருடைய ஆலயத்திலே பயன்படுத்தப்படும் பணிமுட்டுகளின் எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கிறது. அவையெல்லாமே புதிதாகவும் இருக்கிறது.

பணிமுட்டுகள் புதிதாயிருந்தாலும், தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி, அதன்மேலுள்ள கிருபாசனம், கிருபாசனத்தில் மூடியிருக்கும் கேருபீன்கள் ஆகியவையெல்லாமே, ஆசரிப்புக்கூடாரத்தில் இருந்ததாகவே இருக்கிறது. சாலொமோன் புதிய உடன்படிக்கைப் பெட்டியை செய்யவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின், கர்த்தர் ஓரேபிலே அவர்களோடு உடன்படிக்கை பண்ணினபோது, மோசே அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளே அல்லாமல் அதிலே வேறொன்றும் இல்லை (2நாளா 5:10).

மோசேயின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தேவனுடைய பெட்டியையே, சாலொமோன் இப்போது கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வருகிறார். தேவனுடைய பெட்டியில் மாற்றமில்லை. கர்த்தர் மாறாதவர். அவருடைய கிருபையும் என்றும் மாறாதது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும் மாறுவதில்லை.

எங்கே இரண்டுபேர் மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ, அங்கே கர்த்தர் அவர்கள் நடுவே வாசம்பண்ணுகிறார். கூடியிருக்கிறவர்கள் இரண்டு பேராகயிருந்தாலும், மூன்றுபேராகயிருந்தாலும், இரண்டாயிரம் பேராகயிருந்தாலும், மூவாயிரம் பேராகயிருந்தாலும் கர்த்தர் அவர்கள் நடுவே வாசம்பண்ணுகிறார். மனுஷருடைய எண்ணிக்கையைப் பொறுத்து, கர்த்தருடைய பிரசன்னம் மாறுவதில்லை.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் சிறிய கூட்டமாகக் கூடியிருந்தாலும், பெருங்கூட்டமாகக் கூடியிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னம் அவர்கள் மத்தியிலே ஒன்றுபோலவே இருக்கிறது. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும், அவருடைய வல்லமையும் ஒன்றுபோலவே வெளிப்படுகிறது.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை லேவியரான ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வருகிறார்கள். ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதியாகிய மகா பரிசுத்தமான ஸ்தலத்திலே, கேருபீன்களுடைய செட்டைகளுக்குக் கீழாகக் கொண்டுவந்து வைக்கிறார்கள்.

கேருபீன்கள், பெட்டியிருக்கும் ஸ்தானத்தின்மேல், தங்கள் இரண்டிரண்டு செட்டைகளை விரித்து உயர இருந்து பெட்டியையும் அதின் தண்டுகளையும் மூடிக்கொண்டிருக்கிறது *(2நாளா 5:8).*

ஆசாரியர்கள் பெட்டியிலிருக்கிற தண்டுகளின் முனைகள் சந்நிதிஸ்தலத்திற்கு முன்னே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை இழுக்கிறார்கள்; புறம்பே அவைகள் காணப்படவில்லை; அது இந்நாள்வரைக்கும் அங்கே இருக்கிறது *(2நாளா 5:9).*

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த பின்பு நாளாகமம் புஸ்தகம் எழுதப்பட்டது. 2நாளா 5:9-ஆவது வசனத்தில், "அது இந்நாள் வரைக்கும் அங்கே இருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த நாள் வரையிலும், தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி, கர்த்தருடைய ஆலயத்தின், மகாபரிசுத்த ஸ்தலத்திலே இல்லை. பாபிலோன் தேசத்தார் தேவாலயத்தை இடித்து அழித்துப்போட்டார்கள்.

தேவனுடைய பெட்டி இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. இந்தப் பெட்டி தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம். ஆலயத்திலே கர்த்தருடைய பிரசன்னம் இருக்கவேண்டும். அப்போதுதான் அது கர்த்தருடைய ஆலயமாயிருக்கும். கர்த்தருடைய பிரசன்னம் ஆலயத்தில் இல்லையென்றால், அது மற்ற கட்டிடங்களைப்போல சாதாரண கட்டிடமாகவே இருக்கும்.

ஆலயத்தைவிட்டு கிறிஸ்து வெளியேறிவிட்டால், அந்த இடம் பாழாய்ப்போன இடமாயிருக்கும். "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" *(மத் 23:38).*

லேவியரான ஆசாரியர் தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டியை கூடாரத்திலிருந்து, கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வரும்போது, அவர்கள் கூடாரத்திலிருக்கிற பரிசுத்த பணிமுட்டுகளையும் கொண்டு வருகிறார்கள். அவர்கள் எல்லோரும் மிகவும் சந்தோஷமாயிருக்கிறார்கள். லேவியராகிய ஆசாரியர் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஊழியத்தை சந்தோஷமாயும் மனப்பூர்வமாயும் செய்கிறார்கள். இஸ்ரவேலர் எல்லோரும் இந்த வைபவத்திற்காக கூடிவரும்போது பண்டிகையை ஆசரிக்கிறார்கள் *(2நாளா 5:3).*

ராஜாவாகிய சாலொமோனும், அவரோடே கூடின இஸ்ரவேல் சபையார் அனைவரும், பெட்டிக்கு முன்பாக எண்ணிக்கைக்கும் தொகைக்கும் அடங்காத ஏராளமான ஆடுமாடுகளைப் பலியிடுகிறார்கள் *(2நாளா 5:6).*

கிறிஸ்து நம்முடைய ஆத்துமாவிலே உருவாகும்போது, நம்முடைய இருதயத்திலே கர்த்தருடைய பிரமாணம் எழுதப்படுகிறது. அப்போது தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டி நம்முடைய ஆத்துமாவிலே வாசம்பண்ணுகிறது. நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. கர்த்தர் நமக்குள்ளே வாசம்பண்ணும்போது, நம்முடைய ஆத்துமாவிலே மெய்யான சந்தோஷமும், சமாதானமும் இருக்கும்.

கர்த்தருடைய மகிமை
2நாளா 5:11-14

2நாளா 5:11. வகுப்புகளின் முறைகளைப் பாராமல், ஆசாரியர் எல்லோரும் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொண்டார்கள்.

2நாளா 5:12. ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லிய புடவைகளைத் தரித்து, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நின்றார்கள்; அவர்களோடும் கூடப் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபது பேர் நின்றார்கள்.

2நாளா 5:13. அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடினார்கள்; ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தை தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது.

2நாளா 5:14. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்து நிற்கக்கூடாமற்போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.

லேவியர் கர்த்தருடைய பெட்டியை ஆலயத்திற்கு கொண்டு வருகிறார்கள். ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தின் சந்நிதியாகிய மகா பரிசுத்தமான ஸ்தலத்திலே, கேருபீன்களுடைய செட்டைகளுக்குக் கீழாகக் கொண்டுவந்து வைக்கிறார்கள்.

ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியை, ஆலயத்திலே வைக்கும்போது சாலொமோன் ராஜாவும் இஸ்ரவேலின் மூப்பரும், இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அங்கே திரளாய்க் கூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமாக கர்த்தருடைய பெட்டியை மகாபரிசுத்த ஸ்தலத்திலே பயபக்தியோடு வைத்து, கர்த்தருக்கு ஆடுமாடுகளை பலியிடுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் கிரியைகளை அங்கீகரிக்கிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமைக்கு அடையாளமாக தேவனுடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது. சாலொமோன் தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வெள்ளியையும் பொன்னையும், சகல பணிமுட்டுகளையும் கொண்டு வந்து வைத்து, தேவனுடைய ஆலயத்தை அழகுபடுத்துகிறார். வெள்ளியினாலும் பொன்னாலும் உண்டாகும் அழகைவிட, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பும் அழகே பேரழகாக இருக்கிறது.

கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பியபோது, தேவாலயம் மேகத்தினால் நிறைந்திருக்கிறது. ஆனாலும் இந்த மகிமையைவிட, சுவிசேஷ காலத்தில் கர்த்தருடைய மகிமை மிகவும் மேன்மையாயிருக்கும்.

"ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்கு முன்பாக மகிமைப்பட்டதல்ல" (2கொரி 3:8-10).

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். இது மனுஷருடைய கைகளால் கட்டப்பட்ட ஆலயம். இந்த ஆலயம் கர்த்தருக்கு மகிமையாக கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்த ஆலயத்தை தம்முடைய பரிசுத்த ஸ்தலமாக அங்கீகரித்து, அதிலே வாசம்பண்ணுகிறார். கர்த்தர் இந்த ஆலயத்தை அங்கீகரித்ததற்கு அடையாளமாக, கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலிருந்தபோது, மோசே ஆசரிப்புக்கூடாரத்தை போட்டார். கர்த்தர் அந்தக் கூடாரத்தை அங்கீகரித்தார். கர்த்தருடைய பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தது. கர்த்தர் மோசே போட்ட ஆசரிப்புக்கூடாரத்தை அங்கீகரித்ததுபோல, இப்போது சாலொமோன் கட்டின தேவாலயத்தையும் அங்கீகரித்திருக்கிறார்.

"அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று" (யாத் 40:34).

கர்த்தருடைய மகிமையான பிரசன்னத்தை பார்க்கக்கூடாதபடிக்கு நாம் பலவீனராகயிருந்தாலும், நம்மால் கர்த்தருடைய மகிமையை எவ்வளவு பார்க்க முடியுமோ, அந்த அளவுக்கு கர்த்தர் தமது மகிமையை நமக்கு வெளிப்படுத்துகிறார். தேவனுடைய தெய்வீக வெளிச்சத்தை நம்மால் எவ்வளவு பார்க்க முடியுமோ, அந்த அளவுக்கு வெளிச்சம் நமக்கு வெளிப்படுத்தப்படும்.

இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணியபோது, அவர்களால் எவ்வளவு புரிந்துகொள்ள முடியுமோ, அந்த அளவுக்குத்தக்கதாக அவர்களுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணினார். பல சமயங்களில் கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷருக்கு சத்தியத்தை நேரடியாகப் போதிக்காமல், அதை உவமையின் மூலமாகச் சொன்னார். தேவனுடைய தெய்வீக மகிமை மேகத்திலே மூடப்பட்டிருப்பதுபோல, இயேசுகிறிஸ்துவின் சத்தியங்கள் உவமையினால் மூடப்பட்டிருக்கிறது.

ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மகாபரிசுத்த ஸ்தலத்திலே, கேருபீன்களுடைய செட்டைகளுக்கு கீழாக கொண்டு வந்து வைக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியேறுகிறார்கள். அவர்கள் வெளியேறிய பின்பு, கர்த்தருடைய பிரசன்னம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே வாசம்பண்ணுகிறது.

மகா பரிசுத்த ஸ்தலம் கர்த்தருக்குரியது. அந்த பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தர் மாத்திரமே வாசம்பண்ணவேண்டும். கர்த்தர் அந்த மகாபரிசுத்த ஸ்தலத்திலே வாசம்பண்ணவேண்டுமென்றால், அந்த ஸ்தலத்திலே கர்த்தரை தவிர வேறு யாரும் இருக்கக்கூடாது. ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, மகாபரிசுத்த ஸ்தலத்திலே கொண்டு வந்து வைத்த பின்பு, அவர்கள் அந்த ஸ்தலத்தைவிட்டு வெளியேறுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அங்கே வந்து தங்குகிறது. அப்போது கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்புகிறது. கர்த்தருடைய மகிமைக்கு அடையாளமாக, கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது.

நம்முடைய இருதயத்திலே கர்த்தர் வந்து வாசம்பண்ணவேண்டுமென்றால், நம்முடைய இருதயத்தில் கர்த்தருக்கு இடம் கொடுக்கவேண்டும். நம்முடைய இருதயத்திலே கர்த்தரை தவிர வேறு யாருக்கும் இடம் இல்லாதவாறு, அவையெல்லாவற்றையும் நம்முடைய இருதயத்தைவிட்டு வெளியேற்றவேண்டும். நம்முடைய முழுஇருதயத்தையும் கர்த்தர் வாசம்பண்ணுவதற்காக ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய இருதயத்திலே வந்து தங்கியிருப்பார்.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள மகாபரிசுத்த ஸ்தலத்திலே ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைத்த பின்பு, வகுப்புகளின் முறைகளைப் பாராமல், ஆசாரியர் எல்லோரும் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்கிறார்கள் *(2நாளா 5:11).*

எல்லா ஆசாரியரும் தேவாலயத்தின் பணிவிடைகளைச் செய்வதற்குத் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்கிறார்கள். தாவீது உண்டுபண்ணி வைத்திருந்த ஆசாரியரின் வகுப்புகள் இன்னும் நடைமுறையில் செயல்படுத்தப்படவில்லை *(1நாளா 24).*

பாடகரும், இசைக்கருவிகளை வாசிக்கிறவர்களும் தேவாலயம் பிரதிஷ்டை பண்ணப்படும்போது அங்கே இருக்கிறார்கள். தாவீது வகுத்த வகுப்புகளின் பிரகாரம் ஆசாரிய ஊழியம் இன்னும் ஆரம்பமாகவில்லை. *(2நாளா 5:12-13; 1நாளா 25).*

ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும், அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும் மெல்லிய புடவைகளைத் தரித்து, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் பிடித்துப் பலிபீடத்திற்குக் கிழக்கே நிற்கிறார்கள்.

அவர்களோடும் கூடப் பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் நூற்றிருபது பேர் நிற்கிறார்கள். அவர்கள் ஒருமிக்கப் பூரிகைகளை ஊதி, ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடுகிறார்கள்; ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தை தொனிக்கப்பண்ணி, கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று அவரை ஸ்தோத்திரிக்கிறார்கள் (2நாளா 5:12,13).

லேவியர்கள் கீதவாத்தியங்களை தொனிக்கப்பண்ணி, கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறபோது, கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக ஏராளமான ஆடுமாடுகளைப் பலியிட்டார்கள் (2நாளா 5:6). அப்போது கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படவில்லை.

இப்போது லேவியர்கள் கீதவாத்தியங்களை தொனிக்கப்பண்ணி, கர்த்தரை ஸ்தோத்திரிக்கும்போது, கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்புகிறது. கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும் இஸ்ரவேல் சபையாருக்கு வெளிப்படுத்துகிறார். அதற்கு அடையாளமாக கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்புகிறது.

"தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப்பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்" (சங் 69:30,31).

பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள் ஒருமிக்க பூரிகைகளை ஊதுகிறார்கள். அவர்கள் ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப் பாடுகிறார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் மத்தியிலே ஒற்றுமையும், ஒருமனமும் காணப்படுகிறது. ஒருமனதாய் தம்மை ஆராதிக்கும் ஆராதனைகளையும், தம்மை துதிக்கும் துதிகளையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். அப்படிப்பட்ட ஆராதனையில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்படுகிறது. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியம் செய்து நிற்கக்கூடாமல் போயிற்று. வார்த்தை மாம்சமாயிற்று. கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வந்து வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிரசன்னம் புடமிடும் அக்கினியாயிருக்கிறது.

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 3:1).

ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும் இருப்பார்" (மல் 3:1,2).

கர்த்தர் தமக்காக கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தை தமது கிருபையினால் அங்கீகரிக்கிறார். கர்த்தர் தம்முடைய மகிமையை, மகாபரிசுத்த ஸ்தலத்திலே நிரப்பும் வரையிலும், ஆசாரியர்களால் அந்த ஸ்தலத்தில் நிற்க முடிகிறது. அது வரையிலும் ஆசாரியர்களால் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே வரமுடிகிறது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை, ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தானத்திலே கொண்டு வந்து வைத்தபோது, ஆசாரியர்களால் மகாபரிசுத்த ஸ்தலத்திலே ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமல் போயிற்று. மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே யாரும் பிரவேசிக்க முடியவில்லை.

பாவநிவாரண நாளின்போது மாத்திரம், பிரதான ஆசாரியன், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசிக்கலாம். அந்த நாளில் பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. மற்ற நாட்களில், மகாபிரதான ஆசாரியனும், வேறுயாரும், உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருக்கிற மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மகாபரிசுத்த ஸ்தலத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படும் வரையிலும், கர்த்தருடைய மகிமை, மகாபரிசுத்த ஸ்தலத்தை நிரப்பவில்லை. ஆசாரியர்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்பட்ட பின்பு, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகம் கர்த்தருடைய மகிமைக்கு அடையாளம். கர்த்தருடைய மகிமை மகாபரிசுத்த ஸ்தலத்தை நிரப்புவதோடு, ஆலயம் முழுவதையும் நிரப்பிற்று.

கர்த்தருடைய மகிமைக்கு அடையாளமாயிருக்கிற மேகத்தினிமித்தம், ஆசாரியர்கள் ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமற்போயிற்று. இந்த ஆசாரியர்கள் பொன்பலிபீடத்தில் தூபவர்க்கங்களை பலியாக செலுத்துகிறவர்கள். அவர்களால் அங்கே நின்று ஊழியம் செய்ய முடியவில்லை. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. தேவனுடைய மகிமை அவருடைய ஆலயத்தில் பிரத்தியட்சமாக வெளிப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைப் பெட்டியை கனம்பண்ணுகிறார். உடன்படிக்கைப் பெட்டி கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்பதை கர்த்தர் தாமே அங்கீரிக்கிறார். இதுவரையிலும் உடன்படிக்கைப் பெட்டி அங்கும் இங்குமாக சுற்றி அலைந்துகொண்டிருந்தது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, லேவியர்கள் சாதாரண ஸ்தலங்களில் உடன்படிக்கைப் பெட்டியை வைத்தார்கள்.

ஆசரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எல்லோரும் பார்க்கும் வண்ணமாக வெளிப்படையாக வைக்கப்பட்டிருந்தது. ஆகையினால் கர்த்தர் அப்போது தம்முடைய மகிமையை பிரத்தியட்சமாக அங்கே வெளிப்படுத்தவில்லை.

இப்போதோ கர்த்தருடைய ஆலயத்திலே, அவருடைய உடன்படிக்கைப் பெட்டி பரிசுத்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டபோது, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்புகிறது. மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தர் உடன்படிக்கைப் பெட்டியையும், அது இப்போது வைக்கப்பட்டிருக்கிற சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்தையும் அங்கீகரித்திருக்கிறார் என்பதற்கு இது அடையாளம். மோசே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரிப்புக்கூடாரத்திலே முதன் முதலில் வைத்தபோது, அங்கு காணப்பட்ட கர்த்தருடைய மகிமையைவிட, இப்போது கர்த்தருடைய மகிமை அதிகமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திற்காக பரிசுத்தமான பணிமுட்டுகளை செய்திருக்கிறார். கர்த்தர் தேவாலயக் கட்டிடத்தையும், பரிசுத்த பணிமுட்டுகளையும் அங்கீரித்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய ஆலயமும், பரிசுத்த பணிமுட்டுகளும் கர்த்தருடைய நாமமகிமைக்காக பரிசுத்தமாய் பயன்படுத்தப்படவேண்டும். மனுஷர் மத்தியிலே தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்துகொண்டு போனபோது, சாலொமோன் ராஜாவும், இஸ்ரவேல் சபை அனைத்தும் பெட்டிக்கு முன்பாக நடக்கிறார்கள். ஆசாரியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஆலயத்தின் சந்நிதி ஸ்தானமாகிய மகாபரிசுத்த ஸ்தலத்திலே வைத்தபோது, இஸ்ரவேல் சபை அனைத்தும் கர்த்தருடைய ஆலயத்திலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்கள். அவர்கள் கண்ட தரிசனம் அவர்களுடைய இருதயத்திற்குள் திகிலையும், நடுக்கத்தையும் உண்டாக்கிற்று.

இஸ்ரவேல் சபையார் அனைவரும் கர்த்தருடைய மகிமையைப்பற்றி இதுவரையிலும் மோசேயின் ஆகமங்களில் படித்திருக்கிறார்கள். கர்த்தருடைய மகிமையை இஸ்ரவேலின் முற்பிதாக்கள் தரிசித்ததை இவர்கள் மோசேயின் ஆகமங்களில் வாசித்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்ப் பார்த்ததில்லை.

இப்போது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, ஆலயத்தின் மகாபரிசுத்த ஸ்தானத்திலே வைக்கப்பட்டபோது, அங்கே கூடியிருந்த இஸ்ரவேல் சபையார் அனைவரும், கர்த்தருடைய மகிமை, கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதை பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறார்கள். கர்த்தருடைய மகிமையை திகிலோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும் பார்க்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் சபையார் அனைவருக்கும் கர்த்தரைக் குறித்து பயத்தோடு கூடிய பக்தி உண்டாயிற்று.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணப்போகிறார். சாலொமோன் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு செவிகொடுக்க கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார் என்பதற்கு கர்த்தருடைய மகிமை இஸ்ரவேல் சபையாருக்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியபோது, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை மேகமாகவும், காரிருளாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தர் காரிருளிலே வாசம்பண்ணுகிறார் என்று சாலொமோனும் சொல்லுகிறார் (1இராஜா 8:12).

சுவிசேஷத்தின் காலம் வெளிச்சத்தின் காலம். இது ஒளியின் காலம். சுவிசேஷத்தின் வெளிச்சமான காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாலொமோனுடைய காலமானது காரிருளின் காலமாயிருக்கிறது.

இனிமேல் வரப்போகிற பரலோகத்தின் மகிமையான காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் ஜீவிக்கிற இந்தக் காலம் காரிருளின் காலமாயிருக்கிறது. பரலோகத்தின் தெய்வீக மகிமையும், நித்திய சந்தோஷமும் நமக்கு இன்னும் பூரணமாய் வெளிப்படுத்தப்படவில்லை.

6 அதிகாரம்

கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. சாலொமோன் இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். இது கர்த்தருடைய நாமமகிமைக்காக கட்டப்பட்டிருக்கும் ஆலயம். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை ஆசீர்வதித்திருக்கிறார் (2நாளா 6:1-11).

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். இந்த ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும் கர்த்தர் பரலோகத்திலிருந்து பதில் கொடுக்கவேண்டும் என்று, சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார் (2நாளா 6:12-42).

நாளாகமம் புஸ்தகத்தின் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்திகள், 1இராஜா 8:12-53 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயம் 2நாளா 6:1-11

2நாளா 6:1. அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார் என்றும்,

2நாளா 6:2. தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும் நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்றும் சொல்லி,

2நாளா 6:3. ராஜா முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையார் எல்லாரையும் ஆசீர்வதித்தான்; இஸ்ரவேல் சபையார் எல்லாரும் நின்றார்கள்.

2நாளா 6:4. அவன் சொன்னது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவன் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதை, தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்.

2நாளா 6:5. அவர்: நான் என் ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள வேறே யாதொரு பட்டணத்தைத் தெரிந்துகொள்ளாமலும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கும்படி வேறே ஒருவரைத் தெரிந்துகொள்ளாமலும்,

2நாளா 6:6. என் நாமம் விளங்கும் ஸ்தானமாக எருசலேமையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கத் தாவீதையும் தெரிந்துகொண்டேன் என்றார்.

2நாளா 6:7. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் மனதில் இருந்தது.

2நாளா 6:8. ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்ல காரியந்தான்.

2நாளா 6:9. ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய்; உன் கர்ப்பப்பிறப்பாகிய உன்குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார்.

2நாளா 6:10. இப்போதும் கர்த்தர் சொல்லிய தமது வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக்கட்டி,

2நாளா 6:11. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடனே பண்ணின உடன்படிக்கையிருக்கிற பெட்டியை அதிலே வைத்தேன் என்று சொல்லி,

நாம் கர்த்தருக்காக செய்யும் எல்லா ஊழியமும் கர்த்தரைக் கனம்பண்ண வேண்டும். அவரை மகிமைப்படுத்தவேண்டும். நாம் கர்த்தருக்காக எதை செய்தாலும், அவரையே நோக்கிப் பார்த்து, அவருக்காகவே ஊழியம் செய்யவேண்டும்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். இந்த ஆலயத்தைப் பார்த்து சாலொமோனுடைய இருதயத்தில் பெருமை வந்துவிடக்கூடாது. சாலொமோன் தன்னுடைய சுயபெருமைக்காகவோ, சுயமேன்மைக்காகவோ, கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவில்லை. அவர் கர்த்தருடைய நாமமகிமைக்காகவே இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்.

கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்து நிற்கக்கூடாமற் போயிற்று; கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று. *(2நாளா 5:13,14)* அப்பொழுது சாலொமோன் ஒரு சுருக்கமான பிரசங்கத்தையும் *(2நாளா 6:1-11)*, ஒரு நீண்ட ஜெபத்தையும் சொல்லுகிறார் *(2நாளா 6:14-42)*.

சாலொமோன் தான் கட்டின ஆலயத்தைப்பற்றி சொல்லும்போது, "கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்" *(2நாளா 6:10)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் ஆசரிப்புக் கூடாரத்தில் வாசம்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு இடமாகப் பிரயாணம் பண்ணும்போது, கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்தையும் தங்களோடு கூடவே எடுத்துச் சென்றார்கள். இப்போது சாலொமோன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். இது கர்த்தர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமாக இருக்கும். இஸ்ரவேல் சபையார் எல்லாரும் எழும்பி நின்றபோது, சாலொமோன் அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார் *(2நாளா 6:3)*.

சாலொமோன் ஆசாரியரை உற்சாகப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து மறுரூபமலையிலே ஜெபம்பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. இயேசுவோடுகூட பேதுருவும், யோவானும், யாக்கோபும் இருந்தார்கள். பேதுரு இயேசுவோடு பேசுகையில் "ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்குள் பிரவேசிக்கையில் சீஷர்கள் பயந்தார்கள்" *(லூக் 9:34)*.

சீஷர்கள் தங்கள்மேல் நிழலிட்ட மேகத்தைப் பார்த்து பயந்ததுபோல, மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியபோது ஆசாரியர்களும் பயப்படுகிறார்கள். மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியம் செய்கிறதற்கு நிற்கக்கூடாமல் போயிற்று. ஆசாரியர்கள் ஒன்றும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள்.

சாலொமோன் ஆசாரியர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்களுடைய பயத்தைப் போக்குவதற்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். சாலொமோன் ஆசாரியர்களிடம், "காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார்" *(1இராஜா 8:12)* என்று சொல்லுகிறார். காரிருளானது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம் என்பதை சாலொமோன் ஆசாரியருக்கு ஞாபகப்படுத்துகிறார்.

கர்த்தருடைய கிருபையும் அநுக்கிரகமும் இஸ்ரவேல் சபையாருக்கு கிடைத்திருக்கிறது. இதற்கு அடையாளமாகவே மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று.

"ஆரோனின் இரண்டு குமாரர் கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து மரித்துப் போனபின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி: கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்; ஆதலால் உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடி, பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசன மூடிக்கு முன்பாகச் சகல வேளையிலும் வரவேண்டாம் என்று அவனுக்குச் சொல்" (லேவி 16:1,2).

கர்த்தர் மோசேயிடத்தில், "கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் நான் காணப்படுவேன்" என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை இப்போது பிரத்தியட்சமாய் நிறைவேறியிருக்கிறது. கர்த்தர் சொன்ன பிரகாரம் அவர் மேகத்தில் காணப்படுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்காக தான் கட்டின தேவாலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, இது தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடு என்றும், தேவரீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானாகிய ஆலயம் என்றும் சொல்லுகிறார். சாலொமோன் இந்த ஆலயத்தைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "ஆலயத்தை உமக்கு கட்டினேன்" என்று சொல்லுகிறார். சாலொமோன் கர்த்தருக்காகவே இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். இது கர்த்தருடைய ஆலயம்.

மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதைப் பார்த்து சாலொமோன் சந்தோஷப்படுகிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. சாலொமோன் இதையே எதிர்பார்த்தார். இதையே விரும்பினார். கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசம்பண்ணவேண்டுமென்று சாலொமோன் விரும்பினார். சாலொமோன் விரும்பிய பிரகாரம், கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் தங்கியிருக்கிறார்.

ஆகையினால் மேகம் கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதைப் பார்த்து ஆசாரியர்கள் பயப்படவேண்டியதில்லை என்று சாலொமோன் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார். கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பியதினால் ஆசாரியர்கள் சந்தோஷப்படவேண்டுமென்றும், அவர்கள் கர்த்தருக்குள் களிகூரவேண்டுமென்றும் சாலொமோன் அவர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சாலொமோன் ஆசாரியர் மத்தியிலே சுருக்கமாகப் பேசினார். அதன் பின்பு அவர் முகம் திரும்பி, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்தார். ஆசாரியர்கள் ஆலயத்தின் உட்பிரகாரத்திலிருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையாரெல்லாரும் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் நிற்கிறார்கள் (1இராஜா 8:14). இஸ்ரவேலின் சபையார் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். சாலொமோன் அவர்கள் எல்லோருக்கும் உபதேசம் பண்ணுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உபதேசம்பண்ணுவதற்கு முன்பாக, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதிக்கிறார். கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் மேகத்தையும், அதனால் ஏற்பட்டிருக்கிற காரிருளையும் பார்க்கிறார்கள். அவர்கள் அதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். இஸ்ரவேல் சபையார் காரிருளைப் பார்த்து மிகவும் பயப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் மேகத்தையோ, காரிருளையோ எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும், ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில், ஆச்சரியத்தோடும், பயத்தோடும் நிற்கிறார்கள். அப்போது சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு சமாதானம் சொல்லுகிறார். அவர்களை சாந்தப்படுத்துகிறார். அவர்களை அமைதிப்படுத்துகிறார். தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பயத்திலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்கு, சாலொமோன் அவர்களுக்கு உதவிசெய்கிறார். சாலொமோனுடைய உபதேச வார்த்தைகள் இஸ்ரவேல் சபையாருக்கு ஆசீர்வாதமாயிருக்கிறது.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியும், அது இப்போது கட்டப்பட்டு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருப்பது பற்றியும் விரிவாகப் பேசுகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றி பேசுவதற்கு முன்பாக கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்னும் ஸ்தோத்திர வார்த்தையோடு சாலொமோன் தன்னுடைய உபதேச வார்த்தைகளை ஆரம்பிக்கிறார்.

கர்த்தருடைய கிருபையுள்ள நல்ல கரம் இதுவரையிலும் சாலொமோனோடு கூடயிருந்திருக்கிறது. தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்ட நாள் முதல், தேவாலயம் பிரதிஷ்டைபண்ணப்படுகிற இந்த நாள் வரையிலும் கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், வழிநடத்துதலும் சாலொமோனுக்கு கிடைத்திருக்கிறது. சாலொமோன் கர்த்தருடைய உதவிகளையும், கிருபைகளையும் அங்கீகரித்து, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தரைத் துதிப்பதே சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்யப்போவதாக சொல்லியிருக்கும் வாக்குத்தத்தங்களையும் நினைவுகூர்ந்து, கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். தேவனாகிய கர்த்தர் நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். கர்த்தரைத் துதிப்பதே நமக்கு பெலன்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் பயத்தோடும் ஆச்சரியத்தோடும் நின்றுகொண்டிருக்கிறார்கள். மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதை பார்த்து, அவர்களுடைய இருதயங்களில் பயமும், திகிலும், ஆச்சரியமும் நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய இருதயங்களில் கர்த்தரைத் துதிக்கும் துதி நிரம்பியிருக்கவேண்டும். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கிறார். இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தரைத் துதிப்பதற்கு சாலொமோன் அவர்களை வழிநடத்துகிறார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். தன்னுடைய தகப்பனாராகிய தாவீதுக்கு, கர்த்தர் சொன்னதையும், செய்ததையும் சாலொமோன் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுகூருகிறார். "கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்" (1இராஜா 8:15) என்று கர்த்தர் தாவீதுக்குச் செய்த நன்மைகளை சாலொமோன் நினைவுகூருகிறார்.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை, தம்முடைய வாயினால் சொல்லுகிறார். தாம் சொன்ன வார்த்தைகளை கர்த்தர் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றுகிறார். கர்த்தர் நமக்கு செய்வதையும், அவர் நமக்கு சொல்லுவதையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு காண்பிக்கும் கிருபைகளையும் இரக்கங்களையும் நாம் புரிந்துகொள்வோம்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். சாலொமோன் இப்போது கர்த்தருடைய ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்ட சரித்திரத்தை சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு தெளிவுபடுத்துகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும் கர்த்தருக்கு ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

தம்முடைய நாமம் விளங்கும்படி ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாகவும் தீர்மானமாகவும் இருக்கிறது. தம்முடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் ஒரு பட்டணத்தையோ, அல்லது ஒரு தேசத்தையோ அல்லது ஒரு கோத்திரத்தையோ தேர்ந்தெடுக்கவில்லை. கர்த்தர் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகயிருக்கிற தாவீதை தேர்ந்தெடுத்தார். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு இந்த சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

"நான் என் ஜனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள ஒரு பட்டணத்தையும் தெரிந்துகொள்ளாமல் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிகாரியாயிருக்கும்படி தாவீதையே தெரிந்துகொண்டேன்" (1இராஜா 8:16) என்று கர்த்தர் சொன்னார். இவ்வாறு, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவும், கர்த்தருடைய நாமம் விளங்கும்படி இந்த ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. இதை சாலொமோன் ஜனங்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருக்கு இப்படிப்பட்ட ஆலயம் கட்டவேண்டும் என்று விரும்பினார். தம்முடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் தாவீதைத் தெரிந்துகொண்டதினால், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் தாவீதின் இருதயத்தில் இருந்தது" (1இராஜா 8:17). கர்த்தரின் நாமத்திற்கு ஆலயம் கட்டவேண்டும் என்பது தாவீதின் சுயவிருப்பமல்ல. இது கர்த்தரால் உண்டான விருப்பம். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு இந்த சத்தியத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் விருப்பம் தாவீதின் இருதயத்திலிருந்தது. ஆனால் கர்த்தருடைய ஆலயத்தை தாவீது கட்டகூடாது என்பதும், தாவீதின் குமாரன் அந்த ஆலயத்தை கட்டுவான் என்பதும் கர்த்தருடைய சித்தமாயிற்று. சாலொமோன் இந்த சத்தியத்தையும் இஸ்ரவேல் சபையாருக்கு தெளிவுபடுத்துகிறார்.

ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: "என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" (1இராஜா 8:18,19) என்று கர்த்தர் சொன்னதை சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதின் மனதிலிருந்த விருப்பத்தை அங்கீகரிக்கிறார். கர்த்தருடைய நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் தாவீதின் மனதிலே இருந்தது நல்ல காரியம் தான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம், சாலொமோன் இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு கட்டின ஆலயம் அவருடைய சொந்த விருப்பமல்ல. இந்த யோசனை ஆரம்பத்தில் சாலொமோனுடைய மனதிலே உண்டாகவில்லை. சாலொமோன் தன்னுடைய நாமம் விளங்கும்படியாகவோ அல்லது தன்னுடைய நாமமகிமைக்காகவோ இந்த ஆலயத்தைக் கட்டவில்லை. சாலொமோன் இந்த ஆலயத்தைக் கட்டினாலும், இந்த ஆலயத்தை, தாவீது ராஜாவே சாலொமோனுக்கு திட்டமிட்டுக்கொடுத்தார். கர்த்தரே தம்முடைய ஆலயத்தின் திட்டத்தை தாவீதுக்கு கொடுத்தார். கர்த்தருடைய ஆலயம் மனுஷருடைய திட்டத்தினால் கட்டப்படவில்லை. இது தேவனுடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாகவும், சித்தத்தின் பிரகாரமாகவும் கட்டப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாக, தான் இந்த ஆலயத்தைக் கட்டியிருப்பதாக சாலொமோன் இஸ்ரவேல் சபையாருக்கு சொல்லுகிறார். சாலொமோன் இஸ்ரவேல் சபையார் எல்லோரையும் நோக்கி, "இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார்; கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன். கர்த்தர் நம்முடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, அவர்களோடே பண்ணின உடன்படிக்கை இருக்கிற பெட்டிக்காக அதிலே ஒரு ஸ்தானத்தை உண்டாக்கினேன்" (1இராஜா 8:20,21) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் தன்னுடைய நாமத்திற்காக இந்த ஆலயத்தைக் கட்டவில்லை. அவர் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். அவர் இந்த ஆலயத்தில் ஒரு பரிசுத்த ஸ்தானத்தை உண்டாக்கி, அதிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை வைத்திருக்கிறார். நாம் கர்த்தருக்காக அதிகமாய் ஊழியம் செய்யும்போது, அந்த ஊழியத்தை கர்த்தருடைய நாமமகிமைக்காகவே செய்கிறோம் என்னும் உணர்வு நம்முடைய இருதயத்தில் காணப்படவேண்டும். கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது நம்முடைய மனதில் திருப்தி உண்டாகும். கர்த்தர் நமக்கு போதுமானவராயிருப்பார். கர்த்தருடைய ஊழியத்தை நம்முடைய நாமத்திற்காக செய்யும்போது, நம்முடைய மனதில் திருப்தி உண்டாகாது.

சாலொமோன் தேவாலயத்தை கர்த்தருடைய சமுகத்திலே பிரதிஷ்டைபண்ணுகிறார். தேவாலயத்தையும், தேவாலயத்திலுள்ள சகல பணிமுட்டுக்களையும் கர்த்தருடைய பாதபடியில் சமர்ப்பிக்கிறார். கர்த்தரும் சாலொமோன் செய்த பிரதிஷ்டையை அங்கீகரிக்கிறார். தம்முடைய நாமத்திற்காக கட்டப்பட்டிருக்கும் இந்த ஆலயத்தில் கர்த்தர் வந்து வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. சாலொமோன் ஆசாரியருக்கும், இஸ்ரவேல் சபையார் அனைவருக்கும் கர்த்தருடைய வாக்குத்தத்தையும், கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை இன்றைய தினம் நிறைவேற்றியதையும் தெளிவாக எடுத்து சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணின பின்பு, அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஆலயம் அவருக்கு பலிகளை செலுத்தும் ஆலயம் மாத்திரமல்ல. கர்த்தருடைய ஆலயம் எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடாயிருக்கவேண்டும் என்பது சாலொமோனின் விருப்பம். சாலொமோன் கட்டின தேவாலயம் சுவிசேஷ சபைக்கு அடையாளமாயிருக்கிறது.

"நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கீகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்" (ஏசா 56:7).

"என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்" (மத் 21:13).

கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும், இஸ்ரவேல் சபையார் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கும் சாலொமோன் ஆசாரியர்களையோ, தீர்க்கதரிசிகளையோ நியமிக்கவில்லை. சாலொமோனே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவரே இஸ்ரவேல் சபையாரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே, இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோனுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண தெரிந்திருக்கிறது. சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிற சாலொமோன், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது மிகவும் நல்ல காரியம். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு ஏற்கெனவே கற்றுக்கொண்டிருக்கிறார். அதற்கு அடையாளமாக சாலொமோன் இப்போது வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

ஒவ்வொரு சூழ்நிலையிலும் கர்த்தரிடத்தில் எப்படி ஜெபம்பண்ணவேண்டும் என்பதும் சாலொமோனுக்கு தெரிந்திருக்கிறது. சாலொமோனுடைய கையில் எழுதிக் கொடுக்கப்பட்ட ஜெபவார்த்தைகள் இல்லை. ஜெபத்தின் ஆவியானவர் சாலொமோனின் இருதயத்தில் வாசம்பண்ணுகிறார். ஆவியானவர் சாலொமோனை ஏவுகிறார். அவரை வழிநடத்துகிறார். சாலொமோன் வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் தன்னுடைய அரமனையில், சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம் பண்ணவேண்டியவர். ஆசரிப்புக்கூடாரத்திலும், ஆலயத்திலும் ஆராதனை செய்வது, ஜெபம்பண்ணுவது, ஜனங்களை ஆசீர்வதிப்பது ஆகியவையெல்லாம் ஆசாரியரின் ஊழியங்கள். சாலொமோனோ இப்போது கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் எதிராக நிற்கிறார். வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜவாயிருக்கிற சாலொமோன், ஒரு ஆசாரியரைப்போல, இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று, தன் கைகளை வானத்திற்கு நேராய் விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். இதற்காக அவர் வெட்கப்படவில்லை.

கர்த்தர் சாலொமோனை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவரை அதிகமாய் உயர்த்தியிருக்கிறார். சாலொமோனுக்கு ஏராளமான மேன்மைகளும், மகிமைகளும் உண்டாயிருக்கிறது. அவர் தந்தத்தினால் செய்யப்பட்ட சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து ராஜாசனம் செய்வது அவருக்கு கிடைத்திருக்கிற பெரிய மகிமை. இந்த மகிமையைவிட, கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் எதிராக நின்று, வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது, சாலொமோனுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய மகிமையாகும்.

சாலொமோனைப்போலவே நாம் உலகப்பிரகாரமாக உயர்ந்த அந்தஸ்துக்களிலிருந்தாலும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, அவரிடத்தில் நம்முடைய துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும். கர்த்தரிடத்தில் நம்முடைய ஜெபவிண்ணப்பங்களை சொல்லுவது, நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இதுவே நமக்கு உன்னதமான ஆசீர்வாதம்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணுகிறார். "சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடித்தபின்பு, அவன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்தான்" (1இராஜா 8:54).

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணுகிறார். முழங்கால் படியிடுவது நம்முடைய பக்திக்கும், மனத்தாழ்மைக்கும், கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணுவதற்கும் அடையாளம். "சாலொமோன் முழங்கால் பட்டியிட்டிருந்ததை விட்டெழுந்தார்" (1இராஜா 8:54) என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"சாலொமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான ஒரு வெண்கலப் பிரசங்கபீடத்தை உண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான்; அதின்மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து" (2நாளா 6:13) என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு" (எபே 3:15) என்று அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார்.

கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, முழங்கால்படியிட்டு ஜெபம்பண்ணுவதினால், நம்முடைய முழங்கால்கள் தேய்ந்துபோகாது. சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக ஜெபம்பண்ணியபோது, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஜெபம்பண்ணுகிறார் (1இராஜா 8:54). தன்னுடைய ஜெபம் முடியும் வரையிலும், சாலொமோன் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்திருக்கிறார். கர்த்தர் பரலோகப் பிதாவாகயிருக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, பரலோகப் பிதாவினிடத்தில் ஆர்வமாயும், எதிர்பார்ப்போடும் ஜெபம்பண்ணுகிறார்.

கைகளை விரித்து ஜெபம்பண்ணுவது, நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக விரிவாய்த் திறப்பதற்கு அடையாளம். நாம் கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய இருதயங்களை சமர்ப்பித்து ஜெபம்பண்ணுகிறோம். நம்முடைய இரண்டு கைகளையும் வானத்திற்கு நேராக விரிக்கும்போது, கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கிறோம்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் நீண்ட ஜெபம்பண்ணுகிறார். சாலொமோனுடைய ஜெபத்தின் சுருக்கம் மாத்திரமே இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மற்றவர்கள் தன்னை பார்க்கவேண்டும் என்பதற்காக சாலொமோன் நீண்ட ஜெபம்பண்ணவில்லை. கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். சாலொமோனுக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டிய காரியங்கள் ஏராளமாயிருக்கிறது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண ஆரம்பிக்கும்போது, அவர் கர்த்தரை மகிமைப்படுத்தி துதிக்கிறார். நம்முடைய ஜெபத்தின் ஆரம்ப வார்த்தைகள் கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளாயிருக்கவேண்டும். சாலொமோன் வானத்திற்கு நேராக தன் கைகளை விரித்து, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை" (1இராஜா 8:23) என்று சொல்லி கர்த்தரைத் துதிக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நல்ல எஜமானரதாயிருக்கிறார். அவர் கிருபையும் இரக்கமுமுள்ள எஜமான். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கும்போது, "தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்" (1இராஜா 8:23) என்று சொல்லி துதிக்கிறார்.

நம்முடைய முழுஇருதயத்தோடு நாம் கர்த்தருக்கு முன்பாக நடக்கும்போது மாத்திரமே, கர்த்தர் நமக்கு தம்முடைய உடன்படிக்கையையும் கிருபையையும் காத்து வருவார். கர்த்தருடைய ஆசீர்வாதம் நிபந்தனையோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முழுஇருதயத்தோடு நாம் கர்த்தருக்கு முன்பாக நடக்கவில்லையென்றால், நமக்கு கர்த்தருடைய உடன்படிக்கையும் கிருபையும் வாக்குப்பண்ணப்படவில்லை.

கர்த்தர் இதுவரையிலும் தாவீதின் குடும்பத்தாரை ஆசீர்வதித்து வந்திருக்கிறார். சாலொமோன் கர்த்தரைத் துதிக்கும்போது, "தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்" (1இராஜா 8:24) என்று சொல்லி துதிக்கிறார்.

சாலொமோனுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது. கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிற கிருபையும் இரக்கமும் தனக்கு கிடைக்கவேண்டுமென்று சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் நிறைவேற்றவேண்டுமென்று சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும். இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக" (1இராஜா 8:25,26) என்று ஜெபம்பண்ணுகிறார்.

வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை இதுவரையிலும் நிறைவேற்றியிருக்கிறார். அவர் இனிமேலும் நிறைவேற்றுவார்.

"நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2கொரி 1:9,10).

கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை, சாலொமோன் இங்கு தன்னுடைய ஜெபத்தில் பயன்படுத்துகிறார். "இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை" (1இராஜா 8:25) என்று கர்த்தர் தாவீதுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை இங்கு பயன்படுத்துகிறார். சாலொமோன் இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, இந்த வாக்குத்தத்தம் நிறைவேற, கர்த்தர் தாவீதுக்கு சொன்ன நிபந்தனைகளையும், சாலொமோன் தன்னுடைய ஜெபத்தில் சொல்லுகிறார். "நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் எனக்கு முன்பாக நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால்" (1இராஜா 8:25) என்பது கர்த்தர் தாவீதுக்கு சொன்ன நிபந்தனை.

கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நமக்கு நிபந்தனைகளோடு சொல்லும்போது, நாம் அந்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய வாக்குத்தத்தமான வார்த்தைகள் நமக்கு நிறைவேற வாய்ப்பில்லை.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். சாலொமோனுடைய வார்த்தைகளில் பணிவும் தாழ்மையும் இருக்கிறது. சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "இஸ்ரவேலின் தேவனே, என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்யென்று விளங்குவதாக" (1இராஜா 8:26) என்று சொல்லி பணிவோடும் மனத்தாழ்மையோடும் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கட்டின தேவாலயத்தை கர்த்தர் அங்கீகரித்திருக்கிறார். அவர் தம்முடைய கிருபையினால் இந்த தேவாலயத்தில் வாசம்பண்ணுகிறார். மனுஷர் கட்டியிருக்கிற ஆலயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுவது, அவருடைய மகாபெரிய கிருபை. சாலொமோன் இந்த சத்தியத்தைச் சொல்லும்போது, "தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ?" (1இராஜா 8:27) என்று ஆச்சரியத்தோடு கேட்கிறார்.

கர்த்தர் உயர்ந்தவர். அவர் உன்னதமானவர். அவர் மகாபரிசுத்தர். கர்த்தர் மகிமையும் மாட்சிமையும் நிறைந்தவர். சர்வவல்லமையுள்ள தேவன், பூமியிலே வாசம்பண்ணுவாரோ என்னும் ஆச்சரியம் சாலொமோனுடைய இருதயத்தில் உண்டாயிற்று. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர், இந்தப் பூமியிலே வாசம்பண்ணுவார் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது.

ஒருவேளை கர்த்தர் இந்தப் பூமியிலே வாசம்பண்ணவேண்டுமென்று சித்தங்கொண்டிருந்தாலும், அவருக்கேற்ற ஆலயத்தை யாராலும் கட்டமுடியாது. "இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே" என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோன் கட்டின தேவாலயத்தை, கர்த்தருடைய மகிமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது மிகவும் சிறிய ஆலயம். ஆகையினால் சாலொமோன் "நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" என்று கேட்கிறார். கர்த்தர் வாசம்பண்ணுவதற்கும், அவருடைய மகிமை வெளிப்படுவதற்கும் தான் கட்டின தேவாலயம் மிகவும் சிறியது என்று சாலொமோன் மனத்தாழ்மையோடு சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் பொதுவான வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார். கர்த்தர் தன்னுடைய விண்ணப்பத்திற்கும் மன்றாட்டுக்கும் செவிகொடுக்க வேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் முதலாவதாக ஜெபிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது "என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்" (1இராஜா 8:28) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் மிகுந்த மனத்தாழ்மையோடு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அவர் கருத்தாய் ஜெபிக்கிறார். விசுவாசத்தோடு ஜெபிக்கிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னை சமஸ்த இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி பெருமைப்படவில்லை. சாலொமோன் கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன்" என்றும், "உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்" என்றும் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். சாலொமோன் இந்த ஸ்தலத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கும், இஸ்ரவேல் ஜனத்தார் இந்த ஸ்தலத்திலே ஏறெடுக்கும் விண்ணப்பங்களுக்கும் கர்த்தர் செவிகொடுக்கவேண்டுமென்று சாலொமோன் பொதுவாக ஜெபிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின் மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக. உமது அடியானும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பஞ் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபத்தைக் கேட்டருளும்" (1இராஜா 8:29,30) என்று சொல்லி ஜெபிக்கிறார்.

பரலோகமே கர்த்தருடைய வாசஸ்தலம். சாலொமோன் கட்டின தேவாலயம் இந்தப் பூமியிலிருக்கிறது. ஆனாலும் பூமியிலிருக்கிற இந்த தேவாலயத்திலிருந்து ஜெபம்பண்ணும்போது, "பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதை நீர் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக" (1இராஜா 8:30) என்று சொல்லி சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

தேவாலயத்திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். இஸ்ரவேல் ஜனத்தார் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் கூடிவந்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவார்கள். கர்த்தர் ஆசாரியரின் விண்ணப்பத்தைக் கேட்டருளுவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாருடைய விண்ணப்பங்களையும் கேட்டருளவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

ஆசாரியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆவிக்குரிய காரியங்களில் உதவிசெய்கிறார்கள். ஆசாரியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்காக கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்கள். ஜனங்களுடைய விசுவாசம் பலவீனமாயிருக்கும்போது, ஆசாரியர்கள் அந்தப் பலவீனத்தை நீக்கி, அவர்களுடைய விசுவாசம் பலப்படவும், ஸ்திரப்படவும் உதவிசெய்கிறார்கள்.

இந்த ஆலயத்தின்மேல் கர்த்தருடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருக்கும். இந்த ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா விண்ணப்பங்களையும், பரலோகத்திலிருக்கிற தேவன் செவிகொடுத்து கேட்பார். கர்த்தருடைய நாமத்திற்காக கட்டப்பட்டிருக்கிற தேவாலயம் ஜனங்களுக்கு ஆறுதலாயும், அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திப்பதற்கு உதவியாயும் இருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பரிந்து பேசுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மெய்யான ஆலயமாயிருக்கிறார். சாலொமோன் கட்டின தேவாலயம் கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறது. இது இயேசுகிறிஸ்துவின் பரிந்து பேசும் ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய மனவிருப்பத்தின் பிரகாரமாக எருசலேமைத் தெரிந்துகொண்டார். அவர் இஸ்ரவேலின் அதிபதியாக தாவீதைத் தெரிந்துகொண்டார்.

கர்த்தர் தம்முடைய மனவிருப்பத்தைப்பற்றிச் சொல்லும்போது "நான் என் ஜனத்தை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு, என் நாமம் விளங்கும்படி, ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று நான் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள வேறே யாதொரு பட்டணத்தைத் தெரிந்துகொள்ளாமலும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கும்படி வேறே ஒருவரைத் தெரிந்துகொள்ளாமலும், என் நாமம் விளங்கும் ஸ்தானமாக எருசலேமையும், என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கத் தாவீதையும் தெரிந்துகொண்டேன்" (2நாளா 6:5,6) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதைத் தெரிந்து கொண்டதைப் போல சவுலைத் தெரிந்து கொள்ளவில்லை. சவுலின் விஷயத்தில் கர்த்தர் ஜனங்களுடைய தெரிந்தெடுப்பை மாற்றிப் போடுகிறார். மற்ற தேசங்களைப்போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டுமென்று இஸ்ரவேல் ஜனங்கள் நினைத்தார்கள். அவர்கள் ராஜா வேண்டுமென்று சொன்னது கர்த்தருக்குப் பிரியமான காரியமல்ல. (1சாமு 8:5-22). ஆனாலும், அந்தச் சமயத்தில் கர்த்தர் அவர்களுடைய வேண்டுகோளுக்குச் செவிகொடுத்தார். (1சாமு 9-10).

தாவீதின் மனதிலே தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் இருந்தது. ஆனால் கர்த்தர் தாவீதின் மனவிருப்பத்தை நிறைவேற்றவில்லை.

கர்த்தர் தாவீதை நோக்கி: "என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்ல காரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய்; உன் கர்ப்பப்பிறப்பாகிய உன்குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" (2நாளா 6:8,9) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தை கட்டுகிற வேலை பொதுவாக இதுபோலவே நடைபெறுகிறது. ஒருவர் விதைக்கிறார். வேறொருவர் அதை அறுவடை செய்கிறார். ஒரு சந்ததியார் கர்த்தருடைய ஊழியத்தை ஆரம்பிக்கிறார்கள். மற்றொரு சந்ததியார் அந்த ஊழியத்தை செய்து முடிக்கிறார்கள்.

"விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்" (யோவா 4:37,38).

சாலொமோன் கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாகவே இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தர் தாவீதை நோக்கி, "உன் கர்ப்பப்பிறப்பாகிய உன்குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான்" (2நாளா 6:9) என்று சொன்னார். கர்த்தர் தாம் சொல்லிய தமது வார்த்தையை இப்போது நிறைவேற்றியிருக்கிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு மகிமையான ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். சாலொமோன் தான் கட்டின ஆலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரவேலுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக்கட்டினேன்" (2நாளா 6:10) என்று சொல்லுகிறார்.

சாலொமோனுடைய ஜெபம்
2நாளா 6:12-42

2நாளா 6:12. கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று தன் கைகளை விரித்தான்.

2நாளா 6:13. சாலொமோன் ஐந்து முழ நீளமும், ஐந்து முழ அகலமும், மூன்று முழ உயரமுமான ஒரு வெண்கலப் பிரசங்கபீடத்தை உண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான்; அதின்மேல் அவன் நின்று, இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து:

2நாளா 6:14. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, வானத்திலும் பூமியிலும் உமக்கு ஒப்பான தேவனில்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்.

2நாளா 6:15. தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியானுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; உம்முடைய வாக்கினால் அதைச் சொன்னீர்; உம்முடைய கரத்தினால் அதை இந்நாளில் இருக்கிறபடி நிறைவேற்றினீர்.

2நாளா 6:16. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியானை நோக்கி: நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் என் நியாயப்பிரமாணத்தில் நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக உனக்கு இல்லாமற்போவதில்லை என்று சொன்னதை இப்பொழுது அவனுக்கு நிறைவேற்றும்.

2நாளா 6:17. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியானாகிய தாவீதுக்குச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய் என்று விளங்குவதாக.

2நாளா 6:18. தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?

2நாளா 6:19. என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தையும் மன்றாட்டையும் கேட்டு, உமது அடியானுடைய விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும்.

2நாளா 6:20. உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்க, என் நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும்பகலும் திறந்திருப்பதாக.

2நாளா 6:21. உமது அடியேனும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பம் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபங்களைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே நீர் அதைக் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக.

2நாளா 6:22. ஒருவன் தன் அயலானுக்குக் குற்றம் செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச் சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன்பாக வந்தால்,

2நாளா 6:23. அப்பொழுது பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனுக்கு நீதியைச் சரிக்கட்டவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவுந்தக்கதாய், உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக.

2நாளா 6:24. உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்திலே உம்முடைய சந்நிதியில் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால்,

2நாளா 6:25. பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக.

2நாளா 6:26. அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால், வானம் அடைபட்டு மழை பெய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தேவரீர் தங்களைக் கிலேசப்படுத்துகையில், தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால்,

2நாளா 6:27. பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உம்முடைய தேசத்தில் மழைபெய்யக் கட்டளையிடுவீராக.

2நாளா 6:28. தேசத்திலே பஞ்சம் உண்டாகிறபோதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும், அவர்களுடைய சத்துருக்கள் அவர்கள் வாசஞ்செய்கிற தேசத்திலே அவர்களை முற்றிக்கை போடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வந்திருக்கிறபோதும்,

2நாளா 6:29. எந்த மனுஷனானாலும், இஸ்ரவேலாகிய உம்முடைய ஜனத்தில் எவனானாலும், தன் தன் வாதையையும் வியாகுலத்தையும் உணர்ந்து, இந்த ஆலயத்திற்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும்,

2நாளா 6:30. உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

2நாளா 6:31. தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்பட்டு, உம்முடைய வழிகளில் நடக்கும்படிக்கு தேவரீர் ஒருவரே மனுப்புத்திரரின் இருதயத்தை அறிந்தவரானதால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய எல்லா வழிகளுக்கும் தக்கதாய்ச் செய்து பலன் அளிப்பீராக.

2நாளா 6:32. உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமும், உம்முடைய பலத்த கரத்தினிமித்தமும், ஓங்கிய உம்முடைய புயத்தினிமித்தமும், தூரதேசங்களிலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக நின்று விண்ணப்பம்பண்ணினால்,

2நாளா 6:33. உமது வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல, உம்முடைய நாமத்தை அறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்த ஆலயத்திற்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியே தேவரீர் செய்வீராக.

2நாளா 6:34. நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும்போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்துக்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக விண்ணப்பம்பண்ணினால்,

2நாளா 6:35. பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக.

2நாளா 6:36. பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால் அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்கள் சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுக்கிறதினால், அவர்களைச் சிறைபிடிக்கிறவர்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோயிருக்கையில்,

2நாளா 6:37. அவர்கள் சிறைப்பட்டுப்போன தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கிக் கெஞ்சி,

2நாளா 6:38. தாங்கள் சிறைகளாகக் கொண்டு போகப்பட்ட தங்கள் சிறையிருப்பான தேசத்திலே, தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடத்தில் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும், தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணினால்,

2நாளா 6:39. உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் ஜெபங்களையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த உம்முடைய ஜனத்திற்கு மன்னித்தருளும்.

2நாளா 6:40. இப்போதும் என் தேவனே, இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் விண்ணப்பத்திற்கு உம்முடைய கண்கள் திறந்தவைகளும், உம்முடைய செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருப்பதாக.

2நாளா 6:41. தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய தாபர ஸ்தலத்திற்கு தேவரீர் உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும்; தேவனாகிய கர்த்தாவே, உமது ஆசாரியர் இரட்சிப்பைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையிலே மகிழ்வார்களாக.

2நாளா 6:42. தேவனாகிய கர்த்தாவே, நீர் அபிஷேகம்பண்ணினவனின் முகத்தைப் புறக்கணியாமல், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம்பண்ணின கிருபைகளை நினைத்தருளும் என்றான்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை, கர்த்தருடைய நாமமகிமைக்காக பிரதிஷ்டைபண்ணுகிறார். இஸ்ரவேல் சபையார் கர்த்தருடைய பலிபீடத்திலே ஏராளமான ஆடுமாடுகளை பலியிடுகிறார்கள். லேவியர்கள் கீதவாத்தியங்களை தொனிக்கப்பண்ணி கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். அப்போது கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று.

சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று தன் கைகளை விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் *(2நாளா 6:12)*. சாலொமோன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் பிதாவுக்கும் நமக்கும் பிரதான மத்தியஸ்தராயிருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நம்முடைய எல்லா ஜெபங்களையும் ஏறெடுக்கிறோம்.

கர்த்தருடைய பலிபீடம் வெளிப்பிராகாரத்தில் இருக்கும் வெண்கல பலிபீடமாகும். ஜனங்கள் எல்லோரும் வெளிப்பிராகாரத்திலும், தேவாலயத்திற்கு வெளியே சுற்றிலுமுள்ள இடங்களிலும் இருக்கிறார்கள். வெண்கலப் பலிபீடத்திற்கு முன்பாகச் சாலொமோன் இஸ்ரவேல் சபையார் எல்லாருக்கும் எதிராக நின்று தன் கைகளை வானத்திற்கு நேராக விரிக்கிறார். ஆனால் அவர் கர்த்தரிடத்தில் ஜெபித்தபோதோ இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஜெபிக்கிறார் (2நாளா 6:12-13; 1இராஜா 8:34).

"வெண்கலப் பிரசங்கபீடம்" என்பது நாலரை அடி உயரமும், ஏழரை அடி சதுரமுமான பிரசங்க பீடமாகும். சாலொமோனைத் தவிர, வேறு எந்த ராஜாவும் இந்த வெண்கலப் பிரசங்கபீடத்தைத் தொடர்புபடுத்தி கூறப்படவில்லை.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபங்களையும், வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார். சாலொமோனுடைய ஜெபவார்த்தைகள் ஞானமுள்ள வார்த்தைகளாயிருக்கிறது. அந்த வார்த்தைகளில் ஆவிக்குரிய சத்தியங்கள் வெளிப்படுகிறது.

சாலொமோன் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, வானத்திலும் பூமியிலும் உமக்கு ஒப்பான தேவனில்லை; தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்துவருகிறீர்" (2நாளா 6:14) என்று சொல்லுகிறார். கர்த்தர் மாத்திரமே பரிபூரணமுள்ளவர். கர்த்தருடைய பரிபூரணத்தோடு வேறு யாருடைய பரிபூரணத்தையும் ஒப்பிட முடியாது.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுகிறவர். தாம் செய்கிறதை மாத்திரமே கர்த்தர் சொல்லுவார். தாம் சொன்னதை கர்த்தர் செய்வார். "தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியானுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; உம்முடைய வாக்கினால் அதைச் சொன்னீர்; உம்முடைய கரத்தினால் அதை இந்நாளில் இருக்கிறபடி நிறைவேற்றினீர்" (2நாளா 6:15) என்று சாலொமோன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவர்.

வானங்களும், வானாதி வானங்களும் கர்த்தரைக் கொள்ளாது. அவர் சர்வவியாபகமுள்ளவர். சாலொமோன் கர்த்தருக்கு பெரிய ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். அவர் எவ்வளவு பெரியதாக ஆலயத்தைக் கட்டினாலும் அது கர்த்தருடைய பார்வையில் சிறிதாகவே இருக்கும்.

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, தான் கட்டின ஆலயத்தைத் தாழ்த்துகிறார். கர்த்தரை உயர்த்துகிறார். "தேவன் மெய்யாக மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" (2நாளா 6:18) என்று சாலொமோன் சொல்லுகிறார். பரலோகமே கர்த்தருடைய வாசஸ்தலம்.

கர்த்தர் மனுஷருடைய இருதயத்தை அறிந்திருக்கிறார். அவனவனுடைய எல்லா வழிகளுக்கும் தக்கதாய் கர்த்தர் அவனவனுக்கு பலனளிப்பார் (2நாளா 6:31). கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமேயில்லை. மனுஷருடைய எல்லா நினைவுகளையும், நோக்கங்களையும், ஆசைகளையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். நம்முடைய இருதயத்தின் யோசனையை கர்த்தருக்கு தெரியாமல் நம்மால் மறைத்து வைக்க முடியாது.

எல்லா மனுஷரும் ஏகமாய்ப் பாவம் செய்து கெட்டுப்போயிருக்கிறார்கள். மனுஷர் தங்கள் பாவத்தினால் தேவமகிமையற்றவர்களாயிருக்கிறார்கள். மனுஷருடைய சுயமுயற்சியினால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படாது. கர்த்தரே தம்முடைய கிருபையினால் மனுக்குலத்தின் பாவங்களை மன்னிக்கிறார்.

சாலொமோன் மனுஷருடைய பாவசுபாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால் அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து......அவர்கள் சிறைப்பட்டுப்போன தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கிக் கெஞ்சி........ தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணினால்" (2நாளா 6:36-38) என்றும்,

"உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் ஜெபங்களையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த உம்முடைய ஜனத்திற்கு மன்னித்தருளும்" (2நாளா 6:39) என்றும் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

மனுஷர் மத்தியிலே பலவிதமான வழக்குகள் நடைபெறலாம். அவர்களுடைய வழக்குகள் நீதியாய் விசாரிக்கப்படவேண்டும். அவர்களுக்கு நியாயமான தீர்ப்பு கொடுக்கப்படவேண்டும். சாலொமோன் மனுஷருடைய வழக்கு விசாரணைகளைப்பற்றி கர்த்தரிடத்தில் இவ்வாறு விண்ணப்பம்பண்ணுகிறார்.

"ஒருவன் தன் அயலானுக்குக் குற்றம் செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச் சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன்பாக வந்தால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனுக்கு நீதியைச் சரிக்கட்டவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவுந்தக்கதாய், உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக" (2நாளா 6:22,23) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோகும் சூழ்நிலைகள் உண்டாகலாம். அவர்கள் இவ்வாறு முறிந்துபோவதற்கு அவர்களுடைய பாவங்களே காரணமாயிருக்கும். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியிலே விண்ணப்பத்தையும், வேண்டுதலையும் செய்யும்போது, கர்த்தர் தாமே அவர்களுடைய பாவத்தை மன்னித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணவேண்டுமென்று, சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

"உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்திலே உம்முடைய சந்நிதியில் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால், பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக" (2நாளா 6:24,25) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் வானத்தை அடைத்து, இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்வதை நிறுத்திவிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக விண்ணப்பம் செய்யும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, தேசத்தில் மழை பெய்ய கட்டளையிடவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

எல்லா மனுஷரும் ஏகமாய்ப் பாவம் செய்து கெட்டுப்போயிருக்கிறார்கள். மனுஷர் தங்கள் பாவத்தினால் தேவமகிமையற்றவர்களாயிருக்கிறார்கள். மனுஷருடைய சுயமுயற்சியினால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படாது. கர்த்தரே தம்முடைய கிருபையினால் மனுக்குலத்தின் பாவங்களை மன்னிக்கிறார்.

சாலொமோன் மனுஷருடைய பாவசுபாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால் அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து......அவர்கள் சிறைப்பட்டுப்போன தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கிக் கெஞ்சி........ தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணினால்" (2நாளா 6:36-38) என்றும்,

"உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் ஜெபங்களையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த உம்முடைய ஜனத்திற்கு மன்னித்தருளும்" (2நாளா 6:39) என்றும் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

மனுஷர் மத்தியிலே பலவிதமான வழக்குகள் நடைபெறலாம். அவர்களுடைய வழக்குகள் நீதியாய் விசாரிக்கப்படவேண்டும். அவர்களுக்கு நியாயமான தீர்ப்பு கொடுக்கப்படவேண்டும். சாலொமோன் மனுஷருடைய வழக்கு விசாரணைகளைப்பற்றி கர்த்தரிடத்தில் இவ்வாறு விண்ணப்பம்பண்ணுகிறார்.

"ஒருவன் தன் அயலானுக்குக் குற்றம் செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச் சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன்பாக வந்தால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனுக்கு நீதியைச் சரிக்கட்டவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவுந்தக்கதாய், உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக" (2நாளா 6:22,23) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோகும் சூழ்நிலைகள் உண்டாகலாம். அவர்கள் இவ்வாறு முறிந்துபோவதற்கு அவர்களுடைய பாவங்களே காரணமாயிருக்கும். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியிலே விண்ணப்பத்தையும், வேண்டுதலையும் செய்யும்போது, கர்த்தர் தாமே அவர்களுடைய பாவத்தை மன்னித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களைத் திரும்ப வரப்பண்ணவேண்டுமென்று, சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

"உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்திலே உம்முடைய சந்நிதியில் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால், பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக" (2நாளா 6:24,25) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் வானத்தை அடைத்து, இஸ்ரவேல் தேசத்தின்மீது மழை பெய்வதை நிறுத்திவிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக விண்ணப்பம் செய்யும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, தேசத்தில் மழை பெய்ய கட்டளையிடவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த ஸ்தலத்திற்கு நேராக விண்ணப்பஞ்செய்து, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, தங்களை தேவரீர் கிலேசப்படுத்துகையில் தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உமது அடியாரும் உமது ஜனமாகிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை மன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதித்து, தேவரீர் உமது ஜனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உமது தேசத்தில் மழை பெய்யக் கட்டளையிடுவீராக" (1இராஜா 8:35,36) என்று ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். அவர்கள் நடக்கவேண்டிய நல்வழியை அவர்களுக்குப் போதிப்பார். கர்த்தருடைய ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் அவர்களை வழிநடத்துவார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும், ஊழியக்காரர்களும் விசுவாசிகளுக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாவம் செய்யும்போது, அவர்களுக்கு மழை பெய்யாமல் பஞ்சம், கொள்ளைநோய் ஆகியவை உண்டாகும். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதமுண்டாகும். இஸ்ரவேல் ஜனத்தார் தண்டனைகளை அனுபவித்தாலும் நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு வழிவிலகிப்போயிருந்தாலும், அவர்கள் மறுபடியும் நல்வழியில் நடக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களைவிட்டு நீக்குகிறார். அவர்களுடைய வேண்டுதல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செவிகொடுக்கிறார். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சமுண்டாகலாம். கொள்ளைநோய் உண்டாகலாம். மனுஷருடைய பாவத்தினால் சாபமும், சாபத்தினால் சரீர வியாதியும், வியாதியினால் சரீர மரணமும் உண்டாகிறது. மனுஷர் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்து, மிகுந்த வேதனையோடு கர்த்தரிடத்தில் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தாமே, அவருடைய பாவங்களை கிருபையாய் மன்னிக்கவேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

"தேசத்திலே பஞ்சம் உண்டாகிறபோதும், கொள்ளைநோய் உண்டாகிற போதும், வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சைக்கிளி உண்டாகிறபோதும், அவர்களுடைய சத்துருக்கள் அவர்கள் வாசஞ்செய்கிற தேசத்திலே அவர்களை முற்றிக்கை போடுகிறபோதும், யாதொரு வாதையாகிலும் யாதொரு வியாதியாகிலும் வந்திருக்கிறபோதும், எந்த மனுஷனானாலும், இஸ்ரவேலாகிய உம்முடைய ஜனத்தில் எவனானாலும், தன் தன் வாதையையும் வியாகுலத்தையும் உணர்ந்து, இந்த ஆலயத்திற்கு நேராகத் தன் கைகளை விரித்துச் செய்யும் சகல விண்ணப்பத்தையும், சகல வேண்டுதலையும், உம்முடைய வாசஸ்தலமாகிய பரலோகத்திலிருக்கிற தேவரீர் கேட்டு மன்னிப்பீராக (2நாளா 6:28-30) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் ஞானமுள்ளவர். அவர் நீதிபரர். தேவரீர் ஒருவரே எல்லா மனுபுத்திரரின் இருதயத்தையும் அறிந்தவர். கர்த்தர் மனுஷருடைய வழிகளுக்குத்தக்கதாக அவர்களுக்கு பலனளிக்கிறவர். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய கிருபையினால் ஆளுகை செய்யவேண்டும் என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். சாலொமோன் கர்த்தருடைய கிருபைக்காகவும், அவருடைய இரக்கத்திற்காகவும் கெஞ்சி மன்றாடுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில், "தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்படும்படிக்கு தேவரீர் ஒருவரே எல்லா மனுப்புத்திரரின் இருதயத்தையும் அறிந்தவராதலால், நீர் அவனவன் இருதயத்தை அறிந்திருக்கிறபடியே, அவனவனுடைய வழிகளுக்குத்தக்கதாகச் செய்து, அவனவனுக்குப் பலன் அளிப்பீராக" (1இராஜா 8:40) என்று விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய விண்ணப்பத்தைக் கேட்டு அவர்களை மன்னிக்கவேண்டும். இதுவே சாலொமோனுடைய பிரதான ஜெபமாகும்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தர் தாமே இந்த ஆலயத்தை தம்முடைய வாசஸ்தலமாக அங்கீகரிக்கவேண்டும். "உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்க, என் நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும்பகலும் திறந்திருப்பதாக" (2நாளா 6:20) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஆலயம், அவருடைய பிள்ளைகளுக்கு ஜெபவீடாகயிருக்கிறது. கர்த்தருடைய ஜனம் அவருடைய ஆலயத்திலிருந்து ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தாமே அவர்களுடைய ஜெபங்களுக்கு பதில் கொடுப்பார்.

"உமது அடியேனும், இந்த ஸ்தலத்திலே விண்ணப்பம் செய்யப்போகிற உமது ஜனமாகிய இஸ்ரவேலும் பண்ணும் ஜெபங்களைக் கேட்டருளும்; பரலோகமாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே நீர் அதைக் கேட்பீராக, கேட்டு மன்னிப்பீராக" (2நாளா 6:21) என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

பரலோகமே கர்த்தருடைய வாசஸ்தலம். சாலொமோன் கர்த்தருக்கு கட்டியிருக்கிற ஆலயம் அவருடைய வாசஸ்தலமல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஜெபம்பண்ணினாலும், அவர்களுடைய ஜெபங்களுக்கு பரலோகத்திலிருந்தே பதில் வரும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போதுதான், கர்த்தர் நம்முடைய ஜெபங்களுக்கு செவிகொடுப்பார். அதற்கு பதில் கொடுப்பார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நியாயாதிபதியாகவும் இருக்கிறார். பரலோகத்தில் வாசம்பண்ணுகிற கர்த்தர் நம்முடைய ஜெபங்களையெல்லாம் கேட்டு துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணுவார். கர்த்தர் துன்மார்க்கனுக்கு நீதியைச் சரிக்கட்டவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவுந்தக்கதாய், தமது அடியாரை நியாயந்தீர்ப்பார் (2நாளா 6:23).

கர்த்தருடைய ஜனம் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் பாவத்தை விட்டு விலகி கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அவர்களுக்கு காண்பிப்பார் (2நாளா 6:25,27,38,39).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யப் போகும் காலத்தைச் சாலொமோன் இங்கு முன்னறிவிக்கிறார். (2நாளா 6:36-39). அவர்கள் அந்நிய தேசத்தில் சிறையிருப்பில் இருப்பார்கள். அங்கு அவர்கள் மனந்திரும்பி, எருசலேமிலுள்ள தேவாலயத்தை நோக்கி ஜெபம் பண்ணினால் கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, வாக்குத்தத்த தேசத்திற்கு அவர்களை அழைத்து வருவார். (2நாளா 6:37-39).

கர்த்தருடைய ஆலயத்திலே இஸ்ரவேல் சபையார் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுக்கு பதில் கொடுப்பதுபோலவே, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில், அந்நிய ஜாதியார், கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபங்களுக்கும் செவிகொடுத்து, அவர்களுக்கும் தம்முடைய கிருபையை வெளிப்படுத்தவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார் (2நாளா 6:33).

சாலொமோன் சிறைப்பட்டுப்போகிறவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஜனம் இஸ்ரவேல் தேசத்திலிருந்தாலும், அவர்கள் அந்நிய தேசத்திலே சிறைப்பட்டுப்போனாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு கிடைக்கவேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவத்தினிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். எல்லோரும் பாவம் செய்வார்கள் என்பதை சாலொமோன் அங்கீகரிக்கிறார். "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" என்று சாலொமோன் சொல்லுகிறார். சாலொமோனுக்கு தன்னைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. மனுஷருடைய இயல்பான சுபாவத்தைப்பற்றியும் தெரிந்திருக்கிறது.

மனுஷன் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் அவன்மீது வரும். கர்த்தர் அவனை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பார். மனுஷன் சுகமாயிருக்கும்போது கர்த்தரை மறக்கிறான். அவன் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது கர்த்தரை நினைக்கிறான். அவன் அந்நிய தேசத்திலே சிறைப்பட்டுப்போகும்போது, உணர்வடைந்து, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, அங்கேயிருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு வாய்ப்புள்ளது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் சிறைப்பட்டுப்போனவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே; ஆகையால், அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, தேவரீர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்கள் சத்துருக்கள் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அந்தச் சத்துருக்கள் அவர்களைத் தூரத்திலாகிலும் சமீபத்திலாகிலும் இருக்கிற தங்கள் தேசத்திற்குச் சிறைபிடித்துக்கொண்டுபோகும்போது, அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந்திரும்பி: நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமம்பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கி வேண்டுதல் செய்து" (1இராஜா 8:46,47) என்றும்,

"தங்களைச் சிறைபிடித்துக்கொண்ட தங்கள் சத்துருக்களின் தேசத்திலே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் உம்மிடத்தில் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும், தேவரீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்திற்கும், உம்முடைய நாமத்திற்கு நான் கட்டின இந்த ஆலயத்திற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது" (1இராஜா 8:48) என்றும் சாலொமோன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்தில் சிறைப்பட்டுப்போனாலும், அவர்கள் அங்கேயிருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் எங்கே உணர்வடைகிறார்களோ அங்கே மனந்திரும்புகிறார்கள். அவர்கள் எங்கே மனந்திரும்புகிறார்களோ அங்கே, "நாங்கள் பாவம் செய்து, அக்கிரமம் பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம்" என்று தங்கள் பாவங்களை அங்கீகரிக்கிறார்கள்.

சிறைப்பட்டுப்போன இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்திலிருந்தாலும் அவர்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் சிறையிருப்புக்குப்போன இஸ்ரவேலருக்காக ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உம்முடைய ஜனங்கள் உமக்கு விரோதமாய்ச் செய்த பாவத்தையும், அவர்கள் உம்முடைய கட்டளையை மீறிய அவர்கள் துரோகங்களையும் எல்லாம் மன்னித்து, அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிறவர்கள் அவர்களுக்கு இரங்கத்தக்கதான இரக்கத்தை அவர்களுக்குக் கிடைக்கப்பண்ணுவீராக" (1இராஜா 8:49,50) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சிறையிருப்புக்குப்போனவர்கள் எருசலேம் நகரத்திற்கும், கர்த்தருடைய ஆலயத்திற்கும் நேராக நோக்கி, கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் கர்த்தருடைய பரிசுத்த தேசம். எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். தேவாலயம் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலம். சிறையிருப்புக்குப்போன இஸ்ரவேல் தேசத்தார், அந்நிய தேசத்திலுள்ள விக்கிரகங்களை நோக்கி விண்ணப்பம்பண்ணாமல், தங்கள் சொந்த தேசத்திலுள்ள, கர்த்தருடைய ஆலயத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு பதிலளிப்பார்.

சிறையிருப்புக்குப்போனவர்கள் கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, அவர்கள் தமக்கு விரோதமாக செய்த பாவங்களை மன்னிப்பார். அவர்கள் தம்முடைய கட்டளையை மீறிய துரோகங்களை கர்த்தர் மன்னிப்பார். அவர்களை சிறைப்பிடித்துக் கொண்டுபோனவர்கள் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கச் செய்வார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனத்திற்கும் இடையே உள்ள ஐக்கியத்தைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயும் அவருடைய சுதந்தரமாயும் இருக்கிறார்கள். "அவர்கள் எகிப்தென்கிற இருப்புக் காளவாயின் நடுவிலிருந்து தேவரீர் புறப்படப்பண்ணின உம்முடைய ஜனமும் உம்முடைய சுதந்தரமுமாய் இருக்கிறார்களே" (1இராஜா 8:51) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயும், அவருடைய சுதந்தரமாயும் இருப்பதினால், கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்குமாறு சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் உம்மை நோக்கி வேண்டிக் கொள்வதின்படியெல்லாம் தேவரீர் அவர்களுக்குச் செய்யும்படி, உம்முடைய கண்கள் உமது அடியானின் வேண்டுதலுக்கும், உமது ஜனமாகிய இஸ்ரவேலின் வேண்டுதலுக்கும் திறந்திருப்பதாக" (1இராஜா 8:52) என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தமக்கு சுதந்தரமாகப் பிரித்தெடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். சாலொமோன் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு பூர்வகாலங்களில் செய்த நன்மைகளையெல்லாம் சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "கர்த்தராகிய ஆண்டவரே, நீர் எங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணும்போது, உம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்னபடியே, தேவரீர் பூமியின் சகல ஜனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே" (1இராஜா 8:53) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

சாலொமோன் இதுவரையிலும் இஸ்ரவேல் புத்திரருக்காக ஜெபம்பண்ணினார். இப்போது இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியாருக்காக ஜெபம்பண்ணுகிறார். இவர்கள் யூதமார்க்கத்தமைந்தவர்கள். அந்நிய ஜாதியார் இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்தவர்களல்ல. ஆனாலும் இவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய தேவாலயத்திற்கு வருகிறார்கள். தங்கள் தேசத்திலுள்ள விக்கிரகங்களை ஆராதிப்பது மதியீனமான காரியம் என்பதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

சாலொமோன் அந்நிய ஜாதியாரைப்பற்றி கர்த்தரிடத்தில், "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் ஜாதியல்லாத அந்நிய ஜாதியார் உமது மகத்துவமான நாமத்தையும், உமது பலத்த கரத்தையும், உமது ஓங்கிய புயத்தையும் கேள்விப்படுவார்களே" (1இராஜா 8:41) என்று சொல்லுகிறார்.

அந்நிய ஜாதியாரும் தூரதேசத்திலிருந்து கர்த்தருடைய ஆலயத்திற்கு வருவார்கள். இவர்களும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார்கள். கர்த்தர் இவர்களுடைய விண்ணப்பங்களுக்கும் செவிகொடுத்து, இவர்களையும் ஆசீர்வதிக்கவேண்டுமென்று சாலொமோன் இவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

"அப்படிக்கொத்த அந்நிய ஜாதியானும், உமது நாமத்தினிமித்தம் தூர தேசத்திலிருந்து வந்து, இந்த ஆலயத்துக்கு நேராக விண்ணப்பம்பண்ணினால், உமது வாசஸ்தலமாகிய பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அதைக் கேட்டு, பூமியின் ஜனங்களெல்லாரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும், நான் கட்டின இந்த ஆலயத்துக்கு உம்முடைய நாமம் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கும், உம்முடைய நாமத்தை அறியத்தக்கதாக, அந்த அந்நிய ஜாதியான் உம்மை நோக்கி வேண்டிக்கொள்வதின்படியெல்லாம் தேவரீர் செய்வீராக" (1இராஜா 8:42,43) என்று சாலொமோன் அந்நிய ஜாதியாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதுபோல, அந்நிய ஜாதியாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதுபோல, அந்நிய ஜனத்தாரும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கும், அந்நியருக்கும் ஒரேவிதமான பிரமாணம் இருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய பிரமாணம். "சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது" (யாத் 12:49).

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பும் பராமரிப்பும், இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கவேண்டும் என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணப்போகும்போது, தேவாலயத்தைவிட்டு தூரமான இடங்களில் பாளயமிறங்கியிருப்பார்கள். அங்கே அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தேவாலயத்தைவிட்டு தூரமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணும்போது, கர்த்தர் அவர்களுக்கு கிருபை காண்பிக்கவேண்டும் என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "நீர் உம்முடைய ஜனங்களை அனுப்பும் வழியிலே அவர்கள் தங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது, நீர் தெரிந்துகொண்ட இந்த நகரத்துக்கும், உம்முடைய நாமத்துக்கு நான் கட்டின இந்த ஆலயத்துக்கும் நேராகக் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக" (1இராஜா 8:44,45) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரை அந்நிய ஜாதியார் ஒடுக்குகிறார்கள். கர்த்தர் தாமே தம்முடைய ஜனத்தைப் பாதுகாத்து, அவர்களை ஒடுக்குகிறவர்களை நியாயந்தீர்க்கவேண்டுமென்று சாலொமோன் விண்ணப்பம்பண்ணுகிறார் (2நாளா 6:36).

சாலொமோன் கர்த்தரிடத்தில் பல காரியங்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போதும், மற்றவர்கள்மீது தங்களுக்கு வழக்குகள் உண்டாகும்போதும், அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக வந்து ஆணையிடுவது வழக்கம். தங்களிடத்தில் சத்தியமும் உண்மையும் இருக்கிறது என்பதை உறுதிபண்ணுவதற்காக மனுஷர் கர்த்தருடைய சமுகத்தில் ஆணையிடுகிறார்கள். கர்த்தர் மனுஷருடைய இருதயத்தை அறிந்து வைத்திருக்கிறார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமே இல்லை.

ஒரு சில வழக்குகளை மனுஷரால் விசாரித்து நியாயமான தீர்ப்பு கொடுக்க முடியாது. வழக்காடுகிற இருவர் பக்கத்திலும் நியாயமிருப்பதுபோல தெரியும். பொய்யை பேசுகிறவர்கள்கூட, அதை உண்மை போல பேசி மாய்மாலம் பண்ணுவார்கள். வழக்காடுகிறவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே வந்து, தங்களுடைய வழக்குகளை சொல்லும்போது, கர்த்தர் தாமே அவர்களை நியாயந்தீர்க்கவேண்டுமென்று, சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார்.

கடினமான வழக்குகளை விசாரிக்கும்போது, கிருபையின் ஆசனம், நியாயத்தின் ஆசனமாயிருக்கவேண்டுமென்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். சாலொமோன் கர்த்தரிடத்தில் "ஒருவன் தன் அயலானுக்குக் குற்றஞ்செய்திருக்கையில், இவன் அவனை ஆணையிடச் சொல்லும்போது, அந்த ஆணை இந்த ஆலயத்திலே உம்முடைய பலிபீடத்திற்கு முன் வந்தால், அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, துன்மார்க்கனுடைய நடக்கையை அவன் தலையின்மேல் சுமரப்பண்ணி, அவனைக் குற்றவாளியாகத் தீர்க்கவும், நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச் செய்து அவனை நீதிமானாக்கவும் தக்கதாய் உமது அடியாரை நியாயந்தீர்ப்பீராக" (1இராஜா 8:31,32) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு பாடுகளும், நெருக்கங்களும் வேதனைகளும் வரலாம். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேலர் கர்த்தருடைய ஜனங்களாக இருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, அவர்களுக்கும் பாடுகள் வருகிறது. அவர்கள் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோகிறார்கள். அந்நிய தேசத்திற்கு அடிமைப்பட்டுப்போகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கும்போது, அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு நேராக ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கவேண்டுமென்றும், கர்த்தர் தாமே அவர்களை மறுபடியும் இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பப்பண்ணவேண்டும் சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோனுக்கு பாடுகளும், நெருக்கங்களும் வரும்போது, அவர் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால் போதுமானது. கர்த்தர் தம்முடைய கிருபையினால் சாலொமோனுடைய பாவங்களை மன்னித்து, அவருக்கு ஏற்பட்டிருக்கும் பாடுகளையும் நெருக்கங்களையும் அவரை விட்டு நீக்கிப்போடுவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் பாடுகளும் நெருக்கங்களும் வரும்போது, அவர்கள் எல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களுக்காக, சாலொமோன் மனந்திரும்ப முடியாது. யார் பாவம் செய்தார்களோ, அவர்களே தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் "உம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினிமித்தம் சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய், உம்மிடத்திற்குத் திரும்பி, உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்த ஆலயத்துக்கு நேராக உம்மை நோக்கி விண்ணப்பத்தையும் வேண்டுதலையும் செய்தால், பரலோகத்தில் இருக்கிற தேவரீர் கேட்டு, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள் பிதாக்களுக்கு நீர் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவீராக" (1இராஜா 8:33,34) என்று ஜெபம்பண்ணுகிறார்.

சாலொமோன் தன்னுடைய ஜெபத்தின் முடிவிலே, "தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய தாபர ஸ்தலத்திற்கு தேவரீர் உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும்; தேவனாகிய கர்த்தாவே, உமது ஆசாரியர் இரட்சிப்பைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையிலே மகிழ்வார்களாக" (2நாளா 6:41) என்றும்,

"தேவனாகிய கர்த்தாவே, நீர் அபிஷேகம்பண்ணினவனின் முகத்தைப் புறக்கணியாமல், உம்முடைய தாசனாகிய தாவீதுக்கு வாக்குத்தத்தம்பண்ணின கிருபைகளை நினைத்தருளும்" (2நாளா 6:42) என்றும் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தர் தாமே தம்முடைய பரிசுத்த ஆலயத்திலே வாசம்பண்ணவேண்டும் என்றும், அவர் அங்கே தொடர்ந்து வாசமாயிருக்கவேண்டும் என்றும் சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். "தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய தாபரஸ்தலத்திற்கு தேவரீர் உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும்" என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார். உடன்படிக்கைப் பெட்டியோடு உடன்படிக்கையின் தேவனும் எழுந்தருளவேண்டும். உடன்படிக்கையில்லாமல் உடன்படிக்கையின் தேவன் எழுந்தருளமாட்டார்.

கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். கர்த்தர் தாமே அவர்களை இஸ்ரவேல் சபையார் எல்லோருக்கும் முன்பாக ஆசீர்வதிக்குமாறு சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். "தேவனாகிய கர்த்தாவே, உமது ஆசாரியர் இரட்சிப்பைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையிலே மகிழ்வார்களாக" என்று சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார்.

கர்த்தர் ஆசாரியரை இரட்சிப்பது மாத்திரமல்ல, அவர்கள் இஸ்ரவேல் சபையாரின் இரட்சிப்புக்கு, கர்த்தருடைய கருவிகளாகவும் பயன்படுவார்கள். அவர்கள் அநேகரை இரட்சிப்புக்குள் வழிநடத்துவார்கள்.

இஸ்ரவேல் சபையார், கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தரை ஆராதிக்கும்போது, அவருடைய பரிசுத்தவான்கள் எல்லோரும் நன்மையிலே மகிழவேண்டும் என்று சாலொமோன் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தரை ஆராதிக்கிறவர்களுக்கு மனதிலே சந்தோஷமும், ஆத்துமாவிலே திருப்தியும் உண்டாகவேண்டும்.

சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடிக்கிறார். அதன்பின்பு, சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்து, நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து, உரத்த சத்தத்தோடே ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். (1இராஜா 8:54,55).

சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, அவர் கர்த்தரை முதலாவதாக ஸ்தோத்திரம்பண்ணுகிறார். "தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஐசுவரியத்தையோ, சம்பத்தையோ, மகிமையையோ, கனத்தையோ, வல்லமையையோ, ஜெயத்தையோ ஆசீர்வாதமாக அருளவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இளைப்பாறுதலை ஆசீர்வாதமாக அருளுகிறார். எல்லா ஆசீர்வாதங்களையும்விட இளைப்பாறுதலே மேன்மையான ஆசீர்வாதம். இளைப்பாறுதல் இருந்தால் மாத்திரமே, ஐசுவரியத்தையும் சம்பத்தையும் அனுபவிக்க முடியும். ஆகையினால் இளைப்பாறுதலே உன்னதமானது. அதுவே உயர்ந்தது.

"கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு சொன்ன ஆசீர்வாதங்களைப்பற்றி சாலொமோன் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்" (1இராஜா 8:15).

"தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்" (1இராஜா 8:24).

கர்த்தர் மோசேயைக் கொண்டு சொன்ன ஆசீர்வாதமான வார்த்தைகளை சாலொமோன் இங்கே சொல்லுகிறார். வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, நான்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அவர்களுக்கு சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கும். 2. கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடு தங்கியிருக்கும். 3. சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின வார்த்தைகள், இரவும் பகலும் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும். 4. இஸ்ரவேல் புத்திரருடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாய் இருக்கவேண்டும்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருப்பாராக" (1இராஜா 8:57) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் சாலொமோன் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணுவதற்கு ஏகமாய்க் கூடிவந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இன்னும் சிறிது நேரத்தில் தங்கள் ஊர்களுக்கு திரும்பிப்போய்விடுவார்கள். கூட்டமாய்க் கூடியிருக்கிறவர்கள் கலைந்துவிடுவார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் அவர்களெல்லோரும் மறுபடியும் இதுபோல கூடிவருவதற்கு வாய்ப்பு வருமா என்பது தெரியவில்லை. ஆகையினால் சாலொமோன் அவர்களை தன்னுடைய ஆசீர்வாதமான வார்த்தைகளினால் ஆசீர்வதித்து அனுப்புகிறார். "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடு கூடயிருப்பாராக" என்று சொல்லி சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு கூடயிருப்பது அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாயும், ஆறுதலாயும் இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கலைந்துபோனாலும், அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனாலும், கர்த்தர் அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களோடு கூடவே இருப்பார். சாலொமோன் இந்த ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது, "கர்த்தர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல நம்மோடும் இருப்பார்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே பிரத்தியட்சமாய் வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் இன்று அவர்களோடு கூடயிருப்பதுபோல, அவர் எப்போதும் அவர்களோடு கூடயிருப்பார் என்று சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தேவாலயத்தின் பிரதிஷ்டையை முடித்து, தங்களுடைய வீடுகளுக்கு திரும்பிச் செல்லும்போது, கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களுக்கு முன்பாக செல்லும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கைவிடமாட்டார். கர்த்தர் அவர்களை நெகிழவிடமாட்டார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதித்து வாழ்த்தும்போது "கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடுகூட தங்கியிருக்கும்" என்று சொல்லி வாழ்த்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதற்கு தெய்வீக நோக்கமுள்ளது. இஸ்ரவேல் ஜனத்தாருடைய எல்லைகளை விஸ்தாரம்பண்ணுவதற்கோ அல்லது அவர்களுடைய ஐசுவரியங்களை திரளாய் விருத்தியடையச் செய்வதற்கோ கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கமாட்டார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் அவர்கள் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயம் கர்த்தரிடத்தில் சாய்ந்திருக்கவேண்டும். இதற்காகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார்.

சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் இந்த சத்தியத்தைச் சொல்லி, அவர்களை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார். "நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளுகிறதற்கும், நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக" (1இராஜா 8:58).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும், கர்த்தர் செவிகொடுத்து பதிலளிப்பார். சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுத்தார். அவர் தன்னுடைய விண்ணப்பங்களைப்பற்றிச் சொல்லும்போது, "நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் பதில் கொடுக்கிறார். சாலொமோனுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து, யாரெல்லாம் கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார்களோ, அவர்களெல்லோருக்கும் கர்த்தர் பதில் கொடுப்பார். கர்த்தருடைய ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபம் ஒருபோதும் வீணாய்ப்போகாது. நம்முடைய ஜெபவார்த்தைகளும், விண்ணப்பத்தின் வார்த்தைகளும், நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும். கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு இரவும் பகலும் ஓய்வில்லாமல் பதில் கொடுத்துக்கொண்டிருப்பார். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்களுக்கு, அவருடைய கிருபைகளும் இரக்கங்களும், ஆசீர்வாதங்களும் அநுகூலங்களும் தொடர்ந்து கொடுக்கப்படும்.

கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காக நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறார். "கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படியாக" (1இராஜா 8:59). கர்த்தர் தம்முடைய ஜனங்களின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஏறெடுத்த தன்னுடைய விண்ணப்ப வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தமது அடியானுடைய நியாயத்தையும், தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், அந்தந்த நாளில் நடக்கும் காரியத்துக்குத்தக்கதாய் விசாரிப்பதற்கும், நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின அவருடைய வார்த்தைகள், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும் என்பது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்துபேசும் ஜெபத்தில் நிறைவேறியிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து, பிதாவினிடத்தில் இரவும் பகலும் நமக்காக பரிந்துபேசுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எந்நாளும் கர்த்தருடைய கட்டளைகளில் நடக்கவேண்டும் என்று சாலொமோன் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய வாயினால் சொல்லுவதை, தம்முடைய கையினால் நிறைவேற்றுகிறவர். கர்த்தர் உண்மையுள்ளவராயிருப்பதுபோல, கர்த்தருடைய ஜனமும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

சாலொமோன் இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். இப்போது சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். "ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது" (1இராஜா 8:61) என்று சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உபதேச வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சாலொமோனும் அவரோடு கூடயிருக்கிற இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தில் சந்தோஷமாயிருக்கிறார்கள். சாலொமோன் ராஜாவும் அவரோடே இருக்கிற இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்துகிறார்கள் (1இராஜா 8:62).

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். சாலொமோனுடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களை உற்சாகப்படுத்துகிறது. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருப்பதைப் பார்த்து, சாலொமோனும், ஆசாரியர் அனைவரும், இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய சமுகத்திலே பயபக்தியாயிருக்கிறார்கள்.

சாலொமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிடுகிறார்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள் (1இராஜா 8:63).

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். சாலொமோன் கர்த்தருக்கு 22,000 மாடுகளையும், 1,20,000 ஆடுகளையும் பலியிட்டாலும், இஸ்ரவேல் தேசத்தில் இன்னும் ஏராளமான ஆடுகளும் மாடுகளும் இருக்கிறது. கர்த்தருக்கு ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டதினால், தேசத்தில் அவற்றின் எண்ணிக்கை குறைந்துபோகவில்லை. கர்த்தர் ஆடுகளையும் மாடுகளையும் பலுகிப் பெருகச் செய்கிறார். நாம் கர்த்தருக்காக காணிக்கைகளைச் செலுத்தும்போது, நம்முடைய ஐசுவரியம் குறைந்துபோகாது. கர்த்தர் நம்முடைய ஐசுவரித்தைப் பெருகப்பண்ணுவார்.

22,000 மாடுகளையும், 1,20,000 மாடுகளையும் ஒரே நாளில் பலியிட முடியாது. இவையெல்லாவற்றையும் பலியிடுவதற்கு பல நாட்களாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியில் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகை நாட்களில் சாலொமோனும், இஸ்ரவேல் சபையாரும் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடம் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ளமாட்டாமல் சிறிதாயிருக்கிறது. ஆனபடியினால், சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி, அன்றைய தினம் அங்கே சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்துகிறார் (1இராஜா 8:64).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணுகிறார். பிரதிஷ்டை பண்டிகையை தொடர்ந்து, சாலொமோன் கூடாரங்களின் பண்டிகையையும் ஆசரிக்கிறார். இவ்விரண்டு பண்டிகைகளும் பதினான்கு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது.

அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லைதொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்துவந்து, அவரோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள் (1இராஜா 8:65).

எட்டாம்நாளிலே சாலொமோன் ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்புகிறார்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விடுகிறார்கள் (1இராஜா 8:66).

இஸ்ரவேல் சபையார் தேவாலய பிரதிஷ்டை பண்டிகைக்கு மிகுந்த சந்தோஷத்தோடு வந்தார்கள். சந்தோஷத்தோடு தேவாலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணினார்கள். இப்போது மிகுந்த சந்தோஷத்தோடு தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகிறார்கள். கர்த்தருடைய ஆராதனையில் பங்குபெறுகிறவர்களுக்கு எப்போதும் சந்தோஷம் இருக்கும். அவர்கள் வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பார். கர்த்தரே நம்முடைய சந்தோஷம்.

7 அதிகாரம்

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும், மற்ற பலிகளையும் பட்சிக்கிறது (2நாளா 7:1). இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இதை கண்டபோது, தரையிலே முகங்குப்புற குனிந்து பணிந்து கர்த்தரைத் துதிக்கிறார்கள் (2நாளா 7:2,3).

அப்பொழுது சாலொமோனும், சகல ஜனங்களும் கர்த்தருடைய சந்நிதியிலே பலிகளை செலுத்துகிறார்கள். மகாபெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் ஏழு நாளளவும் பண்டிகையை ஆசரித்து, மேலும் ஏழுநாள் பலிபீடத்து பிரதிஷ்டையையும் ஆசரிக்கிறார்கள் (2நாளா 7:4-11).

கர்த்தர் சாலொமோனுக்கு இரவிலே தரிசனமாகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை சாலொமோனுக்கு சொல்லுகிறார் (2நாளா 7:12-22).

நாளாகமம் புஸ்தகத்தில், இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் 1இராஜா 8,9 ஆகிய அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய மகிமை

2நாளா 7:1-11

2நாளா 7:1. சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று.

2நாளா 7:2. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.

2நாளா 7:3. அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கண்டபோது, தளவரிசைமட்டும் தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து, கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, அவரைத் துதித்தார்கள்.

2நாளா 7:4. அப்பொழுது ராஜாவும் சகல ஜனங்களும் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்தினார்கள்.

2நாளா 7:5. ராஜாவாகிய சாலொமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான்; இவ்விதமாய் ராஜாவும் சகல ஜனங்களும் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணினார்கள்.

2நாளா 7:6. ஆசாரியர்கள் தங்கள் பணிவிடைகளைச் செய்து நின்றார்கள்; தாவீதுராஜா லேவியரைக்கொண்டு, கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைத் துதித்துப் பாடும்படியாக செய்வித்த கர்த்தரின் கீதவாத்தியங்களை அவர்களும் வாசித்து சேவித்து நின்றார்கள்; ஆசாரியர்கள் அவர்களுக்கு எதிராக நின்று பூரிகைகளை ஊதினார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

2நாளா 7:7. சாலொமோன் உண்டாக்கின வெண்கலப்பலிபீடம் சர்வாங்க தகனபலிகளையும் போஜனபலிகளையும் நிணத்தையும் கொள்ளமாட்டாதிருந்தபடியினால், கர்த்தருடைய ஆலயத்துக்கு முன்னிருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைச் சாலொமோன் பரிசுத்தப்படுத்தி, அங்கே சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்தினான்.

2நாளா 7:8. அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லையிலிருந்து எகிப்தின் நதிமட்டும் வந்து, அவனோடேகூட இருந்த மகா பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் ஏழுநாளளவும் பண்டிகையை ஆசரித்து,

2நாளா 7:9. எட்டாம்நாளை விசேஷித்த ஆசரிப்பு நாளாய்க் கொண்டாடினார்கள்; ஏழுநாள் பலி பீடத்துப் பிரதிஷ்டையையும், ஏழுநாள் பண்டிகையையும் ஆசரித்தார்கள்.

2நாளா 7:10. ஏழாம் மாதத்தின் இருபத்துமூன்றாம் தேதியிலே தங்கள் தங்கள் கூடாரங்களுக்குப் போக ஜனங்களுக்கு விடை கொடுத்தான்; கர்த்தர் தாவீதுக்கும், சாலொமோனுக்கும், தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த நன்மைக்காகச் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்ப் போனார்கள்.

2நாளா 7:11. இவ்விதமாய் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும் கட்டித் தீர்த்தான்; கர்த்தருடைய ஆலயத்திலும் தன் அரமனையிலும் சாலொமோன் செய்ய மனதாயிருந்ததெல்லாம் அநுகூலமாயிற்று.

கர்த்தர் தமது கிருபையினால் சாலொமோனுடைய ஜெபத்திற்கு உடனே பதில் கொடுக்கிறார். சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சிக்கிறது; கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிரப்பிற்று (2நாளா 7:1).

“அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்தது” என்னும் வாக்கியம், 1இராஜா 8:63-64 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் செய்தியோடு தொடர்புடையது. இயேசு கிறிஸ்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுப்பதற்காக இந்தப் பூமிக்கு வருவார். எல்லா மனுஷருடைய எல்லாப் பாவங்களுக்காகவும் இயேசு கிறிஸ்து தம்மை நித்திய பலியாக ஒப்புக் கொடுப்பார். கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் பலியை அங்கிகரிப்பார். அதுவரையிலும் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, தகனபலியைப் பட்சிப்பது கர்த்தர் அந்தப் பலியை அங்கீகரிப்பதைக் குறிப்பிடுகிறது. வானத்திலிருந்து பல சமயங்களில் அக்கினி கீழே இறங்கி வந்திருக்கிறது. (ஆதி 4:4; ஆதி 15:17; லேவி 9:24; 1இராஜா 18:38).

மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தைக் கர்த்தருடைய மகிமை நிரப்பியது போலவே சாலொமோனின் ஆலயத்தையும் கர்த்தருடைய மகிமை நிரப்பிற்று. (2நாளா 7:1-3; 2நாளா 5:14; யாத் 40:34-35; 1இராஜா 8:11). அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் தங்கள் கண்களால் காண்கிறார்கள் (2நாளா 7:3).

கர்த்தர் சாலொமோன் செலுத்தின பலிகளை அங்கீகரிக்கிறார். மோசே, கிதியோன், தாவீது, எலியா ஆகியோர் கர்த்தருக்கு பலி செலுத்தினபோது, கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி, அவர்கள் செலுத்தின பலிகளை பட்சித்து, அந்தப் பலிகளை அங்கீகரித்தார்.

“அன்றியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரிந்துவிட்டது; ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள்” (லேவி 9:24).

“அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்” (நியா 6:21).

"அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அப்பொழுது அவர் வானத்திலிருந்து சர்வாங்க தகனபலி பீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவனுக்கு மறுஉத்தரவு கொடுத்தார்" (1நாளா 21:26).

"அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது" (1இராஜா 18:38).

கர்த்தர் சர்வாங்க தகனபலியை தம்முடைய அக்கினியினாலே பட்சித்துப்போடுகிறார். எபிரெய பாஷையிலே கர்த்தருடைய அக்கினி சர்வாங்க தகனபலிகளை பட்சித்து சாம்பலாக்கிப்போடுகிறது என்று பொருள்படுமாறு சொல்லப்படுகிறது.

சாலொமோன் கர்த்தரை நோக்கி, இந்த ஜெபத்தையும் வேண்டுதலையும் எல்லாம் செய்து முடிக்கிறார். அதன்பின்பு, சாலொமோன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, முழங்காற்படியிட்டிருந்ததை விட்டெழுந்து, நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து, உரத்த சத்தத்தோடே ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார் (1இராஜா 8:54,55).

சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிப்பதற்கு முன்பாக, அவர் கர்த்தரை முதலாவதாக ஸ்தோத்திரம்பண்ணுகிறார். "தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஐசுவரியத்தையோ, சம்பத்தையோ, மகிமையையோ, கனத்தையோ, வல்லமையையோ, ஜெயத்தையோ ஆசீர்வாதமாக அருளவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இளைப்பாறுதலை ஆசீர்வாதமாக அருளுகிறார். எல்லா ஆசீர்வாதங்களையும்விட இளைப்பாறுதலே மேன்மையான ஆசீர்வாதம். இளைப்பாறுதல் இருந்தால் மாத்திரமே, ஐசுவரியத்தையும் சம்பத்தையும் அனுபவிக்க முடியும். ஆகையினால் இளைப்பாறுதலே உன்னதமானது. அதுவே உயர்ந்தது.

"கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லி சாலொமோன் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும், அவருடைய ஆசீர்வாதங்களையும் அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு சொன்ன ஆசீர்வாதங்களைப்பற்றி சாலொமோன் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அவர் என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கரத்தினால் நிறைவேற்றினார்" (1இராஜா 8:15).

"தேவரீர் என் தகப்பனாகிய தாவீது என்னும் உம்முடைய தாசனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைக் காத்தருளினீர்; அதை உம்முடைய வாக்கினால் சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடி, உம்முடைய கரத்தினால் அதை நிறைவேற்றினீர்" (1இராஜா 8:24).

கர்த்தர் மோசேயைக் கொண்டு சொன்ன ஆசீர்வாதமான வார்த்தைகளை சாலொமோன் இங்கே சொல்லுகிறார். வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை" (1இராஜா 8:56) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, நான்கு விசேஷித்த ஆசீர்வாதங்களை அவர்களுக்கு சொல்லுகிறார். அவையாவன: 1. கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடயிருக்கும். 2. கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடு தங்கியிருக்கும். 3. சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின வார்த்தைகள், இரவும் பகலும் கர்த்தருடைய சந்நிதியில் இருக்கும். 4. இஸ்ரவேல் புத்திரருடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாய் இருக்கவேண்டும்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதிக்கும்போது, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும், நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல, நம்மோடும் இருப்பாராக" (1இராஜா 8:57) என்று சொல்லி ஆசீர்வதிக்கிறார்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் சாலொமோன் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணுவதற்கு ஏகமாய்க் கூடிவந்திருக்கிறார்கள். அவர்களெல்லோரும் இன்னும் சிறிது நேரத்தில் தங்கள் ஊர்களுக்கு திரும்பிப்போய்விடுவார்கள். கூட்டமாய்க் கூடியிருக்கிறவர்கள் கலைந்துவிடுவார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் அவர்களெல்லோரும் மறுபடியும் இதுபோல கூடிவருவதற்கு வாய்ப்பு வருமா என்பது தெரியவில்லை. ஆகையினால் சாலொமோன் அவர்களை தன்னுடைய ஆசீர்வாதமான வார்த்தைகளினால் ஆசீர்வதித்து அனுப்புகிறார். "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடு கூடயிருப்பாராக" என்று சொல்லி சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு கூடயிருப்பது அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாயும், ஆறுதலாயும் இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கலைந்துபோனாலும், அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோனாலும், கர்த்தர் அவர்களைவிட்டுப் பிரியாமல் அவர்களோடு கூடவே இருப்பார். சாலொமோன் இந்த ஆசீர்வாதத்தைச் சொல்லும்போது, "கர்த்தர் நம்முடைய பிதாக்களோடு இருந்ததுபோல நம்மோடும் இருப்பார்" என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய பிரசன்னம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே பிரத்தியட்சமாய் வெளிப்பட்டிருக்கிறது. கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் இன்று அவர்களோடு கூடயிருப்பதுபோல, அவர் எப்போதும் அவர்களோடு கூடயிருப்பார் என்று சாலொமோன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தேவாலயத்தின் பிரதிஷ்டையை முடித்து, தங்களுடைய வீடுகளுக்கு திரும்பிச் செல்லும்போது, கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களுக்கு முன்பாக செல்லும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கைவிடமாட்டார். கர்த்தர் அவர்களை நெகிழவிடமாட்டார்.

சாலொமோன் இஸ்ரவேல் சபையாரை ஆசீர்வதித்து வாழ்த்தும்போது "கர்த்தருடைய கிருபையின் வல்லமை அவர்களோடுகூட தங்கியிருக்கும்" என்று சொல்லி வாழ்த்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதற்கு தெய்வீக நோக்கமுள்ளது. இஸ்ரவேல் ஜனத்தாருடைய எல்லைகளை விஸ்தாரம்பண்ணுவதற்கோ அல்லது அவர்களுடைய ஐசுவரியங்களை திரளாய் விருத்தியடையச் செய்வதற்கோ கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கமாட்டார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வழிகளில் நடக்கவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் அவர்கள் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயம் கர்த்தரிடத்தில் சாய்ந்திருக்கவேண்டும். இதற்காகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு எந்நாளும் கூடயிருப்பார்.

சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் இந்த சத்தியத்தைச் சொல்லி, அவர்களை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார். "நாம் அவருடைய வழிகளில் எல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்ட அவருடைய கற்பனைகளையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளுகிறதற்கும், நம்முடைய இருதயத்தைத் தம்மிடத்தில் சாயப்பண்ணுவாராக" (1இராஜா 8:58).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும், கர்த்தர் செவிகொடுத்து பதிலளிப்பார். சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுத்தார். அவர் தன்னுடைய விண்ணப்பங்களைப்பற்றிச் சொல்லும்போது, "நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கும் விண்ணப்பத்திற்கும் பதில் கொடுக்கிறார். சாலொமோனுக்கு மாத்திரமல்ல, கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்து, யாரெல்லாம் கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார்களோ, அவர்களெல்லோருக்கும் கர்த்தர் பதில் கொடுப்பார். கர்த்தருடைய ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் ஜெபம் ஒருபோதும் வீணாய்ப்போகாது. நம்முடைய ஜெபவார்த்தைகளும், விண்ணப்பத்தின் வார்த்தைகளும், நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும். கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு இரவும் பகலும் ஓய்வில்லாமல் பதில் கொடுத்துக்கொண்டிருப்பார். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்களுக்கு, அவருடைய கிருபைகளும் இரக்கங்களும், ஆசீர்வாதங்களும் அநுகூலங்களும் தொடர்ந்து கொடுக்கப்படும்.

கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காக நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிறார். "கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம் அறியும்படியாக" (1இராஜா 8:59). கர்த்தர் தம்முடைய ஜனங்களின் ஜெபத்திற்கு பதில் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஏறெடுத்த தன்னுடைய விண்ணப்ப வார்த்தைகளைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் தமது அடியானுடைய நியாயத்தையும், தமது ஜனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், அந்தந்த நாளில் நடக்கும் காரியத்துக்குத்தக்கதாய் விசாரிப்பதற்கும், நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும்பகலும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இருப்பதாக" (1இராஜா 8:60) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின அவருடைய வார்த்தைகள், தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் இரவும் பகலும் இருக்கும் என்பது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிந்துபேசும் ஜெபத்தில் நிறைவேறியிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து, பிதாவினிடத்தில் இரவும் பகலும் நமக்காக பரிந்துபேசுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எந்நாளும் கர்த்தருடைய கட்டளைகளில் நடக்கவேண்டும் என்று சாலொமோன் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டும். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு உத்தமமாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய வாயினால் சொல்லுவதை, தம்முடைய கையினால் நிறைவேற்றுகிறவர். கர்த்தர் உண்மையுள்ளவராயிருப்பதுபோல, கர்த்தருடைய ஜனமும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

சாலொமோன் இதுவரையிலும் இஸ்ரவேல் ஜனத்தாருக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். இப்போது சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார். "ஆதலால் இந்நாளில் இருக்கிறதுபோல, நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்கள் இருதயம் நம்முடைய தேவனாகிய கர்த்தரோடு உத்தமமாய் இருக்கக்கடவது" (1இராஜா 8:61) என்று சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உபதேச வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சாலொமோனும் அவரோடு கூடயிருக்கிற இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தில் சந்தோஷமாயிருக்கிறார்கள். சாலொமோன் ராஜாவும் அவரோடே இருக்கிற இஸ்ரவேலர் அனைவரும், கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்துகிறார்கள்(1இராஜா 8:62).

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். சாலொமோனுடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களை உற்சாகப்படுத்துகிறது. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருப்பதைப் பார்த்து, சாலொமோனும், ஆசாரியர் அனைவரும், இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய சமுகத்திலே பயபக்தியாயிருக்கிறார்கள்.

சாலொமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக, இருபத்தீராயிரம் மாடுகளையும், இலட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிடுகிறார்; இவ்விதமாய் ராஜாவும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள் (1இராஜா 8:63).

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். சாலொமோன் கர்த்தருக்கு 22,000 மாடுகளையும், 1,20,000 ஆடுகளையும் பலியிட்டாலும், இஸ்ரவேல் தேசத்தில் இன்னும் ஏராளமான ஆடுகளும் மாடுகளும் இருக்கிறது. கர்த்தருக்கு ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டதினால், தேசத்தில் அவற்றின் எண்ணிக்கை குறைந்துபோகவில்லை. கர்த்தர் ஆடுகளையும் மாடுகளையும் பலுகிப் பெருகச் செய்கிறார். நாம் கர்த்தருக்காக காணிக்கைகளைச் செலுத்தும்போது, நம்முடைய ஐசுவரியம் குறைந்துபோகாது. கர்த்தர் நம்முடைய ஐசுவரித்தைப் பெருகப்பண்ணுவார்.

22,000 மாடுகளையும், 1,20,000 மாடுகளையும் ஒரே நாளில் பலியிட முடியாது. இவையெல்லாவற்றையும் பலியிடுவதற்கு பல நாட்களாகும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சந்நிதியில் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகை நாட்களில் சாலொமோனும், இஸ்ரவேல் சபையாரும் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

கர்த்தருடைய சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடம் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளின் நிணத்தையும் கொள்ளமாட்டாமல் சிறிதாயிருக்கிறது. ஆனபடியினால், சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்திற்குமுன் இருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தப்படுத்தி, அன்றைய தினம் அங்கே சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்துகிறார்(1இராஜா 8:64).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணுகிறார். பிரதிஷ்டை பண்டிகையை தொடர்ந்து, சாலொமோன் கூடாரங்களின் பண்டிகையையும் ஆசரிக்கிறார். இவ்விரண்டு பண்டிகைகளும் பதினான்கு நாட்களுக்கு ஆசரிக்கப்படுகிறது.

அக்காலத்தில்தானே சாலொமோனும், ஆமாத்தின் எல்லைதொடங்கி எகிப்தின் நதிமட்டும் இருந்துவந்து, அவரோடே இருந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும், ஆகப் பதினாலு நாள்வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள் (1இராஜா 8:65).

எட்டாம்நாளிலே சாலொமோன் ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்புகிறார்; அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விடுகிறார்கள் (1இராஜா 8:66).

இஸ்ரவேல் சபையார் தேவாலய பிரதிஷ்டை பண்டிகைக்கு மிகுந்த சந்தோஷத்தோடு வந்தார்கள். சந்தோஷத்தோடு தேவாலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணினார்கள். இப்போது மிகுந்த சந்தோஷத்தோடு தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகிறார்கள். கர்த்தருடைய ஆராதனையில் பங்குபெறுகிறவர்களுக்கு எப்போதும் சந்தோஷம் இருக்கும். அவர்கள் வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பார். கர்த்தரே நம்முடைய சந்தோஷம்.

"நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக" *(சங் 20:3).*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையிலே, தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவானவரை நொறுக்குவதும், வேதனைக்குட்படுத்துவதும் பிதாவின் சித்தமாயிற்று. கிறிஸ்துவானவர் கல்வாரி சிலுவையிலே மரிக்கும்போது, நம்முடைய மீறுதல்களையும், பாவங்களையும், அக்கிரமங்களையும் தம்மீது ஏற்றுக்கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் மரணம் நமக்கு ஜீவனாயிருக்கிறது. கிறிஸ்து நமக்காக பாவமானார். அவர் நமக்காகவே சாபமானார். நாம் நீதியையும், தேவனுடைய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, கிறிஸ்துவானவர் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நம்மை சுத்தப்படுத்துகிறார். ஆவியானவர் வானத்திலிருந்து அக்கினியைப்போல இறங்கி வருகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் காணப்படுகிற இச்சைகளையும், அக்கிரம சிந்தைகளையும் தம்முடைய அக்கினியினாலே பட்சித்துப்போடுகிறார். நம்மிடத்தில் காணப்படுகிற பாவசுபாவங்கள் அக்கினியினால் பட்சிக்கப்படவேண்டும்.

கர்த்தருடைய பரிசுத்தமான அக்கினியானது, நம்முடைய ஆத்துமாக்களை அனல் மூட்டி எழுப்பிவிடவேண்டும். நம்முடைய இருதயத்தின் பலிபீடத்திலே, பரிசுத்த ஆவியானவரின் அக்கினி எப்போதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய இருதயத்தில் காணப்படுகிற எல்லா அசுத்தங்களும், ஆவியானவருடைய அக்கினியினால் பட்சிக்கப்படும்.

கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதிருக்கிறது *(2நாளா 7:2).*

அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் கண்டபோது, தளவரிசைமட்டும் தரையிலே முகங்குப்புறக் குனிந்து பணிந்து, கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, அவரைத் துதிக்கிறார்கள் *(2நாளா 7:3).*

கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பினதினால், ஆசாரியர்களுக்கும், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பரிசுத்தமான பயமுண்டாயிற்று. அவர்கள் தேவனுடைய தெய்வீக மகிமையையும், அவருடைய மகத்துவத்தையும் பார்த்து பயந்து, நடுங்கி, தரையிலே முகங்குப்புற குனிந்து, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார்கள்.

கர்த்தருடைய தெய்வீக அதிகாரத்திற்கு இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் தங்களை சந்தோஷமாய்க் கீழ்ப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு முன்பாக நிற்பதற்கு தாங்கள் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தரையிலே முகங்குப்புற குனிந்து பணிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் "கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றுமுள்ளது" என்று சொல்லி கர்த்தரைத் துதிக்கிறார்கள். இந்த துதியின் கீதத்தை, விசுவாசிகளாகிய நாம் எல்லா சூழ்நிலைகளிலும் பாடலாம். நம்முடைய இருதயத்திலும், நாவிலும் கர்த்தரைத் துதிக்கும் துதியின் வார்த்தைகள் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும்.

சாலொமோன் ராஜாவும் சகல ஜனங்களும் கர்த்தருடைய சந்நிதியில் பலிகளைச் செலுத்துகிறார்கள். ராஜாவாகிய சாலொமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும், லட்சத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிடுகிறார்; இவ்விதமாய் ராஜாவும் சகல ஜனங்களும் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணுகிறார்கள் *(2நாளா 7:4,5).*

ஆசாரியர்கள் தங்கள் பணிவிடைகளை செய்து நிற்கிறார்கள். சங்கீத சேவையை செய்கிறவர்களும், தங்களுடைய பணிவிடைகளை செய்கிறார்கள். தாவீதுராஜா லேவியரைக்கொண்டு, கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைத் துதித்துப் பாடும்படியாக செய்வித்த கர்த்தரின் கீதவாத்தியங்களை அவர்களும் வாசித்து சேவித்து நின்றார்கள்; ஆசாரியர்கள் அவர்களுக்கு எதிராக நின்று பூரிகைகளை ஊதினார்கள்; இஸ்ரவேலர் எல்லாரும் நின்றுகொண்டிருக்கிறார்கள் (2நாளா 7:6).

"அப்படி ஆரம்பித்த அந்நாளிலே தானே கர்த்தருக்குத் துதியாகப் பாடும்படி தாவீது ஆசாப்பிடத்திலும் அவன் சகோதரிடத்திலும் கொடுத்த சங்கீதமாவது" (1நாளா 16:7).

சாலொமோன் கர்த்தருக்கு ஏராளமான சர்வாங்க தகனபலிகளையும் போஜனபலிகளையும் செலுத்துகிறார்.

சாலொமோன் உண்டாக்கின வெண்கலப் பலிபீடம் சர்வாங்கதகனபலி களையும் போஜன பலிகளையும் நிணத்தையும் கொள்ளமாட்டாதிருந்தபடியினால், கர்த்தருடைய ஆலயத்துக்கு முன்னிருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைச் சாலொமோன் பரிசுத்தப்படுத்தி, அங்கே சர்வாங்க தகனபலி களையும் சமாதானபலிகளின் நிணத்தையும் செலுத்துகிறார் (2நாளா 7:7).

சாலொமோனும், ஆமாத்தின் எல்லையிலிருந்து எகிப்தின் நதிமட்டும் வந்து, அவனோடேகூட இருந்த மகா பெரிய கூட்டமாகிய இஸ்ரவேல் அனைத்தும் ஏழுநாளளவும் பண்டிகையை ஆசரித்து, எட்டாம்நாளை விசேஷித்த ஆசரிப்பு நாளாய்க் கொண்டாடுகிறார்கள்; ஏழுநாள் பலிபீடத்துப் பிரதிஷ்டையையும், ஏழுநாள் பண்டிகையையும் ஆசரிக்கிறார்கள் (2நாளா 7:8,9).

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லாரும் பலிபீடத்து பிரதிஷ்டையை ஏழுநாட்களுக்கு பண்டிகையாக கொண்டாடுகிறார்கள். இரண்டாம் நாளிலிருந்து, ஒன்பதாம் நாள் வரையிலும் பலிபீடத்து பிரதிஷ்டைபண்டிகை. பத்தாவது நாளிலே விசேஷித்த ஆசரிப்பு நாளை கொண்டாடுகிறார்கள். இது அவர்களுக்கு பாவநிவாரண நாளாயிருக்கிறது. பதிநான்காம் நாளிலே அவர்கள் கூடாரப்பண்டிகையை கொண்டாட ஆரம்பிக்கிறார்கள். இது இருபத்திரண்டாம் நாள் வரையிலும் தொடருகிறது.

சாலொமோன் ராஜா, ஏழாம் மாதத்தின் இருபத்துமூன்றாம் தேதியிலே தங்கள் தங்கள் கூடாரங்களுக்குப் போக ஜனங்களுக்கு விடை கொடுக்கிறார்; கர்த்தர் தாவீதுக்கும், சாலொமோனுக்கும், தமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்த நன்மைக்காகச் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்ப் அவர்கள் தங்கள் இடங்களுக்கு போகிறார்கள் (2நாளா 7:10).

இவ்விதமாய் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும் கட்டித் தீர்க்கிறார்; கர்த்தருடைய ஆலயத்திலும் தன் அரமனையிலும் சாலொமோன் செய்ய மனதாயிருந்ததெல்லாம் அநுகூலமாயிற்று (2நாளா 7:11).

கர்த்தருடைய வார்த்தை 2நாளா 7:12-22

2நாளா 7:12. கர்த்தர் இரவிலே சாலொமோனுக்குத் தரிசனமாகி: நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்துகொண்டேன்.

2நாளா 7:13. நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது,

2நாளா 7:14. என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்.

2நாளா 7:15. இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்.

2நாளா 7:16. என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்.

2நாளா 7:17. உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீ எனக்கு முன்பாக நடந்து, நான் உனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்வாயானால்,

2நாளா 7:18. அப்பொழுது இஸ்ரவேலை அரசாளும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று நான் உன் தகப்பனாகிய தாவீதோடே உடன்படிக்கைபண்ணினபடியே, உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை நிலைக்கப்பண்ணுவேன்.

2நாளா 7:19. நீங்கள் வழிவிலகி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் விட்டுப்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வீர்களேயாகில்,

2நாளா 7:20. நான் அவர்களுக்குக் கொடுத்த என் தேசத்தில் இருந்து அவர்களைப் பிடுங்கி, என் நாமத்திற்கென்று நான் பரிசுத்தப்படுத்தின இந்த ஆலயத்தை என் சமுகத்தினின்று தள்ளி, அதை எல்லா ஜனசதனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் வைப்பேன்.

2நாளா 7:21. அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து: கர்த்தர் இந்த தேசத்திற்கும் இந்த ஆலயத்திற்கும் இப்படிச் செய்தது என்ன என்று கேட்பான்.

2நாளா 7:22. அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்து, சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்.

கர்த்தர் இரவிலே சாலொமோனுக்கு தரிசனமாகிறார். இதற்கு முன்பும் கர்த்தர் சாலொமோனுக்கு இரவிலே தரிசனமாகியிருக்கிறார். "அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார்" *(2நாளா 1:7).*

கர்த்தர் சாலொமோனுக்கு 20 வருஷத்திற்கு முன்பு முதல் முறையாகத் தரிசனமானார். அதன்பின்பு, இங்கு இரண்டாம் முறையாகக் கர்த்தர் சாலொமோனுக்கு மறுபடியும் தரிசனமானார். *(2நாளா 8:1)* கர்த்தர் சாலொமோனின் விண்ணப்பத்தைக் கேட்டார். கர்த்தர் தேவாலயத்தைப் பரிசுத்தப் படுத்தியிருக்கிறார். அவருடைய கண்களும், இருதயமும் தேவாலயத்தில் தொடர்ந்து இருக்கும். *(1இராஜா 9:1-3).* கர்த்தர் சாலொமோனோடு தாவீதின் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார். ஈசாக்கோடும், யாக்கோபோடும் கர்த்தர் ஆபிரகாமின் உடன்படிக்கையைப் புதுப்பித்தது போல சாலொமோனோடு புதுப்பிக்கிறார். *(2நாளா 7:17-22; 1இராஜா 9:4-9).*

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்த சம்பவம், *1இராஜா 9:2-9* ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். சாலொமோன் தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணி கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார். கர்த்தர் சாலொமோனுடைய ஜெபத்தையும், அவர் செலுத்தின பலிகளையும் அங்கீகரிக்கிறார். அதற்கு அடையாளமாக, சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் பட்சிக்கிறது. கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று *(2நாளா 7:1).*

கர்த்தர் இங்கே சாலொமோனுக்கு தரிசனமாகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் ராஜ அரமனையையும், தான் செய்யவேண்டும் என்று விரும்பின எல்லாவற்றையும் கட்டி முடிக்கிறார். அதன்பின்பு, கர்த்தர் கிபியோனிலே சாலொமோனுக்குத் தரிசனமானதுபோல, இரண்டாந்தரமும் அவருக்குத் தரிசனமாகிறார் *(1இராஜா 9:1,2).*

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்ப நாட்களில், கர்த்தர் அவருக்கு சொப்பனத்திலே தரிசனமானார். இப்போது மறுபடியும் அவருக்கு சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது தரிசனத்தின் மூலமாகவோ தரிசனமாகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும், போஜனபலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்துகிறார். அவர் பகல் முழுவதும் கர்த்தருக்கு பலிகளை செலுத்தியிருக்கவேண்டும். பலிகளை செலுத்திய பின்பு, பண்டிகையை ஆசரித்து முடித்த பின்பு, இரவு வேளையிலே கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமாகிறார்.

"அங்கே சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கர்த்தரின் சந்நிதியிலிருக்கிற வெண்கலப் பலிபீடத்தின் மேல் ஆயிரம் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திப் பலியிட்டான். அன்று ராத்திரியிலே தேவன் சாலொமோனுக்குத் தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார்" *(2நாளா 1:6,7).*

சாலொமோன் கர்த்தருக்கு இந்த ஆலயத்தைக் கட்டியிருக்கிறார். கர்த்தருடைய நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் விளங்கவேண்டும். அதற்காக கர்த்தர் இந்த ஆலயத்தை பரிசுத்தமாக்கியிருக்கிறார். கர்த்தருடைய கண்களும், அவருடைய இருதயமும் எந்நாளும் இந்த ஆலயத்திலிருக்கும்.

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் செய்தார். கர்த்தர் அவருடைய ஜெபத்தை கேட்டார். கர்த்தரே தம்முடைய ஆலயத்தை பரிசுத்தமாக்குகிறார். சாலொமோன் தான் கட்டின ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். சாலொமோன் இதை பிரதிஷ்டைபண்ணினாலும், கர்த்தரே தம்முடைய ஆலயத்தை பரிசுத்தமாக்குகிறார் *(1இராஜா 9:3)*

சாலொமோனும், இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்யவேண்டும். அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள் மத்தியில் தங்கியிருக்கும்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளும்படிக்கு, என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று உன் தகப்பனாகிய தாவீதோடே நான் சொன்னபடியே, இஸ்ரவேலின்மேலுள்ள உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" *(1இராஜா 9:4,5)* என்று சொல்லுகிறார்.

சாலொமோன் இப்போது தான் கட்டின ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் பதினாலு நாள் வரைக்கும் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு பயபக்தியோடு பலிகளை செலுத்துகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. இந்த ஆலயம் கர்த்தருடைய வாசஸ்தலம். கர்த்தருடைய கண்களும், அவருடைய இருதயமும் இந்த ஆலயத்திலிருக்கும்.

தங்கள் மத்தியில் கர்த்தருடைய ஆலயம் இருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக ஜீவிக்கக்கூடாது. அவருக்கு விரோதமாகப் பாவம் செய்யக்கூடாது. கர்த்தருடைய ஆலயம் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் மனஉத்தமமும், செம்மையுமாய் நடக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். தாங்கள் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்று நினைத்து, இஸ்ரவேல் ஜனத்தார், கர்த்தரைவிட்டு விலகி துன்மார்க்கமாய் ஜீவிக்கக்கூடாது.

"கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்" (எரே 7:3).

கர்த்தர் சாலொமோனுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லும்போது, சில நிபந்தனைகளையும் சேர்த்து சொல்லுகிறார். கர்த்தர் சாலொமோனை நோக்கி, "என் சமுகத்தில் மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நடப்பாயானால், இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் உட்காரும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை" (1இராஜா 9:4,5) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய சமுகத்தில் மனஉத்தமமும், செம்மையுமாய் நடக்கவில்லையென்றால், கர்த்தர் சொல்லும் ஆசீர்வாதம் சாலொமோனுக்கு சித்திக்காது.

"உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும், காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்" (சங் 132:12).

சாலொமோனும் அவருடைய வீட்டாரும் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் ஜீவித்தால், அவர்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்காது. ஆசீர்வாதத்திற்கு பதிலாக அவர்களுக்கு சாபம் கிடைக்கும்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள்" (1இராஜா 9:6,7) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட விசேஷித்த ஜாதியாயிருந்தாலும், அவர்கள் பரிசுத்த ஜனமாயிருந்தாலும், இஸ்ரவேல் தேசம் பரிசுத்த தேசமாயிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாரை நிர்மூலமாக்குவார். தம்முடைய நாமம் விளங்க கர்த்தர் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை, கர்த்தர் தம்முடைய சமுகத்தை விட்டு தள்ளிவிடுவார். இஸ்ரவேல் ஜனத்தார் ஆசீர்வாதமாயிருக்கமாட்டார்கள். அவர்கள் சாபமாயிருப்பார்கள்.

கர்த்தருடைய ஆலயம் இப்போது உன்னதமாயிருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் ஆலயத்தில் வாசம்பண்ணவில்லையென்றால், இந்த ஆலயம் ஒரு சாதாரண கட்டிடமாகவே இருக்கும். இஸ்ரவேல் தேசம் இப்போது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாயிருக்கிறது. இந்த தேசத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இல்லையென்றால், இது சபிக்கப்பட்ட தேசமாயிருக்கும்.

இந்த தேசத்தையும், இந்த ஆலயத்தையும் கடந்துபோகிறவர்கள், இதன் அழிவைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். பிரமிப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை நிர்மூலமாக்கி, இந்த ஆலயத்தை தம்முடைய சமுகத்தைவிட்டு தள்ளும்போது, தேசமும் ஆலயமும், இவற்றை பார்க்கிறவர்களின் பார்வைக்கு எப்படியிருக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சாலொமோனை நோக்கி, "அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள். அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு, வேறே தேவர்களைப் பற்றிக் கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள்" (1இராஜா 9:8,9) என்று சொல்லுகிறார்.

இப்போது உன்னதமான இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவர்கள், இதன் அழகையும், மகிமையையும் பார்த்து பிரமிப்பார்கள். கர்த்தர் இந்த ஆலயத்தை தம்முடைய சமுகத்தைவிட்டு தள்ளிவிடும்போது, இந்த ஆலயம் உன்னதமாயிராது. இந்த ஆலயத்தில் அழகும் மகிமையும் இருக்காது. அவர்கள் ஏற்கெனவே உன்னதமான ஆலயத்தைப் பார்த்தவர்கள். அவர்கள் அழகான ஆலயத்தையும், மகிமையான ஆலயத்தையும் பார்த்தவர்கள். இப்போது மகிமையில்லாமல், அழகில்லாமல், நிர்மூலமாய் கிடக்கிற ஆலயத்தைப் பார்த்து பிரமிப்பார்கள்.

சாலொமோன் தேவாலயத்தை பிரதிஷ்டைபண்ணும் நாளிலே, கர்த்தர் அவருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். புதிய ஆலயம், புதிய பிரதிஷ்டை எல்லாம் நல்லதுதான். ஆனால் ஜனங்கள் ஆலயத்தின் அழகைப் பார்த்து பெருமைப்படக்கூடாது. தங்கள் இருதயத்தில் இறுமாப்பாய் ஜீவிக்கக்கூடாது. அவர்கள் மனமேட்டிமையாயிருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், பிரயோஜனமானவர்களாயும் இருக்கவேண்டும்.

சாலொமோன் கட்டின ஆலயத்தை கர்த்தர் அங்கீகரிக்கிறார். "நான் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்து கொண்டேன்" *(2நாளா 7:12)* என்றும்,

"என் நாமம் இந்த ஆலயத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்" *(2நாளா 7:16)* என்றும் கர்த்தர் சாலொமோனுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து ஏறெடுக்கப்படும் எல்லா ஜெபங்களுக்கும், கர்த்தர் பதில் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்யும்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வரும். அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களுடைய தேசத்திற்கே க்ஷேமத்தைக் கொடுப்பார். இஸ்ரவேல் தேசத்தின்மீது வரும் நியாயத்தீர்ப்புக்கு, இஸ்ரவேல் தேசத்தார் எல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

"நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு, அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" *(2நாளா 7:13,14)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லும் வாக்கியம் இஸ்ரவேல் தேசத்தில் பலமுறை நிறைவேறியிருக்கிறது. அவர்களுக்குப் பல சமயங்களில் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், சாபங்களும் வந்தன. இறுதியாக இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவத்தின் நிமித்தமாக அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போனார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திற்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். கர்த்தர் அவர்கள்மீது கொடுக்கும் நியாயத்தீர்ப்புகளையும் நிறுத்திவிடுவார். கர்த்தர் அவர்களுடைய தேசங்களையும் குணப்படுத்துவார். இஸ்ரவேல் ஜனத்தாரின் துக்கங்கள் சந்தோஷமாய் மாறும்.

"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்" *(2நாளா 7:15)* என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய மன்னிக்கும் கிருபையினால், மனுஷருக்கு கர்த்தருடைய குணப்படுத்தும் கிருபை கிடைக்கிறது.

"அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்குவார்" *(சங் 103:3).*

"அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்" *(மத் 9:2).*

கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை நிலைக்கப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேறவேண்டுமென்றால், கர்த்தர் சொல்லும் நிபந்தனைகளுக்கு சாலொமோன் கீழ்ப்படியவேண்டும்.

"உன் தகப்பனாகிய தாவீது நடந்தது போல, நீ எனக்கு முன்பாக நடந்து, நான் உனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்து, என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்வாயானால், அப்பொழுது இஸ்ரவேலை அரசாளும் புருஷன் உனக்கு இல்லாமற்போவதில்லை என்று நான் உன் தகப்பனாகிய தாவீதோடே உடன்படிக்கைபண்ணினபடியே, உன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை நிலைக்கப்பண்ணுவேன்" *(2நாளா 7:17,18)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாவீதின் வம்சத்தை இயேசு கிறிஸ்து மறுபடியும் கட்டி எழுப்புவார். தாவீதின் ராஜ்யத்தை இயேசு கிறிஸ்து மறுபடியும் ஸ்தாபித்து, அவனுடைய சிம்மாசனத்தில் அமர்ந்து ராஜ்யபாரம் பண்ணுவார். *(ஏசா 9:6-7; சக 14:1-21; லூக்கா 1:32-33; அப் 15:13-18; ரோமர் 11:25-28; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).*

கர்த்தர் சாலொமோனுக்கு முன்பாக மரணத்தையும் ஜீவனையும் வைக்கிறார். அதுபோலவே சாபத்தையும் ஆசீர்வாதத்தையும் வைக்கிறார். சாலொமோன் தனக்கு எது வேண்டும் என்பதை தீர்மானம் செய்து கொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டிவிட்டு, அந்நிய தெய்வங்களை ஆராதிப்பதற்கும் வாய்ப்புள்ளது. கர்த்தர் விக்கிராராதனைக்கு விரோதமாக எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

"நீங்கள் வழிவிலகி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கட்டளைகளையும் என் கற்பனைகளையும் விட்டுப்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொள்வீர்களேயாகில், நான் அவர்களுக்குக் கொடுத்த என் தேசத்தில் இருந்து அவர்களைப் பிடுங்கி, என் நாமத்திற்கென்று நான் பரிசுத்தப்படுத்தின இந்த ஆலயத்தை என் சமுகத்தினின்று தள்ளி, அதை எல்லா ஜனசதளங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச்சொல்லாகவும் வைப்பேன்" *(2நாளா 7:19,20)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள். இதன் நிமித்தமாக அவர்கள் அந்நிய தேசங்களில் சிதறடிக்கப்பட்டார்கள். இதனால் 2நாளா 7:20-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற காரியங்கள் அவர்களுக்கு வந்தது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுவார். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்காது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரையும், இஸ்ரவேல் தேசத்தையும் அழித்துப்போடுவார். கர்த்தருடைய ஆலயமும் அழிந்துபோகும். அப்போது அவர்கள் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும் இருப்பார்கள்.

"அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து: கர்த்தர் இந்த தேசத்திற்கும் இந்த ஆலயத்திற்கும் இப்படிச் செய்தது என்ன என்று கேட்பார்" *(2நாளா 7:21)* என்றும்,

8 அதிகாரம்

சாலொமோன் கட்டின பட்டணங்கள் (2நாளா 8:1-4). சாலொமோனுடைய வேலைக்காரர்கள் (2நாளா 8:7-10). சாலொமோனுடைய மனைவியாகிய பார்வோனின் குமாரத்தி (2நாளா 8:11). சாலொமோன் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார். தாவீதுடைய பிரமாணத்தின்படியே லேவியருடைய வகுப்புக்களை நியமனம்பண்ணுகிறார் (2நாளா 8:12-16). சாலொமோன் அந்நிய தேசத்தாரோடு செய்த வியாபாரம் (2நாளா 8:17,18).

சாலொமோனுடைய கட்டிட வேலைகள் 2நாளா 8:1-11

2நாளா 8:1. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் தன் அரமனையையும் கட்ட இருபது வருஷகாலம் சென்றபின்பு,

2நாளா 8:2. ஈராம் தனக்குக் கொடுத்திருந்த பட்டணங்களைச் சாலொமோன் கட்டி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றினான்.

2நாளா 8:3. பின்பு சாலொமோன் ஆமாத்சோபாவுக்குப் போய், அதை ஜெயித்தான்.

2நாளா 8:4. அவன் வனாந்தரத்திலுள்ள தத்மோரையும், ஆமாத்தேசத்திலே இரஸ்துக்களின் பட்டணங்கள் அனைத்தையும் கட்டினான்.

2நாளா 8:5. சாலொமோன் மேல்பெத்தொரோனையும், கீழ்ப்பெத்தொரோனையும், அலங்கங்களும் கதவுகளும் தாழ்ப்பாள்களுமுள்ள அரணான பட்டணங்களாகக் கட்டி,

2நாளா 8:6. பாலாத்தையும், தனக்கு இருக்கிற இரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் சகல பட்டணங்களையும், குதிரைவீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும் தான் ஆளும் தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டினான்.

2நாளா 8:7. இஸ்ரவேல் புத்திரர் சங்காரம்பண்ணாதிருந்த இஸ்ரவேல் ஜாதியல்லாத ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியரில் மீதியான சகல ஜனத்திலும்,

2நாளா 8:8. அவர்களுக்குப்பிறகு தேசத்திலிருந்த அவர்கள் பிள்ளைகளை சாலொமோன் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பகுதி கட்டச்செய்தான்.

2நாளா 8:9. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் சாலொமோன் தன் வேலையைச் செய்ய அடிமைப்படுத்தவில்லை; அவர்கள் யுத்த மனுஷரும், அவனுடைய சேர்வைக்காரரின் தலைவரும், அவனுடைய இரதங்களுக்கும் குதிரைவீரருக்கும் தலைவருமாயிருந்தார்கள்.

2நாளா 8:10. ராஜாவாகிய சாலொமோனுடைய ஊழியக்காரரின் தலைவராகிய இவர்களில் இருநூற்று ஐம்பதுபேர் ஜனத்தை ஆண்டார்கள்.

2நாளா 8:11. சாலொமோன்: கர்த்தருடைய பெட்டி வந்த ஸ்தலங்கள் பரிசுத்தமாயிருக்கிறது; ஆதலால், இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் அரமனையிலே என் மனைவி வாசம்பண்ணலாகாது என்று சொல்லி, பார்வோனின் குமாரத்தியைத் தாவீதின் நகரத்திலிருந்து தான் அவளுக்குக் கட்டின மாளிகைக்குக் குடிவரப்பண்ணினான்.

சாலொமோன் இருபது வருஷக்காலமாக கர்த்தருடைய ஆலயத்தையும் தன் அரமனையையும் கட்டுகிறார். (1இராஜா 6:38-7:1, 1இராஜா 9:10)

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் தன் அரமனையையும் கட்ட இருபது வருஷகாலம் சென்றபின்பு, ஈராம் தனக்குக் கொடுத்திருந்த பட்டணங்களைச் சாலொமோன் கட்டி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றுகிறார் (2நாளா 8:1,2).

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற பட்டணங்கள் ஈராமிற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவை ஈராமிற்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது ஈராமும், அவனுடைய மனுஷரும் செய்யும் எல்லா வேலைகளுக்காகவும் இவை பணையமாக வைக்கப்பட்டிருக்கலாம். இவை வெகுமதிகள் என்றால், இந்தப் பட்டணங்களில் ஈராம் பிரியப்படவில்லை. ஆகையினால் அவன் இவற்றைச் சாலொமோனிடம் திரும்பக் கொடுத்துவிட்டான். (1இராஜா 9:11-13)

இவை பணையமாகக் கொடுக்கப் பட்டிருந்தால், இவற்றைச் சாலொமோனிடம் திரும்பக் கொடுக்கும் வேளை வந்திருக்கிறது. தேவாலயத்து வேலையும், அரமனை வேலையும் கட்டி முடிக்கப்பட்டு விட்டதினால் சாலொமோன் ஈராமிடம் பணையமாகக் கொடுத்த பட்டணங்களை அவன் சாலொமோனிடமே திரும்பக் கொடுத்து விடுகிறான்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினபோது, ஈராம் தீரு தேசத்திலிருந்து தேவதாரி மரங்களை அனுப்பி வைத்தார். தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறது. சாலொமோனும் ஈராமும் சமாதானமாக விடைபெற்றுக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே மரவெட்டு வேலையை திறமையைச் செய்யக்கூடியவர்கள் இல்லை. ஈராம் தீரு தேசத்திலிருந்து மரவெட்டுவேலை அறிந்த ஆட்களை சாலொமோனுக்கு கொடுத்து உதவிசெய்தார். சாலொமோன் ஈராமின் உதவிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளாமல், ஈராமின் வேலையாட்களுக்கு சம்பளமும், ஈராமின் அரமனைக்கு போஜனமும் கொடுத்தார்.

ஈராம் சாலொமோனுக்கு உதவி செய்தாலும், சாலொமோன் ஈராமைவிட உயர்ந்தவராயிருக்கிறார். சாலொமோனுக்கு இஸ்ரவேல் தேசத்திலும், மற்ற தேசங்களிலும் மதிப்பும் மரியாதையும், அந்தஸ்தும் உயர்ந்திருக்கிறது. ஈராம் சாலொமோனுடைய வளர்ச்சியைப் பார்த்து பொறாமைப்படவில்லை. சாலொமோன் இன்னும் மேன்மேலும் வளர்ச்சி பெறுவதற்கு, ஈராம் உதவி செய்கிறார்.

ஈராம் தனக்கு செய்த உதவிகளை சாலொமோனும் மறக்கவில்லை. அவர் ஈராமுக்கு கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயமும் ராஜ அரமனையுமாகிய இரண்டு மாளிகைகளையும் கட்டி நிறைவேற்றுகிற இருபதாம் வருஷம் முடிவிலே, தன்னுடைய விருப்பத்தின்படியெல்லாம் தனக்குக் கேதுருமரங்களையும், தேவதாரி விருட்சங்களையும், பொன்னையும் கொடுத்துவந்த தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, ராஜாவாகிய சாலொமோன் கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார் (1இராஜா 9:10,11).

ஈராம் சாலொமோனுக்கு ஏராளமான உதவிகளை செய்திருக்கிறார். ஈராம் செய்த உதவிகளுக்கு, சாலொமோன் அவர் கேட்டுக்கொண்ட பிரகாரம், எல்லாவற்றையும் குறைவில்லாமல் கொடுத்திருக்கிறார்.

"ஈராம் சாலொமோனிடத்தில் மனுஷரை அனுப்பி: நீர் எனக்குச் சொல்லியனுப்பின காரியத்தை நான் கேட்டேன்; கேதுருமரங்களுக்காகவும், தேவதாரி விருட்சங்களுக்காகவும், உம்முடைய விருப்பத்தின்படியெல்லாம் நான் செய்வேன். என் வேலைக்காரர் லீபனோனில் இருந்து அவைகளை இறக்கிக் கடலிலே கொண்டுவருவார்கள்; அங்கே நான் அவைகளைத் தெப்பங்களாகக் கட்டி, நீர் நியமிக்கும் இடத்துக்குக் கடல்வழியாய் அனுப்பி, அவைகளை அவிழ்த்து ஒப்பிப்பேன்; அங்கே நீர் அவைகளை ஒப்புக்கொண்டு என் ஜனங்களுக்கு ஆகாரங்கொடுத்து, என் விருப்பத்தின்படி செய்யவேண்டும் என்று சொல்லச்சொன்னான்" (1இராஜா 5:8,9).

ஈராம் சாலொமோனிடத்தில் பட்டணங்களைக் கேட்கவில்லை. ஆனாலும் சாலொமோன் ராஜா தீருவின் ராஜாவாகிய ஈராமுக்கு, கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுக்கிறார். இவையெல்லாம் சிறிய ஊர்கள். சாலொமோன் தனக்கு கொடுத்த பட்டணங்களை பார்க்கவேண்டுமென்று ஈராம் விரும்புகிறார். இதற்காக ஈராம் தீருவிலிருந்து கலிலேயா நாட்டிற்கு புறப்பட்டு வருகிறார். ஆனால் ஈராம் இந்தப் பட்டணங்களில் பிரியப்படவில்லை (1இராஜா 9:12).

சாலொமோன் தனக்கு கொடுத்த இருபது பட்டணங்களையும், ஈராம் "காபூல்நாடு" என்று அழைக்கிறார். காபூல் என்பது பொனீஷிய பாஷையின் வார்த்தை. காபூல் என்னும் பேருக்கு, "திருப்தியில்லை" என்று பொருள். ஈராமுக்கு இந்தப் பட்டணங்கள் பிடிக்கவில்லை. ஆகையினால் அவர் இதை "காபூல் நாடு" என்று சொல்லுகிறார்.

ஈராம் சாலொமோனை நோக்கி, "என் சகோதரனே, நீர் எனக்குக் கொடுத்த இந்தப் பட்டணங்கள் என்ன பட்டணங்கள்?" என்று கேட்கிறார். ஈராம் அவைகளுக்கு இந்நாள்மட்டும் வழங்கி வருகிறபடி காபூல் நாடு என்று பேரிடுகிறார் (1இராஜா 9:13).

ஈராம் கலிலேயா நாட்டிலுள்ள இந்த இருபது பட்டணங்களையும் சாலொமோனிடத்தில் திரும்பக் கொடுத்துவிடுகிறார். சாலொமோன் அந்தப் பட்டணங்களை பழுதுபார்த்து, சீர்படுத்தி, அவற்றில் இஸ்ரவேல் புத்திரரை குடியேற்றுகிறார்.

"ஈராம் தனக்குக் கொடுத்திருந்த பட்டணங்களைச் சாலொமோன் கட்டி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றினான்" (2நாளா 8:2).

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். இஸ்ரவேல் தேசத்திலுள்ள பட்டணங்களும் மிகவும் பிரயோஜனமானவை. ஆனால் இந்தப் பட்டணங்கள் ஈராமுக்கு பிடிக்கவில்லை. தீரு தேசத்தார் வியாபாரிகள். அவர்கள் பெரிய மாளிகைகளில் வாசம்பண்ணுவார்கள். தீரு தேசத்தார் கடல்கடந்து பலதேசங்களுக்கும்போய் வியாபாரம்பண்ணுகிறவர்கள். அவர்களுக்கு கடற்கரையிலுள்ள துறைமுகப்பட்டணங்கள் மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

சாலொமோன் ஈராமுக்கு கொடுத்த இருபது பட்டணங்களும் கலிலேயாவிலுள்ள விவசாய நிலத்திலுள்ளது. ஈராமுக்கு விவசாயம் பண்ண தெரியாது. ஆகையினால் ஈராம் இந்தப் பட்டணங்களில் பிரியப்படவில்லை. ஒரு சிலர் விவசாய தொழிலை விரும்புவார்கள். வேறு சிலரோ வியாபாரம்பண்ணுவார்கள். அவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற ஸ்தலங்களை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்வார்கள். ஈராமின் பார்வைக்கு கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களும், "காபூல் நாடாக" தெரிகிறது.

சாலொமோன் தனக்கு கொடுத்த இருபது பட்டணங்களை ஈராம் விரும்பவில்லை. அதற்கு பதிலாக ஈராம் சாலொமோனை தன்னுடைய கடல் வணிகத்தில் பங்குதாரராக சேர்த்து கொள்ள விரும்புகிறார். ஈராம் சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருக்கிறார் (1இராஜா 9:14)

"ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்வித்தான். அந்தக் கப்பல்களில் ஈராம் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடேகூட அனுப்பினான். அவர்கள் ஓப்பீருக்குப்போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவந்தார்கள்" (1இராஜா 9:26-28).

சாலொமோன் அதிக கல்வி கற்றவர். அவர் ஞானத்திலும் அறிவிலும் விருத்தி உள்ளவர். ஆனாலும் சாலொமோன் தன்னுடைய நாட்களை வீணாக்கவில்லை. மற்ற ஜனங்களோடு தேவையில்லாத விவாதம்பண்ணவில்லை. சும்மாயிருந்து பொழுதைப் போக்கவில்லை. சாலொமோன் அநேக பட்டணங்களைக் கட்டுகிறார். அந்தப் பட்டணங்களுக்கு அரண்களைக் கட்டுகிறார்.

சாலொமோன் வனாந்தரத்திலுள்ள தத்மோரையும், ஆமாத்தேசத்திலே இரஸ்துக்களின் பட்டணங்கள் அனைத்தையும் கட்டுகிறார். சாலொமோன் மேல்பெத்தொரோனையும், கீழ்ப்பெத்தொரோனையும், அலங்கங்களும் கதவுகளும் தாழ்ப்பாள்களுமுள்ள அரணான பட்டணங்களாகக் கட்டுகிறார் *(2நாளா 8:4,5)*.

இந்தப் பட்டணங்கள் தவிர, சாலொமோன் பாலாத்தையும், தனக்கு இருக்கிற இரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் சகல பட்டணங்களையும், குதிரைவீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும் தான் ஆளும் தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார் *(2நாளா 8:6)*.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும், தன்னுடைய அரமனையைக் கட்டுவதற்கும் அமஞ்சி ஆட்களைப் பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் வரிவசூல் பண்ணுகிறார். அவர்கள் ராஜாவுக்கு பணத்தை வரியாக செலுத்துகிறார்கள். சாலொமோன் அந்நிய தேசத்தாரை அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்திக்கொள்கிறார்.

சாலொமோன் கட்டுகிற கட்டிடங்கள் எல்லாமே மிகவும் பெரியவை. பெரிய கட்டிடங்களாகயிருப்பதினால் அவற்றை கட்டுவதற்கு ஏராளமான வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள். பெரிய கட்டிடங்களை கட்ட பணமும் அதிகமாய் செலவாகும்.

சாலொமோன் கட்டிடங்களைக் கட்டுவதற்குத் தேவையான பணத்தையும், வேலையாட்களையும் சம்பாதிக்கிறார். மற்ற ராஜாக்கள் எதிரி தேசத்தோடு யுத்தம்பண்ணுவதற்கு பணத்தையும், யுத்தவீரர்களையும் சம்பாதிப்பார்கள். யுத்தம்பண்ணுகிறவர்கள் தங்களுடைய இரத்தத்தை சிந்தி, தங்கள் தேசத்தைப் பாதுகாப்பார்கள். சாலொமோனோ இஸ்ரவேல் தேசத்தாருடைய இரத்தத்தைப் பயன்படுத்தவில்லை. அவர்களுடைய பணத்தையும், உழைப்பையும் மாத்திரமே பயன்படுத்துகிறார்.

சாலொமோனுடைய ஞானம் தாவீதுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. சாலொமோன் ஏராளமான கட்டிடங்களை நேர்த்தியாகக் கட்டுவார் என்பதை தாவீது முன்னறிந்திருக்கிறார். அவரிடத்தில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏராளமான வேலையாட்கள் இருப்பார்கள் என்பது தாவீதுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. சாலொமோன் ராஜாவுக்கு கீழே, ஏராளமான கைகளும், ஏராளமான வேலையாட்களும் வேலை செய்வார்கள் என்பதை தாவீது முன்னறிந்திருக்கிறார்.

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" *(சங் 127:1)*. தாவீது இந்த சங்கீத வாக்கியத்தை எழுதியபோது, சாலொமோனுடைய கட்டிட வேலையை மனதில் வைத்து எழுதியிருக்கவேண்டும்.

சாலொமோன் ஞானமாய்த் திட்டமிட்டு கட்டிடங்களைக் கட்டுகிறார். எந்தக் கட்டிடத்தை முதலாவது கட்டவேண்டும் என்றும், எந்தக் கட்டிடத்தை கடைசியில் கட்டிக்கொள்ளலாம் என்றும் சாலொமோன் ஏற்கெனவே திட்டமிடுகிறார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை முதலாவதாக கட்டுகிறார். அதன்பின்பு அவர் தன்னுடைய அரமனையைக் கட்டுகிறார். கர்த்தர் சாலொமோனை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் சாலொமோனுடைய கைகளின் பிரயாசங்களையும் ஆசீர்வதிக்கிறார். சாலொமோன் கர்த்தருடைய கிருபையினால் ஏராளமான கட்டிடங்களைக் கட்டுகிறார்.

சாலொமோன் ராஜா, தான் பிடித்த அமஞ்சி ஆட்டுகளைக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தையும், தன் அரமனையையும், மில்லோவையும், எருசலேமின் மதிலையும், ஆத்சோரையும், மெகிதோவையும், கேசேரையும் கட்டுகிறார் *(1இராஜா 9:15)*.

சாலொமோன் கேசேரைக் கட்டுவதற்கு ஒரு முக்கியமான நோக்கமுள்ளது. சாலொமோன் கேசேரை ஏன் கட்டினார் என்றால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் புறப்பட்டுவந்து, அந்தக் கேசேர்பட்டணத்தைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்து, அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு, அதைச் சாலொமோனின் மனைவியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான் (1இராஜா 9:16). தன்னுடைய மனைவிக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்ட கேசேரை, சாலொமோன் நேர்த்தியாகக் கட்டுகிறார்.

சாலொமோன் அந்தக் கேசேர் பட்டணத்தையும், கீழ்ப்பெத்தொரோனையும், பாலாத்தையும், வனாந்தரவெளியிலுள்ள தத்மோரையும், தனக்கு இருக்கிற ரஸ்துக்களை வைக்கும் சகல பட்டணங்களையும், இரதங்கள் இருக்கும் பட்டணங்களையும், குதிரை வீரர் இருக்கும் பட்டணங்களையும், எருசலேமிலும் லீபனோனிலும், தான் அரசாண்ட தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார் (1இராஜா 9:17-19).

பார்வோனின் குமாரத்தி, தாவீதின் நகரத்திலிருந்து சாலொமோன் தனக்குக் கட்டின மாளிகையிலே குடிவருகிறாள்; அப்பொழுது சாலொமோன் மில்லோவைக் கட்டுகிறார் (1இராஜா 9:24).

சாலொமோன் முதலாவதாக கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார். அதன்பின்பு தன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பயன்படும் கட்டிடங்களைக் கட்டுகிறார். சாலொமோன் தன்னுடைய மனைவிக்கும் ஒரு கட்டிடத்தைக் கட்டுகிறார். இந்தக் கட்டிடம் கட்டப்பட்டு முடிந்தவுடன், சாலொமோனின் மனைவி, இந்த மாளிகைக்கு குடிவருகிறாள்.

மில்லோ என்பது பட்டணத்திலுள்ள ஒரு வீடு. இதன் பின்பு சாலொமோன் எருசலேமுக்கு அலங்கத்தைக் கட்டி அதைப் பலப்படுத்துகிறார். எருசலேம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜதானி பட்டணமாயிருக்கிறது. சாலொமோன் எருசலேமைத் தவிர மேலும் பல பட்டணங்களையும் கட்டுகிறார். இவற்றிற்கு அலங்கங்கள் கட்டப்படவில்லை. மெகித்தோ, ஆத்சோ ஆகியவை அலங்கமில்லாத பட்டணங்களாகும்.

பழங்காலத்தில் பட்டணங்களைப் போலவே அரண்களும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அக்காலத்தில் கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் இருந்த ஒரே வித்தியாசம்என்னவெனில், கிராமங்களில் அரண்கள் இருக்காது. பட்டணங்களில் அரண்கள் இருக்கும். பட்டணங்களைக் கட்டுவது என்பதற்கு ஏற்கெனவே உள்ள ஊரைச் சுற்றிலும் மதில்சுவரைக் கட்டுவது என்று பொருள்.

சில சமயங்களில் எருசலேமைப் போல ஒரு பட்டணத்திற்கு ஒன்றும் மேற்பட்ட மதில்சுவர்களும் இருந்தன. (2நாளா 32:5; 2இராஜா 25:4). மதில்களின் வெளிச்சுவரைச் சுற்றிலும் அகழிகளை அக்காலத்தில் தோண்டினார்கள். மதில்சுவர்களில் காவல் கோபுரங்களை அமைத்து, பட்டணத்தைப் பாதுகாத்தார்கள் (2நாளா 26:15; 2இராஜா 9:17).

சாலொமோன் ஆமாத்சோபாவுக்குப் போய், அதை ஜெயிக்கிறார் (2நாளா 8:3). சாலொமோன் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணி அவர்களுடைய பட்டணங்களை தனக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார். அந்நிய ஜாதியாரை சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திலே பட்டணங்களைக் கட்டும் வேலைகளில் பயன்படுத்துகிறார்.

சாலொமோன் ஒரே ஒரு யுத்தம் மட்டுமே பண்ணியிருக்கிறார். ஒருவேளை இந்தப் பட்டணத்தார் சாலொமோனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணியிருந்திருப்பார்கள். சாலொமோன் அவர்களை அடக்குகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் சங்காரம்பண்ணாதிருந்த இஸ்ரவேல் ஜாதியல்லாத ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியரில் மீதியான சகல ஜனத்திலும், அவர்களுக்குப்பிறகு தேசத்திலிருந்த அவர்கள் பிள்ளைகளை சாலொமோன் இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பகுதி கட்டச்செய்கிறார் (2நாளா 8:7,8).

சாலொமோன் தான் கட்டுகிற கட்டிட வேலைகளில் அமஞ்சி ஆட்களை பயன்படுத்துகிறார். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ணுகிற அந்நிய ஜாதியார். இஸ்ரவேல் புத்திரர் சங்காரம் பண்ணக்கூடாமல் மீந்திருந்த இஸ்ரவேல் புத்திரரின் ஜாதியல்லாத எமோரியர், ஏத்தியர், பெரிசியர், ஏவியர், எபூசியருமான சகல ஜனத்தாரும் இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறார்கள். அவர்களுக்குப் பிறகு இஸ்ரவேல் தேசத்தில் மீந்திருந்த சகல ஜனங்களுடைய பிள்ளைகளையும், சாலொமோன் இந்நாள்வரைக்கும் நடக்கிறதுபோல, அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொள்கிறார் (1இராஜா 9:20,21).

சாலொமோன் அந்நிய ஜாதியாரை மாத்திரம் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்துகிறார். சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் அடிமைப்படுத்தவில்லை; அவர்கள் யுத்தமனுஷரும், அவருக்குப் பணிவிடைக்காரரும், பிரபுக்களும், சேர்வைக்காரரும், இரதவீரரும், குதிரைவீரருமாயிருக்கிறார்கள் (1இராஜா 9:22).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருக்கிறார். கர்த்தர் விடுவித்த ஜனங்களை, சாலொமோன் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்தவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய பிள்ளைகள். அவர்களுக்கும் கர்த்தருக்கும் விசேஷித்த ஐக்கியம் இருக்கிறது.

சாலொமோன் இஸ்ரவேல் தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார். கட்டிட வேலைகளில் வேலை செய்ய சாலொமோனுக்கு ஏராளமானோர் தேவைப்படுகிறார்கள். இதற்காக சாலொமோன் அந்நிய தேசங்களிலிருந்து ஜனங்களை இஸ்ரவேல் தேசத்திற்கு வரவழைக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் ஏற்கெனவே புறஜாதியார் ஏராளமானோர் இருக்கிறார்கள். இஸ்ரவேலின் ராஜாக்கள் கானான் தேசத்திலிருந்து கானானியரை முற்றிலுமாய்த் துரத்திவிடவில்லை. கானானியரில் மீதமானவர்கள் இன்னும் கானான் தேசத்திலிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திலேயே வாசம்பண்ணுவதற்கு சாலொமோன் அனுமதி கொடுக்கிறார். ஆனால் அவர்கள் சும்மாயிருக்கக்கூடாது. அவர்கள் சாலொமோனுக்கு கட்டிட வேலைகளை செய்யவேண்டும்.

சாலொமோன் இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரையும் தன் வேலையைச் செய்ய அடிமைப்படுத்தவில்லை; அவர்கள் யுத்த மனுஷரும், அவருடைய சேர்வைக்காரரின் தலைவரும், அவனுடைய இரதங்களுக்கும் குதிரைவீரருக்கும் தலைவருமாயிருக்கிறார்கள். ராஜாவாகிய சாலொமோனுடைய ஊழியக்காரரின் தலைவராகிய இவர்களில் இருநூற்று ஐம்பதுபேர் ஜனத்தை ஆட்சி செய்கிறார்கள் (2நாளா 8:9,10).

அந்நிய ஜாதியாரைச் சாலொமோன் பகுதிகட்டச் செய்கிறார். தேவாலயத்திலும், தன்னுடைய அரமனையிலும், பட்டணங்களிலும் கட்டட வேலைக்கு அந்நிய ஜாதியாரைக் கட்டாயமாக உட்படுத்துகிறார் (2நாளா 8:3-8).

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை நேர்த்தியாய்க் கட்டி முடித்திருக்கிறார். இதனால் கர்த்தர் சாலொமோனுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கிறார். சாலொமோன் செழித்திருக்கிறார். சாலொமோன் இஸ்ரவேல் தேசமெங்கும் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டுகிறார்.

சாலொமோன் பேராசைப்படவில்லை. கட்டிடங்கள் கட்டவேண்டும் என்னும் ஆர்வம் அவருடைய மனதிலிருக்கிறது. அதே வேளையில் தன்னுடைய ஆசைகளையும் ஆர்வங்களையும், எவ்வாறு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது என்பதும் அவருக்கு தெரிந்திருக்கிறது. சாலொமோன் தனக்கு இஷ்டமானதையெல்லாம் கட்டின பின்பு, வேறு எதையும் கட்டவில்லை.

கர்த்தருடைய பெட்டி வந்த ஸ்தலங்கள் பரிசுத்தமாயிருக்கிறது; ஆதலால், இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதின் அரமனையிலே தன்னுடைய மனைவி வாசம்பண்ணலாகாது என்று சாலொமோன் தீர்மானம்பண்ணுகிறார். பார்வோனின் குமாரத்தியைத் தாவீதின் நகரத்திலிருந்து தான் அவளுக்குக் கட்டின மாளிகைக்குக் சாலொமோன் குடிவரப்பண்ணுகிறார் (2நாளா 8:11).

பார்வோனின் குமாரத்தி எகிப்து தேசத்தைச் சேர்ந்தவள். இவள் புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்திற்கு வந்திருக்கிறாள். பார்வோனின் குமாரத்தி யூதமார்க்கத்தைச் சேர்ந்தவளாகயிருந்தாலும், அவளுடைய வேலைக்காரர் எல்லோரும் யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்களா என்பது தெரியவில்லை. அவர்கள் எல்லோருமே எகிப்து தேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மத்தியிலே எகிப்தியரின் விக்கிரகங்கள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகங்களோ, விக்கிரகாராதனைகளோ இருக்கக்கூடாது. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களை ஒடுக்குவதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ சாலொமோன் முன்வரவில்லை. சாலொமோன் கர்த்தர்மீது வைத்திருக்கிற பக்தி வைராக்கியம் குறைவாயிருக்கிறது. ஆகையினால் சாலொமோன் பார்வோனின் குமாரத்தியை தண்டிக்காமல், அவளுக்காக ஒரு மாளிகையைக் கட்டி, அதிலே குடிவரப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பெட்டி வந்த ஸ்தலங்கள் பரிசுத்தமாயிருக்கிறது. பார்வோனின் குமாரத்தி இதுவரையிலும் தாவீதின் அரமனையிலே வாசம்பண்ணுகிறாள். தாவீது இந்த அரமனையிலிருந்து ஏராளமான ஜெபங்களை கர்த்தருடைய சமுகத்திலே ஏறெடுத்திருக்கிறார். அவர் இந்த அரமனையிலிருந்து, கர்த்தரைத் துதித்துப்பாடும் கீதங்களையும் இயற்றியிருக்கிறார். சாலொமோன் தாவீதின் அரமனையை சுத்தம்பண்ணுகிறார். தன்னுடைய மனைவியை அந்த அரமனையிலிருந்து வெளியேற்றுகிறார்.

கர்த்தருடைய ஆலயமும், சாலொமோனின் அரமனையும் கட்டப்படும்போது, சாலொமோன் தாவீதின் அரமனையிலே தங்கியிருக்கிறார். தாவீதின் நகரத்தில் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருக்கிறது. ஆகையினால் தாவீதின் நகரத்தைச் சாலொமோன் பரிசுத்த ஸ்தலமாகக் கருதுகிறார். தன்னுடைய அந்நிய ஜாதி மனைவி பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணுவது சரியல்ல என்று நினைக்கிறார். இதற்காக அவளுக்கு தனியாக ஒரு மாளிகையைக் கட்டி, அங்கு அவளைக் குடிவரப்பண்ணுகிறார்.

ஆனாலும் இதன் பின்பு சாலொமோன் அநேக அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணுகிறார். அவர்கள் சாலொமோனின் இருதயத்தைக் கர்த்தரைவிட்டு விலகிப்போகப்பண்ணுகிறார்கள். (1இராஜா 11:1-9).

கர்த்தருக்கு ஆராதனை

2நாளா 8:12-18

2நாளா 8:12. அதுமுதற்கொண்டு சாலொமோன் தான் மண்டபத்திற்கு முன்பாகக் கட்டியிருந்த கர்த்தருடைய பலிபீடத்தின் மேல்,

2நாளா 8:13. ஒவ்வொரு நாளின் கட்டளைக்குத்தக்கதாய் மோசேயுடைய கற்பனையின்படியே ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும், வருஷத்தில் மூன்றுதரம் ஆசரிக்கிற பண்டிகைகளாகிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப் பண்டிகையிலும், கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான்.

2நாளா 8:14. அவன் தன் தகப்பனாகிய தாவீதுடைய பிரமாணத்தின்படியே, ஆசாரியர்கள் தங்கள் தங்கள் ஊழியத்தைச் செய்யும் வகுப்புகளையும், லேவியர் ஒவ்வொரு நாளின் கட்டளைப்படியே துதித்து சேவித்து ஆசாரியருக்கு முன்பாகத் தங்கள் ஊழியத்தைச் செய்யும் முறைகளையும், வாசல் காப்பவர்கள் ஒவ்வொரு வாசலில் காவல்காக்கும் வகுப்புகளையும் நிற்கப்பண்ணினான்; தேவனுடைய மனுஷனாகிய தாவீது இப்படிக் கட்டளையிட்டிருந்தான்.

2நாளா 8:15. சகல காரியத்தையும் பொக்கிஷங்களின் காரியத்தையும் குறித்து, ராஜா ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்த கட்டளையை விட்டு அவர்கள் விலகாதிருந்தார்கள்.

2நாளா 8:16. இப்படியே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்ட நாள் முதல் அதை முடிக்குமட்டும் சாலொமோனின் வேலையெல்லாம் நடந்தேறிக் கர்த்தருடைய ஆலயம் கட்டித்தீர்ந்தது.

2நாளா 8:17. பின்பு சாலொமோன் ஏதோம் தேசத்துக் கடல் ஓரத்திலிருக்கும் எசியோன்கேபேருக்கும் ஏலோத்துக்கும் போனான்.

2நாளா 8:18. அவனுக்கு ஈராம் தன் ஊழியக்காரர் முகாந்தரமாய்க் கப்பல்களையும், சமுத்திர யாத்திரையில் பழகின வேலையாட்களையும் அனுப்பினான்; அவர்கள் சாலொமோனின் வேலைக்காரரோடேகூட ஓப்பீருக்குப் போய், அங்கேயிருந்து நானூற்று ஐம்பது தாலந்து பொன்னை ஏற்றி ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டு வந்தார்கள்.

சாலொமோன் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார். அவர் கர்த்தருக்கு ஆலயம் கட்டியிருக்கிறார். அந்த ஆலயத்திலே கர்த்தரைத் துதித்து ஆராதிக்கும் ஆராதனை நடைபெறுகிறது. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு எவ்வளவு பொக்கிஷத்தை செலவழித்திருந்தாலும், அந்த ஆலயத்திலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை நடைபெறவில்லையென்றால், ஆலயக்கட்டிடத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை.

கர்த்தருடைய ஆலயத்திலே, அவரைத் துதித்து ஆராதிக்கும் ஆராதனைகள் நடைபெறவேண்டும் என்பதில் சாலொமோன் அதிக கவனமாயிருக்கிறார்.

சாலொமோன் தான் மண்டபத்திற்கு முன்பாகக் கட்டியிருந்த கர்த்தருடைய பலிபீடத்தின் மேல், ஒவ்வொரு நாளின் கட்டளைக்குந்தக்கதாய் மோசேயுடைய கற்பனையின்படியே ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும், வருஷத்தில் மூன்றுதரம் ஆசரிக்கிற பண்டிகைகளாகிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார் *(2நாளா 8:12,13).*

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதோடு, அவர் கர்த்தரிடத்தில் பயபக்தியாயும் இருக்கிறார். சாலொமோன் வருஷத்தில் மூன்றுமுறை பலிசெலுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு வருஷமும் மூன்று விசேஷித்த பண்டிகைகளை ஆசரிப்பது வழக்கம். அவையாவன: 1. பஸ்கா பண்டிகை 2. அறுப்பின் பண்டிகை அல்லது பெந்தெகொஸ்தே பண்டிகை 3. கூடாரங்களின் பண்டிகை.

சாலொமோன் கர்த்தரின் ஆலயத்தைக்கட்டி முடித்தபின்பு, அவருக்குக் கட்டின பலிபீடத்தின்மேல் வருஷத்தில் மூன்றுமுறை சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு, கர்த்தரின் சந்நிதியில் இருக்கிற பலிபீடத்தின்மேல் தூபங்காட்டிவருகிறார்.

சாலொமோன் கர்த்தருக்கு பலிபீடத்தையும் கட்டுகிறார். தான் கட்டின பலிபீடத்தில் சாலொமோன் கர்த்தருக்கு பலிகளையும் செலுத்துகிறார். சாலொமோன் பலிபீடத்தை பயன்படுத்துகிறார். ஒரு சிலர் பலிபீடத்தைக் கட்டுவார்கள். ஆனால் அதில் பலி செலுத்தமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவிசெய்ய முன்வருவார்கள். தங்களுடைய சொந்த ஆவிக்குரிய ஜீவியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அதைப் புறக்கணித்துவிடுவார்கள்.

சாலொமோனோ கர்த்தருக்காக பலிபீடத்தையும் கட்டுகிறார். அந்தப் பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிகளையும் செலுத்துகிறார். சாலொமோன் கர்த்தரிடத்திலிருந்து தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறார். அவர் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளவும், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவும் சாலொமோன் உதவிசெய்கிறார்.

புதியஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய பலிபீடத்திலே ஆடுமாடுகளை பலியிடவேண்டியதில்லை. நாம் கர்த்தருக்கு முன்பாக ஆவிக்குரிய பலிகளை செலுத்தவேண்டும். நாம் கர்த்தருக்கு துதியின் பலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் செலுத்தவேண்டும்.

சாலொமோன் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும், வருஷத்தில் மூன்றுதரம் ஆசரிக்கப்படும் பண்டிகைகளிலும் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்தினார். நாமோ கர்த்தருக்கு அனுதினமும் ஸ்தோத்திர பலிகளை செலுத்தவேண்டும். நம்முடைய வாயில் கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், ஸ்தோத்திரங்களும் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும். கர்த்தரைத் துதிப்பதற்காகவும், அவரை ஆராதிப்பதற்காகவும் விசேஷித்த வேளைகளையும், காலங்களையும் நிர்ணயம்பண்ணுவது நமக்கு நல்லது.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய பிரமாணத்தின்படியே, ஆசாரியர்கள் தங்கள் தங்கள் ஊழியத்தைச் செய்யும் வகுப்புகளையும், லேவியர் ஒவ்வொரு நாளின் கட்டளைப்படியே துதித்து சேவித்து ஆசாரியருக்கு முன்பாகத் தங்கள் ஊழியத்தைச் செய்யும் முறைகளையும், வாசல் காப்பவர்கள் ஒவ்வொரு வாசலில் காவல்காக்கும் வகுப்புகளையும் நிற்கப்பண்ணுகிறார். தேவனுடைய மனுஷனாகிய தாவீது இப்படிக் கட்டளையிட்டிருந்தார் (2நாளா 8:14).

தாவீது இந்த வசனப்பகுதியில் "தேவனுடைய மனுஷன்" என்று அழைக்கப்படுகிறார். தாவீதைப்போலவே மோசேயும் "தேவனுடைய மனுஷன்" என்று அழைக்கப்பட்டார். கர்த்தர் தாவீதுக்கு தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். தாவீது இந்தப் பிரமாணத்தின்படி லேவியரின் வகுப்புகளை பிரிக்கிறார். வாசல்காக்கிறவர்களின் வகுப்புகளையும் நிற்கப்பண்ணுகிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் ஆசாரியரின் வகுப்புகளையும் நியமிக்கிறார்.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய பிரமாணத்தின்படியே, கர்த்தருடைய ஆலயத்திலே, ஆராதனை நடைபெறுவதற்கு கட்டளையிடுகிறார். சகல காரியத்தையும் பொக்கிஷங்களின் காரியத்தையும் குறித்து, ராஜா ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்த கட்டளையை விட்டு அவர்கள் விலகாதிருக்கிறார்கள் (2நாளா 8:15).

இப்படியே கர்த்தருடைய ஆலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்ட நாள் முதல் அதை முடிக்குமட்டும் சாலொமோனின் வேலையெல்லாம் நடந்தேறிக் கர்த்தருடைய ஆலயம் கட்டித்தீருகிறது (2நாளா 8:16).

சாலொமோன் அந்நிய தேசத்தாரோடு கடல் கடந்து வாணிபம் செய்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். இது ஐசுவரியம் மிகுந்த தேசம். ஆனாலும் இஸ்ரவேல் தேசத்திற்குத் தேவையான பொன் ஒப்பிரிலிருந்து வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஞானமும் விவேகமுமுள்ளவர்கள். ஆனாலும் அவர்கள் தீரு ராஜாவின் ஊழியக்காரருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் சமுத்திர யாத்திரையில் பழகினவர்கள். சாலொமோன் அவர்களை தன்னுடைய வாணிபத்தில் பயன்படுத்திக்கொள்கிறார்.

சாலொமோன் ஏதோம் தேசத்துக் கடல் ஓரத்திலிருக்கும் எசியோன்கேபேருக்கும் ஏலோத்துக்கும் போகிறார். சாலொமோனுக்கு ஈராம் தன் ஊழியக்காரர் முகாந்தரமாய்க் கப்பல்களையும், சமுத்திர யாத்திரையில் பழகின வேலையாட்களையும் அனுப்புகிறார்; அவர்கள் சாலொமோனின் வேலைக்காரரோடேகூட ஓப்பீருக்குப் போய், அங்கேயிருந்து நானூற்று ஐம்பது தாலந்து பொன்னை ஏற்றி ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டு வருகிறார்கள் (2நாளா 8:17,18).

ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்விக்கிறார். இவையெல்லாம் வியாபாரக்கப்பல்கள். எசியோன்கேபேர் சிவந்த சமுத்திரத்திலுள்ள துறைமுகப்பட்டணம். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் சுற்றி அலைந்தபோது, அவர்கள் எசியோன்கேபேரிலே பாளயமிறங்கினார்கள். "எப்ரோனாவிலிருந்து புறப்பட்டுப்போய், எசியோன் கேபேரிலே பாளயமிறங்கினார்கள்" (எண் 33:35).

சாலொமோனுடைய வியாபாரக்கப்பலில் வேலை செய்கிறவர்கள் ஓப்பீருக்குப்போய், அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன்னை ராஜாவாகிய சாலொமோனிடத்தில் கொண்டுவருகிறார்கள் (1இராஜா 9:28). ஓப்பீர் என்பது இக்காலத்து இலங்கை அல்லது ஸ்ரீலங்காவைக் குறிக்கும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். சாலொமோனுடைய காலத்தில் பொன் வணிகம் பிரதானமாக நடைபெறுகிறது.

சாலொமோனுடைய கப்பல்களில், ஈராமின் கப்பலாட்களும் உதவிக்கு போகிறார்கள். ஈராம் அந்தக் கப்பல்களில் சமுத்திர யாத்திரையில் பழகின கப்பலாட்களாகிய தன் வேலைக்காரரைச் சாலொமோனுடைய வேலைக்காரரோடேகூட அனுப்புகிறார். இதற்காக ஈராம் சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன் அனுப்பியிருந்தார் (1இராஜா 9:14).

சாலொமோன் இப்போது தனக்கு தனியாக கப்பல்களைக் கட்டுகிறார். இந்தக் கப்பல்களில் ஈராமின் கப்பலாட்கள் கூடப்போகவில்லை. சாலொமோன் சொந்தமாக வியாபாரம்பண்ணுகிறார். சாலொமோன் ஈராமோடு சேர்ந்து கூட்டாக வியாபாரம் பண்ணாவிட்டாலும், தன்னுடைய வேலைக்காரரோடு, ஈராமின் கப்பலாட்களையும், தன்னுடைய கப்பல்களில் அனுப்புகிறார். தீருவின் கப்பலாட்களுக்கு சாலொமோன் தனியாக சம்பளம் கொடுத்து, அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார். ஈராமின் கப்பலாட்களுக்கு சமுத்திர யாத்திரையில் பழக்கமுண்டு.

ஒரு தேசம் மற்றொரு தேசத்தை சார்ந்திருக்கிறது. ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருக்கு உதவிசெய்யவேண்டும். தங்களுடைய தேசத்திலுள்ள பொருட்களை விற்கவேண்டும். மற்ற தேசத்திலுள்ள பொருட்களை வாங்கவேண்டும். அப்போதுதான் எல்லா தேசத்தாருக்கும் செழிப்பு வரும். விசுவாசிகளாகிய நாமும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும். விசுவாசிகளெல்லோருமே, ஒரே சரீரமாகிய சபையில், வெவ்வேறு அவயவங்களாயிருக்கிறோம்.

சாலொமோனுடைய வேலைக்காரர் அவருக்கு நானூற்று இருபது தாலந்து பொன்னைக் கொண்டு வருகிறார்கள். சாலொமோன் வியாபாரம்பண்ணி இந்தப் பொன்னை சம்பாதிக்கிறார். சாலொமோனுடைய தகப்பனாராகிய தாவீதோ, தேசங்கள்மீதும் ஜாதிகள்மீதும் யுத்தம்பண்ணி, இதைவிட அதிகமான பொன்னை, கொள்ளைப்பொருளாய்க் கொண்டு வந்தார். சாலொமோன் சம்பாதித்தது நானூற்று இருபது தாலந்து பொன். தாவீது சம்பாதித்ததோ ஒருலட்சம் தாலந்து பொன்.

"இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன்; நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய்" (1நாளா 22:14).

"அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்" (1நாளா 29:4).

சாலொமோன் கப்பல்களை அனுப்பி வியாபாரம்பண்ணினாலும், பொன்னை சம்பாதித்தாலும், அவர் இதைவிட பெரிய ஊழியத்தையும் செய்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கிறார்.

"ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். அதின் வர்த்தகம் வெள்ளி வர்த்தகத்திலும், அதின் ஆதாயம் பசும்பொன்னிலும் உத்தமமானது" (நீதி 3:13,14).

பல தேசங்களில் இருக்கும் ஐசுவரியங்களை எருசலேமுக்குக் கொண்டு வருவதற்காகச் சாலொமோனும், ஈராமும் இணைந்து, கப்பல்களை அனுப்புகிறார்கள். அந்தக் கப்பல்களில் ஈராமின் ஊழியக்காரரும், சாலொமோனின் ஊழியக்காரரும் தூரதேசங்களுக்குப் போய், அங்கிருந்து ஐசுவரியங்களைச் சாலொமோனிடம் கொண்டு வந்து சேர்க்கிறார்கள் (2நாளா 8:17-18).

"நானூற்று ஐம்பது தாலந்து பொன்" என்பது 1இராஜா 9:28 ஆவது வசனத்தில் 420 தாலந்து பொன் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் முரண்பாடு எதுவுமில்லை. இவர்களுடைய ஊழியக்காரர்கள் பலதடவை கப்பற் பிரயாணங்களை மேற்கொண்டு, வெவ்வேறு அளவுகளில் ஐசுவரியங்களைச் சாலொமோனுக்குத் திரும்பக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

கானான் தேசம் கர்த்தருக்கு விசேஷமான தேசம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். விசுவாசிகளாகிய நமக்கு பொன்னும் வெள்ளியும் மெய்யான ஐசுவரியமல்ல. கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமே நமக்கு மெய்யான ஐசுவரியம்.

சமுத்திர யாத்திரையை பழகுவது என்பது விசுவாசிகளாகிய நமக்கு மெய்யான ஞானமல்ல. கர்த்தரைப்பற்றிய அறிவும், அவருடைய பிரமாணத்தைப்பற்றிய அறிவுமே நமக்கு மெய்யான ஞானம்.

9 அதிகாரம்

சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்திலும், அந்நிய தேசங்களிலும் கீர்த்தியுள்ளவராயிருக்கிறார். சாலொமோன் ராஜாவைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் 1இராஜா 10-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. நாளாகமம் புஸ்தகத்தில் புதிய செய்திகள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

1இராஜா 11-ஆவது அதிகாரத்தில் சாலொமோனுடைய கடைசி காலத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவருடைய மேன்மை மங்கிப்போன சம்பவங்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நாளாகமம் புஸ்தகத்தில், அதுபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இந்த அதிகாரத்தில் சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தார் என்று பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு, அவரைப் பார்ப்பதற்காக வருகிறாள் (2நாளா 9:1-12). சாலொமோனுடைய அரண்மனையும் ஐசுவரியங்களும் ஆடம்பரங்களும் (2நாளா 9:13-28). சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் முடிவு காலம் (2நாளா 9:29-31).

சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தி அதிகமாயிருக்கிறது. சாலொமோனுடைய வர்த்தமானங்கள் யாவும், அவருடைய கீர்த்தியை இன்னும் அதிகமாய் உயர்த்துகிறது. சாலொமோன் பிறருக்கு உதவி செய்ததாக ஒரு சம்பவம்கூட எழுதப்படவில்லை. ஆனாலும் அவர் தரித்திரருக்கு இரக்கம் காண்பித்திருப்பார். சாலொமோனுடைய பந்தியில் நேர்த்தியான போஜனம் இருக்கிறது. அவர் இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரையும் பசியாகவும் பட்டினியாகவும் கைவிட்டிருக்கமாட்டார்.

சாலொமோன் கட்டின தேவாலயத்திற்கு ஒப்பாக, வேறு யாரும் ஒரு கட்டிடமும் கட்டவில்லை. கர்த்தருடைய ஆலயம் உன்னதமாயிருக்கிறது. சாலொமோன் பாடசாலைகளையோ, கல்லூரிகளையோ கட்டவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருக்கிறது. சாலொமோன் தங்கியிருக்கும் அரமனையே, மிகப்பெரிய பாடசாலையாகவும், பல்கலைக் கழகமாகவும் இருக்கிறது.

சாலொமோனுடைய விசேஷித்த ஞானத்தைக் குறித்து சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்பட்டு சாலொமோன் ராஜாவினிடத்தில் வருகிறாள். அவள் எல்லாவற்றையும் குறித்து சாலொமோனிடத்தில் சம்பாஷிக்கிறாள். சேபாவின் ராஜஸ்திரீக்கு சாலொமோனுடைய ஞானத்தில் பூரண திருப்தி உண்டாயிற்று. அவள் சாலொமோன் ராஜாவுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறாள். சாலொமோன் ராஜாவும் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறார்.

சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவருடைய முக தரிசனத்தைத் தேடுகிறார்கள்.

சாலொமோனுக்கு வியாபாரத்தின் மூலமாக ஒவ்வொரு வருஷமும் ஏராளமான பொன் அவருடைய பொக்கிஷ சாலைக்கு வருகிறது. இவை தவிர தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்திற்கு ஒரு தரம் சாலொமோனுடைய அரமனைக்கு பொன்னையும், மற்ற பொருட்களையும் கொண்டு வரும். சாலொமோனுடைய முகதரிசனத்தை தேடிவருகிறவர்கள், வருஷாவருஷம், காணிக்கையாக பொன்னையும், வெள்ளியையும் மற்றும் அநேக வெகுமதிகளையும் கொண்டு வருகிறார்கள்.

சாலொமோன் ராஜா பொன்தகட்டால் பரிசைகளையும், கேடகங்களையும் செய்கிறார். அவர் பானபாத்திரங்களையும், லீபனோன் வனம் என்னும் மாளிகையின் பணிமுட்டுகளையும் பொன்னால் செய்கிறார். சாலொமோன் தந்தத்தினால் ஒரு பெரிய சிங்காசனத்தை செய்கிறார்.

சாலொமோன் சேர்த்த இரதங்களும் குதிரைவீரரும். சாலொமோன் எகிப்து தேசத்திலிருந்து தனக்கு குதிரைகளையும், புடவைகளையும், இரதங்களையும் வரவழைக்கிறார்.

சாலொமோன் ராஜா எருசலேமிலே வெள்ளியையும் கேதுரு மரங்களையும் அதிகமாக்குகிறார். சாலொமோனிடத்தில் ஏராளமான ஐசுவரியமும், அதிகமான ஞானமும் இருக்கிறது. ஆகையினால், பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும், ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவராயிருக்கிறார்.

சாலொமோன் ராஜா சகல ராஜாக்களைப் பார்க்கிலும் சிறந்தவராயிருந்தாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகவும், சாலொமோனிலும் பெரியவராகவும் இருக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ 2நாளா 9:1-12

2நாளா 9:1. சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டபோது, விடுகதைகளினாலே சாலொமோனைச் சோதிக்கிறதற்காக, மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள்; அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதிலிருந்த எல்லாவற்றையும் குறித்து அவனிடத்தில் சம்பாஷித்தாள்.

2நாளா 9:2. அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவித்தான்; அவளுக்கு விடுவிக்காதபடிக்கு ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை.

2நாளா 9:3. சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஞானத்தையும், அவன் கட்டின அரமனையையும்,

2நாளா 9:4. அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரக்காரரையும், அவர்கள் வஸ்திரங்களையும், கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொண்டு,

2நாளா 9:5. ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து, நான் என் தேசத்திலே கேட்ட செய்தி மெய்யாயிற்று.

2நாளா 9:6. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அவர்கள் வார்த்தைகளை நம்பவில்லை; உம்முடைய பெரிய ஞானத்தில் பாதியாகிலும் அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் அதிகம் உண்டாயிருக்கிறது.

2நாளா 9:7. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்.

2நாளா 9:8. உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீர் ராஜாவாயிருக்கும்படிக்கு, உம்மைத் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கப்பண்ண, உம்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; உம்முடைய தேவன் இஸ்ரவேலை என்றென்றைக்கும் நிலைநிறுத்தும்படிக்குச் சிநேகிக்கிறதினாலே, அவர் நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை அவர்கள்மேல் ராஜாவாக வைத்தார் என்றாள்.

2நாளா 9:9. அவன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுத்தான்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அப்படிப்பட்ட கந்தவர்க்கங்களைப்போல ஒருக்காலும் வரவில்லை.

2நாளா 9:10. ஓப்பீரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் வேலைக்காரரும் சாலொமோனின் வேலைக்காரரும் வாசனை மரங்களையும் இரத்தினங்களையும் கொண்டு வந்தார்கள்.

2நாளா 9:11. அந்த வாசனைமரங்களால் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்கினான்; அப்படிப்பட்டவைகள் அதற்கு முன்னே யூதேயா தேசத்தில் ஒருக்காலும் காணப்படவில்லை.

2நாளா 9:12. சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவுக்குக் கொண்டுவந்தவைகளைப் பார்க்கிலும் அதிகமாய் அவள் ஆசைப்பட்டுக் கேட்ட எல்லாவற்றையும் ராஜாவாகிய சாலொமோன் அவளுக்குக் கொடுத்தான்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடுங்கூட தன் தேசத்திற்குத் திரும்பிப்போனாள்.

இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்கள், ராஜாக்கள் புஸ்தகத்திலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாலொமோனை எடுத்துக்காட்டாக சொல்லியிருக்கிறார்.

"தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்" (மத் 12:42).

கர்த்தருடைய நாமத்தைக்குறித்துச் சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியைக்குறித்து சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்படுகிறாள். சாலொமோன் தன்னுடைய மகிமையிலும் மேன்மையிலும் உயர்ந்தவராயிருக்கிறார். அவரிடத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. சாலொமோன் வருஷத்திற்கு மூன்று தரம் கர்த்தருடைய பலிபீடத்திலே பலிகளை செலுத்துகிறார். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் பெயர் பிரஸ்தாபத்தையெல்லாம் கேள்விப்படுகிறாள்.

சேபா கானான் தேசத்திற்கு தென்திசையிலுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவளை "தென்தேசத்து ராஜஸ்திரீ" என்று சொல்லுகிறார். சேபா தேசம் ஆப்பிரிக்காவிலுள்ளது என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். எத்தியோப்பியாவிலுள்ள கிறிஸ்தவர்கள், சேபாவின் ராஜஸ்திரீயைப்பற்றிச் சொல்லும்போது, அவள் தங்கள் தேசத்தைச் சேர்ந்தவள் என்று நிச்சயத்தோடு சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற, "எத்தியோப்பியான் ராஜஸ்திரீயாகிய காந்தாகே" என்பவள், சேபாவின் ராஜஸ்திரீயினுடைய ராஜவம்சத்தை சேர்ந்தவளாயிருக்கவேண்டும். இவள் அரபு தேசத்தின் தென்பகுதியிலிருந்து வந்தவள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

"அந்தப்படி அவன் எழுந்துபோனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்துகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து" (அப் 8:27).

சேபாவின் ராஜஸ்திரீ எருசலேமுக்கு வருகிறாள். அவள் சாலொமோன் ராஜாவோடு வியாபாரம்பண்ணுவதற்காகவோ அல்லது இராணுவ ஒப்பந்தம் பண்ணுவதற்காகவோ வரவில்லை. அவள் கர்த்தருடைய நாமத்தைக் குறித்து சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறாள். சேபாவின் ராஜஸ்திரீ தன்னுடைய விடுகதைகளினால் சாலொமோனை சோதிக்கிறதற்காக, சாலொமோனிடத்தில் வருகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய உபதேசத்தைக் கேட்பதற்காக வந்திருக்கிறாள். அவள் சாலொமோனின் ஞானத்தைக் குறித்தும், கீர்த்தியைக் குறித்தும் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். சாலொமோனோடு சம்பாஷித்து தன்னுடைய ஞானத்தை விருத்திபண்ணுவதற்காக சேபாவின் ராஜஸ்திரீ அவரிடத்தில் வந்திருக்கிறாள்.

“தென்தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவாள்” *(மத் 12:42)*.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். அவர் தன்னுடைய ராஜாங்க காரியங்கள் அனைத்தையும் சீராகவும், சிறப்பாகவும், நேர்த்தியாகவும் நிர்வாகம்பண்ணுகிறார். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய ஆலோசனைகளைக் கேட்டு, தன்னுடைய ராஜாங்க திறமையை வளர்த்துக்கொள்வதற்காக சாலொமோனிடத்தில் வந்திருக்கிறாள். விசேஷமாக தேவனுடைய சத்தியங்களைக் குறித்து சாலொமோனிடத்தில் விளக்கம் பெறுவதற்காக அவள் இங்கே வந்திருக்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்ப்பதற்கு வெறுங்கையோடு வராமல், மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும், இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வருகிறாள். சாலொமோனிடத்தில் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவள் வந்திருந்தாலும், ஞானத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்ளாமல், அதற்குரிய கிரயத்தை கொண்டு வந்திருக்கிறாள்.

சாலொமோனிடத்திலும் ஏராளமான பொக்கிஷம் இருக்கிறது. அவர் தங்கத்திற்காகவோ, விலையேறப்பெற்ற கற்களுக்காகவோ தன்னுடைய ஞானத்தை விற்கவில்லை. சாலொமோனிடத்திலுள்ள ஞானம், கர்த்தர் அவருக்கு இலவசமாகக் கொடுத்தது. தான் கர்த்தரிடத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக்கொண்ட ஞானத்தை, சாலொமோன் சேபாவின் ராஜஸ்திரீக்கு இலவசமாகக் கொடுக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ தனக்கு காணிக்கையாக கொண்டு வந்த கந்தவர்க்கங்களையும், பொன்னையும், இரத்தினங்களையும் சாலொமோன் ஏற்றுக்கொள்கிறார். அதே வேளையில், ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுக்கிறார் *(1இராஜா 10:13)*.

சேபாவின் ராஜாஸ்திரீ, ஒரு ஸ்திரீயாகயிருப்பதினால் சாலொமோன் அவளை தாழ்வாக நினைத்து ஒதுக்கி தள்ளிவிடவில்லை. சாலொமோன் தன்னுடைய அரமனையில் அவளை வரவேற்கிறார். அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதில் இருந்த எல்லாவற்றையுங் குறித்து சாலொமோன் ராஜாவினிடத்தில் சம்பாஷிக்கிறாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார் *(1இராஜா 10:2,3)*.

சேபாவின் ராஜஸ்திரீ விடுகதைகளினால் சாலொமோனை சோதிக்கிறதற்காக அவரிடத்தில் வந்திருக்கிறாள் (1இராஜா 10:1). அவளுக்கு விடுவிக்கக்கூடாதபடிக்கு, ஒன்றாகிலும் சாலொமோன் ராஜாவுக்கு மறைபொருளாயிருக்கவில்லை. ராஜஸ்திரீ அரசியலைப்பற்றிக் கேட்டாலும், தெய்வீக சத்தியங்களைப்பற்றிக் கேட்டாலும், இயற்கையான காரியங்களைப்பற்றிக் கேட்டாலும், நீதிநெறி சம்பந்தமான காரியங்களைப்பற்றிக் கேட்டாலும் சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார்.

சாலொமோன் சேபாவின் ராஜஸ்திரீக்கு சகல காரியங்களையும் உபதேசம்பண்ணினாலும், இஸ்ரவேலின் மெய்யான தேவனைப்பற்றியும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப்பற்றியும், தேவனை உண்மையாய் ஆராதிப்பதுபற்றியும், சாலொமோன் அவளுக்கு தெளிவாக உபதேசம்பண்ணுகிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய வர்த்தமானங்களையும், அவருடைய ஞானத்தையும் குறித்து, தன்னுடைய தேசத்தில் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். ராஜஸ்திரீ தன்னுடைய செவிகளால் கேள்விப்பட்டதை, இப்போது தன்னுடைய கண்களால் காண்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவர் கட்டின அரமனையையும், அவர் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவர் ஊழியக்காரரின் வீடுகளையும், அவர் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவருடைய பானபாத்திரக்காரரையும், அவர் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொள்கிறாள் (1இராஜா 10:4,5).

சாலொமோனுடைய சகல வர்த்தமானங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் சாலொமோனுடைய ஞானமே இங்கு முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது.

அதன் பின்பு கடைசியாக, சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக சொல்லப்பட்டிருக்கிற காரியமே, சாலொமோனுடைய வர்த்தமானகளெல்லாவற்றிலும், மிகவும் உன்னதமானதாயிருக்கிறது. ஆவிக்குரிய காரியமே, எல்லா காரியங்களிலும் மேன்மையானது.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய வர்த்தமானங்களைப் பற்றி தன் தேசத்தில் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். இப்போது தான் ஏற்கெனவே கேள்விப்பட்டதை, தன்னுடைய கண்களால் காண்கிறாள். அவளுடைய மனதில் மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. அவளுடைய இருதயத்தில் பிரமை உண்டாயிற்று.

சேபாவின் ராஜஸ்திரீ, சாலொமோன் ராஜாவை நோக்கி, "உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன். நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது" (1இராஜா 10:6,7) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ தூரதேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்திருக்கிறாள். அவள் நீண்ட தூரம் பிரயாணம்பண்ணியதற்காக வருத்தப்படவில்லை. தன்னுடைய பிரயாணம் வீணாய்ப்போயிற்று என்று நினைத்து வேதனைப்படவில்லை. தான் மதியீனமாக இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டதாக நினைத்து அவள் கலக்கமடையவில்லை. சாலொமோனுடைய வர்த்தமானங்களைப் பார்ப்பதற்கு தனக்கு கிடைத்த வாய்ப்புக்காக சேபாவின் ராஜஸ்திரீ மிகவும் சந்தோஷப்படுகிறாள்.

ராஜஸ்திரீ ஏற்கெனவே சாலொமோனுடைய வர்த்தமானங்களையும், அவருடைய ஞானத்தையும் குறித்து தன்னுடைய தேசத்தில் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் இவற்றை ராஜஸ்திரீக்கு அறிவித்தவர்கள், சாலொமோனுடைய வர்த்தமானங்களிலும், அவருடைய ஞானத்திலும் பாதியைக்கூட அவளுக்கு அறிவிக்கவில்லை. சேபாவின் ராஜஸ்திரீ எருசலேமுக்கு வந்து, சாலொமோனுடைய வர்த்தமானங்களை நேரிலே பார்த்தபோதுதான், அவளுடைய மனதிலே மீதியும் அறிவிக்கப்படுகிறது.

சேபாவின் ராஜஸ்திரீ, சாலொமோனின் வர்த்தமானங்களையெல்லாம் பார்த்து, "நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது" என்று சொல்லுகிறாள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய கிருபையினால் அவரோடு ஐக்கியமாயிருக்கிறோம். கர்த்தரைப்பற்றிய சத்தியங்கள் நமக்கு ஓரளவு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. நாம் கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் இன்னும் ஏராளமாயிருக்கிறது. நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டதைவிட, இன்னும் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அதிகம்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நமக்கு இயேசுகிறிஸ்துவின் மகிமையைப்பற்றி எவ்வளவுதான் உபதேசம்பண்ணினாலும், அவர்களால் கிறிஸ்துவின் மகிமையை நமக்கு பூரணமாக சொல்ல முடியாது. நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசிக்கும்போது, நாம் கிறிஸ்துவின் பூரண மகிமையைக் காண்போம்.

"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1கொரி 2:9).

சாலொமோனுடைய அரமனையிலே ஏராளமான ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லோரும் பாக்கியவான்கள் என்று சேபாவின் ராஜஸ்திரீ அவர்களை வாழ்த்துகிறாள். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை நோக்கி, "உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்" (1இராஜா 10:8) என்று சொல்லுகிறாள். அவர்களெல்லோரும் சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்டு, தங்களுடைய ஞானத்தை விருத்திபண்ணிக்கொள்வார்கள்.

சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருந்தாலும், இந்த ஞானம் அவருடைய சுயஞானமல்ல என்பதையும், இது கர்த்தர் அவருக்கு கொடுத்திருக்கிற விசேஷித்த ஞானம் என்பதையும் சேபாவின் ராஜஸ்திரீ அறிந்துகொள்கிறாள். அதற்காக அவள் கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை நோக்கி, "உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின்மேல் வைக்க, உன்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக: கர்த்தர் இஸ்ரவேலை என்றைக்கும் சிநேகிக்கிறபடியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார்" (1இராஜா 10:9) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோன் ராஜாவை விடுகதைகளினால் சோதிக்க வந்தாள். சாலொமோன் ராஜாவும் அவள் தன்னிடத்தில் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார். ராஜஸ்திரீ இஸ்ரவேல் ஜனத்தாரையும், சாலொமோனுடைய ஊழியக்காரரையும் வாழ்த்துகிறாள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் துதிக்கிறாள். இப்போது அவள் எருசலேமிலிருந்து தன்னுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்க்க எருசலேமுக்கு வந்தபோது, மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் வந்தாள். ராஜஸ்திரீ தான்கொண்டு வந்த பொருட்களை ராஜாவுக்கு வெகுமதியாகக் கொடுக்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோன் ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுக்கிறாள்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அவ்வளவு கந்தவர்க்கங்கள் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை (1இராஜா 10:10).

கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பொன்னையும் கந்தவர்க்கங்களையும் இயேசுகிறிஸ்துவுக்கு காணிக்கையாக கொண்டு வந்தார்கள்.

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மாரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத் 2:11).

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட ஞானத்திற்கு, அவருக்கு கிரயம் செலுத்துகிறாள். அவள் எதையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. குறைந்த செலவில் அதிக லாபம் பெறவேண்டும் என்றும் அவள் பேராசைப்படவில்லை. ராஜஸ்திரீ சாலொமோனுக்கு பொன்னையும் கந்தவர்க்கங்களையும் இரத்தினங்களையும் காணிக்கையாகக் கொடுக்கிறாள்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு கர்த்தரைப்பற்றிய சகல சத்தியங்களையும் போதிக்கிறார். நாம் கர்த்தரைப்பற்றிய உபதேசங்களை கிரயம் செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருக்கு நம்முடைய இருதயங்களையே காணிக்கையாய்க் கொடுக்கவேண்டும். பொன்னையும் கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும்விட, நம்முடைய சுத்தமான இருதயமே கர்த்தர் விரும்புகிற காணிக்கையாயிருக்கிறது.

சாலொமோன் ராஜா சேபாவின் ராஜஸ்திரீயை அவளுடைய தேசத்திற்கு திருப்பி அனுப்பும்போது, அவளை வெறுங்கையோடு அனுப்பவில்லை. அவளுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்து, அவளுடைய தேசத்திற்கு திருப்பி அனுப்புகிறார்.

ராஜாவாகிய சாலொமோன்தானே சந்தோஷமாய்ச் சேபாவின் ராஜஸ்திரீக்கு வெகுமதிகள் கொடுத்ததும் அல்லாமல், அவள் விருப்பப்பட்டுக் கேட்டது எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுக்கிறார்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடே தன் தேசத்திற்குத் திரும்பிப் போகிறாள் (1இராஜா 10:13).

இந்த வசனப்பகுதியில் வாசனை மரங்களைப்பற்றியும் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. சேபாவின் ராஜஸ்திரீ இந்த வாசனை மரங்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். ஒப்பிரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும், ஒப்பீரிலிருந்து மிகுந்த வாசனைமரங்களையும் இரத்தினங்களையும் கொண்டுவருகிறது (1இராஜா 10:11).

சாலொமோன் ராஜா, அந்த வாசனைமரங்களால் கர்த்தருடைய ஆலயத்திற்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்குகிறார். அப்படிப்பட்ட வாசனைமரங்கள் பிற்பாடு வந்ததுமில்லை, இந்நாள்வரைக்கும் காணப்படவுமில்லை (1இராஜா 10:12).

கர்த்தர் தம்மை கனம்பண்ணுகிறவர்களை கனம்பண்ணுவார். "என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (1சாமு 2:30).

சாலொமோன் கர்த்தரை அதிகமாய்க் கனம்பண்ணினார். அவர் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார். அதை அழகுபடுத்தினார். சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணினார். சாலொமோன் தன்னுடைய ஞானத்தையும், ஐசுவரியத்தையும் கர்த்தருடைய நாமமகிமைக்காகவே பயன்படுத்தினார்.

கர்த்தர் இப்போது சாலொமோனைக் கனம்பண்ணுகிறார். சாலொமோனிடத்திலுள்ள ஞானமும் ஐசுவரியமும் அவருக்கு மிகுந்த மரியாதையையும், மதிப்பையும், மேன்மையையும் கொடுக்கிறது.

நமக்கு ஞானத்தின் முக்கியத்துவம் தெரியவேண்டும். மெய்யான ஞானம் எது என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். ஞானத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருக்கிறவர்கள், அதற்கு எவ்வளவு கிரயம் வேண்டுமானாலும் செலுத்தி, அதைப் பெற்றுக்கொள்வார்கள்.

சேபாவின் ராஜஸ்திரீ ஞானத்தை நேசிக்கிறாள். அவள் சாலொமோனுடைய கீர்த்தியைப்பற்றி கேள்விப்படுகிறாள். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டபோது, விடுகதைகளினாலே சாலொமோனைச் சோதிக்கிறதற்காக, மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும் இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வருகிறாள்; அவள் சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதிலிருந்த எல்லாவற்றையும் குறித்து அவனிடத்தில் சம்பாஷிக்கிறாள் *(2நாளா 9:1)*.

சேபாவின் ராஜஸ்திரீ வெகுதூரம் பிரயாணம் செய்து எருசலேமுக்கு வந்திருக்கிறாள். அவளுடைய முயற்சிகள் வீணாய்ப்போகவில்லை. கர்த்தரை சேவிப்பதுபற்றி அவள் சாலொமோனிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறாள். சேபாவின் ராஜஸ்திரீ இனிமேல் கர்த்தரை ஆராதனை செய்வாள். கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவாள். சாலொமோனைப் பார்க்க வந்ததற்காக, தான் பட்ட பிரயாசங்களும் கஷ்டங்களும் வீணாய்ப்போகவில்லை என்பதும், அதினால் தனக்கு மிகுந்த பிரயோஜனமுண்டாயிருக்கிறது என்பதும் சேபாவின் ராஜஸ்திரீக்கு தெரிந்திருக்கிறது.

பரலோகத்தைப்பற்றிய ஞானம் அதிக விலைமதிப்புள்ள முத்தைப்போன்றது. அதைப்பெற்றுக்கொள்வதற்கு, நாம் அதிக கிரயம் செலுத்தவேண்டியதாகயிருந்தாலும், அதை செலுத்தி, பரலோகத்தின் ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் ஒவ்வொருவருக்கும் ஒரு விசேஷித்த தாலந்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் தாலந்தை, அவருடைய நாமமகிமைக்காகவும், கர்த்தருடைய ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்தவேண்டும்.

கர்த்தர் சாலொமோனுக்கும் விசேஷித்த தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அவர் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், கர்த்தரைப்பற்றிய ஞானத்தை மற்றவர்களுக்கு போதிக்கிறார். தனக்கு தெரிந்திருக்கிற சத்தியங்களை சாலொமோன் மறைத்து வைக்கவில்லை. கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை மற்றவர்களுக்கு உபதேசம்பண்ண சாலொமோன் எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனிடத்தில் வந்தபோது, தன் மனதிலிருந்த எல்லாவற்றையும் குறித்து அவரிடத்தில் சம்பாஷிக்கிறாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளையெல்லாம் விடுவிக்கிறார்; அவளுக்கு விடுவிக்காதபடிக்கு ஒன்றாகிலும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருக்கவில்லை *(2நாளா 9:2)*.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய அரமனையையும், அவருடைய ஊழியக்காரரையும் பார்த்து ஆச்சரியப்படுகிறாள். சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய பானபாத்திரக்காரரையும், அவர் அரமனையையும், அவர் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவர் ஊழியக்காரரின் வீடுகளையும், அவர் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவருடைய பானபாத்திரக்காரரையும், அவர்கள் வஸ்திரங்களையும், கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும் நடைமண்டபத்தையும் கண்டபோது அவள் ஆச்சரியத்தால் பிரமைகொள்கிறாள் *(2நாளா 9:3,4)*.

சாலொமோனைப்போன்ற ஞானிகளோடு கூடயிருக்கிறவர்கள் எப்போதும் சந்தோஷமாயிருப்பார்கள். சாலொமோனின் ஞான வார்த்தைகள் அவரோடுகூடயிருக்கிறவர்களுக்கு மிகுந்த பிரயோஜனமாயிருக்கும். சாலொமோனைப்போலவே அவர்களும் ஞானத்திலே விருத்தியடைவார்கள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்த்து, "உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்" (2நாளா 9:7) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுடைய வர்த்தமானங்களைக் குறித்தும், அவருடைய ஞானத்தைக் குறித்தும் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். இப்போது அவள் சாலொமோனுடைய வர்த்தமானங்களை தன்னுடைய கண்களால் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனை நோக்கி, "உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து, நான் என் தேசத்திலே கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அவர்கள் வார்த்தைகளை நம்பவில்லை; உம்முடைய பெரிய ஞானத்தில் பாதியாகிலும் அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் அதிகம் உண்டாயிருக்கிறது" (2நாளா 9:5,6) என்று சொல்லுகிறாள்.

சாலொமோனுடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே விசேஷித்த ஞானத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்கும் மற்ற ஊழியக்காரர்களுக்கும் வெளிப்படையான வித்தியாசம் தெரிகிறது. இஸ்ரவேல் சபையார் மத்தியிலே அவர்களுக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கிறது. இஸ்ரவேல் சபையார் அவர்களை, "சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரர்" என்று அன்பாய் அழைக்கிறார்கள்.

"சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரானவர்கள்: சோதாயின் புத்திரர், சொபெரேத்தின் புத்திரர், பெருதாவின் புத்திரர்" *(எஸ்றா 2:55)*

"சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரானவர்கள்: சோதாயின் புத்திரர், சொபெரேத்தின் புத்திரர், பெரிதாவின் புத்திரர்" *(நெகே 7:57)*.

சாலொமோன் ஞானமும் நற்குணமுமுள்ளவர். இஸ்ரவேல் தேசம் செழிப்பாயிருக்கிறது. சாலொமோனிடத்தில் பெலமும் அதிகாரமும் இருக்கிறது. சாலொமோன் தயாள குணமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய கிருபை சாலொமோனிடத்தில் தங்கியிருக்கிறது.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனைப் பார்த்து, "உம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீர் ராஜாவாயிருக்கும்படிக்கு, உம்மைத் தம்முடைய சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கப்பண்ண, உம்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக; உம்முடைய தேவன் இஸ்ரவேலை என்றென்றைக்கும் நிலைநிறுத்தும்படிக்குச் சிநேகிக்கிறதினாலே, அவர் நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை அவர்கள்மேல் ராஜாவாக வைத்தார்" (2நாளா 9:8) என்று சொல்லுகிறாள்.

சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுக்கு மிகுதியான வெகுமதிகளைக் கொடுக்கிறாள். சாலொமோனும் அவளுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொடுக்கிறார்.

சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும், மிகுதியான கந்தவர்க்கங்களையும், இரத்தினங்களையும் கொடுக்கிறாள்; சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அப்படிப்பட்ட கந்தவர்க்கங்களைப்போல ஒருக்காலும் வரவில்லை (2நாளா 9:9).

சேபாவின் ராஜஸ்திரீ ராஜாவுக்குக் கொண்டுவந்தவைகளைப்பார்க்கிலும் அதிகமாய் அவள் ஆசைப்பட்டுக் கேட்ட எல்லாவற்றையும் ராஜாவாகிய சாலொமோன் அவளுக்குக் கொடுக்கிறார்; பின்பு அவள் தன் பரிவாரத்தோடுங்கூட தன் தேசத்திற்குத் திரும்பிப்போகிறாள் *(2நாளா 9:12)*.

சாலொமோனுக்கும், சேபாவின் ராஜஸ்திரீக்கும் ஞானத்தின் முக்கியத்துவமும், அதன் மதிப்பும் தெரிந்திருக்கிறது. ஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். ஞானத்தை நேசிக்கிறவர்கள் உலகப்பொருட்களை நேசிக்கமாட்டார்கள். அவர்களிடத்தில் கஞ்சத்தனம் இருக்காது. அவர்களுடைய கைகள் தாராளமாயும் உதாரத்துவமாயும் கொடுக்கும்.

சேபாவின் ராஜஸ்திரீயும், சாலொமோன் ராஜாவும் ஒருவருக்கொருவர் மிகுதியான காணிக்கைகளைக் கொடுத்து, தங்களுடைய சிநேகத்தை உறுதிபண்ணிக்கொள்கிறார்கள்.

ஒப்பீரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் வேலைக்காரரும் சாலொமோனின் வேலைக்காரரும் வாசனை மரங்களையும் இரத்தினங்களையும் கொண்டு வருகிறார்கள்.

சாலொமோன் அந்த வாசனைமரங்களால் கர்த்தருடைய ஆலயத்துக்கும் ராஜ அரமனைக்கும் ஊன்றுகால்களையும், சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் உண்டாக்குகிறார்; அப்படிப்பட்டவைகள் அதற்கு முன்னே யூதேயா தேசத்தில் ஒருக்காலும் காணப்படவில்லை *(2நாளா 9:10,11)*.

சாலொமோனுடைய ஐசுவரியம் 2நாளா 9:13-28

2நாளா 9:13. வியாபாரிகளும் வர்த்தகரும் கொண்டுவரும் பொன்னைத்தவிர, சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருந்தது.

2நாளா 9:14. அரபிதேசத்துச் சகல ராஜாக்களும் மாகாணங்களின் அதிபதிகளும் சாலொமோனுக்குப் பொன்னையும் வெள்ளியையும் கொண்டுவருவார்கள்.

2நாளா 9:15. ராஜாவாகிய சாலொமோன் இருநூறு பரிசைகளை அடித்த பொன்தகட்டால் செய்வித்தான்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறை பொன் தகட்டைச் செலவழித்தான்.

2நாளா 9:16. அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் உண்டாக்கினான்; ஒவ்வொரு கேடகத்திற்கு முந்நூறு சேக்கல் நிறை பொன்னைச் செலவழித்தான்; அவைகளை ராஜா லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைத்தான்.

2நாளா 9:17. ராஜா தந்தத்தினால் ஒரு பெரிய சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடினான்.

2நாளா 9:18. அந்தச் சிங்காசனத்துக்குப் பொன்னினால் செய்யப்பட்ட ஆறு படிகளும், ஒரு பாதபடியும், உட்காரும் இடத்திற்கு இருபுறத்திலும் கைச்சாய்மானங்களும் இருந்தது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நின்றது.

2நாளா 9:19. அந்த ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும் பன்னிரண்டு சிங்கங்கள் நின்றது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை.

2நாளா 9:20. ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னும், லீபனோன் வனம் என்னும் மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருந்தது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை.

2நாளா 9:21. ராஜாவின் கப்பல்கள் ஈராமின் வேலைக்காரருடன் தர்ஷீசுக்குப் போய்வரும்; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டு வரும்.

2நாளா 9:22. பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்தான்.

2நாளா 9:23. சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்பதற்கு பூமியின் ராஜாக்கள் எல்லாரும் அவன் முகதரிசனத்தைத் தேடினார்கள்.

2நாளா 9:24. வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப்பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருவார்கள்.

2நாளா 9:25. சாலொமோனுக்கு நாலாயிரம் குதிரை லாயங்களும் இரதங்களும் இருந்தது, பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள்; அவைகளை இரதங்கள் வைக்கும் பட்டணங்களிலும், அவர்களை எருசலேமில் தன்னிடத்திலும் ராஜா வைத்திருந்தான்.

2நாளா 9:26. நதிதுவக்கிப் பெலிஸ்தரின் தேசமட்டுக்கும் எகிப்தின் எல்லைவரைக்கும் இருக்கிற சகல ராஜாக்களையும் அவன் ஆண்டான்.

2நாளா 9:27. எருசலேமிலே ராஜா வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுருமரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்திமரங்கள்போலவும் அதிகமாக்கினான்.

2நாளா 9:28. எகிப்திலும் மற்ற தேசங்களிலுமிருந்து சாலொமோனுக்குக் குதிரைகள் கொண்டுவரப்பட்டது.

சாலொமோனுடைய கீர்த்தியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் இன்னும் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய ஐசுவரியம் மிகவும் அதிகமாயிருக்கிறது.

சாலொமோனுக்கு வியாபாரிகளாலும், சுகந்த திரவிய வர்த்தகராலும், அரபிதேசத்து சகல ராஜாக்களாலும், மகாணங்களின் அதிபதிகளாலும் வந்த பொன்னையல்லாமல், ஒவ்வொரு வருஷத்தில் அவருக்கு வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருக்கிறது (1இராஜா 10:14,15).

சாலொமோனுக்கு ஏற்கெனவே ஒப்பீரிலிருந்து நானூற்று இருபது தாலந்து பொன் வந்தது. அது தவிர இப்போது ஒவ்வொரு வருஷத்திலும் 666 தாலந்து பொன் வருகிறது. வியாபாரிகள் இஸ்ரவேல் தேசத்திலே வியாபாரம் பண்ண வரும்போது, சாலொமோன் அவர்களிடத்திலிருந்து சுங்கவரி வசூலிக்கிறார். சாலொமோனுடைய ஆளுகைக்கு கீழ்ப்பட்டிருக்கிற ராஜாக்கள் அவருக்கு வருஷாவருஷம் கப்பம் செலுத்துகிறார்கள். சாலொமோனின் பொக்கிஷசாலை பொன்னால் நிரம்பி வழிகிறது.

சாலொமோன் ராஜாவுக்குச் சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடேகூடத் தர்ஷீசின் கப்பல்களும் இருக்கிறது; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத்தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும் (1இராஜா 10:22).

சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்கிறதற்காக, சகல தேசத்தாரும் அவருடைய முக தரிசனத்தைத் தேடுகிறார்கள். வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப் பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருகிறார்கள் (1இராஜா 10:24,25).

சாலொமோன் எகிப்து தேசத்தாரோடு வியாபாரம்பண்ணுகிறார். சாலொமோன் தனக்குக் குதிரைகளையும் புடவைகளையும் எகிப்திலிருந்து அழைப்பிக்கிறார்; ராஜாவின் வர்த்தகர் புடவைகளை ஒப்பந்த விலைக்கிரயத்திற்கு வாங்குகிறார்கள். எகிப்திலிருந்து வந்த ஒவ்வொரு இரதத்தின் விலை அறுநூறு வெள்ளிக்காசும், ஒவ்வொரு குதிரையின் விலையும் நூற்றைம்பது வெள்ளிக் காசுமாயிருக்கிறது; இந்தப்பிரகாரம் ஏத்தியரின் ராஜாக்களெல்லாருக்கும், சீரியாவின் ராஜாக்களுக்கும், அவர்கள் மூலமாய்க் கொண்டுவரப்படுகிறது (1இராஜா 10:28,29).

சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷமும் வருகிற பொன் 666 தாலந்து நிறையாயிருக்கிறது. சாலொமோன் இந்தப் பொன்னையெல்லாம் தன்னுடைய பொக்கிஷ சாலையில் சேகரித்து வைக்கிறார். கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான பரிசுத்தமான பணிமுட்டுகளை பொன்னால் செய்கிறார்.

சாலொமோன் ராஜா, அடித்த பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்விக்கிறார்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் செல்கிறது. அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்விக்கிறார்; ஒவ்வொரு கேடகத்திற்கு மூன்று இராத்தல் பொன் செல்கிறது; சாலொமோன் ராஜா அவைகளை லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைக்கிறார் (1இராஜா 10:16,17).

பொன்தகட்டால் செய்யப்பட்ட பரிசைகளையும் கேடங்களையும் யுத்தக்களத்திலே பயன்படுத்த முடியாது. இவையெல்லாம் சாலொமோனுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காக செய்யப்பட்டிருக்கிறது. சாலொமோன் ராஜபவனியாக வரும்போது, அவருக்கு முன்பாக யுத்தவீரர்கள் பொன்பரிசைகளையும், பொன்கேடகங்களையும் ஏந்திக்கொண்டு போவார்கள். சாலொமோனின் ராஜபவனி ஆடம்பரமாயும் கம்பீரமாயும் இருக்கும்.

சாலொமோன் தன்னுடைய பெலத்தை யுத்தம்பண்ணுவதற்கு செலவுபண்ணவில்லை. தேசத்தின் பாதுகாப்புக்காகவும், ஐசுவரியங்களை பாதுகாப்பதற்காகவும் சாலொமோன் தன்னுடைய பெலத்தை செலவு பண்ணுகிறார்.

இதற்கு அடையாளமாக பொன்தகட்டால் பரிசைகளையும் கேடகங்களையும் செய்து, லீபனோன் வனம் என்னும் மாளிகையில் வைக்கிறார்.

சாலொமோன் ராஜா தந்தத்தினால் பெரிய சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடிகிறார். அந்தச் சிங்காசனத்திற்கு ஆறு படிகள் இருக்கிறது; சிங்காசனத்தின் தலைப்பு பின்னாக வளைவாயிருக்கிறது; உட்காரும் இடத்திற்கு இருபுறமும் கைச்சாய்மானங்கள் இருக்கிறது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நிற்கிறது. ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும், பன்னிரண்டு சிங்கங்கள் நிற்கிறது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை (1இராஜா 10:18-20).

யானைத்தந்தம் விலையேறப்பெற்றது. சாலொமோன் தந்தத்தினால் பெரிய சிங்காசனத்தை செய்கிறார். அவரிடத்தில் பொன்னும் ஏராளமாயிருக்கிறது. தன்னிடத்திலுள்ள பொன்னை என்ன செய்வது என்று சாலொமோனுக்கு தெரியவில்லை. ஆகையினால் தந்ததினால் செய்யப்பட்ட பெரிய சிங்காசனத்தை, பொன்தகட்டால் மூடுகிறார்.

ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னாயிருக்கிறது. லீபனோன் வனம் என்கிற மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருக்கிறது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை (1இராஜா 10:21).

சாலொமோனிடத்தில் பசும்பொன் ஏராளமாயிருப்பதினால், அவருடைய ராஜ்யத்தில் வெள்ளிக்கு மதிப்பில்லாமல் போயிற்று. சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை. நம்மிடத்தில் பரலோகத்தின் ஞானமும், பரலோகத்தின் ஐசுவரியமும் ஏராளமாயிருக்கும்போது, நாம் உலகப்பிரகாரமான ஞானத்திற்கும், உலகப்பிரகாரமான ஐசுவரியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டோம். பரலோகத்தின் ஞானம் பசும்பொன்னைவிட மேலானது. கர்த்தருடைய கிருபை உலகப்பிரகாரமான ஐசுவரியத்தைவிட உன்னதமானது.

சாலொமோன் கர்த்தரிடத்தில் ஐசுவரியத்தைக் கேட்கவில்லை. அவர் ஞானத்தையும், உணர்வுள்ள இருதயத்தையும் கேட்டார். கர்த்தரோ அவருக்கு ஞானத்தையும் கொடுத்தார். உணர்வுள்ள இருதயத்தையும் கொடுத்தார். அவர் கேட்காத ஐசுவரியத்தையும் கொடுத்தார். சாலொமோனிடத்தில் திரளான ஐசுவரியம் இருந்தாலும், சாலொமோன் முடிவிலே "எல்லாம் மாயை" என்று சொல்லுகிறார். உலகப்பிரகாரமான ஐசுவரியம் எப்போதுமே மாயையாயிருக்கும். பரலோகத்தின் ஆவிக்குரிய ஐசுவரியமே மெய்யான ஆசீர்வாதம்.

சாலொமோனுடைய ராஜ்யபாரம் ஆசீர்வாதமாயிருக்கிறது. அவருடைய அரண்மனையில் ஐசுவரியம் மிகுதியாயிருக்கிறது. சாலொமோனுடைய ராஜாசனத்திலே சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்திலே பாதுகாப்பு இருக்கிறது. சாலொமோன் ராஜா பெலமும் வல்லமையுமுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்து ராஜாக்களிலே சாலொமோனுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை.

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலையும் நாற்பது வருஷம் அரசாளுகிறார். அந்நிய தேசத்தார் சாலொமோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. அவர்கள் சாலொமோனை தங்கள் சத்துருவாகப் பாவிக்கவில்லை. அவர்கள் சாலொமோனுடைய சிநேகத்தை நாடுகிறார்கள். வியாபாரிகளும், அந்நிய தேசத்து ராஜாக்களும் சாலொமோனுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொண்டு வருகிறார்கள்.

வியாபாரிகளும் வர்த்தகரும் கொண்டுவரும் பொன்னைத்தவிர, சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் வந்த பொன் அறுநூற்று அறுபத்தாறு தாலந்து நிறையாயிருக்கிறது. அரபிதேசத்துச் சகல ராஜாக்களும் மாகாணங்களின் அதிபதிகளும் சாலொமோனுக்குப் பொன்னையும் வெள்ளியையும் கொண்டுவருவார்கள் (2நாளா 9:13,14).

சாலொமோன் அதிக கீர்த்தியுள்ளவராயிருக்கிறார். அவருடைய அரண்மனை ஆடம்பரமாயிருக்கிறது. சாலொமோனுடைய அரசாட்சியிலே நீதியும் நியாயமும் இருக்கிறது. அவர் ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் விசாரிக்கிறார். அவர்களுக்கு நீதியும் நியாயமுமான தீர்ப்பு சொல்லுகிறார்.

சாலொமோனிடத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. ராஜாவாகிய சாலொமோன் இருநூறு பரிசைகளை அடித்த பொன்தகட்டால் செய்விக்கிறார்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறை பொன் தகட்டைச் செலவழிக்கிறார்.

சாலொமோன் அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் உண்டாக்குகிறார்; ஒவ்வொரு கேடகத்திற்கு முந்நூறு சேக்கல் நிறை பொன்னைச் செலவழிக்கிறார். அவைகளை ராஜா லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைக்கிறார் (2நாளா 9:15,16).

சாலொமோன் தன்னுடைய அரண்மனையையும் அழகுபடுத்துகிறார். ராஜாவாகிய சாலொமோனுக்கு இருந்த பானபாத்திரங்களெல்லாம் பொன்னும், லீபனோன் வனம் என்னும் மாளிகையின் பணிமுட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருக்கிறது; ஒன்றும் வெள்ளியினால் செய்யப்படவில்லை; சாலொமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை (2நாளா 9:20).

ராஜா தந்தத்தினால் ஒரு பெரிய சிங்காசனத்தையும் செய்வித்து, அதைப் பசும்பொன்தகட்டால் மூடுகிறார். அந்தச் சிங்காசனத்துக்குப் பொன்னினால் செய்யப்பட்ட ஆறு படிகளும், ஒரு பாதபடியும், உட்காரும் இடத்திற்கு இருபுறத்திலும் கைச்சாய்மானங்களும் இருக்கிறது; இரண்டு சிங்கங்கள் கைச்சாய்மானங்கள் அருகே நிற்கிறது. அந்த ஆறு படிகளின்மேலும், இரண்டு பக்கத்திலும் பன்னிரண்டு சிங்கங்கள் நிற்கிறது; எந்த ராஜ்யத்திலும் இப்படிப் பண்ணப்படவில்லை (2நாளா 9:17-19).

இஸ்ரவேல் தேசத்திலே தங்கச்சுரங்கமோ அல்லது வெள்ளி சுரங்கமோ தோண்டப்படவில்லை. ஆனாலும் சாலொமோனிடத்தில் தங்கமும் வெள்ளியும் ஏராளமாயிருக்கிறது. சாலொமோனுடைய காலத்திலே அவரிடத்தில் இருந்த தங்கத்தைப்போல வேறு யாரிடத்திலும் இல்லை. சாலொமோனின் நாட்களில் வெள்ளி பொருளாய்க்கூட எண்ணப்படவில்லை.

சாலொமோனுடைய சிநேகத்தையும் சமாதானத்தையும் விரும்புகிற, அந்நிய தேசத்து ராஜாக்கள், அவருக்கு கப்பம் செலுத்துகிறார்கள். வெகுமதிகளைக் கொண்டு வருகிறார்கள். வியாபாரம்பண்ணுகிறவர்கள் சாலொமோன் ராஜாவின் தயவை எதிர்பார்க்கிறார்கள். அவருக்கு பரிசு பொருட்களை கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

சாலொமோன் ராஜாவின் கப்பல்கள் ஈராமின் வேலைக்காரருடன் தர்ஷீசுக்குப் போய்வரும்; தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்துக்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும், யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டு வரும் (2நாளா 9:21).

பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருக்கிறார். சாலொமோனின் இருதயத்திலே தேவன் அருளிய ஞானத்தைக் கேட்பதற்கு பூமியின் ராஜாக்கள் எல்லாரும் அவருடைய முகதரிசனத்தைத் தேடுகிறார்கள். வருஷாவருஷம் அவரவர் தங்கள் காணிக்கையாகிய வெள்ளிப்பாத்திரங்களையும், பொற்பாத்திரங்களையும், வஸ்திரங்களையும், ஆயுதங்களையும், கந்தவர்க்கங்களையும், குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் கொண்டுவருவார்கள் (2நாளா 9:22-24).

சாலொமோன் ராஜா, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே பிறந்தபோது, கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் அவருக்கு பரிசுப்பொருட்களை கொண்டு வந்து கொடுத்தார்கள்.

"அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மாரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத் 2:11).

"பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள்" (சங் 76:11).

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம 12:1).

சாலொமோனுக்கு நாலாயிரம் குதிரை லாயங்களும் இரதங்களும் இருக்கிறது, பன்னீராயிரம் குதிரைவீரரும் இருக்கிறார்கள்; எகிப்திலும் மற்ற தேசங்களிலுமிருந்து சாலொமோனுக்குக் குதிரைகள் கொண்டுவரப்படுகிறது (2நாளா 9:28).

"சாலொமோனுக்கு நாலாயிரம் குதிரை லாயங்களும் இரதங்களும் இருந்தது" என்று 2நாளா 9:25 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 1இராஜா 10:26 ஆவது வசனத்தில் 1,400 இரதங்கள் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வசனங்களிலும் முரண்பாடுகள் எதுவுமில்லை. ஏனெனில் இங்கு குதிரை லாயங்களைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. இரதங்களின் எண்ணிக்கை இந்த வசனத்தில் கொடுக்கப்படவில்லை. ஒரு இரதத்திற்கு 2 அல்லது 3 குதிரைகள் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. (2நாளா 9:21).

சாலொமோன் அவைகளை இரதங்கள் வைக்கும் பட்டணங்களிலும், அவர்களை எருசலேமில் தன்னிடத்திலும் வைத்திருக்கிறார். சாலொமோன் நதிதுவக்கிப் பெலிஸ்தரின் தேசமட்டுக்கும் எகிப்தின் எல்லைவரைக்கும் இருக்கிற சகல ராஜாக்களையும் ஆட்சி செய்கிறார் *(2நாளா 9:25,26).*

எருசலேமிலே சாலொமோன் ராஜா வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுருமரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்திமரங்கள்போலவும் அதிகமாக்குகிறார் *(2நாளா 9:27).*

சாலொமோனுடைய நடபடிகள் 2நாளா 9:29-31

2நாளா 9:29. சாலொமோனுடைய ஆதியந்தமான மற்ற நடபடிகள் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் புஸ்தகத்திலும், சீலோனியனாகிய அகியா எழுதின தீர்க்கதரிசனத்திலும், நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமைக்குறித்து ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோ எழுதின தரிசனங்களிலும் அல்லவோ எழுதியிருக்கிறது.

2நாளா 9:30. சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் நாற்பது வருஷம் அரசாண்டான்.

2நாளா 9:31. பின்பு சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்; அவனை அவன் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய ரெகொபெயாம் ராஜாவானான்.

ஒரு தரம் பிறப்பதும் பின்பு மரிப்பதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருப்பதுபோலவே, சாலொமோனுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோனிடத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. அவரிடத்தில் ராஜாசனத்தின் பெருமையும், மேன்மையும், அதிகாரமும், வல்லமையும் இருக்கிறது. ஆனாலும் அவர் இப்போது மரிக்கும் நிலமையிலிருக்கிறார். சாலொமோன் மரிக்கும்போது, அவரால் தன்னுடைய பொக்கிஷங்களை தன்னோடு எடுத்துச் செல்ல முடியாது. எல்லாவற்றையும் இந்தப் பூமியிலே விட்டு விட்டுப்போகவேண்டும்.

சாலொமோன் பிரசங்கி புஸ்தகத்தில் ஞானமுள்ளவனைப்பற்றியும் மதியீனனைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்.

"சூரியனுக்குக்கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன்; எனக்குப் பின்வரப்போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போகவேண்டியதாகுமே. அவன் புத்திமானாயிருப்பானோ, மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? ஆகிலும் சூரியனுக்குக்கீழே நான் பிரயாசப்பட்டு ஞானமாய்ச் சம்பாதித்த சகல வஸ்துக்களின்பேரிலும் அவன் அதிகாரியாவான்; இதுவும் மாயையே" *(பிர 2:18,19).*

சாலொமோனுடைய ஆதியந்தமான மற்ற நடபடிகள் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் புஸ்தகத்திலும், சீலோனியனாகிய அகியா எழுதின தீர்க்கதரிசனத்திலும், நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமைக்குறித்து ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோ எழுதின தரிசனங்களிலும் அல்லவோ எழுதியிருக்கிறது *(2நாளா 9:29).*

சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலையெல்லாம் நாற்பது வருஷம் அரசாட்சி செய்கிறார். பின்பு சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைகிறார். சாலொமோனை அவர் தகப்பனாகிய தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள்; சாலொமோனுயை ஸ்தானத்திலே அவர் குமாரனாகிய ரெகொபெயாம் ராஜாவாகிறான் *(2நாளா 9:30,31).*

இஸ்ரவேலின் மூன்றாவது ராஜாவாகிய சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலையும், நாற்பது வருஷங்கள் அரசாட்சி செய்கிறார். இவனுக்குப் பின்பு, இவருடைய குமாரன் ரெகொபெயாம் சமஸ்த இஸ்ரவேலைச் சிறிது காலமே அரசாட்சி செய்கிறான். அதன் பின்பு, சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டு ராஜ்யமாகப் பிளவுண்டது. சவுல், தாவீது, சாலொமோன் ஆகிய மூன்று ராஜாக்கள் ஒவ்வொருவரும் நாற்பது வருஷங்கள் ஆட்சி புரிந்தார்கள் (2நாளா 9:30; அப் 13:21; 2சாமு 5:4). தாவீது யூதாவின்மீது ஏழரை வருஷமும், சமஸ்த இஸ்ரவேலின்மீது 33 வருஷமும் ஆட்சி புரிந்திருக்கிறார் (2சாமு 5:5).

சாலொமோன் தன்னுடைய முதிர்வயதிலே பாவத்திலே விழுந்தார். கர்த்தர் அவரை முற்றிலுமாக கீழே தள்ளிவிடவில்லை. சாலொமோனுடைய பாவங்களைப்பற்றி மறுபடியுமாய்ச் சொல்லப்படவில்லை. சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். கர்த்தரிடத்திலிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்.

பரிசுத்த வேதாகமத்திலே, சாலொமோனுடைய பாவங்கள், அவருக்கு விரோதமாகச் சொல்லப்படவில்லை. சாலொமோன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்தியதினால் கர்த்தர் அவருடைய பாவங்களை மன்னித்து மறந்துவிடுகிறார். கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்போது, அவர் அதை மறுபடியும் நினைத்துப் பார்ப்பதில்லை.

"பின்னும் சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லும்போது, அவன் தன் பாவத்தைவிட்டுத்திரும்பி, நியாயமும் நீதியுஞ்செய்து, துன்மார்க்கன் தான் வாங்கின அடைமானத்தையும் தான் கொள்ளையிட்ட பொருளையும் திரும்பக்கொடுத்துவிட்டு, அநியாயம் செய்யாதபடி ஜீவப்பிரமாணங்களில் நடந்தால், அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். அவன் செய்த அவனுடைய எல்லாப் பாவங்களும் அவனுக்கு விரோதமாக நினைக்கப்படுவதில்லை; அவன் நியாயமும் நீதியும் செய்தான்; பிழைக்கவே பிழைப்பான் என்று சொல்லு" (எசே 33:14-16).

10 அதிகாரம்

நாளாகமம் புஸ்தகத்தின் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்கள், 1இராஜா 12:1-19 ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோன் தன்னுடைய ஜீவியத்தின் கடைசிப்பகுதியில் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார். ஆனாலும் அவர் தன்னுடைய பாவங்களுக்கு மனம் வருந்தி, கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் பத்துக்கோத்திரத்தார், சாலொமோனுடைய குடும்பத்தை விட்டுப் பிரிந்துபோகிறார்கள். சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் மதியீனனாயிருக்கிறான். அவன் இஸ்ரவேல் புத்திரரை கர்த்தருக்கு பயந்து ராஜ்யபாரம்பண்ணவில்லை (2நாளா 10:1,5-14).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் சலொமோனுக்கு விரோதமாக குற்றம் சொல்லுகிறார்கள் (2நாளா 10:2-4). அவர்கள் ரெகொபெயாமின் ராஜ்யபாரத்தை அங்கீகரிக்காமல், அவனை விட்டு பிரிந்துபோய்விடுகிறார்கள் (2நாளா 10:16-19).

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் தம்முடைய கிரியைகளை நீதியாயும், நியாயமாயும் நடக்கப்பண்ணுகிறார் (2நாளா 10:15). கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது.

இஸ்ரவேல் தேசத்தின் மகிமை உன்னதமான நிலமைக்கு வளர்ந்து வந்தது. சாலொமோனுடைய ராஜ்யபாரத்திலே இஸ்ரவேல் தேசம் பரிபூரணமான வளர்ச்சி பெற்றிருந்தது. இஸ்ரவேல் தேசம் பரிபூரண வளர்ச்சியடைவதற்கு பல வருஷங்களாயிற்று. ஆனாலும் இஸ்ரவேல் தேசத்தின் மகிமை சீக்கிரத்தில் மங்கிப்போயிற்று. இஸ்ரவேல் தேசம் தாழ்ச்சியடைந்தது.

சாலொமோனுக்கு பின்பு அவருடைய குமாரன் ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகிறான். யெரொபெயாம் எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வருகிறான் (1இராஜா 12:1,2).

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய குறைகளையும், வருத்தங்களையும் வேதனைகளையும் ரெகொபெயாமினிடத்தில் முறையிருக்கிறார்கள். ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனங்களுடைய குறைகளை தீர்த்து வைப்பதற்கு பதிலாக, அவர்களுக்கு ஆணவமான பதிலைச் சொல்லுகிறான். ரெகொபெயாம் முதியோரின் ஆலோசனைக்கு செவிகொடுக்காமல், தன்னைப்போன்ற வாலிபரின் பொல்லாத ஆலோசனைக்கு செவிகொடுக்கிறான் (1இராஜா 12:3-15).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 12:16-20). தனக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறவர்களை ரெகொபெயாம் ஒடுக்க முயற்சி பண்ணுகிறான். கர்த்தரோ அவனுடைய முயற்சிகளை தடைபண்ணிவிடுகிறார் (1இராஜா 12:21-24).

யெரொபெயாம் தன்னுடைய ராஜ்யபாரத்தை விக்கிரகாராதனையின்மீது ஸ்தாபிக்கிறான் (1இராஜா 12:25-33). இஸ்ரவேல் புத்திரரில் பத்துக்கோத்திரத்தார் தனியாக பிரிந்துபோனதினால், யூதாதேசம் பலவீனமாயிற்று. இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனதினால், அவர்களுடைய தேசமும் பலவீனமாயிற்று.

ரெகொபெயாம்
2நாளா 10:1-11

2நாளா 10:1. ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போனான்.

2நாளா 10:2. ராஜாவாகிய சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் அதைக் கேட்டபோது, அவன் எகிப்திலிருந்து திரும்பிவந்தான்.

2நாளா 10:3. ஆள் அனுப்பி அவனை அழைப்பித்தார்கள்; பின்பு யெரொபெயாமும் இஸ்ரவேலனைத்துமாய் வந்து, ரெகொபெயாமை நோக்கி:

2நாளா 10:4. உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள்.

2நாளா 10:5. அதற்கு அவன்: நீங்கள் மூன்று நாளைக்குப்பிற்பாடு திரும்ப என்னிடத்தில் வாருங்கள் என்றான்; அப்படியே ஜனங்கள் போயிருந்தார்கள்.

2நாளா 10:6. அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க நீங்கள் என்ன ஆலோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

2நாளா 10:7. அதற்கு அவர்கள்: நீர் இந்த ஜனங்களுக்குத் தயவையும் பட்சத்தையும் காண்பித்து, அவர்களுக்கு நல்வார்த்தைகளைச் செய்வீரானால், என்றைக்கும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள் என்றார்கள்.

2நாளா 10:8. முதியோர் சொன்ன ஆலோசனையை அவன் தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்தவர்களும் தன் சமுகத்தில் நிற்கிறவர்களுமாகிய வாலிபரோடே ஆலோசனை பண்ணி,

2நாளா 10:9. அவர்களை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடத்தில் சொன்ன இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க நீங்கள் என்ன ஆலோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.

2நாளா 10:10. அவனோடே வளர்ந்த வாலிபர் அவனை நோக்கி: உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்தில் சொன்ன இந்த ஜனத்திற்கு நீர் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் சுண்டுவிரல் என் தகப்பனுடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும்.

2நாளா 10:11. இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று சொல்லும் என்றார்கள்.

ஒருவர் எவ்வளவுதான் ஞானமுள்ளவராயிருந்தாலும், அவர் எவ்வளவுதான் நல்லவராகயிருந்தாலும், அவரால் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது. அவரால் எல்லோருக்கும் நல்லவராயிருக்கவும் முடியாது. சாலொமோனிடத்தில் ஐசுவரியம் மிகுதியாயிருக்கிறது. அவர் சமஸ்த இஸ்ரவேலையும் நீதியாயும், ஞானமாயும் ஆட்சிசெய்கிறார். அவருடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சந்தோஷமாயும், பாதுகாப்பாயும், அமைதலாயும் இருக்கிறார்கள்.

ஆனாலும், சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தார்மீது அதிகமாக வரிச்சுமைகளை சுமத்தினார் என்று ஜனங்கள் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். சாலொமோன் இஸ்ரவேல் ஜனத்தாரை, தன்னுடைய கட்டிட வேலைகளில் வேலை செய்வதற்கு அதிகமாய்ப் பயன்படுத்தினார் என்றும், சாலொமோன்மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ரெகொபெயாமை நோக்கி, "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்" (2நாளா 10:4) என்று சொல்லுகிறார்கள்.

சாலொமோனுக்கு விரோதமாகக் காணப்பட்ட அதிருப்தி முதல் முறையாக வெளிப்படுத்தி கூறப்படுகிறது. தேவாலயத்தைக் கட்டுவதற்கு சாலொமோன் 30,000 வாலிபரைப் பயன்படுத்தினார். தன்னுடைய நாற்பதுவருஷ ஆட்சிக்காலத்தில் சாலொமோன் பல கட்டிடங்களைக் கட்டினார். இந்தக் கட்டிட வேலைகளுக்காக ஜனங்களிடத்தில் அதிகமாக வரி வசூலித்தார். சாலொமோனுக்கு எதிராக அவருடைய ஆட்சிக்காலத்தில் அந்நிய தேசத்து பட்டணத்தார் எழும்பினார்கள். சாலொமோன் அவர்களை ஒடுக்கினார் (2நாளா 8:3).

சாலொமோனுடைய மரணத்திற்குப்பின்பு, சமஸ்த இஸ்ரவேலிலும் இருந்த ஜனங்கள் சாலொமோன்மீது தங்களுக்கு இருந்த விரோதத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். பத்துக் கோத்திரத்தார் சாலொமோனுக்கு விரோதமாக எழும்புகிறார்கள். இந்தப் பத்துக் கோத்திரத்தாரும் யெரொபெயாமைப் பின்பற்றி, வடக்கு ராஜ்யமாகப் பிரிந்து போகிறார்கள். இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும்.

ஒருவர் எவ்வளவு பெரிய ஞானியாகயிருந்தாலும், அவரிடத்தில் பரிபூரணமான ஞானம் இருக்காது. கர்த்தர் மாத்திரமே சர்வஞானமுள்ளவர். மனுஷருடைய ஞானத்தில் குறைவு உள்ளது.

சாலொமோன் தன்னுடைய ஜீவியத்திலே, சிறிதுகாலம் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார். அப்போது அவருடைய ஞானம் அவருக்கு உதவி செய்யவில்லை. அந்தக் காலத்தில் சாலொமோன் தான் செய்ய வேண்டிய காரியங்களை, கர்த்தருக்கு பயந்து ஞானமாய்ச் செய்யவில்லை. சாலொமோன் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் அவருக்கு கிடைக்கவில்லை. அந்தக்காலத்தில் சாலொமோனுடைய ராஜாசனத்தில் சில குழப்பங்களும், சில பிரச்சனைகளும் உண்டாயிற்று.

சாலொமோன் ஏராளமான ஸ்திரீகள்மீது சிநேகம் வைத்திருந்தார். அவர் தன்னுடைய ஸ்திரீகளுக்காக அரண்மனையின் பொக்கிஷங்களை தாராளமாய் செலவு செய்தார். இதனால் அவருடைய பொக்கிஷமும் ஐசுவரியமும் குறைந்துபோயிற்று.

சாலொமோனுக்கு அந்நிய ஜாதியாரான ஸ்திரீகளும் மனைவிகளாயிருந்தார்கள். அவர்களுடைய பெருமைக்காகவும், ஆடம்பரங்களுக்காகவும், விக்கிரகாராதனைகளுக்காகவும், சாலொமோன் தன்னுடைய பொக்கிஷத்தை தாராளமாய் செலவு செய்தார். சாலொமோன் தனக்கு பணம் தேவைப்படும்போது, தன்னுடைய தேசத்து ஜனங்கள்மீது அதிகமான வரிசுமைகளை சுமத்தினார்.

சாலொமோன் மரித்துப்போன பின்பு, இஸ்ரவேல் ஜனத்தார் குழப்பத்திலிருக்கிறார்கள். சாலொமோன் தங்களுக்கு செய்த நன்மைகளை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். நன்றியில்லாத இருதயமுள்ளவர்களும், குழப்பமான மனதுள்ளவர்களும், அரசாங்கத்தின்மீது குற்றம் சொல்லுவார்கள். தங்களுடைய பிரச்சனைகளை பெரிதுபடுத்துவார்கள்.

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின்போது சமஸ்த இஸ்ரவேலும் அமைதியாயிருந்தது. தேசத்திலே சமாதானமும் சந்தோஷமும் நிரம்பியிருந்தது. சாலொமோன் இஸ்ரவேலின் ராஜாவாகயிருந்த வரையிலும், அந்நிய தேசத்தார் அந்த தேசத்தின்மீது படையெடுத்து வரவில்லை. இஸ்ரவேல் தேசத்திலே யுத்த ஆபத்துக்கள் உண்டாகவில்லை.

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின்போது இஸ்ரவேல் தேசம் செழிப்பாயிருந்தது. அவர்களுக்கு போதுமான போஜனம் கிடைத்தது. இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலே போதுமான அளவு ஐசுவரியங்களும் இருந்தது. ஆனாலும் அவர்கள் சாலொமோனுக்கு விரோதமாக குற்றம் சொல்லுகிறார்கள். சாலொமோன் தங்கள்மீது பாரமான நுகத்தை சுமத்தியதாக முறுமுறுக்கிறார்கள்.

சாலொமோன் மரித்துப்போனார். அவருடைய ஸ்தானத்திலே, சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் ரெகொபெயாமை நெருக்குகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரைப்போலவே, இக்காலத்திலும் அநேகர், தங்களுடைய பிரச்சனைகளை பெரிதுபடுத்தி, ராஜாக்களையும், ராஜாக்களுக்கு கீழே பணிபுரியும் அதிகாரிகளையும் துன்பப்படுத்துகிறார்கள். அவர்களுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் மீறுகிறார்கள். ஆட்சியாளர்களுக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

சாலொமோனுக்கு பின்பு, அவருடைய குமாரன் ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாகயிருக்கிறான். தன்னுடைய தகப்பனாரைப்போல தனக்கும் அதிக அதிகாரம் இருப்பதாக ரெகொபெயாம் நினைக்கிறான். சாலொமோனிடத்தில் காணப்பட்டஞானம், ரெகொபெயாமினிடத்தில் காணப்படவில்லை. சாலொமோனால் தன்னுடைய கிரீடத்தை மாத்திரமே, தன் குமாரனாகிய ரெகொபெயாமுக்கு கொடுக்க முடிகிறது. அவரால் தன்னுடைய ஞானத்தை, தன் குமாரனுக்கு கொடுக்க முடியவில்லை.

சாலொமோன் ஞானமுள்ளவராயிருக்கிறார். ரெகொபெயாமோ மதியீனனாயிருக்கிறான். ரெகொபெயாம் தன்னைப்பற்றி பெருமையாக நினைத்துக்கொள்கிறான். தன்னுடைய தேசத்து ஜனங்களிடம் கடினமான பெரிய வார்த்தைகளைப் பேசுகிறான். ரெகொபெயாமினிடத்தில் மனப்பெருமையும், ஆணவமும் இருக்கிறது.

ரெகொபெயாமுக்கு இஸ்ரவேல் ஜனத்தார்மீது அன்பில்லை. அவர்களுடைய பிரச்சனைகளையும் கோரிக்கைகளையும் ரெகொபெயாம் கரிசனையோடு பார்க்கவில்லை. அவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் சுமையை கீழே இறக்கி வைக்கவோ அல்லது அந்த சுமையை இலகுவாக்கவோ ரெகொபெயாம் ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

ராஜாக்கள் தங்கள் தேசத்து ஜனங்கள்மீது கரிசனையோடிருக்க வேண்டும். அவர்களிடத்தில் அன்பாய்ப் பேசவேண்டும். அவர்களுடைய பிரச்சனைகளையும், கோரிக்கைகளையும் செவிகொடுத்து கேட்கவேண்டும். தங்களால் முடிந்த நன்மைகளை அவர்களுக்கு செய்யவேண்டும். அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லவேண்டும். ராஜாக்கள் ஜனங்கள்மீது பிரியமாயிருந்தால்தான், ஜனங்களும் ராஜாக்கள்மீது பிரியமாயிருப்பார்கள். இந்த சத்தியம் தேசங்களுக்கு மாத்திரமல்ல, நம்முடைய குடும்பத்திற்கும் ஏற்றது.

மெதுவான பிரதியுத்தரங்களும், கோபமில்லாத கரிசனையான வார்த்தைகளும் எப்போதுமே நல்லது. நாம் ஞானமுள்ள வார்த்தைகளை கவனமாய்ப் பேசவேண்டும். கோபத்தினால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்கலாம்.

ரெகொயாமினிடத்தில் இரண்டுவிதமான ஆலோசனைக்காரர் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பிரிவார் முதியோராயும், மற்றொரு பிரிவார் வாலிபராயும் இருக்கிறார்கள். முதியோர் ரெகொபெயாமுக்கு இதமான ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள்.

ரெகொபெயாமின் ஆலோசனைக்காரரில் முதியோர் அவனைப் பார்த்து, "நீர் இந்த ஜனங்களுக்குத் தயவையும் பட்சத்தையும் காண்பித்து, அவர்களுக்கு நல்வார்த்தைகளைச் செய்வீரானால், என்றைக்கும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்" (2நாளா 10:7) என்று சொல்லுகிறார்கள்.

நாம் பேசும் வார்த்தைகளுக்கு கிரயம் செலுத்த வேண்டியதில்லை. வார்த்தைகள் எப்போதுமே இலவசம் தான். நல்ல வார்த்தைகளைப் பேசுவதற்கு நாம் பெரிய கிரயம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. நம்முடைய சுயத்தை கொஞ்சம் வெறுக்கவேண்டியது வரும். நம்முடைய சுயமரியாதையை சிறிது இழப்பும், பாதிப்பும் ஏற்பட்டாலும், நமக்கு வரக்கூடிய ஆதாயமோ மிகவும் பெரிதாயிருக்கும். விசுவாசிகள் தாங்கள் பேசுகிற வார்த்தைகளில் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். நாம் சமாதானம்பண்ணுகிறவர்கள். நாம் எப்போதுமே சமாதானத்தை நாடவேண்டும்.

சாலொமோனுக்கு எழுநூறு மனையாட்டிகளும் முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். சாலொமோனுக்கு இவர்கள் மூலமாக ஏராளமான குழந்தைகள் பிறந்திருக்கவேண்டும். ஆனாலும் சாலொமோனுடைய குமாரரில், ரெகொபெயாம் என்னும் ஒருவனைப்பற்றி மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சாலொமோனிடத்தில் விசேஷித்த ஞானம் இருந்தது. அவருடைய குமாரனாகிய ரெகொபெயாமோ மதியீனனாயிருக்கிறான்.

பாவத்தினால் கட்டப்படும் குடும்பம் ஆசீர்வாதமாயிராது. சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டினாலும், அவர் அந்நிய தெய்வங்களுக்கும் கோவில்களை கட்டினார். சாலொமோன் கர்த்தருக்கு பலிசெலுத்தினாலும், அவர் அந்நிய தெய்வங்களுக்கும் தூபங்காட்டினார். சாலொமோனுடைய குடும்பத்தில் பாவம் நிரம்பியிருக்கிறது. சாலொமோனுடைய குடும்பத்தாரை பாவம் ஆளுகை செய்கிறது.

ரெகொபெயாமின் தகப்பனாராகிய சாலொமோன் மிகப்பெரிய ஞானி. ஆனால் ரெகொபெயாமோ சாலொமோனுடைய ஞானத்தை சுதந்தரித்துக்கொள்ளவில்லை. ஞானமும் கிருபையும் சந்ததி பரம்பரையாக வருவதில்லை. அவை முன்னோர்களுடைய இரத்தத்தில் கலந்து, அவர்களுடைய பின்சந்ததியாருக்கு கிடைப்பதில்லை.

சாலொமோனுடைய ராஜாசனம் ஞானம் வெளிப்படும் ஸ்தலமாயிருக்கிறது. அங்கே ஞானிகளும் பிரபுக்களும் அமர்ந்திருக்கிறார்கள். ரெகொபெயாம் சாலொமோனுடைய அரமனையில் வளர்ந்தவன். அவன் ஞானிகள் மத்தியிலே உலாவினவன். ஆனாலும் ரெகொபெயாமினிடத்தில் ஞானமில்லை. அவன் ஞானிகள் மத்தியிலே வளர்ந்தவனாயிருந்தாலும், அவன் மதியீனனாயிருக்கிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி சீகேமுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ரெகொபெயாமோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறார்கள். ரெகொபெயாமை ராஜாவாக்க வேண்டுமென்று இஸ்ரவேலரெல்லாரும் தங்கள் வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் ரெகொபெயாம் இஸ்ரவேலுக்கு ராஜாவாகக்கூடாது என்னும் திட்டம் அவர்களுடைய இருதயத்திலிருக்கிறது.

ரெகொபெயாமை ராஜாவாக்க வேண்டுமென்றால், அவனை தாவீதின் நகரத்திலே, ராஜாவாக அபிஷேகம்பண்ணலாம். ஆனால் இஸ்ரவேலரோ தாவீதின் நகரத்தை தெரிந்தெடுக்காமல், சீமேமைத் தெரிந்தெடுக்கிறார்கள். தாவீதின் நகரத்தில் ரெகொபெயாமை ராஜாவாக்கினால் அவன் யூதாகோத்திரத்தாருக்கு மாத்திரம் ராஜாவானதுபோல இருக்கும். அவனை சீகேமிலே ராஜாவாக்கினால், இஸ்ரவேலர் எல்லோருக்கும் ராஜாவாக்கினதாக ஆகும்.

இஸ்ரவேலுடைய சரித்திரத்திலே, சீகேம் பிரசித்திப் பெற்ற ஸ்தலம். அபிமெலேக்கு சீகேமிலே தன்னைத்தானே ராஜாவாக்கிக்கொண்டான் (நியா 11-ஆவது அதிகாரம்). யோசுவாவின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரர் அனைவரும், முக்கியமான காரியங்களை விவாதிப்பதற்காக சீகேமிலே கூடிவருவது வழக்கம்.

"பின்பு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்தான்; அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்கள்" *(யோசு 24:1).*

தன்னுடைய ராஜ்யபாரத்திற்கு வந்திருக்கும் ஆபத்து ரெகொபெயாமுக்கும் தெரிகிறது. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தன்னுடைய ராஜாங்கத்தைவிட்டு பிரிந்துபோய் விடுவார்கள் என்பதை ரெகொபெயாமும் உணர்ந்திருக்கிறான். ஆகையினால் ரெகொபெயாமும் சீகேமுக்குப்போய், அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரும் தன்னைவிட்டுப் பிரிந்துபோய்விடாமல், அவர்களை தன்னிடத்தில் தக்க வைத்துக்கொள்ள ரெகொபெயாம் முயற்சிபண்ணுகிறான்.

ரெகொபெயாம் நல்ல நோக்கத்தோடு சீகேமுக்குப்போனாலும், அவனுடைய தீயசுபாவமும், மதியீனமும், அவனுடைய திட்டத்தை கெடுத்துப்போடுகிறது. ரெகொபெயாம் அவசரப்படுகிறான். மதியீனமாக செயல்படுகிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள் என்னும் செய்தியை யெரொபெயாமும் கேள்விப்படுகிறான். ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போகிறான். ராஜாவாகிய சாலொமோனை விட்டு ஓடிப்போய், எகிப்திலே குடியிருந்த நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமும், எகிப்தில் இருக்கையில் இதைக் கேள்விப்படுகிறான் (1இராஜா 12:1,2).

இஸ்ரவேலர் எல்லோரும் யெரொபெயாமுக்கு ஆள் அனுப்பி அவனை அழைப்பிக்கிறார்கள். யெரொபெயாமும் எகிப்து தேசத்திலிருந்து சீகேமுக்கு வருகிறான். ரெகொபெயாமும் அப்போது சீகேமிலே இருக்கிறான் (1இராஜா 12:3).

யெரொபெயாமும், இஸ்ரவேல் சபை அனைத்தும் ரெகொபெயாமை சந்திக்கிறார்கள். அவனிடத்தில் தங்களுடைய குறைகளை முறையிடுகிறார்கள். அவர்கள் ரெகொபெயாமை நோக்கி, "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்; இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம்" (1இராஜா 12:4) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் சாலொமோனுடைய காலத்திலே அரமனைக்கு அதிகமான வரிகளை செலுத்தினார்கள். சாலொமோனும் ஜனங்கள்மீது கடினமான வேலைகளை சுமத்தினார். ரெகொபெயாம் இந்தப் பாரங்களையெல்லாம் ஜனங்களைவிட்டு நீக்கவேண்டும் என்று இஸ்ரவேல் சபை அனைத்தும், முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமிடத்தில் தாங்களாக போய் பேசாமல், எகிப்து தேசத்திலிருக்கிற யெரொபெயாமை தங்களிடத்திற்கு அழைத்து வந்து, அவனை தங்களுக்கு தலைவனாக்கி, அவனோடுகூட ரெகொபெயாமை சந்தித்து பேசுகிறார்கள்.

"உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார்" என்பதே இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமிடம் சொல்லுகிற முதலாவது குற்றச்சாட்டு. அவர்கள் சாலொமோனுடைய விக்கிரகாராதனையைப்பற்றி குற்றம் சொல்லவில்லை. இஸ்ரவேலர் எல்லோரும் ஆவிக்குரிய காரியங்களில் அனலுமில்லாமல், குளிருமில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆராதனையையும், கர்த்தரையும் அசட்டைபண்ணி, நிர்விசாரமாக ஜீவிக்கிறார்கள். சாலொமோன் கர்த்தரை ஆராதித்தாலும், விக்கிரகங்களை ஆராதித்தாலும், அதினால் தங்களுக்கு ஒன்றும் பிரச்சனையில்லை என்பதுபோல இஸ்ரவேல் சபையார் பேசுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருக்கும் மோளேகுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. இரண்டுபேருமே ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்தாமல், தங்கள்மீது வைக்கப்பட்டிருக்கிற பாரத்தையும், கடினமான வேலையையும், பாரமான நுகத்தையும் குறித்து கவனம் செலுத்துகிறார்கள்.

ஜனங்கள் நிர்விசாரமாக ஜீவித்தாலும் பரவாயில்லை. ஆனால் அவர்கள் ராஜாவுக்கு வரிசெலுத்தக்கூடாது என்பதே இஸ்ரவேல் சபையாரின் குற்றச்சாட்டு. அவர்களுடைய குற்றச்சாட்டில் ஆதாரம் எதுவுமில்லை. சாலொமோனுடைய ஆட்சிக்காலத்தில் இஸ்ரவேல் சபையாருக்கு ஒரு குறைவும் வரவில்லை. எல்லாம் தாராளமாயிருந்தது. தேசம் சுபிட்சமாயிருந்தது. சாலொமோன் இஸ்ரவேல் சபையாரிடத்தில் அதிகமான வரிகளையும் வசூலிக்கவில்லை. அவர்கள் வரிகளை செலுத்தினாலும், தங்களுடைய தேசத்தின் வளர்ச்சிக்காகவும், அதைப் பலப்படுத்துவதற்காகவும் தான் வரிகளை செலுத்தினார்கள்.

சாலொமோன் அநேக கட்டிடங்களை கட்டினார். இஸ்ரவேல் ஜனத்தார் அந்தக் கட்டிட வேலைகளுக்கு தங்களுடைய பணத்தை மாத்திரமே கொடுத்தார்கள். சாலொமோன் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணவில்லை. சாலொமோன் யுத்தங்களை நடத்தியிருந்தால், இஸ்ரவேல் சபையார் சாலொமோனுக்கு, அதோடு தங்கள் பணத்தையும் கொடுக்கவேண்டும், தங்கள் இரத்தத்தையும் கொடுக்கவேண்டும், தங்கள் ஜீவனையும் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலை இஸ்ரவேல் சபையாருக்கு சாலொமோனுடைய காலத்திலே ஏற்படவில்லை.

ஆனால் இஸ்ரவேல் சபையாரோ, சாலொமோனைக் குறித்து ஏதாவது குற்றம் சொல்லவேண்டும் என்னும் வேகத்தில், தங்களுடைய வாயில் வந்ததையெல்லாம் பேசிவிடுகிறார்கள். மற்றவர்கள்மீது குறை சொல்லுகிறவர்கள், எப்போதும் குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள். குறை சொல்லுவதற்கான காரணங்களை தேடி கண்டுபிடிப்பார்கள்.

இஸ்ரவேல் சபையார் சாலொமோனைப்பற்றி ரெகொபெயாமிடம் இரண்டு குற்றச்சாட்டுக்களை சொல்லுகிறார்கள். அவையாவன: 1. சாலொமோன் தங்கள்மேல் பாரமான நுகத்தை வைத்தார். 2. சாலொமோன் தங்கள்மேல் கடினமான வேலையை சுமத்தினார்.

சாலொமோன் பேராசை பிடித்தவரல்ல. அவருடைய தகப்பனாராகிய தாவீது, சாலொமோனுக்கு தேவையான பொக்கிஷங்களை சேகரித்து வைத்திருக்கிறார். சாலொமோனைப் பார்ப்பதற்கு ஏராளமான ராஜாக்கள் வருகிறார்கள். அவர்களெல்லோரும் ராஜாவுக்கு ஏராளமான பொன்னையும் வெள்ளியையும் வெகுமதியாகக் கொண்டு வருகிறார்கள். சாலொமோனுடைய பொக்கிஷசாலை எப்போதும் நிரம்பி வழிகிறது. அவர் பேராசைப்பட்டு இஸ்ரவேல் சபையாரிடத்தில் அதிகமான வரிகளை வசூலிக்கவில்லை.

சாலொமோன் ஒருபோதும் இஸ்ரவேல் சபையார்மீது பாரமான நுகத்தை வைக்கவில்லை. சாலொமோனுடைய அந்நிய ஸ்திரீகள் அவரை வழிவிலகப்போகப்பண்ணினார்கள். அந்த ஸ்திரீகள் ஒருவேளை இஸ்ரவேல் சபையார்மீது பாரமான நுகத்தை வைத்திருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை அந்த ஸ்திரீகள் ஒடுக்கியிருப்பார்கள்.

தங்கள்மீது வைக்கப்பட்ட பாரமான நுகத்தையும், சுமத்தப்பட்ட கடினமான வேலையையும் ரெகொபெயாம் இலகுவாக்கவேண்டும். "அப்பொழுது உம்மை சேவிப்போம்" (1இராஜா 12:4) என்று யெரொபெயாமும் இஸ்ரவேல் சபையாரும் ரெகொபெயாமினிடத்தில் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமின் ராஜ்யபாரத்திலிருந்து விடுதலை பெற விரும்புகிறார்கள். அப்போது தாவீதின் குடும்பத்தாரை தாங்கள் சேவிப்பதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

யெரொபெயாமும், இஸ்ரவேல் சபையாரும் தன்னிடத்தில் சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை ரெகொபெயாம் செவிகொடுத்து கேட்கிறான். அவன் அவர்களிடத்தில் உடனே பதில் சொல்லாமல், அவர்களை நோக்கி, "நீங்கள் போய், மூன்றுநாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பிவாருங்கள்" (1இராஜா 12:5) என்று சொல்லுகிறான்; அப்படியே ஜனங்களும் அவனைவிட்டுப் போகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் தன்னிடத்தில் சொன்ன குற்றச்சாட்டுக்களைப்பற்றியும், அவர்களுக்கு எப்படிப்பட்ட மறுஉத்தரவு கொடுக்கவேண்டும் என்பது பற்றியும், ரெகொபெயாம் தன்னோடு கூடயிருக்கிறவர்களிடத்தில் யோசனை கேட்கிறான்.

ரெகொபெயாமுக்கு ஆலோசனை சொல்ல இரண்டுவிதமான கூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பிரிவினர், சாலொமோன் உயிரோடிருக்கையில், அவருடைய சமுகத்தில் நின்ற முதியவர்கள். மற்றொரு பிரிவினர் ரெகொபெயாமோடு கூட வளர்ந்த வாலிபர்கள்.

ரெகொபெயாம் முதலாவதாக முதியோரிடத்தில் ஆலோசனை பண்ணுகிறான். அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணுகிறான். "இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்" (1இராஜா 12:6) என்று ரெகொபெயாம் முதியோரிடத்தில் கேட்கிறான்.

முதியோரும் ரெகொபெயாமுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். முதியோர்கள் ரெகொபெயாமை நோக்கி, "நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்" (1இராஜா 12:7) என்று சொல்லுகிறார்கள்.

முதியோர்களிடத்தில் அனுபவம் இருக்கிறது. அவர்களுடைய ஆலோசனையில் அன்பும், கரிசனையும் இருக்கிறது. முதியோர்களுடைய ஆலோசனைப்பிரகாரம் செயல்பட்டால் பிரச்சனைகள் குறையும்.

ஆளுகை செய்கிற ராஜா ஜனங்களுக்கு சேவை செய்யவேண்டும். அவர் தன் தேசத்து ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். தான் செய்யும் நன்மைகளை அதிகமாயும், காலதாமதமில்லாமல் வேகமாயும் செய்யவேண்டும்.

ராஜா தன் தேசத்திலுள்ள எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய இருதயங்களை ராஜாவால் கவர்ந்துகொள்ள முடியும். தேசத்தை ஆளுகை செய்கிற ராஜா, தேசத்திலுள்ள ஜனங்களின் இருதயத்தில் இடம் பெறவேண்டும். அவர்களுடைய இருதயங்களை ஆளுகை செய்யவேண்டும்.

ரெகொபெயாமோ முதியோர் தனக்கு சொன்ன ஆலோசனையை தள்ளிவிடுகிறான். அவர்கள் அவனுக்கு நல்ல ஆலோசனையை சொன்னாலும், அந்த ஆலோசனைகள் ரெகொபெயாமுக்கு துர்ஆலோசனையாயிருக்கிறது. ஆகையினால் ரெகொபெயாம் தன்னோடே வளர்ந்து, தன் சமுகத்தில் நிற்கிற வாலிபரோடே ஆலோசனை பண்ணுகிறான்.

ரெகொபெயாம் தன்னோடே கூடயிருக்கிற வாலிபர்களை நோக்கி, "உம்முடைய தகப்பன் எங்கள்மேல் வைத்த நுகத்தை லகுவாக்கும் என்று என்னிடத்தில் சொன்ன இந்த ஜனங்களுக்கு மறுமொழி கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள்" (1இராஜா 12:9) என்று கேட்கிறான்.

ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபரும் அவனுக்கு உடனே ஆலோசனை சொல்லுகிறார்கள். அப்பொழுது அவனோடே வளர்ந்த வாலிபர் அவனை நோக்கி: "உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நீர் அதை எங்களுக்கு லகுவாக்கும் என்று உம்மிடத்தில் சொன்ன இந்த ஜனத்திற்கு நீர் சொல்லவேண்டியது என்னவென்றால்: என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும். இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தை உங்கள்மேல் வைத்தார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்லவேண்டும்" (1இராஜா 12:10,11) என்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

வாலிபரின் ஆலோசனையில் வேகமும் கோபமும் இருக்கிறது. ரெகொபெயாம் ஜனங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களை பயமுறுத்தவேண்டுமென்று வாலிபர்கள் ஆலோசனை சொல்லுகிறார்கள். ரெகொபெயாம் வாலிபரின் ஆலோசனையைக் கேட்பது அவனுடைய பலவீனமாயிருக்கிறது.

முதியோர் தனக்கு சொன்ன ஆலோசனையை ரெகொபெயாம் தள்ளிவிடுகிறான். அவன் முதியோரின் அனுபவத்திற்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கவில்லை. தன்னுடைய மனதிற்கு ஏற்ற பிரகாரமும், பிரியமான பிரகாரமும் ஆலோசனை சொல்லுகிற வாலிபரின் ஆலோசனையை ரெகொபெயாம் ஏற்றுக்கொள்கிறான். முதியோர் தேசத்தின் நன்மையை சிந்திக்கிறார்கள். வாலிபரோ உலகப்பிரகாரமாய் சிந்திக்கிறார்கள்.

வாலிபரின் ஆலோசனையில் பெருமையும், ஆணவமும், அகம்பாவமும் இருக்கிறது. அவர்களுடைய வார்த்தைகளில் ஞானமில்லை. ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர், அவனுக்கு நெருங்கிய சிநேகிதர்களாயிருந்தாலும், அவனுடைய நல்வாழ்வுக்கேற்ற ஆலோசனைகளைச் சொல்லாமல், அவனுடைய அழிவுக்கேற்ற ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள்.

முதியோருடைய ஆலோசனையில் நிதானமும் இணக்கமும் இருக்கிறது. அவர்களுடைய ஆலோசனையின் பிரகாரம் செயல்பட்டால் சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும். அதினால் ராஜாவுக்கும் நன்மை உண்டாகும். ஜனங்களுக்கும் நன்மை உண்டாகும். முதியோர் ரெகொபெயாமிடத்தில் "அவர்களுடைய நுகத்தை இலகுவாக்கும்" என்று ஆலோசனை சொல்லுகிறார்கள். வாலிபரோ "அவர்கள் நுகத்தை அதிக பாரமாக்கும்" என்று ஆலோசனை சொல்லுகிறார்கள்.

நுகத்தை இலகுவாக்கினால் வருமானம் குறையும். நுகத்தை அதிக பாரமாக்கினால் வருமானம் அதிகரிக்கும். ரெகொபெயாம் ஜனங்கள்மீது கரிசனை வைக்கவில்லை. அவன் வருமானத்தின்மீது கவனமாயிருக்கிறான். ஜனங்கள் தன்னை சேவித்தால்தான் தனக்கு வருமானம் வரும் என்பதை ரெகொபெயாம் சிந்திக்கவில்லை. ஜனங்களை தண்டித்து, அடக்கி, ஒடுக்கி, அவர்களிடத்தில் வரிவசூலித்துவிடலாம் என்று நினைக்கிறான்.

முதியோருக்கு சாதுரியமான வார்த்தைகளைப் பேச தெரியவில்லை. அவர்கள் நிதானமான வார்த்தைகளை பேசுகிறார்கள். வாலிபரோ அலங்காரமான வார்த்தைகளை சாதுரியமாய் சொல்லுகிறார்கள். வாலிபர் ரெகொபெயாமிடம், "என் சுண்டுவிரல் என் தகப்பனாருடைய இடுப்பைப்பார்க்கிலும் பருமனாயிருக்கும்" என்பதுபோன்ற அலங்காரமான வார்த்தைகளை ஆலோசனையாய்ச் சொல்லுகிறார்கள். சாதுரிய வார்த்தைகளிலும், அலங்காரமான வார்த்தைகளிலும் நீதியோ, நிதானமோ, புத்தியோ, ஞானமோ இருக்காது.

ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாரிடம் "நீங்கள்போய் மூன்று நாள் பொறுத்து என்னிடத்தில் திரும்பி வாருங்கள்" (1இராஜா 12:5) என்று சொல்லியிருந்தான். மூன்றாம்நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வருகிறார்கள் (1இராஜா 12:12).

ரெகொபெயாம் முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசுகிறான் (1இராஜா 12:13). இஸ்ரவேல் சபையாரை தன்னால் அடக்கி ஒடுக்கி ஆளுகை செய்ய முடியுமென்று ரெகொபெயாம் நினைக்கிறான். இஸ்ரவேல் சபையார், தன்னுடைய தகப்பனாரைப்பற்றிச் சொன்ன குற்றச்சாட்டை, ரெகொபெயாம் மறுக்கவில்லை. அந்தக் குற்றச்சாட்டை அங்கீகரிக்கிறான். "என் தகப்பன் உங்கள் நுகத்தை பாரமாக்கினார்" (1இராஜா 12:14) என்று ரெகொபெயாம் சொல்லுகிறான். சாலொமோன் இஸ்ரவேல் சபையாருடைய நுகத்தை ஒருபோதும் பாரமாக்கவில்லை. ரெகொபெயாமுக்கு சாலொமோனைப்பற்றி சரியாகத் தெரியவில்லை.

சாலொமோனைவிட தனக்கு அதிகமான ஞானமும், அதிகமான ஆளுகை திறமையும் இருப்பதாக ரெகொபெயாம் நினைக்கிறான். அவன் இஸ்ரவேல் சபையாரிடத்தில், "நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன்" (1இராஜா 12:14) என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவு கொடுக்கிறான்.

ரெகொபெயாம்இஸ்ரவேல் ஜனத்தார்மீது நுகத்தையும் பாரமாக்குகிறான். அவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு கடுமையான சட்டங்களையும் இயற்றுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் நீண்டகாலமாக எந்தக் குறையுமில்லாமல், செழிப்பாய் வாழ்ந்தவர்கள். அவர்கள் ஐசுவரியவான்களாயும், பலமுள்ளவர்களாயும் இருந்தவர்கள். ரெகொபெயாம் இப்போது அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்கி, அவர்கள்மீது கடினமான சட்டங்களையும் சுமத்தி அவர்களை கட்டுப்படுத்துகிறான். இஸ்ரவேல் சபையாரோ ரெகொபெயாமுக்கு கட்டுப்பட மறுக்கிறார்கள். அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் சபையார் யெரொபெயாமை தங்களுக்கு தலைவராக ஏற்கெனவே தெரிந்தெடுத்துவிட்டார்கள்.

ரெகொபெயாமும் ஜனங்களுக்கு செவிகொடுக்கவில்லை. ஜனங்களும் ரெகொபெயாமுக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தர் சீலோனியனான அகியாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்ன தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தும்படி கர்த்தரால் இப்படி நடக்கிறது (1இராஜா 11:15).

ரெகொபெயாம் சமாதானத்திற்கேதுவான காரியங்களை பார்க்காதபடிக்கு தன்னுடைய கண்களை அடைத்துக்கொள்கிறான். இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ண அவனுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தபோதிலும், ரெகொபெயாம் அதைப் பயன்படுத்தவில்லை. ரெகொபெயாமுடைய மதியீனமும், துன்மார்க்கமான சிநேகமும் அவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று. அவன் தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்கிறான். ரெகொபெயாமைப்போலவே, ஏராளமான ஜனங்கள், பரலோக ராஜ்யத்தின் சிலாக்கியத்தை இழந்துவிடுகிறார்கள். இந்த இழப்புக்கு இவர்களுடைய மதியீனமே காரணம்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் 2நாளா 10:12-19

2நாளா 10:12. மூன்றாம் நாள் என்னிடத்தில் வாருங்கள் என்று ராஜா சொல்லியிருந்தபடியே, யெரொபெயாமும் சகல ஜனங்களும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமிடத்தில் வந்தார்கள்.

2நாளா 10:13. ராஜாவாகிய ரெகொபெயாம் முதியோர் ஆலோசனையைத் தள்ளிவிட்டு, அவர்களுக்குக் கடினமான உத்தரவு கொடுத்தான்.

2நாளா 10:14. வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசி, என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் அதை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று சொன்னான்.

2நாளா 10:15. ராஜா ஜனங்களுக்குச் செவிகொடாமற்போனான்; கர்த்தர் சீலோனியனான அகியாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமுக்குச் சொன்ன தமது வார்த்தையை உறுதிப்படுத்தும்படி, தேவனாலே இப்படி நடந்தது.

2நாளா 10:16. ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறுஉத்தரவாக: தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள் என்று சொல்லி, இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

2நாளா 10:17. ஆனாலும் யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர் மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருந்தான்.

2நாளா 10:18. பின்பு ராஜாவாகிய ரெகொபெயாம் பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அனுப்பினான்; இஸ்ரவேல் புத்திரர் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி எருசலேமுக்கு ஓடிப்போனான்.

2நாளா 10:19. அப்படியே இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி இஸ்ரவேலர் தாவீதின் வம்சத்தை விட்டுக் கலகம்பண்ணிப் பிரிந்து போயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரை அன்பாய் ஆளுகை செய்யும் ஞானம் ரெகொபெயாமினிடத்தில் இல்லை. ஜனங்கள் மத்தியிலே குழப்பமுண்டாயிற்று. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். ஒற்றுமையில்லாமல் கலகமும், கலவரமும் ஏற்படும்போது, நல்ல காரியங்கள் மோசமாகும். மோசமான காரியங்கள் மிகவும் மோசமாகிவிடும்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரரிடம் கடினமான வார்த்தைகளைப் பேசுகிறான். இதனால் ராஜாவின்மீது அவர்களுடைய கோபம் அதிகரிக்கிறது. எரிகிற நெருப்பிலே எண்ணெய் ஊற்றுவதுபோல, ஜனங்களுடைய கோபம் பற்றியெரிகிறது.

மனுஷர் எதை யோசித்தாலும், அவர்கள் எதைத் திட்டம் பண்ணினாலும், கர்த்தருடைய சித்தமே வாய்க்கும். கர்த்தர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே குழப்பமுண்டாயிற்று. ஜனங்கள் ரெகொபெயாமுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இவையெல்லாமே கர்த்தர் ஏற்கெனவே முன்னறிவித்த காரியங்களின் நிறைவேற்றமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் வீணாய்ச் சொல்லப்படுவதில்லை.

உலகப்பிரகாரமான ஐசுவரியங்களும், ஆளுகைகளும், அதிகாரங்களும், மதிப்பும் மரியாதையும் நித்தியமானவையல்ல. சாலொமோன் சமஸ்த இஸ்ரவேல் தேசத்தையும் ஆட்சி செய்தார். சாலொமோனுடைய ஆட்சிக்காலம் பல சந்ததிகளுக்கு பிரச்சனையில்லாமல், அப்படியே சிறப்பாக இருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாய்ப்போயிற்று.

சாலொமோன் மரித்து அடக்கம்பண்ணப்படுகிறார். அதன் பின்பு இஸ்ரவேல் புத்திரரின் பத்துக்கோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாரை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ளாமல், தனியாகப் பிரிந்துபோய்விடுகிறார்கள். இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாமோடு கூடயிருக்கிறார்கள்.

சாலொமோன் இஸ்ரவேல் தேசத்திற்காக செய்த நன்மையான எல்லா காரியங்களையும் ஜனங்கள் இப்போது மறந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு ரெகொபெயாமின் கோபமான வார்த்தைகள் மாத்திரமே நினைவுக்கு வருகிறது. ரெகொபெயாமின் மீதுள்ள கோபத்தினால், அவர்கள் சாலொமோன்மீதும் குற்றம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் பல சமயங்களில், பிதாக்களின் அக்கிரமங்களை, அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிக்கிறார். சாலொமோன் கர்த்தரை விட்டு விலகிப்போனார். அதன் விளைவாக, சாலொமோனுக்கு பின்பு, இஸ்ரவேல் ஜனத்தாரில் பத்துக்கோத்திரத்தார், சாலொமோனின் குமாரனை விட்டு விலகிப்போகிறார்கள். சாலொமேனுடைய பாவத்தினால், இப்படிப்பட்ட மோசமான சம்பவங்கள் இஸ்ரவேல் தேசத்தில் நடைபெறுகிறது.

பாவிகள் மரித்துப்போனாலும், அவர்களுடைய பாவத்திற்கான தண்டனைகள், அவர்களுடைய பிள்ளைகளின் ஜீவியத்திலும் தொடருகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தர் பல சமயங்களில் பாவிகளை தண்டிக்கிறார். வேறு சில சமயங்களில், பாவிகளின் சந்ததியாரை தண்டிக்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது மாறாத பிரமாணமாயிருக்கிறது. பாவிகள் தண்டனைக்கு ஒருபோதும் தப்பிப்பதில்லை.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவன் தன்னுடைய ஆத்துமாவுக்கும் கேடுசெய்கிறான், தன்னுடைய சந்ததிக்கும் கேடு செய்கிறான். பாவிகளுக்கு வரும் தண்டனை, அவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாயிருக்கும்.

கர்த்தர் பாவிகளுக்கு விரோதமாக தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார். அவர் பாவிகளை எச்சரித்தாலும், நீதிமான்களை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். கர்த்தர் நீதிமான்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார்.

கர்த்தர் பாவிகளின் பாவங்களையும், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய தண்டனைகளையும் மறப்பதில்லை. அதுபோலவே கர்த்தர் நீதிமான்களின் நற்கிரியைகளையும், அவர்களுக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணின ஆசீர்வாதங்களையும் மறப்பதில்லை.

கர்த்தர் சாலொமோனுடைய அக்கிரமத்தை நினைத்துப் பார்க்கிறார். இதன் விளைவாக சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாம், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை இழந்துவிடுகிறான். கர்த்தர் தாவீதின் பக்தியையும் நினைத்துப் பார்க்கிறார். கர்த்தர் தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தையும் நினைத்துப் பார்க்கிறார். இதன் விளைவாக, தாவீதின் பேரனாகிய ரெகொபெயாமோடு, இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் கூடயிருக்கிறார்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு செவிகொடாமல் போகிறான். யுரகொபெயாம் தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் அவனுக்கு மறுஉத்தரவாக: "தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" *(1இராஜா 12:16)* என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுகிறார்கள்.

ரெகொபெயாமுக்கு மோசமான ஆலோசனைகளை சொன்னது யார் என்பதைப்பற்றி இஸ்ரவேல் சபையார் விசாரிக்கவில்லை. ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்களை அவனை விட்டு விலக்கி வைத்து விடவேண்டும் என்றும் அவர்கள் முயற்சி பண்ணவில்லை. ஒருவேளை மோசமான ஆலோசனை சொல்லுகிறவர்கள் ரெகொபெயாமோடு கூடயில்லாவிட்டால், அவன் ஜனங்களுக்கு இவ்வளவு கடினமான உத்தரவு கொடுத்திருக்கமாட்டான்.

இஸ்ரவேல் சபையார் ஞானமாய் யோசித்து செயல்படாமல், தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருந்தும், அவர்கள் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இந்தக் கலகம் இஸ்ரவேல் சபையார்மீது வந்த மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

"இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா? ஆகிலும் தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்னும் நேபாத்தின் குமாரன் எழும்பி, தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்" *(2நாளா 13:5,6)*.

"பேலியாளின் மக்களாகிய வீணர் அவனோடேகூடி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் அவர்களை எதிர்க்கக்கூடாமல் வாலவயதும் திடனற்ற மனதுமாயிருக்கையில், அவனுக்கு விரோதமாய்த் தங்களைப் பலப்படுத்திக்கொண்டார்கள். இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே" (2நாளா 13:7,8).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாலும் யூதாகோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருக்கிறான் (1இராஜா 12:17). யூதாகோத்திரம் மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை (1இராஜா 12:20).

ரெகொபெயாமின் வார்த்தைகள் மோசமானதாயிருந்தாலும், அவன் நல்லவனாயிருக்கிறான். ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு கடினமான உத்தரவு கொடுத்ததுபோல, அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்கவில்லை. அவர்களை தேள்களினால் தண்டிக்கவுமில்லை. யூதாகோத்திரத்தார் ரெகொபெயாமின் ஆளுகையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்தை ஞானமாய் ஆளுகை செய்யவில்லை. ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலிருந்து வரிவசூலிப்பதற்காக, தன்னுடைய பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போகிறான் (1இராஜா 12:18).

ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்கள், அவனுக்கு இந்த தவறான ஆலோசனையை சொல்லியிருக்கவேண்டும். வாலிபரின் ஆலோசனையைக் கேட்டு ரெகொபெயாம் அதோராமை அனுப்புகிறான். இஸ்ரவேல் ஜனத்தாரோ ரெகொபெயாமினுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய விரும்பவில்லை. "தாவீதே உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" என்று சொல்லி இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமை விட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். பிரிந்துபோனவர்கள் ரெகொபெயாமுக்கு வரிசெலுத்தமாட்டார்கள்.

இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்துபோனதை உறுதிபண்ணுகிறார்கள். அதோராமைக் கொன்றுபோடுகிறார்கள். வாலிபரின் தவறான ஆலோசனைகளுக்கு ரெகொபெயாம் செவிகொடுத்தான். தீயஆலோசனையின் விளைவாக அதோராம் செத்துப்போகிறான்.

ரெகொபெயாம் இப்போது சீகேமிலே இருக்கிறான். அதோராம் செத்துப்போன செய்தியைக் கேட்டவுடன், ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி எருசலேமுக்கு ஓடிப்போகிறான். அவன் சீகேமைவிட்டு உடனடியாக புறப்பட்டுப்போனதும் மதியீனமான செயல். ரெகொபெயாம் சீகேமைவிட்டு ஓடிப்போனதினால், அவன் தன்னுடைய சிநேகிதரை இழந்துவிடுகிறான். அவனுடைய விரோதிகளின் பெலன் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்து தங்கள் கூடாரங்களுக்கு போய்விடுகிறார்கள் (1இராஜா 12:16). ரெகொபெயாமோ, இஸ்ரவேலருக்கு பயந்து, சீகேமை விட்டே ஓடிப்போகிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போன பின்பு, இஸ்ரவேல் சபையார் எல்லோரும், யெரொபெயாமை அழைத்தனுப்பி, அவனை சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 12:20). ரெகொபெயாம் சீகேமிலே தங்களோடு கூடயிருக்கும் வரையிலும், இஸ்ரவேல் சபையார் யெரெபெயாமை தங்களுக்கு ராஜாவாக்கவில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போனபின்பு, இஸ்ரவேல் சபையார் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள்.

தான் இழந்துபோன ராஜ்யபாரத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ரெகொபெயாம் முயற்சி பண்ணுகிறான். இஸ்ரவேல் சபையாரை பயமுறுத்தி, அவர்களை அடக்கி ஆளுகை செய்யலாம் என்று ரெகொபெயாம் நினைத்தான். அது நிறைவேறவில்லை. இப்போது அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணலாம் என்று ரெகொபெயாம் தீர்மானம்பண்ணுகிறான். வாயின் வார்த்தைகளுக்கு அடங்காத இஸ்ரவேல் சபையாரை, பட்டயங்களினால் அடக்கலாம் என்று ரெகொபெயாம் தீர்மானித்திருக்கிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டுகிறான் (1இராஜா 12:21).

தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிற இஸ்ரவேல் சபையாரை அடக்கவேண்டுமென்று ரெகொபெயாம் தீர்மானிக்கிறான். அவனுடைய மனதில் உறுதியும் தைரியமும் இருக்கிறது. ரெகொபெயாம் சீகேமிலிருந்த வரையிலும் அவனுடைய மனதில் தைரியமில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு திரும்பி வந்த பின்போ, அவனுடைய மனதிலே தைரியமும், திடநம்பிக்கையும் உண்டாயிற்று.

யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் கர்த்தருக்கும் தங்கள் ராஜாவுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணவில்லை. யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றுகிறார்கள்.

ரெகொபெயாம் இவ்விரண்டு கோத்திரங்களிலுமிருந்து 1,80,000 யுத்தவீரர்களை தெரிந்துகொள்கிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி அவனை விட்டுப் பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களுடைய கலகத்தை ஒடுக்கவும், அவர்களோடு யுத்தம்பண்ணி, அவர்களை தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளவும், ரெகொபெயாம் அவர்கள்மீது யுத்தம்பண்ண 1,80,000 யுத்தவீரரைத் தெரிந்துகொள்கிறான். ரெகொபெயாமின் யுத்தவீரர்கள் எல்லோரும் யூதாவம்சத்தாரிலும், பென்யமீன் கோத்திரத்திலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமானது, அவனுடைய தைரியத்திற்கும் பலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது. ரெகொபெயாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போனது, அவனுடைய அதிகமான தைரியத்திற்கும், அதிகமான பெலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது.

ரெகொபெயாம் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண 1,80,000 யுத்தவீரரை தெரிந்துகொள்கிறான். அப்போது தேவனுடைய மனுஷனாகிய சேமாயாவுக்கு தேவனுடைய வார்த்தையுண்டாயிற்று. கர்த்தர் சேமாயாவை நோக்கி, "நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும் யூதா வம்சத்தார் அனைவரையும் பென்யமீனரையும், மற்ற ஜனங்களையும் நோக்கி: நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்" (1இராஜா 12:23,24) என்று சொல்லுகிறார்.

சேமாயா அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். அப்பொழுது ரெகொபெயாமும், அவனோடு கூடயிருக்கிற 1,80,000 யுத்தவீரரும், கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விடுகிறார்கள் (1இராஜா 12:24).

11 அதிகாரம்

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் வம்சத்தைவிட்டு கலகம்பண்ணி பிரிந்துபோயிருக்கிறார்கள். பிரிந்துபோனவர்களை சமஸ்த இஸ்ரவேலோடு மறுபடியும் சேர்ப்பதற்கு ரெகொபெயாம் முயற்சிபண்ணுகிறான். தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து, ரெகொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் முயற்சியை கைவிட்டுவிடுகிறான் (2நாளா 11:1-4).

ரெகொபெயாமோடு யூதா, பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரத்தார் மாத்திரம் இருக்கிறார்கள் (2நாளா 11:5-12). வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஆசாரியரும் லேவியரும், தெற்கு யூதாதேசத்திற்கு, ரெகொபெயாமினிடத்தில் திரும்பி வருகிறார்கள் (2நாளா 11:13-17). ரெகொபெயாமுக்கு ஏராளமான மனைவிகளும், பிள்ளைகளும் இருக்கிறார்கள் (2நாளா 11:18-23).

ரெகொபெயாம் 2நாளா 11:1-12

2நாளா 11:1. ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைத் தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தாரும் பென்யமீன் வம்சத்தாருமாகிய தெரிந்து கொள்ளப்பட்ட யுத்தவீரரான லட்சத்து எண்பதினாயிரம்பேரைக் கூட்டினான்.

2நாளா 11:2. தேவனுடைய மனுஷனாகிய செமாயாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொன்னது:

2நாளா 11:3. நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும், யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற எல்லா இஸ்ரவேலரையும் நோக்கி:

2நாளா 11:4. நீங்கள் போகாமலும், உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டுக்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்; அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, யெரொபெயாமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதை விட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள்.

2நாளா 11:5. ரெகொபெயாம் எருசலேமில் வாசமாயிருந்து, யூதாவில் அரணான பட்டணங்களைக் கட்டினான்.

2நாளா 11:6. அவன் பெத்லகேமும், ஏத்தாமும், தெக்கொவாவும்,

2நாளா 11:7. பெத்சூரும், சோகோவும், அதுல்லாமும்,

2நாளா 11:8. காத்தும், மரேஷாவும், சீப்பும்,

2நாளா 11:9. அதோராயீமும், லாகீசும், அசேக்காவும்,

2நாளா 11:10. சோராவும், ஆயிலோனும், எப்ரோனும் ஆகிய யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற அரணிப்பான பட்டணங்களைக் கட்டி,

2நாளா 11:11. அந்த அரணிப்புகளைப் பலப்படுத்தி, அவைகளிலே தலைவரையும், ஆகாரமும் எண்ணெயும் திராட்சரசமுமுள்ள பண்டகசாலைகளையும்,

2நாளா 11:12. யூதாவும் பென்யமீனும் அவன் பட்சத்திலிருக்க ஒவ்வொரு பட்டணத்திலும் பரிசைகளையும் ஈட்டிகளையும் வைத்து, அவைகளை மிகுதியும் பலப்படுத்தினான்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார், தாவீதின் வம்சத்தைவிட்டு கலகம்பண்ணி பிரிந்துபோகிறார்கள். இவர்கள் இதற்கு முன்பே தாவீதின் குடும்பத்தாரோடு பட்சமாயிராமல் விலகியே இருந்தார்கள். இப்போது அவர்கள் ரெகொபெயாமுக்கு விரோதமாக கலகம்பண்ணி, தனியாகப் பிரிந்துபோய்விடுகிறார்கள்.

"அப்பொழுது பென்யமீன் மனுஷனான பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கே இருந்தான்; அவன் எக்காளம் ஊதி: எங்களுக்குத் தாவீதினிடத்தில் பங்கும் இல்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; இஸ்ரவேலே, நீங்கள் அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுங்கள் என்றான்" *(2சாமு 20:1).*

"அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தாவீதை விட்டுப் பின்வாங்கி, பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்பற்றிப் போனார்கள்; யோர்தான் தொடங்கி எருசலேம்மட்டுமுள்ள யூதா மனுஷர் தங்கள் ராஜாவைச் சார்ந்திருந்தார்கள்" *(2சாமு 20:2).*

ரெகொபெயாமை விட்டுப் பிரிந்துபோனவர்கள் சமஸ்த இஸ்ரவேலின் ஒற்றுமையைப்பற்றியும், ஒற்றுமையினால் உண்டாகும் பலத்தைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்கவில்லை. இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் வம்சத்தை விட்டு பிரிந்துபோனதினால், இஸ்ரவேல் தேசம் பலவீனமாயிற்று. அவர்களுடைய பொதுவான நன்மைகள் பாதிக்கப்படுகிறது.

தன்னைவிட்டு கலகம்பண்ணி பிரிந்துபோன இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை, தன்னிடத்தில் மறுபடியும் திருப்பிக்கொள்ளவேண்டுமென்று ரெகொபெயாம் விரும்புகிறான். அவன் ஒரு யுத்தவீரன். ரெகொபெயாம் தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களை, இராணுவபலத்தினால் ஒடுக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு வருகிறான். இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைத் தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தாரும் பென்யமீன் வம்சத்தாருமாகிய தெரிந்து கொள்ளப்பட்ட யுத்தவீரரான லட்சத்து எண்பதினாயிரம்பேரைக் கூட்டுகிறான் *(2நாளா 11:1).*

யூதாகோத்திரத்தாரும் பென்யமீன் கோத்திரத்தாரும் ரெகொபெயாமுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் மற்ற பத்துக்கோத்திரத்தாரின் கலகத்தை ஒடுக்குவதற்கு இவ்விரண்டு கோத்திரத்தாரும் ரெகொபெயாமுக்கு உதவி செய்ய முன்வருகிறார்கள். யூதாவும் பென்யமீனும் மாத்திரமே ரெகொபெயாமின் பட்சத்திலிருக்கிறார்கள்.

ரெகொபெயாம் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவன். ஆகையினால் யூதாகோத்திரத்தாரே ரெகொபெயாமோடு முதலாவது சேர்ந்துகொள்கிறார்கள். அதற்கு சில வருஷங்களுக்கு பின்பு, அவனோடு மற்றவர்களும் சேர்ந்துகொள்கிறார்கள். எருசலேம் நகரம் பென்யமீன் கோத்திரத்திலுள்ளது. எருசலேமுக்கு பாதுகாப்புவேண்டும். ஆகையினால் பென்யமீன் கோத்திரத்தாரும் ரெகொபெயாமோடு சேர்ந்துகொள்கிறார்கள்.

ரெகொபெயாம் தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணின இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறான். கர்த்தரோ ரெகொபெயாமின் முயற்சிகளையும், இஸ்ரவேலுக்கு விரோதமான அவனுடைய திட்டங்களையும் தடைபண்ணிவிடுகிறார். ரெகொபெயாமும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணாமலிருந்துவிடுகிறான்.

அப்பொழுது தேவனுடைய மனுஷனாகிய செமாயாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் செமாயாவிட, "நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும், யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற எல்லா இஸ்ரவேலரையும் நோக்கி" *(2நாளா 11:2,3).* தம்முடைய வார்த்தையை சொல்லுமாறு கட்டளையிடுகிறார்.

கர்த்தர் செமாயா மூலமாக ரெகொபெயாமுக்கும், அவனோடு கூடயிருக்கிற யுத்தவீரருக்கும் சொன்ன வார்த்தைகளின் விவரம் வருமாறு : "நீங்கள் போகாமலும், உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டுக்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (2நாளா 11:4).

ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு செவிகொடாமல் போகிறான். ரெகொபெயாம் தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் அவனுக்கு மறுஉத்தரவாக: "தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" (1இராஜா 12:16) என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய் விடுகிறார்கள்.

ரெகொபெயாமுக்கு மோசமான ஆலோசனைகளை சொன்னது யார் என்பதைப்பற்றி இஸ்ரவேல் சபையார் விசாரிக்கவில்லை. ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்களை அவனை விட்டு விலக்கி வைத்து விடவேண்டும் என்றும் அவர்கள் முயற்சிபண்ணவில்லை. ஒருவேளை மோசமான ஆலோசனை சொல்லுகிறவர்கள் ரெகொபெயாமோடு கூடயில்லாவிட்டால், அவன் ஜனங்களுக்கு இவ்வளவு கடினமான உத்தரவு கொடுத்திருக்கமாட்டான்.

இஸ்ரவேல் சபையார் ஞானமாய் யோசித்து செயல்படாமல், தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய உடன்படிக்கையைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருந்தும், அவர்கள் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இந்தக் கலகம் இஸ்ரவேல் சபையார்மீது வந்த மிகப்பெரிய பாவமாயிருக்கிறது.

"இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா? ஆகிலும் தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்னும் நேபாத்தின் குமாரன் எழும்பி, தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்" (2நாளா 13:5,6).

"பேலியாளின் மக்களாகிய வீணர் அவனோடேகூடி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் அவர்களை எதிர்க்கக்கூடாமல் வாலவயதும் திடனற்ற மனதுமாயிருக்கையில், அவனுக்கு விரோதமாய்த் தங்களைப் பலப்படுத்திக்கொண்டார்கள். இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே" (2நாளா 13:7,8).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாலும் யூதாகோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருக்கிறான் (1இராஜா 12:17). யூதாகோத்திரம் மாத்திரமேயன்றி வேறொருவரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றவில்லை (1இராஜா 12:20).

ரெகொபெயாமின் வார்த்தைகள் மோசமானதாயிருந்தாலும், அவன் நல்லவனாயிருக்கிறான். ரெகொபெயாம் இஸ்ரவேல் சபையாருக்கு கடினமான உத்தரவு கொடுத்ததுபோல, அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்கவில்லை. அவர்களை தேள்களினால் தண்டிக்கவுமில்லை. யூதாகோத்திரத்தார் ரெகொபெயாமின் ஆளுகையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் தேசத்தை ஞானமாய் ஆளுகை செய்யவில்லை. ரெகொபெயாம் இஸ்ரவேல் ஜனத்தாரிடத்திலிருந்து வரிவசூலிப்பதற்காக, தன்னுடைய பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை அவர்கள் மத்தியிலே அனுப்புகிறான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனைக் கல்லெறிந்து கொன்று போடுகிறார்கள்; அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி, எருசலேமுக்கு ஓடிப்போகிறான் (1இராஜா 12:18).

ரெகொபெயாமோடு கூட நிற்கிற வாலிபர்கள், அவனுக்கு இந்த தவறான ஆலோசனையை சொல்லியிருக்கவேண்டும். வாலிபரின் ஆலோசனையைக் கேட்டு ரெகொபெயாம் அதோராமை அனுப்புகிறான். இஸ்ரவேல் ஜனத்தாரோ ரெகொபெயாமினுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிய விரும்பவில்லை. "தாவீதே உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள்" என்று சொல்லி இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமை விட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். பிரிந்துபோனவர்கள் ரெகொபெயாமுக்கு வரிசெலுத்தமாட்டார்கள்.

இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்துபோனதை உறுதிபண்ணுகிறார்கள். அதோராமைக் கொன்றுபோடுகிறார்கள். வாலிபரின் தவறான ஆலோசனைகளுக்கு ரெகொபெயாம் செவிகொடுத்தான். தீயஆலோசனையின் விளைவாக அதோராம் செத்துப்போகிறான்.

ரெகொபெயாம் இப்போது சீகேமிலே இருக்கிறான். அதோராம் செத்துப்போன செய்தியைக் கேட்டவுடன், ரெகொபெயாம் தீவிரமாய் இரதத்தின்மேல் ஏறி எருசலேமுக்கு ஓடிப்போகிறான். அவன் சீகேமைவிட்டு உடனடியாக புறப்பட்டுப்போனதும் மதியீனமான செயல். ரெகொபெயாம் சீகேமைவிட்டு ஓடிப்போனதினால், அவன் தன்னுடைய சிநேகிதரை இழந்துவிடுகிறான். அவனுடைய விரோதிகளின் பெலன் அதிகரிக்கிறது. இஸ்ரவேல் சபையார் ரெகொபெயாமைவிட்டுப் பிரிந்து தங்கள் கூடாரங்களுக்குப் போய்விடுகிறார்கள் (1இராஜா 12:16). ரெகொபெயாமோ, இஸ்ரவேலருக்கு பயந்து, சீகேமை விட்டே ஓடிப்போகிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போன பின்பு, இஸ்ரவேல் சபையார் எல்லோரும், யெரொபெயாமை அழைத்தனுப்பி, அவனை சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக்குகிறார்கள் (1இராஜா 12:20). ரெகொபெயாம் சீகேமிலே தங்களோடு கூடயிருக்கும் வரையிலும், இஸ்ரவேல் சபையார் யெரெபெயாமை தங்களுக்கு ராஜாவாக்கவில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போனபின்பு, இஸ்ரவேல் சபையார் யெரொபெயாமை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள்.

தான் இழந்துபோன ராஜ்யபாரத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ரெகொபெயாம் முயற்சி பண்ணுகிறான். இஸ்ரவேல் சபையாரை பயமுறுத்தி, அவர்களை அடக்கி ஆளுகை செய்யலாம் என்று ரெகொபெயாம் நினைத்தான். அது நிறைவேறவில்லை. இப்போது அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணலாம் என்று ரெகொபெயாம் தீர்மானம்பண்ணுகிறான். வாயின் வார்த்தைகளுக்கு அடங்காத இஸ்ரவேல் சபையாரை, பட்டயங்களினால் அடக்கலாம் என்று ரெகொபெயாம் தீர்மானித்திருக்கிறான்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது, இஸ்ரவேல் வம்சத்தாரோடே யுத்தம்பண்ணவும், ராஜ்யத்தைச் சாலொமோனின் குமாரனாகிய தன்னிடமாகத் திருப்பிக்கொள்ளவும், யூதா வம்சத்தார் பென்யமீன் கோத்திரத்தார் அனைவருமாகிய தெரிந்துகொள்ளப்பட்ட யுத்தவீரர் லட்சத்து எண்பதினாயிரம் பேரைக் கூட்டுகிறான் (1இராஜா 12:21).

தனக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிற இஸ்ரவேல் சபையாரை அடக்கவேண்டுமென்று ரெகொபெயாம் தீர்மானிக்கிறான். அவனுடைய மனதில் உறுதியும் தைரியமும் இருக்கிறது. ரெகொபெயாம் சீகேமிலிருந்த வரையிலும் அவனுடைய மனதில் தைரியமில்லை. ரெகொபெயாம் எருசலேமுக்கு திரும்பி வந்த பின்போ, அவனுடைய மனதிலே தைரியமும், திடநம்பிக்கையும் உண்டாயிற்று.

யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் கர்த்தருக்கும் தங்கள் ராஜாவுக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம் பண்ணவில்லை. யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் தாவீதின் வம்சத்தைப் பின்பற்றுகிறார்கள்.

ரெகொபெயாம் இவ்விரண்டு கோத்திரங்களிலுமிருந்து 1,80,000 யுத்தவீரர்களை தெரிந்து கொள்கிறான். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ரெகொபெயாமுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி அவனை விட்டுப் பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களுடைய கலகத்தை ஒடுக்கவும், அவர்களோடு யுத்தம்பண்ணி, அவர்களை தன்னிடமாகச் சேர்த்துக்கொள்ளவும், ரெகொபெயாம் அவர்கள்மீது யுத்தம்பண்ண 1,80,000 யுத்த வீரரைத் தெரிந்துகொள்கிறான். ரெகொபெயாமின் யுத்தவீரர்கள் எல்லோரும் யூதாவம்சத்தாரிலும், பென்யமீன் கோத்திரத்திலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்.

ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமானது, அவனுடைய தைரியத்திற்கும் பலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது. ரெகொபெயாம் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போனது, அவனுடைய அதிகமான தைரியத்திற்கும், அதிகமான பெலத்திற்கும் எடுத்துக்காட்டாயிருக்கிறது.

ரெகொபெயாம் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண 1,80,000 யுத்தவீரரை தெரிந்துகொள்கிறான். அப்போது தேவனுடைய மனுஷனாகிய சேமாயாவுக்கு தேவனுடைய வார்த்தை யுண்டாயிற்று. கர்த்தர் சேமாயாவை நோக்கி, "நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும் யூதா வம்சத்தார் அனைவரையும் பென்யமீனரையும், மற்ற ஜனங்களையும் நோக்கி: நீங்கள் போகாமலும், இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டிற்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்" (1இராஜா 12:23,24) என்று சொல்லுகிறார்.

சேமாயா அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். அப்பொழுது ரெகொபெயாமும், அவனோடு கூடயிருக்கிற 1,80,000 யுத்தவீரரும், கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே திரும்பிப் போய்விடுகிறார்கள் (1இராஜா 12:24).

யூதாவம்சத்தார் இஸ்ரவேல் புத்திரரை சிநேகிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும். தங்கள் சகோதரரோடு அவர்கள் யுத்தம்பண்ணக்கூடாது. ரெகொபெயாமுக்கு யுத்தம்பண்ணக்கூடிய ஆயத்தம் இருந்தாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, யுத்தம்பண்ணாமல் திரும்பி விடுகிறான்.

சேமாயா தீர்க்கதரிசி மிகவும் பிரபல்யமானவரல்ல. இவர் தேவனுடைய மனுஷன். ரெகொபெயாமோ இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜா. அவனுக்கு கீழே 1,80,000 யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். சேமாயாவோ தனியாக இருக்கிறார். ரெகொபெயாம் சேமாயாவைப் பார்க்கும்போது, அவரோடு கூடயிருக்கிற கர்த்தரையும் பார்க்கிறான். சேமாயாவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போய்விடுகிறான்.

ரெகொபெயாம் ஆரம்பத்தில் தன்னுடைய ஆதாயத்தை மாத்திரமே பார்த்தான். யுத்தத்திலே ஜெயிப்பதற்கு ரெகொபெயாமுக்கு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ரெகொபெயாமின் பக்கத்தில் நீதியும் நியாயமும் இருக்கிறது. இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தாவீதின் குடும்பத்தாரைப் பின்பற்றவேண்டும். தாவீதின் குடும்பத்தாருடைய ஆளுகைக்கு அவர்கள் தங்களை கீழ்ப்படுத்தவேண்டும். இது கர்த்தருடைய கட்டளை.

ரெகொபெயாமுக்கு சாதகமான சூழ்நிலைகள் இருந்தாலும், அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல் திரும்பிப்போய்விடுகிறான். ரெகொபெயாம் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணினால், அவனுக்கு யுத்தத்திலே ஜெயமுண்டாகாது. அவன் ஒருவேளை ஜெயித்தாலும், அவனுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்காது.

அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, யெரொபெயாமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதை விட்டுத் திரும்பிப் போய்விடுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய தெய்வீக கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக செயல்பட அவர்கள் விரும்பவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், யுத்தத்திலே தங்களுக்கு ஜெயமுண்டாகாது என்றும், தங்களுடைய காரியங்கள் சித்திக்காது என்றும் ரெகொபெயாமுக்கும், அவனுடைய யுத்தவீரருக்கும் தெரிந்திருக்கிறது.

யெரொபெயாமின் வரலாற்றையும், பத்துக் கோத்திரத்தாரின் வடக்கு ராஜ்யத்தின் வரலாற்றையும் 2நாளாகமம் புஸ்தகம் விவரிக்கவில்லை. இது யூதாவினுடைய ராஜாக்களின் வரலாற்றை மட்டுமே விவரிக்கிறது. 1இராஜா 11:25-14:19 ஆகிய வசனங்களில் யெரொபெயாமைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. 2நாளாகமம் புஸ்தகத்தில் தாவீதின் வீட்டாரோடும், யூதாவின் ராஜாக்களோடும் ஏதாவது தொடர்பு இருந்தால் மட்டுமே வடக்கு ராஜ்யத்தின் ராஜாக்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

ரெகொபெயாமோ, தன்னைவிட்டுப் பிரிந்துபோன இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண பெரிய சேனையை கூட்டியிருக்கிறான். அவனுடைய சேனையில் 1,80,000 யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். ரெகொபெயாமின் சேனை பெரிதாயிருக்கிறது. அவர்கள் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அவர்கள் யுத்தம்பண்ணாமல் தங்கள் வீட்டிற்கு திரும்பி வருவது கோழைத்தனமான காரியம். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் யுத்தம்பண்ணாமல் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போவதை, அண்டை தேசத்தார் பார்த்து அவர்களை ஏளனம் பண்ணுவார்கள். இதனால் ரெகொபெயாமுக்கு அவமானமுண்டாகும். ஆனாலும் ரெகொபெயாம் மற்றவர்கள் மூலமாக வரும் அவமானத்திற்கும், ஏளனத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், தன் யுத்தவீரரோடு திரும்பிப்போகிறான்.

ரெகொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல் திரும்பி வந்தாலும், அவன் சும்மாயிருக்கவில்லை. யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற அரணிப்பான பட்டணங்களைக் கட்டுகிறான்.

ரெகொபெயாமிற்கு இரண்டு விரோதிகள் இருக்கிறார்கள். வடக்கில் யெரொபெயாமும், தெற்கில் எகிப்து தேசமும் இருக்கிறது. ரெகொபெயாம் தன்னுடைய 15 பட்டணங்களில் அரண்களைக் கட்டுகிறான். இவை தவிர, தன்னுடைய எல்லைகளையும் ரெகொபெயாம் வலுப்படுத்துகிறான். யெரொபெயாமைவிட எகிப்து தேசம் ரெகொபெயாமுக்கு அதிக அச்சுறுத்தலாக இருந்தது. ஆகையினால் ரெகொபெயாம் தன் தேசத்தின் தெற்குப்பகுதியில் இருந்த பட்டணங்களில் 12 அரண்களைக் கட்டுகிறான். (2நாளா 11:5-12).

ரெகொபெயாம் எருசலேமில் வாசமாயிருந்து, யூதாவில் அரணான பட்டணங்களைக் கட்டுகிறான். அவன் பெத்லகேமும், ஏத்தாமும், தெக்கொவாவும், பெத்சூரும், சோகோவும், அதுல்லாமும், காத்தும், மரேஷாவும், சீப்பும், அதோராயீமும், லாகீசும், அசேக்காவும், சோராவும், ஆயிலோனும், எப்ரோனும் ஆகிய யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற அரணிப்பான பட்டணங்களைக் கட்டுகிறான் (2நாளா 11:5-10).

ரெகொபெயாம் அந்த அரணிப்புகளைப் பலப்படுத்தி, அவைகளிலே தலைவரையும், ஆகாரமும் எண்ணெயும் திராட்சரசமுமுள்ள பண்டகசாலைகளையும், யூதாவும் பென்யமீனும் அவன் பட்சத்திலிருக்க ஒவ்வொரு பட்டணத்திலும் பரிசைகளையும் ஈட்டிகளையும் வைத்து, அவைகளை மிகுதியும் பலப்படுத்துகிறான் (2நாளா 11:11,12).

ரெகொபெயாம் ஆரம்பத்திலே தன்னுடைய சிநேகிதரான வாலிபரின் ஆலோசனையைக் கேட்டு, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை இழந்தான். இப்போதோ அவன் தன்னிடத்திலுள்ள முதியோரின் ஆலோசனைகளைக் கேட்கிறான். அவர்கள் யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிற பட்டணங்களின் அரணிப்புகளை பலப்படுத்த சொல்லுகிறார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியுமாறு முதியோர் ரெகொபெயாமுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

ரெகொபெயாம் ஆரம்பத்தில் தன்னுடைய சிநேகிதரான வாலிபரின் ஆலோசனைகளைக் கேட்டு, தன்னுடைய தேசத்தின் பெரும்பகுதியை இழந்துவிட்டான். இப்போதோ முதியோரின் ஆலோசனைகளைக் கேட்டு, தன்னிடத்திலுள்ள பட்டணங்களை காத்துக்கொள்ள ஆயத்தம்பண்ணுகிறான்.

ரெகொபெயாம் யூதாவிலே கட்டுகிற அரணிப்பான பட்டணங்கள் மிகவும் முக்கியமான பட்டணங்களாகும். இவை யூததேசத்தின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. யூதாதேசத்தின் பாதுகாப்புக்கு இவை பிரயோஜனமாயிருக்கும். ரெகொபெயாம் ஒவ்வொரு பட்டணத்திலும் ஆகார பண்டக சாலைகளையும், ஆயுதசாலைகளையும் கட்டுகிறான். அவற்றிலே ஆகாரங்களையும் ஆயுதங்களையும் சேமித்து வைக்கிறான்.

ரெகொபெயாம் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, கர்த்தர் அவனை யுத்தம்பண்ண போகவிடாதவாறு தடுத்துவிடுகிறார். ரெகொபெயாம் யுத்தம்பண்ணாவிட்டாலும், யூதாதேசத்திலே அரணிப்பான பட்டணங்களைக் கட்டி, தேசத்தின் பாதுகாப்பை பலப்படுத்துகிறான்.

யெரொபெயாமின் ராஜ்யபாரம் 2நாளா 11:13-17

2நாளா 11:13. இஸ்ரவேலெங்கும் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் தங்கள் எல்லா எல்லைகளிலுமிருந்து அவனிடத்தில் வந்தார்கள்.

2நாளா 11:14. லேவியர் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்கு யெரொபெயாமும் அவன் குமாரரும் அவர்களைத் தள்ளிப் போட்டபடியினால், தங்கள் வெளிநிலங்களையும் தங்கள் காணியாட்சிகளையும் விட்டு, யூதாதேசத்துக்கும் எருசலேமுக்கும் வந்தார்கள்.

2நாளா 11:15. அவன் மேடைகளுக்கென்றும், பேய்களுக்கென்றும், தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்கென்றும் ஆசாரியர்களை ஏற்படுத்தினான்.

2நாளா 11:16. அந்த லேவியரின் பிறகாலே இஸ்ரவேலின் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு எருசலேமுக்கு வந்தார்கள்.

2நாளா 11:17. இப்படி மூன்று வருஷமட்டும் யூதாவின் ராஜ்யத்தைப் பலப்படுத்தி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமைத் திடப்படுத்தினார்கள்; தாவீதும் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்று வருஷமட்டும் நடந்தார்கள்.

லேவியரும் ஆசாரியரும் ரெகொபெயாமை பலப்படுத்துகிறார்கள். தாவீதின் வம்சத்தாரை விட்டுப் பிரிந்துபோனவர்களுக்கு ரெகொபெயாம் தலைவனாயிருக்கிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆராதனை நடைபெறவில்லை. அங்கே ஆசாரியருக்கும் லேவியருக்கும் ஊழியங்கள் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் ஆசாரியரும் லேவியரும், வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து, தெற்கு யூதாதேசத்திற்கு திரும்பி வருகிறார்கள்.

யெரொபெயாம் மேடைகளுக்கென்றும், பேய்களுக்கென்றும், தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்கென்றும் ஆசாரியர்களை ஏற்படுத்துகிறான் (2நாளா 11:15).

யெரொபெயாமும் அவன் குமாரரும் லேவியரையும் ஆசாரியரையும் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்கு அவர்களைத் தள்ளிப் போடுகிறார்கள் ஆகையினால், அவர்கள் தங்கள் வெளிநிலங்களையும் தங்கள் காணியாட்சிகளையும் விட்டு, யூதாதேசத்துக்கும் எருசலேமுக்கும் வருகிறார்கள் (2நாளா 11:14).

யெரொபெயாம் லேவி கோத்திரத்து ஆசாரியர்களைக் கர்த்தருடைய ஆராதனைக்கு நியமிக்கவில்லை. யெரொபெயாம் மேடைகளுக்கென்றும், பேய்களுக்கென்றும், தான் உண்டாக்கின கன்றுக் குட்டிகளுக்கென்றும் ஆசாரியர்களை ஏற்படுத்துகிறான் (2நாளா 11:13-15).

பத்துக்கோத்திரத்தின் ராஜ்யத்திலிருந்த ஆசாரியரும், லேவியரும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்கள் அனைவரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடுவதற்கும், கர்த்தருக்குப் பலியிடும்படிக்கும் எருசலேமுக்கு வருகிறார்கள். (1இராஜா 12:17).

தெற்கு ராஜ்யத்தில் யூதா கோத்திரத்தாரும், பென்யமீன்கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். இவர்களோடு இஸ்ரவேலின் மற்றக் கோத்திரத்திலுள்ள பக்தியுள்ள ஜனங்களும், லேவியரும், ஆசாரியரும் வந்து சேருகிறார்கள். வடக்கு ராஜ்யம் கர்த்தரைவிட்டு விலகிப் போயிற்று.

கி.மு. 722 ஆம் வருஷத்தில் வடக்கு ராஜ்யம் அழிந்தது (2சாமு 17). யூதா ராஜ்யமும் கர்த்தரைவிட்டு விலகிற்று. வடக்கு ராஜ்யம் அழிந்து 116 வருஷங்களுக்குப்பின்பு, யூதாவும் அழிந்தது. (2இராஜா 24-25). யூதாவின் சிறையிருப்புக்கு 70 வருஷங்களுக்குப் பின்பு, இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்திலும் இருந்த பக்தியுள்ளவர்கள் ஒரு தேசமாகப் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் காலம் வரையிலும் இவர்கள் பாலஸ்தீன தேசத்தில் இருந்தார்கள்.

ரெகொபெயாம் தன்னிடத்தில் வருகிற ஆசாரியரையும் லேவியரையும் ஏற்றுக்கொள்கிறான். தெற்கு யூதாதேசத்திலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைகள் நடைபெறுகிறது. இங்கே அவர்களுக்கு ஊழியங்கள் கொடுக்கப்படுகிறது.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் இருந்த லேவியர்களுக்கு, யோசுவாவின் காலத்திலே பட்டணங்களும், வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டிருந்தது. இவையெல்லாம் லேவியரின் காணியாட்சிகள். யெரொபெயாம் லேவியரை அங்கீகரிக்கவில்லை. அவன் பொன்கன்றுக்குட்டிகளுக்கு கோவில்களைக் கட்டி, அதிலே தனக்கு பிரியமானவர்களை ஆசாரியர்களாக ஏற்படுத்துகிறான். இதனால் லேவியர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்தாலும், அவர்கள் ஊழியம் இல்லாதவர்களாகயிருக்கிறார்கள்.

யெரொபெயாமும் அவனுடைய குமாரரும் லேவியரையும் ஆசாரியரையும் தள்ளிப்போடுகிறார்கள். யூதாகோத்திரத்திலும், பென்யமீன் கோத்திரத்திலும் வாசம்பண்ணுகிற லேவியர் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற கோத்திரங்களில் வாசம்பண்ணுகிற லேவியருக்கு ஊழியமில்லை. அந்த லேவியர்கள் ஊழியம் பண்ணாமல், தங்கள் காணியாட்சியை அனுபவிப்பதற்கு பதிலாக, தங்கள் பட்டணங்களையும் விளைநிலங்களையும் விட்டுவிட்டு, யூதாதேசத்திற்கு வருகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்திலிருந்து விக்கிரகங்களையும் விக்கிரகாராதனைகளையும் அகற்றியிருக்கிறார். ஆனால் யெரொபெயாமோ அவற்றை மறுபடியும் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு கொண்டு வருகிறான். லேவியரும் ஆசாரியரும் விக்கிரகங்களை ஆராதிக்க மனதில்லாமல், கர்த்தரை ஆராதிக்க எருசலேமுக்கு வருகிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற லேவியர்கள், அந்த தேசத்திலேயே தங்கியிருந்தால், அவர்களுக்கு பலவிதமான சோதனைகள் வரும். எல்லோரும் விக்கிரகங்களை ஆராதிப்பதுபோல, இவர்களும் விக்கிரகங்களை ஆராதிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அப்படிப்பட்ட சோதனைகள் தங்களுக்கு வரக்கூடாது என்று நினைத்து, வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற லேவியர்கள், தங்களுடைய காணியாட்சிகளை விட்டு விட்டு, யூதாதேசத்திற்கும், எருசலேமுக்கும் வருகிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே யெரொபெயாமின் மோசமான ஆட்சி நடைபெறுகிறது. அவன் தாணில் ஒரு பொன்கன்றுக்குட்டியையும், பெத்தேலில் ஒரு பொன்கன்றுக்குட்டியையும் நிறுவியிருக்கிறான். அந்தப் பொன்கன்றுக்குட்டிகளை ஆராதனை செய்யாதவர்களை, யெரொபெயாமும் அவனுடைய குமாரரும் துன்பப்படுத்துகிறார்கள். இதனால் லேவியர்களும் ஆசாரியர்களும், யெரெபெயாமின் உபத்திரவங்களுக்கு பயந்து, யூதாதேசத்திற்கு வருகிறார்கள்.

இஸ்ரவேல் எங்கும் இருக்கிற ஆசாரியரும் லேவியரும், தங்கள் எல்லா எல்லைகளிலும் இருந்து, ரெகொபெயாமினிடத்திற்கு வருகிறார்கள் (2நாளா 11:13). அவர்கள் தங்கள் வெளிநிலங்களையும், தங்கள் காணியாட்சிகளையும் விட்டு யூதாதேசத்திற்கும், எருசலேமுக்கும் வருகிறார்கள் (2நாளா 11:14).

யெரொபெயாம் கர்த்தருடைய ஆசாரியரை வெளியேற்றுகிறான். ரெகொபெயாமோ அவர்களை ஏற்றுக்கொள்கிறான். லேவியரும் ஆசாரியரும் தங்களுடைய சரீரப்பிரகாரமான பராமரிப்புக்களைவிட, கர்த்தருடைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் தங்கள் வெளிநிலங்களையும், காணியாட்சிகளையும் விட்டு, யூதாதேசத்திற்கும் எருசலேமுக்கும் வருகிறார்கள்.

யூதாதேசத்திற்கு வந்திருக்கிற லேவியருக்கு ஆதரவாக இங்கே வெளிநிலங்களோ காணியாட்சிகளோ இல்லை. அவர்கள் கர்த்தருடைய பராமரிப்பையும், பாதுகாப்பையும் நம்பி வந்திருக்கிறார்கள். யூதாதேசத்திலிருக்கிறவர்கள், இந்த லேவியர்கள்மீது இரக்கம் காண்பித்து, அவர்களுக்கு போஜனபானங்களைக் கொடுக்கவேண்டும்.

யூதாதேசத்திற்கு வந்திருக்கிற லேவியர்களோ, வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் வாசம்பண்ண விரும்பவில்லை. அங்கே ஐசுவரியம் இருக்கிறது. ஆனால் அது ஆவிக்குரிய வேசித்தனத்தினால் உண்டான ஐசுவரியம். அப்படிப்பட்ட ஐசுவரியத்தை அனுபவிப்பதைப் பார்க்கிலும், எருசலேமிலே, கர்த்தருடைய சமுகத்தில், ஐசுவரியமில்லாமல், போஜனமில்லாமல், கர்த்தருடைய கிருபையையும், அவருடைய தெய்வீக பராமரிப்பையும் நம்பி ஜீவிப்பதை இவர்கள் தெரிந்துகொள்கிறார்கள்.

ரெகொபெயாமும், யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் தங்கள் தேசத்திற்கு வந்திருக்கிற லேவியரை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த லேவியர்களால் அவர்களுக்கு சரீரப்பிரகாரமான உதவிகளை செய்ய முடியாது. ஆனாலும் அவர்களுக்கு ஆவிக்குரிய உதவிகளை செய்ய முடியும். யூதாதேசத்திற்கு வந்திருக்கிற லேவியர்கள், ரெகொபெயாமுக்காகவும் யூதாதேசத்தாருக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிக்கிறார்கள்.

யூதாதேசத்திற்கு வந்திருக்கிற லேவியர்கள், எல்லா சாபங்களையும் வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் விட்டுவிட்டு, தெய்வீக ஆசீர்வாதங்களோடு, யூதாதேசத்திற்கு வந்திருக்கிறார்கள். இந்த ஆசீர்வாதங்களிலே யூதாதேசத்தாருக்கு பங்கு இருக்கிறது. யூதாதேசத்தார் தங்களுக்கு சரீரப்பிரகாரமான நன்மைகளை செய்யும்போது, லேவியர்கள் அவர்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளை செய்கிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து லேவியர்கள் எல்லோரும் தெற்கு யூதாதேசத்திற்கு வருகிறார்கள். அந்த லேவியரின் பிறகாலே இஸ்ரவேலின் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு எருசலேமுக்கு வருகிறார்கள் (2நாளா 11:16).

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து, தெற்கு யூதாதேசத்திற்கு வந்த லேவியரும், பக்தியுள்ள இஸ்ரவேலரும், யூதாவின் ராஜ்யத்தைப் பலப்படுத்துகிறார்கள். அவர்களுடைய பக்தியினாலும் ஜெபத்தினாலும் யூதாதேசத்திற்கு ஆசீர்வாதம் உண்டாகிறது.

"எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத்திலே சொல்லுவார்கள்" (சக 12:5).

ரெகொபெயாமும், தெற்கு யூதாதேசத்தாரும், தாவீதும் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்று வருஷம் மட்டும் நடக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து வந்த லேவியரும், பக்தியுள்ள இஸ்ரவேலரும், இந்த மூன்று வருஷமட்டும் யூதாவின் ராஜ்யத்தைப் பலப்படுத்தி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமைத் திடப்படுத்துகிறார்கள் (2நாளா 11:17).

ரெகொபெயாம் மூன்று வருஷம் மட்டுமே கர்த்தரைப் பின்பற்றுகிறான். அதன் பின்பு, அவனும், யூதாவும் கர்த்தரைவிட்டு விலகிப் பாவம்செய்தார்கள். (2நாளா 12:1) இதற்காகக் கர்த்தர் யூதாவின்மீது எகிப்தியரை அனுப்புகிறார். அவர்கள் யூதாவிலுள்ள பொக்கிஷங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். (2நாளா 12:2-12). இந்த வாக்கியத்தில் "சாலொமோன் நடந்த வழி" என்பது அவன் ஏராளமான அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணி கர்த்தரைவிட்டு விலகிப் போவதற்கு முன்பாக நடந்த செம்மையான வழியைக் குறிக்கும். (1இராஜா 11:1-9).

ரெகொபெயாமும், தெற்கு யூதாதேசத்தாரும், தாவீதும் சாலொமோனும் நடந்த வழிகளிலே நடக்காமல், கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, லேவியராலும், பக்தியுள்ள இஸ்ரவேலராலும் அவர்களை திடப்படுத்த முடியவில்லை.

ரெகொபெயாமின் குடும்பம் 2நாளா 11:18-23

2நாளா 11:18. ரெகொபெயாம் தாவீதின் குமாரனாகிய எரிமோத்தின் குமாரத்தி மகலாத்தையும், ஈசாயின் குமாரனாகிய எலியாபின் குமாரத்தி அபியாயேலையும் விவாகம்பண்ணினான்.

2நாளா 11:19. இவள் அவனுக்கு ஏயூஸ் சமரியா சாகாம் என்னும் குமாரரைப் பெற்றாள்.

2நாளா 11:20. அவளுக்குப்பிறகு அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு அபியாவையும், அத்தாயியையும், சீசாவையும், செலோமித்தையும் பெற்றாள்.

2நாளா 11:21. ரெகொபெயாம் தன்னுடைய மனைவிகள் மறுமனையாட்டிகள் எல்லாரிலும், அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளைச் சிநேகித்தான்; பதினெட்டு மனைவிகளையும் அறுபது மறுமனையாட்டிகளையும் விவாகம்பண்ணி, இருபத்தெட்டுக் குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெற்றான்.

2நாளா 11:22. ரெகொபெயாம் மாகாளின் குமாரனாகிய அபியாவை அவன் சகோதரருக்குள்ளே தலைவனும் பெரியவனுமாக ஏற்படுத்தினான்; அவனை ராஜாவாக்க நினைத்தான்.

2நாளா 11:23. அவன் புத்தியாய் நடந்து, யூதா பென்யமீனுடைய எல்லா தேசங்களிலுமுள்ள அரணான சகல பட்டணங்களிலும் தன் குமாரர் யாவரையும் பிரித்துவைத்து, அவர்களுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்து, அவர்களுக்கு அநேகம் பெண்களைத் தேடினான்.

ரெகொபெயாம் ஆரம்பத்தில் கர்த்தரைத் தேடினான். அதன்பின்பு அவன் கர்த்தரை விட்டு விலகி தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடங்கொடுத்தான். ரெகொபெயாம், தன்னுடைய தகப்பனாராகிய சாலொமோனைப்போலவே, தனக்கு அநேகம் ஸ்திரீகளைத் தேடுகிறான்.

சாலொமோன் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணினார். ரெகொபெயாமோ தாவீதின் வம்சத்திலேயே விவாகம்பண்ணுகிறான். ரெகொபெயாம் தாவீதின் குமாரனாகிய எரிமோத்தின் குமாரத்தி மகலாத்தையும், ஈசாயின் குமாரனாகிய எலியாபின் குமாரத்தி அபியாயேலையும் விவாகம்பண்ணுகிறான் (2நாளா 11:18).

ரெகொபெயாம் பதினெட்டு மனைவிகளையும் அறுபது மறுமனையாட்டிகளையும் விவாகம்பண்ணி, இருபத்தெட்டுக் குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெறுகிறான் (2நாளா 11:21).

ரெகொபெயாம் தன்னுடைய மனைவிகள் மறுமனையாட்டிகள் எல்லாரிலும், அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளைச் சிநேகிக்கிறான். ரெகொபெயாம் மாகாளின் குமாரனாகிய அபியாவை அவன் சகோதரருக்குள்ளே தலைவனும் பெரியவனுமாக ஏற்படுத்துகிறான்; ரெகொபெயாம் அவனை ராஜாவாக்க நினைக்கிறான் (2நாளா 11:21,22).

ரெகொபெயாமின் குமாரர்களில் சிலருடைய பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அபியாயேல் அவனுக்கு ஏயூஸ் சமரியா சாகாம் என்னும் குமாரரைப் பெற்றாள். அவளுக்குப்பிறகு அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்கு அபியாவையும், அத்தாயியையும், சீசாவையும், செலோமித்தையும் பெற்றாள்" (2நாளா 11:19,20).

ரெகொபெயாம் புத்தியாய் நடந்து, யூதா பென்யமீனுடைய எல்லா தேசங்களிலுமுள்ள அரணான சகல பட்டணங்களிலும் தன் குமாரர் யாவரையும் பிரித்துவைத்து, அவர்களுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுத்து, அவர்களுக்கு அநேகம் பெண்களைத் தேடுகிறான் (2நாளா 11:23).

ரெகொபெயாமுக்கு 28 குமாரர்கள் இருக்கிறார்கள். இவர்களை ஒரே இடத்தில் வைக்காமல் யூதா, பென்யமீனுடைய சகல பட்டணங்களிலும் பிரித்து வைக்கிறான். இதனால் தன்னுடைய தேசத்திலுள்ள எல்லா ஜனங்களும் தனக்கு எதிராகக் கலகம் பண்ணாமல் உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நினைத்தான்.

ரெகொபெயாமுக்கு 18 மனைவிகளும், 60 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். இவர்களின் சிலர் விக்கிரகாராதனைக்காரர்களாக இருந்து ரெகொபெயாமைக் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யப் பண்ணினார்கள் (2நாளா 12:1-2; 1இராஜா 14:22-24). ரெகொபெயாமின் பின் மாற்றத்திற்கு இதுவும் ஒரு காரணம் (2நாளா 11:21,23; 1இராஜா 11:1-9).

12 அதிகாரம்

ரெகொபெயாமின் ராஜ்யபாரத்தைப்பற்றி ராஜாக்களின் புஸ்தகத்தில் ஓரளவு சொல்லப்பட்டிருந்தாலும், நாளாகமத்தின் புஸ்தகத்தில் இன்னும் அதிகமான விவரங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. ரெகொபெயாமும் அவனுடைய ஜனங்களும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள் (2நாளா 12:1). கர்த்தர் அவர்களை எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்கினிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். சீஷாக் தெற்கு யூதாதேசத்தாரை வெகுவாக ஒடுக்குகிறான் (2நாளா 12:2-4).

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய செமாயா என்பவனை, ரெகொபெயாமினிடத்திற்கும், இஸ்ரவேலின் பிரபுக்களினிடத்திற்கும் அனுப்புகிறார். செமாயா அவர்களுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொல்லுகிறான். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டும் என்று எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறான் (2நாளா 12:5).

ரெகொபெயாமும் இஸ்ரவேல் ஜனத்தாரும் தங்களைத் தாழ்த்துகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள் (2நாளா 12:6). கர்த்தர் தம்முடைய சகாயத்தை அவர்களுக்கு கட்டளையிடுகிறார் (2நாளா 12:7,12).

தெற்கு யூததேசத்தாரின் பாவத்தினிமித்தமாக, கர்த்தருடைய கோபத்தின் அடையாளம் அவர்களிடத்தில் காணப்படுகிறது. எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ரெகொபெயாமின் அரண்மனை பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் (2நாளா 12:8-11).

ரெகொபெயாமின் பொதுவான சுபாவமும், அவனுடைய ராஜ்யபாரத்தைப்பற்றிய விவரமும் (2நாளா 12:13-16).

யூதாவின் பாவம்
2நாளா 12:1-12

2நாளா 12:1. ரெகொபெயாம் ராஜ்யத்தைத் திடப்படுத்தித் தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின், அவனும் அவனோடே இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிட்டார்கள்.

2நாளா 12:2. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின படியினால், ராஜாவாகிய ரெகொபெயாமின் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் ஆயிரத்து இருநூறு இரதங்களோடும், அறுபதினாயிரம் குதிரைவீரரோடும் எருசலேமுக்கு விரோதமாய் வந்தான்.

2நாளா 12:3. அவனோடேகூட எகிப்திலிருந்து வந்த லூபியர், சூக்கியர், எத்தியோப்பியரான ஜனங்கள் எண்ணிக்கைக்கு அடங்காதவர்களாயிருந்தார்கள்.

2நாளா 12:4. அவன் யூதாவுக்கு அடுத்த அரணான பட்டணங்களைப் பிடித்து, எருசலேம் மட்டும் வந்தான்.

2நாளா 12:5. அப்பொழுது செமாயா தீர்க்கதரிசி ரெகொபெயாமிடத்துக்கும், சீஷாக்கினிமித்தம் எருசலேமிலே வந்து கூடியிருக்கிற யூதாவின் பிரபுக்களிடத்துக்கும் வந்து, அவர்களை நோக்கி: நீங்கள் என்னை விட்டுவிட்டீர்கள், ஆகையால் நான் உங்களையும் சீஷாக்கின் கையிலே விழும்படி விட்டுவிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2நாளா 12:6. அப்பொழுது இஸ்ரவேலின் பிரபுக்களும் ராஜாவும் தங்களைத் தாழ்த்தி கர்த்தர் நீதியுள்ளவர் என்றார்கள்.

2நாளா 12:7. அவர்கள் தங்களைத் தாழ்த்தினதைக் கர்த்தர் கண்டபோது, கர்த்தருடைய வார்த்தை செமாயாவுக்கு உண்டாகி, அவர் சொன்னது: அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள், ஆகையால் அவர்களை அழிக்கமாட்டேன்; என் உக்கிரம் சீஷாக்கைக்கொண்டு எருசலேமின்மேல் ஊற்றப்படாதபடிக்கு, அவர்களுக்குக் கொஞ்சம் சகாயத்தைக் கட்டளையிடுவேன்.

2நாளா 12:8. ஆனாலும் என்னைச் சேவிக்கிறதற்கும், அந்நிய தேசங்களின் ராஜ்யங்களைச் சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்கள் அறியும்படிக்கு அவனைச் சேவிக்கிறவர்களாவார்கள் என்றார்.

2நாளா 12:9. அப்படியே எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன்பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

2நாளா 12:10. அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்புவித்தான்.

2நாளா 12:11. ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது, அரமனைச் சேவகர் வந்து, அவைகளை எடுத்துக் கொண்டுபோய், திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள்.

2நாளா 12:12. அவன் தன்னைத் தாழ்த்தினபடியினால், கர்த்தர் அவனை முழுதும் அழிக்காதபடிக்கு அவருடைய கோபம் அவனை விட்டுத் திரும்பிற்று; யூதாவிலே இன்னும் சில காரியங்கள் சீராயிருந்தது.

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் பிளவுபட்டபின்பு, முதன் முறையாக "இஸ்ரவேலர் அனைவரும்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ரெகொபெயாமின் ராஜ்யபாரத்தில் இருந்த இஸ்ரவேலரின் எல்லாக் கோத்திரத்தாரையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது.

தங்களுக்கு ஆசீர்வாதம் வந்தபின்பு, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தையும் விட்டுவிடுகிறார்கள். தம்மைக் கைவிட்டு விடுகிறவர்களைத் தாமும் கைவிட்டுவிடுவதாகக் கர்த்தர் எச்சரித்திருக்கிறார். அதன் பிரகாரம் கர்த்தர் ரெகொபெயாமையும், இஸ்ரவேல் புத்திரரையும் கைவிட்டுவிடுகிறார்.

ரெகொபெயாமின் காலத்திலே சமஸ்த இஸ்ரவேலாயிருந்த தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிகிறது. இது இஸ்ரவேல் தேசத்தின் பலவீனமாயிருக்கிறது. தெற்கு யூதாதேசத்திலே கர்த்தருடைய ஆலயமும், ராஜதானி பட்டணமாகிய எருசலேமும் இருக்கிறது. இது தெற்கு யூதாதேசத்திற்கு விசேஷித்த மேன்மை.

கர்த்தருடைய ஆலயம் எருசலேமிலே இருப்பது தெற்கு யூதாதேசத்தாருக்கு மிகுந்த ஆசீர்வாதம். அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடப்பதற்கு அநுகூலமான வாய்ப்புக்கள் ஏராளமாய்க் கிடைத்திருக்கிறது. தெற்கு யூதாதேசத்தார் கர்த்தரை சேவித்து, அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

ரெகொபெயாம் ராஜ்யத்தைத் திடப்படுத்தித் தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின், அவனும் அவனோடே இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுகிறார்கள் (2நாளா 12:1).

ரெகொபெயாமோடு கூடயிருக்கிறவர்கள், மூன்று வருஷமட்டும் யூதாவின் ராஜ்யத்தைப் பலப்படுத்தி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமைத் திடப்படுத்தினார்கள்; தாவீதும் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்று வருஷமட்டும் நடந்தார்கள் (2நாளா 11:17). ஆனால் இப்போது அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுகிறார்கள். கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள்.

ரெகொபெயாமின் ராஜாசனம் நிலையில்லாமலும், உறுதியில்லாமலும் இருந்த காலம் வரையிலும், அவன் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்தான். அவன் அதுவரையிலும் தாவீதின் வழியிலும், சாலொமோனுடைய வழியிலும் நடந்தான். அவர்கள் இருவரும் கர்த்தருடைய வழியிலே நடந்தார்கள்.

ரெகொபெயாமின் ராஜ்யபாரம் நிலையில்லாமலிருந்த காலம் வரையிலும், அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவித்தான். கர்த்தரிடத்தில் ஐக்கியமாயிருந்தான். அதுவரையிலும் ரெகொபெயாம் கர்த்தரை ஆராதித்தான். ஆனால், ரெகொபெயாம் தன் ராஜ்யத்தை திடப்படுத்தி, தன்னை பலப்படுத்திக்கொண்ட பின்போ, அவன் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுகிறான். தனக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் தேவையில்லை என்று நினைக்கிறான். கர்த்தருடைய பாதுகாப்பு இல்லாமலேயே, தான் பாதுகாப்பாயிருப்பதாக நினைக்கிறான். ரெகொபெயாம் கர்த்தர்மீது நம்பிக்கை வையாமல், தன்னுடைய ஜனத்தின்மீதும் ஐசுவரியத்தின்மீதும், பலத்தின்மீதும் நம்பிக்கை வைக்கிறான்.

தெற்கு யூதாதேசத்தார் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியினால், ராஜாவாகிய ரெகொபெயாமின் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் ஆயிரத்து இருநூறு இரதங்களோடும், அறுபதினாயிரம் குதிரைவீரரோடும் எருசலேமுக்கு விரோதமாய் வருகிறான் (2நாளா 12:2).

இதற்குப் பின்பு வரும் இஸ்ரவேலின் 388 வருஷ வரலாற்றில் "அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினார்கள்" என்னும் இந்த வாக்கியம் பலதடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலரின் தோல்விக்கு அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணியதே காரணம்.

சாலொமோன் மரித்து, ஐந்து வருஷங்களுக்குப் பின்பு, சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிளவுண்டது. வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரத்தார் கர்த்தரைவிட்டு விலகிப் போனார்கள். தெற்கு ராஜ்யத்தின் இரண்டு கோத்திரத்தாரும் கர்த்தரை விட்டு விலகிப் போனார்கள்.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் யூதாவுக்கு விரோதமாக வந்து, அவர்களுடைய பொக்கிஷங்களையெல்லாம் எடுத்துச் சென்றுவிட்டான். யூதா ராஜ்யம் மூன்று வருஷம் மட்டுமே கர்த்தரைப் பின்பற்றி நடந்தார்கள். அதன் பின்பு, அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப் போனார்கள். (2நாளா 12:2-12).

சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலின்மீதும் ராஜாவாக ஆட்சி புரிந்தபோது, எல்லா தேசத்து ராஜாக்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கவும், ஐசுவரியத்தைக் காணவும் எருசலேமுக்கு வந்தார்கள். சாலொமோனுக்கு மிகுந்த வெகுமதிகளைக் கொண்டு வந்தார்கள்.

ஆனால் இப்போதோ இஸ்ரவேலின் ராஜாக்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறபடியினால், அந்நிய தேசத்து ராஜாக்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்து, அவர்களுடைய ஐசுவரியங்களையெல்லாம் கொள்ளையிட்டுச் சென்றுவிடுகிறார்கள்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக தெற்கு யூதாதேசத்திலே பிரச்சனைகள் வருகிறது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களை உணரவேண்டும். இதன் நிமித்தமாகவே கர்த்தர் தெற்கு யூதாதேசத்திற்கு பிரச்சனைகள் வர அனுமதிக்கிறார்.

ரெகொபெயாமின் முதல் மூன்று வருஷ ஆட்சிக்காலம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு நடைபெறுகிறது. நான்காம் வருஷ ஆட்சியின்போது, அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுகிறார்கள். ரெகொபெயாமின் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் ராஜா தெற்கு யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறான்.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் ஆயிரத்து இருநூறு இரதங்களோடும், அறுபதினாயிரம் குதிரைவீரரோடும் எருசலேமுக்கு விரோதமாய் வருகிறான். அவனோடேகூட எகிப்திலிருந்து வந்த லூபியர், சூக்கியர், எத்தியோப்பியரான ஜனங்கள் எண்ணிக்கைக்கு அடங்காதவர்களாயிருக்கிறார்கள். சீஷாக் யூதாவுக்கு அடுத்த அரணான பட்டணங்களைப் பிடித்து, எருசலேம் மட்டும் வருகிறான் (2நாளா 12:2-4).

தெற்கு யூதாதேசத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். ஆகையினால் கர்த்தரும் அவர்களை விட்டுவிலகிப்போய்விடுகிறார். அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதை நிறுத்திவிடுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்வதையும், பாதுகாப்பாயிருப்பதையும் நிறுத்திவிடுகிறார்.

சாலொமோனுடைய ஆட்சிக்காலம் வரையிலும், இஸ்ரவேல் தேசத்திற்கும் எகிப்து தேசத்திற்கும் நல்ல சிநேகமும் ஐக்கியமும் இருந்தது. இப்போதோ எகிப்தின் ராஜா எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான். யூதர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். ஆகையினால் கர்த்தரும் அவர்களை சீஷாக்கின் கையிலே விழும்படி விட்டுவிடுகிறார்.

ரெகொபெயாமின் ராஜ்யம் திடப்பட்டிருக்கிறது. அவனும் பலப்பட்டவனாயிருக்கிறான். ஆனாலும் திடீரென்று எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான். தெற்கு யூதாதேசத்தாருக்கு திடீரென்று பிரச்சனைகள் வருகிறது.

கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் தம்முடைய சித்தத்தை நமக்குப் போதிக்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிகொடுக்கவில்லையென்றால், கர்த்தர் தம்முடைய பிரம்பினாலும், கோலினாலும் நமக்கு உபதேசம்பண்ணுவார். இப்போது சீஷாக், கர்த்தருடைய பிரம்பாக, எருசலேமுக்கு விரோதமாக வருகிறான்.

கர்த்தருடைய ஜனம் அவருடைய சித்தத்தையும், அவருடைய தெய்வீக பராமரிப்பையும் புரிந்துகொள்ளவேண்டும். எகிப்தின் ராஜா எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, அதிலே கர்த்தருடைய சித்தம் இருப்பது அவர்களுக்கு தெரியவில்லை. ரெகொபெயாமும் யூதாதேசத்தாரும் எகிப்தின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

இந்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு, ரெகொபெயாமும் அவனுடைய யுத்தவீரரும், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண கூடிவந்தார்கள். அப்போது கர்த்தர் செமாயா என்பவனை அனுப்பி, அவர்கள் யுத்தம் பண்ணாதவாறு, அவர்களை தடுத்து நிறுத்தினார்.

"தேவனுடைய மனுஷனாகிய செமாயாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொன்னது: நீ யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாம் என்னும் சாலொமோனின் குமாரனையும், யூதாவிலும் பென்யமீனிலும் இருக்கிற எல்லா இஸ்ரவேலரையும் நோக்கி: நீங்கள் போகாமலும், உங்கள் சகோதரரோடு யுத்தம்பண்ணாமலும், அவரவர் தம்தம் வீட்டுக்குத் திரும்புங்கள்; என்னாலே இந்தக் காரியம் நடந்தது என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்; அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, யெரொபெயாமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதை விட்டுத் திரும்பிப் போய்விட்டார்கள்" (2நாளா 11:2-4).

கர்த்தர் ஏற்கெனவே செமாயாவைப் பயன்படுத்தியதுபோல, இப்போதும் அவனைப் பயன்படுத்துகிறார். அப்பொழுது செமாயா தீர்க்கதரிசி ரெகொபெயாமிடத்துக்கும், சீஷாக்கினிமித்தம் எருசலேமிலே வந்து கூடியிருக்கிற யூதாவின் பிரபுக்களிடத்துக்கும் வந்து, அவர்களை நோக்கி: "நீங்கள் என்னை விட்டுவிட்டீர்கள், ஆகையால் நான் உங்களையும் சீஷாக்கின் கையிலே விழும்படி விட்டுவிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்கிறான் (2நாளா 12:5).

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் ரெகொபெயாமின் பொக்கிஷங்களைக் கொள்ளையடித்துச் சென்ற பின்பு, கர்த்தர் செமாயா என்னும் தீர்க்கதரிசியை அனுப்புகிறார். அவன் ரெகொபெயாமிடம் வந்து அவனுடைய தோல்விக்கான காரணத்தை விளக்கிக் கூறுகிறான் (2நாளா 12:5-6).

கர்த்தருடைய கடிந்துகொள்ளும் வார்த்தைகளும், அவர் பயன்படுத்தும் பிரம்பும் இப்போது ஒன்றாய்ச் சேர்ந்து ரெகொபெயாமுக்கு விரோதமாகவும், இஸ்ரவேலின் பிரபுக்களுக்கு விரோதமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அப்பொழுது இஸ்ரவேலின் பிரபுக்களும் ராஜாவும் தங்களைத் தாழ்த்தி "கர்த்தர் நீதியுள்ளவர்" என்று சொல்லுகிறார்கள் (2நாளா 12:6). அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, தங்களுடைய மீறுதல்களையும் அக்கிரமங்களையும் அங்கீகரிக்கிறார்கள். மேலும் அவர்கள் கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் தண்டனையையும் பொறுமையோடு ஏற்றுக்கொள்கிறார்கள்.

யூதாவின் பிரபுக்கள் இங்கு "இஸ்ரவேலின் பிரபுக்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் யூதர்கள். யூதர்கள் அனைவரும் இஸ்ரவேல் புத்திரர் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

இஸ்ரவேலின் பிரபுக்களும் ராஜாவும் தங்களைத் தாழ்த்தி கர்த்தர் நீதியுள்ளவர் என்கிறார்கள். தங்கள் தோல்வியின் நிமித்தமாகக் கர்த்தர் தங்கள்மீது நீதி செலுத்தியிருக்கிறார் என்பதை அங்கிகரிக்கிறார்கள்.

ரெகொபெயாமும் இஸ்ரவேலின் பிரபுக்களும் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். கர்த்தரோ அவர்கள்மீது கிருபையாய் இரங்கி, அவர்களுக்கு நியமிக்கப்பட்ட அழிவிலிருந்து அவர்களை இரட்சிக்கிறார்.

ஆனாலும் அவர்களிடத்தில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிய பயம் எப்போதும் இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகிறார். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய பயம் இருக்கும் வரையிலும், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ண பயப்படுவார்கள்.

அவர்கள் தங்களைத் தாழ்த்தினதைக் கர்த்தர் கண்டபோது, கர்த்தருடைய வார்த்தை செமாயாவுக்கு உண்டாகி, அவர் சொன்னது: "அவர்கள் தங்களைத் தாழ்த்தினார்கள், ஆகையால் அவர்களை அழிக்கமாட்டேன்; என் உக்கிரம் சீஷாக்கைக்கொண்டு எருசலேமின்மேல் ஊற்றப்படாதபடிக்கு, அவர்களுக்குக் கொஞ்சம் சகாயத்தைக் கட்டளையிடுவேன்" (2நாளா 12:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் மனந்திருந்த ஆரம்பிக்கும்போதே கர்த்தர் அவர்கள்மீது இரக்கம் காண்பித்து விடுகிறார். கர்த்தர் தம்முடையபிள்ளைகளை முற்றிலுமாக அழித்துப் போடுவதில்லை. இங்கு கர்த்தர் சீஷாக்கை அவர்களைக் கொள்ளையிட அனுமதிக்கிறார். இதன் மூலமாக இஸ்ரவேலின் பிரபுக்களும், ரெகொபெயாமும் மனத்தாழ்மையைக் கற்றுக்கொள்கிறார்கள். (2நாளா 12:8).

கர்த்தர் மேலும் சொல்லும்போது, "ஆனாலும் என்னைச் சேவிக்கிறதற்கும், அந்நிய தேசங்களின் ராஜ்யங்களைச் சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்கள் அறியும்படிக்கு அவனைச் சேவிக்கிறவர்களாவார்கள்" (2நாளா 12:8) என்றும் சொல்லுகிறார்.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்கின் சேனை மிகவும் பெரியது. அவர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் சீஷாக் ஜெயம் பெறுகிறான். கர்த்தருடைய ஜனம் எகிப்தியருக்கு முன்பாக முறியடிக்கப்படுகிறார்கள்.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன்பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் (2நாளா 12:9).

ரெகொபெயாமும், இஸ்ரவேலின் பிரபுக்களும் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தியபோது, "என் உக்கிரம் சீஷாக்கைக்கொண்டு எருசலேமின்மேல் ஊற்றப்படாதபடிக்கு, அவர்களுக்குக் கொஞ்சம் சகாயத்தைக் கட்டளையிடுவேன்" (2நாளா 12:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையினால் எருசலேம் முற்றிலும் அழிந்துபோகாமல் தப்பித்துக்கொள்கிறது.

கர்த்தர் ரெகொபெயாமை முற்றிலும் அழிக்கவில்லை. அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினபடியால், கர்த்தர் அவனை முழுதும் அழிக்காமல், அவருடைய கோபம் அவனை விட்டு திரும்பிற்று (2நாளா 12:12). கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் ரெகொபெயாமுக்கும் எருசலேமுக்கும் காண்பிக்கிறார்.

கர்த்தர் எருசலேமை முற்றிலுமாய் இரட்சிக்கவில்லை. கர்த்தருடைய இரக்கம் எருசலேமின்மீது ஓரளவு மாத்திரம் காண்பிக்கப்படுகிறது. கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு கொஞ்சம் சகாயத்தை கட்டளையிடுகிறார். ரெகொபெயாமும், இஸ்ரவேலின் பிரபுக்களும், கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தினாலும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு முற்றிலுமாய் மனந்திரும்பவில்லை.

தெற்கு யூதாதேசத்தார் தங்கள் பாவங்களுக்கு ஓரளவு மாத்திரமே மனந்திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் சிறிதுகாலம் மாத்திரமே பாவத்திற்கு விலகி, கர்த்தருக்கு பிரியமாய் ஜீவிக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் மறுபடியும் தங்கள் பாவஜீவியத்திற்கே திரும்பிப்போய்விடுகிறார்கள். அவர்களுடைய இருதயத்திலே கொஞ்சம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் கர்த்தரும் தம்முடைய சகாயத்தை அவர்களுக்கு கொஞ்சம் கட்டளையிடுகிறார். மனமாற்றம் எவ்வளவு நடைபெறுகிறதோ, அவ்வளவு மாத்திரமே அவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கிறது.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாக வந்து கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனை பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஆனாலும் "யூதாவிலே இன்னும் சில காரியங்கள் சீராயிருந்தது" (2நாளா 12:12) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு முற்றிலுமாய் மனந்திரும்பாவிட்டாலும், அவர்கள் இன்னும் தெய்வபக்திக்கு மதிப்பும் முக்கியத்துவமும் கொடுக்கிறார்கள். யூதாதேசத்திலே இன்னும் நல்ல ஊழியக்காரர்களும், நல்ல ஜனங்களும், நல்ல குடும்பங்களும் இருக்கிறார்கள்.

சீஷாக் எருசலேமுக்கு விரோதமாக வந்து யூதாவுக்கு அடுத்த அரணான பட்டணங்களையெல்லாம் பிடித்துக் கொள்கிறான் (2நாளா 12:4). ஆனாலும் யூதாதேசம் இன்னும் செழிப்பாயிருக்கிறது. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியபோது, சீஷாக் மூலமாக அவர்களுக்கு பெரிய பாதிப்போ, சேதாரமோ ஏற்படவில்லை.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன்பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்புவிக்கிறான் (2நாளா 12:9,10).

யூதாவின் மனுஷர் கர்த்தரை சேவிக்கவேண்டும். அவர்களுக்கு அந்நிய தேசங்களின் ராஜ்யங்களை சேவிப்பது என்றால் என்ன என்பது தெரியவில்லை. கர்த்தரை சேவிக்கிறதற்கும், அந்நிய தேசங்களின் ராஜ்யங்களை சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை யூதாவின் மனுஷர் அறிந்துகொள்ளவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இதன் நிமித்தமாக கர்த்தர் அவர்களை எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்கை சேவிப்பதற்கு, யூதாவின் மனுஷரை சீஷாக்கினுடைய கையிலே ஒப்புக்கொடுக்கிறார் (2நாளா 12:8). யூதாவின் மனுஷர் சீஷாக்கை சேவிக்கிறவர்களாவார்கள். அவர்கள் அந்நிய தேசங்களின் ராஜ்யங்களை சேவிப்பார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய பிரமாணங்களுக்கு விரோதமாகவும், யூதாமார்க்கத்திற்கு விரோதமாகவும் முறுமுறுத்தார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது மிகவும் கடினம் என்று குறைசொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தைத் தவிர, அந்நிய தேசங்களின் பிரமாணங்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்திற்கும், அந்நிய தேசங்களின் பிரமாணத்திற்கும் வித்தியாசம் தெரியவேண்டும்.

யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்தாரை சேவிக்கும்போது, அவர்களுடைய துர்க்குணமும், கடின இருதயமும் யூதாவின் மனுஷருக்கு தெரியவரும். ஆகையினால் கர்த்தர் அவர்களை எகிப்தின் ராஜாவினுடைய கையிலே ஒப்புக்கொடுக்கிறார். அப்போதுதான் அவர்களுக்கு, கர்த்தரை ஆராதிப்பதும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதும் மிகவும் எளிதான காரியம் என்பது தெரியவரும். கர்த்தரை ஆராதிப்பது சந்தோஷமான அனுபவம். சத்துருவை சேவிப்பது வருத்தங்களும், வேதனைகளும், கண்ணீரும் நிரம்பிய அனுபவம்.

கர்த்தரை சேவிக்கிறவர்கள் அவரை விடுதலையோடு சேவிக்கலாம். எகிப்தின் ராஜாவாகிய சீஷாக்கை சேவிக்கிறவர்கள் அவனை அடிமைத்தன நுகத்தோடு சேவிக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். பாவத்திற்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களோ, அவற்றிற்கு மொத்தமாய் அடிமைகளாகிவிடுவார்கள்.

எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் யூதாதேசத்தின் ஐசுவரியங்களைக் கொள்ளையிட வந்திருக்கிறான். அவன் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன்பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் (2நாளா 12:9).

சீஷாக் எருசலேமுக்கு விரோதமாக வந்ததினால், யூதாதேசத்தாரின் சுதந்தரம் அடிமைப்படுத்தப்படுகிறது. அவர்களுடைய ஐசுவரியங்கள் கொள்ளையிடப்படுகிறது. யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதினால், கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்காமல் போயிற்று.

ரெகொபெயாமும் இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் அதைவிட்டு விடுகிறார்கள். இதன் விளைவாக அவர்கள் எகிப்தின் ராஜாவுக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிறார்கள். எகிப்தின் ராஜா அவர்களோடு செய்து கொண்ட பழைய உடன்படிக்கையை முறித்து அவர்களுக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறான்.

ரெகொபெயாமின் ராஜ்யபாரம் 2நாளா 12:13-16

2நாளா 12:13. அப்படியே ராஜாவாகிய ரெகொபெயாம் எருசலேமிலே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அரசாண்டான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்.

2நாளா 12:14. அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்காமல் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 12:15. ரெகொபெயாமின் ஆதியோடந்தமான நடபடிகள் செமாயாவின் புஸ்தகத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோவின் வம்ச அட்டவணையிலும் அல்லவோ எழுதியிருக்கிறது; ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் சகல நாளும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

2நாளா 12:16. ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய அபியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

ரெகொபெயாமின் ராஜ்யபாரம் முடிவு பெறுகிறது. அவன் எருசலேமில் தன்னைத் திடப்படுத்திக்கொள்கிறான். அவன் தன்னுடைய ஆட்சியை பெலப்படுத்துகிறான்.

ராஜாவாகிய ரெகொபெயாம் எருசலேமிலே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அரசாளுகிறான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள் *(2நாளா 12:13).*

சாலொமோன் ராஜாவாவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பு ரெகொபெயாம் பிறந்தான். ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்தது. சாலொமோன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணி, அதன் பின்பு மரித்துப் போனான். *(2நாளா 9:30)* ரெகொபெயாம் 17 வருஷம் ராஜ்யபாரம் பண்ணி, தன்னுடைய 58 ஆவது வயதில் மரித்துப்போனான். *(2நாளா 12:13-16).*

ரெகொபெயாம் எருசலேமிலே தங்கியிருந்து ராஜ்யபாரம்பண்ணுகிறான். எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. ரெகொபெயாம் கர்த்தருடைய ஆலயத்திற்கு அருகாமையிலிருந்தாலும், கர்த்தரைவிட்டு தூரமாய் விலகியிருக்கிறான். அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்காமல் பொல்லாப்பானதைச் செய்கிறான் *(2நாளா 12:14).*

ரெகொபெயாம் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்கவில்லை. ரெகொபெயாம் மூன்று வருஷங்கள் கர்த்தரைப் பின்பற்றி விட்டு, அதன் பின்பு, கர்த்தரைவிட்டு விலகிப் போய்விட்டான். அவனிடத்தில் உண்மையான மனந்திருந்துதல் காணப்படவில்லை.

ரெகொபெயாமுக்கும், யெரொபெயாமுக்கும் இடையே சகலநாளும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது *(2நாளா 12:15).* யுத்தம் நடைபெற்றாலும் ரெகொபெயாம் கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. அவனும் இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிடுகிறார்கள்.

ரெகொபெயாம் கர்த்தரைத் தேடுகிறதற்கு தன் இருதயத்தை நேராக்கவில்லை. ஆகையினால் அவன் கர்த்தரை கண்டுபிடிக்கவுமில்லை. கர்த்தரை சேவிக்கவுமில்லை. கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியவுமில்லை.

நன்மை செய்யவேண்டும் என்னும் எண்ணம் ரெகொபெயாமின் மனதில் இல்லை. ஆகையினால் அவன் எப்போதுமே தீமை செய்கிறான்.

சாலொமோன் ஞானத்திற்காகவும், கிருபைக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். சாலொமோனுடைய குமாரனாகிய ரெகொபெயாமோ, அவரைப்போல, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை. நாம் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணினால், அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுவார். அவர் நமக்கு சத்தியத்தைப் போதிப்பார். ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்.

ரெகொபெயாமின் ஆதியோடந்தமான நடபடிகள் செமாயாவின் புஸ்தகத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய இத்தோவின் வம்ச அட்டவணையிலும் அல்லவோ எழுதியிருக்கிறது (2நாளா 12:15).

ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்படுகிறான்; அவன் குமாரனாகிய அபியா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2நாளா 12:16).

பரிசுத்த வேதாகமத்தில், யூதாவின் சரித்திரமும், இஸ்ரவேலின் சரித்திரமும் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. யெரொபெயாம் ரெகொபெயாமுக்கு நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்கு முன்பாக மரித்துப்போகிறான். ஆனாலும் யெரொபெயாமின் சரித்திரமே முதலாவதாக எழுதப்பட்டிருக்கிறது. இவனுடைய சரித்திரத்தோடு ரெகொபெயாமின் சரித்திரமும் சேர்ந்து இணைக்கப்பட்டிருக்கிறது.

ரெகொபெயாமைப்பற்றி உயர்வாய்ப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. அவன் சாலொமோனின் குமாரன். ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்தான். அவன் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களெல்லாம், எருசலேம் நகரத்தைத் தெரிந்துகொண்டார்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. ரெகொபெயாம் எருசலேமிலே ராஜ்யபாரம்பண்ணினதினால், கர்த்தருடைய பிரமாணத்தைப்பற்றியும், தன்னுடைய ஆவிக்குரிய கடமைகளைப்பற்றியும் அறிந்துகொள்வதற்கு அவனுக்கு அதிக வாய்ப்பு கிடைத்தது. கர்த்தரைத் தேடுகிறவர்கள் மாத்திரமே அவரை கண்டுகொள்ள முடியும். ரெகொபெயாம் எருசலேமிலே ராஜ்யபாரம் பண்ணினாலும் அவன் கர்த்தரைத் தேடவில்லை. அவன் தன்னுடைய முழுஇருதயத்தோடு கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை.

ரெகொபெயாமினுடைய தாயின் பெயர் நாமாள். இவள் அம்மோன் ஜாதியான ஸ்திரீ. இவளைப்பற்றி இரண்டு வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது (1இராஜா 14:21,31). தாவீது மக்னாயீமிலே சேர்ந்தபோது, அம்மோன் புத்திரரின் தேசத்தில் ரப்பா பட்டணத்தானாகிய சோபி என்னும் நாகாசின் குமாரன், தாவீதின்மீது பிரியமாயிருந்தான். அவன் தாவீதுக்கு ஆதரவு காண்பித்தான் (2சாமு 17:27).

அம்மோன் ஜாதியான நாமாள், சோபியின் குமாரத்தியாக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். தாவீதின் மனவிருப்பத்தின் பிரகாரம், சோபியின் குமாரத்தியாகிய நாமாள், சாலொமோனுக்கு மனைவியானாள். தாவீது நாமாளை தன்னுடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டார்.

ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது (1இராஜா 14:30). இதனால் யூதாதேசத்தில் எப்போதுமே அமைதியில்லை. அவர்களுக்கு யுத்தத்தினால் ஓயாத பிரச்சனைகளும் வேதனைகளும் உண்டாயிற்று.

ரெகொபெயாம் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். அதன்பின்பு ரெகொபெயாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் குமாரனாகிய அபியாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான் (1இராஜா 14:31).

ரெகொபெயாமின் ராஜ்யபாரத்தின்போது, யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். இந்த வசனப்பகுதியில் அவர்களுடைய பாவமான சுபாவங்களும், அவர்களுடைய காலத்தின் சூழ்நிலைகளும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தாங்கள் செய்துவருகிற தங்களுடைய பாவங்களினால் தங்கள் பிதாக்கள் செய்த எல்லாவற்றைப்பார்க்கிலும் அவருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். யூதாஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள் (1இராஜா 14:22).

அவர்கள் உயர்ந்த சகல மேட்டின் மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும், மேடைகளையும் சிலைகளையும் தோப்பு விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டாக்கினார்கள். தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியெல்லாம் செய்தார்கள் (1இராஜா 14:23,24).

இந்தப் பிரபஞ்சத்தில் யூதாஜனத்தார் மாத்திரமே கர்த்தருடைய ஜனமாயிருந்தார்கள். ஆனால் அவர்களும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அவர்களுடைய முற்பிதாக்களும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். நியாயாதிபதிகளின் காலத்தில், யூதாஜனங்களின் முற்பிதாக்களுடைய பாவங்கள் மிகவும் அதிகமாயிருந்தது.

ரெகொபெயாமின் காலத்தில் யூதாஜனத்தாரின் பாவங்கள், அவர்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது. பரலோகத்திலிருந்து கர்த்தருடைய ஆவியானவர் இறங்கி வந்து, யூதாஜனத்தாரை ஆளுகை செய்தால் மாத்திரமே, அவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருப்பார்கள்.

யூதாஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து, கர்த்தருக்கு அதிக எரிச்சலை மூட்டினார்கள். அவர்கள் தங்களுக்கு சிலைகளையும், தோப்பு விக்கிரகங்களையும் உண்டாக்கினார்கள். அவர்கள் உயர்ந்த சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். தாங்கள் உண்டாக்கின விக்கிரகங்களுக்கு, கர்த்தருடைய நாமத்தைக் கொடுத்து, அவருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரரும் இருந்தார்கள். விக்கிரகாராதனைக்காரரின் சுபாவங்களைப்பற்றி அப்போஸ்தலர் பவுல், ரோமருக்கு எழுதின நிருபத்தில், விரிவாக எழுதியிருக்கிறார்.

"இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்" (ரோம 1:26,27).

அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவத்தை செய்து, கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்தார்கள். கர்த்தரோ அவர்களை அழிவுக்கு ஒப்புக்கொடுத்து விட்டார். அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டார்கள்.

யூதாஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவித்த காலம் வரையிலும், கர்த்தர் அவர்களை பாதுகாத்தார், பராமரித்தார், பலப்படுத்தினார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விட்டார். யூதா ஜனத்தார் இப்போது பலவீனமாயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை.

ரெகொபெயாம் ராஜ்யபாரம்பண்ணும் ஐந்தாம் வருஷத்திலே, எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும், சாலொமோன் செய்வித்த பொன் பரிசைகள் ஆகிய சகலத்தையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறான் (1இராஜா 14:25,26).

கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும், தாவீது ராஜாவினுடைய குடும்பத்தாரின் அரண்மனை பொக்கிஷங்களும் இப்போது எகிப்து தேசத்திலே இருக்கிறது. யூதாஜனங்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை. அவர்கள் இப்போது எல்லாவற்றையும் இழந்து தரித்திரராயிருக்கிறார்கள்.

ரெகொபெயாமின் மகிமை மங்கிப்போயிற்று. எகிப்தின் ராஜாவாகிய சீஷாக் தேவாலயத்திலுள்ள பொன்பரிசைகளை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். அவைகளுக்குப் பதிலாக ராஜாவாகிய ரெகொபெயாம் வெண்கலப் பரிசைகளைச் செய்வித்து, அவைகளை ராஜாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையில் ஒப்பிக்கிறான்.

ரெகொபெயாம் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கும்போது, அரமனைச் சேவகர் அவைகளைப் பிடித்துக்கொண்டு போய், திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள் (1இராஜா 14:28).

பாவத்தின் சம்பளம் மரணம். ரெகொபெயாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். அவனுடைய ராஜ்யபாரத்தின் மேன்மை மங்கிப்போகிறது. பாவத்தினால் பொன்பரிசைகள் வெண்கல பரிசைகளாகிறது.

ரெகொபெயாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 14:29).

13 அதிகாரம்

ரெகொபெயாமின் குமாரனாகிய அபியாவின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுடைய சரித்திரம் 1இராஜா 15:1-8 ஆகிய வசனங்களிலும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அபியா, தன் தகப்பனாராகிய ரெகொபெயாமைவிட பராக்கிரமசாலியாயிருக்கிறான். அபியா வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவர்களை முறியடிக்கிறான். அபியா தெற்கு யூதாதேசத்தில் மூன்று வருஷம் மாத்திரமே ஆட்சி செய்கிறான். இவன் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவனை முறியடித்த சம்பவம் மிகவும் விசேஷமானது.

தெற்கு யூதாதேசத்தாரின் சேனையும், வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் சேனையும் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பாக யூதாவின் ராஜாவாகிய அபியா, இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமுக்கும், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் சொல்லுகிற வாக்கியங்கள் (2நாளா 13:4-12).

யெரொபெயாம் யூதாதேசத்தாரின் சேனைக்கு விரோதமாக பதிவிடையை வைக்கிறான். இதனால் யூதாவின் சேனைக்கு நெருக்கமுண்டாயிற்று (2நாளா 13:13,14). ஆனாலும் கர்த்தருடைய வல்லமையினால் யூதாதேசத்தார், இஸ்ரவேல் தேசத்தாரை முறியடிக்கிறார்கள். இஸ்ரவேலிலே மகாசங்காரமுண்டாயிற்று (2நாளா 13:15-20). அபியாவினுடைய ராஜ்யபாரத்தின் முடிவு (2நாளா 13:21,22).

அபியா
2நாளா 13:1-12

2நாளா 13:1. ராஜாவாகிய யெரொபெயாமின் பதினெட்டாம் வருஷத்தில் அபியா யூதாவின்மேல் ராஜாவாகி,

2நாளா 13:2. மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; கிபியா ஊரானாகிய ஊரியேலின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மிகாயாள்; அபியாவுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்தது.

2நாளா 13:3. அபியா தெரிந்துகொள்ளப்பட்ட நாலுலட்சம்பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணினான்; யெரொபெயாம் தெரிந்துகொள்ளப்பட்ட எட்டுலட்சம் பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்தினான்.

2நாளா 13:4. அப்பொழுது அபியா எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று: யெரொபெயாமே, எல்லா இஸ்ரவேலரே, கேளுங்கள்.

2நாளா 13:5. இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?

2நாளா 13:6. ஆகிலும் தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்னும் நேபாத்தின் குமாரன் எழும்பி, தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்.

2நாளா 13:7. பேலியாளின் மக்களாகிய வீணர் அவனோடே கூடி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் அவர்களை எதிர்க்கக்கூடாமல் வாலவயதும் திடனற்ற மனதுமாயிருக்கையில், அவனுக்கு விரோதமாய்த் தங்களைப் பலப்படுத்திக்கொண்டார்கள்.

2நாளா 13:8. இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே.

2நாளா 13:9. நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசாதேசங்களின் ஜனங்களைப்போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டுபண்ணவில்லையோ? இளங்காளையினாலும், ஏழு கடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே.

2நாளா 13:10. எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே.

2நாளா 13:11. அவர்கள் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள்.

2நாளா 13:12. இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது என்றான்.

அபியா யூதாவின்மேல் ராஜாவாகி, மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான். இவன் யூதாவின் ராஜாவாகிய ரெகொபெயாமின் குமாரன். அபியா யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின சம்பவம் 2நாளா 13-ஆவது அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இராஜாக்கள் புஸ்தகத்தில் அபியாவின் பெயர் "அபியாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அபியா என்னும் பெயருக்கு "என் பிதா என் கர்த்தராயிருக்கிறார்" என்று பொருள். நாளாகமம் புஸ்தகத்தில் அபியாவின் துன்மார்க்கத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

ராஜாக்கள் புஸ்தகத்திலோ அபியாமின் துன்மார்க்கமான கிரியைகளைப்பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. அபியாம் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை.

அபியாம் தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் நடக்கிறான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை (1இராஜா 15:3).

"அபியாம்" என்னும் பெயரில் "யா" என்னும் வார்த்தை நீக்கப்பட்டிருக்கிறது. "யா" என்பது கர்த்தருடைய நாமத்தைக் குறிக்கிறது. "அபியாம்" என்னும் பெயரில் கர்த்தருடைய நாமம் நீக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் ராஜாக்களின் புஸ்தகத்தில், இவன் "அபியா" என்று அழைக்கப்படாமல், "அபியாம்" என்று அழைக்கப்படுகிறான்.

இராஜாக்கள் புஸ்தகத்தில் அபியாமின் ராஜரீகத்தைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் என்னும் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகிறான் (1இராஜா 15:1).

ரெகொபெயாம் எருசலேமிலே பதினேழு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். "சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே ராஜ்யபாரம் பண்ணினான்; ரெகொபெயாம் ராஜாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் தெரிந்துகொண்ட நகரமாகிய எருசலேமிலே பதினேழுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; அம்மோன் ஜாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்" (1இராஜா 14:21).

யெரொபெயாமின் ஆயுசுகாலம், ரெகொபெயாமின் ஆயுசு காலத்தைவிட அதிகமாயிருக்கிறது. ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா, தன் தகப்பனுக்கு பின் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். அபியா யெரொபெயாமுக்கு விரோதமாக தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறான்.

யெரெபெயாமுக்கும் அபியா என்னும் பெயரில் ஒரு குமாரன் இருந்தான். இவன் வியாதியில் விழுந்து, சீக்கிரத்தில் செத்துப்போனான் (1இராஜா 14:1). ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா மரித்துப்போவதற்கு முன்பாக, யெரொபெயாமின் குமாரனாகிய அபியா மரித்துப்போனான்.

அபியாம் யூதாவின்மேல் ராஜாவாகி மூன்றுவருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான். யெரொபெயாமின் இருபதாம் வருஷ ராஜ்யபாரம் முடிவதற்கு முன்பாக, அபியாம் மரித்துப்போகிறான். "இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் இருபதாம் வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் ராஜாவாகிறான்" (1இராஜா 15:9).

அபியாம் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். இந்த யுத்தத்திலே அபியாமுக்கு ஜெயமுண்டாயிற்று. இதனால் அவன் மனமேட்டிமையாயிருக்கிறான்.

"அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான். அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ளமாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைந்தான். அபியா பலத்துப்போனான்; அவன் பதினாலு ஸ்திரீகளை விவாகம்பண்ணி, இருபத்திரண்டு குமாரரையும் பதினாறு குமாரத்திகளையும் பெற்றான்" (2நாளா 13:19-21).

அபியாம் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆகையினால் அபியாமின் ராஜ்யபாரம் நீண்டகாலத்திற்கு நிலைக்கவில்லை. அவன் மூன்றுவருஷம் மாத்திரமே எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான். கர்த்தர் அபியாமை அகற்றிப்போடுகிறார். அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைகிறான். அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான்.

அபியாமினுடைய தாயின் பெயர் மாகாள். இவள் அப்சலோமின் குமாரத்தி. இந்த அப்சலோம் தாவீதின் குமாரனாயிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

அபியாமின் தகப்பனாராகிய ரெகொபெயாம் உயிரோடிருந்த நாட்களெல்லாம், அவனுக்கும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமுக்கும் யுத்தம் நடைபெற்றது. "ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது" (1இராஜா 15:6) ரெகொபெயாம் மரித்துப்போனபின்பு, அவனுடைய குமாரனாகிய அபியாம், யெரொபெயாமுக்கு விரோதமாக தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் எல்லைப்பகுதியும், தெற்கு யூதாதேசத்தின் எல்லைப்பகுதியும் சரியாக முறைப்படுத்தப்படவில்லை. இதனால் இரண்டு தேசங்களுக்கும் இடையே எல்லைப் பிரச்சனைகள் உண்டாயிற்று. இந்தப் பிரச்சனைகளை பெரிதுபடுத்தி ரெகொபெயாமுக்கும் யெரொபெயாமுக்கும் அவர்கள் இருந்த நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. ரெகொபெயாம் மரித்துப்போனபின்பு, அவனுடைய குமாரனாகிய அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது (1இராஜா 15:7).

யெரொபெயாம் தனக்கு மிகப்பெரிய சேனையைத் திரட்டி அபியாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறான். அபியாமும் யூதாதேசத்தைப் பாதுகாப்பதற்காக, யெரொபெயாமை பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடிக்கிறான் (2நாளா 13:19).

ரெகொபெயாமின் குமாரனாகிய அபியாம், தன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப்போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. கர்த்தருடைய பிரமாணங்கள்மேல் அபியாம் பிரியப்படவில்லை. அவன் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவுமில்லை.

யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது அபியாமுக்கு பிரியமாயிருக்கிறது. எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருப்பதற்காகவும், கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் தங்கள் பக்கத்தில் இருப்பதற்காகவும் அபியாம் பெருமைப்படுகிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆலயமும் இல்லை. அங்கே கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் இல்லை.

ரெகொபெயாமின் குமாரனாகிய அபியா, யெரொபெயாமுக்கு விரோதமாக தன்னுடைய வார்த்தைகளை சொல்லும்போது, "இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே. நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசாதேசங்களின் ஜனங்களைப்போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டுபண்ணவில்லையோ? இளங்காளையினாலும், ஏழுகடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே" (2நாளா 13:8,9) என்றும்,

"எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே. அவர்கள் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டு விலகினீர்கள்" (2நாளா 13:10,11) என்றும்,

"இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது" (2நாளா 13:12) என்றும் சொல்லுகிறான்.

அபியாமினிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் குறித்தும், கர்த்தருடைய ஆசாரியரைக் குறித்தும், லேவியரைக் குறித்தும் வைராக்கியம் இருக்கிறது. ஆனால் அபியாம் கர்த்தருடைய கற்பனைகளுக்கு பயப்படவில்லை. அவனிடத்தில் உண்மையில்லை. அவனுடைய ஆரம்பம் நன்றாயிருந்தது. ஆனால் அவனுடைய முடிவு சீர்கெட்டுப்போயிற்று. அபியாம் தன் தகப்பன் ரெகொபெயாம் தனக்கு முன்செய்த எல்லா பாவங்களிலும் நடக்கிறான் (1இராஜா 15:3).

அபியாமின் இருதயம் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய தேவனாகிய கர்த்தர், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனை எழும்பப்பண்ணுகிறதினாலும், எருசலேமை நிலைநிறுத்துகிறதினாலும், அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிட்டு வருகிறார் (1இராஜா 15:4).

தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்றுதவிர கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல், அவர் பார்வைக்குச் செம்மையானதைச் செய்துவந்தான் (1இராஜா 15:5).

அபியாமின் நிமித்தமாகவோ அல்லது அவனுடைய தகப்பனாகிய ரெகொபெயாமின் நிமித்தமாகவோ கர்த்தர் அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கை கட்டளையிடவில்லை. கர்த்தர் தாவீதின் நிமித்தம் அவனுக்கு எருசலேமில் ஒரு விளக்கைக் கட்டளையிடுகிறார். அபியாமின் இருதயம், தாவீதின் இருதயத்தைப்போல, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் அவனுக்கு எருசலேமிலே ஒரு விளக்கைக் கட்டளையிடுகிறார்.

தாவீதின் சந்ததியார், தாவீதைப்போல கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தாவீதுக்கு சொன்ன ஆசீர்வாதம், தாவீதின் சந்ததியாருக்கும் கடந்து வருகிறது. கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தாவீதின் சந்ததியார் அபாத்திரராயிருக்கிறார்கள். ஆனாலும் தாவீதின் நிமித்தம், கர்த்தர், தாவீதின் சந்ததியாரையும் ஆசீர்வதிக்கிறார்.

அபியாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது; அபியாமுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. அபியாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள்; அவன் குமாரனாகிய ஆசா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (1இராஜா 15:7,8).

அபியாவின் தாயார் மாகாள் என்றும் இவள் அப்சலோமின் குமாரத்தி என்றும் 2நாளா 11:20-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்திலோ, "கிபியா ஊரானாகிய ஊரியேலின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் மிகாயாள்" (2நாளா 13:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவள் அப்சலோமின் பேத்தியாகயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. இவள் தாமாரின் குமாரத்தி. இவளுடைய தகப்பன் ஊரியேல்.

"அப்சலோமுக்கு மூன்று குமாரரும், தாமார் என்னும் பேர்கொண்ட ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தார்கள்; இவள் ரூபவதியான பெண்ணாயிருந்தாள்" (2சாமு 14:27).

ராஜாவாகிய யெரொபெயாமின் பதினெட்டாம் வருஷத்தில் அபியா யூதாவின்மேல் ராஜாவாகிறான். அவன் மூன்று வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான்; அபியாவுக்கும் யெரொபெயாமுக்கும் யுத்தம் நடக்கிறது (2நாளா 13:1,2).

யெரொபெயாமின் பதினெட்டாம் வருஷத்தில் அபியா யூதாவின்மேல் ராஜாவானான். யெரொபெயாம் மரிப்பதற்கு நான்கு வருஷத்திற்கு முன்பாக அபியா ராஜாவானான். (1இராஜா 14:20). ரெகொபெயாமிற்கும், யெரொபெயாமிற்கும் சகல நாளும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. (2நாளா 12:15) இப்போது அபியா ராஜாவான பின்பு, அந்த யுத்தம் தொடர்கிறது. கர்த்தர் அபியாவுக்குப் பெரிய வெற்றியைத் தந்தார். யெரொபெயாமால் தனக்கு ஏற்பட்ட தோல்வியிலிருந்து முழுவதுமாக மீள முடியவில்லை. (2நாளா 12:1-20).

இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிற யெரொபெயாம் இப்போது கனமுள்ளவனாயிருக்கிறான். அவனுடைய சேனையும் பெரிதாயிருக்கிறது. ரெகொபெயாமின் காலத்திலே, அவன் யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. ஆனால் இப்போதோ யெரொபெயாம் யூதாவின் ராஜாவாகிய அபியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்த வேலைகளை செய்கிறான்.

யெரொபெயாம் யூதாவுக்கும் ராஜாவாகவேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஆகையினால் அபியா தன்னுடைய ராஜாசனத்தைக் காத்துக்கொள்வதற்காக, யெரொபெயாமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறான். கர்த்தர் அபியாவோடு கூடயிருக்கிறார். யெரொபெயாமின் சேனை பெரியதாயிருந்தாலும், அபியாவுக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்திருக்கிறது. இந்த யுத்தத்தில் யெரொபெயாம் தோற்றுப்போகிறான்.

அபியாவின் சேனையில் நாலு லட்சம் பேர் இருக்கிறார்கள். யெரொபெயாமின் சேனையிலோ எட்டு லட்சம் பேர் இருக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே பத்துக்கோத்திரத்தார் இருக்கிறார்கள். தெற்கு யூதாதேசத்திலே, யூதா, பென்யமீன் ஆகிய இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே இருக்கிறார்கள். யூதாதேசத்தாருடைய சேனையின் எண்ணிக்கை குறைவாயிருந்தாலும், கர்த்தருடைய கிருபையினால், அவர்களுக்கு ஜெயமுண்டாயிற்று.

அபியா தெரிந்துகொள்ளப்பட்ட நாலுலட்சம்பேராகிய பராக்கிரம சேவகரின் இராணுவத்தாரை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுகிறான்; யெரொபெயாம் தெரிந்துகொள்ளப்பட்ட எட்டுலட்சம் பேராகிய பலத்த பராக்கிரமசாலிகளை அவனுக்கு எதிராக யுத்தத்திற்கு நிறுத்துகிறான் (2நாளா 13:3).

யூதா ராஜ்யம் நாளுக்குநாள் பலக்கிறது. பத்துக் கோத்திரத்தாரின் வடக்கு தேசமோ நாளுக்குநாள் குறைகிறது. யூதா தேசத்தில் ஆரம்பத்தில் யூதா கோத்திரமும், பென்யமீன் கோத்திரமும் மட்டுமே இருந்தார்கள். பத்துக் கோத்திரத்தின் வடக்கு தேசத்தில் ரெகொபெயாம் கர்த்தருடைய ஆராதனையை நிறுத்தி போட்டான். ஆகையினால் பக்தியுள்ள யூதர்கள் பலர் பத்துக் கோத்திரங்களிலிருந்தும், யூதாவுக்கு வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். (2நாளா 11:16-17).

18 வருஷங்களுக்கு முன்பாக ரெகொபெயாமிடம் 180,000 யுத்த வீரர்கள் மட்டுமே இருந்தார்கள். (2நாளா 11:1) இதன் பின்பு, பத்துக் கோத்திரத்திலிருந்து வந்தவர்கள் யூதாவோடு சேர்ந்து கொண்டார்கள். (2நாளா 12:1) ஆறு வருஷங்களுக்குப் பின்பு, ஆசாவின் ராஜ்யபாரத்தில் 580,000 யுத்தவீரர்கள் இருந்தார்கள். (2நாளா 14:8) 32 வருஷங்களுக்குப்பின்பு, யோசபாத்திடம் 1,160,000 யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். இதுபோக யூதா எங்கிலும் அரணான பட்டணங்களும் இருந்தன (2நாளா 17:14-19).

யூதாவிடம் 4 இலட்சம் யுத்தவீரர் இருந்தபோது, யெரொபெயாமிடம் 8 இலட்சம் யுத்த வீரர்கள் இருந்தார்கள். (2நாளா 13:3) யோசபாத்தின் நாட்களில் ஆகாபின் சேனை சீரியரின் சேனையோடு ஒப்பிடப்படும்போது அது இரண்டு சிறிய ஆட்டுக்கிடைகளைப்போல இருந்தது. (1இராஜா 20:27).

பத்துக் கோத்திரத்திலிருந்தும் இஸ்ரவேல் ஜனங்கள் யூதா தேசத்திற்கு வந்தது யூதா நாளுக்குநாள் பலத்ததற்குக் காரணமாயிற்று (1இராஜா 12:17).

யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் முன்பு, அபியா இஸ்ரவேல் ஜனத்தாரோடு சமாதான வார்த்தைகளைப் பேசுகிறான். அபியா தாவீதின் வீட்டைச் சேர்ந்தவன். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரோ, கர்த்தர் தெரிந்துகொண்ட, தாவீதின் வீட்டாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தார் யுத்தம் பண்ண வருவது மிகவும் தப்பிதமான காரியம் என்பதை அபியா அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

அபியாவிடத்தில் ஞானம் இருக்கிறது. அவன் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக சமாதான வார்த்தைகளைப் பேசுகிறான். சண்டைபோடுவதற்கு முன்பாக, சமாதானம் பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை தேடிப்பார்க்கவேண்டும். சமாதானத்தின் எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த பின்பே, யுத்தம்பண்ணுவது பற்றி யோசிக்கவேண்டும்.

யுத்தம் என்பது கடைசி ஆயுதம். அந்த ஆயுதத்தை முதலாவதாக பயன்படுத்தி பேரழிவை ஏற்படுத்தி விடக்கூடாது. யுத்தம்பண்ணாமலிருப்பது மிகவும் நல்லது. அபியா எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறி நின்று, யெரொபெயாமுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தன்னுடைய வார்த்தைகளைச் சொல்லுகிறான் *(2நாளா 13:4)*.

எப்பிராயீம் மலைத்தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ளது. அபியாவும் அவனுடைய சேனையும் வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் மையப்பகுதிக்குப் போய்விடுகிறார்கள். ஆனாலும் அபியா இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், சமாதான வார்த்தைகளைப் பேசுகிறான்.

அபியா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரண்டு கருத்துக்களை சொல்லுகிறான் அவையாவன: 1. தங்கள் பக்கத்தில் நியாயம் இருக்கிறது. 2. கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார்.

அபியா தங்கள் பக்கத்தில் இருக்கும் நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறான். "இஸ்ரவேலை என்றைக்கும் ஆளும் ராஜ்யபாரத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் மாறாத உடன்படிக்கையாய்க் கட்டளையிட்டதை நீங்கள் அறியீர்களா?" *(2நாளா 13:5)* என்று அபியா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத உடன்படிக்கை. இது "உப்பு உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிறது. தாவீதின் குடும்பத்தார், கர்த்தருக்கு பலிகளை செலுத்தி, இந்த உடன்படிக்கையை உறுதிபண்ணியிருக்கிறார்கள். கர்த்தருடைய உடன்படிக்கை, உப்பு உடன்படிக்கை என்று அழைக்கப்படுவதினால், உப்பின் சாரம் மாறாமலிருப்பதுபோல, இந்த உடன்படிக்கையும் மாறாத உடன்படிக்கையாயிருக்கும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே தாவீதை, இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் தாவீதைத் தெரிந்துகொண்டார். சமஸ்த இஸ்ரவேல் தேசத்தாரும், தாவீதை தங்களுடைய ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். தாவீதின் குடும்பத்தார் இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் யெரொபெயாம் தாவீதின் குடும்பத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். இதன் மூலமாக அவன் கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் விரோதமாக கலகம்பண்ணுகிறான் என்று அபியா சொல்லுகிறான்.

"ஆகிலும் தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் ஊழியக்காரனான யெரொபெயாம் என்னும் நேபாத்தின் குமாரன் எழும்பி, தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்" *(2நாளா 13:6)* என்று அபியா இஸ்ரவேல் ஜனத்தாரிடம் யெரொபெயாமுக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

யெரொபெயாமின் பக்கத்தில் நியாயமில்லை. அவன் சாலொமோனின் ஊழியக்காரனாயிருந்தாலும், சாலொமோனின் குடும்பத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறான். யெரொபெயாம் தாவீதின் குடும்பத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணி, இஸ்ரவேலின் பத்து கோத்திரத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவன் இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருப்பது நீதியான காரியமல்ல. அது நியாயமுமல்ல.

சாலொமோனே யெரொபெயாமின் திறமையைப் பார்த்து அவனை உயர்த்தினார். ஆனால் யெரொபெயாம் தன் எஜமானுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

"யெரொபெயாம் என்பவன் பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் காரிய சமர்த்தனான வாலிபன் என்று சாலொமோன் கண்டு, யோசேப்பு வம்சத்தாரின் காரியத்தையெல்லாம் அவன் விசாரிப்புக்கு ஒப்புவித்தான்" (1இராஜா 11:28).

யெரொபெயாமோடுகூட பேலியாளின் மக்களாகிய வீணர் கூடிக்கொள்கிறார்கள். சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமோ வாலவயதுள்ளவனாகவும், திடனற்ற மனதுள்ளவனாகவும் இருக்கிறான். இது ரெகொபெயாமின் பலவீனம். யெரொபெயாமோ அவனுடைய பலவீனத்தைப் பயன்படுத்தி, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை அவனிடத்திலிருந்து பிரித்துக்கொள்கிறான்.

"பேலியாளின் மக்களாகிய வீணர் அவனோடேகூடி, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் அவர்களை எதிர்க்கக்கூடாமல் வாலவயதும் திடனற்ற மனதுமாயிருக்கையில், அவனுக்கு விரோதமாய்த் தங்களைப் பலப்படுத்திக்கொண்டார்கள்" (2நாளா 13:7) என்று அபியா இஸ்ரவேல் ஜனத்தாரிடம் யெரொபெயாமுக்கு விரோதமாகக் குற்றம் சொல்லுகிறான்.

யெரொபெயாமோடு கூடயிருக்கிறவர்கள் பேலியாளின் மக்களாகிய வீணராயிருக்கிறார்கள். இந்த வார்த்தை நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது யெப்தா: தன் சகோதரரை விட்டு ஓடிப்போய்; தோப்தேசத்திலே குடியிருந்தான்; வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப் போவார்கள்" (நியா 11:3).

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தரிடத்தில் பக்தியுமில்லை. கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. யெரொபெயாம் தாவீதின் குடும்பத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறான். ஆனால் அவன் கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறான் என்று அபியா சொல்லுகிறான்.

"இப்போதும் தாவீதுடைய குமாரன் கையிலிருக்கிற கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக நீங்கள் பெலன் கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள்; நீங்கள் ஏராளமான கூட்டம்; யெரொபெயாம் உங்களுக்கு தேவர்களாக உண்டாக்கின பொன் கன்றுக்குட்டிகளும் உங்களிடத்தில் இருக்கிறதே" (2நாளா 13:8) என்று அபியா தெற்கு யூதாராஜ்யத்தைப்பற்றியும், வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தைப்பற்றியும் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யூதாவின் ராஜாவாகிய அபியாவின் பக்கம் இருக்கிறார். அபியா இந்த சத்தியத்தை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெளிவுபடுத்துகிறான். யெரொபெயாமின் சேனை பெரிதாயிருந்தாலும், அவர்கள் ஏராளமான கூட்டமாயிருந்தாலும், கர்த்தர் அவர்களோடு கூடயில்லை. அவர்களிடத்தில் பொன்கன்றுக்குட்டிகள் மாத்திரமே இருக்கிறது. அவற்றிற்கு ஜீவனில்லை.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். "எங்களுக்கோ கர்த்தரே தேவன்; நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை; கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், பணிவிடை செய்கிறவர்கள் லேவியருமாமே" (2நாளா 13:10) என்று அபியா தெற்கு யூதாதேசத்திற்கும், கர்த்தருக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தைப்பற்றிச் சொல்லுகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரையும் தள்ளிவிடுகிறார்கள். கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிடுகிறார்கள். யெரொபெயாம் தனக்கு இஷ்டமானவனை ஆசாரியராக்குகிறான். அவன் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை.

அபியா வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் காணப்படுகிற விக்கிரகாராதனையின் பாவத்தை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

"நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரையும் லேவியரையும் தள்ளிவிட்டு, தேசாதேசங்களின் ஜனங்களைப்போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டுபண்ணவில்லையோ? இளங்காளையினாலும், ஏழுகடாக்களினாலும், தன்னைப் பிரதிஷ்டையாக்கும்படி வருகிற எவனும் தெய்வம் அல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே" (2நாளா 13:9) என்று அபியா இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லுகிறான்.

மோசேயினுடைய பிரமாணத்தின் பிரகாரம் இரண்டு கடாக்களே போதுமானது. (யாத் 21:1; லேவி 8:2) ஏழுகடாக்கள் தேவையில்லை. இவர்கள் மனுஷனால் ஏவப்பட்ட பிரமாணங்களைப் பின்பற்றுகிறார்கள். ஆவிக்குரிய காரியங்களை அகற்றிப்போட்டு, தங்களுக்கு இஷ்டமான காரியங்களின்படி செயல்படுகிறார்கள்.

யெரொபெயாம் இஸ்ரவேல் தேசத்திலே பொன்கன்றுக்குட்டிகளை நிறுவி அதை ஆராதிக்கிறான். தெற்கு யூதாதேசத்திலோ, ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் தினந்தோறும் கர்த்தரை ஆராதிக்கிறார்கள்.

"ஆரோனின் குமாரராகிய ஆசாரியரும் லேவியரும் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலி களையும் சுகந்த வாசனையான தூபத்தையும் செலுத்தி, காலையிலும் மாலையிலும் பரிசுத்தமான மேஜையின்மேல் சமுகத்தப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன் குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள்; நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்" (2நாளா 13:11) என்று சொல்லி அபியா யூதாதேசத்தில் நடைபெறுகிற கர்த்தருடைய ஆராதனையை மகிமைப்படுத்துகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆராதனை நடைபெறவில்லை. அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். யூதாதேசத்திலே, மோசேயின் பிரமாணத்தின்படி, கர்த்தருடைய ஆராதனை நடைபெறுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்திற்கு விரோதமாக மாத்திரமல்ல, அவர்கள் கர்த்தருடைய ஆராதனைக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய அபியா தன்னுடைய தேசத்திற்காக பரிந்து பேசுகிறான். அவன் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கர்த்தருடைய ராஜ்யத்திற்காக வழக்காடுகிறான். அபியாவினிடத்தில் சில பாவங்கள் காணப்படுகிறது. அவன் பரிபூரணமான நீதிமான் என்று சொல்ல முடியாது. ஆனாலும் யூதாதேசத்திலே கர்த்தருக்கு பிரியமானவர்களும், கர்த்தருக்கு பிரியமான ஆராதனைகளும் நடைபெறுகிறது. ஆகையினால் கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார் என்று அபியா நிச்சயமாகச் சொல்லுகிறான்.

"இதோ, தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடேகூட இருக்கிறார்; உங்களுக்கு விரோதமாகப் பூரிகைகளைப் பெருந்தொனியாய் முழக்குகிற ஆசாரியர்களும் இருக்கிறார்கள்; இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது" (2நாளா 13:12) என்று அபியா இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசுகிறான்.

தெற்கு யூதாதேசத்தார் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரோ கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. யூதாதேசத்திலே ஆரோனின் குமாரர் மாத்திரம் ஆசாரியராயும் லேவியராயும் இருக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலோ யெரொபெயாமுக்கு பிரியமானவர்கள் எல்லோரும், அவன் நிறுவின பொன்கன்றுக்குட்டிகளுக்கு ஆசாரியர்களாயிருக்கிறார்கள்.

தெற்கு யூதாதேசத்திற்கு தேவனாகிய கர்த்தரே சேனாபதியாக அவர்களோடு கூடயிருக்கிறார். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் சேனையிலே ஏராளமான கூட்டம் இருக்கிறது. அவர்களோடு கர்த்தர் இல்லை.

யூதாவின் ராஜாவாகிய அபியா, எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறிநின்று, யெரொபெயாமுக்கும், எல்லா இஸ்ரவேலருக்கும் தன்னுடைய வார்த்தைகளை சொல்லி முடிக்கும்போது, "இஸ்ரவேல் புத்திரரே, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக யுத்தஞ்செய்யாதேயுங்கள்; செய்தால் உங்களுக்குச் சித்திக்காது" *(2நாளா 13:12)* என்று சொல்லுகிறான். அபியாவின் வார்த்தைகள் சத்துருக்களுக்கு விரோதமாகச் சொல்லப்படும் எச்சரிப்பின் வார்த்தைகளாயிருக்கிறது.

யெரொபெயாம்
2நாளா 13:13-20

2நாளா 13:13. யெரொபெயாம் அவர்களுக்குப் பின்னாக வரத்தக்கதாக ஒரு பதிவிடையைச் சுற்றிப்போகப்பண்ணினான்; அப்படியே அவர்கள் யூதாவுக்கு முன் இருந்தார்கள்; அந்தப் பதிவிடை அவர்களுக்குப்பின் இருந்தது.

2நாளா 13:14. யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறதைக் கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள்.

2நாளா 13:15. யூதா மனுஷர் ஆர்ப்பரித்தார்கள்; யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்தார்.

2நாளா 13:16. இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தேவன் அவர்களை இவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்.

2நாளா 13:17. அபியாவும் அவனுடைய ஜனங்களும் அவர்களில் மகா சங்காரம்பண்ணினார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்து லட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுந்தார்கள்.

2நாளா 13:18. அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொண்டதினால் மேற்கொண்டார்கள்.

2நாளா 13:19. அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடித்தான்.

2நாளா 13:20. அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ள மாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைந்தான்.

யெரொபெயாம் அபியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. யூதாதேசத்தையும் தன்னோடு சேர்த்துக்கொள்ளவேண்டும் என்னும் பேராசை யெரொபெயாமின் மனதிலிருக்கிறது. யெரொபெயாம் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறான். அவன் அபியாவோடு விவாதம்பண்ண வரவில்லை. யெரொபெயாமின் சேனையிலே எட்டு லட்சம் பேர் பலத்த பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். சேனையிலுள்ளவர்களின் எண்ணிக்கையும், பட்டயத்தின் நீளமும், யுத்தத்தின் வெற்றி தோல்வியை தீர்மானம்பண்ணும் என்று யெரொபெயாம் நினைக்கிறான்.

யெரொபெயாம் தன்னுடைய சுயபலத்தை நம்புகிறான். தன்னிடத்திலுள்ள ஏராளமான கூட்டத்தை நம்புகிறான். அவன் சத்தியத்தை நம்பவுமில்லை. யதார்த்தத்தை தியானிக்கவுமில்லை. யெரொபெயாமுக்கு யுத்த தந்திரங்கள் தெரிந்திருக்கிறது. அபியா எப்பிராயீம் மலைத்தேசத்திலுள்ள செமராயீம் என்னும் மலையின்மேல் ஏறி நிற்கிறான். யூதாவின் சேனை மலைக்கு கீழே இருக்கிறது.

அப்பொழுது யெரொபெயாம் அவர்களுக்குப் பின்னாக வரத்தக்கதாக ஒரு பதிவிடையைச் சுற்றிப்போகப்பண்ணுகிறான்; அப்படியே அவர்கள் யூதாவுக்கு முன் இருக்கிறார்கள்; அந்தப் பதிவிடை அவர்களுக்குப்பின் இருக்கிறது (2நாளா 13:13). யூதாஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, அவர்களுக்கு முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறது.

யெரொபெயாம் மிகவும் ஞானமாக ஒரு யுத்த வியூகம் வகுக்கிறான். ஆனால் கர்த்தர் யெரொபெயாமோடு இல்லை. யூதா புத்திரர் தங்களுக்கு முன்னும், பின்னும் யுத்தம் நடக்கிறதைக் காண்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்துக் காலத்தில் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள் (2நாளா 13:12). ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள். யூதா மனுஷர் ஆர்ப்பரித்தார்கள். கர்த்தர் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்தார். யெரொபெயாமின் 8 இலட்சம் யுத்தவீரரில் 5 இலட்சம் பேர் வெட்டுண்டு செத்தார்கள். (2நாளா 13:13-20).

யெரொபெயாம் யுத்த வியூகங்களை நம்புகிறான். யூதாஜனங்களோ கர்த்தரை நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்குகிறார்கள். யூதாமனுஷர் ஆர்ப்பரிக்கிறார்கள். இந்த ஆர்ப்பரிப்பு கர்த்தரைத் துதிக்கும் துதியின் ஆர்ப்பரிப்பு (2நாளா 13:14).

யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள்; தேவன் இஸ்ரவேலரை, யூதா மனுஷரின் கையில் ஒப்புக்கொடுக்கிறார் (2நாளா 13:15,16).

யெரொபெயாமின் சேனை யூதாமனுஷருக்கு பின்பாக பதிவிடையாக யிருக்கிறார்கள். யூதாமனுஷர் மிகுந்த நெருக்கத்திற்கு மத்தியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறது. இஸ்ரவேல் தேசத்தாரின் சேனையும் ஏராளமான கூட்டமாயிருக்கிறது.

யூதாவின் ராஜாவாகிய அபியா, "எங்களுக்கோ கர்த்தரே தேவன்" என்றும், "தேவன் எங்கள் சேனாபதியாய் எங்களோடே இருக்கிறார்" என்றும் சொன்னான். இப்போது யூதாவின் மனுஷரை ஆபத்து சூழ்ந்திருக்கிறது. அவர்களைச் சுற்றிலும் இஸ்ரவேல் தேசத்தார் பதிவிடையிலிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு ஆபத்து சூழ்ந்திருந்தாலும், அவர்கள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுவதற்கு ஒரு தடையுமில்லை. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு, பரலோகத்தின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். யூதாவின் மனுஷர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை சார்ந்து கொள்கிறார்கள் (2நாளா 13:18).

யூதாவின் மனுஷர் யுத்தக்களத்திலே, சத்துருக்களுக்கு முன்பாக நிற்கிறார்கள். ஆனாலும் அவர்கள் யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுகிறார்கள். விசுவாசமுள்ள ஜெபம் நமக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா 5:4).

யூதாவின் மனுஷர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர்களுடைய விசுவாசத்தை உற்சாகப்படுத்தும் வண்ணமாக, ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்குகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு ஜெயத்தைக் கொடுப்பார் என்னும் நம்பிக்கையோடு, யூதா மனுஷர் ஆர்ப்பரிக்கிறார்கள். யூதாவின் மனுஷரிடத்தில் விசுவாசமுள்ள ஜெபமும், விசுவாசமுள்ள ஆர்ப்பரிப்பும் காணப்படுகிறது. அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக வெற்றி சிறக்கிறார்கள்.

யூதா மனுஷர் விசுவாசத்தோடு ஆர்ப்பரிக்கிறபோது, தேவன் யெரொபெயாமையும், இஸ்ரவேல் அனைத்தையும், அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியடிக்கிறார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தரே சத்துருக்களை முறியடிக்கிறார்.

இஸ்ரவேலின் சேனையில் எட்டு லட்சம் பலத்த பராக்கிரமசாலிகள் இருந்தாலும், அவர்கள் யூதாவுக்கு முன்பாக முறிந்து ஓடுகிறார்கள். யூதாவின் மனுஷர் ஆர்ப்பரிக்கிற சத்தத்தைக் கேட்டு, இஸ்ரவேல் மனுஷர் பயந்து நடுங்குகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை நம்புகிறார்கள். இஸ்ரவேல் மனுஷரோ விக்கிரகங்களை நம்புகிறார்கள். அவர்கள் தாவீதின் குடும்பத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ராஜ்யத்திற்கு விரோதமாக பெலன் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களால் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கமுடியவில்லை.

அபியாவும் அவனுடைய ஜனங்களும் இஸ்ரவேலின் சேனையை மகா சங்காரம்பண்ணுகிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்து லட்சம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டு விழுகிறார்கள். அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்படுகிறார்கள்; யூதா புத்திரரோ தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொண்டதினால் மேற்கொள்கிறார்கள் (2நாளா 13:17,18).

யூதா கோத்திரத்தார் கர்த்தரைச் சார்ந்து கொள்கிறார்கள். அவர்களுடைய வெற்றிக்கு இதுவே காரணம். யுத்தத்தில் கர்த்தர் யூதா கோத்திரத்தாருக்கு வெற்றியையும், யெரொபெயாமுக்குத் தோல்வியையும் கொடுக்கிறார். இந்தத் தோல்வியிலிருந்து யெரொபெயாமால் மறுபடியும் எழும்பி வரமுடியவில்லை. (2நாளா 13:19-20).

அபியா இஸ்ரவேல் ஜனத்தாரை, தன்னுடைய தேசத்தோடு சேர்த்துக்கொள்ளவில்லை. பிரிந்த ராஜ்யம் மறுபடியுமாய் சமஸ்த இஸ்ரவேலாக இணைக்கப்படவில்லை. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்படுகிறார்கள்.

அபியா யெரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்கு உண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பெரோனையும் அதின் கிராமங்களையும் பிடிக்கிறான். அப்புறம் அபியாவின் நாட்களில் யெரொபெயாம் பலங்கொள்ள மாட்டாதேபோய், கர்த்தர் அவனை அடித்ததினால் மரணமடைகிறான் (2நாளா 13:19,20).

அபியாவின் நடபடிகள் 2நாளா 13:21,22

2நாளா 13:21. அபியா பலத்துப்போனான்; அவன் பதினாலு ஸ்திரீகளை விவாகம்பண்ணி, இருபத்திரண்டு குமாரரையும் பதினாறு குமாரத்திகளையும் பெற்றான்.

2நாளா 13:22. அபியாவின் மற்றக் கிரியைகளும், அவன் நடபடிகளும் அவன் வர்த்தமானங்களும், தீர்க்கதரிசியாகிய இத்தோவின் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது.

இஸ்ரவேலுக்கு விரோதமான யுத்தத்திலே அபியா ஜெயம்பெறுகிறான். யெரொபெயாமும் செத்துப்போகிறான். அபியா பலத்துப்போகிறான். அவன் பதினாலு ஸ்திரீகளை விவாகம்பண்ணி, இருபத்திரண்டு குமாரரையும் பதினாறு குமாரத்திகளையும் பெறுகிறான் (2நாளா 13:21).

அபியாவுக்கு 14 மனைவிகள் இருக்கிறார்கள். சாலொமோனுக்கோ 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். (1இராஜா 11:3) ரெகொபெயாமுக்கு 18 மனைவிகளும், 60 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். அபியாவுக்கு 22 குமாரரும், 16 குமாரத்திகளும் இருந்தார்கள். ரெகொபெயாமுக்கு 28 குமாரரும், 60 குமாரத்திகளும் இருந்தார்கள். (2நாளா 13:21=2நாளா 11:18- 23).

அபியா தன் பிதாக்களோடே நித்திரையடைகிறான். அவனை தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள். அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய ஆசா யூதாதேசத்தின்மீது ராஜாவாகிறான்.

அபியாவின் மற்றக் கிரியைகளும், அவன் நடபடிகளும் அவன் வர்த்தமானங்களும், தீர்க்கதரிசியாகிய இத்தோவின் சரித்திரத்தில் எழுதியிருக்கிறது (2நாளா 13:22).

14 அதிகாரம்

யூதாவின் ராஜாவாகிய ஆசாபின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்து வரும் இரண்டு அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாப் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானவனாயிருக்கிறான். ஆசாபின் ராஜ்யபாரம் நீடித்திருக்கிறது.

ஆசா கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன் (2நாளா 14:1-5). தேசம் அமரிக்கையாயிருக்கிறது. ஆசா யூதாதேசத்திலே அரணிப்பான பட்டணங்களைக் கட்டுகிறான் (2நாளா 14:6-8).

எத்தியோப்பியர் ஆசாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள் கர்த்தர் எத்தியோப்பியரை ஆசாவுக்கு விரோதமாக முறியடிக்கிறார் (2நாளா 14:9-15).

ஆசா
2நாளா 14:1-8

2நாளா 14:1. அபியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய ஆசா ராஜாவானான்; இவனுடைய நாட்களில் தேசம் பத்து வருஷமட்டும் அமரிக்கையாயிருந்தது.

2நாளா 14:2. ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்தான்.

2நாளா 14:3. அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி,

2நாளா 14:4. தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து,

2நாளா 14:5. யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து மேடைகளையும் விக்கிரகங்களையும் அகற்றினான்; அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது.

2நாளா 14:6. கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டதினால், அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தம் இல்லாதிருந்தது; தேசம் அமரிக்கையாயிருந்தபடியினால், யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டினான்.

2நாளா 14:7. அவன் யூதாவை நோக்கி: தேசம் நமக்கு முன்பாக அமர்ந்திருக்கையில், நாம் இந்தப் பட்டணங்களைக் கட்டி, அவைகளுக்கு அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள் உண்டுபண்ணி, தாழ்ப்பாள் போட்டுப் பலப்படுத்துவோமாக; நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடினோம், தேடினபோது, சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார் என்றான்; அப்படியே கட்டினார்கள்; அவர்களுக்குக் காரியம் வாய்த்தது.

2நாளா 14:8. யூதாவிலே பரிசையும் ஈட்டியும் பிடிக்கிற மூன்றுலட்சம்பேரும், பென்யமீனிலே கேடகம் பிடித்து வில்லை நாணேற்றுகிற இரண்டுலட்சத்து எண்பதினாயிரம்பேருமான சேனை ஆசாவுக்கு இருந்தது, இவர்களெல்லாரும் பராக்கிரமசாலிகள்.

ஆசாவின் ராஜ்யபாரத்தைப்பற்றி இராஜாக்கள் புஸ்தகத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசாவின் விரிவான சரித்திரம் 2நாளா 14-16 ஆகிய அதிகாரங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

அபியாமின் குமாரனாகிய ஆசா, அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான். அவன் நாற்பத்தொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 15:10). ராஜாக்கள் புஸ்தகத்திலும், நாளாகமம் புஸ்தகத்திலும் யூதாவின் ராஜாக்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்களில் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த நல்ல ராஜாக்களும், கர்த்தருடைய பார்வைக்கு உத்தமமாய் இராமல் பொல்லாப்பானதை செய்த கெட்ட ராஜாக்களும் சமஎண்ணிக்கையிலிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்த நல்ல ராஜாக்கள் நீண்டகாலம் ஆட்சி செய்கிறார்கள். துன்மார்க்கமான ராஜாக்களின் ஆட்சிக்காலம் சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

அபியாமின் குமாரனாகிய ஆசா, தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் (1இராஜா 15:11). ஆசாவின் நடபடிகள் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதாயிருக்கிறது. ஆசா தாவீதைப்போல கர்த்தரிடத்தில் நெருங்கிய ஐக்கியத்தோடிருக்கிறான். தாவீது ஒரு தீர்க்கதரிசி. அவர் ஒரு சங்கீதக்காரர். ஆசா தாவீதைப்போல ஒரு தீர்க்கதரிசியோ அல்லது ஒரு சங்கீதக்காரரோ அல்ல. ஆனாலும் ஆசா தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான்.

ஆசாவைப்போல நாமும், நம்முடைய முன்னோர்களைப்போல, ஏராளமான தாலந்துகளை உடையவர்களாயிருக்கமாட்டோம். ஆனாலும் கர்த்தருடைய கிருபை நமக்கும் போதுமானதாயிருக்கிறது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளை, அவருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். நம்மிடத்தில் தாலந்துகள் குறைவாயிருந்தாலும், அவற்றை பயன்படுத்தாமல் சும்மா வைத்திருக்கக்கூடாது. கர்த்தர் நமக்குக் கொடுக்கும் தாலந்துகள், அவருடைய நாமமகிமைக்காக எப்போதும் பயன்படுத்தப்படவேண்டும்.

ஆசா கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவனாயிருக்கிறான். இவனுடைய ஆட்சிக்காலத்தில், யூதாதேசம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. யூதாதேசத்தார் மத்தியிலே மனமாற்றமும், மறுமலர்ச்சியும் தேவைப்படுகிறது.

ஆசா இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றுகிறான். தன் பிதாக்கள் உண்டுபண்ணின நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்குகிறான். தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தைஉண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிடுகிறான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போடுகிறான் (1இராஜா 15:12,13).

ஆசா இலச்சையான புணர்ச்சிக்காரரை யூதாதேசத்திலிருந்து அகற்றுகிறான். இவர்கள் ஆண்புணர்ச்சிக்காரர்களாயும், வேசிகளாயும் இருக்கிறார்கள். தேசத்தில் இவர்களைப்போல அசுத்தமானவர்கள் இருக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அந்த தேசத்திற்கு சித்திக்காது. தேசத்தின் ராஜாவோ, அல்லது தேசத்தின் ஜனங்களோ சந்தோஷமாயும், சமாதானமாயும், செழிப்பாயும் இருக்கமாட்டார்கள். தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காரர் இருக்கும் வரையிலும், கர்த்தருடைய சாபம் அந்த தேசத்தின்மீது தங்கியிருக்கும்.

ஆசா யூதாதேசத்திலிருந்து, இலச்சையான புணர்ச்சிக்காரரை அகற்றின பின்பு, நரகலான விக்கிரகங்களையெல்லாம் விலக்குகிறான். இந்த விக்கிரகங்களெல்லாம் அவனுடைய பிதாக்கள் உண்டுபண்ணினவை. அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாள் ஆசாவின் தாயார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (1இராஜா 15:10). இவள் ஆசாவின் தாயாரல்ல. இவள் ஆசாவின் பாட்டி. ஆசா சிறுபிள்ளையாயிருந்த காலத்திலிருந்து, தன்னுடைய பாட்டியாகிய மாகாளின் பராமரிப்பில் வளர்ந்தவன். மாகாள் தனக்கு தோப்பு விக்கிரகங்களை உண்டுபண்ணியிருந்தாள்.

ஆசா யூதாதேசத்திற்கு ராஜாவானவுடன், தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின தன் தாயாகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிவிடுகிறான்; அவளுடைய விக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கி, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போடுகிறான் (1இராஜா 15:13). மனமாற்றமும், மறுமலர்ச்சியும் நம்முடைய வீட்டிலே ஆரம்பமாகவேண்டும்.

ஆசா தன் தாயாராகிய மாகாள்மீது பிரியமாயிருக்கிறான். அவள்மீது அன்பு வைத்திருக்கிறான். ஆனாலும் ஆசா மாகாளைவிட கர்த்தரை அதிகமாய் நேசிக்கிறான். ஆசா மாகாளை நேசித்தாலும், அவளுடைய விக்கிரகாராதனையை அருவருக்கிறான்.

ஆசா கர்த்தரைக்குறித்த ஆவிக்குரிய காரியங்களில் லேவியரைப்போல இருக்கிறான். "தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்: நான் உங்களைப் பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கிகரியாமல், தன் பிள்ளைகளையும் அறியாமலிருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு, உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள்" (உபா 33:9).

ஆசா மாகாளின் விக்கிரகங்களை நிர்மூலமாக்குகிறான். அவற்றை கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்துப்போடுகிறான். ஆசா மாகாளை ராஜாத்தியாயிராதபடிக்கு விலக்கி விடுகிறான். ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசிப்பதற்கு மாகாளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அவள் தனிமையான வீட்டிலே சிறை வைக்கப்படுகிறாள். ஆசாவின் மனைவியோடு பேசுவதற்குக்கூட, மாகாளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

மேடைகளோ தகர்க்கப்படவில்லை; ஆனாலும் ஆசா உயிரோடிருந்த நாளெல்லாம் அவன் இருதயம் கர்த்தரோடே உத்தமமாயிருக்கிறது (1இராஜா 15:14).

ஆசா யூதாதேசத்திலே கர்த்தருக்கு பிரியமான காரியங்களை மறுபடியும் ஸ்தாபிக்கிறான். தன் தகப்பனும் தானும் பரிசுத்தப்படுத்தும்படி நேர்ந்து கொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டுவருகிறான் (1இராஜா 15:15).

எத்தியோப்பியர்மீது நடைபெற்ற யுத்தத்தில் ஆசாவுக்கு ஜெயமுண்டாயிற்று. எத்தியோப்பியருடைய தேசத்திலிருந்து ஆசா ஏராளமான கொள்ளைப்பொருளை எருசலேமுக்கு கொண்டு வந்தான். தான் கர்த்தருக்கு நேர்ந்துகொண்ட பிரகாரம், கர்த்தருடைய ஆலயத்திலே, பொன்னையும் வெள்ளியையும் காணிக்கையாக செலுத்துகிறான்.

கர்த்தருக்கு நேர்ந்துகொண்டதை கர்த்தருக்கு செலுத்தவேண்டும். நம்முடைய குடும்பத்திலுள்ளவர்களை கர்த்தருடைய ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தால், ஏற்றகாலம் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும். இந்த விஷயத்தில் பிரதிஷ்டை பண்ணினவர்களும், பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்களும் ஒத்துழைத்து, கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். பெற்றோர் கர்த்தருக்காக நேர்ந்துகொண்டவற்றை, அவர்களுடைய பிள்ளைகளும் செலுத்தவேண்டும்.

ஆசா தனக்காகவும், யூதாஜனங்களுக்காகவும் பட்டணங்களைக் கட்டுகிறான். இதனால் யூதாமனுஷருக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. அவர்களுக்கு போதுமான அளவு வருமானமும் கிடைக்கிறது. ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா வல்லமையும், அவன் செய்தவை யாவும், அவன் கட்டின பட்டணங்களின் வரலாறும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 15:23).

ஆசாவின் ராஜ்யபாரம் சிறப்பாகயிருந்தாலும், அவனுடைய ராஜாசனத்திலும் ஒரு சில தப்பிதங்கள் ஏற்படுகிறது. அவன் யூதாதேசத்திலே அநேக நல்ல காரியங்களை செய்திருக்கிறான். இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றிப்போட்டான். நரகலான விக்கிரகங்களையெல்லாம் யூதாதேசத்திலிருந்து விலக்கிப்போட்டான். ஆனாலும் அவன் மேடைகளை தகர்க்கவில்லை (1இராஜா 15:14).

ஆசாவினிடத்தில் நல்ல சுபாவங்கள் ஏராளமாயிருக்கிறது. ஆனாலும் அவன் செய்யவேண்டிய சில காரியங்களை செய்யாமல் விட்டுவிடுகிறான். தன்னுடைய தாயாகிய மாகாளின் விக்கிரகத்தை ஆசா நிர்மூலமாக்கினான். அதை கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்துப்போட்டான். அவள் மேடைகளையும் தோப்புகளையும் உண்டாக்கி, அவற்றிலே அருவருப்பான விக்கிரகங்களை உண்டுபண்ணினாள். ஆசா அவளுடைய விக்கிரகங்களை நிர்மூலம்பண்ணினாலும், அவள் உண்டுபண்ணின மேடைகளை தகர்க்கவில்லை. இதனால் ஆவிக்குரிய மறுமலர்ச்சியில் தடை உண்டாயிற்று. மேடைகள் தகர்க்கப்படாமலிருப்பதினால், அங்கே விக்கிரகாராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

ஆசா விக்கிரகங்களின் மேடைகளை தகர்க்காவிட்டாலும், அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். அவனுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கிறது.

ஆசாவைப்போல கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அநேகர் நிறைவுள்ளவர்களாயும், குறைவுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு நன்றாய் ஊழியம் செய்வார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கும். கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய ஊழியங்களையும் அங்கீகரிப்பார். ஆனாலும் அவர்கள் ஒரு சில காரியங்களில் குறைவுள்ளவர்களாகயிருப்பார்கள். சில காரியங்களை அவர்களால் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதை செய்யமாட்டார்கள்.

நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். பாவமில்லாத மனுஷன் ஒருவனுமில்லை. பரிபூரணம் என்னும் வார்த்தை பாவமே இல்லாத ஜீவியத்தை குறிக்கவில்லை. நம்முடைய எண்ணத்திலும், கிரியையிலும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இதுவே கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கும் பரிபூரணம்.

ஆசா தானும் தன் தகப்பனும் நேர்ந்துகொண்ட பொக்கிஷங்களை கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வருகிறான். இது மிகவும் நல்ல காரியம்.

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிந்த பின்பு, ஆசா யூதாவின்மீது மூன்றாவது ராஜாவாக இருக்கிறான். சவுல் ராஜாவின் காலத்திலிருந்து கணக்குப் பார்க்கும்போது, ஆசா ஆறாவது ராஜாவாக இருக்கிறான்.

ஆசாவினுடைய நாட்களில் தேசம் பத்து வருஷமட்டும் அமரிக்கையாயிருந்தது. ஆசாவின் தகப்பன் அபியா யெரொபெயாமோடே யுத்தம் பண்ணி, பத்துக் கோத்திரத்தாரையும் முறியடித்தான். இதனால் யூதா தேசத்தில் அமைதி உண்டாயிற்று. *(2நாளா 14:1-5; 2நாளா 13:13-20)*. யூதாவில் ஆட்சி புரிந்த ராஜாக்களில் ஆசாவே முதலாவது நல்ல ராஜாவாக இருக்கிறான்.

ஆசா தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்கிறான் *(2நாளா 14:2)*. கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டும் என்பதே ஆசாவின் விருப்பம். கர்த்தர் தன்னையும், தன்னுடைய கைகளின் கிரியைகளையும் அங்கீகரிக்கவேண்டும் என்று ஆசா எதிர்பார்க்கிறான். ஆசா அதற்கேற்ற நன்மையான காரியங்களையும், செம்மையான காரியங்களையும் செய்கிறான்.

கர்த்தருடைய பார்வை தன்மீது எப்போதும் பதிந்திருக்கிறது என்பது ஆசாவுக்கு தெரிந்திருக்கிறது. ஆசா கர்த்தருடைய கண்களை நோக்கிப் பார்க்கிறான். கர்த்தர் தன்னை கண்ணோக்கிப் பார்க்கிறார் என்னும் உணர்வு ஆசாவினிடத்தில் காணப்படுவதினால், அவன் தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்கிறான்.

ஆசா ராஜாவானவுடனே, யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சிகளை ஏற்படுத்துகிறான். இது ஆசீர்வாதமான ஊழியம். சாலொமோனின் காலத்திலேயே, இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகாராதனை பிரவேசித்து விடுகிறது.

சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் காலத்திலும், அவனுடைய குமாரனாகிய அபியாவின் காலத்திலும், யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களையும், விக்கிரகாராதனைகளையும் நீக்கிப்போடுவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ஆசா ஆட்சிக்கு வந்தவுடனே, யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனைகளை நீக்குகிறான்.

ஆசா அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டிப்போடுகிறான்

அவன் யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து மேடைகளையும் விக்கிரகங்களையும் அகற்றுகிறான் *(2நாளா 14:3,5).*

ஆசா யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றினாலும், விக்கிரகாராதனையை அவன் ஒடுக்கவில்லை. சாலொமோனுக்கு பின்பு, இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேவர்களின் மேடைகளிலே பலியிடுகிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே, யெரொபெயாம் விக்கிரங்களை ஆராதனை செய்வதற்கு, தனக்கு இஷ்டமான ஆசாரியர்களை நியமிக்கிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலும், தெற்கு யூதாதேசத்திலும், விக்கிரகங்களும் விக்கிரகாராதனைகளும் நிரம்பியிருக்கிறது.

ஆசா யூதாதேசத்திற்கு ராஜாவானவுடனே, அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும், மேடைகளையும் அகற்றுகிறான். சிலைகளை உடைத்து விக்கிரகத்தோப்புகளை வெட்டிப்போடுகிறான். யூதாவுடைய எல்லா பட்டணங்களிலும் விக்கிரகங்களும், அவற்றிற்கு மேடைகளும் இருக்கிறது. ஆசா அவையெல்லாவற்றையும் அகற்றுகிறான்.

விக்கிரகங்களை அழித்துப்போட்டால், விக்கிரகாராதனைக்காரர்கள் மனந்திரும்புவார்கள் என்று ஆசா எதிர்பார்க்கிறான். ஆகையினால் அவன் விக்கிரகாராதனைக்காரரை அழித்துப்போடாமல், யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை மாத்திரம் அகற்றுகிறான்.

ஆசா யூதாதேசத்திலே கர்த்தரை ஆராதிக்கும் மெய்யான ஆராதனையை ஸ்தாபிக்கிறான். தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனையின்படியும் செய்யவும் ஆசா யூதாவுக்குக் கற்பிக்கிறான் *(2நாளா 14:4).*

ஆரோனின் குமாரராகிய ஆசாரியரும் லேவியரும், கர்த்தருடைய பலிபீடங்களிலே ஊழியம் செய்கிறார்கள். ஆசாரியர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள். ஆசாரியர்கள் தங்களுடைய ஊழியத்தை செய்யும்போது, ஜனங்களும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும் என்று போதிக்கப்படுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தேடவேண்டும் என்று ஆசா அவர்களுக்கு கற்பிக்கிறான். அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படியும், கற்பனையின்படியும் கிரியை செய்யவேண்டும். அவர்கள் புறஜாதி விக்கிரகங்களை பின்பற்றக்கூடாது. யூதாதேசத்தார் அந்நிய தேசத்தாரின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி, கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்யக்கூடாது.

ஆசா யூதாதேசத்திலே விக்கிரகங்களை அகற்றுகிறான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறான். இதனால் யூதாராஜ்யம் அமரிக்கையாயிருக்கிறது. கர்த்தர் ஆசாவுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடுகிறார். அந்த வருஷங்களில் ஆசாவுக்கு விரோதமான யுத்தம் இல்லாதிருக்கிறது *(2நாளா 14:6).*

ரெகொபெயாமின் காலத்திலும், அபியாவின் காலத்திலும் யூதாதேசத்தில் யுத்தம் நடைபெற்றது. சத்துருக்கள் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். ஆசாவின் நாட்களில் தேசம் பத்து வருஷம் மட்டும் அமரிக்கையாயிருக்கிறது *(2நாளா 14:1).* அந்த வருஷங்களில் யூதாவுக்கு விரோதமான யுத்தமில்லாதிருக்கிறது.

அபியா தன்னுடைய ஆட்சிக்காலத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினான். இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் தேசத்தார் தோற்றுப்போனார்கள். யெரொபெயாமும் மரித்துப்போனான். இந்த யுத்தங்களுக்கு பின்பு யூதாதேசம் அமரிக்கையாயிருக்கிறது.

ஆசாவின் ஆட்சிக்காலத்திலே, யூதாதேசம் யுத்தமில்லாமல் அமரிக்கையாயிருப்பதினால், ஆசா ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்துகிறான். யூதா தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறான்.

ஆசாவின் தகப்பனாகிய அபியாவும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருந்தான். ஆசாவின் காலத்திலே, யூதாதேசத்திலே, ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு, அபியாவின் பக்தியும் ஒரு காரணம். யூதாவிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாவதற்கு, அபியா பாதைகளை செம்மைபடுத்தியிருக்கிறான்.

கர்த்தர் ஆசாவுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டிருக்கிறார். இந்த இளைப்பாறுதல் கர்த்தருடைய கிருபையான ஈவு என்பதை ஆசா அறிந்துகொள்கிறான். ஆசா யூதாதேசத்திலே விக்கிரகங்களை அகற்றிப்போட்டான். ஆவிக்குரிய ஆராதனைகளை புதுப்பித்தான். ஆசாவின் ஊழியத்திற்கு வெகுமதியாக, கர்த்தர் யூதாதேசத்திலே இளைப்பாறுதலைக் கட்டளையிட்டிருக்கிறார்.

நாம் கர்த்தரைத் தேடும்போது, கர்த்தர் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடுவார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் வரும்போது, அவர்களுடைய உள்ளத்திலே இளைப்பாறுதல் கிடைக்கும். கர்த்தரைத் தேடுவது நல்லது என்பதையும், அதனால் நமக்கு இளைப்பாறுதல் உண்டாகும் என்பதையும், நம்முடைய சொந்த அனுபவத்தின் மூலமாய் நாம் உணரலாம்.

யூதாதேசம் அமரிக்கையாயிருக்கும் போது, இந்த அமரிக்கையை, யூதாதேசத்தின் நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பதை, ஆசா யூதாதேசத்தாரோடு கலந்து ஆலோசிக்கிறான். அவர்களுடைய மூப்பரிடத்தில் இதுபற்றி பேசுகிறான். யூதாதேசத்தார் எல்லோரும் யுத்தமில்லாத அமரிக்கையை அனுபவிக்கிறார்கள். இந்த சந்தோஷத்தையும், அமரிக்கையையும் அவர்கள் நன்மைக்கேதுவாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

யூதாதேசத்திலே யுத்தமில்லாதிருக்கிறது. தேசம் அமரிக்கையாயிருக்கிறது. ஆகையினால் யூதாதேசத்தார் ஒரு வேலையும் செய்யாமல், சும்மாயிருந்துவிடக்கூடாது. சோம்பேறித்தனம் மிகவும் ஆபத்தானது. ஆசா இதை உணர்ந்து, அமரிக்கையான இந்தக் காலத்தில், யூதாதேசத்திற்கு நன்மையான காரியங்களை செய்யவேண்டும் என்று விரும்புகிறான்.

யூதாதேசம் அமரிக்கையாயிருந்தபடியினால், ஆசா யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டுகிறான். ஆசா யூதாஜனத்தாரை நோக்கி, "தேசம் நமக்கு முன்பாக அமர்ந்திருக்கையில், நாம் இந்தப் பட்டணங்களைக் கட்டி, அவைகளுக்கு அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள் உண்டுபண்ணி, தாழ்ப்பாள் போட்டுப் பலப்படுத்துவோமாக" (2நாளா 14:7) என்று சொல்லுகிறான்.

யூதாதேசம் அமரிக்கையாயிருக்கிறது. கர்த்தர் கொடுத்த இளைப்பாறுதலை ஜனங்கள் அனுபவிக்கிறார்கள். இந்த ஆசீர்வாதங்களுக்கு தன்னுடைய திறமையோ அல்லது யூதாதேசத்தாரின் படைபலமோ காரணமல்ல என்றும், கர்த்தருடைய கிருபையும், அநுக்கிரகமுமே காரணம் என்றும் ஆசா அங்கீகரிக்கிறான்.

ஆசா யூதாதேசத்தாரை நோக்கி, "நம்முடைய தேவனாகிய கர்த்தரைத் தேடினோம், தேடினபோது, சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார்" (2நாளா 14:7) என்று சொல்லுகிறான்.

யூதாவின் மனுஷர் ஆசாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டுகிறார்கள். கர்த்தருடைய கிருபை அவர்களோடு கூடயிருந்ததினால், அவர்களுக்கு காரியம் வாய்க்கிறது.

சபை குழப்பமில்லாமல் அமைதியாயிருக்கும்போது, சபையிலே பக்திவிருத்தி கட்டியெழுப்பப்படவேண்டும். சபைகள் பலுகிப் பெருகவேண்டும். சபையின் அமைதியான காலங்களை அதன் ஆசீர்வாதத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

"அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" *(அப் 9:31)*.

தேசத்திலே சமாதானமுண்டாயிருக்கும்போது, வரப்போகிற பிரச்சனைகளை சந்திப்பதற்கு நம்மை ஆயத்தம்பண்ணிக் கொள்ளவேண்டும். தேசத்தில் இப்போது அமைதியிருப்பதினால், தேசம் எப்போதுமே அமைதியாயிருக்கும் என்று சொல்ல முடியாது. தேசத்திற்கு விரோதமாக பிரச்சனைகள் வரலாம். ஆகையினால் ஒவ்வொரு தேசமும், யுத்தமில்லாத காலங்களிலே, தங்களை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணிக்கொள்வது மிகவும் நல்லது.

யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தமில்லாதிருக்கிறது. தேசம் அமரிக்கையாயிருக்கிறது. ஆசா இந்த அமரிக்கையான காலத்தைப் பயன்படுத்தி, யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டி, தேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறான். அவன் பட்டணங்களுக்கு அலங்கங்களையும், கோபுரங்களையும், வாசல்களையும் உண்டுபண்ணுகிறான். வாசல்களின் கதவுகளுக்கு தாழ்ப்பாள்கள் போட்டு பலப்படுத்துகிறான்.

ஆசா யூதாவின் மனுஷரை நோக்கி, "இந்தப் பட்டணங்களைக் கட்டி பலப்படுத்துவோமாக" என்று சொல்லும்போது, ஒரு யுத்தத்தை எதிர்பார்ப்பதுபோல பேசுகிறான். யுத்தம் வந்துவிட்டால் அதன்பின்பு யூதாவின் மனுஷரால் அரணான பட்டணங்களைக் கட்டவும் முடியாது. கட்டின பட்டணங்களை பலப்படுத்தவும் முடியாது.

ஒவ்வொரு வேலையையும் அதற்கேற்ற காலத்தில் செய்யவேண்டும். வெள்ளம் வருவதற்கு முன்பாகவே அணை போடவேண்டும். ஆபத்து வருவதற்கு முன்பாகவே தற்காப்புக்கான வேலைகளை செய்து முடிக்கவேண்டும். ஆசாவின் யோசனைப்படியே யூதாவின் மனுஷர், யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டுகிறார்கள். அவர்களுக்கு காரியம் வாய்க்கிறது.

யூதாதேசத்திலே, ஆசாவுக்கு விரோதமான யுத்தம் இல்லாதிருக்கிறது. தேசம் அமரிக்கையாயிருக்கிறது. ஆனாலும் ஆசா தன்னுடைய சேனையை பலப்படுத்துகிறான். யூதாதேசத்திற்கு விரோதமாக அந்நிய தேசத்தார் திடீரென்று யுத்தம்பண்ண வந்தால், யூதாதேசத்தைப் பாதுகாக்க, ஆசா தன்னுடைய யுத்தவீரர்களை ஆயத்தமாய் வைத்திருக்கிறான்.

யூதாவிலே பரிசையும் ஈட்டியும் பிடிக்கிற மூன்றுலட்சம்பேரும், பென்யமீனிலே கேடகம் பிடித்து வில்லை நாணேற்றுகிற இரண்டுலட்சத்து எண்பதினாயிரம்பேருமான சேனை ஆசாவுக்கு இருக்கிறது, இவர்களெல்லாரும் பராக்கிரமசாலிகள் *(2நாளா 14:8)*.

தெற்கு யூதாதேசத்திலே, யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் மாத்திரமே இருக்கிறார்கள். இரண்டு கோத்திரங்களிலும் ஒரளவு சமஎண்ணிக்கையில் யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள்.

யூதாதேசத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாரிடமும், வெவ்வேறு விதமான ஆயுதங்கள் இருக்கிறது. யூதாகோத்திரத்தார் பரிசையும் ஈட்டியையும் பிடித்திருக்கிறார்கள். பென்யமீன் கோத்திரத்தாரோ கேடகம் பிடித்து வில்லை நாணேற்றுகிறார்கள். ஒரு கோத்திரத்தார் யூதாதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறார்கள். மற்றொரு கோத்திரத்தாரோ சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். யுத்தத்திலே தற்காப்பும் தேவைப்படுகிறது, சத்துருக்களின் சங்காரமும் தேவைப்படுகிறது.

"சாலொமோன் ராஜா, அடித்த பொன்தகட்டால் இருநூறு பரிசைகளைச் செய்வித்தான்; ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் சென்றது. அடித்த பொன்தகட்டால் முந்நூறு கேடகங்களையும் செய்வித்தான்; ஒவ்வொரு கேடகத்திற்கு மூன்று இராத்தல் பொன் சென்றது; அவைகளை ராஜா லீபனோன் வனம் என்னும் மாளிகையிலே வைத்தான்" (1இராஜா 10:16,17).

எத்தியோப்பியர் 2நாளா 14:9-15

2நாளா 14:9. அவர்களுக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேரா பத்துலட்சம்பேர்கள் சேர்ந்த சேனையோடும் முந்நூறு இரதங்களோடும் புறப்பட்டு மரேசாமட்டும் வந்தான்.

2நாளா 14:10. அப்பொழுது ஆசா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான்; மரேசாவுக்கு அடுத்த செப்பத்தா என்னும் பள்ளத்தாக்கில் யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள்.

2நாளா 14:11. ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்.

2நாளா 14:12. அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள்.

2நாளா 14:13. அவர்களை ஆசாவும் அவனோடிருந்த ஜனங்களும் கேரார்மட்டும் துரத்தினார்கள்; எத்தியோப்பியர் திரும்ப பலங்கொள்ளாதபடிக்கு முறிந்து விழுந்தார்கள்; கர்த்தருக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக நொறுங்கிப்போனார்கள்; அவர்கள் மிகுதியாகக் கொள்ளை அடித்து,

2நாளா 14:14. கேராரின் சுற்றுப்பட்டணங்களையெல்லாம் முறிய அடித்தார்கள்; கர்த்தரால் அவர்களுக்குப் பயங்கரம் உண்டாயிற்று; அந்தப் பட்டணங்களையெல்லாம் கொள்ளையிட்டார்கள், அவைகளில் கொள்ளை மிகுதியாய் அகப்பட்டது.

2நாளா 14:15. மிருகஜீவன்கள் இருந்த கொட்டாரங்களையும் அவர்கள் இடித்துப்போட்டு, திரளான ஆடுகளையும் ஒட்டகங்களையும் சாய்த்துக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

ஆசாவின் நாட்களிலே யூதாதேசம் பத்து வருஷமட்டும் அமரிக்கையாயிருக்கிறது. அதன் பின்பு யூதாதேசத்தின் அமைதியைக் கெடுப்பதற்கு, எத்தியோப்பியர் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள்.

யூதாதேசத்தாருக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேரா பத்துலட்சம்பேர்கள் சேர்ந்த சேனையோடும் முந்நூறு இரதங்களோடும் புறப்பட்டு மரேசாமட்டும் வருகிறான் (2நாளா 14:9).

ஆசாவும் தன்னுடைய தேசத்திலே ஒரு சேனையை ஆயத்தமாய் வைத்திருக்கிறான். எத்தியோப்பியனாகிய சேரா தனக்கு விரோதமாக வந்தபோது, ஆசாவும் அவனுக்கு எதிராகப் புறப்படுகிறான்; மரேசாவுக்கு அடுத்த செப்பத்தா என்னும் பள்ளத்தாக்கில் அவர்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள் (2நாளா 14:10).

யூதாதேசத்திற்கு எத்தியோப்பியர் மூலமாக ஆபத்து வந்திருக்கிறது. எத்தியோப்பியரின் சேனையிலே பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் பாதி பேர் கூட யூதாதேசத்திலே இல்லை.

யூதாதேசம் அமரிக்கையாயிருந்தபோது ஆசா கர்த்தரைத் தேடினான். அவன் கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்தான். அமைதியான காலத்திலே கர்த்தரைத் தேடின ஆசா, இப்போது யுத்தக்காலத்திலும் கர்த்தரைத் தேடுகிறான். கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணுவதற்கு, ஆசாவின் மனதிலே தைரியமுண்டாயிற்று.

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: "கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும்" *(2நாளா 14:11)* என்று ஜெபம்பண்ணுகிறான்.

யூதா தேசத்திற்கு உதவி புரியுமாறு ஆசா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். எத்தியோப்பியரின் சேனை யூதாவின் சேனையைவிட இரண்டு மடங்கு அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கர்த்தர் எத்தியோப்பியரை அடித்தார். ஆகையினால் ஆசாவும் அவனோடிருந்த ஜனங்களும் எத்தியோப்பியரைக் கேரார்மட்டும் துரத்தினார்கள். *(2நாளா 14:11-15)* இதன் பின்பு, எத்தியோப்பியர் 300 வருஷங்களாக யூதாவின்மீது யுத்தம் பண்ண வரவில்லை.

ஆசாவின் ஜெபம் மிகவும் சுருக்கமானது. ஆசா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, பயபக்தியோடு, "கர்த்தாவே" என்றும், "எங்கள் தேவனாகிய கர்த்தாவே" என்றும் சொல்லுகிறான். அவன் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது, "கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்" என்றும் பயபக்தியோடு ஜெபம்பண்ணுகிறான்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரே சர்வஆளுகையும், சர்வஅதிகாரமும் உடையவர். கர்த்தரால் கூடாதகாரியம் ஒன்றுமேயில்லை. அநேகம் பேரைக்கொண்டாகிலும், அல்லது கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும் கர்த்தரால் இரட்சிக்க முடியும். ஆசா கர்த்தரை நோக்கி, "கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்" *(2நாளா 14:11)* என்று சொல்லுகிறான்.

கர்த்தர் தம்முடைய பெலத்தினால் கிரியை செய்கிறவர். ஆசாவும், யூதாவின் சேனையும் கர்த்தருடைய கருவிகள். தம்முடைய கருவிகளுக்கு எவ்வளவு பலம் இருக்கிறது என்பதன் அடிப்படையில், கர்த்தர் ஒருபோதும் கிரியை செய்யமாட்டார். அவர் தம்முடைய பலத்தினாலும், தம்முடைய பராக்கிரமத்தினாலும் கிரியை செய்வார்.

ஆசாவின் பக்கத்திலே யூதாவின் மனுஷரும், பென்யமீன் மனுஷரும் இருக்கிறார்கள். தன்னிடத்தில் பெரிய சேனை இருந்தாலும், ஆசா தன்னுடைய சேனையை நம்பவில்லை. கர்த்தருடைய உதவியில்லாமல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பது ஆசாவுக்கு நன்றாய்த் தெரியும். கர்த்தர் நம்மைப் பலப்படுத்தவில்லையென்றால், நம்மிடத்தில் ஒரு பெலனும் இருக்காது. நாம் பலவீனராயிருப்போம்.

கர்த்தர் தாவீதின் வீட்டாரோடு மாறாத உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். ஆசா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய உடன்படிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து, "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்கு துணைநில்லும்" என்று ஜெபம்பண்ணுகிறான். கர்த்தர் தாவீதின் குடும்பத்தாரோடு மாறாத உடன்படிக்கை பண்ணியிருப்பதினால், அவர் ஆசாவின் தேவனாயிருக்கிறார்.

ஆசா கர்த்தரை நம்புகிறான். யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம் வரும்போது, யூதாதேசம் பாதுகாப்பாயிருக்க வேண்டும். அதற்காக ஆசா யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டியிருக்கிறான். அவனுடைய சேனையிலே யூதாகோத்திரத்தார் மூன்று லட்சம் பேரும், பென்யமீன் கோத்திரத்தார் இரண்டு லட்சத்து எண்பதினாயிரம் பேரும் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். ஆனாலும் ஆசா தன்னுடைய அரணான பட்டணங்களையும், பராக்கிரமசாலிகளையும் நம்பாமல், கர்த்தரையே நம்புகிறான்.

ஆசா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்" (2நாளா 14:11) என்று சொல்லுகிறான். ஆசா கர்த்தருடைய மகிமையையும், அவருடைய பெலத்தையும், வல்லமையையும், பராக்கிரமத்தையும் நம்பி எத்தியோப்பியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறான்.

ஆசா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும்" (2நாளா 14:11) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறான். "மனுஷன்" என்னும் வார்த்தைக்கு "செத்துப்போகிற மனுஷர்" என்று பொருள். கர்த்தரோ நித்தியமானவர். எத்தியோப்பியர் எல்லோருமே செத்துப்போகிறவர்கள். நித்தியமான தேவனுக்கு முன்பாக, செத்துப்போகிற எத்தியோப்பியரால் எதிர்த்து நிற்கமுடியாது. அவர்களால் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது.

கர்த்தர் ஆசாவின் ஜெபத்தைக் கேட்டு, அவனுக்கு உதவி செய்கிறார். அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போகிறார்கள் (2நாளா 14:12).

எத்தியோப்பியர் மத்தியிலே கர்த்தரால் உண்டான பயங்கரமுண்டாயிற்று. அவர்களுக்கு எங்கே ஓடிப்போகிறோம் என்பதும் தெரியவில்லை. ஏன் ஓடிப்போகிறோம் என்பதும் தெரியவில்லை. கர்த்தர் எத்தியோப்பியரை முறியடிக்கிறார். அவர்கள் ஓடிப்போகிறார்கள்.

அவர்களை ஆசாவும் அவனோடிருந்த ஜனங்களும் கேரார்மட்டும் துரத்துகிறார்கள்; எத்தியோப்பியர் திரும்ப பலங்கொள்ளாதபடிக்கு முறிந்து விழுகிறார்கள்; எத்தியோப்பியர் கர்த்தருக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக நொறுங்கிப்போகிறார்கள் (2நாளா 14:13).

ஆசாவும் அவனோடிருந்தவர்களும் மிகுதியாகக் கொள்ளை அடித்து, கேராரின் சுற்றுப்பட்டணங்களையெல்லாம் முறிய அடிக்கிறார்கள்; கர்த்தரால் அவர்களுக்குப் பயங்கரம் உண்டாயிற்று; அந்தப் பட்டணங்களையெல்லாம் கொள்ளையிடுகிறார்கள், அவைகளில் கொள்ளை மிகுதியாய் அகப்படுகிறது (2நாளா 14:14).

யூதாவின் மனுஷர் மிருகஜீவன்கள் இருந்த கொட்டாரங்களையும் இடித்துப்போட்டு, திரளான ஆடுகளையும் ஒட்டகங்களையும் சாய்த்துக்கொண்டு எருசலேமுக்குத் திரும்புகிறார்கள் (2நாளா 14:15).

15 அதிகாரம்

எத்தியோப்பியருக்கு விரோதமான யுத்தத்திலே ஆசாவுக்கு ஜெயமுண்டாயிற்று. ஆசாவும், யூதாவின் சேனையும் எத்தியோப்பியரின் திரளான ஆடுகளையும் ஒட்டகங்களையும் சாய்த்துக்கொண்டு எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் எத்தியோப்பியரின் பட்டணங்களையெல்லாம் கொள்ளையிட்டு, மிகுதியான கொள்ளைப்பொருட்களையும் கொண்டு வருகிறார்கள்.

ஆசாவினுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பகாலத்திலே, அவன் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஆரம்பித்தான். ஆசாவின் ஊழியம் முடிவுபெறவில்லை. எத்தியோப்பியர் யூதாதேசத்திற்கு விரோதமாக வந்தார்கள். ஆசா அவர்களை முறியடித்தான்.

யூதாதேசத்திலே விக்கிரகங்களும், விக்கிரகாராதனைகளும் இன்னும் காணப்படுகிறது. இவை எத்தியோப்பியர் என்னும் சத்துருக்களைவிட மிகவும் ஆபத்தானது. ஆசா எத்தியோப்பியரை முறியடித்தான். ஆனால் இன்னும் விக்கிரகங்களையும் விக்கிரகாராதனைகளையும் யூதாதேசத்திலிருந்து முற்றிலுமாய் நீக்கிப்போடவில்லை.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய அசரியாவை ஆசாவினிடத்திற்கு அனுப்புகிறார். யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை தொடர்ந்து செய்யுமாறு அசரியா ஆசாவை உற்சாகப்படுத்துகிறான் *(2நாளா 15:1-7)*.

யூதாதேசத்தில் மறுபடியும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுகிறது. யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்கள் அகற்றப்படுகிறது *(2நாளா 15:8)*. ஆசா யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப் பொருட்களை கர்த்தருக்கு பரிசுத்தமாக நேர்ந்துகொள்கிறான் *(2நாளா 15:9-11)*.

ஆசா கர்த்தரோடு உடன்படிக்கைப் பண்ணுகிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கு தண்டனை கொடுக்கிறான் *(2நாளா 15:12-15)*. ராஜாவின் அரண்மனையிலும் சுத்திகரிப்பு நடைபெறுகிறது *(2நாளா 15:16)*. பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொள்ளப்பட்ட பொருட்களை ஆசா கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வந்து வைக்கிறான் *(2நாளா 15:18)*.

அசரியா தீர்க்கதரிசி
2நாளா 15:1-7

2நாளா 15:1. அப்பொழுது தேவனுடைய ஆவி ஓதேதின் குமாரனாகிய அசரியாவின்மேல் இறங்கினதினால்,

2நாளா 15:2. அவன் வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டுபோய், அவனை நோக்கி: ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.

2நாளா 15:3. இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை.

2நாளா 15:4. தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார்.

2நாளா 15:5. அக்காலங்களிலே வெளியே போகிறவர்களுக்கும் உள்ளே வருகிறவர்களுக்கும் சமாதானம் இல்லை; தேசங்களின் குடிகள் எல்லாருக்குள்ளும் மகா அமளி உண்டாயிருந்து,

2நாளா 15:6. ஜாதியை ஜாதியும், பட்டணத்தைப் பட்டணமும் நொறுக்கினது; தேவன் அவர்களைச் சகலவித இடுக்கத்தினாலும் கலங்கப்பண்ணினார்.

2நாளா 15:7. நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள்; உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றான்.

ஆசாவும் அவனுடைய சேனையிலுள்ளவர்களும் எத்தியோப்பியரை முறியடிக்கிறார்கள். அவர்கள் எத்தியோப்பியரின் பட்டணங்களைக் கொள்ளையிட்டு, கொள்ளைப் பொருட்களோடு எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். அப்பொழுது தீர்க்கதரிசியாகிய அசரியா அவர்களை சந்திக்கிறான்.

அசரியா ஓதேதின் குமாரன். கர்த்தருடைய ஆவியானவர் அசரியாவின் மேல் இறங்கியிருக்கிறார். அசரியா வெளியே ஆசாவுக்கு எதிர்கொண்டு போகிறான். ஆசா யுத்தத்தில் ஜெயம் பெற்று, கொள்ளைப் பொருட்களோடு திரும்பி வருகிறான். அசரியா ஆசாவை பாராட்டுவதற்காகவோ அல்லது சந்தோஷத்திற்காகவோ, அவனுக்கு எதிர்கொண்டு போகவில்லை.

ஆசாவுக்கு எத்தியோப்பியர்மீது ஜெயம் கிடைத்தாலும், கர்த்தரே யூதாவின் மனுஷருக்கு ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் எத்தியோப்பியரை முறியடித்தார். யூதாவின் மனுஷர் அவர்களைக் கொள்ளையிட்டார்கள். ஆசாவுக்கு கர்த்தருடைய உதவி கிடைக்கவில்லையென்றால், அவனால் எத்தியோப்பியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி ஜெயித்திருக்கமுடியாது.

ஆசா கர்த்தருக்கு நன்றியுள்ளவனாயிருக்கவேண்டும். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை ஆசா நேர்த்தியாய்ச் செய்யவேண்டும். ஆசாவைப்போலவே, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோரும், கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும்.

ஆசாவும், யூதாவின் சேனையிலுள்ளவர்களும் எருசலேமுக்கு திரும்பி வரும்போது, தேவனுடைய ஆவியானவர் அசரியாவின்மேல் இறங்குகிறார். ஆசாவுக்கு ஆலோசனை சொல்லுவதற்காகவும், ஆசா செய்யவேண்டிய ஊழியங்களை அவனுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவும், அசரியா ஆசாவுக்கு எதிர்கொண்டு வருகிறான்.

ஆசா யூதாதேசத்திற்கு ராஜா. அசரியாவோ கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தருடைய வார்த்தை அசரியாவுக்கு உண்டாயிற்று. அசரியா கர்த்தருடைய வார்த்தையை தயங்காமல், பயப்படாமல், தைரியமாய்ச் சொல்லவேண்டும். இதற்காகவே தேவனுடைய ஆவியானவர் அசரியாவின்மேல் இறங்கியிருக்கிறார். அவர் அசரியாவைப் பெலப்படுத்துகிறார்.

அசரியா ஆசாவை நோக்கி, "ஆசாவே, யூதா பென்யமீன் கோத்திரங்களின் சகல மனுஷரே, கேளுங்கள்; நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்" *(2நாளா 15:2)* என்று சொல்லுகிறான்.

யூதா தேசத்தாருக்குக் கர்த்தர் எத்தியோப்பியர் மீது வெற்றியைக் கொடுத்திருக்கிறார். அந்த வேளையில் அசரியா யூதா தேசத்தாருக்குக் கர்த்தருடைய செய்தியைக் கூறுகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் கர்த்தர் யூதாவுக்கு இந்தச் செய்தியைக் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. கர்த்தரைத் தொடர்ந்து நம்பினால் அவர்களுக்கு ஜெயம் கிடைக்கும். "நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்". எத்தியோப்பியரோடு நடைபெற்ற யுத்தத்தில் ஆசா கர்த்தரைத் தேடினான். அவனுக்கு வெற்றி கிடைத்தது. *(2நாளா 15:11-15)*

2. யூதா தேசத்தார் கர்த்தரைத் தேடாவிட்டால் அவர் அவர்களைக் கைவிட்டுவிடுவார். "அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்". இதன் பின்பு நடைபெற்ற யுத்தத்தில் ஆசா கர்த்தரை நம்பவில்லை. இதனால் அவர்களுக்குத் தோல்வி உண்டாயிற்று (2நாளா 16:1-14).

மாறாத நித்திய சத்தியங்கள்

1. நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார்.

2. நீங்கள் அவரைத் தேடினால், அவர் உங்களுக்கு வெளிப்படுவார்.

3. அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார்.

இந்த மூன்று சத்தியங்களும் தனி நபருக்கும், முழு தேசத்திற்கும் பொருந்தும். யூதருக்கும், புறஜாதியாருக்கும் பொருந்தும். நியாயப் பிரமாணத்தின் கீழுள்ள ஜனங்களுக்கும், கிருபையின்கீழுள்ள ஜனங்களுக்கும் பொருந்தும். கர்த்தரைத் தேடுகிறவர்கள் கண்டடைவார்கள்.

"இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை". மேலும் இஸ்ரவேலிலே உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை. இந்த "அநேக நாள்" என்பது ரெகொபெயாமின் 14 வருஷ ஆட்சிக் காலத்தையும், (2நாளா 11:17 ; 2நாளா 12:1), அபியாவின் 3 வருஷ ஆட்சிக்காலத்தையும் குறிக்கும். (1இராஜா 15:1-4) இவர்களுக்கு முன்பாக சாலொமோனும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனான். (1இராஜா 11:1-9).

ராஜாக்களின் காலத்திற்கு முன்பாக நியாயாதிபதிகளின் காலத்திலும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள். கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரைத் தேடியபோது அவர் அவர்களுக்கு ஓர் இரட்சகரை அனுப்பினார். (2நாளா 15:3-4). ஆசா ராஜாவானபோதும் இந்தச் சத்தியம் நிறைவேறிற்று. (2நாளா 14:11-15). இஸ்ரவேல் ஜனங்கள் பல முறை தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார். (2நாளா 15:4-6)

"உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள்" என்பது ஆசாவுக்கு ஓர் உற்சாகமான செய்தியாகும். தேவனுடைய ஆசீர்வாதத்தை எப்படிப் பெற்றுக் கொள்வது என்று ஆசாவுக்கு விவரமாகக் கூறப்படுகிறது. கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து ஒருவர் அவருக்குப் பிரியமான கிரியையை விசுவாசத்தோடு செய்யும்போது கர்த்தர் அவரை ஆசீர்வதிப்பார்.

யூதா தேசத்தாருக்கு எத்தியோப்பியர்மீது ஜெயம் கிடைத்திருக்கிறது. இது அவர்களுடைய சொந்தபலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ கிடைத்த ஜெயமல்ல. யூதர்களுக்கு இப்போது தங்கள் சத்துருக்கள்மீது ஜெயம் கிடைத்திருப்பதினால், அவர்களுக்கு சத்துருக்கள்மீது எப்போதுமே ஜெயம் கிடைக்கும் என்னும் நிச்சயமில்லை. இந்த ஜெயம் தற்காலிகமானது. இது நித்தியமானதல்ல.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் யூதாதேசத்தாருக்கு எத்தியோப்பியர்மீது ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். யூதாவின் மனுஷர் கர்த்தரோடு இருந்தால் கர்த்தரும் அவர்களோடு இருப்பார். அவர்கள் கர்த்தரை விட்டுவிட்டால், கர்த்தரும் அவர்களை விட்டுவிடுவார். கர்த்தர் யூதாமனுஷரோடு கூடயில்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்புமில்லை பலமுமில்லை. யுத்தத்திலே அவர்களுக்கு ஜெயமுமில்லை.

யூதாவின் மனுஷர் கர்த்தரைத் தேடினால், அவர் அவர்களுக்கு வெளிப்படுவார். கர்த்தரைத் தேடுகிறவர்கள் மாத்திரமே அவரைக் கண்டுபிடிப்பார்கள். கர்த்தரைத் தேடாதவர்களால் அவரைக் கண்டுபிடிக்க முடியாது.

யூதாவின் மனுஷர் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும், அவருடைய பிரமாணங்களையும் விட்டுவிட்டால், கர்த்தரும் அவர்களை விட்டுவிடுவார். நாம் கர்த்தரை விட்டு விலகிப்போனால், கர்த்தரும் நம்மை விட்டு விலகிப்போவார் என்பது மாறாத நித்திய பிரமாணம்.

கர்த்தரையும் அவருடைய பிரமாணங்களையும் விட்டுவிட்டால் என்னென்ன துன்பங்களெல்லாம் வரும் என்பதை அசரியா தீர்க்கதரிசி தெளிவாகச் சொல்லுகிறான். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்னும் ஆறுதலான செய்தியையும் அசரியா சொல்லுகிறான்.

அசரியா ஆசாவை நோக்கி, "இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை. தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார்" *(2நாளா 15:3,4)* என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விட்டார். அக்காலங்களிலே வெளியே போகிறவர்களுக்கும் உள்ளே வருகிறவர்களுக்கும் சமாதானம் இல்லை; தேசங்களின் குடிகள் எல்லாருக்குள்ளும் மகா அமளி உண்டாயிருந்தது. ஜாதியை ஜாதியும், பட்டணத்தைப் பட்டணமும் நொறுக்கினது; தேவன் அவர்களைச் சகலவித இடுக்கத்தினாலும் கலங்கப்பண்ணினார் *(2நாளா 15:5,6)*.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகிப்போனபோது, அவர்களுக்கு உள்நாட்டிலும் குழப்பமுண்டாயிற்று. அந்நிய தேசங்கள் மூலமாகவும் ஆபத்துக்கள் உண்டாயிற்று. அவர்கள் மிகுந்த வேதனைகளையும் நெருக்கங்களையும் அனுபவித்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பி, அவரைத் தேடினபோது, அவர் அவர்களுக்கு வெளிப்பட்டார் *(2நாளா 15:4)*.

அசரியா தீர்க்கதரிசி இங்கு சொல்லுகிற சம்பவம், இஸ்ரவேலின் சரித்திரத்திலே எந்தக்காலத்தில் நடைபெற்றது என்பதைக் குறித்து வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

அசரியா இங்கு சொல்லுகிற சம்பவம், நியாயாதிபதிகளின் காலத்திலே நடைபெற்றதாக வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறர்கள். இஸ்ரவேலிரின் சரித்திரத்திலே இது ஒரு சோதனைக்காலம். இது அவர்களுக்கு வேதனை மிகுந்தகாலம். மோவாபியர் மீதியானியர், அம்மோன் புத்திரர் போன்ற அந்நிய தேசத்தார், இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக அவ்வப்போது வந்து, அவர்களை ஒடுக்கினார்கள். இஸ்ரவேல் புத்திரரை நெருக்கினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரும் தங்கள் நெருக்கத்திலே, தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பினார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்புவதினாலும், ஜெபத்தினாலும், தங்கள் இருதயங்களை புதுப்பிப்பதினாலும் கர்த்தரைத் தேடினார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடினபோது, கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டார். அவர்களை மீட்பதற்கு இரட்சகரை எழுப்பினார்.

அசரியா தீர்க்கதரிசி இங்கு சொல்லுகிற சம்பவம், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருடைய நிலமையைக் குறிக்கிறது என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். இந்த சம்பவம் ஆசாவின் நாட்களில் நடைபெற்றது என்பது இவர்களுடைய விளக்கம். இக்காலத்தில் வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே சமாதானமில்லை.

இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் இடையே அடிக்கடி யுத்தங்கள் நடைபெற்றது. இதன்பின்பு பாஷா என்பவன் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறான். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். அவர்கள் தங்கள் பாவக்கிரியைகளினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். ஆகையினால் தேவன் அவர்களை சகலவித இடுக்கத்தினாலும் கலங்கப்பண்ணினார்.

அசரியா இங்கு தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிற சம்பவம், இனிமேல் வரப்போகிற காலத்திலும் நடைபெறும் என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். அக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்திலே மெய்யான தேவன் இருக்கமாட்டார். அங்கே உபதேசிக்கிற ஆசாரியரும் இருக்கமாட்டார்கள். இஸ்ரவேல் தேசத்திலே வேதமும் இருக்காது.

இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைத்தேடி, அவரிடத்திற்கு திரும்பி வரும் வரையிலும், அவர்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும்.

"இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள்" (ஓசி 3:4).

அசரியா தீர்க்கதரிசி ஆசாவுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்ன பின்பு, ஆசாவுக்கும், யூதாவின் மனுஷருக்கும் ஆறுதலான வார்த்தைகளையும் சொல்லுகிறான்.

"நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள்; உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு" (2நாளா 15:7) என்று அசரியா சொல்லுகிறான். ஆசாவின் காலத்திலே, யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆசா இந்த ஊழியத்தை தீவிரமாயும் நேர்த்தியாயும் செய்யவேண்டும். அவன் தன்னுடைய கைகளை நெகிழவிடாமல் திடப்படுத்தவேண்டும். ஆசாவின் கிரியைகளுக்கு நிச்சயமாகவே பலன் உண்டு என்று அசரியா சொல்லுகிறான்.

யூதாவில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி
2நாளா 15:8-19

2நாளா 15:8. ஆசா இந்த வார்த்தைகளையும் தீர்க்கதரிசியாகிய ஓதேதின் தீர்க்கதரிசனத்தையும் கேட்டபோது, அவன் திடன்கொண்டு, அருவருப்புகளை யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும், எப்பிராயீமின் மலைத்தேசத்தில் தான் பிடித்த பட்டணங்களிலுமிருந்து அகற்றி, கர்த்தருடைய மண்டபத்தின் முன்னிருக்கிற கர்த்தருடைய பலி பீடத்தைப் புதுப்பித்து,

2நாளா 15:9. அவன் யூதா பென்யமீன் ஜனங்களையும், அவர்களோடேகூட எப்பிராயீமிலும் மனாசேயிலும் சிமியோனிலும் இருந்து வந்து அவர்களோடு சஞ்சரித்தவர்களையும் கூட்டினான்; அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேர்ந்தார்கள்.

2நாளா 15:10. ஆசா அரசாண்ட பதினைந்தாம் வருஷம் மூன்றாம் மாதத்திலே அவர்கள் எருசலேமிலே கூடி,

2நாளா 15:11. தாங்கள் கொள்ளையிட்டு ஓட்டிக்கொண்டு வந்தவைகளில் அந்நாளிலே எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கர்த்தருக்குப் பலியிட்டு,

2நாளா 15:12. தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம் என்றும்;

2நாளா 15:13. சிறியோர் பெரியோர் ஸ்திரீ புருஷர் எல்லாரிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் ஒரு உடன்படிக்கை செய்து,

2நாளா 15:14. மகா சத்தத்தோடும் கெம்பீரத்தோடும் பூரிகைகளோடும் எக்காளங்களோடும் கர்த்தருக்கு முன்பாக ஆணையிட்டார்கள்.

2நாளா 15:15. இந்த ஆணைக்காக யூதா ஜனங்கள் யாவரும் சந்தோஷப்பட்டார்கள்; தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு, தங்கள் முழுமனதோடும் அவரைத் தேடினார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணினார்.

2நாளா 15:16. தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின ராஜாவாகிய ஆசாவின் தாயான மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு ஆசா விலக்கிப்போட்டு, அவளுடைய விக்கிரகத்தையும் நிர்மூலமாக்கித் தகர்த்து, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான்.

2நாளா 15:17. மேடைகளோ இஸ்ரவேலிலிருந்து தகர்க்கப்படவில்லை; ஆனாலும், ஆசாவின் இருதயம் அவன் நாட்களிலெல்லாம் உத்தமமாயிருந்தது.

2நாளா 15:18. தன் தகப்பனும் தானும் பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் தேவனுடைய ஆலயத்திலே கொண்டுவந்தான்.

2நாளா 15:19. ஆசா அரசாண்ட முப்பத்தைந்தாம் வருஷமட்டும் யுத்தம் இல்லாதிருந்தது.

அசீரியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் ஆசாவின் இருதயத்திலே பதிகிறது. ஆசா இந்த வார்த்தைகளையும் தீர்க்கதரிசியாகிய ஒதேதின் தீர்க்கதரிசனத்தையும் கேட்டபோது, அவன் திடன்கொள்கிறான் (2நாளா 15:8).

ஆசா தீர்க்கதரிசியின் செய்தியைப் புரிந்து கொள்கிறான். யூதா தேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாவதற்கு ஒவ்வொரு காரியமாகச் செய்கிறான். அருவருப்புகளை யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும் அகற்றுகிறான். விக்கிராராதனையில் ஈடுபட்டிருந்த தன் தாயாராகிய மாகாளையும் ராஜாத்தியாய் இராதபடிக்கு விலக்கிப்போடுகிறான். (2நாளா 15:16). ஆசா கர்த்தருக்கு வைராக்கியமாக இருந்தபடியினால் ஆவிக்குரிய மறுமலர்ச்சியின் காரியங்களை எந்தத் தயக்கமும் இல்லாமல் உற்சாகத்தோடே செய்கிறான்.

ஆசா யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்போது, கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் அவனுக்கு கிடைக்கிறது. ஆசாவின் கிரியைகளுக்கு பலன் உண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பிரசன்னம் ஆசாவோடு கூடயிருக்கிறது. ஆசா திடன்கொண்டு யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றுகிறான்.

ஆசா யூதா பென்யமீன் தேசம் அனைத்திலும், எப்பிராயீமின் மலைத்தேசத்தில் தான் பிடித்த பட்டணங்களிலுமிருந்து அருவருப்புகளை அகற்றுகிறான் (2நாளா 15:8).

ஆசா விக்கிரகங்களை அகற்றிய பின்பு, கர்த்தருடைய மண்டபத்தின் முன்னிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தைப் புதுப்பிக்கிறான் (2நாளா 15:8).

ஆசா இஸ்ரவேல் புத்திரரின் சபையைக் கூட்டுகிறான். இதற்கு முன்பு ஆசாவோடு யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் மாத்திரமே இருந்தார்கள். இப்போது அவர்களோடேகூட எப்பிராயீமிலும் மனாசேயிலும் சிமியோனிலும் இருந்து வந்து அவர்களோடு சஞ்சரித்தவர்களையும் ஆசா கூட்டுகிறான் (2நாளா 15:9).

வடக்கு தேசத்திலிருந்த பத்துக் கோத்திரத்து ஜனங்களில் திரளானவர்கள் யூதாவோடு சேர்ந்து கொள்கிறார்கள். கர்த்தர் ஆசாவோடு இருக்கிறதைக் கண்டு இஸ்ரவேல் ஜனத்தார் அவனோடு சேர்ந்து கொள்ள வருகிறார்கள். பத்துக் கோத்திரத்தின் வடக்கு ராஜ்யம் அநேகப் பாவங்களைச் செய்து, கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போயிற்று. கர்த்தர் அவர்களை நியாயத்தீர்த்து, வடக்கு ராஜ்யத்தை அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். (2இராஜா 17) இதன் பின்பு, யூதா தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரின் எல்லாக் கோத்திரத்தாரிலும் அநேகர் இருக்கிறார்கள்.

ஆசாவினுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு, இஸ்ரவேலிலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் சேருகிறார்கள் (2நாளா 15:9). இதுவரையிலும், ஆசாவோடுகூட இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே இருந்தார்கள். இப்போது இஸ்ரவேலிலே மீதமுள்ள பத்து கோத்திரத்தாரில் திரளான ஜனங்கள் ஆசாவின் பட்சமாய்ச் சேருகிறார்கள். அவர்கள் தன்னுடைய பட்சத்தில் சேருவது ஆசாவுக்கு உற்சாகமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தன்னுடைய பட்சத்தில் சேருவதற்கான காரணத்தை ஆசா ஆராய்ந்து பார்க்கிறான். கர்த்தர் தன்னோடிருக்கிறதை அவர்கள் கண்டு, அவர்கள் தன் பட்சத்தில் சேருவதை ஆசா அறிந்துகொள்கிறான். இதனால் ஆசாவுக்கு மிகுந்த சந்தோஷமும் உற்சாகமும் உண்டாயிற்று.

ஆசா இஸ்ரவேலின் சபையாரைக் கூட்டுகிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கும் ஆசா அழைப்பு கொடுக்கிறான். ஆசா தங்களை அழைப்பது வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. அவர்களும் மிகுந்த உற்சாகத்தோடும், சந்தோஷத்தோடும் ஆசாவின் பட்சத்தில் வந்து சேருகிறார்கள்.

ஆசா அரசாண்ட பதினைந்தாம் வருஷம் மூன்றாம் மாதத்திலே இஸ்ரவேல் சபையார் எருசலேமிலே கூடுகிறார்கள் (2நாளா 15:10). இஸ்ரவேல் புத்திரர் மூன்றாம் மாதத்திலே பெந்தெகொஸ்தே பண்டிகையை ஆசரிப்பது வழக்கம். ஆசா ஒருவேளை இஸ்ரவேல் சபையார் எல்லோரையும், பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது கூட்டிச்சேர்த்திருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஆசாவும் இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். யூதாவின் மனுஷர் எத்தியோப்பியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினபோது, அவர்கள் எத்தியோப்பியரை முறியடித்து, அவர்களுடைய பட்டணங்களையெல்லாம் கொள்ளையிட்டார்கள். எத்தியோப்பியருடைய திரளான ஆடுகளையும் ஒட்டகங்களையும் சாய்த்துக்கொண்டு எருசலேமுக்கு திரும்பி வந்தார்கள். யுத்தத்திலே தங்களுக்கு கிடைத்த கொள்ளைப் பொருட்களில், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் கொள்ளையிட்டு ஓட்டிக்கொண்டு வந்தவைகளில் அந்நாளிலே எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கர்த்தருக்குப் பலியிடுகிறார்கள் (2நாளா 15:11).

எண் 31:25-54 ஆகிய வசனங்களின் பிரகாரம் யுத்தத்தில் கொள்ளையிட்டு ஓட்டிக் கொண்டு வந்த ஒவ்வொரு 1000 மிருகஜீவன்களில் 11 மிருகஜீவன்கள் கர்த்தருக்குரியது. ஆசா எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கர்த்தருக்குப் பலியிட்டான். ஆகையினால் அவன் யுத்தத்தில் 63,600 மாடுகளையும், 636,000 ஆடுகளையும் கொள்ளையிட்டு ஓட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டும். கர்த்தருக்குரிய பங்கை ஆசா கர்த்தருக்கு உண்மையோடு செலுத்துகிறான்.

கர்த்தரிடத்திலிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட உதவிகளுக்கும், சிலாக்கியங்களுக்கும் கர்த்தருக்கு நன்றி சொல்லும் வண்ணமாகவும், தாங்கள் கர்த்தருடைய கரத்திலிருந்து இனிமேல் பெற்றுக்கொள்ளப்போகும் நன்மைகளுக்கு அச்சாரமாகவும், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு ஏராளமாய்ப் பலியிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் பலியிட்டதுபோக, ஆசாவும் அவனுடைய தகப்பனும் பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் தேவனுடைய ஆலயத்திலே கொண்டுவருகிறான் (2நாளா 15:18). ஆசா கர்த்தருக்குரியதை கர்த்தருக்குக் கொடுப்பதில் கவனம் செலுத்துகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு உடன்படிக்கைப் பண்ணிக்கொள்கிறார்கள். தாங்கள் இதுவரையிலும் கர்த்தருடைய பிரமாணத்திற்கு மீறி நடந்ததற்காக மனம் வருந்துகிறார்கள். இனிமேல் அப்படிப்பட்ட தப்பிதங்களை செய்யாமல், கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பதாக வாக்குப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம் என்றும், (2நாளா 15:12)

சிறியோர் பெரியோர் ஸ்திரீ புருஷர் எல்லாரிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் (2நாளா 15:13) ஒரு உடன்படிக்கை செய்கிறார்கள்.

நம்முடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது கர்த்தரோடு நாம் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். நாம் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணும்போது, நம்முடைய மனச்சாட்சி, உடன்படிக்கையின் வார்த்தைகளை நமக்கு எப்போதும் நினைவுபடுத்தும்.

நாம் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்போதும், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியப்பொறுப்புக்களில் நாம் அதிக கவனம் செலுத்துவோம். நமக்கு விரோதமாக சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளை மேற்கொள்வதற்கு நமக்கு தைரியமும் பலமும் உண்டாகும். நாம் கர்த்தருக்கு சாட்சியாய் ஜீவிப்பதற்கு, நாம் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கை நமக்கு உதவிசெய்யும்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, ஒருவருடைய கரத்தை ஒருவர் பலப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்களுடைய உடன்படிக்கையில் இரண்டு முக்கியமான ஷரத்துக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன:

1. தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும் தேடுவோம் என்பது உடன்படிக்கையின் முதலாவது ஷரத்து.

2. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்பது உடன்படிக்கையின் இரண்டாவது ஷரத்து.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைக் கருத்தாய்த் தேடவேண்டுமென்றும், அவருடைய பரிசுத்த பிரசன்னத்தைத் தேடவேண்டுமென்றும், அவருடைய கிருபைகளையும், இரக்கங்களையும், உதவிகளையும், ஒத்தாசைகளையும், சிலாக்கியங்களையும், பராமரிப்புக்களையும் தேடவேண்டுமென்றும் இஸ்ரவேல் ஜனத்தார் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

கர்த்தரைக் கருத்தாய்த் தேடுவதே மெய்யான தெய்வபக்தி. கர்த்தர் நம்முடைய ஜீவியத்தையும், நம்முடைய சிந்தனைகளையும், நம்முடைய செய்கைகளையும் ஆளுகை செய்யவேண்டுமென்று நம்மை ஒப்புக்கொடுப்பதே மெய்யான கீழ்ப்படிதல்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் தேடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள். எல்லோருமே கர்த்தரைத் தேடவேண்டும். விரும்பினால் கர்த்தரைத் தேடலாம் என்பதல்ல, எல்லோரும் கர்த்தரைத் தேடவேண்டுமென்று, தங்களுக்குத் தாங்களே கட்டுப்பாடுபண்ணிக்கொள்கிறார்கள்.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடமாட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தேடாமல், விக்கிரகங்களை ஆராதனை செய்கிறவர்களை, அவர்கள் கொலைசெய்து போடுவார்கள். யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றுவதுபோல, விக்கிரகாராதனைக்காரர்களையும் சங்காரம்பண்ணி அகற்றிப்போடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை செய்யும்போது, அவர்கள் மத்தியிலே மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. அவர்கள் மகா சத்தத்தோடும் கெம்பீரத்தோடும் பூரிகைகளோடும் எக்காளங்களோடும் கர்த்தருக்கு முன்பாக ஆணையிடுகிறார்கள்.

இந்த ஆணைக்காக யூதா ஜனங்கள் யாவரும் சந்தோஷப்படுகிறார்கள்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் ஆணையிட்டு, தங்கள் முழுமனதோடும் அவரைத் தேடுகிறார்கள்; கர்த்தர் அவர்களுக்கு வெளிப்பட்டு, சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணுகிறார் (2நாளா 15:14,15).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் நிமித்தமாய் சந்தோஷப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் சந்தோஷத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே இனிமேல் விக்கிரகாராதனை இருக்காது என்றும், கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்கும் என்றும் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்டதன் நிமித்தமாக, அவர்கள் கர்த்தருக்கு சொந்த ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் இனிமேல் கர்த்தருடைய பாதுகாப்பின் கீழும் பராமரிப்பின் கீழும் இருப்பார்கள். அவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையே நெருங்கிய ஐக்கியமுண்டாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு அநுகூலமாயிருக்கும் ஆசீர்வாதங்களை நினைத்துப் பார்த்து சந்தோஷப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு உடன்படிக்கைபண்ணும்போது, ஏனோதானோவென்று உடன்படிக்கை பண்ணி, அவர்கள் கர்த்தரை அசட்டைபண்ணவில்லை. அவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தருடைய சமுகத்திலே ஆணையிடுகிறார்கள். அவர்கள் தங்கள் முழுமனதோடும் கர்த்தரைத் தேடுகிறார்கள். நம்முடைய இருதயத்தில் கர்த்தர் வாசம்பண்ணும்போது, நம்முடைய மனதிலே சந்தோஷம் நிரம்பியிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு உடன்படிக்கை செய்து கொண்டதினிமித்தமாக, கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு வெளிப்படுகிறார். சுற்றுப்புறத்தாரால் யுத்தம் இல்லாதபடிக்கு கர்த்தர் அவர்களை இளைப்பாறப் பண்ணுகிறார் (2நாளா 15:15). இதன் பிரகாரம் ஆசா அரசாண்ட முப்பத்தைந்தாம் வருஷமட்டும் யூதாதேசத்திலே யுத்தமில்லாதிருக்கிறது.

யூதாதேசத்திற்கு விரோதமாக அந்நிய தேசத்தார் யாரும் யுத்தம்பண்ண வரவில்லை. ஆனாலும் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் விரோதமாக ஓயாத யுத்தமுண்டாயிற்று.

"ஆசாவுக்கும் இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கும் அவர்களுடைய நாட்களிலெல்லாம் யுத்தம் நடந்து கொண்டிருந்தது" (1இராஜா 15:16).

ஆசா கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, யூதாதேசம் முழுவதிலும் விக்கிரகங்களை அகற்றிப்போட்டு, தேசத்தை சுத்திகரிக்கிறான். தோப்பிலே அருவருப்பான விக்கிரகங்கள் ஏராளமாயிருக்கிறது. ஆசாவின் தாயான மாகாளே இந்த விக்கிரகங்களை உண்டுபண்ணினவள். ஆசாவோ தன்னுடைய தாயாகிய மாகாளை ராஜாத்தியாயிராதபடிக்கு விலக்கிப்போடுகிறான். ஆசா அவளுடைய விக்கிரகத்தையும் நிர்மூலமாக்கித் தகர்த்து, கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போடுகிறான் (2நாளா 15:16).

மாகாள் என்பவள் ஆசாவின் தாயார் என்றும், அவனுடைய தாயாரின் தாயார் அதாவது பாட்டி என்றும் வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக கருத்து சொல்லுகிறார்கள். மாகாள் ஆசாவின் அரண்மனையிலே இருக்கிறாள். தேசம் சுத்தமாகயிருக்க வேண்டுமென்றால் ராஜாவின் அரண்மனையும் சுத்தமாயிருக்கவேண்டும். ஆசாவோ, விக்கிரகாராதனைக்கு காரணமாகயிருக்கும் மாகாளை ராஜபதவியிலிருந்து தள்ளி வைத்துவிடுகிறான். அவளுடைய விக்கிரகங்களையும் சுட்டெரித்துப் போடுகிறான்.

மாகாள் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆசா கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், கர்த்தரைத் தேடாதவர்கள் கொலைசெய்யப்படவேண்டும். ஆசாவோ மாகாளைக்கொலைசெய்யவில்லை. ஆகையினால் அவள் தன் பாவத்திற்கு மனந்திரும்பி, விக்கிரகங்களை விட்டு விலகி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதனை செய்திருக்கவேண்டும்.

யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி பூரணமாய் நடைபெறவில்லை. ஆசா ஏராளமான மேடைகளை அகற்றினாலும் இன்னும் அகற்றப்படாத மேடைகளும் இருக்கிறது.

"அந்நிய தேவர்களின் பலிபீடங்களையும் மேடைகளையும் அகற்றி, சிலைகளை உடைத்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி......, யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து மேடைகளையும் விக்கிரகங்களையும் அகற்றினான்" *(2நாளா 14:3,5)*. "மேடைகளோ இஸ்ரவேலிலிருந்து தகர்க்கப்படவில்லை" *(2நாளா 15:17)*.

யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களையெல்லாம் அகற்றிப்போட வேண்டும் என்பது ஆசாவின் விருப்பம். ஆசாவின் இருதயம் அவன் நாட்களிலெல்லாம் உத்தமமாயிருக்கிறது. ஆனாலும் அவனால் தன்னுடைய இருதயத்தின் வாஞ்சைகளையெல்லாம் நிறைவேற்ற முடியவில்லை.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் மேடைகள் இன்னும் தகர்க்கப்படாமல் உள்ளன. ஆசாவிற்கு அந்தத் தேசத்தின்மேல் ராஜ்யபாரம் இல்லை. ஆசா தன்னுடைய ராஜ்யபாரத்திற்கு உட்பட்ட யூதாவிலிருந்த மேடைகளை அகற்றிப்போடுகிறான். *(2நாளா 15:8,16; 2நாளா 14:3,5)*.

ஆசாவின் ராஜ்யபாரம் சிறப்பாகயிருந்தாலும், அவனுடைய ராஜாசனத்திலும் ஒரு சில தப்பிதங்கள் ஏற்படுகிறது. அவன் யூதாதேசத்திலே அநேக நல்ல காரியங்களை செய்திருக்கிறான். இலச்சையான புணர்ச்சிக்காரரை தேசத்திலிருந்து அகற்றிப்போடுகிறான். நரகலான விக்கிரகங்களையெல்லாம் யூதாதேசத்திலிருந்து விலக்கிப்போடுகிறான். ஆனாலும் அவன் மேடைகளை தகர்க்கவில்லை *(1இராஜா 15:14)*.

ஆசாவினிடத்தில் நல்ல சுபாவங்கள் ஏராளமாயிருக்கிறது. ஆனாலும் அவன் செய்யவேண்டிய சில காரியங்களை செய்யாமல் விட்டுவிடுகிறான். தன்னுடைய தாயாகிய மாகாளின் விக்கிரகத்தை ஆசா நிர்மூலமாக்கினான். அதை கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்துப்போட்டான். அவள் மேடைகளையும் தோப்புகளையும் உண்டாக்கி, அவற்றிலே அருவருப்பான விக்கிரகங்களை உண்டுபண்ணினாள். ஆசா அவளுடைய விக்கிரகங்களை நிர்மூலம்பண்ணினாலும், அவள் உண்டுபண்ணின மேடைகளை தகர்க்கவில்லை. இதனால் ஆவிக்குரிய மறுமலர்ச்சியில் தடை உண்டாயிற்று. மேடைகள் தகர்க்கப்படாமலிருப்பதினால், அங்கே விக்கிரகாராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டாயிற்று.

ஆசா விக்கிரகங்களின் மேடைகளை தகர்க்காவிட்டாலும், அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். அவனுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கிறது.

ஆசாவைப்போல கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அநேகர் நிறைவுள்ளவர்களாயும், குறைவுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருக்கு நன்றாய் ஊழியம் செய்வார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரோடு செம்மையாயிருக்கும். கர்த்தர் அவர்களையும், அவர்களுடைய ஊழியங்களையும் அங்கீகரிப்பார். ஆனாலும் அவர்கள் ஒரு சில காரியங்களில் குறைவுள்ளவர்களாகயிருப்பார்கள். சில காரியங்களை அவர்களால் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் அதை செய்யமாட்டார்கள்.

நாம் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமாயிருக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். பாவமில்லாத மனுஷன் ஒருவனுமில்லை. பரிபூரணம் என்னும் வார்த்தை பாவமே இல்லாத ஜீவியத்தை குறிக்கவில்லை. நம்முடைய எண்ணத்திலும், கிரியையிலும் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இதுவே கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கும் பரிபூரணம்.

ஆசா தானும் தன் தகப்பனும் நேர்ந்துகொண்ட பொக்கிஷங்களை கர்த்தருடைய ஆலயத்திலே கொண்டு வருகிறான்.

ஆசாவும், அவனுடைய தகப்பனும் பரிசுத்தம்பண்ணும்படி நேர்ந்துகொண்ட வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் தேவனுடைய ஆலயத்திலே கொண்டுவருகிறான். ஆசா அரசாண்ட முப்பத்தைந்தாம் வருஷமட்டும் யுத்தம் இல்லாதிருக்கிறது *(2நாளா 15:18,19)*.

ஆசாவின் முதல் பத்து வருஷ ராஜ்யபாரத்தில் தேசம் யுத்தமில்லாமல் அமைதியாக இருந்தது. *(2நாளா 14:1)* அதன் பின்பு எத்தியோப்பியர் யூதாவிற்கு விரோதமாக வந்தார்கள் *(2நாளா 14:9-15)*. அதன் பின்பு யூதா தேசத்தில் 25 வருஷங்களுக்கு யுத்தம் இல்லாமல் அமைதியாக இருந்தது. *(2நாளா 15:19)*

இதன்பின்பு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகிய பாஷாவோடு யுத்தம் உண்டாயிற்று. *(2நாளா 16:1-6)*. ஆசா கர்த்தரை நம்பாமல் சீரியரை நம்பியதினால் அவனுடைய மீதமுள்ள ஆறு வருஷ ஆட்சிக் காலத்தில் யுத்தங்கள் நேரிடும் என்று முன்னறிவிக்கப்படுகிறது *(2நாளா 16:9)*. இந்த வாக்கியத்தில் "யுத்தமில்லாதிருந்தது" என்பது 2நாளா 14:9-16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் யுத்தங்களைப்போல நடைபெறாதிருந்தது என்று பொருள். ஆனாலும் யூதாவின் எல்லைப் பகுதியில் கலகங்களும், யுத்தங்களும் உண்டாயிற்று. *(1இராஜா 15:16,32)*.

16 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் ஆசாவின் ராஜ்யபார சரித்திரம் நிறைவுபெறுகிறது. ஆசா சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தோடு மதியீனமாய் உடன்படிக்கைபண்ணுகிறான் (2நாளா 16:1-6)

கர்த்தர் ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி மூலமாக ஆசாவைக் கடிந்துகொள்கிறார் (2நாளா 16:7-9). ஆசா அனானியை காவலறையில் வைக்கிறான் (2நாளா 16:10). ஆசாவின் வியாதியும் மரணமும், அடக்க ஆராதனையும் (2நாளா 16:11-14).

ஆசா, பாஷா, பென்னாதாத் 2நாளா 16:1-6

2நாளா 16:1. ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் வந்து, ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்கும் வரத்துமாயிராதபடிக்கு ராமாவைக் கட்டினான்.

2நாளா 16:2. அப்பொழுது ஆசா கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுள்ள வெள்ளியும் பொன்னும் எடுத்து, தமஸ்குவில் வாசம் பண்ணுகிற பென்னாதாத் என்னும் சீரியாவின் ராஜாவினிடத்துக்கு அனுப்பி:

2நாளா 16:3. எனக்கும் உமக்கும், என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, வெள்ளியும் பொன்னும் உமக்கு அனுப்பினேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு நீர் வந்து, அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லி அனுப்பினான்.

2நாளா 16:4. பென்னாதாத் ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பினான்; அவர்கள் ஈயோனையும், தாணையும், ஆபேல்மாயீமையும், நப்தலி பட்டணங்களின் எல்லாப் பண்டகசாலைகளையும் முறிய அடித்தார்கள்.

2நாளா 16:5. இதைப் பாஷா கேட்டபோது, ராமாவைக் கட்டுகிறதை நிறுத்தி, தன் வேலையைவிட்டு ஒழிந்தான்.

2நாளா 16:6. அப்பொழுது ராஜாவாகிய ஆசா யூதா அனைத்தையும் கூட்டிக்கொண்டுபோய், பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவந்து, அவைகளால் கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான்.

இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்கள், 1இராஜா 15:16-23 ஆகிய வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசா தப்பிதமான வழியில் நடக்கிறான். பென்னாதாத் சீரிய தேசத்து ராஜா. ஆசாவோ புறஜாதி ராஜாவாகிய பென்னாதாத்தோடு உடன்படிக்கை பண்ணுகிறான்.

ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் வந்து, ஒருவரும் யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்கும் வரத்துமாயிராதபடிக்கு ராமாவைக் கட்டுகிறான் (2நாளா 16:1).

வடக்கு ராஜ்யம் கர்த்தரைவிட்டு விலகிப் போயிற்று. அங்கு பொன்கன்றுக்குட்டி ஆராதனை நடைபெறுகிறது. அவற்றுக்கு ஆராதனை செய்யுமாறு வடக்கு தேசத்தின் ராஜாக்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பலவந்தம் பண்ணினார்கள். இதனால் பக்தியுள்ள இஸ்ரவேல் புத்திரர் வடக்கு தேசத்தை விட்டுவிட்டு யூதா தேசத்திற்கு வருகிறார்கள். யூதா தேசத்தில் கர்த்தருடைய ஆராதனை நடைபெறுகிறது. (2நாளா 15:9-15).

ஆனால் வடக்கு தேசத்தின் ராஜாக்களோ தங்கள் ஜனங்களை யூதா தேசத்திற்குப் போக விடாமல் தடுக்கிறார்கள். பாஷா தன்னுடைய ஜனங்களை யூதா தேசத்திற்குப் போக விடாமல் தடுப்பதற்கு பல உபாயங்களைப் பண்ணுகிறான். அதில் ஒன்றாக ராமாவைக் கட்டுகிறான்.

ஆசா இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண விரும்புகிறான். ஆனால் ஆசா அவன்மீது நேரடியாய் யுத்தம்பண்ணவில்லை. இஸ்ரவேலின் ராஜாவுக்கும், சீரியாவின் ராஜாவுக்கும் ஏற்கெனவே இராணுவ உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசா இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ணப்போனால், சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவுக்கு ஆதரவாய் வருவான். ஆசா பாஷாவுக்கு விரோதமாய் சதிபண்ணுகிறான். பாஷாவுக்கும் பென்னாதாத்திற்கும் இடையே இருக்கிற உடன்படிக்கையை முறித்துப்போடுவதற்கு திட்டமிடுகிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத் பேராசை பிடித்தவன். அவன் பணத்திற்காக எதையும் செய்வான். ஆசா சீரியாவின் ராஜாவுக்கு பொன்னையும் வெள்ளியையும் கொடுத்து, பாஷாவுக்கும் பென்னாதாத்திற்கும் இடையே இருக்கிற உடன்படிக்கையை முறித்துப்போட திட்டமிடுகிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்திற்கு திரளான பொக்கிஷங்களைக் கொடுத்து, அவனை பாஷாவுக்கு விரோதமாக திருப்பவேண்டும் என்பது ஆசாவின் திட்டம். அதற்காக ஆசா கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுள்ள வெள்ளியும் பொன்னும் எடுத்து, தமஸ்குவில் வாசம் பண்ணுகிற பென்னாதாத் என்னும் சீரியாவின் ராஜாவினிடத்துக்கு அனுப்புகிறான் (2நாளா 16:2).

ஆசா சீரியாவின் ராஜாவுக்கு, தான் அனுப்பின காணிக்கைகளோடு, ஒரு செய்தியையும் சொல்லி அனுப்புகிறான். ஆசா பென்னாதாத்திற்கு சொன்ன செய்தியின் விவரம் வருமாறு:

"எனக்கும் உமக்கும், என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, வெள்ளியும் பொன்னும் உமக்கு அனுப்பினேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு நீர் வந்து, அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும்" (2நாளா 16:3) என்று ஆசா பென்னாதாத்திற்கு சொல்லியனுப்புகிறான்.

பாஷா ராமாவைக் கட்டி, வடக்கு தேசத்து ஜனங்களை யூதா தேசத்திற்குப் போகவிடாதவாறு தடைபண்ணுகிறான். அந்த சமயத்தில் ஆசா கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுள்ள வெள்ளியும் பொன்னும் எடுத்து பென்னாதாத்திற்கு அனுப்புகிறான். பாஷாவிற்கு விரோதமாக யுத்தம் பண்ணுமாறு இந்தப் பொக்கிஷங்களை ஆசா பென்னாதாத்திற்குக் கொடுக்கிறான். (2நாளா 16:2-3, 1இராஜா 15:18-22)

ஆசா கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும், ராஜாவின் அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்ரிமோனின் குமாரன் பெனாதாத் என்னும் சீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தனுப்புகிறான் (1இராஜா 15:18).

சீரியாவின் ராஜா, இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான். அந்த உடன்படிக்கையை முறித்துப்போடுவதற்கு, ஆசா சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுக்கிறான். ஆசா தன்னுடைய அரண்மனையின் பொக்கிஷத்திலிருந்து பெனாதாத்திற்கு எடுத்துக்கொடுப்பதோடு, கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களி லிருந்தும் எடுத்து கொடுக்கிறான்.

ஆசா பெனாதாத்திற்கு லஞ்சத்தைக் கொடுத்தனுப்பி, அவர்கள் மூலமாய் பெனாதாத்திற்கு, "எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும்" (1இராஜா 15:19) என்று செய்தி சொல்லி அனுப்புகிறான்.

உடன்படிக்கைப்பண்ணினவர்கள், தாங்கள் பண்ணின உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். உடன்படிக்கையை முறித்துப்போடக்கூடாது. ஆனால் ஆசாவோ, பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுத்து, அவனை உடன்படிக்கையை முறித்துப்போடச் சொல்லுகிறான். ஆசா கர்த்தருடைய ஆலயத்திலிருந்து பொக்கிஷத்தை எடுத்து, பெனாதாத்திற்கு லஞ்சம் கொடுக்கிறான். பிறரை பாவம் செய்யத் தூண்டுவது பாவமான காரியம். ஆசா கர்த்தருடைய ஆலயத்திலே நேர்ந்துகொண்ட பொக்கிஷங்களை வைக்கிறான். ஆனாலும், அவன் கர்த்தரை முழுஇருதயத்தோடும் முழுமனதோடும் விசுவாசிக்கவில்லை. ஆசா கர்த்தரை நம்பாமல் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தை நம்புகிறான்.

கர்த்தர் ஆசாவுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். யூதாதேசத்தாருக்கும், இஸ்ரவேல் தேசத்தாருக்கும் தொடர்ந்து சண்டை நடைபெற்றாலும், கர்த்தர் ஆசாவுக்கு இதுவரையிலும் உதவி செய்திருக்கிறார். ஆனால் ஆசாவோ கர்த்தர்மீது நம்பிக்கை வைக்காமல், பெனாதாத்தின் மீது நம்பிக்கை வைத்து, அவனுக்கு வெகுமதிகளைக் கொடுத்தனுப்புகிறான்.

ஆசா பொன்னையும் வெள்ளியையும் தேவாலயத்திலே கொண்டு வந்து வைத்தான். இது கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்கள். ஆசா இந்தப் பொக்கிஷங்களை தன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தக்கூடாது. கர்த்தருக்கு நேர்ந்துகொண்டதை அவருடைய ஊழியத்திற்கு மாத்திரமே பயன்படுத்தவேண்டும்.

ஆனால் ஆசாவோ கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்திற்கு வெகுமதியாகக் கொடுக்கிறான். தன்னுடைய சொந்த ஆசைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கு, ஆசா தேவாலயத்தின் பொக்கிஷங்களை, பெனாதாத்திற்கு லஞ்சமாகக் கொடுக்கிறான்.

பெனாதாத்தும் ஆசாவின் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு, அவனுக்கு சாதகமாக நடக்கிறான். பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும் பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடிக்கிறான். பாஷா அதைக் கேட்டபோது, ராமாவைக் கட்டுகிறதைவிட்டு திர்சாவிலிருந்து விடுகிறான் (1இராஜா 15:20,21).

ஆசா யூதாதேசத்திலே ஏராளமான பட்டணங்களைக் கட்டுகிறான். ஆசாவைப்போல, பாஷாவும் இஸ்ரவேல் தேசத்தில் ராமாவைக் கட்டுகிறான். ஆசாவின் சதித்திட்டத்தினால், பாஷா பாதிக்கப்படுகிறான். அவனால் ராமாவை தொடர்ந்து கட்ட முடியவில்லை.

பாஷா ராமாவைக் கட்டுகிறதை விட்டுவிட்டு திர்சாவிலிருந்துவிடுகிறான். அப்பொழுது ராஜாவாகிய ஆசா யூதா எங்கும் ஒருவரும் தப்பாமல் எல்லாரும் போய், பாஷா கட்டின ராமாவின் கற்களையும் அதின் மரங்களையும் எடுத்துவர பறைமுறை இடுவிக்கிறான். அவைகளினால் பென்யமீன் கோத்திரத்திலுள்ள கேபாவையும் மிஸ்பாவையும் கட்டுகிறான் (1இராஜா 15:22).

ஆசாவின் விருப்பம் நிறைவேறுகிறது. ஆனால் ஆசா செய்த காரியம் கர்த்தருக்கு பிரியமானதாயில்லை. ஆசா தன்னுடைய விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். அவன் கர்த்தருடைய சித்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் ஆசாவின்மீது வருகிறது. கர்த்தருடைய வார்த்தை அனானி என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் ஆசாவுக்கு உண்டாயிற்று.

ஆசா கர்த்தரை நம்பவில்லை. கர்த்தர் தாவீதின் குடும்பத்தாரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். ஆசா அந்த உடன்படிக்கையும் நம்பவில்லை. ஆசா கர்த்தரை நம்பாமல் சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தை நம்புகிறான்.

சீரியா தேசத்தார் தெற்கு யூதாதேசத்திற்கும், வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும் பொதுவான சத்துருக்களாயிருக்கிறார்கள். ஆசாவோ தன்னுடைய சுயநலத்தைப் பார்க்கிறான். வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும், சீரிய தேசத்திற்கும் இடையே ஏற்கெனவே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஆசாவோ அந்த உடன்படிக்கையை பணத்தினால் முறித்துப்போடுகிறான்.

ஆசா கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணவேண்டும். ஆனால் அவனோ கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷங்களை பென்னாதாத்திற்கு கொடுத்து அவனோடு உடன்படிக்கை பண்ணுகிறான். பிற்காலத்தில் சீரியா தேசத்தார், யூதாதேசத்தாருக்கு பிரதான சத்துருக்களாயிருக்கிறார்கள். சீரியாவின் ராஜா யூதர்களுக்கு கொள்ளை நோயாயிருக்கிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத், பணத்திற்கு ஆசைப்பட்டு, இஸ்ரவேலோடு செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்துப்போடுகிறான். இந்த முறிவுக்கு ஆசாவே காரணம். ஆசா பென்னாதாத்திற்கு லஞ்சம் கொடுத்து, அவனை நம்பிக்கைத்துரோகம் பண்ண வைக்கிறான்.

பென்னாதாத்திற்கு லஞ்சம் கொடுக்க ஆசாவின் அரண்மனையில் போதுமான அளவு பொக்கிஷம் இல்லை. ஆகையினால் அவன் கர்த்தருடைய ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிற பொன்னையும் வெள்ளியையும் எடுத்து சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்திற்கு லஞ்சமாக கொடுத்து அனுப்புகிறான். கர்த்தருடைய பொக்கிஷத்தை இதுபோன்ற பாவமான காரியங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத், ஆசா கொடுத்தனுப்பின பொன்னையும் வெள்ளியையும் பெற்றுக்கொண்டு, அவனுக்கு செவிகொடுக்கிறான். பென்னாதாத் தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்புகிறான்; அவர்கள் ஈயோனையும், தாணையும், ஆபேல்மாயீமையும், நப்தலி பட்டணங்களின் எல்லாப் பண்டகசாலைகளையும் முறிய அடிக்கிறார்கள் *(2நாளா 16:4).*

ஆசாவின் சதித்திட்டம் நிறைவேறுகிறது. சீரியரின் சேனை, இஸ்ரவேல் தேசத்திலுள்ள பிரதான பட்டணங்களின் பண்டகசாலைகளை முறியடித்தார்கள் என்னும் செய்தியை இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா கேள்விப்படுகிறான். அப்போது அவன், ராமாவைக் கட்டுகிறதை நிறுத்தி, தன் வேலையைவிட்டு ஒழிகிறான் *(2நாளா 16:5).*

இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒருவரும், யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் போக்குவரத்துமாயிருக்கக்கூடாது என்பதற்காகவே பாஷா ராமாவைக் கட்டினான். இப்போதோ அந்தக் கட்டிட வேலை முடிவுபெறாமல் அப்படியே நின்றுபோகிறது.

ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி 2நாளா 16:7-10

2நாளா 16:7. அக்காலத்திலே ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி யூதாவின் ராஜாவாகிய ஆசாவினிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்துகொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத்தப்பிப்போயிற்று.

2நாளா 16:8. மிகவும் ஏராளமான இரதங்களும் குதிரைவீரருமுள்ள எத்தியோப்பியரும் லூபியரும் மகா சேனையாயிருந்தார்கள் அல்லவா? நீர் கர்த்தரைச் சார்ந்துகொண்டபோதோவெனில், அவர்களை உமது கையில் ஒப்புக்கொடுத்தாரே.

2நாளா 16:9. தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும் என்றான்.

2நாளா 16:10. அதினிமித்தம் ஆசா ஞானதிருஷ்டிக்காரன்மேல் சினந்து கடுங்கோபங்கொண்டு அவனைக் காவலறையிலே வைத்தான்; இதல்லாமலும் அக்காலத்தில் ஜனங்களுக்குள் சிலரைக் கொடூரமாய் நடப்பித்தான்.

யூதாவின் ராஜாவாகிய ஆசா, சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தோடு உடன்படிக்கை செய்துகொள்கிறான். ஆசாவின் செயல் மதியீனமான காரியம். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக ஆசாவைக் கடிந்துகொள்கிறார்.

கர்த்தர் ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி என்பவனைபயன்படுத்தி ஆசாவைக் கடிந்துகொள்கிறார். அனானி என்பவன் யெகூ என்னும் தீர்க்கதரிசியின் தகப்பன்.

"பாஷாவுக்கும் விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய யெகூவுக்கு உண்டாயிற்று" (1இராஜா 16:1).

"அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன் புறப்பட்டு, அவனைச் சந்தித்து, ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது" (2நாளா 19:2).

ஆசா தேவனாகிய கர்த்தரை சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தை சார்ந்துகொண்டான். இதன் நிமித்தமாக கர்த்தர் ஆசாவைக் கடிந்துகொள்கிறார். "நீர் உம்முடைய தேவனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவைச் சார்ந்துகொண்டபடியினால், சீரியா ராஜாவின் இராணுவம் உமது கைக்குத்தப்பிப்போயிற்று" (2நாளா 16:7) என்று அனானி ஆசாவினிடத்தில் சொல்லுகிறான்.

கர்த்தர் அனானி என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக ஆசாவிற்குத் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறார். ஆசா கர்த்தரை நம்பாமல் சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தை நம்புகிறான். எத்தியோப்பியர் யூதாவுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்தபோது ஆசா கர்த்தரை நோக்கி முறையிட்டான். கர்த்தர் அவனுக்கு உதவி புரிந்தார். எத்தியோப்பியர் தோற்றுப் போனார்கள். இப்போதும் ஆசா கர்த்தரை நம்பியிருந்தால், வடக்கு ராஜ்யத்தையும், சீரியரையும், யூதாவின் கையில் ஒப்புக் கொடுத்திருப்பார். இவ்விரு தேசமுமே இதற்கு முன்பு யூதாவுக்கு விரோதமாக உடன்படிக்கை பண்ணியிருந்தார்கள். (2நாளா 16:3,7).

அனானி ஆசாவைப் பார்த்து, "இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்" (2நாளா 16:9) என்றும் சொல்லுகிறான். ஆசா நெரிந்த நாணல்மீது சாய்ந்திருக்கிறான். சீரியாவின் ராஜா ஆசாவுக்கு பாதுகாப்பாயிருக்கமாட்டான். நாம் கர்த்தரையே சார்ந்துகொள்ளவேண்டும்.

ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி, யூதாவின் ராஜாவாகிய ஆசாவை நோக்கி, "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது; இந்த விஷயத்தில் மதியில்லாதவராயிருந்தீர்; ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும்" (2நாளா 16:9) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் இதுவரையிலும் ஆசாவுக்கு நன்மை செய்திருக்கிறார். அவன் கர்த்தரை சார்ந்துகொள்ளாமல் போனதற்கு நியாயமான காரணம் எதுவுமே இல்லை. கர்த்தர் ஆசாவையும், யூதாதேசத்தையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். கர்த்தர் சீரியா தேசத்தையே ஆசாவின் கையிலே ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று விரும்பினார். ஆனால் ஆசாவோ கர்த்தரை நம்பாமல், சீரியாவின் ராஜாவை நம்புகிறான். இதனால் சீரியா ராஜாவின் இராணுவம் ஆசாவின் கைக்கு தப்பிப் போயிற்று.

ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி, யூதாவின் ராஜாவாகிய ஆசாவை நோக்கி, "மிகவும் ஏராளமான இரதங்களும் குதிரைவீரருமுள்ள எத்தியோப்பியரும் லூபியரும் மகா சேனையாயிருந்தார்கள் அல்லவா? நீர் கர்த்தரைச் சார்ந்து கொண்டபோதோவெனில், அவர்களை உமது கையில் ஒப்புக்கொடுத்தாரே" (2நாளா 16:8) என்று பழைய சரித்திர சம்பவங்களை நினைவுபடுத்தி சொல்லுகிறான்.

எத்தியோப்பியர்மீது யுத்தம் நடைபெற்ற போது, ஆசா கர்த்தரைச் சாந்து கொண்டான். கர்த்தர் எத்தியோப்பியரை ஆசாவின் கையில் ஒப்புக் கொடுத்தார். ஆனால் இப்போதோ ஆசா சீரியரைச் சார்ந்து கொள்கிறான். ஆகையால் இதுமுதற்கொண்டு அவனுக்கு யுத்தங்கள் நேரிடும் என்று அனானி கர்த்தருடைய வார்த்தையை ஆசாவுக்கு அறிவிக்கிறான். (2நாளா 16:8-9).

எத்தியோப்பியரும், லூபியரும் ஆசாவுக்கு விரோதமாக வந்தபோது, அவனுக்கு உதவி செய்ய கர்த்தரை தவிர வேறு யாருமில்லை. ஆகையினால் ஆசா அப்போது கர்த்தரை சார்ந்துகொண்டான். இப்போதோ ஆசாவுக்கு உதவி செய்ய கர்த்தரும் இருக்கிறார். சீரியாவின் ராஜாவாகிய பென்னாதாத்தும் இருக்கிறான். ஆசா இப்போது கர்த்தரை சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவை சார்ந்துகொள்கிறான்.

ஆசாவின் இருதயம் அவனை வஞ்சித்துவிடுகிறது. ஆசாவைப்போலவே நாமும் பல சமயங்களில் வஞ்சிக்கப்படுகிறோம். நமக்கு கர்த்தரை தவிர வேறு எந்த ஆதரவும் இல்லாதபோது, நாம் கர்த்தரை நம்புகிறோம். நமக்கு மற்ற ஆதரவுகள் கிடைக்கும்போது, கர்த்தரை விட்டு விட்டு மற்ற காரியங்களை நம்புகிறோம். இந்த விஷயத்தில் நாமும் ஆசாவைப்போல இருமனமுள்ளவர்களாயிருக்கிறோம். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

ஆசா கர்த்தரை சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவை சார்ந்துகொண்டபடியினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஆசாவின்மீது வருகிறது. "இது முதற்கொண்டு உமக்கு யுத்தங்கள் நேரிடும்" என்று அனானி ஆசாவுக்கு, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை சொல்லுகிறான்.

ஆசா கர்த்தரை நம்பவில்லை. அவன் அனானியையும் நம்பவில்லை. ஆசா அனானியின்மேல் சினந்து கடுங்கோபங்கொண்டு அவனைக் காவலறையிலே வைக்கிறான்; இதல்லாமலும் அக்காலத்தில் ஜனங்களுக்குள் சிலரைக் கொடூரமாய் நடப்பிக்கிறான் (2நாளா 16:10).

ஆசா ஞானதிருஷ்டிக்காரன்மேல் சினந்து கடுங்கோபங்கொண்டான். அனானி கர்த்தருடைய வார்த்தையைக் கூறினான். ஆசாவுக்கு நல்ல புத்திமதியை அறிவித்தான். ஆனால் கர்த்தருடைய செய்தியை ஏற்றுக் கொள்ள ஆசாவுக்கு மனமில்லை. ஆசா கோபமடைந்து, அனானியைச் சிறையில் அடைத்துவிட்டான். தம்மை நம்பாமல், சீரியரை நம்பியபடியினால், ஆசாமீது கர்த்தருடைய கோபம் எழும்பிற்று.

ஆசாவின் ஜீவியத்தில் பாவம் பெருகிற்று. அவன் கர்த்தரைச் சார்ந்து கொள்ளாமல், சீரியரைச் சார்ந்து கொள்கிறான். கர்த்தரிடத்தில் உண்மையாயிருந்த தீர்க்கதரிசியின்மீது கோபம் கொள்கிறான். தன்னுடைய ஜனங்களுக்குள் சிலரையும் கொடூரமாய் நடப்பிக்கிறான். இதற்கு முன்பு ஆசா இதுபோன்ற துன்மார்க்கமான செயல் எதுவும் செய்யவில்லை. ஜனங்களுக்குள் சிலர் என்று இந்த வாக்கியத்தில் கூறப்பட்டிருப்பது யாரைப் பற்றி என்று தெரியவில்லை.

ஆசா தன்னுடைய 36 ஆவது வருஷ ராஜ்யபாரத்தில் இந்தத் தவறைச் செய்கிறான். ஆசாவின் இந்தப் பாவத்தினால் அவனுடைய தேசத்தில் யுத்தங்கள் உண்டாயிற்று. அவனுடைய காலில் வியாதி உண்டாயிற்று. (2நாளா 16:9,12-14). கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு, முடிவுபரியந்தம் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விடாமல் அவரைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் (2நாளா 16:10-14; 1இராஜா 11:1-9).

ஆசா சீரியாவின் ராஜாவோடு உடன்படிக்கை பண்ணாதிருந்தால், சீரியா தேசத்தார் முன்னேற முடியாது. அவர்களுடைய இராணுவத்திற்கு வளர்ச்சி உண்டாகாது. ஆசாவோ தன்னுடைய மதியீனத்தினால் சீரியாவின் இராணுவத்தை வளர்த்துவிடுகிறான். சீரியர்கள் பிற்காலத்தில் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ளவர்களும், தெற்கு யூதாதேசத்திலுள்ளவர்களும் கர்த்தருடைய ஜனம். அவர்கள் கர்த்தருக்குள் சகோதரர்கள். ஆசா சீரியாவின் ராஜாவோடு உடன்படிக்கை பண்ணாமல், இஸ்ரவேல் தேசத்தின் ராஜாவாகிய பாஷாவோடு சேர்ந்து, சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியிருந்தால், அவர்கள் அப்போதே சீரியா தேசத்தை நிர்மூலம்பண்ணியிருக்கலாம். ஆனால் சகோதரர்கள் தங்களுக்குள் பிரிந்து, சத்துருவை வளர்த்துவிடுகிறார்கள்.

ஆசா கர்த்தரை சார்ந்துகொள்ளாமல், சீரியாவின் ராஜாவை சார்ந்துகொண்டதினால், கர்த்தருடைய கோபம் ஆசாவின்மீது வருகிறது. இனிமேல் கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பும் பராமரிப்பும் ஆசாவுக்கு கிடைக்காது. ஆகையினால் இது முதற்கொண்டு யூதாதேசத்திலே யுத்தங்கள் நேரிடும்.

ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி கர்த்தருடைய வார்த்தையை ஆசாவுக்கு பயப்படாமல் சொல்லுகிறான். ஆசா கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து மனந்திரும்பவேண்டும். ஆனால் ஆசாவோ, அனானியின்மேல் சினந்து, கடுங்கோபங்கொண்டு, அவனைக் காவலறையில் வைக்கிறான்.

அனானியின் கால்களில் தொழுமரம் மாட்டப்பட்டிருக்கிறது. அனானி நடக்க முடியாதபடி காவலறையில் முடக்கப்படுகிறான். ஆசா அனானியை சிறைச்சாலையில் அடைத்து வைத்ததோடு, யூதாஜனங்களின் சிலரையும் கொடூரமாய் நடப்பிக்கிறான். ஆசாவின் அக்கிரமம் அதிகரிக்கிறது. கர்த்தர் அவனுடைய அக்கிரமத்தை விசாரிக்கிறார்.

ஆசா ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானியின் கால்களில் தொழுமரத்தைக் கட்டி அவனை வாதித்தான். கர்த்தரோ ஆசாவின் கால்களிலே வியாதியைக் கொடுத்து அவனை வாதிக்கிறார். ஆசா அனானியின் சிநேகிதரை கொடூரமாய் நடப்பித்தான் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஆசாவின் வியாதி
2நாளா 16:11-14

2நாளா 16:11. ஆசாவின் ஆதியோடந்தமான நடபடிகளெல்லாம் யூதாவையும் இஸ்ரவேலையும் சேர்ந்த ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 16:12. ஆசா அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத்திலே தன் கால்களில் வியாதிகண்டு, அவன் நோவு மிகவும் உக்கிரமாயிருந்தது; அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான்.

2நாளா 16:13. ஆசா தான் அரசாண்ட நாற்பத்தோராம் வருஷத்தில் மரித்து, தன் பிதாக்களோடே நித்திரையடைந்தான்.

2நாளா 16:14. தைலக்காரரால் செய்யப்பட்ட கந்தவர்க்கங்களினாலும் பரிமளங்களினாலும் நிறைந்த ஒரு மெத்தையின்மேல் அவனை வளர்த்தி, அவனுக்காக வெகு திரளான கந்தவர்க்கங்களைக் கொளுத்தின பின்பு, அவன் தாவீதின் நகரத்தில் தனக்கு வெட்டிவைத்திருந்த அவனுடைய கல்லறையிலே, அவனை அடக்கம்பண்ணினார்கள்.

ஆசாவின் ஆதியோடந்தமான நடபடிகளெல்லாம் யூதாவையும் இஸ்ரவேலையும் சேர்ந்த ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. ஆசா அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத்திலே தன் கால்களில் வியாதிகண்டு, அவன் நோவு மிகவும் உக்கிரமாயிருக்கிறது; அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடுகிறான் *(2நாளா 16:11,12)*.

ஆசா கர்த்தருடைய ஊழியக்காரனின் கால்களிலே தொழுமரத்தை மாட்டினான். கர்த்தரோ ஆசாவின் கால்களில் வியாதியை மாட்டுகிறார். கர்த்தர் ஆசாவின் பாவத்திற்காக அவனுக்கு தண்டனை கொடுக்கிறார். ஆசா வியாதியில்லாமல் நன்றாயிருந்தபோது கர்த்தரை நம்பாமல் சீரியாவின் ராஜாவை நம்பினான். இப்போது ஆசா வியாதியிலிருக்கும்போதும், கர்த்தரை நம்பாமல், வைத்தியர்களை நம்புகிறான்.

கர்த்தரே நம்முடைய பரமவைத்தியர். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு வைத்தியர்களைப் பயன்படுத்துகிறார். வைத்தியர்கள் சிகிச்சை கொடுத்தாலும், வியாதியை குணப்படுத்துகிறவர் கர்த்தரே. கர்த்தருடைய சித்தமில்லாமல் வியாதியும் வராது. வியாதி குணமடையவும் செய்யாது. சகலமும் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறும். பாவத்தினால் சாபமும், சாபத்தினால் வியாதியும், வியாதியினால் சரீர மரணமும் மனுஷனுக்கு வருகிறது.

ஆசாவின் வியாதி, அவனுடைய பாவத்தினால் அவனுக்கு வந்திருக்கிறது. வியாதி ஆசாவைவிட்டு நீங்கவேண்டுமென்றால், அவனுடைய பாவங்கள் அவனைவிட்டு நீங்கவேண்டும். கர்த்தரால் மாத்திரமே ஆசாவின் பாவத்தை மன்னித்து, அவனை சுத்தப்படுத்த முடியும்.

ஆசா தான் அரசாண்ட நாற்பத்தோராம் வருஷத்தில் மரித்து, தன் பிதாக்களோடே நித்திரையடைகிறான். தைலக்காரரால் செய்யப்பட்ட கந்தவர்க்கங்களினாலும் பரிமளங்களினாலும் நிறைந்த ஒரு மெத்தையின்மேல் அவனை வளர்த்தி, அவனுக்காக வெகு திரளான கந்தவர்க்கங்களைக் கொளுத்தின பின்பு, அவன் தாவீதின் நகரத்தில் தனக்கு வெட்டிவைத்திருந்த அவனுடைய கல்லறையிலே, அவனை அடக்கம்பண்ணுகிறார்கள் (2நாளா 16:13,14).

யூதாதேசத்தார் ஆசாவின் சரீரத்தை மிகுந்த மரியாதையோடு அடக்கம்பண்ணுகிறார்கள். ஆசாவின் பிற்காலத்தில், அவன் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்தாலும், யூதாவின் மனுஷர் அவன்மீது இன்னும் பிரியமாயிருக்கிறார்கள். அவனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார்கள்.

நீதிமான்கள் மரிக்கும்போது, ஜனங்கள் அவனுடைய நற்குணங்களை நினைவுகூருவார்கள். நீதிமானிடத்தில் சில குறைகள் காணப்பட்டாலும், அந்தக் குறைகளை அவனுடைய சரீரத்தோடு சேர்த்து அடக்கம்பண்ணிவிடுவார்கள். நீதிமானுடைய கல்லறைகளில் அவனுடைய நற்கிரியைகள் மாத்திரமே நினைவுகூரப்படும்.

17 அதிகாரம்

யூதாதேசத்தை ராஜ்யபாரம் பண்ணின நல்ல ராஜாக்களில் யோசபாத்தும் ஒருவன். யோசபாத் தன் தகப்பனாகிய தாவீது முந்நாட்களில் நடந்த வழிகளில் நடக்கிறான். யோசபாத் கர்த்தரைத் தேடுகிறான். தாவீதைப்போலவே, அவருடைய குடும்பத்தில் வந்திருக்கிற யோசபாத்தும், கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்துகொள்கிறான்.

யோசபாத்தின் ராஜ்யபாரம் *(2நாளா 17:1,2,5)*. யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருக்கிறான் *(2நாளா 17:3,4,6)*. யோசபாத் யூதாதேசம் முழுவதிலும் கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தை உபதேசம்பண்ணுவதற்கு உபதேசியார்களை நியமிக்கிறான் *(2நாளா 17:7-9)*.

யூதாவைச் சுற்றியிருக்கிற தேசத்தார், யோசபாத்தோடு யுத்தம்பண்ணாமல், அவனுக்கு பகுதி கட்டுகிறார்கள் *(2நாளா 17:10,11)*. யோசபாத்தின் படைபலம் *(2நாளா 17:12-19)*.

யோசபாத்
2நாளா 17:1-6

2நாளா 17:1. அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோசபாத் ராஜாவாகி, இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலப்பட்டான்.

2நாளா 17:2. அவன் யூதாவின் அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தையும், யூதாதேசத்திலும், தன் தகப்பனாகிய ஆசா பிடித்த எப்பிராயீமின் பட்டணங்களிலும் தாணையங்களையும் வைத்தான்.

2நாளா 17:3. கர்த்தர் யோசபாத்தோடிருந்தார்; அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடந்து,

2நாளா 17:4. தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான்.

2நாளா 17:5. ஆகையால் கர்த்தர் அவன் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்தினார்; யூதா கோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள்; அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருந்தது.

2நாளா 17:6. கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டது; அவன் மேடைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் யூதாவையும் விட்டகற்றினான்.

யோசபாத் தன் தகப்பனாகிய ஆசாவின் ஸ்தானத்திலே, யூதாதேசத்தின்மீது ராஜாவாகிறான். யோசபாத் ஞானமும், தெளிந்த புத்தியுமுள்ளவன். அவன் யூதாதேசத்திற்கு ராஜாவானவுடனே, இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பலப்படுகிறான் *(2நாளா 17:1)*.

ஆகாப் இஸ்ரவேல் தேசத்திலே மூன்று வருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறான். அவன் பல தேசங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவன். இஸ்ரவேலின் ராஜா, யூதாதேசத்திற்கு விரோதமாக வரக்கூடாது என்பதில் யோசபாத் கவனம் செலுத்துகிறான். அதற்காக அவன் யூதாதேசத்தை இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பலப்படுத்துகிறான்.

யோசபாத் யூதாவின் அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தையும், யூதாதேசத்திலும், தன் தகப்பனாகிய ஆசா பிடித்த எப்பிராயீமின் பட்டணங்களிலும் தாணையங்களையும் வைக்கிறான் *(2நாளா 17:2)*.

யோசபாத் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. அதே சமயத்தில் இஸ்ரவேலின் ராஜாவும் யூதாதேசத்திற்கு விரோதமாக வர, யோசபாத் இடங்கொடுக்கவில்லை. யோசபாத் யுத்தம்பண்ணாமலிருப்பதினால், யூதாவின் சேனையிலே இரத்தம் சிந்துதல் இல்லாமலிருக்கிறது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தோடு உடன்படிக்கை செய்துகொள்கிறான். யோசபாத் ஆகாபோடு சம்பந்தங்கலக்கிறான். இதனால் யோசபாத்தின் காலத்திலே, சமாரியாவுக்கு விரோதமாக யுத்தம் நடைபெறவில்லை. ஆகாபும் சீக்கிரத்தில் மரித்துப்போகிறான்.

இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும் என்பது யோசபாத்தின் திட்டமல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வரக்கூடாது. இதற்காகவே அவன் யூதாவின் அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தை வைக்கிறான்.

யோசபாத்தின் தகப்பனாகிய ஆசா எப்பிராயீமின் பட்டணங்களை ஏற்கெனவே பிடித்து வைத்திருக்கிறான். யோசபாத்தோ அந்தப் பட்டணங்களில் தாணையங்களை வைக்கிறான். இவ்வாறாக யோசபாத் யூதாதேசத்தை இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பலப்படுத்துகிறான்.

யூதாதேசத்திலுள்ள பட்டணங்களெல்லாம் அரணிப்பாயிருக்கிறது. தேசத்தின் எல்லைப்பட்டணங்களுக்கெல்லாம் அதிகமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்பிராயீமிலுள்ள பட்டணங்கள், வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் எல்லையிலுள்ளது. ஆகையினால், இந்தப் பட்டணங்களை பலப்படுத்தும் வண்ணமாக, யோசபாத் இங்கே தாணையங்களை வைக்கிறான். அந்நிய தேசத்தார் யூதாதேசத்திற்குள்ளே பிரவேசித்து விடாதவாறு, எப்பிராயீமின் பட்டணங்களில், யூதாவின் யுத்தவீரர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் யோசபாத்தோடிருக்கிறார்; யோசபாத் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடக்கிறான். யோசபாத் தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொள்கிறான் *(2நாளா 17:3,4)*.

ராஜாக்களின் சுபாவங்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களுடைய சுபாவங்களை தாவீதின் சுபாவத்தோடு ஒப்பிட்டுச் சொல்லுவது வழக்கம்.

"தன் தகப்பன் தனக்கு முன்செய்த எல்லாப் பாவங்களிலும் அவன் நடந்தான்; அவன் இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போல், தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவில்லை" *(1இராஜா 15:3)*.

"ஆசா தன் தகப்பனாகிய தாவீதைப் போல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" *(1இராஜா 15:11)*.

"அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப்போலல்ல; தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்" *(2இராஜா 14:3)*.

"ஆகாஸ் ராஜாவாகிறபோது இருபது வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறு வருஷம் அரசாண்டான்; அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்" *(2இராஜா 16:2)*.

"அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" *(2இராஜா 18:3)*.

தாவீது கர்த்தருடைய வழிகளில் நடந்த வரையிலும், யோசபாத் தாவீது நடந்த வழிகளில் நடக்கிறான். சில சமயங்களில் தாவீது கர்த்தருடைய வழியில் நடக்கவில்லை. அப்படிப்பட்ட வழிகளில் யோசபாத்தும் நடக்கவில்லை. யோசபாத் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறான்.

"யோசபாத் தன் தகப்பனாகிய தாவீது முந்நாட்களில் நடந்த வழிகளில் நடக்கிறான்" (2நாளா 17:3) என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திற்கு "பூர்வபாதைகள்" என்று பொருள்.

பூர்வபாதைகளில் பாவம் பிரவேசிக்கவில்லை. அது பரிசுத்தமான வழியாயிருக்கிறது. தாவீதின் குடும்பத்தார், ஆரம்பத்தில் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார்கள். அவர்கள் கர்த்தரை பயபக்தியோடு ஆராதித்தார்கள். அதன் பின்பு அவர்கள் விக்கிரகங்களைப் பின்பற்றி, கர்த்தருக்கு விரோதமான பாவங்களை செய்தார்கள்.

தாவீதின் குடும்பத்தார், பாவம் செய்யாமல், கர்த்தருடைய பாதையில் நடந்ததுபோல, யோசபாத் கர்த்தருடைய பாதையில் நடக்கிறான். தன்னுடைய முன்னோர்களில், நல்லவர்களாக இருந்தவர்களின் வழிகளில் நடக்கிறான். தீயவர்களைவிட்டு விலகுகிறான்.

யோசபாத் பாகால்களைத் தேடவில்லை. அவன் கர்த்தரைத் தேடுகிறான். கர்த்தர் யோசபாத்தோடு கூடயிருக்கிறார். யோசபாத்தும் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்துகொள்கிறான்.

ஆகையால் கர்த்தர் யோசபாத்தின் கையில் ராஜ்யபாரத்தைத் திடப்படுத்துகிறார்; யூதா கோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருகிறார்கள்; யோசபாத்துக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருக்கிறது (2நாளா 17:5).

யோசபாத்தின் இருதயம் கர்த்தருடைய வழிகளில் உற்சாகங்கொள்கிறது; அவன் மேடைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் யூதாவையும் விட்டகற்றுகிறான் (2நாளா 17:6). யோசபாத் கர்த்தரை உற்சாகத்தோடும் சந்தோஷத்தோடும் ஆராதிக்கிறான்.

யாக்கோபு பெத்தேலிலே கர்த்தரை தரிசித்த பின்பு, அவர் பிரயாணம்பண்ணுகிறார் (ஆதி 29:1). "யாக்கோபு பிரயாணம் பண்ணுகிறார்" என்னும் வாக்கியத்திற்கு, "அவர் தன்னுடைய கால்களை உயர்த்துகிறார்" என்று பொருள். யாக்கோபு கர்த்தரை தரிசித்த பின்பு, அவர் கர்த்தருடைய பாதையிலே பிரயாணம்பண்ணுகிறார்.

யாக்கோபைப்போலவே யோசபாத்தும், கர்த்தருடைய வழியிலே நடக்கிறார். அவர் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார். கர்த்தர் தனக்கு காண்பிக்கும் பாதையிலே, யோசபாத் பிரயாணப்படுகிறார்.

உபதேசியார்கள்
2நாளா 17:7-9

2நாளா 17:7. அவன் அரசாண்ட மூன்றாம் வருஷத்தில் யூதாவின் பட்டணங்களிலே உபதேசம்பண்ணும்படிக்கு, அவன் தன் பிரபுக்களாகிய பென்னாயிலையும், ஒபதியாவையும், சகரியாவையும், நெதனெயேலையும், மிகாயாவையும்,

2நாளா 17:8. இவர்களோடேகூடச் செமாயா, நெதனியா, செபதியா, ஆசகேல், செமிரமோத், யோனத்தான், அதோனியா, தொபியா, தோபத்தோனியா என்னும் லேவியரையும், இவர்களோடேகூட ஆசாரியரான எலிஷாமாவையும், யோராமையும் அனுப்பினான்.

2நாளா 17:9. இவர்கள் யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதித்தார்கள்.

யோசபாத் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். அவன் நல்ல மனுஷன் மாத்திரமல்ல, யோசபாத் யூதாதேசத்திற்கு நல்ல ராஜாவாயும் இருக்கிறான். அவன் நற்குணமுள்ளவன் மாத்திரமல்ல, அவன் நன்மை செய்கிறவனாயும் இருக்கிறான். விசுவாசிகளாகிய நாமும், யோசபாத்தைப்போல, கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும்.

யோசபாத் மேடைகளையும் விக்கிரகதோப்புக்களையும் யூதாவை விட்டு அகற்றுகிறான். யூதாதேசத்திலே பொய்யான மார்க்கங்களை உபதேசம் பண்ணுகிற கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கள்ளப்போதகர்களையும், தேசத்தை விட்டு வெளியேற்றி விடுகிறான்.

"சித்திரக்காரனுக்கு அவன் செய்த சுரூபமும், ஊமையான தெய்வங்களை உண்டுபண்ணித் தான் உருவாக்கின சுரூபத்தை நம்பினவனுக்கு வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்துக்கு உதவும்?" (ஆப 2:18).

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் பொய்யை நம்புகிறார்கள். விக்கிராராதனைக்காரர்களுக்கு போதகம்பண்ணுகிறவர்கள் பொய்ப்போதகம் பண்ணுகிறார்கள். யோசபாத் யூதா தேசத்திலிருந்து விக்கிராராதனைக்காரரையும் அகற்றிவிடுகிறான்.

யோசபாத் யூதாவின் பட்டணங்களிலே கர்த்தருடைய சத்தியங்களை உபதேசம்பண்ணுவதற்கு, உபதேசியார்களை அனுப்புகிறான்.

யோசபாத் அரசாண்ட மூன்றாம் வருஷத்தில் யூதாவின் பட்டணங்களிலே உபதேசம்பண்ணும்படிக்கு, அவன் தன் பிரபுக்களாகிய பென்னாயிலையும், ஒபதியாவையும், சகரியாவையும், நெதனெயேலையும், மிகாயாவையும் அனுப்புகிறான்.

இவர்களோடேகூடச் செமாயா, நெதனியா, செபதியா, ஆசகேல், செமிரமோத், யோனத்தான், அதோனியா, தொபியா, தோபத்தோனியா என்னும் லேவியரையும், இவர்களோடேகூட ஆசாரியரான எலிஷாமாவையும், யோராமையும் அனுப்புகிறான் (2நாளா 17:7,8).

யூதாதேசத்தாருக்கு கர்த்தரைப்பற்றி சரியாகத் தெரியவில்லை. அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் தெளிவில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தரைப்பற்றியும், கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றியும் உபதேசம்பண்ண வேண்டியதாயிருக்கிறது. பாவம் எது என்று தெரியாமலேயே, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். ஆகையினால் யோசபாத் அவர்களுக்கு கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தைப் போதிக்க உபதேசியார்களை அனுப்புகிறான்.

யோசபாத் அனுப்புகிற உபதேசியார்கள், யூதாவிலே உபதேசித்து, கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள் (2நாளா 17:9).

இஸ்ரவேலின் ராஜா முதல் முறையாக உபதேசம் பண்ணும் ஊழியத்தைச் செய்கிறான். உபதேசிக்கிறவர்கள் மோசேயின் பிரமாணத்தை ஒவ்வொரு பட்டணமாக எடுத்துச் செல்கிறார்கள். கர்த்தருடைய வேத புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள். ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் குறித்து, ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள், கேள்விகள் எல்லாவற்றுக்கும் உபதேசிக்கிறவர்கள் விளக்கம் கொடுக்கிறார்கள்.

யூதாதேசத்திலே விக்கிராராதனை காணப்படுகிறது. அவன் மேடைகளையும், விக்கிரகத்தோப்புகளையும் யூதாவை விட்டு அகற்றுகிறான். தேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றினாலும், யூதா மனுஷருடைய இருதயங்களிலும், சிந்தனைகளிலும் விக்கிராராதனை காணப்படுகிறது. யோசபாத் அவர்களுக்கு கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தை போதிக்கிறான். விக்கிராராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம் என்பதை அவர்களுக்கு போதித்து உணர்த்துகிறான்.

யூதாவின் மனுஷர் சத்தியத்தை அறியவேண்டும். சத்தியம் அவர்களை ஆவிக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணும். அவர்களுக்கு சத்தியம் தெரியவில்லையென்றால், அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு குருடர்களைப்போல நடப்பார்கள். அவர்களுக்கு சத்தியத்தைப் போதித்தால், அவர்களுடைய மனக்கண்கள் பிரகாசமாயிருக்கும்.

கர்த்தருடைய சத்தியத்தை அறிந்தவர்கள், கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றி நடப்பார்கள். யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், ஜனங்களுக்கு கர்த்தருடைய வேதப் புஸ்தகத்தை போதிப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. சத்தியம் தெரிந்தால்தான் ஜனங்கள் விக்கிரகாராதனையை விட்டு விலகி வருவார்கள். அவர்கள் தங்கள் ஆவிக்குரிய வியாதியிலிருந்து குணப்படுவார்கள்.

யோசபாத் யூதா பட்டணங்களிலே உபதேசம்பண்ணும்படிக்கு தன் பிரபுக்களையும், ஆசாரியரையும், லேவியரையும் அனுப்புகிறான். பிரபுக்கள் யூதாதேசத்தாரை நீதியாயும் நியாயமாயும் ஆளுகை செய்யவேண்டும். ஜனங்கள் தவறு செய்யும்போது அவர்களை திருத்தவேண்டும். அது மாத்திரமல்ல, தவறு செய்யாமல், எவ்வாறு நன்மை செய்வது என்றும் அவர்களுக்கு போதிக்கவேண்டும். யூதாவின் மனுஷர் செய்கிற தப்பிதங்களை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். தவறு செய்வதற்கான காரணங்களையும் அவர்களுக்கு போதிக்கவேண்டும்.

யோசபாத் யூதாவின் பட்டணங்களிலே உபதேசம்பண்ணும்படிக்கு, தன் பிரபுக்களை அனுப்பியதுபோல, அங்கே உற்தேசம்பண்ணும் படிக்கு லேவியரையும் ஆசாரியரையும் அனுப்புகிறான். அவர்கள் தங்கள் கையிலே கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தை வைத்திருக்கிறார்கள். அவர்கள் யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்கு போதிக்கிறார்கள்.

"அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்" (உபா 33:10).

பிரபுக்கள் அதிகாரமுள்ளவர்கள். ஆசாரியர்களோ கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள். பிரபுக்களும் ஆசாரியர்களும் இணைந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அந்த ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும். அது மோசேயும் ஆரோனும் சேர்ந்து கர்த்தருக்காக ஊழியம் செய்வதுபோல இருக்கும்.

லேவியருக்கு கர்த்தருடைய வேதம் தெரிந்திருக்கிறது. அவர்கள் கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை ஜனங்களுக்கு போதிக்க முன்வருகிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு பயந்து தங்களுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்று பிரபுக்கள் போதிக்கிறார்கள்.

பிரபுக்களும், ஆசாரியர்களும், லேவியர்களும் யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்கு போதிக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்திலே ஒவ்வொரு பட்டணமாகச் சுற்றி வருகிறார்கள். இதனால் யூதாதேசம் முழுவதிலும் ஆவிக்குரிய வெளிச்சம் பிரகாசமாயிருக்கிறது. விக்கிரகாராதனையின் இருள் நீங்கிப்போகிறது.

பிரபுக்களின் கையிலும், ஆசாரியரின் கையிலும் கர்த்தருடைய வேதப்புஸ்தகம் இருக்கிறது. இது கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கும் அதிகாரத்திற்கு அடையாளம். ஊழியக்காரர்கள் தங்களுடைய சுயவார்த்தைகளைப் பேசுவதில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அதற்கு அடையாளமாக அவர்கள் கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தை தங்கள் கைகளில் வைத்திருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் பிரபுக்களையும், ஆசாரியர்களையும் வேதப்புஸ்தகத்தோடு பார்க்கும்போது, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் வந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் கர்த்தருடைய அதிகாரத்தினால் போதிக்கிறார்கள் என்பதையும் புரிந்துகொள்வார்கள். அவர்கள் போதிக்கிற வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்கள்.

கர்த்தர் யோசபாத்தோடிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை யோசபாத்திற்கு உதவி செய்கிறது. கர்த்தர் யோசபாத்தின் கையிலே ராஜ்யபாரத்தை திடப்படுத்துகிறார்.

யோசபாத் அனுப்பின பிரபுக்களும், ஆசாரியர்களும் யூதாவின் பட்டணங்களிலெல்லாம் திரிந்து ஜனங்களுக்கு கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தைப் போதிக்கிறார்கள். யூதாகோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்திற்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள் (2நாளா 17:5).

யோசபாத் தங்கள் மத்தியிலே ஊழியக்காரர்களை அனுப்பி, கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம்பண்ணுவதற்காக, ஜனங்கள் அவனுக்கு நன்றி சொல்லுகிறார்கள். அதற்கு அடையாளமாக அவனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள்.

யூதாஜனத்தார் கர்த்தருடைய வேதத்திலே போதிக்கப்படும்போது, அவர்கள் கர்த்தருக்கும் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். ராஜாவுக்கும் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். யோசபாத்தின் கையிலே ராஜ்யபாரம் திடப்படுகிறது.

யோசபாத்திற்கு ஐசுவரிமும் கனமும் மிகுதியாயிருக்கிறது. பொதுவாக ஒரு மனுஷனிடத்திலே, ஐசுவரியமும் கனமும் மிகுதியாய்ச் சேரும்போது, அவனுக்குள் பெருமையும் மேட்டிமையும் வந்துவிடும். ஆனால் யோசபாத்தோ பெருமைப்படாமல் மனத்தாழ்மையோடிருக்கிறான். தன்னுடைய ஐசுவரியத்தையும் கனத்தையும் கர்த்தருடைய நாமமகிமைக்காக பயன்படுத்துகிறான்.

யோசபாத்திற்கு ஐசுவரியமும் கனமும் அதிகமாய்ச் சேர சேர, அவனுடைய இருதயம் கர்த்தருடைய வழிகளில் நடப்பதற்கு தீர்மானமாயிருக்கிறது.

யோசபாத்தின் ஐசுவரியமும் கனமும்
2நாளா 17:10-19

2நாளா 17:10. யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின் மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், யோசபாத்தோடு யுத்தம்பண்ணாதிருந்தார்கள்.

2நாளா 17:11. பெலிஸ்தரிலும் சிலர் யோசபாத்துக்குப் பகுதிப் பணத்தோடேகூடக் காணிக்கைகளையும் கொண்டு வந்தார்கள்; அரபியரும் அவனுக்கு ஏழாயிரத்து எழுநூறு ஆட்டுக்கடாக்களையும், ஏழாயிரத்து எழுநூறு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்தார்கள்.

2நாளா 17:12. இப்படியே யோசபாத் வரவர மிகவும் பெரியவனாகி, யூதாவிலே கோட்டைகளையும், ரஸ்துக்களை வைக்கும் பட்டணங்களையும் கட்டினான்.

2நாளா 17:13. யூதாவின் பட்டணங்களில் அவன் பெரிய வேலைகளை நடத்தினான்; எருசலேமிலே பராக்கிரமசாலிகளான சேவகர் அவனுக்கு இருந்தார்கள்.

2நாளா 17:14. தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படி அவர்களுடைய இலக்கமாவது: யூதாவிலே ஆயிரத்துக்கு அதிபதிகளில் அத்னா தலைமையானவன்; அவனிடத்திலே பராக்கிரமசாலிகள் மூன்றுலட்சம்பேர் இருந்தார்கள்.

2நாளா 17:15. அவனுக்கு உதவியாக யோகனான் என்னும் சேனாபதியிருந்தான்; அவனிடத்திலே இரண்டுலட்சத்து எண்பதினாயிரம் பேர் இருந்தார்கள்.

2நாளா 17:16. அவனுக்கு உதவியாக கர்த்தருக்குத் தன்னை உற்சாகமாய் ஒப்புக்கொடுத்த சிக்ரியின் குமாரனாகிய அமசியா இருந்தான்; அவனிடத்திலே பராக்கிரமசாலிகள் இரண்டுலட்சம்பேர் இருந்தார்கள்.

2நாளா 17:17. பென்யமீனிலே எலியதா என்னும் பராக்கிரமசாலி இருந்தான்; அவனிடத்திலே வில்லும் கேடகமும் பிடிக்கிறவர்கள் இரண்டுலட்சம்பேர் இருந்தார்கள்.

2நாளா 17:18. அவனுக்கு உதவியாக யோசபாத் இருந்தான்; அவனிடத்திலே சேவகத்திற்கு ஆயுதபாணிகள் லட்சத்து எண்பதினாயிரம்பேர் இருந்தார்கள்.

2நாளா 17:19. ராஜா யூதா எங்குமுள்ள அரணான பட்டணங்களில் வைத்தவர்களைத்தவிர இவர்களே ராஜாவைச் சேவித்தவர்கள்.

கர்த்தர் யோசபாத்தோடிருக்கிறார். கர்த்தர் அவன் கையிலே ராஜ்யபாரத்தை திடப்படுத்துகிறார். யூதாகோத்திரத்தார் எல்லாரும் யோசபாத்திற்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் மிகுதியாயிருக்கிறது.

யூதாதேசத்தார் யோசபாத்திற்கு காணிக்கைகளைக் கொண்டு வருவதுபோல, அந்நிய தேசத்தாரும் அவனுக்கு காணிக்கைகளைக் கொண்டு வருகிறார்கள்.

யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின்மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், யோசபாத்தோடு யுத்தம்பண்ணாதிருக்கிறார்கள். பெலிஸ்தரிலும் சிலர் யோசபாத்துக்குப் பகுதிப்பணத்தோடேகூடக் காணிக்கைகளையும் கொண்டுவருகிறார்கள்; அரபியரும் அவனுக்கு ஏழாயிரத்து எழுநூறு ஆட்டுக்கடாக்களையும், ஏழாயிரத்து எழுநூறு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவருகிறார்கள் (2நாளா 17:10,11).

யோசபாத் யூதாதேசத்தை சுற்றிருக்கிற தேசங்களோடு சமாதனமாயிருக்கிறான். அந்த தேசத்தாரின் நன்மைகளையும் விசாரிக்கிறான். யோசபாத் தாவீதைப்போல மிகப்பெரிய யுத்தவீரனோ அல்லது மகாபராக்கிரமசாலியோ அல்ல. அவன் சாலொமோனைப்போல மிகுந்த ஞானமுள்ளவனுமல்ல. ஆனாலும் யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின் மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வருகிறது. அவர்கள் யோசபாத்தோடு யுத்தம்பண்ணாமல் அமைதியாயிருக்கிறார்கள். அவனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார்கள். அவர்கள் யோசபாத்திற்கு வெகுமதிகளைக் கொண்டு வருகிறார்கள். யோசபாத்தின் சிநேகத்தை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். யோசபாத்தோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள்.

இப்படியே யோசபாத் வரவர மிகவும் பெரியவனாகி, யூதாவிலே கோட்டைகளையும், ரஸ்துக்களை வைக்கும் பட்டணங்களையும் கட்டுகிறான். யூதாவின் பட்டணங்களில் அவன் பெரிய வேலைகளை நடத்துகிறான்; எருசலேமிலே பராக்கிரமசாலிகளான சேவகர் யோசபாத்திற்கு இருக்கிறார்கள் (2நாளா 17:12,13).

யோசபாத் தன்னுடைய இராணுவத்தையும் திடப்படுத்துகிறான். அவர்களை ஒழுங்கும் கிரமமுமாக முறைப்படுத்துகிறான். யோசபாத்தின் இராணுவத்தில் இருந்த யுத்தவீரரின் எண்ணிக்கை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசபாத்தின் சேனையிலுள்ளவர்களின் விவரம் வருமாறு:

1. அத்னாவின் தலைமையில் - 300,000 பேர் (2நாளா 17:14)
2. யோகனானின் தலைமையில் - 280,000 பேர். (2நாளா 17:15)
3. அமசியாவின் தலைமையில் - 200,000பேர் (2நாளா 17:16)
4. எலியதாவின் தலைமையில் - 200,000 பேர் (2நாளா 17:17)
5. யோசபாத்தின் தலைமையில் - 180,000 பேர். (2நாளா 17:18)

இவர்கள்போக யூதா எங்குமுள்ள அரணான பட்டணங்களில் ராஜாவைச் சேவிக்கிறவர்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். (2நாளா 17:19).

தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படி அவர்களுடைய இலக்கமாவது: யூதாவிலே ஆயிரத்துக்கு அதிபதிகளில் அத்னா தலைமையானவன்; அவனிடத்திலே பராக்கிரமசாலிகள் மூன்றுலட்சம்பேர் இருக்கிறார்கள். அவனுக்கு உதவியாக யோகனான் என்னும் சேனாபதியிருக்கிறான்; அவனிடத்திலே இரண்டுலட்சத்து எண்பதினாயிரம்பேர் இருக்கிறார்கள் (2நாளா 17:14,15).

யோசபாத்திற்கு உதவியாக கர்த்தருக்குத் தன்னை உற்சாகமாய் ஒப்புக்கொடுத்த சிக்ரியின் குமாரனாகிய அமசியா இருக்கிறான்; அவனிடத்திலே பராக்கிரமசாலிகள் இரண்டுலட்சம்பேர் இருக்கிறார்கள் (2நாளா 17:16).

பென்யமீனிலே எலியதா என்னும் பராக்கிரமசாலி இருக்கிறான்; அவனிடத்திலே வில்லும் கேடகமும் பிடிக்கிறவர்கள் இரண்டுலட்சம்பேர் இருக்கிறார்கள் (2நாளா 17:17).

அவனுக்கு உதவியாக யோசபாத் இருக்கிறான்; அவனிடத்திலே சேவகத்திற்கு ஆயுதபாணிகள் லட்சத்துஎண்பதினாயிரம்பேர் இருக்கிறார்கள். ராஜா யூதா எங்குமுள்ள அரணான பட்டணங்களில் வைத்தவர்களைத் தவிர இவர்களே ராஜாவைச் சேவிக்கிறவர்கள் (2நாளா 17:18,19).

யோசபாத்தின் இராணுவத்திலிருக்கிறவர்கள் எல்லோருமே பயிற்சி பெற்ற யுத்தவீரர்கள். இவர்கள் யூதாதேசத்திலுள்ள எல்லா பட்டணங்களிலும் தாணையங்களிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே தேவைப்படும்போது ஒழுக்கமும் கிரமமுமாக ஒன்றுகூடி வருவார்கள்.

யூதாவைச் சுற்றிலுமிருக்கிற எல்லா தேசத்தாரும் யோசபாத்திற்கு பயப்படுகிறார்கள். இந்த பயம் யோசபாத்தின் திரளான சேனையினால் வந்த பயமல்ல. இது கர்த்தரால் உண்டான பயங்கரம். யோசபாத் தன்னுடைய பிரபுக்களையும் ஆசாரியர்களையும் யூதாவின் பட்டணங்களுக்கெல்லாம் அனுப்பி அங்கே கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தைப் போதிக்க சொல்லுகிறான். அதனால் யூதாவைச் சுற்றிருக்கிற தேசங்களிலே கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்திருக்கிறது. யோசபாத் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறான். கர்த்தர் அவனையும், யூதாதேசத்தையும் பாதுகாக்கிறார்.

18 அதிகாரம்

நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்த சரித்திர சம்பவம், 1இராஜா 22-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் ஆகாபுக்கு அவனுடைய நாட்களிலே பொல்லாப்பை வரப்பண்ணாமல், அவன் குமாரன் நாட்களில், அதை அவன் வீட்டின்மேல் வரப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணினார் (1இராஜா 21:29). ஆகாபின் நாட்களோ சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

இந்த அதிகாரத்தில் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் சீரியருக்கு விரோதமாக நடைபெறும் யுத்தத்தைப்பற்றி விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. ஆகாப் இந்த யுத்தத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்துகிறான். ஆகாப் தன்னுடைய ஊழியக்காரரோடு யுத்தசம்பந்தமாக ஆலோசனை பண்ணுகிறான். யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தோடும் (2நாளா 18:1-3) ஆலோசனை பண்ணுகிறான்.

சீரியரோடு யுத்தம்பண்ணுவது சம்பந்தமாக ஆகாப் தன்னுடைய தீர்க்கதரிசிகளோடும் ஆலோசனை பண்ணுகிறான். ஆகாபின் தீர்க்கதரிசிகள் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுமாறு அவனை உற்சாகப்படுத்துகிறார்கள் (2நாளா 18:4,5). சிதேக்கியா என்னும் தீர்க்கதரிசி தனக்கு இருப்பு கொம்புகளை உண்டாக்கி, இவைகளினால் ஆகாப் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவான் என்று சொல்லுகிறான் (2நாளா 18:10)

மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. யோசபாத் மிகாயாவிடம் விசாரிக்க வேண்டுமென்று சொல்லுகிறான் (2நாளா 18:7). ஆகாப் மிகாயாவை அழைத்து வர தன்னுடைய பிரதானிகளில் ஒருவனை அனுப்புகிறான் (2நாளா 18:8)

ஆகாப் ஏற்கெனவே கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் ஆலோசனை செய்திருக்கிறான். ஆரம்பத்தில் மிகாயாவும் அவர்களுடைய வார்த்தைக்கு ஒத்துப்பேசுகிறான் (2நாளா 18:13) அதன்பின்பு மிகாயா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே ஆகாப் தோற்றுப்போவான் (2நாளா 18:14).

மிகாயா ஆகாபிடம் தன்னுடைய தரிசனத்தைப்பற்றி விவரிக்கிறான். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வாயிலே பொய்யின் ஆவி இருப்பதைப்பற்றிச் சொல்லுகிறான் (2நாளா18:19,20). சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கிறான் (2நாளா 18:23). ஆகாப் மிகாயாவை சிறைச்சாலையில் வைக்கிறான் (2நாளா 18:26).

சீரியாவுக்கு விரோதமாக ஆகாபும், யோசபாத்தும் யுத்தம்பண்ணுகிறார்கள். யோசபாத் ராஜவஸ்திரம் தரித்திருக்கிறான். ஆகாப் வேஷம் மாறிப்போகிறான். இந்த யுத்தத்தில் ஆகாப் செத்துப்போகிறான் (2நாளா 18:28-34).

ஆகாபும் யோசபாத்தும் 2நாளா 18:1-3

2நாளா 18:1. யோசபாத்துக்கு மிகுந்த ஐசுவரியமும் கனமும்உண்டாயிருந்தது; அவன் ஆகாபோடே சம்பந்தங்கலந்து,

2நாளா 18:2. சில வருஷங்கள் சென்றபின்பு, சமாரியாவிலிருக்கிற ஆகாபிடத்துக்குப் போனான்; அப்பொழுது ஆகாப் அவனுக்கும் அவனோடிருக்கிற ஜனத்திற்கும் அநேகம் ஆடுமாடுகளை அடிப்பித்து, கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு வரும்படி அவனை ஏவினான்.

2நாளா 18:3. எப்படியெனில், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: கீலேயாத்திலுள்ள ராமோத்துக்கு என்னோடே வருகிறீரா என்று கேட்டதற்கு, அவன்: நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், உம்மோடேகூட யுத்தத்திற்கு வருகிறேன் என்றான்.

எலியா ஆகாபுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொன்னார். ஆகாப் அந்த வார்த்தைகளைக் கேட்டு, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான். கர்த்தர் ஆகாபுக்கு தமது கிருபையை வெளிப்படுத்தினார். ஆகாபின் நாட்களில் அவனுக்கு பொல்லாப்பு வரவில்லை.

கர்த்தர் ஆகாபுக்கு பொல்லாப்பை வரப்பண்ணாமலிருந்தாலும், ஆகாப் இன்னும் துன்மார்க்கனாகவே இருக்கிறான். அவன் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான். ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியதினால், கர்த்தர் அவனையும் இஸ்ரவேல் தேசத்தையும் ஆசீர்வதிக்கிறார். சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் மூன்று வருஷம் யுத்தமில்லாதிருக்கிறது (1இராஜா 22:1).

ஆகாப் இஸ்ரவேல் தேசத்தில் ராஜாவாயிருக்கும்போது, யோசபாத் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். மூன்றாம் வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை சந்திக்க சமாரியாவுக்கு வருகிறான். யோசபாத் மரியாதையின் நிமித்தமாக ஆகாபை சந்திக்கிறான்.

ஆகாப் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தியதுபற்றி, யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தில், ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது . ஆகாப் தன் பாவத்திற்கு மனந்திரும்புகிறான். யூதாவின் ராஜாவாகிய யோசபாத் சமாரியாவுக்கு வந்து, தன்னுடைய பாவங்களினிமித்தமாய், தன்னை சிட்சிக்கவேண்டுமென்று ஆகாப் செய்தி சொல்லியனுப்புகிறான். யோசபாத்தும் ஆகாபின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு சமாரியாவிலே சிறிது காலம் தங்கியிருக்கிறான். யோசபாத் ஆகாபை ஒவ்வொரு நாளும் விசேஷமான வாரினால், குறிப்பிட்ட தடவைகளுக்கு அடித்தான் என்று யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது. இந்த சம்பவத்திற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினிடத்திற்கு வந்திருப்பதைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரும் தங்கள் தேசங்களைப் பற்றி கலந்து பேசிக்கொள்வதற்காக, ஒன்றாய்க் கூடிவந்திருக்கலாம். இந்தக் காலத்தில் சீரியர்கள் ஆகாபுக்கு எந்தப் பிரச்சனையும், தொந்தரவும் கொடுக்கவில்லை.

யோசபாத் ஆகாபினிடத்தில் வந்திருக்கும்போது, ஆகாப் தன் ஊழியக்காரரோடு சீரியாவின்மீது யுத்தம்பண்ணுவதுபற்றி கலந்து ஆலோசனை செய்துகொண்டிருக்கிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தன் ஊழியக்காரரை நோக்கி: "கீலேயாத்திலுள்ள ராமோத் நம்முடையதென்று அறியீர்களா? நாம் அதைச் சீரியா ராஜாவின் கையிலிருந்து பிடித்துக்கொள்ளாமல், சும்மாயிருப்பானேன்" (1இராஜா 22:3) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன் ஊழியக்காரரோடு ஆலோசனை பண்ணுவதோடு, யோசபாத்தோடும் இது சம்பந்தமாகப் பேசுகிறான். ஆகாப் யோசபாத்தை நோக்கி: "கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடுகூட வருகிறீரா" என்று கேட்கிறான். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவை நோக்கி: "நான்தான் நீர், என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள், என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள்" (1இராஜா 22:4) என்று சொல்லுகிறான்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடைபெற்றது. இந்த யுத்தத்திலே கர்த்தர் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தை ஆகாபின் கையிலே ஒப்புக்கொடுத்தார்

"அப்பொழுது பெனாதாத் ஆகாபைப் பார்த்து: என் தகப்பன் உம்முடைய தகப்பனார் கையிலே பிடித்த பட்டணங்களைத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்; என் தகப்பன் சமாரியாவிலே செய்ததுபோல, நீரும் தமஸ்குவிலே வீதிகளை உண்டாக்கிக் கொள்ளலாம் என்றான். அதற்கு அவன், இந்த உடன்படிக்கை செய்து நான் உம்மை அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லி, அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனை அனுப்பிவிட்டான்" (1இராஜா 20:34).

தன்னுடைய தகப்பன், ஆகாபின் தகப்பன் கையிலே பிடித்த பட்டணங்களை திரும்ப கொடுத்துவிடுவதாக, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வாக்குப்பண்ணினான். ஆகாபும் பெனாதாத்தின் வார்த்தைகளை நம்பினான். ஆனால் பெனாதாத்தோ தன் வார்த்தையில் உண்மையாயில்லை.

ஆகாபினிடத்தில் இரக்கம் பெறவேண்டுமென்பதற்காக பெனாதாத் அவனுக்கு ஆசை வார்த்தைகளை சொன்னான். ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு, பெனாதாத் ஆகாபுக்கு சொன்ன வார்த்தைகளை மறந்துவிடுகிறான். தனக்கு ஆதாயம் கிடைக்குமென்றால், தான் சொன்ன வார்த்தைகள் பெனாதாத்திற்கு ஞாபகம் வரும். தனக்கு ஆதாயமில்லாமல் நஷ்டம் வருமென்றால், தான் சொன்ன வார்த்தைகளை பெனாதாத் மறந்துவிடுவான்.

பெனாதாத்தைப்போல இக்காலத்திலும் ஏராளமானோர் இருக்கிறார்கள். இவர்கள் சுயநலமுள்ளவர்கள். இவர்கள் தங்களுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். இவர்கள் சொல்லுவது ஒன்றாகவும், செய்வது வேறொன்றாகவும் இருக்கும்.

ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டு, அவன் கையிலிருந்து எத்தனை பட்டணங்களை திரும்பப் பெற்றுக்கொண்டான் என்பது தெரியவில்லை. இந்த வசனப்பகுதியில் கீலேயாத்திலுள்ள ராமோத்தைப்பற்றி மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணம் யோர்தானுக்கு அப்புறத்தில், காத் புத்திரரின் சுதந்தரத்திலிருக்கிறது.

கீலேயாத்திலுள்ள ராமோத் பட்டணத்தை சீரியா ராஜாவின் கையிலிருந்து இன்னும் பிடித்துக்கொள்ளாமலிருப்பதற்காக, ஆகாப் தன்னையும், தன்னுடைய ஜனங்களையும் குற்றம் சொல்லுகிறான். பெனாதாத் உடன்படிக்கையை மீறியதினால், ஆகாபும் அவனோடு செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையை மீறி, சீரியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தையும், ஆகாப் தன்னுடைய பக்கத்தில் சேர்த்துக்கொள்கிறான். ஆகாப் யோசபாத்தை நோக்கி, "கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ண என்னோடேகூட வருகிறீரா" என்று கேட்கிறான். யோசபாத்தும் அவனோடுகூட வர சம்மதம் தெரிவிக்கிறான்.

யோசபாத் கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். அவன் ஒரு நீதிமான். ஆகாபோ ஒரு துன்மார்க்கன். இஸ்ரவேல் தேசத்தில், ஆகாபின் பெயரால், யேசபேல் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். ஆனால் யோசபாத் ஆகாபை நோக்கி, "நான் தான் நீர்" என்றும், "என்னுடைய ஜனங்கள் உம்முடைய ஜனங்கள்" என்றும், "என்னுடைய குதிரைகள் உம்முடைய குதிரைகள்" என்றும் சொல்லுகிறான்.

யோசபாத் ஆகாபைப்போல ஒரு துன்மார்க்கனல்ல. யூதாஜனங்களும் இஸ்ரவேல் ஜனங்களைப்போல துன்மார்க்கரல்ல. ஆகாபும், இஸ்ரவேல் ஜனங்களும் அதிக துன்மார்க்கராயும், அதிக அக்கிரமக்காரராயும் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி பாகால்களை ஆராதிக்கிறார்கள்.

ஆகாப் துன்மார்க்கனாயிருந்தாலும், யோசபாத் அவனோடு ஐக்கியம் வைக்கிறான். யோசபாத்தைப்போல நல்லவர்களில் அநேகர் துன்மார்க்கரோடு சவகாசம் வைத்து, முடிவிலே சீரழிந்துபோகிறார்கள். அவர்கள் தங்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை அறியாதவர்களாயும், தங்களுக்கு மறைவாக வைக்கப்பட்டிருக்கும் கண்ணிகளை குறித்து கவலையில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். ஆகாப் இருளின் கிரியைகளை செய்கிறவன். அவன் அந்தகாரத்தின் புத்திரன்.

யோசபாத் ஆகாபை நோக்கி, "நான்தான் நீர்" என்று சொன்னான். யோசபாத் இப்படி சொன்னதற்கு, அவன் யுத்தக்களத்திலே மிகப்பெரிய கிரயத்தை செலுத்த வேண்டியதாயிற்று. சீரியர்கள் ஆகாபுக்கு பதிலாக யோசபாத்தை கொன்றுபோட வருகிறார்கள். யோசபாத் கர்த்தருடைய கிருபையினால் தப்பித்துக்கொள்கிறான்.

யோசபாத் இஸ்ரவேலோடு சேர்ந்து சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு மற்றும் ஒரு காரணமுமுள்ளது. யோசபாத்தின் தகப்பனார் சீரியரோடு சேர்ந்துகொண்டு, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். தன்னுடைய தகப்பனார் செய்த பாவத்திற்கு பாவநிவாரணமாக, யோசபாத் ஆகாபோடு சேர்ந்துகொண்டு, சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான்.

"எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடன்படிக்கை உண்டே; இதோ, உமக்கு வெகுமதியாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்புகிறேன்; இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷா என்னைவிட்டு விலகிப்போகும்படிக்கு, நீர் வந்து அவனோடு செய்த உடன்படிக்கையைத் தள்ளிப்போடும் என்று சொல்லச்சொன்னான். பெனாதாத், ராஜாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்து, தனக்கு உண்டான சேனாபதிகளை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும், தாணையும், பெத்மாக்கா என்னும் ஆபேலையும் கின்னரோத் அனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட முறிய அடித்தான்" (1இராஜா 15:19,20)

தீர்க்கதரிசிகள்
2நாளா 18:4-13

2நாளா 18:4. பின்னும் யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்து அறியும் என்றான்.

2நாளா 18:5. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நாங்கள் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டான். அதற்கு அவர்கள்: போம், தேவன் ராஜாவின் கையில் அதை ஒப்புக் கொடுப்பார் என்றார்கள்.

2நாளா 18:6. பின்பு யோசபாத்: நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா என்று கேட்டான்.

2நாளா 18:7. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் மற்றொருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே எப்பொழுதும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்றான். அதற்கு யோசபாத்: ராஜாவே, அப்படிச் சொல்ல வேண்டாம் என்றான்.

2நாளா 18:8. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா என்றான்.

2நாளா 18:9. இஸ்ரவேலின் ராஜாவும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுக வாசலுக்கு முன்னிருக்கும் விசாலமான இடத்திலே ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்திலே உட்கார்ந்திருந்தார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

2நாளா 18:10. கெனானாவின் குமாரனாகிய சிதேக்கியா தனக்கு இருப்புக்கொம்புகளை உண்டாக்கி, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

2நாளா 18:11. சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனஞ் சொல்லி, கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குப்போம், உமக்கு வாய்க்கும், கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்.

2நாளா 18:12. மிகாயாவை அழைக்கப்போன ஆள் அவனுடனே பேசி: இதோ, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படிக்கு நன்மையாகச் சொல்லும் என்றான்.

2நாளா 18:13. அதற்கு மிகாயா: என் தேவன் சொல்வதையே சொல்வேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.

சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதுபற்றி கர்த்தருடைய வார்த்தையை விசாரித்து அறியவேண்டுமென்று யோசபாத் ஆகாபுக்கு சொல்லுகிறான். யோசபாத் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன். அவன் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறவன். ஆகையினால் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிக்கவேண்டும் என்னும் விருப்பம் யோசபாத்தின் மனதிலிருக்கிறது.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோ கர்த்தருக்கு பயப்படாதவன். அவன் கர்த்தரிடத்தில் விசாரியாமல், தன் ஊழியக்காரரிடத்தில் இந்த யுத்தத்தைப்பற்றி விசாரித்தான் (1இராஜா 22:3). தன் ஊழியக்காரரிடத்தில் விசாரித்தது போதுமானது என்று ஆகாப் நினைக்கிறான். யோசபாத்தோ இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தையே இன்றைக்கு விசாரித்தறியும்" (2நாளா 18:4) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஜனம் எங்கே போனாலும், அங்கே அவர்கள் தங்களோடுகூட கர்த்தருடைய வார்த்தைகளையும் எடுத்துக்கொண்டு போவார்கள். நீதிமான்கள் எங்கே போனாலும் கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களோடு கூடயிருக்கும். அவர்கள் எல்லா இடங்களிலும் கர்த்தருக்கு பயந்து ஜீவிப்பார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதிக்க வெட்கப்படமாட்டார்கள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் கர்த்தரைவிட்டு விலகிப்போனவன். அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறவன். ஆகாபுக்கு கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்மேல் பிரியமாயில்லை.

ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய யோசபாத், ஆகாபைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தையை இன்றைக்கு விசாரித்தறியும்" என்று சொல்லுகிறான்.

ஆகாபினிடத்தில் ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். இவர்கள் தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள். இவர்கள் எல்லோருமே கள்ளத்தீர்க்கதரிசிகள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்கிறான். ஆகாப் அவர்களிடத்தில், "நான் கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா" என்று கேட்கிறான். அதற்கு அவர்கள், "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" (2நாளா 18:5) என்று சொல்லுகிறார்கள்.

ஆகாபின் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளும், அவனுடைய மனதிற்கு பிரியமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஆகாப் தீர்க்கதரிசிளிடத்தில் கேட்கும்போதே, "யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா" என்று கேட்கிறான். ஆகாப் கேட்கும் முறையை வைத்தே, அவனுடைய மனதின் விருப்பத்தை கள்ளத்தீர்க்கதரிசிகள் அறிந்துகொள்கிறார்கள். ஆகாபுக்கு பிரியமாகப் பேசவேண்டும். இதுவே தீர்க்கதரிசிகளின் நோக்கம். ஆகாப் தன் மனதில் நினைத்திருப்பதை உறுதிபண்ணவேண்டும். இதற்காகவே ஆகாப் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளை தன்னிடத்தில் கூடிவரச்செய்திருக்கிறான்.

ஆகாபின் கள்ளத்தீர்க்கதரிசிகள் இதுவரையிலும் அவனுக்கு பிரியமான வார்த்தைகளை மாத்திரமே சொன்னார்கள். இப்போதோ ஆகாபோடுகூட, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் இருக்கிறான். அவன் கர்த்தரை ஆராதிக்கிறவன். ஆகாபின் தீர்க்கதரிசிகள், சூழ்நிலைகளை நன்றாய் அறிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஆகாபுக்கு பிரதியுத்தரம் சொல்லும்போது, "ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள். ஆண்டவர் என்னும் பெயருக்கு அவர்கள் "அதோனாய்" என்னும் எபிரெய வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். இந்த வார்த்தை கர்த்தரைக் குறிக்கிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஆகாபை பிரியப்படுத்தும் வண்ணமாக, "போம்" என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் மத்தியிலே சிதேக்கியா என்பவன் இருக்கிறான். இவன் கள்ளத்தீர்க்கதரிசிகளில் பிரபல்யமானவன்.

கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா தனக்கு இருப்புக்கொம்புகளை உண்டாக்கி, இவைகளால் நீர் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப் போடுவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லுகிறான் (2நாளா 18:10).

சிதேக்கியா உண்டாக்குகிற இரண்டு இருப்பு கொம்புகளும், ஆகாபையும், யோசபாத்தையும் குறிக்கும். இவ்விரண்டு ராஜாக்களும் இருப்பு கொம்புகளைப்போல வல்லமையுள்ளவர்கள். அவர்கள் பெலமிக்கவர்கள். ஆகாபும் யோசபாத்தும் தங்களுடைய இருப்பு கொம்புகளினால் சீரியரை முட்டி நிர்மூலமாக்கிப்போடுவார்கள்.

சிதேக்கியா சொல்லுகிற தீர்க்கதரிசனத்தை, அங்கே கூடியிருக்கிற மற்ற தீர்க்கதரிசிகள் எல்லோரும் அங்கீகரிக்கிறார்கள். சகல தீர்க்கதரிசிகளும் அதற்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லி, "கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள் (2நாளா 18:11).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் விசாரிப்பதும், அவர்கள் அவனுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுவதும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்துக்கு மிகவும் விநோதமாயிருக்கிறது. யூதாதேசத்திலிருக்கிற கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், ஆகாபின் தீர்க்கதரிசிகளைப்போல தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் ஏறக்குறைய நானூறு பேரும் ஒன்றுபோல தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இது யோசபாத்திற்கு புதுமையாயிருக்கிறது.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் ஆவிகளைப் பகுத்தறிகிறவன். ஆகாபின் தீர்க்கதரிசிகளிடத்தில் தப்பிதம் இருப்பதை யோசபாத் தன் ஆவியில் உணருகிறான். ஆகையினால் யோசபாத் ஆகாபிடம், "நாம் விசாரித்து அறிகிறதற்கு இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி வேறே யாராகிலும் இங்கே இல்லையா" (2நாளா 18:6) என்று கேட்கிறான்.

ஆகாபினிடத்தில் வேறொரு தீர்க்கதரிசி இருக்கிறான். ஆனால் ஆகாப் அவனை வெறுக்கிறான். அவனுடைய பெயர் மிகாயா. இவன் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிக்கிறவன். மிகாயாவுக்கு கர்த்தருடைய மனதும், சித்தமும் தெரிந்திருக்கிறது.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், யோசபாத்தை நோக்கி: "கர்த்தரிடத்தில் விசாரித்து அறிகிறதற்கு இம்லாவின் குமாரனாகிய மிகாயா என்னும் இன்னும் ஒருவன் இருக்கிறான்; ஆனாலும் நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன்" (2நாளா 18:7) என்று சொல்லுகிறான்.

ஆகாப் மிகாயாவைப்பற்றிச் சொல்லும்போது, "அவன் என்னைக் குறித்து நன்மையாகயல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன்" என்று சொல்லுகிறான். ஆகாபைப்பற்றி நன்மையாகச் சொல்லுவதற்கு அவனிடத்தில் ஒன்றுமில்லை. இது மிகாயாவின் குற்றமல்ல. இது ஆகாபின் குற்றம். ஆகாப் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தால், கர்த்தரிடத்திலிருந்து அவனுக்கு நன்மையான வார்த்தைகள் வரும். ஆனால் ஆகாபோ தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறான்.

ஆகாப் நல்லவனாகயிருப்பானென்றால், அவனுக்கு பரலோகத்திலிருந்து நன்மையான செய்தியே வரும். ஆகாபைப்போல அநேகர் பாவத்தில் மூழ்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய அழிவுக்கு நேராக போய்க்கொண்டிருக்கிறார்கள். பாவிகள் கர்த்தரையும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் வெறுக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களுடைய பாவங்களைக் குறித்து சொல்லுவதையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து சொல்லுவதையும், பாவிகள் விரும்புவதில்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் மிகாயாவை சிறைச்சாலையில் அடைத்திருக்கிறான். ஆகாப் பெனாதாத்தோடு சமாதான உடன்படிக்கை பண்ணினபோது, மிகாயா ஆகாபை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொண்டான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள் (1இராஜா 20:38). இதன் நிமித்தமாய் ஆகாப் மிகாயாவின்மீது கோபப்பட்டு, அவனை சிறைச்சாலையில் அடைத்துவிடுகிறான். மிகாயா சிறைச்சாலையிலே மூன்று வருஷங்களாக அடைபட்டிருக்கிறான். ஆகையினால் ஆகாபுக்கு மிகாயா எங்கே இருக்கிறான் என்பது தெரிந்திருக்கிறது.

மிகாயா சிறையிலடைக்கப்பட்டாலும், கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை. கர்த்தருடைய வார்த்தையை யாராலும் சிறைப்படுத்த முடியாது. ஆகாப் மிகாயாவைக் குறித்து சொல்லுகிற வார்த்தைகளை யோசபாத் ஏற்றுக்கொள்ளவில்லை. யோசபாத் ஆகாபை மென்மையான வார்த்தைகளினால் கடிந்துகொள்கிறான். யோசபாத் ஆகாபை நோக்கி, "ராஜாவே, அப்படிச் சொல்லவேண்டாம்" (2நாளா 18:7) என்று சொல்லுகிறான். ஆகாபைப்போன்ற துன்மார்க்கரை மென்மையாகக் கடிந்துகொள்ளக்கூடாது. கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்தி, அவர்களுடைய இருதயத்தில் உணர்த்தும் வண்ணமாக கடிந்துசொல்லவேண்டும்.

ஆகாபுக்கு யோசபாத்தை பகைக்க மனமில்லை. ஆகாப் யோசபாத்திற்கு எதிர்த்து பேசினால், அவன் ஆகாபோடு சேர்ந்து, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரமாட்டான். யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு பண்ணியிருக்கிற சமாதான உடன்படிக்கைகளையெல்லாம் முறித்துப்போடுவான். ஆகையினால் ஆகாப் யோசபாத்தின் விருப்பத்தின் பிரகாரம், மிகாயாவை தன்னிடத்தில் அழைத்து வர சம்மதிக்கிறான்.

அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் பிரதானிகளில் ஒருவனைக் கூப்பிட்டு: "இம்லாவின் குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமாய் அழைத்துவா" என்று சொல்லுகிறான் (2நாளா 18:8).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்திலே ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டவர்களாய், அவரவர் தம்தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; சகல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறார்கள் (2நாளா 18:9).

இரண்டு ராஜாக்களும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த தீர்க்கதரிசிகள் எல்லோருமே தங்களுடைய சொந்த வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ராஜாக்களைப் பிரியப்படுத்தும் வண்ணமாக இனிமையான வார்த்தைகளை நயமாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் ஆகாபின் வீரத்தையும், யோசபாத்தின் வீரத்தையும் புகழ்ந்து சொல்லுகிறார்கள்.

சகல தீர்க்கதரிசிகளும் சிதேக்கியா சொன்ன வார்த்தைகளுக்கு இசைவாகத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபினிடத்தில், "கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போம், உமக்கு வாய்க்கும்; கர்த்தர் அதை ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறார்கள் (2நாளா 18:11).

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், தன் பிரதானிகளில் ஒருவனை கூப்பிட்டு, "மிகாயாவை சீக்கிரமாய் அழைத்து வா" என்று சொன்னான். மிகாயாவை அழைக்கப்போன பிரதானி, மிகாயாவினிடத்தில் பேசுகிறான்.

பிரதானி மிகாயாவை நோக்கி, "இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள் ஏகவாக்காய் ராஜாவுக்கு நன்மையாயிருக்கிறது; உம்முடைய வார்த்தையும் அவர்களில் ஒருவர் வார்த்தையைப்போல இருக்கும்படி நன்மையாகச் சொல்லும்" (2நாளா 18:12) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் தன்னிடத்தில் சொல்லுவதை மாத்திரமே மிகாயா சொல்லுவான். கர்த்தர் மிகாயாவுக்கு நன்மையான காரியங்களை வெளிப்படுத்தி இருக்கிறார். பிரதானி மிகாயாவிடம், "நன்மையாக சொல்லும்" என்று சொன்னான். மிகாயாவோ பிரதானியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான்.

மிகாயா பிரதானியை நோக்கி, "கர்த்தர் என்னிடத்தில் சொல்வதையே சொல்லுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (2நாளா 18:13) என்று சொல்லுகிறான்.

மிகாயா கர்த்தருக்கு உண்மையுள்ளவன். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தி இருக்கும் சத்தியத்தை மாத்திரமே சொல்லுவார்கள். தன்னுடைய வார்த்தையை பிரதானி ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு வாய்ப்புள்ளது என்று மிகாயாவுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் மிகாயா அவனிடம் "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று ஆணையிடுகிறான்.

மிகாயா
2நாளா 18:14-27

2நாளா 18:14. அவன் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: மிகாயாவே, நாங்கள் கீலேயத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா என்று கேட்டான். அதற்கு அவன்: போங்கள்; உங்களுக்கு வாய்க்கும்; உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் என்றான்.

2நாளா 18:15. ராஜா அவனைப் பார்த்து: நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும் என்று சொன்னான்.

2நாளா 18:16. அப்பொழுது அவன்: இஸ்ரவேலர் எல்லாரும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல மலைகளில் சிதறப்பட்டதைக் கண்டேன்; அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார் என்று சொன்னான்.

2நாளா 18:17. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தை நோக்கி: இவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்லவில்லையா என்றான்.

2நாளா 18:18. அப்பொழுது அவன் சொன்னது: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்.

2நாளா 18:19. அப்பொழுது கர்த்தர்: இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் கீலேயாத்திலுள்ள ராமோத்தில் போய் விழும்படிக்கு, அவனுக்குப் போதனைசெய்கிறவன் யார் என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.

2நாளா 18:20. அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: நான் அவனுக்குப் போதனைசெய்வேன் என்றது; எதினால் என்று கர்த்தர் அதைக் கேட்டார்.

2நாளா 18:21. அப்பொழுது அது: நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன் என்றது. அதற்கு அவர்: நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படியே செய் என்றார்.

2நாளா 18:22. ஆனதினால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளின் வாயிலே கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக்குறித்துத் தீமையாகச் சொன்னார் என்றான்.

2நாளா 18:23. அப்பொழுது கெனானாவின் குமாரனாகிய சிதேக்கியா கிட்டே வந்து: மிகாயாவைக் கன்னத்தில் அடித்து, கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது என்றான்.

2நாளா 18:24. அதற்கு மிகாயா: நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய் என்றான்.

2நாளா 18:25. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா: நீங்கள் மிகாயாவைப் பிடித்து, அவனைப் பட்டணத்துத் தலைவனாகிய ஆமோனிடத்துக்கும், ராஜகுமாரனாகிய யோவாசிடத்துக்கும் திரும்பக் கொண்டுபோய்,

2நாளா 18:26. அவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே திரும்பிவருமளவும், அவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள் என்றான்.

2நாளா 18:27. அப்பொழுது மிகாயா: நீர் சமாதானத்தோடே திரும்பிவந்தால், கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லை என்று சொல்லி; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் கேளுங்கள் என்றான்.

கர்த்தர் தன்னிடத்தில் சொன்னதை மிகாயா இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபுக்கு சொல்லுகிறான். தான் சொல்லப்போகும் செய்தியை, மிகாயா மூன்று விதமாக ஆகாபுக்கு சொல்லுகிறான். இம்மூன்றுமே ஆகாபுக்கு பிரியமாய் இல்லை.

மிகாயா ஆகாப் ராஜாவினிடத்தில் வந்தபோது, ராஜா அவனைப் பார்த்து: "மிகாயாவே, நாங்கள் கிலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப் போகலாமா, போகலாகாதா" (2நாளா 18:14) என்று கேட்கிறான்.

மிகாயா ஆரம்பத்தில், மற்ற தீர்க்கதரிசிகள் ஏற்கனவே சொன்ன வார்த்தைகளுக்கு இசைவாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். "போம், உமக்கு வாய்க்கும் " என்று மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான்.

ஆகாப் இதே கேள்வியைத்தான் மற்றவர்களிடத்திலும் கேட்டான். "அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா ஏறக்குறைய நானூறு தீர்க்கதரிசிகளைக் கூடிவரச்செய்து: நான் கிலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போகலாமா, போகலாகாதா என்று அவர்களைக் கேட்டதற்கு; அவர்கள், போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றார்கள்" (2நாளா 18:5).

நானூறு தீர்க்கதரிசிகளும் தனக்கு தீர்க்கதரிசனம் சொன்ன பிரகாரமாகவே, மிகாயாவும் தனக்கு ஆறுதலான செய்தியை சொல்லுவான் என்று ஆகாப் எதிர்பார்க்கிறான். நானூறு தீர்க்கதரிசிகள் சொன்னது ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையாக தெரியவில்லை. மிகாயா சொன்னால் அது கர்த்தருடைய வார்த்தையாக இருக்கும் என்று ஆகாப் நம்புகிறான். ஆனாலும் மிகாயா தனக்கு ஆறுதலான செய்தியை சொல்லவேண்டும் என்று ஆகாப் எதிர்பார்க்கிறான்.

மிகாயா மற்ற தீர்க்கதரிசிகள் சொன்ன வார்த்தைக்கு இசைவாக, "போம், உமக்கு வாய்க்கும், கர்த்தர் அதை இராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று சொல்லுகிறான். ஆனால் ஆகாப் இராஜா மிகாயாவின் வார்த்தையை நம்பவில்லை.

ஆகாப் ராஜா மிகாயாவைப் பார்த்து: "நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும்" (2நாளா 18:15) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன்னிடத்தில் வருந்தி கேட்டபோது, மிகாயா அவனுக்கு எதையும் மறைக்காமல் கர்த்தர் தனக்கு சொன்னதை அவனிடத்தில் சொல்லுகிறான். கர்த்தர் மிகாயாவுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்திருக்கிறார். மிகாயா ஆகாபிடத்தில் தான் கண்ட தரிசனத்தை சொல்லுகிறான்.

மிகாயா ஆகாபை நோக்கி, "இஸ்ரவேலரெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல மலைகளிலே சிதறப்பட்டதைக் கண்டேன்" என்றும், "அப்பொழுது கர்த்தர்: இவர்களுக்கு எஜமான் இல்லை; அவரவர் தம்தம் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்கள் என்றார்" (2நாளா 18:16) என்றும், சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது அவனுக்கு தோல்வி உண்டாகும் என்றும், இந்த யுத்தத்திலே ஆகாப் செத்துப்போவான் என்றும், இஸ்ரவேலரின் சேனை சிதறிப்போகும் என்றும் மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான்.

இஸ்ரவேலர் எல்லோரும் ஆடுகளைப்போல இருக்கிறார்கள். ஆகாப் அவர்களெல்லோரையும் மேய்த்து வழிநடத்துகிற மேய்ப்பனைப்போல இருக்கிறான். ஆகாப் செத்துப்போனால் இஸ்ரவேலர் எல்லோரும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருப்பார்கள். அவர்கள் மலைகளிலே சிதறப்பட்டிருப்பார்கள்.

ஆகாப் இஸ்ரவேலருக்கு ராஜாவாயிருக்கமாட்டான் என்னும் தீர்க்கதரிசன செய்தியை மிகாயா வெளிப்படுத்துகிறான். தங்களுடைய ராஜா செத்துப்போனதினால், இஸ்ரவேலர் எல்லோரும் அவரவர் தம்தம் வீட்டிற்கு சாதானத்தோடே திரும்புவார்கள். ஆகாப் ராஜா செத்துப்போன பின்பு, இஸ்ரவேலரின் சேனையில் அதிகமான ஜீவசேதாரம் ஏற்படாது.

மிகாயா ஆகாப் ராஜாவினிடத்தில் தான் கண்ட தரிசனத்தைப்பற்றியும், கர்த்தரிடத்திலிருந்து தான் கேட்ட செய்தியைப்பற்றியும் சொல்லுகிறான்.

மிகாயா சொன்ன செய்தி ஆகாபுக்கு பிடிக்கவில்லை. யூதாவின் ராஜாவாகிய யோசபாத் ஆகாபுக்கு அருகில் அமர்ந்திருக்கிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் யோசபாத்தை நோக்கி: "இவன் என்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவன் என்று நான் உம்மோடே சொல்லவில்லையா" (2நாளா 18:17) என்று சொல்லுகிறான்.

ஆகாப் தன்னைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசினாலும், மிகாயா கர்த்தர் தன்னிடத்தில் சொன்னதை அப்படியே சொல்லுகிறான். ஆகாபினிடத்தில் நானூறு தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஆகாபுக்கு சாதகமாக இசைவான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். பொய்சொல்லுகிறவர்கள்.

ஆகாபின் தீர்க்கதரிசிகள் எவ்வாறு பொய்சொல்லுகிறார்கள் என்பதையும் மிகாயா ஆகாபுக்கு சொல்லுகிறான். மிகாயா ஆகாபை நோக்கி, "கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்; கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதையும், பரமசேனையெல்லாம் அவரிடம் அவர் வலதுபக்கத்திலும் அவர் இடதுபக்கத்திலும் நிற்கிறதையும் கண்டேன்" என்று சொல்லுகிறான்.

மிகாயா ஒரு தரிசனத்தைக் கண்டான். அந்த தரிசனத்தில் கர்த்தர் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். பரமசேனையெல்லாம் அவருடைய வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் வீற்றிருக்கிறார்கள்.

அப்பொழுது கர்த்தர்: "ஆகாபினிடத்தில் போய், கீலேயாத்திலுள்ள ராமோத்தில் விழும்படிக்கு, அவனுக்குப் போதனை செய்கிறவன் யார்" என்று கேட்கிறார். அதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொல்லுகிறார்கள் (2நாளா 18:19).

அப்பொழுது ஒரு ஆவி புறப்பட்டு வந்து, கர்த்தருக்கு முன்பாக நின்று: "நான் அவனுக்குப் போதனை செய்வேன்" என்று சொல்லுகிறது. "எதினால்" என்று கர்த்தர் அதைக் கேட்கிறார். அப்பொழுது அது: "நான் போய், அவனுடைய தீர்க்கதரிசிகள் எல்லாரின் வாயிலும் பொய்யின் ஆவியாய் இருப்பேன்" என்று சொல்லுகிறது. அதற்கு கர்த்தர்: "நீ அவனுக்குப் போதனைசெய்து அப்படி நடக்கப்பண்ணுவாய்; போய் அப்படிச் செய்" *(2நாளா 18:20,21)* என்று சொல்லுகிறார்.

மிகாயா ஆகாபிடம், "ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்; கர்த்தர் உம்மைக் குறித்துத் தீமையாகச் சொன்னார்" *(2நாளா 18:22)* என்று சொல்லுகிறான்.

ஆகாபை வஞ்சித்து அவனை அழிப்பதற்கு, கர்த்தர் சாத்தானுக்கு அனுமதி கொடுக்கிறார். இந்த இரகசியத்தை மிகாயா ஒரு தரிசனத்தின் மூலமாய் காண்கிறான். ஆகாப் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், கர்த்தரே எல்லா ராஜாக்களையும் விட உயர்ந்தவர். அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறவர். கர்த்தருடைய சிங்காசனம் இந்தப் பூமியிலுள்ள எல்லா ராஜாக்களின் சிங்காசனத்தையும்விட உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக இந்தப் பிரபஞ்சத்தின் ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச் செய்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிற ராஜாக்களை, கீழே தள்ளிவிடுகிறார். கர்த்தருடைய சித்தத்தினால் தேசங்கள் ஸ்தாபிக்கப்பட்டு எழும்புகிறது. அவருடைய சித்தத்தினாலேயே தேசங்கள் விழுந்து அழிந்துபோகிறது.

தேசங்கள் ஒன்றுக்கு விரோதமாக மற்றொன்று சண்டை போட்டுக்கொள்கிறது. மனுஷர் மத்தியிலே பேரழிவு உண்டாகிறது. பல தேசங்களிலே எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறுகிறது. மனுஷர் தங்களுடைய சுயஞானத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ராஜாக்களும் ஞானிகளுடைய ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறார்கள். மனுஷருடைய திட்டங்கள் எதுவாகயிருந்தாலும், கர்த்தருடைய தெய்வீக திட்டமே நிறைவேறும்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். இந்தப் பிரபஞ்சத்தில் நடக்கிற சிறிய காரியமாகயிருந்தாலும், பெரிய காரியமாகயிருந்தாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறும். கர்த்தரே சகல காரியங்களையும் வழி நடத்துகிறார். அவரே சர்வத்தையும் ஆளுகை செய்கிறார். கர்த்தர் சர்வஆளுநர்.

சாத்தான் மனுஷரை வஞ்சிக்கிறான். ஆனாலும் கர்த்தருடைய தெய்வீக அனுமதியில்லாமல், சாத்தானால் மனுஷரை வஞ்சிக்க முடியாது. மனுஷரை வஞ்சிப்பதற்கு, கர்த்தர் சாத்தானுக்கு அனுமதி கொடுத்தாலும், அதன் மூலமாகவும், கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றவும் செய்கிறார்.

மிகாயா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபை எச்சரிக்கிறான். கீலேயாத்திலுள்ள ராமோத்தின்மேல் யுத்தம்பண்ணப்போனால், ஆகாபுக்கு ஆபத்து உண்டாகும் என்று சொல்லுகிறான். ஆகாபின் நானூறு கள்ளத்தீர்க்கதரிசிகளும், ஆகாபினிடத்தில், "போம், ஆண்டவர் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று பொய்சொல்லுகிறார்கள்.

ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனால் அவனுக்கு ஆபத்து வரும். ஆகாப் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டால், அவனுக்கு அதைவிட பெரிய ஆபத்து வரும்.

மிகாயா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லுகிறான். ஆகாபும், அவனோடு கூடயிருக்கிற கள்ளத்தீர்க்கதரிசிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். மிகாயா ஆகாபுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அங்கே சிதேக்கியா என்னும் கள்ளத்தீர்க்கதரிசியும் இருக்கிறான். இவன் கேனானாவின் குமாரன்.

சிதேக்கியா ஆகாபின் கிட்டே வந்து மிகாயாவைக் கன்னத்தில் அடிக்கிறான். சிதேக்கியா மிகாயாவிடம், "கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டு உன்னோடே பேசும்படி வந்தது" என்று கேட்கிறான் (2நாளா 18:23).

மிகாயா இதற்குமேல் பேசக்கூடாது என்பது சிதேக்கியாவின் திட்டம். மிகாயாவின் வாயை அடைத்து, அவனை பேசவிடாமல் தடுப்பதற்காக, சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கிறான். இரண்டு ராஜாக்களுக்கு முன்பாக இந்த சம்பவம் நடைபெறுகிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும், சமாரியாவின் ஒலிமுகவாசலுக்கு முன்னிருக்கும் விசாலத்தில், ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டவர்களாய், அவரவர் தம் தம் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

சிதேக்கியாவோ மிகவும் துணிச்சலாக, இரண்டு ராஜாக்களுக்கு முன்பாக, மிகாயாவைக் கன்னத்தில் அடிக்கிறான். மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தருடைய ஊழியக்காரர்களை அவமானப்படுத்துகிறவர்கள், கர்த்தரையே அவமானப்படுத்துகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசி கர்த்தருடைய தீர்க்கதரிசியை அடிக்கிறான். மிகாயாவோ சிதேக்கியாவைப் பதிலுக்குப் பதில் அடிக்கவில்லை.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் குற்றவாளியைப் பிடித்து தண்டிக்கவேண்டும். சிதேக்கியா மிகாயாவை கன்னத்தில் அடிக்கும்போது, ஆகாப் ஒன்றும் சொல்லாமல், ஒன்றும் செய்யாமல் அமைதியாயிருக்கிறான். ஆகாப் தன்னுடைய தப்பிதத்தை உணர்ந்துகொள்வான். அப்பொழுது மிகாயா: "நீ ஒளித்துக் கொள்ள உள்ளறையிலே பதுங்கும் அந்நாளிலே அதைக் காண்பாய்" (2நாளா 18:24) என்று சொல்லுகிறான்.

ஆகாப் சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, சிதேக்கியாவும் அவனோடுகூட யுத்தத்திற்குப்போயிருக்க வேண்டும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அவன் யுத்தக்களத்திற்கு தன்னிடத்திலிருந்த இரண்டு இருப்பு கொம்புகளோடு போனான் என்றும், அந்தக் கொம்புகளைக் காண்பித்து, இஸ்ரவேலின் சேனையை உற்சாகப்படுத்தினான் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

சிதேக்கியா ஏற்கெனவே இருப்பு கொம்புகளைக் காண்பித்து தீர்க்கதரிசனம் சொன்னான் (2நாளா 18:10) . தன்னுடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைப் பார்ப்பதற்காக, சிதேக்கியா இருப்பு கொம்புகளோடு யுத்தக்களத்திற்குப் போயிருக்கிறான். ஆனால் இந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் தோற்றுப்போகிறார்கள். இஸ்ரவேலின் சேனை சிதறி ஓடிப்போகிறார்கள். இஸ்ரவேலின் சேனைகள் தோற்று ஓடிப்போகும்போது, சிதேக்கியாவும் அவர்களோடேகூட, தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள ஓடிப்போகிறான்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத், யுத்தத்திலே தோற்றுப்போனபோது உள்ளறையிலே ஒளிந்துகொண்டான். பெனாதாத்தைப்போலவே, கள்ளத்தீர்க்கதரிசியாகிய சிதேக்கியாவும், இஸ்ரவேலின் யுத்தவீரர்களோடு, தன்னை ஒளித்துக்கொள்ள உள்ளறையிலே பதுங்குகிறான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மிகாயா தீர்க்கதரிசனம் சொன்ன பிரகாரமாக, தன்னை ஒளித்துக்கொள்ள, உள்ளறையிலே பதுங்கும் அந்நாளில், மிகாயா சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுவதைக் காண்கிறான்.

"மீதியானவர்கள் ஆப்பெக் பட்டணத்திற்குள் ஓடிப்போனார்கள்; அங்கே மீதியாயிருந்த இருபத்தேழாயிரம்பேரின் மேல் அலங்கம் இடிந்து விழுந்தது; பெனாதாத்தும் ஓடிப்போய் நகரத்திற்குள் புகுந்து, உள்ளறையிலே பதுங்கினான்" (1இராஜா 20:30).

மிகாயாவின் வார்த்தைகளைக் கேட்டு ஆகாப் ராஜாவுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், "மிகாயாவைப் பிடித்து, அவனைப் பட்டணத்துத் தலைவனாகிய ஆமோனிடத்திற்கும், ராஜாவின் குமாரனாகிய யோவாசிடத்திற்கும் திரும்பக் கொண்டுபோய், இவனைச் சிறைச்சாலையிலே வைத்து, நான் சமாதானத்தோடே வருமளவும், இவனுக்கு இடுக்கத்தின் அப்பத்தையும் இடுக்கத்தின் தண்ணீரையும் சாப்பிடக் கொடுங்கள் என்று ராஜா சொன்னார் என்று சொல்லுங்கள்" *(2நாளா 18:25,26)* என்று சொல்லுகிறான்.

ஆகாப் இன்னும் தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நம்புகிறான். சீரியருக்கு விரோதமான யுத்தத்திலே தனக்கு வெற்றி கிடைக்கும் என்றும், தான் சமாரியாவுக்கு சமாதானத்தோடே திரும்பி வரப்போவதாகவும் ஆகாப் நம்புகிறான். ஆனால் கர்த்தருடைய வார்த்தையோ ஆகாபுக்கு விரோதமாயிருக்கிறது. ஆகாப் அழிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறான்.

ஆகாப் மிகாயாவுக்கு தன்னுடைய தீர்ப்பைச் சொல்லும்போது, அங்கே ஏராளமான ஜனங்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் கூட்டமாய் நிற்கிறார்கள். மிகாயா கர்த்தருடைய வார்த்தையை எல்லா ஜனங்களுக்கும் முன்பாக சாட்சியாய் அறிவிக்கிறான்.

அப்பொழுது மிகாயா: "நீர் சமாதானத்தோடே திரும்பிவருகிறது உண்டானால், கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லை என்று சொல்லி; ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேளுங்கள்" *(2நாளா 18:27)* என்று சொல்லுகிறான்.

ஆகாப் ராஜா சமாதானத்தோடே திரும்பி வந்தால், மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி அல்ல என்பதும், அவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்பதும் நிரூபணமாகும். மிகாயா கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசி. அங்கே கூடியிருக்கிற நானூறுபேரும் கள்ளத்தீர்க்கதரிசிகள். அவர்கள் பொய்யின் ஆவியினால் நிரப்பப்பட்டு பொய்களை பேசுகிறவர்கள். மிகாயா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன பிரகாரம், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், சமாரியாவுக்கு உயிரோடே திரும்பி வரவில்லை. ஆகாப் யுத்தத்திலே செத்துப்போகிறான்.

ஆகாபின் மரணம்
2நாளா 18:28-34

2நாளா 18:28. பின்பு இஸ்ரவேலின் ராஜாவும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போனார்கள்.

2நாளா 18:29. இஸ்ரவேலின் ராஜா யோசபாத்தைப் பார்த்து: நான் வேஷமாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; நீரோ ராஜவஸ்திரம் தரித்திரும் என்று சொல்லி, இஸ்ரவேலின் ராஜா வேஷமாறி யுத்தத்தில் பிரவேசித்தான்.

2நாளா 18:30. சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் தலைவரை நோக்கி: நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல், இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டிருந்தான்.

2நாளா 18:31. ஆதலால் இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், இவன்தான் இஸ்ரவேலின் ராஜா என்று சொல்லி யுத்தம்பண்ண அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்; அப்பொழுது யோசபாத் கூக்குரல் இட்டான்; கர்த்தர் அவனுக்கு அநுசாரியாயிருந்தார்; அவர்கள் அவனை விட்டு விலகும்படி தேவன் செய்தார்.

2நாளா 18:32. இவன் இஸ்ரவேலின் ராஜா அல்ல என்று இரதங்களின் தலைவர் கண்டபோது அவனைவிட்டுத் திரும்பினார்கள்.

2நாளா 18:33. ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான், அது இஸ்ரவேலின் ராஜாவினுடைய கவசத்தின் சந்துக்கிடையிலே பட்டது; அப்பொழுது அவன் தன் சாரதியைப் பார்த்து: நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டு போ, எனக்குக் காயம்பட்டது என்றான்.

2நாளா 18:34. அன்றையதினம் யுத்தம் அதிகரித்தது; இஸ்ரவேலின் ராஜா சீரியருக்கு எதிராக இரதத்தில் சாயங்காலமட்டும் நின்றிருந்து, சூரியன் அஸ்தமிக்கும்போது இறந்துபோனான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபும், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்துக்குப் போகிறார்கள் *(2நாளா 18:28)*. யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். அவன் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும் முன்பு, கர்த்தருடைய தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்க வேண்டும் என்று சொன்னான். யோசபாத் ஆகாபின் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை நம்பவில்லை.

மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப் போகவேண்டாம் என்று மிகாயா கர்த்தருடைய நாமத்தினால் எச்சரித்தான். ஆனால் யோசபாத்தோ மிகாயாவின் வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை. யோசபாத் ஆகாபோடு சேர்ந்து கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு போகிறான்.

தீயசிநேகத்தினால் தீயசுபாவங்கள் உண்டாகும். யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருந்தாலும், ஆகாபின் சிநேகம் அவனை கர்த்தரைவிட்டு வழிவிலகிப்போகப்பண்ணுகிறது. ஆகாபின் தீர்க்கதரிசிகள் நானூறு பேர் இருக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியோ மிகாயா ஒருவன் மாத்திரம் இருக்கிறான். யோசபாத் திரளான எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். நானூறு தீர்க்கதரிசிகளும் சேர்ந்து, ஒரே செய்தியை ஏகமாய் சொன்னதினால், அவர்களுடைய வார்த்தை உண்மையாயிருக்கும் என்று யோசபாத் நம்புகிறான்.

ஆகாபும் யோசபாத்தும் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண சேர்ந்து போகிறார்கள். ஆகாப் யோசபாத்தை தன்னுடைய சிநேகிதன் என்று சொல்லிக்கொள்கிறான். ஆனால் ஆகாபின் இருதயத்தில் உண்மையான சிநேகமில்லை. அவனிடத்தில் சுயநலம் காணப்படுகிறது. சீரியருக்கு விரோதமான யுத்தத்தில் தனக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்றும், யோசபாத் தப்பிக்காவிட்டாலும், தான் தப்பித்துக்கொள்ளவேண்டும் என்றும் ஆகாப் சதிஆலோசனை பண்ணுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் யோசபாத்தை நோக்கி: "நான் வேஷம்மாறி யுத்தத்தில் பிரவேசிப்பேன்; நீரோ ராஜவஸ்திரம் தரித்திரும்" என்று சொல்லுகிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் வேஷம்மாறி, யுத்தத்தில் பிரவேசிக்கிறான் *(2நாளா 18:29)*.

ஆகாப் ராஜவஸ்திரங்களைக் களைந்துபோட்டுவிட்டு, ஒரு சாதாரண யுத்தவீரனைப்போல வேஷம் தரித்து, யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போகிறான். இதன் மூலமாக ஆகாப் யோசபாத்தை கனம்பண்ணுவதுபோல மாய்மாலம் பண்ணுகிறான். யோசபாத்தே ராஜா என்றும், தான் அவனுக்கு கீழே சேவை செய்கிற சாதாரண யுத்தவீரன் என்றும் ஆகாப் தன்னை தாழ்த்தி வேஷம் போடுகிறான்.

ஆனால் ஆகாபின் மனதில் தீயசிந்தனை இருக்கிறது. யுத்தத்திலே தனக்கு ஆபத்து வரும் என்பது ஆகாபுக்கு நன்றாய்த் தெரியும். மிகாயா கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவன் பொய் சொல்லமாட்டான். ஆகாப் சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனாலும், தனக்கு வரும் ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக்கொள்வது என்னும் யோசனையே, ஆகாபின் மனதில் அதிகமாயிருக்கிறது. இதற்காக அவன் தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினால் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தை வஞ்சிக்கிறான்.

யோசபாத் நற்குணமுள்ளவன். அவன் மெய்யாகவே ஆகாப் மீது சிநேகமாயிருக்கிறான். ஆனால் ஆகாபுக்கு யோசபாத் மீது மெய்யான அன்பு இல்லை. கர்த்தரை வஞ்சிக்கிறவர்கள் மனுஷரையும் வஞ்சிப்பார்கள். கர்த்தருக்கு உண்மையில்லாதவர்கள் மனுஷருக்கும் உண்மையுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். ஆகாப் கர்த்தரை விட்டுப் பிரிந்துபோனவன். அவன் ஒரு துன்மார்க்கன். ஆகாபினிடத்தில் மெய்யான சகோதர சிநேகம் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். ஆனால் அவனுக்கு யுத்த தந்திரங்களும், யுத்தவியூகங்களும் தெரியவில்லை. அவன் ஆகாபின் வார்த்தைகளை நம்புகிறான். ஆகாப் தன்னை கனம்பண்ணுகிறான் என்று யோசபாத் நினைக்கிறான். ஆகாப் யோசபாத்தை கனம்பண்ணுவதுபோல கனம்பண்ணி, அவனை ஆபத்தான சூழ்நிலையில் சிக்க வைத்துவிடுகிறான். இதனால் யோசபாத்தின் ஜீவனுக்கு ஆபத்து வருகிறது. கர்த்தரோ தமது பெரிதான கிருபையினால் யோசபாத்தை மரணத்திற்கு தப்புவிக்கிறார்.

சீரியாவின் ராஜா தன்னுடைய யுத்த வியூகங்களை, தன்னுடைய சேனைத்தலைவர்களுக்கு சொல்லுகிறான். சீரியாவின் ராஜா தனக்கு இருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவரையும் நோக்கி: "நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல் இஸ்ரவேலின் ராஜா ஒருவனோடேமாத்திரம் யுத்தம்பண்ணுங்கள்" (2நாளா 18:30) என்று கட்டளையிடுகிறான்.

சீரியருக்கு யூதாதேசத்தின்மீது பகையில்லை. அவர்களுக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது மாத்திரமே பகை இருக்கிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் மாத்திரமே சீரியரின் பிரதான சத்துரு. ஆகாபை உயிரோடு பிடித்து அவனைக் கைதுபண்ணி சிறையிலடைக்கவேண்டுமென்பது, சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தின் திட்டம்.

சீரியாவின் படைத்தலைவர்கள், யுத்தக்களத்திலே, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைத் தேடி பார்க்கிறார்கள். ஆகாபோ அங்கே சாதாரண போர்வீரனைப்போல வேஷம்மாறி, யுத்தக்களத்திலே நிற்கிறான். சீரியரின் படைத்தலைவர்களால் ஆகாபை கண்டுபிடிக்க முடியவில்லை.

யுத்தக்களத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோசபாத், ராஜவஸ்திரம் தரித்து, ரதத்தில் ஏறி, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். சீரியரின் படைத்தலைவர்கள், ராஜவஸ்திரம் தரித்திருக்கிற யோசபாத்தை பார்க்கிறார்கள்.

இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் காண்கையில், "இவன் தான் இஸ்ரவேலின் ராஜா" என்று சொல்லி யுத்தம்பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்துவருகிறார்கள் (2நாளா 18:31) அவர்கள் அவனை ஆகாப் என்று நினைத்து, யோசபாத்திற்கு அருகாமையில் வருகிறார்கள். தன்னுடைய ஜீவனுக்கு வரப்போகும் ஆபத்தை யோசபாத்தும் அறிந்துகொள்கிறான். அப்பொழுது யோசபாத் கூக்குரலிடுகிறான்.

சீரியருடைய இரதங்களின் தலைவர்கள், யோசபாத்திற்கு அருகாமையில் வரும்போது, அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் அல்ல என்பதை புரிந்துகொள்கிறார்கள். அவர்கள் யோசபாத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். யோசபாத்தைப் பிடிக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமல்ல. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபைப் பிடிக்கவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோ, ஒரு சாதாரண யுத்தவீரனைப்போல வேஷம் மாறி, யுத்தக்களத்திலே யுத்தம்பண்ணுகிறான். அப்பொழுது ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான்; அது இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் படுகிறது; அப்பொழுது ஆகாப் தன் சாரதியைப் பார்த்து: "நீ திருப்பி என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது" (2நாளா 18:33) என்று சொல்லுகிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு எந்த மனுஷனாலும் தப்பிக்க முடியாது. ஆகாப் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். கர்த்தர் அவனை மரணத்திற்கு நியமித்து விடுகிறார். ஆகாபோ, வேஷம் மாறி, மரணத்திற்கு தப்பிக்கலாம் என்று திட்டமிடுகிறான். கர்த்தருடைய திட்டத்திற்கு முன்பாக, மனுஷருடைய திட்டங்கள் செயலிழந்துபோகும். நம்முடைய திட்டங்களும், விருப்பங்களும், கர்த்தருடைய திட்டத்திற்கும், விருப்பத்திற்கும் ஒத்துப்போகவேண்டும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

சீரியரில் ஒருவன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான். அவன் ஆகாபுக்கு விரோதமாக குறிபார்த்து வில்லை நாணேற்றவில்லை. ஆனால் அந்த வில் ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் படுகிறது. ஆகாபுக்கு விரோதமாக குறிபார்த்து எய்யப்பட்டதுபோல, அது அவனுடைய மார்பில் பாய்கிறது. ஆகாபுக்கு பெருங்காயமுண்டாயிற்று. ஆகாபின் மார்பு பகுதி முழுவதும் கவசத்தால் மூடப்பட்டிருக்கிறது. கவசத்தின் சந்துகள் மாத்திரமே, அம்பு ஊடுருவி பாயக்கூடிய இடம். சீரியன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்கிறான். அது சரியாக ஆகாபினுடைய கவசத்தின் சந்துகளுக்குள் ஊடுருவிப் பாய்கிறது.

சீரியன் நினையாமல் அம்பை எய்தாலும், அது சரியான ஆள் மீது தான் பாய்ந்திருக்கிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின்மீது அம்பு பாய்கிறது. அந்த அம்பும், அவனுடைய சரீரத்தில், சரியான இடத்தில் பாய்கிறது. அவனுடைய கவசத்தின் சந்துகளுக்குள் அம்பு ஊடுருவுகிறது.

அன்றையதினம் யுத்தம் அதிகரிக்கிறது; ஆகாப் ராஜாவைச் சீரியருக்கு எதிராக இரதத்தில் நிறுத்திவைக்கிறார்கள்; சாயங்காலத்திலே ஆகாப் இறந்துபோகிறான்; காயத்தின் இரத்தம் இரதத்தின் தட்டிலே வடிகிறது (2நாளா 18:34).

யுத்தக்களத்திலே ராஜவஸ்திரம் தரித்திருப்பது பாதுகாப்பானதல்ல. யோசபாத்தோ ராஜவஸ்திரம் தரித்திருக்கிறான். ஆகாப் கவசம் அணிந்திருக்கிறான். கவசமே யுத்தக்களத்தில் பாதுகாப்பானது. ஆனால் இந்த யுத்தத்தில் ராஜவஸ்திரம் தரித்திருக்கிற யோசபாத் பிழைத்துக்கொள்கிறான். கவசம் தரித்திருக்கிற ஆகாப் செத்துப்போகிறான். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தரே நமக்கு மெய்யான பாதுகாப்பு. கவசமோ, ஆயுதமோ நமக்கு பாதுகாப்பு இல்லை.

19 அதிகாரம்

யோசபாத்தின் நல்ல ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் எருசலேமிலுள்ள தன் வீட்டிற்கு சமாதானத்தோடே திரும்பி வருகிறான் (2நாளா 19:1).

யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சிநேகம் வைத்திருந்தான். இதன் நிமித்தமாக கர்த்தர் யோசபாத்தை ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ என்பவன் மூலமாய்க் கடிந்துகொள்கிறார் (2நாளா 19:2,3).

யோசபாத் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியையும், நியாயவிசாரிப்புகளிலே சீர்திருத்தங்களையும் கொண்டு வருகிறான் (2நாளா 19:4). யோசபாத் தன்னுடைய நியாயாதிபதிகளுக்கு சொன்ன கட்டளைகள். இந்த நியாயாதிபதிகள் பட்டணங்களிலும் கிராமங்களிலும் இருக்கிறார்கள் (2நாளா 19:5-7).

யோசபாத் எருசலேமிலுள்ள நியாயாதிபதிகளுக்கு கட்டளை கொடுக்கிறான். யூதாதேசத்திலே எருசலேமிலுள்ள நீதிமன்றம் உச்சநீதிமன்றமாயிருக்கிறது (2நாளா 19:8-11).

ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ
2நாளா 19:1-4

2நாளா 19:1. யூதாவின் ராஜாவாகிய யோசபாத், எருசலேமிலுள்ள தன் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பிவந்தான்.

2நாளா 19:2. அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன் புறப்பட்டு, அவனைச் சந்தித்து, ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது.

2நாளா 19:3. ஆகிலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்தில் காணப்பட்டது உண்டு என்றான்.

2நாளா 19:4. யோசபாத் எருசலேமிலே வாசமாயிருந்து, திரும்பப் பெயர்செபா தொடங்கி, எப்பிராயீம் மலைத்தேசமட்டுமுள்ள ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப் போய், அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் இடத்திற்குத் திரும்பப்பண்ணினான்.

கர்த்தர் யோசபாத்திற்கு அதிகமான கிருபைகளையும், இரக்கங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார். யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சிநேகம் வைத்திருந்தான். ஆகாப் ஒரு துன்மார்க்கன். யோசபாத்தோ அந்த துன்மார்க்கனுக்கு துணை போனவன்.

ஆகாபும் யோசபாத்தும் கீலேயாத்திலுள்ள ராமோத்திற்கு யுத்தம் பண்ணப்போனபோது, இரண்டுபேருடைய ஜீவனுக்குமே ஆபத்து உண்டாயிற்று. இந்த யுத்தத்திலே ஆகாப் செத்துப்போகிறான். யோசபாத்தோ கர்த்தருடைய கிருபையினால் உயிர் பிழைத்துக்கொள்கிறான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத், கிலேயாத்திலுள்ள ராமோத்திலிருந்து எருசலேமிலுள்ள தன் வீட்டிற்கு, சமாதானத்தோடே திரும்பி வருகிறான் (2நாளா 19:1). நம்முடைய வீட்டிற்கு நாம் சமாதானத்தோடு திரும்பி வரும்போது, கர்த்தருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தரே நம்முடைய போக்கிலும் வரத்திலும் நம்மோடு கூடயிருந்து நம்மைப் பாதுகாக்கிறார். கர்த்தருடைய தெய்வீக கிருபையினாலும், பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும் நமக்கு சமாதானம் உண்டாகிறது.

கர்த்தர் கொடுக்கும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு யோசபாத்திற்கு ஒரு தகுதியுமில்லை. அவன் ஆகாப் என்னும் துன்மார்க்கனுக்கு துணைபோனவன். ஆகாப் கர்த்தரைப் பகைக்கிறவன். யோசபாத்தோ அவனோடு சிநேகமாயிருந்தவன். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினாலே யோசபாத்தின் ஜீவனை மரணத்திற்கு தப்புவிக்கிறார். யோசபாத் சமாதானத்தோடே எருசலேமிலுள்ள தன் வீட்டிற்கு திரும்பிவர கர்த்தர் அவனுக்கு உதவி செய்கிறார்.

அப்பொழுது அனானியின் குமாரனாகிய யெகூ என்னும் ஞானதிருஷ்டிக்காரன் புறப்பட்டு, யோசபாத்தை சந்திக்கிறான். யோசபாத் ஆகாபுக்கு துணை நின்றவன். அவன் ஆகாபோடு சிநேகமாயிருந்தவன். ஆகாப் ஒரு துன்மார்க்கன். அவன் கர்த்தரைப் பகைத்தவன். யோசபாத் ஆகாபோடு சிநேகமாயிருந்ததினால், யெகூ அவனைக் கடிந்துகொள்கிறான்.

யோசபாத் தப்பு செய்யும்போதே கர்த்தர் அவனைக் கண்டித்து உணர்த்துகிறார். இதுவும் கர்த்தருடைய கிருபை. பாவம் அதிகரிக்கும்போது, அந்தப் பாவங்களிலிருந்து மனந்திரும்புவது கடினமாயிருக்கும். பேரழிவு வருவதற்கு முன்பாக நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். நம்முடைய தப்பிதங்களை சீக்கிரத்தில் திருத்திக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் யோசபாத்தை யெகூ என்பவன் மூலமாய் எச்சரிக்கிறார். யோசபாத் ஒரு ஞானதிருஷ்டிக்காரன். இவன் அனானியின் குமாரன். ஆசாவின் காலத்திலே அனானி ஞானதிருஷ்டிக் காரனாயிருந்தான். அவன் கர்த்தருடைய வார்த்தையை ஆசாவிடத்தில் தைரியமாய்ச் சொன்னான்.

ஆசாவோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவன் தன் பாவங்களுக்கு மனந்திரும்பவுமில்லை. ஆசா அனானியின்மீது கோபப்பட்டு அவனை சிறைச்சாலையில் அடைத்துவிட்டான். அவனுடைய கால்களில் தொழுமரத்தை மாட்டிவிட்டான்.

யெகூ அனானியின் குமாரன். ஆசா அனானிக்கு சிறைத்தண்டனை கொடுத்தாலும், அனானியின் குமாரனாகிய யெகூ, கர்த்தருடைய ஞானதிருஷ்டிக்காரனாயிருக்கிறான். கர்த்தருடைய வார்த்தைகளை யோசபாத்திற்கு பயப்படாமல் சொல்லுகிறான்.

ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி: "துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது" (2நாளா 19:2) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவரைப் பகைக்கிறவர்களுக்குத் துணை போகக்கூடாது. கர்த்தர் தம்மைப் பகைக்கிறவர்களை வெறுப்பதுபோலவே அவர்களைச் சிநேகிக்கிறவர்களையும் வெறுப்பார். பத்துக் கோத்திரத்தாரின் வடக்கு தேசம் கர்த்தரைவிட்டு பின்வாங்கித் துன்மார்க்கமாக ஜீவிக்கிறார்கள். யூதா தேசத்தார் அவர்களுடைய துன்மார்க்கத்தை விட்டு விலகி ஜீவிக்கவேண்டும். அவர்களோடு உறவாடக்கூடாது.

யோசபாத் துன்மார்க்கனுக்கு துணை நின்றதற்காகவும், அவனோடு சிநேகம் வைத்திருந்ததற்காகவும் கர்த்தர் அவனைக் கடிந்துகொள்கிறார். கர்த்தருடைய கோபம் யோசபாத்தின்மீது வந்திருக்கிறது. யோசபாத் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்ப வேண்டும். கர்த்தரோடு சமாதானமாயிருக்க வேண்டும். இல்லையென்றால் கர்த்தருடைய கடுங்கோபம் யோசபாத்தின்மீது வரும்.

ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ யோசபாத்தின் தப்பிதத்தை கண்டித்துச் சொன்னாலும், அவன் செய்த நல்ல காரியங்களையும் புகழ்ந்து பேசுகிறான். நாம் ஒருவர் செய்த தப்பிதத்தினிமித்தமாய் அவரைக் கடிந்துகொள்ளும்போது, அவர் செய்த நல்ல காரியங்கள் நிமித்தமாய் அவரைப் புகழ்ந்து பேசவும்வேண்டும்.

ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ, யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தை நோக்கி, "ஆகிலும் நீர் விக்கிரகத்தோப்புகளை தேசத்தை விட்டகற்றி, தேவனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கின விஷயத்தில் நன்மையான காரியங்கள் உம்மிடத்தில் காணப்பட்டது உண்டு" (2நாளா 19:3) என்று சொல்லுகிறான்.

யோசபாத்தினுடைய பாவத்தின் நிமித்தமாய் கர்த்தருடைய கடுங்கோபம் அவன்மேல் வர இருந்தது. ஆனாலும் கர்த்தர் அவன்மீது கோபப்படவில்லை. அவனை நிர்மூலம் பண்ணிவிடவில்லை. கர்த்தர் தம்முடைய சமுகத்திலிருந்து யோசபாத்தை முற்றிலுமாய் விலக்கி வைத்துவிடவுமில்லை.

பத்துக்கோத்திரத்தின் வடக்கு தேசத்திற்கு உதவி செய்ததற்காகக் கர்த்தர் யூதாதேசத்தை முழுமையாக அழித்துப் போடவில்லை. யோசபாத் விக்கிரகத் தோப்புகளை தேசத்தை விட்டகற்றினான். தேவனைத் தேட தன்னுடைய இருதயத்தை நேராக்கினான். ஆகையினால் கர்த்தர் யூதாவை முழுமையாக அழித்துப்போட வில்லை.

ஞானதிருஷ்டிக்காரனாகிய யெகூ சொல்லுகிற வார்த்தைகள் யோசபாத்தின் இருதயத்தைத் தொடுகிறது. அவன் தன் பாவங்களுக்கு மனந்திரும்புகிறான். யோசபாத்தின் தகப்பனாகிய ஆசாவுக்கு விரோதமாக, அனானி கண்டித்து உணர்த்தும் வார்த்தைகளைச் சொன்னபோது, ஆசா அனானியின்மீது கோபப்பட்டான். ஆசா தன் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை.

யோசபாத்தோ தன் தகப்பனாகிய ஆசாவைப்போல, யெகூவின்மீது கோபப்படவில்லை. யெகூவை சிறையிலடைக்கவில்லை. யோசபாத் தன் பாவங்களுக்கு மனந்திரும்புகிறான். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். யோசபாத் ஆகாபோடு சம்மந்தங்கலந்திருந்தான். அவனைப் பார்க்க சமாரியாவுக்குப்போனான். யோசபாத் இனிமேல் சமாரியாவுக்குப்போவதில்லை என்று தீர்மானித்து, எருசலேமிலே வாசமாயிருக்கிறான் (2நாளா 19:4).

யோசபாத் யூதாதேசத்திற்கு ராஜா. எருசலேம் யூதாதேசத்தின் தலைநகரம். இங்கே அவனுடைய அரண்மனை இருக்கிறது. யோசபாத் எருசலேமிலே வாசம்பண்ணி, யூதாதேசத்தின் காரியங்களை கவனிக்கவேண்டும். தேவையில்லாமல் சமாரியாவுக்கு போகக்கூடாது.

யோசபாத் எருசலேமிலே வாசமாயிருந்து, திரும்பப் பெயர்செபா தொடங்கி, எப்பிராயீம் மலைத்தேசமட்டுமுள்ள ஜனத்திற்குள்ளே பிரயாணமாய்ப் போய், அவர்களைத் தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் இடத்திற்குத் திரும்பப்பண்ணுகிறான் (2நாளா 19:4).

யோசபாத் இதற்கு முன்பு ஆகாபைப் பார்க்க சமாரியாவுக்குப்போனான். துன்மார்க்கனுக்கு துணை நின்றான். கர்த்தரைப் பகைத்த ஆகாபோடு சிநேகமாயிருந்தான். இவையெல்லாம் யோசபாத்தின் பாவங்கள். யோசபாத் இப்போது, தான் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தமாக, யூதாதேசத்திலே பிரயாணம் செய்து, யூதாவின் ஜனங்கள் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறான்.

யோசபாத்தின் பிரயாணம் ஆவிக்குரிய பிரயாணமாயிருக்கிறது. அவன் யூதாதேசத்தின் ஜனங்களுக்குள்ளே பிரயாணம்பண்ணுகிறான். யூதாவின் தென்திசையிலுள்ள பெயர்செபாவிலிருந்து, வடக்கு பகுதியிலுள்ள எப்பிராயீம் மலைத்தேசம் மட்டும் பிரயாணம்பண்ணுகிறான்.

யூதாஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போயிருக்கிறார்கள். யோசபாத் அவர்களை தங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பப்பண்ணுகிறான்.

இந்த வசனத்தில் "திரும்ப" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஆவிக்குரிய இரண்டாவது எழுப்புதலைக் குறிப்பிடுகிறது. நியாயப்பிரமாணத்தைப் போதிப்பதிலும், கர்த்தரிடத்தில் ஜனங்கள் வருவதிலும் தீவிரம் காணப்படுகிறது. (2நாளா 19:4-11; 2நாளா 17:9).

யோசபாத் யூதாவின் அரணான பட்டணங்களாகிய ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை வைக்கிறான். நீதியாய் நியாயம் விசாரிக்க வேண்டுமென்றும், கர்த்தருக்குப் பயப்படும் பயம் நியாயாதிபதிகளிடம் காணப்பட வேண்டுமென்றும் யோசபாத் கட்டளையிடுகிறான். (2நாளா 19:5-7).

யோசபாத் எருசலேமில் லேவியரிலும், ஆசாரியரிலும், இஸ்ரவேலுடைய வம்சத்தலைவரிலும், சிலரைக் கர்த்தருடைய நியாயங்களைக்குறித்தும் விவாத விஷயங்களைக் குறித்தும் விசாரிக்கும்படி நியமிக்கிறான். (2நாளா 19:8-11).

யோசபாத் யூதாஜனங்களை விக்கிரகாராதனையிலிருந்து மீட்டுக்கொள்கிறான். இதற்கு முன்பு யோசபாத் ஆகாபோடு சம்மந்தங் கலந்திருந்ததினால், சமாரியாவிலிருந்து விக்கிரகாராதனை யூதாதேசத்திற்குள் பிரவேசித்தது. ஆகாபின் வீட்டார் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள். அவர்கள் மூலமாய் யூதாதேசத்திலும் விக்கிரகாராதனை தாராளமாய் வந்துவிடுகிறது.

ஆரம்பத்தில் யூதாதேசத்தார் விக்கிரகங்களுக்கும், விக்கிரகாராதனைக் காரருக்கும் விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். ஆனால் யூதாதேசத்தின் ராஜாவோ விக்கிரகாராதனைக்காரரோடு சம்மந்தங்கலந்திருக்கிறான். அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறான். யூதாஜனங்கள் ராஜாவின் வழியைப் பின்பற்றி, அவர்களும் விக்கிரகாராதனைக்காரரோடு சம்மந்தங்கலந்திருக்கிறார்கள். யூதாதேசத்திலே கர்த்தருடைய ஆராதனையும், விக்கிரகாராதனையும் ஒன்றாய்க் கலக்கிறது.

யூதாதேசத்திலே விக்கிரகாராதனை பிரவேசித்ததற்கு யோசபாத்தும் முக்கியமான காரணம். அவன் தன்னுடைய தப்பிதத்தை உணருகிறான். தன்னுடைய தப்பிதத்தினால், யூதாஜனத்தார் விக்கிரகாராதனைக்காரரோடு சம்மந்தங்கலந்திருப்பதைப் பார்த்து யோசபாத் மனம் வருந்துகிறான்.

யூதாமனுஷரின் பாவத்திற்கு தானே காரணம் என்பதை யோசபாத் உணருகிறான். அவர்களை விக்கிரகாராதனையிலிருந்து விடுவிக்கவேண்டுமென்று யோசபாத் விரும்புகிறான். இதற்காக அவன் யூதாஜனங்களுக்குள்ளே பிரயாணமாய்ப்போய், அவர்களை தங்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பப்பண்ணுகிறான்.

ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகள் 2நாளா 19:5-7

2நாளா 19:5. அவன் யூதாவின் அரணான பட்டணங்களாகிய ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை வைத்து,

2நாளா 19:6. அந்த நியாயாதிபதிகளை நோக்கி: நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; நீங்கள் மனுஷருடைய கட்டளையினால் அல்ல, கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள்; நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார்.

2நாளா 19:7. ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது என்றான்.

யோசபாத் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறான். விக்கிரகங்களுக்கு பின்னால் போன ஜனங்களை, கர்த்தரிடத்திற்கு திரும்ப அழைத்து வருகிறான். கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிற ஜனங்கள், கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். அவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருக்கவேண்டும்.

யூதாஜனத்தார் மத்தியிலே கர்த்தருடைய வேதப்புஸ்தகத்தை பிரசங்கம்பண்ணுவதற்காக, யோசபாத் யூதாதேசமெங்கும் பிரபுக்களையும், உபதேசியார்களையும் அனுப்பினான். அவர்கள் யூதாவின் மனுஷருக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களையும், அவருடைய வார்த்தைகளையும் உபதேசம்பண்ணினார்கள் (2நாளா 17:7-9).

யூதாஜனங்களுக்கு இப்போது சத்தியம் தெரிந்திருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய பிரமாணங்களும் ஜனங்களுக்கு தெரிந்திருக்கிறது. இப்போது அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். சத்தியத்தைத் தெரிந்திருந்தும், சத்தியத்திற்கு விரோதமாக கிரியை செய்யக்கூடாது. பாவத்தின் சம்பளம் மரணம் என்பது சத்தியம்.

யோசபாத் யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். ஜனங்கள் பாவம் செய்யும்போது ராஜா அவர்களைத் தண்டிக்கவேண்டும். ஜனங்களுடைய வழக்குகளை நியாயமாய் விசாரிக்கவேண்டும். அதற்காக யோசபாத் யூதாதேசத்திலே நியாயாதிபதிகளை நியமிக்கிறான்.

யூதாதேசத்தில் இரண்டு விதமான நியாயாதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். யோசபாத் யூதாவின் ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை நியமிக்கிறான். இவர்கள் சிறிய நியாயாதிபதிகள். இவர்களுடைய நியாயமன்றங்களும் அதிகாரத்தில் சிறியவை. இது தவிர யோசபாத் எருசலேமிலும் நியாயாதிபதிகளை நியமிக்கிறான். இவர்கள் யூதாதேசத்தின் பெரிய நியாயாதிபதிகள். எருசலேமிலுள்ள நீதிமன்றம் அதிகாரத்தில் பெரிய நீதிமன்றமாயிருக்கிறது.

யோசபாத் யூதாவின் அரணான பட்டணங்களாகிய ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளை வைக்கிறான் (2நாளா 19:5).

யோசபாத் அந்த நியாயாதிபதிகளை நோக்கி: "நீங்கள் செய்கிற காரியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; நீங்கள் மனுஷனுடைய கட்டளையினால் அல்ல, கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள்; நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார்" (2நாளா 19:6) என்றும்,

"ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது" (2நாளா 19:7) என்றும் சொல்லுகிறான்.

நியாயாதிபதிகள் கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் இருக்கவேண்டும். யூதாஜனங்கள் நியாயாதிபதிகளை நம்புகிறார்கள். ஆகையினால் நியாயாதிபதிகள் அவர்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் நடந்துகொள்ளவேண்டும்.

நியாயாதிபதிகள் தங்களுடைய நியாயமான விசாரிப்புகளினாலும், நீதியான தீர்ப்புகளினாலும் கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். அவர்கள் கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறார்கள். கர்த்தர் நீதியுள்ள நியாயாபதியாயிருப்பதுபோல, நியாயாதிபதிகளும் நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டும். நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே கர்த்தர் நியாயாதிபதிகளோடு கூடயிருக்கிறார்.

நியாயாதிபதிகள் மனுஷருக்கு பயந்து நியாயத்தை திருப்பி விடக்கூடாது. அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் இருக்கவேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

எருசலேமில் நியாயாதிபதிகள் 2நாளா 19:8-11

2நாளா 19:8. அவர்கள் எருசலேமில் வந்திருக்கும் போது, யோசபாத் லேவியரிலும், ஆசாரியரிலும், இஸ்ரவேலுடைய வம்சத்தலைவரிலும், சிலரைக் கர்த்தருடைய நியாயங்களைக் குறித்தும் விவாதவிஷயங்களைக் குறித்தும் விசாரிக்கும்படி எருசலேமிலே நியமித்து,

2நாளா 19:9. அவர்களுக்குக் கட்டளையிட்டதாவது: நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் நடந்து செய்யவேண்டியது என்னவென்றால்,

2நாளா 19:10. நானாவித இரத்தப்பழிச் சங்கதிகளும், பிரமாணத்திற்கும், கற்பனைக்கும், கட்டளைகளுக்கும், நியாயங்களுக்கும் அடுத்த நானாவித வழக்குச் சங்கதிகளும், தங்கள் பட்டணங்களிலே குடியிருக்கிற உங்கள் சகோதரரிடத்திலிருந்து உங்களிடத்தில் வரும்போது, அவர்கள் கர்த்தருக்கு நேரஸ்தராகாதபடிக்கும், உங்கள்மேலும் உங்கள் சகோதரர்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் அவர்களை எச்சரியுங்கள்; நீங்கள் இப்படிச் செய்தால் நேரஸ்தராகமாட்டீர்கள்.

2நாளா 19:11. இதோ, ஆசாரியனாகிய அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும், இஸ்மவேலின் குமாரனாகிய செபதியா என்னும் யூதா வம்சத்தின் தலைவன் ராஜாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் உங்களுக்கு மேலான நியாயாதிபதிகள்; லேவியரும் உங்கள் கைக்குள் உத்தியோகஸ்தராயிருக்கிறார்கள்; நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை என்றான்.

யோசபாத் எருசலேமிலே யூதாதேசத்தின் தலைமை நீதிமன்றத்தை ஏற்படுத்துகிறான். ஒவ்வொரு பட்டணத்திலுமுள்ள நீதிமன்றத்தின் தீர்ப்புகளில், ஜனங்களுக்கு திருப்தியில்லையென்றால், அவர்கள் எருசலேமிலுள்ள நீதிமன்றத்திற்கு வந்து மேல்முறையீடு செய்யலாம்.

யோசபாத் லேவியரிலும், ஆசாரியரிலும், இஸ்ரவேலுடைய வம்சத்தலைவரிலும், சிலரைக் கர்த்தருடைய நியாயங்களைக் குறித்தும் விவாதவிஷயங்களைக் குறித்தும் விசாரிக்கும்படி எருசலேமிலே நியமிக்கிறான் (2நாளா 19:8).

எருசலேமிலுள்ள நியாயாதிபதிகள், யோசபாத் ராஜாவின் நேரடி கண்காணிப்பில், வழக்குகளை விசாரிக்கிறார்கள். கர்த்தருடைய நியாயங்களைக் குறித்தும், விவாத விஷயங்களைக் குறித்தும், எருசலேமிலே விசாரிக்கப்படுகிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறார். கர்த்தருடைய பிரமாணமே யூதாஜனங்களுக்கு கட்டளையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயாதிபதிகள் கர்த்தருடைய நியாயங்களைக் குறித்து விசாரிக்கிறார்கள்.

பாவம் செய்கிறவன் கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிறான். அவன் மூலமாக தேசத்தின் அமைதி கெட்டுப்போகிறது. ராஜாவின் மதிப்பும், கண்ணியமும் சேதப்படுகிறது. ஆகையினால் பாவம் செய்கிறவன் தண்டிக்கப்படுகிறான். அவனுடைய பாவங்கள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி விசாரிக்கப்பட்டு, கர்த்தருடைய நியாயங்களின்படி அவனுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது.

யூதாதேசத்து மனுஷர் மத்தியிலே பலவிதமான வழக்குகள் வரும். அவை விவாத விஷயங்களாயிருக்கலாம். ஒருவேளை அவை நானாவித இரத்தப்பழி சங்கதிகளாயும் இருக்கலாம். நியாயாதிபதிகள் ஜனங்களுடைய எல்லா வழக்குகளையும் விசாரிக்கிறார்கள்.

"உன் வாசல்களில் இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும், காயம்பட்ட சேதங்களைக் குறித்தும் வழக்கு நேரிட்டு, நியாயந்தீர்ப்பது உனக்கு அரிதாயிருந்தால், நீ எழுந்து, உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து ஏற்படுத்தின ஸ்தானத்திற்குப் போய்" (உபா 17:8).

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் வீட்டாரைவிட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள். யோசுவாவின் காலத்திலே அடைக்கலப்பட்டணங்கள் தனியாக ஏற்படுத்தப்பட்டது. இப்போது எப்ரோன் மாத்திரமே யூதாதேசத்திலிருக்கிறது. மற்ற அடைக்கலப்பட்டணங்களெல்லாம் வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் சுதந்தரத்திலுள்ளது.

யூதாதேசத்தாருக்கு அடைக்கலமாய் ஓடிப்போவதற்கு அடைக்கலப்பட்டணங்கள் இல்லை. அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரங்களை அடைக்கலப்பட்டணங்கள் போல பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துக்கொண்டு அடைக்கலம் பெற்றுக்கொள்கிறார்கள்.

எருசலேமிலுள்ள தேவாலயத்திலே அடைக்கலம் பெற வருகிறவர்களின் வழக்குகள், எருசலேமில் நியமிக்கப்பட்டிருக்கிற நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகிறது. எருசலேமிலுள்ள நியாயாதிபதிகள் அவர்களுடைய வழக்குகளை விசாரிக்கிறார்கள்.

எருசலேமிலுள்ள நியாயாதிபதிகளில் லேவியரும் ஆசாரியரும் இருக்கிறார்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கற்று அதிலே தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் ஞானத்தில் சிறந்தவர்கள். இஸ்ரவேலுடைய வம்சத்தலைவரில் சிலரும் எருசலேமிலே நியாயாதிபதிகளாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் அனுபவம் மிகுந்தவர்கள். ஜனங்கள் மத்தியிலே இவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாயிருக்கிறது.

யோசபாத் எருசலேமிலே நியமித்த நியாயாதிபதிகளை நோக்கி, "நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் நடந்து செய்யவேண்டியது என்னவென்றால், நானாவித இரத்தப்பழிச் சங்கதிகளும், பிரமாணத்திற்கும், கற்பனைக்கும், கட்டளைகளுக்கும், நியாயங்களுக்கும் அடுத்த நானாவித வழக்குச் சங்கதிகளும், தங்கள் பட்டணங்களிலே குடியிருக்கிற உங்கள் சகோதரரிடத்திலிருந்து உங்களிடத்தில் வரும்போது, அவர்கள் கர்த்தருக்கு நேரஸ்தராகாதபடிக்கும், உங்கள்மேலும் உங்கள் சகோதரர்மேலும் கடுங்கோபம் வராதபடிக்கும், நீங்கள் அவர்களை எச்சரியுங்கள்" (2நாளா 19:9,10) என்று சொல்லுகிறான்.

யோசபாத் எருசலேமிலுள்ள ஆசாரியரிடத்தில் மேலும் சொல்லும்போது, "நீங்கள் இப்படிச் செய்தால் நேரஸ்தராகமாட்டீர்கள்" என்றும், "நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (2நாளா 19:11) என்றும் சொல்லுகிறான்.

யோசபாத் தான் நியமித்த நியாயாதிபதிகளுக்கு அமரியாவையும், செபதியாவையும், தலைவர்களாக நியமிக்கிறான். ஆசாரியனாகிய அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும், இஸ்மவேலின் குமாரனாகிய செபதியா என்னும் யூதா வம்சத்தின் தலைவன் ராஜாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் அவர்களுக்கு மேலான நியாயாதிபதிகள் (2நாளா 19:11).

யோசபாத்தின் நாட்களில் அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும் தலைவனாக இருக்கிறான். ராஜாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் செபதியா தலைவனாக இருக்கிறான். லேவியர்கள் இவர்களுக்கு உத்தியோகஸ்தராயிருக்கிறார்கள்.

யோசபாத் மேலான நியாயாதிபதிகளை நியமித்த பின்பு, "லேவியரும் உங்கள் கைக்குள் உத்தியோகஸ்தராயிருக்கிறார்கள்" என்றும் சொல்லுகிறான்.

நியாயாதிபதிகள் கர்த்தருக்கு பயந்து, உண்மையோடும், உத்தம இருதயத்தோடும் நடந்து, நியாயம் விசாரிக்கவேண்டும். அவர்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்தவேண்டும். அவர்கள் மனுஷருக்கு பயப்படக்கூடாது. உத்தம இருதயத்தோடு நியாயம் விசாரிக்கிற நியாயாதிபதிகளுக்கு விரோதமாக, யார் எழும்பினாலும், கர்த்தர் அவர்களுக்கு துணையாயிருந்து, அவர்களைப் பாதுகாப்பார்.

20 அதிகாரம்

யோசபாத்திற்கும் யூதாதேசத்திற்கும் அந்நிய தேசத்தார் மூலமாக மிகப்பெரிய ஆபத்து வருகிறது (2நாளா 20:1,2). யோசபாத் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்படுகிறான். அவனும் யூதாஜனத்தாரும் உபவாசம்பண்ணுகிறார்கள் (2நாளா 20:3-13).

கர்த்தருடைய தீர்க்கதரிசி மூலமாக யோசபாத்திற்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லப்படுகிறது (2நாளா 20:14-17). யோசபாத்தும் யூதாகோத்திரத்தாரும், கர்த்தர் சொன்ன வார்த்தைகளுக்காக, அவருக்கு முன்பாக தாழவிழுந்து, கர்த்தரைத் துதிக்கிறார்கள் (2நாளா 20:18-21).

கர்த்தர் யூதாதேசத்தாரின் சத்துருக்களை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். சத்துருக்கள் முறியடிக்கப்படுகிறார்கள் (2நாளா 20:22-25). யூதாவின் மனுஷர் எல்லாரும் பெராக்காவிலே கூடி, கர்த்தர் தங்கள் சத்துருக்களை முறியடித்ததற்காக, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்கள் (2நாளா 20:26-30). யோசபாத்தினுடைய ராஜ்யபாரத்தின் முடிவு (2நாளா 20:31-37).

யோசபாத்தின் ஜெபம் 2நாளா 20:1-13

2நாளா 20:1. இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள்.

2நாளா 20:2. சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

2நாளா 20:3. அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.

2நாளா 20:4. அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடினார்கள்; யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வந்தார்கள்.

2நாளா 20:5. அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிரகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று:

2நாளா 20:6. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது.

2நாளா 20:7. எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்த தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா?

2நாளா 20:8. ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள்.

2நாளா 20:9. எங்கள்மேல் பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உம்முடைய நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால், நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்து நின்று, எங்கள் இடுக்கணில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், தேவரீர் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள்.

2நாளா 20:10. இப்போதும், இதோ, இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து வருகிறபோது, அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர் மலைத்தேசத்தாருடைய சீமைகள் வழியாய்ப் போக நீர் உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் அவர்களை விட்டு விலகி, அவர்களை நாசப்படுத்தாதிருந்தார்கள்.

2நாளா 20:11. இப்போதும், இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி, தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறார்கள்.

2நாளா 20:12. எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது என்றான்.

2நாளா 20:13. யூதா கோத்திரத்தார் அனைவரும், அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள்.

யோசபாத்திற்கு மிகப்பெரிய நெருக்கம் உண்டாயிருக்கிறது. யோசபாத் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறவன். அவன் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறான். யூதாவின் ராஜாசன காரியங்களில் ஏராளமான மறுமலர்ச்சிகளையும் உண்டுபண்ணியிருக்கிறான். கர்த்தர் அவனுடைய நற்கிரியைகளையும், அவன் செய்த செம்மையான காரியங்களையும் நினைவுகூர்ந்து, அவனை இதுவரையிலும் அற்புதமாகக் காத்து வழிநடத்தி வந்திருக்கிறார்.

இப்போதோ யோசபாத்திற்கு நெருக்கமும், ஆபத்தும் வந்திருக்கிறது. மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வருகிறார்கள் *(2நாளா 20:1).*

யூதாதேசத்திற்கு விரோதமாக மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும் யுத்தம்பண்ண வருவது யோசபாத்திற்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. யோசபாத் இதுவரையிலும் அவர்களுக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்ததில்லை. அவர்கள் யோசபாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை.

அப்பொழுது சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: "உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள்" *(2நாளா 20:2)* என்று அறிவிக்கிறார்கள்.

யோசாபாத்திற்கு விரோதமாக வருகிறவர்கள் கடலுக்கு அக்கரையிலிருந்து வருகிறார்கள். இந்த வாக்கியத்தில் "கடல்" என்பது சவக்கடலைக் குறிக்கும். இங்கே சோதோம் இருக்கிறது. இதற்கு முன்பு யூதாதேசத்திற்கு அருகாமையிலிருந்த அந்நிய தேசத்தார் எல்லோரும் யோசபாத்திற்கு பயந்து, அவனுக்கு கப்பம் கட்டினார்கள்.

"யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய ராஜ்யங்களின்மேலெல்லாம் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், யோசபாத்தோடு யுத்தம்பண்ணாதிருந்தார்கள்" *(2நாளா 17:10).*

இப்போதோ அவர்கள் யோசபாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். யோசபாத் ஆகாப் வீட்டாரோடு சம்மந்தங்கலந்ததினால், புறஜாதியார் மத்தியிலே அவனுக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்துபோயிற்று.

தனக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் கடலுக்கு அக்கரையிலிருந்து வருகிறார்கள் என்னும் செய்தியைக் கேட்டு யோசபாத் பயப்படுகிறான். அவனுடைய மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துகிறது. அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சம்மந்தங்கலந்து, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். யோசபாத்தின் மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்துவதினால், அவன் இப்போது பயப்படுகிறான்.

சத்துருக்கள் யோசபாத்திற்கு விரோதமாக கடலுக்கு அக்கரையிலிருந்து ஏராளமாய் வருகிறார்கள். தன்னையும் யூதாதேசத்தையும் சத்துருக்களின் கைகளிலிருந்து காத்துக்கொள்ள யோசபாத் ஆயத்தம் பண்ணுகிறான். அவன் தன்னுடைய சேனையைப் பலப்படுத்தினானா என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை. சத்துருக்கள் திரளாய் வருவதினால், யோசபாத் தன்னுடைய சேனையை பலப்படுத்தியிருக்கக்கூடும்.

யோசபாத்தோ தன்னுடைய சேனையை நம்புவதற்கு பதிலாக கர்த்தரை நம்புகிறான். மனுஷருடைய உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக, கர்த்தருடைய உதவியைப் பெற்றுக்கொள்ள நாடுகிறான். யோசபாத்தின் இருதயத்திலே, தாவீதின் நல்ல சுபாவம் நிரம்பியிருக்கிறது.

தாவீதுக்கு ஒரு நெருக்கமான காலம் வந்தபோது, அவர் "நான் மனுஷர் கையில் விழாமல், கர்த்தருடைய கையில் விழுவேனாக" என்று சொல்லி, கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். அதுபோலவே யோசபாத்தும் இப்போது கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறான். அவன் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தை கூறுகிறான் *(2நாளா 20:3)*.

யோசபாத்தின் மனச்சாட்சி கர்த்தருக்கு முன்பாக குற்றமுள்ளதாயிருக்கிறது. குற்றமுள்ள மனச்சாட்சி அவனை பயமுறுத்துகிறது. இந்த சூழ்நிலையில் யோசபாத் கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்படுகிறான். கர்த்தரோடு ஒப்புரவாகி, அவரோடு சிநேகமாயிருக்க தீர்மானிக்கிறான்.

யோசபாத் யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவிக்கிறான். ஒரு குறிப்பிட்ட நாளை நியமித்து, அந்த நாளிலே யூதாதேசத்தார் எல்லோரும், கர்த்தருடைய சமுகத்திலே தங்களைத் தாழ்த்தி, உபவாசம்பண்ணி ஜெபம்பண்ண வேண்டும் என்று சொல்லுகிறான். யூதாவின் மனுஷர் ஜெபம்பண்ணும்போது, அவர்களெல்லோரும் கர்த்தருடைய சமுகத்திலே தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் சகாயம் தேடுவார்கள்.

யூதாஜனத்தார் யோசபாத்தின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். அப்படியே யூதா ஜனங்கள் கர்த்தரிடத்திலே சகாயந்தேடக் கூடுகிறார்கள்; யூதாவிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் இருந்து அவர்கள் கர்த்தரைத் தேட வருகிறார்கள் *(2நாளா 20:4)*. யூதாதேசத்தார் எல்லா பட்டணங்களிலிருந்தும், எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு கூடிவருகிறார்கள்.

யூதாஜனத்தார் எல்லோரும் கர்த்தருடைய சமுகத்திலே கூடிவந்திருக்கிறார்கள். யோசபாத் கர்த்தருடைய சபையாரின் வாயாகயிருந்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். அப்பொழுது யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே புதுப்பிரகாரத்து முகப்பிலே, யூதா ஜனங்களும் எருசலேமியரும் கூடின சபையிலே நின்று, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான் *(2நாளா 20:5)*.

யோசபாத் கர்த்தரிடத்தில் ஏறெடுத்த ஜெபம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் கர்த்தரை நோக்கி, "எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக்கூடாது" *(2நாளா 20:6)* என்று பயபக்தியோடு சொல்லுகிறான்.

யோசபாத் கர்த்தருடைய சர்வஆளுகையை அங்கீகரிக்கிறான். கர்த்தருடைய தெய்வீக பராமரிப்புக்கு ஸ்தோத்திரங்களை சொல்லி, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான். கர்த்தர் பரலோகத்திலிருந்தாலும், அவர் பூமியிலுள்ள ராஜ்யங்களையெல்லாம் ஆளுகை செய்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்வதுபோல, புறஜாதி தேசங்களையும் ஆளுகை செய்கிறார்.

அந்நிய தேசத்தார் இப்போது யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகயிருக்கிறார். இஸ்ரவேல் கர்த்தருடைய ஜனமாகயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு மாறாத உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே" என்றும், "எங்கள் தேவனாகிய நீர்" என்றும் சொல்லி ஜெபிக்கிறான். யோசபாத் இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல்" என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைத் தேடுகிறார்கள். அவரையே நம்புகிறார்கள். தங்களுடைய பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் அவர்கள் கர்த்தரையே சார்ந்திருக்கிறார்கள். கர்த்தர் கானான் தேசத்தை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் இப்போது அந்நிய தேசத்தார் கானான் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள்.

யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "எங்கள் தேவனாகிய நீர் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்த தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா? ஆதலால் அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள்" *(2நாளா 20:7,8)* என்று பணிவோடு சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள் அம்மோன் புத்திரருக்கும், மோவாபியருக்கும், சேயீர் மலைத்தேசத்திலுள்ளவர்களுக்கும் நன்மை செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களோ இப்போது கடலுக்கு அக்கரையிலிருந்து, யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள்.

யோசபாத் கர்த்தரிடத்தில், "இப்போதும், இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி, தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறார்கள்" *(2நாளா 20:11)* என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள் எருசலேமிலே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டியிருக்கிறார்கள். யோசபாத் தங்கள் முன்னோர்கள் செய்த ஊழியத்தை கர்த்தருக்கு நினைவுபடுத்தி, அவரிடத்திலிருந்து சகாயம் பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு, தனக்கு எந்தத் தகுதியுமில்லை என்பது யோசபாத்திற்கு தெரிந்திருக்கிறது.

ஆனாலும் யோசபாத், தங்கள் முன்னோர், கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினதை, தன்னுடைய ஜெபத்திலே சொல்லுகிறான். "அவர்கள் இங்கே குடியிருந்து, இதிலே உம்முடைய நாமத்திற்கென்று ஒரு பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினார்கள்" *(2நாளா 20:8)* என்று யோசபாத் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான்.

நாம் கர்த்தருக்கு நம்முடையதிலிருந்து எதையும் கொடுப்பதில்லை. கர்த்தரே நமக்கு தம்முடைய ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுப்பதிலிருந்து ஒரு பகுதியை, அவருக்கு கொடுக்கிறோம். கர்த்தர் நமக்கு கொடுக்காவிட்டால், அவருக்கு கொடுக்க நம்மிடத்தில் ஒன்றும் இருக்காது. நம்மால் அவருக்கு ஒன்றும் கொடுக்கவுமுடியாது. ஆகையினால் நாம் கர்த்தருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் எவ்வளவு அதிகமாகக் கொடுத்தாலும், நம்மிடத்தில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இஸ்ரவேலின் முற்பிதாக்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் விசுவாசம் விருத்தியடையவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கவேண்டும் என்பதற்காகவும், இஸ்ரவேலின் முற்பிதாக்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார்கள். தாங்கள் கர்த்தருடைய நாமமகிமைக்காக ஆலயம் கட்டியிருப்பதற்கான காரணத்தையும், இஸ்ரவேலின் முற்பிதாக்கள், இஸ்ரவேலின் பின்சந்ததியாரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, தங்கள் முற்பிதாக்கள் தங்களுக்கு சொன்னதையும் நினைவுகூருகிறான். யோசபாத் கர்த்தரை நோக்கி "எங்கள்மேல் பட்டயம், நியாயதண்டனை, கொள்ளைநோய், பஞ்சம் முதலான தீமைகள் வந்தால், அப்பொழுது உம்முடைய நாமம் இந்த ஆலயத்தில் விளங்குகிறபடியால், நாங்கள் இந்த ஆலயத்திலும் உமது சந்நிதியிலும் வந்து நின்று, எங்கள் இடுக்கணில் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், தேவரீர் கேட்டு இரட்சிப்பீர் என்று சொல்லியிருக்கிறார்கள்" *(2நாளா 20:9)* என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எருசலேமிலுள்ள தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலே வாசம்பண்ணுகிறார். எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். தேவாலயம் அவருடைய வாசஸ்தலம். கர்த்தருடைய ஆலயம் அவருடைய நாமமகிமைக்காக கட்டப்பட்டிருக்கிறது. இப்போது யூதாதேசத்திற்கு சத்துருக்கள் மூலமாக ஆபத்து வந்திருக்கிறது. கர்த்தரே தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், பலத்தினாலும் பராக்கிரமத்தினாலும், தங்களையும் யூதாதேசத்தையும் காத்தருள வேண்டுமென்று யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான்.

மோவாப் புத்திரரும் அம்மோன் புத்திரரும் யோசபாத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். யோசபாத் அவர்களுக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்யவில்லை. இஸ்ரவேலின் முற்பிதாக்களும், பூர்வகாலங்களிலே அவர்களுக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்யவில்லை. முற்பிதாக்கள் அவர்களுக்கு நன்மையே செய்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தபோது, அவர்கள் அம்மோன் புத்திரருக்கும், மோவாபியருக்கும், சேயீர் மலைத்தேசத்தாருக்கும் செய்த நன்மைகளை, யோசபாத் கர்த்தருடைய சமுகத்திலே நினைவுகூருகிறான்.

"இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து வருகிறபோது, அம்மோன் புத்திரர், மோவாபியர், சேயீர் மலைத்தேசத்தாருடைய சீமைகள் வழியாய்ப் போக நீர் உத்தரவு கொடுக்கவில்லை; ஆகையால் அவர்களை விட்டு விலகி, அவர்களை நாசப்படுத்தாதிருந்தார்கள்" *(2நாளா 20:10)* என்று இஸ்ரவேலர் அவர்களுக்கு செய்த நன்மைகளை யோசபாத் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான்.

ஆனால் அவர்களோ யூதாதேசத்தாருக்கு நன்மைக்கு பதிலாக தீமைகளை செய்கிறார்கள். யோசபாத் இதுபற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "இப்போதும், இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டி, தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடைய சுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிட வருகிறார்கள்" *(2நாளா 20:11)* என்று பணிவோடு சொல்லுகிறான்.

சத்துருக்களின் எண்ணிக்கை திரளாயிருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான கூட்டமாயிருக்கிறார்கள். யோசபாத்திடமோ பெலனில்லை. யோசபாத்தின் சேனையிலுள்ளவர்களும் பெலனற்றவர்களாயிருக்கிறார்கள். யூதாதேசத்திற்கு விரோதமாக ஆபத்து நெருங்கி வருகிறது.

யோசபாத் கர்த்தரை நோக்கி, "எங்கள் தேவனே, அவர்களை நீர் நியாயந்தீர்க்கமாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது" (2நாளா 20:12) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறான்.

யோசபாத் கர்த்தருடைய ஆலயத்திலே, புதுப்பிரகாரத்து முகப்பிலே நின்று ஜெபம்பண்ணுகிறான். அப்போது யூதா கோத்திரத்தார் அனைவரும், அவர்கள் குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள் (2நாளா 20:13). அவர்களால் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கமுடியவில்லை. அவர்கள் கர்த்தரையே நோக்கிப் பார்த்து, அவருக்கு முன்பாக நிற்கிறார்கள்.

யகாசியேல் சொன்ன தீர்க்கதரிசனம் 2நாளா 20:14-19

2நாளா 20:14. அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தானியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னது:

2நாளா 20:15. சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது.

2நாளா 20:16. நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள்.

2நாளா 20:17. இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்.

2நாளா 20:18. அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள்.

2நாளா 20:19. கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகாசத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள்.

யோசபாத்தின் ஜெபத்திற்கு கர்த்தர் தமது கிருபையினால் பதில் கொடுக்கிறார். யோசபாத் கர்த்தரிடத்தில் சொல்லுகிற வார்த்தைகளை, அவர் செவிகொடுத்து கேட்கிறார். யூதா சபையார் எல்லோரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூட கர்த்தருடைய ஆலயத்தைவிட்டு வெளியே புறப்பட்டுப்போகவில்லை. சபையார் கலைந்து செல்லவில்லை.

கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது ஒருபோதும் வீணான காரியமல்ல. நம்முடைய கண்கள் கர்த்தரை நோக்கிப் பார்ப்பது நமக்கு எப்போதுமே ஆசீர்வாதத்தைக் கொடுக்கும். நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கும்போது, கர்த்தரும் நம்மை நோக்கிப் பார்க்கிறார். அவர் நம்முடைய இருதயங்களிலுள்ள கவலைகளையும், கஷ்டங்களையும், பாரங்களையும் நோக்கிப் பார்க்கிறார்.

யோசபாத் தன்னுடைய பிரச்சனைகளையெல்லாம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான். யூதாகோத்திரத்தார் அனைவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள். அவர்கள் கலைந்து செல்வதற்கு முன்பாகவே கர்த்தருடைய வார்த்தை அங்கே உண்டாயிற்று. இந்த யுத்தத்திலே யூதாவில் மனுஷருக்கு வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

அப்பொழுது சபையின் நடுவிலிருக்கிற மத்தானியாவின் குமாரனாகிய ஏயெலின் மகனான பெனாயாவுக்குப் பிறந்த சகரியாவின் புத்திரன் யகாசியேல் என்னும் ஆசாப்பின் புத்திரரில் ஒருவனான லேவியன்மேல் கர்த்தருடைய ஆவி யானவர் இறங்குகிறார். அவனுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

யகாசியேல் யோசபாத்திற்கும், யூதாதேசத்தார் அனைவருக்கும் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். இவன் ஆசாபின் புத்திரரில் ஒருவன். ஆசாப் ஒரு சங்கீதக்காரன். தம்முடைய சமுகத்திலே சங்கீதம் பாடுகிறவர்களை, கர்த்தர் கனம்பண்ணுகிறார். அவர்களுடைய இருதயத்திலே கர்த்தர் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்துகிறார்.

யகாசியேல் யோசபாத்திற்கும், யூதாவின் மனுஷருக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அங்கே அற்புதங்களோ அல்லது அடையாளங்களோ நடைபெறவில்லை. கர்த்தர் சொன்ன வார்த்தையை உறுதிபண்ணுவதற்கு, அங்கே ஒரு அடையாளமும் நடக்கவில்லை. ஆனால் கர்த்தர் சொன்ன வார்த்தைகள் மறுநாளிலே நிறைவேறுகிறது. தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறுவதே, தீர்க்கதரிசனத்தின் அடையாளம்.

யகாசியேல் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற எல்லோரையும் நோக்கி, "சகல யூதா கோத்திரத்தாரே, எருசலேமின் குடிகளே, ராஜாவாகிய யோசபாத்தே, கேளுங்கள்; நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது" *(2நாளா 20:15)* என்று சொல்லுகிறான்.

யூதாவின் மனுஷர் எல்லோரும் கர்த்தரை நம்பவேண்டும். சத்துருக்கள் ஏராளமான கூட்டமாயிருந்தாலும், யூதாவின் மனுஷர் அவர்களுக்கு பயப்படக்கூடாது. அவர்களுடைய திரளான எண்ணிக்கையைப் பார்த்து கலங்கக்கூடாது. யூதாகோத்திரத்தாரின் கண்கள் சத்துருக்களை நோக்கிப் பார்க்காமல், கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், பலத்தையும், பராக்கிரமத்தையும் நோக்கிப் பார்க்கவேண்டும். யகாசியேல் இந்த யுத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "இந்த யுத்தம் உங்களுடையதல்ல" என்றும், "இது தேவனுடையது" என்றும் சொல்லுகிறான்.

யுத்தம் கர்த்தருடையது. ஆகையினால் கர்த்தரே யுத்தம்பண்ணுவார். யூதாஜனத்தார் சத்துருக்களைப் பார்த்து பயப்படவும் கூடாது. கலங்கவும் கூடாது. இந்த சூழ்நிலையில் யூதாஜனத்தார் என்ன செய்யவேண்டும் என்றும் யகாசியேல் அவர்களுக்கு சொல்லுகிறான். மேலும் சத்துருக்கள் எந்த வழியாக வருகிறார்கள் என்னும் இரகசியத்தையும் யகாசியேல் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறான். அவன் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான். கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமில்லை.

யகாசியேல், யோசபாத் ராஜாவையும் யூதாகோத்திரத்தாரையும் நோக்கி, "நாளைக்கு நீங்கள் அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்; இதோ, அவர்கள் சிஸ் என்னும் மேட்டுவழியாய் வருகிறார்கள்; நீங்கள் அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டு சந்திப்பீர்கள்" *(2நாளா 20:16)* என்று சொல்லுகிறான்.

"நாளைக்கு" என்னும் வார்த்தைக்கு, "உபவாசம் நிறைவு பெற்ற மறுநாளிலே" என்று பொருள். யூதாதேசத்தாரின் சத்துருக்களுக்கு விரோதமாக கர்த்தர் யுத்தம்பண்ணுவார். யூதாவின் மனுஷர் யுத்தம்பண்ணமாட்டார்கள். கர்த்தர் யுத்தம்பண்ணுவதை யூதாவின் மனுஷர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். கர்த்தர் செய்யும் அற்புதத்தைப் பார்ப்பதற்கு, யூதாவின் மனுஷர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாகப் போகவேண்டும். அவர்களை யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே சந்திக்கவேண்டும். யூதாவின் மனுஷர் இதை மாத்திரம் செய்தால் போதுமானது.

கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்று நினைத்து, அவர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போய்விடக்கூடாது. கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளுக்கு கவனமாய்க் கீழ்ப்படியவேண்டும். சத்துருக்களை முறியடிப்பதற்கு கர்த்தர் யூதாகோத்திரத்தாரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்தவில்லை. அவர்கள் தரித்து நின்று கர்த்தர் தங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பார்ப்பார்கள்.

யகாசியேல் யூதாவின் மனுஷருக்கு இந்த யுத்தத்தைப்பற்றியும், இந்த யுத்தத்திலே கர்த்தர் என்ன செய்வார் என்பது பற்றியும் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான். யகாசியேல் யூதாவின் மனுஷரை நோக்கி, "இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல; யூதா மனுஷரே, எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார்" *(2நாளா 20:17)* என்று சொல்லுகிறான்.

யூதாதேசத்தாருக்கு விரோதமாக சத்துருக்கள் யுத்தம்பண்ண வருவதுபோல, விசுவாசிகளாகிய நமக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆவிக்குரிய சத்துருக்கள் வருகிறார்கள். நாமும் யூதாகோத்திரத்தாரைப்போல, நம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாகப் புறப்பட்டுப்போகவேண்டும். கர்த்தருடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். கர்த்தரே நமக்காக யுத்தம்பண்ணுகிறவர். அவர் சத்துருவை தம்முடைய கால்களின் கீழே மிதித்துப் போடுவார். கர்த்தர் நம்மை சத்துருவின்மீது வெற்றி சிறக்கப்பண்ணுவார்.

யகாசியேல் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளை யோசபாத் செவிகொடுத்து கேட்கிறான். அவன் கர்த்தரையும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் நம்புகிறான். யோசபாத்தும், யூதாவின் மனுஷர் எல்லோரும், கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாக சொன்ன வார்த்தைகளை விசுவாசத்தோடும், பயபக்தியோடும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிகிறான்; சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுகிறார்கள். எல்லோருமே கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தி, அவரைப் பணிந்துகொள்கிறார்கள் *(2நாளா 20:18)*.

அப்பொழுது கோகாத்தியரின் புத்திரரிலும் கோராகியரின் புத்திரரிலும் இருந்த லேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதிக்கிறார்கள் *(2நாளா 20:19)*.

சத்துருக்களின் சங்காரம்
2நாளா 20:20-25

2நாளா 20:20. அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, தெக்கோவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்; புறப்படுகையில் யோசபாத் நின்று: யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்.

2நாளா 20:21. பின்பு அவன் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்தினான்.

2நாளா 20:22. அவர்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள்.

2நாளா 20:23. எப்படியெனில், அம்மோன் புத்திரரும் மோவாபியரும், சேயீர் மலைத்தேசக்குடிகளைச் சங்கரிக்கவும் அழிக்கவும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள்; சேயீர் குடிகளை அழித்துத் தீர்ந்தபோது, தாங்களும் தங்களில் ஒருவரையொருவர் அழிக்கத்தக்கவிதமாய்க் கைகலந்தார்கள்.

2நாளா 20:24. யூதாமனுஷர் வனாந்தரத்திலுள்ள சாமக்கூட்டண்டையிலே வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்துகிடக்கிற பிரேதங்களாகக் கண்டார்கள்; ஒருவரும் தப்பவில்லை.

2நாளா 20:25. யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிட வந்தபோது, அவர்கள் கண்ட ஏராளமான பொருள்களும் பிரேதங்களிலிருந்து உரிந்துபோட்ட ஆடை ஆபரணங்களும், தாங்கள் எடுத்துக்கொண்டு போகக்கூடாதிருந்தது; மூன்றுநாளாய்க் கொள்ளையிட்டார்கள்; அது அவ்வளவு மிகுதியாயிருந்தது.

யோசபாத் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினான். கர்த்தர் அவனுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளை யகாசியேல் மூலமாக தீர்க்கதரிசனமாகச் சொன்னார். கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு திரளாய்ப் புறப்பட்டு வந்த சத்துருக்கள் சங்காரமாகிறார்கள். யோசபாத்தின் சேனைக்கு சத்துருக்கள்மீது ஜெயமுண்டாயிற்று.

யோசபாத்தின் சேனையிலுள்ளவர்கள் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். "அவனுக்கு உதவியாக யோசபாத் இருந்தான்; அவனிடத்திலே சேவகத்திற்கு ஆயுதபாணிகள் லட்சத்து எண்பதினாயிரம்பேர் இருந்தார்கள்" *(2நாளா 17:18).*

யோசபாத்தும் அவனுடைய சேனையிலுள்ளவர்களும், அதிகாலமே எழுந்திருந்து, தெக்கொவாவின் வனாந்தரத்திற்குப் போகப் புறப்படுகிறார்கள். அவர்கள் தங்களோடு கொண்டுபோன பட்டயங்களைப்பற்றியோ, வில் அம்பு போன்ற ஆயுதங்களைப்பற்றியோ, இந்த வசனப்பகுதியில் ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்கள் கர்த்தரை நம்பி புறப்பட்டுப்போகிறார்கள். கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

யோசபாத்தும், யூதாவின் மனுஷரும் கர்த்தர்மீது வைத்திருக்கிற விசுவாசமே அவர்களுக்கு கேடகமாகயிருக்கிறது. அவர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்தி சென்றார்களா என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் இருதயங்களில், கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தை சுமந்து செல்கிறார்கள்.

அவர்கள் புறப்படுகையில் யோசபாத் நின்று: "யூதாவே, எருசலேமின் குடிகளே, கேளுங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்" *(2நாளா 20:20)* என்று சொல்லுகிறான்.

யூதாவின் மனுஷர் கர்த்தரையும் நம்பவேண்டும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் நம்பவேண்டும். கர்த்தரை நம்பினால் அவர்கள் நிலைப்படுவார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை நம்பினால் அவர்கள் சித்திபெறுவார்கள்.

யோசபாத் யூதாவின் மனுஷரோடு ஆலோசனை பண்ணுகிறான். அவன் யுத்த வியூங்களை வகுப்பதற்கு பதிலாக, கர்த்தரைத் துதித்துப் பாடுவதற்கு வியூகங்களை வகுக்கிறான்.

யோசபாத் ஜனத்தோடே ஆலோசனைபண்ணி, பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும், ஆயுதம் அணிந்தவர்களுக்கு முன்னாக நடந்துபோய், கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றும் உள்ளதென்று கர்த்தரைப் பாடவும், பாடகரை நிறுத்துகிறான் (2நாளா 20:21).

யூதாவின் மனுஷர் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தரைத் துதித்து பாடிக்கொண்டே போகிறார்கள். அவர்கள் புறப்பட்டுப்போவது விநோதமாகவும் நூதனமாகவும் இருக்கிறது. அவர்களிடத்தில் யுத்த ஆர்ப்பரிப்புக்கள் இல்லை. ஆனால் அவர்களுடைய வாயில் கர்த்தரைத் துதித்துப் பாடும் துதியின் ஆர்ப்பரிப்பு இருக்கிறது. யூதாவின் மனுஷர் எல்லோரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மகாசத்தத்தோடே கம்பீரமாய்த் துதித்து, சத்துருக்களுக்கு விரோதமாகப் புறப்பட்டுப்போகிறார்கள்.

அம்மோன் புத்திரரும், மோவாபியரும், யெருவேல் வனாந்தரத்திற்கு எதிரான பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். யோசபாத்தும் யூதாவின் மனுஷரும் கர்த்தரைத் துதித்துப்பாடி, தெக்கொவாவின் வனாந்தரத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள்.

தாம் சொன்ன பிரகாரம் கர்த்தர் யூதாவின் மனுஷருக்காக, அவர்களுடைய சத்துருக்களோடு யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் வானத்திலிருந்து இடியையோ, மின்னலையோ, பலத்த காற்றையோ அனுப்பி சத்துருக்களை அழிக்கவில்லை. கர்த்தர் யூதாமனுஷருடைய சத்துருக்களை இங்கு அழிப்பதும், ஒரு புதுமையான சம்பவமாயிருக்கிறது.

யூதாவின் மனுஷர் கர்த்தரை பாடித் துதிசெய்யத் தொடங்கினபோது, யூதாவுக்கு விரோதமாய் வந்து பதிவிருந்த அம்மோன் புத்திரரையும், மோவாபியரையும், சேயீர் மலைத் தேசத்தாரையும், ஒருவருக்கு விரோதமாய் ஒருவரைக் கர்த்தர் எழும்பப்பண்ணினதினால் அவர்கள் வெட்டுண்டு விழுகிறார்கள் (2நாளா 20:22).

சத்துருக்களின் சேனையில் கர்த்தர் யூதாவுக்காகப் பெரிய அற்புதம் ஒன்றைச் செய்கிறார். சத்துருக்களை ஒருவருக்கு விரோதமாய் ஒருவரை எழும்பப்பண்ணுகிறார். அதினால் அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். ஒருவரையொருவர் அழிக்கத்தக்க விதமாய்க் கைகலந்தார்கள். (2நாளா 20:23).

யூதாதேசத்தார் யுத்தகளத்திற்கு வந்தபோது, தங்கள் சத்துருக்களைத் தரையிலே விழுந்துகிடக்கிற பிரேதங்களாகக் காண்கிறார்கள். (2நாளா 20:24). கர்த்தர் சொன்ன பிரகாரம், யூதாவின் சேனை யுத்தம் பண்ண வேண்டிய அவசியமில்லாமல் போயிற்று (2நாளா 20:15-17).

யூதா புத்திரர் சத்துருக்களை மூன்றுநாளாய்க் கொள்ளையிட்டார்கள். அவர்களால்கொள்ளையை எடுத்துக்கொண்டு போகக்கூடாதிருக்கிறது (2நாளா 20:25).

அர்மெகெதோனில் நடைபெறப்போகும் யுத்தத்திலும் இதுபோன்ற அற்புதங்கள் நடைபெறும். தேவதூதர்களும், (சக 14:12-14; மத் 25:31; 2தெச 1:7-10), உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் (சக 14:5; யூதா 1:14-15; வெளி 19:11-12) சாத்தானுக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைப் பாடி துதி செய்ய தொடங்கினபோது, கர்த்தர் அவர்களை இரட்சிக்கத் தொடங்குகிறார். எப்படியெனில், அம்மோன் புத்திரரும் மோவாபியரும், சேயீர் மலைத்தேசக்குடிகளைச் சங்கரிக்கவும் அழிக்கவும் அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்; சேயீர் குடிகளை அழித்துத் தீர்ந்தபோது, தாங்களும் தங்களில் ஒருவரையொருவர் அழிக்கத்தக்கவிதமாய்க் கைகலக்கிறார்கள் (2நாளா 20:23). சத்துருக்கள் எல்லோரும், தங்கள் கைகளாலேயே, வெட்டுண்டு விழுகிறார்கள். யூதாவின் மனுஷருக்கு, தங்கள் சத்துருக்களை வெட்டவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

கர்த்தர் சொன்ன பிரகாரம் யூதாவின் மனுஷர் தரித்து நின்று, கர்த்தர் தங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பார்க்கிறார்கள். யூதாமனுஷர் வனாந்தரத்திலுள்ள சாமக்கூட்டண்டையிலே வந்து, அந்த ஏராளமான கூட்டமிருக்கும் திக்கை நோக்குகிறபோது, இதோ, அவர்கள் தரையிலே விழுந்துகிடக்கிற பிரேதங்களாகக் காண்கிறார்கள்; ஒருவரும் தப்பவில்லை (2நாளா 20:24).

யூதாவின் மனுஷரால் தங்கள் சத்துருக்களின் உடமைகளை ஒரே நாளில் கொள்ளையிட முடியவில்லை. அவர்கள் மூன்று நாட்களாக கொள்ளையிடுகிறார்கள் யோசபாத்தும் அவனுடைய ஜனங்களும் அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிட வந்தபோது, அவர்கள் கண்ட ஏராளமான பொருள்களும் பிரேதங்களிலிருந்து உரிந்துபோட்ட ஆடை ஆபரணங்களும், தாங்கள் எடுத்துக்கொண்டு போகக்கூடாதிருக்கிறது; மூன்றுநாளாய்க் கொள்ளையிடுகிறார்கள்; அது அவ்வளவு மிகுதியாயிருக்கிறது (2நாளா 20:25).

பெராக்காவிலே ஸ்தோத்திர கூட்டம் 2நாளா 20:26-30

2நாளா 20:26. நாலாம் நாளில் பெராக்காவிலே கூடினார்கள்; அங்கே கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர் தரித்தார்கள்.

2நாளா 20:27. பின்பு கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள்பேரில் களிகூரச் செய்தபடியால் யூதா மனுஷர் யாவரும் எருசலேம் ஜனங்களும், அவர்களுக்கு முன்னாலே யோசபாத்தும் மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

2நாளா 20:28. அவர்கள் தம்புருகளோடும் சுரமண்டலங்களோடும் பூரிகைகளோடும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வந்தார்கள்.

2நாளா 20:29. கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களோடு யுத்தம்பண்ணினார் என்று கேள்விப்பட்ட அந்தந்த தேசத்து ராஜ்யத்தார் மேல் தேவனால் உண்டான பயங்கரம் வந்தது.

2நாளா 20:30. இவ்விதமாய் தேவன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலை அவனுக்குக் கட்டளையிட்டதினால், யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருந்தது.

யூதாமனுஷர் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. கர்த்தரே யூதாமனுஷருக்காக யுத்தம்பண்ணினார். கர்த்தர் தங்களுக்கு செய்த உதவியையும், இரட்சிப்பையும் யூதாமனுஷர் மறக்கவில்லை. அவர்கள் மூன்று நாட்களாக சத்துருக்களின் உடைமைகளைக் கொள்ளையிடுகிறார்கள். அதன் பின்பு நாலாம் நாளில், அவர்கள் பெராக்காவிலே கூடுகிறார்கள்; அங்கே அவர்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்கள்; ஆதலால் அவ்விடத்திற்கு இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி பெராக்கா என்னும் பேர் தரிக்கிறார்கள் (2நாளா 20:26).

யுத்தம் முடிந்துபோயிற்று. யுத்தக்களத்திலே கொள்ளையிடுவதும் முடிந்துபோயிற்று. இனிமேல் யூதாவின் மனுஷருக்கு யுத்தக்களத்திலே வேலை இல்லை. யோசபாத் தன்னுடைய சேனைகளையெல்லாம் யுத்தக்களத்திலிருந்து வெளியேற்றி, வழிநடத்துகிறான். அவர்கள் தங்களுடைய கொள்ளைப்பொருளை சந்தோஷமாய் அனுபவிப்பதற்கு, தங்களுடைய வீடுகளுக்கு உடனே போகவில்லை. அதற்கு பதிலாக அவர்கள் எல்லோரும் நாலாம் நாளிலே பெராக்காவில் கூடுகிறார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதற்காக அவர்கள் அங்கே கூடுகிறார்கள்.

"பெராக்கா" என்னும் பெயருக்கு "ஆசீர்வாதம்" என்று பொருள். கர்த்தர் யோசபாத்தையும், அவனுடைய சேனையையும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் பெராக்காவிலே கர்த்தரைத் துதித்த பின்பு, எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள்.

அவர்கள் எருசலேமுக்கு திரும்பி வருவதும், கர்த்தரைத் துதிக்கும் செய்கையாயிருக்கிறது. யோசபாத் முன்னாலே வருகிறான். யூதா மனுஷர் யாவரும் அவனுக்கு பின்னாலே மகிழ்ச்சியோடு வருகிறார்கள். அவர்கள் கர்த்தரைத் துதிக்கும்போது, யோசபாத்தின் சேனையோடு, யூதா மனுஷர் யாவரும் சேர்ந்து கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள்பேரில் களிகூரச் செய்தபடியால் யூதா மனுஷர் யாவரும் எருசலேம் ஜனங்களும், அவர்களுக்கு முன்னாலே யோசபாத்தும் மகிழ்ச்சியோடே எருசலேமுக்குத் திரும்புகிறார்கள் (2நாளா 20:27).

யூதாமனுஷர் எல்லோரும் பெராக்காவிலே கூடி கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். இப்போது அவர்கள் எல்லோரும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறார்கள். அவர்கள் தம்புருகளோடும், சுரமண்டலங்களோடும், பூரிகைகளோடும், கர்த்தருடைய ஆலயத்திலே, கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள்.

யோசபாத்தும் அவனுடைய சேனையும், சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, பாடகர்கள், "கர்த்தரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று கர்த்தரைத் துதித்து பாடிக்கொண்டே போனார்கள். இப்போது அவர்கள், யுத்தத்திலே வெற்றி பெற்று திரும்பி வரும்போது, அதே துதியின் பாடலை சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டே வருகிறார்கள். மெய்யாகவே கர்த்தருடைய கிருபை, அவரை நம்புகிறவர்களுக்கு, என்றுமுள்ளது.

கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களோடு யுத்தம்பண்ணினார் என்று கேள்விப்பட்ட அந்தந்த தேசத்து ராஜ்யத்தார் மேல் தேவனால் உண்டான பயங்கரம் வருகிறது. இவ்விதமாய் தேவன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலை அவனுக்குக் கட்டளையிடுகிறார். அதினால், யோசபாத்தின் ராஜ்யபாரம் அமரிக்கையாயிருக்கிறது (2நாளா 20:29,30).

யுத்தகளத்தில் நடைபெற்ற அற்புதம் யூதாவின் அண்டை தேசத்தாருக்கெல்லாம் தெரிய வருகிறது. (2நாளா 20:29-30). இதுபோன்ற அற்புதமான செய்தியை அவர்கள் இதுவரையிலும் கேள்விப் பட்டதில்லை. செங்கடலில் பார்வோனின் சேனை அழிந்தது. எசேக்கியாவின் காலத்தில் ஒருநாள் இரவில் ஒரு தூதன் 185,000 பேரைக் கொன்று போட்டான் (ஏசா 37:36-38). ஆனாலும் யோசபாத்தின் நாட்களில் நடந்த அற்புதம் மிகவும் பிரசித்தி பெற்றது. இதுபோன்ற அற்புதம் அர்மெகதோன் யுத்தத்தில் நடைபெறும். (சக 14:12-15; 2தெச 1:7-10; வெளி 19:11-21).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு சமாதானத்தைக் கொடுக்கும்போது, அந்த சமாதானத்தை, யாராலும் பறித்துக்கொள்ள முடியாது.

யோசபாத்தின் நடபடிகள் 2நாளா 20:31-37

2நாளா 20:31. யோசபாத் யூதாவை அரசாண்டான்; அவன் ராஜாவாகிறபோது, முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்; சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின்பேர் அசூபாள்.

2நாளா 20:32. அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழியிலே நடந்து, அதைவிட்டு விலகாதிருந்து, கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

2நாளா 20:33. ஆனாலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் தங்கள் இருதயத்தைத் தங்கள் பிதாக்களின் தேவனுக்கு இன்னும் நேராக்காதிருந்தார்கள்.

2நாளா 20:34. யோசபாத்தின் ஆதியந்தமான மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் கண்டிருக்கிற ஆனானியின் குமாரனாகிய யெகூவின் வசனங்களில் எழுதியிருக்கிறது.

2நாளா 20:35. அதற்குப்பின்பு யூதாவின் ராஜாவாகிய யோசபாத் பொல்லாப்புச் செய்கிறவனான அகசியா என்னும் இஸ்ரவேலின் ராஜாவோடே தோழமைபண்ணினான்.

2நாளா 20:36. தர்ஷீசுக்குப் போகும்படிக்குக் கப்பல்களைச் செய்ய அவனோடே கூடிக் கொண்டான்; அப்படியே எசியோன் கேபேரிலே கப்பல்களைச் செய்தார்கள்.

2நாளா 20:37. மரேசா ஊரானாகிய தொதாவாவின் குமாரனான எலியேசர் யோசபாத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லி: நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால், கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப்போட்டார் என்றான்; அந்தக் கப்பல்கள் உடைந்துபோயிற்று, அவர்கள் தர்ஷீசுக்குப் போகக்கூடாமற்போயிற்று.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. யோசபாத் கர்த்தருக்கு பயந்தவன். ஆனாலும் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் வீட்டாரோடு இவன் சிநேகம் வைத்திருக்கிறான்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத், இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபோடு சேர்ந்து, சீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறான். அகசியா ஆகாபின் குமாரன்.

யோசபாத் பொன்னுக்காக ஒப்பீருக்குப் போகும்படி, தர்ஷீஸ் கப்பல்களைச் செய்கிறான்; ஆனால் அவைகள் போகவில்லை; அவைகள் எசியோன்கேபேரிலே உடைந்துபோயிற்று. அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய அகசியா யோசபாத்தை நோக்கி: "என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூடக் கப்பல்களிலே போகட்டும்" என்று சொல்லுகிறான்; அதற்கு யோசபாத் சம்மதிக்கவில்லை (1இராஜா 22:48,49).

யோசபாத் ஆகாபோடு உடன்படிக்கை செய்து, சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான். இந்த யுத்தத்தில் யோசபாத்திற்கு மிகப்பெரிய ஆபத்து உண்டாயிற்று. அதன் பின்பு யோசபாத் ஆகாபின் வீட்டாரோடு ஒப்பந்தம் பண்ண விரும்பவில்லை. யோசபாத் ஆகாபின் குமாரனாகிய அகசியாவோடு கப்பல் வியாபாரத்தில் சம்பந்தம் பண்ண விரும்பாமல் மறுத்துவிடுகிறான்.

கீலேயாத்திலுள்ள ராமோத்திலே தனக்கு வந்த ஆபத்தை யோசபாத் இன்னும் மறக்கவில்லை. ஆகாபைப்போன்ற துன்மார்க்கனோடு சிநேகம் வைத்துக்கொள்ளக்கூடாது என்று யோசபாத் தீர்மானம்பண்ணுகிறான்.

யோசபாத் யூதாதேசத்திலே அநேகம் வருஷங்களுக்கு ஆட்சி புரியவில்லை. ஆனாலும் யோசபாத்தின் ஆட்சிக்காலம் நல்ல ஆட்சிக்காலமாயிருக்கிறது. யோசபாத் ராஜாவாகிறபோது முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (1இராஜா 22:42). சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் அசுபாள்.

யோசபாத் தன் தகப்பனாகிய ஆசாவின் வழிகளிலெல்லாம் நடக்கிறான்; அவன் அதை விட்டு விலகாமல் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் (1இராஜா 22:43). யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்தில் அமைதியும் செழிப்பும் உண்டாயிற்று. ஜனங்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள்.

யோசபாத் தன் தகப்பனாகிய ஆசாவின் நாட்களில் மீதியாய் விட்டிருந்த இலச்சையான புணர்ச்சிக்காரரையும் அவன் தேசத்திலிருந்து அற்றுப்போகப்பண்ணுகிறான் (1இராஜா 22:44).

ஆகிலும் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வருகிறார்கள் (1இராஜா 22:43). யூதாகோத்திரத்தாரும் பென்யமீன் கோத்திரத்தாரும், மேடைகளின்மேல் பலியிட்டு தூபங்காட்டி வருகிறார்கள். இவர்கள் எருசலேமுக்கு அருகாமையிலிருந்தாலும், கர்த்தரை முழுஇருதயத்தோடும், முழுமனதோடும் பின்பற்றவில்லை.

யோசபாத்தின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்திலே சமாதானம் நிரம்பியிருக்கிறது. இவனுடைய காலத்தில் இஸ்ரவேலர் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. யோசபாத் இஸ்ரவேலின் ராஜாவோடே சமாதானமாயிருக்கிறான் (1இராஜா 22:44).

யோசபாத் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதை தவிர்க்கிறான். யுத்தம் இல்லாதிருந்தால்தான் சமாதானம் இருக்கும். அப்பொழுது ஏதோமில் ராஜா இல்லை; பிரதிராஜா ஒருவன் இருக்கிறான் (1இராஜா 22:47). ஏதோமின் பிரதிராஜா, யோசபாத்திற்கு பகுதி பணம் கட்டுகிறான்.

"மூத்தவன் இளையவனை சேவிப்பான்" என்னும் தீர்க்கதரிசனம் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் சொல்லப்பட்டது. இது யோசபாத்தின் ராஜ்யபாரத்தில் நிறைவேறுகிறது. யோசபாத் கர்த்தரைக் கனம்பண்ணுகிறான். கர்த்தர் யோசபாத்தை ஆசீர்வதிக்கிறார்.

யோசபாத்தின் மற்ற வர்த்தமானங்களும், அவன் காட்டிய வல்லமையும், அவன் பண்ணின யுத்தமும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (1இராஜா 22:45).

யோசபாத்தின் ராஜ்யபாரம் முடிவு பெறுகிறது. அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தான். யோசபாத் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தான். அவன் கர்த்தரை ஆராதித்ததோடு, யூதாவின் மனுஷரையும் அவரை ஆராதிக்க வழிநடத்தினான்.

யோசபாத்தின் நடபடிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "யோசபாத் யூதாவை அரசாண்டான்; அவன் ராஜாவாகிறபோது, முப்பத்தைந்து வயதாயிருந்து, இருபத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்; சில்கியின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின்பேர் அசுபாள். அவன் தன் தகப்பனாகிய ஆசாவின் வழியிலே நடந்து, அதைவிட்டு விலகாதிருந்து, கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" (2நாளா 20:31,32).

யோசபாத்தின் ஆதியந்தமான மற்ற வர்த்தமானங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் கண்டிருக்கிற ஆனானியின் குமாரனாகிய யெகூவின் வசனங்களில் எழுதியிருக்கிறது (2நாளா 20:34).

யோசபாத்தின் ராஜ்யபாரத்தில் இரண்டு தப்பிதங்கள் காணப்படுகிறது. அவையாவன :

1. யூதாதேசத்தில் மேடைகள் தகர்க்கப்படவில்லை; ஜனங்கள் தங்கள் இருதயத்தைத் தங்கள் பிதாக்களின் தேவனுக்கு இன்னும் நேராக்காதிருக்கிறார்கள் (2நாளா 20:33).

2. யூதாவின் ராஜாவாகிய யோசபாத் ஆகாபின் வீட்டாரோடு சம்மந்தங்கலந்திருக்கிறான். யோசபாத் பொல்லாப்புச் செய்கிறவனான அகசியா என்னும் இஸ்ரவேலின் ராஜாவோடே தோழமைபண்ணுகிறான் (2நாளா 20:35).

கர்த்தருடைய வழிகளில் யோசபாத்தின் இருதயம் உற்சாகங்கொள்கிறது; அவன் மேடைகளையும் விக்கிரகத் தோப்புகளையும் யூதாவையும் விட்டகற்றுகிறான் (2நாளா 17:6). ஆனாலும் யூதாதேசத்தில் மேடைகள் தகர்க்கப்படாமலிருப்பதினால், யூதாஜனங்கள் தங்கள் இருதயத்தை, கர்த்தருக்கு நேராக்காதிருக்கிறார்கள்.

யோசபாத் தன் குமாரனுக்கு ஆகாபின் குமாரத்தியை திருமணம் செய்து வைத்து, ஆகாபின் வீட்டாரோடு சம்பந்தம்பண்ணுகிறான். இதற்கு முன்பு யோசபாத் ஆகாபோடு யுத்தத்திலே சம்பந்தம்பண்ணினான். இப்போது ஆகாபின் வீட்டாரோடு வியாபாரத்தில் சம்பந்தம்பண்ணுகிறான்.

யோசபாத் அகசியாவோடு தோழமைபண்ணி, தர்ஷீசுக்குப் போகும்படிக்குக் கப்பல்களைச் செய்ய அவனோடே கூடிக் கொள்கிறான்; அப்படியே அவர்கள் எசியோன் கேபேரிலே கப்பல்களைச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்கிற காரியங்கள் சித்திக்கவில்லை. கர்த்தர் அவர்களுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிக்கவில்லை.

கர்த்தருடைய வார்த்தை எலியெசருக்கு உண்டாயிற்று. மரேசா ஊரானாகிய தொதாவாவின் குமாரனான எலியேசர் யோசபாத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்சொல்லி: "நீர் அகசியாவோடே கூடிக்கொண்டபடியினால், கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப்போட்டார்" என்று சொல்லுகிறான்; அந்தக் கப்பல்கள் உடைந்துபோயிற்று, அவர்கள் தர்ஷீசுக்குப் போகக்கூடாமற்போயிற்று (2நாளா 20:37).

புயல்காற்று யோசபாத்தின் கப்பல்களை உடைத்துப்போட்டது. யோசபாத் அகசியாவோடு தோழமை பண்ணியதை எச்சரிப்பதற்காக, கர்த்தர் அவனுக்கு இந்த தண்டனையைக் கொடுக்கிறார். யோசபாத் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான். அவன் அதன் பின்பு அகசியாவோடு சிநேகம் வைத்துக் கொள்ளவில்லை.

"அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய அகசியா யோசபாத்தை நோக்கி: என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூடக் கப்பல்களிலே போகட்டும் என்றான்; அதற்கு யோசபாத் சம்மதிக்கவில்லை" (1இராஜா 22:49).

21 அதிகாரம்

யோசபாத் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணின செம்மையான ராஜாக்களில் ஒருவன். அவனுடைய குமாரனாகிய யோராமோ, யூதாவின் ராஜாக்களில் துன்மார்க்கராயிருந்தவர்களில் ஒருவன்.

யோசபாத் தன்னுடைய ராஜ்யபாரத்தின்போது, யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான். ராஜாங்க காரியங்களில் சீர்திருத்தங்களை உண்டாக்கினான் (2நாளா 20:33). ஆனால் யோசபாத் மரித்த பின்பு, யூதாஜனத்தார் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலே நிலைத்திருக்கவில்லை.

யோசபாத், தன்னுடைய சேஷ்டபுத்திரனாகிய யோராமுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கிறான் (2நாளா 21:1-3). யோராம் தன்னுடைய சகோதரரை கொன்றுபோடுகிறான் (2நாளா 21:4).

யோராமின் விக்கிரகாராதனையும், அவன் செய்த மற்ற பாவங்களும் (2நாளா 21:5,6,11). எலியா யோராமுக்கு விரோதமாகச் சொன்ன தீர்க்கதரிசனம் (2நாளா 21:12-15).

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யோராமின்மீது வருகிறது. ஏதோமியர் யோராமுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள் (2நாளா 21:8-10). பெலிஸ்தரும் அரபியரும் யோராமின் குடும்பத்தாரை சிறைப்பிடிக்கிறார்கள் (2நாளா 21:16,17). யோராமுக்கு அவனுடைய குடல்களில் தீராத நோய் உண்டாயிற்று (2நாளா 21:18-20). ஆனாலும் கர்த்தர் தாவீதின் வம்சத்தை அழிக்க சித்தமில்லாதிருக்கிறார் (2நாளா 21:7).

யோராமின் ராஜ்யபாரம்
2நாளா 21:1-11

2நாளா 21:1. யோசேபாத் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்பட்டான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோராம் ராஜாவானான்.

2நாளா 21:2. அவனுக்கு யோசேபாத்தின் குமாரராகிய அசரியா, ஏகியேல், சகரியா, அசரியா, மிகாவேல், செப்பத்தியா என்னும் சகோதரர் இருந்தார்கள்; இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோசபாத்தின் குமாரர்.

2நாளா 21:3. அவர்களுடைய தகப்பன் வெள்ளியும் பொன்னும் உச்சிதங்களுமான அநேகம் நன்கொடைகளையும், யூதாவிலே அரணான பட்டணங்களையும் அவர்களுக்குக் கொடுத்தான்; யோராம் சேஷ்டபுத்திரனானபடியினால், அவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தான்.

2நாளா 21:4. யோராம் தன் தகப்பனுடைய ராஜ்யபாரத்திற்கு வந்து தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின்பு, அவன் தன்னுடைய சகோதரர் எல்லாரையும் இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் பட்டயத்தால் கொன்றுபோட்டான்.

2நாளா 21:5. யோராம் ராஜாவாகிறபோது, முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 21:6. அவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபின் வீட்டார் செய்ததுபோலச் செய்தான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருந்தாள்; அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 21:7. கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லி, அவனோடே பண்ணின உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் வம்சத்தை அழிக்கச்சித்தமில்லாதிருந்தார்.

2நாளா 21:8. அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம் பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

2நாளா 21:9. அதினால் யோராம் தன் பிரபுக்களோடும்தன் சகல இரதங்களோடும் புறப்பட்டுப்போனான்; அவன் இராத்திரியில் எழுந்திருந்து, தன்னை வளைந்துகொண்ட ஏதோமியரையும் இரதங்களின் தலைவரையும் முறிய அடித்தான்.

2நாளா 21:10. ஆகிலும் யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர் இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம்பண்ணிப் பிரிந்தார்கள்; அவன் தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டபடியினால், அக்காலத்திலே லீப்னா பட்டணத்தாரும் கலகம்பண்ணினார்கள்.

2நாளா 21:11. அவன் யூதாவுடைய மலைகளின்மேல் மேடைகளை உண்டாக்கி, எருசலேமின் குடிகளைச் சோரம்போகப்பண்ணி, யூதாவையும் அதற்கு ஏவிவிட்டான்.

யோசபாத்திற்கு ஏழுகுமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு: யோராம், அசரியா, ஏகியேல், சகரியா, அசரியா, மிகாவேல், செப்பத்தியா. இவர்களில் யோராம் யோசபாத்தின் சேஷ்டபுத்திரன்.

யோசபாத் தன் சேஷ்டபுத்திரனான யோராமுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கிறான். தன்னுடைய மற்ற புத்திரருக்கு வெள்ளியும் பொன்னும் உச்சிதங்களுமான அநேகம் நன்கொடைகளையும், யூதாவிலே அரணான பட்டணங்களையும் கொடுக்கிறான்.

யோசேபாத் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து, தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்படுகிறான்; அவன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோராம் ராஜாவாகிறான் *(2நாளா 21:1)*.

யூதாவின் ராஜாக்களில் மிகவும் மோசமான ராஜாவாயிருந்தவர்களில் யோராமும் ஒருவன். இவன் யோசபாத்தின் குமாரன். யோசபாத் யூததேசத்திலே ராஜ்யபாரம்பண்ணின நல்ல ராஜாக்களில் ஒருவன்.

யூதாதேசம் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாக தண்டிக்கப்படுகிறது. கர்த்தர் யூதாதேசத்தை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு அநேக சகாயங்களையும், பாக்கியங்களையும் கட்டளையிடுகிறார். ஆனால் யூதாதேசத்தாரோ, கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளுக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் யூதாதேசத்தின்மீது வருகிறது.

யோராம் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடக்கிறான். ஆகாபின் வீட்டார் செய்ததுபோல செய்கிறான். யோராமால் இதைவிட மோசமான அக்கிரமம் பண்ண முடியாது. யோசபாத் கர்த்தருக்கு பயந்து ஆட்சி செய்தவன். யோராம் தனக்கு முன்மாதிரியாக, தன்னுடைய தகப்பனாரின் வீட்டாரை பின்பற்றவில்லை. அதற்கு பதிலாக அவன் ஆகாபின் வீட்டாரை தனக்கு முன்மாதிரியாக பின்பற்றுகிறான். இதுவே அவனுடைய அழிவுக்கு காரணமாயிற்று.

யோராமின் தகப்பனாராகிய யோசபாத் கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ஆட்சி செய்தான். யோசபாத் தன் குமாரனாகிய யோராமுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை நிச்சயமாகவே உபதேசம் செய்திருப்பான். அவனுக்கு ஆவிக்குரிய காரியங்களைப் போதித்து, அவனை நல்வழியிலே நடத்த முயற்சி செய்திருப்பான்.

ஆனாலும் யோசபாத் தன் மகன் யோராமுக்கு, பக்தியுள்ள குடும்பத்தில் பெண் எடுக்கவில்லை. ஆகாபின் குமாரத்தி யோராமுக்கு மனைவியாயிருக்கிறாள். யோசபாத் தன் குமாரன் யோராமுக்கு, ஆகாபின் குமாரத்தியை மனைவியாகத் தெரிந்தெடுத்தது, அவன் செய்த மிகப்பெரிய தப்பிதமாயிருக்கிறது. தவறான நுகத்திலே பிணைக்கப்படுகிறவர்கள், அழிவின் பாதையை நோக்கிப் போவார்கள்.

யோசபாத் உயிரோடிருக்கும்போதே, தன்னுடைய குமாரன் யோராமை ராஜாவாக்குகிறான். இதுவும் யோசபாத்தின் தப்பிதமாகும். யோசபாத் யூதாவிலே இன்னும் ராஜாவாயிருக்கையில், யோசபாத்தின் குமாரனாகிய யோராம் என்னும் யூதாவின் ராஜா ராஜ்யபாரம்பண்ணத் துவங்குகிறான் (2இராஜா 8:16).

யோராம் தன் வாலிப வயதிலேயே யூதாதேசத்திற்கு ராஜாவானதினால், அவனுடைய மனதில் பெருமை உண்டாயிற்று. அவன் தன்னுடைய ராஜாசன அதிகாரங்களை தப்பிதமான வழிகளில் பயன்படுத்த ஆரம்பிக்கிறான். யோராம் தன்னுடைய வாலிப வயதிற்கு முக்கியத்துவம் கொடுத்து, கர்த்தருக்கு பயப்படாமல் துணிகரமாய்ப் பாவம் செய்கிறான்.

யோராம் ராஜாவாகிறபோது முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணுகிறான் (2இராஜா 8:17). யூதாதேசத்திலே யோசபாத்தும் ராஜாவாயிருக்கிறான். அவன் ராஜாவாயிருக்கையில், அவனுடைய குமாரன் யோராமும் ராஜாவாயிருக்கிறான்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு சொத்துக்களைப் பிரித்துக்கொடுக்கும்போது மிகவும் கவனமாயிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு பொறுப்பும் பக்குவமும் வந்த பின்பே அவர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கவேண்டும். பொறுப்பில்லாத பிள்ளைகள் அதிகாரத்தை துஷ்பிரயோகம்பண்ணுவார்கள். அவர்கள் தங்களுக்கு பிரித்துக்கொடுக்கப்பட்ட ஐசுவரியத்தை ஊதாரித்தனமாய் செலவுபண்ணுவார்கள்.

யோராம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தாலும் கர்த்தர் யூதாவை முற்றிலுமாய் அழிக்கவில்லை. கர்த்தர் தம்முடைய தாசனாகிய தாவீதுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து, யூதாவை அழிக்காமல் விட்டுவிடுகிறார்.

கர்த்தர்: "உன் குமாரருக்குள்ளே எந்நாளும் ஒரு விளக்கை உனக்குக் கட்டளையிடுவேன்" என்று தம்முடைய தாசனாகிய தாவீதுக்குச் சொன்னதின்படியே, அவனிமித்தம் அவர் யூதாவை முற்றிலும் கெடுக்கவில்லை (2இராஜா 8:19).

யோராமின் சகோதரர் ஆறுபேரும் அவனை விட நல்லவர்கள் (2நாளா 21:13). யூதாவை ராஜ்யபாரம்பண்ணுவதற்கு, யோராமைவிட, அவனுடைய சகோதரர்களே தகுதியானவர்கள். ஆனாலும் யோராம் யோசபாத்திற்கு சேஷ்டபுத்திரனாயிருக்கிறபடியினால், அவனுக்கு ராஜ்யபாரம் கொடுக்கப்படுகிறது.

"வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவனை சேஷ்டபுத்திரனாக அங்கிகரித்து, தனக்கு உண்டான ஆஸ்திகளிலெல்லாம் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்க வேண்டும்; அவன் தன் தகப்பனுடைய முதற்பலன், சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்கே உரியது" (உபா 21:17).

ராஜாவுக்கு பல புத்திரர்கள் இருக்கும்போது மூத்த குமாரனாகிய சேஷ்டபுத்திரனுக்கு ராஜ்யம் கொடுக்கப்படும். ஆனாலும் மூத்த குமாரன் ராஜ்யபாரம் பண்ண தகுதியற்றவனாக இருந்தால், கர்த்தர் இந்த முறையை மாற்றிப்போடுவார் (ஆதி 4:25).

யோசபாத் யோராமுக்கு ராஜ்யத்தைக்கொடுத்து யூதாதேசத்தாருக்கு தீங்கு செய்கிறான். யோராமின் தீயகுணம் யோசபாத்திற்கு நன்றாய்த் தெரியும். யோராம் விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிறவன். யோசபாத் யோராமின் சுபாவங்களை ஆராய்ந்து பார்த்து, அவனுக்கு ராஜ்யபாரத்தைக் கொடுக்காமல், தன்னுடைய குமாரரில் வேறொருவனுக்கு ராஜ்யபாரத்தைக் கொடுத்திருக்கவேண்டும்.

யோராம் தன் தகப்பனுடைய ராஜ்யபாரத்திற்கு வந்து தன்னைப் பலப்படுத்திக்கொண்டபின்பு, அவன் தன்னுடைய சகோதரர் எல்லாரையும் இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் பட்டயத்தால் கொன்றுபோடுகிறான் (2நாளா 21:4). யோராம் அவர்கள்மீது பொய்யான குற்றங்களை சுமத்தி, அவர்களைக் கொன்றுபோடுகிறான்.

இதனால் யோராம் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக பலவீனப்படுத்திக் கொள்கிறான். அவனுடைய ராஜ்யத்தின்மீது கர்த்தருடைய ஆசீர்வாதம் குறைந்து போயிற்று. கர்த்தர் யோராமிற்கு விரோதமாகத் தமது முகத்தைத் திருப்புகிறார். அவனுடைய ராஜ்யபாரத்தில் கலகங்களும், யுத்தங்களும் உண்டாயிற்று. கர்த்தருடைய பாதுகாப்பு யோராமிற்குக் கிடைக்கவில்லை.

2நாளா 21:2 ஆவது வசனத்தில் யோராமின் 6 சகோதரர்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கிறது. தன்னுடைய ஸ்தானத்தில் ராஜாவாக வருவதற்கு வாய்ப்புள்ள இவர்களையும், இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் யோராம் கொன்றுபோட்டான்.

யோராமின் ராஜ்யபாரத்திற்கு போட்டியாக, இப்போது யூதாதேசத்திலே ஒருவருமில்லை. அவனுக்கு விரோதமான பிரபுக்களும் இல்லை. யோராம் தன் சகோதரரைக் கொன்றுபோட்டதினால், யூதாவின் மனுஷரும், பிரபுக்களும் அவனுக்கு பயப்படுகிறார்கள்.

யோராம் ராஜாவாகிறபோது, முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான். அவன் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபின் வீட்டார் செய்ததுபோலச் செய்கிறான்; ஆகாபின் குமாரத்தி அவனுக்கு மனைவியாயிருக்கிறாள்; அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் (2நாளா 21:5,6).

யோராம் யூதாவுடைய மலைகளின்மேல் மேடைகளை உண்டாக்கி, எருசலேமின் குடிகளைச் சோரம்போகப்பண்ணி, யூதாவையும் அதற்கு ஏவிவிடுகிறான் (2நாளா 21:11).

யோராமின் தகப்பன் யோசபாத் மேடைகளையெல்லாம் அகற்றினான். யோராமோ மேடைகளை உண்டாக்குகிறான். (2நாளா 17:6). எருசலேமின் குடிகளைச் சோரம்போகப்பண்ணுகிறான். யூதாவையும் அதற்கு ஏவிவிடுகிறான். யூதாவின் ஜனங்கள் விக்கிரகாராதனையில் மறுபடியும் விழுகிறார்கள்.

எருசலேமிலே யோராமின் அரண்மனையிருக்கிறது. எருசலேமின் குடிகள் யோராமுக்கு பயப்படுவதினால், அவர்களும் அவனோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். யூதாதேசத்தில், யோராமின் நிமித்தமாக, ஆவிக்குரிய வேசித்தனம் அதிகமாய் நடைபெறுகிறது.

யூதாதேசத்தில் சிலர் கர்த்தருக்கு பயந்து பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்க தயங்குகிறார்கள். யோராம் எருசலேமிலுள்ள குடிகளை சோரம்போகபண்ணியதுபோல, யூதாஜனத்தார் எல்லோரையும் விக்கிரகாராதனைக்கு ஏவிவிடுகிறான். விக்கிரகங்களை ஆராதிக்குமாறு, யோராம் அவர்களைக் கட்டாயம்பண்ணுகிறான்.

யோராம் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறான். அவன் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறான். இதனால் யூதாஜனத்தாருக்கு யோராமின்மீது பிரியமும், மதிப்பும் மரியாதையும் இல்லை. யோராம் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவனை விட்டு விலகிப்போய்விடுகிறார். யூதாதேசத்திலே கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லை.

யோராமின் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம் பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அதினால் யோராம் தன் பிரபுக்களோடும்தன் சகல இரதங்களோடும் புறப்பட்டுப்போகிறான்; அவன் இராத்திரியில் எழுந்திருந்து, தன்னை வளைந்துகொண்ட ஏதோமியரையும் இரதங்களின் தலைவரையும் முறிய அடிக்கிறான் (2நாளா 21:8,9).

யோராம் ஏதோமியரை முறியடித்தாலும், அவர்கள் அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, யூதாதேசத்தைவிட்டுப் பிரிந்துபோய் விடுகிறார்கள். யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர் இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம்பண்ணிப் பிரிந்து போகிறார்கள் *(2நாளா 21:10).*

யோராம் தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டபடியினால், அக்காலத்திலே லீப்னா பட்டணத்தாரும் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லி, அவனோடே பண்ணின உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் வம்சத்தை அழிக்கச்சித்தமில்லாதிருக்கிறார். *(2நாளா 21:7).*

யோராம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். ஆனாலும் கர்த்தர் யோராமின் ராஜ்யத்தை முற்றிலுமாக அழிக்கவில்லை. தாவீதோடு தாம் செய்த உடன்படிக்கையைக் கர்த்தர் நினைவுகூருகிறார்.

சாத்தான் தாவீதின் வம்சத்தில் கிரியை செய்து குழப்பதை உண்டுபண்ணுகிறான். இந்த உலகத்திற்கு ஸ்திரீயின் வித்தை வரவிடாமல் தடுப்பதற்கு வஞ்சனை பண்ணுகிறான். *(ஆதி 3:15; 2சாமு 7:16; ஏசா 7:14; ஏசா 9:6-7).*

யோசபாத்தின் காலத்தில் சாத்தானின் சதி வேலை ஆரம்பமாயிற்று. *(2நாளா 18:1)* யோராமின் காலத்திலும், சாத்தான் தொடர்ந்து சதிபண்ணுகிறான். *(2நாளா 21:6).* இதன் பின்பு, அரபியர்கள் தாவீதின் வம்சத்தை அழிக்க முயற்சி பண்ணுகிறார்கள். *(2நாளா 21:17; 2நாளா 22:1)* இவர்களுக்குப் பின்பு அத்தாலியாள் ராஜவம்சத்தார் அனைவரையும் ஒரளவு கொன்றுபோடுகிறாள் *(2நாளா 22:10).*

தாவீதுக்கும், அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமானால் தாவீதும், அவனுடைய சந்ததியாரும் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். *(2இராஜா 8:19)*

கர்த்தர் நீடிய பொறுமையோடு தாவீதின் வம்சத்தாருடைய பாவங்களையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறார். யூதாவில் நல்ல ராஜா ஒருவன் வருவான் என்று பொறுமையோடு காத்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் யூதா தேசத்தை முழுவதுமாக அழித்துப்போடாமல் அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாக அவர்களை அவ்வப்போது சிட்சிக்கிறார்.

ஆசா, யோசபாத் ஆகியோருக்குப் பின்பு யூதா தேசத்தில் தெய்வ பக்தியுள்ள ராஜாக்கள் ஆறு பேர் வருகிறார்கள். இவர்கள் நிமித்தமாகக் கர்த்தர் யூதாவை அழித்துப் போடுவதைத் தாமதம் பண்ணுகிறார்.

வடக்கு ராஜ்யத்திலுள்ள பத்துக் கோத்திரத்தார் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்வதுபோல, யூதா கோத்திரத்தாரும் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தர் வடக்கு தேசத்தைப் போலவே யூதா தேசத்தையும் சிறையிருப்புக்கு அனுப்பி விடுகிறார். யூதா தேசத்தார் பாபிலோன் தேசத்தின் சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாகக் கர்த்தர் தாவீதின் ராஜவம்சத்தின் வாரிசை அற்றுப்போகப் பண்ணுகிறார் *(எரே 22:24-30).*

இதன் பின்பு, தாவீதின் ராஜவம்சத்து உரிமைகளை யோசேப்பின் மூலமாக இயேசு கிறிஸ்து சுதந்தரித்துக் கொள்கிறார். இயேசு கிறிஸ்து தாவீதின் இந்த வம்சத்தின் மூலமாக வராமல் வேறொரு வம்சத்தின் மூலமாக வருகிறார். இதனால் இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரனாக இருக்கிறார்.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் தாவீதின் வம்சவழி சாலொமோன் மூலமாக ராஜரீக வம்சமாக இருக்கிறது. தாவீதிற்கு நாத்தான் என்று இன்னும் ஒரு குமாரன் உண்டு. *(2சாமு 5:14)* லூக்கா *3:23-38*-இல் தாவீதின் வழி நாத்தான் மூலமாக விளக்கப்படுகிறது. யோசேப்பு ஏலியின் குமாரன்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இவ்விரண்டு வம்சவழியும் தேவையானவை. கர்த்தர் எகொனியாவைச் சபித்தார். தாவீதின் அரியாசனத்தில் அவனுடைய சந்ததியில் யாரும் அமர்ந்து எருசலேமை ஆளுகை செய்யமாட்டார்கள்.

யோராம் ஏதோமியரை முறியடித்தாலும், அவர்கள் அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, யூதாதேசத்தைவிட்டுப் பிரிந்துபோய் விடுகிறார்கள். யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர் இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம்பண்ணிப் பிரிந்து போகிறார்கள் *(2நாளா 21:10).*

யோராம் தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டபடியினால், அக்காலத்திலே லீப்னா பட்டணத்தாரும் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லி, அவனோடே பண்ணின உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் வம்சத்தை அழிக்கச்சித்தமில்லாதிருக்கிறார். *(2நாளா 21:7).*

யோராம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். ஆனாலும் கர்த்தர் யோராமின் ராஜ்யத்தை முற்றிலுமாக அழிக்கவில்லை. தாவீதோடு தாம் செய்த உடன்படிக்கையைக் கர்த்தர் நினைவுகூருகிறார்.

சாத்தான் தாவீதின் வம்சத்தில் கிரியை செய்து குழப்பதை உண்டுபண்ணுகிறான். இந்த உலகத்திற்கு ஸ்திரீயின் வித்தை வரவிடாமல் தடுப்பதற்கு வஞ்சனை பண்ணுகிறான். *(ஆதி 3:15; 2சாமு 7:16; ஏசா 7:14; ஏசா 9:6-7).*

யோசபாத்தின் காலத்தில் சாத்தானின் சதி வேலை ஆரம்பமாயிற்று. *(2நாளா 18:1)* யோராமின் காலத்திலும், சாத்தான் தொடர்ந்து சதிபண்ணுகிறான். *(2நாளா 21:6).* இதன் பின்பு, அரபியர்கள் தாவீதின் வம்சத்தை அழிக்க முயற்சி பண்ணுகிறார்கள். *(2நாளா 21:17; 2நாளா 22:1)* இவர்களுக்குப் பின்பு அத்தாலியாள் ராஜவம்சத்தார் அனைவரையும் ஒரளவு கொன்றுபோடுகிறாள் *(2நாளா 22:10).*

தாவீதுக்கும், அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டுமானால் தாவீதும், அவனுடைய சந்ததியாரும் கர்த்தருக்குக் கீழ்ப்படியவேண்டும். *(2இராஜா 8:19)*

கர்த்தர் நீடிய பொறுமையோடு தாவீதின் வம்சத்தாருடைய பாவங்களையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறார். யூதாவில் நல்ல ராஜா ஒருவன் வருவான் என்று பொறுமையோடு காத்திருக்கிறார். ஆகையினால் கர்த்தர் யூதா தேசத்தை முழுவதுமாக அழித்துப்போடாமல் அவர்களுடைய பாவத்தின் நிமித்தமாக அவர்களை அவ்வப்போது சிட்சிக்கிறார்.

ஆசா, யோசபாத் ஆகியோருக்குப் பின்பு யூதா தேசத்தில் தெய்வ பக்தியுள்ள ராஜாக்கள் ஆறு பேர் வருகிறார்கள். இவர்கள் நிமித்தமாகக் கர்த்தர் யூதாவை அழித்துப் போடுவதைத் தாமதம் பண்ணுகிறார்.

வடக்கு ராஜ்யத்திலுள்ள பத்துக் கோத்திரத்தார் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து பாவம் செய்வதுபோல, யூதா கோத்திரத்தாரும் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தர் வடக்கு தேசத்தைப் போலவே யூதா தேசத்தையும் சிறையிருப்புக்கு அனுப்பி விடுகிறார். யூதா தேசத்தார் பாபிலோன் தேசத்தின் சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாகக் கர்த்தர் தாவீதின் ராஜவம்சத்தின் வாரிசை அற்றுப்போகப் பண்ணுகிறார் *(எரே 22:24-30).*

இதன் பின்பு, தாவீதின் ராஜவம்சத்து உரிமைகளை யோசேப்பின் மூலமாக இயேசு கிறிஸ்து சுதந்தரித்துக் கொள்கிறார். இயேசு கிறிஸ்து தாவீதின் இந்த வம்சத்தின் மூலமாக வராமல் வேறொரு வம்சத்தின் மூலமாக வருகிறார். இதனால் இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரனாக இருக்கிறார்.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் தாவீதின் வம்சவழி சாலொமோன் மூலமாக ராஜரீக வம்சமாக இருக்கிறது. தாவீதிற்கு நாத்தான் என்று இன்னும் ஒரு குமாரன் உண்டு. *(2சாமு 5:14)* லூக்கா 3:23-38-இல் தாவீதின் வழி நாத்தான் மூலமாக விளக்கப்படுகிறது. யோசேப்பு ஏலியின் குமாரன்.இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இவ்விரண்டு வம்சவழியும் தேவையானவை. கர்த்தர் எகொனியாவைச் சபித்தார். தாவீதின் அரியாசனத்தில் அவனுடைய சந்ததியில் யாரும் அமர்ந்து எருசலேமை ஆளுகை செய்யமாட்டார்கள். *(எரே 22:24-30)*

கர்த்தர் தாவீதிடம் அவனுடைய குமாரனாகிய சாலொமோன் மூலமாக அவனுடைய ஆட்சி என்றென்றும் நிலைத்திருக்கும் என்று வாக்குப்பண்ணினார். (2சாமு 7)

இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டுமாயின், தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நாத்தான், மரியாள் ஆகியோரின் வம்சவழியில் வரவேண்டும். யோசேப்பின் மூலமாக இயேசு கிறிஸ்து தாவீதின் ராஜரீக வம்சத்தில் வருகிறார். (லூக்கா 1:32-33; ஏசா 9:6-7; வெளி 5:5; வெளி 22:16)

இயேசுகிறிஸ்து யோசேப்பிற்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னி மரியாளின் வயிற்றில் உற்பத்தியானவர். ஆகையினால், இயேசு யோசேப்பின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார். இயேசு கிறிஸ்து யோசேப்பின் குடும்பத்தில் முதலாவது பிறந்தவர். இதன் மூலமாக இயேசு தாவீதின் சிம்மாசனத்திற்கு ராஜரீக வாரிசு ஆகிறார்.

எலியா எழுதின நிருபம் 2நாளா 21:12-15

2நாளா 21:12. அப்பொழுது தீர்க்கதரிசியாகிய எலியா எழுதின ஒரு நிருபம் அவனிடத்திற்கு வந்தது; அதில்: உம்முடைய தகப்பனான தாவீதின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீ உன் தகப்பனாகிய யோசபாத்தின் வழிகளிலும், யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வழிகளிலும் நடவாமல்,

2நாளா 21:13. இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபுடைய குடும்பத்தின் சோரமார்க்கத்திற்கு ஒத்தபடியே யூதாவையும் எருசலேமின் குடிகளையும் சோரம்போகப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் நல்லவர்களாயிருந்த உன் தகப்பன் வீட்டாரான உன் சகோதரரையும் கொன்றுபோட்டபடியினால்,

2நாளா 21:14. இதோ, கர்த்தர் உன் ஜனத்தையும், உன் பிள்ளைகளையும், உன் மனைவிகளையும், உனக்கு உண்டான எல்லாவற்றையும் மகா வாதையாக வாதிப்பார்.

2நாளா 21:15. நீயோ உனக்கு உண்டாகும் குடல் நோயினால் உன் குடல்கள் நாளுக்குநாள் இற்று விழுமட்டும் கொடிய வியாதியினால் வாதிக்கப்படுவாய் என்று எழுதியிருந்தது.

யோராம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். கர்த்தர் தீர்க்கதரிசியாகிய எலியா மூலமாக யோராமுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். எலியா யோராமை முகமுகமாக சந்தித்து எச்சரிக்கவில்லை. எலியா கர்த்தருடைய வார்த்தையை ஒரு நிருபத்தில் எழுதி, அந்த நிருபத்தை யோராமுக்கு கொடுத்தனுப்புகிறார்.

எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாகவே, யோராம் யூதாதேசத்தை ராஜ்யபாரம் செய்கிறான். எலியா யோராமுக்கு நிருபத்தைக் கொடுத்தனுப்பிய சிறிதுகாலத்தில், அவர் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சம்பவம் நடைபெறுகிறது. ஆகையினால் எலியாவால் யோராமை நேரடியாக பார்த்து, கர்த்தருடைய வார்த்தையைச் சொல்ல முடியவில்லை.

யோராம் தன்னுடைய சகோதரர் எல்லாரையும் பட்டயத்தால் கொன்றுபோடுகிறான். அவனுடைய துன்மார்க்கத்தைக் கேள்விப்பட்டு, எலியா காலதாமதம்பண்ணாமல், எலிசா மூலமாக, தன்னுடைய நிருபத்தை அவனுக்கு கொடுத்தனுப்புகிறார். யோராம் மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது நிச்சயமாய் வரும்.

யோராம் செய்த எல்லா பாவங்களையும் எலியா தன்னுடைய நிருபத்தில் தெளிவாக எழுதுகிறார். அவன் கர்த்தருடைய வழியை விட்டு விலகிப்போகிறான். எலியா யோராமுக்கு எழுதின நிருபத்தில், "உம்முடைய தகப்பனான தாவீதின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீ உன் தகப்பனாகிய யோசபாத்தின் வழிகளிலும், யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் வழிகளிலும் நடக்கவில்லை" (2நாளா 21:12) என்று எழுதுகிறார்.

மேலும் யோராம் ஆகாபின் குடும்பத்தாருடைய சோரமார்க்கத்தின் வழியிலே நடக்கிறான். யோராம் யூதாதேசத்திலே விக்கிரகாரதனைகளைக் கொண்டு வருகிறான். அவன் தன் சகோதரர் எல்லோரையும் கொன்றுபோடுகிறான்.

எலியா யோராமுக்கு எழுதின தன்னுடைய நிருபத்திலே, "இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்து, ஆகாபுடைய குடும்பத்தின் சோரமார்க்கத்திற்கு ஒத்தபடியே யூதாவையும் எருசலேமின் குடிகளையும் சோரம்போகப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் நல்லவர்களாயிருந்த உன் தகப்பன் வீட்டாரான உன் சகோதரரையும் கொன்றுபோட்டாய்" *(2நாளா 21:13)* என்றும் எழுதுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். யோராமின் பாவத்திற்கு நிச்சயமாக தண்டனை உண்டு. அவனால் தண்டனைக்கு தப்பிக்க முடியாது. எலியா தன்னுடைய நிருபத்தில், "இதோ, கர்த்தர் உன் ஜனத்தையும், உன் பிள்ளைகளையும், உன் மனைவிகளையும், உனக்கு உண்டான எல்லாவற்றையும் மகா வாதையாக வாதிப்பார்" *(2நாளா 21:14)* என்று யோராமுக்கு எழுதுகிறார்.

யோராமினுடைய பாவத்தினிமித்தமாய் அவனுடைய குடும்பத்தாருக்கு தண்டனை வருவதுபோலவே, அவனுக்கும் தண்டனை வரும். "நீயோ உனக்கு உண்டாகும் குடல் நோயினால் உன் குடல்கள் நாளுக்குநாள் இற்று விழுமட்டும் கொடிய வியாதியினால் வாதிக்கப்படுவாய்" *(2நாளா 21:15)* என்று எலியா யோராமுக்கு தன்னுடைய நிருபத்தில் எழுதி அனுப்புகிறார்.

கர்த்தர் யோராமைத் தண்டிக்கும்போது, யூதாதேசத்தாரையும், யோராமின் குடும்பத்தாரையும் தண்டிக்கிறார். யூதாதேசத்தார் யோராமோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு தண்டனை வருகிறது. யோராமின் குடும்பத்தாரோ, அவனை விக்கிரகாராதனையில் ஈடுபடுத்துகிறார்கள். இதனால் அவனுடைய குடும்பத்தாருக்கும் தண்டனை வருகிறது.

யோராமின் தோல்வியும் வியாதியும் 2நாளா 21:16-20

2நாளா 21:16. அப்படியே கர்த்தர் பெலிஸ்தரின் ஆவியையும், எத்தியோப்பியாவுக்கடுத்த தேசத்தாரான அரபியரின் ஆவியையும் யோராமுக்கு விரோதமாக எழுப்பினார்.

2நாளா 21:17. அவர்கள் யூதாவில் வந்து, பலாத்காரமாய்ப் புகுந்து, ராஜாவின் அரமனையில் அகப்பட்ட எல்லாப் பொருள்களையும், அவன் பிள்ளைகளையும், அவன் மனைவிகளையும் பிடித்துக்கொண்டுபோனார்கள்; யோவாகாஸ் என்னும் அவன் குமாரரில் இளையவனை அல்லாமல் ஒரு குமாரனும் அவனுக்கு மீதியாக வைக்கப்படவில்லை.

2நாளா 21:18. இவைகள் எல்லாவற்றிற்கும் பிற்பாடு கர்த்தர் அவன் குடல்களில் உண்டான தீராத நோயினால் அவனை வாதித்தார்.

2நாளா 21:19. அப்படி நாளுக்குநாள் இருந்து, இரண்டு வருஷம் முடிகிறகாலத்தில் அவனுக்கு உண்டான நோயினால் அவன் குடல்கள் சரிந்து கொடிய வியாதியினால் செத்துப்போனான்; அவனுடைய பிதாக்களுக்காகக் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல், அவனுடைய ஜனங்கள் அவனுக்காகக் கொளுத்தவில்லை.

2நாளா 21:20. அவன் ராஜாவாகிறபோது முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் அரசாண்டு, விரும்புவாரில்லாமல் இறந்துபோனான்; அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; ஆனாலும் ராஜாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை.

யோராமின் ஆரோக்கியம் கெட்டுப்போகிறது. அவன் கொடிய வியாதியினால் வாதிக்கப்பட்டு சீக்கிரத்தில் செத்துப்போகிறான். பாவத்தினால் சாபமும், சாபத்தினால் வியாதியும், வியாதியினால் மரணமும் உண்டாகிறது.

யோராமுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியம் தெரியும். யோராம் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தர் நிச்சயமாகவே அவனுடைய பாவங்களை மன்னித்து, அவனுக்கு இரக்கம் காண்பித்திருப்பார். ஆனால் யோராமோ எலியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை.

யோராம் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல் போனபடியினால், அவன்மீது ஒவ்வொரு தண்டனையாக வருகிறது. கர்த்தர் பெலிஸ்தரின் ஆவியையும், எத்தியோப்பியாவுக்கடுத்த தேசத்தாரான அரபியரின் ஆவியையும் யோராமுக்கு விரோதமாக எழுப்புகிறார் (2நாளா 21:16).

யோசபாத்தின் காலத்தில் பெலிஸ்தரும், அரபியரும் அவனுக்கு அடிமைகளாக இருந்து பகுதிகட்டினார்கள். (2நாளா 17:11). யோராமின் காலத்தில் இவர்கள் இவனுக்கு எதிராகக் கலகம் பண்ணி பிரிந்து போனார்கள். இவர்களைப் போலவே யோராம் ஏதோமையும், லிப்னாவையும் இழந்தான்.

2நாளா 21:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் இவர்களைப் பயன்படுத்துகிறார். அவர்கள் யூதாவில் வந்து, பலாத்காரமாய்ப் புகுந்து, ராஜாவின் அரமனையில் அகப்பட்ட எல்லாப் பொருள்களையும், அவன் பிள்ளைகளில் இளையவனைத்தவிர மற்றவர்கள் அனைவரையும், அவன் மனைவிகளையும் பிடித்துக் கொண்டு போனார்கள். (2நாளா 21:17).

இரண்டாம் முறையாக ஒரு குமாரனைத் தவிர, ராஜவம்சத்திலுள்ள எல்லோரும் அழிக்கப்படுகிறார்கள். (2நாளா 21:17; 2நாளா 22:10-24:14).

பெலிஸ்தரும், அரபியரும் யோராமின் வீட்டாருக்கு விரோதமாக சண்டை போடுகிறார்கள். அவர்கள் யூதாதேசத்தாரை ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் யூதாவில் வந்து, பலாத்காரமாய்ப் புகுந்து, ராஜாவின் அரமனையில் அகப்பட்ட எல்லாப் பொருள்களையும், அவன் பிள்ளைகளையும், அவன் மனைவிகளையும் பிடித்துக்கொண்டுபோகிறார்கள்; யோவாகாஸ் என்னும் அவன் குமாரரில் இளையவனை அல்லாமல் ஒரு குமாரனும் அவனுக்கு மீதியாக வைக்கப்படவில்லை (2நாளா 21:17).

"அரபியரோடே கூடவந்து பாளயமிறங்கின தண்டிலிருந்தவர்கள் மூத்தகுமாரரையெல்லாம் கொன்று போட்டார்கள்" என்று 2நாளா 22:1 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, யோராமின் குமாரனாகிய யோவாகாஸ் என்பவன் மீதியாக வைக்கப்படுகிறான். அரபியர் இவனை பிடித்துக்கொண்டு போகவில்லை. அவர்கள் இவனைக் கொன்றுபோடவுமில்லை.

"கர்த்தர் தாவீதுக்கும் அவன் குமாரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கைக் கட்டளையிடுவேன் என்று சொல்லி, அவனோடே பண்ணின உடன்படிக்கையினிமித்தம் தாவீதின் வம்சத்தை அழிக்கச்சித்தமில்லாதிருந்தார்" (2நாளா 21:7). ஆகையினால் கர்த்தர் யோராமின் குடும்பத்தை மொத்தமாய் அழிக்காமல், அவனுடைய குமாரரில் ஒருவனாகிய யோவாகாஸ் என்பவனை மீதியாக வைக்கிறார். இவன் யோராமின் இளைய குமாரன்.

அரபியர் யோராமின் குடும்பத்தாரைப் பிடித்துக்கொண்டு போனாலும், அவர்கள் யோராமை அப்படியே விட்டுவிடுகிறார்கள். அரபியர்கள் அவனை தண்டிக்காமல் விட்டுவிட்டாலும், கர்த்தர் அவனுடைய பாவத்தினிமித்தமாய் அவனைத் தண்டிக்கிறார். இவைகள் எல்லாவற்றிற்கும் பிற்பாடு கர்த்தர் அவன் குடல்களில் உண்டான தீராத நோயினால் அவனை வாதிக்கிறார் (2நாளா 21:18).

எலியா தீர்க்கதரிசி யோராமுக்கு எழுதின நிருபத்தில், "நீயோ உனக்கு உண்டாகும் குடல் நோயினால் உன் குடல்கள் நாளுக்குநாள் இற்று விழுமட்டும் கொடிய வியாதியினால் வாதிக்கப்படுவாய்" (2நாளா 21:15) என்று எழுதியிருந்தார். எலியா எழுதின வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தைகள்.

கர்த்தர் எலியா மூலமாய் சொன்ன வார்த்தைகளின் பிரகாரம், யோராமின் குடல்களில் உண்டான நோய், நாளுக்குநாள் அதிகரிக்கிறது. இரண்டு வருஷம் முடிகிறகாலத்தில் அவனுக்கு உண்டான நோயினால் அவன் குடல்கள் சரிந்து கொடிய வியாதியினால் செத்துப்போகிறான் (2நாளா 21:19).

அரபியர்கள் யோராமின் குடும்பத்தாரைப் பிடிக்கிறார்கள். குடல் வியாதி யோராமைப் பிடிக்கிறது. ஒருவேளை தன்னுடைய குடும்பத்தாரை அரபியர்கள் பிடித்துக்கொண்டு போனதினால், யோராமுக்கு மிகுந்த மனக்கவலையும், மனவேதனையும் ஏற்பட்டிருக்கலாம். இதுவே அவனுடைய வியாதிக்கு காரணமாகவும் இருக்கலாம்.

யோராம் கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணினான். குடல் வியாதி அவனைப் பிடித்துக்கொண்டது. அவன் வியாதிப்படுக்கையிலிருந்தபோது, அவனை ஆதரவாகக் கவனிப்பதற்கு, அவனுடைய வீட்டார் ஒருவரும் அவனோடு கூடயில்லை.

யோராம் ராஜாவாகிறபோது முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷம் எருசலேமில் அரசாண்டு, விரும்புவாரில்லாமல் இறந்துபோகிறான். அவனுடைய பிதாக்களுக்காகக் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல், அவனுடைய ஜனங்கள் அவனுக்காகக் கொளுத்தவில்லை. அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள்; ஆனாலும் ராஜாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை (2நாளா 21:19,20).

யோராமின் பாவத்தின் நிமித்தமாகவும், யூதா ஜனத்தை அவன் பாவம் செய்யக் கட்டாயப்படுத்தியதின் நிமித்தமாகவும் யூதா ஜனங்கள் யோராமை வெறுக்கிறார்கள். அவனுடைய மரணத்திற்குப் பின்பும் ஜனங்களுடைய விரோதம் அவன்மீது தொடர்கிறது. (2நாளா 21:11,13) ஆகையினால் யோராமை யூதாவின் ராஜாக்களுடைய கல்லறையில் அடக்கம் பண்ணாமல், தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணுகிறார்கள். மேலும், அவனுக்காகக் கந்த வர்க்கங்களைக் கொளுத்தவில்லை (2நாளா 21:19-20).

யூதாவின் ஜனங்கள் யோராமுக்கு மதிப்பு கொடுக்கவில்லை. அவனுடைய சரீரத்தை ராஜாவின் கல்லறையில் வைப்பதற்கு அவன் தகுதியானவனல்ல என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அவனுக்காக ஒருவரும் துக்கங்கொண்டாடவில்லை. யோராம், தன்னை விரும்புவார் ஒருவருமில்லாமல் இறந்துபோகிறான்.

22 அதிகாரம்

அரபியர் யூதாவில் வந்து யோராமின் பிள்ளைகளையும், அவனுடைய மனைவிகளையும் பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆனாலும் அவர்கள் யோராமின் மனைவிகளில் ஒருத்தியையும், அவனுடைய குமாரர்களில் ஒருவனையும், அவனுடைய அரமனையிலேயே விட்டு விட்டுப்போய்விடுகிறார்கள்.

யோராம் மரித்த பின்பு, அவனுடைய குமாரனாகிய அகசியா யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். அவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான். கர்த்தர் ஆகாபின் வீட்டாரை அழிக்கும்போது, அகசியாவும் அழிந்துபோகிறான் *(2நாளா 22:1-9).*

அகசியாவின் தாயாகிய அத்தாலியாள், யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் சங்காரம்பண்ணி, யூதாதேசத்தின்மேல் ராஜ்யபாரம் பண்ணுகிறாள் *(2நாளா 22:10-12).*

அகசியா
2நாளா 22:1-6

2நாளா 22:1. எருசலேமின் குடிகள், அவன் இளையகுமாரனாகிய அகசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்; அரபியரோடே கூடவந்து பாளயமிறங்கின தண்டிலிருந்தவர்கள் மூத்தகுமாரரையெல்லாம் கொன்று போட்டார்கள்; இவ்விதமாய் அகசியா என்னும் யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அரசாண்டான்.

2நாளா 22:2. அகசியா ராஜாவாகிறபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, ஒரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; ஒம்ரியின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் அத்தாலியாள்.

2நாளா 22:3. அவனும் ஆகாப் குடும்பத்தாரின் வழிகளில் நடந்தான்; துன்மார்க்கமாய் நடக்க, அவனுடைய தாய் அவனுக்கு ஆலோசனைக்காரியாயிருந்தாள்.

2நாளா 22:4. அவன் ஆகாபின் குடும்பத்தாரைப்போல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் தகப்பன் சென்றுபோனபின்பு, அவர்கள் அவனுக்குக் கேடாக அவனுடைய ஆலோசனைக்காரராயிருந்தார்கள்.

2நாளா 22:5. அவர்களுடைய ஆலோசனைக்கு உட்பட்டவனாய், அவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராம் என்னும் ஆகாபின் குமாரனோடேகூட, கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குச் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான்; அங்கே சீரியர் யோராமைக் காயப்படுத்தினார்கள்.

2நாளா 22:6. அப்பொழுது தான் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம்பண்ணுகையில், தன்னை அவர்கள் ராமாவிலே வெட்டின காயங்களை யெஸ்ரயேலிலே ஆற்றிக்கொள்ள அவன் திரும்பினான்; அப்பொழுது ஆகாபின் குமாரனாகிய யோராம் வியாதியாயிருந்தபடியினால் யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா, யெஸ்ரயேலிலிருக்கிற அவனைப் பார்க்கிறதற்குப் போனான்.

ஜனங்கள் மத்தியிலே பிரபல்யமானவர்களும் இருப்பார்கள். சாதாரணமானவர் ஜனங்களும் இருப்பார்கள். இவர்களுக்கு சரித்திரத்திலே முக்கியத்துவம் இருக்காது. இவர்கள் விசேஷமான பெரிய காரியங்கள் எதுவும் செய்திருக்கமாட்டார்கள்.

சாதாரண மனுஷர்களைப்போல, ராஜாக்களில் சிலரும் சாதாரண ராஜாக்களாயிருப்பார்கள். மற்ற ராஜாக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாதாரண ராஜாக்கள் விசேஷமான பெரிய காரியங்கள் எதுவும் செய்திருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் அகசியாவும் ஒருவன். இவன் யோராமின் குமாரன். யோராம் மரித்த பின்பு அகசியா, அவனுடைய ஸ்தானத்தில் ராஜாவாகிறான்.

யூதாவின் சரித்திரத்தில் அகசியாவைப்பற்றி விசேஷமாய் ஒன்றும் சொல்லப்படவில்லை. இவன் ஒரு துன்மார்க்கன். இவன் ஆகாபுடைய வீட்டாரின் வழியே நடக்கிறான். அகசியா ஆகாபின் வீட்டாரைப் போல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்; அவன் ஆகாப் வீட்டாரோடே சம்பந்தங்கலந்திருக்கிறான் (2இராஜா 8:27).

யோசபாத்தின் வீட்டாருக்கும், ஆகாபின் வீட்டாருக்கும் பொதுவான ஒரே மாதிரியான பெயரே கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வீட்டாரும் தங்களுடைய சம்பந்தத்தை உறுதிபண்ணிக்கொள்வதற்காகவும், ஒருவரையொருவர் கனம்பண்ணிக் கொள்வதற்காகவும், தங்கள் குடும்பத்திலுள்ளவர்களுக்கு, ஒரே மாதிரியான பெயரையே தரித்திருக்கிறார்கள்.

ஆகாபுக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். ஒருவனுடைய பெயர் அகசியா. மற்றொருவனுடைய பெயர் யோராம். இவர்கள் இஸ்ரவேல் தேசத்திலே ராஜ்யபாரம்பண்ணியவர்கள்.

யோசபாத்திற்கு யோராம் என்னும் பெயரில் ஒரு குமாரனும், அகசியா என்னும் பெயரில் ஒரு பேரனும் இருக்கிறான். இவர்கள் யூதாதேசத்திலே ஒவ்வொருவராக ராஜ்யபாரம்பண்ணியவர்கள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய அகசியா இரண்டு வருஷங்கள் மாத்திரமே ராஜ்யபாரம் பண்ணினான். யூதாவின் ராஜாவாகிய அகசியாவோ ஒரு வருஷம் மாத்திரமே ராஜ்யபாரம்பண்ணுகிறான். அகசியா ராஜாவாகிறபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, ஒரே வருஷம் எருசலேமிலே ராஜ்யபாரம்பண்ணுகிறான் (2நாளா 22:2).

"அகசியா" வின் மறுபெயர் யோவாகாஸ். இந்தப் பெயருக்கு "கர்த்தர் தாங்குகிறார்" என்று பொருள். (2நாளா 21:17) இவனுடைய மற்றொரு மறுபெயர் அசரியா (2நாளா 22:6) (2நாளா 22:1)

அகசியாவுக்கும் ஆகாபின் வீட்டாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அகசியா ஆகாபுடைய வீட்டாரின் வழியே நடந்து, ஆகாபின் வீட்டாரைப் போல் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்; அவன் ஆகாப் வீட்டாரோடே சம்பந்தங்கலந்திருக்கிறான் (2இராஜா 8:27). அகசியாவின் தாயின் பெயர் அத்தாலியாள். இவள் இஸ்ரவேலின் ராஜாவாகிய ஒம்ரியின் குமாரத்தி (2இராஜா 8:26; 2நாளா 22:2).

அத்தாலியாள் ஒம்ரியின் குமாரத்தி என்று சொல்லப்பட்டாலும் இவள் ஒம்ரியின் குமாரத்தியல்ல. இவள் ஒம்ரியின் பேத்தியாவாள். இவள் ஆகாப், யேசபேல் ஆகியோரின் குமாரத்தி. (1இராஜா 16:28).

விசுவாசிகள் தங்களுக்கு மனைவிகளை தேர்ந்தெடுக்கும்போது மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்கவேண்டும். தங்களுடைய மனைவிகள், தங்களுடைய பிள்ளைகளுக்கு தாயாராயும் இருப்பார்கள் என்பதை மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும்.

அகசியா தன் தாத்தாவான ஆகாபைப் பின்பற்றி துன்மார்க்கம் செய்தான். ஆகாப் தன் தகப்பனான யோராமைப் பின்பற்றி துன்மார்க்கம் செய்தான். ஆகாபின் குமாரத்தியாகிய அத்தாலியாள் துன்மார்க்கமான காரியங்களைச் செய்வதற்கு ஆலோசனைக்காரியாக இருந்தாள். தன்னுடைய பேரர்களில் ஒருவனைத்தவிர, மற்ற அனைவரையும் அத்தாலியாள் கொன்று போட்டாள். யூதாவின் சிங்காசனத்தையும் கைப்பற்றி, அதில் அமர்ந்து, ஆறு வருஷங்களாக யூதா தேசத்தை ராஜ்யபாரம் பண்ணினாள். (2நாளா 22:2-4,10-12).

அத்தாலியாள், யோராம், ஆகாப், யேசபேல் ஆகியோர் அகசியாவுக்குக் கேடாக ஆலோசனை கூறினார்கள் (2நாளா 22:4-5).

அகசியா ஆகாபின் குமாரனாகிய யோராமோடே கூடக் கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குச் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம்பண்ணப்போகிறான்; சீரியர் யோராமைக் காயப்படுத்துகிறார்கள் (2இராஜா 8:28; 2நாளா 22:5). ஆகாபின் குமாரனாகிய யோராம், அகசியாவின் தாயாருடைய சகோதரன்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராம் தான் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலோடு யுத்தம்பண்ணுகையில், சீரியர் ராமாவிலே தன்னை வெட்டின காயங்களை ஆற்றிக்கொள்ள யெஸ்ரயேலுக்குப் போயிருக்கிறான்; ஆகாபின் குமாரனாகிய யோராம் வியாதியாயிருந்தபடியினால், யூதாவின் ராஜாவாகிய யோராமின் குமாரன் அகசியா யெஸ்ரயேலில் இருக்கிற அவனைப் பார்க்கிறதற்குப் போகிறான் (2இராஜா 8:29; 2நாளா 22:6).

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் குடும்பத்தாரும், யூதாவின் ராஜாவாகிய யோராமின் குடும்பத்தாரும் சம்பந்தம் கலந்திருக்கிறபடியினால், அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய ராஜ்யபார காரியங்களை பகிர்ந்துகொள்கிறார்கள். இரண்டு குடும்பத்தாருமே கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள்.

அகசியாவின் மரணம் 2நாளா 22:7-9

2நாளா 22:7. அகசியா யோராமிடத்துக்கு வந்தது அவனுக்கு தேவனால் உண்டான கேடாகலபித்தது; எப்படியென்றால், அவன் வந்தபோது யோராமுடனேகூட, கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாரைச் சங்கரிக்க அபிஷேகம்பண்ணுவித்த நிம்சியின் குமாரனாகிய யெகூவுக்கு நேராக வெளியே போனான்.

2நாளா 22:8. யெகூ, ஆகாபின் குடும்பத்தாருக்கு ஆக்கினை நடப்பிக்கும்போது, அவன் அகசியாவைச் சேவிக்கிற யூதாவின் பிரபுக்களையும், அகசியாவுடைய சகோதரரின் குமாரரையும் கண்டுபிடித்துக் கொன்றுபோட்டான்.

2நாளா 22:9. பின்பு அவன் அகசியாவைத் தேடினான்; சமாரியாவில் ஒளித்துக்கொண்டிருந்த அவனை அவர்கள் பிடித்து, யெகூவினிடத்தில் கொண்டுவந்து, அவனைக் கொன்றுபோட்டு: இவன் தன் முழு இருதயத்தோடும் கர்த்தரைத் தேடின யோசபாத்தின் குமாரன் என்று சொல்லி, அவனை அடக்கம்பண்ணினார்கள்; அப்படியே அரசாளுகிறதற்குப் பெலன்கொள்ளத்தக்க ஒருவரும் அகசியாவின் குடும்பத்திற்கு இல்லாமற்போயிற்று.

அகசியா யோராமிடத்திற்கு வருகிறான். அகசியாவின் பாவத்தின் நிமித்தமாக கர்த்தர் அவனை அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானம் பண்ணியிருக்கிறார். இதற்காக கர்த்தர் யெகூவைப் பயன்படுத்துகிறார். கர்த்தர் யெகூவைப் பத்துக் கோத்திரத்தாருக்கு ராஜாவாக்கியிருக்கிறார். யெகூ இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமையும், யூதாவின் ராஜாவாகிய அகசியாவையும் கொன்று போட்டான். (2இராஜா 9:1-10:31).

கீலேயாத்திலுள்ள ராமோத்தும், யெஸ்ரயேலும் அருகாமையிலுள்ள பட்டணங்கள். இவ்விரண்டிற்கும் இடையே ஒரு நாள் பிரயாண தூரம் உள்ளது. ராமோத்திற்கும் யெஸ்ரயேலுக்கும் நடுவே யோர்தான் நதியும் உள்ளது. கீலேயாத்திலுள்ள ராமோத்திருந்து, யெஸ்ரயேலுக்கு போகவேண்டுமென்றால், யோர்தானைக் கடந்துபோகவேண்டும்.

அப்பொழுது யெகூ இரதத்தின்மேல் ஏறி, யெஸ்ரயேலுக்கு நேராகப் போகிறான், யோராம் அங்கே வியாதியாய்க் கிடக்கிறான்; யோராமைப்பார்க்க, யூதாவின் ராஜாவாகிய அகசியாவும் அங்கே வந்திருக்கிறான் (2இராஜா 9:16).

யோராமும் யெகூவும் சந்திக்கிற இடம் கர்த்தருக்கு சித்தமான இடமாயிருக்கிறது. அது யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் நிலம். இந்த நிலத்தைப் பார்க்கும்போதே யோராமுக்கு பயமுண்டாகும். யெகூவுக்கு தைரியமுண்டாகும்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் நாபோத்தைக் கொன்றுபோட்டு அவனுடைய நிலத்தை அபரித்துக்கொண்டான். நாபோத்தின் இரத்தப்பழி ஆகாபின் வீட்டார்மீது இருக்கிறது. நாபோத்தின் இரத்தம் தனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது என்னும் குற்றவுணர்வு யோராமின் இருதயத்திலிருக்கிறது. எலியா ஆகாபின் வீட்டாரை சபித்திருக்கிறார்.

யோராம் யெகூவைக் கண்டவுடனே: "யெகூவே, சமாதானமா" *(2இராஜா 9:22)* என்று கேட்கிறான். யோராம் ஏற்கெனவே அனுப்பின இரண்டு குதிரைவீரர்களும், யெகூவினிடத்தில், "சமாதானமா என்று ராஜா கேட்கச் சொன்னார்" என்று கேட்டார்கள். அவர்கள் கேட்ட அதே கேள்வியை இப்போது யோராம் கேட்கிறான்.

யெகூ யுத்தக்களத்திலிருந்து வந்திருக்கிறான். சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் விரோதமாக கீலேயாத்திலுள்ள ராமோத்திலே யுத்தம் நடைபெறுகிறது. யெகூ யுத்தத்திலிருந்து வேகமாய் வந்திருப்பதினால், இஸ்ரவேலருக்கு ஜெயமுண்டாயிற்றா என்பதை யோராம் அறிந்துகொள்ள விரும்புகிறான்.

யெகூவின் பிரதியுத்தரம் யோராமுக்கு அதிர்ச்சியாயிருக்கிறது. அதற்கு யெகூ யோராமைப் பார்த்து, "உன் தாயாகிய யேசபேலின் வேசித்தனங்களும் அவளுடைய பில்லிசூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது" *(2இராஜா 9:22)* என்று கேட்கிறான்.

யோராம் யெகூவினிடத்தில் "சாமாதானமா" என்று கேள்வி கேட்டான். யெகூவோ அவனுக்கு பிரதியுத்தரம் சொல்லாமல், அவனும் கேள்வி கேட்கிறான். "சமாதானம் ஏது" என்று யெகூ கேட்கிறான்.

யேசபேல் யோராமின் தாயார். யெகூ யேசபேலின் வேசித்தனங்களையும், அவளுடைய பில்லிசூனியங்களையும் குறித்து குற்றம் சொல்லுகிறான். யேசபேல் மூலமாய், இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய வேசித்தனமுண்டாயிற்று. ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். யேசபேல் இஸ்ரவேல் தேசத்திலே பாகால்களின் ஆராதனையை அறிமுகம் செய்து வைத்திருக்கிறாள்.

யேசபேலின் துன்மார்க்கம் அதிகரித்திருக்கிறது. அவளுடைய வேசித்தனங்களும், பில்லிசூனியங்களும் ஏராளமாயிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேலுக்கு விரோதமாக வந்திருக்கிறது.

கர்த்தருடைய கோபத்திற்கும் நியாயத்தீர்ப்புக்கும், யேசபேலின் வேசித்தனங்களும், பில்லிசூனியங்களுமே பிரதான காரணம். யேசபேலின் பாவங்களும் அக்கிரமங்களும் இஸ்ரவேல் தேசத்திலிருக்கும் வரையிலும், அந்த தேசத்தில் சமாதானம் இருக்காது.

பாவத்தின் வழி சமாதானத்தின் வழியாயிருக்காது. இஸ்ரவேல் தேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. ஆகாபின் வீட்டார் கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்" *(ஏசா 57:21)*. துன்மார்க்கர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகி கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போது அவர்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்.

யேசபேலோ தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவளுடைய வேசித்தனங்களும் பில்லிசூனியங்களும் ஏராளமாயிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் தேசத்திலே சமாதானமில்லை.

யெகூ தன் தாயாரைப்பற்றிப் பேசுவான் என்று யோராம் எதிர்பார்க்கவில்லை. யெகூ யேசபேலைப்பற்றி உயர்வாகப்பேசாமல், அவளுடைய வேசித்தனங்களைப்பற்றியும், பில்லிசூனியங்களைப்பற்றியும் பேசுகிறான். தன்னுடைய தாயாரின் அக்கிரமங்களைப்பற்றி நினைக்கும்போது, யோராமின் இருதயம் முறிந்துபோகிறது. யெகூ தனக்கு சமாதான செய்தியை சொல்லுவான் என்று யோராம் எதிர்பார்த்தான். ஆனால் யெகூவோ யுத்தத்திற்கு ஏதுவான செய்தியை சொல்லுகிறான்.

அப்பொழுது யோராம் தன் இரதத்தைத் திருப்பிக்கொண்டு ஓடிப்போய், அகசியாவை நோக்கி: "அகசியாவே, இது சதி" (2இராஜா 9:23) என்று சொல்லுகிறான்.

கர்த்தர் தன் தாயாரை பழிவாங்குவார் என்பது யோராமுக்கு தெரியும். ஆனால் பழிவாங்கும் நாள் எப்போது வரும் என்று அவனுக்கு தெரியாது. இப்போது அந்த நாள் வந்திருக்கிறது என்பதை யோராம் புரிந்துகொள்கிறான். யெகூ யோராமை பாதுகாக்கவேண்டிய சேனாபதி. ஆனால் அவனோ யோராமுக்கு சமாதானமில்லை என்று சொல்லிவிடுகிறான்.

யோராமோடுகூட, யூதாவின் ராஜாவாகிய அகசியாவும் இருக்கிறான். இஸ்ரவேலின் சேனை யெகூவுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். யோராம் தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ளவேண்டும். யெகூவுக்கு தப்பிக்கவேண்டும். யோராம் அகசியாவிடம், "இது சதி" என்று சொல்லி, தன் இரதத்தில் ஏறி தப்பிக்க முயற்சிபண்ணுகிறான். யோராமோடுகூட அகசியாவும் தன் இரதத்தில் ஏறி தப்பித்து ஓடுகிறான்.

யெகூ தன் கையால் வில்லை நாணேற்றி, அம்பு யோராமுடைய நெஞ்சில் உருவிப் புறப்படத்தக்கதாய், அவனை அவன் புயங்களின் நடுவே எய்கிறான்; அதினால் யோராம் தன் இரதத்திலே சுருண்டு விழுகிறான் (2இராஜா 9:24). யோராம் தன் இரதத்திலேயே செத்துப்போகிறான்.

யெகூ தன்னுடைய கைகளினாலேயே யோராமைக் கொன்றுபோடுகிறான். யோராம் ஒரு குற்றவாளியைப்போல செத்துப்போகிறான். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் யோராமுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. யெகூ யோராமுக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுகிறான்.

யோராமின் பிரேதம் அவனுடைய இரதத்தில் கிடக்கிறது. அப்பொழுது யெகூ, தன் சேனாபதியாகிய பித்காரை நோக்கி: "அவனை எடுத்து, யெஸ்ரயேலியனாகிய நாபோத்தின் வயல்நிலத்தில் எறிந்து போடு" (2இராஜா 9:25) என்று கட்டளை கொடுக்கிறான்.

நாபோத்தின் இரத்தத்திற்காகவும் அவனுடைய குமாரரின் இரத்தத்திற்காகவும், கர்த்தர் ஆகாபின் வீட்டார்மீது தம்முடைய நீதியை சரிக்கட்டுகிறார். ஆகாப் நாபோத்தின் நிலத்தை வஞ்சகமாக அபகரித்துக்கொண்டான். அவன் நாபோத்தையும் அவனுடைய குமாரரையும் வஞ்சனையினால் கொன்றுபோட்டான். இப்போது நாபோத்தின் நிலத்திலே யோராமின் சரீரம் எறிந்துபோடப்படுகிறது.

குற்றமற்ற இரத்தத்தை சிந்தின ஆகாபின் வீட்டாரை கர்த்தர் பழிவாங்குகிறார். ஆகாப் நாபோத்தின் நிலத்தை அபகரித்து, அதிலே சந்தோஷப்பட்டான். ஆனால் அவனுடைய சந்தோஷம் நிலைக்கவில்லை. கர்த்தருடைய சாபம் ஆகாபின் வீட்டார்மீது வருகிறது.

யெகூ யோராமைக் கொன்றுபோட்டதை, யூதாவின் ராஜாவாகிய அகசியா பார்க்கிறான். யெகூ இனிமேல் தன்னைக் கொன்றுபோடுவான் என்று நினைத்து அகசியா பயப்படுகிறான். அகசியா தோட்டத்தின் வீட்டுவழியாய் ஓடிப்போகிறான்; யெகூ அகசியாவைப் பின்தொடர்ந்து, "அவனையும் இரதத்திலே வெட்டிப்போடுங்கள்" (2இராஜா 9:27) என்று சொல்லுகிறான்.

யெகூவின் ஆட்கள் அகசியாவை பின்தொடர்ந்து போகிறார்கள். அவர்கள் இப்லேயாம் கிட்ட இருக்கிற கூர்மலையின்மேல் ஏறுகிற வழியிலே, அகசியாவை அவனுடைய இரதத்திலே வெட்டிப்போடுகிறார்கள். அகசியா மெகிதோவுக்கு ஓடிப்போய் அங்கே செத்துப்போகிறான் (2இராஜா 9:27).

யோராம் செத்துப்போன சிறிது நேரத்தில், அகசியாவும் செத்துப்போகிறான். அகசியாவை கொல்லவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. ஆனால் யூதாவின் ராஜாவாகிய அகசியா, இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமோடு ஐக்கியமாயிருக்கிறான். துன்மார்க்கரின் சிநேகத்தால் அழிவு வரும். அகசியா ஆகாபின் வீட்டாரோடே சம்பந்தங்கலந்து, அவர்களுடைய பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் பங்காளியாயிருக்கிறான். யெகூ யோராமைக் கொன்றுபோடும்போது, யோராமுடைய கூட்டாளியாகிய அகசியாவையும் கொன்றுபோடுகிறான்.

அகசியாவினுடைய ஊழியக்காரர் அவனை இரதத்தின்மேல் எருசலேமுக்குக் கொண்டுபோகிறார்கள். அவர்கள் அகசியாவை, தாவீதின் நகரத்தில் அவன் பிதாக்களோடு அவனுடைய கல்லறையிலே அடக்கம்பண்ணுகிறார்கள் *(2நாளா 22:9).*

அத்தாலியாள்
2நாளா 22:10-12

2நாளா 22:10. அகசியாவின் தாயாகிய, அத்தாலியாள் தன் குமாரன் இறந்துபோனதைக் கண்டபோது, அவள் எழும்பி, யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரையும் சங்காரம்பண்ணினாள்.

2நாளா 22:11. ராஜாவின் குமாரத்தியாகிய யோசேபியாத், கொன்றுபோடப்படுகிற ராஜகுமாரருக்குள் இருக்கிற அகசியாவின் ஆண்பிள்ளையாகிய யோவாசைக் களவாயெடுத்துக் கொண்டு, அவனையும் அவன் தாதியையும் சயனவீட்டிலே வைத்தாள்; அப்படியே அத்தாலியாள் அவனைக்கொன்று போடாதபடிக்கு, ராஜாவாகிய யோராமின் குமாரத்தியும் ஆசாரியனாகிய யோய்தாவின் பெண்ஜாதியுமாகிய யோசேபியாத் அவனை ஒளித்துவைத்தாள்; அவள் அகசியாவின் சகோதரியாயிருந்தாள்.

2நாளா 22:12. இவர்களோடு அவன் ஆறுவருஷமாய்க் கர்த்தருடைய ஆலயத்திலே ஒளித்து வைக்கப்பட்டிருந்தான்; அத்தாலியாள் தேசத்தின்மேல் ராஜ்யபாரம் பண்ணினாள்.

தாவீதின் குடும்பத்தார் இஸ்ரவேல் தேசத்திலே தொடர்ந்து ராஜ்யபாரம் பண்ணுவார்கள் என்று கர்த்தர் அவருக்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். தாவீதின் குடும்ப விளக்கு அணைந்துபோகாது.

அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் தன் குமாரன் இறந்துபோனதைக் கண்டபோது, எழும்பி ராஜவம்சஸ்தர் யாவரையும் சங்காரம்பண்ணுகிறாள் *(2இராஜா 11:1; 2நாளா 22:10).*

அத்தாலியாள் யோவாசைத் தவிர, யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான மற்ற யாவரையும் சங்காரம் பண்ணுகிறாள். யோவாஸ் தேவாலயத்தில் ஒழித்து வைக்கப்படுகிறான். தாவீதின் உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக அவனுடைய ராஜவம்சம் முழுவதும் அழிந்து போகாதவாறு கர்த்தர் காப்பாற்றுகிறார். *(2நாளா 22:10-12).*

தாவீதின் ராஜவம்சத்தை முழுவதுமாக வேரறுத்துப்போடவேண்டுமென்று சாத்தான் சதிபண்ணுகிறான். இது அவனுடைய மூன்றாவது முயற்சியாகும். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும். கர்த்தருடைய வார்த்தையை நிறைவேறாமல் தடுக்கும் வல்லமை சாத்தானுக்கு இல்லை. *(2நாளா 21:4,17; 2நாளா 22:1,10).*

யெகூ யூதாவின் ராஜாவாகிய அகசியாவைக் கொன்றுபோடுகிறான். அத்தாலியாள் அகசியாவின் தாயார். தன்னுடைய குமாரன் இறந்துபோன செய்தியை கேட்டபோது, அவள் யூதா தேசத்தின் ராஜவம்சஸ்தர் அனைவரையும் கொன்றுபோடுகிறாள். இவர்கள் எல்லோருமே அகசியாவுக்கு பின்பு, யூதாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, ராஜ்யபாரம்பண்ணக்கூடியவர்கள்.

அகசியா இறந்துபோன பின்பு, யூதா தேசத்தை தானே ராஜ்யபாரம்பண்ணவேண்டுமென்று அத்தாலியாள் ஆசைப்படுகிறாள். அவளிடத்தில் ராஜாசனம்பண்ணவேண்டும் என்னும் பதவி வெறி காணப்படுகிறது. அவளால் நியாயமான முறையில் யூதாவின் ராஜாசனத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகையினால் அத்தாலியாள் யூதாதேசத்தின் ராஜவம்சஸ்தர் அனைவரையும் சங்காரம்பண்ணி, யூதாவின் ராஜாசனத்தைப் பெற்றுக்கொள்கிறாள்.

யெகூ அகசியாவைக் கொன்றுபோட்டான். அதற்காக, அத்தாலியாள் கர்த்தர்மீது கோபப்படுகிறாள். கர்த்தரை பழிவாங்கவேண்டுமென்று நினைக்கிறாள். ஆகாபின் குடும்பத்தார் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுவிட்டார்கள். அத்தாலியாள் ஆகாபின் குடும்பத்தைச் சேர்ந்தவள். இவள் யேசபேலின் குமாரத்தி. கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாரை அழித்துப்போட்டதினால், அத்தாலியாள் தாவீதின் குடும்பத்தாரை அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறாள்.

யேசபேல் சபிக்கப்பட்ட ஸ்திரீ. யேசபேலின் குமாரத்தியாகிய அத்தாலியாள் ஒரு பொல்லாத ஸ்திரீ.

"அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே என்றான்" *(2நாளா 24:7)*.

கர்த்தர் யோசேபாள் என்னும் ஒரு ஸ்திரீயை எழுப்பி, தாவீதின் வம்சத்தார் முற்றிலுமாய் அழிந்துபோகாதபடிக்கு பாதுகாக்கிறார். இவள் யோராம் என்னும் ராஜாவின் குமாரத்தி. யோசேபாள் அகசியாவின் சகோதரி. இவள் ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி.

யோசேபாள், கொலையுண்ணப்படுகிற ராஜகுமாரரின் நடுவிலிருக்கிற அகசியாவின் மகனாகிய யோவாசைக் களவாய் எடுக்கிறாள்; யோவாஸ் கொல்லப்படாதபடி, அவனையும் அவன் தாதியையும் அத்தாலியாளுக்குத் தெரியாமல் கர்த்தருடைய ஆலயத்தின் பள்ளிஅறையில் ஒளித்துவைக்கிறார்கள் *(2நாளா 22:11)*.

யோவாஸ் யோசேபாளோடுகூட ஆறுவருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருக்கிறான்; இக்காலத்தில் அத்தாலியாள் யூதாதேசத்தின் மேல்ராஜ்யபாரம் பண்ணுகிறாள் *(2இராஜா 11:3; 2நாளா 22:12)*.

யோவாஸ் ஒளித்துவைக்கப்படுவதற்கு கர்த்தருடைய ஆலயத்திலுள்ள ஒரு பள்ளிஅறையே, பாதுகாப்பான ஸ்தலமாயிருக்கிறது. இந்த அறை ஆசாரியருக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்தாலியாள் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள இந்தப் பள்ளிஅறைக்கு வரவும் மாட்டாள். அதை சோதனை போடவும் மாட்டாள். அத்தாலியாளுக்கு கர்த்தருடைய ஆலயத்தில் அக்கறையில்லை. கர்த்தரிடத்தில் அவளுக்கு பக்தியுமில்லை.

ஆசாரியனாகிய யோய்தா, ராஜகுமாரனாகிய யோவாசை, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள, இந்தப் பள்ளிஅறையில் ஒளித்து வைத்து பாதுகாக்கிறான். அவனுக்கு விசேஷித்த பாதுகாப்பைக் கொடுக்கிறான். இந்த விஷயம் அத்தாலியாளுக்கு தெரியவந்தால், அவள் யோவாசையும் கொன்றுபோடுவாள். அவனை ஒளித்து வைத்த யோய்தாவையும் கொன்றுபோடுவாள்.

ஆனாலும் யோய்தா கர்த்தரை நம்பி யோவாசை பாதுகாக்கிறான். மோசே மறைத்து வைக்கப்பட்டதுபோல, யோவாசும் கர்த்தருடைய ஆலயத்திலே மறைத்துவைக்கப்படுகிறான். தாவீது சங்கீதத்தில் சொன்ன வாக்கியம் இங்கு நிறைவேறுகிறது.

"தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" *(சங் 27:5)*.

கர்த்தருடைய ஆலயம் பாழடைந்திருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே யோவாஸ், கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான். யோவாஸ் ராஜாவான பின்பு கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான். ஆலயம் கர்த்தருடையது. அது பழுதடைந்திருக்கக்கூடாது. யோவாஸ் ஆலயத்திலேயே ஆறுவருஷம் இருந்ததினால், அவனுக்கு ஆலயத்தில் ஏற்பட்டிருக்கிற எல்லா பழுதுகளைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்னும் வாஞ்சையும் அவனுடைய மனதில் உண்டாயிற்று.

யெகூ அகசியாவைக் கொன்றுபோட்டான். அதற்காக, அத்தாலியாள் கர்த்தர்மீது கோபப்படுகிறாள். கர்த்தரை பழிவாங்கவேண்டுமென்று நினைக்கிறாள். ஆகாபின் குடும்பத்தார் முற்றிலுமாய் அழிக்கப்பட்டுவிட்டார்கள். அத்தாலியாள் ஆகாபின் குடும்பத்தைச் சேர்ந்தவள். இவள் யேசபேலின் குமாரத்தி. கர்த்தர் ஆகாபின் குடும்பத்தாரை அழித்துப்போட்டதினால், அத்தாலியாள் தாவீதின் குடும்பத்தாரை அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறாள்.

யேசபேல் சபிக்கப்பட்ட ஸ்திரீ. யேசபேலின் குமாரத்தியாகிய அத்தாலியாள் ஒரு பொல்லாத ஸ்திரீ.

"அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே என்றான்" *(2நாளா 24:7).*

கர்த்தர் யோசேபாள் என்னும் ஒரு ஸ்திரீயை எழுப்பி, தாவீதின் வம்சத்தார் முற்றிலுமாய் அழிந்துபோகாதபடிக்கு பாதுகாக்கிறார். இவள் யோராம் என்னும் ராஜாவின் குமாரத்தி. யோசேபாள் அகசியாவின் சகோதரி. இவள் ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி.

யோசேபாள், கொலையுண்ணப்படுகிற ராஜகுமாரரின் நடுவிலிருக்கிற அகசியாவின் மகனாகிய யோவாசைக் களவாய் எடுக்கிறாள்; யோவாஸ் கொல்லப்படாதபடி, அவனையும் அவன் தாதியையும் அத்தாலியாளுக்குத் தெரியாமல் கர்த்தருடைய ஆலயத்தின் பள்ளிஅறையில் ஒளித்துவைக்கிறார்கள் *(2நாளா 22:11).*

யோவாஸ் யோசேபாளோடுகூட ஆறுவருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்துவைக்கப்பட்டிருக்கிறான்; இக்காலத்தில் அத்தாலியாள் யூதாதேசத்தின் மேல்ராஜ்யபாரம் பண்ணுகிறாள் *(2இராஜா 11:3; 2நாளா 22:12).*

யோவாஸ் ஒளித்துவைக்கப்படுவதற்கு கர்த்தருடைய ஆலயத்திலுள்ள ஒரு பள்ளிஅறையே, பாதுகாப்பான ஸ்தலமாயிருக்கிறது. இந்த அறை ஆசாரியருக்கு பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்தாலியாள் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள இந்தப் பள்ளிஅறைக்கு வரவும் மாட்டாள். அதை சோதனை போடவும் மாட்டாள். அத்தாலியாளுக்கு கர்த்தருடைய ஆலயத்தில் அக்கரையில்லை. கர்த்தரிடத்தில் அவளுக்கு பக்தியுமில்லை.

ஆசாரியனாகிய யோய்தா, ராஜகுமாரனாகிய யோவாசை, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள, இந்தப் பள்ளிஅறையில் ஒளித்து வைத்து பாதுகாக்கிறான். அவனுக்கு விசேஷித்த பாதுகாப்பைக் கொடுக்கிறான். இந்த விஷயம் அத்தாலியாளுக்கு தெரியவந்தால், அவள் யோவாசையும் கொன்றுபோடுவாள். அவனை ஒளித்து வைத்த யோய்தாவையும் கொன்றுபோடுவாள்.

ஆனாலும் யோய்தா கர்த்தரை நம்பி யோவாசை பாதுகாக்கிறான். மோசே மறைத்து வைக்கப்பட்டதுபோல, யோவாசும் கர்த்தருடைய ஆலயத்திலே மறைத்து வைக்கப்படுகிறான். தாவீது சங்கீதத்தில் சொன்ன வாக்கியம் இங்கு நிறைவேறுகிறது.

"தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்" *(சங் 27:5).*

கர்த்தருடைய ஆலயம் பாழடைந்திருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே யோவாஸ், கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான். யோவாஸ் ராஜாவான பின்பு கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான். ஆலயம் கர்த்தருடையது. அது பழுதடைந்திருக்கக்கூடாது. யோவாஸ் ஆலயத்திலேயே ஆறுவருஷம் இருந்ததினால், அவனுக்கு ஆலயத்தில் ஏற்பட்டிருக்கிற எல்லா பழுதுகளைப்பற்றியும் தெரிந்திருக்கிறது. ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்னும் வாஞ்சையும் அவனுடைய மனதில் உண்டாயிற்று.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஒவ்வொரு காரியத்தையும் நடைபெற செய்கிறார். தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, கர்த்தர் ஒவ்வொரு காரியத்தையும், தம்முடைய திட்டத்தின் பிரகாரம் ஆயத்தம்பண்ணுகிறார்.

23 அதிகாரம்

யூதாதேசத்தைப்பற்றிய வரலாற்று சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அத்தாலியாள் ராஜவம்சஸ்தர் யாவரையும் சங்காரம்பண்ணுகிறாள் (2நாளா 22:10) அவள் யூதாதேசத்தின்மேல் ஆறுவருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறாள். அகசியா ராஜாவின் மகனாகிய யோவாஸ், அத்தாலியாளின் சங்காரத்திற்கு தப்பிக்கிறான் (2நாளா 22:11,12)

ஆறுவருஷம் முடிந்த பின்பு, ஏழாம் வருஷத்திலே ஒளித்து வைக்கப்பட்டிருந்த யோவாஸ், எல்லோருக்கும் முன்பாக காண்பிக்கப்படுகிறான். யூதா ஜனங்கள் யோவாசை ராஜாவாக்கி அபிஷேகம் பண்ணுகிறார்கள் (2நாளா 23:1-11).

அத்தாலியாள் கொலைபண்ணப் படுகிறாள் (2நாளா 23:12-15) யோவாசின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்தின் ஜனங்கள் எல்லோரும் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். எருசலேம் நகரம் அமைதலாயிற்று (2நாளா 23:16-21).

யோவாசும் யோய்தாவும் 2நாளா 23:1-11

2நாளா 23:1. ஏழாம் வருஷத்திலே யோய்தா திடன்கொண்டு, நூறுபேருக்கு அதிபதிகளாகிய எரோகாமின் குமாரன் அசரியாவையும், யோகனானின் குமாரன் இஸ்மவேலையும், ஓபேதின் குமாரன் அசரியாவையும், ஆதாயாவின் குமாரன் மாசெயாவையும், சிக்ரியின் குமாரன் எலிஷாபாத்தையும் தன் உடன்படிக்கைக்கு உட்படுத்தினான்

2நாளா 23:2. அவர்கள் யூதாவிலே சுற்றித்திரிந்து, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் இருக்கிற லேவியரையும், இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தலைவரையும் கூட்டிக்கொண்டு எருசலேமுக்கு வந்தார்கள்.

2நாளா 23:3. அந்தச் சபையார் எல்லாரும் தேவனுடைய ஆலயத்தில் ராஜாவோடே உடன்படிக்கை செய்தார்கள்; யோய்தா அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் தாவீதின் குமாரரைக்குறித்துச் சொன்னபடியே ராஜாவின் குமாரன் ராஜாவாகவேண்டும்.

2நாளா 23:4. நீங்கள் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், இவ்வாரத்தில், முறைப்படி வருகிற ஆசாரியரும் லேவியருமான உங்களில் மூன்றில் ஒருபங்கு ஒலி முகவாசல்களையும்,

2நாளா 23:5. மூன்றில் ஒருபங்கு ராஜாவின் அரமனையையும், மூன்றில் ஒருபங்கு அஸ்திபார வாசலையும் காக்கவும், ஜனங்களெல்லாம் கர்த்தருடைய ஆலயப் பிராகாரங்களில் இருக்கவும் வேண்டும்.

2நாளா 23:6. ஆசாரியரும் லேவியரில் ஊழியம் செய்கிறவர்களும் தவிர, ஒருவரும் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கவேண்டாம்; அவர்களே உட்பிரவேசிப்பார்களாக; அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்; ஜனங்ளெல்லாரும் கர்த்தருடைய காவலைக் காப்பார்களாக.

2நாளா 23:7. லேவியர் அவரவர் தங்கள் ஆயுதங்களைத் தங்கள் கையிலே பிடித்துக்கொண்டவர்களாய், ராஜாவைச் சுற்றிலும் வரிசையாய் நின்றுகொண்டிருக்க வேண்டும்; ஆலயத்துக்குட்படுகிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; ராஜா உட்பிரவேசிக்கிறபோதும் வெளியே புறப்படுகிறபோதும் நீங்கள் அவரோடே இருங்கள் என்றான்.

2நாளா 23:8. ஆசாரியனாகிய யோய்தா கட்டளையிட்டபடியெல்லாம் லேவியரும் யூதாகோத்திரத்தார் அனைவரும் செய்து, அவரவர் அவ்வாரத்து முறைப்படி வருகிறவர்களும், முறைதீர்ந்து போகிறவர்களுமான தம்தம் மனுஷரைக் கூட்டிக்கொண்டு போனார்கள்; வகுப்புகள் பிரிந்துபோக ஆசாரியனாகிய யோய்தா உத்தரவு கொடுக்கவில்லை.

2நாளா 23:9. தாவீதுராஜா தேவனுடைய ஆலயத்தில் வைத்திருந்த ஈட்டிகளையும் கேடகங்களையும் பரிசைகளையும் ஆசாரியனாகிய யோய்தா நூறுபேருக்கு அதிபதியினிடத்தில் கொடுத்து,

2நாளா 23:10. அவரவர் தங்கள் ஆயுதங்களைக் கையிலே பிடித்துக்கொண்டவர்களாய் ஆலயத்தின் வலதுபக்கந்தொடங்கி, ஆலயத்தின் இடதுபக்கமட்டும், பலிபீடத்திற்கும் ஆலயத்திற்கும் எதிரே ராஜாவைச் சுற்றிலும் நிற்க ஜனங்களையெல்லாம் நிறுத்தினான்.

2நாளா 23:11. பின்பு ராஜகுமாரனை வெளியே கொண்டுவந்து, கிரீடத்தை அவன்மேல் வைத்து, சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்து, அவனை ராஜாவாக்கினார்கள்; யோய்தாவும் அவன் குமாரரும் அவனை அபிஷேகம்பண்ணி, ராஜா வாழ்க என்றார்கள்.

அத்தாலியாள் யூதாதேசத்தின்மேல் ஆறுவருஷம் ராஜ்யபாரம்பண்ணுகிறாள். அவள் ஒரு பொல்லாத ஸ்திரீ. அவளுடைய ராஜ்யபாரமும் பொல்லாததாயிருக்கிறது.

அகசியா கொலை பண்ணப்பட்டு விட்டான். அத்தாலியாள் யோவாசைத்தவிர, ராஜவம்சத்தார் அனைவரையும் கொன்றுபோட்டு, யூதாவில் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். *(2நாளா 22:10-12; 2நாளா 23:1).* இந்தச் சம்பவங்களெல்லாம் நடைபெற்று ஏழு வருஷங்களுக்குப் பின்பு இங்கு கூறப்படும் சம்பவம் நடைபெறுகிறது.

யோய்தா என்பவன் தேவாலயத்தின் பிரதான ஆசாரியன். ஆனால் யூதா தேசமோ கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போயிற்று. கர்த்தருடைய தேவாலயத்தில் ஆராதனை எதுவும் நடைபெறவில்லை. ஆகையினால், பிரதான ஆசாரியனுக்கு எந்தவேலையும் இல்லை. யூதாவில் கர்த்தரை ஆராதிக்கும் ஆவிக்குரிய ஆராதனையை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டுமென்று யோய்தா திட்டம் பண்ணுகிறான்.

யோய்தா இதற்காக ராஜவம்சத்தில் தப்புவிக்கப்பட்டு, தேவாலயத்தில் ஒழித்து வைக்கப்பட்டிருக்கும் யோவாசை ராஜாவாக்குகிறான். இவன் மூலமாக யூதா தேசத்தில் கர்த்தரை ஆராதிக்கும் ஆவிக்குரிய ஆராதனையும், ஆவிக்குரிய எழுப்புதலும் மறுபடியும் உண்டாயிற்று. *(2நாளா 23:1-24:27).*

யோய்தா தன்னை திடப்படுத்தின விவரம் வருமாறு :

1. நூற்றுக்கதிபதிகளோடு உடன்படிக்கை பண்ணுகிறான்.

2. லேவியரைக் கூட்டிச்சேர்க்கிறான். *(2நாளா 23:2)*

3. இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தலைவரையும் கூட்டிச் சேர்க்கிறான்.

4. சபையார் எல்லோரையும் தேவனுடைய ஆலயத்தில் ராஜாவோடே உடன்படிக்கை செய்ய வைக்கிறான். *(2நாளா 23:3)*

தாவீதின் குடும்பத்திலே யோவாஸ் மாத்திரமே உயிரோடிருக்கிறான். யூதாதேசத்திற்கு யோவாசை ராஜாவாக்கவேண்டுமென்று ஆசாரியனாகிய யோய்தா திட்டமிட்டு செயல்படுகிறான். யோய்தாவினுடைய திட்டத்தின் விவரம் வருமாறு:

தன்னோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்ட இஸ்ரவேலுடைய பிதாக்களின் தலைவரோடும், லேவியரோடும், நூற்றுக்கதிபதிகளோடும் யோய்தா தன்னுடைய திட்டங்களை வெளிப்படுத்தி, ராஜாவின் குமாரனாகிய யோவாசை அவர்களுக்கு உயிரோடு காண்பிக்கிறான்.

தாவீதுக்குக் கர்த்தர் கூறிய வார்த்தையின்பிரகாரம், யோவாஸ் ராஜாவாக்கப்பட வேண்டுமென்றும், அத்தாலியாளிடமிருந்து ராஜ்யபாரத்தை யோவாசிற்குத் திரும்பப் பெற்றுத்தர வேண்டுமென்றும் அவர்கள் எல்லோரும் தீர்மானம் பண்ணி, திட்டமிடுகிறார்கள்.

யோய்தா தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு யோய்தா வகுத்துள்ள வியூகத்தின் விவரம் வருமாறு:

1. ஆசாரியரும் லேவியருமானவர்களில் மூன்றில் ஒருபங்கு ஒலிமுக வாசல்களைக் காக்கவேண்டும். *(2நாளா 23:4).*

2. இவர்களில் மூன்றில் ஒருபங்கு ராஜாவின் அரமனையைக் காக்க வேண்டும். *(2நாளா 23:5).*

3. இவர்களில் மூன்றில் ஒருபங்கு அஸ்திபார வாசலையும் காக்க வேண்டும்.

4. ஜனங்களெல்லாம் கர்த்தருடைய ஆலயப் பிராகாரங்களில் இருக்க வேண்டும்.

5. ஆசாரியரும் லேவியரில் ஊழியம் செய்கிறவர்களும் தவிர, ஒருவரும் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. *(2நாளா 23:6).*

6. ஜனங்ளெல்லாரும் கர்த்தருடைய காவலைக் காக்க வேண்டும்.

7. லேவியர் அவரவர் தங்கள் ஆயுதங்களைத் தங்கள் கையிலே பிடித்துக் கொண்டவர்களாய், ராஜாவைச் சுற்றிலும் வரிசையாய் நின்றுகொண்டு அவரைக் காக்க வேண்டும். *(2நாளா 23:7).*

8. ஆலயத்துக்குட்படுகிற எவனும் கொலை செய்யப்பட வேண்டும்.

9. ராஜா உட்பிரவேசிக்கிறபோதும் வெளியே புறப்படுகிறபோதும் லேவியர் அவனைக் காக்க வேண்டும்.

10. ஆசாரிய வகுப்புகள் பிரிந்துபோக யோய்தா உத்தரவு கொடுக்கவில்லை. *(2நாளா 23:8).*

11. யுத்தவீரர்கள் ஆயுதங்களை அணிந்து கொண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். *(2நாளா 23:9-11).*

இவற்றிற்குப் பின்பு, ராஜகுமாரனை வெளியே கொண்டுவந்து, கிரீடத்தை அவன்மேல் வைத்து, சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்து, அவனை ராஜாவாக்குகிறார்கள்; யோய்தாவும் அவன் குமாரரும் அவனை அபிஷேகம்பண்ணி, ராஜா வாழ்க என்கிறார்கள். *(2நாளா 23:11).*

யெகூ இஸ்ரவேல் தேசத்திலே பாகால் ஆராதனையை நீக்கிப்போடுகிறான். பாகாலின் கோவில்களை இடித்து, பாகாலின் சிலையையும் உடைத்துப்போடுகிறான். இஸ்ரவேல் தேசம் பாகாலின் ஆராதனையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. அத்தாலியாளோ யூதாதேசத்திலே பாகாலின் ஆராதனையை ஸ்தாபிக்கிறாள்.

"அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே என்றான்" *(2நாளா 24:7).*

அத்தாலியாள் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணின ஆறுவருஷ காலத்தில், யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறான். யோவாஸ் யூதாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம்பண்ண வேண்டியவன். ஆனால் அவனோ இப்போது தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள, கர்த்தருடைய ஆலயத்திலே ஒளிந்துகொண்டிருக்கிறான்.

ஆசாரியனாகிய யோய்தா யோவாசை பாதுகாக்கிறான். யோய்தா ஏழாம் வருஷத்திலே யோவாசை யூதாவின் ஜனங்களுக்கு வெளியே காண்பிக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறான். அத்தாலியாள் அகசியாவின் ராஜவம்சத்தார் யாவரையும் சங்காரம்பண்ணிவிடுகிறாள். அவர்களில் யோவாஸ் மாத்திரமே இப்போது உயிரோடிருக்கிறான். இவனே யூதாதேசத்தின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம்பண்ண வேண்டியவன்.

யோவாசை அத்தாலியாளுக்கு தெரியாமல் ஒளித்து வைப்பதும், அவனுடைய ஜீவனுக்கு ஆபத்து வராதவாறு பாதுகாப்பதும், ஆசாரியனாகிய யோய்தாவின் பிரதான வேலையாயிருக்கிறது. யோவாசை ஜனங்களுக்கு பிரத்தியட்சமாய்க் காண்பிக்கும் நல்ல நாளுக்காக யோய்தா காத்துக்கொண்டிருக்கிறான். அவன் ஆவலாய் எதிர்பார்த்த காலம் ஆறுவருஷத்திற்கு பின்பு வருகிறது.

அத்தாலியாள் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறாள். அவளுடைய ராஜ்யபாரம் பொல்லாததாயும், கொடூரமானதாயும் இருக்கிறது. யூதாஜனங்கள் அத்தாலியாளையும், அவளுடைய பொல்லாத ராஜ்யபாரத்தையும் விரும்பவில்லை. ஜனங்கள் அத்தாலியாளுக்கு விரோதமாக கலகம்பண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். யோய்தா இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, யூதா ஜனத்தார் மத்தியிலே யோவாசை காண்பிக்கவேண்டும் என்று திட்டமிடுகிறான்.

யோய்தா எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு பிரதான ஆசாரியனாயிருக்கிறான். இவன் பிறப்பினாலும், இவனுடைய ஊழியப்பொறுப்பினாலும், இவனுக்கு யூதாதேசத்திலே உயர்ந்த அந்தஸ்தும் அதிகாரமும் கிடைத்திருக்கிறது.

யோசேபாள் ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி. இவள் யோராம் என்னும் ராஜாவின் குமாரத்தி. அகசியாவின் சகோதரி. இதன் மூலமாக ஆசாரியனாகிய யோய்தா, யூதாவின் ராஜகுடும்பத்திலும் நெருங்கிய ஐக்கியமாயிருக்கிறான்.

யூதாவின் ராஜாசன சரித்திரத்தின்படி, அத்தாலியாளுக்கு பதிலாக, யோராமின் குமாரத்தியாகிய யோசேபாளே, யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணவேண்டும். யோசேபாளுக்கு ராஜ்யபாரம்பண்ணும் உரிமை இருக்கிறது. ஆனால் யோசேபாளும் அத்தாலியாளுக்கு பயந்து, யோவாசோடுகூட கர்த்தருடைய ஆலயத்தில் ஒளிந்துகொண்டிருக்கிறாள்.

ஆசாரியனாகிய யோய்தா விசேஷித்த கிருபைகளும், தாலந்துகளும் உள்ளவன். அவன் யூதாதேசத்திற்கு நல்ல சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறான். யோய்தா யூதாதேசத்தின் நன்மைக்காக தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறான். அத்தாலியாளின் ராஜ்யபாரத்திலிருந்து யூதாதேசம் விடுதலை பெறவேண்டும். அப்போதுதான் யூதாதேசத்திற்கு நன்மை உண்டாகும். ஜனங்களுக்கு க்ஷேமம் வரும்.

ஆசாரியனாகிய யோய்தா மிகவும் ஞானமாக சிந்தித்து, செயல்படுகிறான். யோவாசை யூதாஜனங்களுக்கு காண்பிப்பதற்கு முன்பாக, யோவாசின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். யோய்தாவைப்போன்ற நல்லவனுடைய பாதுகாப்பு யோவாசுக்கு கிடைத்திருப்பது கர்த்தருடைய கிருபை.

ஏழாம் வருஷத்திலே யோய்தா நூறு பேருக்கு அதிபதிகளையும் தலைவரையும் காவலாளரையும் தன்னிடத்தில் அழைப்பிக்கிறான். யோய்தா அவர்களை தன்னிடத்தில் கர்த்தருடைய ஆலயத்திலே வரச்சொல்லுகிறான். அவன் அவர்களோடு உடன்படிக்கைபண்ணி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்திலே ஆணையிடுவித்துக் கொள்கிறான். அதன் பின்பு யோய்தா அவர்களுக்கு ராஜாவின் குமாரனாகிய யோவாசைக் காண்பிக்கிறான் (2இராஜா 11:4).

அகசியாவின் ராஜகுமாரனாகிய யோய்தாவை உயிரோடே பார்ப்பது நூறுபேருக்கு அதிபதிகளும், தலைவர்களுக்கும், காவலாளர்களுக்கும் ஆச்சரியமாயும், சந்தோஷமாயும் இருக்கிறது. தாவீதின் விளக்கு அணைந்துபோயிற்றோ என்று, யூதாவின் அதிபதிகளும், தலைவர்களும், மூப்பர்களும் மிகுந்த கவலையோடிருந்தார்கள். யூதாவின் விளக்கு இன்னும் அணைந்துபோகவில்லை என்பதைப் பார்க்கும்போது, அவர்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

யோய்தா கர்த்தருடைய ஆலயத்திலே பிரதான ஆசாரியனாயிருக்கிறான். ஆசாரியரும் லேவியரும் அவனுக்கு கீழே சேவகம் பண்ணுகிறார்கள். தேவாலயத்தின் ஒவ்வொரு பகுதியிலும் காவலைப் பலப்படுத்தவேண்டுமென்று யோய்தா திட்டமிடுகிறான். தேவாலயத்தில் பல அறைகள் இருக்கிறது. தேவாலயத்தின் எல்லா பகுதிகளிலும் காவலைப் பலப்படுத்தவேண்டும். அப்போதுதான் யோவாசுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

தாவீது தன்னுடைய ராஜ்யபார காலத்தில் ஆசாரியர்களை பல்வேறு வகுப்புகளாக பிரித்திருந்தார். ஆசாரியனாகிய யோய்தாவும், காவலாளரை வெவ்வேறு பங்குகளாக பிரிக்கிறான்.

யோய்தா நூறுபேருக்கு அதிபதிகளை நோக்கி, "நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், ஓய்வுநாளில் முறைப்படி இங்கே வருகிற உங்களில் மூன்றில் ஒருபங்கு ராஜாவின் அரமனைக் காவல் காக்கவேண்டும். மூன்றில் ஒருபங்கு சூர் என்னும் வாசலிலும், மூன்றில் ஒருபங்கு காவலாளரின் காவலின் பிறகே இருக்கிற வாசலிலுமிருந்து ஆலயக்காவலைப் பத்திரமாய்க் காக்கவேண்டும்" (2இராஜா 11:5,6; 2நாளா 23:4,5) என்று சொல்லுகிறான்.

ஒவ்வொரு ஓய்வுநாளின் காலையிலும் சேவகரின் வகுப்பு புதிதாய் வந்து, யோவாசை காவல் காக்கவேண்டும். ஏற்கெனவே காவல் காத்தவர்கள், ஓய்வுநாளின் மாலைப்பொழுது வரையிலும் தேவாலயத்தில் யோவாசுக்கு காவலாயிருக்கவேண்டும். இதனால் ஓய்வுநாளில், யோவாசுக்கு இரண்டு மடங்கு அதிகமான பாதுகாப்பு கிடைக்கும்.

ஆசாரியனாகிய யோய்தா, நூற்றுக்கு அதிபதிகளிடம், ஓய்வுநாளின் ஆலயத்தை காக்கவேண்டிய முறைமையைப்பற்றி எடுத்துச் சொல்லுகிறார். யோய்தா அவர்களை நோக்கி, "இப்படியே ஓய்வுநாளில் முறைப்படியே உங்களில் இரண்டுபங்குபேர், ராஜாவினிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைக் காவல் காக்கவேண்டும்" (2இராஜா 11:7) என்று சொல்லுகிறான்.

யோவாசை காவல் காக்கிறவர்கள், தங்கள் கைகளில் ஆயுதங்களைப் பிடித்தவர்களாக காவல் காக்கவேண்டும். அவர்களுக்கு ஆயுதங்கள் வேண்டும். ஆசாரியனாகிய யோய்தா கர்த்தரின் ஆலயத்தில் தாவீதுராஜா வைத்திருந்த ஈட்டிகளையும் கேடகங்களையும் நூறுபேருக்கு அதிபதிகளிடத்தில் கொடுக்கிறான் (2இராஜா 11:10; 2நாளா 23:9).

யோய்தா நூற்றுக்கு அதிபதிகளுக்கு இரண்டு பிரதான கட்டளைகளைக் கொடுக்கிறான். அவையாவன: 1. அவர்கள் ராஜகுமாரனாகிய யோவாசை பத்திரமாய்க் காக்கவேண்டும். 2. கர்த்தருடைய ஆலயம் தீட்டுப்படாதவாறு, ஆலயக்காவலை பத்திரமாய்க் காக்கவேண்டும்.

யோய்தா நூற்றுக்கு அதிபதிகளை நோக்கி, "நீங்கள் அவரவர் தங்கள் ஆயுதங்களைக் கையிலே பிடித்தவர்களாய், ராஜாவைச் சுற்றிலும் வரிசையாய் நின்று கொண்டிருக்கவேண்டும்; வரிசைகளுக்குள் புகுந்துவருகிறவன் கொலைசெய்யப்படக்கடவன்; ராஜா வெளியே போகும்போதும் உள்ளே வரும்போதும் நீங்கள் அவரோடே இருங்கள்" (2இராஜா 11:8; 2நாளா 23:7) என்று சொல்லுகிறான்.

நூற்றுக்கு அதிபதிகளும் யோய்தாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறார்கள். ஆசாரியனாகிய யோய்தா கட்டளையிட்டபடியெல்லாம் நூறுபேருக்கு அதிபதிகள் செய்கிறார்கள். அவரவர் ஓய்வுநாளில் முறைப்படி வருகிறவர்களும் முறைப்படி போகிறவர்களுமாகிய தங்கள் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ஆசாரியனாகிய யோய்தாவினிடத்தில் வருகிறார்கள் (2இராஜா 11:9).

காவலாளர் அவரவர் தங்கள் ஆயுதங்களைப் பிடித்தவர்களாய், ஆலயத்தின் வலதுபக்கம்தொடங்கி அதின் இடதுபக்கமட்டும், பலிபீடத்திற்கு எதிராகவும் ஆலயத்திற்கு எதிராகவும் ராஜாவைச் சுற்றிலும் நிற்கிறார்கள் (2இராஜா 11:11; 2நாளா 23:10).

யோவாசை காவல் காக்க யோய்தா சேவகரை நியமிக்கிறான். யோய்தா தாமதம்பண்ணாமல் யோவாசை ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறான். ராஜாபிஷேகத்தின் சம்பிரதாய முறைமைகளெல்லாம் பின்பற்றப்படுகிறது.

அதன் பின்பு, யோய்தா ராஜகுமாரனாகிய யோவாசை வெளியே கொண்டு வருகிறான். ராஜகிரீடத்தை யோவாசின் மேல் வைக்கிறான். யோய்தா சாட்சியின் ஆகமத்தை யோவாசின் கையிலே கொடுக்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்திலிருக்கிறவர்கள் இவ்வாறாக, யோவாசை ராஜாவாக்கி அபிஷேகம்பண்ணி, "ராஜா வாழ்க" என்று சொல்லி கைக்கொட்டுகிறார்கள் (2இராஜா 11:12; 2நாளா 23:11).

யோவாஸ் சிறுபையனாகயிருந்தாலும், ராஜாவின் அதிகாரம் அவனுக்கு கொடுக்கப்படுகிறது. அதற்கு அடையாளமாக கிரீடம் அவனுடைய தலையின்மேல் வைக்கப்படுகிறது.

யோவாஸ் இப்போது யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவன் யூதாதேசத்தாரை, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, ராஜ்யபாரம்பண்ணவேண்டும். தேவனுடைய வார்த்தையே யோவாசுக்கு எழுதப்பட்ட சட்டமாயிருக்கவேண்டும். இதற்கு அடையாளமாக யோவாசின் கையிலே சாட்சியின் ஆகமம் கொடுக்கப்படுகிறது.

"அவன் தன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, அவனுடைய இருதயம் அவன் சகோதரர்பேரில் மேட்டிமைகொள்ளாமலும், கற்பனையை விட்டு வலதுபுறம் இடதுபுறம் சாயாமலும், இந்த நியாயப்பிரமாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு, இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக் கொள்ளும்பொருட்டு, அவன் லேவியராகிய ஆசாரியரிடத்திலிருக்கிற நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒரு பிரதியை எழுதி, தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தன் ஜீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்; இப்படிச் செய்வதினால், தானும் தன் குமாரரும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் ராஜ்யத்திலே நீடித்து வாழுவார்கள்" (உபா 17:18-20).

யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுவது மிகப்பெரிய பொறுப்பு. இதை நேர்த்தியாய்ச் செய்யவேண்டுமென்றால் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகம் யோவாசின் மீது தங்கியிருக்கவேண்டும். இதற்கு அடையாளமாக யோய்தா யோவாசை ராஜாவாக்கி அபிஷேகம்பண்ணுகிறான்.

யோய்தா யோவாசை ராஜாவாக அபிஷேகம்பண்ணினாலும், யூதாதேசத்து ஜனங்கள் யோவாசை தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் யோவாசின் ஆளுகைக்கு கீழ்ப்படியவேண்டும். யூதாஜனங்கள் யோவாசை தங்கள் ராஜாவாக அங்கீகரிக்கும் வண்ணமாக, "ராஜா வாழ்க" என்று சொல்லி சந்தோஷமாய் தங்கள் கைகளைக் கொட்டுகிறார்கள்.

தங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிற யோவாசின் ஆயுசுகாலத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கவேண்டுமென்று விரும்பி, "ராஜா வாழ்க" என்று சொல்லி வாழ்த்துகிறார்கள். தேவனுடைய தெய்வீக அதிகாரத்தினால், யோவாஸ் யூதாதேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறான்.

யூதாதேசத்தை இப்போது அத்தாலியாள் ராஜ்யபாரம் பண்ணுகிறாள். இவள் தாவீதின் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. தாவீதின் குடும்பத்து விளக்கு அணைந்துபோயிற்றோ என்னும் கவலை யூதாதேசத்து மூப்பருடைய இருதயத்தில் காணப்பட்டது. அவர்கள் யோவாசைப் பார்த்தபோது, அவர்களுடைய மனதிலே உற்சாகம் பிறந்திருக்கிறது. தாவீதின் வம்சத்திலே வந்திருக்கிற ராஜா வாழவேண்டும் என்றும், தாவீதின் விளக்கு அணைந்துபோகக்கூடாது என்றும், யூதாஜனங்கள் வாழ்த்துகிறார்கள்.

யூதாஜனங்கள் யோவாசை தங்கள் ராஜாவாக அங்கீகரித்து அவனை வரவேற்கிறார்கள். யூதாஜனங்களைப்போலவே, நாமும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் வரவேற்கவேண்டும். கிறிஸ்துவின் ராஜ்யத்தைக் குறித்து நாம் சந்தோஷமாயும் திருப்தியாயும் இருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சிங்காசனம் நம்முடைய இருதயத்தில் ஸ்தாபிக்கப்படும்போது, சாத்தானுடைய ஆளுகை நம்மைவிட்டு நீங்கும்.

அத்தாலியாளின் மரணம் 2நாளா 23:12-15

2நாளா 23:12. ஜனங்கள் ஓடிவந்து, ராஜாவைப்புகழுகிற சத்தத்தை அத்தாலியாள் கேட்டபோது, அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஜனங்களிடத்தில் வந்து,

2நாளா 23:13. இதோ, நடையிலுள்ள தன்னுடைய தூணண்டையிலே ராஜா நிற்கிறதையும், ராஜாவண்டையில் நிற்கிற பிரபுக்களையும், எக்காளம் ஊதுகிறவர்களையும், தேசத்து ஜனங்களெல்லாரும் சந்தோஷப்பட்டு எக்காளங்கள் ஊதுகிறதையும் கீதவாத்தியங்களைப் பிடித்துக்கொண்டு பாடகரும் சங்கீதத்தலைவரும் துதிக்கிறதையும் கண்டாள்; அப்பொழுது அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: துரோகம் துரோகம் என்று கூவினாள்.

2நாளா 23:14. ஆசாரியனாகிய யோய்தா இராணுவத்தலைவராகிய நூறுபேருக்கு அதிபதிகளானவர்களை வெளியே அழைத்து, அவர்களை நோக்கி: இவளை வரிசைக்குப் புறம்பே கொண்டுபோங்கள்; இவளைப் பின்பற்றுகிறவனைப் பட்டயத்தால் வெட்டிப்போடுங்கள் என்றான். கர்த்தரின் ஆலயத்திலே அவளைக் கொன்றுபோடாதேயுங்கள் என்று ஆசாரியன் சொல்லியிருந்தான்.

2நாளா 23:15. அவர்கள் அவளுக்கு இடமுண்டாக்கினபோது, அவள் ராஜாவின் அரமனையிலிருக்கிற குதிரைகளின் வாசலுக்குள் பிரவேசிக்கும் இடமட்டும் போனாள்; அங்கே அவளைக் கொன்றுபோட்டார்கள்.

ஆசாரியனாகிய யோய்தா, ராஜகுமாரனாகிய யோவாசை யூதாவின் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிற வைபவம் நிறைவுபெறுகிறது. ஜனங்கள் ஆரவாரத்தோடே அங்கும் இங்குமாக ஓடிவருகிறார்கள். அத்தாலியாள் யூதாதேசத்தின் ராஜவம்சஸ்தர் அனைவரையும் சங்காரம்பண்ணினாள் என்று யூதாஜனங்கள் இதுவரையிலும் நினைத்தார்கள். ஆனால் கர்த்தருடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக ராஜகுமாரனாகிய யோவாஸ் உயிரோடிருக்கிறான். யோய்தா யோவாசை யூதாதேசத்திற்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறான்.

ஓடிவருகிற ஜனங்கள் செய்த ஆரவாரத்தை அத்தாலியாள் கேட்கிறாள். அப்போது அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு ஜனங்களிடத்தில் வருகிறாள் *(2இராஜா 11:13; 2நாளா 23:12)*. ராஜாபிஷேக வைபவம் முடிந்த பின்பு ஜனங்கள் அத்தாலியாளை சந்திக்கவேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். ராஜவம்சஸ்தரை அத்தாலியாள் சங்காரம்பண்ணியதற்காக, அவளை விசாரிக்கவேண்டும் என்று ஜனங்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். அத்தாலியாளின் கொடுமையான ஆட்சிக்கு முடிவு பண்ணவேண்டுமென்று ஜனங்கள் ஆர்வத்தோடிருக்கிறார்கள்.

ஜனங்கள் எல்லோரும் யோவாசை ராஜாவாக்கி, "ராஜா வாழ்க" என்று ஆர்ப்பரிக்கிறார்கள். அத்தாலியாள் இந்த ஆரவாரத்தைக் கேட்கிறாள். கர்த்தருடைய ஆலயத்திற்கு அத்தாலியாள் ஜனங்களிடத்தில் வருகிறாள். நடையிலுள்ள தன்னுடைய தூணண்டையிலே யோவாஸ் ராஜா நிற்கிறதைக் காண்கிறாள். யோவாசை உயிரோடு பார்த்தபோது, அவளுடைய உள்ளத்தில் கலக்கம் உண்டாயிற்று.

அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு "துரோகம் துரோகம்" என்று கூவினாள். *(2நாளா 23:12-13)*.

அத்தாலியாளோ, ஜனங்கள் தன்னிடத்தில் வரும் வரையிலும், அரண்மனையில் பொறுமையோடு காத்திருக்கவில்லை. யேசபேல் யெகூவை சந்திக்க புறப்பட்டு வந்ததுபோல, அத்தாலியாளும் ஜனங்களை சந்திக்க கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறாள். ஆலயத்திலே மிகுந்த ஆரவாரமுண்டாயிற்று. ஆரவாரத்திற்கான காரணத்தை அறிந்துகொள்ளும் ஆவல் அத்தாலியாளுக்கு உண்டாயிற்று.

அத்தாலியாள் கர்த்தருடைய ஆலயத்திற்கு தனிமையாக வருகிறாள். ஒரு தேசத்தின் ராணியாகயிருக்கிறவள், இராணுவ பாதுகாப்பு இல்லாமல், தனிமையில் வருவது ஆச்சரியமான காரியம். ஆனாலும் அத்தாலியாள் துணிகரமான பொல்லாத ஸ்திரீ. அவள் யூதாதேசத்தை கொடுமையாய் ஆட்சிசெய்கிறவள். யூதாதேசத்தார் அத்தாலியாளுக்கு பயப்படுவார்கள். அத்தாலியாளோ யாருக்கும் பயப்படமாட்டாள். அவள் கர்த்தருடைய ஆலயத்திற்கு தனியாய் வருகிறாள். அங்கே யூதாதேசத்து ஜனங்கள் எல்லோரும் கூடியிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே அத்தாலியாள் கண்ட காட்சி அவளை அதிர்ச்சியடையச் செய்கிறது. இதோ, ராஜா முறைமையின்படியே தூணண்டையிலே யோவாஸ் நிற்கிறான். ராஜாவண்டையில் நிற்கிற பிரபுக்களையும், எக்காளம் ஊதுகிறவர்களையும், தேசத்து ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டு எக்காளம் ஊதுகிறதையும் அத்தாலியாள் காண்கிறாள். இவர்கள் எல்லோரையும் கண்டவுடனே, அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: "துரோகம் துரோகம்" (2இராஜா 11:14; 2நாளா 23:13) என்று கூவுகிறாள்.

அத்தாலியாள் "துரோகம், துரோகம்" என்று கூவுகிற வார்த்தைக்கு, "வாருங்கள், இந்த தேசத்துரோகிகளுக்கு எதிராக எனக்கு உதவிசெய்ய வாருங்கள்" என்று பொருள். யோவாஸ் தேசத்துரோகியல்ல. யோய்தா துரோகம்பண்ணவில்லை. அத்தாலியாளே யூதாதேசத்திற்கு துரோகியாயிருக்கிறாள். அவளே யூதாஜனங்களுக்கு துரோகம்பண்ணுகிறாள்.

அத்தாலியாள் "துரோகம் துரோகம்" என்று கூவும்போது அங்கே ஆசாரியனாகிய யோய்தா, யோவாசுக்கு அருகாமையில் நின்றுகொண்டிருக்கிறான். யோய்தா இராணுவத்தலைவராகிய நூறுபேருக்கு அதிபதிகளானவர்களுக்குக் கட்டளையிட்டு: "இவளை வரிசைகளுக்குப் புறம்பே கொண்டுபோங்கள்; இவளைப் பின்பற்றுகிறவனைப் பட்டயத்தாலே வெட்டிப்போடுங்கள்" (2இராஜா 11:15) என்று சொல்லுகிறான். கர்த்தருடைய ஆலயத்தில் அத்தாலியாளை கொல்லலாகாது என்று ஆசாரியனாகிய யோய்தா அவர்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்.

அத்தாலியாள் மாத்திரம் செத்துப்போனால் போதாது. அவளைப் பின்பற்றகிறவர்களும் செத்துப்போக வேண்டும். அவர்களை கர்த்தருடைய ஆலயத்திலும் கொல்லக்கூடாது. பரிசுத்த ஆலயத்தை அத்தாலியாளைப்போன்ற பொல்லாத ஸ்திரீயின் இரத்தத்தினால் தீட்டுப்படுத்தலாகாது என்று ஆசாரியனாகிய யோய்தா தீர்மானம் செய்கிறான்.

தனக்கு வருகிற ஆபத்தை அத்தாலியாள் உணருகிறாள். அவள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து பின்வாசல் வழியாக தன்னுடைய அரண்மனைக்கு தப்பிப்போக முயற்சி பண்ணுகிறாள். அவள் தப்பிப்போகும்போது, ஆலயத்திலே கூடியிருக்கிறவர்கள் அவளுக்கு இடமுண்டாக்குகிறார்கள். அத்தாலியாள் இராஜாவின் அரமனைக்குள், குதிரைகள் பிரவேசிக்கிற வழியிலே போகிறாள். அப்போது இராணுத்தலைவராகிய நூறுபேருக்கு அதிபதிகளாயிருக்கிறவர்களும், அவர்களுடைய சேவகர்களும் அத்தாலியாளைக் கொன்றுபோடுகிறார்கள் (2இராஜா 11:16).

அப்போது யோய்தா அத்தாலியாளை ஆலயத்துக்கு வெளியே கொண்டுபோகுமாறு நூற்றுக்கதிபதிக்குக் கட்டளையிடுகிறான். அவளை ஆலயத்திற்கு வெளியே கொன்று போட்டார்கள். (2நாளா 23:14-15).

யோய்தாவின் ஊழியம்
2நாளா 23:16-21

2நாளா 23:16. அப்பொழுது யோய்தா தாங்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, தானும் சகல ஜனங்களும் ராஜாவும் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்படி செய்தான்.

2நாளா 23:17. அப்பொழுது ஜனங்களெல்லாரும் பாகாலின் கோவிலுக்குப் போய், அதை இடித்து, அதின் பலிபீடங்களையும், அதின் விக்கிரகங்களையும் தகர்த்து, பாகாலின் பூசாசாரியாகிய மாத்தானைப் பலி பீடங்களுக்கு முன்பாகக் கொன்றுபோட்டார்கள்.

2நாளா 23:18. தாவீது கட்டளையிட்டபிரகாரம் சந்தோஷத்தோடும் சங்கீதத்தோடும் கர்த்தரின் சர்வாங்க தகனபலிகளை மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற படியே செலுத்தத்தக்கதாக, யோய்தா கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகங்களைத் தாவீது கர்த்தருடைய ஆலயத்துக்கென்று பகுத்து வைத்த லேவியரான ஆசாரியர்களின் கையில் ஒப்புவித்து,

2நாளா 23:19. யாதொரு காரியத்தினால் தீட்டுப்பட்டவன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசியாதபடிக்கு, அதின் வாசல்களுக்குக் காவலாளரை நிறுத்தினான்.

2நாளா 23:20. நூறுபேருக்கு அதிபதிகளையும், பெரியவர்களையும், ஜனத்தை ஆளுகிறவர்களையும், தேசத்து சமஸ்த ஜனங்களையும் கூட்டிக்கொண்டு, ராஜாவைக் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து இறங்கப்பண்ணி, உயர்ந்த வாசல்வழியாய் ராஜ அரமனைக்குள் அழைத்துவந்து அரசாளும் சிங்காசனத்தின்மேல் ராஜாவை உட்காரப் பண்ணினார்கள்.

2நாளா 23:21. தேசத்து ஜனங்களெல்லாரும் மகிழ்ந்தார்கள்; அத்தாலியாளைப் பட்டயத்தால் கொன்றபின்பு நகரம் அமரிக்கையாயிற்று.

பிரதான ஆசாரியனாகிய யோய்தாவின் ஊழியப்பொறுப்பு அதிகமாகிறது. அத்தாலியாள் ராஜாவின் அரமனை அண்டையில் வெட்டிக்கொல்லப்பட்டாள். யோவாஸ் இப்போது யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அவனுக்கு ஏழுவயது மட்டுமே ஆயிற்று. ராஜா சிறுபையனாகயிருப்பதினால், அவனுடைய ராஜாசனத்திற்கு ஏராளமான தடைகளும், எதிர்ப்புகளும் வரும். யோய்தா அந்த எதிர்ப்புகளையெல்லாம் நீக்கிப்போட்டு, யோவாசை யூதாதேசத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரவைக்கிறான்.

அத்தாலியாள் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணி, அந்த தேசத்தையே கெடுத்துப்போட்டாள். யூதாதேசத்தின் அஸ்திபாரம் சீர்குலைந்துபோயிற்று. ஆசாரியனாகிய யோய்தா, யூதாதேசத்தின் அஸ்திபாரத்தை மறுபடியுமாக போடவேண்டும். யூதாவின் ராஜாவும், யூதாதேசத்தாரும் கர்த்தரோடு ஒப்புரவாகவேண்டும்.

அப்பொழுது யோய்தா, அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடே உடன்படிக்கைபண்ணவும், ராஜாவும் ஜனங்களும் ஒருவரோடொருவர் உடன்படிக்கைபண்ணவும் செய்கிறான் (2இராஜா 11:17).

அப்பொழுது யோய்தா தாங்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, தானும் சகல ஜனங்களும் ராஜாவும் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும்படி செய்தான் (2நாளா 23:16).

யூதாதேசத்து ராஜாவாகிய யோவாசும், யூதாதேசத்து ஜனங்களும் இப்போது கர்த்தருடைய ஆலயத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, இணைந்து, கர்த்தரிடத்திலே உடன்படிக்கை பண்ணவேண்டும் என்றும், அவர்கள் ஒருவருக்கொருவர் கர்த்தருடைய நாமத்தினால் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும் என்றும் ஆசாரியனாகிய யோய்தா சொல்லுகிறான்.

இவ்வாறு உடன்படிக்கை பண்ணினால்தான், தங்களுக்கும் கர்த்தருக்கும் இடையே இருக்கிற ஐக்கியத்தையும், கர்த்தருக்காக தாங்கள் நிறைவேற்ற வேண்டிய ஊழியக்கடமைகளையும் ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். யூதாஜனங்களும் ஒருவருக்கொருவர் சகோதர சிநேகத்தோடு, கர்த்தருக்குள் அன்பாயும் ஆதரவாயும் இருப்பார்கள்.

யூதாதேசத்தார் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கவேண்டும். யோய்தா இதை மனதில் கொண்டு, ராஜாவையும் ஜனங்களையும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணச் செய்கிறான்.

ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணும்போது, அவர்கள் எல்லோருமே சமஅந்தஸ்திலும், ஒரே நிலையிலும் இருக்கிறார்கள். கர்த்தருக்கு முன்பாக ராஜாவும் ஜனங்களும் சமம். அவர்கள் எல்லோருமே கர்த்தரோடு அன்பின் கயிற்றால் கட்டப்படுகிறார்கள்.

யோவாஸ் யூதாதேசத்து ராஜாவாயிருந்தாலும், அவனும் யூதாஜனங்களைப்போல, கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும். ஜனங்கள் கர்த்தரை ஆராதிப்பதுபோல, ராஜாவும் கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

யூதாவின் ராஜாவும் யூதாஜனங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். தாங்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்போமென்று அவர்கள் எல்லோரும் ஏகமனதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனமாயிருக்கிறவர்கள் பாகாலின் ஜனமாயிருக்கமாட்டார்கள்.

யூதாதேசத்திலே அத்தாலியாள் மூலமாய் பாகாலின் ஆராதனை அறிமுகப்படுத்தப்பட்டது. அது இப்போது அங்கே பிரபல்யமாயிருக்கிறது. யூதாதேசத்தாரில் அநேகர் பாகாலை ஆராதிக்கிறார்கள். ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடே பண்ணின உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, யூதாதேசத்திலிருந்து பாகால் ஆராதனையை நீக்கிப்போடுகிறார்கள்.

பின்பு தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் பாகாலின் கோவிலில் போய், அதை இடித்து, அதின் பலிபீடங்களையும் அதின் விக்கிரகங்களையும் முற்றிலும் உடைத்துப் போடுகிறார்கள். அவர்கள் பாகாலின் பூஜாசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்று போடுகிறார்கள் (2இராஜா 11:18).

பாகாலை ஆராதித்தவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள். அவர்கள் கர்த்தருடைய ஆளுகையை ஏற்றுக்கொள்ளாமல், பாகாலின் ஆளுகையை ஏற்றுக்கொண்டவர்கள். அவர்கள் இப்போது கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படிக்கு, கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள்.

"மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2கொரி 8:5).

ஆசாரியனாகிய யோய்தா, ராஜகுமாரனாகிய யோவாசை ராஜாவாக்கி அபிஷேகம்பண்ணும்போது, ராஜாவும் ஜனங்களும் ஒருவரோடொருவர் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். இது ராஜாபிஷேகத்தின் ஒரு பகுதியாயிருக்கிறது. இந்த உடன்படிக்கையின்படி ராஜா சாட்சியின் ஆகமத்தின் பிரகாரம் ஜனங்களை ராஜ்யபாரம்பண்ணவேண்டும். ராஜா தன்னுடைய ராஜாசனத்திற்கு உட்பட்டிருக்கிற ஜனங்களை பாதுகாத்து பராமரிக்கவேண்டும். ஜனங்களும் ராஜாவுக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும்.

ராஜா ஜனங்களைப் பாதுகாப்பதுபோல ஜனங்களும் ராஜாவைப் பாதுகாக்க முன்வரவேண்டும். ராஜா ஜனங்களுக்கு உண்மையுள்ளவனாயிருப்பதுபோல, ஜனங்களும் ராஜாவுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஜனங்களுக்கு ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், தேசத்திலே கலகமுண்டாகும். ராஜாவுக்கு ஜனங்கள்மீதும், ஜனங்களுக்கு ராஜாமீதும் நம்பிக்கை குறைந்துபோகும். தேசத்தில் சமாதானம் இருக்காது.

ஆசாரியனாகிய யோய்தா, யூதாதேசத்திற்கு, மறுபடியும் அஸ்திபாரத்தைப் போடுகிறான். அஸ்திபாரத்திற்கு ஆரம்பமாக, ராஜாவும் ஜனங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். ஜனங்கள் தாங்கள் பண்ணின உடன்படிக்கையின் பிரகாரமாக, யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனையை உடனே அகற்றிப்போடுகிறார்கள். பாகாலின் பலிபீடங்களையும், அதின் விக்கிரகங்களையும் முற்றிலுமாய் உடைத்துப்போடுகிறார்கள்.

இதுவரையிலும் பாகாலை ஆராதித்து வந்தவர்கள் எல்லோரும், இப்போது கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, அவருடைய ஜனமாயிருக்கிறார்கள். பாகாலின் கோவிலிலே மாத்தான் என்பவன் பாகாலின் பூஜாசாரியாயிருக்கிறான். யூதாஜனங்கள் பாகாலின் கோவிலுக்குப்போய், அதை இடித்து பாகாலின் பூஜாசாரியாக மாத்தானை, பாகாலின் பலிபீடங்களுக்கு முன்பாக கொன்றுபோடுகிறார்கள். யூதாஜனங்கள் எல்லோரும் பாகாலை விட்டு விலகி கர்த்தரிடத்தில் திரும்பி வந்தாலும், பாகாலின் பூஜாசாரியாகிய மாத்தான் மாத்திரம் இன்னும் பாகலை பற்றிக்கொண்டிருக்கிறான். யூதாஜனங்கள் பாகாலின் பலிபீடங்களை உடைக்கும்போது, பாகாலின் பூஜாசாரியாகிய மாத்தானையும் கொன்றுபோடுகிறார்கள்.

யூதாவின் ஜனங்கள் யூதாதேசத்திலே பாகாலின் ஆராதனையை அகற்றிப்போட்டால் மாத்திரம் போதாது. அங்கே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையும் நடைபெறவேண்டும். ஆசாரியனாகிய யோய்தா, யூதாதேசத்திலே, கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகஸ்தரை ஏற்படுத்துகிறான் (2இராஜா 11:18; 2நாளா 23:18,19).

கர்த்தருடைய ஆலயத்திலே ராஜாவும் ஜனங்களும் ஒருவரோடொருவர் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இந்த உடன்படிக்கையின் பிரகாரமாக ஜனங்கள், நூறுபேருக்கு அதிபதிகளையும் தலைவரையும் காவலாளரையும் தேசத்தின் ஜனங்களையும் கூட்டி, ராஜாவைக் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து இறங்கப்பண்ணி, அவனைக் காவலாளரின் வாசல் வழியாய் ராஜ அரமனைக்கு அழைத்துக் கொண்டுபோகிறார்கள்; அங்கே ராஜாவாகிய யோவாஸ் ராஜாக்களுடைய சிங்காசனத்தின்மேல் உட்காருகிறான் (2இராஜா 11:19; 2நாளா 23:20).

யோவாஸ் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். யோவாசோடுகூட, ஆசாரியனாகிய யோய்தாவும் இருக்கிறான். யோய்தா யோவாசுக்கு தேவையான எல்லா ஆலோசனைகளையும் சொல்லுகிறான். ஜனங்களை நியாயந்தீர்ப்பது, ராஜரீகம்பண்ணுவது ஆகிய எல்லா காரியங்களிலும் யோய்தா யோவாசுக்கு உதவியாயும் ஆதரவாயும் இருக்கிறான்.

தேசத்தின் ஜனங்கள் எல்லாரும் மகிழ்ந்து நகரம் அமைதலாயிற்று. அத்தாலியாளையோ ராஜாவின் அரமனையண்டையில் பட்டயத்தால் கொன்றுபோட்டார்கள். யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்தான் (2இராஜா 11:20,21; 2நாளா 23:21).

24 அதிகாரம்

யோசியாவின் ராஜ்யபார சரித்திரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே, யோசியா மரணத்திற்கு தப்பித்து பாதுகாப்பாயிருக்கிறான். யூதாதேசத்தின் சிங்காசனத்திலே கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக யோசியா அமர்த்தப்படுகிறான். யோசியா தன்னுடைய ஜீவியத்தை ஆவியில் ஆரம்பம் பண்ணினாலும், அதை தன்னுடைய மாம்சத்தில் முடித்துவிடுகிறான்.

ஆசாரியனாகிய யோய்தா ஜீவனோடிருந்து, யோவாசுக்கு ஆலோசனைகளை சொல்லி, அவனை வழிநடத்தின வரையிலும், யோசியா நல்லவனாகவே இருக்கிறான். எருசலேமிலுள்ள தேவாலயம் பழுதடைந்திருக்கிறது. யோசியா கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்து நற்கிரியையை செய்கிறான் (2நாளா 24:1-14).

ஆசாரியனாகிய யோய்தா மரித்துப்போன பின்பு, யோவாஸ் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறான். அவனுடைய ஆவிக்குரிய பின்மாற்றமே அவனுடைய அழிவுக்கு காரணமாயிருக்கிறது. அவன் யூதாதேசத்திலே பாகால் ஆராதனையை மறுபடியும் ஸ்தாபிக்கிறான் (2நாளா 24:15-18).

யோசிவாசின் பாவங்களை அவனுக்கு எச்சரித்து சொல்லுவதற்காக கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை அவனிடத்தில் அனுப்புகிறார். ஆனால் யோவாசோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரன் சகரியாவும் ஒரு தீர்க்கதரிசி. சகரியா யோவாசைக் கடிந்துகொள்கிறான். யோவாசோ சகரியாவைக் கொன்றுபோடுகிறான் (2நாளா 24:20-22).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யோவாசின்மீது வருகிறது. சீரியர்கள் யூதாதேசத்தின்மீது படையெடுத்து வந்து, தேசத்தைக் கொள்ளையிடுகிறார்கள் (2நாளா 24:23,24). யோவாசுக்கு வியாதி உண்டாயிற்று. யோவாசின் ஊழியக்காரர் அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

யோவாசின் வர்த்தமானங்கள் 2நாளா 24:1-14

2நாளா 24:1. யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்து, நாற்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; பெயெர்செபா பட்டணத்தாளான அவன் தாயின் பேர் சிபியாள்.

2நாளா 24:2. ஆசாரியனாகிய யோய்தாவின் நாளெல்லாம் யோவாஸ் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

2நாளா 24:3. அவனுக்கு யோய்தா இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொடுத்தான்; அவர்களால் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

2நாளா 24:4. அதற்குப்பின்பு கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்க யோவாஸ் விருப்பங்கொண்டான்.

2நாளா 24:5. அவன் ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: நீங்கள் யூதா பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், உங்கள் தேவனுடைய ஆலயத்தை வருஷாவருஷம் பழுதுபார்க்கிறதற்கு, இஸ்ரவேலெங்கும் பணம் சேகரியுங்கள்; இந்தக் காரியத்தைத் தாமதமில்லாமல் செய்யுங்கள் என்றான்; ஆனாலும் லேவியர் தாமதம்பண்ணினார்கள்.

2நாளா 24:6. அப்பொழுது ராஜா யோய்தா என்னும் தலைவனை அழைப்பித்து: சாட்சியின் வாசஸ்தலத்துக்குக் கொடுக்க, கர்த்தரின் தாசனாகிய மோசே கட்டளையிட்ட வரியை யூதாவினிடத்திலும், எருசலேமியரிடத்திலும், இஸ்ரவேல் சபையாரிடத்திலும் வாங்கிவருகிறதற்கு, லேவியரை நீர் விசாரியாமற்போனதென்ன?

2நாளா 24:7. அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே என்றான்.

2நாளா 24:8. அப்பொழுது ராஜாவின் சொற்படி ஒரு பெட்டியை உண்டாக்கி, அதைக் கர்த்தருடைய ஆலயத்து வாசலுக்குப் புறம்பே வைத்து,

2நாளா 24:9. கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்ட வரியைக் கர்த்தருக்குக் கொண்டுவாருங்கள் என்று யூதாவிலும் எருசலேமிலும் பறைசாற்றுவித்தார்கள்.

2நாளா 24:10. அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் எல்லா ஜனங்களும் சந்தோஷமாய்க் கொண்டுவந்து பெட்டிநிறைய அதிலே போட்டார்கள்.

2நாளா 24:11. வெகுபணம் உண்டென்று கண்டு, லேவியர் கையால் அந்தப் பெட்டி ராஜாவின் விசாரிப்புக்காரர் அண்டையிலே கொண்டுவரப்படும்போது, ராஜாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனுடைய விசாரிப்புக்காரனும் வந்து, பெட்டியிலிருக்கிறதைக் கொட்டியெடுத்து, அதைத் திரும்ப அதின் ஸ்தானத்திலே வைப்பார்கள்; இப்படி நாளுக்குநாள் செய்து மிகுந்த பணத்தைச் சேர்த்தார்கள்.

2நாளா 24:12. அதை ராஜாவும் யோய்தாவும் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கும் ஊழியக்காரர் கையிலே கொடுத்தார்கள்; அதினால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி, கல்தச்சரையும் தச்சரையும், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி கொற்றரையும் கன்னாரரையும் கூலிக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

2நாளா 24:13. அப்படி வேலையை விசாரிக்கிறவர்கள் தங்கள் கையினாலே வேலையை நடந்தேறப்பண்ணி, தேவனுடைய ஆலயத்தை அதின் முந்தின சீருக்குக் கொண்டுவந்து அதைப் பலப்படுத்தினார்கள்.

2நாளா 24:14. அதை முடித்துத் தீர்ந்தபின்பு, மீந்த பணத்தை ராஜாவுக்கும் யோய்தாவுக்கும் முன்பாகக் கொண்டுவந்தார்கள்; அதினாலே கர்த்தருடைய ஆலயத்தில் செய்யப்படும் பணிமுட்டுகளையும், ஆராதனை பலி முதலியவைகளுக்கு வேண்டிய பணிமுட்டுகளையும், கலசங்களையும், பொற்பாத்திரங்களையும், வெள்ளிப் பாத்திரங்களையும் பண்ணுவித்தான்; யோய்தாவின் நாளெல்லாம் நித்தம் கர்த்தருடைய ஆலயத்திலே சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திவந்தார்கள்.

யோவாசின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. யெகூவின் ஏழாம் வருஷத்தில் யோவாஸ் ராஜாவானான். அவன் எருசலேமிலே நாற்பதுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினான்; பெயெர்செபா ஊராளாகிய அவனுடைய தாயின் பேர் சிபியாள் *(2இராஜா 12:1)*.

ஆசாரியனாகிய யோய்தா ஜீவனோடிருந்த நாளெல்லாம், யோவாசுக்கு போதகம்பண்ணினான். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தையும், சாட்சி ஆகமத்தையும் யோய்தா யோவாசுக்கு போதகம்பண்ணினான். ஆசாரியனாகிய யோய்தா யோவாசைப் போதகம்பண்ணின நாளெல்லாம் அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான் *(2இராஜா 12:2)*.

யோவாசுடைய ராஜ்யபார காலத்தில் அவன் மேடைகளை மாத்திரம் அகற்றவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகள்மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவருகிறார்கள் (2இராஜா 12:3).

யூதாதேசத்தின் எல்லா பாகங்களிலும் மேடைகள் அகற்றப்படாமலிருக்கிறது. யூதாஜனங்கள் மேடைகளின்மேல் பலியிட்டு, அங்கே தூபங்காட்டி வருகிறார்கள். அவர்கள் மேடைகளில் பலியிட்டாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கே பலியிடுகிறார்கள்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. அங்கே கர்த்தருக்கு பரிசுத்தமான பலிபீடமும் இருக்கிறது. யூதாவின் ஜனங்களோ, எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பலிபீடத்திலே பலி செலுத்தாமல், யூதாதேசத்தில் அங்கங்கே கட்டப்பட்டிருக்கிற மேடைகளிலே கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார்கள்.

யூதாதேசத்தின் ராஜா செம்மையானவனாயிருந்தால், ஜனங்கள் கர்த்தரை ஆராதிக்க எருசலேமுக்கு வருகிறார்கள். ராஜா துன்மார்க்கனாயிருந்தால், ஜனங்கள், தங்கள் ஊரிலுள்ள மேடைகளிலேயே கர்த்தருக்கு பலிசெலுத்த ஆரம்பித்துவிடுகிறார்கள்.

யூதாதேசத்தின் ராஜா துன்மார்க்கனாயிருக்கும்போது, ஜனங்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். தேசத்தின் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பிரயாணம்பண்ணுவது பாதுகாப்பாகயில்லை. யூதாதேசத்திலே திருடர் பயமும், கொலைபாதகர் பயமும் அதிகமாயிருக்கிறது. ஜனங்கள் எருசலேமுக்கு பிரயாணம் பண்ண பயப்படுகிறார்கள். அங்கே பிரயாணப்பட்டுப்போவது தங்களுக்கு பாதுகாப்பல்ல என்று நினைக்கிறார்கள். ஆகையினால் யூதாஜனங்கள் எருசலேமுக்குப்போய் தேவாலயத்திலே பலியிடாமல், தங்கள் ஊர்களிலுள்ள மேடைகளின்மேல் பலியிட்டு, அங்கேயே தூபங்காட்டுகிறார்கள்.

எருசலேமில் கட்டப்பட்டிருக்கிற தேவாலயமும் இப்போது பரிசுத்தமாயில்லை. அங்கே ஆராதனைகள் ஒழுங்காக நடைபெறவில்லை. கர்த்தருடைய ஆலயம் எப்படியிருக்க வேண்டுமோ அப்படி இல்லை. இதனால் யூதாஜனங்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்குப்போக பிரியப்படவில்லை.

ஆசாரியனாகிய யோய்தா யூதாஜனத்தார் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு முயற்சி பண்ணுகிறான். தேவாலயத்தின் ஆராதனைகளை சீர்படுத்துகிறான். கர்த்தருடைய ஆலயத்தை விசாரிக்கும் உத்தியோகஸ்தரை ஏற்படுத்துகிறான்.

யோவாசின் காலத்தில் கர்த்தருடைய ஆலயம் பழுதடைந்திருக்கிறது. இந்த ஆலயம் சாலொமோனுடைய காலத்தில் கட்டப்பட்டது. அதன் பின்பு ஆலயக்கட்டிடத்தில் பராமரிப்பு வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆலயத்தின் சுவர்களில் வெடிப்பும் கீறல்களும் விழுந்திருக்கிறது. கர்த்தருடைய ஆலயம் பல வருஷங்களாக பராமரிக்கப்படாமல், பழுதுபார்க்கப்படாமல் இருப்பதினால், அது பாழடைந்திருக்கிறது.

பழுதடைந்திருக்கும் ஆலயத்தை மறுபடியும் பழுதுபார்த்து, அதை சீர்படுத்தவேண்டுமென்று ஆசாரியனாகிய யோய்தா விரும்புகிறான். மகிமை இழந்து கிடக்கும் கர்த்தருடைய ஆலயத்திற்கு மறுபடியும் பழைய மகிமையை உண்டுபண்ணவேண்டுமென்று யோய்தா முயற்சிபண்ணுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்தை பழுதுபார்த்து முடித்துவிட்டால், ஜனங்கள் மேடைகள் மேல் பலியிடாமல், எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வருவார்கள் என்று யோய்தா எதிர்பார்க்கிறான். கர்த்தருடைய ஆலயத்தில் தேவனுடைய மகிமை தங்கியிருக்கிறது. ஆனாலும் ஆலயம் பராமரிப்பு இல்லாமல் பாழாய்க்கிடக்கிறது.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால், யோவாசின் ஆரம்ப காலம் ஆசீர்வாதமாயிருக்கிறது. ஆசாரியனாகிய யோய்தா யோவாசுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறான். வாலிபர்களுக்கு யோய்தாவைப்போல ஆலோசகர்கள் தேவை.

யோவாஸ் தன்னுடைய ஆரம்ப நாட்களில் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருக்கிறான். ஆசாரியனாகிய யோய்தா அவனுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களைப் போதிக்கிறான். யோவாசும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருக்கிறான்.

யோவாஸ் ராஜாவாகிறபோது ஏழு வயதாயிருந்து, நாற்பது வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; பெயெர்செபா பட்டணத்தாளான அவன் தாயின் பேர் சிபியாள். ஆசாரியனாகிய யோய்தாவின் நாளெல்லாம் யோவாஸ் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் *(2நாளா 24:1,2).*

யோவாசைப்போலவே, ஏராளமான வாலிபர்கள், தங்களுடைய ஆரம்பநாட்களில் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். இந்த வாலிபர்களுக்கு ஆவிக்குரிய ஊழியக்காரர்கள் மூலமாகவோ அல்லது ஆவிக்குரிய சிநேகிதர்கள் மூலமாகவோ ஞானமுள்ள நல்ல ஆலோசனைகள் கிடைத்திருக்கும். வாலிபர்களும் தங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்லுகிறவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்து, அவர்களுடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிந்து நல்லவர்களாய் ஜீவிப்பார்கள்.

நாம் பாவத்தில் ஜீவிக்கும்போது கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள். நாம் கர்த்தருக்கு பயந்து தீமையைவிட்டு விலகவேண்டும் என்றும், கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும் என்றும் ஊழியக்காரர்கள் நமக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். யோவாசுக்கு ஆசாரியனாகிய யோய்தா மூலமாக, எச்சரிப்பின் வார்த்தைகளும், ஆசீர்வாதமான வார்த்தைகளும் உண்டாயிற்று. யோவாசைப்போல நம்முடைய ஜீவியத்தில், ஆவிக்குரிய ஆலோசகர்கள் நமக்கு கிடைத்திருப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம்.

தீர்க்கதரிசனம் இல்லாத ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள். நமக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் சொல்ல ஒருவருமில்லையென்றால், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நிலையில்லாமல் தடுமாறும். வாலிபரின் அன்றாட ஆவிக்குரிய ஜீவியத்திலும், அவர்களுடைய திருமண காரியங்களிலும், அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் அதிகமாய்த் தேவைப்படுகிறது.

யோவாசுக்கு யோய்தா இரண்டு ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொடுக்கிறான்; அவர்களால் யோவாஸ் குமாரரையும் குமாரத்திகளையும் பெறுகிறான் *(2நாளா 24:3).*

யோய்தா யோவாசுக்கு ஒரு ஆவிக்குரிய தகப்பனாக இருந்து, அவனைப் பராமரித்து வருகிறான். யோவாஸ் வயதில் சிறியவன். யோய்தா அவனுக்குத் தேவையான ஆவிக்குரிய ஆலோசனையைக் கூறி, அவனை நன்றாக வளர்த்து வருகிறான்.

வாலிபர்களில் சிலர் கர்த்தருக்கு வெளிப்படையாக ஊழியம் செய்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமும், உண்மையான மனமாற்றமும், இரட்சிப்பின் அனுபவமும் இல்லாமாலேயே, அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். ஒருவேளை அவர்கள் செய்யும் ஊழியங்களுக்கு, அவர்களுடைய கல்வியறிவு, பொருளாதார வசதிகள் உதவிசெய்யலாம். ஆனாலும், அவர்களுடைய இருதயத்தில் இரட்சிப்பின் அனுபவம் இல்லையென்றால், அவர்களால் கர்த்தருக்கு உண்மையான ஊழியத்தை செய்ய முடியாது.

நம்முடைய கைகளினால் கர்த்தருடைய ஊழியத்தை எவ்வளவுதான் செய்தாலும், நம்முடைய இருதயத்தில் பரிசுத்தமும், கர்த்தருக்கு பயப்படும் பயமும், இரட்சிப்பின் அனுபவமும் இல்லையென்றால், நாம் செய்வது கர்த்தருடைய ஊழியமாயிராது. அது ஒருவேளை உலகப்பிரகாரமான சேவையாகயிருக்கும்.

ஒரு சிலர் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக சொல்லி மாய்மாலம் பண்ணுகிறார்கள். இவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். இவர்கள் தேவனுடைய வல்லமையை மறுதலித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், தங்களுடைய இருதயங்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார்கள். ஆனால் இவர்கள் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றமாட்டார்கள்.

யோவாஸ் சிறுவயது முதல் தேவாலயத்தில் வளர்ந்தவன். அப்போது தேவாலயம் பழுதடைந்திருக்கிறது. தேவாலயத்தை பழுதுபார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் யோவாசின் மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. ஆசாரியனாகிய யோய்தாவிடமும் ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் இருக்கிறது. ஆனாலும் யோய்தாவின் ஆர்வத்தைவிட, யோவாசின் ஆர்வமே மிகவும் அதிகம்.

கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்க யோவாஸ் விருப்பங்கொள்கிறான். அவன் ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: "நீங்கள் யூதா பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், உங்கள் தேவனுடைய ஆலயத்தை வருஷாவருஷம் பழுதுபார்க்கிறதற்கு, இஸ்ரவேலெங்கும் பணம் சேகரியுங்கள்; இந்தக் காரியத்தைத் தாமதமில்லாமல் செய்யுங்கள்" *(2நாளா 24:4,5)* என்று கேட்கிறான்; ஆனாலும் லேவியர் தாமதம்பண்ணுகிறார்கள்.

யோவாசின் ராஜ்யபார காலத்தில் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்க முதலாவது திட்டம் வகுக்கப்படுகிறது. சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு நேர்த்தியான பொருட்களை பயன்படுத்தினார். சாலொமோன் நல்ல தரமான பொருட்களினால் ஆலயத்தைக் கட்டினார். ஆனாலும் சாலொமோனுக்கு பின் வந்த ராஜாக்கள், கர்த்தருடைய ஆலயத்தை சரியாக பராமரிக்கவில்லை. ஆலயத்திலே அங்கங்கே பழுதுகள் காணப்படுகிறது *(2இராஜா 12:5)*.

கர்த்தருடைய ஆலயம் தேவனுடைய மகிமையும், பிரசன்னமும் விளங்கும் பரிசுத்த ஸ்தலமாகயிருந்தாலும், அங்கேயும் பழுது காணப்படுகிறது. ஆலயத்து சுவர்களிலே கீறல்களும் வெடிப்புகளும் உண்டாகிறது. கட்டிடம் பழசாய்ப்போகிறது. பூமியில் கட்டப்பட்டிருக்கிற ஆலயம் பூமிக்குரியதாயிருக்கும்.

பரலோகத்திலுள்ள கர்த்தருடைய ஆலயமோ பழசாய்ப்போகாது. அதிலே பழுதும் ஏற்படாது. சாலொமோன் கட்டின கர்த்தருடைய ஆலயம், சரியாக பழுதுபார்க்கப்படவில்லை. அத்தாலியாளின் குமாரர்களும் கர்த்தருடைய ஆலயத்தை இடித்துப்போடுகிறார்கள்.

"அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே" *(2நாளா 24:7)*.

பழுதடைந்திருக்கிற ஆலயத்தைப் பழுதுபார்க்க ராஜாவாகிய யோவாஸ் முன்வருகிறான். யோவாஸ் யூதாதேசத்திற்கு ராஜா. அதிகாரத்திலிருக்கிறவர்கள், தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆதரவாகயிருக்கவேண்டும். கர்த்தரே அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி சுவிசேஷ பிரபல்யத்திற்கு ஆதரவாகயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தையும், அவருடைய ஊழியக்காரரையும் பராமரிப்பதற்கு உதவி செய்யவேண்டும். ஊழியத்தில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முன்வரவேண்டும். ஊழியக்காரரின் கஷ்டங்களை நிவிர்த்தி செய்து அவர்களுக்கு ஆதரவாகயிருக்கவேண்டும்.

யோவாஸ் சிறுபிள்ளையாக இருந்த காலத்திலிருந்து, சுமார் ஆறு வருஷகாலமாக, அவன் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருந்தான். கர்த்தருடைய ஆலயமே அவனுக்கு வீடாகவும், பாடசாலையாகவும் இருந்தது. யோசியா இப்போது சிங்காசனத்திலே வீற்றிருந்தாலும், தன்னுடைய பழைய அனுபவங்களை மறக்கவில்லை. அவன் கர்த்தர்மீது பக்திவைராக்கியத்தோடிருக்கிறான். கர்த்தருடைய ஆலயத்தின்மீது அதிக கவனமும் அக்கரையும் செலுத்துகிறான்.

நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுஅனுபவிக்கும்போது, நாம் கர்த்தருக்கு அதிக நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆதரவாயிருக்க வேண்டும். கர்த்தரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களைப்போல, நம்முடைய பின்சந்ததியாரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, நாம் உதவிசெய்யவேண்டும்.

விசுவாசிகளாகிய நமக்கு சபை கூடுவதன் மூலமாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் உண்டாகும். நாம் சபையின் ஊழியக்காரியங்களுக்கு ஆதரவாகயிருக்கவேண்டும். சபையின் ஊழியங்களில் உதவிசெய்ய முன்வரவேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு பணம் வேண்டும். யோவாஸ் ஆசாரியரை நோக்கி, ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு பணம் சேகரிக்குமாறு சொல்லுகிறான். ஆசாரியர்களே பணத்தை சேகரித்து, அவர்களே ஆலயத்தைப் பழுதும் பார்க்கவேண்டுமென்று யோவாஸ் ஆசாரியருக்கு சொல்லுகிறான்.

யோவாஸ் ஆசாரியரை நோக்கி: "பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வரப்படுகிற எல்லாப் பணங்களையும், இலக்கத்திற்குட்படுகிறவர்களின் பணத்தையும், மீட்புக்காக மதிக்கப்படுகிற ஆட்களின் பணத்தையும், கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரும்படி, அவரவர் தம்தம் மனதிலே நியமித்திருக்கும் எல்லாப் பணத்தையும், ஆசாரியர்கள் அவரவர் தங்களுக்கு அறிமுகமானவர்கள் கையில் வாங்கிக் கொண்டு, ஆலயத்தில் எங்கெங்கே பழுது காண்கிறதோ, அங்கேயெல்லாம் ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும்" *(2இராஜா 12:4,5)* என்று சொல்லுகிறான்.

யோவாஸ் ஆசாரியர்களுக்கு இரண்டு கட்டளைகளைக் கொடுக்கிறான். அவையாவன : 1. ஆசாரியர்களே ஜனங்கள் கையிலிருந்து பணத்தை வாங்கவேண்டும். 2. ஆலயத்தில் எங்கேங்கே பழுது காண்கிறதோ, அங்கேயெல்லாம் ஆசாரியர்களே ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும்.

ஆசாரியர்கள் மொத்த பணமும் வரும் வரையிலும் காத்திருக்கக்கூடாது. பணம் வர வர ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும். சேகரிக்கும் பணத்தை செலவுபண்ணவேண்டும்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்" *(யாத் 30:11,12)* என்று சொன்னார்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், யாதாமொருவர் ஒரு விசேஷித்த பொருத்தனை பண்ணியிருந்தால், பொருத்தனை பண்ணப்பட்டவர்கள் உன் மதிப்பின்படி கர்த்தருக்கு உரியவர்கள். இருபது வயதுமுதல் அறுபது வயதுக்கு உட்பட்ட ஆண்பிள்ளையை நீ பரிசுத்த ஸ்தலத்தில் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை முப்பது சேக்கலாகவும் மதிப்பாயாக" *(லேவி 27:1-4)* என்று சொன்னார்.

ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுதுபார்க்க, ஜனங்களிடத்திலிருந்து பணத்தை வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் ஆலயத்தைப் பழுது பார்க்கவில்லை. ராஜாவாகிய யோவாசின் இருபத்துமூன்றாம் வருஷமட்டும் ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுதுபாராதே போனார்கள் *(2இராஜா 12:6)*.

ஆலயத்தைப் பழுது பார்க்கும் முதலாவது திட்டத்தை, ராஜாவாகிய யோவாஸ் ஆசாரியருக்கு சொன்னான். முதலாவது திட்டம் வெற்றி பெறவில்லை. அது தோல்வியடைந்தது. ராஜா எதிர்பார்த்த பிரகாரமாக, ஆலயம் பழுது பார்க்கப்படவில்லை.

ஒருவேளை ஆசாரியர்கள் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல், அவனுடைய வார்த்தைகளை அசட்டை செய்திருக்கலாம். அல்லது ஆசாரியர்கள் ஜனங்களிடத்தில் காணிக்கைகளை வாங்குவதில் கவனம் செலுத்தாமலிருந்திருக்கலாம். ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திற்காக தம் தம் மனதிலே நியமித்திருக்கிற பணத்தை ஆசாரியர்கள் போய் வாங்கவேண்டும். ஆசாரியர்கள் சோர்ந்துபோய் பணம் வாங்கமலிருந்திருக்கலாம்.

ஒருவேளை ஜனங்களுக்கு ஆசாரியர்மீது நம்பிக்கையில்லாமல் போயிருக்கலாம். ஆசாரியர்களிடம் பணத்தைக் கொடுத்தால், அவர்கள் ஆலயத்தைப் பழுது பார்ப்பார்களா என்னும் சந்தேகம் ஜனங்களுடைய மனதில் ஏற்பட்டிருக்கலாம். ஜனங்களுக்கு ஊழியக்காரர்மேல் சந்தேகம் வந்தால் காணிக்கைகளைக் கொடுக்கமாட்டார்கள்.

ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுதுபார்க்க ஜனங்களிடத்திலிருந்து ஓரளவு பணத்தை வாங்கியிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் ஆலயத்தை பழுதுபாராதே போனார்கள். ராஜாவாகிய யோவாசின் இருபத்து மூன்றாம் வருஷம் வரையிலும் ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுதுபார்க்கவில்லை. அதுவரையிலும் கர்த்தருடைய ஆலயம் பழுதடைந்திருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக தான் வகுத்த முதலாவது திட்டம் தோல்வியடைந்ததை ராஜாவாகிய யோவாஸ் புரிந்துகொள்கிறான். தன்னுடைய திட்டத்திலுள்ள தப்பிதங்களை சரிசெய்து, யோவாஸ் ராஜா ஆலயத்தைப் பழுதுபார்க்க இரண்டாவது திட்டம் வகுக்கிறான்.

யோவாஸ் சிறுபிள்ளையாக இருந்த நாளிலிருந்து ராஜாவான காலம் வரையிலும் அவன் தேவாலயத்திலேயே இருந்தவன். தேவாலயத்திலுள்ள அவலங்களும், பழுதுகளும், அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் தேவாலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்னும் விருப்பம், யோவாசுக்கு உண்டாயிற்று.

யோவாஸ் ஆசாரியரையும், லேவியரையும் கூடிவரச் செய்தான். யூதா பட்டணங்களுக்குப் புறப்பட்டுப் போய், தேவனுடைய ஆலயத்தை வருஷாவருஷம் பழுதுபார்க்கிறதற்கு, இஸ்ரவேலெங்கும் பணம் சேகரியுங்கள் என்று யோவாஸ் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

ஆனால் லேவியரோ தேவாலயத்தைப் புதுப்பிக்கும் வேலையை விறுவிறுப்பாகச் செய்யவில்லை. இதன் நிமித்தம் யோவாஸ் யோய்தாவிடம் இந்தக் காரியத்தை விசாரிக்குமாறு சொன்னான்.

அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப் பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்கள். *(2நாளா 24:6-7)*.

"மோசே கட்டளையிட்ட வரி" என்பது மீட்கும் பொருளான அரைச்சேக்கலைக் குறிக்கும். இந்த வரியை அவர்கள் நீண்டகாலமாக இஸ்ரவேல் சபையாரிடத்தில் வசூலிக்கவில்லை *(யாத் 30:13-16)*.

ஆலயத்தை பழுதுபார்க்கவேண்டும் என்னும் ஆர்வம், ஆசாரியரையும் லேவியரையும்விட, யோவாசினிடத்தில் அதிகமாயிருக்கிறது. ஆகையினால் யோவாஸ் அவர்களிடத்தில், "இந்தக் காரியத்தை தாமதமில்லாமல் செய்யுங்கள்" என்று சொல்லுகிறான்.

தேவாலயத்தை பழுதுபார்ப்பதற்கு லேவியர் தாமதம்பண்ணுகிறார்கள். ஆசாரியனாகிய யோய்தாவும் அவர்களை விசாரிக்கவில்லை. யோவாசிடத்தில் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்னும் வைராக்கியம் அதிகமாயிருக்கிறது. ஆகையினால் அவன் அதுபற்றி யோய்தாவிடமே விசாரிக்கிறான்.

அப்பொழுது ராஜா யோய்தா என்னும் தலைவனை அழைப்பித்து: "சாட்சியின் வாசஸ்தலத்துக்குக் கொடுக்க, கர்த்தரின் தாசனாகிய மோசே கட்டளையிட்ட வரியை யூதாவினிடத்திலும், எருசலேமியரிடத்திலும், இஸ்ரவேல் சபையாரிடத்திலும் வாங்கிவருகிறதற்கு, லேவியரை நீர் விசாரியாமற்போனதென்ன?" *(2நாளா 24:6)* என்று கேட்கிறான்.

யோவாசுக்கு கர்த்தருடைய ஆலயத்தின் காரியங்களைப்பற்றி எல்லாம் தெரிந்திருக்கிறது. ஆலயத்திலே பொக்கிஷம் ஏதுவுமில்லை. யோவாஸ் ஆசாரியனாகிய யோய்தாவினிடத்தில் அதுபற்றியும் சொல்லுகிறான்.

யோவாஸ் யோய்தாவை நோக்கி, "அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்களே" *(2நாளா 24:7)* என்று சொல்லுகிறான்.

நாமே கர்த்தருடைய ஆலயமாயிருக்கிறோம். கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது எளிது. ஆனால் கர்த்தருக்கு ஆலயமாயிருப்பது கடினம். யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டுமென்று விரும்புகிறான். ஆனாலும் யோவாஸ் கர்த்தருக்கு பரிசுத்தமான ஆலயமாயில்லை. அவனுடைய ஜீவியம் கர்த்தருக்கு முன்பாக அசுத்தமாயிருக்கிறது. அவன் பழுதடைந்த ஆலயம் போல் இருக்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்தை பழுதுபார்ப்பது நல்ல வேலை. அதைவிட நம்முடைய ஜீவியத்தைப் பழுதுபார்த்து, நாம் கர்த்தருக்கு பரிசுத்தமான ஆலயமாயிருப்பது மிகவும் நல்ல வேலை. அதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

ஆலயத்தைப் பழுதுபார்க்க பணம் வேண்டும். தேவனுடைய ஆலயத்தை வருஷாவருஷம் பழுதுபார்க்கவேண்டுமென்று யோவாஸ் விரும்புகிறான். அதற்கு தேவைப்படும் பணத்தை இஸ்ரவேல் எங்கும் சேகரிக்குமாறு ஆசாரியருக்கும் லேவியருக்கும் யோவாஸ் கட்டளை கொடுக்கிறான். பணம் சேகரிப்பதை தாமதமில்லாமல் செய்யுமாறும் சொல்லுகிறான். ஆனால் லேவியரோ இந்த வேலையில் தாமதம்பண்ணுகிறார்கள்.

யோவாஸ் எதிர்பார்த்த பிரகாரமாக, லேவியரும் ஆசாரியரும், இஸ்ரவேல் தேசமெங்கும் சுறுசுறுப்பாக சுற்றி அலைந்து, கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு பணம் சேகரிக்கவில்லை. யோவாஸ் சொன்ன முதலாவது ஆலோசனை தோல்வியடைகிறது. யோவாஸ் வேறொரு புதிய யோசனை பண்ணுகிறான். ஒரு திட்டம் தோல்வியடைந்தால் வேறொரு திட்டத்தை முயற்சி பண்ணி பார்ப்பது நல்லது. யோவாஸ் ஒரு காணிக்கைப் பெட்டியை உண்டாக்குகிறான்.

அப்பொழுது ராஜாவின் சொற்படி ஒரு பெட்டியை உண்டாக்கி, அதைக் கர்த்தருடைய ஆலயத்து வாசலுக்குப் புறம்பே வைக்கிறார்கள் *(2நாளா 24:8)*.

தேவனுடைய ஆலயத்தைப் புதுப்பிப்பதற்காக இஸ்ரவேல் சபையார் எல்லோரிடத்திலிருந்தும், மீட்கும் பொருளை வசூலிப்பது என்று ராஜாவும், யோய்தாவும் தீர்மானம் பண்ணுகிறார்கள். இதற்காக ராஜாவின் சொற்படி ஒரு பெட்டியை உண்டாக்கி, அதைக் கர்த்தருடைய ஆலயத்து வாசலுக்குப் புறம்பே வைக்கிறார்கள். *(2நாளா 24:8-9; யாத் 30:13-16)*.

ராஜாவின் வேலைக்காரர், இஸ்ரவேல் தேசமெங்கும், ராஜாவுடைய திட்டத்தை பறைசாற்றுவிக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் எங்கும்போய் "கர்த்தரின் தாசனாகிய மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேலுக்குக் கட்டளையிட்ட வரியைக் கர்த்தருக்குக் கொண்டுவாருங்கள்" என்று யூதாவிலும் எருசலேமிலும் பறைசாற்றுவிக்கிறார்கள் *(2நாளா 24:9)*.

அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் எல்லா ஜனங்களும் சந்தோஷமாய்க் கொண்டுவந்து பெட்டிநிறைய அதிலே போடுகிறார்கள். வெகுபணம் உண்டென்று கண்டு, லேவியர் கையால் அந்தப் பெட்டி ராஜாவின் விசாரிப்புக்காரர் அண்டையிலே கொண்டுவரப்படும்போது, ராஜாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனுடைய விசாரிப்புக்காரனும் வந்து, பெட்டியிலிருக்கிறதைக் கொட்டியெடுத்து, அதைத் திரும்ப அதின் ஸ்தானத்திலே வைப்பார்கள்; இப்படி நாளுக்குநாள் செய்து மிகுந்த பணத்தைச் சேர்க்கிறார்கள் (2நாளா 24:10,11).

சேர்ந்த பணத்தை ராஜாவும் யோய்தாவும் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கும் ஊழியக்காரர் கையிலே கொடுக்கிறார்கள்; அதினால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் புதுப்பிக்கும்படி, கல்தச்சரையும் தச்சரையும், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படி கொற்றரையும் கன்னாரையும் கூலிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்.

அப்படி வேலையை விசாரிக்கிறவர்கள் தங்கள் கையினாலே வேலையை நடந்தேறப்பண்ணி, தேவனுடைய ஆலயத்தை அதின் முந்தின சீருக்குக் கொண்டுவந்து அதைப் பலப்படுத்துகிறார்கள் (2நாளா 24:12,13).

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு, ராஜாவாகிய யோவாஸ் போட்ட முதலவாது திட்டம் வெற்றி பெறவில்லை. யோவாசின் இருபத்து மூன்றாம் வருஷமட்டும் ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுதுபாராதே போனார்கள். யோவாஸ் ஆலயத்தைப் பழுது பார்க்கும் முயற்சியை நிறுத்திவிடவில்லை. அவன் ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு இரண்டாவது திட்டத்தைப்போடுகிறான்.

ராஜாவாகிய யோவாஸ் ஆசாரியனாகிய யோய்தாவையும் மற்ற ஆசாரியர்களையும் அழைப்பித்து: "நீங்கள் ஆலயத்தைப் பழுதுபாராதேபோனதென்ன? இனி நீங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்கள் கையிலே பணத்தை வாங்காமல், அதை ஆலயத்தைப் பழுதுபார்க்கிறதற்காக விட்டுவிடுங்கள்" (2இராஜா 12:7) என்று சொல்லுகிறான்.

ராஜாவாகிய யோவாசுக்கு தேவாலயக் கட்டிடத்தின்மீது அக்கரையிருக்கிறது. ஆனால் தேவாலயத்தில் நடைபெறவேண்டிய ஆராதனையின்மீது அக்கரையில்லை. யோவாஸ் ஆலயத்தைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். ஆனால் யூதாஜனத்தார் மத்தியிலே, ஆவிக்குரிய ஜீவியம் பழுதடைந்திருப்பதை, பழுதுபார்க்கவேண்டும் என்னும் எண்ணம் அவனுடைய மனதில் ஏற்படவில்லை.

இக்காலத்திலும் ஒரு சிலர் யோவாசைப்போல திருச்சபையின் கட்டிடத்தின்மீது பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள். ஆலய கட்டிடத்திற்கும், அதன் கட்டுமான வேலைகளுக்கும், ஆலயத்தை அலங்காரம்பண்ணுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருக்கு பயப்படும் பயத்திற்கும், தெய்வபக்திக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கும் வல்லமைக்கும் அந்நியர்களாகவே இருக்கிறார்கள்.

யோவாஸ் ஆசாரியர்களை நோக்கி, "இனி நீங்கள் உங்களுக்கு அறிமுகமானவர்கள் கையிலே பணத்தை வாங்கவேண்டாம்" என்று சொல்லுகிறான். மேலும் அவன் அவர்களிடத்தில், "பணத்தை ஆலயத்தைப் பழுதுபார்க்கிறதற்காக விட்டுவிடுங்கள்" என்றும் சொன்னான். அப்பொழுது ஆசாரியர்கள் ஜனத்தின் கையிலே பணத்தை வாங்கிக்கொள்ளாமலும், ஆலயத்தைப் பழுதுபாராமலும் இருக்கிறதற்குச் சம்மதிக்கிறார்கள் (2இராஜா 12:8).

ஆசாரியர்கள் இனிமேல் ஆலயத்தைப் பழுது பார்ப்பதற்காக, ஜனங்கள் கையிலே பணத்தையும் வாங்கக்கூடாது. அவர்கள் ஆலயத்தைப் பழுதுபார்க்கிற வேலையையும் செய்யக்கூடாது. ஆசாரியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டியவர்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை அவர்கள் உண்மையாய்ச் செய்யவேண்டும். ஆசாரியர்கள் ஆலயத்தைப் பழுது பார்க்கிற வேலையை செய்யும்போது, அவர்கள் ஆசாரிய ஊழியத்தை சரிவர செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். முடிவிலே அவர்கள் ஆசாரிய ஊழியத்தையும் ஒழுங்காக செய்யவில்லை. ஆலயத்தையும் பழுதுபார்க்கவில்லை.

ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு பணம் தேவைப்படுகிறது. இந்தப் பணத்தை ஜனங்கள் கையிலிருந்து சேகரிக்கவேண்டும். இதற்காக ஆசாரியனாகிய யோய்தா புதிய திட்டம் ஒன்றை வகுக்கிறான்.

ஆசாரியனாகிய யோய்தா ஒரு பெட்டியை எடுத்து, அதின் மூடியிலே ஒரு துவாரமிடுகிறான். யோய்தா அந்தப் பெட்டியை பலிபீடத்தண்டையிலே கர்த்தருடைய ஆலயத்தில் ஜனங்கள் உட்பிரவேசிக்கும் வலதுபக்கத்தில் வைக்கிறான்; வாசற்படியைக் காக்கிற ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்ட பணத்தையெல்லாம் அதிலே போடுகிறார்கள் *(2இராஜா 12:9).*

ஜனங்கள் அந்தப் பெட்டியிலே காணிக்கையைப் போடுகிறார்கள். பெட்டியில் பணம் நிரம்புகிறது. பெட்டியிலே மிகுந்த பணம் உண்டென்று அவர்கள் காணும்போது, ராஜாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனும் வந்து: கர்த்தருடைய ஆலயத்திலே சேகரிக்கப்பட்ட பணத்தை எண்ணி முடிப்புக்கட்டி, எண்ணின பணத்தைக் கர்த்தருடைய ஆலயத்திலே விசாரிப்புக்காரர் கையிலே கொடுப்பார்கள் *(2இராஜா 12:10,11).*

இதற்கு முன்பு ஆசாரியர்கள் தங்களுக்கு அறிமுகமானவர்கள் கையிலே பணத்தை வாங்கினார்கள். இப்போதோ ஜனங்கள் காணிக்கைப்பெட்டியிலே பணத்தைப் போடுகிறார்கள். யோய்தா காணிக்கைப் பெட்டியிலே ஒரு துவாரமிட்டிருக்கிறான். காணிக்கைப்பெட்டி மூடப்பட்டிருக்கிறது. அதை எளிதாக எல்லாராலும் திறக்கமுடியாது. துவாரத்தின் வழியாக காணிக்கை போடப்படுகிறது. காணிக்கைப்பெட்டிக்குள் போடப்பட்ட காணிக்கையை, ஜனங்கள் தங்களுக்கு மறுபடியும் எடுத்துக்கொள்ளக்கூடாது. கர்த்தருக்கு கொடுக்கப்பட்டது, கர்த்தரையே சாரும். இதற்கு அடையாளமாகவே காணிக்கைப்பெட்டியிலே துவாரம் போடப்பட்டிருக்கிறது.

யோய்தா காணிக்கைப்பெட்டியை கர்த்தருடைய ஆலயத்தின் வலதுபக்கத்தில் வைக்கிறான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து காணிக்கை கொடுப்பதைப்பற்றி உபதேசம்பண்ணும்போது, "வலது கை கொடுப்பதை, இடது கை அறியாதிருப்பதாக" என்று சொல்லியிருக்கிறார். காணிக்கையை வலதுகையினால் கொடுக்கவேண்டும். அதற்கு ஏதுவாக, காணிக்கைப்பெட்டி ஆலயத்தின் வலதுபக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு தங்களால் முடிந்த எல்லா பொருட்களையும் காணிக்கையாக செலுத்துகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலே சேகரிக்கப்பட்ட பணத்தை எண்ணி முடிப்பாக கட்டுகிறார்கள். ராஜாவின் சம்பிரதியும், பிரதான ஆசாரியனாகிய யோய்தாவும், எண்ணின பணத்தை கர்த்தருடைய ஆலயத்திலே விசாரிப்புக்காரர் கையிலே கொடுக்கிறார்கள்.

விசாரிப்புக்காரர்கள் அந்தப் பணத்தை கர்த்தருடைய ஆலயத்தைப் பழுது பார்க்கிற தச்சருக்கும், சிற்பாசாரிகளுக்கும், கொற்றருக்கும், கல்தச்சருக்கும், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கத் தேவையான மரங்களையும் வெட்டின கற்களையும் கொள்ளுகிறதற்கும், ஆலயத்தைப் பழுதுபார்க்கிறதற்குச் செல்லும் எல்லாச் செலவுக்கும் கொடுக்கிறார்கள் *(2இராஜா 12:11,12).*

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக செலுத்தப்படும் காணிக்கை, ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காகவே செலவு பண்ணப்படுகிறது. தேவாலயத்தில் ஆசாரியர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறார்கள். தேவாலயம் நேர்த்தியாக பழுதுபார்க்கப்படும்போது, ஆசாரியர்கள் பசியோடும் பட்டினியோடும் இருக்க முடியாது. கர்த்தருக்கு ஊழியம் செய்கிற ஆசாரியரையும் பராமரிக்கவேண்டும். அவர்களையும் போஷிக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு, காணிக்கைப் பெட்டியிலே பணம் சேகரிக்கப்பட்டாலும், ஆசாரியருக்குரியது அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. குற்றப்பிராயச்சித்தப் பணமும் பாவப்பிராயச்சித்தப் பணமும் கர்த்தருடைய ஆலயத்திற்காகக் கொண்டுவரப்படவில்லை; அது ஆசாரியரைச் சேருகிறது (2இராஜா 12:16).

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக சேகரிக்கப்பட்ட பணம் ஆசாரியரின் கைகளில் கொடுக்கப்படவில்லை. அந்தப் பணம் கர்த்தருடைய ஆலயத்திலே விசாரிப்புக்காரராயிருக்கிறவர்களிடத்தில் கொடுக்கப்படுகிறது. ஆசாரியர்கள் தேவாலயத்திலே ஆசாரிய ஊழியம் செய்கிறார்கள். ஆலயத்து விசாரிப்புக்காரரோ, ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலைகளை செய்கிறார்கள். ஆலயத்திலே வேலை பார்க்கிறவர்களை மேற்பார்வை செய்கிறார்கள். ஆசாரியர்களுக்குரிய பணம் ஆசாரியர்களிடத்திலும், ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக சேகரிக்கப்பட்ட பணம், ஆலயத்து விசாரிப்புக்காரர் கையிலும் கொடுக்கப்படுகிறது.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக சேகரிக்கப்பட்ட பணம் மிகவும் கவனமாக செலவுபண்ணப்படுகிறது. தேவாலயத்தை பழுதுபார்ப்பதற்கு தேவையான மரங்களும், வெட்டின கற்களும் இந்தப் பணத்தின் மூலமாய் கிரயத்திற்கு வாங்கப்படுகிறது. ஆலயத்திலே பழுது பார்க்கும் வேலைகளை செய்கிற தச்சருக்கும் சிற்பாசாரிகளுக்கும் இந்தப் பணத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்படுகிறது.

ஆலயத்தை பழுதுபார்க்கும் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லோரும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களும் கைகளும் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் சுத்தமாயிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளை நேர்த்தியாகவும் செய்கிறார்கள், உண்மையாகவும் செய்கிறார்கள்.

வேலைசெய்கிறவர்களுக்குக் கொடுக்கும்படிக்கு, பணத்தை வரப்பற்றிக் கொண்ட மனுஷர் கையிலே கணக்குக் கேளாதிருக்கிறார்கள்;அவர்கள் உண்மையாய் அதை நடப்பிக்கிறார்கள் (2இராஜா 12:15).

கர்த்தருடைய ஆலயத்திலே சேகரிக்கப்பட்ட பணத்தை ராஜாவின் சம்பிரதியும், பிரதான ஆசாரியனும் எண்ணி, அதை ஆலயத்திலே விசாரிப்புக்காரர் கையிலேகொடுக்கிறார்கள். சேகரிக்கப்பட்ட பணம் எண்ணப்படுகிறது. ஆனால் செலவுபண்ணப்பட்ட பணம் எண்ணப்படவில்லை. செலவு பண்ணினவர்களிடம் ராஜாவின் சம்பிரதியும், பிரதான ஆசாரியனும் கணக்கு கேட்கவில்லை. கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறவர்கள் தங்களுடைய வேலைகளை உண்மையாய் செய்கிறார்கள்.

ஆலயத்திலே சேகரிக்கப்பட்ட பணம் வீணான காரியங்களுக்கோ, ஆடம்பரமான காரியங்களுக்கோ செலவு பண்ணப்படவில்லை.

கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தினாலே வெள்ளிக் கிண்ணங்களும், கீதவாத்தியங்களும், கலங்களும், எக்காளங்களும், பொற்பாத்திரங்களும், வெள்ளிப் பாத்திரங்களும் பண்ணப்படாமல், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுது பார்க்கும்படிக்கு வேலைசெய்கிறவர்களுக்கே அதைக் கொடுக்கிறார்கள் (2இராஜா 12:13,14).

ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆலயத்தை அழகுபடுத்தும் வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்து முடித்துத் தீர்ந்தபின்பு, மீந்த பணத்தை ராஜாவுக்கும் யோய்தாவுக்கும் முன்பாகக் கொண்டுவருகிறார்கள்; அதினாலே கர்த்தருடைய ஆலயத்தில் செய்யப்படும் பணிமுட்டுகளையும், ஆராதனை பலி முதலியவைகளுக்கு வேண்டிய பணிமுட்டுகளையும், கலசங்களையும், பொற்பாத்திரங்களையும், வெள்ளிப் பாத்திரங்களையும் பண்ணுவிக்கிறான்; யோய்தாவின் நாளெல்லாம் நித்தம் கர்த்தருடைய ஆலயத்திலே சர்வாங்க தகனபலிகளைச் செலுத்திவருகிறார்கள் (2நாளா 24:14).

யோவாசின் பின்மாற்றம்
2நாளா 24:15-18

2நாளா 24:15. யோய்தா தீர்க்காயுசுள்ளவனாய் முதிர்வயதில் மரித்தான்; அவன் மரணமடைகிறபோது நூற்றுமுப்பது வயதாயிருந்தான்.

2நாளா 24:16. அவன் தேவனுக்காகவும் அவருடைய ஆலயத்திற்காகவும் இஸ்ரவேலுக்கு நன்மைசெய்தபடியினால், அவனைத் தாவீதின் நகரத்தில் ராஜாக்களண்டையிலே அடக்கம்பண்ணினார்கள்.

2நாளா 24:17. யோய்தா மரணமடைந்தபின்பு யூதாவின் பிரபுக்கள் வந்து, ராஜாவைப் பணிந்துகொண்டார்கள்; அப்பொழுது ராஜா அவர்களுக்குச் செவிகொடுத்தான்.

2நாளா 24:18. அப்படியே அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தை விட்டுவிட்டு, தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் சேவித்தார்கள்; அப்பொழுது அவர்கள் செய்த இந்தக் குற்றத்தினிமித்தம் யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் கடுங்கோபம் மூண்டது.

கர்த்தர் யோவாசுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். யோவாசும் ஆரம்பத்திலே கர்த்தருக்கு பிரியமானவனாயிருந்தான். கர்த்தருக்கு பயந்து ஜீவித்தான். கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்தான். ஆசாரியனாகிய யோய்தாவும் யோவாசுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லி வந்தான்.

ஆனாலும் யோவாஸ், கர்த்தர் தனக்கு செய்த உதவிகளை மறந்துவிடுகிறான். அவன் தேவனாகிய கர்த்தருக்கு நன்றியில்லாதவனாயிருக்கிறான். யோய்தா யோவாசோடு கூடயிருந்த வரையிலும், யோவாஸ் கர்த்தருடைய பார்வையிலே செம்மையான காரியங்களை செய்தான்.

யோவாஸ் சிறுபிள்ளையாகயிருந்தபோது, யூதாதேசத்திலே விக்கிரகாராதனை அதிகமாயிருந்தது. ஆசாரியனாகிய யோய்தா, யோவாசுக்கு கர்த்தருடைய சத்தியங்களை உபதேசம்பண்ணி வந்தான். யோவாஸ் விக்கிரகங்களை ஆராதியாதபடி, கர்த்தரையே ஆராதிக்குமாறு, யோய்தா அவனுக்கு உபதேசம்பண்ணி வந்தான்.

ஆசாரியனாகிய யோய்தாவுக்கு வயதாயிற்று. யோய்தா தீர்க்காயுசுள்ளவனாய் முதிர்வயதில் மரித்துப்போகிறான்; அவன் மரணமடைகிறபோது நூற்றுமுப்பது வயதாயிருக்கிறான். யோய்தா தேவனுக்காகவும் அவருடைய ஆலயத்திற்காகவும் இஸ்ரவேலுக்கு நன்மைசெய்தபடியினால், அவனைத் தாவீதின் நகரத்தில் ராஜாக்களண்டையிலே அடக்கம்பண்ணுகிறார்கள் (2நாளா 24:15,16).

யோய்தா மரணமடைந்தபின்பு யூதாவின் பிரபுக்கள் வந்து, ராஜாவாகிய யோவாசைப் பணிந்து கொள்கிறார்கள். இந்தப் பிரபுக்கள் யோவாசிற்கு தவறான ஆலோசனை கூறுகிறார்கள். பொதுவாக ராஜாதான் பிரபுக்களுக்குத் தவறான ஆலோசனை கூறி, அவர்களைக் கெடுத்துப் போடுவான். ஆனால் இங்கோ பிரபுக்கள் ராஜாவிற்குத் தவறான ஆலோசனைகளைக் கூறி, யோவாசைக் கெடுத்துப் போடுகிறார்கள்.

இதுவரையிலும் யோவாஸ் அருகில் யோய்தாவின் அனுமதியில்லாமல் யாரும் நெருங்க முடியாது. யோய்தா மட்டுமே அவனுக்கு ஆவிக்குரிய ஆலோசனையைக் கொடுத்து வந்தான். யோய்தா மரணமடைந்த பின்பு, பிரபுக்கள் யோவாசிற்குத் தீமையான ஆலோசனையைக் கொடுத்து, அவனைக் கர்த்தரை விட்டு, வழிவிலகிச் செல்ல வைக்கிறார்கள். தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் சேவிக்குமாறு யோவாசை வழிநடத்துகிறார்கள்.

ஆசாரியனாகிய யோய்தா யூதாதேசத்திலே கர்த்தருடைய ஊழியத்தை செய்தவன். ஆனாலும் இந்த வசனத்தில், "யோய்தா இஸ்ரவேலுக்கு நன்மை செய்தபடியினால்" (2நாளா 24:16) என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூதாதேசம் இங்கு "இஸ்ரவேல்" என்று அழைக்கப்படுகிறது.

இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் மாத்திரமே தெற்கு யூதாதேசமாகயிருக்கிறார்கள். மீதமுள்ள இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார், தாவீதின் குடும்பத்திற்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் கலகம்பண்ணி பிரிந்துபோய்விடுகிறார்கள். ஆகையினால் கர்த்தரோடு கூடயிருக்கும், யூதாதேசத்தார் மாத்திரமே, உண்மையான இஸ்ரவேலராயிருக்கிறார்கள்.

யோய்தா மரித்து அடக்கம்பண்ணப்படும்போது, அவன் செய்த ஊழியத்தின் பெரும்பகுதியும் அடக்கம்பண்ணப்படுகிறது. யோய்தாவின் மரணத்திற்கு பின்பு ராஜாவாகிய யோவாசும், யூதாஜனத்தாரும் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். இதுவரையிலும் யோய்தா அவர்களை கர்த்தருடைய பாதையிலே வழிநடத்தினான். இப்போது அவர்களை வழிநடத்த யோய்தா இல்லை. அவர்களுடைய இருதயங்களிலும் கர்த்தர்மீது உண்மையான பயமோ பக்தியோ இல்லை.

புதியஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப்பற்றிச் சொல்லும்போது, நாம் சாரமுள்ள உப்பாகயிருக்கவேண்டும் என்று உபதேசம்பண்ணுகிறார். உப்பின் சாரம் நமக்குள்ளேயே இருக்கவேண்டும். கர்த்தர்மீதுள்ள பயபக்தியும், ஆவிக்குரிய உபதேசங்களும், பக்திவைராக்கியங்களும் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நம்மைச் சுற்றியிருக்கும் சூழ்நிலைகள் மாறலாம். நம்முடைய பெற்றோரையும், ஊழியக்காரர்களையும், சிநேகிதர்களையும் நாம் இழக்க வேண்டியது வரலாம். விசுவாசிகளாகிய நாம் எல்லாவற்றையும் இழந்தாலும், கர்த்தரைப்பற்றிய சத்தியமும், கர்த்தர்மீதுள்ள பக்திவைராக்கியமும், நம்முடைய இருதயத்தில் நிரந்தரமாய்த் தங்கியிருக்கவேண்டும். அப்போது நாம் அசைக்கப்படுவதில்லை. நாம் எல்லோரையும் இழந்தாலும், நமக்கு ஆவிக்குரிய இழப்பு ஏற்படாது.

ராஜாவாகிய யோவாசின் இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய சத்தியமும், அவருடைய வார்த்தையும் நிலைத்திருக்கவில்லை. ஆசாரியனாகிய யோய்தா யோவாசுக்கு அவ்வப்போது கர்த்தருடைய பிரமாணங்களைப் போதித்து வந்தான். யோய்தா மரித்த பின்பு யோவாசுக்கு ஆவிக்குரிய சத்தியங்களைப் போதிக்க ஒருவருமில்லை. அவன் ஆவிக்குரிய போஜனமில்லாமல், ஆவிக்குரிய பசியிலும், ஆவிக்குரிய வறுமையிலும், வெறுமையிலும் இருக்கிறான்.

இந்த சூழ்நிலையில், யோவாசுக்கு புதிய சிநேகிதர்கள் வந்து சேருகிறார்கள். இவர்கள் கர்த்தரை ஆராதிக்கிறவர்களல்ல. இவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள்.

யோய்தா மரணமடைந்தபின்பு யூதாவின் பிரபுக்கள் வந்து, ராஜாவைப் பணிந்துகொள்கிறார்கள்; அப்பொழுது ராஜாவாகிய யோவாஸ் அவர்களுக்குச் செவிகொடுக்கிறான். அப்படியே அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தை விட்டுவிட்டு, தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் சேவிக்கிறார்கள்.

யூதாவின் பிரபுக்கள் யோவாசுக்கு மோசமான ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். அவர்கள் யோவாசின்மீது பிரியமாயிருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். யோவாஸ் கர்த்தரைவிட்டு விலகிப்போகும்போது, யூதாவின் பிரபுக்கள் அவனைக் கடிந்துகொள்ளவில்லை.

யோய்தா மரித்துப்போன பின்பு, யூதாவின் பிரபுக்கள் அவனுடைய மரணத்திற்காக துக்கப்படாமல், அதற்காக சந்தோஷப்படுகிறார்கள். யோய்தாவின் அடிமைத்தனத்திலிருந்து யோவாஸ் விடுதலைபெற்றிருக்கிறான் என்று சொல்லி, அவனை வாழ்த்துகிறார்கள். யோவாஸ் இனிமேல் தன்னுடைய இஷ்டம்போல ஜீவிக்கலாம் என்றும், அவனை கட்டுப்படுத்த இப்போது யோய்தா உயிரோடில்லை என்றும் தீய யோசனைகளை அவர்கள் ராஜாவுக்கு சொல்லுகிறார்கள்.

யோவாஸ் இனிமேல் ஆசாரியருடைய ஆலோசனைகளின்படி நடக்கவேண்டாம் என்றும், அவன் தனக்கு இஷ்டமானதை செய்துகொள்ளலாம் என்றும் யூதாவின் பிரபுக்கள் அவனுக்கு மோசமான ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். யோவாசும் துன்மார்க்கருடைய ஆலோசனைகளைக் கேட்டு கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறான். கர்த்தருடைய ஆலயத்தை பழுதுபார்த்த யோவாஸ், இப்போது கர்த்தரின் ஆலயத்தைவிட்டு விட்டு, தோப்பு விக்கிரகங்களை சேவிக்கிறான்.

யோவாசின் குடும்பத்தாரை ஆகாபின் குடும்பத்தார் கெடுத்துப்போட்டவர்கள். ஆகாபின் குடும்பத்தார் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள். ஆனால் யூதாவின் பிரபுக்களோ கர்த்தரை ஆராதிக்க வேண்டியவர்கள். இவர்கள் யோவாசுக்கு மோசமான ஆலோசனைகளை சொல்லி, யோவாசின் பின்மாற்றத்திற்கு காரணமாயிருக்கிறார்கள்.

யோவாசும் யூதாவின் பிரபுக்களுடைய மோசமான ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறான். ராஜாவும் யூதாவின் பிரபுக்களும் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள். யோவாசினுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்திலே, யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களெல்லாம் அகற்றப்பட்டது. அகற்றப்பட்ட விக்கிரகங்களை மறுபடியும் ஸ்தாபிக்கவேண்டுமென்று யூதாவின் பிரபுக்கள் யோவாசுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

யூதாவின் பிரபுக்களுக்கு கர்த்தருடைய ஆலயத்தில் நடைபெறுகிற ஆராதனைகள், பழையதாகவும், ஜீவனற்றதாகவும், உற்சாகமில்லாததாகவும் தெரிகிறது. அவர்கள் புதிய ஆராதனையில் பிரியப்படுகிறார்கள். அதற்காக, யூதாதேசத்திலே, கர்த்தருடைய ஆராதனைக்கு பதிலாக, விக்கிரகாராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று ராஜாவுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

யோவாஸ் பிரபுக்களுடைய ஆலோசனைக்கு செவிகொடுக்கிறான். யூதாதேசத்திலே விக்கிரகாராதனையை மறுபடியும் ஆரம்பிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்ததோடு, ராஜாவும் அவர்களோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறான். இவ்வாறாக யூதாதேசத்தார், தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டு விட்டு, தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவிக்கிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய யோவாசும், யூதாவின் பிரபுக்களும் செய்த இந்தக் குற்றத்தினிமித்தம் யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் கர்த்தருடைய கடுங்கோபம் மூளுகிறது (2நாளா 24:17,18).

கர்த்தருடைய எச்சரிப்பு 2நாளா 24:19-22

2நாளா 24:19. அவர்களைத் தம்மிடத்திற்குத் திரும்பப்பண்ணக் கர்த்தர் அவர்களிடத்தில் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்; அவர்கள் ஜனங்களைத் திடச்சாட்சியாகக் கடிந்துகொண்டார்கள்; ஆனாலும் அவர்கள் செவி கொடுக்கவில்லை.

2நாளா 24:20. அப்பொழுது தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனான சகரியாவின்மேல் இறங்கினதினால், அவன் ஜனத்திற்கு எதிரே நின்று: நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறது என்ன? இதினால் நீங்கள் சித்திபெறமாட்டீர்கள் என்று தேவன் சொல்லுகிறார்; நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால் அவர் உங்களைக் கைவிடுவார் என்றான்.

2நாளா 24:21. அதினால் அவர்கள் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில் ராஜாவினுடைய கற்பனையின்படி அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

2நாளா 24:22. அப்படியே அவனுடைய தகப்பனாகிய யோய்தா தனக்குச் செய்த தயையை ராஜாவாகிய யோவாஸ் நினையாமல் அவனுடைய குமாரனைக் கொன்றுபோட்டான்; இவன் சாகும்போது: கர்த்தர் அதைப் பார்ப்பார், அதைக் கேட்பார் என்றான்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகி தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவிக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் மூளுகிறது.

அவர்களைத் தம்மிடத்திற்குத் திரும்பப்பண்ணக் கர்த்தர் அவர்களிடத்தில் தீர்க்கதரிசிகளை அனுப்புகிறார்; அவர்கள் ஜனங்களைத் திடச்சாட்சியாகக் கடிந்துகொள்கிறார்கள்; ஆனாலும் அவர்கள் செவி கொடுக்கவில்லை (2நாளா 24:19).

"அவர்கள் ஜனங்களைத் திடச்சாட்சியாகக் கடிந்துகொண்டார்கள்" என்னும் வாக்கியத்திற்கு வல்கேட்டில் "ப்ராட்டஸ்டன்ட்ஸ்" என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இதில் இரண்டு வார்த்தைகள் உள்ளது. ஒன்று "pro" இதற்கு "for" என்றுபொருள். மற்றொன்று "testans" என்னும் வார்த்தையாகும். இதற்கு "witnessings" என்று பொருள். இதன் பிரகாரம், "protestantes" என்னும் வார்த்தைக்கு "சாட்சிப்பகருதல்" என்று பொருள்.

ப்ராட்டஸ்டன்ட்ஸ் சபை பிரிவினர் கர்த்தருக்காகச் சாட்சி பகரவேண்டும். தீமைக்கு எதிராகப் பேசுவது மட்டும் கர்த்தருக்காகச் சாட்சி பகர்வதாகாது. கர்த்தருடைய சத்தியத்திற்கும், கர்த்தருக்கும் சாட்சி பகரவேண்டும். கர்த்தர் இங்கு தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்புகிறார். அவர்கள் யூதா தேசத்தாரின் பின்மாற்றத்தைக் குறித்து, கடிந்து கொண்டு கர்த்தருடைய சத்தியங்களை அறிவிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்குச் செவி கொடுக்கவில்லை.

கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போன ஜனங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்கள் திடசாட்சியாய்க் கடிந்துகொள்ளவேண்டும். பின்வாங்கிப் போனவர்களை தங்களிடத்திற்கு திருப்புவது ஊழியக்காரரின் வேலையல்ல. அவர்களை கர்த்தரிடத்திற்கு திரும்ப பண்ணவேண்டும். கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போனவர்கள், அவருக்கு விரோதமாக வேசித்தனம்பண்ணுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஊழியக்காரர்கள் கடிந்துகொண்டு, அவர்களை கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பப்பண்ணவேண்டும்.

யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்களைக் கடிந்துகொள்கிற தீர்க்கதரிசிகளை அவர்கள் கொன்றுபோடுகிறார்கள். யூதாவின் மனுஷர் யோய்தாவின் குமாரனாகிய சகரியாவை கல்லெறிந்து கொன்றுபோட்ட சம்பவம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்பொழுது தேவனுடைய ஆவி ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனான சகரியாவின்மேல் இறங்கினதினால், அவன் ஜனத்திற்கு எதிரே நின்று: "நீங்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறது என்ன? இதினால் நீங்கள் சித்திபெறமாட்டீர்கள் என்று தேவன் சொல்லுகிறார்; நீங்கள் கர்த்தரை விட்டுவிட்டதினால் அவர் உங்களைக் கைவிடுவார்" (2நாளா 24:20) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரைக் கைவிட்டுவிட்டால், கர்த்தரும் அவர்களைக் கைவிட்டுவிடுவார். இங்கு கூறப்பட்டிருக்கும் சகரியா கல்லெறிந்து கொல்லப்படுகிறான். இவரும், சகரியா தீர்க்கதரிசனம் புஸ்தகத்தை எழுதிய சகரியாவும் ஒரே நபரல்ல. இவர்கள் வெவ்வேறு நபர்கள். இந்த சகரியா பாபிலோனிய சிறையிருப்பில் வாழ்ந்தவர். (சக 1:1; சக 3:1; சக 4:8-9; சக 7:1). 2நாளா 24:20 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சகரியா யோய்தாவின் குமாரன். சிறையிருப்பிற்கு 150 வருஷங்களுக்கு முன்பாக வாழ்ந்தவன். இவர்கள் இருவருமே கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள். (2நாளா 24:21-22; மத் 23:35).

அதினால் அவர்கள் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில் ராஜாவினுடைய கற்பனையின்படி அவனைக் கல்லெறிந்து கொன்று போடுகிறார்கள் (2நாளா 24:21).

தேவனுடைய ஆவியானவர் சகரியாவின்மேல் இறங்கினபோது, யூதாதேசத்து ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில் கூடிவருகிறார்கள். சகரியா ஆவியினால் நிரம்பி அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறான். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களை திடசாட்சியாய்க் கடிந்துகொள்கிறான். அவர்களோ தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல், சகரியாவின்மீது கோபப்படுகிறார்கள்.

சகரியா எந்த ஒரு தனிப்பட்ட நபருக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவில்லை. அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளை மீறுகிறார்கள் என்று பொதுவாகவே சொல்லுகிறான். யூதாஜனங்கள் தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவிக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் சித்தி பெறமாட்டார்கள் என்று சகரியா சொல்லுகிறான்.

யூதாவின் மனுஷரோ சகரியாவுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணுகிறார்கள். அவனைக் கொன்றுபோட சதிபண்ணுகிறார்கள். அவர்கள் ராஜாவினுடைய கற்பனையின்படி, சகரியாவைக் கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அதை மீறுகிறவர்கள், இப்போது ராஜாவின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிகிறார்கள்.

யூதாவின் ஜனங்கள் சகரியாவை தேவதூஷணம் சொல்லுகிறவன் என்றும், கள்ளத்தீர்க்கதரிசி என்றும், தேசத்துரோகி என்றும் குற்றம் சொல்லி, கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்திலேயே அவனை கல்லெறிந்து கொன்றுபோடுகிறார்கள். சகரியா ஒரு ஆசாரியன். அவன் ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரன். அவன் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாயிருக்கிறான். சகரியா கர்த்தருடைய வார்த்தையை அவருடைய ஆலயப்பிரகாரத்தில் சொல்லுகிறான். கர்த்தருடைய ஆலயப்பிரகாரமும் பரிசுத்தமானது. அவன் சொல்லுகிற செய்தியும் பரிசுத்தமானது.

சகரியா கர்த்தருடைய நாமத்தினாலே யூதா ஜனங்களைக் கடிந்துகொள்கிறான். அவனுடைய வார்த்தைகள் சத்தியமானது. அவன் கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் ஜனங்களுக்கு கலப்படமில்லாமல் சுத்தமாய் சொல்லுகிறான். வேதஆதாரத்தோடு பேசுகிறான். சகரியா அவர்களை கடிந்துகொண்டாலும், அவனுடைய சுபாவம் மென்மையானது. அவன் யூதா மனுஷருக்கு நன்மைக்கேதுவான வார்த்தைகளையே பேசுகிறான்.

யூதாமனுஷரோ ஒரு ஆசாரியனைக் கொன்றுபோடுகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியைக் கொன்றுபோடுகிறார்கள். கர்த்தர் நியமித்த நியாயாதிபதியைக் கொன்றுபோடுகிறார்கள். அவர்கள் குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிறார்கள். கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தை தீட்டுப்படுத்துகிறார்கள்.

அவர்களெல்லோரும் ஓய்வுநாளிலே கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில் கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாக்குவதற்கு பதிலாக, சகரியாவை கல்லெறிந்து கொன்று, குற்றமில்லாத இரத்தத்தை சிந்தி, ஓய்வுநாளை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்.

சகரியா கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரன். அவன் யூதாதேசத்திற்கும் உண்மையுள்ளவன். அவனுடைய தகப்பனாகிய யோய்தா யூதாதேசத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறான். ராஜாவாகிய யோவாசுக்கு யோய்தா ஆவிக்குரிய தகப்பனைப்போல இருந்து உதவி செய்திருக்கிறான்.

அப்படியே சகரியாவினுடைய தகப்பனாகிய யோய்தா தனக்குச் செய்த தயையை ராஜாவாகிய யோவாஸ் நினையாமல் அவனுடைய குமாரனைக் கொன்றுபோடுகிறான் (2நாளா 24:22).

யோய்தாதான் யோவாசைச் சிறுவயது முதல் பாதுகாத்து பராமரித்தவன். ஆனால் யோவாஸ் அதை நினைத்துப் பார்க்கவில்லை. யோய்தா மரிக்கும்வரையில் யோவாஸ் அவனுடைய ஆலோசனைக்கு உட்பட்டிருந்தான். இப்போதோ தன்னுடைய பிரபுக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, யோய்தாவின் குமாரனாகிய சகரியவைக் கொன்றுபோடுகிறான்.

சகரியா சாகும்போது: "கர்த்தர் அதைப் பார்ப்பார், அதைக் கேட்பார்" *(2நாளா 24:22)* என்று மனவேதனையோடு சொல்லுகிறான். யூதாவின் மனுஷரை பழிவாங்கவேண்டும் என்பது சகரியாவின் நோக்கமல்ல. சகரியா மரிக்கும்போது சொல்லுகிற இந்த வார்த்தைகள், தீர்க்கதரிசன ஆவியானவர் சொல்லுகிற வார்த்தையாயிருக்கிறது. கர்த்தர் மெய்யாகவே யூதா மனுஷருடைய அக்கிரமங்களை கேட்பார், அதை அவர் தம்முடைய நீதியினால் அவர்களிடத்தில் விசாரிப்பார்.

சகரியா கர்த்தருடைய ஆலயப்பிரகாரத்தில், இரத்தம் சிந்தி மரித்துப்போகிறான். கர்த்தர் யூதா மனுஷருடைய பாவங்களை உடனே விசாரிக்கிறார். கர்த்தருடைய கோபத்தினால் கல்தேயர்கள் எருசலேமை அழித்துப்போடுகிறார்கள்.

"ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று" *(2நாளா 36:16)*.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், சகரியா சிந்தின இரத்தத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்.

"நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" *(மத் 23:35)*.

யோவாசின் மரணம்
2நாளா 24:23-27

2நாளா 24:23. மறுவருஷத்திலே சீரியாவின் சேனைகள் அவனுக்கு விரோதமாக யூதாவிலும் எருசலேமிலும் வந்து, ஜனத்திலிருக்கிற பிரபுக்களையெல்லாம் அழித்து, கொள்ளையிட்ட அவர்கள் உடமைகளையெல்லாம் தமஸ்குவின் ராஜாவுக்கு அனுப்பினார்கள்.

2நாளா 24:24. சீரியாவின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும், அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியினால், கர்த்தர் மகா பெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் யோவாசுக்கு தண்டனை செய்தார்கள்.

2நாளா 24:25. அவர்கள் அவனை மகா வேதனைக்குள்ளானவனாக விட்டுப்போனார்கள்; அவர்கள் புறப்பட்டுபோனபின்பு, அவனுடைய ஊழியக்காரர் ஆசாரியனாகிய யோய்தாவுடைய குமாரரின் இரத்தப் பழியினிமித்தம், அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் படுக்கையிலே அவனைக் கொன்றுபோட்டார்கள்; செத்துப்போன அவனைத் தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள்; ஆனாலும் ராஜாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை.

2நாளா 24:26. அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணினவர்கள், அம்மோனிய ஸ்திரீயான சீமாத்தின் குமாரனாகிய சாபாத்தும், மோவாப் ஸ்திரீயான சிம்ரீத்தின் குமாரனாகிய யோசபாத்துமே.

2நாளா 24:27. அவன் குமாரரைப் பற்றியும், அவன் மேல் சுமந்த பெரிய பாரத்தைப்பற்றியும், தேவனுடைய ஆலயத்தை அவன் பலப்படுத்தினதைப் பற்றியும் ராஜாக்களின் புஸ்தகமான சரித்திரத்தில் எழுதியிருக்கிறது; அவன் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யோவாசின்மீது வருகிறது. அவன் குற்றமில்லாத சகரியாவின் இரத்தத்தை சிந்தினான். கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் மூளுகிறது.

மறுவருஷத்திலே சீரியாவின் சேனைகள் அவனுக்கு விரோதமாக யூதாவிலும் எருசலேமிலும் வந்து, ஜனத்திலிருக்கிற பிரபுக்களையெல்லாம் அழித்து, கொள்ளையிட்ட அவர்கள் உடமைகளையெல்லாம் தமஸ்குவின் ராஜாவுக்கு அனுப்புகிறார்கள்.

யோவாசிற்குத் துராலோசனை சொன்ன பிரபுக்களையெல்லாம் சீரியர் அழித்துப் போட்டார்கள். அவர்களுடைய உடைமைகளை எல்லாம் கொள்ளையிட்டு, தமஸ்குவின் ராஜாவுக்கு அனுப்பினார்கள். சீரியரின் சேனை சிறியது. யூதாவின் சேனையோ பெரியது. ஆனாலும் யூதாவின் பாவங்களின் நிமித்தமாகவும், கர்த்தருடைய கோபத்தின் நிமித்தமாகவும் யூதா தேசத்தார் தோல்வியுற்றார்கள். (2நாளா 24:23-24).

யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான். ஆனால் அவன் தன்னுடைய ஆத்துமாவைப் பழுதுபார்க்கவில்லை. யோவாஸ் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியாமல், அவரைவிட்டு விலகிப்போகிறான். கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாக மீறுகிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிறான். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் யோவாசுக்கும், யூதாதேசத்தாருக்கும் கிடையாமல் போயிற்று.

யோவாஸ் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தருடைய கோபம் அவன்மேல் வருகிறது. அவனுடைய பின்நிலமை, முன்நிலமையிலும் மோசமாயிருக்கிறது. யோவாசிடத்தில் ஐசுவரியம் மிகுதியாயிருக்கிறது. யூதாதேசத்திற்கு அருகாமையிலிருக்கிற பக்கத்து தேசத்துக்காரர்கள், யோவாசின் ஐசுவரியத்தை அபகரித்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய தேசத்தின் எல்லைகளெல்லாம் முறியடிக்கிறான். அந்நாட்களில் கர்த்தர் இஸ்ரவேலை குறைந்துபோகப்பண்ணுகிறார் (2இராஜா 10:32).

சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல் இஸ்ரவேலை முறிடியத்த பின்பு, அவன் காத்தூரின்மேல் யுத்தம்பண்ணி, அதையும் பிடிக்கிறான். காத்தூர் அரணிப்பான பட்டணம். அவன் காத்தூரைப் பிடித்ததினால், எருசலேமையும் பிடிப்பதற்கு வாய்ப்புள்ளது.

ஆசகேல் காத்தூரைப் பிடித்த பின்பு எருசலேமுக்கு விரோதமாய் தன்னுடைய முகத்தைத் திருப்புகிறான் (2இராஜா 12:17). சீரியாராஜாவின் இராணுவத்தார் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். யோவாசால் அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது. யோவாசினிடத்தில் இராணுவ பலமுமில்லை. மனதில் தைரியமுமில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோவாஸ், சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணாமல், அவனுக்கு ஏராளமான ஐசுவரியத்தைக் கொடுத்து, அவனோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறான்.

ஆசகேல் தன் முகத்தை எருசலேமுக்கு விரோதமாக திருப்பியபோது, யூதாவின் ராஜாவாகிய யோவாஸ், தன் பிதாக்களாகிய யோசபாத், யோராம், அகசியா என்னும் யூதாவின் ராஜாக்கள் பரிசுத்தம்பண்ணி வைத்த எல்லாவற்றையும், தான் பரித்தம்பண்ணிவைத்ததையும், கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களில் அகப்பட்ட பொன் யாவையும் எடுத்து சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலுக்கு அனுப்புகிறான் (2இராஜா 12:18).

எருசலேமின்மீது யுத்தம்பண்ணக்கூடாது என்பதற்காக, யோவாஸ் ஆசகேலுக்கு பொன்னையும் வெள்ளியையும், திரளான பொக்கிஷங்களையும் லஞ்சமாகக் கொடுக்கிறான். ஆசகேல் தன் முகத்தை எருசலேமுக்கு விரோதமாகத் திருப்பாமல், வேறு திசையில் திருப்புவதற்கு, தேவாலயத்தின் பொக்கிஷங்கள், ஆசகேலுக்கு லஞ்சமாகக் கொடுக்கப்படுகிறது.

ஆசகேலும் யோவாஸ் கொடுத்த பொக்கிஷங்களைப் பெற்றுக்கொண்டு, அவன் எருசலேமைவிட்டு, வேறு திசையாய்த் திரும்பிப்போகிறான்.

யூதாவின் ராஜாவாகிய யோவாஸ் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறான். கர்த்தரும் யோவாசை விட்டு விலகிப்போய்விடுகிறார். யோவாசுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்கவில்லை. சீரியாவின் ராஜாவாகிய ஆசகேல், யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான். யோவாசுக்கு இதனால் பேரிழப்பு உண்டாயிற்று. யூதாதேசத்திலே யோவாசுக்கு மதிப்பும் மரியாதையும் குறைந்துபோயிற்று. அவனுடைய இராணுவத்தின் எண்ணிக்கையும் குறைந்துபோயிற்று. யோவாசின் குதிரைகளும் இரதங்களும் குறைந்துபோயிற்று.

யோவாஸ் தன்னுடைய மதியீனத்தினால் தனக்கும், யூதாதேசத்திற்கும் கேடுசெய்கிறான். யோவாஸ் தன்னுடைய அழிவுக்கு தானே காரணமாயிருக்கிறான். யோவாஸ் சீரியாவின் ராஜாவாகிய ஆசகேலுக்கு திரளான பொக்கிஷத்தை லஞ்சமாகக் கொடுத்ததினால், ஆசகேலுக்கு யூதாதேசத்தின் பொக்கிஷத்தின்மீது ஆசை உண்டாயிற்று. ஆசகேல் எருசலேமுக்கு விரோதமாக அடிக்கடி தன்னுடைய முகத்தைத்திருப்பி, யூதாதேசத்தின் பொக்கிஷங்களையெல்லாம் அபகரித்துக்கொள்ள திட்டமிடுகிறான். ஆசகேல் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமலேயே, அவனுக்கு மிகப்பெரிய ஆதாயம் கிடைத்திருக்கிறது.

இந்த சம்பவம் நடந்த பின்பு, மறுவருஷத்திலே ஆசகேல் எருசலேமுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ண வருகிறான். எருசலேமை அழித்துப்போடுகிறான். சீரியர்கள் யோவாசையும் தண்டிக்கிறார்கள்.

"மறுவருஷத்திலே சீரியாவின் சேனைகள் அவனுக்கு விரோதமாக யூதாவிலும் எருசலேமிலும் வந்து, ஜனத்திலிருக்கிற பிரபுக்களையெல்லாம் அழித்து, கொள்ளையிட்ட அவர்கள் உடைமைகளையெல்லாம் தமஸ்குவின் ராஜாவுக்கு அனுப்பினார்கள்" *(2நாளா 24:23)*.

"சீரியாவின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும், அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியினால், கர்த்தர் மகா பெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் யோவாசுக்கு தண்டனை செய்தார்கள்" *(2நாளா 24:24)*.

சீரியாவின் சேனை சிறுகூட்டமாய் வந்திருந்தாலும், அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியினால், கர்த்தர் மகா பெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கிறார்; அவர்கள் யோவாசுக்கு தண்டனை செய்கிறார்கள். அவர்கள் யோவாசை மகா வேதனைக்குள்ளானவனாக விட்டுப்போகிறார்கள் *(2நாளா 24:24,25)*.

யூதாவின் சேனை பெருங்கூட்டமாயிருக்கிறார்கள். சீரியரின் சேனையோ சிறிய கூட்டமாக இருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் யூதாவின் மகாபெரிய சேனையை சீரியரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். சீரியர்கள் யூதாவின் பிரபுக்களையெல்லாம் அழித்துப்போடுகிறார்கள். யூதாவிலும் எருசலேமிலுள்ள பொக்கிஷங்களையெல்லாம் கொள்ளையடித்து, தமஸ்குவுக்கு கொண்டு போய்விடுகிறார்கள்.

சீரியர்கள் யோவாசுக்கு தண்டனை செய்கிறார்கள். அவனை மகாவேதனைக்குள்ளானவனாக விட்டுப்போகிறார்கள். யோவாசின் சரீரத்தில் காயமும் வியாதியும் உண்டாயிற்று. அவனுடைய மனதிலும் காயங்கள் உண்டாயிற்று. யோவாஸ் வியாதிப்படுக்கையில் படுத்திருக்கிறான். யோவாசின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாக எழும்புகிறார்கள்.

சீரியர்கள் புறப்பட்டுபோனபின்பு, யோவாசின் ஊழியக்காரர் ஆசாரியனாகிய யோய்தாவுடைய குமாரரின் இரத்தப் பழியினிமித்தம், அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் படுக்கையிலே அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

ஆசாரியனாகிய யோய்தாவின் குமாரனாகிய சகரியா மரிக்கும்போது, "கர்த்தர் அதைப் பார்ப்பார், அதைக் கேட்பார்" (2நாளா 24:22) என்று சொல்லி மரித்தான். அவன் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறிற்று. கர்த்தர் யோவாசின் அக்கிரமத்தைப் பார்க்கிறார், அதைக் கேட்கிறார். அவனை நியாயம் விசாரிக்கிறார். அவனுக்கு தண்டனை கொடுக்கிறார்.

யோவாஸ் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், அவனுடைய ஜீவனுக்கு பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. யோவாசின் ஊழியக்காரரே அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

யோவாசின் ஊழியக்காரர் எழும்பி கட்டுப்பாடு பண்ணிக்கொண்டு, சில்லாவுக்குப் போகிற வழியிலிருக்கிற மில்லோ வீட்டிலே அவனைக் கொன்றுபோடுகிறார்கள் (2இராஜா 12:20).

யோவாசின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (2இராஜா 12:19).

யோவாசின் ஊழியக்காரரே அவனைக் கொன்றுபோடுகிறார்கள். அவனைக் கொன்றவர்களின் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சிமியாதின் குமாரன், யோசகார் சோமேரின் குமாரன் யோசபாத் என்னும் யோவாசின் ஊழியக்காரர் யோவாசைக் கொன்று போடுகிறார்கள்.

இறந்துபோன யோவாசை தாவீதின் நகரத்தில் அவனுடைய பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுகிறார்கள்; யோவாசின் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 12:21). யோவாஸ் தன்னுடைய ஜீவியத்தை ஆவியில் ஆரம்பம் பண்ணினான். ஆனால் அவனுடைய ஜீவியம் மாம்சத்தில் முடிந்துபோயிற்று.

செத்துப்போன யோவாசை தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள்; ஆனாலும் ராஜாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை (2நாளா 24:25).

யோவாசுக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணினவர்கள், அம்மோனிய ஸ்திரீயான சீமாத்தின் குமாரனாகிய சாபாத்தும், மோவாப் ஸ்திரீயான சிம்ரீத்தின் குமாரனாகிய யோசபாத்துமே.

யோவாசின் குமாரரைப் பற்றியும், அவன் மேல் சுமந்த பெரிய பாரத்தைப்பற்றியும், தேவனுடைய ஆலயத்தை அவன் பலப்படுத்தினதைப்பற்றியும் ராஜாக்களின் புஸ்தகமான சரித்திரத்தில் எழுதியிருக்கிறது; யோவாசின் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2நாளா 24:26,27).

25 அதிகாரம்

யோவாசின் குமாரனாகிய அமத்சியாவின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவன் யூதாதேசத்தை ஆளுகை செய்த ராஜாக்களில் மோசமானவனுமல்ல. அதே வேளையில் இவன் நல்லவனுமல்ல. நாளாகமம் புஸ்தகத்தின் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சில சம்பவங்கள், 2இராஜா 14-ஆவது அதிகாரத்திலும் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அமத்சியா தன் தகப்பனாகிய யோவாசை கொலைசெய்தவர்களைக் கொன்றுபோடுகிறான் *(2நாளா 25:1-4)*. அமத்சியா கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறான் *(2நாளா 25:5-10)*.

அமத்சியா ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களில் அநேகரை கொடூரமான முறையிலே கொன்றுபோடுகிறான் *(2நாளா 25:11-13)*. அமத்சியா ஏதோமியரின் விக்கிரக தெய்வங்களை சேவிக்கிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசி அமத்சியாவைக் கடிந்துகொள்கிறான் *(2நாளா 25:14-16)*.

அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவை வம்புக்கு இழுக்கிறான். அவனோடு யுத்தம்பண்ணுகிறான் *(2நாளா 25:17-24)*. எருசலேமிலிருந்தவர்கள் அமத்சியாவுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணி, லாகீசுக்கு ஓடிப்போனவனை, அங்கே கொன்றுபோடுகிறார்கள் *(2நாளா 25:25-28)*. அமத்சியாவின் ஜீவியகாலம் மகிமையில்லாமல் முடிந்துபோயிற்று.

அமத்சியாவின் ராஜ்யபாரம்
2நாளா 25:1-13

2நாளா 25:1. அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; எருசலேம் நகரத்தாளாகிய அவனுடைய தாயின்பேர் யோவதானாள்.

2நாளா 25:2. அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை.

2நாளா 25:3. ராஜ்யபாரம் அவனுக்கு ஸ்திரப்பட்டபோது, அவன் தன் தகப்பனாகிய ராஜாவைக் கொலைசெய்த தன்னுடைய ஊழியக்காரரைக் கொன்றுபோட்டான்.

2நாளா 25:4. ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்களும், பிதாக்களினிமித்தம் பிள்ளைகளும் கொலைசெய்யப்படாமல், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்டபிரகாரம், அவர்களுடைய பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான்.

2நாளா 25:5. அமத்சியா யூதா மனுஷரைக் கூடிவரச்செய்து, அவர்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே, யூதா பென்யமீன் தேசங்கள் எங்கும் ஆயிரம்பேருக்கு அதிபதிகளையும் நூறுபேருக்கு அதிபதிகளையும் வைத்து, இருபது வயதுமுதற்கொண்டு அதற்கு மேற்பட்டவர்களை இலக்கம்பார்த்து, யுத்தத்திற்குப் புறப்படவும், ஈட்டியையும், கேடகத்தையும் பிடிக்கவுந்தக்க யுத்தவீரர் மூன்றுலட்சம் பேரென்று கண்டான்.

2நாளா 25:6. இஸ்ரவேலிலும் லட்சம் பராக்கிரமசாலிகளை நூறுதாலந்து வெள்ளி கொடுத்துக் கூலிக்கு அமர்த்தினான்.

2நாளா 25:7. தேவனுடைய மனுஷன் ஒருவன் அவனிடத்தில் வந்து: ராஜாவே, இஸ்ரவேலின் சேனை உம்முடனே வரலாகாது; கர்த்தர் எப்பிராயீமின் சகல புத்திரராகிய இஸ்ரவேலோடும் இருக்கவில்லை.

2நாளா 25:8. போக மனதானால் நீர் போம், காரியத்தை நடத்தும்; யுத்தத்திற்குத் திடன்கொண்டு நில்லும்; தேவன் உம்மைச் சத்துருவுக்கு முன்பாக விழப்பண்ணுவார்; ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும் என்றான்.

2நாளா 25:9. அப்பொழுது அமத்சியா: அப்படியானால் நான் இஸ்ரவேலின் சேனைக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்ன என்று தேவனுடைய மனுஷனைக் கேட்டான். அதற்கு தேவனுடைய மனுஷன்: அதைப்பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்கு கொடுக்கக்கூடும் என்றான்.

2நாளா 25:10. அப்பொழுது அமத்சியா எப்பிராயீமரில் தன்னிடத்துக்கு வந்த சேனையைத் தங்கள் வீட்டிற்குப் போய்விடப் பிரித்து விட்டான்; அதினால் அவர்களுக்கு யூதாவின்மேல் மிகுந்த கோபமுண்டு, உக்கிரமான எரிச்சலோடே தங்களிடத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

2நாளா 25:11. அமத்சியாவோ திடன்கொண்டு, தன் ஜனத்தைக் கூட்டி, உப்புப் பள்ளத்தாக்குக்குப் போய், சேயீர் புத்திரரில் பதினாயிரம்பேரை வெட்டினான்.

2நாளா 25:12. யூதா புத்திரர், பதினாயிரம்பேரை உயிரோடு பிடித்து, ஒரு கன்மலையுச்சியிலே கொண்டு போய், அவர்களெல்லாரும் நொறுங்கிப் போகத்தக்கதாய் அந்தக் கன்மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டார்கள்.

2நாளா 25:13. தன்னோடுகூட யுத்தத்திற்கு வராதபடிக்கு, அமத்சியா திருப்பிவிட்ட யுத்த புருஷர், சமாரியா துவக்கிப் பெத்தொரோன்மட்டுமுள்ள யூதா பட்டணங்களின் மேல் விழுந்து, அவைகளில் மூவாயிரம் பேரை வெட்டி, திரளாய்க் கொள்ளையிட்டார்கள்.

அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; எருசலேம் நகரத்தாளாகிய அவனுடைய தாயின்பேர் யோவதானாள் *(2நாளா 25:1)*.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாசுடைய இரண்டாம் வருஷத்திலே யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா ராஜாவாகிறான்.

அமத்சியா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான்; ஆனாலும் முழுமனதோடே அப்படிச் செய்யவில்லை *(2நாளா 25:2)*. அமத்சியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை சேவிக்கிறான். கர்த்தருடைய ஆலயத்திலே ஆராதனைகள் முறைப்படி நடைபெறுவதற்கு ஒழுங்குபண்ணுகிறான்.

அமத்சியா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான்; ஆனாலும் தன் தகப்பனாகிய தாவீதைப்போல் அமத்சியாசெம்மையானதை செய்யவில்லை. அமத்சியா தன் தகப்பனாகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்கிறான் *(2இராஜா 14:1-3)*.

யோவாசின் காலத்தில் கர்த்தருடைய ஆலயம் பழுதுபட்டிருந்தது. யோவாஸ் ஆலயத்தைப் பழுதுபார்த்தான். அதுபோலவே அமத்சியாவும் கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு சில திருப்பணிகளை செய்கிறான். ஆனாலும் அமத்சியா தாவீதைப்போல, கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை.

அமத்சியாவினுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பம் நன்றாயிருக்கிறது. அவன் ஆரம்பகாலத்தில் கர்த்தருக்கு செம்மையானதை செய்கிறான். ஆனாலும் அவன் கர்த்தருக்கு செம்மையானதை தொடர்ந்து செய்யவில்லை. அமத்சியாவின் காலத்தில் மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின் மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவருகிறார்கள் *(2இராஜா 14:4)*.

நம்முடைய பக்தியுள்ள முன்னோர்கள் செய்த செம்மையான காரியங்களை மாத்திரம் நாம் செய்தால் போதாது. அவர்கள் செய்ததையும் நாம் செய்யவேண்டும். அவர்களுடைய பக்தியுள்ள முன்மாதிரியையும் நாம் பின்பற்றவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியங்களை விசுவாசத்தோடும், பயபக்தியோடும் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியங்களை உண்மையாயும், உற்சாகமாயும் செய்யவேண்டும்.

யூதாதேசத்திலே, எருசலேமிலுள்ள தேவாலயத்தில் கர்த்தருடைய ஆராதனையும் நடைபெறுகிறது. அதே வேளையில் ஜனங்கள் மேடைகளின்மேலும் பலியிட்டு தூபங்காட்டி வருகிறார்கள். அந்த மேடைகளை அகற்றுவதற்கு அமத்சியா ஒன்றும் செய்யவில்லை.

யூதாதேசத்திலே, அமத்சியாவின் காலத்திலே, யூதாதேசத்தார் கர்த்தரிடத்தில் பக்தியாயிருக்கிறார்கள். ஆனாலும் அமத்சியா தன் முழுமனதோடே கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை.

அமத்சியாவின் இருதயத்தில் கர்த்தர்மீது உண்மையான பக்தியில்லை. அவனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. அவனிடத்தில் கர்த்தர்மீது பக்திவைராக்கியமுமில்லை. அமத்சியா கர்த்தருக்கு விரோதமானவனுமல்ல. அவன் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணவுமில்லை.

அமத்சியா கர்த்தருக்கு சத்துருவுமல்ல, அவன் கர்த்தருக்கு சிநேகிதனுமல்ல. அமத்சியாவின் ஆவிக்குரிய ஜீவியம் அனலுமில்லாமல், குளிருமில்லாமல் வெதுவெதுப்பாயிருக்கிறது. லவோதிக்கேயா சபையார் அமத்சியாவைப்போல, அனலுமில்லாமல் குளிருமில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் நன்மையான காரியங்களை செய்வார்கள். ஆனாலும் அதை அவர்கள் தங்களுடைய முழுமனதோடு செய்யமாட்டார்கள்.

அமத்சியா யோவாசின் குமாரன். யோவாசின் ஊழியக்காரர்கள் அவனுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணி, அவனைக்கொன்றுபோட்டார்கள். தன்னுடைய தகப்பனாரைக் கொன்றுபோட்டவர்களை அமத்சியா பழிவாங்கும் வண்ணமாக கொன்றுபோடுகிறான்.

அமத்சியா ராஜாசனத்தின் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டவுடன், தன் தகப்பனாரைக் கொன்றுபோட்டவர்களை அவன் கொன்றுபோடவில்லை. தன்னுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்படும் வரையிலும் அமத்சியா பொறுமையோடு காத்திருக்கிறான்.

ராஜ்யபாரம் அவனுக்கு ஸ்திரப்பட்டபோது, அவன் தன் தகப்பனாகிய ராஜாவைக் கொலைசெய்த தன்னுடைய ஊழியக்காரரைக் கொன்றுபோடுகிறான் *(2நாளா 25:3).*

ஆனாலும் பிள்ளைகளினிமித்தம் பிதாக்களும், பிதாக்களினிமித்தம் பிள்ளைகளும் கொலைசெய்யப்படாமல், அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்பட வேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் கட்டளையிட்டபிரகாரம், அவர்களுடைய பிள்ளைகளை அமத்சியா கொல்லாதிருக்கிறான் *(2நாளா 25:4).*

யோவாஸ் தீர்க்கதரிசியாகிய சகரியாவைக் கொன்றுபோட்டான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யோவாசின்மீது வந்தது. அதன் நிமித்தமாக யோவாசின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாக கட்டுப்பாடுபண்ணி, அவனைக் கொன்றுபோட்டார்கள்.

ஆனால் அமத்சியாவோ, கர்த்தருடைய பிரமாணத்தின்படி, தன்னுடைய தகப்பனாரை கொன்றுபோட்டவர்களை, தான் கொன்றுபோடுவதாக நினைக்கிறான். அமத்சியா கொலைகாரர்களை மாத்திரம் கொலைபண்ணுகிறான். அவர்களுடைய பிள்ளைகளை கொன்றுபோடாமல் விட்டுவிடுகிறான். தன்னுடைய செய்கையை நியாயப்படுத்துவதற்கு, அமத்சியா மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற பிரமாணங்களை ஆதாரமாகச் சொல்லுகிறான்.

அமத்சியா ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறான். அதற்காக அவன் தன்னுடைய தேசத்தில் யுத்த ஆயத்தங்களை செய்கிறான்.

அமத்சியா யூதா மனுஷரைக் கூடிவரச்செய்து, அவர்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படியே, யூதா பென்யமீன் தேசங்கள் எங்கும் ஆயிரம்பேருக்கு அதிபதிகளையும் நூறுபேருக்கு அதிபதிகளையும் வைத்து, இருபது வயதுமுதற்கொண்டு அதற்கு மேற்பட்டவர்களை இலக்கம்பார்த்து, யுத்தத்திற்குப் புறப்படவும், ஈட்டியையும், கேடகத்தையும் பிடிக்கவுந்தக்க யுத்தவீரர் மூன்றுலட்சம் பேரென்று காண்கிறான் (2நாளா 25:5).

யோசபாத்தின் காலத்திலோ யுத்தம்பண்ணுகிறவர்களின் எண்ணிக்கை, இதைவிட நான்குமடங்கு அதிகமாயிருந்தது. யூதாதேசத்தாரின் பாவத்தினாலே, ஜனங்களும் பலவீனரானார்கள். யூதாதேசமும் பலவீனமாய்ப் போயிற்று. யூதாதேசத்தில் யுத்தவீரர்களின் எண்ணிக்கை குறைந்துபோயிற்று.

யூதாதேசத்திலே குறைந்துபோன யுத்தவீரர்களின் எண்ணிக்கையை சரிபண்ணுவதற்காக, அமத்சியா இஸ்ரவேலிலும் லட்சம் பராக்கிரமசாலிகளை நூறுதாலந்து வெள்ளி கொடுத்துக் கூலிக்கு அமர்த்துகிறான் (2நாளா 25:6).

அமத்சியா செய்த காரியம் கர்த்தருக்கு பிரியமாயில்லை. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை அமத்சியாவுக்கு விரோதமாக அனுப்புகிறார்.

தேவனுடைய மனுஷன் ஒருவன் அமத்சியாவினிடத்தில் வந்து: "ராஜாவே, இஸ்ரவேலின் சேனை உம்முடனே வரலாகாது; கர்த்தர் எப்பிராயீமின் சகல புத்திரராகிய இஸ்ரவேலோடும் இருக்கவில்லை" (2நாளா 25:7) என்றும்,

"போக மனதானால் நீர் போம், காரியத்தை நடத்தும்; யுத்தத்திற்குத் திடன்கொண்டு நில்லும்; தேவன் உம்மைச் சத்துருவுக்கு முன்பாக விழப்பண்ணுவார்; ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும்" (2நாளா 25:8) என்றும் சொல்லுகிறான்.

கர்த்தருடைய பிரசன்னம் தன்னோடும், தன்னுடைய சேனையோடும் கூடயிருக்கிறது என்னும் நிச்சயம் அமத்சியாவுக்கு இருக்கவேண்டும். கர்த்தர் நம்மோடு கூடயிருப்பதே நமக்குப்போதுமானது. கர்த்தர் நம்பட்சத்திலிருக்கும்போது, நமக்கு விரோதமாக எந்த சத்துருவாலும் யுத்தம்பண்ணி, நம்மை மேற்கொள்ள முடியாது.

ஆனால் அமத்சியாவுக்கோ கர்த்தர் தன்னோடு கூடயிருக்கிறாரா என்னும் நிச்சயமில்லை. அவன் இஸ்ரவேல் தேசத்திலே ஒரு லட்சம் பராக்கிரமசாலிகளை கூலிக்கு அமர்த்துகிறான். கர்த்தர் இஸ்ரவேலரோடும் இருக்கவில்லை. ஆகையினால் இஸ்ரவேலின் ஒரு லட்சம் மனுஷரும், சாதாரண யுத்தவீரராகயிருக்கிறார்களேயல்லாமல், அவர்கள் கர்த்தருடைய யுத்தவீரராயில்லை.

உலகப்பிரகாரமான பராக்கிரமசாலிகளுக்கும், கர்த்தருடைய பராக்கிரமசாலிகளுக்கும் வித்தியாசமுண்டு. அமத்சியா பராக்கிரமசாலிகளின் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். அவர்கள் கர்த்தருடைய பராக்கிரமசாலிகளா என்பதை கவனிக்க தவறிவிடுகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதிக்கவில்லை. அவர்கள் பொன்கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனவர்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகியிருக்கிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி அமத்சியாவிடம் கர்த்தர் சொன்ன வார்த்தைகளை சொல்லுகிறான். அமத்சியா ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவேண்டுமென்றால், அவன் இஸ்ரவேல் புத்திரரை கூட்டிக்கொண்டு போகாமல், யூதாதேசத்தாரோடு தனியாகப் போகவேண்டும். கர்த்தருடைய உதவி அமத்சியாவுக்கு கிடைக்கும். தேவனால் எல்லாம் கூடும்.

தீர்க்கதரிசி சொல்லுகிற வார்த்தைகள் அமத்சியாவுக்கு அதிர்ச்சியாயிருக்கிறது. அவன் கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்.

அப்பொழுது அமத்சியா, "அப்படியானால் நான் இஸ்ரவேலின் சேனைக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்யவேண்டியது என்ன" *(2நாளா 25:9)* என்று தேவனுடைய மனுஷனைக் கேட்கிறான்.

அமத்சியா இஸ்ரவேலிலே ஒரு லட்சம் பராக்கிரமசாலிகளை நூறுதாலந்து வெள்ளி கொடுத்து கூலிக்கு அமர்த்தியிருக்கிறான். அமத்சியா அவர்களை தன்னோடு யுத்தத்திற்கு கூட்டிக்கொண்டு போகாமல், அவர்களை சும்மா அனுப்பிவிட்டால், அவர்கள் நூறு தாலந்து வெள்ளியை அமத்சியாவுக்கு திரும்ப கொடுக்கமாட்டார்கள். அமத்சியாவுக்கு நூறு தாலந்து வெள்ளி நஷ்டம் ஏற்படும்.

இக்காலத்தில் அநேகர் அமத்சியாவைப்போலவே, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, லாபநஷ்ட கணக்குகளை பார்க்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய அப்படிப்பட்டவர்களுக்கு பணமும், உலகப்பிரகாரமான காரியங்களும் தடையாயிருக்கிறது. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை.

தேவனுடைய மனுஷன், அமத்சியாவை நோக்கி, "அதைப்பார்க்கிலும் அதிகமாய்க் கர்த்தர் உமக்கு கொடுக்கக்கூடும்" *(2நாளா 25:9)* என்று சொல்லுகிறான். "ஒத்தாசை செய்யவும், விழப்பண்ணவும் தேவனாலே கூடும்" என்று தேவனுடைய மனுஷன் அமத்சியாவுக்கு ஏற்கெனவே ஆலோசனை சொன்னவன்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அமத்சியா கர்த்தரை நம்பவேண்டும். அவரை மாத்திரம் சார்ந்துகொள்ளவேண்டும். அப்போது அமத்சியாவுக்கு நஷ்டம் ஏற்படாது. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு ஒருபோதும், நஷ்டமோ, வெட்கமோ, தோல்வியோ உண்டாகாது.

இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் அமத்சியாவோடு கூட வரவில்லையென்றால், அவன் அவர்களுக்கு கூலியாகக் கொடுத்த நூறு தாலந்து வெள்ளியை இழக்கவேண்டியது வரும். ஆனாலும் கர்த்தரால் அமத்சியாவுக்கு அதைவிட அதிகமாய் கொடுக்க முடியும்.

நாம் கர்த்தரை நம்பி, கர்த்தருக்காக எதையும் இழக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய நன்மையையும், அவருடைய கிருபையையும், இரக்கத்தையும், பாதுகாப்பையும், பராமரிப்பையும் சார்ந்துகொள்ளவேண்டும். நாம் கர்த்தரை நம்பும்போது, நமக்கு ஒரு இழப்பும் ஏற்படாது. நாம் கர்த்தருக்காக எதை இழந்தோமோ, அதைப்போல கர்த்தர் நமக்கு அதிகமாய்த் திரும்பக்கொடுப்பார்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவர் நல்லவர். அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடாதவர். அமத்சியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, எப்பிராயீமரில் தன்னிடத்துக்கு வந்த சேனையைத் தங்கள் வீட்டிற்குப் போய்விடப் பிரித்து விடுகிறான் *(2நாளா 25:10)*. அமத்சியா இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகளை தன்னோடுகூட, யுத்தத்திற்கு அழைத்துக்கொண்டு போகாமல் அவர்களை தங்களுடைய சொந்த தேசத்திற்கு திருப்பி அனுப்பிவிடுகிறான்.

இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் ஒரு லட்சம் பேருக்கும், யுத்தம்பண்ணாமலேயே நூறு தாலந்து வெள்ளி கூலியாகக் கிடைக்கிறது. ஆனாலும் அமத்சியா தங்களுக்கு செய்ததை இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் அவமானமாக நினைக்கிறார்கள். அதினால் அவர்களுக்கு யூதாவின்மேல் மிகுந்த கோபமூண்டு, உக்கிரமான எரிச்சலோடே தங்களிடத்திற்குத் திரும்பிப்போகிறார்கள் *(2நாளா 25:10)*.

அமத்சியாவுக்கு நூறு தாலந்து வெள்ளி நஷ்டமுண்டாயிற்று. அமத்சியாவின் பேரனாகிய யோதாம், பிற்காலத்தில் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். அவன் திரளான கொள்ளைப்பொருளை எருசலேமுக்கு கொண்டு வருகிறான். அமத்சியா நூறு தாலந்து வெள்ளியை இழந்தாலும், கர்த்தர் அவனுடைய சந்ததியில் வந்த யோதாமுக்கு அதைப் பார்க்கிலும் அதிகமாகக் கொடுக்கிறார்.

"யோதாம் அம்மோன் புத்திரருடைய ராஜாவோடு யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொள்கிறான்; ஆதலால் அம்மோன் புத்திரர் அவனுக்கு அந்த வருஷத்திலே நூறு தாலந்து வெள்ளியையும், பதினாயிரங்கலக் கோதுமையையும், பதினாயிரங்கல வாற்கோதுமையையும் கொடுக்கிறார்கள்; இரண்டாம் மூன்றாம் வருஷத்திலும் அம்மோன் புத்திரர் அப்படியே அவனுக்குச் செலுத்துகிறார்கள்" *(2நாளா 27:5)*.

அமத்சியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து எப்பிராயீமரில், தன்னிடத்திற்கு வந்த சேனையை தங்கள் வீட்டிற்குப்போய்விட பிரித்துவிடுகிறான். யூதாவின் சேனையிலே ஒரு லட்சம் பராக்கிரமசாலிகள் குறைந்துபோகிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய பெலன் அவர்களுக்கு கிடைக்கிறது.

அமத்சியாவோ திடன்கொண்டு, தன் ஜனத்தைக் கூட்டி, உப்புப் பள்ளத்தாக்குக்குக் போய், சேயீர் புத்திரரில் பதினாயிரம்பேரை வெட்டுகிறான். யூதா புத்திரர், பதினாயிரம்பேரை உயிரோடு பிடித்து, ஒரு கன்மலையுச்சியிலே கொண்டுபோய், அவர்களெல்லாரும் நொறுங்கிப்போகத்தக்கதாய் அந்தக் கன்மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிவிடுகிறார்கள் *(2நாளா 25:11,12)*.

அமத்சியா ஏதோமியரில் பத்தாயிரம் பேரை யுத்தக்களத்திலே பட்டயத்தால் வெட்டிக் கொன்றுபோடுகிறான். அவர்களில் மேலும் பத்தாயிரம்பேரை கன்மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிடுகிறான். அமத்சியாவுக்கு ஏதோமியர்மீது ஏன் இவ்வளவு கோபம் என்பதும், அவன் ஏதோமியரில் பத்தாயிரம் பேரை ஏன் கொடூரமாய் இப்படி கொன்றுபோட்டான் என்பதும் தெரியவில்லை.

தன்னோடுகூட யுத்தத்திற்கு வராதபடிக்கு, அமத்சியா திருப்பிவிட்ட யுத்த புருஷர், சமாரியா துவக்கிப் பெத்தொரோன்மட்டுமுள்ள யூதா பட்டணங்களின் மேல் விழுந்து, அவைகளில் மூவாயிரம் பேரை வெட்டி, திரளாய்க் கொள்ளையிடுகிறார்கள் *(2நாளா 25:13)*.

எப்பிராயீம் புத்திரரில் கூலிக்கு அமர்த்தினவர்களை, அமத்சியா யுத்தத்திற்கு அழைத்துவிட்டு, அவர்களை யுத்தத்தில் பயன்படுத்தாமல், அவர்களுடைய வீட்டிற்குத் திருப்பிவிடுகிறான். இதற்காக அவர்கள் யூதாவின்மேல் மிகுந்த கோபமூண்டு, உக்கிரமான எரிச்சலோடே தங்களிடத்திற்குத் திரும்பிப்போனார்கள். இவ்வாறு கோபத்தோடு திரும்பிப் போனவர்கள் சமாரியா துவக்கிப் பெத்தொரோன்மட்டுமுள்ள யூதா பட்டணங்களின் மேல் விழுந்து, அவைகளில் மூவாயிரம் பேரை வெட்டி, திரளாய்க் கொள்ளையிட்டார்கள். இதனால் அமத்சியாவிற்கும், வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும் மேலும் பிரச்சனை உருவாயிற்று. *(2நாளா 25:13-24)*.

இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள், அமத்சியாவோடுகூட, ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம் செய்திருந்தால், அவர்களுக்கும் கொள்ளையில் பங்கு கிடைத்திருக்கும். ஆனால் அவர்களுக்கு யுத்தம்பண்ணும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகையினால் கொள்ளையிலும் பங்கு இல்லை. இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள், அமத்சியாமீது கோபப்பட்டு, யூதா பட்டணங்கள்மேல் விழுந்து அவைகளைக் கொள்ளையிடுகிறார்கள்.

யூதாவின் எல்லையிலே ஏராளமான பட்டணங்கள் இருக்கிறது. இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் யூதாவின் பட்டணங்கள்மேல் விழுந்து, அவைகளைக் கொள்ளையிட்டு, யூதாவின் மனுஷரில் மூவாயிரம் பேரை வெட்டிக்கொன்று போடுகிறார்கள். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு கர்த்தர் அனுமதி கொடுக்கிறார். கர்த்தருடைய சித்தமில்லாமல் எதுவும் நடைபெறாது.

இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள் கொள்ளையிட்ட பட்டணங்களெல்லாம் சமாரியா துவக்கி, பெத்தொரோன் மட்டுமுள்ளது. இவையெல்லாம் யூதாதேசத்திலிருந்தாலும், சமாரியாவுக்கு அருகாமையிலிருக்கிறது. சமாரியாவில் விக்கிரகாராதனை அதிகம். யூதாவின் எல்லைப்பகுதியில் அமைந்திருக்கிற இந்த எல்லைப்பட்டணத்தார். ஒருவேளை, சமாரியரோடு சேர்ந்து விக்கிரகங்களை ஆராதித்திருக்கலாம். கர்த்தர் இவர்களை நியாயந்தீர்க்கும் வண்ணமாக, இவர்களில் மூவாயிரம்பேர் வெட்டப்பட்டு செத்துப்போயிருக்கலாம்.

அமத்சியாவின் பின்மாற்றம்
2நாளா 25:14-16

2நாளா 25:14. அமத்சியா ஏதோமியரை முறிய அடித்து, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்தபின்பு, அவன் அவைகளைத் தனக்கு தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டினான்.

2நாளா 25:15. அப்பொழுது, கர்த்தர் அமத்சியாவின்மேல் கோபமூண்டவராகி, அவனிடத்துக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார்; இவன் அவனை நோக்கி: தங்கள் ஜனத்தை உமது கைக்குத் தப்புவிக்காதேபோன ஜனத்தின் தெய்வங்களை நீர் நாடுவானேன் என்றான்.

2நாளா 25:16. தன்னோடே அவன் இப்படிப் பேசினபோது, ராஜா அவனை நோக்கி: உன்னைராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ? அதை விட்டுவிடு; நீ ஏன் வெட்டப்படவேண்டும் என்றான்; அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி அதை விட்டுவிட்டு: நீர் இப்படிச் செய்து, என் ஆலோசனையைக் கேளாமற்போனபடியினால், தேவன் உம்மை அழிக்க யோசனையாயிருக்கிறார் என்பதை அறிவேன் என்றான்.

அமத்சியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டு, ஏதோமியரின் தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறான். ஆகாஸ் அந்நிய தேசத்தாரிடம் தோற்றுப்போனான். அப்போது அந்த தெய்வங்களுக்கு அதிக பலமுண்டு என்று நம்பி, ஆகாஸ் அவைகளுக்கு பலியிட்டான்.

"எப்படியென்றால்: சீரியா ராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்குத் துணை செய்கிறபடியினால், அவர்கள் எனக்கும் துணைசெய்ய அவர்களுக்குப் பலியிடுவேன் என்று சொல்லி, தன்னை முறிய அடித்த தமஸ்குவின் தெய்வங்களுக்கு அவன் பலியிட்டான்; ஆனாலும் அது அவனும் இஸ்ரவேல் அனைத்தும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று" *(2நாளா 28:23).*

அமத்சியாவோ ஏதோமியரை முறிடியத்தான். ஏதோமியர் தோற்றுப்போனார்கள். ஏதோமியரின் தெய்வங்களால், அவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. ஆனால் அமத்சியாவோ தோற்றுப்போன ஏதோமியரின் தெய்வங்களை தன்னிடத்தில் கொண்டு வந்து, அவைகளுக்கு தூபங்காட்டுகிறான்.

அமத்சியா ஏதோமியரை முறிய அடித்து, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்தபின்பு, அவன் அவைகளைத் தனக்கு தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டுகிறான் *(2நாளா 25:14).*

அமத்சியா ஏதோமியர்மீது யுத்தம் செய்து ஜெயிக்கிறான். இதனால் அவனுடைய இருதயம் பெருமை கொள்கிறது. இந்தப் பெருமையில் அவன் வடக்கு ராஜ்யத்தின் ராஜாவான யோவாஸ்மீது யுத்தம் பண்ணப் போனான். *(2நாளா 25:17-24).* மேலும் ஏதோமியரின் தெய்வங்களையும் அமத்சியா யூதா தேசத்திற்கு கொண்டு வந்தான். அவைகளைத் தனக்கு தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டினான். இதனால் கர்த்தருடைய கோபம் அமத்சியாவிற்கு விரோதமாக எழும்பிற்று. யோவாஸ்மீது நடைபெற்ற யுத்தத்தில் கர்த்தர் அமத்சியாவைத் தோல்வியுறச் செய்தார். *(2நாளா 25:14-24).*

அமத்சியா ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, அவர்களில் பதினாயிரம்பேரை உயிரோடு பிடித்து, ஒரு கன்மலையுச்சியிலே கொண்டுபோய், அவர்களெல்லாரும் நொறுங்கிப்போகத் தக்கதாய் அந்தக் கன்மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டான் *(2நாளா 25:12).*

அமத்சியா ஏதோமியரை கொன்றுபோட்டதற்கு பதிலாக, ஏதோமியரின் தெய்வங்களை அழித்துப்போட்டிருக்க வேண்டும். அவன் கன்மலையின் உச்சியிலிருந்து, ஏதோமியரின் தெய்வங்களை கீழே தள்ளி உடைத்துப்போட்டிருக்க வேண்டும். ஆனால் அவனோ மதியீனமாக, ஏதோமியரின் தெய்வங்களை எருசலேமுக்கு கொண்டு வந்து, அவைகளுக்கு முன்பாக பணிந்து தூபங்காட்டுகிறான்.

அமத்சியா கர்த்தரைவிட்டுப் பிரிந்து, ஏதோமியரின் தெய்வங்களை பணிந்துகொள்கிறான். இதனால் கர்த்தருடைய கோபம் அவன்மீது மூளுகிறது. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை அமத்சியாவினிடத்திற்கு அனுப்புகிறார்.

கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசி அமத்சியாவை நோக்கி, "தங்கள் ஜனத்தை உமது கைக்குத் தப்புவிக்காதேபோன ஜனத்தின் தெய்வங்களை நீர் நாடுவானேன்" *(2நாளா 25:15)* என்று சொல்லுகிறான்.

அமத்சியா ஏதோமியரின் தெய்வங்களை யூதா தேசத்திற்குக் கொண்டு வந்து, அவைகளைப் பணிந்து கொள்கிறான். இதனால் கர்த்தர் அமத்சியாவின்மேல் கோபமூண்டவரானார். அவனைக் கடிந்து கொள்வதற்காக அவனிடத்துக்கு ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார். ஆனால் அமத்சியாவோ அந்தத் தீர்க்கதரிசியின்மீது கோபமூற்று, அவனைக் கொன்றுபோடுவதாகப் பயமுறுத்துகிறான். அமத்சியாவின் அழிவை அந்தத் தீர்க்கதரிசி முன்னறிவிக்கிறான். *(2நாளா 25:15-16)*.

அமத்சியாவோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு மனந்திரும்பவில்லை. அவன் தேவனுடைய சர்வவல்லமையைப் புரிந்துகொள்ளவில்லை. அமத்சியா ஏதோமியரின் தெய்வங்களுக்கு அடிமையாயிருக்கிறான். தன்னிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன தீர்க்கதரிசியின்மீது அமத்சியா கோபப்படுகிறான்.

தீர்க்கதரிசி தன்னோடே இப்படிப் பேசினபோது, ராஜா அவனை நோக்கி: "உன்னைராஜாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ? அதை விட்டுவிடு; நீ ஏன் வெட்டப்படவேண்டும்" *(2நாளா 25:16)* என்று சொல்லுகிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசி தன்னிடத்தில் இதற்குமேல் ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது என்று அவனைத் தடைபண்ணுகிறான்.

"இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்றும், ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ்சொல்லாமல், எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்றும், நீங்கள் வழியை விட்டு, பாதையினின்று விலகி, இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஓயப்பண்ணுங்கள் என்றும் சொல்லுகிறார்கள்" *(ஏசா 30:10,11)*.

அமத்சியாவின் தகப்பனாகிய யோவாஸ், தனக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்ன சகரியாவை, ஏற்கெனவே கல்லெறிந்து கொன்றுபோட்டவன். அமத்சியாவுக்கும், அமத்சியாவிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிற தீர்க்கதரிசிக்கும், செத்துப்போன சகரியாவின் சரித்திரம் நன்றாய்த் தெரியும். தன்னுடைய தகப்பன் காலத்தில் சகரியாவுக்கு நடைபெற்ற சம்பவத்தைப்போன்று, மற்றொரு சம்பவம், தன்னுடைய காலத்தில், கர்த்தருடைய தீர்க்கதரிசிக்கு நடைபெறக்கூடாது என்று அவனை எச்சரிக்கிறான். "நீ ஏன் வெட்டப்படவேண்டும்" என்று அமத்சியா தீர்க்கதரிசியிடம் கேட்கிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசியோ அமத்சியாவின் வார்த்தையைக் கேட்டு பயப்படவில்லை. அமத்சியாவின் பயமுறுத்தும் வார்த்தைகளுக்கு தீர்க்கதரிசி செவிகொடுக்கவில்லை. அமத்சியா சொன்ன வார்த்தைகளை தீர்க்கதரிசி அப்படியே விட்டுவிடுகிறான். தீர்க்கதரிசி ஏதோமியரின் தெய்வங்களைப்பற்றிப் பேசாமல் விட்டுவிடவேண்டும் என்று அமத்சியா சொல்லுகிறான்.

அப்பொழுது அந்தத் தீர்க்கதரிசி அதை விட்டுவிட்டு: "நீர் இப்படிச் செய்து, என் ஆலோசனையைக் கேளாமற்போனபடியினால், தேவன் உம்மை அழிக்க யோசனையாயிருக்கிறார் என்பதை அறிவேன்" *(2நாளா 25:16)* என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசி அமத்சியாவுக்கு நல்ல ஆலோசனைகளையும், உபதேசங்களையும், புத்திமதிகளையும் சொல்ல வந்தவன். ஆனால் இப்போது அவன் அமத்சியாவின்மீது சாபவார்த்தைகளையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும் சொல்லுகிறான்.

அமத்சியா ஆரம்பத்தில் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தவன். அவன் தன் ஜீவியத்தை ஆவியில் ஆரம்பித்தவன். இப்போதோ அமத்சியாவின் ஜீவியம் மாம்சத்தில் முடியப்போகிறது.

“அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்” (ஆதி 6:3).

கர்த்தர் அமத்சியாவோடு தொடர்ந்து விவாதம்பண்ணவில்லை. கர்த்தர் அவனுடைய மனதின் விருப்பத்திற்கு அவனை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அமத்சியா தன்னுடைய அழிவை தானே தேடிக்கொள்கிறான்.

அமத்சியாவின் அழிவு 2நாளா 25:17-28

2நாளா 25:17. பின்பு யூதாவின் ராஜாவாகிய அமத்சியா யோசனை பண்ணி, யெகூவின் குமாரனாகிய யோவாகாசின் புத்திரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜாவுக்கு: நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா என்று சொல்லியனுப்பினான்.

2நாளா 25:18. அதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு ஆள் அனுப்பி: லீபனோனிலுள்ள முட்செடியானது லீபனோனிலுள்ள கேதுருமரத்தை நோக்கி: நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ்செய்து கொடு என்று கேட்கச்சொல்லிற்று; ஆனாலும் லீபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகம் அந்த வழி போகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப்போட்டது.

2நாளா 25:19. நீ ஏதோமியரை அடித்தாய் என்று பெருமைபாராட்ட உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது; இப்போதும் நீ உன் வீட்டிலே இரு; நீயும் உன்னோடே யூதாவும்கூட விழும்படிக்கு, பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன் என்று சொல்லச்சொன்னான்.

2நாளா 25:20. ஆனாலும் அமத்சியா செவிகொடாதேபோனான்; அவர்கள் ஏதோமின் தெய்வங்களை நாடினதினிமித்தம் அவர்களை அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுக்கும்படிக்கு தேவனாலே இப்படி நடந்தது.

2நாளா 25:21. அப்படியே இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் வந்தான்; யூதாவிலிருக்கிற பெத்ஷிமேசிலே அவனும், அமத்சியா என்னும் யூதாவின் ராஜாவும் தங்கள் சமார்த்தியத்தைப் பார்த்தார்கள்.

2நாளா 25:22. யூதா இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்து, அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

2நாளா 25:23. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அகசியாவின் குமாரனாகிய யோவாசுக்குப் பிறந்த அமத்சியா என்னும் யூதாவின் ராஜாவைப் பெத்ஷிமேசிலே பிடித்து, அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்து, எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல்தொடங்கி மூலைவாசல்மட்டும் நானூறுமுழ நீளம் இடித்துப்போட்டு,

2நாளா 25:24. தேவனுடைய ஆலயத்தில் ஓபேத் ஏதோமின் வசத்திலே அகப்பட்ட சகல பொன்னையும், வெள்ளியையும், சகல பணிமுட்டுகளையும், ராஜாவின் அரமனை பொக்கிஷங்களையும், கிரியிருப்பவர்களையும், பிடித்துக்கொண்டு சமாரியாவுக்கு திரும்பிப்போனான்.

2நாளா 25:25. யோவாகாசின் குமாரனாகிய யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜா மரணமடைந்தபின்பு, யோவாசின் குமாரனாகிய அமத்சியா என்னும் யூதாவின் ராஜா பதினைந்து வருஷம் உயிரோடிருந்தான்.

2நாளா 25:26. அமத்சியாவின் ஆதியோடந்த நடபடியான மற்ற வர்த்தமானங்கள் யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

2நாளா 25:27. அமத்சியா கர்த்தரை விட்டுப் பின்வாங்கின காலமுதற் கொண்டு எருசலேமிலிருந்தவர்கள் அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டார்கள்; அதினிமித்தம் அவன் லாகீசுக்கு ஓடிப்போனான்; ஆனாலும் அவன் பிறகே லாகீசுக்கு மனுஷரை அனுப்பினார்கள்; அவர்கள் அங்கே அவனைக் கொன்றுபோட்டு,

2நாளா 25:28. குதிரைகள்மேல் அவனை எடுத்து வந்து, யூதாவின் நகரத்தில் அவன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணினார்கள் .

இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சம்பவம் 2இராஜா 14:8-20 ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அமத்சியா யூதாதேசத்தின்மீது ராஜாவாயிருக்கும்போது, வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே யோவாகாசின் புத்திரனாகிய யோவாஸ் என்பவன் ராஜாவாயிருக்கிறான்.

அமத்சியாவின் இருதயத்தில் தாழ்மையில்லை. அவன் பெருமை பிடித்தவன். யூதாவின் ராஜாவாகிய அமத்சியா யோசனைபண்ணி, யெகூவின் குமாரனாகிய யோவாகாசின் புத்திரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜாவுக்கு: "நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா" (2நாளா 25:17) என்று சொல்லியனுப்புகிறான்.

அமத்சியா இஸ்ரவேலின் ராஜாவுக்கு தன்னுடைய செய்தியை சொல்லியனுப்புவதற்கு முன்பாக, "ஆலோசனைபண்ணினான்" (2நாளா 25:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவன் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் ஆலோசனை பண்ணவில்லை. அமத்சியா யூதாவின் பிரபுக்களோடும், அவனுக்கு சிநேகமாயிருக்கிற துன்மார்க்கரோடும் ஆலோசனை பண்ணுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், அமத்சியாவுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறான். ஆனாலும் அமத்சியா செவிகொடாதேபோகிறான்; அமத்சியாவும், யூதாதேசத்தாரும் ஏதோமின் தெய்வங்களை நாடினதினிமித்தம் அவர்களை அவர்கள் சத்துருக்கள்கையில் ஒப்புக்கொடுக்கும்படிக்கு தேவனாலே இப்படி நடக்கிறது (2நாளா 25:20).

யூதாதேசத்திலே யோவாசின் குமாரன் அமத்சியா ராஜ்யபாரம்பண்ணும்போது, இஸ்ரவேல் தேசத்திலே யோவாகாசின் குமாரன், யோவாஸ் ராஜ்யபாரம் பண்ணுகிறான்.

தாவீது, சாலொமோன் ஆகியோருடைய காலங்களில் இஸ்ரவேல் தேசம், பிளவுபடாமல் சமஸ்த இஸ்ரவேல் தேசமாகயிருந்தது. அதன் பின்பு அந்த தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய் பிரிந்தது.

இஸ்ரவேலின் சரித்திரத்திலே, யூதாதேசமும், இஸ்ரவேல் தேசமும் ஒருவருக்கொருவர் விரோதமாக எழும்பி, யுத்தம் செய்துகொண்டார்கள். இதனால் அவர்கள் அநேக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தார்கள்.

ஆசாவின் காலத்திற்கு பின்பு, இஸ்ரவேல் தேசத்தின் ராஜகுடும்பத்தாருக்கும், யூதாதேசத்தின் ராஜகுடும்பத்தாருக்கும் சிநேகமுண்டாயிற்று. அவர்கள் சம்பந்தங்கலந்தார்கள். அவர்களுடைய சிநேகத்தினாலும், சம்பந்தத்தினாலும், இவ்விரண்டு தேசங்களுக்கும் ஏராளமான பிரச்சனைகளும், பாடுகளும் வேதனைகளையும் உண்டாயிற்று.

யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியாவின் காலத்திலே, யூதாதேசத்திற்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் பகை உண்டாயிற்று. அமத்சியா ஏதோமியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயம் பெறுகிறான். இதனால் அவனுக்கு பெருமை உண்டாயிற்று.

அமத்சியா யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கும்போது, யோவாஸ் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். அப்பொழுது அமத்சியா யெகூவின் குமாரனாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் என்னும் இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி: "நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா" (2இராஜா 14:8) என்று சொல்லச்சொல்லுகிறான்.

யோவாஸ் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. அவன் யூதாதேசத்தார் கோபப்படும்படியாக ஒன்றும் செய்யவுமில்லை. ஆனாலும் அமத்சியா யோவாசை தன்னோடு யுத்தம்பண்ண வருமாறு அழைக்கிறான். அமத்சியாவுக்கு ஏதோமியர்மீது ஜெயம் கிடைத்ததினால், அவன் இஸ்ரவேல் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

யூதாவின் ராஜாவாகிய அமத்சியா, இஸ்ரவேல் தேசத்தை யூதாவோடு இணைக்கவேண்டுமென்று நினைத்தானா அல்லது இஸ்ரவேல் தேசம் யூதாதேசத்திற்கு கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்று நினைத்தானா என்பது தெரியவில்லை. ஆனாலும் அமத்சியா, யோவாசிடம், "நம்முடைய சாமர்த்தியத்தை பார்ப்போம் வா" என்று சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுக்கு, யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண விருப்பமில்லை. இஸ்ரவேல் தேசம் அமைதியாகயிருக்கிறது. யோவாஸ் தன் தேசத்தின் அமைதியைக் காத்துக்கொள்ள விரும்புகிறான். ஒரு தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணினால் உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் உண்டாகும். இஸ்ரவேலின் ராஜா யுத்தத்திலே சேதப்பட விரும்பவில்லை.

யோவாஸ் அமத்சியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், யுத்தத்தை தவிர்த்துவிடவேண்டும் என்றும், அவனோடு சமாதானமாயிருக்கவேண்டும் என்றும் விரும்புகிறான். இதற்காக இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு, தன்னுடைய மனுஷரை சமாதான தூதுவராக அனுப்புகிறான்.

யூதாவின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில், "நம்முடைய சமார்த்தியத்தை பார்ப்போம் வா" என்று சொல்லச்சொன்னபோது, அதற்கு இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கு ஆள் அனுப்பி:

"லீபனோனிலுள்ள முட்செடியானது, லீபனோனிலுள்ள கேதுருமரத்தை நோக்கி, நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ் செய்துகொடு என்று சொல்லச்சொல்லிற்று; ஆனாலும் லீபனோனிலுள்ள ஒரு காட்டுமிருகம் அந்த வழி போகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப்போட்டது" (2இராஜா 14:9) என்றும்,

"நீ ஏதோமியரை முறிய அடித்ததினால் உன் இருதயம் உன்னைக் கர்வங்கொள்ளப்பண்ணினது; நீ பெருமைபாராட்டிக் கொண்டு உன் வீட்டிலே இரு; நீயும் உன்னோடேகூட யூதாவும் விழும்படிக்கு, பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன்" (2இராஜா 14:10) என்றும் சொல்லச்சொல்லுகிறான்.

யோவாஸ் அமத்சியாவின் பெருமையைக் கடிந்துகொள்கிறான். யுத்தம்பண்ணாமல் அமைதியாயிருக்குமாறு, யோவாஸ் அமத்சியாவுக்கு ஆலோசனை சொல்லுகிறான். தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுவதற்கு, யோவாஸ் ஒரு உவமையைச் சொல்லுகிறான். இந்த உவமையில் யூதாவின் ராஜாவாகிய அமத்சியா லீபனோனிலுள்ள முட்செடியாகவும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், லீபனோனிலுள்ள கேதுரு மரமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கேதுரு மரம் கெம்பீரமாய் வளரும். அது எல்லோருக்கும் பிரயோஜனமானது. முட்செடிக்கு ஒரு மதிப்பும் இல்லை. அது தீயிலே கருகி சாம்பலாகிவிடும். யூதாவின் ராஜாவாகிய அமத்சியா முட்டிசெடியைப்போல ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன். முட்செடி எரியும்போது ஆரவாரத்தோடு எரியும். ஆனாலும் அது சீக்கிரத்தில் அணைந்துபோகும். அமத்சியாவும் முட்செடியைப்போல ஆரவாரம்பண்ணுகிறான். ஆனால் அவனுடைய ஆரவாரம் நிலைத்திருக்காது. அது சீக்கிரத்தில் முடிந்துபோகும்.

முட்செடி கேதுரு மரத்தோடு சம்பந்தம்பண்ண விரும்புகிறது. ஆனால் கேதுரு மரத்திற்கு முட்செடியோடு சம்பந்தம்பண்ண விருப்பமில்லை. அப்போது ஒரு காட்டு மிருகம் முட்செடியை மிதித்துப்போடுகிறது. யோவாசின் இராணுவம் காட்டுமிருகத்திற்கு ஒப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அமத்சியாவை மிதித்து அழித்துப்போடுவார்கள்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுக்கு, யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவோடு சம்பந்தம்பண்ண விருப்பமில்லை. அமத்சியா தாவீதின் வீட்டைச் சேர்ந்தவன். ஆனாலும் தாவீதின் வீட்டாரிடத்தில், பூர்வகாலத்து மகிமை காணப்படவில்லை. அமத்சியாவோ தன்னுடைய பழைய பெருமையை நினைத்து, தன்னுடைய மனதிலே கர்வங்கொண்டிருக்கிறான். தன்னைக் குறித்து பெருமை பாராட்டுகிறான். அமத்சியா ஏதோமியரை முறியடித்ததினால் அவனுடைய கர்வமும், பெருமையும் அதிகரித்திருக்கிறது.

அமத்சியா யோவாசுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், அவன் தோற்றுப்போவான் என்று யோவாஸ் சொல்லுகிறான். காட்டு மிருகம் முட்செடியை மிதித்துப்போட்டதுபோல, இஸ்ரவேலின் சேனை, அமத்சியாவை மிதித்துப்போடும் என்று, யோவாஸ் தன்னுடைய உவமையின் மூலமாக அமத்சியாவை எச்சரிக்கிறான்.

தான் ஏதோமியரை முறியடித்ததினால், எல்லா தேசத்தாரையும் தன்னால் முறியடிக்க முடியும் என்று அமத்சியா தன்னுடைய இருதயத்தில் கர்வங்கொண்டிருக்கிறான். ஏதோமியரைப்போல எல்லா தேசத்தாரும் தோற்றுப்போகமாட்டார்கள். அமத்சியா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், இந்த யுத்தத்தில் அமத்சியா தோற்றுப்போவான். அவனோடேகூட யூதாதேசம் விழும் என்று யோவாஸ் சொல்லுகிறான்.

அமத்சியாவுக்கு போதும் என்கிற மனம் வேண்டும். ஏதோமியரை முறியடித்தது அமத்சியாவுக்கு கிடைத்திருக்கிற பெருமை. அவன் அந்த பெருமையில் திருப்தியடைந்து, மற்ற தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண முயற்சி பண்ணக்கூடாது. பேராசை பெருநஷ்டமாகிவிடும்.

யோவாசின் ஆலோசனைகளும், புத்திமதிகளும் அமத்சியாவின் செவிகளில் விழவில்லை. அமத்சியா யோவாசின் வார்த்தைகளுக்கு செவிகொடாமல் போகிறான். அவன் இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறான்.

ஆகையால் இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அமத்சியாவுக்கு விரோதமாக வருகிறான்; யூதாவிலுள்ள பெத்ஷிமேசிலே அவனும், யூதாவின் ராஜா அமத்சியாவும், தங்கள் சாமர்த்தியத்தைப் பார்க்கிறார்கள். அப்போது, யூதா ஜனங்கள் இஸ்ரவேலருக்கு முன்பாக முறிந்து அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போகிறார்கள் (2இராஜா 14:11,12).

யூதாவின் இராணுவத்தால், இஸ்ரவேலின் இராணுவத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியவில்லை. யூதா ஜனங்கள் இஸ்ரவேலருக்கு முன்பாக முறிந்து ஓடுகிறார்கள். அவர்கள் தோற்று ஓடிப்போகிறார்கள். யுத்தம் பெத்ஷிமேசில் நடைபெறுகிறது. யூதாவின் இராணுவத்தாரால், யுத்தக்களத்தில் நிற்கமுடியவில்லை. அவர்கள் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போகிறார்கள்.

யோவாஸ் பெத்ஷிமேசிலே அமத்சியாவைப் பிடிக்கிறான். அவனைக் கைதுபண்ணுகிறான். அதன் பின்பு இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசும், அவனுடைய இராணுவமும் எருசலேமுக்கு வந்து, எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல் தொடங்கி மூலைவாசல்மட்டும் நானூறு முழ நீளம் இடித்துப்போடுகிறார்கள் (2இராஜா 14:13).

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திலும், அமத்சியா ராஜாவுடைய அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட பொன் வெள்ளி யாவையும், சகல பணிமுட்டுகளையும், கிரியிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப்போகிறான் (2இராஜா 14:14).

எருசலேமைப் பாதுகாக்க அமத்சியாவின் இராணுவத்தார் ஒருவர்கூட அங்கே இல்லை. இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுக்கு எருசலேம் எதிர்ப்பாரில்லாமல் திறந்திருக்கிறது. யோவாஸ் எருசலேமைக் கொள்ளையிடுகிறான். எருசலேமினுடைய அலங்கத்தின் ஒரு பகுதியையும் இடித்துப்போடுகிறான். அமத்சியாவையும் யூதாதேசத்தாரை அவமானப்படுத்தும் வண்ணமாக, எருசலேமின் அலங்கம் நானூறு முழ நீளத்திற்கு இடிக்கப்படுகிறது. இடிக்கப்பட்ட அலங்கத்தின் வழியாக, இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ், தன்னுடைய இரதத்தில் கம்பீரமாய் பிரவேசிக்கிறான். இது யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவுக்கும், எருசலேம் நகரத்தாருக்கும் மிகப்பெரிய அவமானமாகும்.

அமத்சியாவுக்கு அவமானத்தோடு பேரிழப்பும் உண்டாயிற்று. யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்திலும், அமத்சியாவினுடைய அரண்மனையிலும் எல்லா பொக்கிஷங்களையும் எடுத்துக் கொண்டு, சமாரியாவுக்கு திரும்பிப்போகிறான்.

அமத்சியா யோவாசிடம், "நம்முடைய சமார்த்தியத்தைப் பார்ப்போம் வா" என்று சொல்லாமல், அமைதியாகயிருந்திருந்தால், அவனுக்கு இவ்வளவு பெரிய பேரிழப்பு ஏற்பட்டிருக்காது. யோவாசின் ஆலோசனைகளைக் கேட்டு, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், எருசலேமிலேயே தங்கியிருந்தால், அமத்சியாவுக்கு இவ்வளவு பெரிய அவமானம் ஏற்பட்டிருக்காது.

யோவாஸ் சொன்ன பிரகாரமாக அமத்சியாவும், தன்னோடேகூட யூதாவும் விழும்படிக்கு பொல்லாப்பைத் தேடிக்கொள்கிறான் (2இராஜா 14:10).

யோவாஸ் செய்த மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய வல்லமையும், அவன் யூதாவின் ராஜாவாகிய அமத்சியாவோடு யுத்தம்பண்ணின விதமும், இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (2இராஜா 14:15).

யோவாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், சமாரியாவில் இஸ்ரவேலின் ராஜாக்களண்டையிலே அடக்கம் பண்ணப்படுகிறான்; அவன் குமாரனாகிய யெரொபெயாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 14:16).

இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாஸ் மரணமடைந்தபின், யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா பதினைந்துவருஷம் உயிரோடிருக்கிறான். அமத்சியாவின் மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (2இராஜா 14:17,18).

அமத்சியாவின் வீண்பெருமையினால் எருசலேம் நகரத்திற்கு பேரழிவு உண்டாயிற்று. எருசலேமின் அலங்கமும் நானூறு முழ நீளம் இடிக்கப்பட்டிருக்கிறது. இது எருசலேம் நகரத்தாருக்கு பெருத்த அவமானமாயிருக்கிறது. இதனால் எருசலேமின் மனுஷர் அமத்சியாவுக்கு விரோதமாக கட்டுப்பாடு பண்ணுகிறார்கள்; அப்பொழுது அமத்சியா லாகீசுக்கு ஓடிப்போகிறான்; ஆனாலும் அவர்கள் அமத்சியாவின் பிறகே லாகீசுக்கு மனுஷரை அனுப்பி, அங்கே அவனைக் கொன்றுபோடுகிறார்கள் (2இராஜா 14:19).

அமத்சியா யூதாதேசத்தின் ராஜா. அவனை எருசலேமின் மனுஷர் லாகீசிலே கொன்றுபோட்டாலும், அவனுடைய பிரேதத்தை அங்கேயே விட்டுவிடவில்லை. அவர்கள் அமத்சியாவின் பிரேதத்தை குதிரைகள்மேல் ஏற்றி எருசலேமுக்கு எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அமத்சியா எருசலேமில் இருக்கிற தாவீதின் நகரத்திலே தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்படுகிறான் (2இராஜா 14:20).

யூதா ஜனங்கள் யாவரும் பதினாறு வயதுள்ள அசரியாவை அழைத்துவந்து அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக்குகிறார்கள் (2இராஜா 14:21). நாளாகமம் புஸ்தகத்தில் "அசரியா" என்னும் பெயர் "உசியா" என்று சொல்லப்படுகிறது. அமத்சியா மரிக்கும்போது அசரியாவுக்கு நான்கு வயதுதான் ஆயிற்று என்றும், அமத்சியா மரித்து பன்னிரண்டு வருஷங்களுக்கு பின்பு, யூதாஜனங்கள் அவனை ராஜாவாக்குகிறார்கள் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

அமத்சியா மரித்துப்போனபின்பு, யூதாதேசத்தை மூப்பர்களும், பிரதானிகளும் பன்னிரண்டு வருஷங்களாக ஆளுகை செய்கிறார்கள். அசரியா ராஜாவாகிறபோது பதினாறு வயதாயிருக்கிறான். அவன் ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே அரசாளுகிறான். எருசலேம் நகரத்தாளான அவன் தாயின் பெயர் எக்கோலியாள் (2இராஜா 15:2).

அசரியா யூதாதேசத்திலே அநேக வருஷங்களாக ஆட்சி செய்தாலும் அவன் அந்த தேசத்தில் விசேஷமாய் ஒன்றும் செய்யவில்லை. அசரியா ஏலாவைக் கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக் கொள்கிறான். ஏலா இதுவரையிலும் ஏதோமியர் வசமாயிருந்தது (2இராஜா 14:22). அசரியாவின் வர்த்தமானங்களைப்பற்றி வேதவாக்கியங்களில் விரிவாக எழுதப்படவில்லை.

26 அதிகாரம்

உசியாவின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 2இராஜா 14:21; 15:1-7 ஆகிய வசனப்பகுதியில் இவனுடைய பெயர் அசரியா என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உசியா ராஜாவின் பொதுவான நற்குணங்கள் *(2நாளா 26:1-5).* உசியாவுக்கு அநேக யுத்தங்களில் வெற்றி கிடைக்கிறது. அவன் ஏராளமான கட்டிடங்களைக் கட்டுகிறான். உசியாவின் காலத்தில் யூதாதேசம் செழித்திருக்கிறது *(2நாளா 26:6-15).*

உசியாவின் மனம் மேட்டிமையாகி அவனுக்கு கேடுண்டாகிறது. உசியா கர்த்தருக்கு தூபங்காட்டுகிறான். இது ஆசாரியரின் ஊழியம். ஆசாரியர் செய்ய வேண்டிய ஊழியத்தை, உசியா துணிகரமாகவும், மனமேட்டிமையாகவும் செய்து பாவம் செய்கிறான். இதனால் அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றுகிறது *(2நாளா 26:16-21).* உசியாவின் மரணம் *(2நாளா 26:22,23).*

உசியாவின் ராஜ்யபாரம் 2நாளா 26:1-15

2நாளா 26:1. அப்பொழுது யூதா ஜனங்கள் எல்லாரும் பதினாறு வயதான உசியாவை அழைத்துவந்து, அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள்.

2நாளா 26:2. ராஜா தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, இவன் ஏலோதைக் கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக் கொண்டான்.

2நாளா 26:3. உசியா ராஜாவாகிறபோது, பதினாறு வயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; எருசலேம் நகரத்தாளான அவன் தாயின்பேர் எக்கோலியாள்.

2நாளா 26:4. அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து,

2நாளா 26:5. தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்.

2நாளா 26:6. அவன் புறப்பட்டுப்போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, காத்தின் அலங்கத்தையும், யப்னேயின் அலங்கத்தையும், அஸ்தோத்தின் அலங்கத்தையும் இடித்துப்போட்டு, அஸ்தோத் நாட்டிலும் பெலிஸ்தருக்குள்ளும் பட்டணங்களைக் கட்டினான்;

2நாளா 26:7. பெலிஸ்தரையும் கூர்பாகாலிலே குடியிருக்கிற அரபியரையும் மெகுனியரையும் வெல்ல, தேவன் அவனுக்குத் துணைநின்றார்.

2நாளா 26:8. அம்மோனியர் உசியாவுக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்; அவனுடைய கீர்த்தி எகிப்தின் எல்லைமட்டும் எட்டினது; அவன் மிகவும் பெலங்கொண்டான்.

2நாளா 26:9. உசியா எருசலேமிலே மூலைவாசல் மேலும், பள்ளத்தாக்கு வாசல்மேலும், அலங்கத்துக் கோடிகள்மேலும் கோபுரங்களைக் கட்டி அவைகளைப் பலப்படுத்தினான்.

2நாளா 26:10. அவனுக்குப் பள்ளத்தாக்கிலும் சம பூமியிலும் அநேகம் ஆடுமாடுகளும், மலைகளிலேயும், வயல்வெளியிலேயும் பயிர்க்குடிகளும், திராட்சத் தோட்டக்காரரும் உண்டாயிருந்த படியினால், அவன் வனாந்தரத்திலே கோபுரங்களைக் கட்டி, அநேக துரவுகளை வெட்டினான்; அவன் வெள்ளாண்மைப் பிரியனாயிருந்தான்.

2நாளா 26:11. உசியாவுக்கு யுத்தவீரரின் சேனையும் இருந்தது; அது சம்பிரதியாகிய ஏயெலினாலும் ஆதிக்கக்காரனாகிய மாசேயாவினாலும் இலக்கம்பார்க்கப்பட்டபடியே, ராஜாவின் பிரபுக்களில் ஒருவனாகிய அனனியாவின் கீழ் வகுப்பு வகுப்பாய்ச் சேவகம்பண்ணப் புறப்பட்டது.

2நாளா 26:12. பராக்கிரமசாலிகளான வம்சத்தலைவரின் தொகையெல்லாம் இரண்டாயிரத்து அறுநூறு.

2நாளா 26:13. இவர்கள் கையின்கீழ்ச் சத்துருக்களுக்கு விரோதமாக ராஜாவுக்குத் துணை நிற்க, பராக்கிரமத்தோடே யுத்தம் பண்ணுகிற மூன்றுலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூறுபேரான சேனை இருந்தது.

2நாளா 26:14. இந்தச் சேனையிலுள்ளவருக்கெல்லாம் உசியா கேடகங்களையும், ஈட்டிகளையும், தலைச்சீராக்களையும், மார்க்கவசங்களையும், வில்லுகளையும், கல்லெறிகிற கவண்களையும் ஆயத்தப்படுத்தினான்.

2நாளா 26:15. கோபுரங்கள்மேலும் அலங்கக்கோடிகள்மேலும் நின்று அம்புகளையும் பெரிய கற்களையும் பிரயோகிக்கிறதற்கு நிபுணரான தொழிலாளிகள் கற்பித்த யந்திரங்களையும் அவன் எருசலேமில் உண்டாக்கினான்; அப்படியே அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று; அவன் பலப்படுமட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று.

யூதா ஜனங்கள் எல்லாரும் பதினாறு வயதான உசியாவை அழைத்துவந்து, அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்திலே ராஜாவாக்குகிறார்கள் (2நாளா 26:1).

இராஜாக்கள் புஸ்தகத்தில் உசியாவின் பெயர் அசரியா என்று சொல்லப்பட்டிருக்கிறது. யூதா ஜனங்கள் யாவரும் பதினாறு வயதுள்ள அசரியாவை அழைத்துவந்து அவனை அவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக்குகிறார்கள் (2இராஜா 14:21). அமத்சியா மரிக்கும்போது அசரியாவுக்கு நான்கு வயதுதான் ஆயிற்று என்றும், அமத்சியா மரித்து பன்னிரண்டு வருஷங்களுக்கு பின்பு, யூதாஜனங்கள் அவனை ராஜாவாக்குகிறார்கள் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

அமத்சியா மரித்துப்போனபின்பு, யூதாதேசத்தை மூப்பர்களும், பிரதானிகளும் பன்னிரண்டு வருஷங்களாக ஆளுகை செய்கிறார்கள். அசரியா ராஜாவாகிறபோது பதினாறு வயதாயிருக்கிறான். அவன் ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே அரசாளுகிறான். எருசலேம் நகரத்தாளான அவன் தாயின் பெயர் எக்கோலியாள் (2இராஜா 15:2).

அசரியா யூதாதேசத்திலே அநேக வருஷங்களாக ஆட்சி செய்தாலும் அவன் அந்த தேசத்தில் விசேஷமாய் ஒன்றும் செய்யவில்லை. அசரியா ஏலாவைக் கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக் கொள்கிறான். ஏலா இதுவரையிலும் ஏதோமியர் வசமாயிருந்தது (2இராஜா 14:22). அசரியாவின் வர்த்தமானங்களைப்பற்றி வேதவாக்கியங்களில் விரிவாக எழுதப்படவில்லை.

உசியா ராஜாவாகிறபோது, பதினாறு வயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; எருசலேம் நகரத்தாளான அவன் தாயின்பேர் எக்கோலியாள். உசியா கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறான். கர்த்தர் உசியாவை ஆசீர்வதிக்கிறார் (2நாளா 26:3).

உசியா தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான். அவன் தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருக்கிறான்; உசியா கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்கிறார் *(2நாளா 26:4,5)*.

உசியாவின் காலத்தில், யூதாதேசத்திலே ஆவிக்குரிய காரியங்கள் சீராகயிருக்கிறது. ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தரை ஆராதிக்கிறார்கள். தேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாய்க் காணப்படவில்லை. அமத்சியா தன்னுடைய ஜீவியத்தின் பின்பகுதியில், ஏதோமியரின் விக்கிரகங்களை ஆராதித்தான். உசியா தன் தகப்பனைப்போல விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை.

"தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே உசியா தேவனைத் தேட மனதிணங்கியிருக்கிறான்" *(2நாளா 26:5)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. யோவாஸ் உசியாவின் தாத்தா. யோவாசின் காலத்தில் சகரியா என்னும் தீர்க்கதரிசியிருந்தான். யோவாஸ் அந்த சகரியாவை கல்லெறிந்து கொன்றுபோட்டான். உசியாவின் காலத்திலிருக்கிற சகரியா என்பவன், யோவாசின் காலத்திலிருந்த தீர்க்கதரிசியாகிய சகரியாவின் குமாரன் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

உசியாவின் நாட்களிலே இருந்த சகரியா என்பவன், தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருக்கிறான். அவனுக்கு உசியாவினிடத்திலும், ராஜாங்க காரியங்களிலும் அதிகமான செல்வாக்கு இருக்கிறது. உசியா கர்த்தரைத் தேடிய நாட்களில், தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்கிறார்.

கர்த்தர் உசியாவையும், யூதாதேசத்தையும் ஆசீர்வதிக்கிறார். உசியாவின் காலத்தில், யூதாதேசத்தில் நடைபெற்ற முக்கியமான காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அமத்சியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, உசியா ஏலோதைக் கட்டி, அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக் கொள்கிறான் *(2நாளா 26:2)*.

உசியா புறப்பட்டுப்போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, காத்தின் அலங்கத்தையும், யப்னேயின் அலங்கத்தையும், அஸ்தோத்தின் அலங்கத்தையும் இடித்துப்போட்டு, அஸ்தோத் நாட்டிலும் பெலிஸ்தருக்குள்ளும் பட்டணங்களைக் கட்டுகிறான் *(2நாளா 26:6)*.

உசியா சிறந்த யுத்தவீரனாக இருக்கிறான். பெலிஸ்தர், அரபியர், அம்மோன் புத்திரர் ஆகியோர்மீது யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கிறான். *(2நாளா 26:7-8)* இவர்கள் எல்லோரும் யோராமின் நாட்களில் யூதாவுக்கு எதிராகக் கலகம் பண்ணினவர்கள். *(2நாளா 21:8-17)*.

பெலிஸ்தரையும் கூர்பாகாலிலே குடியிருக்கிற அரபியரையும் மெகுனியரையும் வெல்ல, தேவன் உசியாவுக்குத் துணைநிற்கிறார். அம்மோனியர் உசியாவுக்குக் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள்; அவனுடைய கீர்த்தி எகிப்தின் எல்லைமட்டும் எட்டுகிறது; உசியா மிகவும் பெலங்கொள்கிறான் *(2நாளா 26:7,8)*.

உசியா அந்நியதேசத்தாரோடு யுத்தம்பண்ணுகிறான். அதே வேளையில் யூதாதேசத்தையும், எருசலேம் நகரத்தையும் பலப்படுத்துகிறான். அவன் எருசலேமிலே மூலைவாசல் மேலும், பள்ளத்தாக்கு வாசல்மேலும், அலங்கத்துக் கோடிகள்மேலும் கோபுரங்களைக் கட்டி அவைகளைப் பலப்படுத்துகிறான் *(2நாளா 26:9)*.

உசியாவின் தகப்பனாகிய அமத்சியாவின் காலத்திலே, எருசலேமினுடைய அலங்கத்தின் பெரும்பகுதி பாழாய்ப்போயிற்று. எருசலேமிலே இடிந்துபோன அலங்கங்களையெல்லாம் உசியா திரும்ப கட்டி, அவைகளிலே கோபுரங்களையும் கட்டுகிறான். எருசலேமின் அலங்கங்களை உசியா மறுபடியும் பலப்படுத்துகிறான்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அகசியாவின் குமாரனாகிய யோவாசுக்குப் பிறந்த அமத்சியா என்னும் யூதாவின் ராஜாவைப் பெத்ஷிமேசிலே பிடித்து, அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்து, எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசல்தொடங்கி மூலைவாசல்மட்டும் நானூறுமுழ நீளம் இடித்துப்போட்டு, தேவனுடைய ஆலயத்தில் ஓபேத் ஏதோமின் வசத்திலே அகப்பட்ட சகல பொன்னையும், வெள்ளியையும், சகல பணிமுட்டுகளையும், ராஜாவின் அரமனை பொக்கிஷங்களையும், கிரியிருப்பவர்களையும், பிடித்துக்கொண்டு சமாரியாவுக்கு திரும்பிப்போனான்" *(2நாளா 25:23,24).*

உசியாவுக்கு ஏராளமான ஆடு மாடுகளும், வயல்வெளியும் இருக்கிறது. அவனுக்குப் பள்ளத்தாக்கிலும் சம பூமியிலும் அநேகம் ஆடுமாடுகளும், மலைகளிலேயும், வயல்வெளியிலேயும் பயிர்க்குடிகளும், திராட்சத்தோட்டக்காரரும் உண்டாயிருக்கிறது ஆனபடியினால், அவன் வனாந்தரத்திலே கோபுரங்களைக் கட்டுகிறான். அநேக துரவுகளை வெட்டுகிறான்; அவன் வெள்ளாண்மைப் பிரியனாயிருக்கிறான் *(2நாளா 26:10).*

உசியா அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணுகிறான். அதே வேளையில் அவன் யூதாதேசத்தின் சேனையையும் பலப்படுத்துகிறான். உசியா தன்னுடைய சேனையை இரண்டு பிரிவாகப் பிரிக்கிறான். அவனுடைய சேனையின் ஒரு பிரிவு அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணப்போவார்கள். மற்றொரு பிரிவு யூதாதேசத்தை சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பார்கள்.

உசியாவுக்கு யுத்தவீரரின் சேனையும் இருக்கிறது; அது சம்பிரதியாகிய ஏயெலினாலும் ஆதிக்கக்காரனாகிய மாசேயாவினாலும் இலக்கம் பார்க்கப்பட்டபடியே, ராஜாவின் பிரபுக்களில் ஒருவனாகிய அனனியாவின் கீழ் வகுப்பு வகுப்பாய்ச் சேவகம்பண்ணப் புறப்படுகிறது *(2நாளா 26:11).*

பராக்கிரமசாலிகளான வம்சத்தலைவரின் தொகையெல்லாம் இரண்டாயிரத்து அறுநூறு. இவர்கள் கையின்கீழ்ச் சத்துருக்களுக்கு விரோதமாக ராஜாவுக்குத் துணை நிற்க, பராக்கிரமத்தோடே யுத்தம் பண்ணுகிற மூன்றுலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூறுபேரான சேனை இருக்கிறது *(2நாளா 26:12,13).*

உசியா தன்னுடைய சேனையிலுள்ளவர்களுக்கு ஏராளமான ஆயுதங்களை செய்து கொடுக்கிறான். தன்னுடைய சேனையிலுள்ளவருக்கெல்லாம் உசியா கேடகங்களையும், ஈட்டிகளையும், தலைச்சீராக்களையும், மார்க்கவசங்களையும், வில்லுகளையும், கல்லெறிகிற கவண்களையும் ஆயத்தப்படுத்துகிறான் *(2நாளா 26:14).* உசியாவின் சேனையிலுள்ள ஒவ்வொரு யுத்தவீரனுக்கும், ஏதாவது ஒரு ஆயுதம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

உசியா புதிய யுத்தஆயுதங்களையும் கண்டுபிடிக்கிறான். இதற்காக இவனுடைய சேனையிலே நிபுணரான தொழிலாளிகள் இருக்கிறார்கள். கோபுரங்கள்மேலும் அலங்கக்கோடிகள்மேலும் நின்று அம்புகளையும் பெரிய கற்களையும் பிரயோகிக்கிறதற்கு நிபுணரான தொழிலாளிகள் கற்பித்த யந்திரங்களையும் அவன் எருசலேமில் உண்டாக்குகிறான் *(2நாளா 26:15).*

உசியாவின் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று; அவன் பலப்படுமட்டும் ஆச்சரியமாய் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று. அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்கிறான் *(2நாளா 26:15,16).*

உசியாவின் மீறுதல்
2நாளா 26:16-18

2நாளா 26:16. அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாகி, தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான்.

2நாளா 26:17. ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து,

2நாளா 26:18. ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்து நின்று: உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்; பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள்.

இதுவரையிலும் உசியாவைப்பற்றி நல்ல வார்த்தைகளே சொல்லப்பட்டிருக்கிறது. உசியா ராஜாவாகிறபோது, பதினாறு வயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான். அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்கிறார் *(2நாளா 26:3-5).*

தன்னை நிற்கிறவன் என்று நினைக்கிறவன், விழாதிருக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டும். கர்த்தர் உசியாவை அதிகமாய் ஆசீர்வதிக்கிறார். அவன் காரியங்களை வாய்க்கச் செய்கிறார். அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று. அவனுடைய காரியங்களிலெல்லாம் அநுகூலமுண்டாயிற்று. ஆனாலும் அவன் பலப்பட்டபோது, அவனுடைய மனதில் மேட்டிமை உண்டாயிற்று.

கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை கொடுக்கிறார். அவர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். உசியாவின் மனம் மேட்டிமையானதினால், அவனுக்கு கேடுண்டாயிற்று. உசியா தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்கிறான். அவன் தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறான் *(2நாளா 26:16).*

உசியாவின் ஜீவியத்தில் வெற்றியும், ஐசுவரியமும், வலிமையும் அதிகரித்தது. அவன் கர்த்தரால் பலப்பட்டான். ஆனால் அவன் பலப்பட்டபோது, தனக்குக் கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாயிற்று. அவன் தன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்தான். தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் தானே பிரவேசித்தான்.

ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேக் கூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும் உசியாவின் இந்தச் செய்கைக்காக அவனோடு எதிர்த்து நின்றார்கள்.

உசியாவோ கர்த்தருக்குப் பயந்து அவருடைய பிரமாணங்களைக் கைக் கொள்வதற்குப் பதிலாக ஆசாரியர்மீது கோபங்கொண்டான். இதனால் கர்த்தர் அவனை வாதித்தார். அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று. சாகும்வரையிலும் அவன் ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணினான். *(2நாளா 26:17-21).*

கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர் மாத்திரமே தூபங்காட்டுவதற்கு பிரவேசிக்கவேண்டும். இது மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற கட்டளை. ஆனால் உசியாவோ கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்கிறான். அவன் தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறான்.

உசியாவின் முன்னோர்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆராதனையை அசட்டைபண்ணினார்கள். வேறு சிலரோ விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள்.

"அப்படியே அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தை விட்டுவிட்டு, தோப்பு விக்கிரகங்களையும் சிலைகளையும் சேவித்தார்கள்; அப்பொழுது அவர்கள் செய்த இந்தக் குற்றத்தினிமித்தம் யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் கடுங்கோபம் மூண்டது" *(2நாளா 24:18).*

"அமத்சியா ஏதோமியரை முறிய அடித்து, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்தபின்பு, அவன் அவைகளைத் தனக்கு தெய்வங்களாக வைத்து, அவைகளுக்கு முன்பாகப் பணிந்து அவைகளுக்குத் தூபங்காட்டினான்" *(2நாளா 25:14).*

கர்த்தர் உசியாவுக்கு ஒரு சில பொறுப்புக்களைக் கொடுத்திருக்கிறார். உசியாவோ கர்த்தர் தனக்கு கொடுக்காத வேலையில் தலையிடுகிறான். கர்த்தர் நமக்கு அனுமதிக்கும் காரியங்களை மாத்திரமே நாம் செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு அனுமதிக்காத காரியங்களில் நாம் தலையிடக்கூடாது. உசியாவின் பாவத்திற்கு அவனுடைய மனம்மேட்டிமையானதே காரணம்.

கர்த்தர் இதுவரையிலும் உசியாவை ஆசீர்வதித்திருக்கிறார். அவன் பலப்படும் மட்டும் அவனுக்கு அநுகூலமுண்டாயிற்று. அவனுக்கு ஏராளமான ஐசுவரியமும், பெலமும் சேர்ந்தது. இவையெல்லாமே கர்த்தருடைய கிருபையினால் அவனுக்கு உண்டாயிற்று. தான் பலப்பட்டபோது, உசியா கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவேண்டும். ஆனால் உசியாவோ, பலப்பட்டபோது, அவன் தனக்கு கேடுண்டாகுமட்டும், அவனுடைய மனம் மேட்டிமையாயிற்று.

உசியா தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறான். ஒருவேளை தனக்கு தேவனுடைய உதவியும் ஒத்தாசையும், அநுக்கிரகமும் வேண்டுமென்று நினைத்து, உசியாவே பலிபீடத்தின்மேல் தூபங்காட்ட, கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்திருக்கலாம்.

கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தூபபீடத்தின்மேல் தூபங்காட்டவேண்டும். ஒருவேளை ஆசாரியர்கள், தூபங்காட்டும் ஊழியத்தை பயபக்தியோடு செய்யாமல், அதை அசட்டை செய்திருக்கலாம். ஆசாரியர்களைவிட, தன்னால் கர்த்தருடைய ஊழியத்தை நல்ல முறையில் செய்ய முடியும் என்று உசியா நினைத்திருக்கலாம்.

விக்கிரகங்களை ஆராதிக்கிற ராஜாக்கள், தங்கள் தெய்வங்களுக்கு முன்பாக தூபங்காட்டுவார்கள். உசியாவின் தகப்பனாகிய அமத்சியா ஏதோமியரின் தெய்வங்களுக்கு தூபங்காட்டினான். அவன் விக்கிரகங்களுக்கு செய்ததைப்போல, தான் கர்த்தருக்கு செய்யலாம் என்று உசியா நினைத்திருக்கலாம். அமத்சியாவைப்போலவே யெரொபெயாமும் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினான்.

"யெரொபெயாம் தூபங்காட்ட பலிபீடத்தண்டையிலே நிற்கையில், இதோ, தேவனுடைய மனுஷன் ஒருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே, யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்தான்" (1இராஜா 13:1).

கர்த்தருடைய பலிபீடத்திற்கு அருகாமையில் வந்துவிட்டால், கர்த்தருக்கு அருகாமையில் வந்துவிடலாம் என்று உசியா நினைக்கிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிற ராஜாக்கள், விக்கிரகங்களின் பலிபீடத்திற்கு அருகாமையில் வருவார்கள். அவர்கள் இதை தங்களுக்கு பெருமையாகவும், உயர்வாகவும் நினைப்பார்கள். ஆனால் தூபங்காட்டுவதற்கு கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிப்பது, கர்த்தருக்கு விரோதமாக மீறுகிற செயல்.

உசியா தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிறான். அப்பொழுது, ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசிக்கிறார்கள். அவர்கள் ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்து நிற்கிறார்கள் (2நாளா 26:17).

ஆசாரியனாகிய அசரியா தன்னோடுகூட எண்பது ஆசாரியரை ஆலயத்திற்குள் உசியாவுக்கு முன்பாக கூட்டிக்கொண்டு வருகிறான். அந்த எண்பது ஆசாரியரும் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். இவர்கள் ராஜாவின் கட்டளைப் பிரகாரம், தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால் உசியா ராஜாவோ, ஆசாரியர்கள் செய்ய வேண்டிய பணிவிடையை, தானே செய்கிறான். இது கர்த்தருக்கு விரோதமாக மீறுகிற செயல்.

ஆசாரியர்கள் உசியாவை நோக்கி, "உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்; பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது" (2நாளா 26:18) என்று சொல்லுகிறார்கள்.

ஆசாரியர்கள் எண்பது பேரும் உசியா ராஜாவுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அவர்கள் ராஜாவிடம் விவாதம்பண்ணுகிறார்கள். "உசியாவே, கர்த்தருக்கு தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல" என்று துணிந்து சொல்லுகிறார்கள். எண்பது ஆசாரியர்களும் பராக்கிரமசாலிகள். அவர்கள் உசியா ராஜாவுக்கு பயப்படவில்லை.

கர்த்தருடைய தூபபீடத்தின்மேல் தூபங்காட்டுவது ஆரோனுடைய குமாரருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியம். இது கர்த்தருக்கு பரிசுத்தமான ஊழியம். இந்த ஊழியத்தை செய்வதற்கு ஆரோனுடைய குமாரர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் கர்த்தருக்கு தூபங்காட்டுகிற ஊழியத்தை மிகுந்த பரிசுத்தத்தோடு செய்யவேண்டும்.

"ஆரோன் காலைதோறும் அதின்மேல் சுகந்த தூபங்காட்ட வேண்டும்; மாலையில் விளக்கேற்றும்போதும் அதின்மேல் தூபங்காட்டக்கடவன்; விளக்குகளை விளக்கும்போதும் அதின்மேல் தூபங்காட்டவேண்டும்" (யாத் 30:7).

"அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்" (உபா 33:10).

"அம்ராமின் குமாரர், ஆரோன், மோசே என்பவர்கள்; ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்தை என்றைக்கும் பரிசுத்தமாய்க் காக்கிறதற்கும், என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக தூபங்காட்டுகிறதற்கும், அவருக்கு ஆராதனை செய்கிறதற்கும், அவர் நாமத்திலே ஆசீர்வாதம் கொடுக்கிறதற்கும் பிரித்துவைக்கப்பட்டார்கள்" (1நாளா 23:13).

தாவீது கர்த்தருடைய ஆலயத்திலே இஸ்ரவேல் ஜனத்தாரை ஆசீர்வதித்தார். சாலொமோனும் யோசபாத்தும், கர்த்தருடைய ஆலயத்திலே இஸ்ரவேல் ஜனத்தாரோடு சேர்ந்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார்கள். அவர்கள் இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணினார்கள்.

உசியா தன்னுடைய முன்னோர்களைப்போல இஸ்ரவேல் சபையாரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதித்திருக்கலாம், அவர்களுக்கு கர்த்தருடைய செய்தியை பிரசங்கம் பண்ணியிருக்கலாம், அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியிருக்கலாம். ஆனால் உசியாவோ தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்திருக்கிறான்.

கோராகும் அவனுடைய கூட்டத்தாரும் லேவியர்கள். அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தை மீறி தூபங்காட்டினார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டித்தார்.

"அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது" (எண் 15:35).

விசுவாசிகளாகிய நம்முடைய ஜெபம் கர்த்தருடைய சமுகத்தில் காட்டப்படும் தூபமாயிருக்கிறது. ஜெபதூபங்களை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கரங்களிலே விசுவாசத்தோடு ஒப்புக்கொடுக்கவேண்டும். அவரே நம்முடைய மகாபிரதான ஆசாரியராயிருக்கிறார். ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறோம் பிதாவே" என்று சொல்லி ஜெபிக்கிறோம்.

நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஏறெடுக்கப்படும் ஜெபங்களை மாத்திரமே, பிதாவாகிய தேவன் அங்கீகரிப்பார். நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்காமல், வேறு எந்த நாமத்தில் ஜெபித்தாலும், பிதாவானவர் நம்முடைய ஜெபங்களை அங்கீகரிக்கமாட்டார்.

"வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலி பீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி 8:3).

உசியாவுக்கு தண்டனை
2நாளா 26:19-23

2நாளா 26:19. அப்பொழுது உசியா கோபங்கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்க அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று.

2நாளா 26:20. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்து வெளிப்படப்பண்ணினார்கள்; கர்த்தர் தன்னை அடித்ததினால் அவன் தானும் வெளியே போகத் தீவிரப்பட்டான்.

2நாளா 26:21. ராஜாவாகிய உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியினால், ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணினான்; அவன் குமாரனாகிய யோதாம் ராஜாவின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான்.

2நாளா 26:22. உசியாவின் ஆதியோடந்த நடபடியான மற்ற வர்த்தமானங்களை ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி எழுதினான்.

2நாளா 26:23. உசியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, ஜனங்கள் அவனைக் குஷ்டரோகியென்று சொல்லி, அவனை அவன் பிதாக்களண்டையில், ராஜாக்களை அடக்கம்பண்ணுகிற இடத்திற்கு அருகான நிலத்திலே அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

உசியா ராஜா கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்கிறான். கர்த்தரின் ஆசாரியர்கள் உசியாவுக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். உசியா ஆசாரியரின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை.

உசியா தன்னுடைய மீறுதலுக்கு மனந்திரும்பாமல், ஆசாரியர்கள்மீது கோபங்கொள்கிறான்; உசியா தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறான். அப்போது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்க உசியாவின் நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று *(2நாளா 26:19)*.

உசியா கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்கிறான். கர்த்தரோ அவனுக்கு தீராத குஷ்டரோகத்தை தண்டனையாகக் கொடுக்கிறார். குஷ்டரோகம் உசியாவின் நெற்றியில் தோன்றுகிறது. அவன் ஆசாரியரோடு கோபமாய்ப் பேசுகிறபோதே, அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றுகிறது. குஷ்டரோகம் அவனுடைய நெற்றியில் தோன்றுவதினால், அது எல்லோருக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. உசியாவால் தன்னுடைய குஷ்டரோகத்தை மறைக்க முடியவில்லை.

பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் சகல ஆசாரியரும் அவனைப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டரோகம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாய் அங்கேயிருந்து வெளிப்படப்பண்ணுகிறார்கள்; கர்த்தர் உசியாவை அடித்ததினால், அவனும் வெளியே போகத் தீவிரப்படுகிறான் *(2நாளா 26:20)*.

குஷ்டரோகம் கர்த்தருடைய கோபத்திற்கும், அவருடைய நியாயத்தீர்ப்புக்கும் அடையாளம். உசியா சற்று நேரத்திற்கு முன்பு ஆசாரியருக்கு விரோதமாக எதிர்த்து நின்றான். கர்த்தர் உசியாவை குஷ்டரோகத்தினால் அடித்தபோது, அவன் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கவில்லை. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உசியா சீக்கிரமாய் வெளியேறிப்போய்விடுகிறான்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு பலிபீடத்திலிருந்து பேசுவார். இப்போதோ கர்த்தருடைய வார்த்தை உசியாவுக்கு விரோதமாக புறப்பட்டு வந்திருக்கிறது. அது வார்த்தையாக வெளிப்படாமல், உசியாவின் நெற்றியிலே குஷ்டரோகமாக வெளிப்பட்டிருக்கிறது. தனக்கு வந்திருக்கும் குஷ்டரோகம் கர்த்தருடைய கோபத்தினாலும், அவருடைய நியாயத்தீர்ப்பினாலும் வந்திருக்கிறது என்பதை உசியா உணருகிறான்.

ராஜாவாகிய உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டபடியினால், ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணுகிறான்; உசியாவின் குமாரனாகிய யோதாம் ராஜாவின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரிக்கிறான் (2நாளா 26:21).

உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருக்கிறான். இதனால் கர்த்தருடைய ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படுகிறான். அவனுடைய ஸ்தானத்தில் அவன் குஷ்டரோகியாகத் தனித்த வீட்டிலே வாசம்பண்ணியபோது, அவனுடைய குமாரனாகிய யோதாம் தேசத்தை ஆட்சி புரிகிறான். உசியாவின் மரணத்திற்குப் பின்பு யோதாம் மேலும் 16 வருஷங்கள் யூதாவை ஆட்சி புரிகிறான். (2நாளா 26:21-23; 2நாளா 27:1).

உசியாவின் மனம் மேட்டிமையானதே அவனுடைய பாவத்திற்கு காரணம். மனமேட்டிமையே எல்லா மீறுதலுக்கும் அடிப்படை காரணமாகயிருக்கும். கர்த்தர் உசியாவின் மேட்டிமையை நீக்கும் வண்ணமாக, அவனைத் தாழ்த்துகிறார். அவனுக்கு வெட்கத்தையும் அவமானத்தையும் கொடுக்கிறார்.

உசியா தூபபீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். தூபங்காட்டுவது ஆசாரியருடைய ஊழியம். உசியாவோ ஆசாரியருடைய உரிமையில் தலையிட்டு, கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்தான்.

கர்த்தர் உசியாவை குஷ்டரோகத்தினால் தண்டித்திருக்கிறார். உசியாவின் குஷ்டரோகம் குணமாயிற்றா என்றோ ஆசாரியரே முடிவுபண்ணவேண்டும். உசியா ஆசாரியருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். இப்போது ஆசாரியரே அவனுடைய குஷ்டரோகத்தை தீர்மானம்பண்ணும் நியாயாதிபதிகளாயிருக்கிறார்கள். உசியா ஆசாரியருக்கு முன்பாக நோயாளியாகவும், குற்றவாளியாகவும் இருக்கிறான்.

"குஷ்டரோகத்தைக் குறித்து லேவியராகிய ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும் யாவையும் கவனித்துச் செய்யும்படி மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்யக் கவனமாயிருப்பீர்களாக" (உபா 24:8).

கர்த்தருடைய ஆலயத்திற்குள் ஆசாரியர் மாத்திரமே பிரவேசிக்கக்கூடிய, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் உசியா பிரவேசித்தான். அதன் விளைவாக, உசியா கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தைவிட்டே வெளியேற்றப்பட்டான். கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் யூதாதேசத்திலுள்ள சாதாரண குடிமக்கள்கூட பிரவேசிக்கலாம். ஆனால் யூதாதேசத்தின் ராஜாவாகிய உசியாவுக்கு, அந்த ஸ்தலத்திலே பிரவேசிக்கும் உரிமைகூட கிடைக்கவில்லை.

உசியா குஷ்டரோகியாயிருப்பதினால் கர்த்தருடைய ஆலயத்திற்கு புறம்பாக்கப்பட்டிருக்கிறான். அவன் ஒரு தனித்த வீட்டிலே, தான் சாகும் வரையிலும் குஷ்டரோகியாய் வாசம்பண்ணுகிறான்.

உசியாவின் ஆதியோடந்த நடபடியான மற்ற வர்த்தமானங்களை ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார் (2நாளா 26:22).

ராஜாக்களின் ஆவணங்களில் சிலவற்றை ஏசாயா தீர்க்கதரிசியும் எழுதியிருக்கிறார். ராஜாவைப் பற்றி எழுதப்பட்ட ஆவணங்களிலிருந்து ஏசாயா ஒருசில செய்திகளைத் தொகுத்து எழுதியிருக்க வேண்டும். அல்லது ராஜாக்கள், நாளாகமம் புஸ்தகங்களின் ஒரு பகுதியை ஏசாயா எழுதியிருக்க வேண்டும் (2நாளா 32:32).

உசியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, ஜனங்கள் அவனைக் குஷ்டரோகியென்று சொல்லி, அவனை அவன் பிதாக்களண்டையில், ராஜாக்களை அடக்கம்பண்ணுகிற இடத்திற்கு அருகான நிலத்திலே அடக்கம்பண்ணுகிறார்கள்; அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் *(2நாளா 26:23).*

யூதாவின் ராஜாக்களைப் பொதுவாக தாவீதின் நகரத்தில் ராஜாக்களின் கல்லறையில் அடக்கம் பண்ணுவது வழக்கம். ஆனால் உசியாவோ குஷ்டரோகியாக மரித்ததினால் அவனை ராஜாக்களை அடக்கம் பண்ணுகிற இடத்தில் அடக்கம் பண்ணாமல், அவனை அந்த இடத்திற்கு அருகான நிலத்திலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

27 அதிகாரம்

யோதாமின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தவன். இவனுடைய ராஜ்யபாரத்தைப்பற்றியும், வர்த்தமானங்களைப்பற்றியும் அதிகமாக தெரியவில்லை.

யோதாம் ஆட்சிக்கு வந்த காலமும், அவன் ஆட்சி செய்த காலமும் (2நாளா 27:1-8). யோதாமின் நல்ல சுபாவங்கள் (2நாளா 27:2,6). யோதாமின் ஆசீர்வாதம் (2நாளா 27:3-5). யோதாமின் மரணம் (2நாளா 27:7,9).

யோதாமின் ராஜ்யபாரம் 2நாளா 27:1,2

2நாளா 27:1. யோதாம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமிலே அரசாண்டான்; சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் எருசாள்.

2நாளா 27:2. அவன் தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் அவனைப்போலக் கர்த்தரின் ஆலயத்திற்குள் பிரவேசியாதிருந்தான். ஜனங்கள் இன்னும் தங்களைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.

யோதாம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமிலே அரசாளுகிறான்; சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் எருசாள். யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்படுகிறான் (2நாளா 27:6).

யோதாம் கர்த்தருடைய வழியில் செம்மையாய் நடக்கிறான். அவன் ஜீவியகாலமெல்லாம் கர்த்தருக்கு பயந்து உண்மையுள்ளவனாயிருக்கிறான். அவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை மாத்திரமே செய்கிறான். கர்த்தர் தனக்கு கொடுத்த ராஜாசன கடமைகளையும், பொறுப்புக்களையும் நேர்த்தியாய்ச் செய்கிறான்.

யோதாமுக்கு முந்தி, யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணினவர்களில் சிலர், சிறிதுகாலம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தார்கள். ஆனால் அதன்பின்பு அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி, அவருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அவர்களுடைய நடையில் உறுதியில்லை.

யோதாம் தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான்; ஆனாலும் அவனைப்போலக் கர்த்தரின் ஆலயத்திற்குள் பிரவேசியாதிருக்கிறான் (2நாளா 27:2). உசியா கர்த்தருடைய ஆலயத்திலே, ஆசாரியர் மாத்திரமே பிரவேசிக்கக்கூடிய, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். யோதாமோ தன் தகப்பனைப்போல, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே பிரவேசித்து, கர்த்தருடைய பிரமாணத்தை மீறவில்லை.

யூதாவின் ராஜாவாகிய யோதாமின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யோதாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவின் இரண்டாம் வருஷத்தில், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் குமாரன் யோதாம் ராஜாவாகிறான். யோதாம் தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் செய்கிறான்.

யோசபஸ் என்னும் சரித்திர ஆசிரியர், யோதாமைப்பற்றி உயர்வாக எழுதியிருக்கிறார். யோதாம் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். இவனுடைய ராஜ்யபாரம் நீதியுள்ளதாயிருக்கிறது. இவன் ஜனங்களுடைய வழக்குகளை நீதியாய் நியாயம் விசாரிக்கிறான். யூதாதேசத்தாருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதே இவனுடைய பிரதான நோக்கம்.

யோதாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தாலும், இவனுடைய ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்தில் மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை; ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டி வருகிறார்கள் *(2இராஜா 15:35).*

யூதாவின் மனுஷர் மேடைகளின்மேல் பலியிட்டு தூபங்காட்டி வருவதை யோதாமல் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனாலும் யோதாம் யூதாவின் மனுஷரை கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வரவழைக்க முயற்சி பண்ணுகிறான். இதற்காக யோதாம் கர்த்தருடைய ஆலயத்தின் உயர்ந்த வாசலைக் கட்டுகிறான்.

அரசாங்க அதிகாரிகளால் அநீதிகளையும், அக்கிரமங்களையும் முற்றிலுமாக ஒழிக்க முடியாவிட்டாலும், அவர்கள் நீதிக்கும் நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். யோதாமால் உயர்ந்த மேடைகளின் பாவங்களை அழிக்க முடியவில்லை. ஆனாலும் அவன் கர்த்தருடைய ஆலயத்தின் உயர்ந்த கதவைக் கட்டி அதை அழகுபடுத்துகிறான்.

யோதாமின் தகப்பனாகிய உசியா ஆசாரியருடைய பணிவிடைகளில் தலையிட்டு குஷ்டரோகியானான். இதனால் யோதாம் மிகுந்த எச்சரிப்போடு இருந்து கர்த்தரின் ஆலயத்திற்குள் பிரவேசியாதிருக்கிறான். *(2நாளா 26:16-21).*

யோதாமின் ராஜ்யபார காலத்தில், யூதா ஜனங்கள் இன்னும் தங்களைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனாலும், யோதாம் கர்த்தரை விட்டு விலகிப்போகவில்லை. ஜனங்களால் ராஜாவின் மனதைக் கெடுக்க முடியவில்லை.

யோதாமின் ஆசீர்வாதம் 2நாளா 27:3-6

2நாளா 27:3. அவன் கர்த்தருடைய ஆலயத்தின் உயர்ந்த வாசலைக் கட்டினதுமல்லாமல், ஓபேலின் மதிலின்மேல் அநேக கட்டடங்களையும் கட்டினான்.

2நாளா 27:4. யூதாவின் மலைகளிலே பட்டணங்களையும், காடுகளிலே காட்டைகளையும் கோபுரங்களையும் கட்டினான்.

2நாளா 27:5. அவன் அம்மோன் புத்திரருடைய ராஜாவோடு யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொண்டான்; ஆதலால் அம்மோன் புத்திரர் அவனுக்கு அந்த வருஷத்திலே நூறு தாலந்து வெள்ளியையும், பதினாயிரங்கலக் கோதுமையையும், பதினாயிரங்கல வாற்கோதுமையையும் கொடுத்தார்கள்; இரண்டாம் மூன்றாம் வருஷத்திலும் அம்மோன் புத்திரர் அப்படியே அவனுக்குச் செலுத்தினார்கள்.

2நாளா 27:6. யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்பட்டான்.

யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் பலப்படுகிறான் *(2நாளா 27:6).* யோதாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்வதினால், கர்த்தர் அவனை ஆசீர்வதிக்கிறார். அவன் அநேக கட்டிடங்களைக் கட்டுகிறான். இந்த வசனப்பகுதியில் யோதாம் கட்டின கட்டிட வேலைகளைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோதாம் கர்த்தருடைய ஆலயத்தின் உயர்ந்த வாசலைக் கட்டினதுமல்லாமல், ஓபேலின் மதிலின்மேல் அநேக கட்டடங்களையும் கட்டுகிறான். மேலும், அவன், யூதாவின் மலைகளிலே பட்டணங்களையும், காடுகளிலே காட்டைகளையும் கோபுரங்களையும் கட்டுகிறான் *(2நாளா 27:3,4).*

யோதாம் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறான். அவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்ததினால், கர்த்தர் அவனுக்கு யுத்தங்களிலே வெற்றியை கட்டளையிடுகிறார். யோதாமுக்கு கிடைத்த யுத்த வெற்றிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யோதாம் அம்மோன் புத்திரருடைய ராஜாவோடு யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொள்கிறான்; ஆதலால் அம்மோன் புத்திரர் அவனுக்கு அந்த வருஷத்திலே நூறு தாலந்து வெள்ளியையும், பதினாயிரங்கலக் கோதுமையையும், பதினாயிரங்கல வாற்கோதுமையையும் கொடுக்கிறார்கள்; இரண்டாம் மூன்றாம் வருஷத்திலும் அம்மோன் புத்திரர் அப்படியே அவனுக்குச் செலுத்துகிறார்கள் (2நாளா 27:5).

உசியாவின் நாட்களிலே அம்மோன் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, பகுதிப்பணம் கட்டினார்கள். (2நாளா 26:8) அதன் பின்பு, உசியாவிற்கு குஷ்டரோகம் பிடித்தது. உசியாவால் இனிமேல் தங்களை அடக்க முடியாது என்று நினைத்து, அம்மோன் புத்திரர் உசியாவிற்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். உசியாவிற்குப் பின்பு, யோதாம் ராஜாவாகிறான். அவன் அம்மோன் புத்திரருடைய ராஜாவோடு யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொள்கிறான். அம்மோன் புத்திரர் யோதாமுக்குப் பல வருஷங்களாகப் பகுதிப்பணங்களையும், பொருட்களையும் அதிகமாகச் செலுத்துகிறார்கள்.

அம்மோன் புத்திரர் யோசபாத்தின் காலத்திலே யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ண வந்தார்கள். "இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள்" (2நாளா 20:1).

யோதாமுக்கு ஐசுவரியமும் பெலமும் அதிகரிக்கிறது. யூதாதேசத்திற்கு அருகாமையிலிருக்கிற அந்நியதேசத்தார், யோதாமோடு சிநேகமாகயிருக்க விரும்புகிறார்கள். அவனோடு சமாதான உடன்படிக்கைபண்ணிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் யோதாமுக்கு விரோதமாக தீங்கு செய்ய பயப்படுகிறார்கள்.

யோதாமுக்கு யுத்தங்களிலே ஜெயம் கிடைக்கிறது. இந்த ஜெயம் அவனுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ கிடைத்ததல்ல. யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினால் அனவன் பலப்படுகிறான் (2நாளா 27:6).

யோதாமின் மரணம் 2நாளா 27:7-9

2நாளா 27:7. யோதாமின் மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய சகல யுத்தங்களும், அவனுடைய நடைகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 27:8. அவன் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 27:9. யோதாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனைத் தாவீதின் நகரத்திலே அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

யோதாம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாட்சி செய்கிறான். அவனுடைய அரசாட்சி கொஞ்சகாலம் மாத்திரமே நடைபெறுகிறது. ஆனாலும் அது மகிமையும் மேன்மையுமுள்ளதாயிருக்கிறது. யோதாம் நாற்பத்தொராவது வயதில் மரித்துப்போகிறான். அவன் சீக்கிரத்தில் மரித்தாலும், அவனுடைய ஜீவியகாலம் மேன்மையுள்ளதாயிருக்கிறது.

யோதாம் ராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறுவருஷம் அரசாளுகிறான்; சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் எருசாள் (2இராஜா 15:33).

யோதாம் முதிர்வயதாகும் முன்பாகவே மரித்துப்போகிறான். யூதாவின் ராஜாவாகிய தாவீது, எழுபது வயது வரையிலும் உயிரோடிருந்தார். யூதாவின் ராஜாக்களில் ஒருவர்கூட, எழுபது வயது வரையிலும் உயிரோடிருக்கவில்லை.

ஆசா எத்தனை வருஷம் உயிரோடிருந்தான் என்பது தெரியவில்லை. உசியா அறுபத்தெட்டு வயது வரையிலும், மனாசே அறுபத்தேழு வயது வரையிலும், யோசபாத் அறுபது வயது வரையிலும் உயிரோடிருந்தார்கள். இவர்களே அதிக வருஷங்களுக்கு உயிரோடிருந்தவர்கள். மற்ற ராஜாக்கள் எல்லோரும் ஐம்பது வயது ஆகும் முன்பே மரித்துப்போனார்கள். யோதாம் தன்னுடைய நாற்பத்து ஒன்றாம் வயதில் மரித்துப்போகிறான்.

யோதாமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (2இராஜா 15:36).

யோதாம் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணின, அந்நாட்களிலே கர்த்தர் சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனையும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவையும் யூதாவுக்கு விரோதமாக அனுப்பத்தொடங்குகிறார் (2இராஜா 15:37).

யோதாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்படுகிறான்; அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 15:38; 2நாளா 27:9).

யோதாமின் மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய சகல யுத்தங்களும், அவனுடைய நடைகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது (2நாளா 27:7).

28 அதிகாரம்

யோதாமின் குமாரனாகிய ஆகாசின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுடைய ராஜ்யபாரம் யூதாதேசத்திலே மிகவும் மோசமான ராஜ்யபாரமாயிருக்கிறது.

ஆகாசின் துன்மார்க்கம் (2நாளா 28:1-4). ஆகாசின் பாவத்தினால் ஏற்பட்ட மோசமான விளைவுகள் (2நாளா 28:5-8). இஸ்ரவேல் தேசத்தார் யூதாதேசத்தாரை சிறைப்பிடிக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்தாரை கடிந்துகொள்கிறான். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து யூதாதேசத்தாரை விடுதலைபண்ணுகிறார்கள் (2நாளா 28:9-15).

ஆகாசினுடைய பாவங்களினிமித்தமாய் அவனுக்கும் யூதாதேசத்திற்கும் வந்த துன்பங்கள் (2நாளா 28:16-21). ஆகாஸ் துன்பங்களை அனுபவித்தாலும், விக்கிரகங்களையே பணிந்துகொள்கிறான் (2நாளா 28:22-25). ஆகாசின் மரணம் (2நாளா 28:26,27).

ஆகாசின் துன்மார்க்கம் 2நாளா 28:1-5

2நாளா 28:1. ஆகாஸ் ராஜாவாகிறபோது இருபது வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாண்டான்; ஆனாலும் அவன், தன் தகப்பனாகிய தாவீதைப்போல், கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்,

2நாளா 28:2. இஸ்ரவேல் ராஜாக்களின் வழிகளில் நடந்து, பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்தான்.

2நாளா 28:3. அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியே தன் குமாரரை அக்கினியிலே தகித்துப்போட்டு,

2நாளா 28:4. மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்.

2நாளா 28:5. ஆகையால் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனைச் சீரியருடைய ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் அவனை முறிய அடித்து, அவனுக்கு இருக்கிறவர்களிலே பெரிய கூட்டத்தைச் சிறைபிடித்துத் தமஸ்குவுக்குக் கொண்டு போனார்கள்; அவன் இஸ்ரவேலுடைய ராஜாவின் கையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டான்; இவன் அவனை வெகுவாய் முறிய அடித்தான்.

கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்வதற்கு ஆகாசுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் கிடைத்திருக்கிறது. ஆனால் அவனோ கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்யவில்லை. ஆகாசின் தகப்பனாகிய யோதாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தவன். ஆகாஸ் தன் தகப்பன் மூலமாக நல்ல போதனைகளைப் பெற்றிருந்தும், அவன் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறான்.

ஆகாஸ் ராஜாவாகிறபோது இருபது வயதாயிருந்து, பதினாறு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; ஆனாலும் அவன், தன் தகப்பனாகிய தாவீதைப்போல், கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல், இஸ்ரவேல் ராஜாக்களின் வழிகளில் நடந்து, பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்கிறான் (2நாளா 28:1,2).

ஆகாஸ் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து தன்னுடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போடுகிறான். அவன் விக்கிரகங்களை ஆராதிக்கிறான். ஆகாஸ் பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களை செய்து, யூதாஜனத்தாரையும் விக்கிரகாராதனையில் வழிநடத்துகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, தாவீதின் வீட்டாரை விட்டும், கர்த்தரைவிட்டும் பிரிந்துபோனார்கள். ஆகாசோ கர்த்தருக்கு பிரியமான வழியில் நடக்காமல், கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோன வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் வழிகளிலே நடக்கிறான்.

கானானியர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனைக்காரரோடு சம்பந்தம்பண்ணக்கூடாது. ஆனால் ஆகாசோ பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களை செய்து, அவற்றை ஆராதிக்கிறான். ஆகாஸ் யூதாதேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், அவன் கானானியரைப்போல விக்கிரகாராதனைக்காரனாயிருக்கிறான்.

ஆகாஸ் கர்த்தரை ஆராதிக்கவில்லை. அவன் கர்த்தருடைய ஆலயத்தையும் புறக்கணித்துவிடுகிறான். அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டுகிறான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரரை அக்கினியிலே தகித்துப்போடுகிறான். ஆகாஸ் மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வருகிறான் (2நாளா 28:3,4).

ஆகாசுக்கு கர்த்தர்மீது பக்தியுமில்லை. அவனுக்கு கர்த்தருடைய ஆலயத்தைப் பராமரிக்கவேண்டும் என்னும் எண்ணமுமில்லை. கர்த்தருக்காக ஊழியம் செய்யவேண்டும் என்னும் ஆர்வமும் அவனிடத்தில் இல்லை. ஆகாஸ் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தையும் மதிக்கவில்லை. ஆகாசின் மனச்சாட்சி கர்த்தருக்கு முன்பாக செம்மையாயில்லை.

ஆகாஸ் தாவீதின் குடும்பத்தில் வந்தவன். தாவீதின் குடும்பத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். ஆகாசோ தாவீதின் குடும்பத்தாருக்கு இருக்கிற நல்ல பெயரை கெடுத்துப்போடுகிறான்.

ஆகாஸ் தாவீதின் வழியிலே நடக்காமல், இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடக்கிறான். இஸ்ரவேல் ராஜாக்கள் பொற்கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறார்கள். ஆகாசும் அவர்களைப்போலவே பொற்கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்து ராஜாக்களுக்கு, கன்றுக்குட்டிகளை ஆராதிப்பது அரசியல் சம்பந்தப்பட்ட விக்கிரகாராதனையாயிருக்கிறது. தெற்கு யூதாதேசத்திலோ அப்படிப்பட்ட அரசியல் சம்பந்தமான விக்கிரகாராதனை எதுவுமில்லை. யூதாதேசத்தார் கர்த்தரையே ஆராதிக்கிறார்கள். ஆனால் ஆகாசோ, கர்த்தரை ஆராதியாமல், கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார், ஆகாசுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தாரின் விக்கிரகாராதனையும், யூதாதேசத்தாருக்கு விரோதமாயிருக்கிறது. விக்கிரகாராதனை கர்த்தருக்கு பிரியமில்லாத காரியம். ஆகாசோ, கர்த்தருடைய வழியில் நடவாமல், இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடக்கிறான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, ஆகாஸ் தன் குமாரனை முதலாய்த் தீக்கடக்கப்பண்ணுகிறான் (2இராஜா 16:3).

ஆகாஸ் விக்கிரகங்களை ஆராதிக்கிறான். விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக ஆகாஸ் தன் குமாரனை தீக்கடக்கப்பண்ணுகிறான். அவர்களை அக்கினியில் தகனிக்கிறான். யூதாதேசத்தின் ராஜாவே தன்னுடைய குமாரனை அக்கினியில் தீக்கடக்கப்பண்ணும்போது, யூதாதேசத்தாரும் அவனுடைய விக்கிரகாராதனையை பின்பற்றி, தங்களுடைய குமாரரை தீக்கடக்கப்பண்ணுகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய ஆகாசும், யூதாதேசத்தாரும் தங்கள் குமாரரை விக்கிரகங்களுக்கு பிரதிஷ்டைபண்ணும் வண்ணமாக, அவற்றை அக்கினியில் தகனிக்கிறார்கள்.

"அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரரை அக்கினியிலே தகித்துப்போட்டு, மேடைகளிலும், மலைகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டி வந்தான்" (2நாளா 28:3,4).

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தீக்கடக்கப்பண்ணுவதும், அவர்களை அக்கினியில் தகனிப்பதும் கர்த்தருக்கு விரோதமான காரியம். கர்த்தர் விக்கிரகங்களையும், விக்கிரங்களுக்கு தங்கள் பிள்ளைகளை பலியிடுகிறவர்களையும் அருவருக்கிறார். கர்த்தர் இப்படிப்பட்ட புறஜாதியாரையும், அவர்களுடைய அருவருப்புக்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக துரத்திவிட்டார்.

ஆனால் யூதாவின் ராஜாவாகிய ஆகாசோ, புறஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரனை தீக்கடக்கப்பண்ணுகிறான். ஆகாஸ் மேடைகளிலும் மலைகளின்மேலும் பச்சையான சகல மரத்தின்கீழும் பலியிட்டுத் தூபங்காட்டிவருகிறான் (2இராஜா 16:4).

ஆகாசின் தகப்பனாகிய யோதாம் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தான். ஆனாலும் அவனுடைய ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்தில் மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை. யூதாஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டு தூபங்காட்டி வருகிறார்கள் (2இராஜா 15:34,35).

பெற்றோர் செய்கிற பாவங்களுக்கு பிள்ளைகளும் அடிமைகளாகிவிடுகிறார்கள். யோதாம் தன்னுடைய ராஜ்யபார காலத்தில், யூதாதேசத்திலிருந்து மேடைகளை அகற்றிப்போட்டிருக்கவேண்டும். மேடைகளில் தூபங்காட்டும் பாவமான பழக்கங்களை யூதாதேசத்தைவிட்டு நீக்கிப்போட்டிருக்கவேண்டும். ஆனால் யோதாமோ யூதாதேசத்தை சுத்திகரிக்கவில்லை.

யோதாமைப்போலவே, அவனுடைய குமாரனும் மேடைகளை அகற்றிப்போடவில்லை. ஆகாஸ் மேடைகளிலும், மலைகளின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் பலியிட்டு தூபங்காட்டி வருகிறான். தன்னுடைய தகப்பனார் யோதாம் செய்த பாவத்தை, ஆகாசும் தொடர்ந்து செய்கிறான்.

பெற்றோர் செய்கிற பாவங்கள், அவர்களுடைய பிள்ளைகளுக்கு கண்ணியாயிருக்கும். பாவம் செய்கிறவர்களின் பின்சந்ததியார், அவர்களுடைய முன்னோர்களின் பாவக்கண்ணிகளில் சிக்கிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் பெற்றோர் மிகவும் எச்சரிப்பாகயிருந்து, பாவங்களுக்கு விலகி ஜீவிக்கவேண்டும்.

மேடைகளிலும் மலைகளிலும் பலியிட்டு தூபங்காட்டினால், பரலோகத்திற்கு சமீபமாகப்போய்விடலாம் என்று ஆகாஸ் நினைக்கிறான். இதற்காக அவன் உயர்ந்த மேடைகளையும், உயர்ந்த மலைகளையும் தேர்ந்தெடுத்து, அங்கே விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி பலியிடுகிறான்.

ஆகாஸ் பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டு தூபங்காட்டுகிறான். மரத்தின் நிழல் தனக்கு பரலோகத்தின் நிழலைப்போல பாதுகாப்பாயிருக்கும் என்று ஆகாஸ் நினைக்கிறான். மரங்களிலிருந்து பழங்கள் கீழே விழுவதுபோல, பரலோகத்திலிருந்து தனக்கு ஆசீர்வாதங்கள் கீழே விழும் என்று எதிர்பார்க்கிறான்.

ஆகாஸ் புறஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, தன் குமாரரை அக்கினியிலே தகர்த்துப்போடுகிறான். இது ஆகாஸ் செய்த எல்லா பாவங்களிலும் மிகவும் மோசமான பாவமாகயிருக்கிறது. கர்த்தருடைய கோபம் ஆகாசுக்கு விரோதமாக திரும்புகிறது. ஆகையால் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனைச் சீரியருடைய ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறார்.

சீரியர்கள் ஆகாசை முறிய அடித்து, அவனுக்கு இருக்கிறவர்களிலே பெரிய கூட்டத்தைச் சிறைபிடித்துத் தமஸ்குவுக்குக் கொண்டு போகிறார்கள்; ஆகாஸ் இஸ்ரவேலுடைய ராஜாவின் கையிலும் ஒப்புக்கொடுக்கப்படுகிறான்; இஸ்ரவேலர் ஆகாசை வெகுவாய் முறிய அடிக்கிறார்கள் (2நாளா 28:5).

சீரியர்கள் யூதாவின் ஜனத்தை சிறைப்பிடித்து தமஸ்குவுக்கு கொண்டு போகிறார்கள். சீரியர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களைப்போலவே வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள். இஸ்ரவேலின் சேனையும் ஆகாசுக்கு விரோதமாக வருகிறார்கள். கர்த்தர் ஆகாசை இஸ்ரவேலின் ராஜா கையிலே ஒப்புக்கொடுக்கிறார். அவனும் ஆகாசை வெகுவாய் முறியடிக்கிறான்.

யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் யுத்தம் 2நாளா 28:6-15

2நாளா 28:6. எப்படியெனில், யூதா மனுஷர் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டபடியினால், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா அவர்களில் ஒரேநாளில் லட்சத்திருபதினாயிரம் பேரைக் கொன்றுபோட்டான்; அவர்கள் எல்லாரும் மகா வீரராயிருந்தவர்கள்.

2நாளா 28:7. அன்றியும் எப்பிராயீமின் பராக்கிரமசாலியான சிக்ரியும், ராஜாவின் குமாரனாகிய மாசேயாவையும், அரமனைத் தலைவனாகிய அஸ்ரிக்காமையும், ராஜாவுக்கு இரண்டாவதான எல்க்கானாவையும் கொன்றுபோட்டான்.

2நாளா 28:8. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரரில் இரண்டு லட்சம்பேராகிய ஸ்திரீகளையும் குமாரரையும் குமாரத்திகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய அநேக திரவியங்களைக் கொள்ளையிட்டு, கொள்ளைப்பொருளைச் சமாரியாவுக்கு கொண்டுபோனார்கள்.

2நாளா 28:9. அங்கே ஓதேத் என்னும் பேருள்ள கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவன் இருந்தான்; அவன் சமாரியாவுக்கு வருகிற சேனைக்கு எதிராகப் போய், அவர்களை நோக்கி: இதோ, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் யூதாவின்மேல் கோபங்கொண்டபடியினால் அவர்களை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார்; நீங்களோ வானபரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே அவர்களைச் சங்காரம்பண்ணினீர்கள்.

2நாளா 28:10. இப்போதும் யூதாவின் புத்திரரையும் எருசலேமியரையும் நீங்கள் உங்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கீழ்ப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறீர்கள்; ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் உங்களிடத்திலும் இல்லையோ?

2நாளா 28:11. ஆதலால் நீங்கள் எனக்குச் செவிகொடுத்து, நீங்கள் உங்கள் சகோதரரிடத்தில் சிறைபிடித்துக்கொண்டுவந்தவர்களைத் திரும்ப அனுப்பிவிடுங்கள்; கர்த்தருடைய உக்கிரமான கோபம் உங்கள் மேல் இருக்கிறது என்றான்.

2நாளா 28:12. அப்பொழுது எப்பிராயீம் புத்திரரின் தலைவரில் சிலபேராகிய யோகனானின் குமாரன் அசரியாவும், மெஷிலெமோத்தின் குமாரன் பெரகியாவும், சல்லூமின் குமாரன் எகிஸ்கியாவும், அத்லாயின் குமாரன் அமாசாவும் யுத்தத்திலிருந்து வந்தவர்களுக்கு விரோதமாக எழும்பி,

2நாளா 28:13. அவர்களை நோக்கி: நீங்கள் சிறைபிடித்த இவர்களை இங்கே உள்ளே கொண்டுவரவேண்டாம்; நம்மேல் திரளான குற்றமும் இஸ்ரவேலின்மேல் உக்கிரமான கோபமும் இருக்கையில், நீங்கள் கர்த்தருக்கு முன்பாக நம்மேல் குற்றம் சுமரப்பண்ணத்தக்கதாய், நம்முடைய பாவங்களையும் நம்முடைய குற்றங்களையும் அதிகமாக்க நினைக்கிறீர்கள் என்றார்கள்.

2நாளா 28:14. அப்பொழுது ஆயுதபாணிகளானவர்கள் சிறைபிடித்தவர்களையும், கொள்ளையுடைமைகளையும், பிரபுக்களுக்கு முன்பாகவும் சமஸ்த சபைக்கு முன்பாகவும் விட்டுவிட்டார்கள்.

2நாளா 28:15. அப்பொழுது பேர் குறிக்கப்பட்ட மனுஷர் எழும்பி, சிறைபிடிக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களில் வஸ்திரமில்லாத சகலருக்கும் கொள்ளையில் எடுக்கப்பட்ட வஸ்திரங்களைக் கொடுத்து, உடுப்பையும் பாதரட்சைகளையும் போடுவித்து, அவர்களுக்குச் சாப்பிடவும் குடிக்கவும் கொடுத்து, அவர்களுக்கு எண்ணெய் வார்த்து, அவர்களில் பலட்சயமானவர்களையெல்லாம் கழுதைகள்மேல் ஏற்றி, பேரீச்சமரங்களின் பட்டணமாகிய எரிகோவிலே அவர்கள் சகோதரரிடத்துக்குக் கொண்டுவந்து விட்டு, சமாரியாவுக்குத் திரும்பினார்கள்.

ஆகாஸ் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்யாமல் பொல்லாப்பானதை செய்கிறான். அவன் பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களை செய்கிறான். தன் குமாரரை அக்கினியிலே தகனிக்கிறான். ஆகாஸ் தன்னுடைய ஆத்துமாவைக் கெடுத்துப்போட்டதோடு, யூதாஜனத்தாரின் ஆத்துமாக்களையும் கெடுத்துப்போடுகிறான். இதனால் கர்த்தருடைய கோபமும், நியாயத்தீர்ப்பும் ஆகாசின்மீதும், யூதாஜனத்தார்மீதும் வருகிறது.

கர்த்தர் அந்நிய தேசத்தாரை யூதாதேசத்திற்கு விரோதமாக அனுப்புகிறார். யூதாஜனத்தார் ஆகாசின் ஆட்சிக்காலத்திலே அநேக துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அந்நிய தேசத்தார் யூதாதேசத்தாரை முறியடிப்பதோடு, இஸ்ரவேல் தேசத்தாரும் அவர்களை முறியடிக்கிறார்கள். யூதாவின் அழிவுக்கு அவர்களே காரணம்.

நம்முடைய ஜீவியத்தில் பிரச்சனைகள் வரும்போது, இந்தப் பிரச்சனைகளுக்கு காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்முடைய பிரச்சனைகளுக்கு நம்முடைய பாவமே காரணமாகயிருக்குமென்றால், நம்முடைய பாவத்தை விட்டு நாம் விலகிவரவேண்டும். அப்போது நம்முடைய பிரச்சனைகளும் நம்மைவிட்டு விலகிப்போகும். நாம் பாவத்திற்கு பங்காளிகளாகயிருப்போமென்றால், பிரச்சனைகளுக்கும் பங்காளிகளாகயிருக்க வேண்டியது வரும்.

கர்த்தர் ஆகாசை இஸ்ரவேலுடைய ராஜாவின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்திலே யூதாஜனத்தார் தோற்றுப்போகிறார்கள். யுத்தக்களத்திலே யூதாவின் மனுஷரில் ஏராளமானோர் முறியடிக்கப்படுகிறார்கள்.

யூதா மனுஷர் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டபடியினால், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா அவர்களில் ஒரேநாளில் லட்சத்திருபதினாயிரம்பேரைக் கொன்றுபோடுகிறான்; அவர்கள் எல்லாரும் மகா வீரராயிருக்கிறவர்கள் (2நாளா 28:6). யுத்தத்திலே செத்துப்போனவர்கள், யூதாதேசத்திலே பிரதானமானவர்கள்.

எப்பிராயீமின் பராக்கிரமசாலியான சிக்ரியும், ராஜாவின் குமாரனாகிய மாசேயாவையும், அரமனைத் தலைவனாகிய அஸ்ரிக்காமையும், ராஜாவுக்கு இரண்டாவதான எல்க்கானாவையும் கொன்றுபோடுகிறான் (2நாளா 28:7). யூதாவிலே செத்துப்போனவர்களில் ராஜாவின் குமாரனும் ஒருவன்.

யூதாவுக்கு விரோதமாக இஸ்ரவேல் ஜனத்தார் யுத்தம்பண்ணும்போது, இஸ்ரவேல் தேசத்தார் பெலமுள்ளவர்களாகயில்லை. ஆனாலும் அவர்களால் யூதாதேசத்தாரை முறியடிக்க முடிகிறது. யூதாமனுஷர் தங்கள் தேவனாகிய கர்த்தரை கைவிட்டுவிடுகிறார்கள். கர்த்தர் யூதாமனுஷரை கைவிட்டுவிடுகிறார். கர்த்தர் யூதாமனுஷரை இஸ்ரவேல் மனுஷர் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர், யூதாமனுஷரில் ஏராளமானோரை சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரரில் இரண்டு லட்சம்பேராகிய ஸ்திரீகளையும் குமாரரையும் குமாரத்திகளையும் சிறைபிடித்து, அவர்களுடைய அநேக திரவியங்களைக் கொள்ளையிட்டு, கொள்ளைப்பொருளைச் சமாரியாவுக்கு கொண்டுபோகிறார்கள் (2நாளா 28:8).

இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் இடையே நடைபெறுகிற யுத்தத்தில், இஸ்ரவேலர் வெற்றி பெறுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளினால் இஸ்ரவேலரைக் கடிந்துகொள்கிறார். கர்த்தருடைய வார்த்தை ஓதேத் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் உண்டாயிற்று.

அங்கே ஓதேத் என்னும் பேருள்ள கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவன் இருக்கிறான்; அவன் சமாரியாவுக்கு வருகிற சேனைக்கு எதிராகப் போய், அவர்களை நோக்கி:

"இதோ, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் யூதாவின்மேல் கோபங்கொண்டபடியினால் அவர்களை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார்; நீங்களோ வானபரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே அவர்களைச் சங்காரம்பண்ணினீர்கள்" (2நாளா 28:9) என்றும்,

"இப்போதும் யூதாவின் புத்திரரையும் எருசலேமியரையும் நீங்கள் உங்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கீழ்ப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறீர்கள்; ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் உங்களிடத்திலும் இல்லையோ?" (2நாளா 28:10) என்றும்,

"ஆதலால் நீங்கள் எனக்குச் செவிகொடுத்து, நீங்கள் உங்கள் சகோதரரிடத்தில் சிறைபிடித்துக் கொண்டுவந்தவர்களைத் திரும்ப அனுப்பிவிடுங்கள்; கர்த்தருடைய உக்கிரமான கோபம் உங்கள் மேல் இருக்கிறது" (2நாளா 28:11) என்றும் சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயத்தோடு சமாரியாவுக்கு திரும்பி வருகிறார்கள். ஓதேத் என்னும் பேருள்ள தீர்க்கதரிசி, சமாரியாவுக்கு வருகிற இஸ்ரவேலின் சேனைக்கு எதிராக போகிறான். ஓதேத் அவர்களை ஆசீர்வதிக்கப்போகவில்லை. அவர்கள் பெற்ற வெற்றிக்காக அவர்களை பாராட்ட போகவில்லை. ஓதேத் கர்த்தருடைய நாமத்தினால் இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களை கடிந்துகொள்ளப்போகிறான். அவர்கள் செய்கிற தப்பிதங்களை அவர்களுக்கு எடுத்து சொல்லப்போகிறான்.

யூதாவின்மீது தங்களுக்கு வெற்றி கிடைத்தற்காக, இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் பெருமையோடிருக்கிறார்கள். இது தங்களுடைய நீதிக்கு கிடைத்த வெற்றி என்று அவர்கள் தங்களுடைய மனதிலே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தத்திலே கிடைத்த வெற்றி அவர்களுடைய நீதியினால் உண்டானதல்ல. யூதாதேசத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் யூதாதேசத்தாரை இஸ்ரவேலரின் கைகளிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

"உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய உத்தமத்தினிமித்தமும் நீ அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கும்படி பிரவேசிப்பதில்லை; அந்த ஜாதிகளுடைய ஆகாமியத்தினிமித்தமாகவும், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் பிதாக்களுக்குக் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாகவும், உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்" (உபா 9:5).

கர்த்தர் யூதாவின் சேனையிலுள்ளவர்களை, இஸ்ரவேலின் கைகளில் ஒப்புக்கொடுத்ததினால் அவர்கள் யூதாதேசத்தாரை சங்காரம்பண்ணினார்கள். கர்த்தர் யூதாதேசத்தாரை ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், இஸ்ரவேலரால் அவர்களை சங்காரம்பண்ண முடியாது. ஆகையினால் இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களுக்கு பெருமைப்பட ஒன்றுமில்லை. இந்த யுத்தமும் கர்த்தரால் உண்டாயிற்று. இந்த யுத்தத்திலே இஸ்ரவேலுக்கு ஜெயமும் கர்த்தரால் உண்டாயிற்று.

"நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு" *(ரோம 11:20,21)*.

இஸ்ரவேலரும் யூதாவின் மனுஷரும் கர்த்தருக்குள்ளே சகோதரராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலருக்கு, யூதாவின்மீது நடைபெற்ற யுத்தத்திலே வெற்றியைக் கொடுத்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களோ, கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற வெற்றியையும், அதிகாரத்தையும் தப்பிதமான வழியிலே பயன்படுத்துகிறார்கள்.

தீர்க்கதரிசியாகிய ஓதேத், இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களை நோக்கி, "இப்போதும் யூதாவின் புத்திரரையும் எருசலேமியரையும் நீங்கள் உங்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கீழ்ப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறீர்கள்" *(2நாளா 28:10)* என்று சொல்லுகிறான். யுத்தத்திலே வெற்றி பெற்றவர்களை கர்த்தருடைய தீர்க்கதரிசி கடிந்துகொள்கிறான்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள், வானபரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே யூதாவின் சேனையிலுள்ளவர்களை சங்காரம் பண்ணுகிறார்கள். அவர்கள் இந்த யுத்தத்திலே யுத்தத்தின் இரத்தத்தை சிந்தியிருக்கிறார்கள். செத்துப்போனவர்களும் இஸ்ரவேல் புத்திரருடைய சகோதரர்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்கள் சகோதரர்மீது பிரியமாயிருக்காமல், அவர்களுக்கு விரோதமாக உக்கிரகோபத்தோடே இருக்கிறார்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை ஒருபோதும் நிறைவேற்றாது.

இஸ்ரவேல் புத்திரர் யூதாவின் புத்திரரில் ஏராளமானோரை சங்காரம்பண்ணியதோடு, அவர்களில் உயிரோடிருக்கிறவர்களை சிறைப்பிடித்துக் கொள்கிறார்கள். அவர்களை தங்களுக்கு அடிமைகளாக கீழ்ப்படுத்தவேண்டும் என்று நினைக்கிறார்கள். சிறைப்பிடிக்கப்பட்ட யூதாவின் மனுஷரை, இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள், அடிமைகளாக விற்றுப்போடவேண்டும் என்றும் விரும்புகிறார்கள்.

யூதாவின் மனுஷர் அடிமைகளல்ல. இஸ்ரவேல் தேசத்தாரைப்போல, அவர்களும் கர்த்தருக்கு பிரியமானவர்கள். யூதாதேசத்தாரும் சுயாதீனமாய்ப் பிறந்த இஸ்ரவேலர்கள். ஆனால் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரோ, தெற்கு யூதாதேசத்தாரை, தங்களுக்கு வேலைக்காரராகவும், வேலைக்காரிகளாகவும் கீழ்ப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

தீர்க்கதரிசியாகிய ஓதேத் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறான். ஓதேத் அவர்களை நோக்கி, "உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் உங்களிடத்திலும் இல்லையோ?"*(2நாளா28:10)*என்றுகேட்கிறான்.

யூதர்களிடத்தில் கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் இருப்பதுபோல, இஸ்ரவேலரிடத்திலும் கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் இருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், யூதாஜனத்தார்மீது கோபங்கொண்டதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார்மீதும் கோபங்கொண்டிருக்கிறார். யூதாஜனத்தாரைப்போலவே, இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருடைய கோபத்திற்கும், நியாயத்தீர்ப்புக்கும், தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள், யூதாவுக்கு விரோதமான யுத்தத்திலே ஜெயம்பெற்று, மிகுந்த சந்தோஷத்தோடே சமாரியாவுக்கு திரும்பி வருகிறார்கள். கர்த்தரோ அவர்களைப் பார்த்து, "கர்த்தருக்கு விரோதமான குற்றங்கள் உங்களிடத்திலும் இருக்கிறது" என்று சொல்லுகிறார். யூதாவின் மனுஷர் பாவிகளாகயிருப்பதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் பாவிகளாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் ஒரு பாவிக்கு தண்டனை கொடுக்கும்போது, அதைப் பார்த்து மற்றொரு பாவி தன்னுடைய இருதயத்தில் பெருமைப்படக்கூடாது. கர்த்தர் நீதியாக நியாயம் விசாரிக்கிறவர். தேவனுடைய நியாயத்தீர்ப்பு எல்லோருக்கும் பொதுவானது. நியாயத்தீர்ப்பு முதலாவதாக தேவனுடைய வீட்டிலே துவங்குகிறது. யூதாதேசத்திலுள்ள எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. தேவனுடைய வீடு யூதாவிலே இருப்பதினால், அவருடைய நியாயத்தீர்ப்பு முதலாவதாக யூதாதேசத்திலே துவங்குகிறது.

இஸ்ரவேல் தேசத்திலோ கர்த்தருடைய ஆலயம் இல்லை. அங்கே இரண்டு பொன்கன்றுக்குட்டிகள் இருக்கிறது. தேவனுடைய வீடு இருக்கிற எருசலேம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கவில்லை. அப்படியிருக்கும்போது, பொன்கன்றுக்குட்டிகள் வைக்கப்பட்டிருக்கிற, வடக்கு இஸ்ரவேல் தேசம், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு நிச்சயமாகவே தப்பிக்கப்போவதில்லை. கன்றுக்குட்டிகளை ஆராதிக்கிற சமாரியாவுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் யூதாதேசத்தாரை சிறைப்பிடித்து சமாரியாவுக்கு கொண்டு வருகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலரின் சகோதரர்கள். பாவிகள் தங்கள் இருதயத்தில் பெருமைப்படவும் கூடாது. அவர்கள் மனிதாபிமானமில்லாமல் கொடூரமாகவும் நடந்துகொள்ளக்கூடாது.

இஸ்ரவேல் ஜனத்தாரிடம் ஏற்கெனவே ஏராளமான பாவங்கள் நிரம்பியிருக்கிறது. அவர்கள் மேலும் மேலும் கர்த்தருக்கு விரோதமான குற்றங்களை செய்து, தங்களுடைய பாவத்தின் அளவை அதிகரிக்கச் செய்கிறார்கள். இஸ்ரவேலர்கள் இப்போது தங்கள் சகோதரரையும் சிறைப்பிடித்து, தங்களுடைய அக்கிரமத்தின் அளவைக் கூட்டுகிறார்கள்.

தீர்க்கதரிசியாகிய ஓதேத், இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களை நோக்கி, "நீங்கள் எனக்குச் செவிகொடுத்து, நீங்கள் உங்கள் சகோதரரிடத்தில் சிறைபிடித்துக்கொண்டுவந்தவர்களைத் திரும்ப அனுப்பிவிடுங்கள்" *(2நாளா 28:11)* என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலர் மேல் இருக்கிறது. இஸ்ரவேலர் தங்கள் சகோதரரிடத்தில் இரக்கம் காண்பித்தால் மாத்திரமே, அவர்களால் கர்த்தரிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இஸ்ரவேலர் மேலும் கர்த்தருடைய உக்கிரகோபம் இருக்கிறது. அவர்களாலும் தண்டனைக்கு தப்பிக்க முடியாது. அவர்கள் தங்கள் சகோதரராகிய யூதாவின் மனுஷருக்கு இரக்கம் காண்பித்தால், கர்த்தருடைய இரக்கம் ஒருவேளை இஸ்ரவேலருக்கு கிடைக்கலாம்.

தீர்க்கதரிசியாகிய ஓதேத் சொல்லுகிற வார்த்தைகள், இஸ்ரவேலின் சேனையிலுள்ள பிரபுக்களுடைய இருதயத்தையும், சேனைத்தலைவர்களுடைய இருதயத்தையும் தொடுகிறது. சிறைப்பிடித்து கொண்டுவரப்பட்ட யூதர்களை விடுதலை பண்ணவேண்டுமென்று இஸ்ரவேலின் பிரபுக்கள் தீர்மானிக்கிறார்கள்.

எப்பிராயீம் புத்திரரின் தலைவரில் சிலபேராகிய யோகனானின் குமாரன் அசரியாவும், மெஷிலெமோத்தின் குமாரன் பெரகியாவும், சல்லூமின் குமாரன் எகிஸ்கியாவும், அத்லாயின் குமாரன் அமாசாவும் யுத்தத்திலிருந்து வந்தவர்களுக்கு விரோதமாக எழும்புகிறார்கள் *(2நாளா 28:12)*.

நீதிக்காக யுத்தம் பண்ண கர்த்தர் எப்போதுமே ஒருசில மனுஷரை எழுப்பிவிடுகிறார். கர்த்தர் நீதியின் நிமித்தம் யுத்தம் செய்து, நீதியை நிலைநிறுத்துகிறார். இங்கு இஸ்ரவேல் புத்திரர் யுத்தத்தில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இரண்டு இலட்சம் யூதா புத்திரரை அடிமையாக இழுத்து வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, சிறைப்பிடிக்கப்பட்டு வந்தவர்களையும், அவர்களுடைய கொள்ளையுடைமைகளையும் திரும்பவும் அவர்களுடைய நாட்டிற்கு அனுப்பிவிடுகிறார்கள். சமாரியா தேசத்தாரே அவர்களை எரிகோ வரையிலும் கொண்டுவந்து விட்டுவிடுகிறார்கள். *(2நாளா 28:12-15)*.

இஸ்ரவேலின் பிரபுக்கள், சேனையிலுள்ளவர்களை நோக்கி: "நீங்கள் சிறைபிடித்த இவர்களை இங்கே உள்ளே கொண்டுவரவேண்டாம்; நம்மேல் திரளான குற்றமும் இஸ்ரவேலின்மேல் உக்கிரமான கோபமும் இருக்கையில், நீங்கள் கர்த்தருக்கு முன்பாக நம்மேல் குற்றம் சுமரப்பண்ணத்தக்கதாய், நம்முடைய பாவங்களையும் நம்முடைய குற்றங்களையும் அதிகமாக்க நினைக்கிறீர்கள்" *(2நாளா 28:13)* என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் சொல்லுகிற வார்த்தைகளுக்கு, சேனையிலுள்ளவர்கள் கீழ்ப்படிகிறார்கள். அவர்களெல்லோரும் ஆயுதபாணிகளாயிருக்கிறார்கள். அவர்கள் சிறைபிடித்தவர்களையும், கொள்ளையுடைமைகளையும், பிரபுக்களுக்கு முன்பாகவும் சமஸ்த சபைக்கு முன்பாகவும் விட்டுவிடுகிறார்கள் (2நாளா 28:14). அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டவர்களையும், கொள்ளைப்பொருட்களையும் பிரபுக்கள் வசமாக ஒப்புக்கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ணி, யூதாவின் மனுஷரை சிறைப்பிடித்திருக்கிறார்கள். அவர்களுடைய உடமைகளை கொள்ளையிட்டிருக்கிறார்கள். இந்த செயலின் மூலமாக இஸ்ரவேலருடைய வீரம் வெளிப்படவில்லை. இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள், சிறைப்பிடித்தவர்களையும், கொள்ளை உடமைகளையும், பிரபுக்களின் வசத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களுடைய உண்மையான வீரம் வெளிப்படுகிறது.

நம்முடைய சுயஆசைகளையும், சுயவிருப்பங்களையும் நிறைவேற்றாமல், கர்த்தருடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய ஆசாபாசங்களுக்கு கீழ்ப்படிவதைவிட கர்த்தருடைய தெய்வீக அதிகாரத்திற்கு கீழ்ப்படிவதே நமக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கும்.

இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள், சிறைப்பிடித்தவர்களை பிரபுக்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள். இஸ்ரவேலின் பிரபுக்கள், சிறைப்பிடிக்கப்பட்ட யூதாதேசத்தாரை, ஆதரித்து விடுதலைபண்ணுகிறார்கள்.

அப்பொழுது பேர் குறிக்கப்பட்ட மனுஷர் எழும்பி, சிறைபிடிக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அவர்களில் வஸ்திரமில்லாத சகலருக்கும் கொள்ளையில் எடுக்கப்பட்ட வஸ்திரங்களைக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு உடுப்பையும் பாதரட்சைகளையும் போடுவிக்கிறார்கள். அவர்களுக்குச் சாப்பிடவும் குடிக்கவும் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எண்ணெய் வார்க்கிறார்கள்.

அவர்களில் பலட்சயமானவர்களையெல்லாம் கழுதைகள்மேல் ஏற்றி, பேரீச்சமரங்களின் பட்டணமாகிய எரிகோவிலே அவர்கள் சகோதரரிடத்துக்குக் கொண்டுவந்து விடுகிறார்கள். அதன்பின்பு இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்கள் சமாரியாவுக்குத் திரும்புகிறார்கள் (2நாளா 28:15).

யூதாவுக்கு தண்டனை
2நாளா 28:16-27

2நாளா 28:16. அக்காலத்திலே ஆகாஸ் என்னும் ராஜா, அசீரியாவின் ராஜாக்கள் தனக்கு ஒத்தாசைபண்ண அவர்களிடத்துக்கு ஆட்களை அனுப்பினான்.

2நாளா 28:17. ஏதோமியரும் கூடவந்து, யூதாவை முறிய அடித்து, சிலரைச் சிறைபிடித்துப் போயிருந்தார்கள்.

2நாளா 28:18. பெலிஸ்தரும் யூதாவிலே சமபூமியிலும் தெற்கேயும் இருக்கிற பட்டணங்களின்மேல் விழுந்து, பெத்ஷிமேசையும், ஆயலோனையும், கெதெரோத்தையும், சொக்கோவையும் அதின் கிராமங்களையும், திம்னாவையும் அதின் கிராமங்களையும், கிம்சோவையும் அதின் கிராமங்களையும் பிடித்து அங்கே குடியேறினார்கள்.

2நாளா 28:19. யூதாவின் ராஜாவாகிய ஆகாசினிமித்தம் கர்த்தர் யூதாவைத் தாழ்த்தினார்; அவன் யூதாவைச் சீர்குலைத்து, கர்த்தருக்கு விரோதமாய் மிகவும் துரோகம் பண்ணினான்.

2நாளா 28:20. அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் அவனிடத்தில் வந்தான்; அவனை நெருக்கினானே அல்லாமல் அவனைப் பலப்படுத்தவில்லை.

2நாளா 28:21. ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பங்கும், ராஜ அரமனையில் ஒரு பங்கும், பிரபுக்களின் கையில் ஒரு பங்கும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தும், அவனுக்கு உதவிகிடைக்கவில்லை.

2நாளா 28:22. தான் நெருக்கப்படுகிற காலத்திலும் கர்த்தருக்கு விரோதமாய் அந்த ஆகாஸ் என்னும் ராஜா துரோகம்பண்ணிக்கொண்டே இருந்தான்.

2நாளா 28:23. எப்படியென்றால்: சீரியா ராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்குத் துணை செய்கிறபடியினால், அவர்கள் எனக்கும் துணைசெய்ய அவர்களுக்குப் பலி யிடுவேன் என்று சொல்லி, தன்னை முறிய அடித்த தமஸ்குவின் தெய்வங்களுக்கு அவன் பலியிட்டான்; ஆனாலும் அது அவனும் இஸ்ரவேல் அனைத்தும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று.

2நாளா 28:24. ஆகாஸ் தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைச் சேர்த்து, தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைத் துண்டு துண்டாக்கி, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப்போட்டு, எருசலேமில் மூலைக்குமூலை பலிபீடங்களை உண்டுபண்ணி,

2நாளா 28:25. அந்நிய தெய்வங்களுக்குத் தூபங்காட்டும்படிக்கு, யூதாவின் ஒவ்வொரு பட்டணத்திலும் மேடைகளை உண்டு பண்ணி, தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குக் கோபமூட்டினான்.

2நாளா 28:26. அவனுடைய மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய ஆதியோடந்தமான சகல நடபடிகளும் யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 28:27. ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின்பு, அவனை எருசலேம் நகரத்தில் அடக்கம்பண்ணினார்கள். ஆனாலும் இஸ்ரவேல் ராஜாக்களின் கல்லறைகளில் அவனைக் கொண்டுவந்து வைக்கவில்லை; அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

ஆகாசின் பாவங்களினிமித்தமாக கர்த்தர் யூதாதேசத்தை தாழ்த்துகிறார். அவர்கள் மிகுந்த துன்பங்களையும், பாடுகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். யூதாஜனத்தாரின் உபத்திரவங்களுக்கு, அவர்களுடைய ராஜாவாகிய ஆகாசின் பாவங்களே காரணம்.

யூதாவின் ராஜாவாகிய ஆகாசினிமித்தம் கர்த்தர் யூதாவைத் தாழ்த்துகிறார்; அவன் யூதாவைச் சீர்குலைத்து, கர்த்தருக்கு விரோதமாய் மிகவும் துரோகம்பண்ணுகிறான் (2நாளா 28:19).

ஆகாஸ் யூதா தேசத்தில் கர்த்தருடைய ஆராதனையை நிறுத்திப் போட்டான். கர்த்தருடைய பிள்ளைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டான். யூதா தேசத்தில் கர்த்தருடைய மெய்யான ஆராதனைக்குப் பதிலாக விக்கிரகாராதனையைச் செய்கிறான்.

ஆகாஸ் யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கும்போது, சீரிய தேசத்திற்கும், வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கும் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. அவ்விரண்டு தேசங்களின் ராஜாக்களும் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள்.

ஆகாசின் ஆட்சிக்காலத்தில் சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனும், இஸ்ரவேலின் ராஜாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவும், எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வந்து ஆகாசை முற்றிக்கை போடுகிறார்கள்; ஆனாலும் ஜெயிக்கமாட்டாதே போகிறார்கள் (2இராஜா 16:5).

சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் எருசலேமை பிடிக்கவேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. எருசலேம் தங்களுக்கு சொந்தமான நகரமாயிருக்கவேண்டும் என்றும், தங்களுக்கு பிடித்தமான ஒரு ராஜாவை எருசலேமிலே வைக்கவேண்டும் என்றும் சீரியாவின் ராஜாவும், இஸ்ரவேலின் ராஜாவும் ஆசைப்படுகிறார்கள்.

"நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார்; இந்த இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகளாகிய சீரியரோடே வந்த ரேத்சீனும், ரெமலியாவின் மகனும் கொண்ட உக்கிரக்கோபத்தினிமித்தம் உன் இருதயம் துவள வேண்டாம்" (ஏசா 7:6).

இந்த யுத்தத்தில் சீரியருக்கும், வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. ஆனாலும் சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீன் ஏலாத்தைத் திரும்பச் சீரியாவோடே சேர்த்துக்கொண்டு, யூதரை ஏலாத்திலிருந்து துரத்துகிறான்; சீரியர் ஏலாத்திற்கு வந்து இந்நாள் வரைக்கும் அவ்விடத்திலே குடியாயிருக்கிறார்கள் (2இராஜா 16:6).

இந்த ஏலாத்தை அமத்சியா சீரியரிடமிருந்து பிடித்து வைத்திருந்தான் (2இராஜா 14:22). அமத்சியா பிடித்து வைத்திருந்த ஏலாத்தை இப்போது சீரியர் தங்கள் வசமாய்ச் சேர்த்துக்கொள்கிறார்கள்.

ஆகாசுக்கு கர்த்தரிடத்தில் பக்தியில்லை. அவன் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டான். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவனுக்கு கிடைக்கவில்லை. ஆகையினால் அவனுடைய மனதிலே தைரியமுமில்லை, தெம்புமில்லை. பெலமுமில்லை. சத்துருக்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணும் துணிச்சலும் ஆகாசுக்கு இல்லை.

சீரியாவின் ராஜாவும், இஸ்ரவேலின் ராஜாவும் தனக்கு விரோதமாக முற்றிக்கையிட்டிருக்கும்போது, ஆகாஸ் கர்த்தரைத் தேடாமல் அசீரியா ராஜாவின் உதவியைத் தேடுகிறான்.

ஆகாஸ் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: "நான் உம்முடைய அடியானும் உம்முடைய குமாரனுமாயிருக்கிறேன்; நீர் வந்து, எனக்கு விரோதமாயெழும்பின சீரியா ராஜாவின் கைக்கும், இஸ்ரவேல் ராஜாவின் கைக்கும் என்னை நீங்கலாக்கிவிடும்" (2இராஜா 16:7) என்று சொல்லச்சொல்லுகிறான்.

ஆகாஸ் கர்த்தருடைய உதவியை நாடாமல், அசீரிய ராஜாவின் உதவியை நாடுவது அவனுடைய பாவமாயிருக்கிறது. இந்தப் பாவத்திற்கு அவனுக்கு கடுமையான தண்டனை கிடைக்கிறது. அசீரிய ராஜா ஆகாசுக்கு இலவசமாக உதவி செய்யமாட்டான். அவன் ஆகாசிடமிருந்து வெகுமதிகளையும், காணிக்கைகளையும் எதிர்பார்ப்பான்.

ஆகாசுக்கு அசீரியா ராஜாவின் எதிர்பார்ப்பு தெரிந்திருக்கிறது. அதன் பிரகாரமாக, ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்திலும் ராஜாவின் அரமனைப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையும் பொன்னையும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் காணிக்கையாக அனுப்புகிறான் (2இராஜா 16:8).

கர்த்தர் நம்முடைய பொன்னையோ, வெள்ளியையோ, பொக்கிஷங்களையோ எதிர்பார்க்கவில்லை. அவர் நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறார். தம்முடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியவேண்டும் என்று மாத்திரமே கர்த்தர் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறார். அசீரியாவின் ராஜாவோ ஆகாசின் பொக்கிஷங்களை எதிர்பார்க்கிறான்.

அசீரியாவின் ராஜா, ஆகாஸ் அனுப்பின காணிக்கைகளைப் பெற்றுக்கொண்டு அவனுக்கு செவிகொடுக்கிறான். அசீரியா ராஜா தமஸ்குவுக்குப்போய் அதைப்பிடித்து, அதின் குடிகளைக் கீர்பட்டணத்திற்குச் சிறைபிடித்துக்கொண்டுபோய், ரேத்சீனைக் கொன்றுபோடுகிறான் (2இராஜா 16:9).

அசீரியாவின் ராஜா சீரியர்களை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறான். இது ஆகாசுக்கு வெற்றி கிடைத்ததுபோல தெரிகிறது. ஆனால் ஆகாசோ, தன்னையே அறியாமல், சீரியாவின் ராஜாவுக்கு அடிமையாகிவிடுகிறான்.

ஆகாஸ் சீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசரிடத்திற்கு தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பியபோது, "நான் உம்முடைய அடியானும், உம்முடைய குமாரனுமாயிருக்கிறேன்" (2இராஜா 16:7) என்று சொல்லச்சொன்னான். ஆகாஸ் தன்னுடைய வார்த்தையின் பிரகாரமாக, அசீரியாவின் ராஜாவுக்கு அடிமையாகிவிடுகிறான்.

ஆகாசுக்கு அசீரியா ராஜாவின் உதவி கிடைத்திருக்கிறது. அதேவேளையில் ராஜாவின் அரமனை பொக்கிஷங்களிலும், கர்த்தருடைய ஆலயத்து பொக்கிஷங்களிலும் பேரிழப்பு உண்டாயிற்று. யூதாதேசத்தின் பொன்னும் வெள்ளியும் அசீரியா தேசத்திற்கு சொந்தமாயிற்று.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷம் ஆகாஸ் ராஜாவுக்கு சொந்தமானதல்ல. அது கர்த்தருடைய பொக்கிஷம். ஆலயத்தின் பொக்கிஷம் கர்த்தருக்கு மாத்திரமே சொந்தமானது. ஆனால் ஆகாஸோ, யாருடைய அனுமதியுமில்லாமல், கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷத்தையும், அசீரியாவின் ராஜாவுக்கு காணிக்கையாகக் கொடுத்தனுப்புகிறான். ஆகாஸ் செய்த ஒரு பாவம், அவனை மற்ற பாவங்களை செய்ய வழிநடத்துகிறது.

ஆகாசின் காலத்திற்கு முன்பு, யூதாதேசம் ஐசுவரியத்திலும், பெலத்திலும் சிறந்து விளங்கிற்று. ஆனால் கர்த்தர் இப்போது யூதாதேசத்தை தாழ்த்துகிறார். கர்த்தர் ஆகாசை நெருக்குகிறார். தான் நெருக்கப்படுகிற காலத்திலும், கர்த்தருக்கு விரோதமாய் அந்த ஆகாஸ் என்னும் ராஜா துரோகம்பண்ணிக்கொண்டே இருக்கிறான் *(2நாளா 28:22)*.

ஆகாஸ் யூதாவை சீர்குலைத்துப்போடுகிறான். யூதாதேசம் நிர்வாணமாயிருப்பதுபோல இருக்கிறது. ஆகாஸ் யூதாவின் வஸ்திரங்களையெல்லாம் உரிந்துபோட்டு, அதை நிர்வாணமாக விட்டுவிடுகிறான். ஆகாசின் பாவத்தினால், யூதாதேசத்தாருக்கு பிரச்சனைகள் வருகிறது. ஆகாஸ் நெருக்கப்படும்போது, அவனோடுகூட யூதாதேசத்தாரும் நெருக்கப்படுகிறார்கள்.

வஸ்திரமில்லாமல், நிர்வாணமாயிருக்கும் மனுஷன் அவமானப்படுவதுபோல, யூதாவின் மனுஷரும் அவமானப்படுகிறார்கள். யூதாவுக்கு விரோதமாக ஆபத்துக்கள் வரும்போது, அவர்களுக்கு பாதுகாப்பு எதுவுமில்லை. யூதாவின் மனுஷர் ஆயுதமில்லாத மனுஷனைப்போல, ஆபத்துக்கு அருகாமையிலிருக்கிறார்கள்.

"ஜனங்கள் தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணமாக்கியிருந்தான். அவர்கள் நிர்வாணமாயிருக்கிறதை மோசே கண்டான்" *(யாத் 32:25)*.

பாவம் மனுஷரை நிர்வாணமாக்குகிறது. அது மனுஷருடைய தன்மானத்தையும், மேன்மையையும், மதிப்பையும் மரியாதையையும் உரித்துப்போடுகிறது.

ஏதோமியர் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். அவர்கள் யூதாவை முறியடித்து, சிலரை சிறைப்பிடித்து போயிருக்கிறார்கள். யூதாவின் ராஜாவாகிய அமத்சியா, ஏதோமியரில் அநேகரை, கன்மலை உச்சியிலிருந்து தள்ளிவிட்டு கொன்றுபோடுகிறான்.

"யூதா புத்திரர், பதினாயிரம்பேரை உயிரோடு பிடித்து, ஒரு கன்மலையுச்சியிலே கொண்டுபோய், அவர்களெல்லாரும் நொறுங்கிப்போகத்தக்கதாய் அந்தக் கன்மலையுச்சியிலிருந்து கீழே தள்ளிவிட்டார்கள்" *(2நாளா 25:12)*

அமத்சியா தங்களுக்கு செய்த தீங்குக்கு, ஏதோமியர் யூதாமனுஷரை பழிவாங்குகிறார்கள். இதன் நிமித்தமாக ஏதோமியர், யூதாவை முறியடிக்கிறார்கள். யூதாவின் மனுஷரில் சிலரை சிறைப்பிடித்து, தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விடுகிறார்கள்.

ஏதோமியர் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, பெலிஸ்தரும் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். பெலிஸ்தரும் யூதாவிலே சமபூமியிலும் தெற்கேயும் இருக்கிற பட்டணங்களின்மேல் விழுந்து, பெத்ஷிமேசையும், ஆயலோனையும், கெதெரோத்தையும், சொக்கோவையும் அதின் கிராமங்களையும், திம்னாவையும் அதின் கிராமங்களையும், கிம்சோவையும் அதின் கிராமங்களையும் பிடித்து அங்கே குடியேறுகிறார்கள் *(2நாளா 28:18)*.

பெலிஸ்தர்கள் யூதாதேசத்தின் எல்லையில் வாசம்பண்ணுகிறார்கள். அவர்கள் யூதாதேசத்தின் பட்டணங்களையும் கிராமங்களையும் பிடித்து, அங்கே இருக்கிற யூதாவின் மனுஷரைத் துரத்திவிட்டு, தாங்கள் வந்து குடியேறுகிறார்கள்.

உசியா பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினான். உசியாவின் நிமித்தமாய் பெலிஸ்தர் இப்போது யூதாதேசத்தாரை பழிவாங்குகிறார்கள். "அவன் புறப்பட்டுப்போய், பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, காத்தின் அலங்கத்தையும், யப்னேயின் அலங்கத்தையும், அஸ்தோத்தின் அலங்கத்தையும் இடித்துப்போட்டு, அஸ்தோத் நாட்டிலும் பெலிஸ்தருக்குள்ளும் பட்டணங்களைக் கட்டினான்" *(2நாளா 26:6)*.

ஆகாஸ் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறான். கர்த்தர் ஆகாசை நெருக்குகிறார். அவனோ தன் நெருக்கத்திலும் கர்த்தரைத் தேடவில்லை. அவன் அந்நியதேசத்து ராஜாக்களைத் தேடுகிறான். ஏதோமியரும் பெலிஸ்தரும் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். ஆகாசோ கர்த்தருடைய உதவியைத் தேடாமல், அசீரியா ராஜாவின் உதவியைத் தேடுகிறான்.

ஏதோமியரும் யூதாவை முறியடிக்கிறார்கள். அமத்சியாவின் நாட்களில் யூதாவுக்கு விரோதமான முதலாவது கலகம் உண்டாயிற்று. (2நாளா 25:11-19) இப்போது ஏதோமியர் யூதாவின்மீது யுத்தம் பண்ணி ஜெயிக்கிறார்கள். அதுபோலவே பெலிஸ்தரும் யூதாவின்மீது யுத்தம் பண்ணி ஜெயித்து விடுகிறார்கள். (2நாளா 28:17-19).

அக்காலத்திலே ஆகாஸ் என்னும் ராஜா, அசீரியாவின் ராஜாக்கள் தனக்கு ஒத்தாசைபண்ண அவர்களிடத்துக்கு ஆட்களை அனுப்புகிறான் (2நாளா 28:16).

ஆகாஸ், சீரியரிடத்திலும், எப்பிராயீம் புத்திரரிடத்திலும் ஏற்கெனவே தோற்றுப் போயிருக்கிறான். இப்போது தனக்கு ஒத்தாசை பண்ண வேண்டுமென்று அசீரியாவின் ராஜாக்களை நாடுகிறான். இதன் மூலமாக வடக்கு இஸ்ரவேல் தேசத்திலும், தெற்கு யூதா தேசத்திலும் அசீரியர்கள் உள்ளே நுழைவதற்கு வாய்ப்புண்டாயிற்று.

ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பங்கும், ராஜ அரமனையில் ஒரு பங்கும், பிரபுக்களின் கையில் ஒரு பங்கும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தும், அவனுக்கு உதவிகிடைக்கவில்லை (2நாளா 28:21).

அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் ஆசாசினிடத்தில் வருகிறான்; தில்காத்பில்நேசர் ஆகாசை நெருக்கினானே அல்லாமல் அவனைப் பலப்படுத்தவில்லை (2நாளா 28:20).

சீரியாவுக்கும், எப்பிராயீமுக்கும் எதிராக யுத்தம் பண்ணுவதற்கு தனக்கு உதவி புரியுமாறு ஆகாஸ் அசீரியாவின் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். ஆனால் அவனோ ஆகாசிற்கு உதவி புரிவதற்குப் பதிலாக அவனை உபத்திரவப்படுத்தினான். தனக்கு உதவி செய்வதற்காக ஆகாஸ் அசீரியாவின்ராஜாவாகிய தில்காத்பில்நேசருக்கு கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பங்கும், ராஜ அரமனையில் ஒரு பங்கும், பிரபுக்களின் கையில் ஒரு பங்கும் எடுத்து கொடுத்தான். ஆனாலும் அசீரியாவின் ராஜா ஆகாசிற்கு உதவி புரியவில்லை. (2நாளா 28:21; 2இராஜா 16:17-18).

அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் ஆகாசுக்கு உதவிசெய்யவில்லை. அவன் ஆகாசை நெருக்குகிறான். தான் நெருக்கப்பட்டாலும், ஆகாஸ் கர்த்தருக்கு கீழ்ப்படிய மறுக்கிறான். அவன் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து துரோகம்பண்ணிக்கொண்டே இருக்கிறான். ஆகாசின் பாவங்கள் அதிகரிக்கிறது.

ஆகாசின் நாட்களில் அவனுக்குப் பல பக்கங்களிலிருந்தும் நெருக்கங்கள் வருகிறது. அவன் நெருக்கப்படுகிற காலத்திலும் கர்த்தரைத் தேடவில்லை. அதிகமாகத் துன்மார்க்கம் பண்ணுகிறான். கர்த்தரைச் சார்ந்து கொண்டால், அவர் உதவி புரிவார். ஆனால் ஆகாசோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறான். எசேக்கியா நெருக்கப்படும்போது அவன் கர்த்தரை நாடுகிறான். கர்த்தர் அவனுக்கு உதவிபுரிகிறார். (2நாளா 32:12,30).

அசீரியாவின் ராஜா ஆகாசுக்கு துணை செய்யவில்லை. சீரியாவின் தெய்வங்கள் தனக்கு துணை செய்யும் என்று ஆகாஸ் நம்புகிறான். இது ஆகாசின் மதியீனம். ஆகாஸ் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நம்பாமல், சீரியா ராஜாக்களின் தெய்வங்களை நம்புகிறான். அவர்களுடைய விக்கிரகங்களை நம்புகிறான்.

"சீரியா ராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்குத் துணை செய்கிறபடியினால், அவர்கள் எனக்கும் துணைசெய்ய அவர்களுக்குப் பலியிடுவேன்" என்று சொல்லி, தன்னை முறிய அடித்த தமஸ்குவின் தெய்வங்களுக்கு ஆகாஸ் பலியிடுகிறான்; ஆனாலும் அது அவனும் இஸ்ரவேல் அனைத்தும் நாசமாகிறதற்கு எதுவாயிற்று (2நாளா 28:23).

ஆகாஸ் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிறான். கர்த்தருடைய பலிபீடம் எருசலேமிலே இருக்கிறது. ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தை தீட்டுப்படுத்துகிறான். ஆலயத்திலுள்ள பணிமுட்டுக்களையெல்லாம் துண்டு துண்டாக்கி, அவற்றை அழித்துப்போடுகிறான். பணிமுட்டுக்கள் துண்டு துண்டாக உடைத்துப்போடப்பட்டதினால், இனிமேல் ஆசாரியர்களால் இந்தப் பணிமுட்டுக்களை பயன்படுத்த முடியாது.

ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளையும் பூட்டிப்போடுகிறான். இதனால் கர்த்தரை ஆராதிப்பதற்கு ஒருவராலும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை.

ஆகாசோ தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைச் சேர்த்து, தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைத் துண்டு துண்டாக்கி, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப்போடுகிறான் *(2நாளா 28:24).*

ஆகாஸ் எருசலேமில் மூலைக்குமூலை பலிபீடங்களை உண்டுபண்ணுகிறான். ஆகாஸ் அந்நிய தெய்வங்களுக்குத் தூபங்காட்டும்படிக்கு, யூதாவின் ஒவ்வொரு பட்டணத்திலும் மேடைகளை உண்டு பண்ணுகிறான் *(2நாளா 28:25).*

ஆகாஸ் சீரியருடைய தெய்வங்களை ஆராதிக்கிறான். எருசலேமிலே விக்கிரகங்களுக்கு பலிபீடங்களையும், யூதாவின் பட்டணங்களிலெல்லாம் மேடைகளையும் உண்டுபண்ணி கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறான்.

"கீலேயாத் அக்கிரம ஸ்தலமோ? ஆம், அவர்கள் அபத்தரானார்கள்; கில்காலிலே காளைகளைப் பலியிடுகிறார்கள்; அவர்களுடைய பீடங்கள் வயல்வரப்புகளில் இருக்கிற கற்குவியல்களைப்போல் இருக்கிறது" *(ஓசி 12:11).*

ஆகாஸ் மேடைகளிலும், மலைகளின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் பலியிட்டு தூபங்காட்டி வருகிறான். ஆனாலும் இதுவரையிலும் கர்த்தருடைய பலிபீடத்திற்கு ஒரு சேதமும் வரவில்லை. கர்த்தருடைய ஆலயத்தில் அவருடைய பலிபீடம் இருக்கிறது. பக்தியுள்ள யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய், அங்கே பலியிடுகிறார்கள்.

ஆகாசின் ஆட்சிக்காலத்தில் கர்த்தருடைய பலிபீடம் மாற்றப்படுகிறது. ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பலிபீடத்தை நீக்கிப்போட்டு, அங்கே ஒரு புதிய பலிபீடத்தை நிறுவுகிறான். இது விக்கிரகாராதனையின் பலிபீடம். கர்த்தருடைய பரிசுத்தமான ஆலயத்தில் விக்கிரகங்களுக்கோ, விக்கிரகங்களின் பலிபீடத்திற்கோ இடமில்லை. ஆனால் ஆகாசோ கர்த்தருடைய ஆலயத்திலே விக்கிரகத்தின் பலிபீடத்தை நிறுவி, அதற்கு அங்கே இடம் கொடுக்கிறான்.

புதிய பலிபீடத்தின் சாயல், தமஸ்குவிலுள்ள விக்கிரக பலிபீடத்தின் சாயலுக்கு ஒப்பாயிருக்கிறது. ஆகாஸ் ராஜாவே தமஸ்குவிலே அந்தப் பலிபீடத்தைப் பார்த்தான்.

அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசர், சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனைக் கொன்றுபோட்ட பின்பு, ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலுள்ள அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசருக்கு எதிர்கொண்டுபோய்த் தமஸ்குவிலுள்ள பலிபீடத்தைக் காண்கிறான். ராஜாவாகிய ஆகாஸ் அந்தப் பலிபீடத்தின் சாயலையும், அதினுடைய சகல வேலைப்பாடாகிய அதின் மாதிரியையும் ஆசாரியனாகிய உரியாவுக்கு அனுப்புகிறான் *(2இராஜா 16:10).*

யூதாவின் ராஜாவாகிய ஆகாஸ் அசீரியாவின் ராஜாவுக்கு நன்றிசொல்லுவதற்காக தமஸ்குவுக்குப் போனான். அசீரியா ராஜாவின் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவும், அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதை உறுதிபண்ணுவதற்கும் ஆகாஸ் அசீரியாவின் ராஜாவைப் பார்க்கப்போகிறான்.

ஆகாஸ் அசீரியாவின் ராஜாவை பார்க்கப்போன இடத்திலே ஒரு பலிபீடத்தைப் பார்க்கிறான். தமஸ்குவிலுள்ள இந்தப் பலிபீடம் ஆகாசின் கண்களுக்கு பிரியமாயிருக்கிறது. அந்தப் பலிபீடம் விநோதமாக செய்யப்பட்டிருக்கிறது. அதிலே வேலைப்பாடுகளும் அதிகமாய் இடம்பெற்றிருக்கிறது. தமஸ்குவிலுள்ள பலிபீடத்தின் சாயலுக்கொத்த ஒரு பலிபீடம் தன்னுடைய தேசத்திலும் இருக்க வேண்டுமென்று ஆகாஸ் ஆசைப்படுகிறான்.

யூதாதேசத்திலே ஆகாஸ் ராஜாவாயிருக்கும்போது, உரியா என்பவன் பிரதான ஆசாரியனாயிருக்கிறான். ராஜாவாகிய ஆகாஸ் அந்தப் பலிபீடத்தின் சாயலையும், அதினுடைய சகல வேலைப்பாடாகிய அதின் மாதிரியையும் ஆசாரியனாகிய உரியாவுக்கு அனுப்புகிறான். அந்தப் பலிபீடத்திற்கொத்த பலிபீடத்தை கட்டுமாறு ராஜாவாகிய ஆகாஸ், ஆசாரியனாகிய உரியாவுக்கு கட்டளைகொடுக்கிறான்.

ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து வருகிறதற்குள் ஆசாரியனாகிய உரியா அப்படிக்கொத்த பலி பீடத்தைக்கட்டி முடிக்கிறான். ஆசாரியனாகிய உரியா ராஜாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து அனுப்பின கட்டளையின்படியெல்லாம் செய்கிறான் (2இராஜா 16:11).

கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற பிரதான ஆசாரியன், தமஸ்குவிலுள்ள விக்கிரகத்தின் பலிபீடத்தைப்போன்ற ஒரு பலிபீடத்தைக் கட்டுவது மிகப்பெரிய பாவம். இது ஒரு துன்மார்க்கமான செயல். யூதாவின் ராஜாவும் விக்கிரகாராதனைக்காரன். யூதாதேசத்திலுள்ள பிரதான ஆசாரியனும் விக்கிரகாராதனைக்காரன்.

பிரதான ஆசாரியனாகிய உரியா தன்னுடைய அதிகாரத்தை தப்பிதமாகப் பயன்படுத்துகிறான். தன்னுடைய ஆசாரிய ஊழியத்தையே தீட்டுப்படுத்துகிறான். கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டிய உரியா, விக்கிரகத்திற்கு ஊழியம் செய்கிறான். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டிய ஆசாரியன், இப்போது மனுஷருடைய இச்சைகளுக்கு கீழ்ப்படிகிறான். மனுஷருடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு உரியா ஆசாரியனாயிருக்கிறான். அவன் ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணுகிறான். கர்த்தர் தன்னை நம்பி ஒப்படைத்திருக்கிற ஊழியத்திற்கு உரியா உண்மையுள்ளவனாகயிராமல், கர்த்தரை வஞ்சிக்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்திலே வெண்கல பலிபீடம் இருக்கிறது. உரியாவோ ஆகாசின் பலிபீடத்தை, கர்த்தருடைய வெண்கல பலிபீடத்திற்கு அருகாமையில் வைக்கிறான்.

ராஜா தமஸ்குவிலிருந்து வந்தபோது, அவன் அந்தப் பலிபீடத்தைப்பார்த்து, அந்தப் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, அதின்மேல் பலி யிட்டுகிறான். ஆகாஸ் தன் சர்வாங்க தகனபலியையும் தன்போஜனபலியையும் தகனித்து, தன் பானபலியை வார்த்து, தன் சமாதானபலிகளின் இரத்தத்தை அந்தப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறான் (2இராஜா 16:12,13).

ஆகாஸ் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு பலிகளை செலுத்தவில்லை. அவன் தமஸ்குவின் விக்கிரகத்திற்கு, தன்னுடைய பலிபீடத்திலே பலிகளை செலுத்துகிறான்.

கர்த்தருடைய ஆலயத்திலே ஆகாஸ் தன்னுடைய பலிபீடத்திற்கு முக்கியமான இடத்தைக் கொடுத்து, கர்த்தருடைய வெண்கல பலிபீடத்தை வேறு இடத்திற்கு மாற்றுகிறான்.

கர்த்தரின் சந்நிதியில் இருந்த வெண்கலப் பலிபீடத்தை ஆகாஸ் தன் பலிபீடத்திற்கும் கர்த்தரின் ஆலயத்திற்கும் நடுவே ஆலயத்தின் முகப்பிலிருந்து எடுத்து, அதைத் தன் பலிபீடத்திற்கு வடபுறமாய் வைக்கிறான் (2இராஜா 16:14).

ஆகாசின் பலிபீடம் வடிவத்தில் பெரியதாயிருக்கிறது. ராஜாவாகிய ஆகாஸ் ஆசாரியனாகிய உரியாவை நோக்கி: "இந்தப் பெரிய பலிபீடத்தின்மேல் நீ காலைச் சர்வாங்க தகனபலியையும், மாலைப்போஜனபலியையும், ராஜாவின் சர்வாங்க தகனபலியையும், அவருடைய போஜனபலியையும், தேசத்தினுடைய சகல ஜனத்தின் சர்வாங்க தகனபலியையும், அவர்கள் போஜனபலியையும், அவர்கள் பானபலிகளையும் செலுத்தி, அதின்மேல் சர்வாங்க தகனங்களின் சகல இரத்தத்தையும், பலிகளின் சகல இரத்தத்தையும் தெளிப்பாயாக" (2இராஜா 16:15) என்று கட்டளை கொடுக்கிறான்.

ஆகாஸ் கர்த்தருடைய பலிபீடத்தையும் மறந்துவிடவில்லை. ஆகாஸ் உரியாவை நோக்கி, "அந்த வெண்கலப் பலிபீடமோ, நான் சன்னதம் கேட்கிறதற்கு உதவும்" (2இராஜா 16:15) என்று சொல்லுகிறான்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், "கர்த்தரே போதும்" என்னும் திருப்தியோடிருக்கவேண்டும். கர்த்தர்மீது திருப்தியில்லாமல், நூதன காரியங்களை தேடிப்போகிறவர்களுக்கு, ஒரு ஆதாயமும் கிடைக்காது. அவர்களுடைய பிரயாசங்கள் வீணாய்ப்போகும்.

ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்திலே இருந்த வெண்கல பலிபீடத்தை அழித்துப்போடவில்லை. கர்த்தர் வெண்கல பலிபீடத்தை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தேவாலயத்தில் ஸ்தாபித்திருக்கிறார். ஆனால் ஆகாசோ, கர்த்தருடைய பலிபீடத்தின் மூலமாக, ஒரு புதிய நன்மை உண்டாகவேண்டுமென்று ஆசைப்படுகிறான். கர்த்தருடைய பலிபீடம் "சன்னதம் கேட்கிறதற்கு உதவும்" என்று சொல்லுகிறான்.

சன்னதம் கேட்பதற்காக கர்த்தர் தம்முடைய பலிபீடத்தை ஆலயத்திலே கட்ட சொல்லவில்லை. வெண்கல பலிபீடத்தின்மீது சர்வாங்க தகனபலிகளை செலுத்தவேண்டும். ஆனால் ஆகாசோ, தான் நிறுவின, புதிய பலிபீடத்திலே சர்வாங்க தகனபலியை செலுத்துகிறான். கர்த்தருடைய வெண்கல பலிபீடத்தில், சன்னதம் கேட்க ஆசைப்படுகிறான். கர்த்தருடைய பலிபீடம் சன்னதம் சொல்லாது.

யூதருடைய பாரம்பரிய சரித்திரத்தின் பிரகாரம், ஆகாஸ் பிற்காலத்தில், கர்த்தருடைய வெண்கல பலிபீடத்தினால், ஒரு சூரிய கடிகாரத்தை செய்தான் என்று சொல்லுகிறார்கள்.

"அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்" *(2இராஜா 20:11).*

யூதாஜனங்கள் எருசலேமிலே கர்த்தரை ஆராதிக்கவேண்டும். ஆனால் ஆகாசோ கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப்போட்டு, யூதாஜனங்களை விக்கிரகாராதனைக்கு நேராக வழிநடத்துகிறான். ஆகாஸ் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி, அவருக்கு கோபம் மூட்டுகிறான்.

ஆகாசுக்கு அசீரியாவின் ராஜாக்கள் உதவிசெய்யவில்லை. அந்த ராஜாக்களைப்போலவே சீரியாவின் தெய்வங்களும் உதவி செய்யாது. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. ஆகாஸ் தமஸ்குவின் தெய்வங்களுக்கு பலியிட்டது, அவனும், இஸ்ரவேல் அனைத்தும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று.

ஆகாசின் காலத்திலே யூதாதேசத்தில் விக்கிரகாராதனைக்கு வலுவான அஸ்திபாரம் போடப்படுகிறது. ஆகாசுக்கு அடுத்தபடியாக எசேக்கியா யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிறான். எசேக்கியாவின் காலத்தில் யூதாவிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. ஆனாலும் ஆகாசினால் அறிமுகப்படுத்தப்பட்ட விக்கிரகாராதனையின் தாக்கங்கள், யூதாதேசத்திலே, எசேக்கியாவின் காலத்திலும் காணப்படுகிறது.

ஆகாசுடைய மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய ஆதியோடந்தமான சகல நடபடிகளும் யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது *(2நாளா 28:26).*

கர்த்தருடைய ஆலயம் பரிசுத்தமானது. ஆகாசோ கர்த்தருடைய ஆலயத்தை பரிசுத்தகுலைச்சலாக்குகிறான். அவன் ஆலயத்தின் கட்டிடத்தை ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும் ஆலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களை தீட்டுப்படுத்துகிறான்.

"அந்த ஆதாரங்களின் வேலைப்பாடு என்னவெனில், அவைகளுக்குச் சவுக்கைகள் உண்டாயிருந்தது; சவுக்கைகளோ சட்டங்களின் நடுவில் இருந்தது. சட்டங்களுக்கு நடுவே இருக்கிற அந்தச் சவுக்கைகளில் சிங்கங்களும், காளைகளும், கேருபீன்களும், சட்டங்களுக்கு மேலாக ஒரு திரணையும், சிங்கங்களுக்கும் காளைகளுக்கும் கீழாக சாய்வான வேலைப்பாடுள்ள ஜலதாரைகளும் அதனோடே இருந்தது" *(1இராஜா 7:28,29).*

ஆகாஸ் தன்னுடைய முப்பத்தாறாவது வயதில் மரித்துப்போகிறான். ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்படுகிறான்.

ஆகாசின் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 16:20). ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தை எந்த அளவுக்கு தீட்டுப்படுத்தினானோ, அந்த அளவுக்கு ஆகாசின் குமாரனாகிய எசேக்கியா, கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தப்படுத்துகிறான்.

ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனை எருசலேம் நகரத்தில் அடக்கம்பண்ணுகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் ராஜாக்களின் கல்லறைகளில் அவனைக் கொண்டுவந்து வைக்கவில்லை; அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2நாளா 28:27).

29 அதிகாரம்

எசேக்கியாவின் ஆட்சிக்காலம் மகிமையுள்ளதாயிருக்கிறது. அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். எசேக்கியாவின் காலத்திலே கர்த்தருடைய ஆராதனையும், யூதாமார்க்கத்தின் உபதேசங்களும் சீராக நடைபெறுகிறது. எசேக்கியாவும் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்கிறான்.

எசேக்கியா யூதாதேசத்தின் ராஜாவானவுடன், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான். எசேக்கியா ஆசாரியருக்கும் லேவியருக்கும் ஆலோசனைகளை சொல்லி, அவர்களை கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியத்திலே மறுபடியும் பயன்படுத்துகிறான் (2நாளா 29:1-11).

லேவியர்கள் கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கிறார்கள். தேவாலயத்திலுள்ள எல்லா காரியங்களையும் ஒழுங்காயும் முறையாயும் வைக்கிறார்கள் (2நாளா 29:12-19).

எசேக்கியாவுக்கு முன்பு, யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணினவர்கள், கர்த்தருக்கும், கர்த்தருடைய பிரமாணத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எசேக்கியா தன்னுடைய பாவத்திற்காகவும், யூதாஜனத்தாரின் பாவத்திற்காகவும் பாவநிவாரண பலிகளை செலுத்துகிறான். ராஜாவும் ஜனங்களும் கர்த்தருக்குள் மறுபடியும் சந்தோஷமாயிருக்கிறார்கள் (2நாளா 29:20-36).

எசேக்கியாவின் ஊழியம் 2நாளா 29:1-11

2நாளா 29:1. எசேக்கியா இருபத்தைந்தாம் வயதில் ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாண்டான்; சகரியாவின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின்பேர் அபியாள்.

2நாளா 29:2. அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

2நாளா 29:3. அவன் தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுதுபார்த்து,

2நாளா 29:4. ஆசாரியரையும் லேவியரையும் அழைத்துவந்து, அவர்களைக் கிழக்குவீதியிலே கூடிவரச்செய்து,

2நாளா 29:5. அவர்களை நோக்கி: லேவியரே, கேளுங்கள்; நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி, அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்.

2நாளா 29:6. நம்முடைய பிதாக்கள் துரோகம் பண்ணி, நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, அவரை விட்டு விலகி, தங்கள் முகங்களைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டுத் திருப்பி, அதற்கு முதுகைக் காட்டினார்கள்.

2நாளா 29:7. அவர்கள் பரிசுத்தஸ்தலத்தில் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலி செலுத்தாமலும், தூபங்காட்டாமலும், விளக்குகளை அணைத்துப்போட்டு, மண்டபத்தின் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள்.

2நாளா 29:8. ஆகையால் கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் வந்து, அவர் இவர்களை, நீங்கள் உங்கள் கண்களினால் காண்கிறபடி, துயரத்துக்கும் திகைப்புக்கும் பழிப்புக்கும் ஒப்புக்கொடுத்தார்.

2நாளா 29:9. இதோ, இதினிமித்தம் நம்முடைய பிதாக்கள் பட்டயத்தினால் விழுந்து, நம்முடைய குமாரரும் நம்முடைய குமாரத்திகளும் நம்முடைய மனைவிகளும் சிறையிருப்பில் அகப்பட்டார்கள்.

2நாளா 29:10. இப்போதும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு, அவரோடே உடன்படிக்கைபண்ண என் மனதிலே நிர்ணயித்துக்கொண்டேன்.

2நாளா 29:11. என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டார் என்றான்.

எசேக்கியா தன்னுடைய இருபத்தைந்தாம் வயதில் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். யோவாஸ் ராஜாவானபோது அவனுக்கு ஏழுவயதாயிற்று. யோவாசுக்கு முன்பு யூதாதேசத்தை துன்மார்க்கமான இரண்டு ராஜாக்கள் ஆட்சி செய்தார்கள்.

யோசியா தன்னுடைய எட்டாவது வயதில் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். யோவாசும், யோசியாவும் கொஞ்சவயதிலே ராஜாவானதினால், அவர்களால் யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை உடனே ஏற்படுத்த முடியவில்லை. அவர்களுக்கு ஏற்ற வயதாகும் வரையிலும், ஊழியத்தில் காலதாமதமுண்டாயிற்று.

எசேக்கியாவோ தன்னுடைய இருபத்தைந்தாம் வயதில் யூதாதேசத்தின்மீது ராஜாவாகிறான். அவன் ராஜாவானவுடன் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஆரம்பித்து விடுகிறான்.

எசேக்கியா இருபத்தைந்தாம் வயதில் ராஜாவாகி, இருபத்தொன்பது வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; சகரியாவின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின்பேர் அபியாள். எசேக்கியா தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் *(2நாளா 29:1,2)*.

யூதா தேசத்தில் எசேக்கியாவுக்கு முன்பும் சில நல்ல ராஜாக்கள் ராஜ்யபாரம் செய்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதை செய்தார்கள்" என்று பொதுவாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எசேக்கியாவின் நல்ல சுபாவத்தைப்பற்றிச் சொல்லப்படும்போது, "அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்" *(2நாளா 29:2)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது ராஜாவைப்போலவே, எசேக்கியா ராஜாவும், கர்த்தர்மீதும், கர்த்தருடைய பிரமாணத்தின்மீதும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியின்மீதும் பிரியமாயும், பக்தி வைராக்கியமாயும் இருக்கிறான்.

அவன் தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுதுபார்க்கிறான். அவன் ஆசாரியரையும் லேவியரையும் அழைத்துவந்து, அவர்களைக் கிழக்குவீதியிலே கூடிவரச்செய்கிறான் *(2நாளா 29:3,4)*.

எசேக்கியா கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவன். எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ், யூதாவின் ராஜாக்களில் மிகப்பெரிய துன்மார்க்கன். அவன் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தவன். ஆகாஸ் ஒரு விக்கிரகாராதனைக்காரன். ஆனாலும் ஆகாசின் குமாரனாகிய எசேக்கியா கர்த்தருக்குப் பயந்து, அவருடைய வழியில் நடக்கிறான்.

எசேக்கியா தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் *(2இராஜா 18:3)*.

"சுபாவத்தின்படி காட்டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?" *(ரோம 11:24)*.

எசேக்கியா தன் சுபாவத்தின்படி காட்டொலிமரத்திலிருந்து வெட்டப்பட்டவன். எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ் ஒரு துன்மார்க்கன். ஆனாலும் எசேக்கியா நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டு, நற்கனிகளைக் கொடுக்கிறான். ஆகாஸ் துன்மார்க்கனாயிருந்தாலும், எசேக்கியா நீதிமானாயிருக்கிறான். ஆகாஸ் விக்கிரகங்களை ஆராதித்தாலும், எசேக்கியா கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கிறான்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் எசேக்கியாவின்மீது தங்கியிருக்கிறது. எசேக்கியா ஆகாசின் அரண்மனையில் வளர்ந்தவன். ஆகாஸ் எசேக்கியாவுக்கு முன்பாக நீதிமானாய் நடக்கவில்லை. எசேக்கியா ஆகாசின் முன்மாதிரியைப் பின்பற்றியிருந்தால், அவனும் ஆகாசைப்போலவே சீர்கெட்டுப்போயிருப்பான்.

ஆகாஸ் தன் குமாரன் எசேக்கியாவுக்கு நல்ல கல்வியையும், நல்லொழுக்கத்தையும் கற்றுக்கொடுக்கவில்லை. அவன் தன்னுடைய குமாரனுக்கு முன்பாக நல்ல முன்மாதிரியாகவும் ஜீவிக்கவில்லை. ஆனாலும் எசேக்கியா நல்லொழுக்கமுள்ளவனாயிருக்கிறான்.

ஆகாஸ் யூதாதேசத்திலே ராஜ்யபாரம்பண்ணும்போது, உரியா ஆசாரியனாயிருக்கிறான். உரியாவும் ஆகாசின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, தமஸ்குவிலிருந்து கொண்டு வரப்பட்ட மாதிரியின்படியே, விக்கிரகத்திற்கு ஒரு பலிபீடத்தை செய்தவன். ஆகையினால் உரியாவும், எசேக்கியாவுக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களை போதித்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகாசின் அரண்மனையிலிருக்கிறவர்கள் எல்லோருமே விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட துன்மார்க்க குணமுள்ள கூட்டத்தாருக்கு மத்தியிலே எசேக்கியா வளருகிறான். எசேக்கியாவினிடத்தில் துன்மார்க்கமில்லை. அவன் நீதிமானாக இருக்கிறான். எசேக்கியா கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். கர்த்தர் எசேக்கியாவோடு கூடயிருக்கும்போது, சத்துருவின் அந்தகார கிரியைகள் எதுவும் அவனைப் பாதிக்கவில்லை. நமக்குள்ளே கர்த்தருடைய கிருபை கிரியை செய்யும்போது, அதற்கு விரோதமாக கிரியை செய்யும் வல்லமை எந்த அந்தகார சக்திக்கும் இல்லை. கர்த்தருடைய கிருபையை எந்த வல்லமையாலும் தடைபண்ண முடியாது.

எசேக்கியா தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறான் *(2இராஜா 18:3)*. எசேக்கியா இரண்டாம் தாவீதைப்போல இருக்கிறான். தாவீது கர்த்தருடைய வார்த்தையின்மீதும், கர்த்தருடைய ஆலயத்தின்மீதும் பிரியமாயிருந்தார். அதுபோலவே எசேக்கியாவும் அவற்றின்மீது பிரியமாயிருக்கிறான்.

தாவீதின் சந்ததியில் வந்தவர்களில் அநேகர் கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். யூதாதேசத்திலே கர்த்தருக்கு பயப்படும் பயம் குறைந்துபோயிற்று. ஜனங்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். யூதாதேசத்தின் ஆவிக்குரிய நிலமை மிகவும் மோசமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தமது கிருபையினால், தமக்கு ஏற்ற காலத்திலே, எசேக்கியாவைப்போன்ற ராஜாவை எழுப்புகிறார்.

யூதாதேசத்தில் ஆவிக்குரிய நிலமை வர வர மோசமாகிக்கொண்டே வருகிறது. யூதாதேசத்தார் எல்லோருமே கர்த்தரை விட்டு விட்டு, விக்கிரகங்களை பின்பற்றிப்போகும் சூழ்நிலை உருவாயிற்று. ராஜாக்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். கர்த்தரோ தமது கிருபையினால் தாவீதைப்போன்ற நற்குணமுள்ள, எசேக்கியாவை, யூதாதேசத்திற்கு ராஜாவாக எழுப்புகிறார்.

எசேக்கியா யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறான். "எசேக்கியா தன் ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷம் முதலாம் மாதத்தில் கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளைப் பழுதுபார்க்கிறான் *(2நாளா 29:3)*.

எசேக்கியாவின் காலத்தில் யூதாதேசம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. யூதாதேசத்தார் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப் போயிருக்கிறார்கள். யூதாதேசமெங்கும் மேடைகளும், விக்கிரகதோப்புகளும் நிரம்பியிருக்கிறது.

எசேக்கியா மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டுகிறான். அவன் மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போடுகிறான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; எசேக்கியா அதற்கு நிகுஸ்தான் என்று பேரிடுகிறான் (2இராஜா 18:4).

யூதாதேசத்திலே மேடைகளும், விக்கிரகதோப்புகளும் புதியவையல்ல. மேடைகளில் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுவதும் புதுமையானதல்ல. யூதாதேசத்தார் எப்போதுமே விக்கிரகங்களை ஆராதித்து வருகிறவர்கள். ஆனாலும் ஆகாசின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்திலே, விக்கிரகாராதனை அதிகமாக வளர்ச்சி பெறுகிறது.

எசேக்கியா யூதாதேசத்தில் காணப்படுகிற விக்கிரகாராதனைகளைப் பார்த்து, கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்கிறான். கர்த்தருடைய ஆவியானவர் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எசேக்கியாவை எழுப்புகிறார். எசேக்கியா யூதாதேசத்திற்கு ராஜாவானவுடன், அவன் தன்னுடைய ராஜரீக அதிகாரத்தைப் பயன்படுத்தி, யூதாதேசத்திலுள்ள மேடைகளை அகற்றிப்போடுகிறான். சிலைகளை தகர்த்துப்போடுகிறான். விக்கிரகத்தோப்புகளை வெட்டிப்போடுகிறான்.

மேடைகளும் விக்கிரகத்தோப்புகளும் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எசேக்கியாவோ யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனையை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறான்.

யூதாதேசத்திலுள்ள மேடைகளை விக்கிரகாராதனைக்கும் பயன்படுத்துகிறார்கள். சில விசேஷித்த சந்தர்ப்பங்களிலே கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும் அந்த மேடைகளை பயன்படுத்துகிறார்கள். ஆனாலும் யூதாதேசத்திலே மேடைகள் இருப்பது விக்கிரகாராதனைக்கு ஆதரவாயிருக்கும் என்று நினைத்து, எசேக்கியா மேடைகளை அகற்றிப்போடுகிறான்.

எசேக்கியாவுக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணமே சட்டமாகயிருக்கிறது. அவன் தன்னுடைய முன்னோர்களின் வழிகளிலே நடவாமல், கர்த்தருடைய வழிகளிலே நடக்கிறான். கர்த்தருடைய பிரமாணம் விக்கிரகாராதனைக்கு விரோதமாயிருக்கிறது. எசேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, யூதாதேசத்திலிருந்து, விக்கிரகாராதனையை முற்றிலுமாய் நீக்கிப்போடுகிறான்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்திலே பிரயாணம்பண்ணியபோது, மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கினார்.

"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ் செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான்" (எண் 21:6,7).

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்" (எண் 21:8).

"அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்" (எண் 21:9).

ஆரம்பத்திலே, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக, மோசே வெண்கல சர்ப்பத்தை செய்தார். ஆனால் பிற்காலத்தில், அந்த வெண்கல சர்ப்பமே இஸ்ரவேலருக்கு ஒரு விக்கிரகமாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் வெண்கல சர்ப்பத்திற்கு தூபங்காட்ட ஆரம்பித்துவிடுகிறார்கள். இதுவும் ஒரு விக்கிரகாராதனையாயிற்று.

எசேக்கியாவோ மோசே பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப்போடுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் இந்த வெண்கல சர்ப்பத்தை இதுவரையிலும் பாதுகாப்பாக பராமரித்து வந்தார்கள். கர்த்தர் வனாந்தரத்திலே தங்கள் முற்பிதாக்களுக்கு செய்த நன்மையை நினைவுகூரும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் வெண்கல சர்ப்பத்தை ஒரு சாட்சியாகவும், அடையாளமாகவும் பாதுகாத்து பராமரித்து வந்தார்கள்.

பிற்காலத்தில், இஸ்ரவேல் புத்திரர், மோசே பண்ணின வெண்கல சர்ப்பத்தை, ஒரு விக்கிரகமாக ஆராதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் சிருஷ்டிகரை தொழுதுகொள்ளாமல், சிருஷ்டியை தொழுதுகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகாராதனை முறைமைகளை புறஜாதியாரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள். மற்ற விக்கிரகங்களை ஆராதிப்பதுபோல, இஸ்ரவேல் புத்திரர் வெண்கல சர்ப்பத்திற்கும் தூபங்காட்டி அதை ஆராதிக்கிறார்கள். மோசே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் வெண்கல சர்ப்பத்தை செய்தார். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அந்த வெண்கல சர்ப்பத்திற்கு அதிக முக்கியத்துவம் உண்டாயிற்று.

வெண்கல சர்ப்பம், வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களுக்கு, நன்மை செய்தது. அதே வெண்கல சர்ப்பம் இப்போது, தங்களுக்கும் நன்மை செய்யும் என்று யூதாவின் மனுஷர் நம்பி, அதற்கு தூபங்காட்டி, அதை ஆராதிக்கிறார்கள்.

எசேக்கியா கர்த்தர்மீது பக்திவைராக்கியமாயிருக்கிறான். கர்த்தருடைய நாமம் மகிமையுள்ளது. கர்த்தருடைய மகிமையை வெண்கல சர்ப்பத்திற்கு ஒப்பாக்கக்கூடாது. யூதாவின் மனுஷர் வெண்கல சர்ப்பத்திற்கு தூபங்காட்டி, கர்த்தருடைய நாமத்தையும், அவருடைய மகிமையையும் தூஷிக்கிறார்கள்.

எசேக்கியா மோசே பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப்போட்டு, அதற்கு "நிகுஸ்தான்" என்று பேரிடுகிறான். நிகுஸ்தன் என்னும் பெயருக்கு "வெண்கல உலோகம்" என்று பொருள். வெண்கல சர்ப்பமானது ஒரு தெய்வமல்ல. அது சாதாரண உலோகம்தான் என்பதை தெளிவுபடுத்தும் வண்ணமாக, அதற்கு நிகுஸ்தான் என்று பேரிடப்படுகிறது.

சாதாரண வெண்கல உலோகத்திற்கு யாரும் தூபங்காட்ட மாட்டார்கள். வெண்கலத்தை தங்கள் தெய்வமாக ஆராதிக்கவும் மாட்டார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், மோசேயினால் உயர்த்தப்பட்ட சர்ப்பத்தை, ஒரு அடையாளமாகச் சொல்லியிருக்கிறார்.

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" (யோவா 3:14,15).

யூதாவின் மனுஷர் வெண்கல சர்ப்பத்திற்கு தூபங்காட்டி அதை ஆராதித்ததுபோல, நாமும் அதை ஆராதித்து விடக்கூடாது. நாம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். கர்த்தரை மாத்திரம் தொழுதுகொள்ளவேண்டும்.

எசேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை. எசேக்கியா கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடக்கிறான் (2இராஜா 18:5,6).

எசேக்கியா கர்த்தரிடத்தில் தைரியமாகவும் இருக்கிறான். அவர்மீது நம்பிக்கையும் வைத்திருக்கிறான். எசேக்கியா கர்த்தரை நம்பி நன்மை செய்கிறான். எசேக்கியா யூதாதேசத்திலே விக்கிரகாரதனையை ஒழிக்கும்போது, யூதாதேசத்தார் எசேக்கியாவுக்கு விரோதமாக எழும்புவதற்கு வாய்ப்புள்ளது.

எசேக்கியா யூதாதேசத்திலே மேடைகளை அகற்றி, சிலைகளை தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டிப்போட்டதினால், யூதாதேசத்தார் எசேக்கியா ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல், அவனுக்கு விரோதமாக கலகம்பண்ணுவதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால் எசேக்கியாவோ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறான். அவன் கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல், அவரையே சார்ந்திருக்கிறான். கர்த்தர் தன்னை எல்லா தீங்குகளுக்கும் விலக்கிப் பாதுகாப்பார் என்று, எசேக்கியா கர்த்தருக்குள் விசுவாசிக்கிறான்.

எசேக்கியா தன்னுடைய ஆவிக்குரிய கடமைகளை தொடர்ந்து நிறைவேற்றுகிறான். கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி எசேக்கியா முன்னேறிப்போகிறான். அவன் ஒருபோதும் பின்னிட்டுத் திரும்பிப்பார்க்கவுமில்லை. பின்வாங்கிப்போகவுமில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை எசேக்கியா, தொய்வில்லாமல், தொடர்ந்துசெய்கிறான்.

ஆகையால் கர்த்தர் எசேக்கியாவோடிருக்கிறார்; எசேக்கியா போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று; எசேக்கியா அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தைத் தள்ளிவிடுகிறான் (2இராஜா 18:7).

எசேக்கியா கர்த்தரோடு கூடயிருக்கிறான். கர்த்தரும் எசேக்கியாவோடு கூடயிருக்கிறார். எசேக்கியாவின் காரியங்களெல்லாமே அவனுக்கு அநுகூலமாக நடைபெறுகிறது.

எசேக்கியா கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, யூதாதேசத்திலிருந்து மேடைகளை அகற்றுகிறான். சிலைகளை தகர்க்கிறான். விக்கிரகத்தோப்புகளை வெட்டுகிறான். விக்கிரகாராதனையை நீக்கிப்போடுகிறான். எசேக்கியா ஆவிக்குரிய காரியங்களில் கர்த்தருக்கு பிரியமானதை செய்கிறான். எசேக்கியா யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனையை நீக்கிப்போட்டதினால், கர்த்தர் யூதாதேசத்தின்மீது சுமத்தப்பட்டிருந்த அசீரியா ராஜாவின் நுகத்தை நீக்கிப்போடுகிறார்.

எசேக்கியா பெலிஸ்தரைக் காசாமட்டும் அதின் எல்லைகள் பரியந்தமும், காவலாளர் காக்கிற கோபுரங்கள் தொடங்கி அரணான நகரங்கள் பரியந்தமும் முறியஅடிக்கிறான் (2இராஜா 18:8).

எசேக்கியா ஆட்சிக்கு வந்தவுடனேயே கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஆரம்பித்துவிடுகிறான். கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளை திறந்தது, எசேக்கியா செய்த முதலாவது ஊழியம். எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ், கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளை மூடிப்போட்டான். ஆகாசின் குமாரனாகிய எசேக்கியா, மூடப்பட்ட கதவுகளைத் திறக்கிறான்.

ஆகாசின் பாவத்தினிமித்தமாக, கர்த்தர் யூதாதேசத்தை தாழ்த்தியிருக்கிறார். அவர்கள் நிர்வாணிகளைப்போல அவமானமும், வேதனையும் உடையவர்களாயிருக்கிறார்கள். எசேக்கியா யூதாதேசத்தாரின் அவமானத்தையும், நிர்வாணத்தையும் பார்க்கிறான்.

எசேக்கியா ஆட்சிக்கு வந்தவுடன் தன்னுடைய ராஜ்யபாரத்தை பலப்படுத்த வேண்டுமென்று முயற்சிபண்ணவில்லை. யூதாஜனங்களுக்கு தேசத்திலே செழிப்பும், மேன்மையும் உண்டாகவேண்டும் என்பதற்காக, எசேக்கியா உடனே ஒன்றும் செய்யவில்லை. அவன் முதலாவதாக ஆவிக்குரிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். எசேக்கியா ராஜாவானவுடன், கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, அவைகளை பழுதுபார்க்கிறான்.

நாம் எந்த வேலையை செய்தாலும், கர்த்தருடைய வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை முதலாவதாக செய்யவேண்டும். நாம் ஒவ்வொரு நாளையும் கர்த்தரோடு ஆரம்பம்பண்ணும்போது, அந்த நாள் நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். கர்த்தர் நம்முடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பார். ஆரம்பம் சரியாகயிருக்கும்போது, அதன் முடிவும் சரியாகயிருக்கும்.

எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் அழைத்துவந்து, அவர்களைக் கிழக்குவீதியிலே கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி: "லேவியரே, கேளுங்கள்; நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி, அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்" (2நாளா 29:5) என்று சொல்லுகிறான்.

ஆகாசின் காலத்திலே லேவியருக்கும், ஆசாரியருக்கும் ஊழியம் இல்லை. ஆகாஸ் யூதாதேசமெங்கிலும் விக்கிரகங்களுக்கு பலியீடங்களையும், மேடைகளையும் கட்டினான். இதனால் கர்த்தருடைய ஆசாரியரும் லேவியரும் ஊழியமில்லாமல் மிகவும் வேதனைப்பட்டார்கள். அவர்களுடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருந்தது.

எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் கிழக்கு வீதியிலே கூடிவரச்செய்கிறான். கர்த்தருடைய ஆலயம் பரிசுத்தமில்லமால் தீட்டாயிருப்பதை எசேக்கியா அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் நோக்கி, "நம்முடைய பிதாக்கள் துரோகம் பண்ணி, நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, அவரை விட்டு விலகி, தங்கள் முகங்களைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டுத் திருப்பி, அதற்கு முதுகைக் காட்டினார்கள்" (2நாளா 29:6) என்று சொல்லுகிறான்.

எசேக்கியாவின் முன்னோர்கள் கர்த்தரையும் விட்டு விலகிவிட்டார்கள். கர்த்தருடைய ஆலயத்தையும் விட்டு விலகிவிட்டார்கள். அவர்கள் தங்கள் முகங்களை கர்த்தருடைய வாசஸ்தலத்தை விட்டுத் திருப்பி, அதற்கு தங்கள் முதுகைக் காட்டினார்கள். அவர்களெல்லோரும் கர்த்தருடைய ஆலயத்தைவிட்டே விலகிப்போய்விட்டார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனையோ ஊழியமோ நடைபெறவில்லை. எசேக்கியாவின் முன்னோர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலி செலுத்தாமலும், தூபங்காட்டாமலும் போனார்கள். அவர்கள் விளக்குகளை அணைத்துப்போட்டு, மண்டபத்தின் கதவுகளையும் பூட்டிப்போட்டார்கள் (2நாளா 29:7).

இந்த வாக்கியத்தில், "விளக்குகளை அணைத்துப்போட்டார்கள்" என்னும் வார்த்தைக்கு, "அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தை தியானிக்கவில்லை" என்று பொருள். அவர்கள் "தூபங்காட்டவில்லை" என்னும் வார்த்தைக்கு, "அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லை" என்று பொருள்.

எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் நோக்கி, "ஆகையால் கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் வந்து, அவர் இவர்களை, நீங்கள் உங்கள் கண்களினால் காண்கிறபடி, துயரத்துக்கும் திகைப்புக்கும் பழிப்புக்கும் ஒப்புக்கொடுத்தார். இதோ, இதினிமித்தம் நம்முடைய பிதாக்கள் பட்டயத்தினால் விழுந்து, நம்முடைய குமாரரும் நம்முடைய குமாரத்திகளும் நம்முடைய மனைவிகளும் சிறையிருப்பில் அகப்பட்டார்கள்" (2நாளா 29:8,9) என்று சொல்லுகிறான்.

எசேக்கியா ஆசாரியரிடத்திலும் லேவியரிடத்திலும் தன்னுடைய மனதின் தீர்மானத்தை சொல்லுகிறான். "இப்போதும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு, அவரோடே உடன்படிக்கைபண்ண என் மனதிலே நிர்ணயித்துக்கொண்டேன்" (2நாளா 29:10) என்று எசேக்கியா ஆசாரியரிடத்திலும் லேவியரிடத்திலும் சொல்லுகிறான்.

எசேக்கியா கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டுமென்று தன்னுடைய மனதிலே தீர்மானம்பண்ணியிருக்கிறான். இந்தத் தீர்மானத்தை அவன் தனக்காக செய்ததோடு, யூதாதேசத்தாருக்காகவும் செய்கிறான். யூதாதேசத்தார் இப்போது விக்கிரகங்களை ஆராதனை செய்தாலும், அவர்களை மறுபடியும் கர்த்தரிடத்தில் திருப்பி வரவேண்டும் என்று எசேக்கியா தன்னுடைய மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்கிறான்.

கர்த்தர் எல்லோருக்கும் ஊழியத்தைக் கொடுக்கிறார். எல்லோருக்கும் தாலந்துகளையும் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் எல்லோருக்கும், தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, வெவ்வேறு விதமான ஊழியங்களையும் கொடுக்கிறார். எசேக்கியா ஆசாரியரையும், லேவியரையும் கூடிவரச்செய்து, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தை நினைவுபடுத்துகிறான்.

எசேக்கியா ஆசாரியரையும், லேவியரையும் நோக்கி, "என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டார்' *(2நாளா 29:11)* என்று சொல்லுகிறான்.

எசேக்கியா, ஆசாரியரையும் லேவியரையும் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி, "லேவியரே, கேளுங்கள்; நீங்கள் இப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு, உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணி, அசுத்தமானதைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்" *(2நாளா 29:5)* என்று சொன்னான். இது எசேக்கியா அவர்களுக்கு கொடுத்த முதலாவது ஊழியம்.

ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்த பின்பு, அவர்கள் கர்த்தருக்கு பணிவிடை செய்யவேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு தூபங்காட்டவேண்டும். எசேக்கியா ஆசாரியரிடத்திலும், லேவியரிடத்திலும் முதலாவதாக பேசியபோது, அவர்களை, "லேவியரே" என்று அழைத்தான். எசேக்கியா இப்போது அவர்களை, "என் குமாரரே" என்று அழைக்கிறான். எசேக்கியா யூதாவின் மனுஷர் எல்லோருக்கும் ஆவிக்குரிய தகப்பனைபோலவும் இருக்கிறான்.

ஆசாரியரும் லேவியரும் முதலாவதாக கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணவேண்டும். அசுத்தமானதை பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டு போகவேண்டும். இந்த ஊழியத்தை ஆசாரியர்கள் இதுவரையிலும் செய்யவில்லை. அவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை செய்யாமலிருப்பது, கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது.

ஆசாரியர்கள் முதலாவதாக தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் தங்களை பரிசுத்தம்பண்ணிக்கொள்கிறார்கள். தங்களை பரிசுத்தம்பண்ணிக்கொண்ட பின்பு, அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் பரிசுத்தம்பண்ணுகிறார்கள்.

எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் கர்த்தருக்கு பணிவிடை செய்யும்படி உற்சாகப்படுத்துகிறார். எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் நோக்கி, "என் குமாரரே, இப்பொழுது அசதியாயிராதேயுங்கள்" என்று சொல்லுகிறார். இந்த வார்த்தைக்கு, "நீங்கள் வஞ்சிக்கப்படாதிருங்கள்" என்று பொருள்.

கர்த்தருக்கு ஊழியம் செய்யாதவர்கள், தாங்கள் கர்த்தரை அசட்டைபண்ணுவதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அசட்டைபண்ணவில்லை. அவர்கள் தங்களைத் தாங்களை வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பணிவிடையை செய்வதற்காக ஆசாரியரையும் லேவியரையும் தெரிந்துகொள்கிறார். அவர்கள் சும்மாயிருக்கவேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களை தம்முடைய ஊழியக்காரராகத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய பணிவிடையில் அசதியாயிருக்கக்கூடாது.

கர்த்தருக்கு பணிவிடை செய்வது நமக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம். கர்த்தருக்காக நாம் செய்கிற ஊழியம் உன்னதமான ஊழியம். கர்த்தர் நமக்கு ஊழியத்தைக் கொடுக்கும்போது, அதை மற்றவர்கள் செய்வார்கள் என்று நினைத்து, நாம் அசதியாயிருக்கக்கூடாது. கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஊழியத்தை, நாம் ஜெபத்தோடும், மனத்தாழ்மையோடும், பொறுப்போடும் செய்யவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யாமல் சும்மாயிருக்கக்கூடாது. அசதியாயிருக்கக்கூடாது.

ஆலய சுத்திகரிப்பு
2நாளா 29:12-19

2நாளா 29:12. அப்பொழுது கோகாத் புத்திரரில் அமாசாயின் குமாரன் மாகாத்தும், அசரியாவின் குமாரன் யோவேலும், மெராரியின் புத்திரரில் அப்தியின் குமாரன் கீசும், எகலேலின் குமாரன் அசரியாவும், கெர்சோனியரில் சிம்மாவின் குமாரன் யோவாகும், யோவாகின் குமாரன் ஏதேனும்,

2நாளா 29:13. எலிச்சாப்பான் புத்திரரில் சிம்ரியும், ஏயெலும், ஆசாப்பின் புத்திரரில் சகரியாவும், மத்தனியாவும்,

2நாளா 29:14. ஏமானின் புத்திரரில் எகியேலும், சிமேயியும், எதுத்தூனின் புத்திரரில் செமாயாவும், ஊசியேலும் என்னும் லேவியர் எழும்பி,

2நாளா 29:15. தங்கள் சகோதரரைக் கூடிவரச் செய்து, பரிசுத்தம் பண்ணிக்கொண்டு கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள்.

2நாளா 29:16. ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்கும்படி உட்புறத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தில் கண்ட சகல அசுத்தத்தையும் வெளியே கர்த்தருடைய ஆலயப்பிராகாரத்தில் கொண்டுவந்தார்கள்; அப்பொழுது லேவியர் அதை எடுத்து, வெளியே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோனார்கள்.

2நாளா 29:17. முதல் மாதம் முதல் தேதியிலே அவர்கள் பரிசுத்தம் பண்ணத்துவக்கி, எட்டாந்தேதியிலே கர்த்தருடைய மண்டபத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தை எட்டுநாளில் பரிசுத்தம் பண்ணி, முதலாம் மாதம் பதினாறாம் தேதியில் அதை முடித்தார்கள்.

2நாளா 29:18. அவர்கள் ராஜாவாகிய எசேக்கியாவினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தரின் ஆலயத்தையும், சர்வாங்க தகனபலிபீடத்தையும், அதினுடைய சகல பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களின் மேஜையையும், அதின் சகல பணிமுட்டுகளையும் சுத்திகரித்து,

2நாளா 29:19. ராஜாவாகிய ஆகாஸ் அரசாளும்போது தம்முடைய பாதகத்தினால் எறிந்துபோட்ட சகல பணிமுட்டுகளையும் முஸ்திப்பாக்கிப் பரிசுத்தம்பண்ணினோம்; இதோ, அவைகள் கர்த்தரின் ஆலயத்திற்கு முன்பாக இருக்கிறது என்றார்கள்.

ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கிறார்கள். ஆலயத்தை சுத்தம்பண்ணுவது மிகவும் அவசியமான வேலை. இது ஒரு நல்ல வேலை. இந்த வேலையை சீக்கிரமாகவும், தீவிரமாகவும் செய்யவேண்டும்.

யாரெல்லாம் ஆலயத்தை சுத்திகரித்தார்கள் என்னும் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவரும் ஆசாரியரும் லேவியருமாயிருக்கிறார்கள்.

கோகாத், கெர்சோன், மிராரி ஆகியோர் ஆசாரியரில் முக்கியமான மூன்று வகுப்பார். இந்த ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் இரண்டுபேர் கர்த்தருடைய ஆலயத்தை சுத்தம்பண்ணுகிறாகள்.

"கோகாத் புத்திரரில் அமாசாயின் குமாரன் மாகாத்தும், அசரியாவின் குமாரன் யோவேலும், மெராரியின் புத்திரரில் அப்தியின் குமாரன் கீசும், எகலெலின் குமாரன் அசரியாவும், கெர்சோனியரில் சிம்மாவின் குமாரன் யோவாகும், யோவாகின் குமாரன் ஏதேனும்" *(2நாளா 29:12)* கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்க எழும்புகிறார்கள்.

ஆசாப், ஏமான், எதுத்தூன் ஆகியோர் பாடகர்கள். இந்தப் பாடகர்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டுபேர் எழும்பி கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கிறார்கள்.

"எலிச்சாப்பான் புத்திரரில் சிம்ரியும், ஏயெலும், ஆசாப்பின் புத்திரரில் சகரியாவும், மத்தனியாவும், ஏமானின் புத்திரரில் எகியேலும், சிமேயியும், எதுத்தூனின் புத்திரரில் செமாயாவும், ஊசியேலும் என்னும் லேவியர் எழும்பி" *(2நாளா 29:13,14)* கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்க வருகிறார்கள்.

இவர்கள் எல்லோரும் தங்கள் சகோதரரைக் கூடிவரச் செய்து, பரிசுத்தம் பண்ணிக்கொண்டு கர்த்தருடைய வசனங்களுக்கொத்த ராஜாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வருகிறார்கள் *(2நாளா 29:15).*

சாதாரண லேவியரைவிட, பாடகரின் குடும்பத்தாரையிருக்கும் ஆசாப், ஏமான், எதுத்தூன் ஆகியோரின் குடும்பத்தார் கர்த்தரிடத்தில் அதிக பக்தி வைராக்கியமாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வேலையை நிறைவேற்றும்போது, அந்த வேலையை தலைமைப்பொறுப்பேற்று நடத்துவதற்கு தலைவர்களை நியமிக்கிறார்.

ஆசாரிய வகுப்பில் முதன்மையானவர்கள் எல்லோருமே, கர்த்தருடைய ஊழியத்தை சுறுசுறுப்பாய் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் பாரம்பரியத்தின் பிரகாரமாக, ஆசாரிய குடும்பத்தில் முதலாவது வகுப்பில் வந்திருக்கலாம். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை சுறுசுறுப்பாய்ச் செய்யாமல் சோர்வடைந்தவர்களைப்போல மெதுவாக செய்திருக்கலாம்.

யூதாவின் ராஜாவாயிருந்த ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தினுடைய மண்டபத்தின் கதவுகளை ஏற்கெனவே பூட்டிப்போட்டான். ஆலயத்தின் கதவுகள் பூட்டப்பட்ட நிலையிலிருக்கும்போது, ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்கும்படி உட்புறத்திலே பிரவேசிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் கண்ட சகல அசுத்தத்தையும் வெளியே கர்த்தருடைய ஆலயப்பிராகாரத்தில் கொண்டுவருகிறார்கள்; அப்பொழுது லேவியர் அதை எடுத்து, வெளியே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோகிறார்கள் *(2நாளா 29:16).*

கர்த்தருடைய ஆலயத்திற்குள்ளே விக்கிரகங்களும், விக்கிரகங்களின் பலிபீடங்களும் இருக்கிறது. ஆசாரியர்கள் அவற்றையெல்லாம் மொத்தமாய் சேகரித்து எடுத்து, ஆலயத்திற்கு வெளியே கொண்டுவருகிறார்கள். விக்கிரகங்களும் அதன் பலிபீடங்களும் அசுத்தமானவை.

ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கும்படி உட்புறத்திலே பிரவேசிக்கிறார்கள். ஆலயத்திலுள்ள அசுத்தங்களை அவர்கள் ஆலயப்பிராகாரம் வரையிலும் கொண்டு வருகிறார்கள். அதன்பின்பு ஆசாரியர்கள் அதை ஆலயத்திற்கு வெளியே கொண்டுபோகவில்லை. லேவியர்கள் அந்த அசுத்தங்களை எடுத்து, வெளியே கீதரோன் ஆற்றுக்கு கொண்டு போகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே, மகாபரிசுத்த ஸ்தலத்திலே, பிரதான ஆசாரியனைத் தவிர வேறு யாரும் அதற்குள்ளே பிரவேசிக்க முடியாது. மகாபரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும்படி, பிரதான ஆசாரியன் அதற்குள்ளே பிரவேசித்து, அதை சுத்தம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரிக்கும் வேலையை ஆசாரியரும் லேவியரும் சுறுசுறுப்பாய்ச் செய்கிறார்கள். அவர்கள் முதல் மாதம் முதல் தேதியிலே அவர்கள் பரிசுத்தம் பண்ணத்துவக்கி, எட்டாந்தேதியிலே கர்த்தருடைய மண்டபத்திலே பிரவேசித்து, கர்த்தருடைய ஆலயத்தை எட்டுநாளில் பரிசுத்தம் பண்ணி, முதலாம் மாதம் பதினாறாம் தேதியில் அதை முடிக்கிறார்கள் (2நாளா 29:17).

முதலாம் மாதம் முதலாம் தேதி என்பது புதிய வருஷத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. கர்த்தர் யூதாமனுஷருக்கு புதுவருஷ வாக்குத்தத்தமாக, சுத்திகரிப்பையும், பரிசுத்தத்தையும் கொடுத்திருக்கிறார். அவர்கள் இதை ஆதாரமாக வைத்து, ஒவ்வொரு வருஷமும் ஆலயத்தை சுத்தம்பண்ண வேண்டும்.

யூதாவின் மனுஷர் மத்தியிலே வருஷா வருஷம் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும். பழைய பாவங்களெல்லாம் அவர்களைவிட்டு நீக்கப்படவேண்டும். அவர்களுடைய இருதயத்தில் உண்மையான மனமாற்றம் காணப்படவேண்டும்.

பழைய வருஷங்களிலே, யூதாவின் மனுஷர் மத்தியிலே காணப்பட்ட அசுத்தங்கள், தீட்டானவைகளெல்லாம், ஆலயத்தை விட்டு வெளியேற்றப்படுகிறது. அதுபோலவே, யூதாமனுஷருடைய இருதயத்திலிருந்து பழைய பாவங்களெல்லாம் வெளியேற்றப்படவேண்டும். கர்த்தருடைய ஆலயத்திற்கு ஒப்பாயிருக்கிற சரீரங்கள் சுத்திகரிக்கப்படவேண்டும்.

லேவியரும், ஆசாரியரும் கர்த்தருடைய ஆலயத்தை பதினாறு நாட்களாக சுத்திகரிக்கிறார்கள். கர்த்தருடைய மண்டபத்தை எட்டு நாட்களும், அவருடைய ஆலயத்தை எட்டு நாட்களும் பரிசுத்தம்பண்ணுகிறார்கள். ஆசாரியர்கள் ஆலயத்தை சுத்திகரித்து முடித்த பின்பு, அதை எசேக்கியா ராஜாவினிடத்தில் போய் சொல்லுகிறார்கள்.

ஆசாரியரும் லேவியரும் ராஜாவாகிய எசேக்கியாவினிடத்தில் போய்: "நாங்கள் கர்த்தரின் ஆலயத்தையும், சர்வாங்க தகனபலிபீடத்தையும், அதினுடைய சகல பணிமுட்டுகளையும், சமுகத்தப்பங்களின் மேஜையையும், அதின் சகல பணிமுட்டுகளையும் சுத்திகரித்தோம்" (2நாளா 29:18) என்றும்,

"ராஜாவாகிய ஆகாஸ் அரசாளும்போது தம்முடைய பாதகத்தினால் எறிந்துபோட்ட சகல பணிமுட்டுகளையும் முஸ்திப்பாக்கிப் பரிசுத்தம்பண்ணினோம்; இதோ, அவைகள் கர்த்தரின் ஆலயத்திற்கு முன்பாக இருக்கிறது" (2நாளா 29:19) என்றும், சொல்லுகிறார்கள்.

எசேக்கியா ராஜாவின் இருதயம் கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் வாஞ்சையாயிருக்கிறது என்பது ஆசாரியருக்கும் லேவியருக்கும் நன்றாய்த் தெரியும். எசேக்கியா கர்த்தருடைய பலிபீடத்திலே பாவநிவாரண பலிகளை செலுத்த வாஞ்சையோடிருக்கிறான். கர்த்தருடைய பலிபீடமும், ஆலயத்தில் பயன்படுத்தப்படும் பரிசுத்த பணிமுட்டுகளும் சுத்திகரிக்கப்பட்டு, கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது என்னும் நல்ல செய்தியை, ஆசாரியரும் லேவியரும் எசேக்கியா ராஜாவுக்கு சொல்லுகிறார்கள்.

ஆகாஸ் தன்னுடைய காலத்திலே, கர்த்தருடைய ஆலயத்திலிருந்த சகல பணிமுட்டுக்களையும் வெளியே எறிந்துபோட்டான். இது அவனுடைய பாதகம். எசேக்கியாவின் காலத்தில், ஆசாரியரும் லேவியரும், ஆகாஸ் வெளியே எறிந்துபோட்ட பணிமுட்டுகளை முஸ்திப்பாக்கி பரிசுத்தம்பண்ணியிருக்கிறார்கள்.

"முஸ்திப்பாக்கி" என்னும் வார்த்தைக்கு, "ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து" அல்லது "வகைவகையாய்ப் பிரித்து" என்று பொருள். கர்த்தருடைய ஆலயத்திலுள்ள சகல பணிமுட்டுகளும் இப்போது கர்த்தரின் ஆலயத்திற்கு முன்பாக இருக்கிறது.

பலிகள்
2நாளா 29:20-36

2நாளா 29:20. அப்பொழுது ராஜாவாகிய எசேக்கியா காலமே எழுந்திருந்து, நகரத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு, கர்த்தரின் ஆலயத்திற்குப் போனான்.

2நாளா 29:21. அப்பொழுது ராஜ்யபாரத்திற்காகவும் பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் யூதாவுக்காகவும் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும், ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஏழு வெள்ளாட்டுக் கடாக்களையும் பாவநிவாரணபலியாகக் கொண்டுவந்தார்கள்; அவைகளைக் கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடுங்கள் என்று அவன் ஆசாரியராகிய ஆரோனின் புத்திரருக்குச் சொன்னான்.

2நாளா 29:22. அப்படியே ஆசாரியர் காளைகளை அடித்து, அந்த இரத்தத்தைப் பிடித்துப் பலி பீடத்தின்மேல் தெளித்தார்கள்; ஆட்டுக்கடாக்களை அடித்து, அவைகளின் இரத்தத்தைப் பலி பீடத்தின்மேல் தெளித்தார்கள்; ஆட்டுக்குட்டிகளையும் அடித்து, அவைகளின் இரத்தத்தையும் பலிபீடத்தின்மேல் தெளித்தார்கள்.

2நாளா 29:23. பிற்பாடு பாவநிவாரண பலிக்கான வெள்ளாட்டுக்கடாக்களை ராஜாவுக்கும் சபையாருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்; அவைகள்மேல் அவர்கள் தங்கள் கைகளை வைத்தார்கள்.

2நாளா 29:24. இஸ்ரவேல் அனைத்திற்காகவும், சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் செலுத்துங்கள் என்று ராஜா சொல்லியிருந்தான்; ஆதலால் ஆசாரியர் அவைகளை அடித்து, இஸ்ரவேல் அனைத்திற்கும் பாவநிவிர்த்தி உண்டாக்க, அவைகளின் இரத்தத்தால் பலிபீடத்தின்மேல் பிராயச்சித்தஞ்செய்தார்கள்.

2நாளா 29:25. அவன், தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்தினான்; இப்படிச் செய்யவேண்டும் என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உண்டாயிருந்தது.

2நாளா 29:26. அப்படியே லேவியர் தாவீதின் கீதவாத்தியங்களையும், ஆசாரியர் பூரிகைகளையும் பிடித்து நின்றார்கள்.

2நாளா 29:27. அப்பொழுது எசேக்கியா சர்வாங்க தகனபலிகளைப் பலி பீடத்தின்மேல் செலுத்தக் கட்டளையிட்டான்; அதைச் செலுத்தத் துவக்கின நேரத்தில் கர்த்தரைத் துதிக்கும் கீதமும் பூரிகைகளும், இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீது ஏற்படுத்தின கீதவாத்தியங்களும் முழங்கத் தொடங்கினது.

2நாளா 29:28. கீதத்தைப்பாடி, பூரிகைகளை ஊதிக்கொண்டிருக்கையில், சர்வாங்க தகனபலியைச் செலுத்தித் தீருமட்டும் சபையார் எல்லாரும் பணிந்துகொண்டிருந்தார்கள்.

2நாளா 29:29. பலியிட்டுத் தீர்ந்தபோது, ராஜாவும் அவனோடிருந்த அனைவரும் தலைகுனிந்து பணிந்துகொண்டார்கள்.

2நாளா 29:30. பின்பு எசேக்கியா ராஜாவும் பிரபுக்களும் லேவியரை நோக்கி: நீங்கள் தாவீதும் ஞானதிருஷ்டிக்காரனாகிய ஆசாபும் பாடின வார்த்தைகளினால் கர்த்தரைத் துதியுங்கள் என்றார்கள்; அப்பொழுது மகிழ்ச்சியோடே துதிசெய்து தலைகுனிந்து பணிந்துகொண்டார்கள்.

2நாளா 29:31. அதின்பின்பு எசேக்கியா: இப்போதும் நீங்கள் கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம்பண்ணினீர்கள்; ஆகையால் கிட்டவந்து, கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் கொண்டுவாருங்கள் என்றான்; அப்பொழுது சபையார் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும், இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகனபலிகளையும் கொண்டுவந்தார்கள்.

2நாளா 29:32. சபையார் கொண்டுவந்த சர்வாங்க தகனபலிகளின் தொகை எழுபது காளைகளும், நூறு ஆட்டுக்குட்டிகளுமே, இருநூறு ஆட்டுக்குட்டிகளுமே, இவைகளெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனமாயின.

2நாளா 29:33. அறுநூறு காளைகளும் மூவாயிரம் ஆடுகளும் பிரதிஷ்டையாக்கப்பட்டது.

2நாளா 29:34. ஆனாலும் ஆசாரியர்கள் கொஞ்சம் பேரானதினால் அவர்களால் அந்தச் சர்வாங்க தகனமான ஜீவன்களையெல்லாம் அடித்துத் தோலுரிக்க முடியாதிருந்தது; அதினாலே அந்த வேலை தீருமட்டாகவும், மற்ற ஆசாரியர் தங்களைப் பரிசுத்தம் பண்ணுமட்டாகவும், அவர்கள் சகோதரராகிய லேவியர் அவர்களுக்கு உதவிசெய்தார்கள்; தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ள லேவியர் ஆசாரியரைப்பார்க்கிலும் மன உற்சாகமுள்ளவர்களாயிருந்தார்கள்.

2நாளா 29:35. சர்வாங்க தகனபலிகளும், ஸ்தோத்திரபலிகளின் கொழுப்பும், சர்வாங்க தகனங்களுக்கடுத்த பானபலிகளும் மிகுதியாயிருந்தது; இவ்விதமாய் கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம்பண்ணப்பட்டது.

2நாளா 29:36. தேவன் ஜனத்தை ஆயத்தப்படுத்தினதைக் குறித்து எசேக்கியாவும் ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்; இந்தக் காரியத்தைச் செய்யும்படியான யோசனை சடுதியாய் உண்டாயிற்று.

ராஜாவாகிய எசேக்கியா காலமே எழுந்திருந்து, நகரத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு, கர்த்தரின் ஆலயத்திற்குப் போகிறான். யூதாசபையார் எல்லோரும் மறுநாளிலே கர்த்தருடைய ஆலயத்தில், ராஜாவுக்கு முன்பாக கூடிவந்திருக்கிறார்கள் *(2நாளா 29:20)*. அவர்கள் எல்லோருமே மிகவும் சந்தோஷமாகயிருக்கிறார்கள்.

தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. அது கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது. எசேக்கியாவும், நகரத்தின் பிரபுக்களும் காலமே எழுந்திருந்து, கர்த்தரின் ஆலயத்திற்குப் போய், ஆராதனை செய்கிறார்கள். *(2நாளா 29:20-36)*.

எருசலேமிலுள்ள நீதிமான்கள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திற்குப்போகவேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார்கள்.

"கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" *(சங் 122:1)*.

கர்த்தருடைய ஆலயம் சுத்தம்பண்ணப்பட்டிருக்கிறது என்னும் செய்தியையும், ஆலயத்திலே பலிசெலுத்துவதற்கும் ஆராதனை செய்வதற்கும் சகலமும் ஆயத்தமாயிருக்கிறது என்னும் செய்தியையும் கேட்டபோது எசேக்கியா மிகவும் சந்தோஷப்படுகிறான். அவன் சிறிதும் காலதாமதம்பண்ணாமல், காலமே எழுந்திருந்து, கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆலயத்திற்குப்போகிறான்.

எசேக்கியாவின் இருதயம் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றிய சிந்தனையினால் நிரம்பியிருக்கிறது. அவனுடைய இருதயம் ஆலயத்திற்கு சமீபமாகவே இருக்கிறது. எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாசின் காலத்திலே, யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்தார்கள். கடந்த ஆட்சியிலே செய்யப்பட்ட எல்லா பாவங்களுக்கும், நிவாரணம்பண்ணவேண்டுமென்று எசேக்கியா தீர்மானம்பண்ணுகிறான்.

தங்கள் முன்னோர்களின் பாவங்களுக்காக அழுது புலம்பினால் மாத்திரம் போதாது என்றும், அவர்களுடைய பாவங்களை மறந்துவிடக்கூடாது என்றும் எசேக்கியா தீர்மானிக்கிறான். அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கு, கர்த்தருடைய சமுகத்திலே பாவநிவாரண பலிகளை செலுத்தவேண்டுமென்று எசேக்கியா விரும்புகிறான்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பினாலும், நம்முடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டாலும், நம்முடைய பாவங்கள் தானாக மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. நம்முடைய பாவங்கள் இயேசுகிறிஸ்துவிலும், இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் மாத்திரமே மன்னிக்கப்படும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்காக பாவமானவர். நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்காக கிறிஸ்துவானவர் தம்மையே பாவநிவாரண பலியாக செலுத்தினார். நம்முடைய பாவங்களுக்காக நாம் எவ்வளவுதான் வருத்தப்பட்டாலும், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே நமக்கு பாவமன்னிப்பும் சமாதானமும் உண்டு.

அப்பொழுது ராஜ்யபாரத்திற்காகவும் பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் யூதாவுக்காகவும் ஏழு காளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும், ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஏழு வெள்ளாட்டுக் கடாக்களையும் பாவநிவாரணபலியாகக் கொண்டுவருகிறார்கள்; "அவைகளைக் கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடுங்கள்" (2நாளா 29:22) என்று எசேக்கியா ஆசாரியராகிய ஆரோனின் புத்திரருக்குச் சொல்லுகிறான்.

வெண்கலப் பலிபீடத்தின்மீது காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள் ஆகியவற்றின் இரத்தத்தைத் தெளிக்கிறார்கள். ஒரு ஆடு போக்காடாக வனாந்தரத்திற்குள் அனுப்பப்படுகிறது (லேவி 16:22-24).

முதலாவதாக யூதாதேசத்தின் பிரபுக்கள், ஆசாரியர்கள், யூதாதேசத்து ஜனங்கள் ஆகியோரின் பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, பாவநிவாரண பலிகள் செலுத்தப்படுகிறது. அவர்கள் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து தங்களைக் கெடுத்துப்போட்டிருக்கிறார்கள். மோசேயின் பிரமாணத்தின்படி, இஸ்ரவேல் சபையார் தங்களுடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்கு, என்னென்ன பலிகளையெல்லாம் செலுத்த வேண்டுமோ, அதையெல்லாம் எசேக்கியாவின் காலத்திலே ஆசாரியர்கள் செலுத்துகிறார்கள்.

"இஸ்ரவேல் சபையார் எல்லாரும் அறியாமையினால் பாவஞ்செய்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினால், கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவத்துக்குட்பட்டுக் குற்றவாளிகளானால், அவர்கள் செய்த பாவம் தெரியவரும்போது, சபையார் அந்தப் பாவத்தினிமித்தம் ஒரு இளங்காளையை ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாகப் பலியிடக் கொண்டுவரவேண்டும்" (லேவி 4:13,14).

"அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்" (எண் 15:24).

"அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபையனைத்திற்காகவும் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அது அறியாமையினால் செய்யப்பட்டபடியாலும், அதினிமித்தம் அவர்கள் கர்த்தருக்குத் தகனபலியையும் பாவநிவாரணபலியையும் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவந்ததினாலும், அது அவர்களுக்கு மன்னிக்கப்படும்" (எண் 15:25).

யூதாதேசத்தார் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு, யூதாதேசத்தின்மீது மொத்தமாக வந்திருக்கிறது. ஆகையினால் யூதாதேசம் முழுவதும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தேசம் முழுவதும் சுத்திகரிக்கப்படவேண்டும்.

நம் ஒவ்வொருவருடைய பாவமும் மன்னிக்கப்படுவதற்கு, நாம் இயேசுகிறிஸ்துவின் பலிமரணத்தையே சார்ந்திருக்கிறோம். ஒரு தேசத்தின் பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்றால், அதுவும் இயேசுகிறிஸ்துவின் பலிமரணத்தினால் மாத்திரமே சாத்தியமாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலக இரட்சகராயிருக்கிறார். அவரே முழுஉலகத்தின் பாவங்களையும் சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டியாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் பலிமரணம் நம் எல்லோருடைய பாவங்களையும் நீக்கும் மிகப்பெரிய பதிலீடாகயிருக்கிறது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, பாவநிவாரணமாக, பாவநிவாரணநாளிலே ஒரு வெள்ளாட்டுக்கடாவை பலியிட்டால் போதுமானது.

"பின்பு ஜனத்தினுடைய பாவநிவாரண பலியான வெள்ளாட்டுக்கடாவை அவன் கொன்று, அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து, காளையின் இரத்ததைத் தெளித்தது போல, அதின் இரத்தத்தையும் கிருபாசனத்தின்மேலும் அதற்கு முன்பாகவும் தெளித்து, இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக் கூடாரத்திற்காகவும் அப்படியே செய்யக்கடவன்" *(லேவி 16:15,16).*

சில விசேஷித்த சம்பவங்களிலும், பாவநிவாரண பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவை பலியிட்டால் போதுமானது.

"அறியாமல் தவறி நடந்தாலும், சபையாருக்குத் தெரியாமல் யாதொரு தப்பிதம் செய்தாலும், சபையார் எல்லாரும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாக ஒரு காளையையும், முறைமைப்படி அதற்கேற்ற போஜனபலியையும், பானபலியையும், பாவநிவாரணபலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்த வேண்டும்" *(எண் 15:24).*

ஆனால் இப்போதோ ஆரோனின் புத்திரர், ஏழுகாளைகளையும், ஏழு ஆட்டுக்கடாக்களையும், ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஏழு வெள்ளாட்டுக் கடாக்களையும் பாவநிவாரண பலியாக செலுத்துகிறார்கள் *(2நாளா 29:21).* இந்தப் பாவநிவாரணபலி யூதாராஜ்யத்திற்காகவும், பரிசுத்த ஸ்தலத்திற்காகவும், யூதாதேசத்திற்காகவும் செலுத்தப்படுகிறது. பாவம் அதிகமாயிருப்பதினால், அதிகமான எண்ணிக்கையில் பாவநிவாரண பலிசெலுத்தப்படுகிறது.

ஏழு என்னும் எண் பரிபூரணத்திற்கு அடையாளம். ஆகையினால் ஆசாரியர்களில் காளைகளில் ஏழும், ஆட்டுக்கடாக்களில் ஏழும், ஆட்டுக்குட்டிகளில் ஏழும், வெள்ளாட்டுக்கடாக்களில் ஏழுமாக, ஒவ்வொரு மிருகத்திலும் ஏழு ஏழாக, பாவநிவாரண பலியாக செலுத்துகிறார்கள். யூதாஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக அதிகமாகவும், நீண்டகாலமாகவும் பாவம் செய்திருக்கிறார்கள். ஆகையினால் அதிகமான பாவநிவாரணபலிகள் செலுத்தப்படுகிறது.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திபண்ணுவதற்காக, கிறிஸ்துவானவர் மாத்திரமே பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டார். அவர் ஒருவர் மாத்திரமே, ஒரே தரம் மாத்திரமே பாவநிவாரண பலியாக செலுத்தப்பட்டார். அவர் பரிபூரணமானவர். ஆகையினால் அவருடைய பாவநிவாரண மரணமும் பரிபூரணமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் முழுஉலகத்தின் பாவத்தையும் நீக்குவதற்கு போதுமானதாயிருக்கிறது.

அப்படியே ஆசாரியர் காளைகளை அடித்து, அந்த இரத்தத்தைப் பிடித்துப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்கடாக்களை அடித்து, அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்குட்டிகளையும் அடித்து, அவைகளின் இரத்தத்தையும் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள் *(2நாளா 29:22).*

பிற்பாடு பாவநிவாரண பலிக்கான வெள்ளாட்டுக்கடாக்களை ராஜாவுக்கும் சபையாருக்கு முன்பாகக் கொண்டுவருகிறார்கள்; அவைகள்மேல் அவர்கள் தங்கள் கைகளை வைக்கிறார்கள் (2நாளா 29:23).

ராஜாவும் சபையாரும், பாவநிவாரண பலியாக செலுத்தப்படும் வெள்ளாட்டுக்கடாக்கள்மீது தங்கள் கைகளை வைக்கும்போது, அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் ஒப்புக்கொள்கிறார்கள். தங்களுடைய பாவங்களெல்லாம், பாவநிவாரணமாக செலுத்தப்படும் வெள்ளாட்டுகடாக்கள்மீது கடந்துபோக வேண்டுமென்று, அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய சமுகத்திலே கருத்தாய் ஜெபிக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள், பாவநிவாரண பலியின்மீது தங்கள் கரங்களை வைத்து பாவநிவாரணம் பெற்றுக்கொண்டதுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், விசுவாசத்தினாலே நம்முடைய கரங்களை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீது வைக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்முடைய பாவமன்னிப்பையும், பாவநிவாரணத்தையும் பெற்றுக்கொள்கிறோம்.

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்" (ரோம 5:11).

பாவநிவாரண பலிகளோடு, சர்வாங்க தகனபலிகளும் செலுத்தப்படுகிறது. "இஸ்ரவேல் அனைத்திற்காகவும், சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் செலுத்துங்கள்" என்று எசேக்கியா ராஜா ஏற்கெனவே சொல்லியிருக்கிறான்; ஆதலால் ஆசாரியர் அவைகளை அடித்து, இஸ்ரவேல் அனைத்திற்கும் பாவநிவிர்த்தி உண்டாக்க, அவைகளின் இரத்தத்தால் பலிபீடத்தின்மேல் பிராயச்சித்தஞ்செய்கிறார்கள்(2நாளா 29:24).

யூதாவிற்காகவும், யூதாவில் வந்து சேர்ந்திருக்கும் இஸ்ரவேலின் மற்றக் கோத்திரத்தாருக்காகவும் சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் செலுத்துகிறார்கள். வடக்குதேசத்திலுள்ள பத்துக் கோத்திரத்தாரை அசீரியர் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டார்கள். இந்த வசனத்தில் "இஸ்ரவேல் அனைத்திற்காகவும்" என்பது வாக்குத்தத்த தேசத்தில் மீதியாக இருக்கும் யூதர்கள் அனைவரையும் குறிக்கும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை கனம்பண்ணுவதற்காகவும், அவரை மகிமைப்படுத்துவதற்காகவும் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன் என்று இஸ்ரவேல் ஜனத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். யூதாதேசத்தார் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்பதற்காக, பாவநிவாரண பலிகளை செலுத்துவதுபோல, கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக, அவருக்கு சர்வாங்க தகனபலிகளையும் செலுத்துகிறார்கள்.

ஆசாரியர்கள் காளைகளை அடித்து, அந்த இரத்தத்தைப் பிடித்துப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்கடாக்களை அடித்து, அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்குட்டிகளையும் அடித்து, அவைகளின் இரத்தத்தையும் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள் (2நாளா 29:22). இஸ்ரவேல் அனைத்திற்கும் பாவநிவாரணம் உண்டாக்கவேண்டும் என்பதற்காக ஆசாரியர்கள் அவைகளின் இரத்தத்தால் பலிபீடத்தின்மேல் பிராயச்சித்தம் செய்கிறார்கள் (2நாளா 29:24). இந்தப் பிராயச்சித்தம் யூதாதேசத்தாருக்கு மாத்திரம் செய்யப்படவில்லை. இஸ்ரவேல் அனைத்திற்காகவும் செய்யப்படுகிறது.

யூதாவிற்காகவும், யூதாவில் வந்து சேர்ந்திருக்கும் இஸ்ரவேலின் மற்றக் கோத்திரத்தாருக்காகவும் சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரண பலியையும் செலுத்துகிறார்கள். வடக்குதேசத்திலுள்ள பத்துக் கோத்திரத்தாரை அசீரியர் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டார்கள். இந்த வசனத்தில் "இஸ்ரவேல் அனைத்திற்காகவும்" என்பது வாக்குத்தத்த தேசத்தில் மீதியாக இருக்கும் யூதர்கள் அனைவரையும் குறிக்கும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை கனம்பண்ணுவதற்காகவும், அவரை மகிமைப்படுத்துவதற்காகவும் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன் என்று இஸ்ரவேல் ஜனத்தார் அங்கீகரித்திருக்கிறார்கள். யூதாதேசத்தார் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டும் என்பதற்காக, பாவநிவாரண பலிகளை செலுத்துவதுபோல, கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக, அவருக்கு சர்வாங்க தகனபலிகளையும் செலுத்துகிறார்கள்.

ஆசாரியர்கள் காளைகளை அடித்து, அந்த இரத்தத்தைப் பிடித்துப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்கடாக்களை அடித்து, அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள்; ஆட்டுக்குட்டிகளையும் அடித்து, அவைகளின் இரத்தத்தையும் பலிபீடத்தின்மேல் தெளிக்கிறார்கள் *(2நாளா 29:22)*. இஸ்ரவேல் அனைத்திற்கும் பாவநிவாரணம் உண்டாக்கவேண்டும் என்பதற்காக ஆசாரியர்கள் அவைகளின் இரத்தத்தால் பலிபீடத்தின்மேல் பிராயச்சித்தம் செய்கிறார்கள் *(2நாளா 29:24)*. இந்தப் பிராயச்சித்தம் யூதாதேசத்தாருக்கு மாத்திரம் செய்யப்படவில்லை. இஸ்ரவேல் அனைத்திற்காகவும் செய்யப்படுகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இஸ்ரவேலரின் பாவங்களை மன்னிப்பதற்காக மாத்திரம் பிராயச்சித்தம் செய்யவில்லை. முழுஉலகத்தின் பாவங்களையும் மன்னிப்பதற்காக கிறிஸ்து இயேசு கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் முழுஉலகத்தின் பாவமும் பிராயச்சித்தம் செய்யப்படுகிறது.

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" *(1யோவா 2:1,2)*.

கர்த்தருடைய பலிபீடத்திலே சர்வாங்க தகனபலி செலுத்தப்படும்போது லேவியர்கள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். தாவீதும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும், தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே, கைத்தாளங்களையும் தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரை எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திலே நிறுத்துகிறான்; இப்படிச் செய்யவேண்டும் என்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உண்டாயிருக்கிறது *(2நாளா 29:25)*.

அப்படியே லேவியர் தாவீதின் கீதவாத்தியங்களையும், ஆசாரியர் பூரிகைகளையும் பிடித்து நிற்கிறார்கள். அப்பொழுது எசேக்கியா சர்வாங்க தகனபலிகளைப் பலிபீடத்தின்மேல் செலுத்தக் கட்டளையிடுகிறான்; அதைச் செலுத்தத் துவக்கின நேரத்தில் கர்த்தரைத் துதிக்கும் கீதமும் பூரிகைகளும், இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீது ஏற்படுத்தின கீதவாத்தியங்களும் முழங்கத் தொடங்குகிறது *(2நாளா 29:26,27)*.

கீதத்தைப்பாடி, பூரிகைகளை ஊதிக்கொண்டிருக்கையில், சர்வாங்க தகனபலியைச் செலுத்தித் தீருமட்டும் சபையார் எல்லாரும் பணிந்துகொண்டிருக்கிறார்கள். பலியிட்டுத் தீர்ந்தபோது, ராஜாவும் அவனோடிருந்த அனைவரும் தலைகுனிந்து பணிந்துகொள்கிறார்கள் *(2நாளா 29:28,29)*.

பின்பு எசேக்கியா ராஜாவும் பிரபுக்களும் லேவியரை நோக்கி: "நீங்கள் தாவீதும் ஞானதிருஷ்டிக்காரனாகிய ஆசாபும் பாடின வார்த்தைகளினால் கர்த்தரைத் துதியுங்கள்" *(2நாளா 29:30)* என்று சொல்லுகிறார்கள்; அப்பொழுது மகிழ்ச்சியோடே துதிசெய்து தலைகுனிந்து பணிந்துகொள்கிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே மறுபடியும் துதியும், ஆராதனையும், பலிசெலுத்துவதும் நியமனம்பண்ணப்படுகிறது. கர்த்தருக்கு பலிகளை செலுத்துமாறு எசேக்கியா ராஜாவே கட்டளையிடுகிறான்.

எசேக்கியா யூதாஜனங்களை நோக்கி, "இப்போதும் நீங்கள் கர்த்தருக்கென்று உங்களைப் பரிசுத்தம்பண்ணினீர்கள்; ஆகையால் கிட்டவந்து, கர்த்தருடைய ஆலயத்திற்குத் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் கொண்டுவாருங்கள்" *(2நாளா 29:31)* என்று சொல்லுகிறான்; அப்பொழுது சபையார் தகனபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும், இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகனபலிகளையும் கொண்டுவருகிறார்கள்.

யூதாசபையார் எல்லோரும் கர்த்தருக்கென்று தங்களை பரிசுத்தம்பண்ணியிருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களெல்லாம் நிவிர்த்திபண்ணப்பட்டிருக்கிறது. அவர்கள் பலிகளை செலுத்தி கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கிறார்கள். ஆகையினால் இப்போது அவர்கள் கிட்ட வந்து, கர்த்தருடைய ஆலயத்திற்கு தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வரலாம்.

நாம் முதலாவதாக நம்மை கர்த்தருடைய சமுகத்திலே பரிசுத்தம்பண்ணி, பிரதிஷ்டைபண்ணவேண்டும். அதன்பின்பு கர்த்தருடைய சமுகத்திலே ஜெபத்தின் பலிகளையும் துதியின் பலிகளையும், காணிக்கைகளின் பலிகளையும் கொண்டு வரவேண்டும்.

யூதாசபையார் கர்த்தருடைய ஆலயத்திற்கு தகனபலிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் கொண்டு வரவேண்டுமென்று எசேக்கியா ராஜா சொல்லுகிறான். ஆனாலும் அவன் பலிகளைக் கொண்டுவருமாறு யாரையும் கட்டாயம்பண்ணவில்லை. பலிகளைக் கொண்டு வருகிறவர்கள் எவ்வளவு பலிகளை கொண்டு வரவேண்டும் என்றும் எசேக்கியா அதன் அளவை தீர்மானம்பண்ணவுமில்லை. இஷ்டமுள்ளவர்களெல்லாம் சர்வாங்க தகனபலிகளை கொண்டுவருகிறார்கள்.

சபையார் கொண்டுவந்த சர்வாங்க தகனபலிகளின் தொகை எழுபது காளைகளும், நூறு ஆட்டுக்குட்டிகளுமே, இருநூறு ஆட்டுக்குட்டிகளுமே, இவைகளெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனமாயின. அறுநூறு காளைகளும் மூவாயிரம் ஆடுகளும் பிரதிஷ்டையாக்கப்படுகிறது *(2நாளா 29:32,33)*.

சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணியபோது, இதைவிட அதிகமான ஸ்தோத்திர பலிகளும், சர்வாங்க தகனபலிகளும் செலுத்தப்பட்டது. சாலொமோனின் ஆட்சிக்காலத்திலே இஸ்ரவேல் தேசம் சமஸ்த இஸ்ரவேல் தேசமாக செழித்திருந்தது. தேசத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களும் தாராளமாயிருந்தது.

ஆனால் இப்போதோ சமஸ்த இஸ்ரவேல் தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும் தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரும், யூதாஜனத்தாரும் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போயிருக்கிறார். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும், ஆசீர்வாதமும் கிடைக்கவில்லை.

யூதாதேசத்தாரின் பாவங்களினிமித்தமாக, தேசத்திலே பஞ்சம் அதிகரித்திருக்கிறது. ஜனங்களுக்கு குறைவு உண்டாயிற்று. ஆகையினால் இஸ்ரவேல் சபையாரால், சாலொமோனுடைய காலத்திலே கொண்டு வந்த திரளான சர்வாங்க தகனபலிகளைப்போல, இப்போது எசேக்கியாவின் காலத்திலே கொண்டு வரமுடியவில்லை.

ஆசாரியர்கள் கொஞ்சம் பேரானதினால் அவர்களால் அந்தச் சர்வாங்க தகனமான ஜீவன்களையெல்லாம் அடித்துத் தோலுரிக்க முடியாதிருக்கிறது; அதினாலே அந்த வேலை தீருமட்டாகவும், மற்ற ஆசாரியர் தங்களைப் பரிசுத்தம்பண்ணுமாட்டாகவும், அவர்கள் சகோதரராகிய லேவியர் அவர்களுக்கு உதவிசெய்கிறார்கள்; தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ள லேவியர் ஆசாரியரைப்பார்க்கிலும் மன உற்சாகமுள்ளவர்களாயிருக்கிறார்கள் *(2நாளா 29:34).*

ஆசாரியர்களைவிட லேவியர்கள் கர்த்தருடைய பலிபீடத்திலே உற்சாகமாய் பலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்த ஆயத்தமுள்ளவர்களாகவும், தகுதியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

"கர்த்தருடைய சந்நிதியில் அந்தக் காளையைக் கொல்லக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தை எடுத்து, அதை ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள். பின்பு அவன் அந்தச் சர்வாங்க தகனபலியைத் தோலுரித்து, அதைச் சந்துசந்தாகத் துண்டிக்கக்கடவன்" *(லேவி 1:5,6).*

கர்த்தர் ஆசாரியருக்கு விசேஷித்த ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். ஆசாரியரின் ஊழியம் கனமுள்ளது. ஆனாலும் ஆசாரியர்கள் தங்கள் ஊழியத்தை செய்ய அசதியாயிருக்கும்போது, கர்த்தர் அவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தை லேவியருக்கு கொடுத்து விடுகிறார். லேவியர்கள் கர்த்தருக்காக ஆசாரிய ஊழியம் செய்வது லேவியரின் மேன்மை.

சர்வாங்க தகனபலிகளும், ஸ்தோத்திரபலிகளின் கொழுப்பும், சர்வாங்க தகனங்களுக்கடுத்த பானபலிகளும் மிகுதியாயிருக்கிறது; இவ்விதமாய் கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம்பண்ணப்படுகிறது *(2நாளா 29:35).*

தேவன் ஜனத்தை ஆயத்தப்படுத்தினதைக் குறித்து எசேக்கியாவும் ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்படுகிறார்கள்; இந்தக் காரியத்தைச் செய்யும்படியான யோசனை சடுதியாய் உண்டாயிற்று *(2நாளா 29:36).*

கர்த்தருடைய ஆலயத்தை சுத்தம்பண்ணுகிற வேலை சீக்கிரத்தில் முடிவு பெற்றதினால் எசேக்கியாவும், ஜனங்கள் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தை சுத்தம்பண்ணும்போது, யூதாதேசத்திலே இன்னும் ஏராளமான ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் எசேக்கியா ஆலயத்தை சுத்தம்பண்ணும்போது, விக்கிரகாராதனைக்காரர்கள் அவனுக்கு எதிர்ப்பாயில்லை. இதனாலும், எசேக்கியாவும் ஜனங்களும் சந்தோஷப்படுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தை சுத்தப்படுத்த, தேவனே ஜனத்தை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய கிருபை யூதாஜனத்தாருடைய இருதயங்களில் கிரியை செய்கிறது. அவர்கள் இதுவரையிலும் விக்கிரகங்களின் பலிபீடத்தின்மீது பக்தி வைராக்கியமாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்திலே பலிகளை செலுத்த ஆர்வமாயிருக்கிறார்கள். இந்த மனமாற்றம் கர்த்தரால் உண்டாயிற்று. கர்த்தரே யூதாசபையாரின் இருதயங்களை ஆயத்தம்பண்ணுகிறார். ஆலயத்தை சுத்தம்பண்ணுகிற பணிவிடைகளில், கர்த்தருடைய கரம் தங்களோடு கூடயிருந்ததற்காக, எசேக்கியாவும் ஜனங்களும் சந்தோஷப்படுகிறார்கள்.

30 அதிகாரம்

எசேக்கியா தன்னுடைய ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷத்தில் பஸ்காவை ஆசரிக்கிறான். எசேக்கியா பஸ்காவை ஆசரிப்பது சம்பந்தமாக தன்னுடைய பிரபுக்களோடும், எருசலேமிலுள்ள சபையார் யாவரோடும் யோசனைபண்ணுகிறான். எசேக்கியாவும், யூதாஜனங்களும் பஸ்காவை ஆசரிக்க கூடிவருகிறார்கள் (2நாளா 30:2-5).

பஸ்காவை ஆசரிக்க வருமாறு, எசேக்கியா யூதா தேசத்தாருக்கும் இஸ்ரவேல் தேசத்தாருக்கும் அழைப்பு அனுப்புகிறான் (2நாளா 30:1,6-12).

எல்லோரும் சந்தோஷமாய் பஸ்காவை ஆசரிக்கிறார்கள் (2நாளா 30:13-27). எசேக்கியா தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்திலே கர்த்தருடைய ஆலயத்தை சுத்தம்பண்ணினான். யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான். இப்போது கர்த்தருடைய ஜனம் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். எசேக்கியாவின் காலத்தில், யூதாதேசத்தாருடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி உண்டாயிற்று.

பஸ்காவை ஆசரிக்கும்படி அழைப்பு 2நாளா 30:1-12

2நாளா 30:1. அதன்பின்பு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி, எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரவேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதும் அன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் திருபங்களை எழுதியனுப்பினான்.

2நாளா 30:2. பஸ்காவை இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்படி, ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனைபண்ணியிருந்தார்கள்.

2நாளா 30:3. ஆசாரியர் போதுமானபேர் தங்களைப் பரிசுத்தம்பண்ணாமலும், ஜனங்கள் எருசலேமில் இன்னும் கூடிவராமலும் இருந்தபடியினால், அதின் காலத்தில் அதை ஆசரிக்கக்கூடாமற்போயிற்று.

2நாளா 30:4. இந்தக் காரியம் ராஜாவின் பார்வைக்கும் சமஸ்த சபையின் பார்வைக்கும் நியாயமாய்க் காணப்பட்டது.

2நாளா 30:5. எழுதியிருக்கிறபடி வெகுகாலமாய் அவர்கள் அதை ஆசரிக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு வாருங்கள் என்று பெயெர்செபாமுதல் தாண்மட்டுமுள்ள இஸ்ரவேல் தேசமெங்கும் பறைசாற்றுவிக்கத் தீர்மானம்பண்ணினார்கள்.

2நாளா 30:6. அப்படியே ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் கொடுத்த திருபங்களை அஞ்சல்காரர் வாங்கி, ராஜாவுடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் யூதா எங்கும் போய்: இஸ்ரவேல் புத்திரரே, ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்பவர்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்புங்கள்; அப்பொழுது அசீரியருடைய ராஜாக்களின் கைக்குத் தப்பியிருக்கிற மீதியான உங்களண்டைக்கு அவர் திரும்புவார்.

2நாளா 30:7. தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்குத் துரோகம்பண்ணின உங்கள் பிதாக்களைப்போலவும் உங்கள் சகோதரரைப்போலவும் இராதேயுங்கள்; அதற்காக, நீங்கள் காண்கிறபடியே, அவர்கள் பாழாய்ப்போகிறதற்கு ஒப்புக்கொடுத்தாரே.

2நாளா 30:8. இப்போதும் உங்கள் பிதாக்களைப்போல உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் சதாகாலத்துக்கும் பரிசுத்தம்பண்ணின அவருடைய பரிசுத்தஸ்தலத்திற்கு வந்து, உங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவியுங்கள்; அப்பொழுது அவருடைய உக்கிரமான கோபம் உங்களைவிட்டுத் திரும்பும்.

2நாளா 30:9. நீங்கள் கர்த்தரிடத்துக்குத் திரும்பினால், உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைபிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும், இந்த தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது ஏதுவாகும்; உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை என்றார்கள்.

2நாளா 30:10. அப்படி அந்த அஞ்சல்காரர் எப்பிராயீம் மனாசே தேசங்களில் செபுலோன் மட்டுக்கும் ஊரூராகத் திரிந்தார்கள்; ஆனாலும் அவர்கள் இவர்களைப்பார்த்து நகைத்துப் பரிகாசம்பண்ணினார்கள்.

2நாளா 30:11. ஆகிலும் ஆசேரிலும், மனாசேயிலும், செபுலோனிலும், சிலர் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வந்தார்கள்.

2நாளா 30:12. யூதாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே, ராஜாவும் பிரபுக்களும் கட்டளையிட்டபிரகாரம் செய்கிறதற்கு, தேவனுடைய கரம் அவர்களை ஒரு மனப்படுத்திற்று.

பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்று எசேக்கியா ராஜாவும், அவனுடைய பிரபுக்களும், எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனைபண்ணியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய முன்னோர்களின் காலத்தில் பஸ்கா ஆசரிக்கப்பட்டது. ஆனால் இடையிலே பஸ்கா ஆசரிக்கப்படாமல் நின்றுபோயிற்று. நின்றுபோன பஸ்காவை, மறுபடியும் ஆசரிக்கவேண்டும் என்று எசேக்கியாவும், பிரபுக்களும், எருசலேம் ஜனங்களும் யோசனைபண்ணுகிறார்கள்.

எசேக்கியா பஸ்காவை ஆசரிக்கவேண்டும் என்று விரும்புகிறான். ஆனாலும் அவனால் அதின் காலமாகிய முதலாவது மாதத்தில் பஸ்காவை ஆசரிக்கக்கூடாமற்போயிற்று.

ஆசாரியர் போதுமானபேர் தங்களைப் பரிசுத்தம்பண்ணாமலும், ஜனங்கள் எருசலேமில் இன்னும் கூடிவராமலும் இருந்தபடியினால், அதின் காலத்தில் அதை ஆசரிக்கக்கூடாமற்போயிற்று *(2நாளா 30:3)*.

பஸ்காவை ஆசரிக்க வேண்டிய மாதத்தில் அதை அவர்களால் ஆசரிக்க முடியவில்லை. ஆசாரியர் போதுமான பேர் தங்களை இன்னும் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளவில்லை. மேலும் ஜனங்கள் எருசலேமில் இன்னும் கூடிவரவில்லை. ஆகையினால் பஸ்காவை நியமிக்கப்பட்ட மாதத்திலிருந்து ஒருமாதத்திற்குப் பின்பு ஆசரிக்கிறார்கள் *(2நாளா 30:2- 3)*. சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் *260* வருஷங்களுக்கு முன்பாக இரண்டாகப் பிளவுற்றது. அதன் பின்பு, இதுவரையிலும் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை. *(2நாளா 30:26)*.

ஆசாரியர்களும், யூதாஜனத்தாரும் பஸ்காவை ஆசரிப்பதற்கு ஆயத்தமாயில்லை. அவர்கள் தங்களை இன்னும் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளவில்லை. அவர்களில் அநேகர் பஸ்காவை ஆசரிப்பதற்கு எருசலேமிலே கூடிவரவில்லை. பஸ்கா பொதுவாக முதலாவது மாதத்தில் ஆசரிக்கப்படுவது வழக்கம். ஆனால் அவர்களால் முதலாவது மாதத்திலே பஸ்காவை ஆசரிக்கக்கூடாமல்போயிற்று.

மோசேயின் காலத்தில், இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் முதலாவது மாதத்திலே, தங்களை பரிசுத்தம்பண்ணிக்கொள்ளாமல் அசுத்தமாயிருந்தார்கள். ஆகையினால் மோசே முதலாம் மாதத்தில் பஸ்காவை ஆசரியாமல், இரண்டாம் மாதத்தின் பதிநான்காம் தேதியிலே பஸ்காவை ஆசரிக்கிறார்.

"அவர்கள் அதை இரண்டாம் மாதம் பதினாலாந்தேதி அந்திநேரமான வேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து, விடியற்காலமட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்" *(எண் 9:11,12).*

பஸ்காவை முதலாம் மாதத்தில் ஆசரியாமல், அதை இரண்டாம் மாதத்தில் ஆசரிப்பதை, கர்த்தரும் அங்கீகரித்திருக்கிறார். எசேக்கியா மோசே செய்த பிரகாரம், பஸ்காவை இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்படி, ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனை பண்ணியிருக்கிறார்கள் *(2நாளா 30:2).*

எசேக்கியா ஆரம்பத்தில், முதலாவது மாதத்தில் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்று விரும்பினார். ஆனால் அந்த மாதத்தில் ஆசாரியர் போதுமானபேர் தங்களைப் பரிசுத்தம்பண்ணாமலும், ஜனங்கள் எருசலேமில் இன்னும் கூடிவராமலும் இருந்தபடியினால், அதின் காலத்தில் அதை ஆசரிக்கக்கூடாமற்போயிற்று.

ஆகையினால் எசேக்கியா இப்போது, இரண்டாம் மாதத்தில் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்று, தன்னுடைய பிரபுக்களோடும், எருசலேம் சபையாரோடும் யோசனை செய்து தீர்மானம்பண்ணியிருக்கிறான்.

பஸ்கா ஆசரிக்கப்படவேண்டிய தேதி தீர்மானம்பண்ணப்பட்டிருக்கிறது. பஸ்காவை ஆசரிப்பதற்கு கர்த்தருடைய ஜனங்கள் எருசலேமுக்கு கூடிவரவேண்டும். எசேக்கியா யூதாதேசத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாருக்கும், யூதாதேசத்திலிருந்து பிரிந்துபோன வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் பத்துக்கோத்திரத்தாருக்கும், பஸ்காவை ஆசரிக்க வருமாறு அழைப்பு கொடுக்கிறான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி, எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரவேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதும் அன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்களை எழுதியனுப்புகிறான் *(2நாளா 30:1).*

வடக்குதேசத்திலிருந்த பத்துக் கோத்திரத்தார் அசீரியரால் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். எசேக்கியா யூதா தேசத்தில் உள்ளவர்களையும், வடக்கு தேசத்தில் மீதியாக உள்ளவர்களையும், கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி, எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள் என்று அழைக்கிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் தாவீதின் குடும்பத்தை விட்டும், கர்த்தரை விட்டும் பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்ப அழைத்து வரவேண்டுமென்று எசேக்கியா விரும்புகிறான். அதற்காக திட்டமிட்டு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரையும் பஸ்காவை ஆசரிக்க எருசலேமுக்கு வருமாறு அழைக்கிறான்.

சமஸ்த இஸ்ரவேல் தேசத்தாருக்கும், பஸ்காவை ஆசரிக்க வருமாறு அழைப்பு அனுப்பப்படுகிறது. இந்தக் காரியம் ராஜாவின் பார்வைக்கும் சமஸ்த சபையின் பார்வைக்கும் நியாயமாய்க் காணப்படுகிறது *(2நாளா 30:4).*

மோசேயின் பிரமாணத்தில் பஸ்காவை ஆசரிப்பது பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ எழுதியிருக்கிறபடி வெகுகாலமாய் அதை ஆசரிக்கவில்லை; ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி எருசலேமுக்கு வாருங்கள் என்று பெயெர்செபாமுதல் தாண்மட்டுமுள்ள இஸ்ரவேல் தேசமெங்கும் பறைசாற்றுவிக்கத் தீர்மானம்பண்ணுகிறார்கள் (2நாளா 30:5).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது, கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை பண்ணுவார். எசேக்கியா அவர்களுக்கு எழுதின நிருபத்தில், "இஸ்ரவேல் புத்திரரே, ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்பவர்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்புங்கள்" (2நாளா 30:6) என்று எழுதியிருக்கிறான்.

சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் பிளவுண்ட பின்பு, முதன் முறையாக வடக்கு தேசத்திலிருக்கும் இஸ்ரவேல் கோத்திரத்தாரை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பி வருமாறு அழைப்பு கொடுக்கப்படுகிறது. வடக்கு தேசத்தில் பத்துக் கோத்திரத்தாரில் அநேகர் அசீரியருடைய சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள் என்பது இதன் வாயிலாகத் தெரியவருகிறது (2இராஜா 17).

ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் கொடுத்த நிருபங்களை அஞ்சல்காரர் வாங்கி, ராஜாவுடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் யூதா எங்கும் போய், அவர்களுக்கு அந்த நிருபங்களின் செய்தியை வாசித்து சொல்லுகிறார்கள். அந்த அஞ்சல்காரர் எப்பிராயீம் மனாசே தேசங்களில் செபுலோன் மட்டுக்கும் ஊரூராகத் திரிகிறார்கள் (2நாளா 30:10).

எசேக்கியா இஸ்ரவேல் புத்திரரிடத்தில், "தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள்" என்று சொல்லுகிறான். இந்த வாக்கியத்திற்கு, "உங்கள் கரங்களை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுங்கள்" என்றும், "கர்த்தரை உங்கள் தேவனாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றும் பொருள்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் கதவுகள் இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தரை ஆராதிப்பதற்காக, எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குள் தாராளமாய்ப் பிரவேசிக்கலாம். ஆலயத்திலே கர்த்தருடைய ஆராதனைகள் மறுபடியும் நடைபெறுகிறது. கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையிலே பங்குபெறுமாறு, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அன்போடு அழைக்கப்படுகிறார்கள்.

எசேக்கியா வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை அழைக்கும்போது, அவர்களை "இஸ்ரவேல் புத்திரரே" என்று சொல்லுகிறான். அவர்கள் இஸ்ரவேல் புத்திரராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகியிருக்கிறார். எசேக்கியா இஸ்ரவேல் புத்திரரிடத்தில், "இஸ்ரவேல் புத்திரரே, ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்பவர்களுடைய தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்புங்கள்" என்று சொல்லுகிறான்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள். கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆனால் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு பிரிந்துபோன, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரோ, கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனதினால், கர்த்தரும் அவர்களை விட்டுப்பிரிந்துபோகிறார். வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கு கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கவில்லை. அசீரியர்கள் இஸ்ரவேலரை சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். எசேக்கியா வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் பாவங்களையும், அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்கள்மீது வரப்பண்ணின தம்முடைய நியாயத்தீர்ப்பையும் தன்னுடைய நிருபங்களில் நினைவுபடுத்துகிறான்.

எசேக்கியா இஸ்ரவேல் புத்திரருக்கு எழுதின நிருபத்தில், "தங்கள் பிதாக்களின் தேவனாகியகர்த்தருக்குத் துரோகம்பண்ணின உங்கள் பிதாக்களைப்போலவும் உங்கள் சகோதரரைப்போலவும் இராதேயுங்கள்; அதற்காக, நீங்கள் காண்கிறபடியே, அவர்கள் பாழாய்ப்போகிறதற்கு ஒப்புக்கொடுத்தாரே" *(2நாளா 30:7)* என்று எழுதியிருக்கிறான்.

அசீரியர்கள் இஸ்ரவேல் புத்திரரில் திரளான பேரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய்விட்டார்கள். இப்போது கொஞ்சம் பேர் மாத்திரமே வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் மீதமாயிருக்கிறார்கள். இவர்களே கர்த்தருக்கு மீதமானவர்கள். எசேக்கியா வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் மீதியாயிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு தன்னுடைய நிருபங்களை எழுதுகிறான்.

அவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்ப வேண்டும் என்று எசேக்கியா சொல்லுகிறான். "அப்பொழுது அசீரியருடைய ராஜாக்களின் கைக்குத் தப்பியிருக்கிற மீதியான உங்களண்டைக்கு அவர் திரும்புவார்" *(2நாளா 30:6)* என்று எசேக்கியா தன்னுடைய நிருபத்தில் எழுதியிருக்கிறான்.

எசேக்கியா வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கு தன்னுடைய நிருபத்தின் மூலமாய் இன்னும் ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறான். எசேக்கியா இஸ்ரவேல் புத்திரருக்கு எழுதின நிருபங்களில், சொல்லப்பட்டிருக்கிற புத்திமதிகளின் விவரம் வருமாறு :

1. இப்போதும் உங்கள் பிதாக்களைப்போல உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்கு உடன்பட்டு, அவர் சதாகாலத்துக்கும் பரிசுத்தம்பண்ணின அவருடைய பரிசுத்தஸ்தலத்திற்கு வந்து, உங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவியுங்கள்; அப்பொழுது அவருடைய உக்கிரமான கோபம் உங்களைவிட்டுத் திரும்பும் *(2நாளா 30:8)*.

2. நீங்கள் கர்த்தரிடத்துக்குத் திரும்பினால், உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைபிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும், இந்த தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது ஏதுவாகும்; உங்கள் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர்; நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால், அவர் தம்முடைய முகத்தை உங்களைவிட்டு விலக்குவதில்லை *(2நாளா 30:9)*.

எசேக்கியா இஸ்ரவேல் புத்திரருக்கு அன்பும் கிருபையும் நிரம்பிய நிருபங்களை எழுதுகிறான். அவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வரவேண்டும் என்று ஆலோசனைகளை சொல்லுகிறான். அவர்கள் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனதே, அவர்கள் பாழாய்ப்போனதற்கு காரணம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் கழுத்தை கடினப்படுத்தினார்கள். அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு வந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரை சேவிக்கவேண்டும் என்று எசேக்கியா இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறான்.

எசேக்கியா இஸ்ரவேல் புத்திரருக்கு நிருபங்களை எழுதி அனுப்பியபோது, இஸ்ரவேல் தேசத்திலே ஓசெயா ராஜாவாயிருக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தார் பஸ்காவை ஆசரிக்க எருசலேமுக்குப் போவதை ஓசெயா தடைபண்ணவில்லை. இஸ்ரவேல் புத்திரர் விரும்பினால், அவர்கள் எருசலேமுக்கு தாராளமாய்ப் போகலாம். எசேக்கியாவின் அஞ்சல்காரர் இஸ்ரவேல் தேசத்திலே, ராஜாவின் செய்தியை சொல்லுவதற்கு ஓசெயா அனுமதி கொடுக்கிறான்.

எசேக்கியாவின் அஞ்சல்காரர் எப்பிராயீம் மனாசே தேசங்களில் செபுலோன் மட்டுக்கும் ஊரூராகத் திரிகிறார்கள்; ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் எசேக்கியாவின் அஞ்சல்காரரைப்பார்த்து நகைத்துப் பரிகாசம்பண்ணுகிறார்கள் *(2நாளா 30:10)*. கர்த்தரிடத்தில் திரும்பி வர இஸ்ரவேல் புத்திரருக்கு அழைப்பு கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களோ அந்த அழைப்பை அசட்டைபண்ணுகிறார்கள்.

வடக்கு தேசத்தின் பத்துக் கோத்திரத்தார்கள் கர்த்தரைவிட்டு விலகிப் போய்விட்டார்கள். தங்களுடைய தேசத்தில் அநேக நெருக்கங்கள் வந்தபோதிலும் அவர்கள் இன்னும் கர்த்தரைத் தேடவில்லை. பத்துக் கோத்திரத்தாரில் அநேகர் அசீரியரின் சிறையிருப்புக்கு உட்பட்டார்கள். ஆனாலும் சிறையிருப்புக்குட்படாத மீதமுள்ளவர்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்பாமல், தங்களைக் கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்று ஆலோசனை கூறியவர்களைப் பார்த்து நகைத்துப் பரிகாசம் பண்ணுகிறார்கள்.

"ஓசெயா கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் ராஜாக்களைப்போல் செய்யவில்லை" (2இராஜா 17:2).

வடக்கு இஸ்ரவேல் தேசத்து ஜனங்களில் அநேகர் எசேக்கியாவின் நிருபங்களுக்கு செவிகொடுக்கவில்லை. அஞ்சல்காரர் தங்களுடைய கடமைகளை சரியாக செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஊராகப்போய், அந்த ஊரிலே எசேக்கியாவின் நிருபங்களை வாசிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தங்களைப் பார்த்து பரிகாசம்பண்ணினாலும், அஞ்சல்காரர் எசேக்கியாவின் நிருபங்களை எல்லா ஊர்களிலும் போய் வாசிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் ஒரு சிலர் எசேக்கியாவின் நிருபத்திற்கு செவிகொடுக்காமல் போனாலும், அநேகர் அந்த நிருபத்திற்கு செவிகொடுக்கிறார்கள். ஆசேரிலும், மனாசேயிலும், செபுலோனிலும், சிலர் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வருகிறார்கள் (2நாளா 30:11).

அதிகமானோர் நகைத்துப் பரியாசம் பண்ணினார்கள். சிலர் மனத் தாழ்மையாகி எருசலேமுக்கு வந்தார்கள். இவர்கள் ஆசேர், மனாசே, செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எருசலேமுக்கு வந்து, தங்களுடைய மற்ற சகோதரர்களோடு கர்த்தருடைய பஸ்காவை ஆசரிக்கிறார்கள். (2நாளா 30:11-13)

வடக்கு இஸ்ரவேல் தேசம் அழிந்துபோகும் ஆபத்திலிருக்கிறது. இந்த சம்பவம் நடைபெற்று இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு பின்பு, அசீரியாவின் ராஜா சமாரியாவை முற்றிக்கையிடுகிறான். முடிவில் வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் பத்துக்கோத்திரத்தார் அசீரியா தேசத்து சிறையிருப்புக்குப்போகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், கர்த்தரிடத்திற்கு திரும்பி வராமல் தங்கள் கழுத்தை கடினப்படுத்துகிறார்கள். கர்த்தரும் அவர்களை பாழாய்ப்போகிறதற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

எசேக்கியாவின் அழைப்பை ஏற்று ஒரு சிலர் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வருகிறார்கள். கர்த்தருக்கு மீதமானவர்கள் எல்லா காலங்களிலும் இருப்பார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தில், ஆசேர், மனாசே, செபுலோன் ஆகிய கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் கர்த்தரிடத்திற்கு திரும்புகிறார்கள். இந்த வசனத்தில் எப்பிராயீம் கோத்திரத்தாரைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனாலும் பஸ்காவை சாப்பிட்டவர்களில் எப்பிராயீம் புத்திரரும் இருக்கிறார்கள் (2நாளா 30:18).

யூதாவிலும் கர்த்தருடைய வார்த்தையின்படியே, ராஜாவும் பிரபுக்களும் கட்டளையிட்டபிரகாரம் செய்கிறதற்கு, தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று (2நாளா 30:12). பஸ்காவை ஆசரிக்க கூடிவந்தவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு, பஸ்காவை பரிசுத்தமாய் ஆசரிக்கிறார்கள். கர்த்தருடைய கரமே அவர்களை ஒருமனப்படுத்துகிறது.

பஸ்கா ஆசரிப்பு
2நாளா 30:13-20

2நாளா 30:13. அப்படியே இரண்டாம் மாதத்தில் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்க வெகு ஜனங்கள் எருசலேமில் மகாபெரிய சபையாய்க் கூடினார்கள்.

2நாளா 30:14. அவர்கள் எழும்பி, எருசலேமில் உண்டான பலிபீடங்களையும், தூபபீடங்களையும் அகற்றிக் கீதரோன் ஆற்றிலே போட்டார்கள்.

2நாளா 30:15. பின்பு அந்த இரண்டாம் மாதம் பதினாலாந்தேதியில் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடித்தார்கள்; ஆசாரியரும் லேவியரும் வெட்கி, தங்களைச் சுத்தம் பண்ணி, சர்வாங்க தகனபலிகளைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவந்து,

2நாளா 30:16. தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற தங்கள் முறைமையின்படியே தங்கள் ஸ்தானத்திலே நின்றார்கள்; ஆசாரியர் லேவியரின் கையிலிருந்து இரத்தத்தை வாங்கித் தெளித்தார்கள்.

2நாளா 30:17. சபையிலே அநேகர் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளாதிருந்தார்கள்; ஆகையால் சுத்தமில்லாத எல்லாரையும் கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ண, லேவியர் அவர்களுக்காகப் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கும் காரியத்தை விசாரித்தார்கள்.

2நாளா 30:18. அதேனென்றால் எப்பிராயீம், மனாசே, இசக்கார், செபுலோன் மனுஷரில் ஏராளமான அநேகம் ஜனங்கள் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொள்ளாதிருந்தும், எழுதியிராதபிரகாரமாகப் பஸ்காவைச் சாப்பிட்டார்கள்.

2நாளா 30:19. எசேக்கியா அவர்களுக்காக விண்ணப்பண்ணி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரான தேவனைத் தேடும்படிக்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக என்றான்.

2நாளா 30:20. கர்த்தர் எசேக்கியாவின் விண்ணபத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலஞ்செய்தார்.

பஸ்காவை ஆசரிக்கும்படி எசேக்கியா ராஜாவும், அவனுடைய பிரபுக்களும், எருசலேமிலுள்ள சபையார் யாவரும் யோசனைபண்ணின நாள் வருகிறது. இரண்டாம் மாதத்தில் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்க வெகு ஜனங்கள் எருசலேமில் மகாபெரிய சபையாய்க் கூடுகிறார்கள் *(2நாளா 30:13)*.

எருசலேமிலே பஸ்காவை ஆசரிக்க கூடியிருக்கிறவர்கள், அதற்கான ஆயத்த வேலைகளை செய்கிறார்கள். முதலாவதாக அவர்கள் எழும்பி, எருசலேமில் உண்டான பலிபீடங்களையும், தூபபீடங்களையும் அகற்றிக் கீதரோன் ஆற்றிலே போடுகிறார்கள் *(2நாளா 30:14)*. அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலுள்ள விக்கிரகபலிபீடங்களையும், அது மாத்திரமல்லாமல் எருசலேம் எங்கிலுமுள்ள விக்கிரக பலிபீங்களையும் அகற்றுகிறார்கள்.

எசேக்கியாவின் நாட்களில் யூதா தேசம் முழுவதிலும் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாயிற்று. ஜனங்கள் கர்த்தரிடத்தில் தங்களைப் பிரதிஷ்டை பண்ணுகிறார்கள். விக்கிரகங்களின் பலிபீடங்களையும், தூபபீடங்களையும் அகற்றி அவற்றைக் கீதரோன் ஆற்றிலே போடுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்காவை ஆசரித்ததுபோல, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாமோ சுவிசேஷ பஸ்காவை ஆசரிப்பதற்கு நம்மை ஆயத்தம்பண்ணவேண்டும். நம்மிடத்தில் காணப்படுகிற மீறுதல்களையும், பாவங்களையும், ஆவிக்குரிய விக்கிரகாராதனைகளையும் நம்மைவிட்டு அகற்றவேண்டும்.

பின்பு அந்த இரண்டாம் மாதம் பதினாலாந்தேதியில் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கிறார்கள்; ஆசாரியரும் லேவியரும் வெட்கி, தங்களைச் சுத்தம் பண்ணி, சர்வாங்க தகனபலிகளைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவருகிறார்கள்.

ஆசாரியரும் லேவியரும் தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற தங்கள் முறைமையின்படியே தங்கள் ஸ்தானத்திலே நிற்கிறார்கள்; ஆசாரியர் லேவியரின் கையிலிருந்து இரத்தத்தை வாங்கித் தெளிக்கிறார்கள் *(2நாளா 30:15,16).*

பஸ்கா பொதுவாக முதலாம் மாதம் பதினாலாந்தேதியில் நடைபெறும். இங்கு ஒரு மாதம் சென்றபின்பு நடைபெறுகிறது. *(யாத் 12).*

ஆசாரியர்களே பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கவேண்டும். ஆனால் லேவியர்கள் ஆசாரியர்களுக்காக, பஸ்கா ஆட்டுக்குட்டிகளை அடிக்கிறார்கள். சபையிலே அநேகர் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளாதிருக்கிறார்கள்; ஆகையால் சுத்தமில்லாத எல்லாரையும் கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ண, லேவியர் அவர்களுக்காகப் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கும் காரியத்தை விசாரிக்கிறார்கள் *(2நாளா 30:17).*

பஸ்காவை ஆசரிக்கிறவர்கள், மோசேயின் பிரமாணத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் பஸ்காவை புசிக்கவேண்டும். ஆனால் அநேகம் ஜனங்கள் தங்களை சுத்தம்பண்ணிக்கொள்ளாதிருந்தும், அவர்களும் பஸ்காவை சாப்பிடுகிறார்கள். சுத்தமில்லாதவர்கள் பஸ்காவை சாப்பிட அனுமதியில்லை.

எப்பிராயீம், மனாசே, இசக்கார், செபுலோன் மனுஷரில் ஏராளமான அநேகம் ஜனங்கள் தங்களைச் சுத்தம்பண்ணிக் கொள்ளாதிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் மோசேயின் பிரமாணத்தில் எழுதியிராதபிரகாரமாகப் பஸ்காவைச் சாப்பிடுகிறார்கள் *(2நாளா 30:18).*

பரிசுத்தமில்லாமல் பஸ்காவை சாப்பிடுவது மோசேயின் பிரமாணத்தை மீறுகிற செயல். ஆனாலும் இங்கே உள்ள சூழ்நிலைகளில், தங்களை சுத்தம்பண்ணிக்கொள்ளாதவர்களும், பஸ்காவை சாப்பிடுகிறார்கள். எசேக்கியா அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறான். எசேக்கியா ஜனங்களுடைய நன்மைக்காகவும், அவர்களுடைய தேவைகளை சந்திப்பதற்காகவும், பாரம்பரிய பழக்க வழக்கங்களை விட்டுக்கொடுக்கிறான்.

மோசேயின் பிரமாணத்தை மீறுவது கர்த்தருக்கு விரோதமான பாவம். எசேக்கியா ஜனங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்கவேண்டுமென்று எசேக்கியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான்.

எசேக்கியா கர்த்தருடைய சமுகத்திலே அவர்களுக்காக விண்ணப்பண்ணும்போது, "தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரான தேவனைத் தேடும்படிக்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக" *(2நாளா 30:19)* என்று சொல்லி விண்ணப்பம்பண்ணுகிறான். கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, ஜனங்களுக்கு அநுகூலஞ்செய்கிறார் *(2நாளா 30:20).*

அநேகம் ஜனங்கள் பஸ்காவை ஆசரிக்க வேண்டிய பிரகாரம் ஆசரிக்கவில்லை. நியாயப் பிரமாணத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது வருமோ என்று நினைத்து, எசேக்கியா தன் ஜனங்கள் எல்லோருக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறான். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருந்தாலும், கிருபையுள்ள கர்த்தர் அவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பாராக என்றும் விண்ணப்பம் பண்ணுகிறான் *(லேவி 15:31, 2நாளா 30:18-20).*

எசேக்கியாவின் ஜெபம் சுருக்கமாயிருக்கிறது. ஆனாலும் அவன் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிக்கிறான். பஸ்காவை ஆசரிப்பதற்காக எருசலேமுக்கு கூடிவந்திருக்கிற ஜனங்கள், தேவனாகிய கர்த்தரைத் தேடும்படிக்கு, தங்கள் இருதயத்தை நேராக்கினவர்கள். ஆனாலும் அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருக்கிறார்கள். அவர்களிடத்தில் சடங்காச்சார சுத்திகரிப்பு குறைவாகயிருக்கிறது.

பஸ்காவை ஆசரித்தவர்களிடத்தில் ஒரு சில குறைகள் காணப்படுகிறது. அதுபோல நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் சில குறைகள் காணப்படலாம். ஆனாலும் கர்த்தரைத் தேடும்படிக்கு நம்முடைய இருதயத்தை நேராக்கவேண்டும். கர்த்தருடைய கிருபையையும், அவருடைய இரக்கத்தையும் நாம் தேடவேண்டும். கர்த்தரைக் கனம்பண்ணி அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்று நம்முடைய இருதயம் நாடவேண்டும்.

நம்முடைய இருதயம் கர்த்தரைத் தேடும்படிக்கு நேராயிருக்கும்போது, கர்த்தர் நம்முடைய மற்ற பாவங்களை, தமது கிருபையினால் மன்னிப்பார். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற கடமையை செய்யாதிருப்பதும் பாவம். அந்தக் கடமையில் ஒரு சில காரியங்களை செய்யாமல் விட்டுவிடுவதும் பாவம். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஊழியத்தை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும்.

கர்த்தர் நம்முடைய குறைவுகளை மன்னிக்கவேண்டுமென்றால், நாம் கர்த்தருடைய சமுகத்திலே தயவாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். எசேக்கியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான். கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு ஜனங்களுக்கு அநுகூலம் செய்கிறார்.

பஸ்காவை ஆசரிக்கிறவர்கள் தங்களை சுத்தம்பண்ணிக்கொள்ளாமல், பஸ்காவை சாப்பிடுகிறார்கள். அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கேற்ற சுத்தாங்கம் அடையாதிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களுக்கு அநுகூலம் செய்கிறார். கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சுமத்தவில்லை. கர்த்தர் அவர்களுடைய ஜெபங்களை தம்முடைய கிருபையினால் அங்கீகரிக்கிறார். கர்த்தர் அவர்களைக் குணப்படுத்துகிறார்.

கர்த்தர் நம்மைக் குணப்படுத்தும்போது, நம்முடைய பாவங்களும் மன்னிக்கப்படுகிறது. நமக்கு சமாதானமும் ஆறுதலும் உண்டாகிறது.

"இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார்" (ஏசா 6:10).

"அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கிமீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது" (சங் 103:3-5).

"அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன்" (ஏசா 57:18).

"ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்" (மல் 4:2).

புளிப்பில்லா அப்பப்பண்டிகை 2நாளா 30:21-27

2நாளா 30:21. அப்படியே எருசலேமிலே காணப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளளவும் மகா ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள்; லேவியரும் ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

2நாளா 30:22. கர்த்தருக்கு அடுத்த காரியத்தில் நல்ல உணர்வுள்ள எல்லா லேவியரோடும் எசேக்கியா பட்சமாய்ப் பேசினான்; இப்படி அவர்கள் பண்டிகையின் ஏழுநாள் அளவும் புசித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

2நாளா 30:23. பின்பு வேறே ஏழுநாளளவும் ஆசரிக்கச் சபையார் எல்லாரும் யோசனைபண்ணி, அந்த ஏழுநாளும் ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள்.

2நாளா 30:24. யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சபைக்கு ஆயிரம் காளைகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கொடுத்தான்; பிரபுக்களும் சபைக்கு ஆயிரம் காளைகளையும் பதினாயிரம் ஆடுகளையும் கொடுத்தார்கள்; ஆசாரியரில் அநேகம்பேர் தங்களைச் சுத்தம்பண்ணினார்கள்.

2நாளா 30:25. யூதாவின் சபையனைத்தும், ஆசாரியரும், லேவியரும், இஸ்ரவேலிலிருந்து வந்தவர்களுடைய சபையனைத்துமாகிய இஸ்ரவேல் தேசத்திலிருந்துவந்த அந்நியரும், யூதாவில் குடியிருந்தவர்களும் மகிழ்ச்சியாயிருந்தார்கள்.

2நாளா 30:26. அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை.

2நாளா 30:27. லேவியரான ஆசாரியர்கள் எழுந்துநின்று, ஜனத்தை ஆசீர்வதித்தார்கள்; அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டினது.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரித்த பின்பு, அவர்கள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகை ஏழு நாளளவும் ஆசரிக்கப்படும். எருசலேமிலே காணப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளளவும் மகா ஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள்; லேவியரும் ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதித்துக்கொண்டிருக்கிறார்கள் *(2நாளா 30:21).*

வடக்கு தேசத்திலிருந்து வந்த இஸ்ரவேல் புத்திரரும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கிறார்கள். பொதுவாக இந்தப் பண்டிகையை ஏழு நாட்களுக்கு மட்டுமே ஆசரிப்பது வழக்கம். ஆனால் இப்போது இதை மேலும் ஏழு நாட்களுக்கு நீடித்து மொத்தம் 14 நாட்களுக்கு புளிப்பில்லா அப்பப்பண்டிகையை ஆசரிக்கிறார்கள். *(2நாளா 30:21-27).*

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கிற ஏழுநாட்களிலும், ஜனங்கள் கர்த்தருக்கு சமாதானபலிகளாக, ஏராளமான ஆடுகளை பலியிடுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு காண்பிக்கும் கிருபையையும், இரக்கத்தையும் அங்கீகரித்து, கர்த்தரைத் துதிக்கும் வண்ணமாக அவர்கள் கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்தும்போது, அவர்கள் கர்த்தரிடத்தில் தங்கள் விண்ணப்பங்களையும் ஏறெடுக்கிறார்கள். கர்த்தருக்கு அடுத்த காரியத்தில் நல்ல உணர்வுள்ள எல்லா லேவியரோடும் எசேக்கியா பட்சமாய்ப் பேசுகிறான்; இப்படி அவர்கள் பண்டிகையின் ஏழுநாள் அளவும் புசித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் துதித்துக்கொண்டிருக்கிறார்கள் *(2நாளா 30:22).*

லேவியர்கள் எருசலேமிலே காணப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய சத்தியத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் சமாதான பலியைப்பற்றியும், அதைச் செலுத்தவேண்டிய விதத்தைப்பற்றியும், அதைச் செலுத்துவதற்கான காரணத்தைப்பற்றியும் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாக உபதேசம்பண்ணுகிறார்கள்.

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கும்போது, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பண்டிகை காலம் சந்தோஷமான காலம். கர்த்தருடைய வார்த்தையே நமக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்கும். லேவியர்கள் ஜனங்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை போதிக்கவேண்டும்.

"அவர்கள் யாக்கோபுக்கு உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள்" (உபா 33:10).

எசேக்கியா கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கவில்லை. ஆனாலும் அவன் லேவியரோடு பட்சமாய்ப்பேசுகிறான். இந்த லேவியர்கள் எருசலேமில் கூடியிருக்கிற இஸ்ரவேலருக்கு கர்த்தருடைய சத்தியங்களைப் போதிக்கிறார்கள். எசேக்கியா கர்த்தருடைய ஊழியக்காரருக்கு ஆதரவு கொடுக்கிறான். அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறான்.

லேவியரும் ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதித்துக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர் ஏழு நாளளவும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை மகாஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள். பின்பு வேறே ஏழுநாளளவும் ஆசரிக்கச் சபையார் எல்லாரும் யோசனைபண்ணி, அந்த ஏழுநாளும் ஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள் (2நாளா 30:23).

இஸ்ரவேல் புத்திரர் நீண்டகாலமாக கர்த்தருடைய வார்த்தையில்லாமலும், அவருடைய கட்டளைகளும், பிரமாணங்களும் இல்லாமலும் இருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குப் போதிக்கப்பட்டபோது, ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தரை அசட்டைபண்ணினதுபோல, அவருடைய வார்த்தைகளையும் அசட்டைபண்ணிவிடுகிறார்கள்.

இப்போது எருசலேமிலே புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நடைபெறுகிறது. இஸ்ரவேல் புத்திரரில் ஏராளமானோர் எருசலேமுக்கு வந்து கூடியிருக்கிறார்கள். இதுபோல மறுபடியும் கூடிவந்து, புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கும் வாய்ப்பு தங்களுக்கு கிடைக்குமா என்னும் சந்தேகம் இஸ்ரவேல் புத்திரரின் மனதில் உண்டாயிற்று.

ஆகையினால் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாட்களுக்கு ஆசரிப்பதற்கு பதிலாக, பதிநான்கு நாட்களுக்கு ஆசரிக்கிறார்கள். பண்டிகை காலத்தை இரட்டிப்பாய் அதிகரிக்கச் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் முதல் ஏழுநாளும், அதன் பின்பு மறுபடியும் ஏழுநாளும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள். அவர்களிடத்தில் சோர்வு காணப்படவில்லை. யூதாவின் சபையனைத்தும், ஆசாரியரும், லேவியரும், இஸ்ரவேலிலிருந்து வந்தவர்களுடைய சபையனைத்துமாகிய இஸ்ரவேல் தேசத்திலிருந்துவந்த அந்நியரும், யூதாவில் குடியிருந்தவர்களும் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள் (2நாளா 30:25).

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சபைக்கு ஆயிரம் காளைகளையும் ஏழாயிரம் ஆடுகளையும் கொடுக்கிறான்; பிரபுக்களும் சபைக்கு ஆயிரம் காளைகளையும் பதினாயிரம் ஆடுகளையும் கொடுக்கிறார்கள்; ஆசாரியரில் அநேகம்பேர் தங்களைச் சுத்தம்பண்ணுகிறார்கள் (2நாளா 30:24). அப்படியே எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருக்கிறது; தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலுடைய ராஜாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படி எருசலேமில் நடந்ததில்லை (2நாளா 30:26).

260 வருஷங்களுக்கு முன்பு, சாலொமோனின் ஆட்சிக் காலத்தின் முடிவில் சமஸ்த இஸ்ரவேல் ராஜ்யம் வடக்குதேசம் என்றும், தெற்கு யூதா தேசம் என்றும் இரண்டாகப் பிளவுண்டது. அதன் பின்பு எருசலேமில் இதுவரையிலும் பஸ்கா பண்டிகை 260 வருஷங்களாக ஆசரிக்கப்படவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள். பண்டிகை முடிந்த பின்பு லேவியரான ஆசாரியர்கள் எழுந்துநின்று, ஜனத்தை ஆசீர்வதிக்கிறார்கள்; அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்து எட்டுகிறது (2நாளா 30:27).

ஜனங்களை ஆசீர்வதிப்பது ஆசரிய ஊழியத்தின் ஒரு பகுதி "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, அவர்களைப் பார்த்துச் சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே" (எண் 6:22-26).

லேவியரான ஆசாரியர்கள் கர்த்தரிடத்திலே ஜனங்களுக்காக ஜெபம்பண்ணும்போது, அவர்கள் ஜனங்களுடைய வாயாக செயல்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், வாக்குத்தத்தங்களையும் ஜனங்களுக்கு சொல்லும்போது, அவர்கள் கர்த்தருடைய வாயாக செயல்படுகிறார்கள். இவ்விரண்டு ஊழியங்களுமே ஜனங்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையில் எருசலேமுக்கு வந்து கூடியிருக்கிறார்கள். ஆசாரியர்கள் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்புகிறார்கள். ஜனங்களும் கர்த்தருடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, தங்கள் வீடுகளுக்கு சந்தோஷமாய்த் திரும்பிப்போகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய ஜெபத்திற்கு "ஆமென்" என்று சொல்லுகிறார். நாம் ஏறெடுக்கிற விண்ணப்பம் கர்த்தருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்திற்கு வந்து எட்டும். அதன்பின்பு நம்முடைய விண்ணப்பங்கள், கர்த்தருடைய ஆசீர்வாதங்களாக, பூமியிலுள்ள நமக்கு வந்து சேரும்.

31 அதிகாரம்

எசேக்கியாவின் காலத்தில், யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சிகள் இன்னும் அதிகமாய் நடைபெறுகிறது. யூதாதேசத்தில் மீதமாகயிருக்கிற விக்கிரகங்களெல்லாம் உடைத்துப் போடப்படுகிறது (2நாளா 31:1). ஆசாரியரும் லேவியரும் மறுபடியுமாக தங்களுடைய ஊழியத்தில் அமர்த்தப்படுகிறார்கள் (2நாளா 31:2).

ஆசாரியரையும் லேவியரையும் பராமரிப்பதற்கும், கர்த்தருடைய ஆலயத்திலே பலிகளை செலுத்துவதற்கும், எசேக்கியா தன் ஆஸ்தியிலிருந்து ஒரு பங்கை எடுத்துக்கொடுக்கிறான் (2நாளா 31:3). ஆசாரியருக்கும் லேவியருக்குரிய பங்கை கொடுக்குமாறு எசேக்கியா ஜனங்களுக்கு கட்டளையிடுகிறான் (2நாளா 31:4). ஜனங்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு தசமபாகத்தை பரிபூரணமாய்க் கொடுக்கிறார்கள். ஆசாரியருக்கும் லேவியருக்கும் பராமரிப்பாகக் கொடுத்ததுபோக, இன்னும் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது (2நாளா 31:5-10).

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்துகிறான். எசேக்கியா ஆலயவிசாரிப்புக்காக விசாரணைக்காரரை நியமிக்கிறான் (2நாளா 31:11-19). எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும், உண்மையுமானதை செய்கிறான் (2நாளா 31:20,21).

ஆவிக்குரிய சீர்திருத்தம்
2நாளா 31:1-10

2நாளா 31:1. இவையெல்லாம் முடிந்தபின்பு, வந்திருந்த இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், யூதா பென்யமீனெங்கும் எப்பிராயீமிலும் மனாசேயிலுங்கூட உண்டான சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்து, அவைகளையெல்லாம் தகர்த்துப்போட்டார்கள்; பின்பு இஸ்ரவேல்புத்திரர் எல்லாரும் அவரவர் தங்கள் ஊர்களிலிருக்கிற தங்கள் காணியாட்சிக்குத் திரும்பினார்கள்.

2நாளா 31:2. எசேக்கியா ஆசாரியர் லேவியருடைய வகுப்புகளை அவர்கள் வரிசைகளின்படியேயும், அவரவரை அவர்கள் ஊழியத்தின்படியேயும் திட்டப்படுத்தி, ஆசாரியரையும் லேவியரையும், சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தவும், கர்த்தருடைய பாளயத்தின் வாசல்களில் ஊழியஞ்செய்து துதித்து ஸ்தோத்திரிக்கவும் ஒழுங்குப்படுத்தினான்.

2நாளா 31:3. ராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற படியே அந்திசந்திகளில் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் பண்டிகைகளிலும் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும் தன் ஆஸ்தியிலிருந்தெடுத்துத் தன் பங்கைக் கொடுத்தான்.

2நாளா 31:4. ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி, அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிட்டான்.

2நாளா 31:5. இந்த வார்த்தை பிரசித்தமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், திராட்சரசத்திலும் எண்ணெயிலும், தேனிலும், நிலத்தின் எல்லா வரத்திலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள்.

2நாளா 31:6. யூதாவின் பட்டணங்களில் குடியிருந்த இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும், மாடுகளிலும் ஆடுகளிலும் தசமபாகத்தையும், தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டு வந்து குவியல் குவியலாக வைத்தார்கள்.

2நாளா 31:7. மூன்றாம் மாதத்தில் குவியல் செய்யத்தொடங்கி ஏழாம் மாதத்தில் முடித்தார்கள்.

2நாளா 31:8. எசேக்கியாவும் பிரபுக்களும் வந்து, அந்தக் குவியல்களைக் காணும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழ்ந்தார்கள்.

2நாளா 31:9. அந்தக் குவியல்களைக் குறித்து எசேக்கியா ஆசாரியரையும் லேவியரையும் விசாரித்தபோது,

2நாளா 31:10. சாதோக்கின் சந்ததியானாகிய அசரியா என்னும் பிரதான ஆசாரியன் அவனை நோக்கி: இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு வரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தோம்; இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது என்றான்.

எருசலேமில் கூடிவந்திருக்கிற இஸ்ரவேலர் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். அதன் பின்பு புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் மகாஆனந்தத்தோடே ஆசரிக்கிறார்கள். இவையெல்லாம் முடிந்தபின்பு, வந்திருந்த இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், யூதா பென்யமீனெங்கும் எப்பிராயீமிலும் மனாசேயிலுங்கூட உண்டான சிலைகளை உடைத்துப்போடுகிறார்கள். விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்து, அவைகளையெல்லாம் தகர்த்துப்போடுகிறார்கள் (2நாளா 31:1)

தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியரும், ஜனங்களும் தங்களைச் சுத்திகரித்துக் கொள்கிறார்கள். பண்டிகைகளும் ஆசரிக்கப்படுகிறது. அதன் பின்பு, யூதாவின் பட்டணங்களில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியின் காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறுகின்றது. இஸ்ரவேலர் எல்லாரும் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், அங்குள்ள சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளையும் பீடங்களையும் இடித்து, அவைகளையெல்லாம் தகர்த்துப்போடுகிறார்கள்.

யூதா தேசத்திலுள்ள ஜனங்களைக் குறிப்பதற்கு "இஸ்ரவேல்புத்திரர் எல்லாரும்" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் வடக்கு ராஜ்யத்திலிருந்து பக்தியுள்ளவர்கள் ஏராளமானோர் யூதா தேசத்திற்கு வந்து விட்டார்கள். வடக்கு தேசத்திலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்ததினால் அவர்கள் அசீரியருடைய சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள்.

அதன் பின்பு, யூதா தேசமே மெய்யான இஸ்ரவேல் தேசமாக விளங்கிற்று. யூதா தேசத்தாரும், சிறையிருப்புக்குப் போனார்கள். ஆனாலும் அதன் பின்பு, அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து, தேசத்தை மறுபடியும் கட்டி எழுப்பினார்கள். இயேசுவின் நாட்களிலிருந்த யூதர்கள் இந்த யூதா தேசத்தாரே ஆவர். இந்தத் தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரின் எல்லாக் கோத்திரத்தாரும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிப்பதற்கு முன்பாக தங்களை சுத்தம்பண்ணினார்கள். பஸ்காவை ஆசரித்த பின்பு அவர்கள் யூதாதேசத்தை சுத்தம்பண்ணுகிறார்கள். பஸ்காவை ஆசரிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் எருசலேமிலே திரளான எண்ணிக்கையில் கூடிவந்திருக்கிறார்கள். பஸ்கா முடிவு பெறுகிறது.

பஸ்கா முடிந்த உடனே, எருசலேமுக்கு வந்திருக்கிற இஸ்ரவேலர் எல்லோரும் யூதாவிலும், பென்யமீனிலும், எப்பிராயீமிலும், மனாசேயிலும் உண்டான சிலைகளை உடைத்துப்போடுகிறார்கள். பஸ்காவை ஆசரிக்கும்போது இஸ்ரவேல் புத்திரருடைய இருதயம் பரிசுத்தமாக்கப்படுகிறது. கர்த்தர்மீது அவர்கள்மீது வைத்திருக்கிற பக்திவைராக்கியம் அதிகரிக்கிறது. அவர்களுடைய ஆவி கர்த்தருக்குள் பிரகாசமாய் எரிகிறது.

புடமிடுகிற அக்கினி களிம்பை நீக்கி, பொன்னை சுத்தப்பொன்னாக்கும். அக்கினி சுத்திகரிக்கப்படுதுபோல, இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களில் கொழுந்துவிட்டு எரிகிற பரிசுத்த ஆவியானவரின் அக்கினி, அவர்களை சுத்திகரிக்கிறது. அவர்கள் யூதாதேசத்தை சுத்தம்பண்ணுகிறார்கள்.

எசேக்கியா எருசலேமிலே பஸ்காவை ஆசரிக்கும்போது, வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே ஓசெயா ராஜாவாயிருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் பஸ்காவை ஆசரிப்பதற்கு, சமாரியாவிலிருந்து எருசலேமுக்குப் போவதை ஓசெயா தடைபண்ணவில்லை.

இப்போது பஸ்காவை ஆசரிக்க வந்த இஸ்ரவேலர், எப்பிராயீமிலும், மனாசேயிலும் உண்டான சிலைகளை உடைத்துப்போடுகிறார்கள். விக்கிரகத்தோப்புகளை வெட்டிப் போடுகிறார்கள். விக்கிரகங்களின் மேடைகளையும் பீடங்களையும் இடித்துப்போடுகிறார்கள். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓசெயா இதையும் தடுத் நிறுத்தவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் மீதுள்ள பக்திவைராக்கியத்தினால் சமாரியாவில் உண்டான ஏராளமான சிலைகளை உடைத்துப்போடுகிறார்கள்.

பஸ்காவை ஆசரிப்பதற்கு எப்பிராயீமிலும், மனாசேயிலும் இருந்து ஏராளமானோர் எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள்.

"அதேனென்றால் எப்பிராயீம், மனாசே, இசக்கார், செபுலோன் மனுஷரில் ஏராளமான அநேகம் ஜனங்கள் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொள்ளாதிருந்தும், எழுதியிராதபிரகாரமாகப் பஸ்காவைச் சாப்பிட்டார்கள்" *(2நாளா 30:18).*

பஸ்கா முடிந்த பின்பு, இவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய், தங்கள் தேசங்களில் உண்டான சிலைகளை உடைத்துப்போடுகிறார்கள். விக்கிரகங்களின் மேடைகளையும் பீடங்களையும் இடித்துப்போடுகிறார்கள். புறஜாதியாரின் விக்கிரகங்கள் விலையுயர்ந்ததாக இருந்தாலும், கன்றுக்குட்டிகள் வார்ப்பிக்கப்பட்டிருந்தாலும், இவையெல்லாம் உடைத்துப்போடவேண்டியவையே. விக்கிகரங்களின் பீடங்கள் பழையதாகயிருந்தாலும், அவை அழகானதாகயிருந்தாலும் அவைகளும் தகர்த்துப்போடவேண்டியவைகளே.

எசேக்கியா ஆசாரியர் லேவியருடைய வகுப்புகளை அவர்கள் வரிசைகளின்படியேயும், அவரவரை அவர்கள் ஊழியத்தின்படியேயும் திட்டப்படுத்துகிறான். மேலும் அவன் ஆசாரியரையும் லேவியரையும், சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தவும், கர்த்தருடைய பாளயத்தின் வாசல்களில் ஊழியஞ்செய்து துதித்து ஸ்தோத்திரிக்கவும் ஒழுங்குப்படுத்துகிறான் *(2நாளா 31:2).*

இந்த வசனத்தில் கர்த்தருடைய ஆலயம் என்பது, "கர்த்தருடைய பாளயம்" என்று அழைக்கப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லலாம். சாலொமோன் கட்டின தேவாலயம் விலையுயர்ந்த கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தூக்கிச் செல்ல முடியாது.

ஆனாலும் பாபிலோன் தேசத்தார் யூதாவுக்கு விரோதமாக வந்து, எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை இடித்துப்போடுவார்கள் என்பதையும், ஆலயத்தின் பணிமுட்டுக்களையும் வெண்கலத்தையும் தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய்விடுவார்கள் என்பதையும் குறிக்கும் வண்ணமாக, கர்த்தருடைய ஆலயமானது, இந்த வசனத்தில் "கர்த்தருடைய பாளயம்" என்று அழைக்கப்படுகிறது.

ஆசாரியர், லேவியர் ஆகியோருடைய 24 வகுப்புகளை எசேக்கியா மறுபடியும் புதுப்பிக்கிறான். இவர்களுடைய சேவைகள் சில காலமாக நிறுத்தப்பட்டிருந்தது. அவர்களுடைய ஊழியங்களை எசேக்கியா மறுபடியும் ஆரம்பித்து வைக்கிறான். ஆனாலும் எசேக்கியாவினுடைய குமாரனின் காலத்தில் இவர்களுடைய ஊழியங்கள் மறுபடியும் நிறுத்தப்படுகிறது. (2நாளா 33:1-10).

கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனைகள் நடைபெறவேண்டும். பலிகள் செலுத்தப்படவேண்டும். எசேக்கியா ராஜா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே அந்திசந்திகளில் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும், ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் பண்டிகைகளிலும் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும் தன் ஆஸ்தியிலிருந்தெடுத்துத் தன் பங்கைக் கொடுக்கிறான் (2நாளா 31:3).

எசேக்கியா ராஜாவும் காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்துகிறான். தன் காணிக்கையைத் தன்னுடைய ஆஸ்தியிலிருந்து எடுத்துக் கொடுக்கிறான். அந்திசந்திகளில் செலுத்த வேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும், ஓய்வு நாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் பண்டிகைகளிலும் செலுத்தவேண்டிய சர்வாங்க தகனபலிகளுக்கும் எசேக்கியா ராஜா தன் பங்கைக் கொடுக்கிறான். இந்த பலிகளெல்லாம் மோசே கட்டளையிட்ட பிரகாரம் செலுத்தப்படுகிறது.

கர்த்தருடைய ஊழியத்திற்கு ராஜா மாத்திரம் கொடுத்தால் போதாது. ஜனங்களும் கொடுக்கவேண்டும். எசேக்கியா ராஜா ஆசாரியருக்கும் லேவியருக்கும் ஒரு பாகத்தைக் கொடுக்குமாறு, முதலாவதாக எருசலேமின் குடிகளுக்கு கட்டளையிடுகிறான். அதன் பின்பு இந்தக் கட்டளை யூதாவின் பட்டணங்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது.

ஆசாரியரும் லேவியரும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை உற்சாகமாய்க் கைக்கொள்ளும்படி, எசேக்கியா அவர்களுக்குரிய பாகத்தைக் கொடுக்க ஜனங்களுக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கட்டளையிடுகிறான் (2நாளா 31:4).

இஸ்ரவேல் புத்திரர் எசேக்கியா ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். எசேக்கியாவின் வார்த்தை பிரசித்தமானபோது, இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும், திராட்சரசத்திலும் எண்ணெயிலும், தேனிலும், நிலத்தின் எல்லா வரத்திலும் முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசமபாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுக்கிறார்கள் (2நாளா 31:5).

ஜனங்கள் கொடுக்கும் தசம பாகத்திலிருந்தும், முதற்பலன்களிலிருந்தும், ஆசாரியர், லேவியர் ஆகியோரின் தேவைகள் சந்திக்கப்படுகிறது. ஜனங்கள் கொண்டு வரும் காணிக்கைகளும், தசமபாகங்களும் குவியல் குவியலாக, குவித்து வைக்கப்படுகிறது.

யூதாவின் பட்டணங்களில் குடியிருந்த இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும், மாடுகளிலும் ஆடுகளிலும் தசமபாகத்தையும், தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டு வந்து குவியல் குவியலாக வைக்கிறார்கள். மூன்றாம் மாதத்தில் குவியல் செய்யத்தொடங்கி ஏழாம் மாதத்தில் முடிக்கிறார்கள் (2நாளா 31:6,7).

யூதாதேசத்திலே அறுவடைகாலம் முடிவு பெறும்போது, அவர்கள் காணிக்கைகளையும், தசமபாகங்களையும் கொண்டு வந்து குவிப்பது முடிவு பெறுகிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குரியதை, கர்த்தருக்கு கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

ஜனங்கள் கொண்டு வந்து கொடுத்த தசமபாகங்களும் காணிக்கைகளும் குவியல் குவியலாகயிருக்கிறது. எசேக்கியாவும் பிரபுக்களும் வந்து, அந்தக் குவியல்களைக் காணும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழுகிறார்கள் (2நாளா 31:8).

ஜனங்கள் கொண்டு வந்து கொடுத்த காணிக்கைகளும் தசமபாகங்களும் குவியல் குவியலாக குவித்து வைக்கப்பட்டிருக்கிறது. அவை இன்னும் ஆசாரியருக்கும் லேவியருக்கும் பிரித்து கொடுக்கப்படவில்லை. ஆகையினால் எசேக்கியா அந்தக் குவியல்களைக் குறித்து ஆசாரியரையும், லேவியரையும் விசாரிக்கிறான். காணிக்கைகளும் தசமபாகங்களும், ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் கொடுக்கப்படாமல், ஏன் குவியல் குவியலாக குவித்து வைக்கப்பட்டிருக்கிறது என்று எசேக்கியா கேட்கிறான்.

ஆசாரியருக்கும் லேவியருக்கும் தசமபாகங்களிலிருந்தும், காணிக்கைகளிலிருந்தும் ஏற்கெனவே பிரித்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது இங்கே குவியலாகயிருப்பது, ஆசாரியருக்கும் லேவியருக்கும், பிரித்துக் கொடுத்ததுபோக மிச்சமாகயிருப்பது. பிரதான ஆசாரியனாகிய அசரியா என்பவன், ஜனங்கள் கொண்டு வந்து கொடுத்த தசமபாகங்களையும், காணிக்கைகளையும், ஆசாரியருக்கும் லேவியருக்கும் பொறுப்பாய் பிரித்துக்கொடுத்திருக்கிறான்.

பிரதான ஆசாரியனாகிய அசரியா சாதோக்கின் சந்ததியைச் சேர்ந்தவன். அவன் எசேக்கியாவை நோக்கி, "இந்தக் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டு வரத் தொடங்கினதுமுதல் நாங்கள் சாப்பிட்டுத் திர்ப்தியடைந்தோம்; இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் இந்தத் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது" *(2நாளா 31:10)* என்று சொல்லுகிறான்.

தசமபாகங்களை ஐந்து மாதங்களாகச் சேகரிக்கிறார்கள். அவைகளைக் குவியலாகக் குவிக்கிறார்கள். எல்லா ஊழியக்காரருக்கும் போதுமான ஆதரவு தசமபாகத்தின் மூலமாக உண்டாயிற்று. இன்னும் மிச்சமும் இருக்கிறது. *(2நாளா 31:7- 10).*

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதத்திலிருந்து கர்த்தருடைய பிள்ளைகள் ஊழியத்திற்குத் தசமபாகங்களை உண்மையாய் செலுத்தும் போது, ஊழியத்தின் சகல தேவைகளும் சந்திக்கப்படும். இன்னும் மிச்சமும் இருக்கும்.

கர்த்தர் ஆசாரியரையும் லேவியரையும் போஷிக்கிறார். அவர்களுக்கு தேவையானதைவிட அதிகமாய்க் கொடுத்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார். நாம் வேண்டிக்கொள்வதற்கும், விண்ணப்பம்பண்ணுவதற்கும் அதிகமாகக் கொடுத்து, கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறவர். கர்த்தருடைய பராமரிப்பு அவருடைய ஊழியக்காரர்களுக்கு தாராளமாய்க் கிடைத்திருக்கிறது.

எசேக்கியாவும் பிரபுக்களும் வந்து, அந்தக் குவியல்களைக் காணும்போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழுகிறார்கள்.

தசமபாகம் 2நாளா 31:11-21

2நாளா 31:11. அப்பொழுது எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான்.

2நாளா 31:12. அவர்கள் அவைகளை ஆயத்தப்படுத்தினபின்பு, அவைகளிலே காணிக்கைகளையும், தசமபாகத்தையும், பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள்; அவைகளின்மேல் லேவியனாகிய கொனனியா தலைவனும், அவன் தம்பியாகிய சிமேயி இரண்டாவதுமாயிருந்தான்.

2நாளா 31:13. ராஜாவாகிய எசேக்கியாவும், தேவனுடைய ஆலய விசாரணைக்காரனாகிய அசரியாவும் பண்ணின கட்டளையின்படியே, யெகியேலும், அசசியாவும், நாகாத்தும், ஆசகேலும், யெரிமோத்தும், யோசபாத்தும், ஏலியேலும், இஸ்மகியாவும், மாகாத்தும் பெனாயாவும், கொனனியாவின் கீழும் அவன் தம்பியாகிய சிமேயியின் கீழும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

2நாளா 31:14. கிழக்குவாசலைக் காக்கிற இம்னாவின் குமாரனாகிய கோரே என்னும் லேவியன், கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் மகா பரிசுத்தமானவைகளையும் பங்கிடும்படிக்கு, தேவனுக்குச் செலுத்தும் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருந்தான்.

2நாளா 31:15. அவனுடைய கைக்கு உதவியாக ஆசாரியரின் பட்டணங்களில் வகுப்புகளின் படியிருக்கிற தங்கள் சகோதரரிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் சரிசமானமாய்க் கொடுக்கும்படிக்கு, உண்மையுள்ளவர்களாக எண்ணப்பட்ட ஏதேனும், மின்யமீனும், யெசுவாவும், செமாயாவும், அமரியாவும், செக்கனியாவும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

2நாளா 31:16. வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட மூன்று வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகளைத்தவிர, கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிற அவரவருக்கும் தங்கள் வகுப்புகளின்படியே, தங்கள் முறைகளிலே தாங்கள் செய்கிற தங்கள் பணிவிடைக்குத்தக்கதாய் அநுதின படி கொடுக்கப்பட்டது.

2நாளா 31:17. தங்கள் பிதாக்களின் வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட தங்கள் வகுப்புகளின்படியே தங்கள் முறைகளிலிருக்கிற இருபது வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆசாரியருக்கும், லேவியருக்கும்,

2நாளா 31:18. அவர்களுடைய எல்லாக் கூட்டத்தின் அட்டவணையிலும் எழுதப்பட்ட அவர்களுடைய எல்லாக் குழந்தைகளுக்கும், மனைவிகளுக்கும், குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் பங்கு கொடுத்தார்கள்; அவர்கள் பரிசுத்தமானதை உண்மையின்படி பரிசுத்தமாய் விசாரித்தார்கள்.

2நாளா 31:19. ஆசாரியரில் எல்லா ஆண்பிள்ளைகளுக்கும் லேவியருக்குள்ளே அட்டவணையில் எழுதப்பட்டவர்கள் எல்லாருக்கும் படிகொடுக்க, ஆசாரியருடைய ஒவ்வொரு பட்டணத்துக்கடுத்த வெளிநிலங்களிலும் ஆரோன் புத்திரரில் பேர்பேராகக் குறிக்கப்பட்ட மனுஷர் இருந்தார்கள்.

2நாளா 31:20. இந்தப்பிரகாரமாக எசேக்கியா யூதாவெங்கும் நடப்பித்து, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையும் உண்மையுமானதைச் செய்தான்

2நாளா 31:21. அவன் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா, யூதாதேசத்தின் ராஜாசன காரியங்களை கவனிப்பதோடு, கர்த்தருடைய ஆலயத்தின் காரியங்களையும் கவனிக்கிறான். ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திலே தசமபாகங்களையும், பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளையும் கொண்டு வந்து சேர்க்கிறார்கள். இவையெல்லாம் கர்த்தருக்குரியது. இவற்றை கர்த்தருடைய ஊழியத்தில் கவனமாய் செலவுபண்ணவேண்டும்.

ஜனங்கள் கொண்டு வருகிற காணிக்கைகளும் தசமபாகங்களும் குவியல் குவியலாக இருக்கிறது. அவை திரட்சியான அம்பாரமாக மீந்திருக்கிறது. இவையெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமானவை. இவற்றை வீணாக்கக்கூடாது. கர்த்தருடைய காரியங்களை மிகவும் பொறுப்பாய் கவனித்து செய்யவேண்டும்.

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திலே பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்த சொல்லுகிறான் (2நாளா 31:11). இந்தப் பண்டகசாலைகளில் தசமபாகங்களும் காணிக்கைகளும் சேமிக்கப்படும். ஆசாரியர்கள் எசேக்கியாவின் கட்டளைப்படி, கர்த்தருடைய ஆலயத்திலே பண்டகசாலைகளை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

தசமபாகங்களை ஏராளமாகச் சேகரிக்கிறார்கள். ஆசாரியர்களையும், லேவியரையும் ஆதரிக்கிறார்கள். அவர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைகிறார்கள். இன்னும் மிச்சமும் இருக்கிறது; கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதித்ததினால் திரட்சியான அம்பாரம் மீந்திருக்கிறது. தசமபாகங்களில் மீந்திருப்பதைச் சேமித்து வைப்பதற்காக எசேக்கியா ராஜா பண்டகசாலைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் கட்டுகிறான்.

அதன்பின்பு, அவைகளிலே காணிக்கைகளையும், தசமபாகத்தையும், பரிசுத்தம்பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைக்கிறார்கள் (2நாளா 31:12).

கர்த்தருடைய ஆலயத்திலே பண்டகசாலைகள் கட்டப்பட்டிருக்கிறது. அவைகளில் காணிக்கைகளும், தசமபாகங்களும், பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளும் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே பண்டகசாலைகளில் உண்மையாய் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காணிக்கைள் எந்த நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்திற்காக அவற்றை செலவு பண்ணவேண்டும்.

சபையின் பொருளாதாரத்தையும், பொக்கிஷங்களையும் சேமித்து வைத்து, அதை அதிகப்படுத்திக்கொண்டே போகக்கூடாது. கர்த்தருடைய பொக்கிஷங்களை அவருடைய ஊழியங்களில் பயன்படுத்தவேண்டும். பண்டகசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டிருப்பதை, தேவைப்படும்போது எடுத்து செலவுபண்ணவேண்டும். செலவு பண்ணப்படுவதற்காகத்தான் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. திரளான ஐசுவரியத்தை சேர்க்கவேண்டும் என்னும் பேராசையில், கர்த்தருடைய பொக்கிஷங்கள் சேர்த்து வைக்கப்படவில்லை.

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திலே பண்டகசாலைகள் ஏற்படுத்தி அவற்றிற்கு லேவியரை விசாரணைக்காரனாக வைக்கிறான். அவைகளின்மேல் லேவியனாகிய கொனனியா தலைவனும், அவன் தம்பியாகிய சிமேயி இரண்டாவதுமாயிருக்கிறான் (2நாளா 31:12).

ராஜாவாகிய எசேக்கியாவும், தேவனுடைய ஆலய விசாரணைக்காரனாகிய அசரியாவும் பண்ணின கட்டளையின்படியே, யெகியேலும், அசசியாவும், நாகாத்தும், ஆசகேலும், யெரிமோத்தும், யோசபாத்தும், ஏலியேலும், இஸ்மகியாவும், மாகாத்தும் பெனாயாவும், கொனனியாவின் கீழும் அவன் தம்பியாகிய சிமேயியின் கீழும் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள் (2நாளா 31:13).

தசமபாகங்களை ஊழியருக்கு முறைப்படி பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு 12 பேருக்குக் கொடுக்கப்படுகிறது. அவர்களில் கொனனியாவும், சிமேயியும் தலைவர்களாக இருக்கிறார்கள். தேவனுடைய ஆலய விசாரணைக்காரனாகிய சகரியா இவர்கள் இருவருக்கும் தலைவனாக இருக்கிறான். (2நாளா 31:12-13). கோரே என்னும் லேவியன் தேவனுக்குச் செலுத்தும் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருக்கிறான். அவனுக்கு உதவியாக ஆறு பேர் பணிபுரிகிறார்கள் (2நாளா 31:14-15).

கிழக்குவாசலைக் காக்கிற இம்னாவின் குமாரனாகிய கோரே என்னும் லேவியன், கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் மகா பரிசுத்தமானவைகளையும் பங்கிடும்படிக்கு, தேவனுக்குச் செலுத்தும் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருக்கிறான்.

அவனுடைய கைக்கு உதவியாக ஆசாரியரின் பட்டணங்களில் வகுப்புகளின்படியிருக்கிற தங்கள் சகோதரரிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் சரிசமானமாய்க் கொடுக்கும்படிக்கு, உண்மையுள்ளவர்களாக எண்ணப்பட்ட ஏதேனும், மின்யமீனும், யெசுவாவும், செமாயாவும், அமரியாவும், செக்கனியாவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள் (2நாளா 31:14,15).

யூதாவிலுள்ள பட்டணங்களில் ஆசாரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சகோதரரான ஆசாரியர்கள் எருசலேமுக்குப் போகும்போது, மற்ற ஆசாரியர்கள் தங்கள் பட்டணங்களில் தங்கியிருப்பார்கள். அங்கே அவர்கள் ஜனங்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களைப் போதிப்பார்கள்.

வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட மூன்று வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகளைத்தவிர, கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கிற அவரவருக்கும் தங்கள் வகுப்புகளின்படியே, தங்கள் முறைகளிலே தாங்கள் செய்கிற தங்கள் பணிவிடைக்குத்தக்கதாய் அநுதின படி கொடுக்கப்படுகிறது. ஆசாரியரிலும், லேவியரிலும், சிறுபிள்ளைகளுக்கும் அனுதின படி கொடுக்கப்படுகிறது. இந்த அனுதின படி அவர்கள் செய்கிற பணிவிடைக்குத்தக்கதாய் கொடுக்கப்படுகிறது.

வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட லேவியரின் தொகையைக் கணக்கிடுகிறார்கள். மூன்று வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் எல்லோரையும் கணக்கிடுகிறார்கள். இவர்களுக்கு தங்கள் முறைகளிலே தாங்கள் செய்கிற தங்கள் பணிவிடைக்குத்தக்கதாய் அநுதின படி கொடுக்கப்படுகிறது.

இது தவிர, இருபது வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆசாரியர், லேவியர் ஆகியோருடைய தொகையும் எண்ணப்படுகிறது. அவர்களுக்கும், அவர்களுடைய எல்லாக் குழந்தைகளுக்கும், மனைவிகளுக்கும், குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் பங்கு கொடுக்கிறார்கள். பரிசுத்தமானதை உண்மையின்படி பரிசுத்தமாய் விசாரிக்கிறார்கள் (2நாளா 31:16-19).

தங்கள் பிதாக்களின் வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட தங்கள் வகுப்புகளின்படியே தங்கள் முறைகளிலிருக்கிற இருபது வயதுமுதல், அதற்கு மேற்பட்ட ஆசாரியருக்கும், லேவியருக்கும், அவர்களுடைய எல்லாக் கூட்டத்தின் அட்டவணையிலும் எழுதப்பட்ட அவர்களுடைய எல்லாக் குழந்தைகளுக்கும், மனைவிகளுக்கும், குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் பங்கு கொடுக்கிறார்கள்; அவர்கள் பரிசுத்தமானதை உண்மையின்படி பரிசுத்தமாய் விசாரிக்கிறார்கள் (2நாளா 31:17,18).

தசமபாகங்களும் காணிக்கைகளும் லேவியருக்கும் ஆசாரியருக்கும் கொடுக்கப்படுவதோடு, அவர்களுடைய முழுக்குடும்பத்தாருக்கும் கொடுக்கப்படுகிறது. அவர்களெல்லோருக்கும் அனுதின படி கொடுக்கப்படுவதினால், கர்த்தருடைய ஊழியக்காரர்கள் குறைவில்லாமலிருக்கிறார்கள். அவர்கள் ஆகார குறைவில்லாமல், கர்த்தருடைய ஊழியத்தை திருப்தியாய் செய்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஆதரிக்கும்போது, அவர்களுடைய குடும்பத்தாரையும் ஆதரிக்கவேண்டும். எசேக்கியாவின் காலத்தில், ஆசாரியரில் எல்லா ஆண்பிள்ளைகளுக்கும் லேவியருக்குள்ளே அட்டவணையில் எழுதப்பட்டவர்கள் எல்லாருக்கும் படிகொடுக்க, ஆசாரியருடைய ஒவ்வொரு பட்டணத்துக்கடுத்த வெளிநிலங்களிலும் ஆரோன் புத்திரரில் பேர்பேராகக் குறிக்கப்பட்ட மனுஷர் இருக்கிறார்கள் (2நாளா 31:19).

இந்தப்பிரகாரமாக எசேக்கியா யூதாவெங்கும் நடப்பித்து, தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையும் உண்மையுமானதைச் செய்கிறான் (2நாளா 31:20).

எசேக்கியா தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத் தொடங்கினானோ, அதையெல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெறுகிறான் (2நாளா 31:21).

32 அதிகாரம்

எசேக்கியா ராஜாவின் சரித்திரம் இந்த அதிகாரத்தில் நிறைவுபெறுகிறது. அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியாவுக்கு விரோதமாக வருகிறான். எசேக்கியா தன்னையும், தன்னுடைய நகரத்தையும், யூதாஜனங்களையும் பலப்படுத்துகிறான். அவர்கள் சத்துருவுக்கு விரோதமாக திடமனதோடும், தைரியத்தோடும் இருக்கிறார்கள் *(2நாளா 32:1-8)*.

சனகெரிப் தூஷணமான நிருபங்களையும், தூஷணமான வார்த்தைகளையும் எசேக்கியாவுக்கு அனுப்புகிறான் *(2நாளா 32:9-19)*.

சனகெரிப்பின் தூஷண வார்த்தைகளுக்கு கர்த்தர் பதில் கொடுக்கிறார். கர்த்தர் எசேக்கியாவின் ஜெபத்தைக்கேட்டு அசீரியரின் சேனையை நிர்மூலம்பண்ணுகிறார். சனகெரிப் வெட்கத்தோடு தன் தேசத்திற்கு திரும்பிப்போகிறான். கர்த்தர் எசேக்கியாவை உயர்த்துகிறார் *(2நாளா 32:20-23)*.

எசேக்கியாவின் வியாதியும், அவன் வியாதி நீங்கி குணமானதும், அவனுடைய மனதில் ஏற்பட்ட பெருமையும், அவன் தன் பாவங்களுக்கு மனந்திரும்பிய சம்பவமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. எசேக்கியா உயிரோடிருந்தபோதும், அவன் மரித்தபோதும், யூதாஜனங்கள் அவனைக் கனம்பண்ணுகிறார்கள் *(2நாளா 32:24-33)*.

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் 2நாளா 32:1-8

2நாளா 32:1. இக்காரியங்கள் நடந்தேறிவருகையில் அசீரியா ராஜாவாகிய சனகெரிப் வந்து, யூதாவுக்குள் பிரவேசித்து, அரணான பட்டணங்களுக்கு எதிராகப் பாளயமிறங்கி, அவைகளைத் தன் வசமாக்கிக்கொள்ள நினைத்தான்.

2நாளா 32:2. சனகெரிப் வந்து, எருசலேமின்மேல் யுத்தம்பண்ண நோக்கங்கொண்டிருப்பதை எசேக்கியா கண்டபோது,

2நாளா 32:3. நகரத்திற்குப் புறம்பேயிருக்கிற ஊற்றுகளைத் தூர்த்துப்போட, தன் பிரபுக்களோடும் தன் பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனைபண்ணினான்; அதற்கு அவர்கள் உதவியாயிருந்தார்கள்.

2நாளா 32:4. அசீரியா ராஜாக்கள் வந்து, அதிக தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன் என்று சொல்லி, அநேகம் ஜனங்கள் கூடி, எல்லா ஊற்றுகளையும் நாட்டின் நடுவில் பாயும் ஓடையையும் தூர்த்துப்போட்டார்கள்.

2நாளா 32:5. அவன் திடன்கொண்டு, இடிந்து போன மதிலையெல்லாம் கட்டி, அவைகளையும் வெளியிலுள்ள மற்ற மதிலையும் கொத்தளங்கள்மட்டும் உயர்த்தி, தாவீது நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்தி, திரளான ஆயுதங்களையும் கேடகங்களையும் பண்ணி,

2நாளா 32:6. ஜனத்தின்மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகரவாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி:

2நாளா 32:7. நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்.

2நாளா 32:8. அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே என்று சொல்லி, அவர்களைத் தேற்றினான்; யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சொன்ன இந்த வார்த்தைகளின்மேல் ஜனங்கள் நம்பிக்கை வைத்தார்கள்.

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் பதினாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரதோமாய் வந்து அவைகளைப் பிடிக்கிறான் (2இராஜா 18:13).

எசேக்கியா கர்த்தருடைய பார்வையிலே செம்மையானவனாயிருக்கிறான். யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனை நீக்கப்பட்டிருக்கிறது. யூதாதேசம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அசீரியாவின் ராஜா யூதாவுக்கு விரோதமாக வந்து, அதன் பட்டணங்களையெல்லாம் பிடித்துக்கொள்கிறான். இது எசேக்கியாவுக்கு சோதனைக்காலமாயிருக்கிறது.

அசீரியாவின் ராஜா யூதாவின் பட்டணங்களைப் பிடிக்க கர்த்தர் அனுமதிக்கிறார். அவர் எசேக்கியாவின் விசுவாசத்தை சோதிக்கிறார். கர்த்தர் யூதாஜனத்தாரை தண்டிக்கிறார். எசேக்கியா மேடைகளை அகற்றி சிலைகளை தகர்த்து விக்கிரகத்தோப்புகளை வெட்டிப்போட்டான். யூதாதேசத்திலிருந்து விக்கிரகாராதனையை நீக்கிப்போட்டான்.

ஆனால் யூதாஜனத்தாரோ மனப்பூர்வமாக விக்கிரகாராதனையை விட்டு விலகிவரவில்லை. அவர்களுடைய இருதயங்களில் இன்னும் புறஜாதியாரின் விக்கிரகங்கள் குடியிருக்கிறது. இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் ஜனத்தார்மீது வந்திருக்கிறது. கர்த்தர் அசீரியா ராஜாவின் மூலமாக யூதாதேசத்தாரை சிட்சிக்கிறார்.

யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. மறுமலர்ச்சி ஏற்படும்போது அந்த தேசத்திலே அசீரியா ராஜா மூலமாக பிரச்சனைகளும் உண்டாயிற்று. இதனால் யூதாஜனத்தார், எசேக்கியாவின்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எசேக்கியா மறுமலர்ச்சிக்கு காரணமானவனாகயிருந்தாலும், யூதாதேசத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளுக்கும் அவனே காரணமென்று யூதாஜனத்தார் எசேக்கியாவைத் தூஷிக்கிறார்கள்.

அசீரியா ராஜா யூதாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்ததினால், எசேக்கியாவுக்கும் பேரிழப்பு உண்டாயிற்று. எசேக்கியா யூதாதேசத்தின் பெரும்பகுதியை இழந்துவிடுகிறான். அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாக வந்து அவைகளைப் பிடிக்கிறான். யூதாதேசத்திலுள்ள முக்கியமான பட்டணங்களெல்லாம் இப்போது சனகெரிப்பின் கையிலிருக்கிறது.

யூதாதேசத்திலே சமாதானம் ஏற்படவேண்டுமென்று எசேக்கியா விரும்புகிறான். சமாதானம் இலவசமாக வராது. பிரச்சனை சனகெரிப் மூலமாக வந்திருக்கிறது. சனகெரிப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்தால் மாத்திரமே யூதாதேசத்திற்கு சமாதானம் திரும்பும்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவோ, தேசத்திலே சமாதானம் நிலைத்திருப்பதற்கு எந்தக் கிரயத்தையும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறான். அசீரியர் எருசலேம் நகரத்தையும் பிடிக்கக்கூடிய நிலமையிலிருக்கிறார்கள். எருசலேமுக்கும் ஆபத்து வந்திருக்கிறது. எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். எருசலேமின் பாதுகாப்புக்காக, எசேக்கியா எந்தக் கிரயமும் செலுத்த ஆயத்தமாயிருக்கிறான்.

அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா லாகீசிலுள்ள அசீரியா ராஜாவாகிய சனகெரிப்புக்கு ஆள் அனுப்பி: "நான் குற்றஞ்செய்தேன்; என்னைவிட்டுத் திரும்பிப்போம்; நீர் என்மேல் சுமத்துவதைச் சுமப்பேன்" (2இராஜா 18:14) என்று சொல்லுகிறான்.

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின்மேல் முந்நூறு தாலந்து வெள்ளியையும் முப்பது தாலந்து பொன்னையும் சுமத்துகிறான். எசேக்கியா இவ்வளவு வெள்ளியையும், பொன்னையும் சனகெரிப்புக்கு கொடுக்கவேண்டும். அப்போதுதான் யூதாதேசத்திலே சமாதானம் இருக்கும்.

எசேக்கியா கர்த்தரை நம்புகிறான். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். ஆனால் எசேக்கியாவோ இப்போது கர்த்தருக்கும் பயப்படுகிறான். அசீரியா ராஜாவுக்கும் பயப்படுகிறான். எசேக்கியா அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்புக்கு முந்நூறு தாலந்து வெள்ளியையும், முப்பது தாலந்து பொன்னையும் தண்டமாகக் கொடுப்பதற்கு சம்மதிக்கிறான்.

எசேக்கியாவினிடத்தில் இவ்வளவு வெள்ளியும், பொன்னும் இல்லை. அவனுடைய அரமனையிலுள்ள எல்லா பொக்கிஷங்களையும் கூட்டிச்சேர்த்தாலும், அவனிடத்தில் இவ்வளவு வெள்ளியும் பொன்னும் சேராது. ஆதலால் எசேக்கியா கர்த்தரின் ஆலயத்திலும் ராஜாவுடைய அரமனை பொக்கிஷகங்களிலும் அகப்பட்ட எல்லா வெள்ளியையும் கொடுக்கிறான் (2இராஜா 18:15).

அரமனையின் பொக்கிஷங்களும், கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும் அசீரியாவின் ராஜாவுக்கு கொடுப்பதற்கு போதுமானதாயில்லை. ஆகையினால் அக்காலத்திலே யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா கர்த்தருடைய ஆலயக்கதவுகளிலும் நிலைகளிலும் தான் அழுத்தியிருந்த பொன் தகடுகளைக் கழற்றி அவைகளை அசீரியா ராஜாவுக்குக் கொடுக்கிறான் (2இராஜா 18:16).

யூதாதேசம் மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலிருக்கிறது. தாவீது தேவாலயத்திற்கு பொன்னை சேகரித்தார். தாவீதைப்போல தன்னாலும் தேவாலயத்திற்கு பொன்னை சேகரிக்க முடியும் என்று எசேக்கியா நினைக்கிறான்.

இப்போது அவசரமாகத் தேவைப்படும்போது, எசேக்கியா தேவாலயத்தின் பொக்கிஷங்களை அசீரியாவின் ராஜாவுக்கு எடுத்துக் கொடுக்கிறான். அவசரமான தேவை இருக்கும்போது, தேவாலயத்தின் பொக்கிஷத்தை அசீரியாவின் ராஜாவுக்கு கொடுப்பதினால் தப்பிதம் ஒன்றும் இல்லை என்று எசேக்கியா நினைக்கிறான்.

எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாசும், தேவாலயத்தின் பொக்கிஷத்தை எடுத்து அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசருக்கு கொடுத்தான்.

"அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் அவனிடத்தில் வந்தான்; அவனை நெருக்கினானே அல்லாமல் அவனைப் பலப்படுத்தவில்லை. ஆகாஸ் கர்த்தருடைய ஆலயத்தில் ஒரு பங்கும், ராஜ அரமனையில் ஒரு பங்கும், பிரபுக்களின் கையில் ஒரு பங்கும் எடுத்து, அசீரியாவின் ராஜாவுக்குக் கொடுத்தும், அவனுக்கு உதவிகிடைக்கவில்லை" (2நாளா 28:20,21).

"ஆகாஸ் தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைச் சேர்த்து, தேவனுடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைத் துண்டு துண்டாக்கி, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளைப் பூட்டிப்போட்டு, எருசலேமில் மூலைக்குமூலை பலிபீடங்களை உண்டுபண்ணினான்" (2நாளா 28:24).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து தன்னுடைய தகப்பனாகிய ஆகாஸ் எடுத்துக் கொடுத்த பொக்கிஷத்தை, எசேக்கியா ஆலயத்தின் பொக்கிஷத்திலே திரும்ப செலுத்தினான். ஆனால் இப்போதோ எசேக்கியாவே, ஆலயத்தின் பொக்கிஷத்திலிருந்து எடுத்து அதை அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பின் கையிலே கொடுக்கிறான்.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியாவின் ராஜ்யத்திற்கு விரோதமாக தீயஆலோசனைகளை திட்டமிடுகிறான். பிற்காலத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாதேசத்திற்கு விரோதமாக புறப்பட்டு வரப்போவதுபோல, இப்போது அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாதேசத்திற்கு விரோதமாக புறப்பட்டு வந்திருக்கிறான்.

இக்காலத்தில் அசீரியா தேசம் மிகப்பெரிய பேரரசாக விளங்கிற்று. சனகெரிப் தன்னுடைய தேசத்தின் எல்லைகளை எல்லா திசைகளிலும் விஸ்தாரம்பண்ணுகிறான். அவன் மற்ற தேசங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்த தேசங்களை அழித்து, அவற்றை தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்கிறான்.

சல்மனாசார் என்பவன் சனகெரிப்புக்கு முன்பு அசீரியாவுக்கு ராஜாவாயிருந்தவன். அவன் வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை அசீரியா தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போனவன்.

தன்னுடைய முன்னோராகிய சல்மனாசாரைப்போலவே, தானும் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்த தேசத்தை கைப்பற்றலாம் என்று சனகெரிப் நினைக்கிறான்.

இக்காலத்தில் ரோமப்பேரரசும் வளர்ச்சி பெறுகிறது. ரோமாபுரி பட்டணம் கட்டப்படுகிறது. ரோமப்பேரரசார் பிற்காலத்தில், பூமியிலுள்ள எல்லா ராஜாக்களையும் ஆளுகை செய்கிறார்கள். அவர்கள் எல்லா தேசங்களின்மீதும் அதிகாரம் செலுத்துகிறார்கள். ரோமாபுரி பட்டணத்தை ரோமூலஸ் என்பவன் கட்டினான் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

எசேக்கியா யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஊழியம் செய்கிறான். அவன் யூதாவின் பட்டணங்களையும், கர்த்தருடைய ஆலயத்தையும் சுத்தம்பண்ணுகிறான். யூதாதேசத்தில் மறுபடியும் யூதமார்க்கத்தின் ஆராதனைகளை நிறுவுகிறான். "இக்காரியங்கள் நடந்தேறி வருகையில்" அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியாவுக்கு விரோதமாக வருகிறான்.

இக்காரியங்கள் நடந்தேறிவருகையில் அசீரியா ராஜாவாகிய சனகெரிப் வந்து, யூதாவுக்குள் பிரவேசித்து, அரணான பட்டணங்களுக்கு எதிராகப் பாளயமிறங்கி, அவைகளைத் தன் வசமாக்கிக்கொள்ள நினைக்கிறான் *(2நாளா 32:1)*.

யூதா தேசத்தில் எசேக்கியாவின் காலத்தில் மிகப் பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் நடைபெறுகிறது. அப்போது அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவின்மீது யுத்தம் பண்ண வருகிறான். அவன் ஏற்கெனவே வடக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள பத்துக் கோத்திரத்தாரையும் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டான். இப்போது யூதாவையும் பிடிக்க ஆசைப்படுகிறான்.

கர்த்தர் வடக்கு தேசத்தை மட்டுமே சனகெரிப்பின் கையில் ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் யூதா தேசத்தைச் சனகெரிப்பின் கையில் இன்னும் ஒப்புக்கொடுக்கவில்லை. இந்த யுத்தத்தில் கர்த்தர் எசேக்கியாவுக்கு வெற்றியைத் தருகிறார். *(2நாளா 32:1-21; 2இராஜா 19:35; ஏசா 37:36-38)*.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் விக்கிரகாராதனைக்காரன். எசேக்கியா யூதாதேசத்திலே விக்கிரகங்களை உடைத்துப்போட்டான். மேடைகளையும், தோப்புகளையும் வெட்டிப்போட்டான். எசேக்கியா யூதாதேசத்திலே விக்கிரகங்களை அழித்துப்போட்டதினால், சனகெரிப் அவன்மீது கோபப்படுகிறான்.

எசேக்கியா கர்த்தருக்கு நல்ல ஊழியத்தை செய்திருக்கிறான். யூதாதேசத்தையும், கர்த்தருடைய ஆலயத்தையும் சுத்தம்பண்ணியிருக்கிறான். இவனுடைய காலத்தில் யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாமே எசேக்கியாவின் நற்கிரியைகள்.

ராஜா நல்லவனாகவும், ஜனங்கள் பக்தியுள்ளவர்களாகவும் இருக்கும்போது, கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயிருப்பார். கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பும், பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்கும். எசேக்கியா கர்த்தரின் பார்வைக்கு நன்மையானதை செய்கிறான். யூதாதேசத்தார் எல்லோரும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறார்கள். தேசத்திலே ஆவிக்குரிய காரியங்கள் சிறப்பாகயிருக்கிறது.

இப்படிப்பட்ட நல்ல காலத்தில், யூதாதேசம் பரிபூரணமான சமாதானத்திலிருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். தங்களுக்கு தெய்வீக உதவிகளும், ஒத்தாசைகளும், அநுக்கிரகங்களும் கிடைக்குமென்று யூதாதேசத்தாரும் நினைக்கிறார்கள். தங்களுக்கு விரோதமாக யாரும் யுத்தம்பண்ண வரமாட்டார்கள் என்று எசேக்கியாவும் நினைக்கிறான்.

ஆனால் யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி நடந்தேறி வருகையில், அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவுக்குள் பிரவேசிக்கிறான். அவன் யூதாவின் அரணான பட்டணங்களுக்கு எதிராக பாளயமிறங்குகிறான். சனகெரிப் யூதாவின் பட்டணங்களையெல்லாம் தன் வசமாக்கிக் கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

சனகெரிப் யூதாவுக்கு விரோதமாக வரும்போது, யூதாவிலுள்ள அரணான பட்டணங்களெல்லாம் தனக்கு வசமாயிற்று என்று பேராசையோடு நினைக்கிறான். யூதாதேசத்தாரும் சனகெரிப்புக்கு விரோதமாக உடனே யுத்தம்பண்ணவில்லை. ஆகையினால் யூதாவின் பட்டணங்களையும் தன் வசமாக்கிக்கொள்ளவேண்டுமென்று சனகெரிப் நினைக்கிறான்.

சனகெரிப் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண நோக்கமாயிருக்கிறான் *(2நாளா 32:2).*

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் தனக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவதைப் பார்த்து, எசேக்கியா அவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்த வேலைகளை செய்கிறான். எசேக்கியா தன் பிரபுக்களோடும், தன் பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனை பண்ணுகிறான். அவர்களும் அவனுக்கு உதவியாயிருக்கிறார்கள்.

எருசலேம் நகரத்திற்கு புறம்பே ஊற்றுக்கள் இருக்கிறது. இந்த ஊற்றுக்களை தூர்த்துப்போடவேண்டுமென்று எசேக்கியா ஆலோசனை பண்ணுகிறான். சனகெரிப் எருசலேமுக்கு விரோதமாக வரும்போது அவனுக்கு அங்கே தண்ணீர் கிடைக்கக்கூடாது.

எருசலேம் நகரத்திற்குப் புறம்பே சில ஊற்றுக்கள் இருக்கிறது. அதற்கு மேல்கீகோன் என்று பெயர். இது ஓபேலின்கிழக்குப் பகுதியில் உள்ளது. எசேக்கியா ராஜா இந்த ஊற்றைப் பள்ளம் தோண்டி, பாதை அமைத்து, கீழ்கீகோனுக்குக் கொண்டுவருகிறான். *(2இராஜா 20:20)* கீழ் கீகோனுக்கு சீலோவாம் குளம் என்னும் மறுபெயரும் உள்ளது.

மேல் கீகோன் பட்டணத்திற்கு வெளியில் உள்ளது. சத்துருக்களின் பார்வையிலிருந்து அது மறைக்கப்பட்டிருக்கிறது. எசேக்கியா ராஜா நகரத்திற்குப் புறம்பேயிருக்கிற ஊற்றுகளைப் பராமரிக்குமாறு கூறுகிறான். இதனால் எருசலேம் நகரம் விரோதிகளால் முற்றிக்கை போடப்பட்டாலும் நகரத்தின் வெளியிலிருந்து நகரத்திற்கு உள்ளேயிருக்கும் சீலோவாம் குளத்திற்குத் தண்ணீர் தடையில்லாமல் கிடைக்கும்.

ஏசாயா தீர்க்கதரிசியும் சீலோவின் தண்ணீரைப்பற்றி எழுதியிருக்கிறார். *(ஏசா 8:6, ஏசா 22:8-11)* மேலும் சங் 46:4 ஆவது வசனத்திலும் இந்த ஊற்றைப் பற்றிய குறிப்பு உள்ளது.

அசீரியா ராஜாக்கள் வந்து, அதிக தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன் என்று சொல்லி, அநேகம் ஜனங்கள் கூடி, எல்லா ஊற்றுகளையும் நாட்டின் நடுவில் பாயும் ஓடையையும் தூர்த்துப்போடுகிறார்கள் *(2நாளா 32:4).*

எசேக்கியா எருசலேமின் மதில்களையும், கோட்டைகளையும் பலப்படுத்துகிறான். யுத்தம்பண்ணுவதற்கு தேவையான யுத்த ஆயுதங்களை திரளாய் உண்டுபண்ணுகிறான். அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் எருசலேமுக்கு விரோதமாக வந்தாலும் எசேக்கியா அவனைப் பார்த்து பயப்படவில்லை.

எசேக்கியா திடன்கொண்டு, இடிந்து போன மதிலையெல்லாம் கட்டி, அவைகளையும் வெளியிலுள்ள மற்ற மதிலையும் கொத்தளங்கள்மட்டும் உயர்த்தி, தாவீது நகரத்தின் கோட்டையைப் பலப்படுத்துகிறான். திரளான ஆயுதங்களையும் கேடகங்களையும் பண்ணுகிறான் *(2நாளா 32:5).* எசேக்கியா யூதாஜனத்தின்மேல் படைத்தலைவரையும் வைக்கிறான்.

எருசலேம் நகரத்திற்கு விரோதமாக அசீரியரின் சேனை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். எருசலேமின் குடிகள் அசீரியரைப் பார்த்து பயப்படக்கூடாது. அவர்கள் கர்த்தரை திடநம்பிக்கையோடு நோக்கிப் பார்த்து, தங்களுக்குள் பெலப்படவேண்டும். யூதாவின் மனுஷருக்கு ஆறுதலான வார்த்தைகளும், உற்சாகமான வார்த்தைகளும் தேவைப்படுகிறது.

எசேக்கியா ஜனத்தின்மேல் படைத்தலைவரை வைத்து, அவர்களை நகரவாசலின் வீதியிலே தன்னண்டையில் கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி, "நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா ராஜாவுக்கும் அவனோடிருக்கிற ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படாமலும் கலங்காமலுமிருங்கள்; அவனோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" (2நாளா 32:7) என்றும்,

"அவனோடிருக்கிறது மாம்ச புயம், நமக்குத் துணைநின்று நம்முடைய யுத்தங்களை நடத்த நம்மோடிருக்கிறவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர்தானே" (2நாளா 32:8) என்றும் சொல்லி, அவர்களைத் தேற்றுகிறான்; யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா சொன்ன இந்த வார்த்தைகளின்மேல் ஜனங்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்.

ஜனங்கள் கர்த்தரையும், ராஜாவையும் நம்புகிறார்கள். அவர்கள் ராஜாவை நம்புவதினால், ராஜா கூறிய கர்த்தரையும் நம்புகிறார்கள். கர்த்தரிடத்தில் தங்களுடைய நம்பிக்கையை முழுமையாக வைத்து, அவரையே சார்ந்திருந்து, தங்களுடைய கவலைகளையெல்லாம் மறந்து, கர்த்தருடைய சமுகத்தில் ஆறுதலாயிருக்கிறார்கள்.

எசேக்கியா யூதாமனுஷருடைய இருதயத்தில் பதியும் வண்ணமாகப் பேசுகிறான். அவர்களுடைய பயத்தை நீக்குகிறான். "நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்" என்று சொல்லுகிறான். அசீரியர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப்போட்டிருப்பதைப் பார்த்து, எருசலேமின் குடிகள் பயந்து விடக்கூடாது. அவர்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படாமல், கர்த்தரை விசுவாசத்தோடு பார்த்து பலப்படவேண்டும்.

"ஆகையால் சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜனமே, அசீரியனுக்குப் பயப்படாதே; அவன் உன்னைக் கோலால் அடித்து, எகிப்தியரைப் போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான்" (ஏசா 10:24).

சனகெரிப் அசீரியருக்கு ராஜாவாயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். கர்த்தரே எல்லா தேசங்களுக்கும் அதிபதியாயிருக்கிறார். அசீரிய ஜனங்களோடு இருப்பது மாம்சபுயம். யூதாவின் மனுஷரோடு இருப்பது கர்த்தருடைய புயம். கர்த்தர் யூதாதேசத்தாருக்கு துணை நின்று, அவர்களுடைய யுத்தங்களை நடத்துவார்.

அசீரியாவின் சேனையில் ஏராளமான கூட்டத்தார் இருக்கிறார்கள். எசேக்கியாவின் சேனையோ மிகவும் சிறியது. ஆனாலும் கர்த்தர் எசேக்கியாவோடுகூட இருக்கிறார். நம்மோடு கர்த்தர் கூடயிருப்பதே நமக்கு பலன். எசேக்கியா இந்த சத்தியத்தை எருசலேமின் குடிகளுக்கு சொல்லும்போது, "அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்று சொல்லுகிறான்.

மாம்ச புயத்திற்கும் ஆவியின் புயத்திற்கும் வித்தியாசமுண்டு. சனகெரிப் தன்னுடைய மாம்ச புயத்தை நம்புகிறான். எசேக்கியாவோ கர்த்தருடைய பலத்த புயத்தை நம்புகிறான். கர்த்தருக்கு விரோதமாக எந்த மனுஷனாலும் யுத்தம்பண்ணி, அவரை மேற்கொள்ள முடியாது. கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவர் தம்முடைய பிள்ளைகளுக்காக யுத்தங்களை நடத்துகிறவர்.

சத்துருக்கள் நம்மை சூழ்ந்திருக்கும்போது, நாம் சத்துருக்களைப் பார்த்து பயப்படக்கூடாது. நமக்கு உதவி வரும் கன்மலையாகிய இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பார்க்கவேண்டும்.

"நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்? (ஏசா 51:12).

இடுக்கண்செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்துக்கு நித்தம் இடைவிடாமல் பயப்படுகிறதென்ன? இடுக்கண்செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே?" (ஏசா 51:13).

கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருப்பதையும், கர்த்தருடைய வல்லமை தங்களுக்கு துணைநின்று சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் என்பதையும் எசேக்கியா கூடிவந்திருக்கிற படைத்தலைவருக்கும், யூதாவின் சேனையிலுள்ளவர்களுக்கும், எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறான்.

விசுவாசிகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகர்களாகயிருக்கிறோம். நாம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் நம்பவேண்டும். அப்போதுதான் பவுலைப்போல நம்மாலும், "கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக இருப்பவன் யார்" என்று விசுவாசத்தோடும், தைரியத்தோடும் சொல்ல முடியும்.

சனகெரிப்பின் தூஷண வார்த்தைகள் 2நாளா 32:9-23

2நாளா 32:9. இதின்பின்பு அசீரியா ராஜாவாகிய சனகெரிப் தன் முழுச் சேனையுடன் லாகீசுக்கு எதிராய் முற்றிக்கைபோட்டிருக்கையில், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவிடத்துக்கும், எருசலேமிலுள்ள யூதா ஜனங்கள் யாவரிடத்துக்கும் தன் ஊழியக்காரரை அனுப்பி:

2நாளா 32:10. அசீரியா ராஜாவாகிய சனகெரிப் சொல்லுகிறது என்னவென்றால், முற்றிக்கை போடப்பட்ட எருசலேமிலே நீங்கள் இருக்கும்படிக்கு, நீங்கள் எதின்மேல் நம்பிக்கையாயிருக்கிறீர்கள்?

2நாளா 32:11. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மை அசீரியருடைய ராஜாவின் கைக்குத் தப்புவிப்பார் என்று எசேக்கியா சொல்லி, நீங்கள் பசியினாலும் தாகத்தினாலும் சாகும்படி உங்களைப் போதிக்கிறான் அல்லவா?

2நாளா 32:12. அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் தள்ளிவிட்டவனும், ஒரே பலிபீடத்திற்கு முன்பாகப் பணிந்து, அதின்மேல் தூபங்காட்டுங்கள் என்று யூதாவுக்கும் எருசலேமியருக்கும் சொன்னவனும் அந்த எசேக்கியாதான் அல்லவா?

2நாளா 32:13. நானும் என் பிதாக்களும் தேசத்துச் சகல ஜனங்களும் செய்ததை அறியீர்களோ? அந்த தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் அவர்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்புவிக்க அவர்களுக்குப் பெலன் இருந்ததோ?

2நாளா 32:14. உங்கள் தேவன் உங்களை என் கைக்குத்தப்புவிக்கக்கூடும்படிக்கு, என் பிதாக்கள் பாழாக்கின அந்த ஜாதிகளுடைய எல்லா தேவர்களிலும் எவன் தன் ஜனத்தை என் கைக்குத் தப்புவிக்கப் பலவானாயிருந்தான்?

2நாளா 32:15. இப்போதும் எசேக்கியா உங்களை வஞ்சிக்கவும், இப்படி உங்களைப் போதிக்கவும் இடங்கொடுக்கவேண்டாம்; நீங்கள் அவனை நம்பவும் வேண்டாம்; ஏனென்றால் எந்த ஜாதியின் தேவனும், எந்த ராஜ்யத்தின் தேவனும் தன் ஜனத்தை என் கைக்கும் என் பிதாக்களின் கைக்கும் தப்புவிக்கக்கூடாதிருந்ததே; உங்கள் தேவன் உங்களை என் கைக்குத் தப்புவிப்பது எப்படி என்கிறார் என்று சொல்லி,

2நாளா 32:16. அவனுடைய ஊழியக்காரர் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய தாசனாகிய எசேக்கியாவுக்கு விரோதமாகவும் பின்னும் அதிகமாய்ப் பேசினார்கள்.

2நாளா 32:17. தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் தங்கள் ஜனங்களை என் கைக்குத் தப்புவிக்காதிருந்ததுபோல், எசேக்கியாவின் தேவனும் தன் ஜனங்களை என் கைக்குத் தப்புவிப்பதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நிந்திக்கவும், அவருக்கு விரோதமாகப் பேசவும் அவன் நிருபங்களையும் எழுதினான்.

2நாளா 32:18. அவர்கள் அலங்கத்தின் மேலிருக்கிற எருசலேமின் ஜனங்களைப் பயப்படுத்தி, கலங்கப்பண்ணி, தாங்கள் நகரத்தைப் பிடிக்கும்படி, அவர்களைப் பார்த்து: யூத பாஷையிலே மகா சத்தமாய்க் கூப்பிட்டு,

2நாளா 32:19. மனுஷர் கைவேலையினால் செய்யப்பட்டதும், பூச்சக்கரத்து ஜனங்களால் தொழுதுகொள்ளப்பட்டதுமாயிருக்கிற தேவர்களைக் குறித்துப் பேசுகிறபிரகாரமாக எருசலேமின் தேவனையும் குறித்துப் பேசினார்கள்.

2நாளா 32:20. இதினிமித்தம் ராஜாவாகிய எசேக்கியாவும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியும் பிரார்த்தித்து, வானத்தை நோக்கி அபயமிட்டார்கள்.

2நாளா 32:21. அப்பொழுது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார்; அவன் அசீரியருடைய ராஜாவின் பாளயத்திலுள்ள சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம்பண்ணினான்; அப்படியே சனகெரிப் செத்தமுகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பினான்; அங்கே அவன் தன் தேவனுடைய கோவிலுக்குள் பிரவேசிக்கிறபோது, அவனுடைய கர்ப்பப்பிறப்பான சிலர் அவனைப் பட்டயத்தால் வெட்டிப்போட்டார்கள்.

2நாளா 32:22. இப்படிக் கர்த்தர் எசேக்கியாவையும் எருசலேமின் குடிகளையும் அசீரியருடைய ராஜாவாகிய சனகெரிபின் கைக்கும் மற்ற எல்லாருடைய கைக்கும் நீங்கலாக்கி இரட்சித்து, அவர்களைச் சுற்றுப்புறத்தாருக்கு விலக்கி ஆதரித்து நடத்தினார்.

2நாளா 32:23. அநேகம்பேர் கர்த்தருக்கென்று எருசலேமுக்குக் காணிக்கைகளையும், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு உச்சிதங்களையும் கொண்டுவந்தார்கள்; அவன் இதற்குப்பிற்பாடு சகல ஜாதிகளின் பார்வைக்கும் மேன்மைப்பட்டவனாயிருந்தான்.

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் தன் முழுச் சேனையுடன் லாகீசுக்கு எதிராய் முற்றிக்கைபோட்டிருக்கிறான். அப்போது அவன் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவிடத்துக்கும், எருசலேமிலுள்ள யூதா ஜனங்கள் யாவரிடத்துக்கும் தன் ஊழியக்காரரை அனுப்பி, அவர்களுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொல்லச் சொல்லுகிறான் *(2நாளா 32:9)*.

சனகெரிப் லாகீசுக்கு எதிராக முற்றிக்கைப்போட்டிருக்கிறான். அப்போது எசேக்கியா எருசலேமின் கோட்டைகளைப் பலப்படுத்தி, மதில்களையும் கொத்தளங்களையும் உயர்த்தி கட்டி, திரளான ஆயுதங்களையும் கேடகங்களையும் செய்கிறான் என்னும் செய்தியை சனகெரிப் கேள்விப்படுகிறான். மேலும் சனகெரிப் யூதாவின் சேனையிலுள்ளவர்களுக்கும், எருசலேமின் குடிகளுக்கும், கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்து திடமனதோடிருக்குமாறு உற்சாகப்படுத்துகிறான். லாகீசுக்கு எதிராக முற்றிக்கைப்போட்டிருக்கிற சனகெரிப் எசேக்கியாவின் பிரசங்க வார்த்தைகளையும் கேள்விப்படுகிறான்.

எசேக்கியாவின் பிரசங்கத்திற்கு போட்டியாக எதிர்பிரசங்கம் பண்ணவேண்டுமென்று சனகெரிப் தீர்மானம்பண்ணுகிறான். தன்னுடைய வார்த்தைகளினால் எசேக்கியாவையும், எருசலேமின் குடிகளையும் பயமுறுத்தவேண்டுமென்று தீர்மானித்து, தன்னுடைய ஊழியக்காரர் மூலமாக, எருசலேமுக்கு தன்னுடைய நிருபங்களையும், வார்த்தைகளையும் அனுப்புகிறான்.

எருசலேமின் குடிகள் அசீரியரிடம் சரணடையவேண்டும். இதுவே சனகெரிப்பின் விருப்பம். யூதாவின் சேனையிலுள்ளவர்கள் தனக்கு விரோதமாக யுத்தம்பண்ண எந்த ஆயத்த வேலைகளையும் செய்யக்கூடாது என்று சனகெரிப் எதிர்பார்க்கிறான். எருசலேமின் குடிகள் எசேக்கியாவையும் நம்பக்கூடாது. கர்த்தரையும் நம்பக்கூடாது. இதற்காக சனகெரிப் அவர்களுக்கு விரோதமான தூஷணவார்த்தைகளை சொல்லியனுப்புகிறான்.

இந்த வசனத்தின் ஆரம்பத்தில் "இதன் பின்பு" என்னும் வாக்கியம் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தில் நடந்த சம்பவங்கள் 2இராஜா 18:14-16 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. எசேக்கியா யூதாவின்அரணான பட்டணங்களையெல்லாம் இழந்து விட்டான். அசீரியா ராஜாவுக்கு எதிராகத் தான் செய்த தவற்றை எசேக்கியா அறிக்கை பண்ணுகிறான். அசீரியா ராஜாவுக்கு பொன்னையும், வெள்ளியையும் எசேக்கியா காணிக்கையாகத் தருகிறான்.

ஆனாலும், சனகெரிப் இவையெல்லாவற்றிலும் திருப்தியடையவில்லை. யூதா தேசத்தாரைச் சிறைப்பிடிக்கப் போவதாக அச்சுறுத்துகிறான். (2இராஜா 18:32). யூதா தேசத்தார் அசீரியரிடம் சரண் அடைந்து விடுவார்கள் என்று நம்பி, அவன் எருசலேமிலுள்ள யூதா ஜனங்கள் யாவரிடத்துக்கும் தன்னுடைய நிபந்தனைகளை அறிவிப்பதற்காகத் தன் ஊழியக்காரரை அனுப்புகிறான். (2நாளா 32:9-19, 2இராஜா 18)

சனகெரிப்பின் ஊழியக்காரர் யூதாஜனங்களை நோக்கி, "அசீரியா ராஜாவாகிய சனகெரிப் சொல்லுகிறது என்னவென்றால், முற்றிக்கை போடப்பட்ட எருசலேமிலே நீங்கள் இருக்கும்படிக்கு, நீங்கள் எதின்மேல் நம்பிக்கையாயிருக்கிறீர்கள்?" (2நாளா 32:10) என்றும்,

"நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மை அசீரியருடைய ராஜாவின் கைக்குத் தப்புவிப்பார் என்று எசேக்கியா சொல்லி, நீங்கள் பசியினாலும் தாகத்தினாலும் சாகும்படி உங்களைப் போதிக்கிறான் அல்லவா?" (2நாளா 32:11) என்றும்,

"அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் தள்ளிவிட்டவனும், ஒரே பலிபீடத்திற்கு முன்பாகப் பணிந்து, அதின்மேல் தூபங்காட்டுங்கள் என்று யூதாவுக்கும் எருசலேமியருக்கும் சொன்னவனும் அந்த எசேக்கியாதான் அல்லவா?" (2நாளா 32:12) என்றும் சொல்லுகிறார்கள்.

எசேக்கியா தேசத்திலுள்ள விக்கிரகங்களையெல்லாம் அழித்தான். அசீரியா ராஜாவுக்கோ யூத மார்க்கத்தைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை. விக்கிரகங்களையும், தோப்புக்களையும், அழித்த எசேக்கியாவைச், சனகெரிப் கர்த்தருடைய பலிபீடத்தை அழித்தவன் என்று குற்றம் சுமத்துகிறான். சனகெரிப்பிற்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பற்றி சரியாகத் தெரியவில்லை.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு மதிப்பும் கொடுக்கவில்லை. மரியாதையும் கொடுக்கவில்லை. "நீங்கள் பசியினாலும் தாகத்தினாலும் சாகும்படி உங்களை போதிக்கிறான் அல்லவா" என்று சனகெரிப் எசேக்கியாவுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறான்.

எசேக்கியா விக்கிரகங்களின் மேடைகளையும், பலிபீடங்களையும் தள்ளிவிட்டான். இதனால் கர்த்தர் அவன்மீது பிரியமாகயிருக்கிறார். ஆனால் சனகெரிப்புக்கு கர்த்தருக்கும் விக்கிரகங்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. கர்த்தருடைய பலிபீடத்தையும், விக்கிரகங்களின் பலிபீடத்தையும் சனகெரிப் ஒன்றாகவே பாவிக்கிறான்.

சனகெரிப்பின் ஊழியக்காரர் யூதாஜனங்களிடத்தில், எசேக்கியாவுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறார்கள். அதே சமயத்தில் அவர்கள் தங்கள் ராஜாவாகிய சனகெரிப்பை புகழ்ந்து பேசுகிறார்கள்.

சனகெரிப்பின் ஊழியக்காரர், தங்கள் ராஜாவின் வார்த்தைகளை, யூதாவின் மனுஷருக்கு சொல்லும்போது, "நானும் என் பிதாக்களும் தேசத்துச் சகல ஜனங்களும் செய்ததை அறியீர்களோ? அந்த தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் அவர்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்புவிக்க அவர்களுக்குப் பெலன் இருந்ததோ?" *(2நாளா 32:13)* என்றும்,

"உங்கள் தேவன் உங்களை என் கைக்குத் தப்புவிக்கக்கூடும்படிக்கு, என் பிதாக்கள் பாழாக்கின அந்த ஜாதிகளுடைய எல்லா தேவர்களிலும் எவன் தன் ஜனத்தை என் கைக்குத் தப்புவிக்கப் பலவானாயிருந்தான்?" *(2நாளா 32:14)* என்றும்,

"இப்போதும் எசேக்கியா உங்களை வஞ்சிக்கவும், இப்படி உங்களைப் போதிக்கவும் இடங்கொடுக்கவேண்டாம்; நீங்கள் அவனை நம்பவும் வேண்டாம்; ஏனென்றால் எந்த ஜாதியின் தேவனும், எந்த ராஜ்யத்தின் தேவனும் தன் ஜனத்தை என் கைக்கும் என் பிதாக்களின் கைக்கும் தப்புவிக்கக்கூடாதிருந்ததே; உங்கள் தேவன் உங்களை என் கைக்குத் தப்புவிப்பது எப்படி என்கிறார்" *(2நாளா 32:15)* என்றும் சொல்லுகிறார்கள்.

சனகெரிப்பின் ஊழியக்காரர் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய தாசனாகிய எசேக்கியாவுக்கு விரோதமாகவும் பின்னும் அதிகமாய்ப் பேசுகிறார்கள் *(2நாளா 32:16)*.

அசீரியர்கள் எசேக்கியா ராஜாவுக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகவும் பேசுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய வல்லமையை அசீரியர்மீது காண்பிக்கச் சித்தம் கொள்கிறார். தாமே மெய்யான தேவன் என்பதைக் கர்த்தர் நிரூபிக்கிறார். தம்மை நம்புகிறவர்களுக்குக் கர்த்தர் துணை புரிவார் என்பதை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தரிடத்தில் ஏராளமான தூதர்கள் பணிவிடை செய்கிறார்கள். அவர்களில் ஒரு தூதனை மட்டும் கர்த்தர் அனுப்புகிறார். அந்தத் தூதன் ஒரே நாள் இரவில் 185,000 பேரைச் சங்காரம் பண்ணுகிறான். *(2இராஜா19:35; ஏசா 37:36-38)*. சீரியர்களின் தெய்வங்களால் கர்த்தருடைய ஒரு தூதனைக்கூட எதிர்த்து நிற்க முடியவில்லை. இந்த அசீரியர்களால் சர்வ வல்லமையுள்ள கர்த்தரையும், அவருடைய சர்வ சேனையையும் எதிர்த்து நிற்கவே முடியாது.

சனகெரிப் தன் ஊழியக்காரர் மூலமாக யூதாஜனங்களுக்கு, தன்னுடைய தூஷணமான வார்த்தைகளை சொல்லியனுப்பினதுபோல, தூஷணமான நிருபங்களையும் எழுதியனுப்புகிறான்.

அந்நிய தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் தங்கள் ஜனங்களை சனகெரிப்பின் கைக்குத் தப்புவிக்காதிருந்ததுபோல, எசேக்கியாவின் தேவனும் யூதாஜனங்களை சனகெரிப்பின் கைக்குத் தப்புவிப்பதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நிந்திக்கவும், அவருக்கு விரோதமாகப் பேசவும் சனகெரிப் நிருபங்களையும் எழுதுகிறான்*(2நாளா 32:17)*.

எருசலேமின் ஜனங்கள் அலங்கத்தின்மேல் இருக்கிறார்கள். அசீரிய ராஜாவாகிய சனகெரிப்பின் ஊழியக்காரர் அலங்கத்திற்கு வெளியே இருக்கிறார்கள். அவர்கள் அலங்கத்தின்மேலிருக்கிற எருசலேமின் ஜனங்களைப் பயப்படுத்தி, கலங்கப்பண்ணுகிறார்கள். தாங்கள் நகரத்தைப் பிடிக்கும்படி வந்திருப்பதாக எருசலேமின் ஜனங்களிடத்தில், யூத பாஷையிலே மகா சத்தமாய்க் கூப்பிட்டு சொல்லுகிறார்கள் *(2நாளா 32:18)*.

சனகெரிப்பின் ஊழியக்காரர் யூதபாஷையிலே பேசுகிறார்கள். அலங்கத்தின் மேலிருக்கிற எருசலேமின் ஜனங்களைப் பயப்படுத்துகிறார்கள். அவர்களை கலகங்கப் பண்ணுகிறார்கள். யூதபாஷையிலேயே அசீரியர் பேசுவதினால் அவர்களுக்குள் தகவல் தொடர்பு சரியாக நடைபெறுகிறது. யூதாவின் ஜனங்கள் பயந்து, சரணடைந்து விடுவார்கள் என்று அசீரியர் நினைக்கிறார்கள். தங்களுக்குச் சீரியபாஷை தெரியுமென்றும், சீரிய பாஷையில் பேசுமாறும் எசேக்கியாவின் மனுஷர் கேட்டுக் கொண்டும், அவர்கள் சீரிய பாஷையில் பேசாமல் யூதபாஷையிலேயே பேசுகிறார்கள். *(2இராஜா 18:26)*

சனகெரிப்பின் ஊழியக்காரர், எருசலேமின் ஜனங்களைப் பார்த்து, மனுஷர் கைவேலையினால் செய்யப்பட்டதும், பூச்சக்கரத்து ஜனங்களால் தொழுதுகொள்ளப்பட்டதுமாயிருக்கிற தேவர்களைக் குறித்துப் பேசுகிறபிரகாரமாக எருசலேமின் தேவனையும் குறித்துப் பேசுகிறார்கள் *(2நாளா 32:19).*

விசுவாசிகளாகிய நமக்கு நெருக்கங்களும், உபத்திரவங்களும் வரும்போது, நாம் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டும். எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். அவனோடுகூட ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியும் பிரார்த்தித்து வானத்தை நோக்கி அபயமிடுகிறார் *(2நாளா 32:20).* ஒரு தேசத்தின் ராஜாவும், கர்த்தருடைய தீர்க்கதரிசியும் ஒன்றாய் இணைந்து, ஒருமனப்பட்டு, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது மிகவும் நல்ல காரியம்.

கர்த்தர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு நன்மை செய்கிறவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். அவரால் எல்லாம் கூடும். கர்த்தரால் எசேக்கியாவின் சத்துருக்களை அடக்க முடியும். சத்துருக்களின் எண்ணிக்கை எவ்வளவு திரளாகயிருந்தாலும், கர்த்தரால் அவர்களை முறியடிக்க முடியும்.

கர்த்தர் எசேக்கியாவின் ஜெபத்தையும், ஏசாயா தீர்க்கதரிசியின் ஜெபத்தையும் கேட்டு, ஒரு தூதனை அனுப்புகிறார். அந்த தூதன் அசீரியருடைய ராஜாவின் பாளயத்திலுள்ள சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம்பண்ணுகிறான்; அப்படியே சனகெரிப் செத்தமுகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பிப்போகிறான் *(2நாளா 32:21).*

கர்த்தருடைய தூதன் ஒரேநாள் இரவில் 185,000பேரை அதம்பண்ணினான். சனகெரிப்பால் கர்த்தருக்கு எதிர்த்து நிற்கமுடியவில்லை. யுத்தத்தில் தோல்வியுற்றான். தன் தேசத்திற்குச் செத்த முகமாய்த் திரும்பிப் போகிறான். அவனுடைய குமாரர்களில் சிலரே அவனைக் கொன்று போடுகிறார்கள்.

அசீரியா தேசத்திலே சனகெரிப் தன் தேவனுடைய கோவிலுக்குள் பிரவேசிக்கிறபோது, அவனுடைய கர்ப்பப்பிறப்பான சிலர் அவனைப் பட்டயத்தால் வெட்டிப்போடுகிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறவர்கள் அவருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறவர்கள் அவருக்கு சிநேகிதராயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். அவர் தம்முடைய சிநேகிதர்களை பாதுகாத்து பலப்படுத்துகிறார்.

"நான் சத்துருவின் குரோதத்திற்கு அஞ்சாதிருந்தேனானால், நான் அவர்களை மூலைக்குமூலை சிதற அடித்து, மனிதருக்குள் அவர்களுடைய பெயர் அற்றுப் போகப்பண்ணுவேன் என்று சொல்லியிருப்பேன்" *(உபா 32:27).*

கர்த்தர் அசீரியரின் சேனைக்கு விரோதமாக, தம்முடைய தூதரில் ஒருவனை மாத்திரமே அனுப்புகிறார். அவன் அசீரியருடைய சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம்பண்ணுகிறான். கர்த்தருடைய ஒரு தூதனுக்கு விரோதமாகக்கூட சனகெரிப்பால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. ஆனால் அவனோ சர்வவல்லமையுள்ள கர்த்தருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறான். சனகெரிப்பின் குமாரர்களே அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

கர்த்தர் யூதாஜனங்களுக்கு அற்புதம் செய்கிறார். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. கர்த்தர் எருசலேமை பாதுகாக்கிறார். கர்த்தர் எசேக்கியாவையும் எருசலேமின் குடிகளையும் அசீரியருடைய ராஜாவாகிய சனகெரிபின் கைக்கும் மற்ற எல்லாருடைய கைக்கும் நீங்கலாக்கி இரட்சித்து, அவர்களைச் சுற்றுப்புறத்தாருக்கு விலக்கி ஆதரித்து நடத்துகிறார் *(2நாளா 32:22).*

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஏராளமான கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிறார். கர்த்தர் எசேக்கியாவையும் யூதாஜனத்தாரையும் மேன்மைப்படுத்தியது, கர்த்தருடைய கிருபைக்கு அடையாளம். நாம் கர்த்தரை சேவிக்கும்போது, கர்த்தர் நம்மை பாதுகாக்கிறார்.

கர்த்தர் யூதாதேசத்தைப் பாதுகாக்கிறார். அவர்களை வழிநடத்துகிறார். யூதாதேசத்தின் எல்லா திசைகளையும் கர்த்தர் பாதுகாக்கிறார்.

அநேகம்பேர் கர்த்தருக்கென்று எருசலேமுக்குக் காணிக்கைகளையும், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு உச்சிதங்களையும் கொண்டுவருகிறார்கள்; எசேக்கியா இதற்குப்பிற்பாடு சகல ஜாதிகளின் பார்வைக்கும் மேன்மைப்பட்டவனாயிருக்கிறான் (2நாளா 32:23).

சனகெரிப் எசேக்கியாவுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் சொன்ன தூஷண வார்த்தைகள், எசேக்கியா கர்த்தரிடத்தில் ஏறெடுத்த ஜெபம், கர்த்தருடைய தூதன் அசீரியரின் சேனையை சங்காரம்பண்ணி எருசலேம் நகரத்தை மீட்டுக்கொண்ட சம்பவம் ஆகியவை 2இராஜா 18,19 ஆகிய அதிகாரங்களில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

சனகெரிப்பின் சேனை எருசலேமை முற்றிக்கையிடுகிறார்கள். அசீரியா ராஜா லாகீசிலிருந்து தர்தானையும், ரப்சாரீசையும், ரப்சாக்கேயையும் பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடத்தில் அனுப்புகிறான்; அவர்கள் எருசலேமுக்கு வந்து, வண்ணார் துறையின் வழியிலுள்ள மேல்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்று, ராஜாவை அழைப்பிக்கிறார்கள் (2இராஜா 18:17).

இந்த முற்றிக்கையில் சனகெரிப் நேரடியாக வரவில்லை. அவன் தன்னுடைய சேனைத்தளபதிகளில் மூன்றுபேரை எருசலேமுக்கு விரோதமாக அனுப்புகிறான். எருசலேமைச் சுற்றிலும் அசீரியரின் பெரிய சேனை பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

எசேக்கியா யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிற காலத்தில், அசீரியா தேசம் மிகப்பெரிய வல்லரசாகயிருக்கிறது. அசீரியாவின்ராஜாவாகிய சனகெரிப்பும் அதிக முக்கியத்துவமுள்ளவனாகயிருக்கிறான். ஆனாலும் சனகெரிப்பிடம் உண்மையில்லை.

அசீரியாவின் ராஜா எசேக்கியாவின்மேல் முந்நூறு தாலந்து வெள்ளியையும், முப்பது தாலந்து பொன்னையும் தண்டகமாக சுமத்தினான். எசேக்கியாவும், சனகெரிப் கேட்டுக்கொண்டபிரகாரம் அவனுக்கு பொன்னையும் வெள்ளியையும் கொடுத்தான். அசீரியாவின் ராஜா யூதாதேசத்தை விட்டுப்புறப்பட்டுப்போனான். ஆனாலும் புறப்பட்டுப்போன சனகெரிப், மறுபடியும் அசீரியாவின் சேனையை எருசலேமுக்கு விரோதமாக அனுப்புகிறான்.

சனகெரிப் எசேக்கியாவின் கையிலிருந்து வெள்ளியையும் பொன்னையும் வாங்கிக்கொண்டு, யூதாதேசத்தைவிட்டு புறப்பட்டுப்போய்விடவேண்டும். அசீரியரின் சேனை யூதாதேசத்திற்கு விரோதமாக வரக்கூடாது என்னும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே, எசேக்கியா சனகெரிப்புக்கு இவ்வளவு வெள்ளியையும் பொன்னையும் கொடுத்தான். ஆனால் சனகெரிப்போ, யூதாதேசத்தைவிட்டு விலகிப்போவதுபோல போய்விட்டு, மறுபடியும் திரும்பி யூதாவின் தலைநகரமான எருசலேமுக்கு விரோதமாக வருகிறான்.

அசீரியாவின் சேனை இதற்கு முன்பு யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாக வந்தபோது, அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பே, அந்த சேனையில் அவர்களோடு கூடவந்தான். ஆனால் இப்போது எருசலேமுக்கு விரோதமாக வந்திருக்கிற அசீரியரின் சேனையில், சனகெரிப் கூட வரவில்லை. அவன் தன்னுடைய படைத்தளபதிகளில் முக்கியமான மூன்று பேரை அனுப்புகிறான்.

சனகெரிப்பின் சேனைத்தலைவர்களாகிய தர்தான், ரப்சாரீஸ், ரப்சாக்கே ஆகிய மூன்று பேரில், ரப்சாக்கே முக்கியமானவனாகயிருக்கிறான். இவன் சாதுரியமாகவும், கோபமாகவும் பேசக்கூடியவன். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு சொல்ல வேண்டிய செய்திகளை, சனகெரிப் ரப்சாக்கே மூலமாக சொல்லியனுப்பியிருக்கிறான்.

ரப்சாக்கே தன்னுடைய தூஷண வார்த்தைகளின் மூலமாக எசேக்கியாவுக்கு கோபத்தை உண்டுபண்ணவேண்டும். எசேக்கியா கோபப்பட்டு அசீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவேண்டும். அல்லது, ரப்சாக்கேயின் கோபமான வார்த்தைகளைக் கேட்டு எசேக்கியா பயந்து, அசீரியரிடம் சரணடையவேண்டும். இதுவே ரப்சாக்கேயின் திட்டம்.

அசீரியரின் ராஜாவாகிய சனகெரிப், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவினிடத்தில் ஏற்கெனவே பொன்னையும் வெள்ளியையும் வாங்கியிருக்கிறான். தன்னுடைய சேனையை யூதாதேசத்தைவிட்டு விலக்கியிருக்கிறான். ஆகையினால் அசீரியரின் சேனை இப்போது எருசலேமுக்கு விரோதமாக உடனே யுத்தம்பண்ணவில்லை. ஆனாலும் எருசலேமைப் பிடிக்கவேண்டும் என்னும் ஆசை அசீரியரிடத்திலிருக்கிறது.

ரப்சாக்கே யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு சாதுரியமான வார்த்தைகளையும், கோபமான வார்த்தைகளையும் சொல்லி, அவனைக் கலங்கப்பண்ணுகிறான். எசேக்கியா தன்னிடத்தில் சரணடைந்துவிடுவான் என்று ரப்சாக்கே எதிர்பார்க்கிறான்.

அசீரியரின் சேனை மிகவும் பெரிதாயிருக்கிறது. அவர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். எசேக்கியா அசீரியரிடம் சரணடையவில்லையென்றால், அசீரியரின் சேனை எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதை முற்றிலுமாய் அழித்துப்போட ஆயத்தமாயிருக்கிறார்கள்.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப், தன்னுடைய மூன்று தளபதிகளையும், எசேக்கியா ராஜாவினிடத்தில் அனுப்பியிருக்கிறான். அவர்கள் எசேக்கியா ராஜாவை நேரடியாகப் பார்த்து, அவனிடத்தில் சனகெரிப் சொல்லியனுப்பின செய்தியை சொல்லவேண்டும்.

இதற்காக அசீரியா ராஜாவின் தளபதிகள் மூன்றுபேரும் எருசலேமுக்கு வந்து, வண்ணார்துறையின் வழியிலுள்ள, மேல்குளத்து சாலகத்தண்டையில் நிற்கிறார்கள். இந்தப் பகுதியில் எருசலேமின் அலங்கம் திறந்திருக்கிறது. அசீரியாவின் சேனைத்தளபதிகள் மேல்குளத்து சாலகத்தின் வழியாக, எசேக்கியா ராஜாவை போய்ப்பார்க்கலாம் என்று நினைக்கிறார்கள்.

எசேக்கியாவோ அசீரியா ராஜாவின் தளபதிகளை நேரடியாக சந்திப்பதை தவிர்த்துவிடுகிறான். எசேக்கியா அவர்களோடு சமாதான உடன்படிக்கை பண்ணாமல், தன்னுடைய அரண்மனையிலேயே இருந்துவிடுகிறான். அசீரியா ராஜாவின் தளபதிகள் தன்னைப் பார்க்க வந்திருந்தாலும், எசேக்கியா அவர்களைப் பார்க்கப்போகாமல், தன்னுடைய அரமனை விசாரிப்புக்காரனையும், சம்பிரதியையும், கணக்கனையும் அவர்களிடத்திற்கு அனுப்புகிறான். அசீரியரின் சேனைத்தலைவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதையும் எசேக்கியா கேட்கவேண்டும்.

அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக்காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாக் என்னும் கணக்கனும் அவர்களிடத்திற்குப் புறப்பட்டுப்போகிறார்கள் (2இராஜா 18:18).

எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிறவர்கள் யூதர்கள். அவர்கள் எபிரெய பாஷையைப் பேசுகிறவர்கள். சீரியரின் படைத்தளபதிகளோ சீரிய பாஷையைப் பேசுகிறவர்கள். ஆனால் சீரியரின் படைத்தலைவனாகிய ரப்சாக்கே யூதபாஷையிலே அவர்களோடு பேசுகிறான். அவனுக்கு எபிரெய பாஷையும் தெரிந்திருக்கிறது. அசீரியபாஷையும் தெரிந்திருக்கிறது.

அப்பொழுது இல்க்கியாவின் குமாரன் எலியாக்கீமும், செப்னாவும், யோவாகும் ரப்சாக்கேயைப் பார்த்து: "உமது அடியாரோடே சீரியபாஷையிலே பேசும், அது எங்களுக்குத் தெரியும்; அலங்கத்திலிருக்கிற ஜனத்தின் செவிகள் கேட்க எங்களோடே யூதபாஷையிலே பேசவேண்டாம்" (2இராஜா 18:26) என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் ரப்சாக்கேயோ அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறான். ரப்சாக்கே நின்றுகொண்டு யூதபாஷையிலே உரத்த சத்தமாய்ப் பேசுகிறான் (2இராஜா 18:28).

எசேக்கியா ராஜா அனுப்பின தூதுவர்களுக்கு எபிரெய பாஷையும் தெரியும். சீரியா பாஷையும் தெரியும். ரப்சாக்கே எசேக்கியா ராஜாவுக்குத்தான் செய்தி சொல்லுகிறான். ஆனால் அவன் தூஷணமான வார்த்தைகளைப் பேசுகிறான்.

ரப்சாக்கே யூதபாஷையிலே தூஷணவார்த்தைகளைப் பேசுவதினால், அவன் சொல்லுகிற வார்த்தைகள் எருசலேம் நகரத்தின் அலங்கத்திலே இருக்கிற யூதர்கள் எல்லோருக்கும் புரிகிறது. அவர்கள் ரப்சாக்கேயின் வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறார்கள். எருசலேம் நகரத்திற்குள்ளே கலக்கமும் திகிலும் உண்டாகிறது. ஆகையினால் ரப்சாக்கேயின் யூதபாஷை எருசலேம் நகரத்தாரை கலங்கப்பண்ணக்கூடாது என்று எசேக்கியா ராஜாவின் தூதுவர்கள் விரும்புகிறார்கள்.

அதற்கு ரப்சாக்கே: "உங்களோடுங்கூடத் தங்கள் மலத்தைத் தின்னவும் தங்கள் நீரைக் குடிக்கவும் அலங்கத்திலே தங்கியிருக்கிற மனுஷரண்டைக்கே அல்லாமல், உன் ஆண்டவனண்டைக்கும் உன்னண்டைக்குமா என் ஆண்டவன் இந்த வார்த்தைகளைப் பேச என்னை அனுப்பினார்" (2இராஜா 18:27) என்று சொல்லுகிறான்.

ரப்சாக்கேயின் வார்த்தையில் கண்ணியமில்லை. அவன் எருசலேம் நகரத்தாருக்கு விரோதமாகவும், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு விரோதமாகவும் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். ரப்சாக்கே மனுஷரைத் தூஷிப்பதோடு, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும் தூஷிக்கிறான்.

ரப்சாக்கேயின் நடத்தையில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லை. யுத்தம்பண்ணுகிறவர்கள் யுத்த தர்மங்களுக்கு கட்டுப்பட்டு யுத்தம்பண்ணுவது வழக்கம். ஆனால் ரப்சாக்கேயோ, யுத்தத்தின் விதிமுறைகள் எல்லாவற்றையும் மீறிவிடுகிறான். எருசலேம் நகரத்திலுள்ளவர்கள் எசேக்கியா ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ண வேண்டுமென்று ரப்சாக்கே கலகத்தைத் தூண்டும் வார்த்தைகளைப் பேசுகிறான்.

ரப்சாக்கே தன்னுடைய வார்த்தைகளினால் யூதாவின் சேனையிலுள்ளவர்களை பயமுறுத்துகிறான். அவர்கள் தன்னிடத்தில் சரணடைய வேண்டும் என்றும், அதுவரையிலும் எருசலேமுக்கு விரோதமான முற்றிக்கை தொடரும் என்றும் பயமுறுத்துகிறான். முற்றிக்கை தொடர்ந்தால் எருசலேமில் பஞ்சமுண்டாகும்.

ரப்சாக்கே எசேக்கியா ராஜாவின் தூதுவரிடத்தில் பேசும்போது, தன்னுடைய தேசத்து ராஜாவாகிய சனகெரிப்பை உயர்வாகப் பேசுகிறான். ரப்சாக்கே அவர்களை நோக்கி "அசீரியா ராஜாவாகிய மகாராஜாவானவர் உரைக்கிறது" (2இராஜா 18:19) என்றும் "அசீரியா ராஜாவாகிய மகாராஜாவுடைய வார்த்தையை கேளுங்கள்" (2இராஜா 18:28) என்றும் சொல்லுகிறான்.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பைவிட, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மிகவும் பெரியவர். அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். சனகெரிப் அசீரியா தேசத்திற்கு மாத்திரமே ராஜா. கர்த்தரோ சர்வலோகத்திற்கும் ராஜாவாயிருக்கிறார். அவர் வானத்திற்கும் பூமிக்கும் தேவனாயிருக்கிறார்.

"நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்" (சங் 82:6,7).

இந்தப் பூமிக்குரிய ராஜாக்களை நம்முடைய மாம்சக்கண்களால் பார்க்கிறோம். ராஜாதி ராஜாவாகிய கர்த்தரையோ, நம்முடைய மனக்கண்களாலும், விசுவாச கண்களாலும் பார்க்கவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய மகிமையும், மகத்துவமும், மாட்சிமையும் நமக்குத் தெரியும்.

எருசலேம் நகரத்தார் அசீரியரிடத்தில் சரணடைவது, எருசலேமிலுள்ளவர்களுக்கு நல்லது என்று ரப்சாக்கே சொல்லுகிறான். இதனால் எருசலேமுக்கு நன்மை உண்டாகும் என்றும் அவன் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறான்.

ரப்சாக்கே எருசலேம் நகரத்தாரை நோக்கி, "எசேக்கியாவின் சொல்லைக் கேளாதிருங்கள்; அசீரியா ராஜா சொல்லுகிறதாவது: நீங்கள் என்னோடே ராசியாகி, காணிக்கையோடே என்னிடத்தில் வாருங்கள்" என்றும்,

"நான் வந்து, உங்களை உங்கள் தேசத்துக்கு ஒப்பான தானியமும் திராட்சதோட்டமுமுள்ள தேசமும், அப்பமும் திராட்சரசமுமுள்ளதேசமும், ஒலிவ எண்ணெயும் தேனுமுள்ள தேசமுமாகிய சீமைக்கு அழைத்துக்கொண்டுபோகுமளவும், அவனவன் தன்தன் திராட்சச்செடியின் கனியையும் தன்தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன்தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள்" என்றும்,

"இவ்விதமாய் நீங்கள் சாகாமால் பிழைப்பீர்கள்; கர்த்தர் நம்மைத் தப்புவிப்பார் என்று உங்களைப் போதனைசெய்ய எசேக்கியாவுக்குச் செவிகொடாதிருங்கள்" *(2இராஜா 18:31,32)* என்றும் சொல்லுகிறான்.

எருசலேம் நகரத்தார் அசீரியரிடத்தில் சரணடையும்போது, அவர்களுடைய திராட்சத்தோட்டம் அசீரியருக்கு சொந்தமாகும். ஆனாலும் எருசலேம் நகரத்தார் தங்கள் தோட்டத்தில் பயிரிட்டு அதன் பலனைப் புசிக்கலாம் என்றும் ரப்சாக்கே சொல்லுகிறான்.

எருசலேமிலுள்ள திராட்சத்தோட்டம் இப்போது எருசலேம் நகரத்தாருக்கு சொந்தமானது. அது அசீரியருக்கு சொந்தமாகிவிட்டால், அதன்பின்பு எருசலேம் நகரத்தாருக்கு அந்தத் தோட்டத்தில் பங்கும் இருக்காது, உரிமையும் இருக்காது. ரப்சாக்கே தன்னுடைய சாதுரியமான வார்த்தைகளினால் எருசலேம் நகரத்தாரை வஞ்சிக்கிறான்.

ரப்சாக்கே எருசலேம் நகரத்தாருடைய நம்பிக்கையை பலவீனப்படுத்தும் முயற்சியில் இறங்குகிறான். ரப்சாக்கே அவர்களை நோக்கி: "அசீரியா ராஜாவாகிய மகா ராஜாவானவர் உரைக்கிறதும், நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியதும் என்னவென்றால்: நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?" *(2இராஜா 18:19)* என்றும்

"எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களை என் கையிலிருந்து தப்புவிக்கமாட்டான்" *(2இராஜா 18:29)* என்றும் சொல்லுகிறான்.

எருசலேம் நகரத்தார் தனக்கு கீழ்ப்படியவேண்டும் இல்லையென்றால் அவர்கள் அழிந்துபோவார்கள் என்று ரப்சாக்கே அவர்களை எச்சரிக்கிறான். அவர்கள் வளையவேண்டும். அல்லது ஒடிந்துபோவார்கள் என்று ரப்சாக்கே அவர்களை பயமுறுத்துகிறான்.

ரப்சாக்கே எருசலேம் நகரத்தாரிடம் பேசும்போது, யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு விரோதமாகவும் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். எசேக்கியா எதையெல்லாம் நம்புகிறானோ, அவை அவனுக்கு சித்திக்காது என்று ரப்சாக்கே சொல்லுகிறான்.

எசேக்கியா மூன்று காரியங்களை நம்புவதாக ரப்சாக்கே சொல்லுகிறான். அவையாவன : 1. எசேக்கியாவின் இராணுவபலம். 2. எசேக்கியா எகிப்தியரோடு பண்ணியிருக்கிற உடன்படிக்கை. 3. எசேக்கியா நம்புகிற கர்த்தர்.

அசீரியரின் இராணுவம் மிகவும் பெரியது. அசீரியரின் இராணுவத்தோடு ஒப்பிடும்போது எசேக்கியாவின் இராணுவம் மிகவும் சிறியது. ரப்சாக்கேயின் பார்வையில் எசேக்கியாவின் இராணுவம் சிறிய கூட்டமாகத் தெரிகிறது. எசேக்கியாவினிடத்தில் குதிரைகளும் இல்லை, குதிரைவீரர்களும் இல்லை என்று ரப்சாக்கே ஏளனமாய்ப் பேசுகிறான்.

ரப்சாக்கே எசேக்கியாவின் தூதுவர்களை நோக்கி, "நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ அவைகள்மேல் ஏறத்தக்கவர்களைச் சம்பாதிக்கக்கூடுமானால் அசீரியா ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு" (2இராஜா 18:23) என்றும்,

"கூறாதேபோனால், நீ என் ஆண்டவனுடைய ஊழியக்காரரில் ஒரே ஒரு சிறிய தலைவனின் முகத்தை எப்படித் திருப்புவாய்? இரதங்களோடு குதிரைவீரரும் வருவார்கள் என்று எகிப்தையா நம்புகிறாய்?" (2இராஜா 18:24) என்றும் சொல்லுகிறான்.

எருசலேமைச் சுற்றிலும் அசீரியரின் சேனை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். எசேக்கியாவும் அவனுடைய சேனையும் நகரத்திற்குள்ளே இருக்கிறார்கள். அசீரியாவின் சேனை பலமுள்ளதாயிருக்கிறது. இந்த சூழ்நிலையில் எசேக்கியா யாரை நம்புகிறான் என்று ரப்சாக்கேக்கு தெரியவில்லை.

ரப்சாக்கே எசேக்கியாவின் தூதுவரிடம், எசேக்கியா ராஜாவின் நம்பிக்கையைப்பற்றி கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறான். ரப்சாக்கே அவர்களிடம், "நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன? யுத்தத்திற்கு மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று நீ சொல்லுகிறாயே, அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல; நீ என்னை விரோதிக்கும்படி யார்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்? (2இராஜா 18:19,20) என்று கேட்கிறான்.

"சனகெரிப் வந்து, எருசலேமின்மேல் யுத்தம்பண்ண நோக்கங்கொண்டிருப்பதை எசேக்கியா கண்டபோது, நகரத்திற்குப் புறம்பேயிருக்கிற ஊற்றுகளைத் தூர்த்துப்போட, தன் பிரபுக்களோடும் தன் பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனைபண்ணினான்; அதற்கு அவர்கள் உதவியாயிருந்தார்கள்" (2நாளா 32:2,3).

எசேக்கியா தன் பராக்கிரமசாலிகளோடு ஆலோசனை பண்ணுவதை, ரப்சாக்கே மந்திராலோசனை என்று ஏளனமாய்ப் பேசுகிறான்.

யூதாதேசத்திற்கும், எகிப்து தேசத்திற்கும் சமாதான உடன்படிக்கை பண்ணப்பட்டிருக்கிறது. எருசலேமுக்கு ஆபத்து வரும்போது, எகிப்தியர்கள் அவர்களுடைய உதவிக்கு வருவார்கள். ரப்சாக்கேயோ, எகிப்தியரையும் ஏளனம்பண்ணுகிறான்.

ரப்சாக்கே எசேக்கியாவின் தூதுவர்களிடம், எகிப்தியரைப்பற்றிச் சொல்லும்போது, "இதோ, நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்; அதின்மேல் ஒருவன் சாய்ந்தால், அது அவன் உள்ளங்கையில் பட்டு உருவிப்போம்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும் இப்படியே இருப்பான்" (2இராஜா 18:21) என்று சொல்லுகிறான்.

எகிப்தியரிடத்தில் இரதங்களும் குதிரைவீரர்களும் இருக்கிறார்கள். எசேக்கியா எகிப்தியரின் இரதங்களையும் குதிரை வீரரையும் நம்புகிறான் என்று ரப்சாக்கே ஏளனமாய்ப் பேசுகிறான். "இரதங்களோடு குதிரைவீரரும் வருவார்கள் என்று எகிப்தையா நம்புகிறாய்" (2இராஜா 18:24) என்று ரப்சாக்கே கேட்கிறான்.

எகிப்தியர்கள் இப்போது நெரிந்த நாணல்கோலைப்போல இருக்கிறார்கள். அதன்மீது ஒருவன் சாய்ந்தால், நெரிந்த நாணல்கோல் முறிந்துபோகும் முறிந்துபோன அந்தக்கோல், அதன்மேல் சாய்கிறவனுடைய சரீரத்தைக் கிழித்துவிடும்.

"அப்பொழுது எகிப்துதேசத்தின் குடிகளெல்லாரும் நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்; அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு நாணற்கோலாயிருந்தார்களே. அவர்கள் உன்னைக் கையிலே பிடிக்கும்போது, நீ ஒடிந்துபோய், அவர்கள் விலாவையெல்லாம் பிளப்பாய்; அவர்கள் உன்மேல் சாயும்போது, நீ முறிந்து, அவர்கள் இடுப்பு முழுவதையும் மரத்துப்போகப்பண்ணுவாய்" (எசே 29:6,7).

எசேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நம்புகிறான் என்று ரப்சாக்கே ஏளனம்பண்ணுகிறான். அவன் எசேக்கியா ராஜாவின் தூதுவரிடத்தில், "நீங்கள் என்னிடத்தில்: எங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புகிறோம் என்று சொல்லுவீர்களாகில், அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி, யூதாவையும் எருசலேமையும் நோக்கி: எருசலேமிலிருக்கிற இந்தப் பலி பீடத்தின்முன் பணியுங்கள் என்றானே" (2இராஜா 18:22) என்று சொல்லுகிறான்.

எசேக்கியா கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய வல்லமையையும் நம்புகிறான். தான் கர்த்தரை நம்புவது மாத்திரமல்ல, எருசலேம் நகரத்தாரும் கர்த்தரை நம்பவேண்டுமென்று எசேக்கியா சொல்லுகிறான்.

எசேக்கியா எருசலேம் நகரத்தாரை நோக்கி, "கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார்; இந்த நகரம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை" (2இராஜா 18:30) என்றும்,

"அவனவன் தன்தன் திராட்சச்செடியின் கனியையும் தன்தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன்தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள்; இவ்விதமாய் நீங்கள் சாகாமால் பிழைப்பீர்கள்; கர்த்தர் நம்மைத் தப்புவிப்பார்" (2இராஜா 18:32) என்றும் சொல்லுகிறான்.

ரப்சாக்கே எசேக்கியா ராஜாவுக்கு விரோதமாகவும், அவனுடைய நம்பிக்கைக்கு விரோதமாகவும் பேசுகிறான். தாவீதின் சத்துருக்கள், கர்த்தர்மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையை பலவீனப்படுத்தும் வண்ணமாக, தூஷணமான வார்த்தைகளைப் பேசினார்கள்.

"கர்த்தாவே, என் சத்துருக்கள் எவ்வளவாய்ப் பெருகியிருக்கிறார்கள்! எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் அநேகர். தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று, என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" *(சங் 3:1,2).*

"நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன்; பின்னை ஏன் நீங்கள் என் ஆத்துமாவை நோக்கி: பட்சியைப்போல உன் மலைக்குப் பறந்துபோ என்று சொல்லுகிறீர்கள். இதோ, துன்மார்க்கர் வில்லை வளைத்து, செம்மையான இருதயத்தார் மேல் அந்தகாரத்தில் எய்யும்படி தங்கள் அம்புகளை நாணிலே தொடுக்கிறார்கள்" *(சங் 11:1,2).*

இயேசுகிறிஸ்துவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக இதுபோன்ற தூஷண வார்த்தைகளைச் சொன்னார்கள்.

"தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" *(மத் 27:43).*

எருசலேம் நகரத்தார் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்தை பலவீனப்படுத்தும் வண்ணமாக ராப்சாக்கே மூன்று காரியங்களை சொல்லுகிறான். அவையாவன : 1. எசேக்கியா கர்த்தருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அகற்றிப்போட்டான். 2. ரப்சாக்கே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் எருசலேமை அழிக்க வந்திருக்கிறான். 3. கர்த்தருடைய வல்லமையைவிட, அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பின் வல்லமை மிகவும் அதிகம்.

எசேக்கியாவுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்காது என்று ரப்சாக்கே சொல்லுகிறான். ரப்சாக்கே, எசேக்கியா அனுப்பின தூதுவர்களை நோக்கி, "நீங்கள் என்னிடத்தில்: எங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புகிறோம் என்று சொல்லுவீர்களாகில், அவருடைய மேடைகளையும் அவருடைய பலி பீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி, யூதாவையும் எருசலேமையும் நோக்கி: எருசலேமிலிருக்கிற இந்தப் பலிபீடத்தின்முன் பணியுங்கள் என்றானே" (2இராஜா 18:22) என்று சொல்லுகிறான்.

ரப்சாக்கேக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கும், புறஜாதி தெய்வங்களுக்கும் இடையுள்ள வித்தியாசம் தெரியவில்லை. புறஜாதி தெய்வங்களை ஆராதிக்கிறவர்கள் அவற்றிற்கு ஏராளமான மேடைகளையும், பலிபீடங்களையும் உண்டுபண்ணுகிறார்கள். பலிபீடங்களின் எண்ணிக்கை அதிகமாயிருப்பது விக்கிரகங்களுக்கு பெருமை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு எருசலேமிலுள்ள தேவாலயத்தில் ஒரே ஒரு வெண்கல பலிபீடம் மாத்திரமே இருக்கிறது. எசேக்கியா ராஜா யூதாதேசத்திலுள்ள மேடைகளையும், விக்கிரகங்களின் பலிபீடங்களையும் இடித்துப்போட்டான். இந்தப் பலிபீடங்கள் கர்த்தருடைய பலிபீடங்களல்ல. ரப்சாக்கேக்கு இந்த வித்தியாசம் தெரியவில்லை. எசேக்கியா கர்த்தருடைய பலிபீடத்தை இடித்துப்போட்டதாக, ரப்சாக்கே எருசலேம் நகரத்தாருக்கு சொல்லுகிறான்.

கர்த்தர் எசேக்கியாவை நேசிக்கவில்லை என்றும், தானே கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரன் என்றும் ரப்சாக்கே சொல்லுகிறான். எருசலேமை அழிப்பது கர்த்தருடைய சித்தம் என்றும், அந்த நகரத்தை அழிப்பதற்கு கர்த்தரே தன்னை அனுப்பியிருப்பதாகவும், ரப்சாக்கே எருசலேம் நகரத்தாருக்கு தூஷண வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

ரப்சாக்கே எசேக்கியா அனுப்பின தூதுவர்களை நோக்கி, "இப்போதும் கர்த்தருடைய கட்டளையில்லாமல் இந்த ஸ்தலத்தை அழிக்கவந்தேனோ? இந்த தேசத்திற்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னாரே" (2இராஜா 18:25) என்று சொல்லுகிறான்.

ரப்சாக்கே எருசலேமிலுள்ள வண்ணார்துறையின் வழியிலுள்ள மேற்குளத்து சாலகத்தண்டையில் நின்று பேசும்போது, எருசலேமினுடைய அலங்கத்தின்மீது ஏராளமான ஜனங்கள், அவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனங்களை பயமுறுத்தும் வண்ணமாக, ரப்சாக்கே பொய்வார்த்தைகளைப் பேசுகிறான்.

ரப்சாக்கே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும், அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பையும் ஒப்பிட்டு பேசுகிறான். சனகெரிப்பே பெரியவர் என்றும், அவரே வல்லமையுள்ளவர் என்றும், அவருடைய வல்லமைக்கு முன்பாக இஸ்ரவேலின் தேவனால் எதிர்த்து நிற்க முடியாது என்றும் ரப்சாக்கே தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான்.

ரப்சாக்கே எசேக்கியா ராஜா அனுப்பின தூதுவர்களை நோக்கி, "ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?" (2இராஜா 18:33) என்றும்,

"ஆமாத், அர்பாத் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? செப்பர்வாயிம், ஏனா, ஈவாப் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? அவர்கள் சமாரியாவை என் கைக்குத் தப்புவித்ததுண்டோ?" (2இராஜா 18:34) என்றும்,

"கர்த்தர் எருசலேமை என் கைக்குத் தப்புவிப்பார் என்பதற்கு, அந்த தேசங்களுடைய எல்லா தேவர்களுக்குள்ளும் தங்கள் தேசத்தை என் கைக்குத் தப்புவித்தவன் யார் என்கிறார்" (2இராஜா 18:35) என்றும் சொல்லுகிறான்.

ரப்சாக்கே மெத்த பெருமைக்காரனாயிருக்கிறான். அவனுடைய மனதில் ஆணவம் இருக்கிறது. ஒரு பட்டணத்தைப் பிடிக்கும்போது, அந்தப் பட்டணத்திலுள்ள தெய்வங்களையும் பிடித்துக்கொண்டதாக ரப்சாக்கே சொல்லுகிறான்.

ரப்சாக்கே சொல்லுகிறபடி, கர்த்தர் எருசலேமுக்கு மாத்திரம் தேவனல்ல. அவர் சர்வலோகத்திற்கும் அதிபதியாயிருக்கிறார். ரப்சாக்கே யூதமார்க்கத்தைவிட்டு பின்வாங்கிப் போனவன் என்று யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது. ஆகையினால் அவனால் யூதபாஷையில் பேசமுடிகிறது.

ரப்சாக்கேக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிய சத்தியங்கள் தெளிவாகத் தெரியவில்லை. அவன் யூதமார்க்கத்தைப் பிடிக்காமல், அதைவிட்டு விலகிப்போனதினால், அவனுக்கு யூதர்கள்மீதும், யூதாதேசத்தின்மீதும் அதிக கோபம் வந்திருக்கிறது.

அசீரியாவின் படைத்தளபதியாகிய ரப்சாக்கே தூஷணமான வார்த்தைகளையும், அவமானப்படுத்துகிற வார்த்தைகளையும் சொல்லுகிறான். ஆனாலும் ஜனங்கள் அவனுக்கு ஒரு வார்த்தையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருக்கிறார்கள்; அவனுக்கு மறுஉத்தரவு சொல்லவேண்டாம் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான் (2இராஜா 18:36).

ரப்சாக்கே தேவதூஷணம் சொல்லுகிறான். அவனுடைய தூஷண வார்த்தைகளைக் கேட்டு எருசலேம் நகரத்தார் தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறார்கள். ரப்சாக்கேயின் வார்த்தைகள் யூதாவின் மனுஷருக்கு மிகுந்த வேதனையாகவும், மிகுந்த பாரமாகவும் இருக்கிறது.

அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக்காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரன் யோவாக் என்னும் கணக்கனும் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எசேக்கியாவினிடத்தில் வந்து, ரப்சாக்கேயின் வார்த்தைகளை அவனுக்குத் தெரிவிக்கிறார்கள் (2இராஜா 18:37).

ராஜாவாகிய எசேக்கியா அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபோது அவனும் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான் (2இராஜா 19:1).

அசீரியரின் சேனை எருசலேம் நகரத்தை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் எருசலேம் நகரத்தை சத்துருக்களிடமிருந்து விடுவிக்கிறார். பட்டயத்தினாலும் அம்பினாலும் யுத்தம் நடைபெறவில்லை. ஜெபத்தினாலும், தீர்க்கதரிசனத்தினாலும், கர்த்தருடைய தூதனானவரின் கரத்தினாலும் எருசலேம் தப்புவிக்கப்படுகிறது.

ரப்சாக்கேயின் தூஷணமான வார்த்தைகளைக் கேட்டு எசேக்கியா கலங்குகிறான். அவன் தன்னுடைய பிரதானிகளை ஏசாயா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்பி, அவரை யூதாதேசத்திற்காக ஜெபம்பண்ணுமாறு வேண்டிக்கொள்கிறான் (2இராஜா 19:1-5). ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவுக்கு சமாதானமான வார்த்தைகளை சொல்லியனுப்புகிறார் (2இராஜா 19:6,7).

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியாவுக்கு ஒரு நிருபத்தை எழுதி அனுப்புகிறான். எசேக்கியா தன்னிடத்தில் சரணடையவேண்டுமென்று பயமுறுத்தி, அந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது (2இராஜா 19:8-13). எசேக்கியா அசீரியா ராஜாவின் நிருபத்தையும், தன்னுடைய பரிதாபமான நிலைமையையும் கர்த்தரிடத்தில் சொல்லி ஜெபம்பண்ணுகிறான். கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. எசேக்கியா கர்த்தருடைய உதவிக்காகவும் ஒத்தாசைக்காகவும் கெஞ்சி மன்றாடுகிறான் (2இராஜா 19:14-19).

கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக, எசேக்கியாவுக்கு ஆறுதலான செய்தியை சொல்லுகிறார். எருசலேம் நகரம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். கர்த்தர் எருசலேமைப் பாதுகாப்பார். சத்துருக்கள் மூலமாக எருசலேமுக்கு தீங்கு வராது (2இராஜா 19:20-34).

கர்த்தருடைய தூதனானவர் அசீரியரின் சேனையை சங்காரம்பண்ணுகிறார். அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பை அவனுடைய சொந்தக் குமாரரே கொன்றுபோடுகிறார்கள் (2இராஜா 19:35-37).

கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். தம்முடைய ஜனத்தை இரட்சிக்கிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

ரப்சாக்கே சொன்ன தூஷண வார்த்தைகளை, எசேக்கியாவின் ஊழியக்காரர் அவனிடத்தில் வந்து சொல்லுகிறார்கள். ரப்சாக்கே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தூஷித்தான். அவன் சொன்ன தூஷணமான வார்த்தைகள் எசேக்கியாவுக்கு மிகுந்த மனவருத்தத்தையும், வேதனையையும் கொடுக்கிறது.

ராஜாவாகிய எசேக்கியா அதைக்கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக்கொள்கிறான் (2இராஜா 19:1). ராஜவஸ்திரங்களை கிழித்துப்போடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல. அதுபோலவே ராஜாவின் சரீரத்தை உடையவர்கள் இரட்டுடுத்திக்கொள்வதும் அவ்வளவு எளிதான காரியமல்ல.

ரப்சாக்கே கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்திருக்கிறான். எருசலேம் நகரத்தை அழித்துப்போடுவதாக பயமுறுத்தியிருக்கிறான். எசேக்கியா ரப்சாக்கேயின் வார்த்தைகளைக் கேட்டு, பயத்தினாலும், நடுக்கத்தினாலும் திகைத்துப்போயிருக்கிறான். மிகுந்த வேதனையிலும் துக்கத்திலும் இருக்கிறான்.

எருசலேம் நகரத்தாரில் அநேகர் இரட்டுடுத்தவில்லை. அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை. அவர்களெல்லோரும் நேர்த்தியான வஸ்திரங்களை உடுத்தியிருக்கும்போது, அவர்களுடைய ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்து இரட்டுடுத்திக்கொள்கிறான்.

எசேக்கியா இரட்டுடுத்திக்கொண்டு கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசிக்கிறான். தன்னுடைய மனதின் வருத்தங்களையும், தனக்கு வந்திருக்கிற பிரச்சனைகளையும் கர்த்தரிடத்தில் முறையிடுவதற்காகவும், கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவதற்காகவும் எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறான்.

ரப்சாக்கே சொன்ன தூஷண வார்த்தைகளுக்கு எப்படிப்பட்ட பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்பது எசேக்கியாவுக்கு தெரியவில்லை. ஆகையினால் அவன் இந்தப் பிரச்சனைகளை கர்த்தரிடத்தில் முறையிட வருகிறான். தேவரீர் தாமே தனக்காக பிரதியுத்தரம் சொல்லவேண்டுமென்று எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான்.

எசேக்கியாவின் காலத்தில், எருசலேமிலே ஏசாயா தீர்க்கதரிசியாயிருக்கிறார். இவர் ஆமோத்தின் குமாரன். தான் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினாலும், ஏசாயாவும் தனக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்று எசேக்கியா விரும்புகிறான்.

எசேக்கியா தன்னுடைய ஊழியக்காரரை ஏசாயாவினிடத்திற்கு அனுப்புகிறான். எலியாக்கீமும், செப்னாவும் ரப்சாக்கே சொன்ன தூஷண வார்த்தைகளை தங்கள் செவிகளால் கேட்டவர்கள். அவர்களால் ரப்சாக்கே சொன்ன தூஷண வார்த்தைகளை ஏசாயாவுக்கு தெளிவாகச் சொல்ல முடியும். ஆகையினால் எசேக்கியா அவர்களையும், அவர்களோடுகூட ஆசாரியர்களின் மூப்பர்களையும் ஏசாயாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

எசேக்கியா அரமனை விசாரிப்புக்காரனாகிய எலியாக்கீமையும், சம்பிரதியாகிய செப்னாவையும், ஆசாரியர்களின் மூப்பரையும், ஆமோத்தின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினிடத்துக்கு இரட்டு உடுத்திக்கொண்டவர்களாக அனுப்புகிறான் (2இராஜா 19:2).

ராஜாவின் ஊழியக்காரர், ராஜாவின் சார்பாக, ஏசாயாவை சந்திக்கப்போகிறார்கள். ஆகையினால் அவர்களும் தங்கள் ராஜாவாகிய எசேக்கியாவைப்போல இரட்டுடுத்திக்கொண்டவர்களாய், ஏசாயாவினிடத்திற்குப்போகிறார்கள்.

எசேக்கியா ராஜாவின் ஊழியக்காரர், ஏசாயா தீர்க்கதரிசியை நோக்கி, "இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக என்று எசேக்கியா சொல்லச்சொன்னார்" (2இராஜா 19:4) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ஏற்கெனவே அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள். யூதாதேசத்தார் மாத்திரமே இன்னும் மீதியாயிருக்கிறார்கள்.

அசீரியாவின் ராஜா யூதாதேசத்திலுள்ள அரணிப்பான பட்டணங்களையெல்லாம் பிடித்துக்கொண்டான். இன்னும் எருசலேம் மாத்திரமே மீதியாயிருக்கிறது. "இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பம் செய்வீராக" என்னும் வாக்கியம் எருசலேம் நகரத்தாரைக் குறிக்கிறது.

ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினாலும், எசேக்கியாவும் ஜெபம்பண்ணுகிறான். நமக்காக மற்றவர்கள் ஜெபம்பண்ணும்போது, நாம் ஜெபம்பண்ணாமல் சும்மாயிருந்துவிடக் கூடாது. மற்றவர்கள் நமக்காக ஜெபம்பண்ணினாலும், நாமும் நமக்காக ஜெபம்பண்ணவேண்டும்.

எசேக்கியா தன்னுடைய ஊழியக்காரரை ஏசாயாவினிடத்திற்கு அனுப்பி, அவரை ஜெபம்பண்ண சொல்லுகிறான். அதே வேளையில் எசேக்கியாவும் கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து, கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான்.

கர்த்தருடைய ஊழியத்திற்கும் அவருடைய சபைக்கும், விசுவாசிகளுக்கும் அதிகமான பிரச்சனைகள் வரும்போது, நாம் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ண வேண்டும். விசுவாசிகளில் அநேகர் பின்வாங்கிப்போனாலும், இன்னும் கர்த்தரை நம்புகிற மீதமானவர்களுக்காக நாம் ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தருக்கு மீதமானவர்கள் எல்லா காலங்களிலும், எல்லா தேசங்களிலும் இருப்பார்கள்.

எசேக்கியாவின் ஊழியக்காரர் ஏசாயாவை நோக்கி, "இந்த நாள் நெருக்கமும் கண்டிதமும் தூஷணமும் அநுபவிக்கிற நாள்; பிள்ளைபேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை" (2இராஜா 19:3) என்று சொல்லுகிறார்கள்.

எருசலேம் நகரத்தார் தங்கள் சத்துருக்களுக்கு பயப்படுகிறார்கள். அவர்கள் அழிந்துபோகிற ஆபத்தான நிலமையிலிருக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமே தங்களுக்கு உதவியாயிருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எருசலேம் நகரத்தார் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பி ஜீவிக்கிறவர்கள். தங்களுக்கு ஆபத்து வரும்போது அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். கர்த்தர் தங்களைப் பாதுகாக்க முன்வருவார் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ரப்சாக்கே கர்த்தருக்கு விரோதமான தூஷண வார்த்தைகளைப் பேசியபோது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரும், அந்தத் தூஷணவார்த்தைகளை தம்முடைய செவிகளினால் கேட்டிருப்பார். ரப்சாக்கேயின் தூஷணவார்த்தைகள் கர்த்தருக்கும் தெரியும். ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளின் பிரகாரம், கர்த்தர் அவனைத் தண்டிப்பார்.

எசேக்கியாவின் ஊழியக்காரர் கர்த்தரை நம்புகிறார்கள். அவர்கள் ஏசாயா தீர்க்கதரிசியிடம் வந்து, அவரை நோக்கி, "ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி அசீரியா ராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளையெல்லாம் உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிறார்; உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனைசெய்வார்" (2இராஜா 19:4) என்று சொல்லுகிறார்கள்.

எசேக்கியாவின் வழக்கு கர்த்தருடைய சமுகத்தில் சொல்லப்படவேண்டும். இந்த வழக்கை கர்த்தருடைய சமுகத்தில் கொண்டு போவதற்கு ஏசாயா உதவியாயிருப்பார். நம்முடைய பிரச்சனைகளை கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுத்துவிட்டால், அதன் பின்பு கர்த்தருடைய சித்தம் நிறைவேறும் என்று விசுவாசித்து, நாம் மனஅமைதியோடிருக்கலாம்.

அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: "அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்" (2இராஜா 19:6) என்று சொல்லுகிறார்.

அசீரியர்கள் அழிந்துபோவார்கள். இதன் மூலமாக கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார். எருசலேம் நகரத்திலே, என்னென்ன சம்பவங்கள் நடைபெறும் என்று விசாரிப்பதற்காக, எசேக்கியா தன்னுடைய ஊழியக்காரரை ஏசாயாவினிடத்திற்கு அனுப்பவில்லை.

எசேக்கியா தன்னுடைய கடமையை நிறைவேற்ற விரும்புகிறான். கர்த்தருடைய சித்தத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு கீழ்ப்படிய விரும்புகிறான். இந்த விஷயத்தில் எசேக்கியாவுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் உதவி தேவைப்படுகிறது. எசேக்கியா இப்போது மிகுந்த மனவருத்தத்திலும், மனவேதனையிலும் இருக்கிறான்.

ஏசாயா எசேக்கியாவுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். எசேக்கியா ரப்சாக்கேயின் தூஷண வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறான். ஏசாயா எசேக்கியாவை ஆறுதல் பண்ணும் வண்ணமாக, "நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்" என்று சொல்லுகிறார்.

ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளில் உண்மையில்லை. அவனிடத்தில் வீண்பெருமை இருப்பதுபோல, அவனுடைய வார்த்தைகளிலும் வீண்பெருமை இருக்கிறது. அவனுடைய வார்த்தைகள் சித்திக்காது. அவை காற்றோடு கரைந்துபோகும்.

ரப்சாக்கே தன்னுடைய தூஷண வார்த்தைகளினால் எசேக்கியாவை பயமுறுத்தினான். கர்த்தரோ தம்முடைய வல்லமையினால் அசீரியாவின் ராஜாவை பயமுறுத்தப்போகிறார். அசீரியா ராஜாவின் பயம், எசேக்கியா ராஜாவின் பயத்தைவிட அதிகமாயிருகிறது.

கர்த்தருடைய வார்த்தை ஏசாயா மூலமாய் உண்டாயிற்று. ஏசாயா எசேக்கியாவின் ஊழியக்காரரை நோக்கி, "இதோ, அசீரியாவின் ராஜா ஒரு செய்தியைக்கேட்டு, தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள்" *(2இராஜா 19:7)* என்று சொல்லுகிறான்.

"ஆவியை நான் அவனுக்குள் அனுப்புவேன்" என்னும் வாக்கியத்திற்கு, "கர்த்தர் அசீரியரை சங்காரம்பண்ணும் கொள்ளைநோயின் ஆவியை அனுப்புவார்" என்று பொருள். அசீரியருடைய சேனையின்மீது கொள்ளைநோய் வரும். அந்த நோய் அவர்களெல்லோரையும் கொன்றுபோடும்.

ரப்சாக்கே எசேக்கியாவின் ஊழியக்காரரிடத்தில் அசீரியா ராஜா தன்னிடத்தில் சொல்லியனுப்பின செய்திகளை சொல்லுகிறான். ஆனால் எசேக்கியா ராஜாவினிடத்திலிருந்து ரப்சாக்கேக்கு இதுவரையிலும் ஒரு பிரதியுத்தரமும் வரவில்லை. அசீரியாவின் சேனை எருசலேமை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள்.

எருசலேமுக்கு விரோதமாக என்ன செய்யவேண்டும் என்று சனகெரிப்பின் கட்டளையைப் பெற்றுக்கொள்வதற்காக, ரப்சாக்கே அசீரியாவின் ராஜாவைப் பார்க்கப்போகிறான். அசீரியாவின் இராணுவம் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கையிட்டிருக்கிறார்கள்.இராணுவத்தை நிர்வாகம்பண்ணும் பொறுப்பை, ரப்சாக்கே, தன்னோடு கூடயிருக்கிற இரண்டு தளபதிகளிடமும் ஒப்புவிக்கிறான்.

ரப்சாக்கே அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பைப் பார்க்கப்போகும்போது, அவன் லிப்னாவை முற்றிக்கையிட்டிருக்கிறான். லிப்னா பட்டணத்தார் யூதாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணியவர்கள்.

"அப்படியே யூதாவுடைய கையின் கீழிருந்த ஏதோமியர், இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, கலகம்பண்ணினார்கள்; அக்காலத்தில்தானே லிப்னா பட்டணத்தாரும் கலகம்பண்ணினார்கள்" *(2இராஜா 8:22).*

அசீரியாவின் ராஜா லிப்னாவுக்கு விரோதமாக முற்றிக்கையிட்டிருக்கும்போது, கூஷியரின் ராஜா அசீரியருக்கு விரோதமாக பெரும் சேனையோடு யுத்தம்பண்ண வருகிறான் என்று சனகெரிப் கேள்விப்படுகிறான். கூஷியர்கள் அரபு தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறவர்கள்.

"அசீரியா ராஜா லாகீசைவிட்டுப் புறப்பட்டான் என்று கேள்விப்பட்டு, ரப்சாக்கே திரும்பிப்போய், அவன் லிப்னாவின்மேல் யுத்தம்பண்ணுகிறதைக் கண்டான். இதோ, எத்தியோப்பியா ராஜாவாகிய தீராக்கா உம்மோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டான் என்று சொல்லக்கேள்விப்பட்டான்" *(2இராஜா 19:8,9).*

அசீரியாவின் ராஜா எருசலேமுக்கு விரோதமான யுத்தத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறான். அசீரியரின் சேனை எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். ஆனால் எசேக்கியா ராஜாவோ ரப்சாக்கேக்கு மறுஉத்தரவு கொடுக்காமல் அமைதியாயிருக்கிறான். அவன் எவ்வளவு காலத்திற்கு அமைதியாயிருப்பான் என்பது அசீரியருக்கு தெரியவில்லை.

எசேக்கியா அசீரியரிடத்தில் சரணடைவான் என்று ரப்சாக்கே எதிர்பார்க்கிறான். ஆனால் எசேக்கியாவோ அசீரியரிடத்தில் சரணடையாமல், கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய், அங்கே கர்த்தரிடத்தில் சரணடைகிறான்.

அசீரியருக்கு எத்தியோப்பியா ராஜாவின் மூலமாகவும் பிரச்சனை வருகிறது. ஆகையினால் எருசலேமோடு சீக்கிரத்தில் யுத்தம்பண்ணி, அதைக் கைப்பற்றிக்கொண்டு, எத்தியோப்பியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகலாம் என்று அசீரியாவின் ராஜா தீர்மானம்பண்ணுகிறான்.

எருசலேம் நகரத்திற்கு விரோதமாக தன்னுடைய முழுசேனையையும் அனுப்பி, எருசலேமைப் பிடிக்கவேண்டும் என்பது சனகெரிப்பின் திட்டம். ஆனாலும் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினால், அசீரியருக்கும் பொருள் சேதமும் ஆள் சேதமும் உண்டாகும். தனக்கு இழப்பு வருவதை தவிர்க்கவேண்டும் என்று சனகெரிப் விரும்புகிறான்.

இதற்காக சனகெரிப் வேறு ஒரு திட்டம் வகுக்கிறான். எசேக்கியா ராஜாவுக்கு ஒரு நிருபத்தை எழுதி, அந்த நிருபத்தின் மூலமாக அவனைப் பயமுறுத்தவேண்டும் என்பது சனகெரிப்பின் திட்டம். எசேக்கியா ராஜா அந்த நிருபத்தை படித்து பயந்துபோய், தன்னிடத்தில் சரணடைவான் என்று சனகெரிப் எதிர்பார்க்கிறான்.

சனகெரிப் எசேக்கியாவுக்கு ஒரு நிருபத்தை அனுப்புகிறான். சனகெரிப்பின் அதிகாரிகள் இந்த நிருபத்தை எசேக்கியாவுக்கு கொடுக்கவேண்டும். இந்த நிருபத்தில் தூஷணமான வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. எசேக்கியா சரணடையவேண்டும் என்றும் சனகெரிப் அவனைப் பயமுறுத்துகிறான்.

"எருசலேம் அசீரியா ராஜாவின் கையில், ஒப்புக்கொடுக்கப்படுவதில்லையென்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்த ஒட்டாதே" (2இராஜா 19:10) என்று சனகெரிப் நிருபம் எழுதி அதை எசேக்கியாவுக்கு கொடுத்தனுப்புகிறான். இந்த நிருபத்தில் சனகெரிப்பைப்பற்றி உயர்வான வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. சனகெரிப்பின் சாகசங்களைப்பற்றியும் அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. இவையெல்லாமே எசேக்கியாவை பயமுறுத்துவதற்காக எழுதப்பட்டிருக்கிறது.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்கு எழுதின நிருபத்தில், "இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேட்டிருக்கிறாயே, நீ தப்புவாயோ?" (2இராஜா 19:11) என்றும்,

"என் பிதாக்கள் அழித்துவிட்ட கோசேனையும் ஆரானையும் ரேத்சேப்பையும், தெலாசாரிலிருந்த ஏதேனின் புத்திரரையும் அவர்களுடைய தேவர்கள் தப்புவித்ததுண்டோ?" (2இராஜா 19:12) என்றும்,

"ஆமாத்தின் ராஜாவும், அர்பாத்தின் ராஜாவும், செப்பர்வாயீம் ஏனா ஈவா பட்டணங்களின் ராஜாவும் எங்கே?" (2இராஜா 19:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

அசீரியா ராஜா சகல தேசங்களையும் சங்கரித்திருக்கிறான். எல்லா தேசங்களின் ராஜாக்களும் அசீரியா ராஜாவின் பெயரைக் கேட்டு பயப்படுகிறார்கள்.

அசீரியாவின் ராஜா சகல தேசங்களையும் சங்கரித்ததுபோல, சகல தேவர்களையும் சங்கரித்திருக்கிறான். சனகெரிப் தன்னை மற்ற தேசத்து ராஜாக்களைவிடவும், அவர்களுடைய தேவர்களைவிடவும் பெரியவனாக உயர்த்துகிறான். இந்த நிருபத்தைப் பார்த்து எசேக்கியா பயப்படுவான் என்றும், தன்னிடத்தில் சரணடைவான் என்றும் சனகெரிப் எதிர்பார்க்கிறான்.

எசேக்கியா ராஜா சனகெரிப்பின் நிருபத்தைப் பெற்றுக்கொள்கிறான். அவன் சிறிதும் பதட்டப்படவில்லை. சனகெரிப்புக்கு பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்னும் ஆர்வமும் அவனிடத்தில் காணப்படவில்லை. இதற்கு முன்பு ரப்சாக்கே இஸ்ரவேலின் கர்த்தரை தூஷித்ததுபோல, இப்போது சனகெரிப்பும் கர்த்தரை தூஷித்து இந்த நிருபத்தில் எழுதியிருக்கிறான்.

எசேக்கியா ஸ்தானாபதிகளின் கையிலிருந்து நிருபத்தை வாங்கி வாசித்தபின்பு, அவன் கர்த்தரின் ஆலயத்திற்குப்போய், அதைக் கர்த்தருக்கு முன்பாக விரிக்கிறான் (2இராஜா 19:14).

கர்த்தருக்கு முன்பாக சனகெரிப்பின் நிருபத்தை விரித்து காண்பித்தால்தான், கர்த்தரால் அந்த நிருபத்தை படிக்க முடியும் என்பதல்ல. கர்த்தருக்கு தெரியாத இரகசியம் எதுவுமில்லை. எசேக்கியாவின் கையிலே நிருபம் வருவதற்கு முன்பாகவே, அந்த நிருபத்தில் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார்.

எசேக்கியா சனகெரிப்பின் நிருபத்தை கர்த்தருக்கு முன்பாக விரிக்கிறான். அவன் தன்னுடைய வழிகளிலெல்லாம் கர்த்தரை அங்கீகரிக்கிறான் என்பதற்கு இதுவும் ஒரு அடையாளம். சனகெரிப் கர்த்தரை தூஷித்தான். எசேக்கியாவோ கர்த்தரை துதிக்கிறான்.

எசேக்கியா கர்த்தரை நோக்கி: "கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்" (2இராஜா 19:15) என்று சொல்லி கர்த்தரைப் போற்றிப் புகழுகிறான்.

எசேக்கியா கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது அவரை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே" என்று சொல்லுகிறான். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிறார். அந்த பரிசுத்த ஸ்தலமே இந்தப் பூமியின்மீது கர்த்தருடைய மகிமை தங்கியிருக்கும் வாசஸ்தலமாகும்.

கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாகயிருந்தாலும், அவர் ஒருவரே பூமியின் ராஜாக்களுக்கெல்லாம் தேவனாயிருக்கிறார். எசேக்கியா ராஜா கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவரை இஸ்ரவேலின் தேவனாகப் பாவித்து சொல்லுகிறான். கர்த்தர் எருசலேமிலுள்ள ஆலயத்தில் மாத்திரமே இருக்கிறார் என்று சனகெரிப் நினைக்கிறான். கர்த்தர் சர்வவியாபகர். அவரே வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். அவர் ஒரே நேரத்தில் சர்வலோகத்திலும் இருக்கிறவர்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, சனகெரிப் தேவனை நிந்தித்து சொன்ன வார்த்தைகளைப்பற்றியும் கர்த்தரிடத்தில் முறையிடுகிறான். எசேக்கியா தன்னுடைய ஜெபத்தில், "கர்த்தாவே, உமது செவியைச்சாய்த்துக் கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும்; சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளைக்கேளும்" (2இராஜா 19:16) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறான்.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்புக்கு பல தேசங்களின்மீது வெற்றி கிடைத்திருக்கிறது. இதை எசேக்கியாவும் அங்கீரிக்கிறான். சனகெரிப் அந்நிய தேவர்களை நெருப்பிலே போட்டதையும் எசேக்கியா அங்கீகரிக்கிறான். ஆனாலும் எசேக்கியாவின் பார்வையிலே, அந்நிய தெய்வங்கள் மெய்யான தெய்வங்களாகத் தெரியவில்லை. கர்த்தர் ஒருவர் மாத்திரமே மெய்யான தேவன்.

எசேக்கியா அந்நிய தேசத்து ராஜாக்களையும், அவர்களுடைய தேவர்களையும் பற்றிச் சொல்லும்போது, "கர்த்தாவே, அசீரியா ராஜாக்கள் அந்த ஜாதிகளையும் அவர்கள் தேசத்தையும் நாசமாக்கினார்கள்" (2இராஜா 19:17) என்றும்,

"அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான்; அவைகள் தேவர்கள் அல்லவே, மனுஷர் கைவேலையான மரமும் கல்லும்தானே; ஆகையால் அவைகளை நிர்த்தூளியாக்கினார்கள்" (2இராஜா 19:18) என்றும் சொல்லுகிறான்.

எசேக்கியா கர்த்தரை மகிமைப்படுத்திய பின்பு, கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய விண்ணப்பங்களை ஏறெடுக்கிறான். "இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும்" (2இராஜா 19:19) என்று எசேக்கியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான்.

சனகெரிப் ராஜா கர்த்தரைப் பார்த்து, "நீரே மெய்யான தேவன்" என்று அறிக்கை செய்யவேண்டும். "கர்த்தர் மாத்திரமே பரிசுத்தர்" என்றும், அந்நிய தேவர்களெல்லாம் பொய்யும் மாயையுமாயிருக்கிறது என்றும் சனகெரிப் அறிக்கை செய்யவேண்டும். கர்த்தர் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தும்போது, மனுஷருடைய நாவுகளெல்லாம் அவரைத் துதிக்கும்.

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய், சனகெரிப்பின் நிருபத்தை கர்த்தருக்கு முன்பாக விரித்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். கர்த்தர் தம்முடைய கிருபையினால் எசேக்கியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். எசேக்கியா அசீரியா ராஜாவாகிய சனகெரிப்பினிமித்தம், தம்மை நோக்கி பண்ணின விண்ணப்பத்தை கர்த்தர் கேட்டிருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை எசேக்கியாவுக்கு, ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய் உண்டாயிற்று. சனகெரிப்புக்கும் அவனுடைய சேனைக்கும் குழப்பமும் அவமானமும் உண்டாகும். சனகெரிப்பின் சேனை முறிந்துபோகும். அவன் தாழ்த்தப்படுவான். கர்த்தர் அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பைக் குறித்து, தம்முடைய தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலமாய், தம்முடைய வசனத்தைச் சொல்லுகிறார்.

அசீரியாவின் ராஜா சீயோன் குமாரத்தியை பயமுறுத்தலாம் என்று நினைக்கிறான். கர்த்தர் எருசலேமைக் குறித்தும், சனகெரிப்பைக் குறித்தும் சொல்லும்போது, "சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை இகழ்ந்து, உன்னைப் பரிகாசம்பண்ணுகிறாள்; எருசலேம் குமாரத்தி உன் பின்னாலே தலையைத்துலுக்குகிறாள்" (2இராஜா 19:21) என்று சொல்லுகிறார்.

சீயோன் குமாரத்திர கன்னியாஸ்திரீயாயிருக்கிறாள். சனகெரிப்போ அவளை பயமுறுத்தி, தனக்கு கீழ்ப்படியபண்ணலாம் என்று நினைக்கிறான். சீயோன் குமாரத்தி தனியாகயில்லை. அவள் தன்னுடைய பிதாவின் வீட்டில் பிதாவின் பாதுகாப்பிலிருக்கிறாள்.

சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ, தன்னை பயமுறுத்துகிற அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பை இகழுகிறாள். அவனைப் பரியாசம்பண்ணுகிறாள். எருசலேம் குமாரத்தி அவன் பின்னாலே தன்னுடைய தலையை துலுக்குகிறாள். அவனை அவமானப்படுத்துகிறாள்.

சனகெரிப் அசீரியா தேசத்திற்கு ராஜாவாயிருந்தாலும், அவன் கர்த்தருடைய சிங்காசனத்திற்கு முன்பாக பலமற்றவனாகயிருக்கிறான். பரலோகத்தில் வீற்றிருக்கிறவர். சனகெரிப்பைப் பார்த்து நகைக்கிறார். கர்த்தர் அவனைப் பார்த்து நகைக்கும்போது, அவருடைய நிழலில் அமர்ந்திருக்கிற அவருடைய ஜனத்தாரும், சனகெரிப்பைப் பார்த்து நகைப்பார்கள்.

எசேக்கியாவும், எருசலேம் நகரத்தாரும் ரப்சாக்கேயின் வார்த்தைகளைக் கேட்டும், சனகெரிப்பின் நிருபத்தை வாசித்தும் பயப்படுகிறார்கள். அவர்களுடைய பயத்தை நீக்கும் வண்ணமாக, கர்த்தர் இங்கே ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சனகெரிப் கர்த்தருடைய சத்துருவாயிருக்கிறான். அவன் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்கு இந்த நிருபத்தை எழுதியிருக்கிறான். சனகெரிப் எசேக்கியாவையும் எருசலேம் நகரத்தாரையும் தூஷித்ததாக நினைத்தான். கர்த்தரோ சனகெரிப் தன்னையே தூஷித்ததாக சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளைத் தொடுகிறவர்கள் கர்த்தரையே தொடுகிறார்கள். விசுவாசிகளைத் தூஷிக்கிறவர்கள் கர்த்தரைத் தூஷிக்கிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சனகெரிப்புக்கு விரோதமாக தம்முடைய கோபமான வார்த்தைகளை சொல்லுகிறார். கர்த்தர் சனகெரிப்பை நோக்கி, "யாரை நிந்தித்துத் தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய்? நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரரோதமாயல்லவோ உன் கண்களை மேட்டிமையாக ஏறெடுத்தாய்?" (2இராஜா 19:22) என்று கேட்கிறார்.

கர்த்தர் மகிமையுள்ளவர். அவர் சர்வவல்லமையுள்ள தேவன். விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. அவற்றிற்கு மகிமையுமில்லை. பெலமுமில்லை. சனகெரிப்புக்கு ஜீவனுள்ள தேவனுக்கும், ஜீவனில்லாத விக்கிரகங்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

சனகெரிப் சுயபெருமைக்காரனாயிருக்கிறான். அவன் மனமேட்டிமையாய்ப் பேசுகிறான். சனகெரிப்பின் மேட்டிமையான வார்த்தைகளும், நிந்தையான வார்த்தைகளும் கர்த்தரைத் தூஷிக்கும் வார்த்தைகளாயிருக்கிறது. சனகெரிப் தன்னுடைய ஸ்தானாபதிகளைக்கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நிந்தித்தான்.

சனகெரிப் தன்னுடைய பெருமையைப்பற்றி மேட்டிமையாய்ப் பேசும்போது, "என் இரதங்களின் திரளினாலே நான் மலைகளின் கொடுமுடிகளுக்கும் லீபனோனின் சிகரங்களுக்கும் வந்து ஏறினேன்; அதின் உயரமான கேதுருமரங்களையும், உச்சிதமான தேவதாரி விருட்சங்களையும் நான் வெட்டி, அதின் கடையாந்தரத் தாபரமட்டும், அதின் செழுமையான வனமட்டும் வருவேன்" (2இராஜா 19:23) என்றும்,

"நான் அந்நியதேசங்களில் கிணறுவெட்டி தண்ணீர் குடித்தேன்; என் உள்ளங்கால்களினால் அரணிப்பான இடங்களின் அகழிகளையெல்லாம் வறளவும் பண்ணினேன்" (2இராஜா 19:24) என்றும் சொல்லுகிறான்.

சனகெரிப் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாகப் பேசுகிறான். அவன் தன்னுடைய இரதங்களில் ஏறி மலைகளின் கொடுமுடிகளுக்கும், சிகரங்களுக்கும் ஏறிப்போனதாக சொல்லுகிறான். தனக்கு ஏற்பட்ட எல்லா தடைகளையும் முறித்துப்போட்டதாகவும் சனகெரிப் பெருமையோடு சொல்லுகிறான்.

கர்த்தருடைய காரியங்களையெல்லாம், சனகெரிப் தன்னுடைய காரியங்கள் என்று சொல்லுகிறான். கர்த்தர் செய்த கிரியைகளை, சனகெரிப் தன்னுடைய கிரியைகள் என்று சொல்லுகிறான். கர்த்தர் சனகெரிப்புக்கு தம்முடைய கையின் கிரியைகளை தெளிவுபடுத்துகிறார்.

கர்த்தர் சனகெரிப்பை நோக்கி, "நான் வெகுகாலத்திற்குமுன் அதைநியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத்திட்டம்பண்ணினேன் என்பதை நீ கேட்டதில்லையோ? இப்பொழுது நீ அரணான பட்டணங்களைப் பாழான மண்மேடுகள் ஆக்கும்படிக்கு நானே அதைச் சம்பவிக்கப்பண்ணினேன்" (2இராஜா 19:25) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிரியைகளினால் அரணான பட்டணங்களின் குடிகள் கையிளைத்தவர்களாகி, கலங்கி வெட்கப்பட்டு, வெளியின் பூண்டுக்கும், பச்சிலைக்கும், வீடுகளின்மேல் முளைக்கும் புல்லுக்கும், ஓங்கிவளருமுன் தீய்ந்துபோன பயிருக்கும் சமானமானார்கள் (2இராஜா 19:26).

அசீரியர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போனார்கள். இப்போது தெற்கு யூதாதேசத்தாரையும் சிறைப்பிடிப்பதற்காக வந்திருக்கிறார்கள். தங்களுடைய சுயவல்லமையினாலும், சுயபலத்தினாலும் தங்களுக்கு யுத்தங்களில் வெற்றி கிடைக்கிறது என்று அசீரியர்கள் நினைக்கிறார்கள். கர்த்தரே அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுக்கிறவர். கர்த்தர் அசீரியரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய அனுமதியில்லாமல் அசீரியரால் ஒன்றும் செய்யமுடியாது.

"அவன் என் கையின் பெலத்தினாலும், என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன்; நான் புத்திமான், நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றி, அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப்போல் குடிகளைத் தாழ்த்தினேன்" (ஏசா 10:13).

"ஒரு குருவிக்கூட்டைக் கண்டுபிடிக்கிறதுபோல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டுபிடித்தது; விட்டு விடப்பட்ட முட்டைகளை வாரிக்கொள்வதுபோல் பூமியையெல்லாம் நான் வாரிக்கொண்டேன்; ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை, வாயைத் திறந்ததுமில்லை, கீச்சென்று சத்தமிட்டதுமில்லை என்று சொல்லுகிறான்" (ஏசா 10:14).

கோடரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ? வாளானது தன்னைக் கையாடுகிறவனுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டலாமோ? பாராட்டினால், தடியானது தன்னைப் பிடித்தவனை மிரட்டினாற்போலவும், கோலானது நான் மரக்கட்டையல்லவென்று எழும்பினாற்போலவும் இருக்குமே" (ஏசா 10:15).

சனகெரிப் இஸ்ரவேலின் தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசினான். கர்த்தர் சனகெரிப்பை கடிந்து கொள்கிறார். கர்த்தர் அவனைப் பார்த்து, "உன் இருப்பையும், உன் போக்கையும், உன் வரவையும், நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன்" (2இராஜா 19:27) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். சகலமும் தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே நடைபெறும். கர்த்தர் சனகெரிப்பைக் குறித்து சொல்லும்போது, "நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம் பேசினது என் செவிகளில் ஏறினபடியினால், நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு, நீ வந்தவழியே உன்னைத் திருப்பிக்கொண்டு போவேன்" (2இராஜா 19:28) என்று சொல்லுகிறார்.

"லிவியாதானை தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக்கூடுமோ? அதின் மூக்கை நார்க்கயிறுபோட்டுக் கட்டக்கூடுமோ? குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்தக்கூடுமோ?" (யோபு 41:1,2).

தன்னை யாராலும் அடக்கவும் முடியாது, ஆளுகை செய்யவும் முடியாது என்று சனகெரிப் பெருமையோடு சொல்லுகிறான். கர்த்தர் அவனை அடக்குவார். அவனை ஆளுகை செய்வார். கர்த்தர் தம்முடைய துறட்டை சனகெரிப்பின் மூக்கிலே போடுவார். அவர் தம்முடைய கடிவாளத்தை அவனுடைய வாயிலே போட்டு, அவனை அடக்கி ஆளுகை செய்வார்.

எசேக்கியாவுக்கும் எருசலேம் நகரத்தாருக்கும் கர்த்தர் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்களுக்கு தம்முடைய இரட்சிப்பையும் சந்தோஷத்தையும் கட்டளையிடுகிறார். அவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், சிலாக்கியமும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் அவர்களோடு ஒப்புரவாகியிருக்கிறார்.

கர்த்தர் இப்போது யூதாவின் மனுஷருக்கு விரோதமாக கோபமாயில்லை. கர்த்தருடைய கோபம் இப்போது நேசமாக மாறியிருக்கிறது. ஆகையினால் யூதா மனுஷருடைய துக்கம் இனிமேல் சந்தோஷமாய் மாறும். அவர்களுடைய கண்ணீர்கள் யாவும் துடைக்கப்படும். அவர்களுக்கு சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும்.

"அக்காலத்திலே நீ சொல்வது: கர்த்தாவே, நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என்மேல் கோபமாயிருந்தீர்; ஆனாலும் உம்முடைய கோபம் நீங்கிற்று; நீர் என்னைத் தேற்றுகிறீர். இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்" (ஏசா 12:1,2).

அசீரியரின் சேனை எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். நகரத்திலே தண்ணீருக்கும் உணவுக்கும் பஞ்சமுண்டாயிற்று.

"சுகஜீவிகளாகிய ஸ்திரீகளே, எழுந்திருந்து, என் வார்த்தைகளைக் கேளுங்கள்; நிர்விசாரமான குமாரத்திகளே, என் வசனத்துக்குச் செவிகொடுங்கள். நிர்விசாரிகளே, ஒரு வருஷமும் சில நாட்களுமாய்த் தத்தளிப்பீர்கள்; திராட்சப்பலன் அற்றுப்போம்; அறுப்புக்காலம் வராது" *(ஏசா 32:9,10).*

அசீயரின் சேனையிலுள்ளவர்கள் பூமியின் கனிகளையெல்லாம் பட்சித்துப்போடுகிறார்கள். எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிறவர்களுக்கு போஜனம் கிடைக்கவில்லை.

அசீரியரின் சேனை எருசலேம் நகரத்தாரை முற்றிக்கையிட்டிருந்தாலும், கர்த்தர் எருசலேம் நகரத்தாரை ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களை சத்துருக்களின் கைகளிலிருந்து விலக்கி இரட்சிப்பார்.

கர்த்தருடைய வார்த்தை நிச்சயம் நிறைவேறும். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்திற்கு அடையாளத்தையும் சொல்லுகிறார். கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து, "உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்" *(2இராஜா 19:29)* என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் இந்த வருஷத்திலே, தப்பிப் பயிரானதை புசிப்பார்கள். இந்த வருஷத்தில் தாங்கள் விதைக்காததை புசிப்பார்கள். இவை தானாய் வளர்ந்தவை. இவற்றை இவர்கள் விதைக்காவிட்டாலும், இந்த வருஷத்தில் இவர்கள் புசிப்பார்கள்.

அடுத்த வருஷம் ஓய்வு வருஷம். யூதர்கள் ஓய்வு வருஷத்தில் விதைக்கமாட்டார்கள். ஆகையினால் இரண்டாம் வருஷமாகிய ஓய்வு வருஷத்திலே அவர்கள், விதைக்கவுமாட்டார்கள், அறுவடை செய்யவுமாட்டார்கள். நிலத்தில் ஒன்றும் பயிரிடாமல் சும்மா விட்டுவிடுவார்கள். ஓய்வு வருஷத்தில் யூதர்களுக்கு போஜனம் வேண்டும். கர்த்தரே அவர்களுக்கு போஜனம் கொடுப்பார்.

மூன்றாம் வருஷத்தில், விவசாயம்பண்ணுகிறவர்கள் தங்கள் நிலத்திற்கு வருவார்கள். அவர்கள் விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்கள் இதுவரையிலும் செய்து வந்த பிரகாரமாக, மூன்றாம் வருஷத்திலும் விதைத்து அறுப்பார்கள்.

அசீரியர்கள் யூதாதேசத்தின் பட்டணங்களைப் பிடித்து தேசத்தைப் பாழாக்கிப்போட்டார்கள். யூதாதேசத்தின் குடும்பங்களெல்லாம் நிர்மூலமாயிற்று. உயிரோடிருக்கிறவர்கள் சிதறிப்போனார்கள். யூதாதேசம் முழுவதும் குழப்பமுண்டாயிற்று. அசீயரின் சேனை யூதாதேசத்திற்குள்ளே பிரவேசித்து, எல்லாவற்றையும் நிர்மூலம்பண்ணிற்று. அங்கே சர்வமோசமும், சர்வநாசமும், சர்வசங்காரமும் உண்டாயிற்று.

யூதாதேசத்தில் இப்படிப்பட்ட பரிதாபமான நிலமை ஏற்பட்டாலும், கர்த்தர் இந்த சூழ்நிலையிலும் அவர்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தை சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து, "யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள்" *(2இராஜா 19:30)* என்று சொல்லுகிறார்.

யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் தங்கள் தேசத்தில் மறுபடியும் விதைத்து, அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். கர்த்தர் யூதாவம்சத்தாரின் ஆசீர்வாதத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் மறுபடியும், "கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள்" என்று சொல்லுகிறார்.

இந்த வாக்கியம் அவர்களுடைய ஆத்துமாவின் ஆசீர்வாதத்தையும், செழிப்பையும் விவரிக்கிறது. நம்முடைய ஆத்துமா இயேசுகிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் வேர்பற்றி, கர்த்தருக்குள் உறுதியாயிருக்கிறது. அதன் பின்பு நம்முடைய ஜீவியத்திலே நீதியின் கனிகள் வெளிப்படுகிறது.

அசீயரின் சேனை எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். எருசலேம் நகரம் அசீரியருக்கும் அடைக்கப்பட்டிருக்கிறது. எருசலேம் நகரத்தாருக்கும் அடைக்கப்பட்டிருக்கிறது. நகரத்திற்குள்ளே இருந்து ஒருவராலும் வெளியேறிப்போக முடியவில்லை. அதுபோலவே நகரத்திற்கு வெளியே இருந்து ஒருவராலும் உள்ளே பிரவேசிக்கவும் முடியவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலை மாறும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் எருசலேமின் குடிகளைப் பார்த்து, "மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலும் இருந்து புறப்படுவார்கள்; சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும்" (*2இராஜா 19:31*) என்று சொல்லுகிறார்.

எருசலேம் நகரத்தார் எல்லா இடங்களுக்கும் தாராளமாகப் புறப்பட்டுப்போவார்கள். அவர்களை தடைபண்ணுகிறவர்களோ, பயமுறுத்துகிறவர்களோ ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

அசீரியர் மூலமாக யூதாதேசத்திலும், எருசலேம் நகரத்திலும் பேரழிவு உண்டாயிற்று. ஆனாலும் இந்த அழிவுக்கு தப்பினவர்கள் இருப்பார்கள். கர்த்தர் இவர்களை, "யூதாவம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள்" என்றும், "மீதியாயிருக்கிறவர்கள், தப்பினவர்கள்" என்றும் சொல்லுகிறார்.

"இஸ்ரவேலே, உன் ஜனங்கள் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், அவர்களில் மீதியாயிருப்பவர்கள்மாத்திரம் திரும்புவார்கள்; தீர்மானிக்கப்பட்ட அழிவு நிறைந்த நீதியோடே புரண்டுவரும். சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்துக்குள்ளெங்கும் தீர்மானிக்கப்பட்ட அழிவை வரச்செய்வார்" (*ஏசா 10:22,23*).

"அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும்; அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் ஏசாயா இஸ்ரவேலரைக்குறித்துச் சொல்லுகிறான்" (*ரோம 9:27,28*).

அசீரியர்கள் எருசலேமுக்கு விரோதமாக வருகிறார்கள். எருசலேமுக்கு பேரழிவு காத்திருக்கிறது. எருசலேம் அசீரியரின் கைகளிலே விழுந்துவிடும் சூழ்நிலை வந்திருக்கிறது. அசீரியர்கள் எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைபோட்டிருக்கிறார்கள். ஆனாலும் அசீரியர்கள் எருசலேம் நகரத்திற்குள் பிரவேசிக்கமாட்டார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் அசீரியாவின் ராஜாவைக் குறித்து சொல்லும்போது, "அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்குமுன் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை. அவன் இந்த நகரத்திற்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான்" (*2இராஜா 19:32,33*) என்று சொல்லுகிறார்.

இந்தக் காரியங்களெல்லாம் யூதா தேசத்தாருடைய பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ நடைபெறாது. சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும். கர்த்தருடைய கனமும், மகிமையும், சத்தியமும் இந்தக் காரியங்களை நிறைவேற்றும்.

கர்த்தரின் வைராக்கியம் அவருடைய மகிமைக்கு ஏதுவான காரியங்களை செய்கிறது. கர்த்தர் தம்முடைய நித்திய நாமத்தின் மகிமைக்காக, அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார். கர்த்தர் தம்முடைய மகிமைக்காகவே மனுஷருக்கு கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய மகிமையான கிரியைகளைப்பற்றிச் சொல்லும்போது, "என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு, இதற்கு ஆதரவாயிருப்பேன்" *(2இராஜா 19:34)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதின் நாமமகிமைக்காக எருசலேம் நகரத்தை இரட்சிக்கவில்லை. கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவே எருசலேம் நகரத்தை இரட்சிக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு வாக்குப்பண்ணிய பிரகாரம், அவர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணிய பிரகாரம், எருசலேம் நகரத்தை இரட்சிக்கிறார்.

கர்த்தர் மகிமையான காரியங்களை செய்யும்போது அந்த மகிமையில் நாமும் பங்குபெறவேண்டும் என்று நினைக்கக்கூடாது. மகிமை கர்த்தருக்கு மாத்திரமே உரியது.

கர்த்தர் சொன்ன வார்த்தை சீக்கிரமாய் நிறைவேறுகிறது. அசீரியரின் சேனை முற்றிலுமாக அழிக்கப்படுகிறது. அசீரியருக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண, எசேக்கியா ராஜாவினிடத்தில் போதுமான எண்ணிக்கையில் இராணுவ வீரர்களும் இல்லை, போதுமான அளவு யுத்த ஆயுதங்களும் இல்லை. கர்த்தர் பட்டயத்தினாலும் அம்பினாலும் யுத்தம்பண்ணாமல், தம்முடைய வல்லமையினால் யுத்தம்பண்ணுகிறார்.

அன்று இராத்திரியில் சம்பவித்தது என்னவென்றால்: கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம்பேரைச் சங்கரிக்கிறான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடக்கிறார்கள் *(2இராஜா 19:35)*.

"அப்பொழுது வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே அசீரியன் விழுவான்; நீசனுடைய பட்டயம் அல்லாத பட்டயமே அவனைப் பட்சிக்கும்; அவன் பட்டயத்துக்குத் தப்ப ஓடுவான்; அவன் வாலிபர் கலைந்துபோவார்கள்" *(ஏசா 31:8)*.

அசீரியருடைய சேனையிலே கர்த்தர் கொள்ளை நோயை அனுப்பினார் என்று வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள். இந்தக் கொள்ளை நோயினால் அசீரியரின் சேனையிலுள்ளவர்களுக்கு உடனடியான மரணமுண்டாயிற்று. அன்று இராத்திரியில் மாத்திரம் 1,85,000 அசீரிய வீரர்கள் செத்துப்போனார்கள். அவர்களில் ரப்சாக்கேயும் செத்துப்போனான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் 76-ஆவது சங்கீதம் எழுதப்பட்டிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"தைரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்ளையிடப்பட்டு, நித்திரையடைந்து அசந்தார்கள்; வல்லமையுள்ள எல்லா மனுஷருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று" *(சங் 76:5)*.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்புக்கு மிகுந்த குழப்பமும் அவமானமும் உண்டாயிற்று. அவனுடைய பெருமையெல்லாம் அவனை விட்டு நீங்கிப்போயிற்று. சனகெரிப் தோற்றுப்போனவனாகவும், செயலிழந்தவனாகவும் இருக்கிறான். அவனுடைய சேனையில் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது செத்தப் பிரேதங்களாய்க் கிடக்கிறார்கள்.

அப்பொழுது அசீரியா ராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டு, திரும்பிப்போய் நினிவேயில் இருந்துவிடுகிறான் *(2இராஜா 19:36)*.

சனகெரிப்பின் சொந்தக்குமாரர்களே அவனை வெட்டிக்கொன்றுபோடுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். இந்த சத்தியத்தை கர்த்தர் சனகெரிப்புக்கு உணர்த்தியிருக்கிறார். சனகெரிப் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவனோ இன்னும் விக்ரகங்களை ஆராதிக்கிறான். சர்வவல்லமையுள்ள கர்த்தருக்கு விரோதமாக சனகெரிப் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

சனகெரிப் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்து கொள்ளுகிறபோது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போடுகிறார்கள் (2இராஜா 19:37).

தன்னுடைய தேவனாகிய நிஸ்ரோகு தனக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்று நினைக்கிறான். ஆனால் நிஸ்ரோகின் கோவிலிலே சனகெரிப்புக்கு மரணமுண்டாயிற்று. சனகெரிப் தன்னுடைய இரண்டு குமாரர்களையும், நிஸ்ரோகின் கோவிலிலே தகனபலியாக செலுத்த வேண்டுமென்று தீர்மானித்திருந்ததாக சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

சனகெரிப் தன்னுடைய இரண்டு குமாரராகிய அத்ரமலேக்கையும் சரேத்சேரையும் சர்வாங்க தகனமாக பலியிடுவதற்கு முன்பாக, அவனுடைய குமாரர்கள் முந்திக்கொண்டு, சனகெரிப்பை பட்டயத்தினால் வெட்டிப்போடுகிறார்கள். சனகெரிப்பின் இரண்டு குமாரரும் அரராத் தேசத்திற்கு தப்பி ஓடிப்போகிறார்கள்.

சனகெரிப்புக்கு மேலும் ஒரு குமாரன் இருக்கிறான். அவனுடைய பெயர் எசரேத்தோன். சனகெரிப்பின் குமாரனாகிய எசரேத்தோன் அவன் பட்டத்திற்கு வந்து அரசாளுகிறான். எசரேத்தோன் சனகெரிப்பைப்போல, அந்நிய தேசங்கள்மீது யுத்தம்பண்ணி, தன்னுடைய தேசத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ண வேண்டுமென்று ஆசைப்படவில்லை. அவன் அசீரிய தேசத்தை வளப்படுத்தி மேம்படுத்தும் காரியங்களை செய்கிறான். சமாரியா தேசத்திலே குடியிருப்பதற்காக எசரேத்தோன் அசீரியரை அனுப்பினான்.

"சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்று யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த சத்துருக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் செருபாபேலிடத்துக்கும் தலைவரான பிதாக்களிடத்துக்கும் வந்து; உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப்போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்; இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு அவருக்கு நாங்களும் பலி யிட்டுவருகிறோம் என்று அவர்களோடே சொன்னார்கள்" (எஸ்றா 4:1,2).

எசேக்கியாவின் வர்த்தமானங்கள்

2நாளா 32:24-33

2நாளா 32:24. அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அவன் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணும்போது, அவர் அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணி, அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார்.

2நாளா 32:25. எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்; ஆகையால் அவன்மேலும், யூதாவின்மேலும், எருசலேமின்மேலும் கடுங்கோபமுண்டது.

2நாளா 32:26. எசேக்கியாவின் மனமேட்டிமையினிமித்தம் அவனும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்தினபடியினால், கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வரவில்லை.

2நாளா 32:27. எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருந்தது; வெள்ளியும் பொன்னும் இரத்தினங்களும் கந்தவர்க்கங்களும் கேடகங்களும் விநோதமான ஆபரணங்களும் வைக்கும்படியான பொக்கிஷசாலைகளையும்,

2நாளா 32:28. தனக்கு வந்துகொண்டிருந்த தானியமும் திராட்சரசமும் எண்ணெயும் வைக்கும்படியான பண்டகசாலைகளையும், சகல வகையுள்ள மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களையும், மந்தைகளுக்குத் தொழுவங்களையும் உண்டாக்கினான்.

2நாளா 32:29. அவன் தனக்குப் பட்டணங்களைக் கட்டுவித்து ஏராளமான ஆடுமாடுகளை வைத்திருந்தான்; தேவன் அவனுக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்தார்.

2நாளா 32:30. இந்த எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி, அதின் தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்பினான்; எசேக்கியா செய்ததெல்லாம் வாய்த்தது.

2நாளா 32:31. ஆகிலும் பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனிடத்துக்கு அனுப்பப்பட்ட விஷயத்தில் அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிட்டார்.

2நாளா 32:32. எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்த நன்மைகளும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்திலும் எழுதியிருக்கிறது.

2நாளா 32:33. எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனைத் தாவீது வம்சத்தாரின் கல்லறைகளில் பிரதானமான கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள்; யூதாவனைத்தும் எருசலேமின் குடிகளும் அவன் மரித்தபோது அவனைக் கனம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருக்கும்போது அவன் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணுகிறான். அப்போது, கர்த்தர் அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணி, அவனுக்கு ஒரு அற்புதத்தைக் கட்டளையிடுகிறார் *(2நாளா 32:24).*

எசேக்கியாவின் பாவத்தைப்பற்றியும், அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினது பற்றியும், இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சம்பவம் 2இராஜா 20:12-ஆவது வசனப்பகுதியிலிருந்து, விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருக்கிறது; வெள்ளியும் பொன்னும் இரத்தினங்களும் கந்தவர்க்கங்களும் கேடகங்களும் விநோதமான ஆபரணங்களும் வைக்கும்படியான பொக்கிஷசாலைகளையும், தனக்கு வந்துகொண்டிருந்த தானியமும் திராட்சரசமும் எண்ணெயும் வைக்கும்படியான பண்டகசாலைகளையும், சகல வகையுள்ள மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களையும், மந்தைகளுக்குத் தொழுவங்களையும் உண்டாக்குகிறான் *(2நாளா 32:27,28).*

எசேக்கியா தனக்குப் பட்டணங்களைக் கட்டுவித்து ஏராளமான ஆடுமாடுகளை வைத்திருக்கிறான்; தேவன் அவனுக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்திருக்கிறார் *(2நாளா 32:29).*

எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி, அதின்தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்புகிறான்; எசேக்கியா செய்ததெல்லாம் வாய்க்கிறது *(2நாளா 32:30).*

எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையாகிறான்; ஆகையால் அவன்மேலும், யூதாவின்மேலும், எருசலேமின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமூளுகிறது *(2நாளா 32:25).*

எசேக்கியாவின் மனமேட்டிமையினிமித்தம் அவனும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்தினபடியினால், கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வரவில்லை *(2நாளா 32:26).*

பாபிலோன் பிரபுக்களின் ஸ்தானபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க எசேக்கியாவினிடத்துக்கு அனுப்பப்பட்டார்கள். இந்த விஷயத்தில் எசேக்கியாவின் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனைச் சோதிக்கிறதற்காக தேவன் அவனைக் கைவிடுகிறார் *(2நாளா 32:31).*

கர்த்தருடைய தூதன் அசீரியருடைய சேனையை அதம்பண்ணினான். இது யூதாதேசத்தில் நடந்த மிகப்பெரிய அற்புதம். எசேக்கியா வியாதிப்பட்டிருந்தபோது, கர்த்தர் அவனுக்கு ஒரு அற்புதத்தை கட்டளையிட்டார். சூரியகடிகாரத்தின் பாகை பின்னிட்டுச்சென்றது. இதுவும் ஒரு அற்புதம். யூதாதேசத்தில் நடந்த அற்புதங்களைக் கேட்பதற்காக பாபிலோன் ராஜா, தன்னுடைய பிரபுக்களின் ஸ்தானாபதிகளை எசேக்கியாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

அசீரியர்கள் பாபிலோன் தேசத்தாருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். யூதாதேசத்திற்கு விரோதமான யுத்தத்திலே அசீரியர்கள் தோற்றுப்போன செய்தியைக் கேட்டு, பாபிலோன் ராஜா சந்தோஷப்படுகிறான். அவர்கள் எவ்வாறு தோல்வியடைந்தார்கள் என்பதை விசாரித்து அறிந்துகொள்ள விரும்புகிறான். இதற்காக பாபிலோன் ராஜா தன்னுடைய பிரபுக்களின் ஸ்தானாபதிகளை எசேக்கியாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

சூரியன் பாபிலோனியரின் தெய்வம். கர்த்தர் சூரியகடிகாரத்தின் பாகையை பின்னிட்டு திரும்பச் செய்து, எசேக்கியாவுக்கு ஒரு அற்புதத்தை கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தர் சூரியனை பின்னிட்டு திரும்பச் செய்து, எசேக்கியாவை மேன்மைப்படுத்தியிருக்கிறார். பாபிலோன் ராஜா இந்த அற்புதத்தைப்பற்றியும் விசாரிப்பதற்காக, தன்னுடைய பிரபுக்களின் ஸ்தானாபதிகளை எசேக்கியாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

தன்னுடைய ராஜஅரண்மனைக்கு, பாபிலோன் ராஜாவின் ஸ்தானாபதிகள் வந்து, தன்னை விசாரிப்பதை பார்த்து, எசேக்கியா மனமேட்டிமையாகிறான். கர்த்தர் பல சந்தர்ப்பங்களில் எசேக்கியாவை உயர்த்தியிருக்கிறார். அவனுக்கு ஏராளமான உபகாரங்களை செய்திருக்கிறார். ஆனால் எசேக்கியாவோ, கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளுக்குத்தக்கதாய், தன்னை தாழ்த்தாமல், மனமேட்டிமையாயிருக்கிறான்.

எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருக்கிறது. அந்நியதேசத்தார் எல்லோரும் அவனுக்கு வெகுமதிகளைக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். இதன் மூலமாகவும் எசேக்கியாவின் மனம் மேட்டிமையடைகிறது. எசேக்கியா யூதாதேசத்திலே புறஜாதியாரின் விக்கிரகங்களையும் அகற்றினான். ஆனால் இப்போதோ அவன் தன்னைத்தானே ஒரு விக்கிரகமாக்குகிறான்.

கர்த்தர் நமக்கு செய்த உபகாரத்திற்குத்தக்கதாய், நம்மால் அவருக்கு பிரதிஉபகாரம் செய்யமுடியாது. நாம் கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மையாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செய்த உபகாரங்களை நினைத்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். ஆனால் எசேக்கியாவோ மனமேட்டிமையாயிருக்கிறான். இதனால் கர்த்தருடைய கடுங்கோபம் அவன்மேல் வருகிறது.

எசேக்கியாவின் மனமேட்டிமையினிமித்தம் அவனும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்துகிறார்கள். ஆனபடியினால், கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வரவில்லை *(2நாளா 32:26).*

எசேக்கியாவின் வர்த்தமானங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எசேக்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமும் உண்டாயிருக்கிறது. எசேக்கியா கீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி, அதின்தண்ணீரை மேற்கேயிருந்து தாழத் தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்புகிறான் *(2நாளா 32:30).*

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் கீயோன் என்னும் ஆற்றைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

"இரண்டு மதில்களுக்கு நடுவே பழைய குளத்துத் தண்ணீர்களுக்கு ஒரு அகழை உண்டுபண்ணுவீர்கள்; ஆனாலும் அதைச் செய்தவரை நீங்கள் நோக்காமலும், அதை ஏற்படுத்தித் தூரத்திலிருந்து வரப்பண்ணினவரைக் கவனியாமலும் போகிறீர்கள்" (ஏசா 22:11).

"அப்பொழுது கர்த்தர் ஏசாயாவை நோக்கி: நீயும் உன் மகன் சேயார் யாசூபுமாக வண்ணார் துறைவழியிலுள்ள மேற்குளத்து மதகின் கடைசி மட்டும் ஆகாசுக்கு எதிர்கொண்டு போ" (ஏசா 7:3).

"நீங்கள் தாவீது நகரத்தின் இடிதல்கள் அநேகமாயிருப்பதைக் கண்டு, கீழ்க்குளத்துத் தண்ணீர்களை கட்டி வையுங்கள்" (ஏசா 22:9)

எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்த நன்மைகளும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்திலும் எழுதியிருக்கிறது (2நாளா 32:32).

எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனைத் தாவீது வம்சத்தாரின் கல்லறைகளில் பிரதானமான கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள்; யூதாவனைத்தும் எருசலேமின் குடிகளும் அவன் மரித்தபோது அவனைக் கனம்பண்ணுகிறார்கள்; எசேக்கியாவின் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2நாளா 32:33).

எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாயிருக்கிறான். எசேக்கியாவின் வியாதியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 2இராஜா 20-ஆவது அதிகாரத்தில் இந்த சம்பவம் விரிவாகச் சொல்லப்படுகிறது. எசேக்கியாவின் வியாதி மிகவும் கடுமையானது. அது அவனுடைய மரணத்திற்குகேதுவாயிருக்கிறது.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைத் தூஷித்தான். இதனால் அவன் ஜீவனுக்கேதுவாயிருக்கும்போது, அவனுக்கு மரணமுண்டாயிற்று.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை துதிக்கிறான். அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாகயிருந்தாலும், வியாதி நீங்கி பிழைத்துக்கொள்கிறான்.

எசேக்கியாவின் வியாதியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வியாதி அவனுக்கு "அந்நாட்களில்" வந்திருக்கிறது. "அந்நாட்களில்" என்னும் வார்த்தைக்கு, "அசீரியாவின் ராஜா எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்ட வருஷத்தில் என்று பொருள்.

அசீரியரின் சேனை எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டபோதோ அல்லது, அவர்கள் நகரத்தை முற்றிக்கையிடுவதற்கு ஆயத்தம்பண்ணியபோதோ, எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாயிருந்தான் என்றும் சரித்திர ஆசிரியர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

அசீரியரின் சேனை எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டபோது, கர்த்தருடைய தூதனானவர் அவர்களை அடித்தார். அவர்களில் 1,85,000 பேர் ஒரே இராத்திரியிலே செத்த பிரேதங்களாகக் கிடக்கிறார்கள். சனகெரிப் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாமல், தோற்றுப்போய், அவமானத்தோடு திரும்பிப்போகிறான். இந்த சந்தர்ப்பத்தில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாயிருக்கிறான் என்றும் சரித்திர ஆசிரியர்களில் சிலர் சொல்லுகிறார்கள்.

அசீரியரின் சேனையில் கொள்ளைநோய் வந்தது. இந்தக் கொள்ளையின் பாதிப்பு எசேக்கியா ராஜாவுக்கும், எருசலேம் நகரத்திலுள்ள பலருக்கும் வந்திருக்கவேண்டும் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். எசேக்கியாவின் சரீரத்தில் பிளவை ஏற்பட்டிருக்கிறது. இதே வியாதியே, அசீரியரின் சேனையில் 1,85,000 பேரைக் கொன்றுபோட்டது.

எசேக்கியா பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கிறான். அவன் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறான். ஆனாலும் எசேக்கியாவுக்கு வியாதி வந்திருக்கிறது. இந்த வியாதியும் சாதாரண வியாதியாயிராமல், இது அவனுடைய மரணத்திற்கு ஏதுவான வியாதியாயிருக்கிறது.

அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருக்கிறான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: "நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றார் (2இராஜா 20:1).

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவினிடத்தில் வருகிறார். எசேக்கியாவுக்கு வந்திருக்கிற வியாதி மிகவும் கொடிய வியாதி என்றும், அது அவனுடைய மரணத்திற்கு ஏதுவான வியாதி என்றும் சொல்லுகிறார். கர்த்தருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், அற்புதத்தினாலும் மாத்திரமே, எசேக்கியாவின் வியாதி குணமாகும். இல்லையென்றால் எசேக்கியா பிழைக்கமாட்டான். அவன் மரித்துப்போவான்.

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவைப் பார்த்து, "நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லுகிறார். எசேக்கியா மரித்துப்போக ஆயத்தமாயிருக்கவேண்டும்.

ஏசாயா எசேக்கியாவின் மரண ஆயத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தும்" என்றும் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, "நீர் உம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, மரிப்பதற்கு ஆயத்தமாயிரும்" என்று பொருள்.

எசேக்கியாவின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக செம்மையானதாயிருக்கவேண்டும். அவனுடைய இருதயத்தில் அசுத்தங்கள் இருக்குமென்றால், அந்த அசுத்தங்கள் நீக்கப்பட்டு, அவருடைய இருதயம் சுத்திகரிக்கப்படவேண்டும். எசேக்கியா தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவனுடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும்.

எசேக்கியா கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தினாலும், கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதினாலும், தன்னுடைய மரணத்தை சந்திக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் ஐக்கியமாயிருக்கிறவர்கள் இந்த உலகத்தை விட்டுப்பிரிந்துபோக எப்போதுமே ஆயத்தமாயிருப்பார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்துபோகும்போது, மிகவும் சந்தோஷமாகப் பிரிந்துபோவார்கள். அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தைவிட அதிக மகிமையான பரலோகத்திலே பிரவேசிக்கப்போகிறார்கள்.

எசேக்கியா பரலோகத்திற்குப்போகும் சந்தோஷத்திலே, தன்னுடைய வீட்டுக்காரியத்தை ஒழுங்குபடுத்தவேண்டும். தன்னுடைய மனதின் விருப்பங்களையெல்லாம், தன்னுடைய பின்சந்ததியாருக்கு சொல்லவேண்டும். எசேக்கியா தன்னுடைய பொக்கிஷங்களையும், சொத்துக்களையும் தன்னுடைய வாரிசுகளுக்கு பிரித்துக்கொடுக்கவேண்டும்.

எசேக்கியா தன்னுடைய வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்திவிட்டு மரித்துப்போனால், அவன் செத்த பின்பு, அவனுடைய பின்சந்ததியார் மத்தியிலே குழப்பம் இருக்காது. எசேக்கியா தன் வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்தாமலேயே செத்துப்போனால், அவனுடைய வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்துவதில், அவனுடைய வீட்டார் மத்தியிலே குழப்பமும், பிரச்சனைகளும், சண்டைகளும், மனவருத்தங்களும் வருவதற்கு வாய்ப்புள்ளது.

எசேக்கியா கர்த்தருடைய வார்த்தையை கேட்டபோது, தன் முகத்தை சுவர்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுகிறான். நாம் வியாதியாயிருக்கும்போது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும்.

எசேக்கியாவுக்கு இதற்கு முன்பு பல பிரச்சனைகள் வந்திருக்கிறது. அப்போதெல்லாம் எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவது வழக்கம். கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்திற்கு பதில் கொடுப்பார். அவனுக்கு சமாதானமும், ஆறுதலும் உண்டாகும்.

இப்போதோ கர்த்தருடைய வார்த்தை எசேக்கியாவுக்கு விரோதமாக வந்திருக்கிறது. ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து, "நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லுகிறார். கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மாறும் என்று எசேக்கியா நம்புகிறான்.

கர்த்தர் ஒருவேளை தம்முடைய நியாயத்தீர்ப்பை மாற்றாவிட்டாலும், எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, மரணத்தை சந்திக்க ஆயத்தமாகிறான். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெபம் மிகவும் முக்கியமானது. ஜெபிக்கிறவர்களால் மாத்திரமே, கர்த்தருடைய சித்தத்தை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள முடியும்.

தான் பிழைத்தாலும், மரித்தாலும் கர்த்தருடைய கிருபை தனக்கு வேண்டுமென்று எசேக்கியா ஜெபம்பண்ணுகிறான். கர்த்தர் தனக்கு கிருபையையும் பெலத்தையும் கொடுக்கவேண்டும் என்றும், கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை ஓடி முடிக்க, கர்த்தரே தனக்கு உதவி செய்யவேண்டும் என்றும் எசேக்கியா ஜெபம்பண்ணுகிறான்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, தன் முகத்தை சுவர்புறமாக திருப்பிக்கொண்டு, ஜெபம்பண்ணுகிறான். இந்த சந்தர்ப்பத்தில் எசேக்கியா ஒருவேளை, தன்னுடைய படுக்கையில் படுத்தபடி ஜெபித்திருக்கலாம்.

எசேக்கியா இப்போது வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாகப் படுத்திருக்கிறான். அவன் மரணப்படுக்கையிலிருக்கும்போது, அவனால் கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய், அங்கே கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண முடியாது. ஆகையினால் எசேக்கியா, தான் வியாதிப்பட்டு படுத்திருக்கும் கட்டிலில் படுத்திருந்தவாறே, கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறான்.

எசேக்கியா தன்னுடைய படுக்கையில் வியாதியாய் படுத்திருக்கும்போது, அவனுக்கு மருத்துவ சிகிச்சை செய்யவும், சேவை செய்யவும் ஒரு சிலர் அமர்த்தப்பட்டிருப்பார்கள். எசேக்கியாவோ அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, அந்த அறையிலே தனியாகயிருந்து, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான்.

எசேக்கியா, "தன் முகத்தை சுவர்புறமாக திருப்பிக்கொண்டு" ஜெபம்பண்ணினான் என்னும் வார்த்தைக்கு, அவன் "தன் முகத்தை கர்த்தருடைய ஆலயத்தின் பக்கமாய்த் திருப்பிக்கொண்டு" ஜெபம்பண்ணினான் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

எசேக்கியாவுக்கு நல்ல சரீர ஆரோக்கியம் இருந்திருந்தால், அவன் நிச்சயமாகவே கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய் அங்கே ஜெபித்திருப்பான். இதற்கு முன்பு எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திலே போய், பலதரம் ஜெபித்திருக்கிறான்.

"ராஜவாகிய எசேக்கியா அதைக்கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்திக்கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்தான்" *(2இராஜா 19:1)*.

"எசேக்கியா ஸ்தானாபதிகளின் கையிலிருந்து நிருபத்தை வாங்கி வாசித்தபின்பு, அவன் கர்த்தரின் ஆலயத்திற்குப்போய், அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்தான்" *(2இராஜா 19:14)*.

ஆனால் இப்போதோ எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருக்கிறான். அவனால் ஆலயத்திற்குப்போய் ஜெபிக்க முடியவில்லை. ஆகையினால் தான் வியாதிப்படுக்கையாக படுத்திருக்கும் கட்டிலில் படுத்துக்கொண்டு, கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது "மிகவும் அழுகிறான்" இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது, எசேக்கியா சாகவிரும்பவில்லை என்பதுபோல தெரிகிறது. இது மனுஷருடைய பொதுவான சுபாவம். மரணம் என்பது மனுஷனுடைய ஆத்துமாவும் சரீரமும் பிரியும் நிலமை. இந்த பிரிவை அதாவது சரீர மரணத்தை மனுஷர் பொதுவாக விரும்புவதில்லை.

ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து, "நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லுகிறார். ஏசாயா இந்த வார்த்தைகளை எசேக்கியாவுக்கு சொல்லும்போது, எசேக்கியா தன்னுடைய ஜீவியத்தின் முக்கியமான பகுதியிலிருக்கிறான். அவன் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஆரம்பித்திருக்கிறான். எசேக்கியா ஆரம்பித்த நல்ல காரியங்கள் இன்னும் முடிவு பெறவில்லை. எல்லாம் பாதியிலே இருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில், தான் மரித்துப்போனால், தான் ஆரம்பித்த ஊழியம் பாதியிலேயே நின்றுவிடுமோ என்று எசேக்கியா வேதனையோடு நினைத்துப் பார்க்கிறான். ஜனங்கள் விக்கிரகாராதனையிலும், துன்மார்க்கத்திலும் நிலைத்திருப்பார்களோ என்னும் சந்தேகமும் எசேக்கியாவுக்கு உண்டாயிற்று. எசேக்கியா மரித்துப்போனால், யூதாதேசத்தார் மத்தியிலே, அவன் ஆரம்பித்து வைத்த நல்ல ஊழியங்களும் அப்படியே நின்றுபோகும். இதன் நிமித்தமாகவே, எசேக்கியா தன்னுடைய மரணத்தை நினைத்து, மிகவும் அழுகிறான்.

எசேக்கியாவுக்கு மரணத்தைக் குறித்து பயமில்லை. யூதாஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் போய்விடுவார்களோ என்னும் பயமே அவனுடைய மனதிலிருக்கிறது.

எசேக்கியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது "ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்" *(2இராஜா 20:3)* என்று விண்ணப்பம்பண்ணுகிறான்.

கர்த்தர் தனக்கு ஜீவனைக் கொடுத்தால், எசேக்கியா கர்த்தருடைய வழியில் நடக்க விரும்புகிறான். யூதாதேசத்திலே தான் ஆரம்பித்து வைத்த மறுமலர்ச்சியின் ஊழியங்களை தொடர்ந்து செய்யவேண்டுமென்று விரும்புகிறான். கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை தொடர்ந்து மகிமைப்படுத்த விரும்புகிறான்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "கர்த்தாவே என்னை மரணத்திற்கு ஒப்புக்கொடாதேயும்" என்றோ, அல்லது "கர்த்தாவே என்னுடைய ஜீவனை எடுத்துக்கொள்ளும்" என்றோ, அல்லது, "கர்த்தாவே, உம்முடைய சித்தம் ஆகக்கடவது"என்றோ ஜெபம்பண்ணவில்லை. எசேக்கியா இதுபோல ஜெபம்பண்ணாமல், "கர்த்தாவே என்னை நினைத்தருளும்" என்றும், "நான் ஜீவனோடிருக்க வேண்டுமா அல்லது நான் மரிக்கவேண்டுமா என்பதே நீர் தீர்மானம்பண்ணும்" என்றும், "நான் மரித்தாலும் ஜீவனோடிருந்தாலும், நான் உம்முடையவனாகவே இருப்பேன்" என்றும் ஜெபம்பண்ணுகிறான்.

எசேக்கியாவின் ஜெபத்திற்கு கர்த்தர் உடனே பதில் கொடுக்கிறார். ஏசாயா எசேக்கியாவுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லிவிட்டு, பாதி முற்றத்தை விட்டு அப்புறம் போகிறதற்கு முன்னே, கர்த்தருடைய வார்த்தை ஏசாயாவுக்கு உண்டாயிற்று. இந்த வார்த்தை ஏசாயா எசேக்கியாவுக்கு சொல்ல வேண்டிய வார்த்தை *(2இராஜா 20:4)*.

கர்த்தர் ஏசாயாவை நோக்கி, "நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய்" *(2இராஜா 20:5)* என்றும்,

"உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என்நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின்நிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல்" என்கிறார் (2இராஜா 20:6).

எசேக்கியா கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணியபோது, கர்த்தர் அவனுக்கு தம்முடைய கிருபையான பதிலை சொல்லுகிறார். எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவில்லையென்றால், அவனுக்கு கர்த்தருடைய கிருபை கிடைத்திருக்காது.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் எசேக்கியாவைப்பற்றிச் சொல்லும்போது, "என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியா" என்று சொல்லுகிறார். எசேக்கியா கர்த்தருடைய நாமத்தினால், கர்த்தருடைய ஜனங்களை ஆளுகை செய்கிறான். அவன் கர்த்தருக்காக ஆளுகை செய்கிறான்.

கர்த்தர் இந்த வசனப்பகுதியில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணினார். இந்த உடன்படிக்கை, தாவீதின் சந்ததியில் வந்திருக்கிற எல்லோருக்கும் உரியது.

கர்த்தர் எசேக்கியாவின் ஜெபத்தை அங்கீகரித்து கனம்பண்ணுகிறார். எசேக்கியா தம்மிடத்தில் ஜெபம்பண்ணியதைப்பற்றி கர்த்தர் சொல்லும்போது, "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்" என்று சொல்லுகிறார்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "என்னை நினைத்தருளும்" என்று மாத்திரமே விண்ணப்பம்பண்ணினான். கர்த்தரோ அவன் வேண்டிக்கொண்டதற்கும் அதிகமாக அவனுக்கு நன்மைகளை செய்கிறார். எசேக்கியா தமக்கு முன்பாக உண்மையும் மனஉத்தமமுமாய் நடந்ததையும், தமது பார்வைக்கு அவன் நலமானதை செய்ததையும் கர்த்தர் நினைவுகூருகிறார். அதோடு தம்முடைய ஆசீர்வாதமான நான்கு வாக்குத்தத்தங்களையும் அவனுக்கு சொல்லுகிறார். அவையாவன :

1. கர்த்தர் எசேக்கியாவை நோக்கி, "இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்" என்று சொல்லுகிறார்.

2. எசேக்கியாவின் ஆரோக்கியம் அவனுக்கு திரும்ப கொடுக்கப்படும். கர்த்தர் அவனை நோக்கி, "மூன்றாம் நாளிலே, நீ கர்த்தருடைய ஆலயத்திற்கு போவாய்" என்று சொல்லுகிறார்.

3. கர்த்தர் எசேக்கியாவின் ஆயுசுவருஷங்களைக் கூட்டுகிறார். கர்த்தர் எசேக்கியாவை நோக்கி, "உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்" என்று சொல்லுகிறார்.

4. எசேக்கியா எருசலேம் நகரத்தை அசீரியாவின் கைகளுக்கு தப்புவிப்பான்.

எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, இந்தக் காரியங்களெல்லாம் அவனுடைய இருதயத்திலிருந்தது. தான் மரித்துப்போனால், இந்தக் காரியங்களை தன்னால் நிறைவேற்ற முடியாது என்னும் ஏக்கமும் அவனுக்குள் காணப்பட்டது. கர்த்தர் எசேக்கியாவின் மனவிருப்பத்தை நிறைவேற்றுகிறார்.

ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவைக் குணப்படுத்துவதற்கு அத்திப்பழத்து அடையைப் பயன்படுத்துகிறார். ஏசாயாவே எசேக்கியாவின் மருத்துவர். ஏசாயா எசேக்கியா ராஜாவின் ஊழியக்காரரைப் பார்த்து, "அத்திப்பழத்து அடையைக் கொண்டுவாருங்கள்" என்று சொல்லுகிறார்; அதை அவர்கள் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது எசேக்கியா பிழைக்கிறான் (2இராஜா 20:7).

நாம் வியாதியிலிருக்கும்போது, இயற்கையிலே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மருந்துகளைப் பயன்படுத்துவது தவறல்ல. நாம் கர்த்தரை சோதிக்கக்கூடாது. கர்த்தரே நம்மைக் குணப்படுத்துகிறவர். அவரே நம்முடைய பரமவைத்தியர். கர்த்தர் மனுஷருடைய வியாதிகளை குணமாக்குவதற்கு, மருந்துகளையும், மருத்துவ சிகிச்சைகளையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்.

மனுக்குலத்திற்கு கிருபையாகக் கொடுக்கப்பட்டிருக்கிற மருத்துவ சிகிச்சைகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். நாம் மருந்துகளை எடுத்துக்கொண்டாலும், மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டாலும், கர்த்தரே நம்மைக் குணப்படுத்துகிறவர் என்னும் சத்தியத்தை மறந்துவிடக்கூடாது.

எசேக்கியா ஏசாயாவை நோக்கி: "கர்த்தர் என்னைக் குணமாக்குவதற்கும், மூன்றாம்நாளிலே நான் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவதற்கும் அடையாளம் என்ன" (2இராஜா 20:8) என்று கேட்கிறான்.

எசேக்கியா கர்த்தருடைய வல்லமையையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் சந்தேகப்படவில்லை. அவன் கர்த்தருடைய வார்த்தைகளை நம்புகிறான். எசேக்கியா நினைத்ததற்கும், வேண்டிக்கொண்டதற்கும் அதிகமாக, கர்த்தர் அவனுக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். இவ்வளவு பெரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, தான் எவ்வளவேனும் பாத்திரனல்ல என்று எசேக்கியா தன்னைக்குறித்து மிகுந்த மனத்தாழ்மையோடு நினைக்கிறான்.

தனக்கு சொல்லப்பட்ட கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயமாய் நிறைவேறும் என்பதை எசேக்கியா நம்புகிறான். ஆனாலும் அதை ஒரு அடையாளத்தின் மூலமாய் உறுதிபண்ணிக்கொள்ள விரும்புகிறான். அவன் ஏசாயாவிடம், "கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும் என்பதற்கு அடையாளம் என்ன" என்று கேட்கிறான்.

"கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்திற்கு தான் போவேன் என்பதற்கு என்ன அடையாளம்" என்றோ அல்லது "எருசலேம் நகரத்தின் வாசலுக்கு நான் போவேன் என்பதற்கு என்ன அடையாளம்" என்றோ எசேக்கியா கேட்கவில்லை. அதற்கு பதிலாக, "மூன்றாம் நாளிலே நான் கர்த்தருடைய ஆலயத்திற்குப்போவேன் என்பதற்கு அடையாளம் என்ன" என்று எசேக்கியா கேட்கிறான்.

தான் வியாதி நீங்கி பிழைக்கும்போது, எசேக்கியா கர்த்தரை மகிமைப்படுத்த விரும்புகிறான். எசேக்கியா சீயோன் குமாரத்தியின் வாசல்களிலே, கர்த்தரை ஆராதிக்க விரும்புகிறான். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கும் காலமெல்லாம் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். கர்த்தரை ஆராதிக்கவேண்டும் என்னும் நோக்கமில்லாமல், வேறு எந்த நோக்கத்திற்காகவும், நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிப்பதினால், ஒரு பிரயோஜனமுமில்லை.

எசேக்கியா ஏசாயாவினிடத்தில் அடையாளத்தைக் கேட்கிறான். ஏசாயா அவனை நோக்கி, "கர்த்தர் தாம் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்கு, கர்த்தரால் உனக்கு உண்டாகும் அடையாளமாகச் சாயை பத்துப்பாகை முன்னிட்டுப் போகவேண்டுமோ, பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டுமோ" (2இராஜா 20:9) என்று கேட்கிறார்.

சூரியகடிகாரத்தின் சாயை அரைமணி நேரத்திற்கு ஒரு தரம், ஒரு பாகை முன்னிட்டுப்போகும். இந்தப் பாகை முன்னிட்டுப்போகவேண்டுமா அல்லது பின்னிட்டுத் திரும்பவேண்டுமா என்று ஏசாயா கேட்கிறார். ஏசாயா எசேக்கியாவினிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, அது மதியவேளை என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இப்போது நேரம் நடுப்பகல் பன்னிரண்டு மணியாயிருக்கிறது.

சாயை பத்துப்பாகை முன்னிட்டுப்போனால், அப்போது நேரம் மாலை ஐந்து மணியாகயிருக்கும். சாயை பத்துப்பாகை பின்னிட்டுப்போனால், அப்போது நேரம் காலை ஏழு மணியாக இருக்கும்.

எசேக்கியா ஏசாயா தீர்க்கதரிசியை நோக்கி, "சாயை பத்துப்பாகை முன்னிட்டுப்போகிறது லேசானகாரியம்; அப்படி வேண்டாம்; சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவேண்டும்" (2இராஜா 20:10) என்று கேட்கிறான்.

சாயை பத்துப்பாகை முன்னிட்டுப்போவதும், அது பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பவுதும் அற்புதமான காரியம்தான். பாகை முன்னிட்டுப்போவது, இயற்கையில் நடைபெறுகிற சாதாரண விஷயம். பாகை பின்னிட்டுப்போவதோ மிகவும் அசாதாரணமான காரியம்.

சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்போது, எசேக்கியாவின் வயது குறைந்து, அவன் வாலிபத்தின் சரீர பலத்தைப் பெற்றுக்கொள்வான். எசேக்கியாவின் ஆயுசு காலமும் அதிகரிக்கும்.

"அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப்பார்க்கிலும் ஆரோக்கியமடையும்; தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்" *(யோபு 33:25)*.

எசேக்கியா கேட்டுக்கொண்ட பிரகாரமே கர்த்தர் அற்புதம் செய்கிறார். ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கி கூப்பிடுகையில், இந்த அற்புதம் நடைபெறுகிறது.

ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்கிறார் *(2இராஜா 20:11)*.

எசேக்கியா இப்போது வியாதியாய்ப் படுத்திருக்கிறான். பத்துப்பாகை திரும்பிப்போவதை, எசேக்கியா தான் படுத்திருக்கும் அறையின் ஜன்னலிலிருந்து பார்க்கிறான். எருசலேமில் வைக்கப்பட்டிருக்கிற ஆகாசின் சூரிய கடிகாரத்தின் சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்புகிறது.

எருசலேமிலே மதியம் பன்னிரண்டு மணியாக இருந்தது, காலை ஏழு மணியாயிற்று. இதுபோன்ற நேரமாற்றம் பூமி முழுவதும் உண்டாயிற்று. பாபிலோன் தேசத்திலுள்ளவர்களும், இந்த மாற்றத்தை உணருகிறார்கள். அந்த தேசத்திலும் மதியம் பன்னிரண்டு மணியாகயிருந்தது, காலை ஏழு மணியாயிற்று.

"எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்த நன்மைகளும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலும், யூதா இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்திலும் எழுதியிருக்கிறது" *(2நாளா 32:31)*.

நடுவானத்தில் இருந்த சூரியன் சிறிது சிறிதாக பின்னிட்டுத் திரும்பியதா அல்லது திடீரென்று பத்துப்பாகை திரும்பியதா என்னும் விவரம் நமக்கு சொல்லப்படவில்லை. பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பிய பின்பு, சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டு, சிறிது நேரத்திற்கு பின்பு, மறுபடியும் மொத்தமாக பத்துப்பாகை முன்னிட்டுப்போனதா என்பதும் நமக்கு சொல்லப்படவில்லை.

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்திற்கு ஏதுவாயிருந்த காலத்திலும், கர்த்தர் தமது கிருபையினால் அவனை குணப்படுத்தின காலத்திலும் பலாதானின் குமாரனாகிய பெரோதாக்பலாதான் என்பவன் பாபிலோன் தேசத்து ராஜாவாயிருக்கிறான். இவன் எசேக்கியா வியாதிப்பட்டிருக்கிறதைக் கேட்டு, அவனிடத்துக்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்புகிறான் *(2இராஜா 20:12)*.

பாபிலோனின் ராஜாக்கள் இதுவரையிலும் அசீரியாவின் ராஜாக்களுக்கு கப்பம் கட்டி வந்தார்கள். நினிவே பாபிலோன் தேசத்தின் ராஜதானி பட்டணமாயிருக்கிறது. அசீரியாவின் ராஜாவுக்கு பாபிலோனியர் கீழ்ப்படிந்து, கட்டுப்பட்டு அடிமைகளாயிருந்தார்கள்.

"அசீரியா ராஜா, பாபிலோனிலும், கூத்தாவிலும், ஆபாவிலும், ஆமாத்திலும், செப்பர்வாயிமிலும் இருந்து மனுஷரை வரப்பண்ணி, அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்குப் பதிலாகச் சமாரியாவின் பட்டணங்களிலே குடியேற்றினான்; இவர்கள் சமாரியாவைச் சொந்தமாய்க் கட்டிக்கொண்டு அதின் பட்டணங்களிலே குடியிருந்தார்கள்" *(2இராஜா 17:24)*.

சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பியதுபோல, இக்காலத்தில் ஒரு சில அரசியல் மாற்றங்களும் உண்டாயிற்று. இதுவரையிலும் பாபிலோனின் ராஜாக்கள் அசீரியருக்கு கீழ்ப்படிந்திருந்தார்கள். இப்போதோ அசீரியர்கள் பாபிலோனின் ராஜாக்களுக்கு கீழ்ப்படிகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு குணமடைந்திருக்கிறான். அவன் வியாதிப்பட்டிருக்கிறதைக் கேட்டு, பாபிலோன் ராஜா அவனுக்கு நிருபங்களையும் வெகுமதிகளையும் அனுப்புகிறான். பாபிலோன் ராஜா எசேக்கியாமீது பிரியமாயிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன: 1. மார்க்கப்பிரகாரமான காரணம். 2. அரசியல் ரீதியான காரணம்.

பாபிலோனியர் சூரியனை தங்கள் தெய்வமாக நம்புகிறார்கள். எசேக்கியா தன் வியாதி நீங்கி குணமடையும்போது, கர்த்தர் சூரியனின் பாகையிலே ஒரு மாற்றத்தை உண்டுபண்ணுகிறார். எசேக்கியாவின் நிமித்தமாக, சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்புகிறது. எசேக்கியாவுக்கு, பாபிலோன் தேசத்தாரின் தெய்வமாகிய சூரியன்மீது அதிகாரம் இருக்கிறது என்று பாபிலோன் ராஜா நினைக்கிறான். இதற்காக பாபிலோன் ராஜா எசேக்கியாவைக் கனம்பண்ண விரும்பி, அவனுக்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்புகிறான்.

இக்காலத்தில் பாபிலோன் தேசத்தார் அசீரியா தேசத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இதுவரையிலும் பாபிலோனியர் அசீரியாவின் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு கப்பம் கட்டி வருகிறார்கள். இப்போதோ பாபிலோனியர் அசீரியருக்கு கப்பம் கட்டுவதை நிறுத்திவிட்டு, கலகம்பண்ணுகிறார்கள்.

தாங்கள் அசீரியா தேசத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணும்போது, யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவும் அசீரியருக்கு விரோதமாக கலகம் பண்ணினால், கலகத்தின் தீவிரம் அதிகமாயிருக்கும் என்று பாபிலோன் ராஜா நினைக்கிறான். இதற்காக பாபிலோன் ராஜா எசேக்கியாவின் சிநேகத்தைப் பெற்றுக்கொள்ளும் வண்ணமாக, அவனுக்கு நிருபங்களையும் வெகுமதிகளையும் அனுப்புகிறான்.

அசீரியரின் சேனைகள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருந்தபோது, எசேக்கியாவின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய தூதனை அனுப்பி, அசீரியரின் சேனையை சங்காரம்பண்ணினார். இந்த அற்புத சம்பவத்தை பாபிலோன் ராஜாவும் கேள்விப்பட்டிருக்கிறான். எசேக்கியாவிடம் தெய்வீக வல்லமையிருக்கிறது என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எசேக்கியாவுக்கு உதவி செய்கிறார் என்றும் பாபிலோன் ராஜா நம்புகிறான்.

தெய்வீக வல்லமையைப் பெற்றிருக்கிற எசேக்கியா, தன்னோடுகூடச் சேர்ந்துகொண்டால், அது தன்னுடைய இராணுவத்திற்கு மிகப்பெரிய பலமாயிருக்கும் என்று பாபிலோன் ராஜா எதிர்பார்க்கிறான். யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா தங்களோடு சேர்ந்து, அசீரியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, வானமண்டலத்தின் சேனைகள் தங்களுக்கு ஆதரவாக வரும் என்று பாபிலோன் ராஜா நம்புகிறான். இதன்நிமித்தமாகவே அவன் எசேக்கியாவுக்கு நிருபங்களையும் வெகுமதிகளையும் கொடுத்தனுப்புகிறான்.

பாபிலோன் ராஜாவின் தூதுவர்கள் எசேக்கியா ராஜாவை சந்தித்து, தங்கள் ராஜா கொடுத்தனுப்பின நிருபங்களையும், வெகுமானத்தையும் கொடுக்கிறார்கள். எசேக்கியா அவர்கள் கொண்டு வந்த நிருபங்களையும், வெகுமானங்களையும் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொள்கிறான்.

எசேக்கியா அவர்களை அங்கிகரித்து, பின்பு அவர்களுக்குத் தன் பொக்கிஷசாலை அனைத்தையும், வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்க்கங்களையும், நல்லபரிமளதைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும் தன் பொக்கிஷசாலைகளிலுள்ள எல்லாவற்றையும் காண்பிக்கிறான்; தன் அரமனையிலும் தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை (2இராஜா 20:13).

பாபிலோன் தேசத்தார் விக்கிரகாராதனைக்காரர்கள். ஆனாலும் எசேக்கியா அவர்களை அங்கீகரிக்கிறான். அவர்கள்மீது மிகவும் பிரியமாயும், கரிசனையாயும் இருக்கிறான். பாபிலோன் ராஜாவாகிய பெரோதாக்பலாதானுடன், எசேக்கியா சமாதான ஒப்பந்தமும், இராணுவ ஒப்பந்தமும் செய்ய ஆயத்தமாயிருக்கிறான்.

எசேக்கியாவின் காலத்தில் பாபிலோன் தேசம் மிகப்பெரிய பேரரசாக விளங்கிற்று. பாபிலோன் ராஜாவும் அக்காலத்தில் மிகவும் பிரபல்யமானவனாகயிருக்கிறான். பாபிலோன் ராஜாவைப்போல தானும் முக்கியமானவன் என்பதையும், தன்னிடத்திலும் ஏராளமான பொக்கிஷங்கள் இருக்கிறது என்பதையும் எசேக்கியா பாபிலோன் ராஜாவின் தூதுவர்களுக்கு காண்பிக்க விரும்புகிறான்.

பாபிலோன் ராஜாவின் சேனைகளைப்போலவே, தன்னுடைய சேனையும் பெரியது என்பதை காண்பிக்கும் வண்ணமாக எசேக்கியா அவர்களுக்கு தன் ஆயுதசாலை அனைத்தையும் காண்பிக்கிறான். பாபிலோன் ராஜாவின் தூதுவர்கள் தன்னுடைய ராஜாவின் பொக்கிஷசாலைகளையும், ஆயுதசாலைகளையும் பார்த்து, அதைப்பற்றிய விவரங்களை, அவர்கள் பாபிலோன் ராஜாவுக்கு எடுத்து சொல்லவேண்டுமென்று எசேக்கியா எதிர்பார்க்கிறான்.

ஏசாயா இதுவரையிலும் எசேக்கியாவுக்கு ஆறுதலான செய்திகளை மாத்திரமே சொல்லியிருக்கிறார். ஆனால் அவர் இப்போது எசேக்கியாவை கடிந்துகொள்ளும் வார்த்தைகளை அவனுக்கு சொல்லுகிறார்.

அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவினிடத்தில் வந்து: "அந்த மனுஷர் என்ன சொன்னார்கள், எங்கேயிருந்து உம்மிடத்தில் வந்தார்கள்" (2இராஜா 20:14) என்று கேட்கிறார்.

எசேக்கியா ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய கேள்விகளுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

எசேக்கியா ஏசாயாவை நோக்கி, "அவர்கள் பாபிலோன் என்னும் தூரதேசத்திலிருந்து வந்தார்கள்" என்று சொல்லுகிறான்.

ஏசாயா எசேக்கியாவிடம் மேலும் ஒரு கேள்வியைக் கேட்கிறார். "உம்முடைய வீட்டில் என்னத்தைப் பார்த்தார்கள்" என்று ஏசாயா கேட்கிறார். அதற்கு எசேக்கியா: "என் வீட்டிலுள்ள எல்லாவற்றையும் பார்த்தார்கள்; என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை" (2இராஜா 20:15) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

எசேக்கியா ஏசாயாவுக்கு ஒன்றையும் மறைக்கவில்லை. எசேக்கியா வெளிப்படையாகப் பேசுகிறான். தன்னுடைய அரண்மனையின் பொக்கிஷ சாலைகளையும், ஆயுதசாலைகளையும் பாபிலோன் ராஜாவின் தூதுவர்களுக்கு காண்பித்ததினால் தப்பிதம் ஒன்றும் இல்லை என்று எசேக்கியா நினைக்கிறான்.

பாபிலோன் ராஜாவின் தூதுவர்கள் எசேக்கியாவைப் பார்க்க வந்தபோது, எசேக்கியா அவர்களை அங்கீகரிக்கிறான். ஆனால் எசேக்கியாவோ அவர்களை ஏசாயா தீர்க்கதரிசியினிடத்தில் அழைத்துக்கொண்டு போகவில்லை. ஏசாயா எசேக்கியாவுக்காக ஜெபம்பண்ணியதன் நிமித்தமாகவே, கர்த்தருடைய கிருபை எசேக்கியாவுக்கு கிடைத்திருக்கிறது. தனக்கு உதவி தேவைப்படும்போது எசேக்கியா ஏசாயாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். தனக்கு உதவி தேவைப்படாதபோது, அவன் ஏசாயாவை அசட்டைபண்ணிவிடுகிறான்.

"ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாகை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார்" (2இராஜா 20:11). ஆனால் எசேக்கியாவோ ஏசாயா தீர்க்கதரிசி பண்ணின ஜெபத்தை மறந்துவிடுகிறான். அற்புதங்கள் நடைபெற்றதற்கு ஏசாயாவின் ஜெபமும் ஒரு காரணம் என்பதை எசேக்கியா உணர்ந்துகொள்ளவில்லை.

எசேக்கியாவின் மனதில் இப்போது பெருமை நிரம்பியிருக்கிறது. கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார். எசேக்கியா இதுவரையிலும் மனத்தாழ்மையோடிருந்தான். அப்போது கர்த்தர் அவனுக்கு ஆதரவாகயிருந்தார். எசேக்கியா இதுவரையிலும் கர்த்தரை நம்பினான். ஆனால் இப்போதோ அவன் மாயையான பொக்கிஷங்களையும், ஆயுதங்களையும் நம்புகிறான். இதன் நிமித்தமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எசேக்கியாவின் மீது வருகிறது.

அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி: "கர்த்தருடைய வார்த்தையைக் கேளும். இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்" (2இராஜா 20:16,17) என்றும்,

"நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (2இராஜா 20:18) என்றும் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜாவின் தூதுவர்கள் எசேக்கியாவின் வீட்டிலுள்ள எல்லா பொக்கிஷங்களையும் பார்த்தார்கள். அந்தப் பொக்கிஷங்களெல்லாம் பாபிலோனுக்கு கொண்டு போகப்படும். எசேக்கியா தன்னுடைய பொக்கிஷத்தை எண்ணிப்பார்த்து பெருமைப்பட்டான். ஆனால் அவனுடைய பெருமைக்கு காரணமாயிருந்த பொக்கிஷங்களை பாபிலோன் தேசத்தார் கொள்ளையிடுவார்கள்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா பாபிலோன் ராஜாவோடு இராணுவ உடன்படிக்கையும், சமாதான உடன்படிக்கையும் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டான். ஆனால் பாபிலோனியர்கள் எசேக்கியாவுக்கு சிநேகிதராயிருக்காமல், அவனுக்கு சத்துருக்களாயிருப்பார்கள். அவர்கள் எசேக்கியாவையும் அவனுடைய குடும்பத்தாரையும் பட்சித்துப்போடுவார்கள்.

மனாசே விக்கிரங்களை ஆராதித்தான். அவன் ஒரு கொலைப்பாதகனாயிருந்தான். அவனுடைய விக்கிரகாராதனையும், கொலைப்பாதகங்களும், அவனுடைய அழிவுக்கு காரணமாயிருந்தது. எசேக்கியாவுக்கோ அவனுடைய மதியீனமும், அவனுடைய பெருமையும், அவனுடைய அழிவுக்கு காரணமாயிருக்கிறது.

பாபிலோன் தேசம் உயர்வதற்கும் அது அதிக வல்லமையுள்ள பேரரசாக வளருவதற்கும் எசேக்கியா உதவி செய்ய விரும்புகிறான். அசீரியாவின் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவதற்கு, எசேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு இராணுவ உதவிகளை செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறான். எசேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு உதவிசெய்தாலும், எசேக்கியா தனக்கு செய்த உதவிகளை பாபிலோன் ராஜா மறந்துவிடுவான். அவன் எசேக்கியாவுக்கும், அவனுடைய குடும்பத்தாருக்கும் தீங்கு செய்வான். எசேக்கியாவின் குமாரர்களில் சிலர் பாபிலோன் ராஜாவின் அரண்மனையிலே, அரண்மனை வேலைக்காரராயிருப்பார்கள்.

பாபிலோனை யாரெல்லாம் நேசிக்கிறார்களோ அவர்களுக்கு பாபிலோன் மூலமாக அழிவு வரும். அவர்களுடைய அழிவுக்கு பாபிலோனே காரணமாயிருக்கும்.

எசேக்கியா ஏசாயாவின் வார்த்தைகளைக் கேட்டு தன்னுடைய தப்பிதத்தை உணர்ந்துகொள்கிறான். தன்னுடைய மதியீனத்தைப் புரிந்துகொள்கிறான். அவன் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறான். தன்னுடைய பாவங்களுக்கு மனம் வருந்துகிறான். கர்த்தர் தனக்கு கொடுக்கும் நியாயத்தீர்ப்பை பணிவோடு ஏற்றுக்கொள்கிறான்.

அப்பொழுது எசேக்கியா ஏசாயாவை நோக்கி: "நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான் என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே" (2இராஜா 20:19) என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. அது நன்மையானது. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றி, அதன் மூலமாக தனக்கு நன்மை செய்வார் என்று எசேக்கியா நம்புகிறான்.

எசேக்கியாவின் ராஜ்யபாரமும், அவனுடைய ஜீவிய சரித்திரமும் முடிவு பெறுகிறது. எசேக்கியாவின் வர்த்தமானங்களைப்பற்றி 2நாளா 29-32 ஆகிய அதிகாரங்களில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

எசேக்கியா எருசலேமுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறான். அவன் ஒரு குளத்தையும் சாலகத்தையும் உண்டாக்கினான். இதன் மூலமாக எருசலேம் நகரத்திற்குள்ளே தண்ணீரை வரவழைத்தான்.

எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 20:21). .

எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாஸ் ஒரு துன்மார்க்கன். துன்மார்க்கனுக்கு பிறந்த எசேக்கியா பக்தியுள்ளவனாயிருக்கிறான். எசேக்கியாவுக்குப் பிறந்த குமாரனாகிய மனாசே ஒரு துன்மார்க்கன். எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாசும், குமாரனாகிய மனாசேயும் துன்மார்க்கராயிருக்கிறார்கள்.

நம்முடைய பெற்றோர் அவிசுவாசிகளாகவும், கர்த்தருக்கு பயப்படாதவர்களாயும் ஜீவித்தாலும், நாம் கர்த்தருக்கு பயந்து ஜீவிப்பதற்கு வாய்ப்புள்ளது. நாம் கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொண்டு, அவருடைய வழியிலே நடக்கவேண்டும்.

நாம் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தாலும், நம்முடைய பிள்ளைகள் கர்த்தரை நம்பாமல் துன்மார்க்கமாய் ஜீவிப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால் நம்முடைய பிள்ளைகளுக்காக நாம் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும். அவர்களை கர்த்தருக்கு பயந்து, வளர்க்க வேண்டிய பிரகாரமாக வளர்க்கவேண்டும்.

33 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் மனாசே, ஆமோன் ஆகியோரின் சரித்திரங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மனாசே ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமிலே ஆட்சி செய்கிறான். அவன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிறான். மனாசே துன்மார்க்கமாய் ஜீவிக்கிறான் *(2நாளா 33:1-10).*

மனாசேக்கு நெருக்கங்கள் உண்டாயிற்று. அவன் தன் பாவங்களுக்கு மனம் வருந்தி கர்த்தரிடத்தில் திரும்புகிறான் *(2நாளா 33:11-13).* மனாசேயின் காலத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி *(2நாளா 33:15-17).* மனாசேயின் ஆசீர்வாதம் *(2நாளா 33:14).* மனாசேயினுடைய ராஜ்யபாரத்தின் முடிவு *(2நாளா 33:18-20).*

மனாசேயின் குமாரன் ஆமோன் துன்மார்க்கனாயிருக்கிறான். இவனுடைய ஆட்சியும் துன்மார்க்கமாயிருக்கிறது *(2நாளா 33:21-23).* ஆமோனின் ஊழியக்காரர் அவனைக் கொன்றுபோடுகிறார்கள் *(2நாளா 33:24,25).*

மனாசேயின் அக்கிரமம் 2நாளா 33:1-10

2நாளா 33:1. மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 33:2. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின் படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 33:3. அவன் தன் தகப்பனாகிய எசேக்கியா தகர்த்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, விக்கிரகத்தோப்புகளை உண்டாக்கி, வானத்தின் சேனையையெல்லாம் பணிந்துகொண்டு, அவைகளைச் சேவித்து,

2நாளா 33:4. எருசலேமிலே என் நாமம் என்றென்றைக்கும் விளங்கும் என்று கர்த்தர் சொன்ன தம்முடைய ஆலயத்திலே பலிபீடங்களைக் கட்டி,

2நாளா 33:5. கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிரகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்.

2நாளா 33:6. அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரைத் தீமிதிக்கப்பண்ணி, நாளும் நிமித்தமும் பார்த்து, பில்லி சூனியங்களை அநுசரித்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 33:7. இந்த ஆலயத்திலும், இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நான் தெரிந்துகொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றென்றைக்கும் விளங்கப்பண்ணுவேன் என்றும்,

2நாளா 33:8. நான் மோசேயைக்கொண்டு இஸ்ரவேலுக்குக் கொடுத்த சகல நியாயப் பிரமாணத்திற்கும் கட்டளைகளுக்கும் நியாயங்களுக்கும் ஒத்தபடியே அவர்களுக்கு நான் கற்பித்தவைகளையெல்லாம் அவர்கள் செய்யச் சாவதானமாய் இருந்தார்களேயாகில், நான் இனி அவர்கள் காலை அவர்கள் பிதாக்களுக்கு நிலைப்படுத்தி வைத்த தேசத்திலிருந்து விலகப்பண்ணுவதில்லையென்றும், தேவன் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொல்லியிருந்த தேவனுடைய ஆலயத்தில்தானே, அவன் தான் பண்ணுவித்த விக்கிரகமாகிய சிலையை ஸ்தாபித்தான்.

2நாளா 33:9. அப்படியே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப் பார்க்கிலும், யூதாவும் எருசலேமின் குடிகளும் பொல்லாப்புச் செய்யத்தக்கதாய், மனாசே அவர்களை வழிதப்பிப்போகப்பண்ணினான்.

2நாளா 33:10. கர்த்தர் மனாசேயோடும் அவனுடைய ஜனத்தோடும் பேசினபோதிலும், அவர்கள் கவனிக்காதேபோனார்கள்.

இஸ்ரவேலின் 42 ராஜாக்களில் மனாசே பெரிய துன்மார்க்கன். ஆனாலும் இவன் ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாளுகிறான். உசியா மட்டுமே 58 வருஷம் அரசாண்டவன். மற்ற ராஜாக்கள் எல்லாருமே மனாசேயைவிட குறைவான வருஷங்களுக்கே ராஜ்யபாரம் செய்திருக்கிறார்கள். தேவனுடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் இவனுடைய ராஜ்யபாரம் அதிக வருஷங்களுக்கு நடைபெற்றிருக்கிறது.

மனாசே எத்தனை வருஷம் துன்மார்க்கனாக இருந்தான் என்று தெரியவில்லை. இறுதியில் மனாசே மனந்திருந்துகிறான். பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பிடிக்கப்பட்டுப் போனபின்பு, அவன் கர்த்தரைச் சேவிக்கிறான்.

மனாசே தன் ராஜ்யபாரத்தைத் துன்மார்க்கமாக ஆரம்பித்தாலும், இறுதியில் செம்மையானவனாக இருக்கிறான். ஆனால் சவுல், சாலொமோன், உசியா ஆகியோர் செம்மையானவர்களாக ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தும், முடிவில் பொல்லாதவர்களானார்கள்.

மனாசேயின் அக்கிரமத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதே சம்பவம் *2இராஜா 21:1-9* ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

எருசலேமின் மகிமை மங்கிப்போயிற்று. அதன் சமாதானமும் சந்தோஷமும் அதைவிட்டு விலகிப்போயிற்று. எருசலேம் எவ்வாறு அழிந்துபோனது என்னும் சரித்திர சம்பவம் இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான். மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; அவன் தாயின்பேர் எப்சிபாள் *(2இராஜா 21:1; 2நாளா 33:1).*

மனாசே பிறந்தபோது, அவனுடைய தகப்பனாகிய எசேக்கியாவுக்கு சுமார் நாற்பத்திரண்டு வயதாகிறது. எசேக்கியா வியாதிப்பட்டு குணமடைந்து மூன்று வருஷங்களுக்கு பின்பு, மனாசே பிறக்கிறான்.

மனாசே வாலிபனாகயிருக்கும்போதே அவன் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு. வாலிபவயதில் அவனுக்கு உயர்வும், மேன்மையும், அதிகாரமும் கிடைத்திருக்கிறது. மனாசே சுயபெருமைக்காரனாயிருந்து, தன்னை எல்லோருக்கும் மேலாக உயர்த்துகிறான். எல்லோரையும்விட தனக்கு அதிக ஞானம் இருப்பதாகவும், தன்னுடைய தகப்பனாகிய எசேக்கியா செய்ததைவிட, தன்னால் அதிகமான காரியங்களையும், நூதனமான காரியங்களையும், ஞானமான காரியங்களையும் செய்ய முடியும் என்றும் பெருமையோடு நினைக்கிறான்.

மனாசே ராஜாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருக்கிறான். அவனைச் சுற்றிலும் வாலிபரின் கூட்டம் சூழ்ந்திருக்கிறார்கள். மனாசே வாலிபனாகயிருப்பதினால், எருசலேமிலுள்ள துன்மார்க்கர் அவனை எளிதாக வஞ்சித்து விடுகிறார்கள்.

எசேக்கியா எருசலேமிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான். ஆனால் எருசலேம் நகரத்தாரோ விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்களுக்கு எசேக்கியா உண்டுபண்ணின ஆவிக்குரிய மறுமலர்ச்சி பிடிக்கவில்லை. எசேக்கியாவின் சத்துருக்கள் எல்லோரும் இப்போது, அவனுடைய குமாரனாகிய மனாசேயோடு சேர்ந்து கொள்கிறார்கள். அவர்கள் மனாசேயை வஞ்சித்து, அவனையும் விக்கிரகாராதனைக்காரனாக்கிவிடுகிறார்கள்.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் மனாசேயோடு நெருங்கி பழகி, அவனுடைய அதிகாரங்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள். எருசலேம் நகரத்திலே மனாசேயின் ஆட்சி நடைபெறுகிறது என்று சொல்லுவதற்கு பதிலாக, விக்கிரகாராதனைக்காரரின் ஆட்சி நடைபெறுகிறது என்று சொல்லுவதுபோல உள்ளது.

மனாசே கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். அவன் விக்கிரகங்களை ஆராதிக்கிறான். வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொள்கிறான். ஆனாலும் அவன் ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமிலே அரசாளுகிறான். யூதாவின் ராஜாக்களில் மனாசேயே அதிகமான வருஷங்கள் ஆளுகை செய்தவன்.

மனாசேயின் ஆட்சிக்காலத்தில்தான், யூதாதேசத்திலே, அதிகமான வருஷங்களுக்கு, துன்மார்க்கமான ஆட்சி நடைபெறுகிறது.

மனாசே ராஜாவாகிறபோது, தன்னுடைய தகப்பனாகிய எசேக்கியா விட்டுச்சென்ற, நல்ல காரியங்களை செய்கிறான். அதன் பின்பு விக்கிரகாராதனைக்காரர் மனாசேயை, வஞ்சிக்கிறார்கள். மனாசே கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ய ஆரம்பிக்கிறான். அதன் பின்பு மனாசே தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறான். எருசலேமிலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனை மறுபடியும் உயிர்பெறுகிறது. அங்கே திரும்பவும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகிறது.

மனாசே ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமிலே அரசாட்சி செய்தாலும், அவன் ஒரு சில வருஷங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, மனாசே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் *(2இராஜா 21:22; 2நாளா 33:2)*.

மனாசே தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப் செய்ததுபோல விக்கிரகத்தோப்பை உண்டாக்கி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு அவைகளைச் சேவிக்கிறான் *(2இராஜா 21:3; 2நாளா 33:3)*.

மனாசே பாகாலுக்கு பலிபீடங்களைக் கட்டுகிறான். விக்கிரகத்தோப்புகளையும் உண்டுபண்ணுகிறான். "விக்கிரகத்தோப்பு" என்னும் வாக்கியம் "அஸ்தரோத்" என்னும் புறஜாதி தெய்வத்தைக் குறிக்கிறது. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவையெல்லாமே "வானத்தின் சேனைகள்" என்று அழைக்கப்படுகிறது.

மனாசே எல்லாவிதமான விக்கிரகங்களையும் ஆராதிக்கிறான். அவையெல்லாவற்றையும் பணிந்துகொண்டு, அவற்றிற்கு தூபங்காட்டுகிறான். மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டுகிறான் *(2இராஜா 21:5; 2நாளா 33:5)*.

மனாசே பாகாலுக்கு பலிபீடங்களையும், அஸ்தரோத்திற்கு விக்கிரகதோப்புகளையும் உண்டுபண்ணி, அவற்றின் பலிபீடங்களிலே பலிகளையும் செலுத்துகிறான். மனாசே தன் குமாரனைத் தீமிதிக்கப்பண்ணுகிறான் *(2இராஜா 21:6; 2நாளா 33:6)*.

மனாசே தன்னுடைய பிள்ளைகளை மோளேகுக்கு அக்கினியிலே தகனிக்கிறான். மனாசேயின் பிள்ளைகள் விருத்தசேதனம் செய்யப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டவர்கள். ஆனால் மனாசேயோ, விருத்தசேதனத்தின் மூலமாக, கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையைமீறி, தன் குமாரனை தீ மிதிக்கப்பண்ணுகிறான்.

மனசே நாள்பார்க்கிறவனும் நிமித்தம்பார்க்கிறவனுமாயிருந்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்கிறான் *(2இராஜா 21:6; 2நாளா 33:6)*.

சகுனம் அஞ்சனம் பார்க்கிறவர்களைத் தேடிப்போனார். மனாசேயும் சவுலின் வழிகளில் நடக்கிறான். மனாசே குறிசொல்லுகிறவர்களை வைத்து, தன்னுடைய அதிர்ஷ்டத்தை தீர்மானம்பண்ணுகிறான். ராசியான நாட்களையும், ராசியில்லாத நாட்களையும் குறிசொல்லுகிறவர்கள் மூலமாக வேறுபிரிக்கிறான். சகுனம் பார்க்கிறான்.

மனாசே விக்கிரகங்களை ஆராதிப்பதோடு, எருசலேம் நகரத்திலே குற்றமில்லாத இரத்தத்தையும் சிந்துகிறான். கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும்படியாக, மனாசே யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணின அந்தப் பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலு மூலைவரையும் இரத்தப்பழிகளால் நிரப்பத்தக்கதாய், குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்துகிறான் *(2இராஜா 21:16)*.

மனாசேயின் காலத்தில், எருசலேமிலே, தீர்க்கதரிசிகளின் இரத்தம் அதிகமாக சிந்தப்படுகிறது. மனாசே கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் அநேகரைக் கொன்றுபோட்டான் என்றும், தீர்க்கதரிசியாகிய ஏசாயாவை வாளால் அறுத்து கொலைசெய்தான் என்றும் யூதருடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது.

எபிரெயருக்கு நிருபம் எழுதின ஆசிரியர், மனாசேயின் காலத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு ஏற்பட்ட உபத்திரவங்களை எழுதியிருக்கிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்" *(எபி 11:36,37)*.

மனாசேயின் விக்கிரகாராதனையைப்பற்றி இந்த வசனப்பகுதியில் அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. அவனுடைய விக்கிரகாராதனையைக்குறித்து மூன்று காரியங்கள் இங்கு விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது. அவையானவன :

1. "எருசலேமிலே என் நாமத்தை விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லிக்குறித்த கர்த்தருடைய ஆலயத்திலே அவன் பலிபீடங்களைக் கட்டினான்" *(2இராஜா 21:4; 2நாளா 33:4)*.

2. "கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்" *(2இராஜா 21:5; 2நாளா 33:5)*.

3. "இந்த ஆலயத்திலும், நான் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலுமிருந்து தெரிந்துகொண்ட எருசலேமிலும், என் நாமத்தை என்றைக்கும் விளங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொல்லிக் குறித்த ஆலயத்திலே அவன் பண்ணின தோப்புவிக்கிரகத்தை வைத்தான்" *(2இராஜா 21:7 ; 2நாளா 33:7,8)*.

மனாசே விக்கிரகங்களை ஆராதனை செய்து கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டைபண்ணுகிறான். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். மனாசேயோ அந்த உடன்படிக்கைக்கு கீழ்ப்படியாமல், அதை மீறி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லியிருக்கிறார். "நான் அவர்களுக்குக் கற்பித்த எல்லாவற்றின்படியேயும், என் தாசனாகிய மோசே அவர்களுக்குக் கற்பித்த எல்லா நியாயப்பிரமாணத்தின்படியேயும், செய்ய ஜாக்கிரதையாய் இருந்தார்களேயானால், நான் இனி இஸ்ரவேலின் காலை அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தைவிட்டு அலையப்பண்ணுவதில்லை" *(2இராஜா 21:8; 2நாளா 33:8)* என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை கேளாதேபோகிறார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள் செய்த பொல்லாப்பைப் பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனாசே அவர்களை ஏவிவிடுகிறான் *(2இராஜா 21:9; 2நாளா 33:9).*

மனாசே கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களின் விவரம் வருமாறு:

1. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின ஜாதிகளுடைய அருவருப்புகளின்படியே, அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். *(2நாளா 33:2)*

2. அவன் தன் தகப்பனாகிய எசேக்கியா தகர்த்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டினான். *(2நாளா 33:3)*

3. பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்தான்.

4. விக்கிரகத்தோப்புகளை உண்டாக்கினான்.

5. வானத்தின் சேனையையெல்லாம் பணிந்து கொண்டு, அவைகளைச் சேவித்தான்.

6. எருசலேமிலே என் நாமம் என்றென்றைக்கும் விளங்கும் என்று கர்த்தர் சொன்ன தம்முடைய ஆலயத்திலே வானத்தின் சேனைகளுக்குப் பலிபீடங்களைக் கட்டினான். *(2நாளா 33:4)*

7. கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைகளுக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான். *(2நாளா 33:5)*

8. அவன் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரைத் தீமிதிக்கப்பண்ணினான். *(2நாளா 33:6)*

9. நாள் பார்த்தான்

10. நிமித்தம் பார்த்தான்.

11. பில்லிசூனியங்களை அநுசரித்தான்.

12. அஞ்சனம் பார்க்கிறவர்களை வைத்திருந்தான்.

13. குறிசொல்லுகிறவர்களை வைத்திருந்தான்.

14. கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான்.

15. தேவனுடைய ஆலயத்தில் தான் பண்ணுவித்த விக்கிரகமாகிய சிலையை ஸ்தாபித்தான். *(2நாளா 33:8)*

16. மனாசே யூதாவையும், எருசலேமையும் வழிதப்பிப்போகப்பண்ணினான். *(2நாளா 33:9)*

17. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப் பார்க்கிலும், யூதாவையும் எருசலேமின் குடிகளையும் பொல்லாப்புச் செய்யப் பண்ணினான்.

18. மனாசே கர்த்தருடைய வார்த்தையைக் கவனிக்காதே போனான் *(2நாளா 33:10)*

மனாசேயின் மனந்திரும்புதல் 2நாளா 33:11-20

2நாளா 33:11. ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவின் சேனாபதிகளை அவர்கள்மேல் வரப்பண்ணினார்; அவர்கள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள்.

2நாளா 33:12. இப்படி அவன் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான்.

2நாளா 33:13. அவரை நோக்கி, அவன் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கிற போது, அவர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணினார்; கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான்.

2நாளா 33:14. பின்பு அவன் தாவீதுடைய நகரத்தின் வெளி அலங்கத்தைக் கீயோனுக்கு மேற்கேயிருக்கிற பள்ளத்தாக்குக்கு தொடங்கி மீன்வாசல்மட்டும் கட்டி, ஓபேலைச் சுற்றிலும் அதை வளைத்து, அதை மிகவும் உயர்த்தி, யூதாவிலுள்ள அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தலைவரை வைத்து,

2நாளா 33:15. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து அந்நிய தேவர்களையும் அந்த விக்கிரகத்தையும் எடுத்துப்போட்டு, கர்த்தருடைய ஆலயமுள்ள மலையிலும் எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லா பலி பீடங்களையும் அகற்றி, பட்டணத்திற்குப் புறம்பாகப் போடுவித்து,

2நாளா 33:16. கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிட்டு, அதின்மேல் சமாதானபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் செலுத்தி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கவேண்டும் என்று யூதாவுக்குக் கட்டளையிட்டான்.

2நாளா 33:17. ஆகிலும் ஜனங்கள் இன்னும் மேடைகளில் பலி யிட்டுவந்தார்கள்; என்றாலும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கென்றே அப்படிச் செய்தார்கள்.

2நாளா 33:18. மனாசேயின் மற்ற வர்த்தமானங்களும், அவன் தன் தேவனை நோக்கிப் பண்ணின விண்ணப்பமும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் அவனோடே பேசின ஞானதிருஷ்டிக்காரரின் வார்த்தைகளும், இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 33:19. அவனுடைய விண்ணப்பமும், அவன் கெஞ்சுதலுக்குக் கர்த்தர் இரங்கினதும், அவன் தன்னைத் தாழ்த்தினதற்கு முன்னே பண்ணின அவனுடைய எல்லாப் பாவமும் துரோகமும், அவன் மேடைகளைக் கட்டி விக்கிரகத் தோப்புகளையும் சிலைகளையும் ஸ்தாபித்த இடங்களும், ஓசாயாவின் பிரபந்தத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 33:20. மனாசே தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனை அவன் வீட்டிலே அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆமோன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

மனாசேயின் தகப்பனாகிய எசேக்கியா கர்த்தருடைய பார்வையிலே செம்மையானதை செய்தான். ஆனால் எசேக்கியாவின் குமாரனாகிய மனாசேயோ கர்த்தரின் பார்வைக்கு முன்பாக பொல்லாப்பானதை செய்கிறான். கர்த்தர் மனாசேயை பாபிலோன் ராஜாவின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

மனாசே நெருக்கப்படுகிறான். அப்போது அவன் தேவனாகிய கர்த்தரை நோக்கி கெஞ்சி மன்றாடுகிறான். கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறான். கர்த்தர் மனாசேயின் பாவங்களை மன்னித்து, அவனுக்கு தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும் மறுபடியுமாய்க் காண்பிக்கிறார்.

மனாசே செழித்திருந்த காலத்தில், அவன் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை மாத்திரமே செய்தான். அவன் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தான். கர்த்தரோ மனாசேயோடும் அவனுடைய ஜனத்தோடும் பேசினபோதிலும், அவர்கள் கவனிக்காதேபோனார்கள் *(2நாளா 33:10)*.

ஆகையால் கர்த்தர்: அசீரியா ராஜாவின் சேனாபதிகளை அவர்கள்மேல் வரப்பண்ணுகிறார்; அவர்கள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோனுக்குக் கொண்டுபோகிறார்கள் *(2நாளா 33:11)*.

கர்த்தர் பாபிலோன் தேசத்து ராஜாவை மனாசேக்கு விரோதமாக வரப்பண்ணுகிறார். இந்த வசனத்தில் பாபிலோன் ராஜா, "அசீரியா ராஜா" என்று அழைக்கப்படுகிறான். பாபிலோன் ராஜாவே இப்போது அசீரியாவுக்கும் ராஜாவாயிருக்கிறான். ஆகையினால் இவன் "அசீரியாவின் ராஜா" என்று இந்த வசனத்தில் அழைக்கப்படுகிறான்.

பாபிலோன் ராஜாவின் சேனாபதிகள் எசேக்கியா ராஜாவைப் பார்க்க வந்தார்கள். எசேக்கியா கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவனாயிருப்பதை பாபிலோன் தேசத்தார் அறிந்துகொண்டார்கள். எசேக்கியாவின் குமாரனாகிய மனாசேயோ கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறான். ஆகையினால் மனாசேயை எளிதாக அழித்துப்போடலாம் என்று பாபிலோன் ராஜா நினைக்கிறான்.

மனாசே கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவனைவிட்டு விலகிப்போய்விடுவார் என்னும் சத்தியம் அந்நிய தேசத்தாருக்கு தெரிந்திருக்கிறது. எசேக்கியாவின் காலத்தில் சனகெரிப்பின் சேனை தோற்றுப்போயிற்று. சனகெரிப்பால் எருசலேமைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இப்போது அசீரியாவின் சேனாபதிகள் மனாசேயைப் பிடிக்கிறார்கள்.

மனாசே முட்செடிகளில் இருக்கிறான். ஒருவேளை அவன் தன்னுடைய தோட்டத்தில் ஒய்வெடுத்து உலாவிக்கொண்டிருந்திருப்பான். அசீரியா ராஜாவின் சேனைகள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து, அவனை இரண்டு வெண்கல சங்கிலிகளால் கட்டி, பாபிலோனுக்கு கொண்டு போகிறார்கள்.

"முட்செடிகள்" என்னும் வார்த்தை இங்கு உருவகமாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். முட்செடிகளிலுள்ள முட்கள் குத்தும். அதனால் சரீரத்தில் வேதனை உண்டாகும். மனாசேயின் ஆலோசனைகளும், அவனுடைய நடபடிகளும், அவனை முட்களைப்போல குத்துகிறது. முட்செடியிலிருந்து காயம்படாமல் எவ்வாறு தப்பிப்பது என்பது அவனுக்கு தெரியவில்லை. அசீரிய ராஜாவின் சேனாபதிகள் மனாசேயை எளிதாகப் பிடித்துக்கொள்கிறார்கள்.

அசீரியா ராஜாவின் சேனாபதிகள் மனாசேயின் அரண்மனையைக் கொள்ளையிட்டு, தங்களுக்கு பிடித்தமானதையெல்லாம் பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போகிறார்கள். இந்த சம்பவத்தைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார்.

"இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(2இராஜா 20:17,18).*

மனாசே பாபிலோன் தேசத்தில் கட்டப்பட்டவனாகயிருக்கிறான். அவன் அங்கே நெருக்கப்படுகிறான். இப்படி அவன் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சுகிறான். மனாசே தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்துகிறான் *(2நாளா 33:12).*

தங்களுடைய வாழ்க்கையில் நெருக்கங்கள் வரும்போதுதான் ஒருசிலர் கர்த்தரைத் தேடுகிறார்கள். ஒருசிலர் நெருக்கங்கள் வந்தாலும் கர்த்தரைத் தேடுவதில்லை. இங்கு மனாசேயோ தான் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சுகிறான். அவன் விண்ணப்பம்பண்ணிக் கொண்டிருக்கிறபோது, கர்த்தர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணுகிறார்.

மனாசே நெருக்கப்படும் வரையிலும் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை. அவன் நெருக்கப்படுகையிலோ, தேவனாகிய கர்த்தரை நோக்கி கெஞ்சுகிறான். தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்துகிறான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ள தேவன் என்பதையும், அவர் மாத்திரமே மெய்யான தேவன் என்பதையும் அறிந்துகொள்கிறான்.

மனாசே தன் அரண்மனையிலிருந்த காலத்தில் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. அப்போது அவன் "விக்கிரகங்களே மெய்யான தெய்வங்கள்" என்று சொன்னான். இப்போது அவன் நெருக்கப்படுவதினால், அவனுக்கு புத்திதெளிந்திருக்கிறது. மனாசே ஒருவேளை பாபிலோன் ராஜாவின் அரண்மனையில், ஆடம்பரமாக தங்கியிருந்தால், அவன் கர்த்தரை நினைத்துப் பார்த்திருக்கமாட்டான். அவன் "விக்கிரகங்களே தன்னுடைய தெய்வம்" என்று சொல்லி, அந்த விக்கிரகங்களை ஆராதனை செய்திருப்பான்.

ஆனால் மனாசே இப்போது பாபிலோன் தேசத்து அரண்மனையில் விருந்தாளியாயில்லை. அவன் பாபிலோன் தேசத்து சிறைச்சாலையில் கைதியாக அடைக்கப்பட்டிருக்கிறான். அங்கே அவன் நெருக்கப்படுகிறான். அப்போது அவனுடைய மனக்கண்கள் திறக்கிறது. கர்த்தரே தேவன் என்பதை அவன் அறிந்துகொள்கிறான்.

மனாசே இதுவரையிலும் விக்கிரகங்களைப் பின்பற்றி அவற்றை சேவித்தான். இப்போதோ அவன் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே சேவிக்கப்போவதாக வாக்குப்பண்ணுகிறான். மனாசே கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறான். தன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்றும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் தனக்கு மறுபடியும் கிடைக்கவேண்டுமென்றும் மனாசே தேவனுக்கு முன்பாக பணிவோடு ஜெபம்பண்ணுகிறான்.

மனாசேயின் ஜெபம் ஒரு நல்ல ஜெபமாயிருக்கிறது. அவன் தன் பாவங்களுக்கு மனந்திரும்பி, மிகுந்த பணிவோடு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறான். மனாசேயின் ஜெபத்தைப்பற்றி தள்ளுபடி ஆகமங்களில் அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. "யூதாவின் ராஜாவாகிய மனாசே பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது ஏறெடுத்த ஜெபம்" என்னும் தலைப்பில், மனாசேயின் ஜெபம் எழுதப்பட்டிருக்கிறது.

மனாசே கர்த்தரை நோக்கி கெஞ்சி விண்ணப்பம்பண்ணுகிறான். அவன் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கிற போது, கர்த்தர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் ஜெபத்தைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமிலுள்ள தன்னுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணுகிறார்; கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்து கொள்கிறான் (2நாளா 33:13).

மனாசே கர்த்தரைத் தேடுவதற்காக செய்த காரியங்களின் விவரம் வருமாறு :

1. அவன் நெருக்கப்படுகையில், தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சினான். (2நாளா 33:12)
2. தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான்.
3. கர்த்தர் தன் விண்ணப்பத்தைக் கேட்கும் வரையிலும் ஜெபம் பண்ணினான். (2நாளா 33:13)
4. கர்த்தரே தேவன் என்று மனாசே அறிந்தான்.

மனாசே அனுபவித்த பாடுகளும், வேதனைகளும், நெருக்கங்களும் அவனை கர்த்தரிடத்தில் வழிநடத்துகிறது. நாம் கர்த்தரைத் தேடும்போது, அவரைக் கண்டுபிடிப்போம். கர்த்தர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். நாம் கர்த்தரிடத்தில் வரவேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் நமக்கு பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும், நெருக்கங்களையும் அனுமதிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் மனாசேயை ஏற்றுக்கொள்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மனாசேக்கு மறுபடியும் கொடுக்கிறார்.

"அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்" (1தீமோ 1:16).

"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" (ஏசா 1:18).

கர்த்தர் மனாசேயின் ஜெபத்தைக்கேட்டு, அவனை திரும்ப எருசலேமிலுள்ள அவனுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணுகிறார். மனாசே பாபிலோன் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்த பின்பு, அவன் தன் தேசத்தின் பாதுகாப்பை பலப்படுத்துகிறான்.

மனாசே தாவீதுடைய நகரத்தின் வெளி அலங்கத்தைக் கீயோனுக்கு மேற்கேயிருக்கிற பள்ளத்தாக்குக்கு தொடங்கி மீன்வாசல்மட்டும் கட்டுகிறான். பின்பு அவன் ஓபேலைச் சுற்றிலும் அதை வளைத்து, அதை மிகவும் உயர்த்துகிறான். மேலும் மனாசே யூதாவிலுள்ள அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தலைவரை வைக்கிறான் (2நாளா 33:14).

மனாசே இப்போது கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றிருக்கிறான். அவன் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்த உடனே, கர்த்தருடைய ஆலயத்தை சுத்தம்பண்ணுகிறான். யூதாதேசத்திலுள்ள விக்கிரகங்களையும், விக்கிரகங்களின் பலிபீடங்களையும் அகற்றிப்போடுகிறான்.

மனாசே கர்த்தருடைய ஆலயத்திலிருந்து அந்நிய தேவர்களையும் அந்த விக்கிரகத்தையும் எடுத்துப்போடுகிறான். கர்த்தருடைய ஆலயமுள்ள மலையிலும் எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லா பலிபீடங்களையும் மனாசே அகற்றி, அவற்றை பட்டணத்திற்குப் புறம்பாகப் போடுவிக்கிறான் (2நாளா 33:15).

மனாசே கர்த்தருடைய ஆலயத்திலே வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்களையெல்லாம் அகற்றுகிறான். அதன் பின்பு அவன் கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிடுகிறான். மனாசே அதின்மேல் சமாதானபலிகளையும் ஸ்தோத்திர பலிகளையும் செலுத்துகிறான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கவேண்டும் என்று மனாசே யூதாவுக்குக் கட்டளையிடுகிறான் (2நாளா 33:16).

கர்த்தருடைய ஆலயத்திலே மனாசேயே ஒரு காலத்தில் விக்கிரகங்களைக் கொண்டு வந்து வைத்தான். அவனே அங்கே விக்கிரங்களுக்கு பலிபீடங்களைக் கட்டினான். இப்போது மனாசே மனந்திரும்பியிருக்கிறான். அவனே கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்தப்படுத்துகிறான். மறுபடியும் கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனைகள் நடைபெறச் செய்கிறான்.

மனாசே பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தான். கர்த்தரே தம்முடைய கிருபையினால் அவனை சிறையிருப்பிலிருந்து விடுவித்து, மறுபடியும் அவனுடைய ராஜ்யத்திற்கு வரப்பண்ணியிருக்கிறார். கர்த்தர் தனக்கு செய்த உதவியை மனாசே நன்றியோடு நினைவுகூர்ந்து, அவருக்கு ஸ்தோத்திர பலிகளை செலுத்துகிறான்.

ஆகிலும் ஜனங்கள் இன்னும் மேடைகளில் பலியிட்டு வருகிறார்கள்; என்றாலும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கென்றே அப்படிச் செய்கிறார்கள் (2நாளா 33:17). யூதாதேசத்தார் மத்தியிலே மேடைகளில் பலியிடும் வழக்கம் பல காலங்களாக தொடர்ந்து இருந்து வருகிறது. அவர்களால் அந்தப் பழக்கத்திலிருந்து எளிதாக விடுதலை பெற முடியவில்லை.

மனாசே மனந்திரும்பிய பின்பு செய்த செம்மையான காரியங்களில் விவரம் வருமாறு:

1. தாவீதுடைய நகரத்தின் வெளி அலங்கத்தைக் கீயோனுக்கு மேற்கேயிருக்கிற பள்ளத்தாக்குக்கு தொடங்கி மீன்வாசல்மட்டும் கட்டி, ஓபேலைச் சுற்றிலும் அதை வளைத்து, அதை மிகவும் உயர்த்தினான். (2நாளா 33:14).

2. யூதாவிலுள்ள அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத் தலைவரை வைத்தான்.

3. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து அந்நிய தேவர்களை எடுத்துப்போட்டான். (2நாளா 33:15).

4. விக்கிரகத்தை எடுத்துப்போட்டான்.

5. கர்த்தருடைய ஆலயமுள்ள மலையிலும் எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லா பலிபீடங்களையும் அகற்றினான்.

6. அவற்றைப் பட்டணத்திற்குப் புறம்பாகப் போடுவித்தான்.

7. கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிட்டான். (2நாளா 33:16).

8. அதின்மேல் சமாதானபலிகளையும் ஸ்தோத்திரபலிகளையும் செலுத்தினான்.

9. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கவேண்டும் என்று யூதாவுக்குக் கட்டளையிட்டான்.

10. மேடைகளில் தேவனாகிய கர்த்தருக்கென்றே பலியிட அனுமதித்தான். (2நாளா 33:17).

மனாசேயின் மற்ற வர்த்தமானங்களும், அவன் தன் தேவனை நோக்கிப் பண்ணின விண்ணப்பமும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் அவனோடே பேசின ஞானதிருஷ்டிக்காரரின் வார்த்தைகளும், இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது (2நாளா 33:18).

மனாசேயினுடைய விண்ணப்பமும், அவன் கெஞ்சுதலுக்குக் கர்த்தர் இரங்கினதும், அவன் தன்னைத் தாழ்த்தினதற்கு முன்னே பண்ணின அவனுடைய எல்லாப் பாவமும் துரோகமும், அவன் மேடைகளைக் கட்டி விக்கிரகத் தோப்புகளையும் சிலைகளையும் ஸ்தாபித்த இடங்களும், ஓசாயாவின் பிரபந்தத்தில் எழுதியிருக்கிறது (2நாளா 33:19).

1இராஜா, 2இராஜா ஆகிய புஸ்தகங்களில் மனாசேயின் விண்ணப்பமும், அவனைப் பற்றிய வேறுசில செய்திகளும் காணப்படவில்லை. ஆகையினால் மனாசேயைப் பற்றிய விவரங்கள் வேறு சில புஸ்தகங்களிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். (2நாளா 33:12- 13; 2நாளா 18-19).

மனாசே தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின்பு, அவனை அவன் வீட்டிலே அடக்கம்பண்ணுகிறார்கள்; அவன் குமாரனாகிய ஆமோன் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2நாளா 33:20).

மனாசே தன்னுடைய பாவங்களினிமித்தமாக தன்னைத் தாழ்த்துகிறான். தன்னை தாவீதின் குமாரன் என்று சொல்லிக்கொள்வதற்கு, தன்னிடத்தில் எந்த தகுதியும் இல்லை என்று சொல்லி தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறான். ஆகையினால் தான் மரித்த பின்பு, தன்னை தன்னுடைய பிதாக்களின் கல்லறைகளில் அடக்கம்பண்ண வேண்டாம் என்று சொல்லிவிட்டதாக யூதர்களுடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது.

ஒரு பாவி மனந்திரும்பாமல், ராஜாக்களின் கல்லறையில் ஆடம்பரமாகவும், அலங்காரமாகவும் அடக்கம்பண்ணப்படுவதைவிட, மனந்திரும்பிய பாவியாக, ஒரு தோட்டத்திலே சாதாரணமாக அடக்கம்பண்ணப்படுவது மிகவும் மேன்மையானது.

ஆமோன்
2நாளா 33:21-25

2நாளா 33:21. ஆமோன் ராஜாவாகிறபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, இரண்டு வருஷம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 33:22. அவன் தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; தன் தகப்பனாகிய மனாசே பண்ணுவித்திருந்த விக்கிரகங்களுக்கெல்லாம் ஆமோன் பலியிட்டு, அவைகளைச் சேவித்தான்.

2நாளா 33:23. தன் தகப்பனாகிய மனாசே தன்னைத் தாழ்த்திக்கொண்டதுபோல, இந்த ஆமோன் என்பவன் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தாமல் மேன்மேலும் அக்கிரமம் செய்துவந்தான்.

2நாளா 33:24. அவன் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் அரமனையிலே அவனைக் கொன்றுபோட்டார்கள்.

2நாளா 33:25. அப்பொழுது தேசத்து ஜனங்கள் ஆமோன் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணின யாவரையும் வெட்டிப்போட்டு, அவன் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள்.

யூதாவின் ராஜாவாகிய ஆமோனின் ராஜ்யபாரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இவன் மனாசேயின் குமாரன். மனாசேக்கு நாற்பத்தைந்து வயது ஆனபோது, அவனுடைய குமாரன் ஆமோன் பிறக்கிறான். மனாசே தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின், அவன் குமாரனாகிய ஆமோன், யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான்.

ஆமோன் ராஜாவானபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, இரண்டு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; யோத்பா ஊரானாகிய ஆரூத்சின் குமாரத்தியான அவன் தாயின்பேர் மெசுல்லேமேத் (2இராஜா 21:19).

ஆமோன் தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான். ஆமோன் தன் தகப்பன் நடந்த எல்லா வழியிலும் நடந்து, தன் தகப்பன் சேவித்த நரகலான விக்கிரகங்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொள்கிறான். ஆமோன் கர்த்தரின் வழியிலே நடவாமல், தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறான் (2இராஜா 21:20-22).

ஆமோனின் ஜீவியம் மிகவும் பரிதாபமாக முடிவு பெறுகிறது. ஆமோன் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். ஆமோனுடைய ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, ராஜாவை அவன் அரமனையிலே கொன்றுபோடுகிறார்கள் (2இராஜா 21:23). ஆமோன் இரண்டு வருஷம் மாத்திரமே எருசலேமில் அரசாளுகிறான்.

மனாசேக்கு பின்பு, அவனுடைய குமாரனாகிய ஆமோன், அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான். அவன் தன் தகப்பனாகிய மனாசே செய்ததுபோல கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்; தன் தகப்பனாகிய மனாசே பண்ணுவித்திருந்த விக்கிரகங்களுக்கெல்லாம் ஆமோன் பலியிட்டு, அவைகளைச் சேவிக்கிறான் (2நாளா 33:22).

மனாசே யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றியபோது, அவன் அவற்றை உடைத்து நிர்மூலம்பண்ணவில்லை. மனாசேயின் குமாரனாகிய ஆமோன் ராஜாவானவுடனே, மனாசே பண்ணுவித்திருந்த விக்கிரகங்களுக்கெல்லாம் பலியிட்டு அவைகளை சேவிக்கிறான். மனாசே விக்கிரங்களை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டிருக்கவேண்டும். அவன் விக்கிரகங்களை சரியாக அழித்துப்போடாததினால், யூதாதேசத்தில் மறுபடியும் விக்கிரகாராதனை ஆரம்பமாயிற்று.

"நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டி, அவர்கள் விக்கிரகங்களை அக்கினியிலே எரித்துப்போடவேண்டும்" (உபா 7:5).

ஆமோன் ராஜாவாகிறபோது இருபத்திரண்டு வயதாயிருந்து, இரண்டு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான் (2நாளா 33:21). ஆமோன் தகப்பனாகிய மனாசேதன்னைத் தாழ்த்திக்கொண்டதுபோல, இந்த ஆமோன் என்பவன் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தாமல் மேன்மேலும் அக்கிரமம் செய்துவருகிறான் (2நாளா 33:23).

மனாசே கர்த்தருடைய பார்வையிலே பொல்லாப்பு செய்தான். ஆனாலும் அவன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பவும் வந்தான். மனாசே கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான். அவன் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொண்டான். ஆமோனோ, தன் தகப்பனைப்போல, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை. ஆகையினால் ஆமோனுக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கவில்லை.

ஆமோனுடைய ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி, அவன் அரமனையிலே அவனைக் கொன்றுபோடுகிறார்கள்.

அப்பொழுது தேசத்து ஜனங்கள் ஆமோன் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணின யாவரையும் வெட்டிப்போட்டு, அவன் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்குகிறார்கள் (2நாளா 33:24,25).

ஆமோன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தாலும், அவன் நரகலான விக்கிரகங்களை சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டாலும், யூதாதேசத்து ஜனங்கள் அவனுக்காக இரண்டு காரியங்களை செய்கிறார்கள் (2இராஜா 21:24). அவையாவன :

1. யூதாதேசத்து ஜனங்கள் ராஜாவாகிய ஆமோனுக்கு விரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணினவர்களையெல்லாம் வெட்டிப்போடுகிறார்கள்.

2. அவர்கள் ஆமோனின் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்குகிறார்கள்.

ஆமோன் துன்மார்க்கனாகயிருந்தாலும், யூதாதேசத்து ஜனங்கள் அவனை தங்களுடைய ராஜாவாக அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் ஆமோனைக் கொன்றுபோட்டவர்களை வெட்டிப்போட்டு பழிவாங்குகிறார்கள்.

ஆமோன் மரித்த பின்பு, யூதாதேசத்து ஜனங்கள், தங்களுக்கு வேறு யாரையும் ராஜாவாக தெரிந்தெடுக்காமல், ஆமோனின் குமாரனாகிய யோசியாவையே அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்குகிறார்கள். யோசியா கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்கிறான். ஆமோனின் காலத்தில் யூதாதேசம் ஆவிக்குரிய காரியங்களில் அழிவின் பாதையை நோக்கி போய்க்கொண்டிருந்தது. யோசியாவின் காலத்திலோ, யூதாதேசத்திலே, மறுபடியும் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று.

ஆமோனின் ராஜ்யபாரத்தைப்பற்றியும், அவனுடைய வர்த்தமானங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆமோன் செய்த மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது (2இராஜா 21:25).

ஆமோன் ஊசாவின் தோட்டத்திலுள்ள அவனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறான்; ஆமோன் ஸ்தானத்திலே அவன் குமாரனாகிய யோசியா ராஜாவாகிறான் (2இராஜா 21:26).

ஆமோன் யூதாவின் ராஜாக்களில் மிகவும் பொல்லாதவனாயிருக்கிறான். ஆமோனின் குமாரனாகிய யோசியாவோ யூதாவின் ராஜாக்களில் மிகவும் செம்மையானவனாயிருக்கிறான்.

34 அதிகாரம்

யூதாவின் ராஜாவாகிய யோசியாவின் பொதுவான சுபாவங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (2நாளா 34:1,2). யோசியா யூதாதேசத்திலே விக்கிரகாராதனையை அகற்றிப்போடவேண்டுமென்று வைராக்கியத்தோடிருக்கிறான் (2நாளா 34:3-7).

யோசியா கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கிறான் (2நாளா 34:8-13). கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் ஆலயத்திலே கண்டுபிடிக்கப்படுகிறது. யோசியா அந்தப் புஸ்தகத்தை வாசித்து ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறான் (2நாளா 34:14-28).

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகள் ஜனங்களுக்கு வாசிக்கப்படுகிறது. அவர்கள் கர்த்தரோடு செய்து கொண்ட தங்கள் உடன்படிக்கையை மறுபடியுமாய்ப் புதுப்பித்துக்கொள்கிறார்கள் (2நாளா 34:29-33).

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் 2இராஜா 22-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசியாவின் சுபாவம் 2நாளா 34:1-7

2நாளா 34:1. யோசியா ராஜாவாகிறபோது எட்டுவயதாயிருந்து, முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 34:2. அவன் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில், வலதுஇடதுபுறமாக விலகாமல் நடந்தான்.

2நாளா 34:3. அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்.

2நாளா 34:4. அவனுக்கு முன்பாகப் பாகால்களின் பலிபீடங்களை இடித்தார்கள்; அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டி, விக்கிரகத்தோப்புகளையும் வார்ப்பு விக்கிரகங்களையும் வெட்டு விக்கிரகங்களையும் உடைத்து நொறுக்கி, அவைகளுக்குப் பலியிட்டவர்களுடைய பிரேதக்குழிகளின்மேல் தூவி,

2நாளா 34:5. பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரித்து, இவ்விதமாய் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான்.

2நாளா 34:6. அப்படியே அவன் மனாசே எப்பிராயீம் சிமியோன் என்னும் பட்டணங்களிலும், நப்தலி மட்டும், பாழான அவைகளின் சுற்றுப்புறங்களிலும் செய்தான்.

2நாளா 34:7. அவன் இஸ்ரவேல் தேசம் எங்குமுள்ள பலிபீடங்களையும் விக்கிரகத்தோப்புகளையும் தகர்த்து, விக்கிரகங்களை நொறுக்கித் தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் வெட்டிப்போட்ட பின்பு எருசலேமுக்குத் திரும்பினான்.

யோசியா ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருக்கிறான். அவன் தன்னுடைய இளவயதில் ராஜாவாகி, யூதாதேசத்தை முப்பத்தொரு வருஷம் ஆட்சிசெய்கிறான். அவனுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பகாலத்தில், அவனுடைய தகப்பனாகிய ஆமோனுடைய காலத்தில் இருந்ததுபோலவே, யூதாதேசம் இருக்கிறது.

யோசியா ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருக்கிறான். அவன் சிறுபிள்ளையாகயிருப்பதினால் யூதாவின் பிரபுக்கள், ராஜாங்க பொறுப்புக்களை ஏற்று, அவனுக்கு பதிலாக ஆட்சிசெய்கிறார்கள். யோசியா ராஜாவாகயிருந்தாலும் நிர்வாக பொறுப்புக்களெல்லாம், யூதாவின் பிரபுக்கள் கையிலே இருக்கிறது.

இஸ்ரவேலின் 42 ராஜாக்களில் யோசியாவே குறைந்த வயதில் ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தவன். சமஸ்த இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்த பின்பு, யூதாவின் ராஜாக்களில் இவன் 16 ஆவது ராஜாவாக ஆட்சி புரிகிறான்.

யோசியா ராஜாவாகிறபோது எட்டுதாயிருக்கிறான். யோசியாவின் தகப்பனாகிய ஆமோனும் ஆமோனின் தகப்பனாகிய மனாசேயும் துன்மார்க்கராயிருந்தார்கள். யோசியா சிறுபிள்ளையாகயிருந்தாலும், அவனுடைய முன்னோர்களின் தீயசுபாவங்கள் அவனை சிறிதும் பாதிக்கவில்லை.

யோசியா தன்னுடைய தகப்பனின் வழியையும், தாத்தாவின் வழியையும் பின்பற்றவில்லை. அவன் தன் முன்னோர்களிடத்தில் காணப்பட்ட தப்பிதங்களைப் பார்த்து, எச்சரிப்படைகிறான். யோசியா கர்த்தருடைய வழியில் நடக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான்.

"பின்னும், இதோ, அவனுக்கு ஒரு குமாரன் பிறந்து, அவன் தன் தகப்பன் செய்த எல்லாப் பாவங்களையும் கண்டு, தான் அவைகளின்படி செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, மலைகளின்மேல் சாப்பிடாமலும், இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும், தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்"

"ஒருவனையும் ஒடுக்காமலும், அடைமானத்தை வைத்துக்கொண்டிராமலும், கொள்ளையிடாமலும், தன் அப்பத்தைப் பசித்தவனுக்குப் பங்கிட்டு, வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரந்தரிப்பித்து, சிறுமையானவனுக்கு நோவுண்டாக்காதபடித் தன் கையை விலக்கி, வட்டியும் பொலிசையும் வாங்காமலிருந்து என் நியாயங்களின்படி செய்து, என் கட்டளைகளில் நடந்தால், அவன் தன் தகப்பனுடைய அக்கிரமத்தினிமித்தம் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான்" (எசே 18:14-17).

யோசியா ராஜாவாகிறபோது, எட்டு வயதாயிருந்து, முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; போஸ்காத் ஊரானாகிய அதாயாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் எதிதாள். யோசியா கர்த்தரின் பார்வைக்குப் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடக்கிறான் (2இராஜா 22:1,2).

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் யோசியாவுக்கு கிடைத்திருக்கிறது. யோசியாவின் தகப்பனாகிய ஆமோன் தன்னுடைய பாவத்தினால் அழிந்துபோனான். ஆனால் யோசியாவோ கர்த்தர் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.

கர்த்தருடைய கிருபையினால் செய்ய முடியாத காரியம் என்று எதுவுமே இல்லை. யோசியா, ஆமோனைப்போல ஒரு சில தப்பிதங்களை செய்தாலும், அவன் பாவத்தில் விழுந்துவிடாதவாறு கர்த்தர் அவனைப் பாதுகாக்கிறார். கர்த்தர் யோசியாவை தம்முடைய நீதியின் பாதையில் வழிநடத்துகிறார். யோசியா தன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகவும் எச்சரிப்பாயிருந்து, கர்த்தருடைய நாமத்தை தூஷிக்காமல், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான்.

யோசியா தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பிக்கிறான். அவன் பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள், தோப்புகள், சுரூபங்கள், விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்குகிறான் (2நாளா 34:3).

யோசியாவின் ஆட்சிக் காலத்தில் செப்பனியாவும், எரேமியாவும் தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். இவர்கள் இருவரும் யோசியாவின் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு உதவி செய்கிறார்கள். (எரே 1:2; செப் 1:1).

யோசியா கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில், வலதுஇடதுபுறமாக விலகாமல் நடக்கிறான் (2நாளா 34:2). யோசியாவின் பன்னிரண்டாம் வருஷத்தில், யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஆரம்பமாகிறது.

யோசியா தன்னுடைய ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில் கர்த்தரைத் தேடுகிறான். அப்போது அவனுக்கு பதினாறு வயதாயிற்று. யோசியா தன்னுடைய ராஜ்யபாரத்தின் பன்னிரண்டாவது வருஷத்தில், யூதாதேசத்தின் ஆட்சிப்பொறுப்பை முற்றிலுமாகப் பெற்றுக்கொள்கிறான். அப்போது அவன் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்க தொடங்குகிறான்.

யோசியாவின் ஊழியக்காரர் அவனுக்கு முன்பாகப் பாகால்களின் பலிபீடங்களை இடிக்கிறார்கள்; அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டுகிறார்கள், விக்கிரகத்தோப்புகளையும் வார்ப்பு விக்கிரகங்களையும் வெட்டு விக்கிரகங்களையும் உடைத்து நொறுக்கிறார்கள். யோசியா விக்கிரங்களுக்கு பலியிட்டவர்களுடைய பிரேதக்குழிகளின்மேல் தூவி, பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரிக்கிறான். இவ்விதமாய் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கிறான் (2நாளா 34:4,5).

மனாசேயைப்போல யோசியாவும் யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றுகிறான். யோசியா விக்கிரகங்களை உடைப்பதோடு, அவற்றை சுட்டெரிக்கவும் செய்கிறான்.

யோசியா யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்த சம்பவம், அவனுடைய பன்னிரண்டாம் வருஷத்தில் நடைபெற்றது (2நாளா 34:3) என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த சம்பவம் அவனுடைய பதினெட்டாம் வருஷத்தில் நடைபெற்றது என்று ராஜாக்கள் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே கர்த்தருக்கு இந்தப் பஸ்கா எருசலேமிலே ஆசரிக்கப்பட்டது" (2இராஜா 23:23).

யோசியா தன்னுடைய பன்னிரண்டாம் வயதில், யூதாவிலும் எருசலேமிலும், விக்கிரகாராதனைக்கு விரோதமாக, ஒரு முக்கியமான காரியத்தை செய்திருக்கிறான். ஒருவேளை அவன் தன் பன்னிரண்டாம் வயதில், யூதாவிலிருந்தும் எருசலேமிலிருந்தும் விக்கிரகங்களை அகற்றிப்போட ஆரம்பித்திருக்கலாம்.

யோசியா மனாசே, எப்பிராயீம், சிமியோன் என்னும் பட்டணங்களிலும், நப்தலி மட்டும், பாழான அவைகளின் சுற்றுப்புறங்களிலும் இப்படியே செய்கிறான். யோசியா இஸ்ரவேல் தேசம் எங்குமுள்ள பலி பீடங்களையும் விக்கிரகத்தோப்புகளையும் தகர்த்து, விக்கிரகங்களை நொறுக்கித் தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் வெட்டிப்போட்டபின்பு எருசலேமுக்குத் திரும்புகிறான் (2நாளா 34:6,7). யோசியா யூதாதேசத்தையும் கர்த்தருடைய ஆலயத்தையும் சுத்திகரித்து முடிக்கிறான்.

யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுகிறது. இந்த சம்பவத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. யூதா ராஜாக்களுடைய சரித்திரத்தில் இதுபோன்ற ஆவிக்குரிய மறுமலர்ச்சி இதுவரையிலும் நடைபெறவில்லை.

யூதாதேசம் முழுவதும் விக்கிரகாராதனைகளும், அசுத்தங்களும் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய மகிமை யூதாதேசத்திலே தங்கவேண்டுமென்றால், முதலாவதாக, கர்த்தருக்கு அருவருப்பான காரியங்களையெல்லாம் யூதாதேசத்தைவிட்டு நீக்கிப்போடவேண்டும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். மேடைகளிலே தூபங்காட்டுகிறார்கள். யோசியா ராஜாவும், யூதாவின் ஜனங்களும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினாலும், ராஜா மாத்திரமே இந்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாயிருக்கிறான். யூதா மனுஷரில் அநேகர், மனந்திரும்புவதையும், தங்கள் இருதயத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதையும் வெறுக்கிறார்கள். அவர்கள் இன்னும் விக்கிரகங்களையே ஆராதிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

யூதாதேசத்திலும், எருசலேம் நகரத்திலும் துன்மார்க்கம் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தில்கூட அசுத்தமும் தீட்டும் இருக்கிறது. சமஸ்த இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருக்கு பரிசுத்தமான ஆலயத்தைக் கட்டினார். சாலொமோன் கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதிக்கும் பரிசுத்த ஸ்தலமாகவும் இந்த பரிசுத்த ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணினார்.

ஆனால் சாலொமோனுக்கு பின் வந்த ராஜாக்களோ கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள். சாலொமோன் கட்டின தேவாலயத்தில் விக்கிரகங்களின் பணிமுட்டுக்கள் காணப்படுகிறது. கர்த்தருடைய பரிசுத்த பணிமுட்டுக்கள் இருக்கவேண்டிய இடத்திலே, பாகாலுக்கும், விக்கிரகதோப்புக்கும், வானத்தின் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருக்கிற பணிமுட்டுக்கள் நிரம்பியிருக்கிறது.

இந்த விக்கிரகங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த பணிமுட்டுக்களையெல்லாம், யோசியா ராஜா கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்குவதற்கு கட்டளையிடுகிறான்.

யோசியா ராஜா: பாகாலுக்கும் விக்கிரகத்தோப்புக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்க, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும் இரண்டாம் வகுப்பிலுள்ள ஆசாரியர்களுக்கும் வாசல் காக்கிறவர்களுக்கும் கட்டளையிடுகிறான் *(2இராஜா 23:4).*

விக்கிரகங்களின் பணிமுட்டுக்களை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன் வெளிகளில் சுட்டெரித்து, அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணுகிறான்.

யோசியா யூதாதேசத்திலே விக்கிரகாராதனையை ஒடுக்குகிறான். ஆனாலும் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், விக்கிரகங்களுக்கு பயன்படுத்தப்படும் பணிமுட்டுக்களை பத்திரமாக பாதுகாத்து வைக்கிறார்கள். அந்த பணிமுட்டுக்களை அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலேயே பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

கர்த்தரின் ஆலயத்திற்குள் போகிற இடந்தொடங்கி, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கிற நாத்தான்மெலெக் என்னும் பிரதானியின் அறைவீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருக்கிற குதிரைகள் இருக்கிறது *(2இராஜா 23:11).*

யோசியா இந்தக் குதிரைகளை அகற்றி, சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரிக்கிறான். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கு, இந்தக் குதிரை விக்கிரகங்களும் முக்கியமானதாகயிருக்கிறது. விக்கிரகங்கள் இந்தக் குதிரைகள்மீது ஏறிப்போகும் என்று விக்கிரகாராதனைக்காரர்கள் நம்புகிறார்கள்.

"அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது" *(சங் 19:5).*

கர்த்தருடைய ஆலயத்திலே விக்கிரகங்களுக்கு பணிமுட்டுக்கள் இருப்பதோடு தோப்பு விக்கிரகங்களும் அங்கே இருக்கிறது. யோசியா தோப்பு விக்கிரகத்தை கர்த்தரின் ஆலயத்திலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோய், அதைத் கீதரோன் ஆற்று ஓரத்திலே சுட்டெரித்து, அதைத் தூளாக்கி, அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகளின்மேல் போடுவிக்கிறான் *(2இராஜா 23:6).*

கர்த்தருடைய ஆலயத்திற்கு அருகே இலச்சையான புணர்ச்சிக்காரர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாவித அசுத்தங்களையும், காமவிகாரங்களையும் செய்கிறவர்கள். இயற்கையான சுபாவங்களுக்கு புறம்பான காரியங்களில் ஈடுபடுகிறவர்கள். இந்த ஸ்திரீகள் விக்கிரகாராதனை என்னும் பெயரில், வேசித்தனங்களையும், விபசாரங்களையும் செய்கிறார்கள். விக்கிரகங்களின் மகிமைக்காக தாங்கள் வேசித்தனம்பண்ணுவதாக இந்த ஸ்திரீகள் சொல்லுகிறார்கள்.

"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" *(ரோம 1:24).*

கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே ஸ்திரீகள் தோப்பு விக்கிரகத்துக்குக் கூடாரங்களை நெய்த இடத்தில், இலச்சையான புணர்ச்சிக்காரரின் வீடுகள் இடிக்கிறது. யோசியா இவர்களுடைய வீடுகளையெல்லாம் இடித்துப்போடுகிறான் *(2இராஜா 23:7).*

இலச்சையான புணர்ச்சிக்காரர், வீனஸ் என்னும் விக்கிரக தெய்வத்திற்கு கூடாரங்களை நெய்கிறார்கள். இவர்கள் எல்லாவிதமான அசுத்தங்களையும் நடப்பிக்கிறார்கள். தங்களுடைய அசுத்தங்களை அவர்கள் கர்த்தரின் ஆலயத்திற்கு அருகே நடப்பிக்கிறார்கள்.

யோசியா ராஜா யூதாவின் பட்டணங்களிலுள்ள எல்லா ஆசாரியரையும் வரச்சொல்லி, கேபாமுதல் பெயெர்செபாமட்டும் ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளைத் தீட்டாக்குகிறான். அவன் ஒலிமுகவாசல்களின் மேடைகளையும், பட்டணத்து வாசலுக்குப்போகும் வழிக்கு இடதுபுறமாயிருக்கிற பட்டணத்தலைவனாகிய யோசுவாவின் வாசற்படியில் இருந்த மேடையையும் இடித்துப்போடுகிறான்.

யோசியா யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினதும், ஆகாசுடைய மேல்வீட்டில் இருந்ததுமான பலிபீடங்களையும், மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்களையும் இடித்துப்போடுகிறான். அவைகளின் தூளை அங்கேயிருந்து எடுத்துக் கீதரோன் ஆற்றில் கொட்டுகிறான் *(2இராஜா 23:12).*

ஆகாஸ் ராஜா தன்னுடைய வீட்டு மாடியின் மேல் கூரையிலேயே விக்கிரகங்களுக்கு பலிபீடத்தை கட்டியிருக்கிறான். அவனுடைய வீட்டின் மேல்மாடியே, விக்கிரகங்களுக்கு மேடைகளாயிருக்கிறது. அவன் தன் வீட்டின் மேல்மாடியில் விக்கிரகங்களுக்கு பலிபீடங்களையும் கட்டியிருக்கிறான். ஆகாஸ் இந்த விக்கிரகங்களை தன்னுடைய குடும்ப தெய்வங்கள் என்று சொல்லுகிறான்.

"எந்த வீடுகளின்மேல் வானத்தின் சகல சேனைக்கும் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளாகிய எருசேலமின் வீடுகளும் யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப்பட்டவைகளாய் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்" *(எரே 19:13).*

"வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும், கர்த்தரைவிட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்" *(செப் 1:5,6).*

இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கில் தோப்பேத் என்னும் ஸ்தலம் இருக்கிறது. இது எருசலேமுக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறது. இங்கே மோளேகு என்னும் விக்கிரகோவில் இருக்கிறது. மோளேகின் உருவம் மிகவும் பயங்கரமாகயிருக்கும். மோளேகை ஆராதிக்கிறவர்கள் தங்கள் பிள்ளைகளை, மோளேகுக்கு அக்கினியில் தகனிப்பார்கள்.

மோளேகை ஆராதிக்கிறவர்கள் தங்கள் குமாரரையும் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணுவார்கள். வேறு சிலரோ தங்கள் பிள்ளைகளை மோளேக்கு அக்கினியிலே தகனபலியாக செலுத்துவார்கள்.

"இதோ, ஜனங்கள் அக்கினிக்கு இரையாக உழைத்து, ஜனங்கள் விருதாவாக இளைத்துப்போகிறது கர்த்தருடைய செயல் அல்லவோ?" (ஆப 2:13).

தோப்பேத் என்னும் பெயர் "தோப்" என்னும் பெயரிலிருந்து உருவாயிற்று. தோப் என்னும் வார்த்தைக்கு "மேளம்" என்று பொருள். இது ஒரு வாத்தியக்கருவி. மோளேகை ஆராதிக்கிறவர்கள், தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு முன்பாக அக்கினியிலே தகனிக்கும்போது, அந்த சிறுபிள்ளைகள் வேதனை தாங்கமுடியாமல் கதறி அழும். பிள்ளைகளின் அழுகை சத்தத்தைக் கேட்பதற்கே பயங்கரமாகயிருக்கும்.

அக்கினியில் தகனிக்கப்படுகிற பிள்ளைகளின் அழுகை சத்தம் தங்கள் செவிகளில் கேட்கக்கூடாது என்பதற்காக, ஏராளமான மேளவாத்தியங்களை பலமாக தட்டுவார்கள். மேளத்தின் சத்தத்தில், பிள்ளைகளின் அழுகை குரல் ஜனங்களுக்கு கேட்காது.

ஒருவனும் மோளேகுக்கென்று தன் குமாரனையாகிலும் தன் குமாரத்தியையாகிலும் தீக்கடக்கப் பண்ணாதபடிக்கு, இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலிருக்கிற தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும் யோசியா தீட்டாக்குகிறான் (2இராஜா 23:10).

சாலொமோன் தன்னுடைய ஆட்சிக்காலத்திலே, கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினதோடு, விக்கிரகங்களுக்கு மேடைகளையும் கட்டினார்.

எருசலேமுக்கு எதிரே இருக்கிற நாசமலையின் வலதுபுறத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும், மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டினார். யோசியா சாலொமோன் கட்டின மேடைகளையெல்லாம் தீட்டாக்குகிறான் (2இராஜா 23:13).

யூதாதேசத்திலே சாலொமோன் கட்டின மேடைகளை தவிர, கேபாமுதல் பெயெர்செபாமட்டும் ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளும், ஒலிமுகவாசல்களின் மேடைகளும் பட்டணத்து வாசலுக்குப்போகும் வழிக்கு இடதுபுறமாயிருக்கிற பட்டணத்தலைவனாகிய யோசுவாவின் வாசற்படியில் இருந்த மேடையும் இருந்தது. யோசியா இந்த மேடைகள் எல்லாவற்றையும் இடித்துப்போடுகிறான் (2இராஜா 23:8).

யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின்மேல் தூபங்காட்ட, யூதாவின் ராஜாக்கள் பூஜாசாரிகளை வைத்திருந்தார்கள். இவர்களைத்தவிர, யூதாவிலே பாகாலுக்கும் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங்காட்டினவர்களும் இருந்தார்கள். யோசியா இவர்களெல்லோரையும் அகற்றிவிடுகிறான் (2இராஜா 23:5)

"நான் யூதாவின்மேலும், எருசலேமிலுள்ள எல்லாக் குடிகளின்மேலும் என் கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும், ஆசாரியர்களோடேகூட கெம்மரீம் என்பவர்களின் பேரையும், வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும், கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக்குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்" (செப் 1:4-6).

"என்னைக் கர்த்தருடைய ஆலயத்து வடக்கு வாசலின் நடையிலே கொண்டுபோனார்; இதோ, அங்கே தம்மூசுக்காக அழுதுகொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்" (எசே 8:14).

தம்மூசுக்காக அழுகிறவர்கள், கறுப்புநிற வஸ்திரம் தரித்து ஒப்பாரி பாடுவார்கள். தம்மூசின் கோவிலிலே எப்போதும் அழுகை குரல் கேட்டுக்கொண்டே இருக்கும். இவர்களைத் தவிர யூதாதேசத்திலே அஞ்சனக்காரரும், குறிசொல்லுகிறவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள்.

ஆசாரியனாகிய இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கு, யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும், சுரூபங்களையும் நரகலான விக்கிரகங்களையும், யூதாதேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்குகிறா (2இராஜா 23:24).

யூதாதேசத்திலே விக்கிரகாராதனையின் அடையாளங்கள் எதுவும் இல்லாதபடிக்கு, யோசியா அவற்றை நிர்மூலம்பண்ணி, யூதாதேசத்தை சுத்தம்பண்ணுகிறான். பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவும், மற்ற ஆசாரியர்களும், யோசியா ராஜாவின் கட்டளைப் பிரகாரமாக, தேவாலயத்தை சுத்திகரிக்கிறார்கள்.

பாகாலுக்கும் விக்கிரகத்தோப்புக்கும் வானத்தில் சகல சேனைகளுக்கும் பண்ணப்பட்டிருந்த சகல பணிமுட்டுகளையும் கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறம்பாக்க, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும் இரண்டாம்வகுப்பிலுள்ள ஆசாரியர்களுக்கும் வாசல் காக்கிறவர்களுக்கும் யோசியா ராஜா கட்டளையிடுகிறான். அவர்கள் விக்கிரகங்களின் பணிமுட்டுக்களை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன் வெளிகளில் சுட்டெரித்து, அவைகளின் சாம்பலைப் பெத்தேலுக்குக் கொண்டுபோகிறார்கள் (2இராஜா 23:4).

விக்கிரகங்களை ஆராதித்த ஆசாரியர்களையெல்லாம் யோசியா அகற்றிப்போடுகிறான். ஆரோனின் சந்ததியில் வராதவர்கள், தங்களை ஆசாரியர்கள் என்று சொல்லிக்கொண்டு, வானத்தின் சகல சேனைகளுக்கும், பாகாலுக்கும் தூபங்காட்டுகிறார்கள். யோசியா இவர்களெல்லோரையும் நிர்மூலம்பண்ணுகிறான்.

ஆரோனின் சந்ததியில் வந்தவர்களில் சிலர் மேடைகளின் ஆசாரியர்களாயிருக்கிறார்கள் இவர்கள் எருசலேமிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடாமல், மேடைகளிலே தூபங்காட்டுகிறார்கள். யோசியா இவர்களுக்கு போஜன ஆதாரத்தைக் கொடுக்கிறான். இவர்கள் தங்கள் சகோதரருக்குள்ளே புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கிறதற்குமாத்திரம் உத்தாரம் பெற்றுக்கொள்கிறார்கள் (2இராஜா 23:9).

ஆரோனின் சந்ததியில் வந்திருக்கிற ஆசாரியர்களை யோசியா விரும்புகிறான். ஆனால் இவர்களோ கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடாமல், மேடைகளில் பலியிடுகிறார்கள். பாகாலுக்கு மேடைகளில் பலியிட்ட ஆசாரியர்களை யோசியா கொன்றுபோடுகிறான்.

ஆரோனின் சந்ததியில் வந்திருக்கிற இந்த ஆசாரியர்கள், மேடைகளில் பலியிட்டாலும், அங்கே விக்கிரகங்களுக்கு பலியிடாமல், கர்த்தருக்கே பலியிடுகிறார்கள். கர்த்தருடைய ஆசாரியர்கள் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடவேண்டும். ஆனால் இந்த ஆசாரியர்களோ மோசேயின் பிரமாணத்தைமீறி, மேடைகளின்மேல் கர்த்தருக்கு பலியிடுகிறார்கள்.

யோசியா இந்த ஆசாரியர்களைக் கொன்றுபோடவுமில்லை. அவர்களுக்கு அதிகமான சகாயம்பண்ணவுமில்லை. அவர்களுக்கு போஜனம் மட்டும் கிடைப்பதற்கு உத்தரவு கொடுக்கிறான். அவர்களுக்கு நேர்த்தியான போஜனமும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு புளிப்பில்லாத அப்பம் மாத்திரமே கொடுக்கப்படுகிறது. புளிப்பில்லாத அப்பம் சுவையற்றது. அது ருசியில்லாதது.

யோசியா யூதாதேசத்திலுள்ள விக்கிரகங்களையெல்லாம் சுட்டெரித்துப் போடுகிறான். அவன் தோப்பு விக்கிரகத்தை கர்த்தரின் ஆலயத்திலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோய், அதைத் கீதரோன் ஆற்று ஓரத்திலே சுட்டெரித்து, அதைத் தூளாக்கி, அந்தத் தூளை ஜனபுத்திரருடைய பிரேதக் குழிகளின்மேல்போடுகிறான் (2இராஜா 23:6).

கீதரோன் ஆறு எருசலேமுக்கு புறம்பே இருக்கிறது. எருசலேம் நகரத்திலே மரித்துப்போனவர்களை, கீதரோன் ஆற்றண்டையிலே அடக்கம்பண்ணுவது வழக்கம். யூதருடைய பிரமாணத்தின்படி, மரித்துப்போனவர்களையும், அவர்கள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற கல்லறைகளையும் தொடுவது தீட்டானது. கீதரோன் ஆற்றண்டையிலே தீட்டானதை கொண்டு வந்து சேர்ப்பது வழக்கம். யோசியா தோப்பு விக்கிரகங்களை கீதரோன் ஆற்றண்டைக்கு கொண்டு வந்து, அங்கே அவற்றை சுட்டெரிக்கிறான். தோப்பு விக்கிரகங்களெல்லாம் தீட்டானவை.

கீதரோன் ஆற்றண்டையிலே செத்துப்போன மனுஷருடைய எலும்புகள் சுட்டெரிக்கப்படும். மனுஷஎலும்புகளின் சாம்பலும், தோப்பு விக்கிரகங்களின் சாம்பலும் ஒன்றாய்க் கலக்கப்பட்டு, பிரேதக்குழிகளின்மேல் போடப்படுகிறது.

யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கின பலிபீடங்களை யோசியா இடித்து, அவைகளின் தூளை, அங்கேயிருந்து எடுத்து, மனுஷருடைய பிரேதங்களை அடக்கம்பண்ணும் இடமாகிய, கீதரோன் ஆற்றிலே கொட்டுகிறான் (2இராஜா 23:12).

இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கட்டியிருந்த மேடைகளையும், சிலைகளையும், விக்கிரகத்தோப்புகளையும், யோசியா உடைத்து, அவற்றை நிர்மூலமாக்கி, அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்புகிறான் (2இராஜா 23:14). விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் இப்போது மனுஷருடைய எலும்புகள் நிரப்பப்பட்டிருக்கிறது. இந்த இடம் தீட்டாக்கப்படுகிறது. விக்கிரகங்களை ஆராதித்த இடம், இப்போது எந்த ஆராதனையும் நடத்த முடியாதபடி, தீட்டான இடமாயிருக்கிறது.

யூதாதேசத்திலிருந்த புணர்ச்சிக்காரர்களின் வீடுகளையெல்லாம் யோசியா இடித்துப்போடுகிறான். இவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள்.இவர்கள் ஆண்புணர்ச்சிக்காரராயிருக்கிறார்கள். யோசியா புணர்ச்சிக்காரர்களின் வீடுகளை இடித்துப்போட்டதுபோல, விக்கிரகங்களின் மேடைகளையும் இடித்துப்போடுகிறான் (2இராஜா 23:8).

யோசியா இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலிருக்கிற தோப்பேத் என்னும் ஸ்தலத்தையும் தீட்டாக்குகிறான். இந்த இடமும் மரித்தோரை அடக்கம்பண்ணும் இடமாக மாற்றப்படுகிறது.

"கர்த்தர் சொன்னது: நீ போய்க் குயவன் வேலையான ஒரு கலசத்தைக் கொண்டு, ஜனத்தின் மூப்பரிலும் ஆசாரியர்களின் மூப்பரிலும் சிலரைக் கூட்டிக்கொண்டு, கிழக்கு வாசலுக்கு எதிரான இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலே புறப்பட்டுப்போய், நான் உன்னோடே சொல்லும் வார்த்தைகளை அங்கே பிரசித்தப்படுத்து" (எரே 19:1,2).

எருசலேம் நகரத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், எருசலேம் நகரம் முழுவதும் தோப்பேத் என்னும் தீட்டான ஸ்தலத்தைப்போல மாற்றப்படும். எருசலேம் நகரம் மனுஷருடைய எலும்புகளால் நிரப்பப்படும்.

யூதாவின் ராஜாக்கள் கர்த்தருடைய ஆலயத்திலே சூரியனுக்கென்று குதிரைகளையும் இரதங்களையும் செய்து வைத்திருக்கிறார்கள். யோசியா இவற்றை அக்கினியிலே சுட்டெரிக்கிறான் (2இராஜா 23:11).

யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும், சுரூபங்களையும் நரகலான விக்கிரகங்களையும், யூதாதேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்குகிறான் (2இராஜா 23:24).

யோசியா தெற்கு யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். இவன் யூதாதேசத்தைச் சுத்திகரிப்பதோடு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தையும் சுத்திகரிக்கிறான். வடக்கு இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரை அசீரியர்கள் சிறைப்பிடித்து கொண்டு போய்விட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் சிறைப்பட்டுப்போன பின்பு, வடக்கு இஸ்ரவேல் தேசம் குடியிருப்பாரில்லாமல் வெறுமையாய் இருக்கிறது. அசீரியர்கள் மற்ற தேசங்களிலிருந்து சிறைப்பிடித்துக்கொண்டு வந்தவர்களை, வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் பட்டணங்களிலே குடியேற்றுகிறார்கள். ஆனாலும் குடியேறுகிறவர்களின் எண்ணிக்கை போதுமானதாயில்லை. வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே இன்னும் அநேக பட்டணங்கள் குடியிருப்பாரில்லாமல் வெறுமையாயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தின் பல பட்டணங்களிலே, சொற்ப எண்ணிக்கை ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் யூதாதேசத்து ராஜாவாகிய யோசியாவின் உதவியை நாடுகிறார்கள்.

"அதன்பின்பு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி, எருசலேமில் இருக்கிற கர்த்தருடைய ஆலயத்திற்கு வாருங்கள் என்று எசேக்கியா இஸ்ரவேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பினதும் அன்றி, எப்பிராயீம் மனாசே கோத்திரங்களுக்கும் நிருபங்களை எழுதியனுப்பினான்" *(2நாளா 30:1)*

"பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரித்து, இவ்விதமாய் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான். அப்படியே அவன் மனாசே எப்பிராயீம் சிமியோன் என்னும் பட்டணங்களிலும், நப்தலிமட்டும், பாழான அவைகளின் சுற்றுப்புறங்களிலும் செய்தான்" *(2நாளா 34:5,6).*

யூதாவின் ராஜாவாகிய யோசியா, வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் பட்டணங்களுக்குப் போகும்போது, அந்தப் பட்டணங்களிலிருக்கிற விக்கிரகங்களையும் சிலைகளையும் நிர்மூலம்பண்ணி, அந்தப் பட்டணங்களையும் சுத்திகரிக்கிறான்.

இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாம் பெத்தேலில் உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் ஆகிய அவ்விரண்டையும் அவன் இடித்து, அந்த மேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி, விக்கிரகத்தோப்பையும் சுட்டெரிக்கிறான் *(2இராஜா 23:15).*

யெரொபெயாம் பெத்தேலிலும், தாணிலும் பொற்கன்றுக்குட்டிகளை நிறுவியிருந்தான். யோசியா பெத்தேலுக்குப்போகும்போது அங்கே பொன்கன்றுக்குட்டி இல்லை. ஒருவேளை அசீரியர்கள் அந்த பொன்கன்றுக்குட்டியை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போயிருக்கலாம். பெத்தேலில் கன்றுக்குட்டி இல்லாவிட்டாலும், யெரொபெயாம் அங்கே உண்டாக்கியிருந்த பலிபீடமும் மேடையும் இருக்கிறது. யோசியா இவற்றை இடித்துப்போடுகிறான்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகாராதனை தீவிரமாகயிருந்தது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னார்கள். ஆனால் இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணின ராஜாக்களோ, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகங்களை ஆராதிக்கிற ஆசாரியர்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கென்று விசேஷித்த கல்லறைகளும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

யோசியா பெத்தேலுக்குப்போனபோது, அந்த மலையிலிருக்கிற கல்லறைகளைக் கண்டு, ஆட்களை அனுப்பி, அந்தக் கல்லறைகளிலுள்ள எலும்புகளை எடுத்து வரச்செய்து, இப்படி நடக்கும் என்று தேவனுடைய மனுஷன் கூறின கர்த்தருடைய வார்த்தையின்படியே, அவைகளை அந்தப் பலிபீடத்தின்மேல் சுட்டெரித்து அதைத் தீட்டாக்குகிறான் *(2இராஜா 23:16).*

யோசியா அவ்விடங்களில் இருக்கிற மேடைகளின் ஆசாரியர்களையெல்லாம் பலிபீடங்களின்மேல் கொன்றுபோட்டு, அவைகளின்மேல் மனுஷரின் எலும்புகளைச் சுட்டெரித்து, எருசலேமுக்குத் திரும்புகிறான் *(2இராஜா 23:20).*

கர்த்தருக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேலின் ராஜாக்கள் சமாரியாவின் பட்டணங்களில் உண்டாக்கியிருந்த மேடைகளின் கோவில்களையெல்லாம் யோசியா தகர்த்துப்போடுகிறான் *(2இராஜா 23:19).*

யோசியா பெத்தேலுக்கு அருகாமையிலுள்ள கல்லறையை பார்த்தபோது, ஒரு கல்லறையில் குறிப்படையாளம் காணப்படுகிறது. அப்பொழுது யோசியா, அந்தப் பட்டணத்து மனுஷரிடத்தில், "நான் காண்கிற அந்தக் குறிப்படையாளம் என்ன" என்று கேட்கிறான். அதற்கு, அந்தப் பட்டணத்து மனுஷர்: "அது யூதாவிலிருந்து வந்து, நீர் செய்த இந்தக் கிரியைகளைப் பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூறி, அறிவித்த தேவனுடைய மனுஷனின் கல்லறை" *(2இராஜா 23:17)* என்று சொல்லுகிறார்கள்.

அதற்கு யோசியா அந்தப் பட்டணத்து மனுஷரை நோக்கி, "இருக்கட்டும், ஒருவனும் அவன் எலும்புகளைத் தொடவேண்டாம்" *(2இராஜா 23:18)* என்று சொல்லுகிறான்; அப்படியே அவன் எலும்புகளைச் சமாரியாவிலிருந்து வந்த தீர்க்கதரிசியின் எலும்புகளோடு விட்டுவிடுகிறார்கள்.

இந்தத் தீர்க்கதரிசியை ஒரு சிங்கம் கொன்றுபோட்டது. இவன் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னபோதிலும், கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாக, வயதான ஒரு தீர்க்கதரிசியின் வீட்டிற்குப்போய் போஜனம்பண்ணினான். கர்த்தருடைய கோபத்தினால் இவனுக்கு மரணமுண்டாயிற்று. ஆனாலும் அந்தத் தீர்க்கதரிசியின் எலும்புகள் பாதுகாப்பாயிருக்கிறது.

வடக்கு ராஜ்யத்திலிருந்த பத்துக் கோத்திரத்தார் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்குப் போய்விட்டார்கள். ஆகையினால் இப்போது வடக்கு ராஜ்யமும், யூதா தேசத்தின்கீழ் வருகிறது. *(2இராஜா 17)*.

யோசியா செய்த நன்மையான காரியங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது அவற்றின் விவரம் வருமாறு:

1. தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் நடந்தான். *(2நாளா 34:2)*.
2. வலது இடதுபுறமாக விலகாமல் நடந்தான்.
3. தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்தான். *(2நாளா 34:3)*.
4. மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப் போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்.
5. பாகால்களின் பலிபீடங்களை இடித்தான். *(2நாளா 34:4)*.
6. அவைகளின் மேலிருந்த சிலைகளை வெட்டினான்.
7. விக்கிரகத்தோப்புகளை உடைத்து நொறுக்கினான்.
8. வார்ப்பு விக்கிரகங்களை உடைத்து நொறுக்கினான்.
9. வெட்டு விக்கிரகங்களை உடைத்து நொறுக்கினான்.
10. அவைகளுக்குப் பலியிட்டவர்களுடைய பிரேதக்குழிகளின்மேல் தூவினான்.
11. பூஜாசாரிகளின் எலும்புகளை அவர்களுடைய பீடங்களின்மேல் சுட்டெரித்தான். *(2நாளா 34:5)*.
12. யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான்.
13. சமாரியா அழிக்கப்பட்ட பின்பு, மீதமிருந்த பட்டணங்களையெல்லாம் சுத்திகரித்தான். *(2நாளா 34:6)*.
14. தேவனுடைய ஆலயத்தைப் பழுது பார்த்தான். *(2நாளா 34:8-17)*.
15. நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். *(2நாளா 34:19)*.
16. கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், கர்த்தரிடத்தில் விசாரியுங்கள் என்று தன் ஊழியக்காரருக்குக் கட்டளையிட்டான். *(2நாளா 34:21)*.

17. கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதே போன படியினால், நம்மேல் மூண்ட கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்று அங்கிகரித்தான்.

18. கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான். (2நாளா 34:27).

19. நியாயப்பிரமாணத்தின் சத்தியத்தைக் கேட்டபோது அழுதான்.

20. இஸ்ரவேலர் எல்லோரையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கூடிவரச்செய்து, உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான். (2நாளா 34:30).

21. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரையும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணச் செய்தான். (2நாளா 34:31)

22. எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கையின்படியே செய்வதற்கு அவர்களை வழிநடத்தினான். (2நாளா 34:32).

23. இஸ்ரவேல் புத்திரருடைய தேசங்கள் எங்கும் உண்டான அருவருப்புகளை யெல்லாம் அகற்றினான். (2நாளா 34:33).

24. இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களை யெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்தான்.

25. பஸ்காவைச் சரியான காலத்தில், சரியான முறைப்படி ஆசரித்தான். (2நாளா 35:1-19).

26. ஆசாரியர்களை அவர்கள் முறைவரிசைகளில் வைத்தான். (2நாளா 35:2).

27. ஆசாரியரும், லேவியரும் தங்கள் வகுப்புக்களின் பிரகாரம் கர்த்தருக்குப் பணிவிடைகளைச் செய்ய அவர்களை வழிநடத்தினான். (2நாளா 35:3-16).

28. பலிகளைச் செலுத்துவதற்காக ஜனங்களுக்கு ஆயிரக்கணக்கான மிருகஜீவன்களைக் கொடுத்தான். (2நாளா 35:7).

யோசியாவுக்கு முன்பு, அவனுடைய தகப்பனாகிய ஆமோனின் காலத்தில், யூதாதேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாயிருந்தது. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். யோசியா யூதாவிலிருந்தும் எருசலேமிலிருந்தும் விக்கிரங்களை அகற்றிப்போட ஆரம்பித்தபோது, அவன் ஜனங்களிடத்திலிருந்து அதிகமான எதிர்ப்புக்களை சந்திக்கிறான். அந்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், யூதாதேசத்தில் சுத்திகரிப்பு நடைபெறுகிறது.

ஆறுவருஷங்களுக்கு பின்பு, கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்படுகிறது. அந்தக் காலம் வரையிலும் தேசத்தில் சுத்திகரிப்பு நடைபெறுகிறது. நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டபோதுதான், யூதாவிலும் எருசலேமிலும் ஆரம்பிக்கப்பட்ட சுத்திகரிப்பு நிறைவுபெறுகிறது.

ஆலயபழுதுபார்ப்பு 2நாளா 34:8-13

2நாளா 34:8. அவன் தேசத்தையும் ஆலயத்தையும் சுத்திகரித்தபின்பு, அவன் தன் ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே, அத்சலியாவின் குமாரனாகிய சாப்பானையும், நகரத்தலைவனாகிய மாசெயாவையும், யோவாகாசின் குமாரனாகிய யோவாக் என்னும் மந்திரியையும், தன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படிக்கு அனுப்பினான்.

2நாளா 34:9. அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் வந்து, வாசற்படியைக் காக்கிற லேவியர் மனாசேயிலும் எப்பிராயீமிலும் இஸ்ரவேலில் மீதியானவர்களெல்லாரின் கையிலும் யூதா பென்யமீன் எங்கும் சேர்த்து, எருசலேமுக்குத் திரும்பி தேவனுடைய ஆலயத்திற்குக் கொண்டுவந்த பணத்தை ஒப்புவித்து,

2நாளா 34:10. வேலையைச் செய்விக்கும்படி, கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக்காரரானவர்களின் கையில் அதைக் கொடுத்தார்கள்; இவர்கள் அதைக் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்துச் சீர்படுத்துகிறதற்கு ஆலயத்தில் வேலைசெய்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள்.

2நாளா 34:11. அப்படியே யூதாவின் ராஜாக்கள் கெடுத்துப்போட்ட அறைகளைப் பழுதுபார்க்க வெட்டின கற்களையும், இணைப்புக்கு மரங்களையும், பாவுகிறதற்குப் பலகைகளையும் வாங்கத் தச்சருக்கும் சிற்பாசாரிகளுக்கும் அதைக் கொடுத்தார்கள்.

2நாளா 34:12. இந்த மனுஷர் வேலையை உண்மையாய்ச் செய்தார்கள்; வேலையை நடத்த மெராரியின் புத்திரரில் யாகாத் ஒபதியா என்னும் லேவியரும், கோகாதியரின் புத்திரரில் சகரியாவும், மெசுல்லாமும் அவர்கள்மேல் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்; இந்த லேவியர் எல்லாரும் கீதவாத்தியங்களை வாசிக்க அறிந்தவர்கள்.

2நாளா 34:13. அவர்கள் சுமைகாரரை விசாரிக்கிறவர்களாயும், பற்பல வேலைகளைச் செய்கிறவர்கள் எல்லாரையும் கண்காணிக்கிறவர்களாயும் இருந்தார்கள்; லேவியரில் இன்னும் சிலர் கணக்கரும் மணியக்காரரும் வாசற்காவலாளருமாயிருந்தார்கள்.

யோசியா யூதாதேசத்தையும், கர்த்தருடைய ஆலயத்தையும் சுத்திகரித்த பின்பு, ஆலயத்தை பழுதுபார்க்குமாறு தன்னுடைய ஊழியக்காரருக்கு கட்டளையிடுகிறான். யோசியா தன் ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே, அத்சலியாவின் குமாரனாகிய சாப்பானையும், நகரத்தலைவனாகிய மாசெயாவையும், யோவாகாசின் குமாரனாகிய யோவாக் என்னும் மந்திரியையும், தன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படிக்கு அனுப்புகிறான் (2நாளா 34:8).

எரேமியா தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்து 5 அல்லது 6 வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (எரே 2:2). யோசியாவின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக் காலத்திலும், பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படும்போதும் எரேமியா தீர்க்கதரிசி யோசியா ராஜாவோடு கூட இருக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தை சுத்திகரித்தால் மாத்திரம் போதாது. அந்த ஆலயத்தில் கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைகளும் நடைபெறவேண்டும். ஆலயம் சுத்திகரிக்கப்படும்போது, அது ஆராதனைக்கு ஆயத்தமாயிருக்கிறது. ஆலயத்தை சுத்திகரித்த பின்பு, அங்கே கர்த்தரை ஆராதிக்கவில்லையென்றால், அந்த ஆலயம் மறுபடியும் அசுத்தமாகிவிடும்.

கர்த்தரை உண்மையாய் நேசிக்கிறவர்கள், அவருடைய ஆலயத்தில் ஆராதனை செய்வார்கள். கர்த்தர் தம்முடைய வீட்டிலே வாசம்பண்ணுவதை நேசிப்பார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் பல வருஷங்களாக ஆராதனைகள் நடைபெறவில்லை. அங்கே விக்கிரகங்களுக்கு பலிபீடங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. யோசியா விக்கிரக சிலைகளையெல்லாம் ஆலயத்திலிருந்து வெளியேற்றி, ஆலயத்தை சுத்திகரிக்கிறான்.

கர்த்தருடைய ஆலயம் சுத்திகரிக்கப்பட்டாலும் அது பழுதடைந்திருக்கிறது. யோசியா ஆலயத்தைப் பழுதுபார்க்கும் பொறுப்பை மூன்றுபேரிடம் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறான். அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் இந்தப் பணிவிடையை ஒப்புவிக்கிறார்கள்.

அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் வந்து, வாசற்படியைக் காக்கிற லேவியர் மனாசேயிலும் எப்பிராயீமிலும் இஸ்ரவேலில் மீதியானவர்களெல்லாரின் கையிலும் யூதா பென்யமீன் எங்கும் சேர்த்து, எருசலேமுக்குத் திரும்பி தேவனுடைய ஆலயத்திற்குக் கொண்டுவந்த பணத்தை ஒப்புவிக்கிறார்கள் (2நாளா 34:9).

இல்க்கியா இஸ்ரவேலில் 24 ஆவது பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்கிறான். அவர்கள் வேலையைச் செய்விக்கும்படி, கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக்காரரானவர்களின் கையில் அதைக் கொடுக்கிறார்கள்; இவர்கள் அதைக் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்துச் சீர்படுத்துகிறதற்கு ஆலயத்தில் வேலைசெய்கிறவர்கள் கையிலே கொடுக்கிறார்கள் (2நாளா 34:10).

மனாசேயிலும், எப்பிராயீமிலும் மீதியானவர்கள் இருந்ததுபோலவே பத்துக் கோத்திரத்தாரும் சிறைப்பிடித்துக் கொண்டுபோகப்பட்ட பின்பு, அந்த ஒவ்வொரு கோத்திரத்திலும் மீதியானவர்கள் இருக்கிறார்கள். எப்பிராயீம் என்னும் பெயர் பத்துக் கோத்திரத்தாரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தையாகும்.

இரண்டாம் முறையாகத் தேவாலயம் பழுதுபார்க்கப்படுகிறது. யோசியாவின் காலத்தில் ஒரு முறையும் (2நாளா 34:8-10; 2இராஜா 12:5-12) யோவாசின் காலத்தில் ஒருமுறையும் (2நாளா 24:4-12; 2இராஜா 22:1-6) ஆக இரண்டு முறைகள் தேவாலயம் பழுதுபார்க்கப்படுகிறது.

அப்படியே யூதாவின் ராஜாக்கள் கெடுத்துப்போட்ட அறைகளைப் பழுதுபார்க்க வெட்டின கற்களையும், இணைப்புக்கு மரங்களையும், பாவுகிறதற்குப் பலகைகளையும் வாங்கத் தச்சருக்கும் சிற்பாசாரிகளுக்கும் அதைக் கொடுக்கிறார்கள் (2நாளா 34:11).

கர்த்தருடைய ஆலயத்தின் வேலைகளை செய்யுமாறு நியமிக்கப்பட்ட மனுஷர், தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்கிறார்கள்; வேலையை நடத்த மெராரியின் புத்திரரில் யாகாத் ஒபதியா என்னும் லேவியரும், கோகாதியரின் புத்திரரில் சகரியாவும், மெசுல்லாமும் அவர்கள்மேல் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள்; இந்த லேவியர் எல்லாரும் கீதவாத்தியங்களை வாசிக்க அறிந்தவர்கள் (2நாளா 34:12).

லேவியர்கள் சுமைகாரரை விசாரிக்கிறவர்களாயும், பற்பல வேலைகளைச் செய்கிறவர்கள் எல்லாரையும் கண்காணிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள்; லேவியரில் இன்னும் சிலர் கணக்கரும் மணியக்காரரும் வாசற்காவலாளருமாயிருக்கிறார்கள் (2நாளா 34:13).

யோசியா தன்னுடைய பதினெட்டாம் வருஷ ராஜ்யபாரத்தின்போது, கர்த்தருடைய ஆலயத்தை பழுதுபார்க்க ஆரம்பிக்கிறான்.

யோசியா தேசத்தையும் ஆலயத்தையும் சுத்திகரித்தபின்பு, அவன் தன் ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே, அத்சலியாவின் குமாரனாகிய சாப்பானையும், நகரத்தலைவனாகிய மாசெயாவையும், யோவாகாசின் குமாரனாகிய யோவாக் என்னும் மந்திரியையும், தன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைப் பழுதுபார்க்கும்படிக்கு அனுப்புகிறான் (2நாளா 34:8).

யோசியா கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு முன்பாகவே, அவன் கர்த்தரைத் தேட ஆரம்பித்துவிடுகிறான். யோசியா தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்குகிறான் (2நாளா 34:3).

யோசியாவின் மனதில், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும் என்னும் ஆர்வம் இருந்தது. ஆனாலும், ஆரம்பத்தில் அந்த வேலையை செய்வதற்கு அவனுக்கு அநேக தடைகள் உண்டாயிற்று. ஆகையினால் கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிப்பது, யூதாதேசத்தையும் சமாரியாவையும் சுத்திகரிப்பது ஆகிய திருப்பணிகளெல்லாம் தாமதமாக நடைபெறுகிறது.

யோசியாவின் ராஜ்யபாரத்தின்போது, சாப்பான் என்பவன் சம்பிரதியாகவும், இல்க்கியா என்பவன் ஆசாரியனாகவும் இருக்கிறார்கள்.

ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே, ராஜா மெசுல்லாமின் குமாரனாகிய அத்சலியாவின் மகன் சாப்பான் என்னும் சம்பிரதியைக் கர்த்தரின் ஆலயத்துக்கு அனுப்புகிறான் (2இராஜா 22:3).

யோசியா தன்னுடைய சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி, "நீ பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவினிடத்தில் போய், கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்டதும் வாசல்காக்கிறவர்கள் ஜனத்தின் கையிலே வாங்கப்பட்டதுமான பணத்தை அவன் தொகைபார்க்கவேண்டும்" (2இராஜா 22:4) என்றும்,

"பிற்பாடு அவர்கள் அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்து, அவர்கள் அதைக் கர்த்தரின் ஆலயத்தைப் பழுது பார்க்கிறதற்காக அதிலிருக்கிற வேலைக்காரராகிய, தச்சருக்கும், சிற்பாசாரிகளுக்கும், கொற்றருக்கும், ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி வேண்டிய மரங்களையும் வெட்டின கற்களையும் வாங்குகிறதற்கும் செலவழிக்கவேண்டும்" (2இராஜா 22:5,6) என்றும் சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக ஏற்கெனவே பணம் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை வாசல்காக்கிறவர்கள் ஜனத்தின் கைகளில் வாங்கியிருக்கிறார்கள். இப்போது ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்கு போதுமான அளவு பணம் இருக்கிறது. அந்தப் பணத்தை கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக செலவுபண்ணவேண்டும்.

யோசியா கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக பணம் சேகரிப்பதுபோலவே, அவனுடைய முன்னோர்களில் ஒருவனாகிய யோவாஸ் என்னும் ராஜாவும் பணம் சேகரித்தான்.

"ஆசாரியனாகிய யோய்தா ஒரு பெட்டியை எடுத்து, அதின் மூடியிலே ஒரு துவாரமிட்டு, அதைப் பலிபீடத்தண்டையிலே கர்த்தருடைய ஆலயத்தில் ஜனங்கள் உட்பிரவேசிக்கும் வலதுபக்கத்தில் வைத்தான்; வாசற்படியைக் காக்கிற ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்ட பணத்தையெல்லாம் அதிலே போட்டார்கள்" (2இராஜா 12:9).

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதற்காக சேகரிக்கப்பட்ட பணத்தை, வேறு எந்தக் காரியத்திற்கும் செலவு பண்ணக்கூடாது என்பதில் யோசியா மிகவும் கவனமாயிருக்கிறான். அந்தப் பணத்தை எப்படியெல்லாம் செலவழிக்கவேண்டும் என்று யோசியா தன்னுடைய சம்பிரதியாகிய சாப்பான் மூலமாக ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கு கட்டளை கொடுக்கிறான்.

ஆலயத்தைப் பழுதுபார்க்கிறவர்கள் கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பணத்தை வேறு தப்பிதமான வழிகளில் செலவுபண்ணமாட்டார்கள். ராஜா அவர்களை நம்புகிறான். ஆலயத்தைப் பழுதுபார்க்கிறவர்கள் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் நடந்து கொள்கிறார்கள். யோவாஸ் ராஜாவின் ஆட்சிக்காலத்திலும், ஆலயத்தைப் பழுதுபார்க்கிறவர்கள் உண்மையுள்ளவர்களாகயிருந்தார்கள்.

ஒருவேலையை செய்து முடிப்பதற்கு உண்மையுள்ள வேலைக்காரர்கள் வேண்டும். இதுவும் கர்த்தருடைய கிருபை. யோசியா ராஜாவின் காலத்தில், கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்க, அவனுக்கு உண்மையுள்ள வேலைக்காரர்கள் கிடைத்திருக்கிறார்கள்.

யோசியா தன்னுடைய சம்பிரதியிடம், கர்த்தருடைய ஆலய வேலையை செய்கிறவர்களிடத்தில் கணக்கு கேட்க வேண்டியதில்லை என்று சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்திற்காக கொண்டு வரப்பட்ட பணத்தை, அந்த ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையில் கொடுக்கவேண்டும் என்றும், அதை அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலைக்காரருடைய கைகளில் கொடுத்து செலவழிக்கவேண்டும் என்றும் யோசியா கட்டளையிடுகிறான்.

மேலும் யோசியா, தன்னுடைய சம்பிரதியாகிய சாப்பானைப் பார்த்து, "ஆகிலும் அந்தப் பணத்தைத் தங்கள் கையில் ஒப்புவித்துக்கொள்ளுகிறவர்களோ காரியத்தை உண்மையாய் நடப்பிக்கிறபடியினால், அவர்களிடத்தில் அதின் கணக்கைக் கேட்கவேண்டியதில்லை" (2இராஜா 22:7) என்று ஆசாரியனாகிய இல்க்கியாவிடம் சொல்லுமாறு கட்டளை கொடுக்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பது மிகப்பெரிய வேலை. இந்த வேலையை நேர்த்தியாய்ச் செய்து முடிப்பதற்கு, அநேகருடையபிரஸ்தாபங்கள் தேவைப்படுகிறது. வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வேலைகளை பொறுப்பாய்ச் செய்கிறார்கள். கட்டிட வேலைகளை செய்கிறவர்கள் கீதவாத்தியங்களை அறிந்தவர்களாயும் இருக்கிறார்கள். கீதவாத்தியங்களை வாசிக்கிறவர்கள், ஆலயக்கட்டிடத்தைப் பழுதுபார்க்கவும் செய்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு பல்வேறுவிதமான தாலந்துகளைக் கொடுக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் தாலந்துகளை நல்லமுறையில் பயன்படுத்தி, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுக்கும் எல்லா ஊழியங்களையும் நேர்த்தியாக நிறைவேற்றவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே, ஒரே திராட்சத்தோட்டத்தில் பணிபுரிகிற வேலையாட்கள். ஒவ்வொரு ஊழியக்காரரும் மற்ற ஊழியக்காரருக்கு தேவைப்படுகிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்ற நம் எல்லோருடைய ஊழியங்களும் தேவைப்படுகிறது.

கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது நாம் நம்முடைய கவுரவத்தைப் பார்க்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை செய்வது நமக்கு கிடைத்திருக்கிற பாக்கியம். கர்த்தருடைய ஊழியத்தில் ஒரு சில வேலைகள் கனமுள்ளது என்றும், வேறு சில வேலைகள் கனவீனமானது என்றும் வித்தியாசம் பார்க்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியங்கள் எல்லாமே கனமுள்ளதுதான். கர்த்தர் நமக்கு எந்த வரத்தைக் கொடுத்திருந்தாலும், எப்படிப்பட்ட தாலந்தைக் கொடுத்திருந்தாலும், அதை கர்த்தருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும்.

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் 2நாளா 34:14-28

2நாளா 34:14. கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட பணத்தை அவர்கள் எடுக்கிறபோது மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தை ஆசாரியனாகிய இல்க்கியா கண்டெடுத்தான்.

2நாளா 34:15. அப்பொழுது இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானை நோக்கி: கர்த்தருடைய ஆலயத்திலே நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்தேன் என்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பான் கையில் கொடுத்தான்.

2நாளா 34:16. சாப்பான் அந்தப் புஸ்தகத்தை ராஜாவினிடத்திற்குக் கொண்டுபோய், அவனை நோக்கி: உம்முடைய ஊழியக்காரருக்கு கட்டளையிடப்பட்டவைகளையெல்லாம் அவர்கள் செய்கிறார்கள்.

2நாளா 34:17. கர்த்தருடைய ஆலயத்திலே சேர்ந்த பணத்தை அவர்கள் கூட்டி, அதை விசாரிப்புக்காரர் கையிலும், வேலைசெய்கிறவர்கள் கையிலும் கொடுத்தார்கள் என்று ராஜாவுக்கு மறுசெய்தி சொன்னதும் அல்லாமல்,

2நாளா 34:18. ஆசாரியனாகிய இல்க்கியா என்கையில் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தான் என்பதைச் சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவுக்கு அறிவித்து, ராஜாவுக்கு முன்பாக அதை வாசித்தான்.

2நாளா 34:19. நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

2நாளா 34:20. இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகிக்காமுக்கும், மீகாவின் குமாரனாகிய அப்தோனுக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் கட்டளையிட்டுச் சொன்னது:

2நாளா 34:21. கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியானவர்களுக்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்யும்படிக்கு கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதேபோனபடியினால், நம்மேல் மூண்ட கர்த்தருடைய உக்கிரம் பெரியது என்றான்.

2நாளா 34:22. அப்பொழுது இல்க்கியாவும் ராஜா அனுப்பின மற்றவர்களும் அஸ்ராவின் குமாரனாகிய திக்வாதின் மகனான சல்லூம் என்னும் வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாகிய உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்திற்குப் போனார்கள்; அவள் எருசலேமில் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள்; அவளோடே அதைப்பற்றிப் பேசினார்கள்.

2நாளா 34:23. அவள் இவர்களை நோக்கி: உங்களை என்னிடத்தில் அனுப்பினவருக்கு நீங்கள் சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறதாவது,

2நாளா 34:24. இதோ, யூதாவின் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களுமாகிய பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவேன்.

2நாளா 34:25. அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபம் உண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் அவிந்துபோகாதபடி இந்த ஸ்தலத்தின்மேல் இறங்கும் என்று கர்த்தர் உரைக்கிறார்.

2நாளா 34:26. கர்த்தரிடத்தில் விசாரிக்கிறதற்கு உங்களை அனுப்பின யூதாவின் ராஜாவினிடத்தில் நீங்கள் போய்: நீ கேட்ட வார்த்தைகளைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

2நாளா 34:27. இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக தேவன் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்கையில், உன் இருதயம் இளகி, எனக்குமுன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால், நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2நாளா 34:28. இதோ, நான் இந்த ஸ்தலத்தின் மேலும் இதின் குடிகளின்மேலும் வரப்பண்ணும் எல்லாப் பொல்லாப்பையும் உன் கண்கள் காணாதபடிக்கு, நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்த்துக்கொள்ளப்பட, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேரப்பண்ணுவேன் என்கிறார் என்று சொன்னாள்; அவர்கள் ராஜாவுக்கு மறுசெய்தி கொண்டுபோனார்கள்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமம் நம்முடைய கைகளில் கிடைத்திருப்பது கர்த்தருடைய பெரிதான கிருபை. நாம் கர்த்தருடைய வார்த்தைக்காக அவரைத் துதிக்கவேண்டும். யோசியாவின் காலத்தில் கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்படுகிறது. யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாஜனங்களும்கர்த்தருடைய வார்த்தைகளை கருத்தாய் வாசித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

"மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணப் புஸ்தகம்" என்பது பஞ்சாகமத்தின் மூலப்பிரதியாக இருக்க வேண்டும். இது மோசே தன்னுடைய கைப்பட எழுதிய புஸ்தகம். (2இராஜா 22:8). இஸ்ரவேலில் துன்மார்க்கமாக ஆட்சி புரிந்த மனாசே அல்லது ஆமோன் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இந்தப் புஸ்தகம் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். மோசேயின் பிரமாணத்தை விளக்கும் புஸ்தகம் வேறுஎதுவுமில்லை. ஆகையினால், இது மிகவும் முக்கியமான புஸ்தகமாக இருக்கிறது (2நாளா 35:6)

நியாயப்பிரமாணத்தை வாசிக்கும்போது, அவர்களுடைய பாவங்களும், முன்னோர்களின் பாவங்களும் அவர்களுக்கு விளக்கப்படுகிறது. தங்களுடைய பாவத்தையும், பாவத்தின் நிமித்தமாக கர்த்தர் தங்கள்மீது கோபமாகயிருப்பதையும் யோசியா புரிந்துகொள்கிறான். கர்த்தர் நம்முடைய பாவங்களை நமக்கு உணர்த்தும்போது, தேவகோபம் நம்மீது வெளிப்படும்போது நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும்.

மோசேயின் பிரமாணத்தில் பல சாபங்கள் கூறப்பட்டிருக்கிறது. இவற்றைக் குறித்து கர்த்தரிடத்தில் விசாரிக்குமாறு யோசியா தன் ஊழியக்காரருக்குக் கட்டளையிடுகிறான். இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்யும்படிக்கு கர்த்தருடைய வார்த்தையை தங்களுடைய பிதாக்கள் கைக்கொள்ளவில்லை என்றும், அதனால் கர்த்தருடைய கோபம் தங்கள்மீது வந்திருப்பதாகவும்யோசியா அங்கிகரிக்கிறான். லேவி 26, உபா27-28 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சாபங்களை யோசியா படித்துப் பார்த்து, பாவஉணர்வு அடைந்திருக்க வேண்டும்.

"ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்" (அப் 2:36,37).

"அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்" (அப் 16:30).

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டபோது யோசியா கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி கர்த்தரைத் தேடுகிறான். யோசியாவைப்போல நாமும் கர்த்தரைக் கருத்தாய் தேடவேண்டும். கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிப்பார்கள்.

இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் 2இராஜா 22:8-20 ஆகிய வசனங்களிலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசாரியனாகிய இல்க்கியாவின் மேற்பார்வையிலே கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலை நடைபெறுகிறது. அப்போது இல்க்கியா கர்த்தருடைய ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தை கண்டுபிடிக்கிறான். அவன் அந்தப் புஸ்தகத்தை சாப்பானிடத்தில் கொடுக்கிறான். சாப்பான் நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிக்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்தில் இல்க்கியா கண்டுபிடித்த புஸ்தகம், மோசேயின் பஞ்சாகம புஸ்தகம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆதியாகமம் முதல் உபாகமம் வரையிலுள்ள முதல் ஐந்து புஸ்தகங்களும் "பஞ்சாகமம்" என்று அழைக்கப்படுகிறது. மோசே இந்தப் புஸ்தகத்தை தன்னுடைய கைப்பட எழுதினார் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியனாகிய இல்க்கியா கண்டுபிடித்த, மோசேயின் பஞ்சாகம புஸ்தகமே, மிகவும் பழமையானது என்றும், அதுவே அதிகாரப்பூர்வமானது என்றும் சரித்திர ஆசிரியர்களும், வேதபண்டிதர்களும் சொல்லுகிறார்கள்.

நியாயப்பிரமாண புஸ்தகம் காணாமல் போய்விட்டது. ஒருவேளை யூதமார்க்கத்தின் முற்பிதாக்கள் நியாயப்பிரமாண புஸ்தகத்தை சரியாக பராமரிக்காமல், அதை கவனக்குறைவாக ஏதோ ஒரு இடத்தில் வைத்துவிட்டதற்கும் வாய்ப்புள்ளது. ஒருவேளை நியாயப்பிரமாண புஸ்தகத்தின் முக்கியத்துவம் தெரியாமல், அவர்கள் அதைப் புறக்கணித்திருக்கலாம். நியாயப்பிரமாண புஸ்தகம் தங்களுக்கு தேவையில்லை என்று நினைத்து, அவர்கள் அதை மூலையிலே தூக்கி எரிந்திருக்கலாம்.

கர்த்தருடைய வார்த்தையின் முக்கியத்துவத்தை அறியாதவர்கள் அதைக் கனம்பண்ணமாட்டார்கள். அசட்டைபண்ணுவார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வார்த்தையை நினைவில் வைத்திருக்காமல் மறந்துவிடுவார்கள்.

யூதாதேசத்தின் சரித்திரத்திலே, பல ராஜாக்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அவர்கள் விக்கிரகாராதனைக்காரராயும் இருந்தார்கள். அப்படிப்பட்ட ராஜாக்கள், நியாயப்பிரமாண புஸ்தகத்தை ஜனங்களுக்கு காண்பிக்கக்கூடாது என்றும், அதை மறைத்துவிடவேண்டும் என்று நினைத்து, அந்தப் புஸ்தகத்தை தேவாலயத்திற்குள்ளே குழிதோண்டி புதைத்திருக்கவேண்டும். இதனால் வேதத்தின் வெளிச்சம் இனிமேல் வெளியே தெரியாது என்றுகூட அவர்கள் நினைத்திருக்கலாம்.

யூதர்களுடைய முன்னோர் கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை, மிகவும் பாதுகாப்பாக, ஒரு சில பரிசுத்தவான்களிடத்தில் ஒப்புவித்திருக்க வேண்டும். அது எப்படியோ சத்துருக்களின் கைகளில் கிடைத்திருக்கவேண்டும் என்றும் ஒரு கருத்து உள்ளது.

கர்த்தர் தம்முடைய பரிசுத்த வேதாகமத்தைப் பாதுகாக்கிறார். சரித்திரத்திலே, கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை யாரெல்லாம் பாதுகாத்தார்களோ, அவர்கள்எல்லோர்மேலும் கர்த்தருடைய கரம் அமர்ந்திருந்தது.

யோசியாவின் காலத்திலே, கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும்போது, அங்கே நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்படுகிறது. பஞ்சாகம புஸ்தகத்தின் அதிகாரப்பூர்வமான ஒரே பிரதி இந்தப் புஸ்தகம் தான் என்றால், கர்த்தர் நமக்கு இந்தப் புஸ்தகத்தைக் கொடுத்ததற்காக, நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

ஆசாரியனாகிய இல்க்கியா நியாயப்பிரமாண புஸ்தகத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று தேடிப்பார்க்கவில்லை. அவன் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலையை செய்துகொண்டிருந்தான். கர்த்தரோ தம்முடைய கிருபையினால், தம்முடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடிக்கும் சிலாக்கியத்தை இல்க்கியாவுக்கு கொடுக்கிறார். தம்மைத் தேடாதவர்களாலே கர்த்தர் கண்டறியப்படுகிறார்.

"என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்" *(ஏசா 65:1).*

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மிகுந்த கவனத்தோடு தம்முடைய பரிசுத்த வேதாகமத்தை பாதுகாத்து பராமரிக்கிறார். தம்முடைய வார்த்தையில் கர்த்தருக்கு மிகுந்த கவனமும் அக்கரையுமுள்ளது.

யோசியாவின் காலத்திலே கண்டுபிடிக்கப்பட்ட நியாயப்பிரமாண புஸ்தகம், அதிகாரப்பூர்வமான பிரதியா, இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள், யோசியா ராஜாவுக்கும், பிரதான ஆசாரியனுக்கும் புதிதாயிருக்கிறது.

யோசியா ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான் (2இராஜா 22:11).

நியாயப்பிரமாண புஸ்தகம் தொலைந்துபோயிருக்குமென்றால், யோசியா ராஜாவால் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக யூதாதேசத்தை ஆளுகை செய்ய முடியாது. கர்த்தருடைய பார்வையிலே எது சரியானது என்பதையும் அவனால் அறிந்துகொள்ள முடியாது. ஆசாரியர்களுக்கும் ஜனங்களுக்கும் கர்த்தருடைய பிரமாணத்தைப்பற்றித் தெரியவில்லையென்றால், அவர்களால் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் அவரை ஆராதிக்கவும் முடியாது.

நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, யூதர்கள் அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு சில சம்பவங்களை மாத்திரம் வாசித்து, அதன் பிரகாரமாக கர்த்தரை ஆராதித்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தை முழுவதுமாகப் பின்பற்றாமல், நியாயப்பிரமாணத்தின் சுருக்கத்தைப் பின்பற்றினார்கள்.

நியாயப்பிரமாண புஸ்தகத்திலே கர்த்தர் தங்களுக்கு சொல்லியிருக்கும் ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களுக்கு யூதர்களின் முன்னோர் முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதே வேளையில் அந்தப் புஸ்தகத்திலே கர்த்தர் தங்களுக்கு சொல்லியிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், அதை அசட்டைபண்ணி மறந்துவிட்டார்கள் (லேவி 26; உபா 28 ஆகிய அதிகாரங்கள்).

யோசியா கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசித்தபோது, அதில் எழுதப்பட்டிருக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளை வாசித்து, தன்னுடைய இருதயத்தில் உணர்வடைகிறான். ஆசீர்வாதமான வார்த்தைகளைவிட எச்சரிப்பின் வார்த்தைகளே யோசியாவின் இருதயத்தை அதிகமாக பாதித்திருக்கிறது. அவன் இதுவரையிலும் கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை மாத்திரமே கேள்விப்பட்டிருக்கிறான். இப்போதோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை நியாயப்பிரமாண புஸ்தகத்தில் வாசித்து அறிந்துகொள்கிறான். கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது கோபமாயிருப்பார் என்னும் சத்தியமே அவனுக்கு புதியதாயிருக்கிறது.

"கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் ஜனத்திற்காகவும் யூதாவனைத்திற்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்ய நம்முடைய பிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது" (2இராஜா 22:13) என்று யோசியா சொல்லுகிறான்.

நாம் பரிசுத்தவேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற எல்லா வசனங்களையும் வாசித்து, அவற்றை கருத்தாய்த் தியானிக்கவேண்டும். வேதாகமத்தில் இங்கும் அங்குமாக ஒரு சில வசனங்கள் மாத்திரம் வாசிப்பது நல்ல பழக்கமல்ல. வேதாகம சுருக்கங்கள், வேதாகம கதைகள், ஆகியவை நமக்கு ஓரளவு பிரயோஜனமாயிருக்கும். ஆனாலும் கர்த்தரைப்பற்றி பூரணமாய் அறிந்துகொள்வதற்கு சுருக்கவுரைகளும், கதைகளும் போதுமானவையல்ல.

கர்த்தரைப்பற்றிய சத்தியம் முழுவேதாகமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சித்தமானது முழுவேதாகமத்திலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் வேதாகமத்தை அரையும் குறையுமாக வாசிப்போமென்றால், கர்த்தரைப்பற்றியும், அவருடைய சித்தத்தைப்பற்றியும், பூரணமாய் அறிந்துகொள்ளாமல், அரையும் குறையுமாகவே அறிந்துகொள்வோம்.

கர்த்தர் தம்முடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை கண்டுபிடிக்க வைத்து, தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும், தயவையும் யோசியா ராஜாவுக்கும், தம்முடைய ஜனத்திற்கும் வெளிப்படுத்துகிறார். நியாயப்பிரமாண புஸ்தகம், கர்த்தருக்கு சித்தமான, ஏற்ற காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

யோசியா யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஆரம்பித்திருக்கிறான். இந்த மறுமலர்ச்சியின் ஊழியம் துரிதமாய் நடைபெறவேண்டும் என்பதற்காகவும், அது ஜனங்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகவும், கர்த்தர் இந்தக் காலத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தை, அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆசாரியனாகிய இல்க்கியாவும், அவனோடுகூட வேலை செய்கிறவர்களும் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது இல்க்கியா ஆலயத்திலே நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கண்டுபிடிக்கிறான்.

இல்க்கியா தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்கிறான். ஆலயத்தைப் பழுதுபார்க்கவேண்டும். இதுவே இல்க்கியாவின் வேலை. இல்க்கியா கர்த்தருடைய வேலையை உண்மையாய்ச் செய்யும்போது, கர்த்தர் அவனுக்கு நியாயப்பிரமாண புஸ்தகத்தை கொடுத்து, அவனை ஆசீர்வதிக்கிறார். கர்த்தரைப்பற்றிய அறிவு அவனுக்கு அதிகமாய்க் கிடைக்கிறது. இல்க்கியாவைப்போலவே, கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறவர்களுக்கு, கர்த்தருடைய விசேஷித்த ஆசீர்வாதங்கள் கிடைக்கும்.

இல்க்கியா அந்தப் புஸ்தகத்தை சம்பிரதியாகிய சாப்பானிடத்தில் கொடுக்கிறான். சாப்பான் அந்தப் புஸ்தகத்தைப் பெற்றுக்கொண்டு யோசியா ராஜாவினிடத்தில் வருகிறான். அவன் ராஜாவினிடத்தில் நியாயப்பிரமாண புஸ்தகத்தைப்பற்றி முதலாவதாக சொல்லாமல், ஆலயத்தைப் பழுதுபார்க்கும் வேலையைப்பற்றி முதலாவதாக சொல்லுகிறான்.

அப்பொழுது சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவுக்கு மறுஉத்தரவு சொல்லி, "ஆலயத்திலே தொகையிட்டுக் கண்ட பணத்தை உமது அடியார் சேர்த்துக் கட்டி, அதைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள்" *(2இராஜா 22:9)* என்று சொல்லுகிறான்

சாப்பான் யோசியாவிடம் ஆலயத்தைப் பழுதுபார்க்கிற வேலையைப்பற்றிச் சொல்லும்போது, அவனுடைய கையிலே நியாயப்பிரமாண புஸ்தகம் இருக்கிறது. சாப்பான் அந்தப் புஸ்தகத்தைப்பற்றியும் யோசியா ராஜாவிடம் சொல்லுகிறான்.

சம்பிரதியாகிய சாப்பான் ராஜாவை நோக்கி: "ஆசாரியனாகிய இல்க்கியா என்னிடத்தில் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தான்" என்று அறிவித்து, அதை ராஜாவுக்கு முன்பாக வாசிக்கிறான் *(2இராஜா 22:10)*.

சம்பிரதியாகிய சாப்பான், யோசியா ராஜாவுக்கு முன்பாக நியாயப்பிரமாண புஸ்தகத்தை வாசிக்கிறான். கர்த்தருடைய ஆலயத்திலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற நியாயப்பிரமாண புஸ்தகம் மிகவும் முக்கியமான புஸ்தகம். இது பழங்காலத்து புதை பொருள் என்று நினைத்து, அதை அருங்காட்சி சாலையிலே பூட்டி வைத்துவிடக்கூடாது.

நியாயப்பிரமாண புஸ்தகம் அதிக விலைமதிப்புள்ள பொக்கிஷம் என்று நினைத்து, அதைப் பாதுகாப்பாக பொக்கிஷசாலையில் பூட்டி வைத்துவிடவும் கூடாது. கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை நாம் வாசிக்கவேண்டும். இதை வாசித்து கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். இதற்காகவே கர்த்தர், தமக்கு சித்தமான காலத்திலே, நியாயப்பிரமாண புஸ்தகத்தைக் கொடுத்திருக்கிறார்.

சம்பிரதியாகிய சாப்பானும் கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை யோசியா ராஜாவுக்கு முன்பாக வாசிக்கிறான். கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தை நாம் கனம்பண்ணவேண்டுமென்று விரும்பினால், நாமும் வேதாகமத்திலுள்ள வசனங்களை வாசிக்கவேண்டும். தியானிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் அநுதினமும் நம்மோடு பேசவேண்டும். வேதவசனம் நமக்கு ஆவிக்குரிய போஜனமாயிருக்க வேண்டும். நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நாம் வேதத்தின் வெளிச்சத்தில் நடக்கவேண்டும்.

யோசியா ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான் (2இராஜா 22:11). யோசியா பல வருஷங்களாக யூதாதேசத்தைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறான். யூதாதேசத்திலே விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது.

தேசத்து ஜனங்கள் மத்தியிலே பாவங்களும், துன்மார்க்கமும் அதிகமாயிருக்கிறது. ஜனங்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். யூதாஜனத்தார் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயம் இல்லை.

யோசியா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்பதற்கு முன்பாக, அவனுக்கு கர்த்தருடைய கோபத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இப்போதோ, நியாயப்பிரமாண புஸ்தகம் யோசியாவுக்கு முன்பாக வாசிக்கப்படுகிறது.

யோசியா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டு, தன்னுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, "நம்முடைய பிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்கு செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது" (2இராஜா 22:13) என்று சொல்லுகிறான்.

யூதாதேசம் இதுவரையிலும் அநேக பாடுகளையும், பிரச்சனைகளையும், உபத்திரவங்களையும், சாபங்களையும் சந்தித்து வருவதற்கு, கர்த்தருடைய கோபம் பெரிதாயிருப்பதே காரணம் என்பதை யோசியா அறிந்துகொள்கிறான். கர்த்தருடைய கோபத்திற்கு யூதாஜனத்தாரின் முற்பிதாக்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு செவிகொடாமல் போனதே காரணம் என்பதையும் யோசியா அறிந்துகொள்கிறான்.

கர்த்தர் யோசியாவின் மனக்கண்களைத் திறக்கிறார். கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டபோது யோசியா தன்னுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான். இது, யோசியா தன்னுடைய இருதயத்தைக் கிழித்துக்கொள்வதற்கு அடையாளம்.

யோசியா ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்கிறான். இந்த சம்பவத்திலிருந்து நாம் இரண்டு காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும். அவையாவன:

1. கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாக எழும்பியிருக்கும்போது, அவருடைய கோபத்தை நிறுத்துவதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய பாவங்களினாலே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வருகிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வராமலிருப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும்.

2. நாம் பாவம் செய்தால் நமக்கு என்ன சம்பவிக்கும் என்பதையும், நம்முடைய சாபத்திற்கும், வேதனைகளுக்கும் என்ன காரணம் என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும்.

யோசியா ராஜா நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, "நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியேயும் செய்ய நம்முடைய பிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது" (2இராஜா 22:13) என்று சொல்லுகிறான்.

நியாயப்பிரமாண புஸ்தகம் கர்த்தருடைய வார்த்தை. அது சரியானது. கர்த்தருடைய வார்த்தை பொய்சொல்லாது. யூதர்களுடைய முன்னோர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. இதனால் கர்த்தருடைய கோபம் யூதர்களுக்கு விரோதமாக வந்திருக்கிறது.

யோசியா ராஜா இதற்கு முன்பு நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளை கேள்விப்பட்டதே இல்லை. அந்த வார்த்தைகளைக் கேட்டபோது, யோசியா தன்னுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டாலும், அதற்குமேல் என்ன செய்யவேண்டும் என்று அவனுக்கு தெரியவில்லை.

ஆசாரியனாகிய இல்க்கியாவாலும் யோசியா ராஜாவுக்கு தேவையான ஆலோசனைகளை சொல்ல முடியவில்லை. ஆகையினால் யோவாஸ் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளைக் குறித்து, கர்த்தரிடத்தில் விசாரிக்குமாறு சொல்லுகிறான்.

கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்கு, யோசியா ராஜா தன்னிடத்திலுள்ள முக்கியஸ்தர்களை தெரிந்தெடுக்கிறான். அவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகீக்காமுக்கும், மிகாயாவின் குமாரனாகிய அக்போருக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் ராஜா கட்டளையிட்டது" *(2இராஜா 22:12).*

யோசியா ராஜா அவர்களை நோக்கி, "கண்டெடுக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவும் ஜனத்திற்காகவும் யூதாவனைத்திற்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்" *(2இராஜா 22:13)* என்று சொல்லுகிறான்.

கர்த்தரிடத்தில் விசாரிப்பதற்காக, யோசியா தன்னுடைய முக்கியஸ்தர்கள் சிலரை அனுப்புகிறான். அவர்களுடைய பெயர்கள் 2இராஜா 22:12 ஆவது வசனத்திலும், 2இராஜா 22:14 ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

யோசியா ராஜா அனுப்பின ஐந்துபேரும் உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்திற்கு போகிறார்கள். இவள் அர்காசின் குமாரனாகிய திக்வாவின் மகனான சல்லூம் என்னும் வஸ்திரசாலை விசாரிப்புக்காரனுடைய மனைவி.

பழைய ஏற்பாட்டுக்காலத்திலும், புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் ஒரு சில ஸ்திரீகள் கர்த்தருக்காக ஊழியம் செய்திருக்கிறார்கள். மீரியாம் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்துவதற்கு உதவியாயிருந்தாள்.

"நான் உன்னை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக்கொண்டு, மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்" *(மீகா 6:4).*

தெபொராள் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்தாள். இப்போது உல்தாள் யோசியா ராஜா அனுப்பின பிரதானிகளுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறாள். இவள் சல்லூம் என்பவனுடைய மனைவி. இவள் ஒருவனுக்கு மனைவியாகயிருப்பதினால், கர்த்தருடைய தீர்க்கதரிசியாகயிருப்பதில் தடை எதுவுமில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது எப்போதுமே கிருபையுள்ளவராகயிருக்கிறார். பரிசுத்தவேதாகமம் ஜனங்களுக்கு கிடையாத காலத்திலே, கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது இரங்கி, அவர்கள் மத்தியிலே தம்முடைய தீர்க்கதரிசிகள் அநேகரை அனுப்புகிறார். தீர்க்கதரிசனம் குறைந்துபோனபோது, கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு பரிசுத்த வேதாகமத்தை தாராளமாய்க் கிடைக்கப் பண்ணுகிறார்.

யோசியா ராஜாவுக்கும், அவனுடைய அரமனையிலிருக்கிற பிரதானிகளுக்கும் உல்தாளைப்பற்றித் தெரிந்திருக்கிறது. உல்தாளின் புருஷன் சல்லூம் என்பவன் யோசியாவின் அரமனையிலே வேலை பார்க்கிறவன். அவன் வஸ்திர சாலைக்கு விசாரிப்புக்காரனாயிருக்கிறான்.

ஒசியா ராஜாவின் பிரதானிகள் உல்தாளின் வார்த்தைகளை நம்புகிறார்கள். அவளுடைய வாயிலிருந்து சத்தியமான வார்த்தைகள் புறப்பட்டு வரும் என்று விசுவாசிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தை உல்தாளின் வாயிலிருக்கிறது என்று நம்பி அவர்கள் அவளிடத்தில் வந்திருக்கிறார்கள்.

உல்தாள் யோசியா ராஜாவுக்கு அருகாமையிலிருக்கிறாள். அவள் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே குடியிருக்கிறாள். இந்தக் குடியிருப்பு பகுதி யோசியா ராஜாவின் அரமனைக்கு அருகாமையிலிருக்கிறது. உல்தாள் ஸ்திரீகள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லி ஊழியம் செய்து வந்தாள் என்று யூதருடைய பாரம்பரிய சரித்திரம் சொல்லுகிறது.

உல்தாள் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே, அரமனைக்கு அருகாமையிலேயே குடியிருப்பதினால், அவள் அரமனையிலுள்ள ஸ்திரீகள் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை அதிகமாய் செய்து வருகிறாள்.

யோசியா ராஜா அனுப்பின பிரதானிகள் உல்தாளை சந்தித்து, அவளிடத்தில் நியாயப்பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி பேசுகிறார்கள். அப்போது உல்தாளுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

உல்தாள் அவர்களை நோக்கி: "உங்களை என்னிடத்தில் அனுப்பினவர்களிடத்தில் நீங்கள் போய்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" (2இராஜா 22:15) என்று சொல்லி அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறாள்.

உல்தாள் தீர்க்கதரிசியின் பாஷையில் பேசுகிறாள். தீர்க்கதரிசிகள் சுயமாய்ப் பேசாமல் கர்த்தருடைய வார்த்தைகளை பேசுவார்கள். உல்தாளும், யோசியா ராஜாவின் பிரதானிகளை நோக்கி, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லுகிறாள்.

கர்த்தருக்கு முன்பாக யூதாதேசத்தின் ராஜாவாகிய யோசியாவும் சாதாரண மனுஷனாகவே இருக்கிறான். உல்தாள் கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லும்போது, ராஜாவின் பிரதிநிதிகளை நோக்கி, "உங்களை என்னிடத்தில் அனுப்பினவரிடத்தில் நீங்கள்போய் சொல்லுங்கள்" என்று சொல்லுகிறாள்.

கர்த்தர் யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் தம்முடைய நியாயத்தீர்ப்பை நியமித்து வைத்திருக்கிறார். "என் உக்கிரம் இந்த ஸ்தலத்தின்மேல் பற்றியெரியும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உல்தாள் ராஜாவின் பிரதானிகளிடம் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, "இதோ, யூதாவின் ராஜா வாசித்தபுஸ்தகத்தின் வார்த்தைகளிலெல்லாம் காட்டியிருக்கிற பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின்மேலும், அதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவேன்" (2இராஜா 22:16) என்றும்,

"அவர்கள் என்னைவிட்டு, தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபமுண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் இந்த ஸ்தலத்தின் மேல் பற்றியெரியும்; அது அவிந்து போவது இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" (2இராஜா 22:17) என்றும் யோசியா ராஜாவுக்கு சொல்லச்சொல்லுகிறாள்.

கர்த்தருடைய உக்கிரம் யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் பற்றியெரிந்தாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் யோசியா ராஜாவின்மீது வந்து தங்கியிருக்கும். கர்த்தர் யூதாதேசத்திற்கு தம்முடைய உக்கிர கோபத்தை வெளிப்படுத்தும்போது, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் யோசியா ராஜாவுக்கு வெளிப்படுத்துகிறார்.

உல்தாள் ராஜாவின் பிரதானிகளை நோக்கி, " கர்த்தரிடத்தில் விசாரிக்கிறதற்கு உங்களை அனுப்பின யூதாவின் ராஜாவினிடத்தில் நீங்கள் போய்: நீர் கேட்ட வார்த்தைகளைக் குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்" (2இராஜா 22:18) என்று சொல்லி, யோசியா ராஜாவுக்கு சொல்லவேண்டிய கர்த்தருடைய வார்த்தைகளை, அவர்களுக்கு சொல்லுகிறாள்.

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, யோசியா ராஜாவின் இருதயம் இளகிற்று. அவன் கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான். கர்த்தர் யோசியாவின் ஒவ்வொரு காரியங்களையும் அறிந்து வைத்திருக்கிறார்.

"நான் இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக, அவர்கள் பாழும் சாபமுமாவார்கள் என்று சொன்னதை நீ கேட்டபோது, உன் இருதயம் இளகி, நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி, உன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, எனக்குமுன்பாக அழுதபடியினால் நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்" (2இராஜா 22:19) என்று கர்த்தர் உல்தாள் மூலமாக, யோசியாவுக்கு தம்முடைய செய்தியை சொல்லுகிறார்.

உல்தாள் யோசியா ராஜாவின் பிரதானிகளை நோக்கி, "ஆகையால், இதோ, நான் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக் கொள்ளுவேன்; நீ சமாதானத்தோடே உன் கல்லறையில் சேர்வாய்; நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதைச் சொல்லுங்கள்" (2இராஜா 22:20) என்று சொல்லுகிறாள்.

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது யோசியா ராஜாவுக்கு பயமும் திகிலும் உண்டாயிற்று. அவனுடைய இருதயம் நடுங்கிற்று. யோசியா கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறான். அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான். கர்த்தருடைய கோபத்திற்கு வெகுவாகப் பயப்படுகிறவர்கள், அவருடைய கோபத்தின் உக்கிரத்தை அதிகமாய் உணரமாட்டார்கள். கர்த்தருடைய உக்கிரத்திற்கு பயப்படுகிறவர்கள், அவருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துவார்கள். கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறவர்கள், கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

கர்த்தருடைய கோபம் யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் வந்திருக்கிறது. கர்த்தர் எருசலேம் நகரத்தை வெறுத்துவிடுவேன் என்று சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் தள்ளிவிடுவேன் என்று சொல்லுகிறார். கர்த்தருடைய உக்கிரம் யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் பற்றியெரியும். அது அவிந்துபோவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறும். ஆனாலும் கர்த்தர் யோசியாவுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். "நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை" (2இராஜா 22:20) என்று கர்த்தர் யோசியாவுக்கு சொல்லுகிறார்.

எருசலேம் அழிந்துபோவதற்கு முன்பு, யோசியா மரித்துப்போவான். எருசலேம் நகரத்தின் அழிவை யோசியாவின் கண்கள் காண்பதில்லை. கர்த்தருடைய கோபத்தினாலே எருசலேம் நகரத்திற்கு பொல்லாப்பு வரும்போது, யோசியாவோ கர்த்தருடைய கிருபையினாலேயே பரலோகத்திலே வாசம்பண்ணுவான். அங்கே அவன் கர்த்தருடைய மகிமையைக் காண்பான்.

"தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே" (எபி 11:15,16).

யோசியா சமாதானத்தோடே தன்னுடைய கல்லறையில் சேருவான் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் யோசியாவை அவனுடைய பிதாக்களண்டையிலே சேர்த்துக் கொள்வதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

உல்தாள் யூதாதேசத்தைக் குறித்தும், எருசலேம் நகரத்தைக் குறித்தும் யோசியா ராஜாவைக் குறித்தும், கர்த்தருடைய வார்த்தைகளை ராஜாவின் பிரதானிகளிடத்தில் சொல்லுகிறாள். அவர்கள் யோசியா ராஜாவினிடத்தில் போய், உல்தாள் தங்களிடத்தில் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லுகிறார்கள்.

ஆவிக்குரிய மறுமலர்ச்சி 2நாளா 34:29-33

2நாளா 34:29. அப்பொழுது ராஜா யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரையெல்லாம் அழைப்பித்துக் கூடிவரச்செய்து,

2நாளா 34:30. ராஜாவும், சகல யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும், ஆசாரியரும், லேவியரும், பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள சகலருமாய்க் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தான்.

2நாளா 34:31. ராஜா தன் ஸ்தானத்திலே நின்று, அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின்படியே தான்செய்வதினாலே கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணி,

2நாளா 34:32. எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படப் பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்த தேவனுடையஉடன்படிக்கையின்படியே செய்தார்கள்.

2நாளா 34:33. யோசியா இஸ்ரவேல் புத்திரருடைய தேசங்கள் எங்கும் உண்டான அருவருப்புகளையெல்லாம் அகற்றி, இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களையெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்தான்; அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுப் பின்வாங்கினதில்லை.

யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு, யோசியா பிரயாசப்படுகிறான். யோசியா யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரையெல்லாம் அழைப்பித்துக் கூடிவரச்செய்கிறான். ராஜாவும், சகல யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும், ஆசாரியரும், லேவியரும், பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள சகலருமாய்க் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறார்கள்; கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் யோசியா அவர்கள் காதுகள் கேட்க வாசிக்கிறான் *(2நாளா 29:30).*

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில், கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கையைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உடன்படிக்கையின் தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்களும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில், கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு செய்துகொண்ட உடன்படிக்கையைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உடன்படிக்கையின் தேவனாகவும் இருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்களும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

தங்களுடைய பாவங்களினிமித்தமாக, கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதை யோசியா உணருகிறான். கர்த்தருடைய கோபம் குறையவேண்டும். அவருடைய உக்கிரம் அவிந்துபோகவேண்டும். இதற்காக யோசியா செய்த காரியங்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப் பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் கேட்பதற்கு ராஜா யூதாவிலும் எருசலேமிலுமுள்ள மூப்பரையெல்லாம் அழைப்பித்துக் கூடிவரச்செய்கிறான். *(2நாளா 34:29-30).*

2. கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணுகிறான். *(2நாளா 34:31).*

3. எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அந்த உடன்படிக்கைக்கு உட்படப் பண்ணுகிறான் *(2நாளா 34:32).*

4. இஸ்ரவேல் புத்திரருடைய தேசங்கள் எங்கும் உண்டான அருவருப்புகளை யெல்லாம் அகற்றுகிறான். *(2நாளா 34:33).*

5. இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களை யெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்கிறான்.

6. பஸ்காவையும், புளிப்பில்லா அப்பப் பண்டிகையையும் ஆசரிக்கிறான். *(2நாளா 35:1-19).*

யோசியா கர்த்தருடைய வார்த்தையை வாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணுகிறான். ராஜா தன் ஸ்தானத்திலே நின்று, அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின் படியே தான்செய்வதினாலே கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணுகிறான் *(2நாளா 34:31).*

யோசியா கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியதோடு, கர்த்தருடைய ஆலயத்திலே கூடியிருக்கிற எல்லா ஜனங்களையும், அந்த உடன்படிக்கைக்கு உட்படப்பண்ணுகிறான்.

எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் யோசியா அந்த உடன்படிக்கைக்கு உட்படப்பண்ணுகிறான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்த தேவனுடைய உடன்படிக்கையின்படியே செய்கிறார்கள் *(2நாளா 34:32).*

கர்த்தருடைய உக்கிரம் யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் பற்றியெரியும் என்றும், அது அவிந்துபோவதில்லை என்றும், கர்த்தர் உல்தாள் மூலமாக யோசியாவுக்கு சொல்லுகிறார். எருசலேம் நிச்சயமாக அழியும் என்றும், அதன் அழிவைத் தடுப்பதற்கு வேறு வழி எதுவுமில்லை என்றும் யோசியாவுக்கு அறிவிக்கப்படுகிறது.

கர்த்தருடைய கோபமான வார்த்தைகளைக் கேட்டு, யோசியா செயலிழந்துபோய், ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்துவிடவில்லை. அவன் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஆயத்த வேலைகளை செய்கிறான்.

அப்பொழுது யோசியா ராஜா யூதாவிலும் எருசலேமிலும் இருந்த மூப்பரையெல்லாம் அழைப்பிக்கிறான்; அவர்கள் எல்லோரும் ராஜாவினிடத்தில் கூடிவருகிறார்கள் *(2இராஜா 23:1).*

யோசியா ராஜாவும், அவனோடு யூதாவின் மனுஷர் யாவரும் எருசலேமின் குடிகள் அனைவரும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சிறியோர்துவக்கிப் பெரியோர்மட்டுமுள்ள சகலரும் கர்த்தரின் ஆலயத்துக்குப்போகிறார்கள் *(2இராஜா 23:2).*

கர்த்தருடைய ஆலயத்திலே ராஜாவும், யூதாவின் மனுஷர் எல்லோரும் கூடிவந்திருக்கிறார்கள் அங்கே கர்த்தருடைய ஊழியக்காரர்களும் கூடி வந்திருக்கிறார்கள். யூதாதேசத்திலுள்ள சாதாரண ஜனங்களும் கூடிவந்திருக்கிறார்கள். சிறியோரும் பெரியோரும் அங்கே கூடிவந்திருக்கிறார்கள். யோசியா யூதாதேசத்தார் எல்லோரையும் கர்த்தருடைய ஆலயத்திலே கூட்டிச்சேர்க்கிறான்.

யூதாஜனத்தார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலே கூடிவந்திருக்கும்போது, யோசியா அவர்கள் மத்தியிலே பெரிய பிரசங்கம் ஒன்றும் பண்ணவில்லை. யோசியா ஜனங்களுக்கு பிரசங்கம்பண்ணாமல், கர்த்தருடைய ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசிக்கிறான் (2இராஜா 23:2).

கர்த்தருடைய உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகளை யாராவது ஒருவர் வாசிக்கட்டும், தான் அதை உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்கலாம் என்று யோசியா நினைக்கவில்லை. யோசியாவே அந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம், கர்த்தருடைய ஆலயத்திலே கூடியிருக்கிற திரளான ஜனங்களுடைய காதுகள் கேட்க வாசிக்கிறான்.

ராஜாவே கர்த்தருடைய வார்த்தைகளை வாசிக்கும்போது, ஜனங்கள் அதை செவிகொடுத்து கேட்பார்கள். கர்த்தருடைய வார்த்தையை தாங்களும் வாசிக்கவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்கு உண்டாகும்.

கர்த்தருடைய ஆலயத்திலே யூதாவின் மூப்பரும், ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் கூடிவந்திருக்கிறார்கள். அவர்களோடு யூதாவின் மனுஷர் யாவரும், எருசலேமின் குடிகள் அனைவரும் அங்கே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் உடன்படிக்கை புஸ்தகத்தின் வார்த்தைகள் வாசிக்கப்படும்போது, அதைக் கேட்பதற்காக அங்கே கூடிவந்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டுமென்று யூதாவின் மனுஷர் எல்லோரும் ஒருமனதாக தீர்மானம்பண்ணவேண்டும். அவர்களுடைய தீர்மானத்தில் உறுதியிருக்கவேண்டும். கர்த்தருடைய நியாயப்பிரமாணம் தங்களை ஆளுகை செய்யவேண்டுமென்று, யூதாவின் ஜனத்தார் எல்லோரும், கர்த்தருக்கு முன்பாக தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது யூதாதேசத்திலே க்ஷேமம் உண்டாகும். ஜனங்கள் மத்தியிலே சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கும்.

யோசியா யூதாவின் ஜனங்களுக்கு, ஆவிக்குரிய புத்திமதி எதையும் சொல்லவில்லை. யோசியா அவர்களுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளையோ அல்லது சாபமான வார்த்தைகளையோ சொல்லவில்லை. யோசியா ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுவதற்கு பதிலாக, அவன் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறான்.

யோசியா கர்த்தருடைய ஆலயத்திலே கூடியிருக்கிற ஜனங்களுக்கு முன்பாக, நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் வாசித்து முடிக்கிறான்.

அதன் பின்பு யோசியா ராஜா தூண் அருகே நின்று, கர்த்தரைப் பின்பற்றி, நடக்கவும், அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கைக்கொள்ளவும், அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணுகிறான் (2இராஜா 23:3).

ராஜா மாத்திரம் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணினால் போதாது. யூதா ஜனங்கள் எல்லோரும் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணவேண்டும். அப்போதுதான் தேசம் முழுவதிலும் க்ஷேமம் உண்டாகும். யோசியா ராஜா, உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றுவதாக, கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணியபோது, அங்கே கூடியிருக்கிற ஜனங்கள் எல்லோரும் அந்த உடன்படிக்கைக்குட்படுகிறார்கள் (2இராஜா 23:3).

நியாயப்பிரமாண புஸ்தகம், உடன்படிக்கை புஸ்தகமாகவும் இருக்கிறது. யூதாவின் மனுஷர் கர்த்தருடைய ஜனமாகயிருக்கவேண்டுமென்றால், கர்த்தர் அவர்களுடைய தேவனாகவுமிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டும். யூதாஜனங்கள் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை செய்யும்போது, கர்த்தர் தாம் செய்யவேண்டிய காரியங்களை நிச்சயமாய்ச் செய்து முடிப்பார்.

கர்த்தருடைய ஆலயத்தில், ராஜாவும் ஜனங்களும் கூடிவந்திருக்கும்போது, ராஜா தூணண்டையில் நிற்கவேண்டும். இதுவே ராஜாவின் முறைமை. யோசியா ராஜாவும், ராஜாவின் முறைமையின் பிரகாரமாக, தூண் அருகே நின்று, கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணுகிறான். ராஜா கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணும்போது, ஜனங்கள் எல்லோரும் உடன்படிக்கைக்குட்படுகிறார்கள்.

"இதோ, ராஜா முறைமையின்படியே தூணண்டையிலே நிற்கிறதையும், ராஜாவண்டையில் நிற்கிற பிரபுக்களையும், எக்காளம் ஊதுகிறவர்களையும், தேசத்து ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டு எக்காளம் ஊதுகிறதையும் கண்டவுடனே, அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: துரோகம் துரோகம் என்று கூவினாள்" *(2இராஜா 11:14).*

யோசியா தான் உயிரோடிருந்த நாளெல்லாம், கர்த்தரை விட்டுப் பின்வாங்கவில்லை. யோசியா மறுபடியும் கர்த்தரைவிட்டு விட்டு, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகவில்லை.

யோசியா இஸ்ரவேல் புத்திரருடைய தேசங்கள் எங்கும் உண்டான அருவருப்புகளையெல்லாம் அகற்றுகிறான். யோசியா இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களையெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்கிறான்; யோசியா உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுப் பின்வாங்கினதில்லை *(2நாளா 34:33).*

35 அதிகாரம்

நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் யோசியா பஸ்காவை ஆசரிக்கிறான் *(2நாளா 35:1-19)*. யோசியா எகிப்தின் ராஜாவாகிய நேகோவுக்கு விரோதமாக அவசரப்பட்டு யுத்தம்பண்ணப்போகிறான். இந்த யுத்தத்தில் யோசியா செத்துப்போகிறான் *(2நாளா 35:20-23)*. எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடுகிறார் *(2நாளா 35:24-27)*.

பஸ்கா
2நாளா 35:1-19

2நாளா 35:1. அதற்குப் பின்பு யோசியா எருசலேமிலே கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரித்தான்; அவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தார்கள்.

2நாளா 35:2. அவன் ஆசாரியர்களை அவர்கள் முறைவரிசைகளில் வைத்து, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனைசெய்யத் திட்டப்படுத்தி,

2நாளா 35:3. இஸ்ரவேலையெல்லாம் உபதேசிக்கிறவர்களும், கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிய லேவியரை நோக்கி: பரிசுத்தப் பெட்டியைத் தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலின் ராஜா கட்டின ஆலயத்திலே வையுங்கள்; தோளின்மேல் அதைச் சுமக்கும் பாரம் உங்களுக்குரியதல்ல; இப்போது நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் ஊழியஞ்செய்து,

2நாளா 35:4. இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது எழுதின கட்டளைக்கும், அவன் குமாரனாகிய சாலொமோன் எழுதின கட்டளைக்கும் ஒத்தபடியே உங்கள் பிதாக்களின் குடும்பத்தாருக்காகக் குறிக்கப்பட்ட வரிசையிலே உங்களை ஆயத்தப்படுத்தி,

2நாளா 35:5. ஜனங்களாகிய உங்கள் சகோதரருக்காகப் பரிசுத்த ஸ்தலத்திலே பிதாக்களுடைய வம்சப் பிரிவுகளின்படியேயும், லேவியருடைய வம்சத்தார் வகுக்கப்பட்டபடியேயும் நின்று,

2நாளா 35:6. பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, உங்களைப் பரிசுத்தம்பண்ணி, மோசேயைக்கொண்டு கர்த்தர் சொன்னபடியே உங்கள் சகோதரர் செய்யும்படி, அவர்களுக்கு அவைகளை ஆயத்தப்படுத்துங்கள் என்றான்.

2நாளா 35:7. வந்திருந்த ஜனங்கள் எல்லாருக்கும், அவர்கள் இலக்கத்தின்படியே, பஸ்கா பலிக்காக முப்பதினாயிரம்ஆட்டுக்குட்டிகளையும், வெள்ளாட்டுக்குட்டிகளையும், மூவாயிரம் காளைகளையும், ராஜாவாகிய யோசியா தன்னுடைய ஆஸ்தியிலிருந்து கொடுத்தான்.

2நாளா 35:8. அவனுடைய பிரபுக்களும் மனப்பூர்வமான காணிக்கையாக ஜனத்திற்கும் ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்தார்கள்; தேவனுடைய ஆலய விசாரணைக் கர்த்தாவாகிய இல்க்கியாவும் சகரியாவும் யெகியேலும் ஆசாரியர்களுக்குப் பஸ்கா பலிக்கென்று இரண்டாயிரத்து அறுநூறு ஆட்டுக்குட்டிகளையும், முந்நூறு காளைகளையும் கொடுத்தார்கள்.

2நாளா 35:9. கொனானியா, செமாயா, நெதனெயேல் என்னும் அவர்கள் சகோதரரும், அசபியா, ஏயெல், யோசபாத் என்னும் லேவியரின் பிரபுக்களும், லேவியருக்குப் பஸ்கா பலிக்கென்று ஐயாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் ஐந்நூறு காளைகளையும் கொடுத்தார்கள்.

2நாளா 35:10. இப்படி ஆராதனை திட்டம்பண்ணப்பட்ட போது, ராஜாவினுடைய கட்டளையின் படியே, ஆசாரியர் தங்கள் ஸ்தானத்திலும், லேவியர் தங்கள் வகுப்புகளின் வரிசையிலும் நின்று,

2நாளா 35:11. பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்தார்கள்; ஆசாரியர் அவர்கள் கையிலிருந்து இரத்தத்தை வாங்கித் தெளித்தார்கள்; லேவியர் தோலுரித்தார்கள்.

2நாளா 35:12. மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி ஜனங்கள் கர்த்தருக்குப் பலி செலுத்தும்படி, அவர்கள் தகனபலி மிருகங்களைப் பிதாக்களுடைய வம்சப்பிரிவுகளின்படியே, இவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாய் அவைகளைப் பிரித்துவைத்தார்கள்; காளைகளையும் அப்படியே செய்தார்கள்.

2நாளா 35:13. அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை நியாயமுறைமையின் படியே அக்கினியில் பொரித்து, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலும் கொப்பரைகளிலும் சட்டிகளிலும் சமைத்து, ஜனங்களுக்கெல்லாம் தீவிரமாய்ப் பங்கிட்டுக் கொடுத்தார்கள்.

2நாளா 35:14. பின்பு தங்களுக்காகவும் ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்தினார்கள்; ஆரோனின் புத்திரராகிய ஆசாரியர்கள் சர்வாங்க தகனபலிகளையும் நிணத்தையும் செலுத்துகிறதில், இரவுமட்டும் வேலையாயிருந்தபடியினால், லேவியர் தங்களுக்காகவும், ஆரோனின் புத்திரராகிய ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்தினார்கள்.

2நாளா 35:15. தாவீதும், ஆசாபும், ஏமானும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய எதுத்தூனும் கற்பித்தபடியே, ஆசாபின் புத்திரராகிய பாடகர் தங்கள் ஸ்தானத்திலும், வாசல்காவலாளர் ஒவ்வொரு வாசலிலும் நின்றார்கள்; அவர்கள் தங்கள் ஊழியத்தை விட்டு விலகக்கூடாதிருந்தது; லேவியரான அவர்கள் சகோதரர் அவர்களுக்காக ஆயத்தப்படுத்தினார்கள்.

2நாளா 35:16. அப்படியே ராஜாவாகிய யோசியாவினுடைய கட்டளைப்படி, பஸ்காவை ஆசரிக்கிறதற்கும், கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை இடுகிறதற்கும் அடுத்த கர்த்தருடைய ஆராதனையெல்லாம் அன்றையதினம் திட்டமாய்ச் செய்யப்பட்டது.

2நாளா 35:17. அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் ஏழு நாளளவும் ஆசரித்தார்கள்.

2நாளா 35:18. தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக் கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை.

2நாளா 35:19. யோசியாவுடைய ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே இந்தப் பஸ்கா ஆசரிக்கப்பட்டது.

யோசியா யூதாதேசத்திலிருந்து விக்கிரகங்களை அழித்துப்போடுகிறான். யூதாவில் காணப்படுகிற விக்கிரகாராதனைகள் எல்லாமே, யூதாதேசத்தின் ராஜாக்களோடு தொடர்புடையவை.

யோசியா இஸ்ரவேல் புத்திரருடைய தேசங்கள் எங்கும் உண்டான அருவருப்புகளையெல்லாம் அகற்றி, இஸ்ரவேலிலே காணப்பட்டவர்களையெல்லாம் தங்கள் தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கும்படி செய்கிறான் *(2நாளா 34:33).*

அதற்கு பின்பு யோசியா எருசலேமிலே கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கிறான். இந்த சம்பவம் 2இராஜா 23:21 ஆவது வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பண்டிகைகளை ஆசரிக்கவேண்டும். கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில், இந்தப் பண்டிகைகளை ஆசரிப்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கிற எல்லா பண்டிகைகளிலும், பஸ்கா பண்டிகையே மிகவும் முக்கியமான பண்டிகையாயிருக்கிறது.

எசேக்கியா ராஜாவும், யோசியா ராஜாவும் யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சிகளை ஏற்படுத்துகிறார்கள். இவர்களுடைய ராஜ்யபாரத்தின்போது யூதாமார்க்கம் உயிர்மீட்சி பெறுகிறது. கர்த்தருடைய ஆராதனைகளும், பண்டிகைகளும் மறுபடியும் முறையாக ஆசரிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்கா, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய பந்திக்கு ஒப்பாயும், அடையாளமாயும் இருக்கிறது. கர்த்தருடைய பந்தியை நாம் முறைப்படி ஆசரிக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தத்திலும், பக்தியிலும் வளர்ச்சி பெறவேண்டும். பரிசுத்தமே சபையின் அழகும் அலங்காரமுமாகும்.

எசேக்கியாவின் காலத்தில், யூதாதேசத்தார் பஸ்காவை பரிசுத்தத்தோடு ஆசரித்தார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்தார்கள். யோசியாவின் காலத்திலும், பஸ்கா ஆசரிக்கப்படுகிறது. யோசியாவின் காலத்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்காவைப்பற்றி, இந்த வசனப்பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

எருசலேமுக்கு வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் ஏழு நாளளவும் ஆசரிக்கிறார்கள் *(2நாளா 35:17)*.

தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக் கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை *(2நாளா 35:18)*.

யோசியாவின் காலத்தில் பஸ்கா மிகவும் சிறப்பாக ஆசரிக்கப்பட்டது. இதனால் ராஜாவின் இருதயத்திலும், யூதாஜனத்தாரின் இருதயத்திலும் பெருமை உண்டாயிற்று. தேவபக்தி பெருமையாய் மாறிற்று. அவர்கள் மனதிலே பெருமை வந்தபோது, தேவவல்லமை அவர்களிடத்தில் குறைந்துபோயிற்று.

அவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கிறார்கள். யோசியா ஆசாரியர்களை அவர்கள் முறைவரிசைகளில் வைத்து, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனை செய்யத் திட்டப்படுத்துகிறான் *(2நாளா 35:1,2)*.

யோசியா இஸ்ரவேலையெல்லாம் உபதேசிக்கிறவர்களும், கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிய லேவியரை நோக்கி, "பரிசுத்தப் பெட்டியைத் தாவீதின் குமாரனாகிய சாலொமோன் என்னும் இஸ்ரவேலின் ராஜா கட்டின ஆலயத்திலே வையுங்கள்; தோளின்மேல் அதைச் சுமக்கும் பாரம் உங்களுக்குரியதல்ல" *(2நாளா 35:3)* என்றும்,

இப்போது நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கும், அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் ஊழியஞ்செய்து, இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது எழுதின கட்டளைக்கும், அவன் குமாரனாகிய சாலொமோன் எழுதின கட்டளைக்கும் ஒத்தபடியே உங்கள் பிதாக்களின் குடும்பத்தாருக்காகக் குறிக்கப்பட்ட வரிசையிலே உங்களை ஆயத்தப்படுத்துங்கள்" *(2நாளா 35:3,4)* என்றும்,

"ஜனங்களாகிய உங்கள் சகோதரருக்காகப் பரிசுத்த ஸ்தலத்திலே பிதாக்களுடைய வம்சப் பிரிவுகளின்படியேயும், லேவியருடைய வம்சத்தார் வகுக்கப்பட்டபடியேயும் நின்று, பஸ்கா ஆட்டுக்குட்டியை அடித்து, உங்களைப் பரிசுத்தம்பண்ணி, மோசேயைக்கொண்டு கர்த்தர் சொன்னபடியே உங்கள் சகோதரர் செய்யும்படி, அவர்களுக்கு அவைகளை ஆயத்தப்படுத்துங்கள்" (2நாளா 35:5,6) என்றும் சொல்லுகிறான்.

"இஸ்ரவேலையெல்லாம் உபதேசிக்கிறவர்களும்" என்பவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தருடைய வார்த்தையை உபதேசிக்கிறவர்கள். ஆவிக்குரிய உயிர்மீட்சியில் கர்த்தருடைய வார்த்தையை உபதேசிப்பதே அடிப்படையான காரியம்.

யோசியா எருசலேமிலே பண்டிகைகளை ஆசரிக்கிறான். ஆசாரியர், லேவியர் ஆகியோருடைய தேவாலயத்து பணிவிடைகளை முறைப்படுத்துகிறான். அவர்களுடைய வகுப்புவாரியாக அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தில் ஆராதனைசெய்யத் திட்டப்படுத்துகிறான். (2நாளா 35:2-6).

தாவீது ராஜாவினுடைய கட்டளையின்படி ஆசாரியரும், லேவியரும் 24 வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். (1நாளா 24-25).

யோசியா ஆசாரியரிடத்திலும், லேவியரிடத்திலும், பஸ்காவை ஆசரிக்க வந்திருக்கிற ஜனங்களிடத்திலும் மிகவும் அன்பாகவும், ஆறுதலாகவும் பேசுகிறான். இந்த விஷயத்தில் எசேக்கியா ராஜாவின் சுபாவமும், யோசியா ராஜாவின் சுபாவமும் ஒத்திருக்கிறது.

"கர்த்தருக்கு அடுத்த காரியத்தில் நல்ல உணர்வுள்ள எல்லா லேவியரோடும் எசேக்கியா பட்சமாய்ப் பேசினான்; இப்படி அவர்கள் பண்டிகையின் ஏழுநாள் அளவும் புசித்து, ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்" (2நாளா 30:22).

பஸ்காவை ஆசரிப்பதற்காக வந்திருக்கிற யோசியா ராஜாவும், ஆசாரியரும், லேவியரும், இஸ்ரவேல் புத்திரரும், பஸ்காவின் ஆராதனையை திட்டம்பண்ணுகிறார்கள். அவர்கள் ராஜாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள்.

வந்திருந்த ஜனங்கள் எல்லாருக்கும், அவர்கள் இலக்கத்தின்படியே, பஸ்கா பலிக்காக முப்பதினாயிரம் ஆட்டுக்குட்டிகளையும், வெள்ளாட்டுக் குட்டிகளையும், மூவாயிரம் காளைகளையும், ராஜாவாகிய யோசியா தன்னுடைய ஆஸ்தியிலிருந்து கொடுக்கிறான் (2நாளா 35:7).

யோசியா ராஜாவினுடைய பிரபுக்களும் மனப்பூர்வமான காணிக்கையாக ஜனத்திற்கும் ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுக்கிறார்கள்; தேவனுடைய ஆலய விசாரணைக் கர்த்தாவாகிய இல்க்கியாவும் சகரியாவும் யெகியேலும் ஆசாரியர்களுக்குப் பஸ்கா பலிக்கென்று இரண்டாயிரத்து அறுநூறு ஆட்டுக்குட்டிகளையும், முந்நூறு காளைகளையும் கொடுக்கிறார்கள் (2நாளா 35:8).

இவர்களைத் தவிர, கொனானியா, செமாயா, நெதனெயேல் என்னும் அவர்கள் சகோதரரும், அசபியா, ஏயெல், யோசபாத் என்னும் லேவியரின் பிரபுக்களும், லேவியருக்குப் பஸ்கா பலிக்கென்று ஐயாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் ஐந்நூறு காளைகளையும் கொடுக்கிறார்கள் (2நாளா 35:9).

ராஜாவும், பிரபுக்களும் கர்த்தருக்கு காணிக்கைளை செலுத்துகிறார்கள். காணிக்கை கொடுக்கும் விஷயத்திலே அவர்கள் ஜனங்களுக்கு முன்மாதிரியாயிருக்கிறார்கள். ஜனங்களும் அவர்களைப் பின்பற்றி, ஏராளமான காளைகளையும் ஆட்டுக்குட்டிகளையும் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்.

பஸ்காவை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். அதற்கு ஏராளமான காளைகளும், ஆட்டுக்குட்டிகளும் தேவைப்படும். பஸ்காவின் தேவைகளும் ராஜாவின் பிரபுக்களும் மனப்பூர்வமாய்க் கொடுக்கிறார்கள். ஆசாரியரின் தலைவர்கள் ஆசாரியருடைய செலவுகளை சந்திக்கிறார்கள். யோசியா ராஜாவோ ஜனங்களின் தேவைகளை சந்திக்கிறான்.

இப்படி ஆராதனை திட்டம்பண்ணப்பட்டபோது, ராஜாவினுடைய கட்டளையின்படியே, ஆசாரியர் தங்கள் ஸ்தானத்திலும், லேவியர் தங்கள் வகுப்புகளின் வரிசையிலும் நின்று, பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கிறார்கள்; ஆசாரியர் அவர்கள் கையிலிருந்து இரத்தத்தை வாங்கித் தெளிக்கிறார்கள்; லேவியர் தோலுரிக்கிறார்கள் (2நாளா 35:10,11).

பஸ்கா பண்டிகையின்போது ஆட்டுக்குட்டிகள் மட்டுமே பலியிடப்படுவது வழக்கம். (யாத் 12). ஆசாரியர்கள் முதலாவதாகப் பஸ்கா ஆட்டுக்குட்டியை நியாயமுறைமையின்படியே அக்கினியில் பொரித்து, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலும் கொப்பரைகளிலும் சட்டிகளிலும் சமைத்து, ஜனங்களுக்கெல்லாம் தீவிரமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். அதன் பின்பே, தங்களுக்காக ஆயத்தப்படுத்துகிறார்கள்.

மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி ஜனங்கள் கர்த்தருக்குப் பலிசெலுத்தும்படி, அவர்கள் தகனபலி மிருகங்களைப் பிதாக்களுடைய வம்சப்பிரிவுகளின்படியே, இவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாய் அவைகளைப் பிரித்துவைக்கிறார்கள்; காளைகளையும் அப்படியே செய்கிறார்கள் (2நாளா 35:12).

அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை நியாயமுறைமையின்படியே அக்கினியில் பொரித்து, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலும் கொப்பரைகளிலும் சட்டிகளிலும் சமைத்து, ஜனங்களுக்கெல்லாம் தீவிரமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள் (2நாளா 35:13).

ஆசாரியரும் லேவியரும் கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக, ஆலயத்திலே பஸ்காவை புசிக்கிறார்கள். பின்பு தங்களுக்காகவும் ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்துகிறார்கள்; ஆரோனின் புத்திரராகிய ஆசாரியர்கள் சர்வாங்க தகனபலிகளையும் நிணத்தையும் செலுத்துகிறதில், இரவுமட்டும் வேலையாயிருந்தபடியினால், லேவியர் தங்களுக்காகவும், ஆரோனின் புத்திரராகிய ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்துகிறார்கள் (2நாளா 35:14).

கர்த்தருடைய ஆலயத்திலே பாடகர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை செய்கிறார்கள். தாவீதும், ஆசாபும், ஏமானும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய எதுத்தூனும் கற்பித்தபடியே, ஆசாபின் புத்திரராகிய பாடகர் தங்கள் ஸ்தானத்தில் நிற்கிறார்கள்.

வாசல்காவலாளர் ஒவ்வொரு வாசலிலும் நிற்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஊழியத்தை விட்டு விலகக்கூடாதிருக்கிறது; லேவியரான அவர்கள் சகோதரர் அவர்களுக்காக ஆயத்தப்படுத்துகிறார்கள் (2நாளா 35:15). தீட்டானது எதையும் கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வரக்கூடாது. வாசல்காவலாளர் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆலயத்தை கவனமாய் காவல் காக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வாசலிலும் நின்று, உள்ளே வருகிறவர்களை கவனிக்கிறார்கள். பஸ்கா முடியும் வரையிலும் பரிசுத்தமானது எதையும் ஆலத்தற்கு வெளியே கொண்டுபோகக்கூடாது. வாசல் காவலாளர் ஒவ்வொரு வாசலிலும் நின்று, வெளியே போகிறவர்கள் கொண்டு போவதையும் கவனிக்கிறார்கள்.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் பஸ்கா ஆசரிக்கப்படுகிறது. அப்படியே ராஜாவாகிய யோசியாவினுடைய கட்டளைப்படி, பஸ்காவை ஆசரிக்கிறதற்கும், கர்த்தருடைய பலி பீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை இடுகிறதற்கும் அடுத்த கர்த்தருடைய ஆராதனையெல்லாம் அன்றையதினம் திட்டமாய்ச் செய்யப்படுகிறது (2நாளா 35:16).

பஸ்காவை ஏழுநாட்களுக்கு ஆசரிக்கவேண்டும். அதற்கு ஏராளமான காளைகளும், ஆட்டுக்குட்டிகளும் தேவைப்படும். பஸ்காவின் தேவைகளும் ராஜாவின் பிரபுக்களும் மனப்பூர்வமாய்க் கொடுக்கிறார்கள். ஆசாரியரின் தலைவர்கள் ஆசாரியருடைய செலவுகளை சந்திக்கிறார்கள். யோசியா ராஜாவோ ஜனங்களின் தேவைகளை சந்திக்கிறான்.

இப்படி ஆராதனை திட்டம்பண்ணப்பட்டபோது, ராஜாவினுடைய கட்டளையின்படியே, ஆசாரியர் தங்கள் ஸ்தானத்திலும், லேவியர் தங்கள் வகுப்புகளின் வரிசையிலும் நின்று, பஸ்கா ஆட்டுக்குட்டியை அடிக்கிறார்கள்; ஆசாரியர் அவர்கள் கையிலிருந்து இரத்தத்தை வாங்கித் தெளிக்கிறார்கள்; லேவியர் தோலுரிக்கிறார்கள் (2நாளா 35:10,11).

பஸ்கா பண்டிகையின்போது ஆட்டுக்குட்டிகள் மட்டுமே பலியிடப்படுவது வழக்கம். (யாத் 12). ஆசாரியர்கள் முதலாவதாகப் பஸ்கா ஆட்டுக்குட்டியை நியாயமுறைமையின்படியே அக்கினியில் பொரித்து, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலும் கொப்பரைகளிலும் சட்டிகளிலும் சமைத்து, ஜனங்களுக்கெல்லாம் தீவிரமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். அதன் பின்பே, தங்களுக்காக ஆயத்தப்படுத்துகிறார்கள்.

மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி ஜனங்கள் கர்த்தருக்குப் பலிசெலுத்தும்படி, அவர்கள் தகனபலி மிருகங்களைப் பிதாக்களுடைய வம்சப்பிரிவுகளின்படியே, இவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாய் அவைகளைப் பிரித்துவைக்கிறார்கள்; காளைகளையும் அப்படியே செய்கிறார்கள் (2நாளா 35:12).

அவர்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை நியாயமுறைமையின்படியே அக்கினியில் பொரித்து, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலும் கொப்பரைகளிலும் சட்டிகளிலும் சமைத்து, ஜனங்களுக்கெல்லாம் தீவிரமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள் (2நாளா 35:13).

ஆசாரியரும் லேவியரும் கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக, ஆலயத்திலே பஸ்காவை புசிக்கிறார்கள். பின்பு தங்களுக்காகவும் ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்துகிறார்கள்; ஆரோனின் புத்திரராகிய ஆசாரியர்கள் சர்வாங்க தகனபலிகளையும் நிணத்தையும் செலுத்துகிறதில், இரவுமட்டும் வேலையாயிருந்தபடியினால், லேவியர் தங்களுக்காகவும், ஆரோனின் புத்திரராகிய ஆசாரியருக்காகவும் ஆயத்தப்படுத்துகிறார்கள் (2நாளா 35:14).

கர்த்தருடைய ஆலயத்திலே பாடகர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை செய்கிறார்கள். தாவீதும், ஆசாபும், ஏமானும், ராஜாவின் ஞானதிருஷ்டிக்காரனாகிய எதுத்தூனும் கற்பித்தபடியே, ஆசாபின் புத்திரராகிய பாடகர் தங்கள் ஸ்தானத்தில் நிற்கிறார்கள்.

வாசல்காவலாளர் ஒவ்வொரு வாசலிலும் நிற்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஊழியத்தை விட்டு விலகக்கூடாதிருக்கிறது; லேவியரான அவர்கள் சகோதரர் அவர்களுக்காக ஆயத்தப்படுத்துகிறார்கள் (2நாளா 35:15). தீட்டானது எதையும் கர்த்தருடைய ஆலயத்தில் கொண்டு வரக்கூடாது. வாசல்காவலாளர் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆலயத்தை கவனமாய் காவல் காக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வாசலிலும் நின்று, உள்ளே வருகிறவர்களை கவனிக்கிறார்கள். பஸ்கா முடியும் வரையிலும் பரிசுத்தமானது எதையும் ஆலத்தற்கு வெளியே கொண்டுபோகக்கூடாது. வாசல் காவலாளர் ஒவ்வொரு வாசலிலும் நின்று, வெளியே போகிறவர்கள் கொண்டு போவதையும் கவனிக்கிறார்கள்.

கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் பஸ்கா ஆசரிக்கப்படுகிறது. அப்படியே ராஜாவாகிய யோசியாவினுடைய கட்டளைப்படி, பஸ்காவை ஆசரிக்கிறதற்கும், கர்த்தருடைய பலி பீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை இடுகிறதற்கும் அடுத்த கர்த்தருடைய ஆராதனையெல்லாம் அன்றையதினம் திட்டமாய்ச் செய்யப்படுகிறது (2நாளா 35:16).

அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் ஏழு நாளளவும் ஆசரிக்கிறார்கள். தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரவேலிலே அப்படிக் கொத்த பஸ்கா ஆசரிக்கப்படவில்லை; யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும், எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போல இஸ்ரவேல் ராஜாக்களில் ஒருவரும் ஆசரித்ததில்லை. யோசியாவுடைய ராஜ்யபாரத்தின் பதினெட்டாம் வருஷத்திலே இந்தப் பஸ்கா ஆசரிக்கப்படுகிறது (2நாளா 35:17-19).

யோசியா யூதாதேசத்தையும், எருசலேம் நகரத்திலுள்ள கர்த்தருடைய ஆலயத்தையும், சமாரியாவையும் சுத்தம்பண்ணின பின்பு, தேவனாகிய கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கிறான். பழைய அசுத்தங்களெல்லாம், பழைய அப்பத்திற்கு அடையாளமாயிருக்கிறது. யூதாதேசத்திலே பழைய அப்பம் நீக்கப்படுகிறது. யூதாவின் ஜனங்கள் எல்லோரும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கிறார்கள்.

பின்பு யோசியா ராஜா: "இந்த உடன்படிக்கையின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரியுங்கள்" (2இராஜா 23:21) என்று சகல ஜனங்களுக்கும் கட்டளையிடுகிறான்.

எசேக்கியாவின் காலத்திலும் பஸ்கா ஆசரிக்கப்பட்டது. இந்த சம்பவம் 2நாளா 30-ஆவது அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

யோசியாவின்காலத்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்காவைப்பற்றி அதிகமாக சொல்லப்படாவிட்டாலும், இந்தப் பஸ்காவே சிறந்த பஸ்காவாயிருக்கிறது என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்கள் தொடங்கி, இஸ்ரவேலின் ராஜாக்கள் யூதாவின் ராஜாக்கள் ஆகிய அவர்களுடைய சகல நாட்களிலும் இந்தப் பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை (2இராஜா 23:22).

நியாயப்பிரமாண புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தையின் பிரகாரமாக யோசியா தேவனாகிய கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கிறான். ராஜாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே கர்த்தருக்கு இந்தப் பஸ்கா எருசலேமிலே ஆசரிக்கப்படுகிறது (2இராஜா 23:23).

யோசியாவும், ஆசாரியரும் எருசலேமிலிருக்கிற விக்கிரகங்களை அகற்றிப்போடுகிறார்கள். அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும் நிர்மூலம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற நியாயப்பிரமாண வார்த்தைகளை யோசியா நிறைவேற்றுகிறான்.

நியாயப்பிரமாண புஸ்தகத்திலே எழுதியிருக்கிற வார்த்தையின் பிரகாரம் யோசியா அஞ்சனக்காரரையும், குறிசொல்லுகிறவர்களையும், சுரூபங்களையும் நரகலான விக்கிரகங்களையும், யூதாதேசத்திலும் எருசலேமிலும் காணப்பட்ட எல்லா அருவருப்புகளையும் நிர்மூலமாக்குகிறான்.

அதுபோலவே, யோசியா அந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வார்த்தையின் பிரகாரம், எருசலேமிலே கர்த்தருக்கு பஸ்காவை ஆசரிக்கிறான். இந்தப் பஸ்கா இஸ்ரவேலின் சரித்திரத்திலே மிகவும் பிரசித்திப்பெற்ற விசேஷித்த பஸ்காவாயிருக்கிறது.

எகிப்தியரோடு யுத்தம் 2நாளா 35:20-24

2நாளா 35:20. யோசியா தேவாலயத்திற்கு அடுத்தவைகளைத் திட்டப்படுத்தின இந்த எல்லா நடபடிகளுக்கும்பின்பு, எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐபிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ணவந்தான்; அப்பொழுது யோசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்பட்டான்.

2நாளா 35:21. அவன் இவனிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னோடே யுத்தம்பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன்; நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும் என்று சொல்லச் சொன்னான்.

2நாளா 35:22. ஆனாலும் யோசியா தன் முகத்தை அவனை விட்டுத் திருப்பாமலும், நேகோ சொன்ன தேவனுடைய வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும், அவனோடே யுத்தம்பண்ண வேஷம்மாறி, மெகிதோவின் பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணுகிறதற்கு வந்தான்.

2நாளா 35:23. வில்வீரர் யோசியா ராஜாவின்மேல் அம்பெய்தார்கள்; அப்பொழுது ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: என்னை அப்புறம் கொண்டுபோங்கள், எனக்குக் கொடிய காயம்பட்டது என்றான்.

2நாளா 35:24. அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அந்த இரதத்தின்மேலிருந்த அவனை இறக்கி, அவனுக்கு இருந்த இரண்டாவது இரதத்தின்மேல் ஏற்றி அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவன் மரணமடைந்து தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான்; யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யோசியாவுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்.

யோசியா கர்த்தருடைய ஆலயத்திலே பஸ்காவை ஆசரிக்கிறான். பதிமூன்று வருஷகாலமாக யூதாதேசம் ஆசீர்வாதமாகயிருக்கிறது. தேசத்தில் கர்த்தருடைய ஆராதனைகள் சீராக நடைபெறுகிறது. ஆவிக்குரிய காரியங்களெல்லாம் மறுமலர்ச்சி பெற்றிருக்கிறது.

யோசியாவுக்கு நாற்பது வயது ஆவதற்கு முன்பாகவே அவனுக்கு பிரச்சனைகள் உண்டாயிற்று.

யோசியா கர்த்தரிடத்தில் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கர்த்தருக்கு செம்மையானதை செய்கிறான். ஆனாலும் அவன் பூரண ஆயுசுவரையிலும் ஜீவனோடிருக்கவில்லை. யோசியா தன் ஆயுசுகாலத்தின் பாதியிலேயே மரித்துப்போகிறான். அவன் மரித்து சில வருஷங்களுக்கு பின்பு, யூதாதேசம் அழிந்துபோகிறது.

யூதாதேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட்டதினால், அந்த தேசம் எல்லா வகையிலும் செழித்திருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் யூதாதேசத்திற்கு செழிப்புக்கு பதிலாக அழிவு வருகிறது.

யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்பட்டாலும், அந்த தேசம் தொடர்ந்து அழிவின் பாதையில் போய்க்கொண்டிருக்கிறது. கர்த்தர் யூதாவின்மேல் கொண்ட தம்முடைய மகாகோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பவில்லை. மனாசே கர்த்தருக்கு கோபம் உண்டாக்கின சகல காரியங்களினிமித்தம், கர்த்தருடைய கோபம் யூதாவின்மீது நிலைத்திருக்கிறது. கர்த்தர் யூதாவின்மேல்கொண்ட தம்முடைய மகா கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பவில்லை.

"நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்துவிடுவேன்" *(2இராஜா 23:27)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக, தம்முடைய கோபமான வார்த்தைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்.

"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்" (எரே 18:7,8).

ஒரு தேசம் அழிவுக்கு நியமிக்கப்பட்டிருந்தாலும், அந்த தேசத்து ஜனங்கள் தங்கள் பாவங்களைவிட்டு திரும்பவேண்டும். அப்போது கர்த்தரும் அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்னும் தம்முடைய மனதை மாற்றிக்கொள்வார்.

யோசியாவின் காலத்திலே, யூதாஜனங்கள் ராஜாவின் அதிகாரத்திற்கு கீழ்ப்படிகிறார்கள். யோசியா யூதாதேசத்திலும் எருசலேமிலும் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்போது, யூதாவின் ஜனங்கள் அந்த மறுமலர்ச்சியை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் ராஜாவின் கட்டளைக்கு பயத்தினால் கீழ்ப்படிந்தார்களேயல்லாமல், நியாயப்பிரமாண வார்த்தைக்கு கர்த்தர்மீதுள்ள அன்பினாலும் பக்தியினாலும் கீழ்ப்படியவில்லை.

யோசியா ராஜா யூதாதேசத்தையும், எருசலேம் நகரத்தையும் விட்டு விக்கிரகங்களை அகற்றிப்போட்டாலும் அவர்களுடைய இருதயங்கள் இன்னும் அந்த விக்கிரகங்களையே பின்பற்றிப்போகிறது. யூதாதேசத்திலே விக்கிரகங்கள் காணப்படாவிட்டாலும், யூதாதேசத்தாரின் இருதயங்களில் அந்த விக்கிரகங்கள் வாசம்பண்ணுகிறது.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் யூதாதேசத்தாரைப் பார்க்கும்போது,அவர்களுடைய இருதயங்களில் வாசம்பண்ணுகிற விக்கிரகங்களையும், அவர்கள் தங்கள் விக்கிரங்கள்மீது பக்தி வைராக்கியமாயிருப்பதையும் பார்க்கிறார்.

ஆகையினால் கர்த்தர், "நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்துவிடுவேன்" என்று சொல்லுகிறார்.

யூதாதேசத்திற்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகிவரவேண்டும் என்றும், அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என்றும், அவர்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்றும் கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

யூதாஜனத்தார் தங்களுக்கு வரப்போகும் அழிவைப் பார்த்து எச்சரிப்படையவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் விக்கிரகங்களை விட்டு விலகி, மறுபடியும் கர்த்தரைப்பற்றிக்கொள்ள வேண்டும்.

கர்த்தர் யூதாவை தம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளிவிட்டாலும், எருசலேம் நகரத்தை வெறுத்துவிட்டாலும், கர்த்தர் யோசியாவுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் யோசியாவுக்கு தம்முடைய வார்த்தையை சொன்னபோது, "நான் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணும் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லை" (2இராஜா 22:20) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சொன்ன பிரகாரம், யூதாதேசம் அழிவதற்கு முன்பாகவே, யோசியாவுக்கு மரணமுண்டாயிற்று. தன்னுடைய தேசம் அழிந்துபோவதை காணாமலேயே யோசியா மரித்துப்போகிறான்.

யோசியாவின் நாட்களில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்கு போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்படுகிறான்; பார்வோன்நேகோ யோசியாவை மெகிதோவிலே கண்டபோது, அவனைக் கொன்றுபோடுகிறான் (2இராஜா 23:29).

யோசியாவின் நாட்களிலே எகிப்தின் ராஜாவுக்கும் அசீரியாவின் ராஜாவுக்கும் யுத்தம் நடைபெறுகிறது. இந்த வசனத்தில் பாபிலோன் தேசத்து ராஜா, அசீரியாவின் ராஜா என்று அழைக்கப்படுகிறான். யூதாதேசம் எகிப்து தேசத்திற்கும் அசீரிய தேசத்திற்கும் நடுவிலிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எகிப்து தேசத்தார் தன்னுடைய தேசத்தின் வழியாக பிரவேசிக்கக்கூடாது என்று யோசியா தீர்மானம்பண்ணுகிறான்.

யோசியா, எகிப்தின் ராஜாவுக்கு முன்பாக தன்னுடைய வல்லமையைக் காண்பிக்க விரும்புகிறான். எகிப்தின் ராஜா ஐபிராத்து நதிக்குப்போகிறான். அப்போது, யோசியா அவனுக்கு விரோதமாகப் போகிறான். ஆனால் எகிப்தின் ராஜா யோசியாவைக் கொன்றுபோடுகிறான்.

யோசியா கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்தவன். அவன் நல்ல சுபாவமுள்ளவன். ஆனாலும் அவன் எகிப்தின் ராஜாவாகிய நேகோ என்பவனோடு அவசரப்பட்டு யுத்தம்பண்ணப்போகிறான்.

யோசியா தேவாலயத்திற்கு அடுத்ததைத் திட்டப்படுத்தின இந்த எல்லா நடபடிகளுக்கும்பின்பு, எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐபிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ணவருகிறான்; அப்பொழுது யோசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்படுகிறான் *(2நாளா 35:20)*.

யோசியா ஆவிக்குரிய உயிர்மீட்சியை உண்டு பண்ணுகிறான். தேவாலயத்தில் ஆசாரியருடைய ஊழியங்களையும், லேவியருடைய ஊழியங்களையும் வகுப்புவாரியாகத் திட்டம் பண்ணுகிறான். அதன் பின்பு, தேவையில்லாமல் எகிப்தின் ராஜாவாகிய நேகோவோடே யுத்தம் பண்ணப்போகிறான். இதில் யோசியா மரித்துப் போகிறான். *(2நாளா 35:20-24)*.

"எகிப்தின் ராஜாவாகிய நேகோ" என்பவன் பார்வோன் நேகோ என்றும் அழைக்கப்படுகிறான். இவன் யூதாவின் ராஜாவாகிய மனாசேயின் காலத்தில் எகிப்தில் ஆட்சி புரிந்தவன். எகிப்து தேசத்தில் 25 ஆவது சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவன். இவன் ஐபிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ணவருகிறான். யோசியாவின்மீது யுத்தம் பண்ண வரவில்லை. ஆனால் யோசியாவோ பார்வோன் நேகோவிற்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்படுகிறான்.

பார்வோன்நேகோ யோசியாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி தான் யோசியாவோடு யுத்தம் பண்ண வரவில்லை என்றும், கர்கேமிஸ் பட்டணத்தின்மீது யுத்தம் பண்ணப்போவதாகவும் கூறுகிறான். ஆனால் யோசியாவோ தன்னுடைய இருதயக் கடினத்தினிமித்தம் நேகோவிற்குச் செவி கொடுக்கவில்லை. இதனால் யோசியாவுக்கும், நேகோவிற்கும் யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தத்தில் யோசியா கொல்லப்படுகிறான். *(2நாளா 35:20-24)*.

யோசியா தனக்கு சம்பந்தமில்லாத எகிப்தின் ராஜாவைப் பகைக்கிறான். எகிப்தின் ராஜாவோ யோசியாவுக்கு தன்னுடைய நிலமையை எடுத்துச் சொல்லுகிறான். அவன் தன்னுடைய ஸ்தானாபதிகளை யோசியாவினிடத்திற்கு அனுப்புகிறான்.

எகிப்தின் ராஜா யோசியாவினிடத்திற்கு தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, "யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னோடே யுத்தம்பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப் போகிறேன்; நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும்" *(2நாளா 35:21)* என்று சொல்லச் சொல்லுகிறான். எகிப்தின் ராஜா யூதாவின் ராஜாவை எச்சரிக்கிறான்.

எகிப்தின் ராஜாவாகிய நேகோ நீதிக்கு கட்டுப்பட்டவன்போல் தெரிகிறது. யோசியா நீதிமானாகயிருந்தாலும், இப்போது அநீதியான காரியத்தை செய்கிறான். நல்லவர்கள் அநீதியான காரியத்தை செய்யும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்காது.

எகிப்தின் ராஜா யோசியாவினிடத்தில் சொல்லும்போது, "நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும்" என்று சொல்லுகிறான். எகிப்தின் ராஜா, யோசியாவினிடத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறான். யோசியா தனக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவது, தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான செயல் என்று, எகிப்தின் ராஜா அவனை எச்சரிக்கிறான்.

கர்த்தர் யோசியாவோடு பேசாமல், எகிப்தின் ராஜாவோடு பேசியிருக்கிறார். ஒருவேளை சொப்பனத்தின் மூலமாகவோ அல்லது எரேமியா போன்ற தீர்க்கதரிசிகள் மூலமாகவோ கர்த்தர் எகிப்தின் ராஜாவோடு பேசியிருக்கலாம். எகிப்தின் ராஜா அசீரியாவின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறான். இந்த யுத்தம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக நடைபெறுகிறது.

எகிப்தின் ராஜா அசீரியாவின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதினால், யூதாவின் ராஜாவுக்கு ஒரு பாதிப்புமில்லை. கர்த்தர் இதை யோசியாவுக்கு வெளிப்படுத்தியிருப்பார். ஆனால் யோசியாவோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், தன்னுடைய சுயஇஷ்டத்திற்கு கீழ்ப்படிகிறான்.

கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாக கிரியை செய்தால், கர்த்தருடைய கோபமும் சாபமும் வரும். எகிப்தின் ராஜா யோசியாவைப் பார்த்து, "தேவன் உம்மை அழிக்காதபடிக்கு, அவருக்கு எதிரிடை செய்வதை விட்டு விடும்" என்று சொல்லுகிறான்.

எகிப்தின் ராஜா கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, அசீரியாவின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறான். ஆகையினால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தன்னோடு கூடயிருக்கிறார் என்று எகிப்தின் ராஜா நம்புகிறான்.

எகிப்தின் ராஜாவாகிய நேகோவின் நோக்கமும் கர்த்தருக்கு சித்தமானதாயிருக்கிறது. எகிப்தியரின் சேனையும் பெலமுள்ளதாயிருக்கிறது. யூதாவின் ராஜாவோ, தனக்கு சம்பந்தமில்லாத விஷயத்தில் அவசரப்பட்டு தலையிட்டு தன்னுடைய அழிவுக்கு தானே காரணமாகிறான். யோசியா எகிப்தின் ராஜாவுடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை.

யோசியா தன் முகத்தை எகிப்தின் ராஜாவை விட்டுத் திருப்பாமலும், நேகோ சொன்ன தேவனுடைய வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும், அவனோடே யுத்தம்பண்ண வேஷம்மாறி, மெகிதோவின் பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணுகிறதற்கு வருகிறான் *(2நாளா 35:22)*.

வில்வீரர் யோசியா ராஜாவின்மேல் அம்பெய்கிறார்கள்; அப்பொழுது யோசியா ராஜா தன் ஊழியக்காரரை நோக்கி: "என்னை அப்புறம் கொண்டுபோங்கள், எனக்குக் கொடிய காயம்பட்டது" *(2நாளா 35:23)* என்று சொல்லுகிறான்.

அப்பொழுது யோசியாவினுடைய ஊழியக்காரர் அந்த இரதத்தின்மேலிருந்த அவனை இறக்கி, அவனுக்கு இருந்த இரண்டாவது இரதத்தின்மேல் ஏற்றி அவனை எருசலேமுக்குக் கொண்டுவருகிறார்கள்; யோசியா எருசலேமிலே மரணமடைகிறான். அவனை தன் பிதாக்களின் கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள் *(2நாளா 35:24)*.

யோசியாவின்மேல் புலம்பல்
2நாளா 35:25-27

2நாளா 35:25. எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடினான்; சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள்; அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கி வருகிறது; அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

2நாளா 35:26. யோசியாவின் மற்ற வர்த்தமானங்களும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறதற்கொத்த அவன் செய்த நன்மைகளும்,

2நாளா 35:27. அவனுடைய ஆதியோடந்த நடபடிகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யோசியாவுக்காகத் துக்கங்கொண்டாடுகிறார்கள். அவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும் யோசியாவுக்காக துக்கங்கொண்டாடுகிறார்கள் *(2நாளா 35:24).*

எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடுகிறார்; சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள்; அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கிவருகிறது; அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது *(2நாளா 35:25).*

"எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடினான்" என்று நாளாகமத்தில் முதன் முறையாக எரேமியாவைப் பற்றிக்கூறப்பட்டிருக்கிறது. யோசியாவின் 13 ஆவது ராஜ்யபாரத்தில் எரேமியா தன் ஊழியத்தை ஆரம்பிக்கிறார். *(எரே 1:2).*

"அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" என்பது எரேமியாவின் புலம்பல் புஸ்தகத்தைக் குறிப்பிடவில்லை. இந்தப் புஸ்தகம் எழுதப்படுவதற்கு 35 வருஷங்களுக்கு முன்பு எரேமியா யோசியாவின்மீது வேறொரு புலம்பல் புஸ்தகத்தை எழுதியிருக்கிறார்.

யூதாவின் ஜனங்களும், எருசலேமின் குடிகளும் தங்கள் ராஜாவாகிய யோசியாவின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் ஆவிக்குரிய காரியங்களில் யோசியாவின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தரைக் குறித்தும், கர்த்தருடைய ஆராதனைகளைக் குறித்தும் யோசியாவின் இருதயத்திலிருந்த விருப்பங்களும், திட்டங்களும் யூதாவின் ஜனத்தாருடைய இருதயங்களில் காணப்படவில்லை. ஆனாலும் அவர்கள் யோசியாவுக்காக துக்கங்கொண்டாடுகிறார்கள்.

யோசியாவின் மற்ற வர்த்தமானங்களும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறதற்கொத்த அவன் செய்த நன்மைகளும், அவனுடைய ஆதியோடந்த நடபடிகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது *(2நாளா 35:26,27).*

36 அதிகாரம்

யோசியா மரித்து, ஒரு சில வருஷங்களுக்கு பின்பு, யூதாவும் எருசலேமும் அழிந்துபோகிற சம்பவம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாதேசத்தை யோவாகாஸ் என்பவன் மூன்று மாதங்கள் மாத்திரமே ஆட்சி செய்கிறான் *(2நாளா 36:1-4).*

அவனுக்குப் பின்பு, யோயாக்கீம் பதினொரு வருஷங்களும், *(2நாளா 36:5-8).* யோயாக்கீன் மூன்று மாதங்களும் *(2நாளா 36:9,10),* சிதேக்கியா பதினொரு வருஷங்களும் *(2நாளா 36:11).* யூதாதேசத்தை ஆட்சி செய்கிறார்கள்.

யூதாதேசத்திற்கு பேரழிவு உண்டாயிற்று. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தாரில் திரளான ஜனங்களை சங்காரம்பண்ணுகிறான் *(2நாளா 36:17).* அவன் எருசலேமிலுள்ள தேவாலயத்தை கொள்ளையிடுகிறான். எருசலேம் பட்டணத்தையும், அதிலுள்ள எல்லா மாளிகைகளையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான் *(2நாளா 36:18,19).* பட்டயத்திற்கு தப்பினவர்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகப்படுகிறார்கள் *(2நாளா 36:20).*

சிதேக்கியாவின் பாவங்களுக்கும், அவனுடைய துன்மார்க்கத்திற்கும் தண்டனை கொடுக்கப்படுகிறது *(2நாளா 36:12,13).* யூதாதேசத்தாரும் சிதேக்கியாவோடு சேர்ந்து, விக்கிரகங்களை ஆராதித்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள் *(2நாளா 36:14).* அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்துகிறார்கள் *(2நாளா 36:15,16).* கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது *(2நாளா 36:21).*

பெர்சியா ராஜாவாகிய கோரேசுவின் அரசாணைப் பிரகாரம், சிறையிருப்பிலுள்ள யூதர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் *(2நாளா 36:22,23).*

யூதாவின் அழிவு
2நாளா 36:1-10

2நாளா 36:1. அப்பொழுது ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள்.

2நாளா 36:2. யோவகாஸ் ராஜாவாகிறபோது இருபத்துமூன்று வயதாயிருந்து, மூன்றுமாதம் எருசலேமில் அரசாண்டான்.

2நாளா 36:3. அவன் எருசலேமில் அரசாளாதபடிக்கு எகிப்தின் ராஜா அவனைத் தள்ளிவிட்டு, தேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியும் ஒரு தாலந்து பொன்னுமான தண்டத்தைச் சுமத்தி,

2நாளா 36:4. அவனுடைய அண்ணனாகிய எலியாக்கீமை யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் ராஜாவாக்கி, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றினான்; அவன் தம்பியாகிய யோவாகாசை எகிப்தின் ராஜாவாகிய நேகோ எகிப்திற்குக் கொண்டுபோனான்.

2நாளா 36:5. யோயாக்கீம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமில் அரசாண்டு, தன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 36:6. அவனுக்கு விரோதமாகப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்து, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோக இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டினான்.

2நாளா 36:7. கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளிலும் சிலவற்றை நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவைகளைப் பாபிலோனிலுள்ள தன்னுடைய கோவிலிலே வைத்தான்.

2நாளா 36:8. யோயாக்கீமுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனிடத்திலே கண்டுபிடிக்கப்பட்டதுமான அவனுடைய அருவருப்புகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது; அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய யோயாக்கீமின் ராஜாவானான்.

2நாளா 36:9. யோயாக்கீன் ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருந்து, மூன்று மாதமும் பத்து நாளும் எருசலேமில் அரசாண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

2நாளா 36:10. மறுவருஷத்தின் ஆரம்பத்திலே நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா அவனையும், கர்த்தருடைய ஆலயத்தின் திவ்வியமான பணிமுட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பண்ணி, அவன் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை யூதாவின் மேலும் எருசலேமின்மேலும் ராஜாவாக்கினான்.

யூதாதேசமும் எருசலேம் நகரமும் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துபோகிறது. யூதாதேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்கள் மனந்திரும்புவதற்கு கர்த்தர் காலஅவகாசத்தையும் கொடுக்கிறார். ஆனால் யூதாஜனத்தாரோ கர்த்தருடைய கிருபையின் காலத்தை அசட்டைபண்ணுகிறார்கள்.

யோசியா மரித்த பின்பு, யூதாஜனங்களும், எருசலேமின் குடிகளும் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தானத்திலே ராஜாவாக்குகிறார்கள். யோவகாஸ் ராஜாவாகிறபோது இருபத்துமூன்று வயதாயிருந்து, மூன்றுமாதம் எருசலேமில் அரசாளுகிறான் *(2நாளா 36:1,2)*.

யோசியா யுத்தத்தில் மரித்தான். அதன் பின்பு, யூதாவின் ஜனங்கள் யோவாகாசை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தானத்திலே ராஜாவாக்குகிறார்கள். இவன் மூன்றுமாதமே ஆட்சி புரிந்தவன். யூதா தேசத்தில் குறைந்த காலம் ஆட்சி புரிந்தவன் யோவாகாஸ். *(2நாளா 36:2)* வடக்கு தேசத்தில் சிம்ரி ஏழு நாட்களுக்கும்*(1இராஜா 16:15)*, சல்லூம் ஒரு மாதத்திற்கும் *(2இராஜா 15:13)* ஆட்சி புரிந்திருக்கிறார்கள். யோவாகாஸ் துன்மார்க்கமானவன். கர்த்தரின் பார்வைக்குப் பொல்லானதைச் செய்தவன்.*(2இராஜா 23:32)*.

யோவாகாஸ் எருசலேமில் அரசாளாதபடிக்கு எகிப்தின் ராஜா அவனைத் தள்ளிவிடுகிறான். மேலும் அவன் யூதாதேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியும் ஒரு தாலந்து பொன்னுமான தண்டத்தைச் சுமத்துகிறான்.

யோசியாவின் மரணத்திற்கு பின்பு, எருசலேமிலே பிரச்சனைகளுக்குமேல் பிரச்சனைகள் வருகிறது. யோசியா மரித்து, இருபத்திரண்டு வருஷங்களுக்கு பின்பு, எருசலேம் நகரம் முற்றிலுமாய் அழிக்கப்படுகிறது.

யோசியாவுக்கு இரண்டு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பெயர் யோவாகாஸ், எலியாக்கீம் என்பதாகும். யோசியாவின் இரண்டு குமாரரும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். யோவாகாஸ் எகிப்து தேசத்திலே சிறை வைக்கப்பட்டிருக்கிறான். எலியாக்கீமோ எகிப்தின் ராஜாவுக்கு பொன்னையும் வெள்ளியையும் பகுதி கட்டுகிறான்.

யோசியா மரித்த பின்பு யோவாகாஸ் யூதாதேசத்திற்கு ராஜாவாகிறான். மரணமடைந்த யோசியாவை அவனுடைய ஊழியக்காரர் ரதத்தின்மேல் ஏற்றி, மெகிதோவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவனை அவன் கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள்; அப்பொழுது தேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை அபிஷேகம்பண்ணி, அவன் தகப்பன் ஸ்தானத்தில் அவனை ராஜாவாக்குகிறார்கள்.

யோவாகாஸ் ராஜாவாகிறபோது இருபத்துமூன்று வயதாயிருந்து, மூன்று மாதம் எருசலேமில் அரசாளுகிறான்; லீப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் அமுத்தாள். யோவாகாஸ் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் (2இராஜா 23:31,32).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோ யோசியாவைக் கொன்றுபோடுகிறான். அதன் பின்பு எகிப்தின் மற்ற சேனையும் யோசியாவின் குடும்பத்திற்கும், யூதாதேசத்திற்கும் விரோதமாக வருகிறார்கள்.

யோவாகாஸ் யோசியாவின் இளையகுமாரன். இவன் யூதாதேசத்திற்கு முதலாவதாக ராஜாவாகிறான். யூதாதேசத்து ஜனங்கள், யோசியாவின் இளையகுமாரனாகிய யோவாகாசை, ராஜாவாக அபிஷேகம்பண்ணி, யோசியாவின் ஸ்தானத்திலே அவனை ராஜாவாக்குகிறார்கள்.

யோவாகாசுக்கு எலியாக்கீம் மூத்த சகோதரனாகயிருந்தாலும், யூதாவின் ஜனங்கள் தங்களுக்கு ராஜாவாக யோவாகாசையே தெரிந்தெடுக்கிறார்கள். யோவாகாஸ் யுத்தம்பண்ணுகிற சுபாவமுள்ளவன். இவன் தன் தகப்பன் யோசியாவைக் கொன்றுபோட்ட எகிப்தியரை பழிவாங்குவான் என்றும், எகிப்தின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அவனைக் கொன்றுபோடுவான் என்றும், யூதாவின் ஜனங்கள் எதிர்பார்த்து, அவனை ராஜாவாக்குகிறார்கள்.

யோவாகாஸ் பராக்கிரமசாலியாயிருந்தாலும், அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் (2இராஜா 23:32). யோவாகாஸ் மூன்று மாதம் மாத்திரமே எருசலேமிலே அரசாளுகிறான்.

யோவாகாஸ் எருசலேமில் அரசாளாதபடிக்கு, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அவனை ஆமாத் தேசமான ரிப்லாவிலே பிடித்துக் கட்டுவிக்கிறான். அதன் பின்பு எகிப்தின் ராஜா யோவாகாசை, தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போகிறான். யோவாகாஸ் எகிப்து தேசத்திலே போய் அங்கே மரணமடைகிறான்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோ யூதாதேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியையும், ஒரு தாலந்து பொன்னையும் அபதாரமாக சுமத்துகிறான். எகிப்தின் ராஜா, யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக வைத்து, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றுகிறான் (2இராஜா 23:34).

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக வைக்கிறான். யூதாவின் ராஜாசனம் இதுவரையிலும், தகப்பனிடத்திலிருந்து, அவனுடைய குமாரனுக்கு கடந்து வந்தது. ஆனால் இப்போதோ அந்த ராஜாசனம், ஒரு சகோதரனிடத்திலிருந்து, அவனுடைய மற்றொரு சகோதரனுக்கு கடந்து வருகிறது.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எலியாக்கீமை, அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக வைக்கிறான். எலியாக்கீம் என்னும் பெயரை யோயாக்கீம் என்று மாற்றுகிறான்.

யோசியா மரித்த பின்பு, யூதாதேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை, அவன் தகப்பன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார்கள். எகிப்தின் ராஜாவோ யோவாகாசை ரிப்லாவிலே பிடித்து கட்டி வைத்திருக்கிறான். யூதாதேசத்து ஜனங்களால் எகிப்தின் ராஜாவுக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியவில்லை.

யூதாதேசத்திலே ஓரளவு செல்வம் இருக்கிறது. ராஜாவின் அரமனையிலே ஓரளவு பொன்னும் வெள்ளியும் இருக்கிறது. ஆனால், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ யூதாதேசத்தின்மேல் நூறு தாலந்து வெள்ளியையும் ஒரு தாலந்து பொன்னையும் அபராதமாகச் சுமத்துகிறான். யூதாவின் ராஜா எகிப்தின் ராஜாவுக்கு இந்த தண்டத்தை செலுத்தும்போது, யூதாதேசத்தின் பொக்கிஷம் ஒன்றுமில்லாமல் போய்விடும். தேசமே தரித்திர தேசமாக மாறிவிடும்.

எகிப்தின் ராஜா யூதாதேசத்தின்மீது சுமத்திய அந்த வெள்ளியையும் பொன்னையும் யோயாக்கீம் பார்வோனுக்குக் கொடுக்கிறான்; ஆனாலும் பார்வோனுடைய கட்டளையின்படி அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி யோயாக்கீம் தேசத்தை மதிப்பிட்டு, அவரவர் மதிப்பின்படி அந்த வெள்ளியையும், பொன்னையும் பார்வோன் நேகோவுக்குக் கொடுக்கத்தக்கதாக தேசத்து ஜனங்களின் கையிலே தண்டுகிறான் *(2இராஜா 23:35)*.

பார்வோனுக்கு பகுதிப்பணம் கட்ட யோயாக்கீமின் அரமனையிலே பொன்னுமில்லை வெள்ளியுமில்லை. எகிப்தின் ராஜாவுக்கு கொடுக்கவேண்டிய பணத்தை எகிப்துதேசத்தின் ஜனங்களின் கையிலே கட்டாயமாக வாங்குகிறான்.

யோயாக்கீம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான்; ரூமா ஊரானாகிய பெதாயாமின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் செபுதாள். யோயாக்கீம் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான் *(2இராஜா 23:36,37)*.

யூதாதேசத்தின் பொக்கிஷமெல்லாம் எகிப்து தேசத்திற்குப்போகிறது. பாலும் தேனும் ஓடின கானான் தேசம் இப்போது தரித்திர தேசமாகயிருக்கிறது. யூதாதேசத்திலே பொன்னுமில்லை. வெள்ளியுமில்லை. யூதாதேசத்தார் ஒடுக்கப்படுகிறார்கள். இந்த சூழ்நிலையில்கூட யோயாக்கீம் கர்த்தரைத் தேடவில்லை. அவன் தன் பிதாக்கள் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான்.

எகிப்தின் ராஜாவாகிய நேகோ, யோவாகாசின் அண்ணனாகிய எலியாக்கீமை யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் ராஜாவாக்கி, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றுகிறான்; அவன் தம்பியாகிய யோவாகாசை எகிப்தின் ராஜாவாகிய நேகோ எகிப்திற்குக் கொண்டுபோகிறான் *(2நாளா 36:3,4)*. இதன் பின்பு, யோவாகாசைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை.

யோயாக்கீம் ராஜாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமில் அரசாளுகிறான். அவன் தன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்.யோயாக்கீமுக்கு விரோதமாகப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்து, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோக இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டுகிறான் *(2நாளா 36:5,6)*.

யோயாக்கீம் பாபிலோனில் எவ்வளவு காலம் சிறையில் இருந்தான் என்று தெரியவில்லை. அவன் பாபிலோனின் ராஜாவை மூன்று வருஷம்சேவித்தான். அதன் பின்பு, அவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். யோயாக்கீமின் நான்காம் வருஷம் என்பது நேபுகாத்நேச்சாரின் முதலாவது வருஷமாகும். *(எரே 25:1)*

யோயாக்கீமின் மூன்றாம் வருஷத்தில் நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு எதிராக வந்தான் என்று தானியேல் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. *(தானி 1:1-3)* யோயாக்கீம் எகிப்தின் ராஜாவால் சிறைப்பிடிக்கப்பட்டபோது நேபுகாத்நேச்சார் இன்னும் ராஜாவாக ஆகவில்லை. யோயாக்கீம் மூன்று வருஷம் சிறையிருந்து அதன் பின்பு, மூன்று வருஷம் நேபுகாத்நேச்சாரைச் சேவித்திருக்க வேண்டும். *(2இராஜா 24:1)*.

கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்திற்கு மூன்று காலங்களில் சிறையிருப்புக்குப்போனார்கள். அவற்றின் விவரம் வருமாறு :

1. யோயாக்கீமின் காலத்தில் - இந்தச் சிறையிருப்பில் தானியேலும், மூன்று எபிரெய வாலிபரும் மற்றும் ஏராளமானோரும் பாபிலோனுக்கு அடிமைகளாகச் சென்றார்கள். இக்காலத்தில் தேவாலயத்தின் பணிமுட்டுகளையும், பாபிலோன் ராஜா எடுத்துச் சென்றுவிட்டான். *(2நாளா 36:6; 2இராஜா 24:14; தானி 1:1-3).*

2. யோயாக்கீனின் காலத்தில் *(2நாளா 36:10; 2இராஜா 24:10-16).* மொர்தெகாயும், எஸ்தரும் இக்காலத்தில் பாபிலோனுக்கு அடிமைகளாகச் சென்றார்கள். *(எஸ் 2:5-6).*

3. சிதேக்கியாவின் காலத்தில் *(2நாளா 36:20; 2இராஜா 25).* இது கடைசி சிறையிருப்பாகும். 70 வருஷங்களுக்குப் பாபிலோனிய சிறையிருப்பு இருக்கும் என்று ஏற்னெவே முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. *(2நாளா 36:21; எரே 25:9-12; தானி 9:2).*

மனாசேயின் சிறையிருப்பும் அந்நிய தேசத்திற்கு அடிமையாகச் சென்ற சம்பவம் என்று சிலர் கூறுகிறார்கள். *(2நாளா 33:11)* இதையும் சேர்த்தால் மொத்தம் நான்கு சிறையிருப்புக்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு வந்திருக்கிறது. அவற்றில் மனாசேயின் சிறையிருப்பு முதலாவதாக வருகிறது.

நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளிலும் சிலவற்றை பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவைகளைப் பாபிலோனிலுள்ள தன்னுடைய கோவிலிலே வைக்கிறான் *(2நாளா 36:7).*

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அதிக வல்லமையுள்ளவன். மிகவும் பயங்கரமானவன். சரித்திரத்திலே இவன் அதிகமாய்ப் பெயர் பெற்றவன். பரிசுத்த வேதாகமத்தில் நேபுகாத்நேச்சாருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

கர்த்தர் எருசலேமை அழிப்பதற்கும், யூதாவின் மனுஷரை சிறைப்பிடிப்பதற்கும் நேபுகாத்நேச்சாரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார்.

யூதாதேசத்திலே யோயாக்கீம் ராஜாவாயிருக்கும்போது, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவனுக்கு விரோதமாக வந்து, அவனை தனக்கு கீழ்ப்படுத்துகிறான். யோயாக்கீம் பாபிலோன் ராஜாவுக்கு பகுதி கட்டுகிறான். ஆனாலும் யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு தொடர்ந்து கீழ்ப்படியவில்லை. யோயாக்கீம் மூன்று வருஷம் மாத்திரமே நேபுகாத்நேச்சாரை சேவிக்கிறான். அதன்பின்பு யோயாக்கீம், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

யோயாக்கீமின் நான்காம் வருஷ ராஜ்யபாரத்தின்போது, நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தை ராஜ்யபாரம்பண்ண ஆரம்பிக்கிறான். அவனுடைய எட்டாம் வருஷ ராஜ்யபாரத்தின்போது, நேபுகாத்நேச்சார் யோயாக்கீமை சிறைப்பிடிக்கிறான். அதன்பின்பு யோயாக்கீம் பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படிவதாகவும், பகுதி கட்டுவதாகவும் ஒப்புக்கொள்கிறான். பாபிலோன் ராஜா யோயாக்கீமை விடுவித்து, அவனை மறுபடியும் யூதாதேசத்திற்கு ராஜாவாயிருக்க அனுமதிக்கிறான்.

யோயாக்கீமோ பாபிலோன் ராஜாவுக்கு மூன்று வருஷங்கள் மாத்திரமே உண்மையுள்ளவனாயிருக்கிறான். அதன் பின்பு யோயாக்கீம் தான் சொன்ன வார்த்தைகளை மீறி, பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். தனக்கு எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேகோவினிடத்திலிருந்து உதவி வரும் என்று நம்பி, யோயாக்கீம் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் தனக்கு விரோதமாக கலகம்பண்ணுவதைக் கண்டு கோபமடைந்த நேபுகாத்நேச்சார், யூதாதேசத்தை மொத்தமாக அழிப்பதற்கு தன்னுடைய சேனையை அங்கே அனுப்புகிறான். கல்தேயருடைய தண்டுகள் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறது.

கல்தேயர் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, கர்த்தர் மேலும் சில சத்துருக்களையும் யூதாதேசத்திற்கு விரோதமாக வர அனுமதிக்கிறார். "கர்த்தர் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் அவன் மேல் வரவிடுகிறார்" (2இராஜா 24:2).

தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிடுகிறார். இந்த சத்துருக்கள் எல்லோரும் பாபிலோன் ராஜாவை சேவிக்கிறார்கள். அவர்கள் நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படிந்து, அவனுக்கு பகுதி கட்டுகிறார்கள்.

கல்தேயரின் தண்டுகள் யூதாதேசத்திற்கு விரோதமாக வரும்போது, அவர்களோடுகூட சீரியரின் தண்டுகளும், மோவாபியரின் தண்டுகளும், அம்மோன் புத்திரரின் தண்டுகளும் வருகிறார்கள். இவர்கள் எல்லோரும் இஸ்ரவேல் தேசத்திற்கு பூர்வகாலத்திலிருந்தே சத்துருக்களாயிருக்கிறவர்கள். இவர்களுக்கும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குமிடையே பகை இருக்கிறது.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே, சத்துருக்கள் யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். கர்த்தர் அனுமதிப்பதினால்தான் அவர்கள் யூதாதேசத்தாரை ஒடுக்குகிறார்கள். கர்த்தர் யூதாவை அழிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய கோபத்திற்கு யூதாவின் ராஜாவாகிய மனாசேயின் பாவம் காரணமாயிருக்கிறது.

"மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடக்கிறது. அவன் சிந்தின குற்றமற்ற இரத்தத்திற்காகவும் எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினதற்காகவும் கர்த்தர் மன்னிக்கச் சித்தமில்லாதிருக்கிறார்" (2இராஜா 24:3,4).

கர்த்தர் பிதாக்களின் பாவங்களையும் அக்கிரமங்களையும், அவர்களுடைய மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறார். மனாசே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். அவன் குற்றமற்ற இரத்தத்தை சிந்தினான். யூதாதேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் இதுவரையிலும் பொறுமையோடு காத்திருக்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவங்களையும் அக்கிரமங்களையும் செய்கிறார்கள்.

மனாசே தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினான் என்று நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் அவனுடைய கொலைப்பாதகங்களும், குற்றங்களும், மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஆனாலும் மனாசேயின் பாவங்கள் அவனுடைய தனிப்பட்ட பாவமாயிருப்பதோடு, அவை யூதாதேசத்தாரின் மொத்த பாவமாகவும் இருக்கிறது.

மனாசே யூதாதேசத்தை குற்றமற்ற இரத்தத்தினால் நிரப்பினான். அவனுடைய பாவங்களில் யூதாஜனத்தாருக்கும் பங்கு இருக்கிறது. ஆகையினால் கர்த்தர் மனாசேயின் பாவங்கள் யூதாதேசத்தாரிடம் விசாரிக்கிறார். மனாசே தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினாலும், யூதாதேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் போனபடியினால், கர்த்தர் யூதாதேசத்தின்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார்.

மனாசே எருசலேமிலே குற்றமற்ற இரத்தத்தை சிந்தியபோது, அவனுக்கு அநேகர் உதவிசெய்தார்கள். அவர்கள் யோயாக்கீமின் காலத்தில் உயிரோடில்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பாவங்களை, அவர்களுடைய பின்சந்ததியாரிடத்தில் விசாரிக்கிறார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை ஒடுக்கியதுபோல, எகிப்தின் ராஜாவையும் ஒடுக்குகிறான். எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்துக்கொள்கிறான். எகிப்து தேசத்தின் பெரும்பகுதி இப்போது பாபிலோன் ராஜாவின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. இதனால் எகிப்தின் ராஜா பலவீனப்பட்டுப்போகிறான்.

அதுவரையிலும் எகிப்தின் ராஜா, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமுக்கு உதவி செய்யும் வாய்ப்பு இருந்தது. பாபிலோன் ராஜா எகிப்தின் ராஜாவை ஒடுக்கின பின்பு, எகிப்தின் ராஜா அப்புறம் தன் தேசத்திலிருந்து புறப்பட்டு வரவில்லை (2இராஜா 24:7).

இந்த சம்பவத்திற்கு பின்பு எகிப்தின் ராஜா சிதேக்கியாவுக்கும் உதவி செய்ய முன்வருகிறான். அதன் பின்பு சரித்திரத்திலே எகிப்தின் ராஜாவைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், என்னிடத்தில் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்துக்கு அனுப்பின யூதாவின் ராஜாவை நீங்கள் நோக்கி: இதோ, உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும்" (எரே 37:7).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தை நிர்மூலம்பண்ணுகிறான். இதைப் பார்த்து யோயாக்கீமின் இருதயம் உடைந்துபோகிறது. நேபுகாத்நேச்சார் யோயாக்கீமையும் சிறைப்பிடிக்கும் நிலமை உண்டாயிற்று. இதனால் மனமுடைந்துபோன யோயாக்கீம், வருத்தத்தோடே செத்துப்போகிறான். அவன் பூரண வயசு வரையிலும் வாழவில்லை. யோயாக்கீம் தன்னுடைய ஆயுசுகாலத்தின் பாதியிலேயே மரித்துப்போகிறான்.

யோயாக்கீமின் மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்தவை யாவும், யூதாவுடைய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது. யோயாக்கீம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவன் குமாரனாகிய யோயாக்கீன் அவன் ஸ்தானத்தில் ராஜாவாகிறான் (2இராஜா 24:5,6).

யோயாக்கீமுடைய மற்ற வர்த்தமானங்களும், அவன் செய்ததும், அவனிடத்திலே கண்டுபிடிக்கப்பட்டதுமான அவனுடைய அருவருப்புகளும், இஸ்ரவேல் யூதா ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது; அவன் ஸ்தானத்தில் அவன் குமாரனாகிய யோயாக்கீன் ராஜாவாகிறான் (2நாளா 36:8).

நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுக்களை பாபிலோனுக்கு கொண்டுபோனபோது, எருசலேமுக்கு சோதனை காலம் ஆரம்பமாயிற்று. பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுக்களைத் தீட்டுப்படுத்துகிறார்கள். இதனால் அவர்களுடைய அக்கிரமத்தின் அளவு அதிகரிக்கிறது.

"பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் பிரபுக்களில் ஆயிரம்பேருக்கு ஒரு பெரிய விருந்து செய்து, அந்த ஆயிரம் பேருக்கு முன்பாகத் திராட்சரசம் குடித்தான். பெல்ஷாத்சார் திராட்சரசத்தை ருசித்துக்கொண்டிருக்கையில், அவன் தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவந்த பொன் வெள்ளி பாத்திரங்களில், ராஜாவாகிய தானும் தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களைக் கொண்டுவந்தார்கள்; அவைகளில் ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும் அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்தார்கள்" (தானி 5:1-3).

யோயாக்கீன் ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருந்து, மூன்று மாதமும் பத்து நாளும் எருசலேமில் அரசாண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான். யோயாக்கீனின் மறுபெயர் எக்கோனியா என்பதாகும்.

"யோயாக்கீன் ராஜாவாகிறபோது எட்டு வயதாயிருந்து" என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இது பதினெட்டு என்றிருக்க வேண்டும். (2இராஜா 24:8) இந்த வயது வித்தியாசம் பிரதியெடுத்தவர்களுடைய பிழையாக இருக்கலாம். யோயாக்கீன் பாபிலோனுக்கு அடிமையாக இழுத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு பல மனைவிகள் இருந்தார்கள். (2இராஜா 24:15). யோயாக்கீனுக்கு பிள்ளைகளும் இருந்தார்கள். (எரே 22:28) யோயாக்கீனுக்கு எட்டு வயது மட்டுமே ஆயிருந்தால் இவையெல்லாம் இருப்பதற்கு வாய்ப்பில்லை.

மறுவருஷத்தின் ஆரம்பத்திலே நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா யோயாக்கீனையும், கர்த்தருடைய ஆலயத்தின் திவ்வியமான பணிமுட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பண்ணி, அவன் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை யூதாவின் மேலும் எருசலேமின்மேலும் ராஜாவாக்குகிறான் (2நாளா 36:9,10).

முதலாவது சிறையிருப்பின் போது, தேவாலயத்திலிருந்து பாபிலோனுக்கு பணிமுட்டுகளெல்லாம் எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. அவற்றுக்குப் பதிலாகச் செய்யப்பட்ட பணிமுட்டுகளைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது.

யோயாக்கீனின் சிறையிருப்பைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யோயாக்கீன் யூதாதேசத்திற்கு ராஜாவானதினால் அவனுக்கு மேன்மையோ, மகிமையோ உண்டாகவில்லை. அவன் மிகுந்த அவமானத்தோடு தன்னுடைய ராஜ்யபாரத்தை இழந்துவிடுகிறான்.

"முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன். அது யோயாக்கீன் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது" (எசே 1:1,2).

யோயாக்கீன் எருசலேமிலே மூன்றுமாதம் மாத்திரமே அரசாளுகிறான். இவனுடைய ராஜ்யபார காலம் மிகவும் குறுகியது. அதன் பின்பு பாபிலோன் ராஜா யோயாக்கீனை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறான்.

யோயாக்கீன் ராஜாவாகிறபோது பதினெட்டு வயதாயிருந்து, எருசலேமிலே மூன்று மாதம் அரசாளுகிறான்; எருசலேம் ஊரானாகிய எல்நாத்தானின் குமாரத்தியான அவன் தாயின்பேர் நெகுஸ்தாள். அவன் தன் தகப்பன் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான் (2இராஜா 24:8,9).

யோயாக்கீன் எருசலேமிலே ராஜ்யபாரம் பண்ணுகிற ஆரம்ப காலத்திலேயே, அவனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும், யூதாஜனங்களுக்கும் பிரச்சனைகள் ஆரம்பமாயிற்று.

அக்காலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் சேவகர் எருசலேமுக்கு வருகிறார்கள்; நகரம் முற்றிக்கை போடப்படுகிறது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய சேவகர் நகரத்தை முற்றிக்கை போடுகையில் அவன் தானும் அதற்கு விரோதமாய் வருகிறான் (2இராஜா 24:10,11).

பாபிலோன் ராஜாவின் சேவகர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப் போடும்போது, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன், நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல் யோயாக்கீன் பாபிலோன் ராஜாவினிடத்தில் சரணடைகிறான்.

யோயாக்கீன் யூதாதேசத்திற்கு ராஜா. யூதாவிலே எருசலேம் நகரம் இருக்கிறது. இது கர்த்தருடைய பரிசுத்த நகரம். எருசலேம் நகரத்திலே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்திலே வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியோடிருக்கவேண்டும். கர்த்தரை சேவிக்கவேண்டும். யோயாக்கீன் ராஜாவுக்கோ கர்த்தர்மீது நம்பிக்கையில்லை.

யூதாவின் ராஜாவாக இருக்கிறவர்கள் தைரியமுள்ளவர்களாகவும், பராக்கிரமசாலிகளாகவும், சத்துருக்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம் பண்ணுகிறவர்களாகவும் இருக்கவேண்டும். ஆனால் யோயாக்கீனிடத்திலோ, கர்த்தரிடத்தில் பக்தியுமில்லை. அவனிடத்தில் வீரமுமில்லை. யோயாக்கீன் நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமலேயே, அவனிடத்தில் சரணடைந்துவிடுகிறான்.

நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டிருக்கிறபொழுது, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனும், அவன் தாயும், அவன் ஊழியக்காரரும், அவன் பிரபுக்களும், பிரதானிகளும் பாபிலோன் ராஜாவினிடத்திற்குப் புறப்பட்டுப்போகிறார்கள்; அவனைப் பாபிலோன் ராஜா தன் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே பிடித்துக் கொள்கிறான் *(2இராஜா 24:12).*

யூதாதேசத்தின் ராஜாவாக இருந்த யோயாக்கீன் இப்போது, பாபிலோன் ராஜாவின் சிறைக்கைதியாகயிருக்கிறான். பாபிலோன் ராஜா யோயாக்கீனை சிறைப்பிடித்து, கர்த்தருடைய ஆலயத்தைக் கொள்ளையிடுகிறான். எருசலேம் நகரத்திலே, நேபுகாத்நேச்சாரை எதிர்ப்பதற்கு ஒருவனுமில்லை.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொள்கிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகளையெல்லாம், நேபுகாத்நேச்சார் உடைத்துப்போடுகிறான் *(2இராஜா 24:13).*

இந்த சம்பவங்களெல்லாம் கர்த்தர் சொல்லியிருந்தபடியே நடைபெறுகிறது "இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்" *(2இராஜா 20:17).*

நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தைக் கொள்ளையிடும்போது, எருசலேம் நகரத்திலே ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம்பண்ணின முதலாம் வருஷத்திலே, எருசலேமுக்கு விரோதமாக வந்து, எருசலேம் ஜனத்தாரில் அநேகரை பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்துக் கொண்டுபோனான். இந்த சம்பவம் எட்டு வருஷங்களுக்கு முன்பு நடைபெற்றது. அப்போது யோயாக்கீம் ராஜாவுடைய மூன்றாம் வருஷ ஆட்சிக்காலமாயிருந்தது.

இதற்கு எட்டு வருஷங்களுக்கு முன்பு நடைபெற்ற சிறையிருப்பை, வேதபண்டிதர்கள், முதலாம் சிறையிருப்பு என்று சொல்லுகிறார்கள். அப்போது தானியேல் போன்ற முக்கியமானவர்கள் எல்லோரும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டார்கள்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிக்கை போட்டான்...... அவர்களுக்குள், யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள்" *(தானி 1:1,6).*

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீன் ராஜ்யபாரம்பண்ணும் காலத்திலும் எருசலேமுக்கு விரோதமாக வந்து, அந்த நகரத்திலுள்ள அநேகரை சிறைப்பிடித்து பாபிலோனுக்கு கொண்டு போகிறான். வேதபண்டிதர்கள் இந்த சிறையிருப்பை "இரண்டாம் சிறையிருப்பு" என்று சொல்லுகிறார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீனையும், ராஜாவின் தாயையும், ராஜாவின் ஸ்திரீகளையும், அவன் பிரதானிகளையும், தேசத்தின் பராக்கிரமசாலிகளையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோகிறான் *(2இராஜா 24:15).*

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யோயாக்கீன், அங்கே முப்பத்தேழு வருஷங்கள் சிறையிருப்பிலிருக்கிறான்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தேழாந்தேதியிலே, ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து புறப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்துகிறான்"

"ஏவில் மெரொதாக் அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்து ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து, அவனுடைய சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் தனக்கு முன்பாகப் போஜனம்பண்ணும்படி செய்தான்" (2இராஜா 25:27-29).

நேபுகாத்நேச்சார் யோயாக்கீன் ராஜாவையும், ராஜகுடும்பத்தாரையும் சிறைப்பிடித்து கொண்டதோடு, எருசலேமிலுள்ள முக்கியமானவர்கள் எல்லோரையும் சிறைப்பிடிக்கிறான்.

பாபிலோன் ராஜா எருசலேமியர் அனைவரும் சகல பிரபுக்களும் சகல பராக்கிரமசாலிகளுமாகிய பதினாயிரம்பேரையும், சகல தச்சரையும் கொல்லரையும் சிறைபிடித்துக் கொண்டுபோகிறான்; தேசத்தில் ஏழை ஜனங்களே அல்லாமல் வேறொருவரும் மீதியாயிருக்கவில்லை (2இராஜா 24:14). இவர்கள் எல்லோரும் யுத்தஆயுதங்களை செய்யக்கூடிய திறமையுள்ளவர்கள்.

பாபிலோன் ராஜா எருசலேமிலுள்ள பராக்கிரமசாலிகளையும், பலசாலிகளையும் சிறைப்பிடிக்கிறான். அவன் பராக்கிரமசாலிகளான மனுஷராகிய ஏழாயிரம்பேரையும், தச்சரும் கொல்லருமாகிய ஆயிரம்பேரையும், யுத்தம்பண்ணத்தக்க பலசாலிகளையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோகிறான் (2இராஜா 24:16).

இந்த சிறையிருப்பின்போது எசேக்கியேல் தீர்க்கதரிசியும் சிறைப்பட்டுப்போகிறார்.

"முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன். அது யோயாக்கீன் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது" (எசே 1:1,2).

யூதாவின் சிறையிருப்பு 2நாளா 36:11-21

2நாளா 36:11. சிதேக்கியா ராஜாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்து, பதினொருவருஷம் எருசலேமில் அரசாண்டு,

2நாளா 36:12. தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை.

2நாளா 36:13. தேவன்மேல் தன்னை ஆணையிடுவித்துக்கொண்ட நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு, தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்.

2நாளா 36:14. ஆசாரியரில் பிரதானமானவர்கள் யாவரும் ஜனங்களும் கூடிப் புறஜாதிகளுடைய சகல அருவருப்புகளின்படியும் மிகவும் துரோகம்பண்ணி, கர்த்தர் எருசலேமிலே பரிசுத்தம்பண்ணின அவருடைய ஆலயத்தை தீட்டுப்படுத்தினார்கள்.

2நாளா 36:15. அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை ஏற்கெனவே அனுப்பினார்.

2நாளா 36:16. ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது; சகாயமில்லாமல் போயிற்று.

2நாளா 36:17. ஆதலால் அவர் அவர்கள்மேல் கல்தேயரின் ராஜாவை வரப்பண்ணினார்; அவன் அவர்கள் வாலிபரை அவர்களுடைய பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்று, வாலிபரையும் கன்னியாஸ்திரீகளையும் முதியோரையும் விருத்தாப்பியரையும் தப்பவிடவில்லை; எல்லாரையும் தேவன் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.

2நாளா 36:18. அவன் தேவனுடைய ஆலயத்தின் பெரிதும் சிறிதுமான பணிமுட்டுகள் அனைத்தையும், கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும் ராஜாவுக்கும் அவன் பிரபுக்களுக்கும் இருந்த பொக்கிஷங்களுமாகிய அனைத்தையும் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.

2நாளா 36:19. அவர்கள் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்து, அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த திவ்வியமான பணிமுட்டுகளையெல்லாம் அழித்தார்கள்.

2நாளா 36:20. பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துப் போனான்; பெர்சியா ராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்படுமட்டும் அங்கே அவர்கள் அவனுக்கும் அவன் குமாரருக்கும்அடிமைகளாயிருந்தார்கள்.

2நாளா 36:21. கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபதுவருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது.

கல்தேயர்கள் யூதாதேசத்தையும், எருசலேம் நகரத்தையும் அழித்துப்போடுகிறார்கள். ஆபிரகாம் கர்த்தருடைய சிநேகிதன். கர்த்தர் ஆபிரகாமை ஊர் என்னும் பட்டணத்திலிருந்து அழைத்தார். ஊர் என்னும் பட்டணம் கல்தேயருடைய தேசத்திலுள்ளது. கர்த்தர் ஆபிரகாமை கல்தேயருடைய தேசத்திலிருந்து வெளியே அழைத்து வந்து, அவருக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கானான் தேசத்தைக் கொடுத்தார்.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார். ஆபிரகாமின் சந்ததியாரும் கர்த்தரோடு உடன்படிக்கைக்குட்படுத்தப்படுகிறார்கள். பிற்காலத்தில், ஆபிகாமின் சந்ததியாராகிய இஸ்ரவேல் புத்திரர், கர்த்தரோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறுகிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. முடிவிலே இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்தை விட்டு வெளியேறி கல்தேயருடைய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகிறார்கள். ஆபிரகாம் எந்த தேசத்திலிருந்து வெளியேறி வந்தாரோ, அந்த தேசத்திற்கே, ஆபிரகாமின் சந்ததியார் சிறைப்பிடிக்கப்பட்டு போகிறார்கள்.

யூதாதேசம் அழிந்துபோகிறது. எருசலேம் நகரம் நிர்மூலமாகிறது. இந்தப் பேரழிவுக்கு யூதாதேசத்தாரின் பாவங்களும், எருசலேமின் குடிகளுடைய அக்கிரமங்களுமே காரணம்.

சிதேக்கியா ராஜாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்து, பதினொருவருஷம் எருசலேமில் அரசாளுகிறான். அவன் தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்; சிதேக்கியா கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்குமுன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை (2நாளா 36:11,12).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீனுக்கு பதிலாக, அவன் சிறிய தகப்பனாகிய மத்தனியாவை ராஜாவாக வைக்கிறான். பாபிலோன் ராஜா மத்தனியாவுக்கு சிதேக்கியா என்று மறுபெயரிடுகிறான் (2இராஜா 24:17). மத்தனியா யோசியாவின் குமாரன்.

சிதேக்கியா என்னும் பெயருக்கு "கர்த்தருடைய நீதி" என்று பொருள். சிதேக்கியாவே யூதாவின் ராஜாக்களில் கடைசியானவன்.

சிதேக்கியா ராஜாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமிலே அரசாளுகிறான்; லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் அமுத்தாள் (2இராஜா 24:18).

யோயாக்கீம் செய்தபடியெல்லாம் சிதேக்கியாவும் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான். எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றித் தீருமளவும், அவைகளின்மேலுள்ள அவருடைய கோபத்தினால் இப்படி நடந்ததும் அல்லாமல், சிதேக்கியா பாபிலோனிலே ராஜாவுக்கு விரோதமாகக் கலகமும் பண்ணுகிறான்" (2இராஜா 24:19,20).

சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணியது அவனுடைய மதியீனம். இதனால் யூதாதேசத்திற்கு நியமிக்கப்பட்ட அழிவு விரைந்துவருகிறது.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டு, அதை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்கள் (2இராஜா 25:1-4). அவர்கள் எருசலேமிலுள்ள எல்லா கட்டிடங்களையும் சுட்டெரித்துப் போடுகிறார்கள் (2இராஜா 25:8,9). கல்தேயர் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள் (2இராஜா 25:10). அவர்கள் எருசலேம் நகரத்தில் மீதியான ஜனத்தை பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறார்கள் (2இராஜா 25:11,12).

எருசலேம் நகரம் யூதாதேசத்தின் தலைநகரம். எருசலேம் நகரத்தின் மகிமை அதைவிட்டு நீங்கிற்று. யூதாதேசத்தின் ராஜா சிறைக்கைதியாகப் பிடிக்கப்படுகிறான். ராஜகுடும்பத்தார் அழிக்கப்படுகிறார்கள் (2இராஜா 25:5-7). யூதாதேசத்தின் முக்கியமான பிரதானிகளும், அதிகாரிகளும் கொல்லப்படுகிறார்கள் (2இராஜா 25:18-21).

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். இது இஸ்ரவேலுக்கு சாட்சியாய் விளங்கிற்று. ஆனால் எருசலேம் நகரத்தின் மகிமை அதைவிட்டு நீங்கிற்று. சாலொமோன் கட்டின தேவாலயம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுகிறது (2இராஜா 25:9). கல்தேயர்கள் தேவாலயத்தில் மீதியாயிருக்கிற பரிசுத்த பணிமுட்டுக்களை பாபிலோன் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் (2இராஜா 25:13-17).

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தில் மீதியாகயிருக்கிற ஜனத்தின்மேல் கெதலியா என்பவனை அதிகாரியாக நியமிக்கிறான். இஸ்மவேல் என்பவன் கெதலியாவைக் கொன்றுபோடுகிறான். யூதாதேசத்திலே மீதமாயிருக்கிற ஜனங்கள், கல்தேயருக்கு பயந்து, எகிப்து தேசத்திற்கு போய்விடுகிறார்கள் (2இராஜா 25:22-26).

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன் முப்பத்தேழு வருஷங்களாக பாபிலோன் தேசத்திலே சிறைவைக்கப்பட்டிருக்கிறான். அதன்பின்பு அவன் விடுவிக்கப்பட்டு உயர்த்தப்படுகிறான் (2இராஜா 25:27-30).

சிதேக்கியா யூதாதேசத்தை ராஜ்யபாரம் பண்ணின காலத்தில் யூதாதேசத்திற்கு பேரழிவு வருகிறது. இந்த அழிவுக்கு அவனுடைய பாவமும் மதியீனமும் பிரதான காரணங்களாகும். சிதேக்கியா கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ஆட்சி செய்திருந்தால், அவனுக்கும் யூதாதேசத்திற்கும் பேரழிவு வந்திருக்காது. ஆனால் அவனோ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

தேவன்மேல் தன்னை ஆணையிடுவித்துக் கொண்ட நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய் சிதேக்கியா கலகம்பண்ணுகிறான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு, தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான் *(2நாளா 36:13)*.

சிதேக்கியா கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் அவன் அவனுடைய சத்துருக்களுக்கு அடிமையாகிறான். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள், மனுஷருக்கு அடிமைகளாவார்கள். சிதேக்கியா பாபிலோன் ராஜாவோடு உடன்படிக்கை செய்திருக்கிறான். ஆனால் சிதேக்கியாவோ பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறான்.

சிதேக்கியா கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் பண்ணுகிறான். அவன் செய்த பாவங்களின் விவரம் வருமாறு:

1. தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறான்.

2. தன்னைத் தாழ்த்தவில்லை. *(2நாளா 36:12)*.

3. நேபுகாத்நேச்சார் என்னும் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறான். *(எசே 17:11-20)*.

4. தன் கழுத்தை அழுத்தமாக்குகிறான். *(2நாளா 36:13)*.

5. தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திரும்பாதபடிக்கு தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, சிதேக்கியாவை யூதாவின்மேலும், எருசலேமின்மேலும் ராஜாவாக்கினான். ஆனால் சிதேக்கியாவோ தன்னை ராஜாவாக்கின நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறான். இதனால் நேபுகாத்நேச்சாரின் கோபம் சிதேக்கியாவுக்கு விரோதமாகத் திரும்புகிறது.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவின்மீது கோபப்படும்போது, கர்த்தரும் சிதேக்கியாவுக்கு உதவி செய்யவில்லை. சிதேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பவில்லை. அவன் கர்த்தருக்கு விரோதமாக தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

சிதேக்கியாவின் காலத்தில், யூதாதேசத்திலே விக்கிரகாராதனை அதிகரிக்கிறது. ஆசாரியர் கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.

ஆசாரியரில் பிரதானமானவர்கள் யாவரும் ஜனங்களும் கூடிப் புறஜாதிகளுடைய சகல அருவருப்புகளின்படியும் மிகவும் துரோகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் எருசலேமிலே பரிசுத்தம்பண்ணின அவருடைய ஆலயத்தை அவர்கள் தீட்டுப்படுத்துகிறார்கள் *(2நாளா 26:14)*.

ஆசாரியர்களில் பிரதானமானவர்கள் விக்கிரகாராதனைக்கு விரோதமாக எதிர்த்து நிற்கவேண்டும். அவர்கள் கர்த்தர்மீது பக்திவைராக்கியத்தோடிருக்கவேண்டும். ஆனால் அவர்களே கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.

கர்த்தருடைய ஆசாரியர்களும் பாவம் செய்கிறார்கள். ஜனங்களும் பாவம் செய்கிறார்கள். அவர்கள் செய்த பாவங்களின் விவரம் வருமாறு:

1. புறஜாதிகளுடைய சகல அருவருப்புகளின் படியும் மிகவும் துரோகம்பண்ணுகிறார்கள்.

2. கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள்.

3. தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணுகிறார்கள்.

4. கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டை செய்கிறார்கள் *(2நாளா 36:16)*.

5. அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்திக்கிறார்கள்.

பாவத்தின் சம்பளம் மரணம். தமக்கு விரோதமாக பாவம் செய்கிற யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் மூலமாக எச்சரிக்கிறார்.

அவர்களுடைய பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தையும் தமது வாசஸ்தலத்தையும் காப்பதற்கான இரக்கமுள்ளவராயிருந்தபடியால், அவர்களிடத்துக்குத் தம்முடைய ஸ்தானாபதிகளை அனுப்புகிறார் (2நாளா 36:15).

ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஸ்தானாபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை அசட்டைசெய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூளுகிறது; அவர்களுக்கு சகாயமில்லாமல் போயிற்று (2நாளா 36:16).

ஒரு காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர்மீது பக்தியாக இருந்தார்கள். கர்த்தர் அவர்களுக்குச் சகாயராயிருந்தார். ஆனால் இப்போதோ அவர்கள் பாவம் செய்து, கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூளுகிறது. அவர்களுக்குச் சகாயமில்லாமல் போயிற்று. கர்த்தருடைய பிள்ளைகள் மிகுந்த எச்சரிப்போடு ஜீவிக்க வேண்டும். இல்லையென்றால் கர்த்தருடைய கோபம் நம்மேலும் மூளும். நமக்கும் சகாயமில்லாமல் போகும்.

கர்த்தர் தமது ஜனத்தின்மீதும், தமது வாசஸ்தலத்தின்மீதும் இரக்கமுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய இரக்கத்தினிமித்தமாக, யூதாவின் மனுஷர் அழிவுக்கு தப்பித்திருக்கலாம். கர்த்தர் தமது கிருபையினால் அவர்கள் மத்தியிலே தம்முடைய ஊழியக்காரர்களை அனுப்புகிறார். அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டை செய்ததோடு, கர்த்தருடைய வார்த்தைகளைசொன்ன தீர்க்கதரிசிகளையும் நிந்திக்கிறார்கள். இக்காலத்தில் எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டைசெய்து, அவருடைய தீர்க்கதரிசிகளை நிந்தித்தபடியால், கர்த்தருடைய உக்கிரம் அவர்கள்மீது மூளுகிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை நிந்திப்பது அவருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிருக்கிறது. இதன் நிமித்தமாக கர்த்தருடைய உக்கிர கோபம் அதிகமாய் மூளுகிறது. தம்முடைய ஊழியக்காரர்களுக்கு விரோதமாக செய்யப்படும் நிந்தைகளை, கர்த்தர் தமக்கு விரோதமாக செய்யப்படும் நிந்தைகளாக பாவிக்கிறார்.

ஆகையினால்தான், புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, கர்த்தருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்தின சவுலைப் பார்த்து, "சவுலே, சவுலே, என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்று கர்த்தர் கேட்கிறார்.

எருசலேமின் குடிகள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை நிந்திக்கிறார்கள். இந்தப் பாவம் அவர்களுடைய எல்லா பாவங்களிலும் பிரதான பாவமாயிருக்கிறது. ரோமாபுரியார் எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்கள்.

"ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன்; அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களில் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்படுத்துவீர்கள்" (மத் 23:34).

நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 23:35,36).

"எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" (மத் 23:37).

சிதேக்கியா ராஜாவின் காலத்திற்கு முன்பாகவே இரண்டு சிறையிருப்புக்கள் நடைபெற்றிருக்கிறது. முதலாவது சிறையிருப்பு யோயாக்கீம் ராஜாவினுடைய ஆட்சிக்காலத்தின் நான்காம் வருஷத்தில் நடைபெற்றது. இரண்டாவது சிறையிருப்பு எக்கோனியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில் முதல் வருஷத்தில் நடைபெற்றது.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றினார்கள். அவர்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். யூதாமனுஷரின் பாவத்தினிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் எருசலேமின்மீதும், யூதாதேசத்தின்மீதும் கோபமாயிருக்கிறார். கர்த்தர் எருசலேமையும் யூதாவையும் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றிப்போடுகிறார்.

கர்த்தருடைய கோபம் அவைகளின்மேல் மிகவும் அதிகமாயிருக்கிறது. யூதாதேசத்தின்மீது தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக, கர்த்தர் யூதாவுக்கு இதுவரையிலும் கொடுத்து வந்த பாதுகாப்பையும், பராமரிப்பையும் அகற்றிப்போடுகிறார்.

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். அங்கே கர்த்தருடைய தேவாலயமுள்ளது. கர்த்தருடைய பிரசன்னம் எருசலேமில் தங்கியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையின் உடன்படிக்கைக்கும், அவருடைய அன்புக்கும் எருசலேமிலுள்ள தேவாலயம் அடையாளமாயிருக்கிறது. கர்த்தரோ இப்போது எருசலேமின்மீதும் யூதாவின்மீதும் கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம், எருசலேமைவிட்டு நீங்கிப்போயிற்று.

சிதேக்கியா ராஜாவும் துன்மார்க்கனாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். சிதேக்கியா யூதாவின் மனுஷரை கர்த்தருக்கு பயந்து ஆளுகை செய்யவில்லை. அவன் ராஜாவாகியபோது இருபத்தொரு வயதாயிருந்தான். இவன் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. ஆனாலும் கர்த்தருடைய பார்வைக்கு சிதேக்கியா பொல்லாப்பானதை செய்கிறான்.

யோயாக்கீம் செய்தபடியெல்லாம், சிதேக்கியாவும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான் (எரே 52:2). சிதேக்கியா கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ஆளுகை செய்யவேண்டும். அவன் யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும், யூதாவின் மனுஷருக்கும் நன்மை செய்யவேண்டும். ஆனால் அவனோ கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்கிறான். அவனுடைய பொல்லாப்பினிமித்தமாய் கர்த்தருடைய கோபம் சிதேக்கியா ராஜாவின்மீது வருகிறது.

சிதேக்கியா பாபிலோன் தேசத்திற்கு கீழ்ப்படிந்து யூதாதேசத்தை ஆட்சிசெய்யவேண்டும். அவன் கல்தேயருக்கு கப்பம் கட்டவேண்டும். ஆனால் சிதேக்கியாவோ பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான் (எரே 52:3). இது சிதேக்கியா ராஜாவின் பாவமும், அவனுடைய மதியீனமும் ஆகும்.

சிதேக்கியாவின் பாவத்தினால் யூதாவுக்கும், யூதாவின் ஜனங்களுக்கும் அழிவு வருகிறது. கர்த்தரும் சிதேக்கியாவின்மீது கோபமாயிருக்கிறார். பாபிலோன் ராஜாவும் அவன்மீது கோபமாயிருக்கிறான். இதனால் யூதாதேசத்திற்கு சடுதியில் அழிவு உண்டாயிற்று.

ஆதலால் கர்த்தர் யூதாவின் மனுஷர் மேலும், எருசலேமின் குடிகள்மேலும் கல்தேயரின் ராஜாவை வரப்பண்ணுகிறார்; அவன் அவர்கள் வாலிபரை அவர்களுடைய பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்று போடுகிறான். நேபுகாத்நேச்சார் யூதர்களுடைய வாலிபரையும் கன்னியாஸ்திரீகளையும் முதியோரையும் விருத்தாப்பியரையும் தப்பவிடவில்லை; கர்த்தர் அவர்கள் எல்லாரையும் நேபுகாத்நேச்சாரின் கையில் ஒப்புக்கொடுக்கிறார் (2நாளா 36:17).

நேபுகாத்நேச்சார் எருசலேமின் குடிகளில் அநேகரை, கர்த்தருடைய ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்றுபோடுகிறான். கர்த்தருடைய ஆலயம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலம். ஒருவேளை எருசலேமின் குடிகள் தங்களுக்கு ஆபத்து வந்தபோது, பாதுகாப்பைத் தேடி கர்த்தருடைய ஆலயத்திலே அடைக்கலம் பெற்றிருக்கலாம். கர்த்தருடைய ஆலயம் அவர்களைப் பாதுகாக்கவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

கல்தேயர்கள் கர்த்தருடைய ஆலயத்தின்மீது பக்தியாயில்லை. அவர்களிடத்தில் மனிதாபிமானமுமில்லை. அவர்கள் வயது வித்தியாசம் பாராமல், ஆண் பெண் என்ற வித்தியாசம் பாராமல், வாலிபரையும், முதியோரையும், கன்னியாஸ்திரீகளையும் கொன்றுபோடுகிறார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஆலயத்தைக் கொள்ளையிடுகிறான். அவன் தேவனுடைய ஆலயத்தின் பெரிதும் சிறிதுமான பணிமுட்டுகள் அனைத்தையும், கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும் ராஜாவுக்கும் அவன் பிரபுக்களுக்கும் இருந்த பொக்கிஷங்களுமாகிய அனைத்தையும் பாபிலோனுக்குக் கொண்டுபோகிறான் (2நாளா 36:18).

கல்தேயரின் சேனையிலுள்ளவர்கள் தேவனுடைய ஆலயத்தையும், எருசலேம் நகரத்தையும் முற்றிலுமாய் அழித்துப் போடுகிறார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்தி, எருசலேமின் அலங்கத்தை இடித்துப்போடுகிறார்கள். எருசலேமின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்து, அதிலிருந்த திவ்வியமான பணிமுட்டுகளையெல்லாம் அழித்துப்போடுகிறார்கள் (2நாளா 36:19).

"அதின் அரமனைகளில் தேவன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்" (சங் 48:3). எருசலேம் நகரம் ஐசுவரியம் மிகுந்த நகரம். எருசலேமின் குடிகள் கர்த்தரை விட்டு விலகிப்போனதினால், அவர்களுடைய ஐசுவரியங்களுக்குபாதுகாப்பு கிடைக்கவில்லை.

கல்தேயரின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பட்டயத்தினால் சங்காரம்பண்ணுகிறான். பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துப்போகிறான் (2நாளா 36:20).

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டு, அதை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார்கள் (2இராஜா 25:1-4). அவர்கள் எருசலேமிலுள்ள எல்லா கட்டிடங்களையும் சுட்டெரித்துப் போடுகிறார்கள் (2இராஜா 25:8,9). கல்தேயர் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள் (2இராஜா 25:10). அவர்கள் எருசலேம் நகரத்தில் மீதியான ஜனத்தை பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறார்கள் (2இராஜா 25:11,12).

எருசலேம் நகரம் யூதாதேசத்தின் தலைநகரம். எருசலேம் நகரத்தின் மகிமை அதைவிட்டு நீங்கிற்று. யூதாதேசத்தின் ராஜா சிறைக்கைதியாகப் பிடிக்கப்படுகிறான். ராஜகுடும்பத்தார் அழிக்கப்படுகிறார்கள் (2இராஜா 25:5-7). யூதாதேசத்தின் முக்கியமான பிரதானிகளும், அதிகாரிகளும் கொல்லப்படுகிறார்கள் (2இராஜா 25:18-21).

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். இது இஸ்ரவேலுக்கு சாட்சியாய் விளங்கிற்று. ஆனால் எருசலேம் நகரத்தின் மகிமை அதைவிட்டு நீங்கிற்று. சாலொமோன் கட்டின தேவாலயம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுகிறது (2இராஜா 25:9). கல்தேயர்கள் தேவாலயத்தில் மீதியாயிருக்கிற பரிசுத்த பணிமுட்டுக்களை பாபிலோன் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள் (2இராஜா 25:13-17).

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தில் மீதியாகயிருக்கிற ஜனத்தின்மேல் கெதலியா என்பவனை அதிகாரியாக நியமிக்கிறான். இஸ்மவேல் என்பவன் கெதலியாவைக் கொன்றுபோடுகிறான். யூதாதேசத்திலே மீதமாயிருக்கிற ஜனங்கள், கல்தேயருக்கு பயந்து, எகிப்து தேசத்திற்கு போய்விடுகிறார்கள் (2இராஜா 25:22-26).

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீன் முப்பத்தேழு வருஷங்களாக பாபிலோன் தேசத்திலே சிறைவைக்கப்பட்டிருக்கிறான். அதன்பின்பு அவன் விடுவிக்கப்பட்டு உயர்த்தப்படுகிறான் (2இராஜா 25:27-30).

சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான். பாபிலோன் தேசத்து ஆளுகையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பது சிதேக்கியாவின் விருப்பம். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரோ, சிதேக்கியாவின் கலகத்தை அடக்க, அவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான்.

சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிரே பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டுகிறார்கள் (2இராஜா 25:1).

அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருக்கிறது (2இராஜா 25:2). கல்தேயர்கள் இரண்டு வருஷங்களாக எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறார்கள். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான் என்னும் செய்தியைக் கேட்டு, கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமான முற்றிக்கையை விலக்கிக்கொள்கிறார்கள்.

"பார்வோனின் சேனை வருகிறதென்று, கல்தேயருடைய சேனை எருசலேமைவிட்டுப் போனது" (எரே 37:11). தாங்கள் பயந்த பிரகாரம், எகிப்தியர்கள் பலமுள்ளவர்களாயில்லை என்பதை அறிந்துகொண்டு, கல்தேயர்கள் மறுபடியும் எருசலேமுக்கு திரும்பி வந்து, அந்த நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடும்போது, நகரத்திலே பஞ்சம் அதிகரிக்கிறது. நாலாம் மாதம் ஒன்பதாந்தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்திற்கு ஆகாரம் இல்லாமற் போயிற்று; நகரத்தின் மதிலில் திறப்பு உண்டாயிற்று (2இராஜா 25:3).

கல்தேயர்கள் எருசலேமின் அலங்கங்களை உடைத்து, நரகத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்கள். அவர்கள் நகரத்தின் மதிலிலே திறப்பை உண்டுபண்ணுகிறார்கள். அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ராஜாவுடைய தோட்டத்தின் வழியாய் இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலால் தப்பி, அவர்களும் ராஜாவுமாய் சமனான பூமியை நோக்கி ஓடிப்போகிறார்கள் (2இராஜா 25:4).

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவும், அவனுடைய குடும்பத்தாரும், ராஜாவின் அரமனையிலுள்ள பிரதானிகளும், இரவு வேளையிலே தப்பி ஓடுகிறார்கள். அவர்கள் தப்பிப்போவது கல்தேயருக்கு தெரியவருகிறது.

கல்தேயரின் இராணுவத்தார் ராஜாவைப் பின்தொடர்ந்து எரிகோவின் சமனான பூமியில் அவனைப் பிடிக்கிறார்கள்; அப்பொழுது சிதேக்கியாவின் இராணுவமெல்லாம் அவனை விட்டுப் சிதறிப்போயிற்று (2இராஜா 25:5).

கல்தேயரின் இராணுவத்தார் சிதேக்கியாவை பிடித்து, அவனை ரிப்லாவிலிருக்கிற பாபிலோன் ராஜாவினிடத்துக்குக் கொண்டுபோய், அவனை நியாயந்தீர்க்கிறார்கள் (2இராஜா 25:6).

அவர்கள் சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டி, சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டு, அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோகிறார்கள் (2இராஜா 25:7).

தன்னுடைய குமாரர் வெட்டிக்கொல்லப்படுவதை சிதேக்கியா தன்னுடைய கண்களால் பார்க்கிறான். அதன் பின்பு சிதேக்கியாவால் எதையும் பார்க்க முடியாதபடிக்கு, கல்தேயர் அவனுடைய கண்களைப் பிடுங்கி விடுகிறார்கள். குருடனாகயிருக்கிற சிதேக்கியாவை, கல்தேயர் பாபிலோனுக்கு கொண்டு போகிறார்கள்.

சிதேக்கியா பாபிலோனுக்கு கொண்டுபோகப்படுவான் என்று எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்.

"அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான்; நான் அவனைச் சந்திக்குமட்டும் அங்கே அவன் இருப்பான்; நீங்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணினாலும் உங்களுக்கு வாய்ப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், நீ தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டியது என்ன என்று சொல்லி, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அங்கே அவனை அடைத்து வைத்தான்" (எரே 32:5).

"நீ அவன் கைக்குத்தப்பிப்போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும்; அவன் வாய் உன்வாயோடே பேசும்; நீ பாபிலோனுக்குப் போவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 34:3).

சிதேக்கியா பாபிலோனைக் காணமாட்டான் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். சிதேக்கியாவின் கண்கள் பிடுங்கப்பட்டு அவன் குருடனாயிருக்கிறான். ஆகையினால் அவன் பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டாலும், அவனால் பாபிலோனை பார்க்க முடியவில்லை.

"நான் என் வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்; அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன்; அங்கே அவன் சாவான்; ஆகிலும் அதைக் காணமாட்டான்" (எசே 12:13).

கல்தேயரின் இராணுவத்தார் சிதேக்கியாவுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப்போட்டு, அவனை பாபிலோனுக்கு கொண்டு போகிறார்கள். சிதேக்கியா கண்கள் பிடுங்கப்பட்ட குருடனாயிருக்கிறான். அவனால் தப்பித்து ஓடமுடியாது. ஆனாலும் கல்தேயரின் இராணுவத்தார் அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப்போட்டு, அவனை அதிகமாய் அவமானப்படுத்துகிறார்கள்.

கல்தேயரின் இராணுவத்தார் சிதேக்கியாவை பாபிலோனுக்கு கொண்டு போய் ஒரு மாதமாயிற்று. அதன் பின்பு பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய காவல் சேனாபதியாகிய நெபுசராதான் என்பவனை எருசலேமுக்கு அனுப்புகிறான். எருசலேமை முற்றிலுமாக அழித்துவிடவேண்டுமென்று பாபிலோனின் ராஜா நெபுசராதானுக்கு கட்டளை கொடுத்து அனுப்பியிருக்கிறான்.

ஐந்தாம் மாதம் ஏழாந்தேதியிலே நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் பத்தொன்பதாம் வருஷத்திலே, பாபிலோன் ராஜாவின் ஊழியக்காரனாகிய நெபுசராதான் என்னும் காவல் சேனாபதி எருசலேமுக்கு வருகிறான் (2இராஜா 25:8)

கல்தேயரின் இராணுவத்தார் ஏற்கெனவே எருசலேம் நகரத்திற்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருந்தார்கள். அப்போது அவர்கள் எருசலேம் நகரத்தின் மதிலிலே திறப்பு உண்டாக்கி, நகரத்திற்குள் பிரவேசித்தார்கள்.

"நாலாம் மாதம் ஒன்பதாந்தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்திற்கு ஆகாரம் இல்லாமற் போயிற்று; நகரத்தின் மதிலில் திறப்பு கண்டது" (2இராஜா 25:3).

எருசலேம் நகரத்து மதிலிலே திறப்பு கண்டதற்கும், நெபுசராதான் எருசலேமுக்கு விரோதமாக வந்ததற்கும் இடையில் ஒருமாதம் இடைவெளி இருக்கிறது. கர்த்தர் இந்த ஒரு மாதத்தை எருசலேமின் குடிகளுக்கு கிருபையின் மாதமாக கொடுத்திருக்கிறார். அவர்கள் இந்த ஒரு மாதத்தில் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கவேண்டும்.

யூதாவின் ஜனங்களும், எருசலேமின் குடிகளும் மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் இதுவரையிலும் நீடிய பொறுமையோடு காத்திருந்தார். ஆனால் எருசலேமின் குடிகளோ கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறார்கள்.

நெபுசராதான் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமின் சகல கட்டடங்களையும், பெரிய வீடுகள் எல்லாவற்றையும் அக்கினியால் சுட்டெரித்து விடுகிறான் (2இராஜா 25:9).

தாவீது ராஜா எருசலேமிலுள்ள ராஜாவின் அரமனையைக் கட்டினார். அதன் பின்பு சாலொமோன் ராஜாவும் எருசலேமிலே பெரிய கட்டிடங்களைக் கட்டினார். சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார். கர்த்தருடைய கண்களும், அவருடைய இருதயமும் எந்நாளும் அங்கே இருக்கும். ஆனாலும் நெபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியால் சுட்டெரித்துவிடுகிறான்.

"கர்த்தர் அவனை நோக்கி: நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்; நீ கட்டின இந்த ஆலயத்தில் என் நாமம் என்றைக்கும் விளங்கத்தக்கதாக, அதைப் பரிசுத்தமாக்கினேன்; என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் அங்கேயிருக்கும்" (1இராஜா 9:3).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ஆலயத்தின் அலங்காரத்திற்கும், அழகுக்கும், பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், பரிசுத்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். யூதாஜனங்கள் மத்தியிலே உண்மையான தெய்வபக்தியில்லை. அவர்கள் கர்த்தரைப் புறக்கணித்துவிடுகிறார்கள். ஆகையினால் கர்த்தரும் யூதாஜனங்களையும், எருசலேமிலே கட்டப்பட்டிருக்கிற ஆலயத்தையும் புறக்கணித்துவிடுகிறார்.

எருசலேமின் குடிகள் கர்த்தரை நம்பாமல் கர்த்தருடைய ஆலயத்தை நம்பினார்கள். தாங்கள் பாவம் செய்தாலும், கர்த்தருடைய ஆலயம் தங்களைப் பாதுகாக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் ஆலயம் அவர்களைப் பாதுகாக்கவில்லை. கர்த்தர் அவர்களை அழிவுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். கர்த்தர் நம்மைப் பாதுகாக்கவில்லையென்றால், நமக்கு பாதுகாப்பு இல்லை.

"கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்" (எரே 7:4).

கல்தேயர்கள் கர்த்தருடைய ஆலயத்தை சுட்டெரித்த பின்பு, எஸ்றா, நெகேமியா, செருபாபேல் ஆகியோரின் காலத்திலே கர்த்தருடைய ஆலயம் மறுபடியும் கட்டப்படுகிறது. இது இரண்டாவது ஆலயம். கல்தேயர் சுட்டெரித்தது முதலாவது ஆலயம்.

கல்தேயர்கள் முதலாவது ஆலயத்தை எந்த மாதத்தில், எந்த தேதியில் சுட்டெரித்தார்களோ, அதே மாதத்தில், அதே தேதியில் ரோமாபுரியார் இரண்டாவது தேவாலயத்தை சுட்டெரித்தார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். இரண்டாவது தேவாலயம் ஆகஸ்ட் மாதம் பத்தாம் தேதியிலே சுட்டெரிக்கப்பட்டது.

காவல் சேனாபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச்சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள் (2இராஜா 25:10). கல்தேயருக்கு எருசலேமின் குடிகள்மீது கோபம் இருப்பதுபோலவே, எருசலேமின் அலங்கத்தின்மீதும் கோபம் இருக்கிறது.

எருசலேமின் அலங்கம் அதிக பலமுள்ளதாயிருக்கிறது. கல்தேயருடைய இராணுவத்தார் எருசலேமுக்கு வெளியே முற்றிக்கைப்போட்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களை இரண்டு வருஷங்களாக காக்க வைத்த எருசலேமின் அலங்கத்தின்மீது கல்தேயருக்கு கோபமுண்டாயிற்று. ஆகையினால் கல்தேயரின் இராணுவத்தார் எல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள். இந்த அலங்கங்கள் நெகேமியாவின் காலத்தில் மறுபடியும் பழுதுபார்த்து கட்டப்படுகிறது. அது வரையிலும் இடித்துப்போடப்பட்ட அலங்கங்கள், இடிந்த நிலமையிலேயே இருக்கிறது.

நெபுசராதான் எருசலேமுக்கு வரும்போது, நகரத்திலே இன்னும் மீதியான ஜனங்கள் இருக்கிறார்கள். நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனக்கூட்டத்தையும், காவல் சேனாபதியாகிய நெபுசராதான் சிறைகளாகக் கொண்டு போகிறான் (2இராஜா 25:11).

தேசத்தில் ஏழையான சிலரைத் திராட்சத்தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டிருக்கிறான் (2இராஜா 25:12). யூதாதேசம் முழுவதும் இப்போது கல்தேயருக்கு சொந்தமானதாயிருக்கிறது. தோட்டங்களிலே பயிரிடுவதற்கும், தோட்ட வேலைகளை பார்ப்பதற்கும் கல்தேயருக்கு வேலையாட்கள் வேண்டும். நெபுசராதான் யூதாதேசத்திலே ஏழையான சிலரை தோட்ட வேலை செய்வதற்காக அங்கேயே விட்டுவிடுகிறான். அவர்கள் தரித்திரராக இருப்பதினால், பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல் தப்பித்துக்கொள்கிறார்கள்.

சில சமயங்களில் மனுஷருடைய தரித்திரம்கூட அவர்களுக்கு பாதுகாப்பைத்தரும். தரித்திரர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டு வெறுமையாயிருக்கிறவர்கள். அவர்களுக்கு இனிமேல் இழப்பதற்கு ஒன்றுமே இல்லை. அவர்களிடத்தில் ஜீவன் மாத்திரமே இருக்கிறது. நெபுசராதான் யூதாதேசத்திலுள்ள தரித்திரரை கொன்றுபோடாமல் ஜீவனோடு விட்டுவிடுகிறான்.

நெபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியால் சுட்டெரிக்கிறான். அவன் ஆலயத்திற்குள் பிரவேசித்தபோது, அங்கே வெண்கல தூண்களும், அதின் ஆதாரங்களும், வெண்கல கடல்தொட்டியும் இருக்கிறதைப் பார்க்கிறான். இவை போக அங்கே ஒரு சில பணிமுட்டுக்களும் இருக்கிறது.

கல்தேயருடைய இராணுவத்தார் கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலத் தூண்களையும், அதிலிருந்த ஆதாரங்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கலக் கடல்தொட்டியையும், கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தைப் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டுபோகிறார்கள் (2இராஜா 25:13).

கல்தேயர்கள் செப்புச்சட்டிகளையும், சாம்பல் பாத்திரங்களையும், கத்திகளையும், தூபகலசங்களையும், ஆராதனைக்கடுத்த சகல வெண்கலப் பணிமுட்டுகளையும் எடுத்துக்கொள்கிறார்கள் (2இராஜா 25:14).

காவல் சேனாபதியாகிய நெபுசராதான், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த சுத்தப் பொன்னும் சுத்த வெள்ளியுமான தூபகலசங்களையும் கலங்களையும் எடுத்துக்கொள்கிறான் (2இராஜா 25:15).

தேவாலயத்திலிருந்த பொன்னையும் வெள்ளியையும் நேபுகாத்நேச்சார் ஏற்கெனவே பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போய்விட்டான்.

"பாபிலோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகளையெல்லாம், எடுத்துக்கொண்டு போய்விடுகிறான்" (2இராஜா 24:13).

கர்த்தருடைய ஆலயத்தில் இரண்டு வெண்கல தூண்கள் இருக்கிறது. அவற்றிற்கு யாகீன், போவாஸ் என்று பெயர். இவை கர்த்தருடைய ஆலயத்தின் பெலத்திற்கும், ஸ்திரத்தன்மைக்கும் அடையாளம். கல்தேயருடைய இராணுத்தாரோ கர்த்தருடைய ஆலயத்தின் பெலத்திற்கு அடையாளமாகயிருக்கிற வெண்கலத்தூண்களை உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தை பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்துக்காகப் பண்ணுவித்த இரண்டு தூண்களும், ஒரு கடல்தொட்டியும் ஆதாரங்களுமாகிய அந்தச் சகல பணிமுட்டுகளுடைய வெண்கலத்திற்கும் நிறையில்லை (2இராஜா 25:16)

ஒரு தூணின் உயரம் பதினெட்டு முழமாயிருந்தது; அதின்மேல் அதற்கு மூன்றுமுழ உயரமான வெண்கலத் தலைப்பும் உண்டாயிருந்தது; குமிழிலே சுற்றிலும் செய்யப்பட்டிருந்த பின்னலும் மாதளம்பழங்களும் எல்லாம் வெண்கலமாயிருந்தது; மற்றத் தூணும் அதின் பின்னலும் அதைப்போல் இருந்தது (2இராஜா 25:17).

காவல் சேனாபதியாகிய நெபுசராதான் எருசலேம் நகரத்திற்குள்ளே பிரவேசித்தபோது, அங்கே பிரதான ஆசாரியரையும், பிரதானிகளையும், மந்திரிகளையும் பார்க்கிறான். நெபுசராதான் நகரத்தில் அகப்பட்ட அவர்களை உயிரோடு பிடித்து, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்திற்கு கொண்டு போகிறான்.

காவல் சேனாபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசல்காக்கும் மூன்று காவற்காரரையும் பிடிக்கிறான் (2இராஜா 25:18).

நெபுசராதான் நகரத்திலே யுத்த மனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளிலே நகரத்தில் அகப்பட்ட ஐந்துபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேவகம் எழுதுகிற தலைவனான இராணுவச்சம்பிரதியையும், தேசஜனத்திலே நகரத்தில் அகப்பட்ட அறுபதுபேரையும் பிடிக்கிறான் (2இராஜா 25:19).

அவர்களைக் காவல் சேனாபதியாகிய நெபுசராதான் பிடித்து, ரிப்லாவில் இருக்கிற பாபிலோன் ராஜாவினிடத்துக்குக் கொண்டுபோகிறான் (2இராஜா 25:20).

பாபிலோன் ராஜா அவர்களை ஆமாத் தேசத்தின் பட்டணமான ரிப்லாவிலே வெட்டிக் கொன்றுபோடுகிறான்; இப்படியே யூதா ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து, பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள் (2இராஜா 25:21).

யோசுவா கானான் தேசத்தை சுதந்தரித்து 860 வருஷங்களுக்கு பின்பு, இந்த சம்பவம் நடைபெறுகிறது. எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் புத்திரர், பாவம் செய்தபடியினால், அவர்கள் கானான் தேசத்திற்கு வெளியே, நாற்பது வருஷங்களாக வனாந்தரத்திலே சுற்றி அலைந்தார்கள். இப்போதோ யூதாஜனங்கள், தங்கள் பாவங்களினிமித்தமாக, தங்கள் தேசத்திலிருந்து அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு கொண்டு போகப்படுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனவர்கள், அந்த தேசத்தின் நதிகள் ஓரமாக அமர்ந்து, தாங்கள் அனுபவித்த வேதனைகளை கண்ணீரோடு நினைத்துப் பார்க்கிறார்கள்.

"பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்" (சங் 137:1).

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்கள், விக்கிரகங்களை விட்டு விலகி வருகிறார்கள். அவர்கள் விக்கிரகாராதனை என்னும் கொள்ளை நோயிலிருந்து குணப்படுத்தப்படுகிறார்கள். ஆனாலும் அவர்கள் மனதிலே கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை நிந்திக்கிற பாவம் இன்னும் இருக்கிறது. இந்த சத்தியம் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது.

கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம், அதாவது, எழுபதுவருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருக்கிறது (2நாளா 36:21).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வருகிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் விவரம் வருமாறு :

1. அவர்கள்மேல் கல்தேயரின் ராஜாவை வரப்பண்ணினார்.

2. அவன் அவர்கள் வாலிபரை அவர்களுடைய பரிசுத்தமான ஆலயத்திலே பட்டயத்தினால் கொன்றுபோட்டான்.

3. வாலிபரையும் கன்னியாஸ்திரீகளையும் முதியோரையும் விருத்தாப்பியரையும் தப்பவிடவில்லை.

4. அவன் தேவனுடைய ஆலயத்தின் பெரிதும் சிறிதுமான பணிமுட்டுகள் அனைத்தையும் பாபிலோனுக்குக் கொண்டுபோனான். (2நாளா 36:18).

5. கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களும் ராஜாவுக்கும் அவன் பிரபுக்களுக்கும் இருந்த பொக்கிஷங்களுமாகிய அனைத்தையும் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.

6. அவன் தேவனுடைய ஆலயத்தைத் தீக்கொளுத்திப் போட்டான். (2நாளா 36:19).

7. எருசலேமின் அலங்கத்தை இடித்தான்.

8. அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியால் சுட்டெரித்தான்.

9. தேவாலயத்திலிருந்த திவ்வியமான பணிமுட்டுகளையெல்லாம் அழித்தார்கள்.

10. பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துப் போனான். (2நாளா 36:20).

11. பெர்சியா ராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்படுமட்டும் அங்கே அவர்கள் அவனுக்கும் அவன் குமாரருக்கும் அடிமைகளாயிருந்தார்கள்.

12. அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கினான். (2நாளா 36:21).

கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறிற்று. யூதாவுக்கு தோல்வியும், அவமானமும், அழிவும், நாசமும் வர கர்த்தர் அனுமதிக்கிறார். 70 வருஷங்கள் அவர்கள் அந்நிய தேசத்தின் சிறையிருப்பில் இருக்கிறார்கள். யூதாதேசம் 70 வருஷங்களுக்கு தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அனுபவிக்கிறது. (எரே 25:9-12; தானி 9:2).

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய ஓய்வுநாளை அசட்டைபண்ணினார்கள். அந்த நாளை பரிசுத்தமாய் ஆசரிக்காமல், அதைப் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு தண்டனையாக, கர்த்தர் அவர்களுடைய தேசத்தை எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்ந்திருக்க வைக்கிறார்.

யூதாதேசத்தார், கானான் தேசத்தின் விளைச்சல்களினால் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். இதன் நிமித்தமாக கானான் தேசத்தின் நிலம் அவர்கள் மூலமாக சபிக்கப்படுகிறது. ஆகையினால் கர்த்தர் கானான் தேசத்தின் நிலத்திற்கு எழுபது வருஷம் முடியுமட்டும் ஓய்வைக் கட்டளையிடுகிறார்.

"நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும்போது, தேசமானது பாழாய்க் கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வுநாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும்" (லேவி 26:34).

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தருடைய கிருபை அவர்களுக்கு மறுபடியுமாக காண்பிக்கப்படுகிறது. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

பெர்சியா ராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்படுமட்டும் பாபிலோன் தேசத்தில் அவர்கள் நேபுகாத்நேச்சாருக்கும் அவன் குமாரருக்கும் அடிமைகளாயிருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தாங்கள் விடுதலை பெறும் நாளுக்காக கர்த்தருடைய சமுகத்தை நோக்கி காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"இவன் அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து, தனக்குக் குதிரைகளையும் அநேகம் ஆட்களையும் அனுப்பவேண்டுமென்று தன் ஸ்தானாபதிகளை எகிப்துக்கு அனுப்பினான்; இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ? தன்னை ராஜாவாக ஏற்படுத்திய ராஜாவினுடைய ஆணையை அசட்டைபண்ணி, அவனுடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவன், அந்த ராஜாவினுடைய ஸ்தானமாகிய பாபிலோன் நடுவிலே அவனண்டையில் இருந்து மரணமடைவானென்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 17:15,16).

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். அவர்கள் எருசலேமின் நகரத்தை பதினெட்டு மாதங்களாக முற்றிக்கைபோடுகிறார்கள்.

சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிராகப் பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள். அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது (எரே 52:4,5).

சிதேக்கியா ராஜா ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷத்தில், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தான். இந்த மாதத்தை நினைவுகூரும் வண்ணமாக, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள் ஒவ்வொரு வருஷமும் ஒன்பதாம் மாதத்தில் உபவாசம்பண்ணினார்கள். ஒன்பதாம் மாதத்தோடு, அவர்கள் மேலும் சில மாதங்களிலும் உபவாசம்பண்ணினார்கள்.

"நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும், பத்தாம் மாதத்தின் உபவாசமும், யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் நல்லபண்டிகைகளாகவும் மாறிப்போகும்; ஆகையால் சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக 8:19).

ஐந்தாம் மாதத்தில் எருசலேமிலுள்ள தேவாலயம் இடிக்கப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது. ஏழாம் மாதத்தில் கெதலியாவை பட்டயத்தால் வெட்டிக்கொன்றார்கள். இவற்றை நினைவுகூரும் வண்ணமாக, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள், அந்தந்த மாதங்களில் உபவாசம்பண்ணுவது வழக்கம்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்கள் முற்றிக்கைப் போட்டார்கள். சிதேக்கியா ராஜாவின் பதினொரு வருஷமட்டும் நகரம் முற்றிக்கைப்போடப்பட்டிருந்தது.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் ஒன்றரை வருஷங்களாக முற்றிக்கைப்போட்டிருந்தாலும், சிதேக்கியா ராஜா கல்தேயரிடம் சரணடையவில்லை. நகரத்திற்குள்ளே இருக்கிறவர்களுக்கு போஜனம் கிடைக்கவில்லை. நகரத்திலே பஞ்சம் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து எருசலேம் மதில் இடிக்கப்பட்டது.

நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல்போயிற்று. நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது; அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ஓடி, ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல் வெளியின் வழியே போய்விட்டார்கள் (எரே 52:6,7).

எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் பெரிய மதில் சுவர்கள் இருந்தாலும், அந்தச் சுவர் நகரத்திற்கு மெய்யான பாதுகாப்பைத்தராது. கர்த்தரே எருசலேமுக்கு பாதுகாப்பைத் தருகிறவர். கர்த்தர் இப்போது யூதாவின் மனுஷர்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் கோபமாயிருக்கிறார். அந்த நகரத்திற்கு தாம் இதுவரையிலும் கொடுத்து வந்த பாதுகாப்பை கர்த்தர் விலக்கிக்கொள்கிறார். இதனால் எருசலேம் நகரத்திற்கு பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது.

நகரத்தைப் பாதுகாப்பதற்கு யுத்த மனுஷர்கள் தேவை. நகரத்திலோ பஞ்சம் அதிகரித்ததினால், எல்லோரும் பட்டினியாயிருக்கிறார்கள். நகரத்து மதிலைப் பாதுகாப்பதற்கு ஒருவரிடத்திலும் சரீர பெலனில்லை. அவர்கள் நகரத்தைப் பாதுகாக்காமல், தங்கள் உணவைத் தேடி அலைகிறார்கள். எருசலேமின் மதில் சுவர் பெரியதாகவும், வலிமையுள்ளதாகவும் இருந்தாலும், மனுஷரில்லாத மதில் சுவருக்கு வலிமையிருக்காது. கர்த்தரும் எருசலேமைப் பாதுக்காக்கவில்லை. யூதாவின் மனுஷரும் எருசலேமின் மதிலை பாதுகாக்கவில்லை. இதனால் நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது.

கல்தேயர் எருசலேம் நகரத்தை சூழ்ந்திருக்கிறார்கள். யூதாவின் யுத்தமனுஷர் எல்லோரும் இராத்திரி காலத்திலே கல்தேயருக்கு தப்பி ஓடுகிறார்கள். அவர்கள் ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசல்வழியாக நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல்வெளியின் வழியே தப்பித்து ஓடுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து சிதேக்கியா ராஜாவும் தப்பித்து ஓடுகிறான் (எரே 52:7).

ஆனாலும் கல்தேயருடைய இராணுவத்தார் சிதேக்கியா ராஜாவை பின்தொடர்ந்து போகிறார்கள். அப்பொழுது சிதேக்கியாவின் இராணுவத்தார் எல்லோரும் அவனை விட்டு சிதறிப்போயிருந்தார்கள். சிதேக்கியாவுக்கு பாதுகாப்பு கொடுக்க, அவனோடுகூட ஒரு வீரனுமில்லை. சிதேக்கியாவைப் பின்தொடர்ந்த கல்தேயருடைய இராணுவம் எரிகோவின் சமனான பூமியில் அவனைக் கிட்டினார்கள்.

கல்தேயருடைய இராணுவத்தார் சிதேக்கியா ராஜாவை எரிகோவின் சமனான பூமியிலே பிடித்து, அவனை நேபுகாத்நேச்சாரிடத்திற்கு கொண்டுபோனார்கள். அப்போது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஆமாத் தேசத்தின் ஊராகிய ரிப்லாவிலே இருந்தான். அந்த ஊரில் நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவுக்கு நியாயத்தீர்ப்பு கொடுத்தான் (எரே 52:9).

சிதேக்கியா ஏற்கெனவே நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக கலகம்பண்ணினவன். நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை தேசத்துரோகியாக தீர்ப்பு செய்து, அவனுக்கு கடினமான தண்டனை கொடுத்தான்.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான். சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான் (எரே 52:10,11).

பாபிலோன் ராஜா சிதேக்கியாவை ரிப்லாவிலே விட்டுவிடவில்லை. சிதேக்கியாவின் இரண்டு கண்களையும் குருடாக்கி, அவனை பாபிலோனுக்கு கொண்டுபோனான். சிதேக்கியா மரணமடையும் நாள்மட்டும் நேபுகாத்நேச்சார், அவனை பாபிலோனிலுள்ள காவல் வீட்டில் அடைத்து வைத்தான் (எரே 52:11). சிதேக்கியாவின் வாழ்நாள் முழுவதும் இருளடைந்தது. அவனுடைய கண்கள் குருடாக்கப்பட்டது.

சிதேக்கியா பாபிலோனுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவனுக்கும் யூதாதேசத்திற்கும் இதுபோன்ற தீங்கு வரும் என்று, எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை ஏற்கனவே அறிவித்தார். ஆனால் சிதேக்கியாவோ எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் இப்போது சிதேக்கியா பாபிலோன் தேசத்தில், கண்கள் குருடாக்கப்பட்டவனாக, தன் வாழ்நாள் முழுவதும் சிறையிருப்பிலிருக்கிறான்.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஒரு மாதம் சென்ற பின்பு, பாபிலோன் ராஜாவின் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் என்பவன் எருசலேமுக்கு வருகிறான். இவன் ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே எருசலேமுக்கு வருகிறான். அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது.

நேபுசராதான் எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான். தேவாலயத்திலுள்ள எல்லா பொருட்களையும் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். எருசலேமிலுள்ள தேவாலயம் கர்த்தருக்கு பரிசுத்தமான வாசஸ்தலமாகும். இங்கு யூதாமனுஷரின் முற்பிதாக்கள் கர்த்தரைத் துதித்து ஆராதித்தார்கள்.

"எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்களுடைய ஸ்தானங்களெல்லாம் பாழாயின" (ஏசா 64:11).

நேபுசராதான் எருசலேமுள்ள ராஜாவின் அரமனையையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான். சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினபின்பு, தனக்கு ஒரு அரமனையைக் கட்டினார். நேபுசராதான் அக்கினியினால் சுட்டெரித்தது, சாலொமோன் ராஜா கட்டின அரமனையாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

நேபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டு, அதோடு எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான்.

காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் கல்தேயரின் இராணுத்தாரோடு எருசலேமுக்கு வந்திருக்கிறான். அவர்களெல்லோரும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள் (எரே 52:14). பாபிலோன் தேசத்தார் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்கள் முற்றிக்கைப்போட்டிருந்தார்கள். முற்றிக்கைக்காலம் அதிகமாயிருந்தது. ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா பாபிலோன் ராஜாவினிடத்தில் உடனே சரணடைய வரவில்லை. இதனால் கல்தேயருக்கு யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் மிகுந்த கோபமுண்டாயிற்று. தங்களுடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக கல்தேயரின் இராணுவத்தார் எல்லாரும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள்.

"நீர் நகரத்தை மண்மேடும், அரணான பட்டணத்தைப் பாழுமாக்கினீர்; அந்நியரின் ராஜதானியை ஊராயிராதபடிக்கும், என்றைக்கும் கட்டப்படாதபடிக்கும் செய்தீர்" (ஏசா 25:2).

நேபுசராதான் யூதாவின் மனுஷரில் அநேகரை தன்னுடைய தேசத்திற்கு சிறைகளாகக் கொண்டுபோகிறான். ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனங்களையும் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் சிறைகளாகக் கொண்டுபோனான் (எரே 52:15). சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் பட்டயத்திற்கும், பஞ்சத்திற்கும் தப்பினவர்கள்.

ஆனால் தேசத்தாரில் ஏழைகளான சிலரைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் திராட்சத் தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டுவைத்தான் (எரே 52:16).

நேபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போடும்போது, அங்கே பரிசுத்த பணிமுட்டுக்கள் ஏராளமாயிருக்கிறது. இவையெல்லாம் யூதருக்கு மிகவும் முக்கியமானவை. நேபுசராதான் தேவாலயத்திலிருந்த எல்லாவற்றையும் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஒன்றையும் மீதியாய் வைக்கவில்லை.

பசும்பொன்னும் சுத்தவெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கலங்களையும், சட்டிகளையும், விளக்குத்தண்டுகளையும், கலயங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக்கொண்டான் (எரே 52:19).

நேபுசராதானோடு, கல்தேயருடைய இராணுவத்தார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலுள்ளவைகளை கொள்ளையிடுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத் தூண்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த ஆதாரங்களையும், வெண்கலக் கடல்தொட்டியையும் கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். செப்புச்சட்டிகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், வெட்டுக் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், ஆராதனைக்குரிய சகல வெண்கலப்பணிமுட்டுகளையும் எடுத்துக் கொண்டு போனார்கள் (எரே 52:17,18).

கல்தேயரின் இராணுவத்தார் கொண்டுபோனது எல்லாமே வெண்கலங்கள். இவை பொன்னையும் வெள்ளியையும்விட குறைவான மதிப்புள்ளவை. கல்தேயரின் இராணுவத்தார் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடும்போது, அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கல தூண்களையும் உடைத்துப்போடுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயமும், ஆலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுகளும் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். கல்தேயரோ கர்த்தருடைய ஆலயத்திலுள்ள எல்லாவற்றையும் உடைத்துப்போட்டு, அவற்றை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகயிருந்த சகலமும் எருசலேமைவிட்டு நீங்கிப்போயிற்று.

கர்த்தர் நம்மைப் பாதுகாக்கவில்லையென்றால், நமக்கு மெய்யான பாதுகாப்பு வேறு எதுவும் கிடையாது. கர்த்தர் எருசலேமைவிட்டு விலகிப்போன பின்பு, அவர்களுடைய தூண்களோ, அலங்கங்களோ எருசலேமின் குடிகளை பாதுகாக்கவில்லை.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள தூண்கள் அலங்காரத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தூண்களுக்கு யாகின் என்றும், போவாஸ் என்றும் பெயர். யாகின் என்னும் பெயருக்கு "கர்த்தர் ஸ்தாபிப்பார்" என்றும், போவாஸ் என்னும் பெயருக்கு "அவருக்குள் பெலமுள்ளது" என்றும் பொருள். கல்தேயர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கல தூண்களை உடைத்துப்போட்டதினால், கர்த்தர் இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தாரை ஸ்தாபிக்கமாட்டார் என்பதற்கும், கர்த்தருடைய வல்லமை இஸ்ரவேல் ஜனத்தாரோடு தங்கியிருக்காது என்பதற்கும் அடையாளமாயிற்று.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள இரண்டு வெண்கல தூண்களைப்பற்றி, இங்கு விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

"சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை. அந்தத் தூண்களோவெனில், ஒவ்வொரு தூணும் பதினெட்டுமுழ உயரமாயிருந்தது; பன்னிரண்டு முழ நூல் அதைச் சுற்றும்; நாலு விரற்கடை அதின் கனம்; உள்ளே குழாயாயிருந்தது. அதின்மேல் வெண்கலக் குமிழ் இருந்தது; ஒரு குமிழின் உயரம் ஐந்து முழம், குமிழிலே சுற்றிலும் பின்னலும் மாதளம்பழங்களும் செய்திருந்தது; எல்லாம் வெண்கலமாயிருந்தது; அதற்குச் சரியாய் மற்றத் தூணுக்கும் மாதளம்பழங்களும் செய்திருந்தது. தொண்ணூற்றாறு மாதளம்பழங்கள் நான்கு திசைகளுக்கும் எதிராகச் செய்திருந்தது; குமிழைச் சுற்றிலும் செய்திருந்த மாதளம்பழங்கள் நூறு" (எரே 52:20-23).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்த இரண்டு தூண்களும் எவ்வாறு செய்யப்பட்டன என்று 1இராஜாக்கள் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"இவன் இரண்டு வெண்கலத் தூண்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு தூண் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருந்தது. தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலிபோன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் ஏழேழாக இருந்தது" (1இராஜா 7:15-17).

தூண்களைப் பண்ணின விதமாவது: தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம்பழங்களைச் செய்வித்தான். மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருந்தது. இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்மிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருந்தது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தது (1இராஜா 7:18-20).

"அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தினான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிட்டான். தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது; இவ்விதமாய்த் தூண்களின் வேலை முடிந்தது" (1இராஜா 7:21-22).

யூதாவின் அக்கிரமம் அதிகமாயிற்று. அவர்களுடைய அக்கிரமங்கள் நிவிர்த்தியாவதில்லை. கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரை விட்டு விலகிப்போனார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போனார். இதனால் எருசலேமுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. கல்தேயர்கள் எருசலேமைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலுள்ளது எல்லாவற்றையும் கொள்ளையடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய்விடுகிறார்கள்.

யூதாமனுஷருடைய அக்கிரமம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் போலிருக்கிறது. "நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன். அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக்குறித்து ஆணையிட்டிருக்கிறேன் என்றார்" (1சாமு 3:12-14).

சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை (எரே 52:20).

இந்தத் தூண்களும் கடல்தொட்டியும் செய்யப்பட்டபோது, அதில் ஏராளமான வெண்கலங்கள் பயன்படுத்தப்பட்டது. "இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை" (1இராஜா 7:47).

"இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் வெகு ஏராளமாய் உண்டு பண்ணினான்; வெண்கலத்தின் நிறை தொகைக்கு அடங்காததாயிருந்தது" (2நாளா 4:18).

வியாபாரம்பண்ணுகிறவர்கள்தான் பொருட்களை நிறுத்துப்பார்த்து விற்கவும் வாங்கவும் செய்வார்கள். கல்தேயரின் இராணுவத்தாரோ தேவாலயத்தைக் கொள்ளையிட வந்திருக்கிறார்கள். கொள்ளைக்காரர்கள் ஒன்றையும் நிறுத்துப் பார்த்து கொள்ளையிடமாட்டார்கள். தங்கள் கண்களில் பட்டதையும், கைகளில் சிக்குவதையும் எடுத்துக்கொள்வார்கள். அதுபோலவே கல்தேயரின் இராணுவத்தார், தேவாலயத்திலுள்ள எல்லா பொருட்களையும் கொள்ளையிட்டு, தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விடுகிறார்கள்.

பாபிலோன் ராஜவாகிய நேபுகாத்நேச்சார், ஆமாத் என்னும் தேசத்தின் பட்டணமாகிய ரிப்லாவிலே, இஸ்ரவேலின் மூப்பர்களை வெட்டிப்போட்டான். இஸ்ரவேல் தேசத்தில் எழுபது மூப்பர்கள் இருந்தார்கள்.

"அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைச் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஓய்ந்தார்கள்" (எண் 11:24,25).

"காவல் சேனாபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசல்காக்கும் மூன்று காவற்காரரையும் பிடித்தான். நகரத்திலே அவன் யுத்த மனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளிலே நகரத்தில் அகப்பட்ட ஐந்துபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேவகம் எழுதுகிற தலைவனான இராணுவச்சம்பிரதியையும், தேசஜனத்திலே நகரத்தில் அகப்பட்ட அறுபதுபேரையும் பிடித்தான்" (2இராஜா 25:18,19).

இந்த அதிகாரத்தில் ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்டவர்கள் ஏழுபேர் (எரே 52:25) என்று எழுதப்பட்டிருக்கிறது. 2இராஜா 25:18,19- ஆகிய வசனங்களிலோ ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்டவர்கள் ஐந்துபேர் என்று எழுதப்பட்டிருக்கிறது. மீதமுள்ள இரண்டுபேரும் எரேமியா, எபெத்மெலேக் என்போராவர். இவர்கள் ஆரம்பத்தில் சிறைப்பிடிக்கப்பட்டாலும் பின்பு விடுவிக்கப்படுகிறார்கள். பாபிலோன் ராஜவாகிய நேபுகாத்நேச்சார் சிதேக்கியா ராஜாவின் மந்திரியில் ஐந்துபேரை மாத்திரமே வெட்டினான்.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின் பிரபுக்களில் செராயா என்பவன் சாந்தகுணமுள்ள பிரபு (எரே 51:60). பிரதான ஆசாரியனாகிய செராயாவோ கலககுணமுள்ளவன். அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய் எதிர்த்து நின்றான். பிரபுவாகிய செராயாவும், பிரதான ஆசாரியனாகிய செராயாவும் வெவ்வேறு நபர்கள்.

காவற்சேனாதிபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசற்படியின் மூன்று காவற்காரரையும் பிடித்துக்கொண்டுபோனான் (எரே 52:24).

யூதாதேசத்தின் பிரபுக்கள், யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தவறான பாதைகளில் வழிநடத்திச் சென்றார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முதலாவதாக யூதாவின் ராஜாமீதும், அவனுடைய பிரபுக்கள்மீதும், அவனுடைய பிரதான ஆசாரியன்மீதும் வருகிறது.

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்திலுள்ள யூதர்களை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறான். யூதர்களும் தங்கள் தேசத்திலிருந்து சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள் (எரே 52:27)

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ்
2நாளா 36:22,23

2நாளா 36:22. எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே, அவன்: பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

2நாளா 36:23. அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணினான்.

கர்த்தர் எரேமியா மூலமாக யூதாவின் மனுஷருக்கு தம்முடைய வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தை நிறைவேறுவதற்காக சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் விசுவாசத்தோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எழுபது வருஷம் முடிந்தபின்பு, சிறையிருப்புக்குப்போன யூதர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்றும், அவர்கள் திரும்பவும் எருசலேமை எடுப்பித்துக்கட்டுவார்கள் என்றும் கர்த்தர் எரேமியா மூலமாக சொல்லியிருக்கிறார்.

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவுகிறார்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ், கர்த்தருடைய ஆவியானவரால் ஏவப்பட்டு, "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருப்பாராக என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார்" *(2நாளா 36:22,23)* என்று, தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணுகிறான்.

கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவுகிறார். யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி கர்த்தர் கோரேசுக்குக் கட்டளையிடுகிறார். கர்த்தர் கட்டளையிட்ட பிரகாரம் அதைக் கோரேஸ் ராஜா தன் ராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணுகிறான். இஸ்ரவேல் தேசத்தார் எல்லோருக்கும் விடுதலையை அறிவிக்கிறான். தங்களுடைய தேசத்திற்குப் போக விரும்புகிறவர்களை அங்கு போக அனுமதிக்கிறான். *(2நாளா 36:22-23).*